SRI A. GOVINDASAMY : இந்தத் திட்டத்தை எல்லா ஜில்லாக்களிலும் பரப்புவதற்கு ஏதாவது திட்டம் அரசாங்கம் வகுத்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : **Low income group** இருக்கிற திட்டத்தை மாகாணம் பூராவும் கொண்டு வருவதற்குத் திட்டம் இருக்கிறது. இவற்றை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, is there any industrial Housing Scheme for the industrial population of the Perambur area?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. We have already built about a thousand tenements in Erukkancherry and Sembiam areas.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, நடுத்தர வாழ்க்கைத் தரமுள்ள மக்களுக்கு ஏற்றவாறு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருவதாக காணப்படுகிறது. இதில் நடுத்தர மக்கள் அல்லாத உயர்தர மக்களும் உட்புகுந்து சலுகைபெற்று வருவதைத் தடுக்க சர்க்காரிடம் ஏதாவது வழி

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Thursday, 27th June 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

**[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## I.—CONDOLENCE RESOLUTION ON THE DEMISE OF SRI T. PRAKASAM, FORMER CHIEF MINISTER OF MADRAS.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை வெகு வருத்தத்துடன் இந்த சபை முன் பிரேரேபிக்கிறேன் :—

" This House places on record its deep sense of sorrow at the demise of Sri T. Prakasam, former Chief Minister of Madras from 1946 to 1947 and conveys its deep sense of sympathy to the members of his bereaved family."

காலம் சென்ற ஸ்ரீ பிரகாசம் அவர்களைப்பற்றி நான் கனம் அங்கத்தினர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆந்திர நாட்டில் பிறந்து முதன் முதலாக அவர் வக்கீல் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவர் தாம் 19 வயதாக இருக்கும்போதே எம்.ஏ. பட்டம் பெற்றார். அந்த சமயம் வக்கீல் தொழிலில் ஈடுபடுவதற்கு வேண்டிய வயது போதாது என்ற காரணத்தால் அவர் சுமார் இரண்டு வருஷங்கள் சும்மா இருக்கவேண்டியதாக இருந்தது. இவ்வளவு இளமையிலேயே அவர் எம்.ஏ. பட்டம் பெற்றுவிட்டு இங்கே சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து பட்டம் பெற்று வக்கீல் தொழிலை கொஞ்ச நாளைக்கு ராஜமகேந்திரபுரத்தில் பார்த்துவிட்டு அதன் பின் இங்கிலாந்து சென்று அங்கே பாரிஸ்டர் பட்டம் பெற்று இங்கு வந்து (சென்னை) ஹைகோர்ட்டில் வக்கீல் தொழிலை நடத்தி வந்தார்கள்.

அவருடைய திறமையைப்பற்றிப் பேசும்போது இன்றைக்கும் இப்பொழுது புதிதாக வரக்கூடிய வக்கீல்களுக்கு ஏதாவது புத்திமதி சொல்ல வேண்டும் என்று இருந்தால் அப்படிச் சொல்லும்போது காலஞ்சென்ற ஸ்ரீ பிரகாசத்தைப் போலவே தைர்யமாகவும், நியாயமாகவும், பாரபட்சமற்ற முறையிலும் நடந்துகொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டு அதற்கு உதாரணமாக ஸ்ரீ பிரகாசம் அவர்களுடைய பெயரையும் எடுத்துக் காட்டிச் சொல்வது இப்போதும் வழக்கமாக இருந்துவருகிறது. அவர் நல்ல முறையில் தன்னுடைய தொழிலையும் நடத்தி வந்து நல்ல சம்பாத்தியமும் சம்பாதித்துக் கொண்டு வந்தார். அந்த சமயத்தில்தான் நம்முடைய தேசீய போராட்டம் மகாத்மா காந்தியடிகளின் தலைமையின் கீழ் ஆரம்பம் ஆகி நடைபெற்று வந்தது. 1921-ம் வருஷம் ஸ்ரீ பிரகாசம் அவர்கள் தன்னுடைய தொழிலை எல்லாம் விட்டு விட்டு தன்னுடைய முழு வாழ்க்கையையும் தேசப் பணி ஒன்றிற்கே அர்ப்பணம் செய்தார். அந்தக் காலத்திலிருந்து கடைசி வரையிலும் அவர் தேசப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு அரும் பாடுபட்டும் வந்தார். அதிலும் முக்கியமாக தேசீய போராட்டம் நடந்த காலங்களில் அவர் முன்னணியில் நின்று மற்ற எல்லோருக்கும் வழி காட்டக்கூடிய வகையில் சேவை செய்து வந்தார். சைமன் கமிஷன் பகிஷ்காரம் நடந்த காலத்தில்—இப்பொழுது எனக்கு அது நன்றாக ஞாபகம் இருக்கிறது, அப்பொழுது நான் மாணவனாக இருந்தேன், இங்கே இருக்கக்கூடியவர்களிலும் பலர் அப்பொழுது மாணவர்களாகவும் மற்ற எந்த துறையிலும் இருந்திருக்கலாம்—அப்பொழுது பெரிய அடக்கு முறை சென்னையில் நடைபெற்றது. அப்பொழுது சென்னையில் ஊர்வலங்கள் போகக்கூடாது என்றும் மற்றப்படி எதுவும் நடக்கக்கூடாது

[Sri C. Subramaniam] [27th June 1957

என்றும் போலீஸ் தடை உத்தரவு போட்டிருந்தார்கள். அப்படி தடை உத்தரவு இருந்த காலத்திலும் ஸ்ரீ பிரகாசம் அவர்கள் ஊர்வலங்களை நடத்திச் சென்றார் என்று சொன்னால் அவருடைய தைர்யம் எவ்வளவு என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அப்பொழுது ஸ்ரீ பிரகாசம் அவர்கள் அந்த ஊர்வலத்தில் முன்னால் எப்படி ஒயயாரமாக நடந்து வந்தார் என்பது இப்பொழுதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது என்னுடைய மனதில் அப்படியே இப்பொழுதும் இருக்கிறது. தன்னுடைய மார்பைத் திறந்து காட்டி தடை உத்தரவை மீறிக்கொண்டு வரும்போது வேண்டுமானால் தன்னைப் பார்த்துக்கூட சுடலாம் என்று சொன்னார். சவால் விடக் கூடிய முறையில் இருந்தது அவர் தன்னுடைய மார்பைத் திறந்து காட்டியது. அதன் பிறகுதான் எல்லோருக்கும் பெரிய ஊக்கம் உண்டாயிற்று. இம்மாதிரி அவர் செய்த பெரிய காரியங்களும், பெரிய சேவைகளும், போராட்ட காலங்களில் அவர் ஈடுபட்டு வந்ததும் நம்முடைய நாட்டின் சரித்திரத்திலேயே பெரிய முக்கியத்துவம் வாய்ந்தது.

சுதந்தரம் பெற்ற பிற்பாடு, ஏன் அதற்கு முன்பே ஏற்பட்ட ராஜாஜி மந்திரி சபையில் அவர் ரெவினியூ மந்திரியாக இருந்து பணி ஆற்றி வந்தார். அதற்குப் பிறகு, யுத்த காலத்திற்குப் பிற்பாடு ஏற்பட்ட மந்திரி சபையில் அவர் முதல் மந்திரியாக இருந்து ஒரு வருஷம் நிர்வாகத்தை நடத்தினார். அவருடைய பெருமை இத்துடன் நில்லாமல் அதன் பிறகு ஆந்தர பிரதேசம் ஏற்பட்ட பிறகு அங்கும் அவர் மந்திரி சபையை அமைத்து அப்பொழுதும் முதல் மந்திரியாக பணியாற்றினார். அப்படி அவர் முதன் மந்திரியாக வந்து பணியாற்றியதுதான் எல்லோருக்கும் வியப்பை அளிக்கக்கூடியதாக இருந்தது. இப்படிப்பட்ட பல முக்கியத்துவம் வாய்ந்த பல நிகழ்ச்சிகள் அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் அநேகம் இருக்கின்றன. அந்த சமயம் அவர் காங்கிரசை விட்டு விலகி இருந்தார். ஆகவே அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய முறையில் அவருக்கு பெருத்த கட்சி பலம் அந்த சமயத்தில் கிடையாது. இருந்தாலும்கூட "ஆந்திர கேசரி, ஆந்திர தலைவர்" என்று இருந்ததால் அவரை எல்லோரும் தங்களுடைய தலைவர் என்று ஒப்புக்கொண்டு அவர் தான் தலைவர் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் அவர் முதல் மந்திரியாக இருந்து பணியாற்றினார். அப்பொழுது ஏற்பட்ட முதன் மந்திரி சபை வீழ்ச்சி அடைகிற வரையில் அவர் முதன் மந்திரியாகவே இருந்து பணியாற்றி வந்தார். எவ்வளவோ வயதாகி இருந்தாலும் கூட மறுபடியும் [illegible] ஆந்திரா வந்த பிறகும் அவர் சட்டசபையில் இருந்து பெரும் பணியைச் செய்து வந்திருக்கிறார். நான் இப்பொழுது சொல்லப்போவதை இங்கே இருக்கக்கூடிய கனம் அங்கத்தினர்களில் சிலர் கூட கேள்விப்பட்டிருக்கலாம். இளைஞர்கள் கூட சட்டசபைக்கு காலதாமதமாக வருவார்கள். வந்து விட்டு கொஞ்சம் நேரம் உட்கார்ந்துவிட்டு அதன் பிறகு போய்விடுவது கூட வழக்கம். ஆனால் ஸ்ரீ பிரகாசம் அவர்கள் தனக்கு வயது 80 ஆனாலும் கூட சட்டசபை கூடுவதற்கு முன்னதாகவே வந்து சட்டசபை கலையும் வரையில் இருந்து விட்டு அதன் பிறகு தான் போவது வழக்கமாம். கடைசி வரையில் அவர் சட்டசபையிலேயே இருப்பாராம். இதைப்பற்றி இங்கு இருக்கக்கூடிய பல அங்கத்தினர்களும் கேட்டிருப்பார்கள், நானும் கேட்டிருக்கிறேன். இப்படி அவர் செய்து வந்தது எதைக் காட்டுகிறது என்றால் அவர் தன்னுடைய கடமையைச் செய்வதில் ஒரு போதும் இளைக்கமாட்டார் என்பதைக் காட்டுகிறது. இப்படி அவர் செய்து வந்தது இளைஞர்களுக்கு ஒரு வழி காட்டியாக இருந்தது. இப்படிப்பட்ட கடமை உணர்ச்சி அவருடைய வாழ்க்கையின் முன்னணியில் இருந்தது. அவருடைய வாழ்க்கையைப்பற்றி ஏதாகிலும் சொல்ல வேண்டுமானால் அவர் ஒரு பெரிய தைரியமுள்ள மனிதன் என்றுதான் சொல்ல வேண்டும். எப்படிப்பட்ட இடையூறுகள், தடைகள், ஆபத்துகள் ஏற்பட்டாலும் கூட அந்தக் காலத்தில் அவர் கொஞ்சம்கூட மனம் தளராமல் தான் எடுத்துக்கொண்ட காரியத்தை சாதிக்ககூடிய சக்தியும் ஆற்றலும் பெற்றவராக இருந்தார். இப்படிப்பட்ட ஒரு பெரும் பெருமை அவருடைய வாழ்க்கையில் இருந்தது. அவருடைய வாழ்க்கையே எல்லோருக்கும்



27th June 1957] [Sri C. Subramaniam]

ஒரு வழிகாட்டியாக இருந்தது. இந்த முறையில் அவருடைய வாழ்க்கையை நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவருடைய குடும்பத்திற்கு இந்தச் சபையினுடைய அனுதாபத்தை தெரிவிக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தில் சம்பிரதாயத்திற்காகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் இந்தியா முழுவதுமே அவருடைய குடும்பம்தான். ஆகையால் நம்முடைய இந்தியா முழுவதிலுமுள்ள எல்லோருக்குமே இந்த அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டியது நம்முடைய கடமை. அவருக்கு தனிப்பட்ட முறையில் ஒரு குடும்பம் இருக்கும்போது அதற்கு அந்த அனுதாபத்தை அனுப்ப வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அவருடைய குடும்பத்தை சேர்ந்தவர்கள் இரண்டு மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த தீர்மானத்தை அனுப்பிவைக்க வேண்டும் என்று கனம் சபாநாயகர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அனுதாபத் தீர்மானம் அவர்களுக்கு மட்டும் அல்ல நம்முடைய இந்தியாவில் உள்ள மக்களுக்கும் இந்தத் தீர்மானம் அனுப்பிவைக்கப்பட்டதாக கருதப்படும். இந்திய மக்கள் எல்லோருக்கும் இந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை இந்தச் சபையின் முன்னதாக வைக்கிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முன்னதாக நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். கனம் சபைத் தலைவர் அவர்கள் (லீடர் ஆப் தி ஹௌஸ்) காலஞ்சென்ற பிரகாசம் அவர்களைப்பற்றி விஸ்தாரமாக சொன்னார். ஸ்ரீ பிரகாசம் அவர்கள் 1869-ம் ஆண்டில் குண்டூர் ஜில்லாவில் பிறந்தார். அவர் ஒரு கிராம உத்தியோகஸ்தர் பரம்பரையில் பிறந்தார். தன்னுடைய 10, 12 வயதிலேயே பெற்றோர்களை இழந்து விட்டு அதன் பிறகு கஷ்டப்பட்டு படித்து இங்கிலாந்து சென்று மேல் படிப்பு படித்து விட்டு இங்கு வந்து பல பட்டங்களைப்பெற்று அதன் பிறகு நம்முடைய சுதந்தர போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் பெரிய அரசியல் வாதி. அவர் ஒரு பத்திரிகை ஆசிரியராகவும் இருந்து பணியாற்றி வந்தார். கடைசியில் முதன் மந்திரியாகவும் இருந்து நல்லபடி பணியாற்றி வந்தார். ராஜாஜி மந்திரி சபையில் அவர் ரெவினியூ மந்திரியாக இருந்து ஜமீன் ஒழிப்பு சட்டம் கொண்டு வருவதன் விஷயமாக பெரிய புத்தகங்களைப் போட்டு, கொஞ்சகாலம் சென்றபின் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அதற்கு வேண்டிய சட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றி வந்தார். அதன் பிறகு அவர் பல துறைகளிலும் நல்ல பணியாற்றி வந்திருக்கிறார். அதன் காரணமாகத்தான் ஆந்திர தேசத்தில் அவருக்கு "ஆந்திர கேசரி, ஆந்திர சிங்கம்" என்ற பெரிய பெயரை அவருக்கு வழங்கினார்கள். இப்படிப்பட்ட பட்டம் அவருக்குக் கொடுத்தது வாஸ்தவமாகவே கொடுக்கவேண்டியதுதான். அதன் பிறகு சென்னை நகரத்தை ஆந்திர தேசத்தினுடையது என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பெரிதும் வாதித்து வந்தார். அது மட்டும் நிறைவேறவில்லை, நிறைவேறாமல் போய்விட்டது.

நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னபடி, சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போது ஸ்ரீ பிரகாசம் அவர்கள், மத்திய சட்டசபை அங்கத்தினராக இருந்தபோதிலும், பெரும் பங்கு கொண்டு சிறைக்குச் சென்றார். அதிலிருந்து ஒரு பெரியபோராட்டத்தை நடத்தி வந்தார். தேச பிதாவான மகாத்மா காந்தியடிகளோடு சுமார் 35, 36, வருஷ காலமாக ஒத்துழைத்து, சுதந்திரப் போராட்டத்திற்கு எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து வந்தார்கள். அவர் கொஞ்ச காலம், அதாவது 1950-லிருந்து 1953 வரை காங்கிரசை விட்டு விலகியிருந்து, பின்னிட்டு, அங்கு மந்திரி சபை அமைக்கும்போது, பண்டித ஜவஹர்லால் நேருவே பிரகாசம் அவர்களைக் கூப்பிட்டு, "நீங்கள் தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டதன் பேரில், அவர் அங்கு முதல் அமைச்சராக பணியாற்றி வந்தார். பின்னிட்டு, அநேகம் பேர்கள் இவர்களைத் தேர்தலில் நிற்கக்கூடாதென்று சொன்னபோதும்,

"தேர்தலில் நான் நிற்பேன்" என்று சொல்லி, குண்டூர் ஜில்லாவில்—கம்யூனிஸ்டுக் கட்சி செல்வாக்கு பெற்ற அந்த இடத்தில்—அதிகமாக வோட்டுகளுடன் தேர்தலில் வெற்றி பெற்றார்கள். ஆனால், கடைசி தேர்தலில், காங்கிரஸ் கட்சி மெஜாரிட்டியாக வந்திருந்த போதிலும், இவருக்கு மந்திரிசபையில் இடம் கிடைக்காமற் போய்விட்டது. அப்படியிருந்தாலும், நமது நிதி அமைச்சர் சொன்னபடி, அவர் ஒவ்வொரு தினமும் சட்டசபைக்கு குறித்த நேரத்தில் வந்திருந்து, கடைசி வரையில் சட்டசபை அலுவல்களை யெல்லாம் நன்றாகக் கவனித்து வந்தார்கள். அவரை ஒரு பெரிய மகான் என்றுதான் சொல்லவேண்டும். ஸ்ரீ பிரகாசம் அவர்கள் சுதந்திர இந்தியாவுக்காகப் பல துறையிலே எவ்வளவோ பாடுபட்டார்கள். ஆகையால் ஸ்ரீ பிரகாசம் அவர்களுடைய மறைவு இந்திய யூனியனிலுள்ள எல்லா மக்களுக்கும், குறிப்பாக ஆந்திரர்களுக்கும், சென்னை மக்களுக்கும் பெரிய நஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். அந்த முறையிலே நானும் இந்த அனுதாபத் தீர்மானத்தில் பங்கு கொள்கிறேன். அவருடைய ஆத்மா சாந்தி அடையவேண்டும். இந்த அனுதாபத் தீர்மானத்தை எல்லோரும் ஆமோதித்து, நிறைவேற்றி, அன்னாருடைய குடும்பத்தாருக்கு அனுப்பி வைத்து நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*SRI K. ANBAZHAGAN: அவைத் தலைவர் அவர்களே, ஆந்திர கேசரி தங்குதூரி பிரகாசம் அவர்கள் அண்மையில் இயற்கை எய்தியதை முன்னிட்டு இந்த அவையிலே கொண்டுவரப்பட்டிருக்கிற இரங்கல் தீர்மானத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வழிமொழிகிறேன்.

தங்குதூரி பிரகாசம் அவர்கள், தன்னுடைய இளமையிலேயே முதுமைக்குரிய தெளிந்த அறிவுச் சிந்தனையோடு வாழ்ந்து, முதுமைக் காலத்தில் இளமைக்குரிய வீரத்தோடு திகழ்ந்தார்கள் என்று நம் நாடு மிக நன்றாக அறியும். ஆந்திர நாட்டு மக்களுக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாக விளங்கிய பிரகாசம் அவர்கள், தென்னாட்டினுடைய பெருமையை நிலைநிறுத்துவதிலும் முன் நின்றார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கருவிலே உருவாகாமலிருந்த காங்கிரசு விடுதலை இயக்கத்தை உருவிலே திருவுடையதாக வளர்த்து, அதனால் இந்த நாட்டுக்கு விடுதலை கிடைக்க பாடுபட்ட தலைவர்களில் தலைசிறந்த ஒருவர் பிரகாசம் அவர்கள் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

விடுதலை இயக்கத்திலே முன்நின்ற பிரகாசம் அவர்கள், அதற்காக வேண்டிய தியாகத்தைச் செய்து காட்டுவதற்கும் முன்வந்தார்கள். அவருடைய தனிப்பட்ட வக்கீல் தொழிலையும் வாழ்க்கை நலத்தையும் கூடப் பொருட்படுத்தாமல் நாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்தார் பிரகாசம் அவர்கள். ஆந்திரத்திலே எவ்வளவு சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவராகத் திகழ்ந்தாரோ, அதுபோல தமிழகத்திலே தமிழ் மக்களுக்கு வழிகாட்டியான கப்பலோட்டிய தமிழ் வீரர் வ. உ. சி. அவர்கள் அக்காலத்தில் திகழ்ந்து வந்தார்கள். அவர்தான் பிரகாசம் அவர்களுக்கு ஓர் இணையாக எடுத்துக்காட்டக்கூடிய பெருமைக்கு உரியவர். வ. உ. சி. அவர்களும் நீண்ட காலம் நம்மோடு வாழ்ந்திராத காரணத்தால் நமக்கும் ஒரு "பிரகாசம்"—ஒளி கிடைக்காமற்போய்விட்டது. ஆனால், ஆந்திரத்திற்குப் பிரகாசம்—ஒளி கிடைத்தது. எனினும், திராவிடத்திற்கும் அந்த ஒளி பொதுவிலே பயன்பட்டது. அது இந்தியாவுக்கே ஒரு சிறப்பான அடையாளமாகத் திகழ்ந்தது. வட நாட்டுத் தலைவர்களுடைய பெருமையில் எள்ளளவும் குறையால், தென்னாட்டுத் தலைவர்கள் தங்களுடைய தன்மானத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்னும் அளவுக்குத் தென்னாட்டு மக்களுடைய பெருமையை நிலை நிறுத்திய பெருமை அவருக்கு உண்டு.

அது மட்டுமல்ல, நாட்டுத் தொண்டிலே ஈடுபட்ட அந்தப் பெரியவர், கட்சியிலே தன்னை ஒப்படைத்திருந்தாலும், கட்சியைவிட நாடு பெரியது,





மக்கள் முக்கியமானவர்கள், மக்கள் நலம் முக்கியம் என்று கருதி, தேவைப்படுகிற வரையில் ஒரு கட்சியிலே பணியாற்றி, அந்தப் பணி அந்தக் கட்சி மூலமாகச் செம்மையாக நிறைவேறாது என்று தெரிந்ததும்—தானே அந்தக் கட்சியை வளர்த்திருந்தாலும்—அக் கட்சியைவிட்டு வெளியேறி, வேறு எதிர்க்கட்சி அமைத்ததினால் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்த பெருமைக்கு உரியவராவார்.

அது மட்டும் அல்ல. இந்த நாட்டிலுள்ள வழக்கறிஞர்களுக்கு அறிவுரை எடுத்துக் கூறி, அவர்களைத் தைரியமாக மக்களுடைய நலத்துக்காகப் போராடச் செய்ய வழிகாட்டியது போலவே, பிரகாசம் அவர்கள் அமைச்சர்களுக்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்திருக்கிறார்—சிறப்பாக முதலமைச்சர்களுக்குங் கூட—என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மொழிப் பகுதிகளெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையதான ஆட்சியில் இருந்த காரணத்தால், பிரகாசம் அவர்கள் திராவிட இனத்திற்கும் நிலத்திற்குமே கூடப் பெருமைக்குரிய தலைவராக விளங்கினார்கள். அவரிடத்திலே இருந்த வீர உணர்ச்சி நமக்கெல்லாம் ஏற்படுமேயானால், அவரிடத்திலே இருந்த தன்மான உணர்ச்சி நம்மவருக்கெல்லாம் தோன்றுமேயானால், இந்த நாடு பெருமை பெறும் என்று நான் கருதுகிறேன்.

ஆந்திர மாகாணத்தை ஏற்படுத்துவதற்காக, வீரர் பொட்டி ஸ்ரீராமுலு செய்த தியாகத்தை பிரகாசம் அவர்கள் சிறிது அளவு கூட விட்டுக் கொடுக்காமல் வளர்த்து ஆந்திரத்தை உருவாக்க, ஆந்திரத்துக்கு பெருமை [illegible] முதுமையிலும் இளைஞர்களுக்கு தலைவராக இருந்து வழிகாட்டினார். அப்படிப்பட்ட முதியவரை நாம் பெற்றிருக்கவில்லையே என்ற வருத்தம் நமக்கு ஏற்படுகிறது. பிரகாசம் அவர்களைப் போன்ற பண்பட்ட முதுபெரும் தலைவர் இந்த நாட்டிலே இப்பொழுது இல்லை என்று சொன்னாலும், இளைஞர்களாகவுள்ள, அந்த அளவுக்கு முதுமை நிலை அடையாத தலைவர்கள் அந்த அளவுக்குத் தமிழ் நாட்டினுடைய பெருமையை நிலைநாட்டுவார்களானால், மறைந்த தலைவருக்கு நாம் நிறைவேற்றுகிற இரங்கல் தீர்மானத்தின் மூலமாக நல்ல பலனை உரிய சிறப்பினைச்செய்தவர்களாவோம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலே ஆந்திரத்திற்குக் கிடைக்கவேண்டிய இடத்தை ஆந்திரத்திற்குப் பெற்றுத் தந்து, ஆந்திரருடைய உரிமையை நிலைநாட்டி, ஆந்திர மக்களுடைய அழியாத தலைவராக விளங்குகிற பிரகாசம் அவர்கள் இன்று அமரர் நிலை எய்தி விட்டார் என்று நான் சொல்ல முடியாவிட்டாலும், மக்களுக்கு வழிகாட்டும் உயர் நிலையைப் பெற்றுவிட்டார், என்று சொல்லுவேன். உத்தமர் காந்தியடிகள் இந்த நாட்டிற்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைந்ததைப் போல, பண்டித நேரு அவர்கள் இந்த நாட்டுக்கு, தலைவராகக் திகழ்வதைப் போல, அவர்களுக்கு ஈடாகவும் இணையாகவும் நமது பிரகாசம் அவர்களும் திகழ்ந்தார்கள் என்று சொல்லலாம். அன்னாருடைய மறைவு நமக்கு ஆழ்ந்த வருத்தத்தை அளித்துள்ளது. அவரை இழந்துவருந்தும் நாட்டு மக்களுக்கு நம் இரக்கம் உரியது. பொதுவாக, இந்திய மக்களுக்கெல்லாம் இந்த இரங்கல் தீர்மானத்தின் கருத்து உரியது என்றாலும், அதை உணராத மக்கள் மிகப் பலர். ஆனால், ஆந்திர மக்கள் இந்த வருத்தத்தில் மிகுதியாக ஆழ்ந்திருக்கிறார்கள். இன்றையதினம் அவர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த இரங்கல் உரியதாகும். சிறப்பாக அவருடைய குடும்பத்தாருக்கும், பொதுவாக திராவிட இனத்திற்கும் நம்முடைய ஆழ்ந்த வருத்தம் தெரிவித்ததற்கு உரியது என்று கூறிக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிந்து, உரையையும் முடித்துக்கொள்ளுகின்றேன்.

11-18 a.m. SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் பிரகாசம் அவர்கள் தேசீய விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கிய பங்கு வகித்திருக்கிறார். அதன் காரணமாக அவர் சொத்து சுகம் அத்தனையும் இழந்திருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உப்பு சத்தியாகிரகத்தில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டதோடு, சைமன் கமிஷனை எதிர்த்து கிளர்ச்சி நடத்தி போதும் பங்கு கொண்டு, "சுயராஜ்யா" என்னும் பத்திரிகையையும் எழுதி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் இந்நாட்டிலிருந்து விரட்ட கடுமையாகப் போராடியிருக்கிறார். அவர் தம் தேசீய செல்வாக்கை வைத்துக்கொண்டு தன் சொந்த நலத்துக்காக, பாக்கியிருக்கிறவர்களைப் போல, பணம் தேடிக் கொள்ளவில்லை. அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் எங்கள் கட்சியினருக்கும் அவருக்கும் கடுமையான அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும், அவைகளையெல்லாம் சொல்வதற்கு இது சந்தர்ப்பம் அல்ல. ஆனால், அப்படிப்பட்ட ஒரு பெரிய வீரருடைய தியாகத்தைப் போற்றும் வகையில், யார் என்ன சொன்னபோதிலும் தம் மனதில் பட்டதே சரி என்று காரியத்தை செய்யக்கூடிய தைரியத்துக்காக, அவருக்கு "ஆந்திர கேசரி" என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள் ஆந்திர மக்கள். அப்படிப்பட்டவர் மறைந்ததைக்குறித்து என் கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

11-20 a.m. MR. SPEAKER : The Resolution reads as follows :—

"This House places on record its deep sense of sorrow at the demise of Sri T. Prakasam, former Chief Minister of Madras from 1946 to 1947 and conveys its deep sense of sympathy to the members of his bereaved family ".

இந்தத் தீர்மானத்தில் நானும் கலந்து கொள்ள விரும்புகிறேன். 25 ஆண்டுகளாக அவரோடு கலந்து வேலைசெய்த தொண்டர்களில் ஒருவன் நான். அவர் வக்கீலாக இருந்தாலும்சரி, பத்திரிகாசிரியராக இருந்தாலும் சரி, சட்டசபை அங்கத்தினராக இருந்தாலும் சரி, முக்கிய மந்திரியாக இருந்தாலும் சரி, எந்த வேலையிலாவது அவர் போன்ற தைரியத்துடன் வேலை செய்யும் மனிதர்கள் மிகக் குறைவு என்றுதான் நான் சொல்ல முடியும்.

நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பெரிய பங்கெடுத்து, "ஆந்திர கேசரி" என்ற பெயரைப் பெற்ற மகான் அவர். அன்னார் இறந்து போனது ஆந்திர நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் வருத்தத்தைத் தரக்கூடிய செய்திதான். அம்மாதிரியான பெரியார் இறந்து போனது எங்களெல்லோருக்கும் ஒரு நஷ்டம்தான். இந்த அனுதாபத் தீர்மானத்தில் நானும் கலந்துகொண்டு, அவருடைய பிள்ளைகளான ஸ்ரீ நரசிம்ம ராவ், ஸ்ரீ ஹனுமந்த ராய் ஆகிய இருவருக்கும் இந்த அனுதாபத் தீர்மானத்தை நான் அனுப்பிவைக்கிறேன்.

இந்த அனுதாப தீர்மானத்திற்கு நீங்களெல்லோரும் சம்மதம் தெரிவிக்கும் வகையில் இரண்டு நிமிஷங்கள் எழுந்து நிற்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

The resolution was carried *nem. con* all the Members of the Assembly standing in silence for two minutes.

MR. SPEAKER : அவரை கௌரவிக்கும் வகையில் இந்த சபையை இன்று பிற்பகல் 2½ மணி வரை நான் ஒத்திவைக்கிறேன்.

The House then adjourned.



The House reassembled at half past two of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Tamil officers in the Special Armed Police in Andhra Pradesh.*

* 7 Q.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. Minister for Home be pleased to state, with reference to the answer given to clause (d) of the Starred Question No. 220-A on 16th August 1956, the decision taken by the Government regarding the request of Tamil officers in the Special Armed Police in Andhra?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government decided to repatriate all the Tamilian personnel serving in Andhra Pradesh Special Armed Police as a result of which all such personnel except those who preferred otherwise have since been repatriated to this State.

MR. SPEAKER : We shall take up Question No. 8 later on.

*Pig Iron Factory.*

* 9 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a factory for the production of pig iron in Madras; and

(b) if so, where?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Yes, Sir. There is a proposal to set up in the public sector a plant in Salem for the manufacture of pig iron from the low grade ores available in that district.

SRI N. K. PALANISAMI : இந்த காண்டிராக்ட் எத்தனை வருஷ காலத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பப்ளிக் செக்டாரில் செய்யப் போவதாக உத்தேசம், அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் காண்டிராக்ட் ஒன்றும் இல்லை.

SRI K. ANBAZHAGAN : சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை தொடங்கப்போவதால் அதற்கு நெய்வேலியில் இருந்து கிடைக்கும் நிலக்கரியைப் பயன் படுத்தத் திட்டம் ஏதாவது உண்டா ? அந்தத் திட்டத்தை மத்திய சர்க்கார் நிர்வகிக்குமா அல்லது மாகாண சர்க்காரே ஏற்று நடத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நெய்வேலி நிலக்கரியை உபயோகப்படுத்த முடியுமா என்பதைத்தான் ஜாம்ஷெட்பூரில் உள்ள நாஷனல் மெட்டலர்ஜிகல் லாபரடரியில் பரிசீலனை செய்யப்படுகிறது. அந்தப் பரிசீலனைக்குப் பிறகுதான் நெய்வேலி நிலக்கரி உபயோகப்படுமா இல்லையா என்பது தெளிவுபடும்.

[27th June 1957

**Sri N. K. PALANISAMI** : சேலத்தில் இந்த பாக்டரியை ஏற்படுத்தப் போவதன் மூலமாக இந்த மாகாணத்தில் உற்பத்தியாகப் போகும் ஸ்டீல் பிளாண்ட்டின் கபாஸிடி எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஸ்டீல் பிளாண்ட் வேறு; பிக் அயர்ன் வேறு. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**Sri A. A. RASHEED** : Will the matter be taken up soon ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : The matter is under examination by the National Metallurgical Laboratory at Jamshedpur. Samples of ore are being sent to that place for testing. As soon as the results of the examination are received, we may move further in the matter.

**Sri A. GOVINDASAMY** : சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கு நெய்வேலி நிலக்கரியை உபயோகப்படுத்தலாம் என்று ஜெர்மனி நிபுணர் கூறியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அப்படி ஒன்றும் இல்லை. ஜெர்மனியில் லோ கிரேட் நிலக்கரியை லோ ஷாப்ட் பர்னஸுக்கு உபயோகப் படுத்துவதாகவும் பழுப்பு நிலக்கரியாக இருந்தாலும்கூட இரும்பு உற்பத்தி செய்யலாம் என்றும் அந்த நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத் தான் நமது நாஷனல் மெட்டலர்ஜிகல் லாபரடரி பரிசீலனை செய்கிறது.

**Sri S. B. ADITYAN** : நமது ராஜ்யத்தில் பிக் அயர்ன் உற்பத்தி செய்வதற்கு தனியாருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது அல்லவா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இரண்டு பேருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கோயம்புத்தூர் டெக்ஸ்டைல் கெமிகல் கம்பெனிக்கு 50 டன் கபாஸிடி உற்பத்தி செய்வதற்கு லைசென்ஸ் கொடுக் கப்பட்டிருக்கிறது. இன்னொன்று ராமகிருஷ்ணா இன்டெஸ்டரி கம்பெனிக்கு 30 டன் உற்பத்தி செய்ய லைசென்ஸ் கொடுக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

**Srimathi T. N. ANANDANAYAKI** : இந்தப் பரிசீலனையின் முடிவு எத்தனை நாளைக்குள் தெரியும் என்பதை கனம் மந்திரி அவர்கள் எறக்குறைய சொல்வார்களா ?

**Mr. SPEAKER** : அதை அவர் எப்படிச் சொல்ல முடியும் ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : சாதாரணமாக ரிஸர்ச் செய்வதில் நமக்கு அதிருஷ்டம் இருந்தால் உடனடியாக ரிசல்ட் கிடைத்து விடலாம். சில விஷயங்களில் நூற்றுக்கணக்கான வருஷங்கள் பரிசீலனை செய்தாலும் ரிசல்ட் தெரிவதில்லை.

**Sri V. K. KOTHANDARAMAN** : சேலத்தில் ஆரம்பிக்க இருக்கக் கூடிய இரும்புத் தொழிற்சாலையை, சீக்கிரமே பரிசீலனை செய்து இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே முடிவு ஏற்படும்படியாகச் செய்வார்களா ? அப்படி இல்லை என்று சொன்னால் அடுத்த ஐந்தாண்டு திட்டத்திலாவது எடுத்துக்கொள்ளப்படுமா ? இப்போது அஸ்ஸாமில் எண்ணை சுத்தி கரிப்பு ஆலை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் உடனடியாக ஆரம்பிக்கப்படாவிட்டால் அங்குள்ள மந்திரி சபை ராஜிநாமா செய்து விடும் என்றும் சொல்கிறார்களே, அதே போன்று சேலத்தில் உடனடியாக இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும், இல்லையானால் இந்த மந்திரி சபை ராஜிநாமாச் செய்துவிடும் என்று அறிவிப்பார்களா ?

**Mr. SPEAKER** : மூல கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் சம்பந்தம் கிடையாது.



27th June 1957]

இன்னொரு விஷயம். கேள்வி கேட்கும்போதும், பேச எழுந்திருக்கும் போதும் கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய சொந்த இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டும். எனென்றால் அவர்களுடைய பெயரை நான் தப்பாக அழைக்கும்படி நேரிடலாம். அவர்களுடைய பெயரை நான் தப்பாக அழைப்பதாக கனம் அங்கத்தினர்கள் பின்னர் வருந்தக்கூடாது.

**Sri A. GOVINDASAMY** : கனம் மந்திரி அவர்கள் ஒரு உப கேள் விக்குப் பதில் சொல்லும்போது பரிசீலனை விஷயத்தில் அதிருஷ்டம் இருந்தால் சீக்கிரத்தில் ரிசல்ட் கிடைக்கும் என்பதாகச் சொன்னார்கள். நமது சர்க்காருக்கு அதிருஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : அதிருஷ்டம் இருக்கிறதா இல்லையா என்று ஜோஸியரைக் கேட்கலாம்.

*General Elections*, 1957.

* 8 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the amount spent for the General Elections held during March 1957; and

(b) whether Travelling Allowance has been paid to all the officers who conducted the elections ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (a) An expenditure of about Rs. 37,58,000 has been incurred by the Government up to the end of April 1957 in connexion with the General Elections 1957 to the House of the People and the Madras Legislative Assembly. Some more expenditure is likely to be incurred on certain items, such as payment of Travelling Allowance bills of polling personnel, etc.

(b) Not yet completely, Sir.

**Sri N. K. PALANISAMI** : போன தேர்தலில் வேலை செய்தவர்க ளுக்கு இரண்டு மூன்று வருஷங்கள் கழித்துக்கூட அவர்களுக்குச் சேரவேண்டிய பணம் போய் சேர்ந்து இருக்கிறது. அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் தேர்தலில் வேலை செய்த ஆபீஸர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மாத காலத்திற்குள் ஊதியம் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இது பற்றி எல்லாக் கலெக்ட ருக்கும் அறிக்கை விடப்பட்டிருக்கிறது. இந்த முறையில் துரிதமாக நடவடிக்கை எடுத்து கூடிய சீக்கிரம் அந்தக் கூலியைப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : இதில் மத்திய சர்க்கார் நம் சர்க்காருக்கு எவ்வளவு தொகை கொடுக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : பாதித் தொகை நமக்குக் கொடுப்பார்கள்.

**Sri A. V. P. ASAITHAMBI** : கூடியவரையில் மூலக் கேள்விக்கும் பதில் தமிழில் சொன்னால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் ஆங்கிலத்தி லும், பின்பு தமிழில் கேட்கப்படுகிற உப கேள்விகளுக்கு தமிழிலேயே பதில் சொல்வதும்தான் இங்குள்ள வழக்கம்.

[27th June 1957

**Sri A. A. RASHEED**: What is the deposit amount that has been forfeited to the Government?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: I would like to have notice.

**Sri K. R. VISWANATHAN**: தேர்தல் சமயத்தில் வாக்காளர்கள் தேர்தல் சாவடிக்கு முன்பு வெய்யிலிலும், மழையிலும் பாதுகாப்பு இன்றி நின்றுகொண்டிருப்பதால் தேர்தல் சாவடிக்கு முன் பாதுகாப்பு இல்லாத இடங்களில் கொட்டகை அமைத்துக் கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இந்தக் கேள்வியில் "பொதுத் தேர்தல்" என்ற ஒரு வார்த்தை இருப்பதைத் தவிர இந்தக் கேள்விக்கும், உப கேள்விக்கும் வேறு எவ்வித சம்பந்தமும் இல்லை.

**Sri M. S. SELVARAJAN**: தேர்தலில் வேலைசெய்கிற அதிகாரிகளுக்கு அட்வான்ஸ் வசதி கூட இம்முறை செய்து வைத்திருந்தது வாஸ்தவம் இல்லையா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: ஆம். ஆங்காங்கு அட்வான்ஸும் கொடுத்து அவர்கள் செலவுக்கு வேண்டிய சௌகரியங்களும் கொடுக்கப்பட்டது.

*Handloom cloth stocks.*

* 10 *Q*.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware that huge stocks of handloom cloth are accumulated both with the Co-operative Producing Societies and the private producers in the State; and

(*b*) what steps were taken by the Government for finding markets and for giving relief?

**The Hon. Sri R. VENKATARAMAN**: (*a*) There is only a slight accumulation of stocks of handloom goods produced by looms in some select regions of this State. This is not peculiar to the handloom sector of the Textile industry alone; there have been reports of accumulation of stocks of cloth in the Mill sector also indicating a general slump in the textile market.

(*b*) A number of schemes have been implemented with success for expanding the markets for the handloom goods and for giving relief to the handloom weavers, with financial assistance, extended by the Government of India for the purpose, from the Handloom Cess Fund. These schemes are being continued.

**Sri K. SATTANATHA KARAYALAR**: எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது, அதன் விலை என்ன என்று சொல்ல முடியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: மொத்த உற்பத்தி சுமார் ஏழு கோடி எழுபது லட்சம். ஸ்டாக் தங்கியிருப்பது எழுபது லட்சம்.

**Sri K. ANBAZHAGAN**: கைத்தறித் துணி தென்னாட்டில் மட்டுமே மிகுதியாகத் தயாரிக்கப்படுகிற காரணத்தால் பிறபகுதிகளில் இருந்து ஆலைத் துணிகள் இங்கு மிகுதியாக வருவதைத் தடுக்க மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு வேண்டுகோள் விடுமா ?



27th June 1957]

**The Hon. Sri R. VENKATARAMAN**: நம்முடைய அரசியல் சட்டத்தின்படி ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்கு வரும் பொருள்களை தடுப்பது என்பது சாத்தியமான காரியம் அல்ல.

**Sri K. SATTANATHA KARAYALAR**: ஸ்டேட் கோவாபரேடிவ் வீவர்ஸ் சொஸைடியின் கையில் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறதென்று சொல்ல முடியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இதற்குத் தனி நோட்டீஸ் கொடுக்கவேண்டும்.

**Sri K. ANBAZHAGAN**: உணவுப் பொருள்களின் போக்குவரத்துக்கு வட்டாரங்கள் பாகுபாடு செய்யப்பட்டிருப்பது போல கைத்தறி ஆடைகளின் பாதுகாப்பிற்காகவும் இப்படி வட்டாரங்களாகப் பிரிக்க நமது சென்னை சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: நமது மாகாணத்தில் உற்பத்தியாகக்கூடிய கைத்தறித் துணி பிற மாகாணங்களில் விற்பனை ஆவதானல்தான் நம்முடைய தொழிலாளர்களுக்கு நன்மை. பிற மாகாணங்கள் மாத்திரம் அல்ல. வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவும் முயற்சி செய்துகொண்டிருக்கும்போது கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய யோசனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

**Srimathi T. N. ANANDANAYAKI**: இந்த கைத்தறி துணிகளை விளம்பரப்படுத்த வெளி நாடுகளுக்கு சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்ட 2.40 p.m. ஒரு தூது கோஷ்டியை அனுப்ப அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்கு ஏடன், கொழும்பு, மலேயா போன்ற இடங்களிலே விற்பனை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி இருக்கிறோம். சட்டசபை அங்கத்தினர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

**Sri N. K. PALANISAMI**: இம்மாதிரியாக இங்கு நெய்யப்பட்ட கைத்தறி ஆடைகளை இம்மாதிரி சொஸைடி மூலமாக விற்பனை செய்வதற்கு செஸ் பண்டிலிருந்து நமது அரசாங்கம் ஒரு தொகையை ஒதுக்குவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN**: இது விஷயமாக சர்க்கார் முன் பல யோசனைகள் இருக்கின்றன. இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**Sri A. V. THOMAS**: May I know whether any steps have been taken by the Central or Local Government to take over from the accumulated stocks from the handloom weavers after paying them a certain amount of money and to try to find a sale themselves or through the State Trading Corporation for these stocks?

**The Hon. Sri R. VENKATARAMAN**: The 'accumulation of stocks' is purely a temporary phenomenon and it does not persist, since the question was put. We do not think that any special steps are necessary in the present circumstances.

**Sri N. R. THIAGARAJAN**: தங்கள் கக்ஷிக் கொள்கைகளில் கூட கைத்தறி கட்டவேண்டும் என்று சட்ட திட்டங்கள் இல்லாமல் இங்கேயும் கைத்தறி கட்டாமல் குறிப்பாக ஸ்ரீ அன்பழகன், பழனிச்சாமி போன்றவர்கள் கைத்தறியை ஆதரித்துப் பேசுவதைத் தடை செய்வதுடன் இந்த சபைக் கூட்டத்திலும் கலந்து கொள்ளாமலிருக்க உத்திரவு போடுவார்களா ?

**MR. SPEAKER :** அந்தக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. I rule it out of order.

**SRI K. SATTANATHA KARAYALAR :** ஏடன், கொழும்பு, மலேயா முதலிய இடங்களில் கைத்தறித் துணிகள் விற்பனை செய்வதில் நஷ்டம் ஏற்பட்டது என்று சொல்வது உண்மையா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** I want notice for that question.

**SRI A. GOVINDASAMY :** கைத்தறி ஆடைகளை விளம்பரம் செய்வதற்கு வெளி நாடுகளுக்கு தூது கோஷ்டி ஒன்று அனுப்பப் படுமா என்று கேட்ட கேள்வி ஒன்றுக்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுகையில், சட்ட சபை அங்கத்தினர்கள் அதில் அனுபவம் இல்லாதவர்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் தேங்கிக் கிடந்த ஏராளமான கைத்தறி ஆடைகளை வாங்கி, ஊர் ஊராகத் தெருத் தெருவாகச் சென்று விற்று அனுபவம் பெற்ற தலைவர்கள் இந்த சட்டசபையில் வந்திருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** உள்நாட்டில் கைத்தறி ஆடைகளைத் தெருத் தெருவாக சென்று விற்றவர்கள், வெளிநாடுகளில் சென்று விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் செய்வார்களேயானால், அதை சர்க்கார் பரிசீலனை செய்யும்.

**SRI K. RAMACHANDRAN :** சென்னை மாகாணத்தில் கைத்தறி ஆடைகள் எவ்வளவு தேங்கி இருக்கிறது. அப்படி இருந்தால் எவ்வளவு காலமாக தேங்கி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** தேங்கி இருந்த ஆடைகள் 10 சத வீதம். நாளடைவில் விற்பனையாகிவிட்டது. இப்போது தேக்கம் இல்லை.

**SRI K. RAMACHANDRAN :** குறிப்பாக ராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு மூன்று மாத காலமாக கைத்தறித் துணி தேக்கம் இருப்பதாக சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் அங்கே சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** சேலம், மதுரை, திருச்சினாப்பள்ளி முதலிய மூன்று ஜில்லாக்களில் தேக்கம் இருந்தது. ஆனால் ராமநாதபுரம் ஜில்லாவில் தேக்கம் இல்லை.

**SRI K. SATTANATHA KARAYALAR :** தேக்கம் ஏற்பட்டிருப்பது எந்த ரகத்தில். 20-ம் நெம்பரிலா 28-ம் நெம்பரிலா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** கலர் வேஷ்டியிலும், கலர் சேலையிலும்தான் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. . . .

**SRI K. ANBAZHAGAN :** அரசாங்க ஊழியர்கள் இயன்றவரையில் கைத்தறி உடுப்புகளையே அணிவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** இப்பொழுது நடைமுறையில் இருக்கிறது.

**SRI V. K. KOTHANDARAMAN:** இப்பொழுது கைத்தறித்துணிகளைத் தனிப்பட்ட முதலாளிகள் ஏற்றுமதி செய்துவருகிறார்கள். அது உண்மையாக இருந்தால் அவ்வாறு ஏற்றுமதி செய்வதை கூட்டுறவு சங்கம் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்வார்களா ? மற்ற மாகாணங்களை விட தமிழ்நாட்டில்தான் அதிகமாக கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ?



**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு கேள்வியாக போடாமல் பல கேள்விகள் போடுவதினால் பதில் சொல்லுவது கடினமாக இருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பற்றி தனிக் கேள்வி போடும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன்.

**SRI K. ANBAZHAGAN :** கனம் அமைச்சர் அவர்கள் நான் சற்றுமுன் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் கதர் ஆடையையும் கைத்தறி என்ற கருத்திலேயே அவ்வாறு பதிலளித்துள்ளாரா ?

**MR. SPEAKER :** I rule it out of order இந்த உப கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

**SRI K. RAMACHANDRAN :** ராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு மூன்று மாத காலமாக தேக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி விசாரணை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

*Allotment of cement.*

* 11 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the quantity of cement allotted for our State for each month during the current year ; and

(*b*) whether the Government have made representations to the Central Government for increasing the allotment?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Twenty-nine thousand eight hundred and sixty-eight tons including 3,868 tons for irrigation and electricity projects, during each of the three months from April to June 1957. Twenty-six thousand tons excluding the requirements of major Irrigation and Electricity projects during each of the three months from July to September 1957. No allotment has been made as yet for the rest of the current year.

(*b*) Yes, Sir.

**SRI K. SATTANATHA KARAYALAR :** நமது சர்க்கார் மத்திய சர்க்காரை எவ்வளவு சிமெண்ட் தேவை என்று கேட்டிருக்கிறது ?

**THE HON. SRI P. KAKKAN :** மேற்கொண்டு 15 ஆயிரம் டன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

**SRI K. SATTANATHA KARAYALAR :** கிடைக்கக்கூடிய சிமெண்டில் எவ்வளவு சிமெண்ட் விவசாயத் துறையில் உபயோகப்படுத்தப் படுகிறது ?

**MR. SPEAKER. :** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தத் தகவலுக்கு தனி கேள்வி போடவேண்டும். ஆனால் கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவதாக இருந்தால் எனக்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை.

**THE HON. SRI P. KAKKAN :** விவசாயத்திற்கும் மற்ற காரியங்களுக்கும் 4,300 டன் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**SRI K. SATTANATHA KARAYALAR :** ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் விநியோகம் செய்யும் பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது ?

**THE HON. SRI P. KAKKAN** : ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆப் இண்டியா மூலமாக வினியோகிக்கிறார்கள்.

**SRI K. SATTANATHA KARAYALAR** : பொது மக்கள் யார் மூலமாக எவ்வளவு சிமெண்ட் வாங்கலாம் ?

**THE HON. SRI P. KAKKAN** : சிமெண்ட் 5 டன்களுக்கு உள்ளாக இருந்தால் பொதுமக்களுக்கு கொடுப்பதற்கு தாசில்தார்களுக்கும், கலெக்டர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்பட்டால் அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ்ஸுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

2-40 p.m. **SRI S. B. ADITYAN** : சென்னை ராஜ்யத்திலே நமது தேவைக்கு அதிகமாக சிமெண்ட் உற்பத்தி ஆகிறது அல்லவா ? அப்படி இருக்கும்போது இங்கு உற்பத்தியாகிற சிமெண்டை மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுத்துவிட்டு நாம் பற்றாக்குறையாகத் திண்டாடுவதற்குக் காரணம் என்னவென்று மந்திரி அவர்கள் விளக்குவார்களா ? நமது தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு உபரியாக இருக்கும் சிமெண்டை மட்டும் மற்ற ராஜ்யங்களுக்கு வினியோகிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை கனம் ஸ்ரீ P. கக்கன் வற்புறுத்துவார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : நமது மாகாணத்தில் உற்பத்தியாகிற சிமெண்டை கூடுமானவரையில் இந்த மாகாணத்திலேயே உபயோகப்படுத்த முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இருந்தாலும், நமது மாகாணத்தில் உபயோகப்படுத்துவதோடு கூட பிற மாகாணங்களுக்கும் கொடுப்பதில் குற்றம் இல்லை என்று நினைக்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஆதித்தன் அவர்களது யோசனையை ஏற்றுக்கொண்டால் அதே மாதிரி இரும்பு, உருக்கு முதலியவைகளை உற்பத்தி செய்யக் கூடிய மாகாணங்கள் தங்கள் மாகாணத் தேவையை பூர்த்தி செய்துகொண்டு மீதியைத்தான் கொடுப்போம் என்று சொன்னால் நாம் வீதியில் நிற்க வேண்டியதுதான்.

**SRI V. K. RAMASWAMI MUDALIYAR** : மத்திய சர்க்கார் நமக்குக்கொடுக்கும் சிமெண்ட் கோட்டாவானது, மத்திய சர்க்காரின் கட்டடங்கள் வேலை நடக்கிறது, அப்படி மத்திய சர்க்கார் கட்டும் கட்டிடங்களுக்கும் சேர்த்துத்தான் இந்தக் கோட்டா கொடுக்கப்படுகிறதா என்று கேட்கிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : இந்தக் கோட்டாவை மத்திய சர்க்கார் ஒதுக்குகிறார்கள். அதிலிருந்துதான் நாம் வினியோகிக்கிறோம்.

**SRI V. K. RAMASWAMI MUDALIYAR** : மத்திய சர்க்காரின் வேலைகள் நடக்கின்றன. அதற்குத் தனியாகக் கொடுக்கிறார்களா ? இல்லை, அது நமது ஸ்டேட் கோட்டாவில் சேருமா ?

**THE HON. SRI P. KAKKAN** : நமது மாகாணத்திற்கு எவ்வளவு தேவை என்று நாம் கேட்கிறோமோ அதற்கேற்றபடி கொடுக்கிறார்கள். அவர்கள் செய்கிற வேலைக்கு அவர்களே கொடுப்பார்கள்.

**SRI K. ANBAZHAGAN** : உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் வட்டாரப் பிரிவினை இருப்பதுபோல், இன்றியமையாத பொருளாயிருக்கும் இதற்கும் (சிமெண்டு) அந்தந்த வட்டாரத் தேவையை நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : வட்டார முறை ஏற்படுத்தினால் ஒரு சில வட்டாரங்களுக்குத்தான் உதவி செய்ய முடியும். ஆகவே, மாகாணத்தில் உற்பத்தியாகும் சிமெண்டையும் வெளியிலிருந்து வரும் சிமெண்டையும் எல்லோரும் உபயோகிக்கும் முறையில் எடுத்துக்கொள்கிறோம்.





*Dearness Allowance.*

* 12 *Q.*—**SRI N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the scavengers employed in Municipal Councils and Panchayat Boards are getting the increased dearness allowance of Rs. 5 plus 7 per mensem ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : Yes, Sir. The payment of enhanced D. A. of Rs. 12 per mensem to employees of Municipal Councils, District Boards and Panchayats has been ordered and that order is being carried out.

**SRI S. PAKKIRISAMI PILLAI**: சார், இன்னும் திருப்பத்தூர், திருப்பூர் போன்ற முனிஸிபாலிட்டிகளில் இது அமல் செய்யப்படவில்லை. பல இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கொடுக்கப்படாமலும் இருக்கிறது. கொடுக்கப்படாமல் இருக்கக் கூடிய முனிசிபாலிடிகளுக்கு உடனடியாக கொடுக்கச் சொல்லி உத்திரவு போடுவார்களா ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : இந்த ஆர்டர் எல்லா இடங்களுக்கும் ஒன்று போலவே இருக்கிறது. ஆனால் எந்த இடத்திலாவது அந்த ஆர்டர் கவனிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டால் உடனடியாகக் கவனிக்கப்படும்.

**SRI A. R. SUBAIAH MUDALIYAR** : இந்தத் திட்டப்படி 12 ரூபாய் கொடுக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சங்கரன்கோவில் பஞ்சாயத்தின் நிதி நிலைமை சரியில்லை என்றும் அதைக் கொடுப்பதற்கு தயங்கிக் கொண்டிருப்பதாகவும் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

**MR. SPEAKER** : மந்திரியவர்கள் எந்தப் பஞ்சாயத்திலாவது கொடுக்கப்படாவிட்டால் அதைப் பற்றி கடிதம் எழுதினால் விசாரிக்கிறேன் என்று சொன்னார்கள்.

**SRI A. R. SUBBIAH MUDALIYAR** : நிதி நிலைமை சரியாக இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு பண உதவி, இத்திட்டத்தின் மூலமாக ஏற்படக் கூடிய பண உதவி கவர்ன்மெண்ட் கொடுக்கக்கூடிய நிலையில் ஏதாவது திட்டங்கள் நிறைவேற்றி இருக்கிறார்களா ?

**MR. SPEAKER** : இதற்குத் தனி கேள்வி கேட்கவேண்டும். கனம் அங்கத்தினர் அவரது ஸீட்டில் போக வேண்டும். இல்லாவிட்டால் அவர் பெயர் எனக்குத் தெரியாமல் போகும்.

*Licence for powerlooms.*

* 13 *Q.*—**SRI N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have given any licences for powerlooms in the State during 1957 ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : No, Sir.

**SRI K. SATTANATHA KARAYALAR** : பவர் லூம் ஏற்படுத்தக் கூடாதென்று சர்க்கார் ஏற்கனவே ஒரு முடிவு எடுத்திருக்கிறது அல்லவா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : ஆமாம்.

**SRI P. S. CHINNADURAI** : விசைத் தறிகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிராத போதிலும் பீளமேடு, திருப்பூர் போன்ற இடங்களில் புதிதாக எவ்வாறு விசைத் தறிகள் புகுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

[27th June 1957

THE HON. SRI R. VENKATARAMAN : பருத்தி நெசவுக்குத்தான் விசைத்தறி அமைக்கப்படுவதில்லை. பட்டு, இன்னும் "ஸ்டேப்பிள் பைபர்" போன்ற நூல்களை உபயோகப்படுத்தி நெசவு செய்கிற இடங்களில் விசைத் தறி அனுமதிக்கப்படுகின்றன.

SRI N. K. PALANISAMI : மத்திய அரசாங்கம் இந்தமாதிரி ஒரு திட்டம் கொண்டுவரக்கூடிய காலத்தில் அந்தந்த மாகாண சர்க்கார் இஷ்டப்பட்டால் இந்த விசைத்தறியைப் புகுத்தலாம். இஷ்டப்படாவிட்டால் புகுத்த வேண்டாமென்று அன்றையதினம் சொன்னார்கள். நமது சர்க்கார் இந்தமாதிரி இந்தத் தறியைப் புகுத்தக்கூடாதென்று சொல்லியிருக் கிறார்களா ? அல்லது இதை நிறுத்திவைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நம் ராஜ்யத்தில் ஏரான மான கைத்தறி நெசவாளர்கள் இருப்பதினால் அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படாத முறையில்தான் நாம் எந்தக் காரியத்தையும் செய்யவேண்டு மென்ற கொள்கை அடிப்படையில்தான் பருத்தி நெசவுக்கு மாத்திரம் எந்த விதமான விசைத்தறியையும் அனுமதிக்கவில்லை.

SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : ஏற்றுமதியா கும் துணிரகங்களுக்கு மட்டுந்தான் விசைத்தறியை உபயோகப்படுத்தலாம் என்று முன்பு சொல்லப்பட்டது பட்டு போன்ற இதர நெசவுகளையும் கைத்தறி தொழிலாளர்களே ஆயிரக்கணக்கில் நெசவு செய்து வருகிறார்கள். ஆகவே, இந்தக் கொள்கையை அனுசரித்து சென்னை சர்க்கார் என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள். இந்த விசைத்தறியைப்பற்றி அது புகுத்தாமல் இருக்கப்படுமா என்று அவர்கள் உறுதி கொடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இதில் இரண்டு மூன்று கேள்வி கள் அடங்கியிருக்கின்றன. பட்டு விஷயத்தைப் பற்றிய வரையில் இப்பொழுது விசைத்தறிகளும் இருக்கின்றன, கைத்தறிகளும் இருக்கின்றன. ஆனால் விசைத்தறிகள் இருப்பதினால் கைத்தறி பாதிக்கப்படவில்லை, பட்டு நெசவைப் பொறுத்தளவில். ஆனால் பட்டு நெசவுக்காக விசைத்தறியைக் கொடுப்பது மாதிரி பருத்தி நெசவுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்வது அவ் வளவு பொறுத்தமாகாது. இரண்டாவதாக, எந்த விதத்திலும் இது புகுத்தாமல் இருக்க வேண்டுமென்று உறுதி கொடுக்க முடியுமா என்று கேட்டதற்கு, பருத்தி நெசவிற்கு விசைத்தறி கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். பிற மாகாணங்களில் விசைத்தறி மூலம் பருத்தி நெசவை அதிகரித்து நம் மாகாணத்தில் போட்டியிடும்படியான நிலைமை ஏற்பட்டு நமது கைத்தறி பாதிக்கப்படுமானால் சர்க்கார் இதை மீண்டும் புனராலோசனை செய்யும்.

SRI P. S. CHINNADURAI : பட்டு, செயற்கை பஞ்சு இவைகளால் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளுக்காக மட்டும் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஒருக்கால் இந்த செயற்கை பஞ்சாலும் பட்டாலும் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை தடைப்பட்டுப் போகிற நிலையில் பருத்தி நூலால் இந்த உற்பத்தியைச் செய்யவேண்டுமென்று விசைத்தறிகள் வைத்திருக்கிறவர்கள், விரும்பினால் இந்த லைசென்ஸ் அவர்களுக்கு மாற்றப்படுமா ? இதே கொள்கையை அனுசரித்து பின் அந்த லைசென்ஸ்கள் ரத்து செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது விஷயம் சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. விசைத்தறிகள் வாங்கியவர்கள் அதை உபயோ கப்படுத்த முடியாத நிலைமையில் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னால் குறுகிய கால அளவிற்கு பருத்தி நெசவிற்காக விசைத்தறிகள் கொடுக்க லாமா என்று பிரச்னை சர்க்கார் முன்னால் இருந்து வருகிறது. இது, கவனித்து முடிவுசெய்யப்படும்.



27th June 1957]

SRIMATHI T. N. ANANDANAYAKI : பட்டு நெசவிலே விசைத்தறி புகுத்தப் பட்டதால் பட்டு நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று நெசவாளர்களிடமிருந்து ஏதாவது மனுக்கள் வந்ததுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : மற்ற மாகாணங்களில் அதிகப்படியான விசைத்தறிகள் புகுத்தப்பட்டு அதனால் நூற்றுக்கணக்கான நம்முடைய கைத்தறி நெசவாளர்களுக்கு பாதகம் ஏற்படுகிற முறையில் அது செயல்படுமானால் அதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா ? இந்திய சர்க்காருக்கு நமது நிலைமையை விளக்கிச் சொல்லி நமது நெசவாளர்கள் அதனால் பாதிக்கப் படாமல் பார்த்துக் கொள்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, it is a hypothetical question and I do not propose to answer.

MR. SPEAKER : The Hon. Minister is at liberty not to answer.

SRI K. ANBAZHAGAN : இப்பொழுது விசைத்தறியைப் புகுத்துவது பற்றி சர்க்கார் மேற்கொள்கின்ற கொள்கை இடைக்கால கொள்கைதானா அல்லது நிரந்தரமான முடிவாகுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமானதல்ல. அந்தந்த சந்தர்ப்பத்தையொட்டி எந்த முடிவு செய்தால் மக்களுக்கு நன்மையோ அவை செய்யப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : தற்சமயம் பட்டு, ரயான், நிலான் இவைகள் உற்பத்தி செய்வதற்கு மாத்திரம் விசைத்தறி புகுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதில் எத்தனை தரம் ? உற்பத்தி எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : Question No. 14. 3.00 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : May I answer questions Nos. 14 and 15 together? Supplementary questions may be put on both. I shall answer question No. 15 in the first instance and then answer question No. 14.

MR. SPEAKER : There is no objection to it.

*Beedi workers.*

*15 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have examined the recommendations of the Special Officer who enquired into the service conditions of beedi workers and taken final decisions?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The Government have decided to undertake legislation for beedi workers as recommended by the Special Officer.

A Bill for beedi workers is being finalised.

[27th June 1957

* 14 *Q*.—SRI N. K. PALANISAMI AND SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Bill for granting protection to beedi workers has been finalised; and

(*b*) if so, when it will be introduced in the Assembly?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The Bill has not yet been finalised.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI: இந்த பில் குறித்து ஏற்கனவே கிளர்ச்சிகள் நடந்திருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்பே கொண்டு வருவதாக கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். இப்பொழுது சிபார்சுகள் வந்ததற்குப் பிறகு இரண்டு மாதத்திற்குள் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

THE HON. SRI R. VENKATARAMAN: ஆறு மாதங்களுக்கு முன் நான மந்திரியாக இல்லை. அந்த பில் "கமிஷனர் ஆப் லேபர்" அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது. இதில் பல சட்டப் பிரச்னைகள் இருக்கிறபடியால் நன்ருக ஆராய்ந்து இதைத் தயாரிக்கவேண்டும். இல்லாவிட்டால் இதனுல் ஏற்படக்கூடிய சிக்கல்கள் காரணமாக அடிக்கடி கோர்டுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, கால தாமதம் ஆனாலுங்கூட, இது நன்ருக யோசித்துக் கொண்டுவரப்படும்.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware of the fact that beedi workers are exploited by the rich employers?

THE HON. SRI R. VENKATARAMAN: I know it very well. That is why we are bringing in this bill.

SRIMATHI T. N. ANANDANAYAKI: அந்த மசோதாவைத் தயாரிக்கும் போது பீடித் தொழிலாளர்கள் அழைக்கப்பட்டு அவர்களின் கஷ்டங்களை நேரடியாகப் புரிந்துகொள்வதற்கு அமைச்சர் தக்க ஏற்பாடுகள் செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதைத் தெரிந்துக் கொள்வதற்காக "ஸ்பெஷல் ஆபீஸர்" நியமித்து பரிசீலனை செய்து ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பில் தயாரித்தானதும் பிரசுரிக்கப்படும். அப்போது தொழிற் சங்கங்கள் ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் அதையும் சர்க்கார் கவனிக்கும்.

SRI K. RAMACHANDRAN: பில் தயாரிக்கப்பட்டு "கமிஷனர் ஆப் லேபர்" அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா, அல்லது அவரது அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இதனுடைய முறையை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். "டிராப்ட்" தயார்செய்து சம்பந்தப்பட்ட பல இலாகாக்களுக்கு அனுப்பப்படுகிறது. இலாகாக்களிலிருந்து வருகிற அபிப்பிராயத்தை ஒட்டி மறுபடியும் அதைத் திருத்தி அது சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு மீண்டும் அனுப்பப்படும்.

SRI N. K. PALANISAMI: இப்போது "ஸ்பெஷல் ஆபீஸர்" கொடுத்த சிபார்சுகளை எல்லோரும் வரவேற்கிருர்கள். கனம் மந்திரி அவர்கள் சொல்லும்போது, தயாரிப்பில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று



27th June 1957]

சொன்ஞர்கள். ஆகவே, சிபார்சுகளில் ஏதாவது விடப்படுமா, அல்லது அத்தனை சிபார்சுகளையும் ஏற்றுக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இது குறித்து என்ஞல் முன்கூட்டியே ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI S. B. ADITYAN: பீடித் தொழிலாளர்கள் எனப்படுவதிலே பீடி "பிராஞ்ச் மானேஜர்" களும் இருக்கிருர்களே, அவர்களும் பாது காப்பிற்குள் வருவார்களா? அல்லது, அவர்கள் வேலையை இழக்கக்கூடிய நிலைமை வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: நான் முன்பே இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன விஷயம்கூட ஒரு சிக்கல்தான். இதையும் பரிசீலனை செய்துதான் முடிவு செய்யப்படும். பில் பிரசுரிப்பதற்குமுன் ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: முன்பு, பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டபோது, மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது இது கமிஷனருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொல்லப்படுகிறது. மீண்டும் மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டுமென்று சொல்லப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த மசோதாவைத் தயாரித்து கொண்டுவரும் முறையை நான் விளக்கமாகச் சொன்னேன். பல இலாகாக்களுக்கு அனுப்பி அவர்கள் அபிப்பிராயத்தை கேட்டு, கடைசியாக எந்த இலாகா அதைத் தயாரிக்கவேண்டுமோ அதற்கு அனுப்பப்படுகிறது. இதனுல், ஆரம்பபூர்வமாக செய்யப்படவேண்டிய பல காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன என்று பொருள்.

*Godavari river water for Madras State.*

* 16 *Q*.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to get water from Godavari river?

THE HON. SRI P. KAKKAN: Yes, the Chief Minister of Madras had discussions with the Chief Minister and the Deputy Chief Minister of the former State of Andhra on this question.

SRI N. K. PALANISAMI: இந்தமாதிரி தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு அவர்கள் அனுமதித்துவிட்டார்களா? அப்படி அனுமதித்து இருந்தால், இந்த விஷயத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.

சர்க்கார் இந்த மின்சார விநியோக கம்பெனிகளை எடுத்துக்கொள்ளும் போது, அந்தக் கம்பெனிகளில் வேலைசெய்யும் சூபர்வைசர்கள், இன்னும் இது போன்ற உத்தியோகஸ்தர்களுடைய சம்பள விஷயமாக எடுத்துச் சொல்ல வேண்டுமானால், மூன்று வருஷங்களுக்கு சம்பள உயர்வு பெற வழியில்லாத நிலைமை இருக்கிறது. இந்தக் குறை நீக்கப்பட வேண்டும். கம்பெனிகளில் வேலை செய்யும் சூபர்வைசர்கள் போன்றவர்களுடைய வீட்டுக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், நிர் வாகம் அரசாங்கம் கைக்கு வந்த பிறகு, அந்தச் சலுகை அவர்களுக்குக் கிடையாது என்று சொல்லப்பட்டதாக மின்சார இலாகா உத்தியோகஸ் தர்கள் மூலமாக தெரியக் கிடக்கிறது. அத்தகைய குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும்.



அத்துடன் விவசாயத்திற்கு வேண்டிய மின்சார வசதி சீக்கிரமாக செய்து கொடுக்க வேண்டிய நிலைமையையும் உண்டுபண்ணவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டு மென்று எழுதிக் கேட்டுக்கொண்டதற்கு இப்பொழுது இன்ஜினீராக இருப் பவர் சொல்கிறார். "ரூ. 500-க்கு மேற்பட்ட திட்டங்களுக்கானல் திருவண்ணாமலையில் இருக்கிற Assistant Engineer, Commercial என்ற அதிகாரியைப் பார்க்க வேண்டும்" என்று. நாங்கள் கேட்டுக்கொள்வ தெல்லாம் இதுதான். இம்மாதிரி 500 ரூபாய்க்கு மேல் போகிற நேரத் தில், திருவண்ணாமலைக்குப் போக வேண்டும், அங்கு போக வேண்டும், இங்கு போக வேண்டும் என்று ஏழை எளிய மக்கள் விரட்டி அடிக்கப்படு வது மிகவும் சிரமமான காரியம். இனியும் இம்மாதிரி நிலைமை இல்லா மல், கிராமங்களுக்கு விவசாய காரியங்களைப் பொறுத்த வரையில், அதி லும் 30, 40 மோட்டார் செட்டுகள் வைத்துக் கொள்ள உத்தரவு கொடுக்க வேண்டுமென்ற நிலைமை வருகிறபோது, அந்த அதிகாரத்தை ஜில்லாவி லிருக்கிற இன்ஜினீர்களுக்கே தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த தென்னாற்காடு ஜில்லா மின்சார விநியோகக் கம்பெனி ஸ்ரீ பி. டி. ராஜன் தலைமையில் இப்போது வந்தது. அவர் தலைமையில் வந்த பிறகு அந்தக் கம்பெனி நல்ல முறையில் வேலை செய்ய ஆரம்பித்தது. ஆனால் இந்த நேரத்தில் அரசாங்கம் அதை ஏற்றுக கொண்டது. இம்மாதிரி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் சென்ற சட்டசபையில் ஐந்து ஆண்டுகளாகப் பலமுறை சொல்லி வந்திருக்கிறேன். சர்க்கார் அதை தேசியமயமாக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேன். அந்த முறை யில் இந்த எலெக்டிரிஸிடி போர்டானது தன்னிடத்தில் முழு அதிகாரத் தையும் வைத்திருக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த எலெக் டிரிஸிடி போர்டில் பாராளும் மன்ற உறுப்பினர்களுக்கோ, சட்டசபை உறுப்பினர்களுக்கோ இடம் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்லி இருக்கிறது. அப்படி இல்லாமல அதில் பாராளும் மன்ற உறுப்பினர் களுக்கும், சட்டசபை உறுப்பினர்களுக்கும் இடம் இருக்க வேண்டும். அப்போது தான் பொதுமக்களின் குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வசதியாய் இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்வது எல்லாம் நல்ல அநுபவம் வாய்ந்தமுதிர்ந்த நமது பி. டி. ராஜன் போன்றவர்கள் இதில் இடம் பெறவேண்டும் என்பது தான். அப்படி இருந்தால் தான் பொதுமக்கள் அவர் மூலமாக குறைகளைச் சொல்வதற்கு வசதியாய் இருக்கும். எலெக்டிரிஸிடி போர்டில் என்ஜி னீயர் போன்றவர்கள் இருப்பது அவசியம் தான். அதேபோன்று அந்தத் துறையில் நல்ல அநுபவமும், வியாபாரத் துறையில் நல்ல அநுபவமும் உடைய தனியார் சிலர் இருக்க வேண்டுமென்று செய்தால் பொதுமக்க ளுடைய கருத்துக்கள் இதில் அதிகம் இடம்பெற வசதி உண்டு என்று சொல்லிக் கொண்டு நான் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR**: கனம் சபாநாயகர் அவர் 3-52 p.m.
களே, நான் இந்த மசோதாவை முழுமனதுடன் வரவேற்கிறேன். அப்படி வரவேற்கும்போது எனக்கு முன்பு பேசிய நண்பர் சொன்னது போல அருகாமையில் அமைக்கப்பட இருக்கும் எலெக்டிரிஸிடி போர்டில் பொது மக்களுடைய பிரதிநிதிகளை, நல்ல அநுபவமும் ஆற்றலும் உள்ளவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த போர்டு அமைப்பதால் நல்ல நன்மை கிடைக்கு மென்று நம்புகிறேன். தனியார் உடைமையாக இருக்கக் கூடிய ஸ்தா பனங்களிலெல்லாம் உள்ள குறைகளைப் போக்கி பாரபட்சமற்ற முறையில் இந்த போர்டு செயலாற்ற முடியும் என்று நம்புகிறேன்.

தென்காடு போன்ற இடங்களிலும், சுற்றுப்புறங்களிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து போர்டு உள்ள இடங்களுக்கு மின்சார விநி யோகம் இல்லாமல் அதே சமயத்தில் பஞ்சாயத்து இல்லாத இடங்களில் மின்சார விநியோகம் இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் ஒரு

[Sri K. Sattanatha Karayalar] [27th June 1957

சில மாதங்களுக்கு முன்பு வரை அவை கேரள திருவாங்கூர் கொச்சியுடன் சேர்ந்து இருந்தது தான். அந்த நிலையை உடனே போக்கி, புதிதாக இந்த வட்டாரம் முழுவதற்கும் மின்சாரம் விநியோகிக்கும்போது, ஒரு வேளை இந்தத் திட்டத்தால் லாபம் இல்லாமல் நஷ்டம் ஏற்படக்கூடும். இதில் லாப நஷ்டம் ஏற்படுவதைக் கணக்கில் எடுக்காமல் இத்திட்டத்தை நல்ல முறையில் செயலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக அச்சம்புதூர் போன்ற பெரிய இடங்களுக்கு மின்சார விநியோகம் இல்லை என்பதாக முன்பு குறிப்பிட்டேன். இந்தக் குறைகளைப் போக்க வேண்டும். அங்கு சிறு தொழில்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கு எல்லாம் மின்சாரம் கொடுத்துதவ வேண்டும் என்று சொல்லி இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

3-54 p.m. **Sri N. K. PALANISAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ஸ்ரீ ராமைய்யா அவர்கள் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு இந்த மாதிரி ஒரு முற்போக்கான மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். காரணம் பல வருஷங்களாக இந்த மாதிரி போர்டு ஏற்படவேண்டும், இதன் காரணமாக கன்ஸ்யூமர்களுக்கு அதிகப்படியான சலுகை கிடைக்கவேண்டும், கன்சம்ஷன் சார்ஜ் குறைய வேண்டும் என்பதற்காக மக்கள் கிளர்ச்சிகள் செய்தார்கள். ஜூலை மாதத்திலிருந்து இந்த போர்டு வேலை செய்யும். மாகாணத்திற்குள் மின்சாரம் மூலமாக வரும் வருமானம் கன்ஸ்யூம் ஆகும்படி செய்யாமல் அந்த போர்டு கையில் கொடுத்து மின்சாரத்தை விரிவு படுத்த உபயோகிக்கப்படும். மேலும் இதில் வரக்கூடிய வருமானம் மூன்றில் இரண்டு பங்கு ரிபேட்டாக மின்சாரக் கம்பெனிகளுக்குப் போய்ச் சேரும் என்று இதில் விதி இருக்கிறது. சர்க்கார் இந்த அதிகாரத்தை போர்டுக்கு மாற்றக் கூடிய காலத்தில் தொழிலாளர்களுடைய நலனை அவசியம் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் இன்றைய தினம் வரையில் அவர்கள் வேஜ் இன்க்ரிமெண்டு வேண்டுமென்று பல வருஷங்களாகப் போராடி இருக்கிறார்கள். டிரான்ஸ்போர்ட் ஊழியர்களுக்கு 15 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக மாற்றப்பட்டிருக்கிறது. போன இரண்டு வருஷத்திற்கு முன்பு மூன்று செக்ரடரிகள் கூடி 18 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்தி அங்கு வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் கொடுப்பதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் இது வரையிலும் அது கொடுக்கப்படவில்லை. அப்போது கேட்டதற்குப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்றார்கள். பின்னால் வரக்கூடிய காலத்தில் போர்டு பார்த்துக் கொள்ளும் என்று சொல்லுகிறார்களே தவிர உண்மையாக சர்க்காரே இப்படி தங்களிடத்தில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கையை நிறைவேற்றாது போனால் தனிப்பட்ட முதலாளிகள் அவர்களை எப்படி நடத்துவார்கள் ? தவிர இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே அவர்களிடமிருந்து ஜூலை மாதத்திலிருந்து புதிதாக அமைக்கப்படப் போகிற போர்டில் வேலை செய்யத் தயார் என்று கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். அப்படி போர்டு வரக்கூடிய காலத்தில் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பென்ஷன் அவசியம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். குறைந்த பட்ச சம்பளம் 25 ரூபாயாவது அவசியம் கொடுக்கவேண்டும் என்பதாகவும் அந்த போர்டுக்குச் சிபார்சு செய்ய வேண்டும். இன்னும் அவர்களுக்கு கல்விச் சலுகை, வைத்திய உதவி முதலிய எல்லா வசதிகளையும் கொடுத்து உதவவேண்டும். இன்னும் அவர்களுக்கு வேண்டிய கடன் உதவியை அர்பன் பாங்கிலிருந்து, கோவாப்ரேடிவ் பாங்கில் இருந்து கொடுப்பதற்கு வசதி செய்ய வேண்டும். அப்படிச் செய்வார்கள் என்று எதிர்பார்த்து நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

3-58 p.m. **THE HON. SRI V. RAMAIAH :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ எ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபோது " அரசாங்கம் விவசாயிகளுக்கு அதிக மின்சார சக்தியைக் கொடுக்க வேண்டும் ; மின்சாரம் விவசாயிகளுக்கு விரைவில் கிடைக்க வேண்டும் " என்று சொன்



27th June 1957] [Sri V. Ramaiah]

னார்கள். தென்னாற்காடு ஜில்லாவில் அது கிடைக்கவில்லை என்றும் அவர்கள் சொன்னதற்கு இதுவரையில் இருந்து வந்த காரணம் அவர்களுக்குத் தெரியும். ஒரு கம்பெனியின் கீழ் அவ்வேலை நடைபெற்று வந்ததால் அவர்கள் விரும்புகிற அளவு கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு மின்சாரம் அதிகம் கிடைக்க வேண்டுமென்ற காரணத்தால் படிப்படியாக மின்சார விநியோகக் கம்பெனியை அரசாங்கமயமாக்கி வருகிறோம். அதே போல் தென்னாற்காடு மின்சார விநியோகக் கம்பெனியை இந்த மாதம் முதல் தேதியிலிருந்து அரசாங்கம் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு இதுவரையில் இருந்து வந்த கஷ்டம் இனிமேல் அதிகம் இருக்காது என்று நினைக்கிறேன். மேலும் அவர்கள் சொல்கிறபோது சிப்பந்திகளுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் இருக்கக் கூடிய குறைகளைக் கவனித்து வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதை முன்னரே பரிசீலனை செய்து வேண்டியதைச் செய்து வருகிறோம். கனம் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது இந்த மசோதாவுக்குச் சம்பந்தம் இல்லாமல் போய் விட்டார்கள். ஆகையால் இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட ஒரு பிரச்சனையும் இருக்க முடியாது. மசோதாவின் மூலம் இருக்கக் கூடிய நிலைமையை மாற்றி நல்ல முறையில் சரியான முறையில் கொண்டுவர வேண்டுமென்பது தான் இதன் முக்கிய நோக்கம். அதற்குத் தகுந்தாற்போல் மாறுதல் செய்திருக்கிறோம். இது ப் பிரச்சனையைக் கிளப்பக் கூடிய மசோதா இல்லை. சாதாரணமாக னிகல் முறையில் அமைந்திருக்கக் கூடிய மசோதா. இதை எல் நம் ஆதரித்துப் பாஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு ன்.

MR. SPEAKER : **The question is—**

" That the Madras Electricity Undertakings (Acquisition) endment Bill, 1957, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into con- ration.

**Clause 2 was put and carried.**

**Clause 3 was put and carried.**

**Clause 4 was put and carried.**

**Clause 5 was put and carried.**

**Clause 1 was put and carried.**

The Preamble was put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

" That the Madras Electricity Undertakings (Acquisition) mendment Bill, 1957, be passed."

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER : The House will now adjourn and meet again t 9 a.m. on Friday, the 28th June 1957.

The House then adjourned.

[27th June 1957

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

59. *Notification issued with G.O. Ms. No. 881, Revenue, dated 23rd February 1957, exempting from sales tax all sales of furniture effected by the Madras Discharged Prisoners Aid Society, Madras. [Laid on the table under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

60. *Notification issued with G.O. Ms. No. 953, Public (Services-A), dated 21st March 1957, amending the regulations of the Madras Public Service Commission so as to exclude from the Commission's purview the post of Editor of Indian Law Reports. [Laid on the table under Article 320 (5) of the Constitution.]*

61. *Notification issued with G.O. No. 563, Revenue, dated 5th February 1957, amending rule 6 (4) (c) of the Madras General Sales Tax Rules, 1939, enabling payment of licence fees by a crossed demand draft or crossed postal order also. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

62. *Notification issued with G.O. No. 1037, Revenue, dated 1st March 1957, amending Schedule II of the Notification No. 278, dated 24th June 1953 extending the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952, to certain areas of the South Arcot district. [Laid on the table of the House under section 16 (2) of the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952.]*

63. *Notification issued with G.O. No. 4015, Revenue, dated 3rd November 1956, adding new rule No. 11 regarding collection of process fees by the Revenue Divisional Officer to the Madras Cultivating Tenants Protection Rules, 1955. [Laid on the table of the House under section 7 (2) of the Madras Cultivating Tenants Protection Act, 1955.]*

64. *Notification issued with G.O. Ms. No. 1173, Public (Services-A), dated 5th April 1957, amending the regulations of the Madras Public Service Commission so as to include within its purview the temporary post of Technical Assistant in the Office of the Registrar of Co-operative Societies. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution.]*

65. *Resume of work done by the Madras Legislative Assembly from the 29th April 1957 to the 7th May 1957.*

66. *Government Bill passed by the Madras Legislature in May 1957 and assented to by the Governor.*

67. *Notification issued with G.O. Ms. No. 509, Home, dated 25th February 1957, amending Part VII of the Madras Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955.]*



27th June 1957]

68. *Notification issued with G.O. Ms. No. 800, Home, dated 27th March 1957, remitting court-fees payable on petitions for extension of time, for rectification of defects in appeals or applications for review before the Madras Sales Tax Appellate Tribunal. [Laid on the table of the House under section 82 (2) of the Madras Court Fees and Suits Valuation Act, 1955.]*

69. *Notification issued with G.O. Ms. No. 952, Revenue, dated 25th February 1957, exempting from sales tax all sales of articles manufactured by the Thakkar Bapa Vidyalaya, Thyagarayanagar, Madras. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

70. *Notification issued with G.O. Ms. No. 1207, Revenue, dated 15th March 1957, exempting from sales tax all sales of appalam produced by the Departmental Appalam Production Centres at Triplicane in Madras, Chidambaram in South Arcot district, Athoor in Madurai district, Tirukalikundram in Chingleput district and Cheranmahadevi in Tirunelveli district. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

71. *Notification issued with G.O. No. 121, L.A., dated 23rd January 1957, exempting X-Ray plant used for diagnostic and therapeutical purposes in the dispensaries and consulting rooms of medical practitioners from section 250 of the Madras District Municipalities Act, 1920.*

72. *Notification issued with G.O. Ms. No. 535, Home, dated 28th February 1957, amending sub-rule (a) of rule 319 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

73. *Notification issued with G.O. Ms. No. 595, Home, dated 6th March 1957, amending the First Schedule to the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

74. *Notification issued with G.O. Ms. No. 684, Home, dated 18th March 1957, amending rules 15, 49-E, 49-F, 68, 88, 254-B, 256-A, 257 and 290 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

75. *Notification issued with G.O. Ms. No. 607, Home, dated 11th March 1957, amending rule 54 of the Madras Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

[27th June 1957

76. *Notification issued with G.O. No. 1060, Revenue, dated 2nd March 1957, adding new rules 8-A to 8-E to the Madras Land Revenue (Surcharge) Rules, 1954.* [*Laid on the table of the House under section 7 (4) of the Madras Land Revenue (Surcharge) Act, 1954.*]

77. *Notification issued with G.O. Ms. No. 1114, Revenue, dated 5th March 1957, exempting from sales tax the sales of articles produced by the Kanya Gurukula, Madras.* [*Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.*]

78. *Report on the activities of the Government Museums at Madras and Pudukkottai and the National Art Gallery, Madras, for the first half-year of 1956–57.*

79. *Appropriation Accounts of the Government of Madras for the year 1955–56 and the Audit Report, 1957.*

80. *Finance Accounts of the Government of Madras for the year 1955–56 and the Audit Report, 1956.*

## APPENDIX.

Sri Kulandai Goundar was sworn-in in the Hon. Speaker's Chamber on 27th June 1957 forenoon.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Friday, 28th June 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*University degree as a pre-requisite for entry into Government Service*

* 17 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether copies of Sri Ramaswamy Mudaliar Committee report on the question of retention of University Degree as a pre-requisite for entry into Government Service had been circulated to this Government for ascertaining its views?

THE HON. SRI C. SUBRAMANIAM : The answer is in the affirmative.

SRI N. K. PALANISAMI : என்ன பதில்கள் அனுப்பினார்கள் என்று சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : The hon. Member wants to know what those recommendations are.

THE HON. SRI C. SUBRAMANIAM : All those recommendations have been made by the Committee and we are not responsible for their making certain recommendations.

MR. SPEAKER : Probably, the hon. Member wants to know what those recommendations are. If the Hon. Minister has the information, he may reply. Otherwise, he need not.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is still under consideration and it is not possible to give out the details.

SRI N. K. PALANISAMI : இம்மாதிரி சிபார்சுகளை மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ள மாடடேன் என்று சொல்லியிருக்கிறார்களா ?

MR. SPEAKER : அது இந்த சர்க்காருக்கு எப்படித் தெரியும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் பிரச்னை பூராவும் இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது. ஒரு முடிவுக்கு வரவில்லை.

SRI K. VINAYAKAM : Is it a fact that one of the recommendations of this Committee is that an entrant seeking an Upper Division Clerk's post should possess the B.A. Degree and that a candidate for the Lower Division Clerk's post need not possess the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not remember such minute details of the recommendations made by the Committee.

[28th June 1957

SRI K. VINAYAKAM: Could the Hon. Minister at least give us the broad recommendations made by the Committee?

THE HON. SRI C. SUBRAMANIAM: The broad recommendations of the Committee are these. They considered the question whether a Degree was a necessary qualification for entrance to any cadre of service. The point of view expressed by them is that a Degree is not an essential or necessary qualification and perhaps there may be an entrance examination for the various services. That is the broad recommendation made by the Committee and the details are under the consideration of the various Governments.

SRI V. K. KOTHANDARAMAN: இந்தக் கமிட்டியில் யார் யார் அங்கம் வகிக்கக் கூடியவர்கள்? அது எப்பொழுது அமைக்கப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதை அமைத்து இரண்டு வருஷமாகிறது. ஸ்ரீ ஏ. ராமஸ்வாமி முதலியார் அவர்கள்தான் தலைவராக இருந்தார்கள். யார் யார் அங்கத்தினர்களாக இருந்தார்கள் என்று எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை.

*Recommendations of the Official Language Committee*

* 18 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Official Language Committee set up by the Madras Government to suggest the measures for the adoption of Tamil as the Language of the Administration in the State has submitted its report; and

(b) if so, what their recommendations are?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) & (b) The deliberations of the Committee are as yet in the preparatory stages. They have not yet submitted any final recommendations to Government for their acceptance which could be said to be ripe for publication. I can at the same time assure the hon. Member and the House that active steps are being taken by the Committee in settling the various matters which would facilitate the implementation of the Act.

SRI N. K. PALANISAMI: மத்திய சர்க்கார் "லாங்குவேஜ் கமிட்டி" என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனுடைய சிபார்சுகளை மத்திய சர்க்காருக்கு அனுப்புவதற்கு உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது, இங்கு நம்முடைய நிர்வாகத்தில் தமிழ் எவ்வளவு தூரம் உபயோகப்படுத்த முடியும் என்ற பிரசனையைப் பொறுத்தது. இதற்கும் மத்திய சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிற கமிட்டிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

SRI K. VINAYAKAM: Sir, as it has been proved beyond reasonable doubt that Tamil could be adopted as the language of administration at the district level, will the Government consider the feasibility of adopting it for the entire State purposes?



28th June 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, that is the very question which is under examination. There is no question of possibility or impossibility. It has been decided that it should be introduced at all levels. Now, the only question is how it could be implemented.

SRI M. P. SUBRAMANIAM: இந்தக் கமிட்டி ரிப்போர்ட் வரும் வரை காத்திராமல், தமிழ் ஆட்சி மொழியாகி இருக்கும் இச்சமயத்தில் கலெக்டர் ஆபீஸ், தாலூகா ஆபீஸ் இவைகளிலிருந்து கிராமங்களுக்கு அனுப்பப்படும் உத்தரவுகளை தமிழில் அனுப்ப உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தாலூகா ஆபீஸ்களில் இப்பொழுதும் தமிழில்தான் எல்லாவித அறிக்கைகளும் கொடுத்து வருகிறார்கள். ஜில்லா நிர்வாகத்தில் வேண்டுமானால் சில தமிழிலும் சில ஆங்கிலத்திலும் இருந்து வருகின்றன. எல்லா இடங்களிலும் தமிழில் நிர்வாகத்தை நடத்துவதற்காகத்தான் இப்பொழுது இந்தக் கமிட்டி நியமித்து அதற்கு என்ன என்ன வகைகள் செய்யவேண்டுமென்று இப்பொழுது ஆலோசனை நடந்துவருகின்றது.

SRI S. B. ADITYAN: கமிட்டியின் சிபார்சுகளை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஏற்கெனவே, தாலூகா, ஜில்லா ராஜ்ய நிர்வாகங்களை கூடிய வரை யில் தமிழில் நடத்தவேண்டுமென்று உத்திரவு இட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: உத்தரவு இட்டு விடுவது மிகவும் சுலபம். ஆனால் அதை நடைமுறையில் கொண்டு வருவதுதான் கஷ்டம். ஏனென்றால், முதலாவதாக டைப் அடிக்கக்கூடிய இயந்திரங்கள் தமிழில் இருக்க வேண்டும். முதலாவதாக அது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உடனடியாக உத்திரவிட்டால் டைப்ரைட்டர் வந்து விடாது. டைப்ரைட்டரில் எழுத்து வரிசை எப்படி இருக்கவேண்டுமென்பதில் அபிப்பிராய பேதமிருக்கிறது. ஆகவே கடைசியாக இரண்டு வித வரிசைகளையும் இப்போது எடுத்துக் கொண்டு இதில் எது சிலாக்கியம் என்பதைப் பற்றி பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு மேல் இப்பொழுது இருக்கக்கூடிய டைப் அடிக்கிறவர்கள் எல்லோரும் தமிழில் டைப் அடிக்கப் பழகியாகவேண்டும். அதற்கு வேண்டிய வகை செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருக்கிறது. அடுத்தபடி, ஒவ்வொரு ஆங்கில வார்த்தைக்கும் சரியான தமிழ் பதம் என்ன என்பதைப் பற்றி ஒரு முடிவு கட்ட வேண்டும். அதற்காக ஒரு "கிளாஸரி" தயாரித்து அதை பரிசீலனை செய்து அதை எல்லோருக்கும் கொடுப்பது அவசியம். இப்பொழுது இருக்கக்கூடிய விதிகள் சட்டங்கள் இவைகளை எல்லாம் தமிழ் படுத்த வேண்டியது அவ்சியம். இல்லாவிட்டால் நிர்வாகம் நடத்த முடியாது. ஆகவே அதைப்பற்றியும் இப்பொழுது ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு மேலாக, எந்தெந்த இலாகாக்களில் உடனடியாக நிர்வாகத்தை தமிழில் கொண்டு வரலாம், கொஞ்சம் காலம் தாமதித்து எந்தெந்த இலாகாக்களில் கொண்டு வரலாம் என்பதைப் பற்றியும் ஆலோசனை செய்து படிப்படியாக எடுத்துக்கொண்டு முதலில் ரெவினியூ, பின் பப்ளிக் ஒர்க்ஸ், அக்ரிகல்ச்சர் இப்படி படிப்படியாக எடுத்துக்கொள்வதற்கு, அதற்கும் அவர்கள் ஒரு பட்டியல் தயாரித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஆலோசித்துச் செய்வதற்குத்தான் இக் காலதாமதம். உத்திரவு போடுவது என்றால் இன்றைக்கே உத்திரவு போட்டு விடலாம். அதில் யாதொரு சிரமமுமில்லை. ஆனால் அதை நடை முறையில் கொண்டுவர இத்தனை தடைகள் இருக்கின்றன.

SRI A. VEDARATHNAM PILLAI: மற்ற விஷயங்களைப் பற்றி ஆலோசிக்க காலதாமதமானபோதிலும், இந்த அஸெம்பளி சம்பந்தமான விஷயத்தில் முற்றிலும் தமிழில் நடவடிக்கைகள் நடத்த அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுதும் தமிழில்தான் நடந்துகொண்டு வருகிறது. சில அங்கத்தினர்கள் இன்னும் ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்கிறார்கள், அதற்குத்தான் நான் ஆங்கிலத்தில் பதில் சொல்கிறேன். மற்ற எல்லா நடவடிக்கைகளும் கூடிய வரையில் தமிழில் தான் நடந்து வருகிறது. இருந்தாலும் பில்ஸ் இருக்கிறது. இப்பொழுதே சட்டங்கள், சட்ட மூலங்கள் இவைகளையெல்லாம் தமிழில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் அது முடியாத காரியம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இருந்தாலும் தமிழிலேயும் சட்ட மூலங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. அவைகளை ஆங்கிலத்தில் எடுத்துக் கொண்டு தமிழிலே விவாதம் நடந்தாலும், சட்ட மூலங்கள் இன்னும் கொஞ்ச காலம் ஆங்கிலத்தில்தான் இருக்க முடியும். அதிலே இருக்கக் கூடிய கஷ்டங்களை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is it not a fact that the Government issued instructions to the Collector of Tiruchirappalli to use Tamil as the official language and if so can the Government tell us whether it has worked satisfactorily?

THE HON. SRI C. SUBRAMANIAM : Well, that is a separate question. That was introduced long ago as an experimental measure. Now, the stage of experimenting is over, decisions have been taken and Tamil has become the official language at all levels. Now, we are in the stage of implementing it.

9-10 a.m. SRI A. V. P. ASAITHAMBI : கூடுமானவரையில் தமிழிலேயே பேசவேண்டும், எழுதவேண்டும் என்கிற முறையைப் பரிபூரணமாகப் பின்பற்றாவிட்டாலும், அரசாங்கம் எழுதுகிற கடிதங்களிலும், மற்ற எல்லா விதமான அறிக்கைகளிலும் யாருடைய பெயரையாவது குறிப்பிடும்போது "ஸ்ரீ" என்பதற்கும் "ஸ்ரீமதி" என்பதற்கும் பதிலாக "திரு." என்றும் "திருமதி" என்றும் இருக்கிற வார்த்தைகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : "ஸ்ரீ" என்பது ஆங்கிலம் அல்ல என்று நான் நினைக்கிறேன். "ஸ்ரீ" என்கிற பதத்தை இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதில் எந்த விதமான தவறும் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

SRI M. JAGANNATHAN : After everything has been said and done on this subject, may I know from the Hon. Minister within what reasonable period of time, the Government intend to implement the Official Language Act?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think I will be able to fix a target date. As I have already stated in the main answer, I can assure the House that all steps are being taken. We are also anxious, if not more anxious than hon. Members, in implementing this Act.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கேள்விகள் தமிழிலே கொடுக்கப்பட்டதை ஆங்கிலத்தில் மறுபடியும் மொழிபெயர்த்து கேள்விகள் வரப்படுகிற காரணமென்ன ? நடைமுறையிலே கேள்விகள் தமிழில் கேட்பதற்கு சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தற்போதைய அளவில்தான் இந்தக் கேள்விகள் எல்லாம் இங்கிலீஷில் இருப்பதும், முதலில் சொல்லக் கூடிய பதில்களும் இங்கிலீஷில் இருப்பதும். இதை மாற்றி, ஆங்கிலம்,





தமிழ் இரண்டிலும் வைப்பதற்கு கூடிய சீக்கிரம் ஏற்பாடுகள் செய்யப்படும். இது தாற்காலிகமான ஏற்பாடுதான். கனம் அங்கத்தினர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : தமிழ் ஆட்சிமொழியானபோது சர்க்கார் உத்தியோகத்திற்கு எடுத்துக்கொள்ளக்கூடியவர்கள் தமிழைக் கட்டாயமாக படித்திருக்கவேண்டும் என்ற நிபந்தனை இருக்கவேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழுக்குப் பதிலாக ஸம்ஸ்கிருதம் போன்ற மொழிகளை இரண்டாவது பாடமாகப் படித்தவர்கள் உத்தியோகத்திற்கு வருகிறார்கள். அதிலும் ஒரு ஊரில் தமிழ் கற்றுக் கொடுப்பதற்கு தமிழ் படிக்காத ஒருவரை நியமித்து இருக்கிறார்கள். அதைத் தலைமை கல்வி அதிகாரிக்கு சுட்டிக் காட்டியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கல்லூரி, உயர்நிலைப்பள்ளி இவைகளில் கட்டாயம் தமிழ்.......

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் இம்மாதிரி ஒரு நபரைக் குறிப்பிட்டுப் பேசவேண்டுமென்றால் அதைப்பற்றி மந்திரி அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அதைப்பற்றி இப்போது இங்கு குறிப்பிடுவது சரியல்ல என்று தோன்றுகிறது. இது சம்பந்தமாக கனம் மந்திரி அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் எழுதலாம்.

SRI M. P. SUBRAMANIAM : அது சம்பந்தப்பட்டவர்களை நான் குறை கூறவில்லை. ஆனால், இப்போது இருக்கும் முறையில் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஒவ்வொருவரும் தமிழைக் கட்டாயமாகப் படிக்கவேண்டிய நியதி இல்லையென்று நானறிகிறேன். ஆகவே, தமிழை ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டுமென்ற நியதி இருக்குமா என்றறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லா மொழிகளிலும் முதல் மொழி தமிழ் மொழியாகவும், இரண்டாவது மொழி வேறு இந்திய மொழியாகவும், மூன்றாவது மொழி ஆங்கிலம் அல்லது வேறு பிரதேச மொழியாகவும் இருக்கவேண்டுமென்று இந்த சபையினுடைய கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அது கூடிய சீக்கிரத்தில் அமுலுக்கு வரும். கனம் அங்கத்தினர் சொன்ன குறைகள் நீங்கிவிடும். இப்போதும் தமிழ் படிக்காதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால், இப்போது தமிழ்தான் போதனா மொழி. அப்படி இருக்கும்போது கட்டாயம் தமிழ் படித்துத்தான் ஆகவேண்டும்.

SRI P. S. CHINNADURAI : நிர்வாக மொழி பற்றியுள்ள அரசாங்கத்தாரின் கொள்கை டாக்டர் லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சி வெளியிட்ட மொழிக் கொள்கையோடு ஒத்திருக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : யாரோ ஒருவர் தனிப்பட்ட முறையில் சொன்னதையெல்லாம் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று வைத்துக்கொண்டு கனம் அங்கத்தினர் கேள்வி கேட்பாரானால் அவர் ஏமாற்றமே அடைவார். லோகியா திட்டம் என்ன என்று எனக்குத் தெரியாது.

SRI S. B. ADITYAN : தமிழை நிர்வாக மொழியாக ஆக்கும்போது எல்லா மக்களுக்கும் புரியக்கூடிய, பேச்சு வழக்கத்தில் இருக்கிற, இலகுவான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டுமென்றும், "கலெக்டர்" என்பதற்கு "தலைமைத் தண்டல் நாயகம்" என்று இந்த மாதிரியான புரியாத வார்த்தைகளை உபயோகிக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவிடுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத்தான் இப்போது "கிளாஸரி" ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர்கள் இதைப் பார்ப்பார்களேயானால், மக்களுக்குப் புரிகின்ற முறையில்தான் பதங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரியும்.

[28th June 1957

### *Minimum wage for Rice Mill Workers*

* 19 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. Minister for Industries be pleased to state whether the Government have taken any steps to fix the minimum wage for the workers employed in rice mills?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir,

SRI N. K. PALANISAMI : இந்த மாதிரி குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதெல்லாம் அநேகமாக எல்லா ரைஸ் மில்களுக்கும் அமுலுக்கு வரவில்லை. காரணம், அந்தந்தப் பகுதிகளில் இருக்கக் கூடிய "பாக்டரி இன்ஸ்பெக்டர்கள்" அந்தந்த ரைஸ் மில்களின் நிர்வாகம் அந்தக் குறைந்த பட்ச சம்பள நிர்ணயத்தை செய்கிறதா என்று பார்ப்பதில்லை. ஆகவே சர்க்கார் உடனடியாக "பாக்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு" உத்திரவிட்டு ஒவ்வொரு ரைஸ் மில்களும் அதை அமுல் நடத்த ஏற்பாடுகள் செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சம் நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்காவிட்டால் அது சட்ட விரோதமாகும். அதனால் தண்டனைக்குள்ளாவார்கள். எந்தெந்த இடங்களில் இவ்வாறு கொடுக்கப்படவில்லையோ அவற்றையெல்லாம் குறிப்பிட்டு சர்க்காருக்கும் "லேபர் கமிஷனருக்கும்" எழுதினால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

SRI K. VINAYAKAM : What is the minimum wage fixed for different kinds of workers employed there ?

**THE HON. SRI R. VENKATARAMAN : It is a long statement and I do not know whether I will be able to read the whole thing now. But I will give information regarding some categories of labour.**

| *Classes of employees.* (1) | *Minimum rates of daily wages fixd in 1951.* (2) RS. A. P. | *Minimum rates of daily wages fixed in 1956.* (3) RS. A. P. |
|---|---|---|
| Bag stitchers .. .. .. | 1 4 0 | 1 8 0 |
| Bag weighers .. .. .. | 1 5 0 | 1 10 0 |
| Firemen .. .. .. .. | 1 4 0 | 1 6 0 |
| Oilers .. .. .. .. .. | 1 2 0 | 1 6 0 |
| Paddy boilers .. .. .. | 1 2 0 | 1 8 0 |
| Sweepers .. .. .. .. | 0 12 0 | 1 2 0 |
| Water carriers .. .. .. | 0 12 0 | 1 2 0 |

MR. SPEAKER : அடுத்த கேள்வி கனம் அங்கத்தினர் சட்டநாத கரையாளர் அவர்கள், கனம் அங்கத்தினர் கல்யாணசுந்திரம் அவர்கள் சார்பில் கேட்பார்.

### " *Kamarajapuram* " *Colony*

* 20 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount of loan granted by the Government to Salem Municipality for constructing the " Kamarajapuram " colony;

(*b*) the terms of grant of the loans; and

(*c*) the categories of staff for whom the houses are intended?



28th June 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 1,68,000 (Rupees one lakh and sixty-eight thousand only).

(*b*) The loan to the Salem Municipality was sanctioned for construction of houses in accordance with the Low Income Group Housing Scheme of the Government of India. The loan will bear an interest of 4½ per cent per annum and will be repayable in 30 equal annual instalments.

(*c*) The houses are intended for the employees of Salem Municipality drawing Rs. 100 or less per mensem.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், சேலத்தில் வீடுகள் கட்டிய காலத்தில் "முனிஸிபாலிடியில்" வேலை செய்துகொண்டிருக்கின்ற "ஸ்காவென்ஜர்"களுக்கும் மற்றவர்களுக்கும் கட்டப்படுவதாக வாக்குறுதி கொடுத்து, இப்போது "ஸ்கேவன்ஜர்"களுக்கு கொடுக்கப்படமாட்டாது என்று கூறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதைப் பற்றி அமைச்சரவர்கள் சேலத்திற்கு வந்திருந்த காலத்தில் சம்பந்தப்பட்டவர்களை சந்தித்துப் பேசினார்களா ? அப்படிப் பேசினால் என்ன முடிவு எடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : "முனிசிபாலிடி"யில் வேலை செய்கின்ற, 100 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குகிறவர்கள் யாராயிருந்தாலும், "ஸ்காவன்ஜர்களாக" இருந்தாலும் சரி, அல்லது மற்றவர்களாக இருந்தாலும் சரி, வீடு கொடுக்கப்படும் என்பதுதான் திட்டம். "ஸ்காவன்ஜர்களுக்கு" மாத்திரம்தான் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது. இதைப்பற்றி பிரதிநிதிகள் வந்து, நான் சேலம் சென்றபோது, பேசினார்கள். தெளிவாக 100 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் இருக்கின்றவர்களுக்கு கொடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : குறிப்பாக நாராயணசாமிபுரத்தில் இன்று நகர சுத்தி தொழிலாளர்களுக்கு இந்த வீடுகள் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. இப்போது அவைகள் குமாஸ்தாக்களுக்குத்தான் கொடுக்கப்பட உத்தேசமிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டும் அல்ல. முதலில் நாராயணசாமிபுரத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும் என்று சொல்லப்படவில்லை. இப்போது, நகர சுத்தித் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடாது, குமாஸ்தாக்களுக்கு மட்டும் தான் என்று சொல்லப்படவும் இல்லை.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் பேச ஆரம்பிப்பதற்கு முன் தங்கள் முன் இருக்கும் எலெக்ட்ரிக் "பட்டனை" நன்ருக அழுத்தவேண்டும். பின் தங்கள் இடத்திற்குமுன் இருக்கும் சிகப்பு விளக்கு எரிய ஆரம்பிக்கும் அப்பொழுது பேசினால்தான் மற்றவர்கட்கு நன்ருகக் கேட்கும்.

SRI K. VINAYAKAM : Is it a fact that the Hon. the Chief Minister of our State has no interest of any kind in this colony and that the colony is named after him by the Municipality because he happens to be the Leader of the State ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Chief Minister has every interest not only in this colony but in every other colony of this kind. But for his taking interest, this colony would not have been started.

SRI V. K. KOTHANDARAMAN : ரூ. 100-க்குக் குறைந்த வருமானமுடைய முனிசிபல் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதற்காக என்று கட்டப்பட்ட

அந்த வீடுகளில் குடியிருப்பதற்கு அந்த முனிசிபல் சிப்பந்திகளை அனுமதிக்கமுடியாது என்று நகர சபையில் சொல்லப்பட்ட பிறகு, சட்டசபையின் சென்ற கூட்டத்தின் போது இது விஷயமாக லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் அவர்களையும், கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களையும் நான் நேரிடையாகச் சந்தித்துப் பார்த்ததுண்டு. அப்போது நான் "நூறு ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ள முனிசிபல் சிப்பந்திகளுக்குத் தானே இந்த வீடுகள் கட்டப்பட்டன ? ஆகவே அவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா ?" என்று கேட்டபோது, அவர்கள் "கட்டப்பட்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கையை விட வந்திருக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு எப்படி வீடு கொடுக்க முடியும் ?" என்று சொன்னார்கள் . . .

**Mr. SPEAKER** : கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கும்போது சுருக்கமாகக் கேட்கவேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு பிரசங்கம் செய்யக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN** : லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் அவர்களையும் கனம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களையும் நான் சந்தித்துப் பேசினேன். ஆகவே ரூ. 100-க்குக் குறைந்த வருமானமுள்ள முனிசிபல் சிப்பந்திகளுக்கு அந்த வீடுகளைக் குடியிருப்பதற்குக் கொடுப்பதாக லோகல் போர்டுகளின் இன்ஸ்பெக்டர் வாக்குறுதி கொடுத்தால் அது நிறைவேற்றப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : நூறு ரூபாய்க்குக் குறைவான வருமானம் பெறுபவர்களிடமிருந்து வந்துள்ள விண்ணப்பங்கள் அதிகமாக இருந்தால், வீடுகளை எந்த முறையில் கொடுக்கவேண்டும் என்ற விஷயத்தை சர்க்கார் பரிசீலனை செய்யும். எனக்குத் தெரிந்த வரையில், வீடுகளை ஏதோ லாட்டரி சீட்டுப் போட்டு எடுத்து விடலாம் என்று நினைக்கிறேன்.

**Sri M. P. SUBRAMANIAM** : கனம் அமைச்சர் அவர்கள், சேலம் சென்றிருந்தபோது அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததாகச் கூறினார்கள். ஆனால் அப்படிக் கலந்து பேசியபோது என்ன முடிவு எடுத்தார்கள் என்பதை இங்கே குறிப்பிடவில்லை. வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டாலும் கூட இவற்றில் குடியிருப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் கூறியது போல் குமாஸ்தாக்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள் ஆகிய எல்லாத் தரப்பினருக்கும் குடியிருக்க வசதியளிப்பதற்கு உடனடியாக அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : 63 வீடுகள் பூர்த்தியாகி இருக்கின்றன. ஆனால் அவை இன்னும் உபயோகிப்பதற்கு லாயக்காகச் செய்யப்படவில்லை. ரூ. 100-க்குக் குறைவாக வருமானம் பெறும் சிப்பந்திகளுக்கு இந்த வீடுகளை எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி செய்யும்.

### *Manimuthar dam*

***21 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the execution of the Manimuthar dam ?

**The Hon. Sri P. KAKKAN** : About 99 per cent of masonry construction and 92 per cent of earthwork formation in the dam have been completed. Only the top 10 feet has to be built in the section where sluices are provided for supply to the existing Perungal Channel and the new canal. Construction of bridge over the spillway and provision of shutters for the spillway are yet to be done.



**Sri K. SATTANATHA KARAYALAR** : கால்வாய் வேலை எந்த அளவு முடிந்துள்ளது ? எத்தனை கன அடி மண் எடுக்கப்பட்டுள்ளது ? இன்னும் எவ்வளவு மண் எடுக்கவேண்டியிருக்கிறது ?

**The Hon. Sri P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் மற்றொரு கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்ல முடியும்.

**Sri K. ANBAZHAGAN** : கனம் அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து மணிமுத்தாறு அணைக்கட்டுத் திட்டம் விரைவிலேயே நிறைவேற்றப்படும் என்று தெரிகிறது. அந்தத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள கைத்தொழில் திறமையுள்ள தொழிலாளர்கள் திட்டம் நிறைவேறிய பிறகு மறுபடியும் வேலையில்லாக் கஷ்டத்திற்கு ஆளாகாதபடி கனம் அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்வார்களா ?

**The Hon. Sri P. KAKKAN** : அந்தத் திட்டம் முடிந்தபிறகு வேறு இடங்களிலுள்ள திட்டங்கள் எடுத்துக்கொள்ளும்போது அவர்கள் உபயோகப்படுவார்கள்.

**Sri K. SATTANATHA KARAYALAR** : இந்த அணைக்கட்டில் தண்ணீர் எப்போது தேக்கப்படும் ?

**The Hon. Sri P. KAKKAN** : அணைக்கட்டில் அநேகமாக இந்த மாதத்திலேயே தண்ணீர் தேக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வெகு சீக்கிரம் திறப்பு விழாவும் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**Sri K. VINAYAKAM** : May I know how many acres of land will be irrigated ?

**The Hon. Sri P. KAKKAN** : 99,000 ஏக்கர் நிலம் இந்தத் திட்டத்தின் கீழ் வருகிறது.

**Sri K. SATTANATHA KARAYALAR** : May I know whether localisation of ayacut is completed ?

**The Hon. Sri P. KAKKAN**: ஏற்கெனவே பாய்ச்சப்பட்டுவரும் 79,000 ஏக்கர் நிலங்களில் மணிமுத்தாறு அணைக்கட்டிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படும். மேலும், 321 கண்மாய்கள் மூலம் விடப்பட்டு 17,000 ஏக்கர் நிலங்களுக்கு பாய்ச்சப்படும். மேலும், புஞ்சையாக இருந்து நஞ்சையாக ஆக்கப்படும் 3,000 ஏக்கர் நிலங்களுக்கும் பாய்ச்சப்படும்.

**Sri S. B. ADITYAN** : மணிமுத்தாறு திட்டத்தையொட்டி நாங்குனேரி தாலுகாவில் வெட்டப்படும் வாய்க்கால் திட்டத்தில் ஏதாவது மாறுதல் உண்டா ? அல்லது, முதலில் திட்டமிட்டபடியே வெட்டப்படுகிறதா என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ?

**The Hon. Sri P. KAKKAN**: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் உப கேள்வி இந்த கேள்வியிலிருந்து எழவில்லை. ஆகவே வேறொரு தனிக் கேள்வி கேட்டால் விவரமாக பதில் சொல்கிறேன்.

### *Local Administration—Rathnasabapathy Mudaliyar Committee.*

*** 22 *Q.*—Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Local Administration be pleased to state when the recommendations of the Rathnasabapathi Mudaliyar Committee to go into the question of Local Administration will be implemented?

[28th June 1957

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government have not accepted the principal recommendation of the Ratnasabapathy Mudaliyar Committee, namely, to abolish the post of Commissioner and to make the Chairman the executive head of the administration, and other recommendations of the Committee which hinge upon the suggestion for abolition of the Commissioner's post. In respect of the remaining recommendations which relate mainly to the powers of the Council and the Chairman, the Government have reached certain provisional conclusions and they are set out in the White Paper on Local Administration. No final decision has yet been taken in the matter.

SRI K. VINAYAKAM : May I know whether it is not one of the recommendations of the Rathnasabapathy Mudaliyar Committee to abolish the entire scheme of District Boards as they are existing to-day?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The main recommendation of the Committee relates to the abolition of the post of Commissioner. Other recommendations of the Committee are under the consideration of the Government.

SRI N. K. PALANISAMI : ரத்னசபாபதி முதலியார் கமிட்டியின் சிபாரிசுகள் மூன்று விதமாக இருக்கின்றன ; அதாவது பஞ்சாயத்து போர்டுகள், ஜில்லா போர்டுகள், முனிசிபாலிட்டிகள் ஆகிய மூன்று ஸ்தாபனங்களைப் பற்றியும் ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. முனிசிபாலிட்டிகளைப் பொறுத்த மட்டிலும் ராஜ்ய ரீதியில் அமைக்கப்பட்ட அந்தக் கமிட்டியானது கமிஷனர்களை நீக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. தற்போதைய முறையைத் தவிர்த்து, பஞ்சாயத்து போர்டுகளில் தலைவர்கள் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறையை அரசாங்கத்தார் மறுபடியும் ஏற்படுத்துவார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அவைகளும் தற்பொழுது ஒரு சப்கமிட்டியினால் ஆராயப்படுகிறது. சப்கமிட்டி ஆராய்ந்த பிறகு அதன் நோக்கங்கள் சட்ட சபையில் அறிவிக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether the Government will be pleased to lay on the Table of the House the recommendations of the Committee?

MR. SPEAKER : I think, the hon. Leader of the Opposition wants to know, whether the report of the Rathnasabhapathy Mudaliyar Committee which was submitted to Government a few years ago will be circulated to the Members of this House.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : During the last Assembly, a White Paper on Local Administration was placed on the Table of the House on 29th September 1956. After that, the Government took up the question but did not come to any conclusion owing to want of time. Now, the Government have appointed a Sub-Committee and that Sub-Committee is actually dealing with the matter and considering the recommendations of the Rathnasabhapathy Mudaliyar Committee.



28th June 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the Hon. Leader of the Opposition wants to know whether the Rathnasabapathy Mudaliyar Committee's report would be placed on the Table of the House. I consider it an out-of-date report and I do not think any useful purpose would be served by that report now. Much water has flown since then. The entire matter of Local Administration is under the consideration of the Government and I was wondering whether the Hon. Leader of the Opposition wanted a copy of these recommendations. As soon as these recommendations are finalized, certainly they would be placed before this House and the House would get an opportunity to discuss the entire matter. 9-30 a.m.

SRI N. K. PALANISAMI : ஸார், சப்கமிட்டியின் கூட்டம் சமீபத்தில் நடந்தது. அதில் இதைப்பற்றி விவாதம் நடத்தியதாகவும் தெரிகிறது. இதில் ஏதாவது முடிவு எடுக்கப்பட்டதா ? அதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : முடிவுக்கு வந்த பிறகு அறிவிக்கப்படும்.

*University for Coimbatore*

* 23 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to start a University at Coimbatore during 1957–58?

THE HON. SRI C. SUBRAMANIAM : A memorandum has been received from certain leading citizens of Coimbatore urging the Government to start a University at Coimbatore. The question is under consideration.

SRI A. A. RASHEED : Is there any proposal to open a Medical College at Coimbatore?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is a proposal. But no final decision has been taken yet.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, is there a proposal to start a University at Karaikudi?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are ever so many proposals. There was such a proposal of which the Hon. Leader of the Opposition may be aware; when Dr. Alagappa Chettiar was alive, he was trying to have a University with all the institutions at Karaikudi. It is still in the stage of proposal.

SRI K. ANBAZHAGAN : கோவையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பல்கலைக் கழகம், கல்லூரிப் படிப்பு—தமிழிலேயே நடத்தப்படுவதற்குத் துணை செய்வதாக இருக்குமாதலால், அந்தத் பல்கலைக் கழகத்தைத் உடனடியாகத் துவக்க அரசாங்கம் அனுமதி தருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழில் பல்கலைக் கழகப் படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டும் என்பது கோயம்புத்தூரில் யூனிவர்ஸிட்டி வந்த பிறகு போதும் என்றால் அது எந்த காலத்திற்கு வரும் என்று சொல்லமுடியாது. ஆகையினால் இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்களில் தமிழை போதனை மொழியாக்குவதற்கு கனம் அங்கத்தினர் அவர்களும் அக்கரை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : 24-ம் நம்பர் கேள்வியை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கனம் மந்திரி அவர்களும் கனம் அங்கத்தினர் அவர்களும் ஒத்துக்கொண்டிருப்பதால் இப்போது அதற்கு அடுத்த கேள்வியை எடுத்துக் கொள்கிறேன்.

*Sugar factories*

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, questions 25 and 25-A may be taken together.

MR. SPEAKER : Mr. Sattanatha Karayalar puts both the questions.

* 25 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total annual production of sugar in the State;

(*b*) the total capacity of all the sugar factories in the State; and

(*c*) the number of additional sugar factories proposed to be sanctioned for the State during the Second Five-Year Plan period?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There are four sugar factories actually functioning in Madras State and their production during 1955–56 was about 53,000 tons.

(*b*) The four factories have a total cane crushing capacity of 4,300 tons per day.

(*c*) Licences have already been granted for the establishment of six additional sugar factories in the State with a total cane crushing capacity of 5,100 tons per day. Besides, it is proposed to start during the period of the Second Five-Year Plan three more sugar factories with a daily total crushing capacity of about 2,400 tons.

* 25-A. *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to increase production of sugar in the State;

(*b*) the steps proposed to be taken in the matter and the target for the Second Five-Year Plan period; and

(*c*) whether any quotas of sugar and raw gur have been fixed for the State for export to other countries?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Please see the answer to clause (*c*) of the previous question.

The target for sugar production fixed for the whole of India for the Second Quinquennium is 2·50 million tons a year. Separate targets have not been fixed for each State. But this Government's objective is to plan for the production of 140,000 tons of sugar, which will meet the entire requirements of the State and leave some margin for export.



(*c*) According to the current licensing policy, export of sugar is not permitted. But export of *gur* is licensed freely to all permissible destinations till 31st December 1957, without any restriction of quota.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know whether the factories have reached production capacity?

THE HON. SRI R. VENKATARAMAN : There are four factories which have a total capacity of 4,300 tons. I do not have the break-up of the production of each of these factories.

SRI M. ALAGIRISAMY : சர்க்கரை ஆலைகள் புதியதாக கூடுதலாக ஆரம்பிப்பதால் மற்ற உணவுப் பொருள்களின் உற்பத்தி குறைகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதனால் என்னென்ன பலா பலன்கள் ஏற்படும் என்று கேட்டு தனிக்கேள்வி போடும்படி அங்கத்தினர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இப்போது ஆறு இடங்களில் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டது. அவைகள் எவை எவை என்று கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : They are : In Tiruchirappalli, the Kavery Sugars and Chemicals, Limited; in North Arcot, the North Arcot District Co-operative Sugar Mills, Limited; the Amaravathi Co-operative Sugar Mills, Limited, Udumalpet; the Maduranthakam Sugar Mills, Limited, Maduranthakam; the Champaka Sugar and Plantation, Limited, Mannargudi and the Pushpavanam Sugar Factory, Limited, Tanjore.

SRI K. SATTANATHA KARAYALAR : இவைகளில் எதில் எல்லாம் நம்முடைய மூலதனம் இருக்கிறது ? எதில் எல்லாம் வெளிநாட்டு மூலதனம் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

SRI T. KARIA GOUNDER : வடஆற்காட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பாக்டரி இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : வட ஆற்காட்டிலும் அமராவதியிலும் ஆரம்பிக்கப்படவிருக்கும் பாக்டரிகளுக்கு வேண்டிய மெஷின்கள் ஜெர்மனியிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வர வேண்டியிருக்கிறது. இப்பொழுது வெளிநாட்டு செலாவணி மிக நெருக்கடியாக இருப்பதால் இதை தவணைகளின் மீது கொடுக்க வேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான வேண்டிய முடிவுகள் செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. RAMACHANDRAN : மேலும் 3 ஆலைகளுக்கு லைஸென்ஸ் வழங்கப்போவதாக கூறப்பட்டது. அவை எந்தெந்த ஜில்லாக்களில் என்று அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மேலும் மூன்று ஜில்லாக்களில் ஆலைகள் அமைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்து கொண்டிருக்கிறோம்.

[28th June 1957

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Are the Government aware that even though licences for establishment of factories have been given, import licences for importing machinery have not been given by the Government of India and they say with regard to certain Mills, that they might adopt the deferred payment system. May I request the Hon. Minister to see that where factory licences have been issued, that import licences also for importing machinery is sanctioned or at least will the Government consider the desirability of recommending to the Government of India in this regard?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, the Madras Government have already recommended to the Government of India,—in fact I should use a stronger expression than 'recommend'—*urged* the Government of India to give every facility for the import of machinery for these factories for which licences have been granted and the Government of India have now agreed that if deferred payments could be arranged, licences would be issued. I am glad to announce that some of these factories have arranged for the deferred payment and there may not be much difficulty in getting import licences.

**Sri A. GOVINDASAMY NAYAGAR** : தென்னாற்காடு ஜில்லாவில் கோவியனூரில் என்ற இடத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பிக்கவேண்டும் என்று பொது மக்களிடமிருந்து எக்கர் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் வசூல் செய்தும் நாளது வரையிலும் அங்கே அந்த ஆலை துவக்கப்படவில்லை. அதனால் அந்த ஆலையை துவக்குவதற்கு சர்க்காரிடம் ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : பாரி கம்பெனி தான் அப்படி சர்க்கரை ஆலையை ஆரம்பிக்கவேண்டும் என்று பணம் வசூல் செய்தார்கள். அவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்தும் அவர்கள் அந்த வேலையை எடுத்து நடத்தவில்லை. அதனால் அவர்களுக்குக் கொடுத்த லைசென்சை ரத்து செய்யவேண்டியதாயிற்று. அதன் பிறகு வேறு ஒருவர் மூலதனம் போட்டு அதை எடுத்து நடத்துவதாகச் சொன்னார். அப்படி ஒரு தனியார் மூலதனம் போட்டு வளவனூரில் மூலதனம் போட்டு ஆலையை நடத்துவதாக முன் வந்திருக்கிறார். இதைப்பற்றி ஆலோசனை செய்து அவருக்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டும் என்று மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது.

**Sri C. NATARAJA UDAYAR** : கள்ளக்குறிச்சியில் ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தவேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அப்படி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வேலை ஆரம்பிக்கப்பட்டு வேலை நடந்து வருகிறது என்று செய்தித் தாள்களில் செய்தி வெளி வந்து இப்பொழுது வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆலைகளை எடுத்து நடத்துவது என்று இப்பொழுது சர்க்காரிடம் மூன்று திட்டங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றாக இதை எடுத்து நடத்த சர்க்கார் முன் வருவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அப்படிப்பட்ட எந்த விதமான திட்டமும் சர்க்காரிடம் இல்லை.

**Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN** : தமிழ் மாகாணத்தில் சுமார் பத்து லட்சம் பனை மரங்கள் இருக்கின்றன. தற்போது சுமார் ஆயிரம் பனை மரங்களிலிருந்து குடிசைத் தொழில் முறையில் பனை வெல்லம், கருப்பட்டி முதலியவைகள் உற்பத்தி செய்து கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட பனை வெல்லம் உணவு பொருள்களாகவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் உணவு பற்றாக்குறை இருப்பதால் இந்தக் குடிசைத் தொழிலை ஆதரித்து அதிகப்படியாக பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதிகப்படியான ஆலைகளை ஏற்படுத்தாமல் இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதன் மூலம் அதிகப்படியான கரும்பு சாகுபடி செய்வதை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?



28th June 1957]

**The Hon. Sri R. VENKATARAMAN** : பனை வெல்லத்திலிருந்து சர்க்கரை குடிசைத் தொழில் மூலமாக செய்வதற்கு எல்லா விதமான வசதியும் அளிக்கப்படுகிறது. மற்றும் கூட்டுறவு முறையில் வேலை செய்யும் எல்லாவற்றிற்குமே சர்க்காரால் வசதி செய்துகொடுக்கப்படுகிறது. பனை வெல்லம் உற்பத்தி செய்வதற்காக சர்க்கரை ஆலையை ஆரம்பிக்காமல் நிறுத்தி வைக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல என்று நினைக்கிறேன்.

**Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN**: உணவை சப்ளிமெண்ட் பண்ணுவதற்கு இது உதவியாக இருக்கும் என்பதற்காகத் தான் இதைப்பற்றி சொல்லுகிறேன்.

**Sri T. M. NALLASAMY** : ஏற்கனவே இயங்கிக் கொண்டு வரும் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்து வரும் விவசாயிகளுக்கு குறைந்த பட்ச விலையின்படி கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் ஏதாவது நிர்ணயம் செய்திருக்கிறார்களா ? மேற்கொண்டும் அதிகப்படியாக கிடைக்கும் கண்டு முதல் விற்று முதல் இவைகளை அனுசரித்து செய்தால் அதற்கு கம்பெனிக்காரர்கள் விவசாயிகளுக்கு ஏதாகிலும் போனஸ் கொடுக்கிறார்களா ? கம்பெனிக்காரர்கள் கொடுக்கிற கணக்கை விவசாயிகள் ஏற்றுக்கொண்டு விவசாயிகள் போனஸ் தொகையை பெற வேண்டியதாக இருக்கிறது. அப்படி கம்பெனிக்காரர்கள் கொடுக்கக்கூடிய கணக்கை சர்க்கார் பார்வையிடுகிறார்களா ? சர்க்கார் அதில் தலையிட்டு கணக்கு விவரங்களை பரிசீலித்து அதன் படி விவசாயிகளுக்கு போனஸ் நியாயமாக கிடைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : கரும்புக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டும் என்பது சர்க்காருடைய நோக்கம். மற்றபடி வேறு தகவல்கள் வேண்டும் என்றால் வேறு கேள்வி கேட்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. N. RAMALINGAM** : தஞ்சை ஜில்லாவில் ஆலைகளை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அவைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஒரு ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஆலையை இப்பொழுது ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள்.

**Sri K. RAMACHANDRAN** : இப்பொழுது ஆரம்பிக்கப்படும் ஆலைகள் எல்லாம் தனியார் மூலதனம் போட்டு ஆரம்பிக்கப்படுகின்றனவா அல்லது சர்க்கார் ஏதாவது அவைகளுக்கு மூலதனம் கொடுத்து ஆரம்பிக்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்படும் எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் சர்க்கார் மூலதனம் கொடுத்து உதவி வருகிறார்கள். தனியார் மூலதனம் போட்டு ஆரம்பிக்கப்படும் ஆலைகளுக்கு சர்க்கார் எந்த விதமான மூலதனமும் கொடுத்து உதவவில்லை.

**Sri A. GOVINDASWAMY NAYAGAR** : தென்னார்காடு ஜில்லா பெண்ணாடத்தில் 36 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சர்க்கரை ஆலை கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க சர்க்காரிடம் ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா ?

[28th June 1957

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAGI** : புதியதாக கொடுக்கப்பட்டிருக்கும் ஆறு லைசென்சுதாரர்களும் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆலைகளை துவக்க வேண்டுமென்ற கோட்பாடு உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : குறிப்பிட்ட காலத்திற்குள் வேலையை துவக்காவிட்டால் லைசென்சு ரத்தாகிவிடும்.

**Sri M. RAMACHANDRA REDDIAR** : மதுராந்தகத்தில் ஒரு ஆலையை ஆரம்பிக்க வேண்டும் என்று லைசென்சு கொடுத்திருந்தும் இன்னும் அங்கே நிலம் வாங்காமல் இருப்பதால் ஷேர் ஹோல்டர்கள் இடத்தில் அபிப்பிராய பேதம் இருக்கிறது. எப்பொழுது, எவ்வளவு சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய நிலம் வாங்கப்படும் என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பாரா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : மதுராந்தகத்தில் சர்க்கரை ஆலையை எந்த இடத்தில் வைப்பது என்பதைப்பற்றி ஒரு சிறு தகராறு இருக்கிறது. எந்த இடத்தில் நல்ல தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்துத் தான் அந்த இடத்தை தேர்ந்தெடுப்பார்கள். தண்ணீர் எந்த இடத்தில் நன்ருக இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

**Srimathi T. N. ANANDANAYAGI** : குறிப்பிட்ட காலம் என்ன, எவ்வளவு வருஷம் என்பதைப்பற்றி குறிப்பிடுவாரா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இன்டஸ்ட்ரியல் கண்ட்ரோல் அண்ட் டெவலப்மெண்ட் ஆக்ட் பிரகாரம் இது சம்பந்தமாக விதிகளை வைத்திருக்கிருர்கள். அதன்படி ஒரு வருஷத்திற்குள் வேலை துவக்கப்படாவிட்டால் லைசென்சு ரத்தாகி விடும்.

**Sri P. S. CHINNADURAI** : தஞ்சை ஜில்லாவில் சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க லைசென்சு வழங்குவதன் மூலம் கரும்பு சாகுபடி செய்வதற்கு அதிகப்படியான நிலத்தை எடுத்துக்கொள்ளப்போவதால் நெல் சாகுபடிக்கு வேண்டிய நிலம் குறைந்து போகக்கூடிய அபாயம் இருக்கிறது அல்லவா ? அப்படிப்பட்ட அபாயத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதைப்பற்றி தனிக்கேள்வி போட்டால் சௌகர்யமாக இருக்கும். எவ்வளவு எக்கர் கரும்பு சாகுபடிக்கு என்றும் எவ்வளவு எக்கர் நெல் சாகுபடிக்கு என்றும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களை அதன் பிறகு தான் கொடுக்க முடியும்.

**Sri A. GOVINDASAMY NAYAGAR** : வளவனூரில் தனியாருக்கு ஆலையை ஆரம்பிப்பதற்கு லைசென்சுக்கு மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருப்பதாக மந்திரி சொன்னுர்கள். அவர் யார் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : I do not want to give the name, Sir.

**Mr. SPEAKER** : The Hon. Minister is at liberty to say that he will not answer.

**Sri A. A. RASHEED** : Is the Hon. Minister aware of the fact that a factory has been recently closed in North Arcot district ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : He is painfully aware of it.



28th June 1957]

**Sri K. RAMACHANDRAN** : சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டும் என்று ஏதாவது ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து லைசென்சு கோரி விண்ணப்பம் வந்திருக்கிறதா ?

**Mr. SPEAKER** : ஒவ்வொரு ஜில்லாவைப் பற்றியும் ஒவ்வொரு அங்கத்தினரும் கேட்டுக்கொண்டேயிருந்தால் கேள்வி முடியாது.

### *Closure of Sugar Factory at Mailpatti*

* 26 Q.—**Sri V. K. KOTHANDARAMAN** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) for how many years the sugar factory in Mailpatti is kept closed;

(*b*) whether the necessity for opening and running it again was brought to the notice of the Government ; and

(*c*) whether any steps have been taken to open and run it again?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (*a*) The sugar factory at Mailpatti has been idle since 1951.

(*b*) No, Sir.

(*c*) The Government understand that the owners of the factory have decided to close it down.

**Sri V. K. KOTHANDARAMAN** : நாலைந்து வருஷ காலமாக மூடப்பட்டிருக்கும் சர்க்கரை தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. ஆனல் சமீபத்தில் கூட்டுறவு முறையில் வட ஆற்காடு ஜில்லாவில் சர்க்கரை ஆலையை ஆரம்பிக்கப் போகிருர்கள். அதற்கு முன்னல் மூடப்பட்ட ஆலையை திறப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : மூடின ஆலையை எடுத்து நடத்துவது என்பது சர்க்காரால் இயலாத காரியம். அதுவும் 1951-ம் வருஷம் மூடப்பட்ட ஆலையை எடுத்து நடத்துவது என்ருல் அது முடியாது. அந்த ஆலையின் முதலாளிகளுக்கும் ஏதோ குடும்பச்சண்டை சச்சரவுகள் இருப்பதாக தெரியவருகிறது. அதனல் அதை எடுத்து நடத்த ஒருவரும் முன்வர மாட்டேன் என்று சொல்லுகிருர்கள். அதனல் அதை நாம் எடுத்து நடத்துவது என்பது இயலாத காரியம்.

இரண்டாவது காரணம் மூடப்பட்ட ஆலையில் சுமார் 100 டன் சர்க்கரை உற்பத்தி ஆயிற்று. ஆனல் ஆரம்பிக்கப்பட போகும் ஆலையில் சுமார் 800 டன் வரையில் சர்க்கரை உற்பத்தி செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. அதற்கு வேண்டிய சர்க்கரைக்கு கரும்பு க்ரஷ் பண்ண முடியும் என்று சொல்லுகிருர்கள். புதிதாக ஆரம்பிக்கப் போகும் ஆலை மூடப்பட்டதை விட நல்லது என்று தோன்றுகிறது.

**Sri S. NAGARAJA MONIGAR** : மூடப்பட்டிருக்கும் ஆலைகளிலுள்ள யந்தர சாமான்களை ஆரம்பிக்கப்படும் ஆலைகளுக்கு எந்த விதத்திலாவது உபயோகப்படுத்தலாம் என்பதை ஆலோசிக்கமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஆலைகளை ஆரம்பிக்கும் முதலாளிகளுக்கு இந்த யோசனையைச் சொன்னல் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

[28th June 1957

**Sri V. K. KOTHANDARAMAN** : மூடப்பட்ட ஆலைகளைத் திறக்காமல் புதியதாக ஆலைகளை ஆரம்பித்தால் ஆரம்பிக்கப்படும் ஆலைகளுக்கு மூடப்படக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இதில் அபிப்பிராயபேதம் இருக்கிறது. புதிதாக ஆரம்பிக்கப்படும் ஆலைகள்கூட மூடப்படும் என்று நான் நினைக்கவில்லை.

**Mr. SPEAKER** : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40, VIZ., THE SITUATION IN THE MADURAI MILLS, LIMITED, MADURAI.

9-50 a.m. **Mr. SPEAKER** : The hon. Member, Sri P. S. Chinnadurai, will now call the attention of the Minister for Industries and Labour to a matter of urgent public importance, viz., the present situation in the Madurai Mills, Limited, Madurai.

**Sri P. S. CHINNADURAI** : கனம் சபாநாயகர் அவர்களே, பொது ஜன முக்கியத்துவம் வாய்ந்ததும், மிக அவசரமானதுமான ஒரு பிரச்னையை அரசாங்கத்தின் கவனத்திற்கு, கனம் தொழில் மந்திரி அவர்கள் மூலமாகக் கொண்டுவர நான் விரும்புகிறேன். கிழக்காசியா நாடுகளிலேயே மிகப் பெரிய நூற்பு ஆலையாகிய மதுரை நூற்பு ஆலை சென்ற இரண்டு மூன்று தினங்களாக மூடிக் கிடக்கிறது. அந்த ஆலையில் வேலை செய்யும் சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுடைய குடும்பத்தினர் தவிக்கின்ற நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. கதவடைப்பு நீங்கி, ஆலை திறக்கப்படும் என்ற நிச்சயமான நிலைமை இப்பொழுது இல்லை. இதனால், உற்பத்தியும் பெரிய அளவுக்கு பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர் குடும்பத்தின் கஷ்டங்களை உத்தேசித்தும், உற்பத்தி பாதிக்கப்படுவதை உத்தேசித்தும் அரசாங்கத்தினர் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்பது எனது வேண்டுகோள் ஆகும். இதனைப்பற்றி அரசாங்கத்தாரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

**Mr. SPEAKER** : No speeches are permitted in regarding to notices under Rule 40. The Hon. the Minister will now reply.

* **The Hon. Sri R. VENKATARAMAN** : The management of the Madurai Mills Company, Limited, notified on the 8th June 1957 that the Redeployment Scheme as approved by the Special Industrial Tribunal, Madurai, would be introduced in the Madurai Mills with effect from 17th June 1957 and in the Pandian Mills with effect from 19th June 1957.

The scheme was accordingly introduced on those days. On the 17th and 18th June, the workers in the Madurai Mills generally did their work in accordance with the new workloads. The winders in the Winding department, however, went back to their old workloads after working for sometime on new workloads. The workers in the Bundling department did not do any work at all. On the night of the 18th instant, the can boys in the Carding section stated that it was not one of their duties to take the cans to the Drawing section and refused to do that work. Consequently, the carding



28th June 1957] [Sri R. Venkataraman]

machines had to be stopped one by one. On the 19th, the Labour Officer, Madurai, visited the factory and discussed the question with the workers and the management. The management felt that the workers had a genuine grievance and agreed to provide additional hands for taking the cans to the Drawing section. Regular work was thereupon resumed in the carding section too.

In the meantime, the workers in the Dunlop Spinning section stopped working, pleading that the workloads fixed under the award were higher than those fixed under a settlement before the Commissioner of Labour in 1955 and could not be agreed to.

The Labour Officer, Madurai, visited the Dunlop Spinning and Bundling Departments and explained to the workers that the award had to be respected by both the parties and that any difficulties which arose in actual practice could be discussed later on and disposed of. The workers pleaded that they were recently stricken by influenza and had not the energy to do even the pre-award workloads.

In the night shift on 19th June 1957, the workers in Carding department in the old Mill stopped working, while those in the new Mill carried on.

On 20th June 1957, the workers of the Spinning department followed the example of the others and reverted to the old workloads. Extra spindles were left unattended and as a result there was accumulation of fluff and even a small fire was started. At this stage, the management sotpped the machines and declared a lockout of the mills at the commencement of the lunch break (11 a.m. on 20th June 1957). They, however, expressed their willingness to re-open the Mills if the workers would give an undertaking to work under the workloads as revised by the Tribunal.

The efforts of the Labour Officer, Madurai, to effect an amicable settlement and the re-opening of the Mills were not successful.

I discussed the issue with the parties at Madurai on 22nd June 1957, as a result of which an amicable settlement was reached. The settlement was to come into force in respect of Madurai and Ambasamudram Mills immediately, and in respect of Tuticorin Mills, as soon as the workers of the Tuticorin Mills signified their consent. According to the agreement, the management agreed to re-open the Mills on 24th June 1957, when the workers would resume normal work as per the award of the Tribunal, subject to agreed changes. A Standing Committee for each of the Mills shall be constituted to settle matters involving practical difficulties in the implementation of the award.

The Mills were re-opened on 24th June 1957 after a four-day lockout. The management in a letter to Government alleged that

the workers failed to observe the terms of agreement and insisted on returning to the old workload. The management considered that this concerted refusal by workers to do their allotted work constituted an illegal strike and consequently ordered the closure of the Mills until further notice. The Mills remain closed from 25th June 1957.

It is regrettable that labour did not make an honest endeavour to work according to the award and as agreed to before the Minister for Industries on 22nd June 1957. It is also regrettable that the management did not consider it appropriate to give the workers time to adjust themselves to the new workloads or to consult the Government before actually closing down the Mills. Government hope that the parties will come together on the basis of the agreement arrived at before the Minister for Industries and resume work as soon as possible.

## III.—GOVERNMENT MOTION.

### ELECTION OF TWO MEMBERS TO THE BOARD OF INDUSTRIES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That in order to represent the Madras Legislative Assembly in the Board of Industries, this Assembly in accordance with section 3 (1) (*b*) of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923) and rule XXII (2) of the Madras Small-scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956, do proceed on a date to be fixed by the Speaker to elect two representatives, on the Board of Industries, constituted under the Act ".

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 3 p.m. on Saturday, the 29th June 1957, as the time within which nomination papers of candidates for election to the Board of Industries should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 11 a.m. on Monday, the 1st July 1957. I also fix 11 a.m. on Tuesday, the 2nd July 1957 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, two, a poll will be taken in the lounge room between 11 a.m. and 1 p.m. on Wednesday, the 3rd July 1957.



## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS PAYMENT OF SALARIES AND REMOVAL OF DISQUALIFICATIONS (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to introduce the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill[a], 1957, and move—

" That the Bill may be taken into consideration at once ".

சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தம் எதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி சட்ட மூலத்திலேயே அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். அரசியல் சட்ட 191-வது விதியின் பிரகாரம், இந்தச் சபையிலே அங்கத்தினர்களாக இருக்கக்கூடியவர்கள் வேறு எந்த விதமான ஊதியமும் பெறக்கூடிய அரசாங்க உத்தியோகத்தில் இருக்கக்கூடாது. அப்படி இருப்பார்களேயானால், இங்கே அங்கத்தினர்களாக இருப்பதற்குத் தகுதியற்றவர்களாகத் தீர்மானிக்கப்பட்டு, அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள். ஆனால், சில உத்தியோகங்களிலே ஏதோ ஒரு சிறு ஊதியம் இருந்தாலும்கூட, அவைகள் உண்மையிலேயே கௌரவ உத்தியோகங்களாக பார்க்கக்கூடியவையாக இருக்கின்றன. அந்த உத்தியோகங்கள் வகிப்பது சட்டத்திற்கு விரோதம் அல்ல என்று நாம் இங்கு சட்டம் செய்தால் தான் அந்தமாதிரி இருக்கக்கூடிய உத்தியோகங்களிலும்கூட அங்கத்தினர்கள் பங்கு எடுத்துக்கொள்ளமுடியும். உதாரணமாக " நாஷனல் காடர் கோர் " இருக்கிறது. மாணவர்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுக்கக்கூடிய முறையிலும், மாணவர்களிடையே கட்டுப்பாட்டுணர்ச்சியைக் கொடுக்கக்கூடிய முறையிலும் அமைந்திருப்பது இது. இதில் உத்தியோகம் இருந்தால் சிறிது அலவென்சு கொடுக்கப்படுகிறது. அதன் காரணமாக இங்கு அங்கத்தினர்களாக இருக்கக்கூடாது என்று சொன்னால் அது நியாயமாக இருக்காது. அப்போது தகுதி வாய்ந்த இங்கு இருக்கக்கூடியவர்கள் கலந்து கொள்ளவும் முடியாது. ஆகவே தான் சென்ற தடவை நாஷனல் காடர் கோர் உத்தியோகம் வகிக்கின்றவர்கள் இங்கு அங்கத்தினர்களாக இருப்பதற்குத் தடுக்கப்படமாட்டார்கள் என்று திருத்தம் செய்தோம். இந்தத் தடவை இன்னொரு முக்கியமான ஒரு இயக்கத்தில் அதாவது " Air Defence Reserve or the Auxiliary Air Force "-ல் ஈடுபட்டவர்களுக்கும் தடை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திருத்த மசோதா கொண்டு வந்திருக்கிறோம். இது சாதாரணமாக இருக்கக்கூடிய படையைச் சேர்ந்தது அல்ல. முக்கியமான நெருக்கடி, ஆபத்து காலத்தில் உதவுவதற்காக இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மற்ற காலங்களில் இவர்கள் அவரவர்களுடைய காரியத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் ஆபத்துகாலத்தில் ராணுவத்தில் சேரவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்திச் சேர்த்துக்கொள்ள முடியும். அப்படி இருக்கக்கூடிய படையிலே இப்பொழுது அங்கம் வகிப்பார்களானால் இப்போது இருக்கக்கூடிய சட்டப் பிரகாரம் இங்கு அங்கத்தினர்களாக இருக்க முடியாதென்று சட்ட நிபுணர்களும், அதிகாரிகளும் கூறியிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்குவதற்காக இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் விவாதத்திற்குரிய விஷயம் ஒன்றும் இல்லை என்று கருதுகிறேன். ஆகையினால் இந்தத் திருத்த மசோதாவை சபை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள பிரேரணை சபை விவாதத்திற்கு இருக்கிறது. The Motion is:

" That the Madras Payment of Salaries and Removal of disqualifications (Amendment), Bill 1957, be taken into consideration at once."

---

[a] Published in the *Fort St. George Gazette*, dated 12th June 1957.

[28th June 1957

SRI K. VINAYAKAM : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டங்களை எதாவது திருத்த வேண்டுமென்றால் அதற்குப் போதிய காரணம் இல்லாமல் திருத்த மசோதா வராது என்று சபையோருக்கு நன்றாகத்தெரியும். அப்படி இப்போது பாதிக்கப்பட்ட அங்கத்தினர்கள் யாராவது இந்தச் சபையில் இருக்கிறார்களா? அதனால் இருக்கிற சட்டத்தைத் திருத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்திருந்தால் அதை உடனடியாக இந்தச் சபையில் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று நம்புகிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, even though there may not be any necessity to have discussion over this amendment which seems to be well founded and necessary I would suggest that similar amendments if they are circulated in time or at least one or two days before actual consideration, we will be able to bring forward certain proposals for effecting minor changes which may be necessary. The House will find from the Bill under consideration that the marginal notes against the section proposed to be amended reads as ' Removal of Disqualification of Parliamentary Secretaries.' I would suggest to the Government to add to the marginal notes the words ' and certain other persons ' because the body of the section not only speaks of Parliamentary Secretaries but also of certain other persons. Of course in the interpretation of statutes marginal notes may not govern us but yet to be more accurate I would suggest that either in this House or in the other House some more words are added to the marginal notes of this section to make it clear. It may be amended to read as ' Removal of Disqualification of Parliamentary Secretaries and certain other persons '. That will be better and make it grammatically accurate.

MR. SPEAKER : With regard to the point raised by the hon. Member regarding circulation of Bills in advance, normally notice will be insisted upon but in this case and in the case of the next Bill to be taken up, on account of the urgency of the matter and in view of the fact that we have no other business today, I have waived notice. I should, however, like to impress upon the Government that this waiver of notice must not be taken advantage of by them always. So I hope it will not happen again.

I call upon the Hon. Minister to reply.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் ஸ்ரீ விநாயகம் அவர்களுக்கு ஏதோ ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. யாராவது அங்கத்தினர்கள் அப்படிப்பட்ட உத்தியோகத்தில் இருந்து அந்த அங்கத்தினர் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டுமென்பதற்காக இந்தத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதோ என்று சந்தேகப்படுகிறார். இப்போது யாரும் இந்தப்படையில் சேர்ந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சேர்ந்திருந்தால் அங்கத்தினர்களாக வந்திருக்கவும் முடியாது. நாமினேஷன் தாக்கல் பண்ணினவுடனேயே ஆட்சேபணையைக் கிளப்பியிருப்பார்கள். ஒரு சமயத்தில் அப்படையில் சேரவேண்டுமென்று விரும்பியவர்களும்கூட இப்போது தடை இருக்கிற காரணத்தால் நிற்காமல் போயிருப்பார்கள். இந்தத் தடையை நீக்கிவிட்டால் சந்தேகம் இன்றி அவர்கள் சேர்ந்து பணியாற்ற முடியும். அதற்கு இந்தத் திருத்த மசோதா மிகவும் அவசியம். இதுவரையில் சேராதவர்கள் இனி சந்தேகமின்றி சேர்ந்து பணியாற்ற முடியும்.



28th June 1957] [Sri C. Subramaniam]

அடுத்து ஸ்ரீ சீனுவாசய்யர் சொன்ன திருத்தம் பொருத்தமானது.

It should be ' certain persons holding certain other offices ' and not ' certain other persons '.

ஆனால் அது இப்போது அந்த தலையங்கத்திற்கும் கூடத் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. " பார்லிமெண்டரி செக்ரடரி, வேறு இனங்களும் " என்று கண்டிருக்குமானால் அது சட்டத்திற்கு விரோதம் இல்லை. விதியில் கண்டிருக்கக்கூடிய எல்லாவற்றையும் தலையங்கம் காண்பிக்க வேண்டுமென்று முறையில் இருப்பது அவசியம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகவே அடுத்த தடவை எதாவது திருத்தம் செய்ய நேரிட்டால் அதையும் செய்யலாம். இந்தத் திருத்தத்தைச் செய்துதான் சட்டம் நிறைவேற்றவேண்டுமென்ற அவசியம் இல்லாததனால் இப்பொழுதே ஏற்றுக் கொள்ளும் அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1957, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1957, be passed ".

MR. SPEAKER : The question is—

" That the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1957, be passed ".

The motion was put and carried and the Bill was passed.

## (2) THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (AMENDMENT) BILL, 1957.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill*, 1957, and move—

" That the Bill be taken into consideration at once ".

Under section 6 of the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939 (Madras Act VI of 1939) a retail dealer has to send along with his monthly returns, a receipt from a Government treasury for the amount of tax due from him. There is no provision to accept any other mode of payments. In the rules made under the Madras General Sales Tax Act of 1939 and the Madras Entertainments Tax Act, 1939 provision has been made for accepting cheques

* Published in the *Fort St. George Gazette*, dated 12th June 1957.

drawn in favour of departmental officers. There are also other methods of paying the tax such as by demand drafts and postal orders. In order to help the dealers it is proposed to provide in the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939, that taxes may be paid by the assessees in such a manner as may be prescribed, by the rules. The Bill seeks to achieve this object. It is a simple one and I request the House to accept it.

10-10 a.m. MR. SPEAKER : The question is—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be taken into consideration at once."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be passed".

MR. SPEAKER : The question is—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1957, be passed".

The motion was put and carried and the Bill was passed.

## V.—PROGRAMME OF THE SITTINGS OF THE HOUSE.

SRI K. VINAYAKAM : Sir, I rise on a point of information. May I know from the Hon. the Leader of the House how long this session will last? I am aware that this is the budget session and it will be a pretty long one. But it would be of help to hon. Members to know exactly when this session would close, of course, making allowance for exigencies.

MR. SPEAKER : I suppose it would be proper to ask this question after ten days. The hon. Member, I think, does not want, before the session actually begins, to know when the session would come to an end. I hope, he will have a little more patience, and we will get to know this information later.

*நாளை காலை 11 மணிக்கு நிதி அமைச்சர் அவர்கள் ராஜ்ய வரவு செலவு இந்த சபைமுன் சமர்ப்பிப்பார். இப்போது சபை நாளை காலைவரை ஒத்தி வைக்கப்படுகிறது.*

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 11 a.m. on Saturday, the 29th June 1957.

The House then adjourned.



## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

81. ***Notification issued with G.O. No. 169, L.A., dated 1st February 1957, amending the rules in regard to the conduct of election of members and presidents of panchayats framed under the Madras Village Panchayat Act, 1950.***

82. *Notification issued with G.O. No. 880, Revenue, dated 23rd February 1957, amending rules 22 and 23 and adding Forms 13 and 14 to the Madras Tobacco (Taxation of Sales and Registration) Rules, 1953. [Laid on the table of the House under section 16 (3) of the Madras Tobacco (Taxation of Sales and Registration) Act, 1953.]*

83. *Short review of the activities of Tuticorin Port Trust for first half of 1956–57, ending 30th September 1956.*

84. *Short review of the activities of the Madras Government Fisheries Department for the half year ended 30th September 1956.*

85. ***Notification issued with G.O. Ms. No. 1237, Industries, Labour and Co-operation, dated 29th March 1957, amending rule 44 to the Madras Employees' State Insurance Courts Rules, 1951, consequent on the introduction of decimal system of coinage.***

86. *Notification issued with G.O. Ms. No. 209, Home, dated 25th January 1957, amending the Madras Suppression of Immoral Traffic Rules, 1952, to provide escort for the discharged inmate of the Vigilance Home or Stri Sadana. [Laid on the table of the House under section 16 of the Madras Suppression of Immoral Traffic Act, 1930. (Madras Act V of 1930).]*

87. *Notification issued with G.O. Ms. No. 754, Home, dated 22nd March 1957, amending rules 1, 12 and 41 framed under the Madras Borstal Schools Act, 1925 (Act V of 1926) consequent on the introduction of decimal system of coinage. [Laid on the table of the House under section 4 of the Madras Borstal Schools Act, 1925) (Act V of 1926).]*

88. *Notification issued with G.O. Ms. No. 753, Home, dated 22nd March 1957, amending Rules 7 and 11 to the Madras Protection of Offenders Rules, 1947. [Laid on the table of the House under sections 13 (1) and (2) of the Madras Probation of Offenders Act, 1936 (Madras Act III of 1937).]*

89. *Notifiction issued with G.O. Ms. No. 1000, Home, dated 12th April 1957, remitting the Court Fees chargeable for documents presented by Co-operative Societies. [Laid on the table of the House under section 82 (2) of the Madras Court Fees and Suits Valuation Act, 1955).]*

90. *Notification issued with G.O. Ms. No. 548, Home, dated 1st March 1957, amending rule 61 to the Madras Suppression of Immoral Traffic Rules, 1952, consequent on the introduction of*

*Decimal system of Coinage.* [*Laid on the table of the House under section* 816 *of the Madras Suppression of Immoral Traffic Act,* 1950 (*Madras Act V,* 1930).]

91. *Notification issued with G.O. Ms. No.* 470, *Industries, Labour and Co-operation, dated* 8*th February* 1957, *containing certain draft amendments to the Madras Factories Rules,* 1950.

92. *Notification issued with G.O. Ms. No.* 550, *Home, dated* 1*st March* 1957, *amending rules* 81, 82 *and* 107 *to the Madras Children Rules,* 1940, *consequent on the introduction of the decimal system of coinage.* [*Laid on the table of the House under section* 44 *of the Madras Children Act,* 1920. (*Madras Act IV,* 1920).]

93. *Statement of action taken by the Government on the recommendations contained in the Report of the Estimate Committee on Hospitals and Dispensaries.*

94. *Notification issued with G.O. Ms. No.* 455, *Revenue, dated* 30*th January* 1957, *amending to the Madras Sales of Motor Spirit Taxation Rules,* 1939, *consequent on the introduction of decimal system of coinage.*

95. *Notification issued with G.O. Ms. No.* 1202, *Home, dated* 1*st May* 1957, *amending rule* 44 *to the Madras Suppression of Immoral Traffic Rules,* 1952. [*Laid on the table of the House under section* 16 *of the Madras Suppression of Immoral Traffic Act,* 1930. (*Madras Act V of* 1930).]

96. *Notification issued with G.O. No.* 876, *dated* 22*nd February* 1957, *Revenue, dated* 22*nd February* 1957, *amending rules* 1, 2 *and* 6 *and omitting rules* 3, 7 *to* 14 *and Appendix to the Rules to the Tanjore Tenants and Pannaiyals Protection Rules,* 1952 *and to the Tenants and Pannaiyals Protection (South Arcot) Rules,* 1953. [*Laid on the table of the House under section* 16 (2)) *of the Tanjore Pannaiyals Protection Act,* 1952).]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 29th June 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Hotel workers legislation*

MR. SPEAKER : Is the Hon. the Minister for Industries ready with his answer for Question No. 24?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

**MR. SPEAKER** : நேற்றையதினம் ஒத்திவைக்கப்பட்ட 24-வது கேள்வியை இப்பொழுது எடுத்துக்கொள்வோம்.

* 24 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state when the Bill granting protection to hotel workers will be published?

THE HON. SRI R. VENKATARAMAN : Steps are being taken to publish the draft Bill as early as possible.

**SRI N. K. PALANISAMY** : இம்மாதிரி பதில்தான் திருப்பித் திருப்பி இதுவரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வருஷம் கழித்து மசோதா தயாராகி இருக்கிறது. இது எவ்வளவு சீக்கிரம் பிரசுரிக்கப்படும் என்று திட்டவட்டமாக சொல்லமுடியுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இந்த மசோதா தயாரிக்கப்பட்டு விட்டது. "பட்ஜெட்" கூட்டம் முடிந்த பிறகு அதை நான் ஒரு முறை நேரில் பரிசீலனை செய்துவிட்டு பிரசுரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**SRI N. K. PALANISAMY** : ஏற்கனவே ஹைகோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு ஹோட்டல்களில் துடைக்கும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. அவர்களுக்கு இந்த மசோதாவில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இந்த மசோதாவில் என்னென்ன ஷரத்துக்கள் இருக்கின்றன என்பதை இப்பொழுது சொல்ல இயலாது.

**SRI P. S. CHINNATHURAI** : இந்த மசோதா சட்டசபை முன்பு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக தொழிலாளர் சங்கங்களின் ஆலோசனைக்காக அனுப்பப்படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : அடுத்த கூட்டத்துக்கு முன்னால் இந்த மசோதா பிரசுரிக்கப்படும். தொழிற்சங்கங்கள் ஏதாவது இது விஷயமாக மகஜர்கள் அனுப்பினால் அவைகளை நான் பரிசீலனை செய்கின்றேன். வேறு விதத்தில் அவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னாலும் அதையும் சர்க்கார் கவனிக்கும்.

[29th June 1957

**Sri K. VINAYAKAM :** இந்த மசோதாவில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அதே நேரத்தில் ஹோட்டல் வைத்து நடத்துகின்ற முதலாளிகளின் உரிமைகளும் பறிபோகாமல் விதிகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**The Hon. Sri R. VENKATARAMAN :** தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் நியாயமான முறையிலே சமூகமான உறவு ஏற்படவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் காங்கிரஸ் சர்க்கார் நடைபெறுகின்றது. ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தவிதமான கவலையும் கொள்ளவேண்டியதில்லை.

**Sri A. A. RASHEED :** Is the Hon. Minister aware of the fact that the proprietors are making a lot of money in the hotel business?

**Mr. SPEAKER :** What has that to do with the main question? The hon. Member is raising a different question altogether. The hon. Member may put a separate question.

*Border dispute*

* 27 *Q.*—**Sri N. K. PALANISAMY :** Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to settle the border dispute between Andhra and Madras States?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** The Government of India deputed Sri H. V. Pataskar to mediate in the Andhra-Madras border dispute. During the last week of December, a memorandum stating our case fully was presented to him by this Government. The matter is pending with Mr. Pataskar and his decision is awaited any moment.

**Sri N. K. PALANISAMY :** 9-ந் தேதி ஸ்ரீ படாஸ்கரிடம் ஆந்திர சர்க்கார் அவர்களுடைய கொள்கையை விவாதிக்கும்பொழுது சென்னை சர்க்கார் கிராமத்தை யூனிட்டாக வைத்துக்கொண்டு இந்த விஷயத்தை தீர்க்கலாம் என்று ஒத்துக்கொண்டிருந்தது. ஆனால் இந்த மாதிரி ஒரு பிரதேசம் " கண்டிகுவஸ் " ஆக இல்லாவிட்டாலும் சரி எந்த மொழி பேசுகிறவர்கள் ஒரு பிரதேசத்தில் அதிகப்படியாக இருக்கின்றார்களோ அந்த பாஷையைச் சேர்ந்த சர்க்காருக்கு அந்தப் பிரதேசம் போகவேண்டும் என்று நாங்கள் சொன்னோம். முதலில் இதை ஒத்துக்கொள்ளவில்லை. பிற்பாடு. . .

**Mr. SPEAKER :** அங்கத்தினர் கேள்விகள் கேட்கும்போது சுருக்கமாக கேட்கவேண்டும்; ஒரு பிரசங்கம் செய்யக்கூடாது என்று நேற்றே சொன்னேன். மறுபடியும் சொல்லுகிறேன். சுருக்கமாக கேள்விகள் கேட்க வேண்டும். அங்கத்தினர் அபிப்பிராயத்தை ஒரு கேள்வியின் மூலமாக சொல்லக்கூடாது.

**Sri N. K. PALANISAMY :** தொடர்ச்சியாக இல்லாத பிரதேசத்தில் எந்தப் பகுதி மக்கள் மெஜாரிடியாக இருக்கிறார்களோ அந்த ராஜ்யத்துக்கு அந்தப் பகுதி போகவேண்டும் என்று ஏன் அரசாங்கம் ஒத்துக்கொண்டது?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நான் கேள்வியை வெகு உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்த போதிலும் என்னால் அங்கத்தினருடைய கேள்வியை புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு சமயம் ஸ்ரீ பழனிசுவாமி அவர்கள் ஹோசூர் பிரதேசத்தைப்பற்றி கேட்கிறார் என்று நினைக்கிறேன். அங்கத்தினர் அதுபற்றி கவலைப்படவேண்டியதில்லை. கூடிய சீக்கிரம் முடிவு வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



29th June 1957]

**Sri S. NAGARAJA MONIGAR :** இம்மாதிரி கேள்வி கேட்பவர்கள் எல்லைப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்களின் கஷ்ட நஷ்டங்களை தெரிந்து கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். என்போன்று ஹோசூர், கிருஷ்ணகிரி பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி கேள்விகள் கேட்கப்படும்போது மரணவஸ்தை ஏற்படுகிறது. ஹோசூர் போன்ற இடத்தில் வசிப்பவர்கள் அதை இப்பொழுது இருக்கிற ராஜ்யத்திலேயே விட்டு வைக்கப்போகிறார்களா, மைசூருக்கு மாற்றப்போகிறார்களா, எந்த ராஜ்யத்தோடு சேர்க்கப்போகிறார்கள் என்று மனம் சரியான நிலையில் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர் அவர்கள் அறிவாரா?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லாப் பகுதிகளைப்பற்றியும் பேசுவதற்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் உரிமை உண்டு. ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அந்தப் பகுதியைப் பற்றி பேசுவதற்கு உரிமை உண்டு என்று சொல்லுவது இந்தச் சபையினுடைய ஒரு உரிமையை பறிப்பது ஆகும்.

**Sri S. B. ADITYAN :** ஸ்ரீ படாஸ்கருடைய தீர்ப்பு அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துமா, bind பண்ணுமா அல்லது அது வெறும் சிபார்சாக கருதப்படுமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அவர் சொல்லும் தீர்ப்பு சிபார்சு தான். ஆனால் இரண்டு அரசாங்கங்களும் அவர் சொல்லுவதை ஒத்துக் கொள்ளுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

**Sri P. M MUNUSWAMI GOUNDER :** எல்லைத் தகராறுகளை விஜாரித்து மத்யஸ்தம் கூறுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ படாஸ்கர் அவர்களிடம் எல்லைத் தகராறுக்குட்பட்ட பிரதேசங்களுடன் ஹோசூர் வேப்பனப்பள்ளி பிர்காவையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று ஆந்திர சர்க்கார் வற்புறுத்தியிருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிகின்றேன். அதற்கு ஏன் நம்முடைய சர்க்கார் ஒத்துக்கொண்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ஹோசூர் பகுதியிலே ஆந்திர சர்க்காருக்கு எந்த விதமான உரிமையும் இருக்கமுடியாது என்பது இந்த சர்க்காருடைய தீவிரமான உறுதியான கருத்து. ஆனால் இதுபற்றியும் ஸ்ரீபடாஸ்கார் அவர்கள் முடிவு சொல்லவேண்டுமென்று ஆந்திரர்கள் சொன்னார்கள். ஸ்ரீ படாஸ்கர் அவர்கள் ஹோசூரில் அவர்களுக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா என்று பரிசீலனை செய்வதுபற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை என்று நான் சொன்னேன். அதற்குக் காரணம் நம்மைப் பொறுத்தவரையில் ஹோசூரில் அவர்களுக்கு எந்த விதமான பாத்யதையும் இருக்கமுடியாது. யார் இதைப் பரிசீலனை செய்தாலும் நியாயமாக முடிவு கூறும்பொழுது ஹோசூரை ஆந்திரர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள் என்பது எங்கள் தீவிரமான நம்பிக்கை. ஆகையால் ஹோசூரைப் பற்றி பரிசீலனை செய்வதற்கும் நாம் ஒத்துக்கொண்டோம்.

**Sri A GOVINDASWAMY :** சித்தூர் மாவட்டத்தில் எந்தப் பகுதி தமிழ் நாட்டுடன் சேரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது? எந்த அடிப்படையில்?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** எந்த அடிப்படையில் என்பது முன்னமேயே இந்தச் சபையில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான்.

**Sri K. VINAYAKAM :** On a former occasion, the Hon. Minister was pleased to say that he was not prepared to place on the table of the House the Memorandum which was presented to Mr. H. V. Pataskar. If that could not be done, will the Hon.

Minister at least explain the broad principles on which the Memorandum was prepared about the percentage of population, about the area that we have to cede to them and the area that we have to get from the Andhra Pradesh?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think I will be able to do justice to this subject in answering a supplementary question.

SRI K. RAMACHANDRAN : ஸ்ரீ படாஸ்கர் அவர்களின் அறிக்கை ஒரு வாரம் 10 நாட்களில் வெளிவரப்போவதாக பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் அது வெளிவரக்கூடும் என்பதைப்பற்றி சர்க்கார் ஏதாவது அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்குத் தெரிந்தவரையில் ஜூலை 1-ம் தேதிக்குள் அவர்களது தீர்ப்பு வெளிவரக்கூடும் என்று கேள்விப்படுகிறேன். ஆனால் எழுத்து மூலமாக எங்களுக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை.

SRI A. GOVINDASWAMY : என்னுடைய கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு மட்டும் பதில் சொன்னார்கள். தமிழ் நாட்டுடன் சித்தூர் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்படவேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எங்கு தமிழ் பேசும் மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்தப்பகுதிகளை கிராம அடிப்படையில் நம்முடைய ராஜ்யத்துடன் சேர்க்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

SRI N. K. PALANISAMY : ஒரு கிராமத்தைப் பிரிக்கும்போது "சென்ஸஸ்பற்றி இரண்டு சர்க்காருக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால், மறுபடியும் புதிதாக "சென்ஸஸ்" எடுக்கப்படவேண்டுமென்று ஸ்ரீ காளேஸ்வர ராவ் அவர்கள் ஸ்ரீ படாஸ்கரிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை யாரும் ஒத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. 1931-ம் வருஷத்திய ஜன சங்கியை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் தீர்ப்புக் கூறப்படும்.

11-12 a.m. SRI K. VINAYAKAM : Sir, high personages like the Speaker of the Lok Sabha also took part in giving evidence before Sri H. V. Pataskar. What is the opinion of this Government regarding such kind of witnesses who have no interest in this subject?

MR. SPEAKER : I rule that question out of order.

No reference or question can be put about Presiding Officers of other Houses.

SRI V. K. KOTHANDARAMAN : மக்கள் சபை சபாநாயகர். . .

MR. SPEAKER : மக்கள் சபை சபா நாயகரைக் குறித்து ஒன்றும் சொல்லக்கூடாதென்று நான் இப்பொழுதுதான் சொன்னேன்.

SRI A. GOVINDASWAMY : கிராம ஜனத்தொகை அடிப்படையில் வலியுறுத்தியிருப்பதாக நமது நிதி மந்திரியவர்கள் சொன்னார்கள். இதை படாஸ்கர் அவர்கள் ஒத்துக் கொள்வாரா ? ஒத்துக் கொள்ளவில்லை என்றால் நமது சர்க்காரின் நோக்கம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர் முடிவு கூறும்போது அது



SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு தவறு இழைக்கக் கூடிய விதத்தில் படாஸ்கர் அவர்களின் தீர்ப்பு இருக்குமானால் இந்த அரசாங்கம் அதை ஏற்க மறுத்து ஒதுக்குமா ?

MR. SPEAKER : It is a hypothetical question which the Hon. Minister is not expected to answer. I rule it out of order.

*Recruitment of Sub-Inspectors*

* 28 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether Sub-Inspectors are recruited every year for each district;

(b) the number of training centres for these recruits; and

(c) whether there is any proposal to increase the salary of Sub-Inspectors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir, Sub-Inspectors are recruited on a range basis.

(b) There is only one Police Training College at Vellore for the training of Sub-Inspector cadets.

(c) No, Sir.

SRI N. K PALANISAMY : சார், நேரடியாக சப்-இன்ஸ்பெக்டர்களை எடுப்பதை விட்டு ஹெட் கான்ஸ்டேபிள்களை "பிரமோட்" செய்வது என்ற முறையில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அநேகமாக சப்-இன்ஸ்பெக்டர்களை ஹெட் கான்ஸ்டேபிளிலிருந்து எடுப்பதுதான் முறையாயிருக்கிறது.

SRI N. K. PALANISAMY : ஏற்கெனவே ஹெட் கான்ஸ்டேபிளாயிருந்து பிறகு அவர்களின் திறமை காரணமாக சப்-இன்ஸ்பெக்டராகி சில காலம் பணியாற்றிய பின் இன்று வேலையிழந்திருக்கிறார்கள். அவர்களை திரும்ப சப்-இன்ஸ்பெக்டர்களாக்குவதற்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு பூர்வமாக வேலை கொடுத்தாய் விட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சப்-இன்ஸ்பெக்டர் வேலை பார்த்தவர்கள் இப்பொழுது ஹெட் கான்ஸ்டேபிளாய் இருக்கிறார்கள் என்பதைப் பற்றி குறிப்பாக அங்கத்தினர் அவர்கள் எனது கவனத்திற்கு கொண்டுவந்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

SRI K. RAMACHANDRAN : நமது ராஜ்யத்தில் "ரேஞ்ச் பேஸிஸ்" (Range Basis) சப்-இன்ஸ்பெக்டர்கள் பொறுக்கப்படுவதாக மந்திரியவர்கள் சொன்னார்கள். இங்கு எத்தனை ரேஞ்சுகளாக நமது ராஜ்யத்தைப் பிரித்திருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் சாதாரணமாக எத்தனை சப்-இன்ஸ்பெக்டர்கள் "ரெக்ரூட்" செய்யப்படுகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு டெப்யூட்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் உடைய பிரதேசம் ஒரு ரெயின்ஞ்சாகக் கருதப்படுகிறது. கடைசியாக ரெக்ரூட் செய்யப்பட்டது 1952-ல். அதற்கப்புறம் சப்-இன்ஸ்பெக்டர்கள் ரெக்ரூட் செய்யப்படவேயில்லை.

Minister at least explain the broad principles on which the Memorandum was prepared about the percentage of population, about the area that we have to cede to them and the area that we have to get from the Andhra Pradesh?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think I will be able to do justice to this subject in answering a supplementary question.

SRI K. RAMACHANDRAN : ஸ்ரீ படாஸ்கர் அவர்களின் அறிக்கை ஒரு வாரம் 10 நாட்களில் வெளிவரப்போவதாக பத்திரிகைகளில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் அது வெளிவரக்கூடும் என்பதைப்பற்றி சர்க்கார் ஏதாவது அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்குத் தெரிந்தவரையில் ஜூலை 1-ம் தேதிக்குள் அவர்களது தீர்ப்பு வெளிவரக்கூடும் என்று கேள்விப்படுகிறேன். ஆனால் எழுத்து மூலமாக எங்களுக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை.

SRI A. GOVINDASWAMY : என்னுடைய கேள்வியின் இரண்டாவது பகுதிக்கு மட்டும் பதில் சொன்னார்கள். தமிழ் நாட்டுடன் சித்தூர் மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் இணைக்கப்படவேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எங்கு தமிழ் பேசும் மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அந்தப்பகுதிகளை கிராம அடிப்படையில் நம்முடைய ராஜ்யத்துடன் சேர்க்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

SRI N. K. PALANISAMY : ஒரு கிராமத்தைப் பிரிக்கும்போது "சென்ஸஸ்பற்றி இரண்டு சர்க்காருக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால், மறுபடியும் புதிதாக "சென்ஸஸ்" எடுக்கப்படவேண்டுமென்று ஸ்ரீ காளேஸ்வர ராவ் அவர்கள் ஸ்ரீ படாஸ்கரிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதை யாரும் ஒத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. 1931-ம் வருஷத்திய ஜன சங்கியை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் தீர்ப்புக் கூறப்படும்.

11-12 a.m. SRI K. VINAYAKAM : Sir, high personages like the Speaker of the Lok Sabha also took part in giving evidence before Sri H. V. Pataskar. What is the opinion of this Government regarding such kind of witnesses who have no interest in this subject?

MR. SPEAKER : I rule that question out of order.

No reference or question can be put about Presiding Officers of other Houses.

SRI V. K. KOTHANDARAMAN : மக்கள் சபை சபாநாயகர். . .

MR. SPEAKER : மக்கள் சபை சபா நாயகரைக் குறித்து ஒன்றும் சொல்லக்கூடாதென்று நான் இப்பொழுதுதான் சொன்னேன்.

SRI A. GOVINDASWAMY : கிராம ஜனத்தொகை அடிப்படையில் வலியுறுத்தியிருப்பதாக நமது நிதி மந்திரியவர்கள் சொன்னார்கள். இதை படாஸ்கர் அவர்கள் ஒத்துக் கொள்வாரா ? ஒத்துக் கொள்ளவில்லை என்றால் நமது சர்க்காரின் நோக்கம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர் முடிவு தரும்போது அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா இல்லையா என்று தெரியும்.



SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு தவறு இழைக்கக் கூடிய விதத்தில் படாஸ்கர் அவர்களின் தீர்ப்பு இருக்குமானால் இந்த அரசாங்கம் அதை ஏற்க மறுத்து ஒதுக்குமா ?

MR. SPEAKER : It is a hypothetical question which the Hon. Minister is not expected to answer. I rule it out of order.

*Recruitment of Sub-Inspectors*

* 28 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Sub-Inspectors are recruited every year for each district;

(*b*) the number of training centres for these recruits; and

(*c*) whether there is any proposal to increase the salary of Sub-Inspectors?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir, Sub-Inspectors are recruited on a range basis.

(*b*) There is only one Police Training College at Vellore for the training of Sub-Inspector cadets.

(*c*) No, Sir.

SRI N. K PALANISAMY : சார், நேரடியாக சப்-இன்ஸ்பெக்டர்களை எடுப்பதை விட்டு ஹெட் கான்ஸ்டேபிள்களை "பிரமோட்" செய்வது என்ற முறையில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அநேகமாக சப்-இன்ஸ்பெக்டர்களை ஹெட் கான்ஸ்டேபிளிலிருந்து எடுப்பதுதான் முறையாயிருக்கிறது.

SRI N. K. PALANISAMY : ஏற்கெனவே ஹெட் கான்ஸ்டேபிளாயிருந்து பிறகு அவர்களின் திறமை காரணமாக சப்-இன்ஸ்பெக்டராகி சில காலம் பணியாற்றிய பலர் இன்று வேலையிழந்திருக்கிறார்கள். அவர்களை திரும்ப சப்-இன்ஸ்பெக்டர்களாக்குவதற்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு பூர்வமாக வேலை கொடுத்தாய் விட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சப்-இன்ஸ்பெக்டர் வேலை பார்த்தவர்கள் இப்பொழுது ஹெட் கான்ஸ்டேபிளாய் இருக்கிறார்கள் என்பதை பற்றி குறிப்பாக அங்கத்தினர் அவர்கள் எனது கவனத்திற்கு கொண்டுவந்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

SRI K. RAMACHANDRAN : நமது ராஜ்யத்தில் "ரேன்ச் பேஸிஸ்" (Range Basis) சப்-இன்ஸ்பெக்டர்கள் பொறுக்கப்படுவதாக மந்திரியவர்கள் சொன்னார்கள். இதற்கு, எத்தனை ரெயின்ஜுசாக நமது ராஜ்யத்தை பிரித்திருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் சாதாரணமாக எத்தனை சப்-இன்ஸ்பெக்டர்கள் "ரெக்ரூட்" செய்யப்படுகிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு டெப்யூட்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் உடைய பிரதேசம் ஒரு ரெயின்ஜுசாகக் கருதப்படுகிறது. கடைசியாக ரெக்ரூட் செய்யப்பட்டது 1952-ல். அதற்கப்புறம் சப்-இன்ஸ்பெக்டர்கள் ரெக்ரூட் செய்யப்படவேயில்லை.

SRI S. PAKKIRISAMY PILLAI : சமீபத்தில் வெளி ஊர்களிலிருந்து சில இன்ஸ்பெக்டர்களை சென்னைக்கு கொண்டு வந்து மதுவிலக்கு சம்பந்தமாக அவர்கள் வேலை செய்தபொழுது அவர்கள் மூலமாக சில தொந்தரவுகள் மக்களுக்கு ஏற்பட்டதை மந்திரியவர்கள் அறிவார்களா? அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மது விலக்கு வேலைக்காக சப்-இன்ஸ்பெக்டர்களை சென்னைக்கு வெளி ஊர்களிலிருந்து கொண்டு வரப்பட்டதாக என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை, ஆகவே இதில் புகார் ஒன்றுக்கும் இடமில்லை.

SRI P. S. CHINNATHURAI : சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதற்கான திட்டம் இல்லாவிட்டாலும் அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ்க்கான ஏற்பாடு செய்து தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அமல் நடத்தப்பட்டு வருகிறது. இன்னும் கூடுதல் விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கலாம்.

### *Grievances of Non-Gazetted Officers*

* 29 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received deputations of Non-Gazetted Officers during 1957; and

(b) whether there is any proposal to constitute a committee to enquire into their grievances?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No.

(b) No.

SRI N. K. PALANISAMY : Will the Government consider the question of constituting a committee to go into overtime and other allowances apart from salaries, as they have to take files to their houses for disposal?

MR. SPEAKER : The hon. Member's question, it seems, has nothing to do with the main question. He may put a separate question. But I have no objection to the Hon. Minister answering it.

THE HON. SRI C. SUBRAMANIAM : The committee will serve no purpose. As a matter of fact, all the problems relating to the Non-Gazetted Officers are well-known. The only question is how to solve them.

### *Aluminium plant at Mettur*

* 30 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is a proposal to set up an Aluminium Plant at Mettur in Salem district?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

SRI N. K. PALANISAMY : May I know whether this industry will be run in the public sector or in the private sector?



THE HON. SRI R. VENKATARAMAN : The proposed factory will be run in the public sector by the National Industrial Development Corporation.

SRI M. P. SUBRAMANIAM : இந்த அலுமனியம் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் சர்க்கார் வசத்தில் இருக்கிறதா? அல்லது தனிப்பட்டவர்கள் வசத்தில் இருந்து எடுத்துக்கொள்ளவேண்டுமா? அது விலை கொடுத்து வாங்கப்படுகிறதா? அப்படியானால் அதை அரசாங்கம் ஏற்றெடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதன் மூலப் பொருளாகிய "பாக்ஸைட்" ஒரு தனி கம்பெனிக்கு இன்று லீஸிற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு உறுதி ஏற்படுமானால் அந்த லீஸை ரத்து செய்து அதை எடுத்துக்கொள்ள ஒரு மசோதா கொண்டு வரப்படும்.

SRI K. RAMACHANDRAN : இதில் வெளிநாட்டு நிபுணர்களின் யோசனை ஏற்கப்படுமா? அல்லது வெளிநாட்டு மூலதனம் இதில் உபயோகப்படுத்தப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : நம் நாட்டில் இருக்கிற பாக்ஸைட்டை அமெரிக்காவிற்கு பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறோம். வெளிநாட்டு மூலதனம்பற்றி பின்தான் முடிவு கட்டப்படும்.

SRI M. P. SUBRAMANIAM : சில மாதங்களுக்கு முன்பு ஒரு அலுமனியம் தொழிற்சாலை ஏற்படுத்தப் படுமென்று அமைச்சர் அவர்கள் உறுதி கூறினார்கள். ஆனால் இப்பொழுது அவரது பதிலிலிருந்து இன்னும் ஏற்படுத்தப்படுவது உறுதிபடவில்லை என்று தெரிகிறது. இது எப்பொழுது உறுதிப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: நம் பாக்ஸைட்டை அமெரிக்காவிற்கு அனுப்பி பரிசீலனை செய்து இதிலிருந்து அலுமினியம் எடுக்க முடியும், இது கட்டுபடியாகும் என்று நமக்கு ரிப்போர்ட் வந்தவுடன் உறுதி செய்யப்படும்.

SRI K. VINAYAKAM : Sir, apart from bauxite, what are the other salient raw products that are necessary for the manufacture of aluminium and are they available in plenty in the district ?

THE HON. SRI R. VENKATARAMAN : Bauxite, caustic soda and electric power are necessary for the manufacture of aluminium.

SRI N. K. PALANISAMY : May I know why there is delay in finalizing the scheme ?

THE HON. SRI R. VENKATARAMAN : I have already stated that a few samples have been sent to the United States of America for testing.

SRI M. P. SUBRAMANIAM : அனுப்பப்பட்டு எவ்வளவு காலமாயிருக்கும் என்று அறிய விரும்புகிறேன். அந்த மூலப்பொருள் வியாபார அளவில் வேறு எங்காவது அனுப்பப்படுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : எவ்வளவு காலமிருக்கும் என்று சொல்ல முடியாது. இப்பொழுதிருக்கிற பாக்ஸைட் வேறு எந்த இடத்திற்கும் அனுப்பப்படவில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : பெயர் அளவில்தான் இந்த தொழிற்சாலை சேலம் ஜில்லாவில் இருக்கிறதே ஒழிய ஏறத்தாழ சேலத்தின் ஒரு

கோடியிலேதான் இருக்கிறது. இதை சேலத்தில் ஆரம்பிக்க முடியாதா என்று கேட்க விரும்புகிறேன். சேலத்தின் மத்திய பாகத்தில் எங்கேயாவது அதை ஏற்படுத்தக்கூடாதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினரின் தொகுதிக்கு விசேஷ சலுகை வேண்டுமென்றால் அதற்காக வேண்டிய மனுக்கள் செய்துகொள்ளலாம். ஆனால் தொழிற்சாலை நிறுவுவது என்பது எந்த இடத்தில் அதை வைத்தால் லாபகரமாயிருக்கும் வெற்றிகரமாக நடக்கும் என்பதை ஒட்டித்தான் தொழிற்சாலை அமைக்கப்படும்.

**SRI A. GOVINDASWAMY** : இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ரஷ்ய சர்க்கார் பெரிய நிதி தருவதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அது உண்மையா ? அரசாங்கத்திற்கு இதுபற்றி ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : எனக்குத் தெரியாது.

**SRI M.P. SUBRAMANIAM** : இந்த பாக்ஸைட் டால்மியா என்ற முதலாளியின் கையில் இருக்கிறது. நாள் ஒன்றுக்கு 100 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டு அங்கிருக்கிற "பாக்ஸைட் ஓர்" வெளியே அனுப்பபடுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ?

11-20 a.m. **THE HON. SRI R. VENKATARAMAN** : இதைப்பற்றி தனி கேள்வி கேட்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*Municipal divisions in the City*

*31 Q.—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have received any proposal from the Corporation of Madras for increasing the number of the existing municipal divisions by subdividing them ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : Yes, Sir.

**SRI S. PAKKIRISAMY PILLAI** : அடுத்த வருஷம் கார்பொரேஷன் தேர்தல் வருவதற்கு முன்னால் முனிஸிபல் டிவிஷன்கள் பிரிக்கப்பட்டுவிடுமா ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : முனிஸிபல் டிவிஷன்களைப் பிரிப்பதற்கு ஆலோசனை நடந்துகொண்டிருக்கிறது.

**SRI K. VINAYAKAM** : போன தேர்தலுக்கு முன்னதாகவே இது பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது கார்ப்பொரேஷனிலிருந்து. ஆனால் அப்போது இருந்த அமைச்சர் கார்ப்பொரேஷன் தேர்தலுக்குப் பிறகு ஆலோசிக்கலாம் என்று சொல்லிவிட்டார். இப்போது வரும்போதுகூட இந்தத் தேர்தல் நடந்த பின்னர் யோசிக்கலாம் என்று சொல்லிக்கொண்டே வந்தால் இதற்கு முடிவே இல்லை. இறுதியாக ஒரு தேதி சொல்லி அதற்குள்ளே அதைச் செய்துவிடலாம் என்று சொல்லுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : கழிந்த சட்டசபையில் அப்போது இருந்த அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பார்கள் என்றால் அது நடக்க முடியாமல் போய்விட்டது. ஆனால், இதை எப்படியாவது இப்போது நடத்த முற்பட்டு அதற்கு வேண்டிய வேலைகளைச் செய்துகொண்டுவருகிறோம்.

**SRI K. VINAYAKAM** : இப்போது டிவிஷன்கள் பிரிக்கப்படவேண்டும் என்று சொல்வதற்கு அடிப்படை ஒன்றுதான். ஒரு டிவிஷன் சின்னதாக இருக்கிறது. ஒரு டிவிஷன் 8 அல்லது 9 "ஸ்க்வெயர் மைல்கள்" உள்ளதாக இருக்கிறது. ஒரு டிவிஷனில் பத்தாயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள் ; இன்னொரு டிவிஷனில் 40 ஆயிரம் வாக்காளர்கள்



இருக்கிறார்கள். இப்படிப்பட்ட "டிஸ்ப்ரொபோர்ஷனேட் ஸிஸ்டம்" இருப்பதனாலேயே, இதை "ரேஷனல் பேஸிஸில்" பிரிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆகவே தயவுசெய்து இந்தத் தேர்தலுக்கு முன்னதாகவே பரிசீலித்து அதை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

**MR. SPEAKER** : அதைச் செய்து கொண்டிருப்பதாகத்தான் சொன்னார்களே ?

**SRI K. RAMACHANDRAN** : தற்போது சென்னையில் எத்தனை டிவிஷன்கள் இருக்கின்றன ? அதை எத்தனையாக அதிகப்படுத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? எந்த அடிப்படையில் அதை அதிகப்படுத்துவதாக உத்தேசம் ?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : சென்னையில் தற்போது 50 டிவிஷன்கள் இருக்கின்றன. அவற்றை, கழிந்த தடவை 60 ஆக்கவேண்டுமென்றும், 10 டிவிஷன்களை "பைபர்கேட்" செய்து 60 ஆக்கவேண்டுமென்றும் நினைத்தது. அப்படிச்செய்தால் இன்னும் வேறு சில கஷ்டங்கள் ஏற்படும். ஏனென்றால் இந்தப் பத்து டிவிஷன்களை மட்டும் பிரித்தால் வேறு சில பெரிய தொகுதிகளும் இருக்கின்றன. தற்போது இதை நன்றாகப் பரிசீலனை செய்து சரியான முடிவாக இருக்க வேண்டுமென்பதில்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது.

**SRI T. P. ELUMALAI** : சென்னையை ஒட்டி இருக்கிற பாகங்களை கார்ப்பொரெஷனோடு சேர்த்துகொள்ள உத்தேசமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER** : இதற்கு நீங்கள் தனிக் கேள்வி கேளுங்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

*Minister's tour of European Countries in 1956*

*32 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Hon. Minister went on tour to any European Countries in the official capacity during 1956; and

(b) if so, the purpose and details thereof and the amount spent therefor?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : (a) Yes. At the instance of Government of India, Sri M. Bhaktavatsalam, then Minister for Agriculture, visited Geneva on official business in June 1956.

(b) The Minister visited Geneva as leader of the Indian Delegation to the 39th Session of the International Labour Conference held at Geneva from 6th to 28th June 1956.

An expenditure of Rs. 6,843·62 was incurred in connection with the above tour and this expenditure was met by the Government of India.

**SRI N. K. PALANISAMY** : May I know whether any report has been submitted to Government and in what way this State has been benefited by his tour?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : A report has been submitted to the Government of India. Any further questions on the subject may be put in the Lok Sabha.

[29th June 1957

## *Civil Court for Hosur*

* 33 *Q.*—SRI M. MUNI REDDI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any memorandum was presented to the Fact Finding Committee during its tour on 2nd June 1952 by the public of Hosur taluk for the establishment of a separate Civil Court for Hosur; and

(*b*) if so, what its recommendations are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) the Committee has not made any recommendation on the request for a separate Civil Court at Hosur.

SRI M. MUNI REDDI : May I know whether it is a fact that on 22nd October 1955 the District Court, Salem, called for figures from the District Munsif's Court for redistribution of territorial jurisdiction and if so, what are the recommendations made by the District Munsif's Court? May I also know what action has been taken by the Government on those recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No doubt, the hon. Member was interested in the redistribution or the transfer of the court to Hosur. But the figures do not warrant that and there was no recommendation either on the part of the District Munsif or on the part of the District Judge or even from the High Court.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், தற்போது கிருஷ்ணகிரியிலுள்ள சிவில் கோர்ட் ஹோசூரில் வேலை செய்து வந்தது. இதே போல வேலை செய்வதற்குத் திரும்பவும் உத்திரவு செய்ய முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு வருஷத்திலே நான்கு முறை கோர்ட் வைப்பதற்கு அதிகம் செலவு ஆகிறது. அதற்கு அவசியமில்லையாகையால் அது 1931-லேயே நிறுத்தப்பட்டது. மீண்டும் அதைத் துவக்குவதாக உத்தேசமில்லை.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that some politically interested persons are trying to shift the Court to Hosur to suit their convenience for different purposes and under these circumstances, will the Government stick to the *status quo* as far as Krishnagiri and Hosur taluks are concerned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am neither aware of the motive nor can I understand this motive.

SRI M. MUNI REDDI : May I know what are the recommendations of the District Munsif's Court?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The recommendation was that it would not be advantageous to have a separate court for Hosur taluk on the statistics available.



29th June 1957]

## *Voters' lists*

* 34 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) Whether the Government have conducted any enquiry into the enumeration of false names in the voters' lists; and

(*b*) whether those lists were checked before they were published?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Where complaints of enumeration of false names in the electoral rolls of any particular area have been received or with reference to press reports or comments on such defects in the electoral rolls, necessary enquiries are being conducted and defects rectified.

(*b*) In 1/5th area of the State, each year by rotation the electoral rolls are checked by house-to-house enquiry; in the remaining areas each year, there is no house-to-house enquiry and the list of amendments to the electoral roll is prepared only with reference to the information available in the National Register of Citizens, the death registers and other information coming to the notice of the persons preparing the list.

SRI A. GOVINDASWAMY : அதிக வேலைகளுக்கும் தொல்லைகளுக்கும் உள்ளான ஆசிரியர்களுக்கு இந்த வோட்டர் லிஸ்ட் தயாரிக்கும் வேலையைக் கொடுப்பதினால் இந்த மாதிரித் தவறுகள் ஏற்படுகின்றன. செத்தவர்கள் உயிருள்ளவர்களாகவும் உயிருள்ளவர்கள் இறந்து போனவர்களாகவும் லிஸ்டில் வருகிறது. ஆகவே இம்மாதிரி தவறுகளைத் தவிர்க்க, தனி அதிகாரிகளை நியமித்து, வோட்டார் லிஸ்ட் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த வருஷத்திலே 15 நாட்கள் அல்லது 20 நாட்கள் இருக்கக்கூடிய வேலை. இதற்காக தனி உத்தியோகஸ்தர்களை நியமிப்பது என்பது முடியாத காரியம். ஆகவே, இப்போது உத்தியோகத்திலிருப்பவர்களைக் கொண்டுதான் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டியிருக்கிறது. அப்படி உத்தியோகத்திலிருப்பவர்களில் யார் யாரைக்கொண்டு நடத்தவேண்டியது என்பதைப் பரிசீலித்து, வேண்டியது செய்யப்படும்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்த வோட்டர்ஸ் லிஸ்டில் இனிஷியலெல்லாம் ரொம்பத் தகராறு. "ப" என்பதற்கு "பி" போட்டிருக்கும் "க" என்பதற்கு "கு" போட்டிருக்கும். அம்மாதிரி சில சில்லரைத் தகராறுகளை வைத்துக்கொண்டு, நூற்றுக் கணக்கான வோட்டர்களை வோட்டுப்போட அனுமதிக்காமல், இனிஷியல் சரியில்லை, பேர் சரியில்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, பேர்கள் எவ்வளவு முக்கியமோ அதைப்போல கரெக்ட் இனிஷியலும் ரொம்ப அவசியமாயிருக்கிறது. ஆகவே, அதில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

SRI C. R. RAMASWAMY : As these voters' lists are more inaccurate than accurate will the Hon. Minister consider the advisability of making a house-to-house enquiry before the next elections and publishing corrected and consolidated lists?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. Before the next elections, there will be an inquiry from house to house in all the areas and corrected and consolidated lists will be printed.

[29th June 1957

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கடைசியாக வெளியிட்ட வாக்காளர் பட்டியில் ஏறத்தாழ 50 அல்லது 60 சதவிகிதம் தவறுகள் அதிகமாக உள்ள காரணத்தால், அந்தப் பட்டியலை மறுபடியும் திருத்தம் செய்கிற முயற்சியை விட்டு, புதிதாக முன்னால் இருந்த பட்டியில் அடிப் படையில் நல்ல, நேர்மையான புதிய பட்டியில் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நாங்களும் அதைத்தான் சொன்னோம். தேர்தலுக்குள்ளாக வீடு வீடாகப் பரிசீலனை செய்து புதிதாக எலெக்டோரல் ரோல் பிரிண்ட் செய்யப்படுமென்று.

*Revision of daily wage rates of School of Arts and Crafts Workers.*

* 35 *Q*.—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a demand, dated 29th October 1956, from the School of Arts and Crafts Workers' Union for the revision of daily wage rates into fixed monthly scales of pay; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

A representation was received by the Director of Industries and Commerce Madras.

(*b*) The matter is now under the consideration of the Government.

SRI S. PAKKIRISAMY PILLAI : சித்திரக் கலைப் பள்ளித் தொழிற்சாலையில் மாணவர்கள் இருந்தாலும் அங்கே இருக்கும்படியான தொழிலாளர்களுக்கு விடுமுறை நாட்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றும், எந்தெந்த தேதிகளிலே மாணவர்கள் படிக்கிறார்களோ அந்தந்த நாட்களுக்குத்தான் சம்பளக் கூலி கொடுக்கப்படுகிறதென்றும் மாதக் கூலியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் புகார் வந்ததா ? அதன்பேரிலே மாதச் சம்பளம் ஏற்படுத்துவதற்கு என்ன முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மாதச் சம்பளமாக கொடுப்பதற்கு சர்க்கார் யோசனை செய்துக்கொண்டிருக்கிறார்கள். மாதச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்பதுதான் சர்க்கார் நோக்கமாகும்.

SRI N. K. PALANISAMY : May I know whether after the course is over, they are given any employment or whether they would be given a guarantee of employment afterwards?

THE HON. SRI R. VENKATARAMAN : The main question relates to employees; the supplementary relates to students.

*Re-organization of District Boards*

* 36 *Q*.—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to State the action taken on the proposals contained in the White Paper about the re-organization of district boards?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Section III of the White Paper on Local Administration contains the provisional conclusions of Government relating to district boards. The White Paper was placed before both the Houses of the previous



29th June 1957]

Legislature on 29th September 1956. The intention then was to invite the Legislature to set up a Committee of both the Houses in order to scrutinize the proposals contained in the White Paper and advise Government before final decisions were taken in regard to the re-organization of Local Bodies. Due to pressure of work, the White Paper was not taken up for consideration.

Since then, the Cabinet has appointed a Sub-Committee to consider the question of 'Future of Local Administration' in this State. The Committee will also consider the question of future of district boards. The recommendations that may be made by the Sub-Committee will have to be placed before the Cabinet for orders. The decisions of the Cabinet will have to be approved by the Legislature. Necessary further action will then be taken in the matter.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know when the Government will take a decision and will it be possible for them to do that before the next General Elections to the District Boards?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Sub-Committee has already met twice and is still continuing its deliberations. A decision has not yet been taken and as soon as a decision is taken, it will be let known to the House.

SRI A. A. RASHEED : Is it the view of the Government to allow continuance of the District Boards?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : That is still to be decided.

SRI K. VINAYAKAM : ஏற்கெனவே ஜில்லா போர்டுகள் நடத்திவந்த நல்ல காரியங்களான ரோடு போடுவது, ஆசுபத்திரி ஏற்படுத்துவது இவை களெல்லாம் இப்போது கம்யூனிட்டி டெவலப்மெண்டின் கீழ் நடத்திக் கொண்டு வருவதால் ஜில்லா போர்டு வாத்தியார்களை மாற்றுகிற வேலை யைத்தான் செய்து கொண்டு வருகிறது. அதில் "Politics-ம் வந்து சேருகிறது. ஆதலால் இந்த ஜில்லா போர்டை அடியோடு ஒழித்துவிட்டு village administration என்ற முறையில் கொண்டுவருவது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலிக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : பரிசீலிக்கப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், Decentralization of power என்ற முறையில் ஜில்லா போர்டு, தாலுக்கா போர்டு, கிராம அடிப்படையில் அதிகாரிகளை பிரித்துக் கிராம போர்டு போன்றவைகள் மூலம் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனிக்குமா என்று கேட்கிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : நிச்சயமாக கவனிக்கப்படும்.

SRI K. VINAYAKAM : அரசாங்கம் இவ்விதம் கவனித்துக்கொண்டு இருக்கும்பொழுது போர்டு மெம்பர்கள், கூட்டங்களில் பேசும்பொழுது இன்னும் 5 வருடத்திற்கு நீடித்து இருந்து கொள்ளலாம் என்று கூறி வருவதின் காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : ஒவ்வொருவர் களுடைய அபிப்பிராயத்திற்கும் நாங்கள் உத்திரவாதிகளாக மாட்டோம்.

MR. SPEAKER : Questions are over.

## II.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1957–58.

THE HON. SRI C. SUBRAMANIAM :

**சபைத் தலைவர் அவர்களே,**

1957–58-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை இச்சபையின்கண் சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன். சென்ற டிசம்பர் மாதத்தில், முன்னைய சட்ட சபையில் நடப்பு ஆண்டின் தற்காலிக வரவு செலவுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதும் அத்துடன் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதத்திய செலவுக்கு வேண்டிய தொகை மட்டும் மொத்த மான்யமாக (vote on account) பெறப்பட்டதும் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். வருவாய் இனங்களில் ஏற்பட்டிருக்கும் மாறிய போக்கிற்கு ஏற்பவும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் புதிய பணிகளுக்காகவும், குறைந்த ஊதியம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு, சமீபத்தில் கொடுக்கப்பட்ட சில சலுகைகளுக்காகவும், வேண்டிய அதிகத் தொகைகளை அனுசரித்து, வரவு செலவு கணக்கு இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளின் காரணமாக, டிசம்பர் மாதத்தில் நாம் எதிர்பார்த்த பற்றுக்குறையான சுமார் 5 கோடி ரூபாய், மேலும் அதிகரித்து இருக்கவேண்டும். ஆனால் செலவினங்களை எவ்வளவு தூரம் குறைக்க முடியும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் பல துறைகளின் செலவுத் திட்டங்களையும் துருவிப் பரிசீலனை செய்தது. இதன் விளைவாய், பற்றுக்குறையானது வரம்புக்கு மீறாது இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் கண்ட அளவிலேயே, கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

2. சென்ற 1956–57-ம் ஆண்டின் பருவ நிலை சாதகமாக அமைந்து, புயல், வெள்ளம், பஞ்சம் இவைகள் இல்லாமல் இருந்த முக்கிய காரணத்தால் இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைக் கட்டுப்படுத்த முடிந்தது. தென்மேற்குப் பருவ மழை உரிய காலத்தில் ஆரம்பித்து சராசரி 13·3 அங்குலம் பெய்தது. இது சாதாரண அளவைவிட, 9 சதவிகிதம் அதிகம். முக்கியமாக, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை ஆகிய கடலோர மாவட்டங்களில் இப்பருவ மழை அதிகமாய் இருந்தது. சாதாரண அளவைவிட, மழை 30 சதவிகிதம் அதிகமாக இப்பகுதிகளில் பெய்தது மட்டுமல்லாமல், பரவலாகவும் இருந்தது. வடகிழக்குப் பருவ மழையும் அனேகமாக உடன் தொடர்ந்து 20·5 அங்குலம் பெய்தது. இதுவும் சாதாரணமாகப் பெய்யும் அளவைவிட 16 சதவிகிதம் அதிகம். சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மத்திய மாவட்டங்களில், சாதாரண அளவிற்கு மேல் 50 சதவிகிதம் அதிகமாக மழை பெய்தது. ஆனால், நம் ராஜ்யத்தின் தெற்கு முனையில் மட்டும் இரண்டு பருவ மழையும் பொய்த்தன. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோயில், நாங்குனேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய .பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டம் முழுவதிலும் மழை மிகவும் குறைவு. இந்த இடங்களில் உள்ள சில பகுதிகளில், பயிர்கள் எல்லாம் வாடி, மக்களுக்கு ஓரளவு அல்லல் ஏற்பட்டது. இப்போது, இந்தப் பகுதிகளில் பஞ்ச நிவாரண வேலைகள் வேண்டிய அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.





3. பருவ நிலை சாதகமாக அமைந்ததன் காரணமாகவும், முற் **விவசாயம்.**
போக்கான சாகுபடி முறைகளைக் கையாண்டதின் காரணமாகவும், ராஜ்யத்தின் விவசாய உற்பத்தி நிலையைக் காட்டும் குறி எண் 1956-ல் 115 ஆக இருந்தது, 1956–57-ல் 119 ஆக உயர்ந்துள்ளது. (இக்குறி எண் 1947—50 வருஷத்திய எண் 100 என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டது.) முக்கிய பயிர்களைப் பொறுத்தவரை, முன் ஆண்டை விட, சாகுபடி நிலப் பரப்பும், உற்பத்தியும் பெருகி இருப்பதைக் கீழேகண்ட புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டும :—

11-40 a.m.

| | சாகுபடி நிலப் பரப்பு (லட்சக் கணக்கில்) ஏக்கராக்கள். | | உற்பத்தி. | | 1955–56 ஆண்டுக்கு மேல் அதிக சத விகித உற்பத்தி. |
|---|---|---|---|---|---|
| | 1955–56. | 1956–57. | 1955–56. | 1956–57. | |
| நெல் .. .. | 54·9 | 55·4 | 29·6 லட்சம் டன் அரிசி. | 31·0 லட்சம் டன் அரிசி. | 4·7% |
| புன்செய் தானியம். | 55·1 | 56·0 | 14·7 லட்சம் டன். | 15·2 லட்சம் டன். | 3·3% |
| நிலக்கடலை .. | 17·8 | 18·0 | 8·21 லட்சம் டன். | 8·55 லட்சம் டன். | 4·1% |
| பருத்தி .. .. | 11·6 | 12·0 | 3·35 லட்சம் பொதி. | 3·58 லட்சம் பொதி. | 6·9% |
| கரும்பு .. .. | 1·21 | 1·29 | 3·41 லட்சம் டன் வெல்லம். | 3·73 லட்சம் டன் வெல்லம். | 9·4% |

இந்தியா முழுவதிலும் விவசாயப் பொருள்களின் விளைச்சல் பெருகியுள்ளது. 1955–56-ம் ஆண்டில் 268 லட்சம் டன்னாக இருந்த அரிசி விளைச்சல், 1956–57-ம் ஆண்டில் 280 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. கோதுமையும் இதே மாதிரி, 8C லட்சத்திலிருந்து 86 லட்சமாகப் பெருகியுள்ளது. வர்த்தகப் பயிர்களில், பருத்தி 20 சதவிகிதமும், நிலக்கடலை 6 சதவிகிதமும், கரும்பு 17 சதவிகிதமும் உற்பத்தி அதிகரித்து உள்ளது.

4. விளைச்சல் பெருகியதின் காரணமாக, விலைவாசிகள் குறைந்து **விவசாயப் பொருள் களின் விலை வாசிகள்.**
இருக்கவேண்டும். ஆனால், இந்த ஆண்டில், விலை அதிகமாக உயர்ந்துள்ளது. இந்த ஓராண்டில் உணவுப் பொருள்களின் மொத்த விலைக் குறி எண் 377-லிருந்து 482-ஆக உயர்ந்துள்ளது. 1955 ஜூனில், மணங்கு 13 ரூபாயாக விற்ற இரண்டாந்தர அரிசி, 1956 நவம்பரில், 20 ரூபாய்க்குத்தான் கிடைத்தது. நல்ல விளைச்சலுக்குப் பின்பும், மணங்கு 18 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. இன்னும் விலை ஏறுமுகமாகவே தோன்றுகிறது. இது மாதிரியாகவே சோளம், கேழ் வரகு, கம்பு முதலிய புன்செய்த் தானியங்களின் விலை 1955 மே மாதத்தில் மணங்கு 8 ரூபாயாக இருந்து, இப்பொழுது 12-லிருந்து 14 ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கின்றது. 1955 ஏப்ரல் மாதம் நிலக் கடலை விலை மணங்கு 15 ரூபாயாக இருந்தது, 1957 மார்ச் மாதத்தில் 25 ரூபாயாக உயர்ந்தது. பருத்தி விலையும் 15 சதவிகிதம் கூடியுள்ளது. “ கம்போடியா ” பருத்தி இப்பொழுது மணங்கு 100 ரூபாய் அளவில் விலை போகிறது. உணவுப் பற்றுக்குறை இல்லாத காலத்தில், வேளாண்மையே முக்கியத் தொழிலாகவுள்ள ராஜ்யத்தில், விவசாய விளைபொருள்களின் விலை உயர்வு, பொதுவாக

வரவேற்கத் தக்கதாகக்கூட இருக்கலாம்: ஆனால் நாட்டில் பற்றுக் குறையின் காரணமாக, உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தால் அது மிகவும் அபாயகரமானது. நாடு முழுவதையும் எடுத்துக் கொண்டு பார்க்கும்பொழுது அரிசிப் பற்றுக்குறை ஓரளவு உள்ளது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதும் நாளுக்குநாள் கஷ்டமாகிக் கொண்டு வருகின்றது. இந்நிலையில் உணவு நிலைமையை அரசாங்கம் விழிப் புடன் கவனித்து வருகிறது. ஆங்காங்கு, வேண்டிய அளவிற்கு நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

விலை நிலை. 5. விலைவாசிகளின் ஏறுமுகம், அன்னியச் செலாவணிக் குறைவு இவை இரண்டுமே, நாட்டின் பொருளாதார நிலைமையை இன்று பாதிக்கும் பெரும் சிக்கல்கள். மத்திய அரசாங்க நிதியமைச்சர் தம்முடைய வரவு செலவுத் திட்ட அறிக்கையில், இவைகளின் காரணங்களை ஆய்ந்து, நெருக்கடியைத் தீர்க்க நாம் மேற்கொள்ள வேண்டிய முறைகளையும் எடுத்துக்காட்டியுள்ளார். அரசாங்கப் பகுதி, தனியார் பகுதி, ஆகிய இரு துறைகளிலும், ஐந்தாண்டுத் திட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளபடி பெருந்தொழில் அமைப்புகளை நிறுவும் வகையில், நாம் திருப்திகரமான முன்னேற்றம் அடைந்து வருகின்றோம். இதற்காக, பெரிய இயந்திர சாதனங்களை அதிக அளவில், அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டி யிருக்கிறது. இவைகளின் கிரயத்தை அயல்நாட்டுச் செலாவணியில் உடனுக்குடன் கொடுக்க வேண்டியும் இருக்கின்றது. விலையுயர்ந்த இந்த இயந்திர சாதனங்களை வாங்குவதற்கும், அவைகளை உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கும் இடையே, காலதாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இப்பொழுது நிறுவப்படும் மூன்று புதிய எஃகுத் தொழிற்சாலைகள் உற்பத்தியில் ஈடுபடும்பொழுது, நாம் இரும்பும் எஃகும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியமிருக்காது. அதற்கு மாறாக, நாம் இவைகளை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்து அயல்நாட்டுச் செலாவணியை ஓரளவு பெறுவதற்கும் ஏதுவாகலாம். ஆனால், இது நிகழும் வரை, குறைந்த அளவில் உள்ள நம்முடைய அன்னிய நாட்டுச் செலாவணிச் சேமிப்புகள் இன்னும் குறைந்துகொண்டுதான் வரும். எனவே, நாம் அவைகளை, மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கவேண்டும். அரசாங்கப் பகுதி யிலும், தனியார் பகுதியிலும், தொழில் முதலீடு செய்யப்பட்டதன் காரணமாகவும், அரசாங்கம் ஏற்றுள்ள பல்வேறு பணிகளின் காரண மாகவும் பலருக்கு வேலை கிடைத்துள்ளது. மக்களிடையே "வாங்கும் சக்தியும்" ஓரளவு பெருகியுள்ளது. இதனால், உணவுப் பொருள் களையும், மற்ற ஆடை முதலிய தேவைப் பொருள்களையும், வாங்கு பவர்கள் அதிகரித்துள்ளனர். இப்புதிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இந்த நாட்டில் உற்பத்தி இன்னும் பெருகவில்லை. பெரும் தொழில்களை மிகக் குறுகிய காலத்தில் நிறுவ வேண்டும் என்ற நமது உறுதியின் நேர் விளைவாகத்தான், விலைவாசிகளை ஏறுமல் தடுப்பதில் உள்ள தற்போதைய கஷ்டமும் தோன்றி யுள்ளது. ஆகவே, இன்றைய நிலைமையைக் கண்டு நாம் மனம் அயர வேண்டுவதில்லை. விரைவாக, நம் நாடு தொழில்மயமாக வேண்டும் என்பதில் நம்மிடையே மாறுபட்ட கருத்துக்கள் இல்லை.



எனவே, தற்காலிகமாக நிலவும் அசௌகரியங்களை நாம் அமைதி யுடனும் உறுதியுடனும் ஏற்றுக்கொள்ளுவது அவசியம். புதிதாக நிறுவப்படும் தொழில்கள் அனைத்தும் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டு காலம் ஆகலாம். அதுவரை, நிலைமை கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இவ்விடைக்காலத்தில், இக் கஷ்டங்களைக் குறைக்க நாம் ஆவன செய்யவேண்டும்.

6. இந்த நிலைமையில், மாநில அரசாங்கத்தார் உடனடியாகச் செய்யவேண்டியது, ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி வசதியைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகப்படுத்து வதேயாகும். சாகுபடி செய்பவர்களுக்கு, உயர்தர விதைகளை வழங்குவதற்காக, 360 விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவது விவசாயத் திட்டத்தில் முக்கியமான அம்சம். ஒவ்வொரு தேசிய நலப் பகுதியிலும், 25 எக்கர் பண்ணை ஒன்று நிறுவப்படும். இப் பண்ணையில் உற்பத்தியாகும் விதைகளை இன்னும் பெரிய அளவில் பெருக்கி அவ்வட்டாரத்தின் தேவை முழுவதையும் பூர்த்தி செய்யலாம். போன ஆண்டு, 38 விதைப் பண்ணைகள் திறக்கப் பட்டன. இப்பொழுது இத்திட்டத்தை இன்னும் விரைவில் நிறை வேற்ற முடிவு செய்துள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில், 136 பண்ணைகள் இவ்வாண்டிலேயே தொடங்குவதற்காக, 49 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிற்குள் இந்தத் திட்டம் முழுவதும் நிறைவேறும் என்று எண்ணுகிறோம். அப்பொழுது, நம் மாநிலம் முழுவதிலும், குறித்த காலத்திற்குள் வெகு முன்னதாகவே, நல்ல விதைகளை எல்லோருக்கும் அளிக்க முடியும். மக்கள் ரசாயன உரங்களின் பயனை உணர்ந்து, அவைகளை நாளுக்குநாள் அதிகமாக உபயோகித்து வருகின்றனர். 1956–57-ம் ஆண்டில், சுமார் 120,000 டன் அமோனியம் சல்பேட் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில், இது 140,000 டன்னாக உயர வழி வகுக்கப்பட்டிருக்கிறது. உரம் வாங்க, குறுகிய தவணையில் வழக்கம் போல் கடன் கொடுக்கப்படும். இதற்காக, சுமார் 70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தி ஆராய்ச்சிக்கும் பெருக்கத்துக்கு மாக 15 லட்ச ரூபாயும், பூச்சிகளையும் நோய்களையும் தடுக்கும் முறை களுக்காக 4·6 லட்ச ரூபாயும், நகரப்புறங்களில் தயாரிக்கப்படும் கலப்பு உரத்திற்காக 5·5 லட்ச ரூபாயும், தோட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக 5·36 லட்ச ரூபாயும், விவசாயக் கல்லூரியின் தரத்தை உயர்த்த 5·96 லட்ச ரூபாயும், பசுந்தழை உர உற்பத்திக்கு வேண்டிய வித்து வழங்க 1·19 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையின் ஏனைய திட்டங்களுக்கும், போதிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விவசாய வளர்ச்சி.

11.45 a.m.

7. நீர்ப் பாசனத்திற்காக, சிறு பாசனத் திட்டங்களும் வடிமுனைத் திட்டமும் 55 லட்ச ரூபாய் செலவில் இந்த ஆண்டு தொடர்ந்து நடக்கும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நன்கு முன்னேறி வருகின்றன. கீழ் பவானித் திட்டம் முடிவடைந்துவிட்டது. மணிமுத்தாறு, மேட்டூர் கால்வாய் திட்டங்களில் சிறு அளவிலேயே வேலைகள் இன்னும் எஞ்சியுள்ளன. அமராவதி, கிருஷ்ணகிரி, சாத்தனூர் தேக்கங்களும் முடியும் தருவாயில் இருக்கின்றன. அவை

நீர்ப்பாசனம்

களில், வருகிற விவசாயப் பருவத்தில் உதவ தண்ணீர் கொஞ்சம் தேக்க முடியுமென் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகஸ்டு 15-ம் தேதி முதல் கிருஷ்ணகிரித் தேக்கத்திலிருந்தும், செப்டம்பர் 15-ம் தேதி முதல் அமராவதித் தேக்கத்திலிருந்தும், அக்டோபர் 2-ம் தேதி முதல் சாத்தனூர் தேக்கத்திலிருந்தும் பாசனத்திற்காகத் தண்ணீர்விட ஏற்பாடாகி உள்ளது. கட்டளை, புள்ளம்பாடிக் கால்வாய் வேலைகள் துரிதப்படுத்தப்படும். அவைகள் ஒவ்வொன்றுக்கும் 15 லட்ச ரூபாய் வீதம் இந்த வரவு செலவுத் திட்டத்தில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனப் பெருந்திட்டங்களில் இன்னும் தொடங்க வேண்டிய வைகள், தென்னாற்காடு, புதுச்சேரி இவைகளுக்கான வீடூர் தேக்கமும், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்பும் திட்டங்களுமே. ஆனால், இவ்விரு திட்டங்களுக்கும் மற்ற ராஜ்யங் களுடனும் மத்திய அரசாங்கத்துடனும் ஒரு உடன்பாடு ஏற்படுவது அவசியம். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை 234 லட்ச ரூபாய்.

நிலவளப் பாதுகாப்பு.

8. நிலங்களின் மண் வளத்தைப் பாதுகாக்க நாம் இந்த ஆண்டில் ஒரு புதிய முறையிலே அதிக அளவில், அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக 32 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில், இத்துறையில் சிறிதளவு வேலை ஏற்கனவே நடந்தேறியிருக்கிறது. இது மேலும் தொடர்ந்து நடக்கும். கோயம்புத்தூரில், 10,000 எக்கரா, சேலத்தில் 2,000 எக்கரா, திருச்சிராப்பள்ளியில் 2,500 எக்கரா, செங்கற்பட்டில் 2,200 எக்கரா, மதுரையில் 250 எக்கரா—இவ்வாறு இத்திட்டம் சமவெளி நிலங்களுக்கும் பரவும். இந்தப் பணிகள் முதலில் அரசாங்கச் செலவில் நிறைவேற்றப்படுமாயினும், பின்னர், இதனால் பயன் பெற்றவர்களிடமிருந்து எளிய தவணைகளில், செலவாகும் தொகையில் முக்கால் பங்கைத் திருப்பி வசூலிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

காடுகள்.

9. ராஜ்ய சீரமைப்பின் விளைவாக நம் ராஜ்யத்தின் காட்டு வளம் மிகவும் குறைந்துள்ளது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். சாதி மரங்களைக் கொண்ட காட்டுப் பகுதிகள் கேரளம், மைசூர் ராஜ்யங்களுடன் இப்பொழுது இணைக்கப்பட்டுவிட்டன. ஆகையால், இப்போது நம்முடைய பகுதியாக எஞ்சி நிற்கும் தரங் குறைந்த காட்டுப் பகுதிகளுக்கு வளம் ஊட்ட, விசேஷ முயற்சிகள் எடுக்கவேண்டும். காடுகளின் பெருக்கத்திற்காக, நம் திட்டத்தில் பல பயனுள்ள பணிகளை வகுத்துள்ளோம். அந்தப் பணிகளை நிறை வேற்றும் வகையில், நல்ல பலன்தரும் தொடக்கமும் ஏற்கனவே ஏற்பட்டுள்ளது. காட்டு இலாகா நிர்வாக வசதிக்காக, 18 நிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு, புதிய திட்டங்களை விரைவில் நிறைவேற்றவும், காடுகளை நன்கு பாதுகாக்கவும் பெரிதும் உதவும். இதற்காக வரவு செலவுத் திட்டத்தில் முக்கியமாக ஒதுக்கப் பட்டுள்ள நிதி விவரம் :—

பஞ்சாயத்து, பழைய ஜமீன் காடுகளின் மறு வளர்ச்சிக்கு 12·5 லட்ச ரூபாய் ; முந்திரி சாகுபடிக்கு 4·4 லட்ச ரூபாய் ; தேர்தல் காலங்களில் முந்திரி தேய்கிறது என்று சொன்னவர்களுக்கு இது



சிறிது ஆறுதல் அளிக்கும் என்று நினைக்கிறேன் ; சவுக்கு மரத் தோப்பிற்கு 3 லட்ச ரூபாய் ; " புளுகம் " மரம், " வாட்டில் " மரம், நெருப்புக்குச்சி முதலியன செய்யப் பயன் படும் மென்மரங்கள்—இவை போன்ற தொழில் ரக மரங்களுக்கு 3·3 லட்ச ரூபாய் ; ஆற்றோரங்களில் தேக்கு, நூக்க மரம் இவைகள் போன்ற வர்த்தக ரக மரங்களுக்கு 1·6 லட்ச ரூபாய் ; வனவிலங்குகளின் பாது காப்பிற்காக 1·2 லட்ச ரூபாய் ; காட்டுப் பாதைகள் அமைப்புக்காக 2·5 லட்ச ரூபாய்.

10. கால்நடைப் பராமரிப்பில், முக்கியமான அபிவிருத்திப் பணி, கேந்திர கிராமத் திட்டமே (Key Village Scheme). இத்திட்டத்தின் கீழ், சாதாரண கிராமக் காளைகளைக் காயடித்துவிட்டு, பொறுக்கி எடுக்கப்படும் இடங்களில், நல்ல ரகப் பொலி காளைகள் வைக்கப் படும். இந்த இடங்களில், செயற்கைக் கரு முறை பின்பற்றப்படும். இங்கு, பிறக்கும் சேங்கன்றுகளின் பராமரிப்புக்காக மான்யம் அளிக் கப்படும். இப்படி வளர்க்கப்பட்ட காளைகளை அரசாங்கத்தார் வாங்கி, மற்ற நலப்பகுதிகளில் உபயோகப்படுத்துவார்கள். இதனால் கேந்திரக் கிராமங்கள், நல்ல காளைகளை அண்டை அயல் இடங்களில் வழங்க, மாட்டுப்பண்ணை போன்ற ஒரு அடிப்படை நிறுவனமாக விளங்கும். இதுவும், இதுபோன்ற பிற பணிகளுக்காகவும், இந்த வரவு செலவுத் திட்டத்தில், 16 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில், வகுக்கப்பட்டுள்ள சென்னைநகரப் பால் வழங்கும் திட்டமும், இந்த ஆண்டில் தொடங்கப்படும். சென்னை நகரத்திற்கு அண்மையிலுள்ள ஒரு பண்ணையில், நாலாயிரம் கறவை மாடுகள் பேணி வளர்க்கப்படும். இப்பண்ணையில் சேகரித்த பாலை, பம்பாய் நகரத்து " ஆரே " பால் திட்ட அடிப்படையில், நகரத்தில் வழங்கப்படும். சென்னை நகராண்மைக் கழகம் இப்பொழுது வீணாகப் போகும் கழிவு நீரை இப்பண்ணைக்குள் செலுத்தி, பண்ணைக்குத் தேவையான தீவனங்களை வளர்க்க ஏற்பாடு செய்யும். பால் சங்கங்கள் இப்பொழுது செய்யும் சில்லறை விநியோகம் இப்புதிய திட்டத்துடன் இணைக்கப்படும். சுத்தமாக பாலைக் கறக்கவும் வழங்கவும் இது வழியாகும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் இவ்வகைத் திட்டங்களுக்காக, 28 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கோழி வளர்ச்சியிலும் போதிய கவனம் செலுத்தப்படுகின்றது. வெளி நாடுகளிலிருந்து சாதிக் குஞ்சுகளை இறக்குமதி செய்ய ஒரு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கேந்திரக் கிராமத்திலும், புதிய கோழிப் பண்ணைகள் இணைக்கப்பட்டுள்ளன. உரிய காலத்தில், ஒவ்வொரு தேசிய நலப்பரப்பு வட்டாரத்திலும் ஒரு பண்ணை இருக்கும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் இவைகளுக்காக 3·3 லட்ச ரூபாய் உள்ளது.

கால்நடை பராமரிப்பு.

11. ஆறு, குளம், கடல் இவைகளில் மீன் பிடிப்புத் தொழில் அபிவிருத்திக்காகப் பலவகைத் திட்டங்கள் 14 லட்ச ரூபாய் செலவில் தொடர்ந்து நடக்கும். " பாப்லோ." என்ற விசைப்படகுகளை உபயோகிக்கும் பழக்கம் பரவி வருகிறது. இவைகளின் உதவியால், பரதவர்கள் அலைகடலில் வெகுதூரம் உட்சென்று, பெரும் அளவில் மீன் பிடிக்கின்றனர். இதற்காக, இரண்டரை லட்ச ரூபாய் இந்த

மீன் பிடிப்பு.

ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒன்றரை லட்ச ரூபாய் செலவில், "நைலான்" வலைகள் விநியோகிக்கப்படும். இவைகளுடன், உப்பிற்கு மான்யம் அளிக்கும் திட்டமும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மீன் உணவு, எரு, இவைகளின் உற்பத்திக்காக ஒரு திட்டமும் நடத்தப்படும். ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களில் உண்டாகும் திட்டுகளை வெட்டி மீன்பிடித் துறைகளை ஏற்படுத்தவும் எண்ணியுள்ளோம். பாதுகாப்புள்ள இத்துறைமுகங்களில் இருந்துகொண்டு, பரதவர்கள் தங்கள் தொழிலை நன்கு செய்யலாம்.

தேசிய நலப் பரப்புத் திட்டம்.

12. சமுதாய நலத் திட்டமும் தேசிய நலப் பரப்புத் திட்டமும் சென்ற ஆண்டின் முடிவு வரை 91 வட்டாரங்களில் அமுலில் இருந்தன. இந் நிதி ஆண்டின் தொடக்கத்தில், 19 வட்டாரங்கள் புதிதாக எடுத்துக்கொள்ளப்பட்டன. நடப்பு ஆண்டிற்குள் இன்னும் 23 வட்டாரங்களில் இத்திட்டங்களை மேலும் பரப்ப எண்ணியுள்ளோம். அப்பொழுது, இத்திட்டத்தின் கீழ், 133 வட்டாரங்கள் இருக்கும். இதற்காக வரவு செலவுத் திட்டத்திலுள்ள தொகை மூன்று கோடியே எழுபது லட்ச ரூபாய். விநோபா அடிகளால் தொடங்கப்பட்ட "கிராம தான இயக்கம்" கிராம வாழ்க்கையில் ஒரு புதிய புரட்சித் திட்டம். தென் மாவட்டங்களில், சிறப்பாக மதுரை மாவட்டத்தில், இந்த இயக்கத்திற்குப் பேராதரவு இருக்கிறது. இந்த கிராமங்களை நன்கு நிறுவவும், அபிவிருத்தி செய்யவும், கூட்டுறவு முறையில் ஒரு வழி காண ஆய்ந்து வருகிறோம். இதனிடையில், இந்தக் கிராமங்களிலுள்ள கிராமதான நிலங்களில் குடியானவர்கள் மும்முரமாகச் சாகுபடி செய்ய, இருபது லட்ச ரூபாய் கடனுக அளிக்க, இந்த வரவு செலவுத் திட்டத்தில் இடமுள்ளது.

மின்சாரம்.

13. இதுவரை, ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கிய மின்சாரத் திட்டங்கள் நன்கு முன்னேறி வந்துள்ளன. குந்தா, பெரியாறு மின்சாரத் திட்டங்களும், சென்னை மின்சார உற்பத்தி நிலைய விஸ்தரிப்பின் மூன்றும் பகுதியும் குறிப்பாக முன்னேறியுள்ளன. இந்த வரவு செலவுத் திட்டத்தில், மின்சார அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை, பதினேரு கோடியே அறுபத்திரண்டு லட்ச ரூபாயாகும். சென்னை மின்சார உற்பத்தி நிலைய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், 30,000 கிலோவாட் உற்பத்தி செய்யும் சாதனம், இவ்வாண்டு டிசம்பர் மாத வாக்கில் உற்பத்தியில் ஈடுபடலாம். அதனுல், முதுவேனிற் காலத்தில், நம் ராஜ்ய மின்சார இணைப்பில் எழும் மின்சார ச்க்திக் குறைபாடு நீங்கும். கிராமாந்தர மின்சாரத் திட்டங்களின் கீழ் 1,300 கிராமங்களுக்கும். 13,000

11-55 a.m. தண்ணீர் இறைப்பு குழாய்களுக்கும், சென்ற ஆண்டில் மின்சாரம் வழங்கப்பட்டது. இது நம் திட்டத்தில் கண்ட இலக்குக்கு மிகவும் அதிகப்பட்டது. நடப்பு ஆண்டிலும், இந்த அபிவிருத்தி வேகம் குறையாது இருக்கும் வண்ணம் திட்டமிட்டுள்ளோம். இதற்கு வேண்டிய தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனுல், இப்பொழுது நிலவும், அன்னியச் செலாவணி, எஃகு, சிமிட்டி, இவைகளின் பற்றுக்குறை, நம்முடைய முன்னேற்றத்தை ஒரு வேளை தடை செய்யலாம். ஆயினும், நல்ல வேளையாக, "குந்தா" த் திட்டத்திற்கு வேண்டிய பெரிய இயந்திர சாதனங்களை "கனடா"





அரசாங்கத்தார் தங்களுடைய அயல்நாட்டு உதவித் திட்டத்தின் கீழ் கொடுத்து உதவியுள்ளார்கள். இது காரணமாக, இந்தத் திட்டம், அதிக அளவில் தடைபடாது என எதிர்பார்க்கலாம். இந்தத் திட்டத்தைக் குறித்த காலத்தில் நிறைவேற்ற எல்லா முயற்சிகளும் செய்யப்படும். ஆனுல், இப்பொழுது நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலைமையை மனதில் கொண்டு, குறைபாடுகள் ஏற்படலாம் என்பதையும் நாம் எதிர்பார்க்க வேண்டும். இந்த வரவுசெலவுத் திட்டத்தில் முழு ஆண்டிற்கும் அரசாங்கமே நேரடியாகச் செலவு செய்ய வகை செய்துள்ள போதிலும், "மின்சார போர்டு" ஒன்று நிறுவப்பட்டவுடன், இத்துறையை நடத்தும் பொறுப்பு போர்டின் கைக்கு மாறும். அப்பொழுது, திட்டங்களுக்கு வேண்டிய தொகைகளை, அரசாங்கத்தினர் இந்தச் சட்ட மன்றம் அளிக்கும் தொகையிலிருந்து போர்டுக்குக் கடனுகக் கொடுக்க வேண்டியிருக்கும்.

பழுப்பு நிலக்கரித் திட்டம்.

14. சென்ற மாதம் பாரதப் பிரதமர், பழுப்பு நிலக்கரித் திட்டத்தைத் துவக்கியது தென்னுட்டில் பெருந் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். நமக்குள்ள குறைந்த நிதி வசதிகளினின்றும், சுமார் ஒரு கோடி ரூபாய் சென்ற சில ஆண்டுகளில் இத்திட்டத்தின் ஆராய்ச்சிக்காக செலவழித்ததின் பலன், உடனடியாக ஏற்பட்டதைப் பற்றி நாம் சிறிது மகிழ்ச்சி கொள்ளலாம். எழுபது கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டம் நம் நாட்டின் தென் பகுதியின் தொழில், பொருளாதார நிலைமையை முற்றிலும் மாற்றியமைத்துவிடும். அரசாங்கச் செலவில் 1960-ம் ஆண்டிற்குள்ளாக கீழ்க்கண்ட திட்டங்களை முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது :—

(1) இரண்டு லட்சம் கிலோவாட் அளவில் மின்சாரம் அளிக்கும் நிறுவனம்; (2) ஆண்டுக்கு, 70,000 டன் அளவில், நைட்ரஜன் அடங்கிய ரசாயன எரு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை; (3) மூன்றரை லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை மற்றைய தொழில்களில் இயக்கும் எரிபொருள்களாக மாற்றும் நிறுவனம். இவ்வாறு விலை மலிவான எரிபொருள்களும், மின்சார சக்தியும் தடையின்றிக் கிடைக்கும்போது, நிலக்கரித் திட்டத்தில் கிடைக்கும் உபபொருள்களைக் கொண்டு, வண்ணக் கலவைகள், வண்ணப் பூச்சுகள், செயற்கை எண்ணெய் வகைகள், "இன்சுலேட்டர்கள்", பீங்கான் சாமான்கள் முதலியவைகளை உண்டாக்கப் புதிய தொழிற்சாலைகள் நிறுவப் பெரும் வாய்ப்புகள் உண்டாகும். தனியார் துறையினர் இதை நன்கு பயன்படுத்திக் கொள்ள முன்வருவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

பெருந் தொழில்கள்

15. பெருந்தொழில் வகையில், சேலத்தில் கிடைக்கும் அலுமினியக் கனிப் பொருளைப் (Bauxite) பயன்படுத்தி வருடம் ஒன்றுக்கு 10,000 டன் அளவில் "அலுமினியம்" உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலையை மேட்டூரில் நிறுவுவது என்று நிச்சயமாகியுள்ளது. "தேசியத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்" சேலத்திலுள்ள மூலக்கனிப் பொருள்களைக்கொண்டு, இரும்பு உருக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜம்ஷட்பூரில் இதற்கு வேண்டிய பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையில் தனியார் பகுதியில் புதிய முறையில்

**(low-shaft furnace method)**, தேனிரும்பு **(pig-iron)** தயாரிக்கும் வண்ணம், ஒரு தொழிற்சாலை அமைக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. புதிதாக பாபநாசத்தில் காகித உற்பத்தி ஆலைக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மேட்டூரிலும், இவ்வாறே மற்றொரு ஆலை அமைக்கும் விஷயம் ஆலோசனையில் இருந்துவருகிறது. நீலகிரி மாவட்டத்திலுள்ள "யூகலிப்டஸ்", "வாட்டில்", மரங்களைப் பயன்படுத்தி "ரேயான்" செயற்கைப் பட்டு நூல் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை பவானிசாகரில் நிறுவப்படலாம். ராமநாதபுரம் மாவட்டத்தில், ஒரு புதிய சிமிட்டித் தொழிற்சாலையும், அம்பத்தூரில் ரப்பர் டயர் தொழிற்சாலையும் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலியில் புதிய வெங்கார உப்பு **(caustic soda)** உற்பத்திச் சாலை ஒன்று நிறுவும் வேலை முன்னேறி வருகின்றது. மேட்டூரில் உள்ள தொழிற்சாலையின் உற்பத்தி அளவும் பெருக்கப்பட்டு வருகிறது. மீட்டர்கேஜ் ரயில் பெட்டிகளை இணைக்கும் தொழிற்சாலை ஒன்று எற்கனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. பிராட்கேஜ் பெட்டிகளுக்கான தொழிற்சாலை ஒன்றும் விரைவில் நிறுவப்படலாம். ஆவடியில் உள்ள எஃகுக் குழாய்களை செய்யும் தொழிற்சாலை இப்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. டி.ஐ. சைக்கிள் ஸ்தாபனம் ஆண்டுக்கு இரண்டு லட்சத்திலிருந்து ஐந்து லட்சமாக தன் சைக்கிள் உற்பத்தியைப் பெருக்க அதன் அளவை அதிகரிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் யோசனை கூறியுள்ளது. அது இப்போது பரிசீலனையில் இருக்கிறது. பதின்மூன்று லட்சம் புதுக் கதிர்கள் அண்மையில் அனுமதிக்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபட இருப்பதால், நூல் உற்பத்தி திருப்திகரமாக முன்னேற்றம் அடைந்து வருகின்றது. பல புதிய சர்க்கரைத் தொழிற்சாலைகளும் நிறுவப்படுகின்றன. இவைகள் பெரும்பாலும் கூட்டுறவு முறையில் இருக்கும். மூலதனத்தில் அரசாங்கத்தாரும் பங்கு கொள்ள, இந்த வரவு செலவுத் திட்டத்தில் 15 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய முயற்சிகளுக்கு அன்னியச் செலாவணி போதிய அளவு கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. எனவே வெளிநாடுகளிலிருந்து நமக்கு இயந்திர சாதனங்கள் அனுப்புபவர்களுக்குத் தவணையில் கிரயத்தைக் கொடுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன.

சிறு ரகத் தொழில்கள்.

16. அரசாங்கத்தாரும் தனியாரும் செய்யும் முயற்சிகளில் பயன்படும் வகையில் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி, உற்பத்தி, பயிற்சி ஆகிய இரண்டையும் ஒருங்கே அளிக்கும் பல

12 noon.

நிலையங்களை நிறுவுவதே சிறு ரகக் கைத்தொழில் துறையில் அரசாங்கத்தாரின் கொள்கை. இவ்வகையில் பெரம்பூரிலும், திருவல்லிக்கேணியிலும் அமைக்கப்பட்ட மிதியடி உற்பத்திச்சாலையும், பெரம்பூரில் கையால் செய்யும் தீப்பெட்டிச் சாலையும், சேரன்மாதேவி, கிருஷ்ணகிரி ஆகிய இரு இடங்களில் மாதிரித் தச்சுப்பட்டறை இரண்டும், வால்டாக்ஸ் ரோடிலுள்ள தகடு செப்பனிடும் சாலையும் எற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. பூட்டுத் தொழில், பருத்திநூல் ஆலைக்குரிய சிறு கருவிகள், ஹரிகேன் விளக்குகள், மின்சார சாமான்கள், மருத்துவக் கருவிகள், விஞ்ஞான சோதனைச் சாதனங்கள், பித்தளை, இரும்பு, பீங்கான், இவைகளினால் ஆன சாமான்கள், விளையாட்டுச் சாமான்கள், விவசாயக் கருவிகள், இவைகளுக்காக மாநிலத்தில் பல பாகங்களில் நிலையங்கள் இப்பொழுது அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிற்குள் இவை திறக்கப்படும். ஒரு குறிப்பிட்ட தொழில் செய்யும் தொழிலாளர்கள் சேர்ந்து வாழும் இடங்களில் எல்லாம், தொழில் கூட்டுறவு அமைப்புகள் நிறுவப்படுகின்றன. சிறு ரகத் தொழில்களுக்கு உதவும் வகையில் 25 லட்ச ரூபாய் இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ளது. கிண்டி, விருதுநகர், ஈரோடு ஆகிய இவ்விடங்களில் தொழிற்கூடங்கள் **(Industrial Estates)** ஏற்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாண்டில், கிண்டியில் 30 தொழிற்சாலைப் பகுதிகள் பூர்த்தியாகலாம். சிறு ரகத் தொழில்களுக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் வேண்டப்படும் மொத்த மான்யம் 112 லட்ச ரூபாய்.



17. கிராமக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்காகவும் கணிசமான தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தோல் பதனிடும் வேலைக்கு 5 லட்ச ரூபாய்; தேனீ வளர்ப்பிற்காக 4 லட்ச ரூபாய்; பாண்டத் தொழிலுக்கு 2 லட்ச ரூபாய்; பனை வெல்லத் தொழிலுக்கு 2·6 லட்ச ரூபாய்; தீப்பெட்டிகளை குடிசைத் தொழில் மூலம் உற்பத்தி செய்ய 7 லட்ச ரூபாய்; விதைகளினின்று எண்ணெய் ஆட்டுவதற்கு 1·8 லட்ச ரூபாய்; கிராமக் கைத்தொழில்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உதவ 4 லட்ச ரூபாய்—இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ளது. ஜரிகைப்பூவேலை, பீங்கான் சாமான்கள், வேலைப்பாடுள்ள நூதன தோல் சாமான்கள், ஜமக்காளங்கள், துணிப்பொம்மைகள், மரக் கடைசல் வேலைகள், இதுபோன்ற பல கைத்திறன் வேலைகளுக்காக 10 லட்ச ரூபாய் மான்யம் வேண்டப்படுகிறது. நாட்டுப்புறப் பகுதியில், உடனடியாக வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன் கதர்த் திட்டத்தை விரிவுபடுத்தி வருகிறோம். அம்பர் சர்க்கா திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இவ்வாண்டு, 12,000 அம்பர் சர்க்காக்களை இயக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வருஷத்தில், 125 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள கதர் உற்பத்தியாகலாம். வரவு செலவுத் திட்டத்தில், இவ்வகையில் நிகர செலவுக்காக 35 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராமக் கைத் தொழில்கள்.

18. கைத்தறித் தொழில் அபிவிருத்தியில் அரசாங்கத்தினர் எப்பொழுதும் போல் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். மூலதனத்திற்காக கடன் கொடுத்தல், விற்பனை விலையில் தள்ளுபடி, விற்பனை நிலையங்கள் நிறுவுதல், இவை போன்ற நடைமுறையிலுள்ள திட்டங்கள் தொடர்ந்து நடத்தப்படும். நெசவாளர்க்குத் தட்டில்லாமல் நூல் கிடைப்பதற்காகத் திருநெல்வேலியிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், கூட்டுறவு முறையில் இரு நூற்பு ஆலைகளை நிறுவ உத்தேசித்துள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில், கைத்தறி நெசவாளர்களுக்காக, ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 146 லட்ச ரூபாய். இத்தொழிலில் இப்பொழுது உள்ள திருப்திகரமான முன்னேற்றம் மேலும் நீடித்து நிற்கும் என்று நம்புகிறோம்.

கைத்தறி.

19. தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்ய அரசாங்கத்தார் உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் தனியார் துறைக்கு $12\frac{1}{2}$ லட்ச ரூபாயும், கூட்டுறவுச் சங்கங்களுக்காக 3 லட்ச ரூபாயும் ஒதுக்கப்

குடியிருப்பு வசதிகள்.

பட்டுள்ளன. குறைந்த சம்பள வகுப்பினர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யும் திட்டத்திற்காக, சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டுக்கும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் 15 லட்ச ரூபாய் கடனுக அளிக்கப்படும். சென்னை நகரில் சேரிப் பகுதிகளைத் திருத்துவதற்காக 20 லட்ச ரூபாய் தனியே ஒதுக்கப்பட்டுள்ளது. 1955-ம் ஆண்டில் தொடங்கிய சென்னை ராஜ்ய புயல் நிவாரண நிதியில் இப்பொழுது மிஞ்சியிருக்கும் 20 லட்ச ரூபாய், புயலால் சேதமடைந்த ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் கிராமப்புறங்களில் வீடு கட்டிக்கொடுக்கச் செலவிடப்படும். போலீஸ் சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்வதற்கான திட்டமும் நன்கு முன்னேறி வருகிறது. அதற்காக, இந்த வரவு செலவுத் திட்டத்தில் 80 லட்ச ரூபாய் மான்யம் வேண்டப்படுகிறது. இவையல்லாது, வீடு கட்டும் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கவும் சுமார் 37 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

20. இந்த ஆண்டிலே, 102 லட்ச ரூபாய் செலவில் புதிய ரோடுகள் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மத்திய ரோடு நிதியிலிருந்து இந்த அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகையைக் கொண்டு 103 லட்ச ரூபாய் செலவில் 58 வேறு பல புதுப்பணிகளும் தொடங்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தென் பிராந்திய நெடுஞ்சாலையில் காவிரியாற்றின் மீது 40 லட்ச ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டுவருகிறது. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகக் கூடிய பாம்பன் பாலத்தைப் பற்றிய பரிசீலனை மும்முரமாக நடந்து வருகின்றது. மாவட்ட மன்றங்களின் செலவைச் சிறிதளவு குறைக்கும் வகையில் 470 மைல் அளவுள்ள பெரிய மாவட்டச் சாலைகளை அரசாங்கத்தார் தங்களின் நேரடிக் கண்காணிப்பில் எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

21. மருத்துவத் துறையில் இப்பொழுது கிராமப் பகுதிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து புதிய திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. நூற்று நாற்பது பிரதம ஆரோக்கிய நிலையங்களைத் திறக்க ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வகையில் கடந்த ஆண்டில் 28 நிலையங்கள் திறக்கப்பட்டன. இன்னும் 28 நிலையங்கள் இந்த நடப்பு ஆண்டில் திறக்கப்படும். இதற்காக 18·6 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராம மருத்துவ நிலையங்கள் தாலூக்கா ஆஸ்பத்திரிகளுடன் இணைக்கப்பட்டு இயங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இப்பிரதம நிலையங்கள் நன்கு இயங்குவதற்கு தாலூக்கா ஆஸ்பத்திரிகளைப் போதிய அளவு அபிவிருத்தி செய்வது அவசியமாகிறது. எனவே, இம்முறையில் 22 ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்ய 11·3 லட்ச ரூபாய் மான்யம் வேண்டப்படுகிறது. மேலும், நிலக்கோட்டை, செஞ்சி, ராமநாதபுர மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், ஓமலூர், குளித்தலை ஆகிய இடங்களிலுள்ள ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரிகளை அரசாங்கத்தார் எடுத்துக்கொண்டு நேரடியாகப் பராமரிப்பார்கள். பாளையங்கோட்டையில் 23 லட்ச ரூபாய் செலவில் நிறுவ இருக்கும் ஜில்லா ஆஸ்பத்திரிக்கு வேண்டிய புதிய கட்டிட வேலையும் இந்த ஆண்டிலேயே தொடங்கும். இதற்காக ஒரு சிறு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, கடலூர், திருச்சிராப்பள்ளி,



கோயம்புத்தூர், வேலூர், ஆகிய இவ்விடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் 14·9 லட்ச ரூபாய் செலவில் அபிவிருத்தி வேலைகள் இந்த ஆண்டில் செய்யப்படும். மருத்துவக் கல்விக்குப் பயன்படும் ஆஸ்பத்திரிகளின் தேவைகளைக் கவனித்து, மதுரை மருத்துவக் கல்லூரிக்காக 29·8 லட்ச ரூபாய் ; சென்னை மருத்துவக் கல்லூரிக்காக 11·5 லட்ச ரூபாய் ; ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்காக 3·4 லட்ச ரூபாய் ; மான்யமாக இவ்வகையில் வேண்டப்படுகிறது. தற்போது நடந்துவரும் பயிற்சி அளவிற்கு மேலாக 200 தாதிகள், 200 மருந்து வழங்குபவர் (Pharmacist), 200 தொழில் நுட்ப உதவியாளர், 200 பிரசவ உதவியாளர்கள், 30 கண் வைத்தியர்கள், இவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் வசதி செய்யப்படும்.

22. குடி தண்ணீர் வழங்கும் வகையில் நமக்கு வேண்டிய பொது
குழாய்களைப் பெறுவதில் தடைகள் சில இருந்த போதிலும், 15 சுகாதாரம்.
நகராட்சிப் பகுதிகளுக்குப் பயன்படும் நகரக் குடி தண்ணீர் திட்டங்கள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன. இதற்காக இந்த ஆண்டில் 93 லட்ச ரூபாய் செலவிட உத்தேசம். நாற்பது லட்ச ரூபாய் செலவில், முக்கியமாக கிணறு வெட்டுவதன் மூலமாக கிராமத் தண்ணீர் வினியோகத் திட்ட வேலையும், டெல்டாப் பகுதிகளுக்கு 20·5 லட்ச ரூபாய் செலவில் வகுத்த, பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்ட வேலையும் தொடர்ந்து நடந்து வருகின்றன. மற்ற ஆரோக்கியவசதித் திட்டங்களில், தாய்சேய் நலத்திற்காக 4·7 லட்ச ரூபாய் செலவில் திறக்கப்படும் 96 புதிய பிரசவ, சேய் நல விடுதிகளும் 4·1 லட்ச ரூபாய் செலவில், திறக்கப்படும் 79 புதிய "குடும்பக் கட்டுப்பாடு" நிலையங்களும் அடங்கியுள்ளன.

23. சட்டசபைக் குழு ஒன்று கல்விக் கொள்கைகளைப் பற்றி கல்வி.
செய்திருக்கும் முடிவுகளை அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது. இதற்கிடையில் புதிய வகுப்புகளைத் துவக்குவதற்காக 20 லட்ச ரூபாயும் தொடக்கப் பள்ளிகளை ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்ற 10 லட்ச ரூபாயும், 23 சாதாரணப் பயிற்சிப் பள்ளிகளை ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்ற 23 லட்ச ரூபாயும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ஒரு லட்சத்திற்கு மேல் புதிய மாணவர்களைச் சேர்த்துள்ளோம். இதே அளவில் இந்த ஆண்டும் பெருக்கம் ஏற்படும். ஆரம்பப் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு அளிப்பதற்காக 10 லட்ச ரூபாய் மான்யம் கேட்கப்படுவதையும் இந்த சமயத்தில் குறிப்பாக எடுத்துக் காட்ட வேண்டும். அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவின் குறிக்கோளை, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றுவதற்கு இந்தச் சலுகை மிக அவசியமாக இருக்கும் என்று சட்டசபைக் கல்விக் குழுவினர் யோசனை கூறியுள்ளார்கள். இந்த ஆண்டு இது துவக்கப்பட இருக்கின்றது. பதிவு செய்யப்படாத அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய உயர்வு பொதுவாகப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த வகையில் 132 லட்ச ரூபாய் செலவிடப்படுகிறது.

24. தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட இரண்டாம் தொழிற்
ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானால் கல்வி.

தொழிற் கல்வியில் (**Technical Education**) நாம் மிக்க நாட்டம் செலுத்துவது மிகவும் அவசியம். இந்திய அரசாங்கத்தார் இப்பொழுது உள்ள பயிற்சிக்கூடங்களை வலுப்படுத்தவும், புதிய கூடங்களைத் தொடங்கவும் பெரும் அளவில் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில் நமது ராஜ்யங்களில் உள்ள பொறியியற் கல்லூரிகளில் 537 மாணவர்களை மட்டும் அனுமதிக்க வசதி இருந்தது. முதற் திட்டத்தின் முடிவிலேயே இவ்வசதி பெருகி, 647 மாணவர்களுக்கு இடம் அளிக்க வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி 1,100 மாணவர்களை அனுமதிக்க வசதி செய்யப்படும். மதுரையில் புதிய பொறியியற் கல்லூரி தொடங்குவதுடன் இந்த ஆண்டிலேயே, நம்முடைய இலக்கை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. முதற் திட்ட காலத்திலேயே நம்முடைய பல்தொழில் பயிற்சிக் கூடங்களில் (**Polytechnics**) பயிற்சி பெறக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 922-லிருந்து 1,142 ஆகப் பெருகியுள்ளது. இந்த நடப்பு ஆண்டில் 1,600 மாணவர்களுக்கு வசதியளிக்கலாம் என எதிர்பார்க்கிறோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொறியியற் கல்லூரிகளுக்காக 63·9 லட்ச ரூபாயும், பல்தொழில் பயிற்சிக் கூடங்களுக்காக 15·2 லட்ச ரூபாயும், தோல் நுட்பத்திறப் பயிற்சிக் கூடங்களுக்காக 8 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழிற் கல்வியின் நிர்வாகம் இப்பொழுது கல்வித் துறை டைரெக்டர், தொழில் வர்த்தகத் துறை டைரெக்டர் ஆகிய இரு துறைத் தலைவர்களிடமும் இருக்கிறது. இந்த இரண்டு அதிகாரிகளுக்கும், வளர்ந்துகொண்டு இருக்கும் பெரும் துறைகளை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு பெரும் அளவில் இருக்கிறது. ஆதலால் அவர்களால் தொழிற் கல்விக்கு வேண்டிய அளவு ஒன்றிய கவனம் செலுத்த முடியாதிருக்கிறது. அகில இந்திய தொழிற் கல்விக் கவுன்சிலும் அதனுடைய தென் பிராந்தியக் குழுவும் தொழிற் கல்வியின் எல்லாப் பகுதிகளையும் கவனிக்க ஒரு தனி அமைப்பு (**Directorate**) நிறுவ வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார்கள். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு இவ்
12-10 p.m. வரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற முடிவு செய்துள்ளது. தொழிற் கல்வித் துறையில் ஒருமுகமான அபிவிருத்திக்குச் செய்ய வேண்டியவைகளைப்பற்றியும் தென் பிராந்தியக் குழுவினோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் வகையிலும் அரசாங்கத்திற்கு யோசனை சொல்ல ஒரு ராஜ்ய ஆலோசனைக் குழு அமைக்கப்படும். தேசீயத் திட்டத்தின் கீழ், தொழிற் கல்விப் பட்டம் பெற்றபின் அதற்கு மேல் உயர் கல்வி அளிக்க நான்கு உயர்தர தொழிற் கல்வி நிலையங்கள் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவைகளில் ஒன்றைத் தென்னாட்டில் நிறுவ இப்பொழுது இந்திய அரசாங்கத்தார் யோசனை செய்து வருகிறார்கள். இந்த நிலையத்தை சென்னை நகரில் கிண்டிப் பகுதியில் அமைப்பதால் ஏற்படக்கூடிய பல்வேறு அனுகூலங்களை நாம் அழுத்தமாய் எடுத்துக் கூறியுள்ளோம். ராஜ்ய செலவிலேயே இதற்கு வேண்டிய நிலத்தை வாங்கிக் கொடுக்கவும் ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே நமக்கு சாதகமான முடிவு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஹரிஜன நலன்.

**25.** ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர்கள் இவர்களின் நலத்திற்காக வழக்கமாக வழங்கப்படும் உணவு-விடுதி மான்யங்கள், உபகாரச் சம்பளம், இன்னும் மற்றைய சலுகைகள் ஆகிய வகையில் செலவிட ஒதுக்கப்பட்டிருக்கும் 65 லட்ச ரூபாய் தவிர, இந்திய அரசாங்கம் பாதிச் செலவை ஒப்புக்கொள்ள முன்வந்தபடியால், பல்வேறு புதிய திட்டங்கள் தொடங்கப்படவிருக்கின்றன. வீடு கட்டுதல், மனை வாங்குதல், சுகாதார வசதிகள் செய்தல், காளைகள், விவசாயக் கருவிகள் இவைகளை வாங்குவதற்கு மான்யமளித்தல், குடிசைத் தொழிலின் அபிவிருத்தி—இவை போன்ற பணிகள் இத் திட்டத்தில் இடம் பெறும். மின்சார வசதியுள்ள இடங்களில் கிராமத்திலுள்ள ஹரிஜனக் குடியிருப்பு இடங்களில் பொது விளக்குகள் அமைத்துக் கொடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஹரிஜன நலனுக்காகச் செலவிடப்படும் தொகை சென்ற ஆண்டில் 134 லட்ச ரூபாயாக இருந்து இப்பொழுது 194 லட்ச ரூபாயாக உயர்ந்துள்ளது.





ராஜ்ய மாவட்டங்களின் சீரமைப்பு.

**26.** இப்பொழுது நம் மாவட்டங்கள் அதிக ஜனத் தொகையுடன் பெரும் பரப்பு கொண்டனவாய் உள்ளன. நாட்டுப்புற முன்னேற்றப் பணிகள் அதிவேகமாக நடந்துவரும் வேளையில் இது நிர்வாகத்திற்கு இடையூறாக இருக்குமோ என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால் இப்பொழுதுள்ள அமைப்பு நெடுங்காலமாக இருந்து வந்திருக்கின்றது. அதன் காரணத்தால் ஓரளவு ஜில்லாப் பற்று மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுதிருக்கும் மாவட்டங்களை மாற்றியமைப்பதில் ஆங்காங்கே மனக்கசப்பு ஏற்படக்கூடும். அமைச்சரவையின் குழு ஒன்று இவ்விஷயத்தை ஆராய்ந்து வருகின்றது. கனம் அங்கத்தினர்கள் சொல்லும் யோசனைகளை அந்தக் குழு வரவேற்று, பரிசீலனை செய்யும். கன்னியாகுமரிப் பகுதியைப் பொறுத்தவரை, அதைத் தனி ஜில்லாவாகவே வைத்துக்கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த நாங்குனேரி தாலூக்காவை இம்மாவட்டத்திலிருந்து பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்கப்படும். இதன் பயனாக இரு மாவட்ட அதிகாரிகளுக்கும் வேலைச் சுமை ஓரளவு சமமாக்கப்படும்.

1956–57-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கு.

**27.** 1956–57-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி வருவாய் 57 கோடியே 8 லட்சமாகவும், செலவு 60 கோடியே 80 லட்ச ரூபாயாகவும், ஆக 3 கோடியே 79 லட்ச ரூபாய் துண்டு விழுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்பொழுது கிடைத்திருக்கும் கணக்கின்படி அந்த ஆண்டில் நமது வருவாய் 54 கோடியே 85 லட்ச ரூபாயாகவும், செலவு 55 கோடியே 34 லட்சமாகவும் இருந்து துண்டு விழுந்தொகை 49 லட்சமாகவும் குறைந்துள்ளது. எதிர்பாராச் செலவு நிதி (**Contingency Fund**) யிலிருந்து அந்த ஆண்டில் 42 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. இதைக் கணக்கில் கொண்டால் அந்த ஆண்டின் பற்றுக்குறை 91 லட்ச ரூபாயாகும். அப்படியும் நம்முடைய நிதி நிலை நாம் முதலில் எதிர்பார்த்ததைவிட திருப்திகரமாகவே இருந்திருக்கிறது. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றம் என்றவகையில் இன்னும் அனேக மாறுபாடுகள் கணக்கில் செய்யப்பட இருக்கின்றன. முடிவான நிலைமை இன்னும் சில மாதங்களுக்குப் பிறகுதான் தெரியும். அபிவிருத்தி இனங்களான விவசாயம், தொழில், கூட்டுறவு, தேசீய நல விஸ்தரிப்பு, ஆகிய தலைப்புகளின்கீழ் செலவு மிகக் குறைவாக ஏற்பட்டிருக்கிறது.

புதிதாக மேற்கொண்ட திட்டங்கள் செயல்முறையில் வருவதற்கு வேண்டிய நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்துவதில் சிறிது கால தாமதம் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டது. இதன் விளைவாய் புதுத் திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அந்தந்தத் துறையின் வருவாய் இனங்களிலும் சிறிது குறைவு ஏற்பட்டது. மூலதன வேலைகளில் 363 லட்ச ரூபாய் வரை குறைந்து செலவாயிற்று. 24 கோடியே 15 லட்ச ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்த்ததற்கு மாருக, 20 கோடியே 52 லட்ச ரூபாய்தான் செலவானதாக இப்பொழுதைய கணக்கு. எந்த இனத்திலும் சேர்க்காமல் இப்பொழுது அனுமத்தாக வைக்கப்பட்டுள்ள செலவுகளை அதற்கேற்ற இடங்களில் ஏற்றும்போது, இந்தச் செலவின் அளவு கொஞ்சம் அதிகப்படலாம். ஆனால் மொத்த நிலையில் கணிசமான மாறுதல் எதுவும் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது. செலவு குறைந்தமையால் நாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து, 9 கோடி ரூபாய் குறைவாகக் கடன் வாங்கியுள்ளோம். ஆயினும், ஆண்டு முடிவில் நம்மிடத்தில் 164 லட்ச ரூபாய் நிகர ரொக்கக் கையிருப்பாக இருந்தது. நம் திருத்திய மதிப்பீட்டுகளின்படி எதிர்பார்த்த ரொக்கக் கையிருப்பு 51 லட்ச ரூபாய்தான்.

1957-58 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள். 28. சென்ற டிசம்பர் மாதத்தில், பழைய சட்ட சபை முன் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாண்டின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் கண்ட மதிப்பீடுகள் இப்பொழுது அவசியமான அளவுக்கு மாற்றப்பட்டுள்ளன. ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கிய புதிய பணிகளைத் தொடங்கும் காலத்தில் அதற்கு வேண்டிய நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதில் தவிர்க்க முடியாத கால தாமதம் ஏற்படுகிறது.
12-15 p.m. இதை மனதில் கொண்டு இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது உள்ள வரவுசெலவு மதிப்பீட்டின்படி. தற்போதைய வரவு இனங்களில் வருவாய் 56 கோடியே 49 லட்ச ரூபாயும், செலவு 61 கோடியே 32 லட்ச ரூபாயுமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. செலவு இனத்தில் இந்த ஆண்டில் நடைபெற இருக்கும் புது வேலைத் திட்டங்களுக்காக 182 லட்ச ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. ஆகவே 483 லட்ச ரூபாய் துண்டு விழுகிறது. சென்ற ஆண்டில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து நாம் எடுத்த 42 லட்ச ரூபாயை இந்த ஆண்டு அந்த நிதிக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டி இருக்கின்றது. செலவினங்களுக்கு இந்த மன்றம் மான்யம் அளித்த பிறகு இம்மாற்றம் செய்யப்படும். இதையும் மனதில் கொண்டு தற்போதைய பற்றுக்குறை கணக்கிடப்பட்டுள்ளது.

சலுகைகள். 29. கெஜட் பதிவில்லாத அரசாங்க ஊழியர்கள், மற்றும் குறைந்த சம்பளம் பெறும் பொது ஊழியர்கள் இவர்களுக்கு நாம் சமீபத்தில் மாதம் 12 ரூபாய் ஊதிய உயர்வு அளித்தது, இந்த அளவு பற்றுக் குறைக்கு ஒரு முக்கிய காரணம். இந்தச் சலுகைகளினால் ஆகும் அதிகச் செலவு 4 கோடியே 26 லட்ச ரூபாய். ஆனால் மாதம் மொத்த வருவாய் 60 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாகப் பெறும் ஊழியர்களுக்கு மாதம் 8 ரூபாய் வீதமும், 60 ரூபாய்க்கு மேல் 100 ரூபாய் வரை பெறும் ஊழியர்களுக்கு மாதம் 4 ரூபாய் வீதமும் ஆகும் செலவை ஏற்க இந்திய அரசாங்கம் இசைந்துள்ளது. இந்த வழியில் இந்திய அரசாங்கம் 194 லட்ச ரூபாய் அளவிற்குச்





செலவை ஏற்றுக்கொள்ளும். நூறு ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுபவர்களுக்கு கொடுக்கும் ஊதிய உயர்வில் எப்பகுதியையும் மத்திய அரசாங்கம் ஏற்கவில்லை. ஆனால் நமக்கு அதற்காக இந்த ஆண்டில் 25 லட்ச ரூபாய் கடன் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வகையில் ஆதரவளித்ததற்காக நாம் இந்திய நிதியமைச்சருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்த உதவியின்றி இவ்வளவேனும் நம்முடைய ஊழியர்களுக்கு சலுகைகாட்ட முடிந்திருக்காது. நம்முடைய கிராம ஊழியர்களுக்கு இந்தச் சலுகை பயன்படவில்லை. ஆகவே, அவர்களிடை சிறிது அதிருப்தி தோன்றியுள்ளது. கிராம ஊழியர்களின் அமைப்பை இக்கால நிர்வாகத்திற்கேற்ப மாற்றும் பிரச்சினை இப்பொழுது அரசாங்கத்தாரின் கவனத்தில் இருந்துவருகிறது. ஆனால் இச்சிக்கலான பிரச்சினைக்கு முடிவு காண்பதற்குக் கொஞ்ச காலம் ஆகலாம். அதற்கிடையில் கிராமக் கர்ணம் அலுவல் பார்ப்பவர்களுக்கு 7 ரூபாயும், முன்சீப்புகளுக்கு 5 ரூபாயும் பிற கிராமப் பணியாளர்களுக்கு 4 ரூபாயும் ஆக கிராக்கிப்படியை உயர்த்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இச்சலுகைகள் ஜூலை முதல் தேதியிலிருந்தே நடைமுறைக்கு வரும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 30 லட்ச ரூபாய் மேற்கொண்டு செலவாகும். நடப்பு ஆண்டில் 20 லட்ச ரூபாய் செலவாகலாம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் பொது ஊழியர்களுக்காக வேறு சில சலுகைகளும் அடங்கியுள்ளன. உதாரணமாக குமாஸ்தாக்கள் சர்விசைச் சேர்ந்தவர்களில் உயர்தர குமாஸ்தாக்களின் சம்பள விகிதம் ஆரம்ப காலத்தில் ஆண்டுக்கு அதிகமான உயர்வு இருக்கும் வகையில் மாற்றி அமைக்கப்படும். ஸ்தல ஸ்தாபன தணிக்கைத் துறையில் பணி செய்யும் குமாஸ்தாக்களுடையவும், இன்ஸ்பெக்டர்களுடையவும் சம்பள விகிதம் உயர்த்தப்படுகின்றது. "கவர்ண்மெண்ட் எஸ்டேட்டில்" பணியாற்றுவோர்களை மற்றவர்கள் போல் நிரந்தர அரசாங்க ஊழியர்களாக மாற்றவும், இரவு காவல் காப்பாளரின் சம்பளத்தைத் தற்காலிக நிலவரப்படி உயர்த்தவும் சில அரசாங்க ஆஸ்பத்திரிகளிலுள்ள தாதிகளுக்கு பொழுதுபோக்கு, ஓய்வு வசதிகள் செய்யவும், மலைகளிலுள்ள கிராம ஊழியர்களுக்கு கம்பளி ஆடைகள் அளிக்கவும், உதவி ஸர்ஜன் பதவிகளில் 23 ஸ்தானங்களை உயர்தர உதவி ஸர்ஜன்களாக மாற்றவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

30. நானூற்று எண்பத்து மூன்று லட்ச ரூபாய் அளவில் ஏற்பட்டிருக்கும் பற்றுக்குறை மிகப் பெரிய தொகை எனவே கருதவேண்டும். அதை முழுவதும் ஈடு செய்யாமல் விடுவது சரியல்ல. அதிலும், விலைவாசிகள் ஏறுமுகமாகவும், பெரிய மூலதனச் செலவுத் திட்டங்களை நிறைவேற்றப் போதிய நிதி வசதிகள் இல்லாமலும் இருக்கும் காலத்தில், இது மிகவும் பொருத்தமற்றது. ஆகவே, இப்போதுள்ள வருவாயைப் பெருக்க கீழ்க்கண்டபடி முடிவு செய்துள்ளோம்:— புதிய வரிகள்.

(1) 1957-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய பொது விற்பனை வரியின் சாதாரண விகிதம் ரூபாய்க்குக் காலணு அல்லது ஒன்றரையே வீசம் சத விகிதமாக இருந்தது. தசாம்ச நாணய முறை ஏப்ரல் மாதத்திலிருந்து அமுலுக்கு வந்தபோது இவ்விகிதம் சாதாரணமாய் 2 சத விகிதமாக மாற்றப்பட்டிருக்கவேண்டும். ஆனால்

இவ்விஷயத்தை நன்கு பரிசீலனை செய்யவேண்டி அரசாங்கத்தார் பழைய விகிதத்தையே அமுலில் வைத்துள்ளனர். வரி விகிதம் பின்னக் கணக்கில் இருக்கும்போது அந்த அடிப்படையில் செலுத்த வேண்டிய வரியைக் கணக்கிடுவதும் சிரமமாக இருக்கும். நேர்மையில்லாத வியாபாரிகள் சில்லரை வியாபாரங்களில் இதைப் பயன்படுத்தி வாங்குவோரிடத்தில் அதிக வரி வசூல் செய்வதற்கும்கூட இடமிருக்கிறது. இப்பொழுது உணவு தானியங்களுக்கு (அதாவது நெல், அரிசி, கோதுமை, மற்றப் புன்செய் தானியங்களுக்கு) உள்ள விகிதத்தைக் குறைத்து ஒரு சத விகிதமாகவும் மற்றையப் பொருள்களுக்கு இரண்டு சத விகிதமாகவும் அமைக்கத் தீர்மானித்துள்ளோம். புத்தகங்களுக்கு விற்பனை வரியை முழுவதும் தள்ளிவிடவும் முடிவு செய்துள்ளோம். இம்மாற்றங்களின் நிகர விளைவாக ஒரு முழு ஆண்டில், ஒரு கோடியே எழுபது லட்ச ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். நடப்பு ஆண்டில் எஞ்சிய மாதங்களில் ஒரு கோடியே இருபத்தைந்து லட்ச ரூபாயே கிடைக்கலாம்.

(2) தோட்டச் சொந்தக்காரர்கள் இப்போது கொடுக்கும் விவசாய வருமான வரி விகிதத்தையும் உயர்த்த எண்ணியுள்ளோம். அதன் விவரம் பின்வருமாறு :—

12-20 p.m.

| வருமானம். | வரி விகிதம். தற்போதைய விகிதம். சதவிகிதம். | வரி விகிதம். இனி இருக்கும் விகிதம். சதவிகிதம். |
|---|---|---|
| முதல் 1,500 ரூபாய்க்கு .. .. .. | ஒன்றுமில்லை. | ஒன்றுமில்லை. |
| அடுத்த 3,500 ரூபாய்க்கு .. .. .. | 5 | 5 |
| அடுத்த 5,000 ரூபாய்க்கு .. .. .. | 10 | 15 |
| அடுத்த 5,000 ரூபாய்க்கு .. .. .. | 15 | 20 |
| அடுத்த 5,000 ரூபாய்க்கு .. .. .. | 20 | 25 |
| அடுத்த 5,000 ரூபாய்க்கு .. .. .. | 25 | 30 |
| எஞ்சிய விவசாய வருமானம் முழுவதுக்கும் கம்பெனிகளின் மொத்த வருமானத்துக்கும். | 35 | 45 |

இவ்வினத்திலிருந்து ஆண்டுக்கு 25 லட்ச ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரு வரி மாற்றங்களாலும் இவ்வாண்டு ஒரு கோடியே ஐம்பது லட்ச ரூபாய் அதிக வருவாய் பெறலாம். ஆகவே, பற்றுக்குறை மூன்று கோடியே முப்பத்து மூன்று லட்சமாகக் குறையும். இதற்கு மேல் வரி விதிப்பு கிடையாது. அதனால் புது வரிகள் கிடையாது.

31. வருமான வரி, உற்பத்தி வரிகள், இவைகளின் விகிதங்களில் சில மாற்றங்களையும் ரயில்வேக் கட்டண விகிதத்தின்பேரில் ஒரு புதிய உபரி வரியையும் இந்திய நிதியமைச்சர் அறிவித்துள்ளார். இவைகள் இப்பொழுது பார்லிமெண்டு சபை முன் இருக்கின்றன. இந்த வகையினால் பெறப்படும் அதிக வருவாயிலிருந்து ராஜ்ய அரசாங்கங்களின் பங்காக 15 கோடி ரூபாய் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரி விகிதங்கள் அதிக மாற்றங்களின்றி ஏற்கப்படுமானால், 125 லட்ச ரூபாய் இந்த ராஜ்யத்தின் பங்காகக் கிடைக்கலாம். இந்த வரித்திட்டம் இன்னும் பார்லிமெண்டில் சட்டமாகாமல் இருக்குங் காரணத்தால் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் இதைக் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை.





32. உலகப் போருக்குப் பின் அரசாங்க நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை வெகுவாகப் பெருகிக்கொண்டே வந்திருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்கள் பல, நாளுக்கு நாள் பெருகி வருவதால் இதைத் தவிர்க்க முடியாது போயிற்று. அரசாங்க ஊழியர்களை அதிகப்படுத்தும் வகையில் வரும் யோசனைகளை எல்லாம் நிதித் துறையினர் மிகவும் கவனத்தோடு பரிசீலனை செய்கின்றனர் என்றாலும், ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரி அந்த விசேஷ அலுவலின் அவசியம் தீர்ந்த பின்னரும் பதவியில் ஒருவேளை நீடித்து இருக்கலாம். அவ்வாறு இல்லை என்று திட்டமாகச் சொல்லமுடியாது. நிர்வாகம் திறம்பட நடக்கவும் சிக்கனத்தை முன்னிட்டும் இந்நிலைமையைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகின்றது. இதற்காக ஒவ்வொரு நிர்வாக இலாகாவின் அமைப்பையும் நன்கு பரிசீலனை செய்து அவசியமானால் மாற்றவேண்டும். ஆகவே முதிர்ந்த அனுபவம் பெற்று உயர் பதவியில் உள்ள ஒரு விசேஷ அதிகாரியை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவர் ஒவ்வொரு இலாகாவின் அமைப்பைப் பற்றியும், அதற்குத் தலை நகரிலும் மற்ற மாவட்டங்களிலும் வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை குறித்தும் நன்கு ஆய்ந்து வேண்டிய யோசனைகளைக் கூறுவார். ஒவ்வொரு இலாகா செலவினங்களையும், முக்கியமாக நானாவித செலவுகளை அவர் கவனித்து முடியும் சிக்கனத்தை எடுத்துக்காட்டுவார். அமைச்சரவையின் ஒரு குழு அவருடைய வேலையை அவ்வப்பொழுது மேற்பார்த்து வரும். ஒவ்வொரு இலாக்காவுக்குமான அறிக்கையை அதிகாரி சமர்ப்பித்தவுடன் அவைகளை ஆய்ந்து உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். [illegible] செலவு ஓரளவு குறையலாம். ஆனால் அது [illegible] அளவில் இருக்கும் என இப்பொழுது உறுதியாக மதிப்[illegible] முடியாது. ஆகையால், இந்த வரவு செலவுத் திட்டத்தில் இதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. சிக்கனம்.

33. 1956 ஜூன் மாதத்தில், திரு க. சந்தானம் அவர்களைத் [illegible] நிதிக்கமிஷன். தலைவராகக் கொண்ட நிதிக் கமிஷன் ஒன்றை, அரசியற் சட்டத்தின் 280-வது பிரிவின்கீழ், நமது இந்தியக் குடியரசுத் தலைவர் அமைத்துள்ளார். பின்வரும் விஷயங்களைப்பற்றி ஆலோசனை சொல்வது தான் இக்கமிஷனின் முக்கிய பணி :—

(1) வருமான வரி, யூனியன் உற்பத்தி வரிகள், இன்னும் மற்ற பங்கிடக்கூடிய மத்திய வரிகள் இவைகளினின்று கிடைக்கும் நிகர வருமானத்தை ராஜ்ய அரசாங்கங்களுக்கு எப்படிப் பங்கிடுவது ?

(2) மத்திய அரசாங்கத்தி[illegible]ன்றும் பெற்ற கடன்களுக்கு இப்பொழுது நிலவும் வட்டி விகிதத்திலும், திருப்பிக் கொடுக்கும் முறையிலும் என்னென்ன மாற்றம் செய்யலாம் ?

(3) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போன்றவைகளை நிறைவேற்ற, ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கத்திற்கும் வேண்டிய நிதித் தேவைகளைக் கவனித்து, தனிப்பட்ட முறையில் ராஜ்ய அரசாங்கங்களுக்கு விசேஷ மானியங்கள் எவ்வளவு வழங்கலாம் ?

1957 மார்ச்சு மாதத்தில் நிதிக் கமிஷன் இந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடன் விஷயங்களை மேலும் விவாதித்தது.

6196
V2,11;31'N57
N58.2;2

[Sri C. Subramaniam] [29th June 1957

சென்னை அரசாங்க ஊழியர்கள் பெறும் ஊதியத்திற்கும் அதே மாதிரியான வேலைகளை அதே இடத்தில் செய்யும் மத்திய அரசாங்க ஊழியர்கள் பெறும் ஊதியத்திற்கும் உள்ள ஏற்றத்தாழ்வைச் சுட்டிக் காட்டி, இதனைக் கணிசமாகக் குறைக்க மத்திய அரசாங்கத்தினிடமிருந்து பெரிய அளவில் உதவி வேண்டியிருப்பதை, நாம் இந்தக் கமிஷனிடம் வற்புறுத்திக் கூறியுள்ளோம். முழுவதும் ராஜ்ய அதிகார வரம்பிற்கு உட்பட்ட வரி இனங்களை அதிகம் மாற்ற இடமில்லாமலிருப்பதையும் திட்டத்தின் கீழ் வளர்ந்து வரும் நம்முடைய தேவைகளுக்கும் ஏற்றுக்கொள்ள வேண்டிய செலவுகளுக்கும் ஏற்ப, ராஜ்யங்களுக்கு பங்கு கிடைக்கும் மத்திய வரி இனங்களில் நமக்கு அதிக விகிதம் கிடைக்கவேண்டிய நியாயத்தையும் விளக்கியுள்ளோம். மத்திய அரசாங்கம் நிதி பற்றுக்குறையைப் போக்க பல முறையைக் கையாளுகிறது. அந்நிதியிலிருந்து ராஜ்ய சர்க்கார்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். இந்தக் கடனுக்கு ராஜ்யங்கள் கொடுக்க வேண்டிய வட்டி விகிதம் மத்திய அரசாங்கம் நிதி திரட்டும் முறையையும் மனதிற் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். அத்துடன் இப்பொழுது ராஜ்யங்கள் ஒவ்வொன்றும் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கும் கடன்களையெல்லாம் இணைத்து புதிய வட்டி விகிதத்துடன் திருப்பிக் கொடுக்க ஒரு திட்டம் வகுத்து ராஜ்யங்களின் கடன் பளுவைக் குறைக்கவேண்டும். இவ்விஷயங்களையெல்
12-25 p.m. லாம் வற்புறுத்தியுள்ளோம். நாம் கூறியுள்ள யோசனைகளில் அடங்கியுள்ள முறைகளையேனும் நிதிக் கமிஷன் ஒத்துக்கொள்ளும் என நம்புவோமாக. இந்த எண்ணத்தில், இப்பொழுது எஞ்சிய பற்றுக்குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்.

மூலதனச் செலவு.

34. இந்த ஆண்டு மூலதனச் செலவு 23 கோடியே 49 லட்ச ரூபாயாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் மின்சாரத் திட்டங்களுக்காக 11 கோடியே 62 லட்ச ரூபாயும், நீர்ப்பாசனத்திற்காக 2 கோடியே 93 லட்ச ரூபாயும், சாலைகள், கட்டிடங்கள் இவைகளுக்காக 3 கோடியே 67 லட்ச ரூபாயும், தொழில் அபிவிருத்தி இன்னும் மற்றைய வேலைகளுக்காக 1 கோடியே 95 லட்ச ரூபாயும், பொது ஆரோக்கிய வசதிகளுக்காக 85 லட்ச ரூபாயும், அரசாங்க வர்த்தகத் திட்டங்களுக்காக 1 கோடியே 31 லட்ச ரூபாயும், மற்ற இனங்களில் 116 லட்ச ரூபாயும் செலவாகும். புதிய பஸ்கள் வாங்குவதற்கும், சென்னையிலும் கன்யாகுமரியிலும் உள்ள பஸ் தொழிற்சாலைகள் அபிவிருத்திக்கும் 20 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடனும் முன்பணம் கொடுத்தலும்.

35. கடன், முன்பணம் கொடுக்கும் வகையில் 7 கோடியே 92 லட்ச ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் வகையில் 2 கோடியே 25 லட்ச ரூபாயும், சென்னை நகராண்மைக் கழகம், மற்றைய ஸ்தல ஸ்தாபனங்கள் இவைகளுக்குக் குடிதண்ணீர் வழங்கல், கழிவு நீர்ப் போக்கு, இவைகளுக்கான திட்டங்கள் உள்பட, பல காரியங்களுக்காக கடனைக் கொடுக்க 1 கோடியே 57 லட்ச ரூபாயும், தேசிய நலப் பரப்பு, சமூதாய நலத் திட்டம் இவைகளின்கீழ் மக்களுக்குக் கடன்



29th June 1957] [Sri C. Subramaniam]

கொடுக்க 1 கோடியே 38 லட்ச ரூபாயும், "சென்னைத் தொழில் முதலீடு கார்ப்பொரேஷனுக்கு"க் குறுகிய காலக் கடனுக்காக 40 லட்ச ரூபாயும், கைத்தறி செஸ் நிதியிலிருந்து கிடைக்கும் உதவியைக் கொண்டு நிறைவேற்றும் திட்டங்களின்கீழ், நெசவாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30 லட்ச ரூபாயும், தொழில்களுக்கு அரசாங்க உதவி அளிக்க 41 லட்ச ரூபாயும், ஆகியவை மொத்தச் செலவில் அடங்கியுள்ளன. முன் கொடுத்த கடன்கள் திரும்ப வரும் வகையில், 4 கோடியே 19 லட்ச ரூபாய் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக இந்த இனத்தின் கீழ் நிகரச் செலவு 3 கோடியே 73 லட்ச ரூபாய்.

36. இந்த ஆண்டில் நமக்கு ரொக்க வசதித் தேவைகள் சுமார் 35 கோடியே 63 லட்ச ரூபாயாக இருக்கும். இதன் விவரம் பின்வருமாறு :— ரொக்க வசதித் தேவைகள்.

| விவரம். | ரூபாய். (லட்சத்தில்.) |
|---|---|
| மூலதனச் செலவு .. .. .. .. .. .. .. .. | 23,49 |
| கடன்களாகவும், முன்பணமாகவும் வழங்க நிகரத் தொகை .. .. | 3,73 |
| இந்த ஆண்டுத் தொடக்கத்தில் கொடுபடாமல் நின்ற ரிசர்வ் பாங்கியில் அதிகப் பற்றை ஈடுசெய்ய .. .. .. .. .. .. | 1,70 |
| மத்திய அரசாங்கத்தினின்றும், வேறு தனிப்பட்ட ஸ்தாபனங்களினின்றும் பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் வகையில் .. | 2,88 |
| வருவாய் பற்றுக்குறை .. .. .. .. .. .. .. | 3,33 |
| ரிசர்வ் பாங்கியிலும், கஜானாக்களிலும் வைத்திருக்கவேண்டிய தொகை. | 50 |
| ஆக மொத்தம் .. | 35,63 |

தேவைகள் இவ்வாறிருக்க, நாம் எதிர்பார்க்கக்கூடிய வரவினங்கள், 22 கோடியே 55 லட்ச ரூபாய் அளவுக்குத்தான் உள்ளன. இதன் விவரம் பின்வருமாறு :—

| விவரம். | ரூபாய். (லட்சத்தில்.) |
|---|---|
| ஆரம்பத்தில் ரொக்கக் கையிருப்பு .. .. .. .. .. .. | 3,34 |
| முன்பணம் போன்ற வகையில் கிடைக்கக்கூடிய நிகர வருமானம் .. | 2,71 |
| மத்திய அரசாங்கத்தின் உதவி பெறத் தகுதியுள்ள திட்டங்களுக்காக அவ்வரசாங்கத்தினின்று கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் தொகை. | 16,50 |
| ஆக மொத்தம் .. | 22,55 |

ஆகவே, நமக்கு ரொக்கமாக இன்னும் 13 கோடி ரூபாய்க்கு மேல் வேண்டியிருக்கிறது. நிதிக் கமிஷனின் யோசனை காரணமாக நம்முடைய வருவாய் இனங்கள் நாம் எதிர்பார்க்கும் அளவிற்குப் பெருகினால், இந்தப் பற்றுக்குறையின் அளவு குறையலாம். ஆயினும், பற்றுக்குறை 10 கோடி ரூபாய் அளவில் நிற்கும். சென்ற ஆண்டு, பொதுமக்களிடமிருந்து சுமார் 14 கோடி ரூபாய் கடன் பெற முடிந்தது. ஆனால் தற்போது பொதுவாக நிதி நிலை மிகவும் மோசமாகவேயிருக்கிறது. ராஜ்ய சர்க்கார்கள் இந்த வருஷம் பொதுக் கடன் எழுப்பக்கூடாதென மத்திய அரசாங்கத்தினர் வலியுறுத்தி ஆலோசனை கூறியுள்ளார்கள். இச்சூழ்நிலைகளையெல்லாம் அனுசரித்து இவ்வருஷம் பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்புவதில்லை

யென்று முடிவு செய்திருக்கிறோம். தேசீய சிறு சேமிப்புத் திட்டத்தை நடத்த ஒரு நல்ல நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி தீவிரமாக வேலை செய்வதின் மூலம் ஓரளவு நிதி திரட்டலாம். ஆனால் போதிய அளவிற்கு இம்முறையில் நிதி கிடைக்குமா என்பது சந்தேகந்தான். ஆகவே நாம் பெரும்பாலும் எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பியிருக்கவேண்டி யிருக்கிறது. ஆனால் இந்த உதவி போதிய அளவில் கிடைக்கும் என்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை. ஆகையால், கனம் அங்கத்தினர்கள் நம்முடைய மூலதனச் செலவிற்கு வேண்டிய நிதி முழுவதும் கிடைக்குமென்ற உறுதி இல்லாத நிலை இருப்பதைக் கவனிக்கவேண்டும். ஆயினும், சிக்கல்கள் எழும்பொழுது அவைகளை எப்படியும் சமாளித்துக் கொள்வோம் என்ற உறுதியில் இப்பொழுது நாம் முன்செல்வோமாக.

ஐந்தாண்டுத் திட்டம்.

37. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 32 கோடி ரூபாய் வரையில் செலவு செய்ய இந்த வரவுசெலவுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு திட்டக் கமிஷன் நிர்ணயித்த வரையறையும் இதுவே. சென்ற ஆண்டில், பெரும் அளவில் செலவு செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் நடைமுறையில் குறைவாகவே ஆயிற்று. முடிவான கணக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும், மொத்தச் செலவு 29 கோடி ரூபாய் அளவில் இருக்கலாம். இந்த உரையுடன் உள்ள ஓர் இணைப்பில், இந்தச் செலவுகளின் விவரங்களை சில முக்கிய தலைப்புகளின் கீழ் காணலாம். சென்ற ஆண்டில் தோன்றிய
12-30 p.m. சிமிட்டி, எஃகு, அன்னியச் செலாவணி இவைகளின் பற்றாக்குறை காரணமாகவும், சில புதிய திட்டங்களை நடைமுறையில் கொண்டுவர வேண்டிய நிர்வாக ஸ்தாபனங்களை அமைப்பதில் நேர்ந்த காலத் தாழ்விலுைம் பல துறைகளில் குறைந்த செலவாயிற்று. இவ்வாண்டின் நிலைமை இன்னும் மோசமாக அமைந்துள்ளது. நாம் வெளிநாடுகளிலிருந்து அதிக அளவு இயந்திர சாதனங்கள் போன்ற மூலதனப் பொருள்களை இன்னும் இறக்குமதி செய்யத் திட்டமிட்டு இருக்கிறோம். ஆகவே இப்பொழுதுள்ள நிலைமையில் இவ்வாண்டில், அன்னிய செலாவணி வசதிகள் பெறுவதில் இன்னும் அதிக கஷ்டம் இருக்கும் என எதிர்பார்க்கலாம். நிலைமை தெளிவாகும்போது, அன்னியச் செலாவணி வசதி அவசியமான வேலைத் திட்டங்களில் சில முக்கியமில்லாதவற்றை ஒத்திப் போடவும் நாம் இணங்கவேண்டியிருக்கும். உணவுப் பொருள்கள், மற்றையத் தேவைப்பொருள்கள், இவைகளின் விலைவாசிகள் இப்போது ஏறுமுகமாக இருப்பது, நமக்கு வேண்டிய நிதியை நாணய நோட்டுகள் அடிப்பதன் மூலம் திரட்டுவதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது என்று எச்சரிக்கும் முறையில் இருக்கிறது. ஆனால், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, இப்போதிருக்கும் அளவிலாவது திட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது என்பதில், நாம் எல்லோரும் உடன்பாடு கொண்டுள்ளோம். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நம்மால் ஆனவரையிலும் முயல வேண்டும். இவ்வாண்டில், சாகுபடியை உயர்த்தப் பல முறைகளைப் பயன்படுத்தி, நாம் விளை பொருள்களைப் பெருக்க வேண்டும். நல்ல வேளையாக, தென்மேற்குப் பருவ மழையும் உரிய காலத்தில் வந்துள்ளது. பருவ நிலை நன்றாய் அமையும் என்று தோன்றுகிறது. மேட்டூர் தேக்கம் இப்பொழுதே



நிறைந்துவிட்டது. தொழிற்பகுதியில், நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் முழு மனதுடன்ஒத்துழைக்கவேண்டும் என்ற அளவுக்கு தற்காலிகமாகவேனும் ஓர் உடன்பாடு ஏற்படவேண்டும். அந்த வழியில்தான் நாம் முதலீடு செய்யும் அளவிற்கு ஏற்றபடி அதிக உற்பத்தி செய்ய முடியும். இவை நம் சக்திக்குட்பட்டவையே. இம்முறைகள் மூலம்தான் விலைவாசிகள் உயர்வைத் தடுக்க முடியும். தானியங்கள், ஏனைய இன்றியமையாத தேவைகள், முதலியவற்றை இறக்குமதி செய்யும் வகையில், அன்னியச் செலாவணி நிதி குறைபடாமல் காக்கவும் முடியும்.

திட்டத்திற்கு வேண்டிய உள்நாட்டு நிதி வசதிகளை நாம் தேசீய சேமிப்புத் திட்டத்தின் மூலமாகவும் பெருக்கலாம். இதுகாறும், நாம் பொதுமக்களிடமிருந்து பெற்றுவந்த கடன்கள் பெரும்பாலும் தொழில் வர்த்தகப் பிரமுகர்களிடமிருந்தும், சிறிய அளவில், பெருநிலமுடையோரிடமிருந்துமே கிடைத்து வந்துள்ளன. இவர்கள் பெரும்பாலும் தங்களுடைய சேமிப்புகளை பாங்கிகளில் போடும் வழக்கம் உடையவர்கள். ஆகவே, அந்தப் பணம் எப்படியும் செலாவணியில் இருந்து, வருவாய் அளிக்கும் பணிகளுக்குப் பயன்படுகின்றது. விளை பொருள்களின் விலை ஏற்றத்தாலும் தொழில் உற்பத்தியின் அதிகரிப்பாலும், எளிய குடியானவர்களிடமும், தொழிலாளரிடமும் புதிதாய் பண வசதி ஏற்பட்டுள்ளது. பொதுமக்களிடையே திட்டத்தின் குறிக்கோள்களை நன்கு எடுத்துக்காட்ட ஒரு தகுந்த அமைப்பை நாம் நிறுவவேண்டும். அப்படிச் செய்தால்தான், மக்கள் தங்களுடைய வருவாயில் ஒரு பகுதியைச் சேமித்து உதவ முன்வருவார்கள். பொருளாதார வளர்ச்சியின் காரணமாக, வருமானம் பலரிடம் பரவும் நிலையில், நாம் மூலதனப் பண வசதிகளைப் பெரிய அளவில் பெருக்குவதற்கு இதுவே உறுதியான வழி. ஆகவே, நாம் இன்னும் தியாக உணர்வுடன் சலியாது உழைக்கத் தயாராய் இருக்கவேண்டும். இல்லையேல் திட்டம் முழுவதையும் நம்மால் நிறைவேற்ற இயலாது. நாம் மக்களுக்கு முழு நம்பிக்கையுடன் தெளிவாக நிலைமையை நன்கு எடுத்துக்காட்டுவோமானல், மக்கள் இச்சந்தர்ப்பத்திற்கேற்ப எல்லாத் தியாகங்களையும் செய்ய முன்வருவார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

38. இவ்வுரையை முடிக்குமுன், இவ்வாண்டு நிதித்துறைக் காரியதரிசியும் அவர் கீழ் பணியாற்றும் அதிகாரிகளும் எனக்கும் அரசாங்கத்துக்கும் திறம்பட உதவி செய்ததற்காக என்னுடைய நன்றி கலந்த பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன். திரு ஆர். ரங்காச்சாரி பத்தாண்டுகளாக வரவு செலவு திட்டத் தயாரிப்பில் முடிவுரை. உதவும் பொறுப்பை ஏற்றுவந்துள்ளார். அவர் ஓய்வு பெறும் வயது அடைந்த காரணமாக இவ்வரசாங்கச் சேவையினின்றும் இப்போது விலகிக் கொள்கிறார். ஓய்வு பெற்று, பல்லாண்டுகள் அவர் இனிது வாழ நாம் ஆசி கூறுவோம்.

இக்குறிப்புகளுடன், 1957–58 ஆண்டுக்கான இந்த வரவு செலவுத் திட்டத்தை இச்சபை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

[29th June 1957

MR. SPEAKER: திங்கட்கிழமை காலை 9-மணிக்கு இந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான பொது விவாதம் நடக்கும்.

திங்கட்கிழமை காலை 9-மணி வரையில் இச் சபையை ஒத்திவைக்கிறேன்.

The House then adjourned.

### III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

97. *The Madras Slum Improvement (Acquisition of Land) Rules, 1957, issued with G.O. Ms. No. 888, Industries, Labour and Co-operation, dated 5th March 1957.*

98. *The Madras Cinemas (Regulation) Rules, 1957, issued with G.O. Ms. No. 155, Home, dated 19th January 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955.]*



## APPENDIX.

*Speech of Sri C. Subramaniam, Finance Minister, presenting the Budget for 1957-58 to the Madras Legislature on the 29th June 1957.*

Sir,

I rise to present to this House the Budget Estimates for the year 1957-58. Hon'ble Members are aware that a Budget for the current year was presented to the old Legislature last December and a Vote on Account was taken to cover the expenditure during the first four months of the year. Those estimates have now been revised making allowance for the altered trend of receipts and the additional expenditure we have to incur on new schemes included in the Plan and on the financial concessions we recently sanctioned to low-paid Government servants. The deficit of about Rs. 5 crores which we anticipated in December should have grown much larger but a rigorous scrutiny has been made of departmental estimates to eliminate non-essential expenditure, with the result that the deficit has been kept within bounds and is now of the same order as in the interim Budget. Introductory.

2. The one favourable feature which has enabled us to reduce the imbalance in the Budget is the fact that 1956-57 was a year of fair seasonal conditions free from cyclone, floods and famine. The south-west monsoon set in, in time and brought in an average rainfall of 13·3 inches which was 9 per cent above normal. This monsoon was particularly favourable in the coastal districts of Chingleput, South Arcot and Tanjore, the rainfall being well distributed and more than 30 per cent above the average. The north-east monsoon came in almost in continuation and the average fall of 20·5 inches was again above normal by 16 per cent. The central districts of Salem, Coimbatore and Tiruchirappalli were particularly favoured with falls over 50 per cent of the normal. The southern tip of the State was, however, Seasons.

[29th June 1957

unlucky in both the monsoons and there was heavy deficiency in the Sankarankoil, Nanguneri and Srivaikuntam taluks of Tirunelveli district and in the whole of Kanyakumari district, where crops withered over some areas causing some measure of distress. Low-scale famine relief works have been taken up in these areas to the extent necessary.

Agricultural production.

3. Under the stimulus of the favourable season and the various measures of intensive cultivation, the index of agricultural production in the State (base 1947–50) has risen by 4 points from 115 in 1955–56 to 119 in 1956–57. The increase in area sown, and production over the previous year of the principal crops are as follows:—

| — | *Areas sown in million acres.* 1955–56. | 1956–57. | *Production.* 1955–56. | 1956–57. | *Increase in yield over* 1955–56. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | PER CENT. |
| Paddy .. | 5·49 | 5·54 | 2·96 million tons of rice. | 3·10 million tons of rice. | 4·7 |
| Millets.. .. | 5·51 | 5·60 | 1·47 million tons. | 1·52 million tons. | 3·3 |
| Groundnut .. | 1·78 | 1·80 | 821,000 tons. | 855,000 tons. | 4·1 |
| Cotton .. | 1·16 | 1·20 | 335,000 bales. | 358,000 bales. | 6·9 |
| Sugarcane .. | 0·121 | 0·129 | 341,000 tons of gur. | 373,000 tons of gur. | 9·4 |

Agricultural production in the whole of India has also increased, rice from 26·8 million tons in 1955–56 to 28 million tons in 1956–57 and wheat from 8·3 million tons to 8·6 million tons. Among commercial crops, production of cotton has increased by 20 per cent, groundnut by 6 per cent and sugarcane by 17 per cent.

Agricultural prices.

4. The increase in agricultural output should normally have depressed prices, but the year witnessed a sharp rise in the price level. The index of wholesale prices of foodgrains advanced by 105 points to 482 points during the course of one year. Rice, second sort, which sold at about Rs. 13 a maund



29th June 1957]

in June 1955, was available only at Rs. 20 a maund in November 1956, and even after a bumper harvest the present price is Rs. 18 a maund with a marked upward trend. Similarly cholam, ragi, cumbu and other millets which used to sell at about Rs. 8 a maund in May 1955 is now being quoted at Rs. 12 to Rs. 14. Groundnut prices have risen from about Rs. 15 a maund in April 1955 to about Rs. 25 in March 1957. Cotton prices have also gone up by about 15 per cent and Cambodia is now being quoted at about Rs. 100 a maund. In a predominantly agricultural State, an upward trend in the prices of farm produce may even be generally welcomed but for the fact that we still do not grow enough rice in the State for our needs. To the extent the rise in food prices is due to overall shortage there may be danger ahead. It has to be borne in mind that taking the country as a whole, there is some shortage of rice, and it is becoming increasingly difficult to import rice from other countries. But the situation is being carefully watched and fair-price shops are being opened, wherever necessary.

Economic situation.

5. The pressure of prices and the rapid depletion of foreign exchange reserves are the two major problems facing the economy of the country. The Union Finance Minister has, in his Budget speech, analysed the causes and indicated the steps which we should take to tide over the crisis. We are now making satisfactory progress in setting up the heavy industrial units contemplated in the Plan both in the Public and Private Sectors. This involves the import of large quantities of heavy machinery which have to be paid for immediately in foreign currency. There is an unavoidable time-lag between the purchase of these expensive machines and their going into production. When, for example, the three new steel plants now under construction are commissioned, we need no longer import iron and steel and may even be able to earn some additional foreign exchange by the export of these products. But, till this happens, the drain on our limited

foreign exchange reserves will continue and we have to husband them with the greatest prudence. The rapid rate of capital investment in the Public and Private Sectors, and the various development activities undertaken by the Government, have enlarged employment and increased the purchasing power of the people. This has naturally generated a fresh demand for foodgrains and consumer goods and the production in the country is not growing fast enough to meet the new demand. Our difficulty in holding the price line is the direct consequence of our determination to organize heavy industries in quick time and, therefore, we should not unduly get alarmed over present developments. We must accept these temporary inconveniences in good spirit since there can be no two opinions on our present need for rapid industrialization. The situation is expected to be trying for another two years, till the bulk of the new units go into production and in the meanwhile, we should take all other possible steps to mitigate the hardship.

Agricultural development.

6. The immediate part the State Government should play in this state of affairs is to step up agricultural production within the resources set apart for that purpose in the Plan. One of the major schemes in our agricultural plan is the opening of about 360 seed farms for the supply of improved seeds to cultivators. There will be one such farm of about 25 acres in each National Extension Block, to produce primary seeds which on further multiplication will meet the bulk of the needs of the Block. Thirty-eight such farms were opened last year. We have since decided to accelerate this programme and a provision of Rs. 49 lakhs has now been made in the Budget for starting 136 farms during the current year. We hope to complete the programme by next year, so that the entire State may be supplied with good seeds, well in advance of the original target. The use of chemical fertilizers is becoming increasingly popular. About 120,000 tons of ammonium sulphate were distributed in 1956-57 ...





proposed to step up the supply to 140,000 tons during the current year. Short-term manure loans will be given as usual to smaller agriculturists and an allotment of about Rs. 70 lakhs has been made for that purpose. Adequate provisions have been made for the other schemes of Agricultural department, such as sugarcane research and development (Rs. 15 lakhs), control of pests and diseases (Rs. 4·6 lakhs), urban compost (Rs. 5·5 lakhs), horticultural development (Rs. 5·36 lakhs), expansion of Agricultural College (Rs. 5·96 lakhs), distribution of green manure seeds (Rs. 1·19 lakhs), etc.

Irrigation.

7. The Minor Irrigation Programme and the filter-point scheme will be continued at a cost of about Rs. 55 lakhs. Steady progress is being maintained on all the Major Irrigation Projects. The Lower Bhavani Project has been completed, and only small items of work remain on the Manimuthar and Mettur Canals. The Amaravathi, Krishnagiri and Sathanur reservoirs are nearing completion and some water can be stored in them even during this season. It is proposed to let down these storages for irrigation on the 15th of August from the Krishnagiri reservoir, on the 15th September from the Amaravathi reservoir and on the 2nd October from the Sathanur reservoir. The Kattalai and the Pullambadi channel works will be accelerated and a provision of Rs. 15 lakhs has been made for each of them in the Budget. The schemes in the Major Irrigation Plan yet to be taken up for execution are the Vidur reservoir of South Arcot-Pondicherry and the diversion of west-flowing rivers, but on both of them we have still to reach agreements with other States and the Central Government. The total allotment for major irrigation is about Rs. 234 lakhs.

Soil Conservation.

8. A new line of development which we propose to undertake on an enlarged scale during the year is soil conservation for which a provision of about Rs. 32 lakhs has been made in the Budget. Some work has been done in the Nilgiris already, and this

will be continued. The scheme is now being extended to the plains to cover about 10,000 acres in Coimbatore, 2,000 acres in Salem, 2,500 acres in Tiruchirappalli, 2,200 acres in Chingleput and 250 acres in Madurai. The work will be done initially at the cost of the Government and it is proposed to recover about 75 per cent of the cost from the beneficiaries in easy instalments.

Forests.

9. Hon'ble Members are aware that the reorganization of States has resulted in a substantial reduction of our forest wealth. The areas transferred to Kerala and Mysore contained our best timber forests and, therefore, we have now to make a special effort to regenerate the inferior forest areas left over to our share. We have included several useful schemes of development in the Plan and a promising start has already been made in implementing them. The Forest department has been reorganized into 18 compact territorial divisions to ensure better conservation and speedier execution of the new schemes. The major provisions made in the Budget are regeneration of panchayat and ex-zamin forests (Rs. 12·5 lakhs), cashew cultivation (Rs. 4·4 lakhs), casuarina plantations (Rs. 3 lakhs), industrial timber such as blue gum, wattle and matchwood (Rs. 3·3 lakhs), commercial timber like teak and rose wood on river margins (Rs. 1·6 lakhs), preservation of wild life (Rs. 1·2 lakhs) and forest communications (Rs. 2·5 lakhs).

Animal Husbandry

10. On Animal Husbandry, the main item of development is the Key Village Scheme by which we eliminate inferior breeds of bulls in selected localities and stock them with pedigree bulls. Artificial insemination will be provided at these centres and a subsidy will be given for the proper rearing of bull calves born there. The improved stock so reared, will be bought by the Government and distributed to other areas. The Key Villages will thus be a nucleus for the supply of good bulls for



the neighbourhood and serve the purpose of a cattle-farm. A provision of Rs. 16 lakhs has been made in the Budget for this and allied schemes. A start will be made this year on the Madras City Milk Supply Scheme estimated to cost about Rs. 1½ crores. Four thousand milch cows will be maintained in a farm in the suburbs of Madras and the milk will be distributed on the lines of the Aarey Milk Scheme of Bombay. The City Corporation will divert the sewage, now running to waste, into this farm for raising fodder for the needs of the farm. The present retail distribution of milk by Milk Unions will be co-ordinated with the scheme to ensure hygienic handling. A provision of Rs. 28 lakhs has been made in the Budget for these schemes. Poultry development is also receiving close attention. A scheme for the import of pedigree chicks from overseas has been organized and new poultry units are being attached to every Key Village, and in due course we shall have a unit in each Development Block. An allotment of Rs. 3·3 lakhs has been made in the Budget for these schemes.

Fisheries.

11. The various measures for the development of inland and marine fisheries will be continued at a total cost of Rs. 14 lakhs. The use of mechanised Pablo boats is becoming popular since they enable fishermen to go farther into the sea for better catches, and a provision of Rs. 2½ lakhs has been made for this purpose. The supply of nylon nets will be subsidized at a cost of Rs. 1½ lakhs. The salt subsidy scheme will be continued and a scheme for the manufacture of fish meal and manure will be organized. It is also proposed to open fishing harbours by cutting the bars of river-mouths so that fishermen may have sheltered landing places from which to operate.

National Extension Services.

12. The Community Projects and the National Extension Services covered 91 blocks at the end of last year and 19 new blocks were taken up at the beginning of this financial year. It is now proposed

to extend these services to 23 more blocks during the course of the year taking the total to 133 blocks. The provision under this head is Rs. 370 lakhs. A new development in the rural sector is the Gramdhan movement initiated by Vinobhaji and there has been very considerable response in the southern districts more particularly in Madurai. The question of evolving a pattern on the co-operative model for the settlement and development of these villages is now engaging the attention of the Government. In the meanwhile, a provision of Rs. 20 lakhs has been made in the Budget for giving loans to agriculturists in these villages for the intensive cultivation of the Gramdhan lands.

Electricity.

13. Steady progress has been maintained so far on the Power Schemes in the Plan, particularly on the Kundah and the Periyar Hydro-Electric Schemes and the Madras Plant Extension, Third Stage. The total allotment for power development in the Budget is Rs. 11·62 crores. The 30,000 K.W. generating set under the Madras Plant Extension Scheme will be commissioned by December of this year and will relieve the power shortage of the grid in the summer months. On rural electrification, we extended power-supply to 1,300 villages and 13,000 agricultural pumpsets during the last year and this is far in excess of the target for the year set in the Plan. It is proposed to maintain this tempo during the current year and adequate provision has been made for that purpose. But we may now have to reckon with the serious shortage of foreign exchange, steel and cement, which may retard progress. Fortunately, the heavy machinery for the Kundah Project will be supplied by the Canadian Government under the Scheme of Foreign Aid and, therefore, this Project may not be affected materially. Every attempt will be made to implement the programme, but the House must be prepared for short-falls, under the difficult conditions now obtaining in the country. Although the Budget Estimates



provide for the expenditure for the full year, with the formation of the Electricity Board, the direct responsibility for running the department will pass on to the Board. Consequently, funds required for the purpose will have to be advanced by the Government to the Board as a loan from out of the sums voted by the Legislature.

Lignite project.

14. On the side of major industries, the inauguration of the Lignite Project by the Prime Minister last month is the most significant development of recent times. We may note with some satisfaction that the sum of about Rs. one crore we had spared out of our limited resources on this investigation during the last few years, has been well-spent, for the Project costing about Rs. 70 crores may well revolutionize the industrial economy of the South. The immediate programme in the Public Sector, expected to come into fruition by 1960, is to set up a thermal plant of 200,000 K.W., a fertilizer unit for the manufacture of chemical manures with a nitrogen content of 70,000 tons per annum, and a plant for the briquetting of 350,000 tons of lignite for use as motive fuel for other industries. With an assured supply of cheap fuel and power, there are large possibilities for starting many new industries based on this Project such as paints, varnishes, synthetic oils, insulators, porcelain, etc., and let us hope that private enterprise will seize the initiative in an adequate measure.

Major industri

15. On other major industries, we are now assured of an aluminium plant of 10,000 tons capacity based on the bauxite deposits of Salem, to be located at Mettur. The National Industrial Development Corporation is expected to set up an iron smelting plant at Salem to utilize the local ore and pending further investigation at Jamshedpur, a licence has been granted for the installation of a small plant on the low-shaft furnace method in the private sector for the manufacture of pig iron. A new paper mill has been licensed at Papanasam

and another one at Mettur is under consideration. A rayon pulp plant, based on eucalyptus and wattle grown in the Nilgiris, is likely to be started at Bhavanisagar. A new cement factory in Ramanathapuram district and a rubber tyre factory at Ambattur have been licensed. Erection of the new caustic soda plant at Tirunelveli is progressing and the capacity of the existing one at Mettur is being expanded. A factory for the assembling of metre-gauge railway wagons has already gone into production and a new one for broad-gauge wagons may also come up soon. The new plant at Avadi for the manufacture of steel tubes has just commenced production. The proposal for the expansion of the capacity of the T.I. Cycles from 2 lakhs units to 5 lakhs units per annum has been recommended by this Government and is now under consideration. With the addition of about 13½ lakhs of new spindles recently sanctioned and now going into production, the textile industry is making encouraging progress. Many new sugar factories are being organized, mostly in the co-operative field, and a provision of Rs. 15 lakhs has been made in the Budget towards Government participation in the share structure. These new enterprises are experiencing difficulties over foreign exchange, but efforts are being made to arrange for deferred payments to foreign suppliers of machinery.

**Small-scale industries.**

16. Our approach on Small-scale Industries is to start a number of production-*cum*-training centres with the main object of training personnel for absorption in Public and Private enterprises. Amongst such schemes already started are a foot-wear service centre at Perambur, another foot-wear unit at Triplicane, a hand-made match factory at Perambur, two model carpentry workshops at Cheranmahadevi and Krishnagiri, and a sheet-metal servicing centre at Wall-tax Road. Similar centres are now under construction and will be opened during the course of the year in different parts of



the State for the lock industry, textile mill parts, hurricane lanterns, electrical goods, surgical instruments, scientific and laboratory equipments, brassware, cutlery, porcelain, sports goods and farm implements. Industrial co-operatives are also being organized wherever artisans in a particular craft live together. A provision of Rs. 25 lakhs has been made towards State Aid to Small Industries. Steady progress is being made on the three new Industrial Estates at Guindy, Virudhunagar and Erode, and about 30 factory units will be available at Guindy during the year. The total provision in the Budget under Small-Scale Industries is Rs. 112 lakhs.

**Village industries.**

17. Large provisions have been made for the development of village industries like tanning (Rs. 5 lakhs), bee-keeping (Rs. 4 lakhs), village pottery (Rs. 2 lakhs), palm jaggery (Rs. 2·6 lakhs), cottage-type match factory (Rs. 7 lakhs), oil pressing (Rs. 1·8 lakhs) and assistance to village industries and artisans (Rs. 4 lakhs). A provision of Rs. 10 lakhs has also been made for the development of various handicrafts such as lace embroidery, glazed ceramic wares, fancy leather goods, carpets, cloth dolls, wood carving, etc. With a view to provide immediate additional employment in the rural sector, the Khadi programme is being accelerated. We have made a start with the Ambar Charka programme and it is proposed to set up 12,000 Ambar Charkas during this year. Khadi worth about Rs. 125 lakhs is expected to be produced during the year, and a provision of Rs. 35 lakhs has been made in the Budget towards the net cost of the schemes.

**Handloom.**

18. The needs of the handloom industry continue to receive the close attention of the Government. The various schemes already in force such as loans for working capital, rebate on sales, organization of

sales depots are all being continued. In order to ensure the regular supply of yarn to weavers, it is proposed to start two Co-operative Spinning Mills, one at Tirunelveli and the other at Srivilliputtur. A provision of Rs. 146 lakhs has been made in the Budget for the benefit of handloom weavers and let us hope that the industry will maintain its present satisfactory progress.

Housing.

19. Under the subsidized industrial housing scheme, a provision of Rs. 12½ lakhs has been made for private managements, and Rs. 3 lakhs for co-operative societies. The City Improvement Trust and the various local bodies will be advanced about Rs. 15 lakhs under the low-income group housing scheme. A sum of Rs. 20 lakhs has been set apart towards slum clearance in the City of Madras. The accumulation in the Madras Cyclone Relief Fund, 1955, amounting to about Rs. 20 lakhs will be spent on a scheme of rural housing in the cyclone-affected districts of Ramanathapuram, Madurai, Tiruchirappalli and Tanjore. The police housing scheme, under which we are constructing living quarters to the subordinate ranks of the police, is making fair progress, and a sum of Rs. 80 lakhs has been set apart in the Budget for that purpose. A provision of about Rs. 37 lakhs has also been made towards loans to house-building societies.

Roads.

20. A heavy programme of new construction of roads, costing this Government about Rs. 102 lakhs in the current year, is being taken up. Fifty-eight other new works estimated to cost about Rs. 103 lakhs have also been sanctioned from out of funds at the credit of this Government in the Central Road Fund. A bridge over the Cauvery on the Southern Trunk Road, costing about Rs. 40 lakhs, is under construction. The investigation of the Pamban Bridge which may cost over a crore of rupees, is making progress.



Four hundred and seventy miles of major district roads now in charge of district boards will be taken over by the Government for maintenance to afford some relief to district boards.

Medical.

21. In selecting new schemes on the medical side, special emphasis is now being laid on the rural sector. Of the 140 primary health centres contemplated in the Plan, 28 were opened last year, another 28 will be started in the current year, and a provision of Rs. 18·6 lakhs has been made. These rural medical units can function efficiently only if the Taluk Headquarters Hospitals to which they are attached are developed, and a sum of Rs. 11·3 lakhs has been allotted for improvements to 22 such hospitals in all the districts. The Local Fund Hospitals at Nilakottai, Gingee, Tiruppattur (Ramanathapuram district), Omalur and Kulittalai will be taken over by the Government for direct management. Work on the new District Headquarters Hospital at Palayamkottai, estimated to cost Rs. 23 lakhs, will commence in the current year, and a small provision has been made for that purpose. Improvements to District Headquarters Hospitals at Chingleput, Cuddalore, Tiruchirappalli, Coimbatore and Vellore costing Rs. 14·9 lakhs will be carried out during the year. The needs of the teaching hospitals are also being met adequately with allotment of Rs. 29·8 lakhs for Madurai Medical College, Rs. 11·5 lakhs for the Madras Medical College and Rs. 3·4 lakhs to the Stanley Medical College. Provision has also been made for training, in addition to the normal programme, about 200 nurses, 200 pharmacists, 200 technicians, 200 maternity assistants and 30 opticians.

Public health.

22. The Urban Water-supply Scheme, covering about 15 Municipalities, is making appreciable

progress, even though there is difficulty in securing all the pipes needed, and an outlay of about Rs. 93 lakhs is programmed for the year. The Rural Water-supply Programme, consisting mainly of the digging of wells and the composite protected water-supply schemes for the deltaic regions, are being continued at a cost of Rs. 40 lakhs and Rs. 20·5 lakhs, respectively. Amongst other Public Health Schemes, mention may be made of the opening of 96 new maternity and child-welfare centres at a cost of Rs. 4·7 lakhs, and 79 Family Planning Clinics at a cost of Rs. 4·1 lakhs.

Education. 23. The recommendations of the Committee of this Legislature on Educational Policy are now under examination. In the meanwhile, a provision of about Rs. 20 lakhs has been made for the opening of additional classes, Rs. 10 lakhs for the conversion of elementary schools into basic schools, and Rs. 23 lakhs for the conversion of ordinary training schools into basic training schools. We have stepped up enrolment by over one lakh last year and this tempo will be maintained. I should refer, in this connexion, to the provision of Rs. 10 lakhs for the supply of midday meals to poor children in primary schools. The Legislature Committee on Education has recommended that this concession should be an essential feature of a phased programme of implementation of Article 45 of the Constitution, and a beginning is proposed to be made this year. The increase in the emoluments of non-gazetted employees of Government has been made applicable to school teachers generally, and the cost in respect of primary school teachers will be of the order of Rs. 132 lakhs.

Technical education. 24. The successful implementation of the Second Plan with its heavy programme of industrial development calls for special emphasis on Technical



| VII. Housing .. .. .. .. | 2,79 | 71 | 90 |
| VIII. Welfare of Backward Classes .. | 4,98 | 1,37 | 81 |
| IX. Labour and Labour Welfare .. | 58 | 1 | 5 |
| X. Social and Women's Welfare .. | 74 | 1 | 2 |
| XI. Miscellaneous .. .. .. | 2,06 | 13 | 27 |
| *Add*—(i) Surplus provision for which schemes have yet to be worked out. | 5 | .. | .. |
| (ii) Allotment from Kerala Plan for the areas transferred to Madras. | 390 | .. | .. |
| Grand Total .. | 152,26 | 28,87 | 31,79 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## Monday, 1st July 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Cash contribution for local development works.*

* 37 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the total cash contribution realised from the Public for the Local Development works in 1954-55 and 1955-56?

THE HON. SRI C. SUBRAMANIAM : The cash contributions realised from the public for works taken up under the Local Development Works Programme are as follows :—

| Year. (1) | Amount of cash contribution realized. (2) |
|---|---|
| | RS. |
| 1954-55 .. .. | 5,40,592 (Rupees five lakhs, forty thousand five hundred and ninety-two only.) |
| 1955-56 .. .. | 5,59,825 (Rupees five lakhs, fifty-nine thousand eight hundred and twenty-five only.) |

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் வேலைக்கு மக்கள், செலவுத் தொகையில் நான்கிலொரு பங்கைக் கட்டவேண்டுமென்று விதி இருக்கிறது. கிராமப் பகுதிகளில் பெரும்பாலான மக்கள் வறுமையில் இருக்கிற காரணத்தால், அவர்களுடைய பங்குத் தொகையைக் கட்ட முடியவில்லை. ஆகவே, எந்த விதமான அபிவிருத்தித் திட்டமும் இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் நடக்காமலிருக்கின்றன. ஆகவே, சர்க்கார் நான்கிலொரு பங்கு பணம் வாங்குவதற்குப் பதிலாக நான்கிலொரு பாகம் வேலை செய்து ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென்று உத்திரவிட முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொன்ன யோசனை முன்னாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறையில் அவ்வாறு தான் நடந்துகொண்டு வருகிறது. ரொக்கமாக மக்களிடமிருந்து பெற்றதற்கானபுள்ளி விவரம் நான் இப்பொழுது கொடுத்தது, இது தவிர வேலை செய்தும், வேறு சாமான்கள் கொடுத்தும் இருக்கிறார்கள். 1954-55-ல் ரூ. 33,53,023ம், 1955-56-ல் ரூ. 71,02,257-ம் பொருமான வேலையும் சாமான்களும் மக்களிடமிருந்து கிடைத்திருக்கிறது. 1955-55-ல் ரூ. 1,12,20,004 பொருமான வேலையும், 1955-56-ல் ரூ. 2,31,81,423 பொருமான வேலையும் நடைபெற்றிருக்கின்றன. அப்படியிருக்கும்போது, கனம் அங்கத்தினர், 'அபிவிருத்தி வேலை ஒன்றுமே நடைபெறவில்லை' என்று சொல்வது இருப்பதை மறைப்பதாகும்.

**Sri M. JAGANNATHAN :** ஹரிஜனங்களைப் பொறுத்த மட்டில், நான்கிலொரு பாகம் கட்டவேண்டியது அவசியம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தபோதிலும், ஹரிஜனங்கள் வாழ்கின்ற பகுதிகளாகிய சேரிகளில், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், எந்த விதமான வேலையும் நம்முடைய மாகாணத்தில் செய்யப்படவில்லை என்பது உண்மைதானா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ஹரிஜனங்களுக்கும் நிறைய செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு இடத்திலும் செயயப்பட்டிருக்கிறதென்று சொல்வதற்கு நான் தயாராயில்லை. ஹரிஜனங்கள், குடிதண்ணீரைப் பொறுத்த வரையில்தான், எந்த விதமான பணமும் கட்டவேண்டிய அவசியம் இல்லை. மற்ற திட்டங்களுக்கு அவர்கள் ஏதாவது ஓரளவு உதவி செய்துதான் ஆகவேண்டும். ஆகையால், ஹரிஜனங்கள் வாழ் சேரியில் வேலைகள் நடக்கவில்லை என்று கனம் அங்கத்தினர் சொல்வது சரி அல்ல.

**Sri N. R. THIAGARAJAN :** எல்லா ஜில்லாக்களிலும் சர்க்காரிலிருந்து 50 பர்சென்ட் உதவியும், ஜில்லா போர்டிலிருந்து 25 பர்சென்ட்டும், பொது ஜனங்களிடமிருந்து 25 பர்சென்ட்டும் என்று இருக்க, மதுரை ஜில்லாவில் மட்டும் 40 பர்சென்ட் தான் சர்க்கார் உதவி, ஜில்லா போர்டிலிருந்து 25 பர்சென்ட், பொது ஜனங்களிடமிருந்து 35 பர்சென்ட் என்று உத்திரவு போட்டிருப்பது காரணமாக, மதுரை ஜில்லாவிலே இத்தகைய ஸ்தல அபிவிருத்தித் திட்ட வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றரை லட்ச ரூபாய்க்கு மேல் "சரண்டர்" செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற்படி உத்திரவைத் திருத்தி, மதுரை ஜில்லாவிலும் சர்க்கார் உதவி 50 பர்சென்ட் இருக்குமாறு உத்திரவு போடப்படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** மதுரை ஜில்லாவில் சர்க்காருடைய பங்கு 40 பர்சென்ட் தான் என்று எப்படி நிர்ணயித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சர்க்கார் பங்கைப் பொறுத்த வரையில், எல்லா இடங்களிலும் 50 பர்சென்ட் கொடுக்க உத்திரவிட்டிருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்கள் எவ்வளவு கொடுப்பது என்பது அந்தந்த ஜில்லாவிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் பண வசதியைப் பொருத்து இருக்கிறது.

**Sri V. K. RAMASWAMY MUDALIAR :** Can the Hon. the Minister tell whether there was any amount from out of the Central grants which was allowed to lapse?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கொடுத்ததற்கு மேல் செலவழித்திருக்கிறோமேயொழிய, ஒன்றும் "லாப்ஸ்" ஆகவில்லை.

**Sri S. NAGARAJA MONIGAR :** இந்தத் திட்டத்தின் கீழ், ஜனங்களிடமிருந்து ரொக்கப் பணத்திற்குப் பதிலாக, சிரமம் மூலமாகவும், சாமான்கள் மூலமாகவும் உதவியை சர்க்கார் எதிர்பார்க்கிறது என்பது உண்மை அல்லவா ?

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ், சேலம் ஜில்லாவில், இப்பொழுது உள்ள நிலையில் கட்டிடங்கள் கட்டி முடிப்பதற்கு வேண்டிய அளவு பணம் வேண்டுமென்று கோரியும், பணம் கிடைக்கவில்லை என்று பல விண்ணப்பங்கள் சர்க்காருக்கு வந்திருக்கின்றன என்பது உண்மையா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** நான் முன்னாலே சொன்ன பிரகாரம், சிரமதானம் மூலமாகவும், சாமான்கள், கருவிகள் கொடுப்பதன் மூலமாகவும் அதிகமான வேலை நடந்திருக்கிறது. சேலம் ஜில்லாவில் மாத்திரமல்ல, மற்ற ஜில்லாக்களிலும் இன்னும் வேலைகள் அதிகமாக செய்யப்பட வேண்டுமென்று மக்கள் கோருகின்றார்கள்.

**Sri T. S. RAMASWAMI PILLAI :** அரசாங்கத்தினுடைய பகுதி 50 சதமானம் என்று குறிப்பிட்டார்கள். கன்யாகுமரி ஜில்லாவில் ஜில்லா போர்டு இல்லாத காரணத்தால், அங்கு எந்த ஸ்தாபனத்திடமிருந்து இந்த 25 சதமானம் பெறப்படுகிறது ? ஜனங்களிடமிருந்து எத்தனை சதமானம் கோரப்படுகிறது என்று கனம் அமைச்சரவர்கள் சொல்வார்களா ?



**The Hon. Sri C. SUBRAMANIAM :** கன்யாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில், அப்பகுதி திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தோடு சேர்ந்திருந்தபோது சர்க்கார் 2-3 தொகையும், மக்கள் 1-3 தொகையும் கொடுத்து வந்தார்கள். அதே முறையை இன்னும் அனுஷ்டிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**Sri K. R. VISWANATHAN :** அவைத் தலைவர் அவர்களே, இட வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிதண்ணீர் வசதித் திட்டங்களுக்கு ஹரிஜன மக்கள் எப்படி ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்ற விதி இருக்கிறதோ, அதே போல், பிற்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களிலும், குடிதண்ணீர் வசதியைப் பொறுத்த மட்டில், ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்ற விதியை ஏற்படுத்தி, பிற்பட்ட மக்களுக்கும் அச்சலுகை காட்டப்பட்டு வருகிறதா? அத்துடன், இப்பொழுது ரோடு வசதி திட்டங்களிலும் ஹரிஜனங்களுக்கு சலுகை காட்டப்படுவது போல, அதாவது ஹரி ஜனங்கள் பத்து சத விகிதம் கொடுத்து உதவினால் போதும் என்ற முறை இருக்கிறதைப்போல, பிற்பட்ட மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலும், இட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரோடு போடும் திட்டங்களில் ஹரிஜனங்களுக்குள்ள சலுகையை பிற்பட்ட மக்களும் பெற சர்க்கார் வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** ஹரிஜனங்களைப் பொருத்த மட்டில், அவர்கள் தனிப்பட்ட இடங்களிலே வசிக்கின்றார்கள். ஆகையால் அவர்களுக்கென்று இன்ன இன்ன வேலைகள் என்று தனியாக ஒதுக்கி விட முடியும். ஆனால், அதுபோல் பிற்பட்ட வகுப்பினர் தனியாக வசிக்கும் பிரதேசம் ரொம்பக் குறைவு. எந்த இடத்திலாவது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சேர்ந்து வசித்தாலும், ஹரிஜனங்களைவிட அவர்கள் பொருளாதார நிலைமையில் உயர்ந்திருப்பதனால், இந்த ஓரளவு பங்கையாவது அவர்கள் கொடுப்பது நியாயம் என்று சர்க்கார் கருதுகின்றது. ஆகையால், அந்த அடிப்படையில்தான் வேலை நடைபெறுகிறது.

**Sri M. JAGANNATHAN :** ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலைகளுக்கு மக்கள் $\frac{1}{4}$ பங்கு பணம் கட்டலாம், அல்லது $\frac{1}{4}$ பங்கு உழைப்பு மூலமாகச் செலுத்தலாம் என்ற விதி இருந்தாலும், குறிப்பாக தென்னாற்காடு போன்ற ஜில்லாக்களில் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் அதிகாரிகள், $\frac{1}{4}$ பங்கு பணம்தான் கட்ட வேண்டுமென்று வற்புறுத்துகிற காரணத்தாலும், ஏழை மக்கள் பணம் கட்ட முடியாத காரணத்தாலும் எந்த விதமான அபிவிருத்தி வேலையும் நடைபெற முடியவில்லை. குறிப்பாக, தென்னாற்காடு ஜில்லாவில், எந்த விதமான அபிவிருத்தி வேலையும் நடக்கவில்லை என்று சர்க்காருக்குத் தெரியுமா ? இதை நிவர்த்திக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** குறிப்பாக எந்த இடத்திலாவது இம்மாதிரி நடந்திருப்பதாக கனம் அங்கத்தினர் தெரிவித்தால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

**Sri T. T. DANIEL :** May I know from the Hon. Minister the total cash contribution realised from the public in Kaniyakumari district?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** I would like to have notice.

**Sri T. M. NALLASWAMI :** ஸ்தல அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காக திருச்சி ஜில்லா போர்டும் இதுவரை "25 சதவீதம் கொடுத்து வந்தது. ஆனால், சமீபத்திலே, ஜில்லா போர்டு நிதியிலிருந்து "25 சதமானம் கொடுக்கவேண்டாம்" என்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அவ்வாறு உத்திரவு பிறப்பித்ததினால், பல வேலைகள் செய்ய முடியாமல் நின்றுவிட்டன. ஆகவே, சமீபத்தில் போட்ட உத்தரவை ரத்து செய்து, பழையபடி ஜில்லா போர்டு நிதியிலிருந்தும் 25 சதவீதம் ஸ்தல அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காக கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் உத்திரவு பிறப்பிப்பார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஜில்லா போர்டினிடத்திலே நிதி இருந்தால், சர்க்காரை எதிர்பார்க்காமலேயே இத்திட்டங்களுக்குக் கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பதற்கு ஜில்லா போர்டினிடத்திலே நிதி வசதி இருந்தால், இப்பொழுதே இந்த உத்திரவை மாற்றுவதற்கு சர்க்கார் தயாராக இருக்கும்.

**SRI K. SATTANATHA KARAYALAR** : சில இடங்களில் மக்கள் நாலில் ஒரு பங்கு கொடுக்கவேண்டுமென்று இருப்பதை ஏமாற்றுவதற்காக தொகை எஸ்டிமேட்டில் கூட்டிப் போட்டு தனி நபர் யாராவது காண்டிராக்ட் எடுக்கச் செய்வதன் மூலம் ஏமாற்று வேலை நடப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : அதுமாதிரி சில இடங்களில் இருக்கலாம். ஆனால் அதுமாதிரி எல்லா இடங்களிலும் நடப்பதாகச் சொல்வது தவறு. அது மாதிரி எங்காவது நடந்திருப்பது தெரிந்தால் சர்க்காரின் கவனத்திற்கு வரும் பட்சத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

**SRI A. VEDARATHNAM PILLAI** : கடந்த 52-ம் வருஷத்திலும், 55-ம் வருஷத்திலும் தஞ்சாவூர், ராமநாதபுரம் ஜில்லாக்களில் பலத்த புயல் வீசியதன் காரணமாக இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் எல்லாம் பல மாதங்கள் நிறுத்தி வைக்கப்பட நேர்ந்தது அரசாங்கத்திற்குத் தெரியும். அந்த மாதிரி நிறுத்தி வைக்கப்பட்ட இடங்களில் ஐந்தாண்டு காலத்திற்குள் திட்டம் முடியாவிட்டாலும் இன்னும் சிறிது காலம் நீட்டி அதற்குள் முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அவ்வாறு நீட்டிக்கொடுப்பதானால் எவ்வளவு காலம் நீட்டிக்கொடுக்கப்படும் என்றும் அறிவிப்பார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : அந்த மாதிரி இடங்களில் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். அந்த இடங்களில் திட்டப் பிரகாரம் தான் வேலை நடக்கும். ஏதோ ஒரு காரணத்திற்காக காலத்தை நீட்டிக்கொண்டு போவது என்பது கஷ்டம். இதில் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் தேசிய அபிவிருத்தி வேலை, சமுதாய நலத் திட்டம் என்பவைகள் எல்லா இடங்களிலும் விஸ்தரிக்கப்படுகின்றன. ஆகவே ஸ்தலத் திட்டங்கள் அநேக இடங்களில் சுருங்கிக் கொண்டு வருகின்றன. சென்ற வருஷ அளவுக்கு இந்த வருஷம் ஒதுக்க வைப்பதற்குப் போதுமான பணம் இல்லை. அவசியமும் இல்லை என்று கருதுகிறேன்.

**SRI K. RAMACHANDRAN** : மக்களிடமிருந்து நாலில் ஒரு பங்கு தொகையோ அல்லது உழைப்போ பெறுவது இப்போது நீதியாக இருக்கும் போது ராமநாதபுரம் ஜில்லாவில் அதிகாரிகள் மக்கள் உழைப்புக்கு முதலில் இடம் கொடுக்கமாட்டோம், தொகைதான் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி ஏதாவது சர்க்கார் உத்திரவு உண்டா என்று கேட்கிறேன் ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கூடிய வரையில் சிரம தானம் மூலமாக செய்யவேண்டுமென்று தான் கொள்கை. அங்குள்ள அதிகாரிகள் வேறு விதமாகச் சொல்லியிருந்தால், அது பற்றி தகவல் கிடைத்தால் கவனிக்கிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN** : ஸ்தல அபிவிருத்தித் திட்ட வேலை சீக்கிரமாக முடிவதற்கு பிர்க்கா அடிப்படையில், கிராம அடிப்படையில் சர்வ கட்சி கமிட்டிகளை அமைத்து அதன் மூலம் சரியான முறையில் அவ் வேலைகளைக் கண்காணிப்பதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்பொழுதே ரொம்ப நன்றாக நடந்து வருவதாகத் தான் எல்லோரும் கருதுகிறார்கள். சர்வ கட்சிக் கமிட்டியைப் போட்டு குழப்பத்தை உண்டாக்கவேண்டாமென்று நினைக்கிறேன்.

**SRI K. R. VISWANATHAN** : பொருளாதாரத் துறையில் பின் தங்கிய பிரதேசங்களில் வறண்ட பிரதேசங்களில் வாழ்கின்ற பிற்பட்ட மக்களும், ஹரிஜன மக்களும் ஒரே நிலையில் தானிருக்கிறார்கள் என்பதை





அரசாங்கத்தார் உணர்வார்கள். ஆகவே ஹரிஜனங்களுக்கு உள்ளதுபோல, பிற்பட்ட மக்களுக்கும் ரோடு போடுவதில் அந்தச் சலுகையைத் தர சர்க்கார் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : வரண்ட பிரதேசங்களில் இருக்கக்கூடிய மக்கள் வேலை இல்லாமல் இருக்கக் கூடிய ஓய்வு காலம் நிறைய இருக்கிறது. பணத்தின் மூலமாக நாலில் ஒரு பங்கு கொடுக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லாமல் இருந்தாலும் உழைப்பின் மூலமாக அதற்கு வேண்டிடிய தொகையைக் கொடுக்க அவர்களால் முடியும். உழைப்பின் மூலமாக வாவது தங்கள் பகுதியைச் செலுத்துவதற்கு பிற்பட்ட பிரதேசங்களில் இருப்பவர்கள் முன் வர வேண்டும். அதற்கு வேண்டிய வசதி இருக்கிறதென்றுதான் கருதுகிறேன்.

**SRI M. S. SELVARAJAN** : ஸ்தல அபிவிருத்தி வேலைகளை இவ் வருஷமும் தொடர்ந்து நடத்துவதற்கு மத்திய சர்க்கார் மானியம் ஒதுக்கி இருக்கிறார்களா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : சென்ற வருஷம் போல அதிக அளவில் ஒதுக்கவில்லை என்றாலும், இந்த வருஷமும் சிறிய அளவில் ஒதுக்கியிருக்கிறார்கள்.

### *Rise of paddy price in Tanjore.*

* 38 *Q*.—SRI A. VEDARATHNAM PILLAI (on behalf of Sri M. D. Thiyagaraja Pillai) : **Will the Hon. the Minister for Home be pleased to state—**

**(*a*) the present price of paddy and rice in Tanjore; and**

(*b*) the steps the Government propose to take to keep the price at a fair level?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the statement made on the floor of the House on 5th May 1957 by the Minister for Finance on behalf of the Minister for Home, with reference to the notice of motion given by him under Rule 40 of the Madras **Assembly Rules regarding the sudden rise in the price of paddy and rice in Tanjore district and the steps taken by the Government to stop it.**

**SRI T. SAMPATH** : நெல்லுக்கு உயர்ந்த பட்ச விலையையும், குறைந்தபட்ச விலையையும் நிர்ணயிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தற்காலம் அந்த உத்தேசம் இல்லை.

**SRI N. K. PALANISAMI** : உணவு விலையைக் குறைப்பதற்கு ஜோன்கள் ஏற்படுத்துவது ஒரு நல்ல முறை. ஆகவே இந்த ஜோன்களுக்கு ஏற்பாடு செய்வதைப் பற்றி மத்திய சர்க்காரிடமிருந்து தகவல் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "ஜோன் ஏற்படுத்துவதா ? எவ்வாறு ஏற்படுத்துவது?" என்பது பற்றி இன்னும் ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அது பற்றி முடிவு செய்யவில்லை. வருகிற ஜூலை மாதம் மூன்றாம் தேதி தென் பிராந்திய மண்டல உணவு அமைச்சர்கள், மத்திய சர்க்கார் அமைச்சர் ஆகியோர் கூடி இதைப் பற்றிப் பேசப் போகிறார்கள்.

**SRI S. PAKKIRISWAMI PILLAI** : கனம் நிதி அமைச்சர் தன்னுடைய ரிப்போர்ட்டில் அதன் விலை என்ன என்பதைப்பற்றி அன்றைய தினம் சொன்னாலும் கூட இப்போது இருக்கும்படியான அரிசி நெல் இவற்றின் சராசரி விலை எவ்வளவு என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அறுவடை முடிந்தவுடன் விலை குறைந்து எப்ரல் விலைக்கு ஏறக்குறைய வரும். ஆனால் இப்போது அரிசி மணங்கு விலை 21 ரூபாய் சொச்சம். நெல் மணங்கு பதிமூன்று ரூபாய் இருபது நயா பைசா.

SRI A. VEDARATHNAM PILLAI : தஞ்சாவூர் ஜில்லாவில் இருந்து ஏராளமான அரிசி, நெல் மூட்டைகள் லாரிகளின் மூலமாக மலையாளத்திற்குச் சென்று அங்கிருந்து லட்சத் தீவிற்கும், லட்சத் தீவில் இருந்து பாகிஸ்தான், கோவா முதலிய இடங்களுக்கும் கொண்டு போகப் படுவது கனம் மந்திரி அவர்களுக்கு தெரியுமா? இதைத் தடுக்க அரசாங்கம் முயற்ச்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூரில் இருந்து கேரள நாட்டுக்குக் கொண்டுப் போவது தெரியும். அங்கிருந்து வேறு பிரதேசங்களுக்குப் போவது பற்றி தகவல் இல்லை. ஆனால் இதைப்பற்றியும் கவனிக்கும்படியாக மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லியிருக்கிறோம்.

SRI M. P. SUBRAMANIAM : உணவு தானிய விலையைப்பற்றி கவனித்து வருவதற்காக அரசாங்க உத்யோகஸ்தர் கொண்ட கமிட்டியை ஏற்படுத்தி இருப்பதாக முன்பு அறிவிக்கப்பட்டது. இப்போது இருக்கிற நெல் விலை அதிகம் என்று அந்தக் கமிட்டி கருதுகிறதா? அல்லது குறைவு என்று கருதுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இருக்கிற நெல் விலை குறைவு என்று கருதவில்லை, இதைவிட அதிகம் போகக் கூடாதென்றே கவலைப்படுகிறோம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, உணவு உற்பத்தி சிறிது சிறிதாக அதிகமாகி வருகிறது என்கிற தகவலைத் தருகின்ற அதே அரசாங்கம் உணவின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு போகிறது என்று சொல்வது ஒன்றுக்கொன்று முரணாக இல்லையா? இதற்குக் காரணம் என்ன? எந்த இடத்தில் தவறுகள் இருக்கின்றன என்பதை உடனடியாகக் கவனிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உணவு உற்பத்தி அதிகப்படுவது போல உணவை உட்கொள்ளுகிறவர்கள் அதிகப்பட்டு வருகிறார்கள். நமது ராஜ்யத்தில் போதிய உணவு உற்பத்தியானாலும் வேறு ராஜ்யங்களுக்கும் எவ்விதக் கட்டுப்பாடும் நிபந்தனையும் இன்றி கொண்டுபோவது அனுமதிக்கப்படுவதால் இந்த விலையேற்றம் ஏற்படுகிறது.

SRI N. K. PALANISAMI : நமது முதல் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் தஞ்சாவூருக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறார்கள். அங்கு ஏராளமான ஸ்டாக் இருப்பதைப் பார்த்திருப்பார்கள். பெரிய வியாபாரிகள் அறுவடைக் காலத்தில் விலை குறைவாக இருந்தபோது ஸ்டாக்கைச் சேர்த்துக் கொண்டு விலை அதிகமாக உள்ள இப்போது வெளியிடுகிறார்கள் என்பதும் தெரியுமா? இதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது என்னிடம் இருக்கும் தகவலில் இருந்து தஞ்சாவூரில் அரிசி ஸ்டாக் அதிகம் இல்லை என்று புலப்படுகிறது.

SRI V. K. RAMASWAMI MUDALIAR : சில இடங்களில் தானியமானது அதிகமாக இருப்பதாகவும் அதை வாங்குவதற்கு வியாபாரிகள் வரவில்லை என்றும் புகார் சொல்லப்படுகிறது. காரணம் என்னவென்றால் ஒரு விலை நிர்ணயிக்கப்போகிறார்கள், அந்த விலை என்று சரிவரத் தெரியும் வரையில் தானியத்தைக் கொள்முதல் செய்வதால் நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படும் என்பதற்காக யாரும் நெல்லை வாங்குவதற்கு முன்வராமல் அச்சப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே சீக்கிரத்திலேயே ஒரு விலையை நிர்ணயிப்பார்களா ?



THE HON. SRI M. BHAKTAVATSALAM : எப்போது சர்க்கார் நிர்ணயிக்கக்கூடும் என்று சொல்வதற்கு இல்லை. தான்யக்கொள்முதல் செய்கிறவர்களில் ஸ்டாக் வைத்துக்கொள்ளுகிறவர்களுக்குத்தான் விலை நிர்ணயம் பற்றி அச்சம் ஏற்படக்கூடும். அவர்களைப் பற்றி அரசாங்கத்திற்குக் கவலையில்லை.

SRI S. B. ADITYAN : நியாய விலைக் கடைகளை எல்லா ஜில்லாக் 9.2
களிலும் திறப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துவருகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடியவரையில் நியாய விலைக்கடைகள் எல்லா ஜில்லாக்களிலும் திறக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுதான் வருகிறது.

SRI A. GOVINDASWAMI : இப்போது திறக்கப்பட்டிருக்கும் நியாய விலைக்கடைகளி எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால், எந்த எந்த இடங்களில் விவசாயிகளாக இல்லாமல் கைத்தறி நெசவாளர்களாகவும், தொழிலாளர்களாகவும் உள்ள மககள் அதிகமாக இருக்கின்றனரோ அந்த இடங்களிலெல்லாம் அவசியம் நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எங்கே விவசாயிகளாக இல்லாத தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்றனரோ அங்கே அதிகமாக நியாய விலைக் கடைகளைத் திறப்பதில்தான் அரசாங்கம் கவனம் செலுத்திவருகிறது.

SRI M. JAGANNATHAN : தஞ்சாவூர் ஜில்லாவல் மாத்திரம் அரிசிக்கும் நெல்லுக்கும் திடீரென்று அதிகமான "டிமாண்ட்" ஏற்பட்டதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் சொல்லுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காரணம், தஞ்சாவூ ஜில்லாவில் அவை அதிகமாக உற்பத்தியாகின்றன. அதிகமாக உற்பத்தியாகிற அந்த இடத்துக்கு கேரள ராஜ்யத்திலிருந்தும் மற்ற ராஜ்யங்களிலிருந்தும் "டிமாண்ட்" அதிகமாகி வருகிறது

SRI V. K. KOTHANDARAMAN : மக்கள் உணவு உட்கொள்ளவது. அதிகமாகிவிட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அப்படி என்றால், மக்களுடைய வயிறுகள் பெரிதாகப் போயிவிட்டனவா அல்லது அவர்கள் உணவு உட்கொள்ளும் முறையில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள நாங்கள் ஆசைப்படுகிறோம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உணவுப் பற்றுக் குறையைச் சமாளிப்பதற்கு கண்ட்ரோல் முறை இருந்தபோது மக்களுககு ஆறு அவுன்ஸ் அல்லது ஏழு அவுன்ஸ் அரிசி கொடுக்கப்பட்டது. அதன் காரணமாக அப்போது ஆறு அவுன்ஸ் ஏழு அவுன்ஸ் என்ற பெயர்கள் கொடுக்கப்பட்டதும் கனம் அங்கத்தினருக்கு ஞாபகம் இருக்கும். இப்போது என்மதிப்புப் படி 12 அவுன்ஸ் உட்கொள்ளப்படுகிறது. 16 அவுன்ஸ் உட்கொள்ள வேண்டும் என்று தான் திட்டம் வகுத்து நிறைவேற்ற பார்க்கிறோம். மேலும், ஜனத்தொகையும் அதிகமாகப் பெருகி வருகிறது.

### *Representation of Pensioners' Association*

* 39 Q.—SRI K. R. VISWANATHAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation, dated 6th May 1957, from the State Pensioners' Association about the inadequacy of the recent enhancement in the pension: and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No.

(b) The question does not arise.

*Footwear and Match Factory.*

*40 Q.—SRI S. PAKKIRISWAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of factories opened for (a) footwear and (b) match (i) in the Madras State and (ii) in the City of Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : (i) The Government have started a footwear unit at Gandhigram and a chappal unit at Erode and are taking steps to set up three Footwear Training-*cum*-Production Centres at Pallavaram, Salem and Madurai, a Model Footwear and Leather Goods Unit at Erode and 5 'D' class match factories in the lower Bhavani Pilot Project area.

(ii) The Government have started two footwear units in the Madras City, one at Perambur and the other at Triplicane and a Hand-made Match Factory at Perambur.

SRI S. PAKKIRISWAMI PILLAI : சென்னையில் திறக்கப்பட்டிருக்கும் இரண்டு செருப்புத் தைக்கும் நிலையங்களிலும் எத்தனை பேர்கள் வேலைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவைகளில் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டியவர்களுக்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் என்னென்ன? மேலும், தீக்குச்சித் தொழிற்சாலைகளில் யார் யாரை வேலைக்கு அனுமதிக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது வேலை செய்பவர்கள் 20 பேர். அவர்களைத் தேர்ந்தெடுப்பவர் ஸ்ரீ இரிகாஸ் பைரேட் என்ற ஒரு ஜெர்மன் நிபுணர். பொதுவாக, இந்தத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

SRI A. A. RASHEED : Will the Hon. Minister take suitable steps to popularize the use of footwear as many people go bare-footed in Madras?

MR. SPEAKER : He has enough work otherwise.

THE HON. SRI R. VENKATARAMAN : I don't know what the hon. Member means. I am willing to advertise for sale of the footwear manufactured by our units.

SRI K. ANBAZHAGAN : தீப்பெட்டித் தொழிற்சாலை இன்று அரசாங்கத்தின் மூலமாக வளர்க்கப்படவேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தால்தான் பெரம்பூரில் அந்தத்தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறதா? சிவகாசியில் அந்தத் தொழில் மிகச் சிறப்பான முறையில் வளர்ந்து இந்த நாட்டின் தேவையை ஓரளவு நல்ல முறையில் நிறைவேற்றும் நேரத்தில் சிறிய அளவில் அரசாங்கம் ஒரு தொழிற்சாலையை அமைக்க வேண்டிய தன் அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : பெரம்பூரில் இருக்கிற தீப்பெட்டித் தொழிற்சாலையானது எளிய மக்களுக்கு ஏதாவது வேலை தேடிக்கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் சுமார் 900 பேருக்கு வேலை கிடைக்கிறது.

SRI S. NAGARAJA MONIGAR : பவானிசாகர் பிரதேசம் புதிதாக ஜனங்கள் வந்து குடியேறும் பிரதேசம். மேலும் அங்கே மின்சார உற்பத்தியோ மின்சார வசதியோ கிடையாது. அது நீர்ப்பாசன வசதியுள்ள இடம். அந்தப் பிரதேசத்தில் அதிகமாகத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்குக் காரணம் என்ன என்று கனம் மந்திரி அவர்கள் அறிவிக்க முடியுமா?



THE HON. SRI R. VENKATARAMAN : பவானிசாகரில் வசதிகள் அதிகமாக இருக்கின்றன என்ற காரணத்தினால்தான் அந்தப் பிரதேசத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

SRI M. JAGANNATHAN : சென்னையில் இருக்கிற "கவர்மெண்ட் இன்ஸ்டிட்யூட்டு ஆப் லெதர் டெக்னாலஜி" என்ற தோல் தொழிற்சாலையில் படித்துத் தேர்ச்சி பெற்ற அனேக மாணவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் தாங்கள் ஆரம்பித்திருக்கும் காலனிகள் செய்யும் தொழிற்சாலைகளில் அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சென்னையிலுள்ள "லெதர் ரிஸெர்ச் இன்ஸ்டிட்யூட்டில்" படித்தவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்பது எனக்கு தெரியாது. அதைப்பற்றி தனிக்கேள்வி போட்டால் அது உண்மையா என்று நாங்கள் பரிசீலிக்க முடியும். ஆனால், இப்போது பெரம்பூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலை அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக இல்லை. தோல் வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கும், செருப்புகள் செய்து கொண்டிருப்பவர்களுக்கும் அங்கே வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : திருச்சியில் தோல் பதனிடும் தொழிலாளிகள் நிறைய இருக்கும் காரணத்தால், தோல்கள் சம்பந்தப்பட்ட தொழில்களை அங்கே நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது இந்த தொழிலை திருச்சியில் ஆரம்பிப்பதற்கு எந்த திட்டமும் இல்லை. இதைப் பற்றி கனம் அங்கத்தினர் ஏதாவது விஷயம் தெரிவித்தால் சர்க்கார் அதைக் கவனிக்கும்.

SRI A. GOVINDASWAMI : ரஷியாவிற்கு வேண்டிய பூட்சுகளை தைத்துக் கொடுப்பதற்கு இந்திய சர்க்கார் பொறுப்பேற்று சென்னையிலுள்ள ஒரு கம்பெனிக்கு அந்தப் பொறுப்பைக்கொடுத்து, அந்த கம்பெனி பூட்ஸ்களைத் தைத்த பிறகு அவை வேண்டாம் என்று நிராகரித்துவிட்டது நம் சர்க்காருக்கு தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பெரம்பூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தீக்குச்சித்தொழிற்சாலையானது அங்குள்ள ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே முறையில் தஞ்சாவூர் ஜில்லாவில் ஜன நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அங்கே வருடத்தில் மூன்று மாதம் தான் (விவசாயத்) தொழிலாளர்களுக்கு வேலை இருக்கிறது. மற்ற காலங்களில் அவர்கள் சும்மா இருப்பதால் அங்குத் தீக்குச்சித்தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நமது ராஜ்யத்தில் எல்லாப் பகுதிகளிலும் சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தான் சர்க்கார் விரும்புகிறது. உடனடியாக இங்கே (பெரம்பூரில்) ஆரம்பித்திருக்கிறோம். அதைப்பற்றித் தான் விவரங்கள் கொடுக்கப்படுகின்றன.

SRI N. K. PALANISAMI : இப்போது பெரம்பூரிலுள்ள தீக்குச்சித் தொழிற்சாலையானது அங்குள்ள ஏழை மக்களின் நன்மைக்காக அமைக்கப்பட்டது என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அங்கே தொழிலாளர்கள் காலை 6 மணி முதல் மாலை $6\frac{1}{2}$ மணி வரை வேலை செய்ய வேண்டும். அது மாத்திரமல்ல. அங்கே ஒரு "கிரோஸ்" தயார் செய்தால் $\frac{1}{2}$ அணாவிலிருந்து $1\frac{1}{2}$ அணா வரை கொடுக்கப்படுகிறது. இப்படிக் கணக்குப் பார்த்தால் ஒரு பெண்ணுக்கு தினம் $3\frac{1}{2}$ அணா தான் கிடைக்கிறது. ஆனால் மற்ற இடங்களில் குறைந்தபட்சம் $10\frac{1}{2}$ அணா கிடைக்கிறது. ஆகவே மற்ற இடங்களில் கொடுக்கும் அளவிற்காவது இங்கே குறைந்தபட்ச கூலியை சர்க்கார் நிர்ணயிப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் இங்கு கூலி குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார். இங்கே கொடுக்கப்படும் வேலை முழு நேர வேலை இல்லை என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே வேலை செய்பவர்கள், சாமான்களை வீட்டிற்கு எடுத்துக் கொண்டுபோய் அங்கே அவர்களுடைய ஓய்வு நேரத்தில் பொருள்களைத் தயாரித்து அவற்றை தொழிற்சாலையில் திருப்பிக்கொடுத்தால், கொடுக்கும் பொருள்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அதற்குத் தகுந்தவாறு கூலி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே முழு நேர வேலை இல்லாததால் உற்பத்திசெய்து கொடுக்கும் அளவைப் பொறுத்து கூலி கொடுக்கப்படுகிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : திருநெல்வேலி ஜில்லாவில் கூட்டுறவு தீக்குச்சித்தொழிற்சாலை ஸ்தாபிப்பதற்கு உத்தேசம் உண்டா? அப்படி என்றால் அது எந்த இடத்தில்?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது ஒன்றும் அவ்வித உத்தேசம் இல்லை.

SRI S. PAKKIRISWAMI PILLAI : இக்குர்சித் தொழிற்சாலைக்கு அமர்த்தப்படும் வேலையாட்களுக்கு என்னென்ன யோக்யதாம்சங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன? அங்கே நிர்க்கதியான விதவைகளுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. தொழிலாளர்களின் மனைவிகளுக்கும் போலீஸ்காரர்களின் மனைவிகளுக்கும் தான் அங்கே வேலை கொடுக்கப்படுகிறது என்பது நிச்சயமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த விதமான புகார் சர்க்காருக்கு இதுவரை வரவில்லை. ஆங்காங்கு எவ்வளவு நிர்க்கதியானவர்களுக்கு வேலை கொடுத்து உதவி செய்யமுடியுமோ அவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் விதி வகுத்திருக்கிறது.

SRI M. P. SUBRAMANYAM : சென்னையிலுள்ள செருப்புத் தைக்கும் தொழிற்சாலையில் 20 பேர்கள் தான் வேலை செய்வதாகவும் அவர்களை ஒரு ஜெர்மன் நிபுணர் பொறுக்கி எடுத்ததாகவும் கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருபது பேர்களை நிபுணர் ஒருவர் பொறுக்கி எடுக்கும் அளவுக்கு தகுதி அவசியமானால் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 20 பேர்களுக்கு அதிகமாக மனுப் போடவில்லையா?

THE HON. SRI R. VENKATARAMAN : பெரம்பூரிலுள்ள காலணி செய்யும் தொழிற்சாலையிலுள்ள 20 தொழிலாளர்களும் முழு நேர ஊழியர்கள். அங்கே பல ரக சாமான்கள் தயாரிக்கப்படுகின்றன. அவைகளைத் தயார் செய்வதில் ஈடுபட்டுள்ளவர் வேலைக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதன் எண்ணிக்கை இல்லை. இதைத் தவிர 20 பேருக்கு அங்கே பயிற்சி கொடுக்கப்படுகிறது. முழு நேர ஊழியர்களாக அந்தத் தொழிற்சாலையில் உள்ளவர்களைப் பற்றித் தான் முழு நேர ஊழியர்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Regarding the factories opened in the City of Madras, what is their economic position? Are they self-sufficient economic units? If so, will the Government consider the feasibility of opening more such factories in the extended areas of the City like Kodambakkam and Guindy where there is lot of space available for this purpose?

THE HON. SRI R. VENKATARAMAN : It is too early to say that but if the hon. Member is interested I can give him some very instructive figures about the production and sale. In the Perambur unit, up to 30th April 1957, gents' shoes manufactured 1,765, sold 1,091; ladies' shoes manufactured 1,952, sold 613; chappals and pairs manufactured 3,364, and sold 3,161. Therefore, I should say it is very popular.



SRI K. ANBAZHAGAN : இம்மாதிரி கைத்தொழிலை அரசாங்கம் ஏற்படுத்துவதன் நோக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும் என்பதா? அல்லது சிலருக்கு வேலை தருகிறோம் என்ற கண்துடைப்பு திட்டமாக பயன்படவேண்டும் என்பதா? இத் தொழில்களை பெரிய அளவில் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா? 9-30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன பதிலிலிருந்து உற்பத்தி எவ்வளவு, வருவாய் எவ்வளவு என்று அறிந்துகொண்டிருக்கும்பொழுது, இது கண்துடைப்பு திட்டமாக அமைய முடியாது, தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டமாக, நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் சாதனமாக இருக்கும்.

SRI M. JAGANATHAN : கனம் தலைவர் அவர்களே, கால் அணி தொழிற்சாலைகளிலும், தீப்பெட்டி தொழிற்சாலைகளிலும், ஏழைமக்களுக்கு சரியாக வேலை கொடுப்பதில்லை என்று சர்க்காருக்கு புகார் வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் இந்த வேலை கொடுக்கும் பணியை எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சு மூலமாக கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : அரசாங்கத்திற்கு எந்த விதமான புகாரும் வரவில்லை என்று கனம் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். தொழிலாளர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் மூலமாக வேலை கொடுத்தாலும் புகார் வராது என்று சொல்ல முடியாது.

SRI V. K. KOTHANDARAMAN : தொழிற்சாலைகளிலேயே வேலை கொடுப்பதாகவும் ஆனால் முழு நேர வேலை இல்லை என்றும் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது தீப்பெட்டி தொழிற்சாலைகளில், இரண்டணா, இரண்டேகால் அணாவாக இருந்த கூலியை குறைத்து 1½ அணாவாக செய்யப்பட்டிருப்பதால், தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஒரே மாதிரியாக நியாயமான ரீதியில் கூலியை நிர்ணயிக்க அரசாங்கம் சட்டம் கொண்டுவருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ராஜ்யத்தில் எந்தெந்த பகுதியில் எவ்வளவு எவ்வளவு கூலி நிர்ணயித்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் முதல் முதலாக இம்மாதிரியான தொழில்களை ஆரம்பித்து அதில் கணிசமான அளவுக்கு தொழிலாளர்களை அமர்த்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். பிறகு அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயிப்பதில் சர்க்கார் ஆலோசனை செய்யும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த தோல் பதனிடும் தொழிற்சாலையில் 20 பேருக்கு ட்ரெயினிங் கொடுத்து வருவதாக சொன்னார்கள். இந்த ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறவர்களில் தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு பதில் அடுத்த கேள்வியில் தெரிவிக்கிறேன்.

SRI K. RAMACHANDRAN : Foot-wear தொழிற்சாலையில் மூன்று ரகங்கள் தயாரிப்பதாக மந்திரியவர்கள் சொன்னார்கள். அவைகள் ஒவ்வொன்றின் காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் எவ்வளவு ஆகிறது. இப்பொழுது நடத்திவருவதில் லாபம் ஏற்பட்டிருக்கிறதா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தனிக்கேள்வி போடும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASWAMI : இத் தொழில்கள் நடத்துவதில் எவ்வளவு உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது, எவ்வளவு வருவாய் இருக்கிறது, இந்தத் தொழில் நடத்துவதினால் லாபமா நஷ்டமா என்று சொல்ல முடியாது என்று சொன்னார். இதற்குக் காரணம் என்ன?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இதைப்பற்றி தனி கேள்வி கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI K. VINAYAKAM** : May I know from the Hon. Minister the object of starting such factories in the City of Madras? Is it to solve the unemployment problem among the skilled labourers or is it to be made a self-sufficient economic unit?

**THE HON. SRI R. VENKATARAMAN** : It is to alleviate under employment in the City of Madras among the weaker sections of the community.

**SRI V. SUBBIAH NAICKER** : இம்மாதிரியான கைத்தொழில்கள் தொடங்குவதெல்லாம் பெரிய பெரிய நகரங்களிலேதான் இருக்கிறதே தவிர விவசாயிகள் இருக்கக்கூடிய, கிராமாந்திர பகுதிகளில் குறிப்பிட்ட முதலாளிகள் அங்கு ஆரம்பிப்பதில்லை. மூலப்பொருள்களும் கிராமாந்திரப் பகுதிகளில்தான் கிடைக்கிறது. கிராமாந்திர பிரதேசங்களில்தான் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே இந்த தொழிற்சாலைகளை கிராமாந்திர பகுதிகளில் ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இம்மாகாணத்தில் எல்லாப்பகுதிகளிலும் உடனடியாக ஒரே சமயத்தில் தொழிற்சாலைகளை அமைத்து எல்லோருக்கும் வேலை கொடுக்க இயலாது. அதற்கு வேண்டிய பொருளாதாரம் இல்லாததினால் கஷ்டமாக இருக்கும். ஆகவே முதலில் ஏதோ ஒரு இடத்தில் ஆரம்பித்து பிறகு மற்ற இடங்களில் ஆரம்பிப்பதற்கு முடிவு செய்திருக்கிறோம்.

**SRI A. GOVINDASWAMI** : இந்த கால் அணி தொழிற்சாலை ஆரம்பித்ததினால் அரசாங்கத்திற்கு லாபமா நஷ்டமா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இதற்கு தனிக் கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI S. NAGARAJA MONIGAR** : இந்த சர்க்கார் கண்துடைப்பு வேலை செய்கிறது என்று ஒரு அங்கத்தினர் சொன்னார்கள். இது மதிப்பு வாய்ந்த அங்கத்தினர் கூறக்கூடிய வார்த்தையா? அப்படி கண்துடைப்பு சர்க்கார் என்றால் இத்தகைய சர்க்காரின்கீழ் இந்த அங்கத்தினர் இருப்பதில் என்ன பயன்?

**MR. SPEAKER** : கனம் அங்கத்தினர் இவற்றை எல்லாம் கேள்வி மூலமாக கேட்கவேண்டுமே தவிர தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தை தெரிவிக்கக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

**SRI A. V. P. ASAITHAMBI** : சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி முதலிய இடங்களிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் தேவைக்கு அதிகமான உற்பத்தி ஏற்பட்டிருந்தும், சென்னை பெரம்பூரில் தொழிற்சாலை ஆரம்பிப்பதினால் தொழிலுக்கு பாதகம் ஏற்படும் என்றும், அதனால் இங்கே தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டாமென்றும் இது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து மனுக்கள் சர்க்காருக்கு வந்திருக்கிறதா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இம்மாதிரியான போட்டிகள் முதலாளிகளிடையே இருப்பது சகஜம். இதை முன்னிட்டு தொழிற்சாலைகளை ஆரம்பிக்காமல் இருந்தால் நாட்டுக்கு கேடுதான் விளையும்.

*Non-employment of Arundatheeya community people in Government Footwear Works, Perambur*

* 41 Q.—**SRI S. PAKKIRISWAMI PILLAI** : Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that members of the Arundatheeya community and helpless widows are not employed in the Government Match Factory and in the Government Footwear Works at Perambur?

**THE HON. SRI R. VENKATARAMAN** : No, Sir.



**SRI S. PAKKIRISWAMI PILLAI** : தோல் சாமான்கள் செய்யும் தொழிற்சாலையில் அருந்ததிய இனத்தவர்களை சேர்ந்த அநேகரை வேலையில் அமர்த்தி வைக்கவில்லை என்றும் ஏற்கனவே அமர்த்தி வைத்திருந்த ஆள்களையும் நீக்கிவிட்டிருப்பதாகவும் புகார்கள் சொல்லப்படுவது உண்மையா?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இந்த தோல் பதனிடும் சாலையில் எவ்வளவு பேர்கள் வேலையில் இருக்கின்றனர், அதில் எவ்வளவு பேர்கள் அருந்ததிய சமூகத்தினர் என்றுள்ள புள்ளிவிவரங்களை கொடுக்கிறேன். மெஷனரி ஆப்ரேட்டர்கள் வேலையில் 60—80 ரூபாய் ஸ்கேலில் சம்பளம், பஞ்சப்படியும் உண்டு. இதில் மொத்தம் எண்ணிக்கை 5, அருந்ததிய சமூகத்தினர் 4, ஆதி திராவிடர் ஒன்று. அடுத்ததாக ஸ்கில்டு காப்ளர்ஸ் சம்பளம் தினம் ஒன்றுக்கு மூன்று ரூபாய், மொத்த எண்ணிக்கை 7, இதில் அருந்ததிய சமூகத்தினர் 6, முஸ்லீம் ஒன்று. தினசரி வேலையில் மொத்தம் எண்ணிக்கை 31, அதில் அருந்ததிய சமூகத்தினர் 23, பிற்போக்கு சமூகத்தினர் 8. இது தவிர 20 பேர்களுக்கு டிரெயினிங் நடந்து கொண்டிருக்கின்றது என்று சொன்னேன். அந்த 20 பேர்களில் அருந்ததிய சமூகத்தார் 19 பேர்கள், ஆங்கிலோ இந்தியர் ஒருவர்.

*Construction of Culverts.*

* 42 Q.—**SRI P. G. MANICKKAM** : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken for the construction of culverts over the two streams near Kavandapadi and Salangapalayam villages in Bhavani taluk, Coimbatore district?

**THE HON. SRI P. KAKKAN** : The two crossings referred to by the Member are fordable except during extraordinary heavy floods. The construction of culverts at the two places is not therefore urgent and the question of their execution will be taken up, if necessary, in due course.

**MR. SPEAKER** : Questions are over.

**[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

**II.—MOTION *RE* RECOMMENDATIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.**

**MR. SPEAKER** : I have to inform the House that the Business Advisory Committee met on the 29th June and considered the order in which the Demands for Grants should be taken up for voting and also the time to be allotted for each Demand. The recommendations of the Business Advisory Committee have been circulated to the Members.

The Hon. the Leader of the House mentioned to me the necessity for altering slightly the order, as he and the Home Minister may not be in Madras on the 11th. I have agreed to this slight variation. A motion will be moved by the Hon. the Leader under Rule 154 (1) and Rule 192 of the Madras Assembly Rules that the House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up and the time to be allotted for the discussion of each Demand.

I have also to inform the House that under Rule 161 (2) (iii) of the Assembly Rules, notices of cut motions should reach the

Secretary, Legislature Department, before 3 p.m. on Wednesday, the 3rd July 1957. No exception will be made to this rule on any account.

I have also to state that it was agreed that the Hon. the Leader of the House and the Hon. the Leader of the Opposition will make their speeches on the 5th morning, the Leaders of the other Parties and one representative of the Independents will make their speeches in the latter half of the 4th, and that all other Members will make their speeches in the four days. To-day, the debate will be initiated by an hon. Member from the Opposition. It was agreed that he should take 20 minutes. It was agreed that the Leaders of the various Parties here will take 20 minutes each. It was also agreed that the Hon. the Leader of the Opposition will take 30 minutes, if necessary, and that the Finance Minister will ultimately reply. Last time, there was a general complaint that enough time was not given to Members to express their views. I hope this time there would not be any room for such complaint, and that as many Members as possible will have an opportunity to speak. My only appeal to Members would be to restrict their speeches to ten minutes each, for Members must realise that if they speak for ten minutes each, two can speak instead of one in 20 minutes.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move :

" That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for grants are to be taken up and the time to be allotted for the discussion of each Demand subject to this alteration, namely, that after items 1 and 2 items 4 and 5 be taken up as items 3 and 4 and item 3 be taken up as item 5.".

The order in which it has been decided to take up the Demands by the Business Advisory Committee has been given in the list. I suggest that after items 1 and 2, the item shown as 4 may be taken up. Item 4 will then become item 3, item 5 will become item 4, and item 3 will become item 5. There is no other change. This change has become necessary not because we would not be in Madras, but we will be attending the Zonal Council meeting and will be otherwise engaged.

MR. SPEAKER : Motion moved :

" That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for grants are to be taken up and the time to be allotted for the discussion of each Demand subject to this alteration, namely, that after items 1 and 2 items 4 and 5 be taken up as items 3 and 4 and item 3 be taken up as item 5."

SRI S. NAGARAJA MONIGAR : இதில் 12-ஆவதாக குறிப்பிட்டிருக்கும் பகுதியை 3-ஆவதாக எடுத்துக்கொண்டால சௌகரியமாக இருக்கும்.

MR. SPEAKER : May I suggest that individual Members should have put forward their views through the leaders of their



parties before the Business Advisory Committee? It would not be correct for this House to change the decisions arrived at by the Leaders of parties unless they agree unanimously.

The question is :

" That this House agrees with the recommendations of the Business Advisory Committee regarding the order in which the Demands for Grants are to be taken up and the time to be allotted for the discussion of each Demand subject to this alteration, namely, that after items 1 and 2, items 4 and 5 be taken up as items 3 and 4, and item 3 be taken up as item 5."

The motion was put and carried.

SRI K. VINAYAKAM : I rise on a point of information, Sir. Apart from the leaders of the various parties, the Leader of the Opposition, and the Leader of the House, regarding the ordinary Members you have been kind enough to allow ten minutes each. Will this time-limit remain static for four days or will it get reduced as we advance, for example, ten minutes on the first day, 5 minutes on the second day, three minutes on the third day, and ' nil ' minutes on the fourth day. Would you get back to this old system or stick to this time-limit of ten minutes?

MR. SPEAKER : I wish to assure the hon. Member that I shall try as far as possible to allow ten minutes for each Member. But in the exigencies of discussion we may have to modify this resolution. I do hope that I shall be able to give ten minutes to each hon. Member. I hope I shall have the fullest co-operation of all the hon. Members. At the end of eight minutes I would ring the bell, and I would request the hon. Member to sit down at the end of ten minutes and not proceed further. The answer to Mr. Vinayakam's point depends very largely on the members of this House itself.

SRI T. T. DANIEL : On a point of order, Sir. During the general discussion on the Budget, do not the hon. Members have the right to ask certain points so that they may be clarified by the Hon. the Finance Minister and the discussion may be appropriate on those points.

MR. SPEAKER : Every hon. Member is at liberty to make any suggestion in the course of his speech. The Hon. the Finance Minister will take notes, and I hope he will reply to the criticisms and suggestions made by every hon. Member. But it is not the practice for every Member to convert this Budget discussion into question-hour and ask the Finance Minister for clarification of any points at the beginning of the debate or in the course of the debate. I am sure if the hon. Member makes really valuable suggestions, the Hon. the Finance Minister will take note of them and answer them in his reply.

[1st July 1957

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957–58.

* SRI T. S. RAMASWAMY PILLAI : சபை தலைவர் அவர்களே, கனம் நிதிஅமைச்சர் அவர்கள் பட்ஜெட்டை கொண்டு வந்து பேசிய போது உண்மை யாகவே எனக்கு சிறிது ஏமாற்றம் தான் ஏற்பட்டது. ஏனென்றால் நான் மிக ஆவலோடு எதிர்பார்த்தது ஒன்றும் அதில் இல்லை. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் வரக்கூடிய பட்ஜெட்டில் அரசாங்கத்தினுடைய வரிக் கொள்கையிலும் அது போல செலவினங்களிலும் கொள்கை மாறுதல் இருக்கும் என்று கருதினேன். ஆனால் அந்த மாற்றத்தை இன்றைக்கு காணோம்.

9-50 a.m. இதுவரையிலே நம்முடைய இந்திய சமூகத்திலே ஆளும் கட்சியினர் எந்த சாராருக்கு சௌகரியமான கொள்கைகளாக வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அதே சாரருக்கு தான்,, அதே வர்க்கத்திற்குத்தான் இப்பொழுதுள்ள கொள்கையும் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது மிகவும் வருத்தமும் ஏமாற்றமும் கொள்கிறேன். ஏமாற்றமும், வருத்தமும் கொள்வதற்கு காரணங்கள் பல உள்ளன. ஒன்று, முதன் முதலாக இந்த பட்ஜெட் ஒரு "டெபிஸிட் பட்ஜெட்" என்ற காரணத்தினாலாகும். மூன்று கோடி 33 லட்சம் ரூபாய் பற்றாக்குறையுள்ள பட்ஜெட்டை நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள். நம்முடைய பாரதத்தின் முக்கிய பிரதமர் வரையிலும், கூடுமான வரையில் எல்லா ராஜ்யங்களிலும் பற்றாக்குறை பட்ஜெட்கள் இல்லாமல் இருப்பது மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்தி கூறியிருக்கிறார்கள். அதிலும், இப்பொழுது நம்மிடம் அந்நிய செலாவணி அதிகமாக இல்லை ; ஏன் அதிகமாக இல்லை என்று நான் சொல்லவேண்டும். நமக்கு சென்ற யுத்தத்தின் போது நாம் அதிகம் சேமித்து வைத்திருந்த அந்நிய செலாவணிகள் எல்லாம் பல்வேறு காரணங்களால், பொறுப்பற்ற முறையிலே என்று கூட கூற வேண்டும், குறைந்து குறைந்து வந்து இப்பொழுது எவ்வளவு குறைந்த பட்சமாய் இருக்க முடியுமோ அவ்வளவுக்கு வந்திருக்கிறது. இப்பொழுது விலைவாசிகள் ஏறிவரும்போது "டெபிஸிட்" பைனான்ஸிங்கால்தான் ஒரு வேளை நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்த முடியுமென்று கருதுகிறபோது, இப்பொழுதுள்ள விலைவாசிகள், இப்பொழுதுள்ள பொருளாதார நெருக்கடியிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் "டார்ஜெட்", இலக்குகளை நிறைவேற்ற முடியுமோ என்று ஐயுறக் கூடிய இந்த நேரத்திலே நம்முடைய பிரதமர், மதிப்பிற்குறிய இந்தியப் பிரதமர் வரையிலும், இத்தகைய முறையில், பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளக் கூடாதென்றும், எல்லா ராஜ்யங்களிலும் கூடிய வரையிலே பற்றாக்குறை பட்ஜெட்களாக இருக்கக் கூடாதென்று பன்முறை கூறிய பின்னலும்கூட அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே, 3 கோடி 33 லட்சம் ரூபாய் பற்றாக்குறையுள்ள பட்ஜெட்டைக் கொண்டு வந்தார்கள் என்பது உண்மையாகவே எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. நேர்மாறாக, கேரளத்தை எடுத்துக் கொள்வோம். நான் கேரளத்தின் பக்கத்திலிருந்து வரக்கூடியவன். இதற்கு முன்னால் நான் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தைச் சார்ந்தவனயிருந்தேன். ஆகையால் பக்கத்திலிருந்து அவர்களைப் பார்க்கும்போது உண்மையாகவே அதிசயமும் அற்புதமும் ஏற்படுகிறது. கம்யூனிஸ்ட் கொள்கைகளை நான் ஆதரிப்பவன் அல்ல. சில கொள்கைகளை கடுமையாக எதிர்க்கக் கூடியவன் நான். இருந்த போதிலும், பல ராஜ்யங்களிலும் காங்கிரஸ் நிதியமைச்சர்கள் உபரி பட்ஜெட்க்கொண்டு வர இயலாதிருக்கும்போது, கேரளத்தில் இன்று ஆட்சி பீடத்தில் இருக்கக் கூடிய கேரள சர்க்கார் ஒரு உபரி பட்ஜெட்டைக்கொண்டு வந்திருக்கின்றார்கள் என்றால் அதை நிச்சயம் பரராட்டத்தான் வேண்டும். அது மாத்திரமல்ல. இதற்கு முன்னால் இருந்த திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தை ஒரு "பிராபிளம் ஸ்டேட்" என்று சொல்வார்கள். சிக்கலான ராஜ்யம் என்று சொல்வார்கள். ஜன நெருக்கடி அதிகமான ராஜ்யம் என்று சொல்வார்கள். ஜனத்தொகை அகில இந்திய ரேட்டை விட அங்கு அதிகம் வளர்ந்து வரும் ராஜ்யம் என்று சொல்வார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அங்கு அதிகமாக இருக்கிறது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு "பிராபிளம் ஸ்டேட்டில்" பல பிரச்னைகள் உள்ள ஒரு ராஜ்யத்தில், அங்குள்ள சர்க்கார்



1st July 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

ஒரு உபரி பட்ஜெட்டைக்கொண்டு வர முடிந்தது என்றால் ஏன் நமக்கு அப்படி கொண்டு வர முடியவில்லை என்று கேட்க விரும்புகிறேன், நிதியமைச்சர் அவர்களிடம். அது முக்கியமான ஒரு சங்கதி. அது மாத்திரமல்ல, அப்படி அவர்கள் ஒரு உபரி பட்ஜெட்டைக்கொண்டு வந்தார்களே. அதற்குப் பின்னலாவது அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள், என்று பார்க்கக்கூடாதா ? அவர்களுடைய வர்க்கப் போராட்டத்தை, அவர்களது அயல் நாட்டு கொள்கையை நாம் அங்கீகரிக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் அவர்கள் நன்மை செய்தால் ஏன் நாம் அவர்களிடம் படித்துக்கொள்ளக் கூடாது ? உதாரணமாகச் சொல்கிறேன். நம்முடைய வரிக் கொள்கையைப் பொறுத்தளவிலே இதுவரையிலும், இதுகாறும் வரிச்சுமை எல்லாம் சாதாரண ஜனங்களின் மீது பாமரனின் மீதுதான் இருந்து வந்திருக்கிறது. "சேல்ஸ் டாக்ஸைப்" பொறுத்தபோதிலும் சரி, நில வரியைப் பொறுத்தபோதிலும் சரி, இன்னும் எந்த வரியைப் பொறுத்தபோதிலும் சரி கேரளத்தில் வரிச் சுமையைப் பொறுத்தளவில் "இன்ஸிடென்ட்ஸ் ஆப் டாக்சேஷன்" குறைவு. ஆனால் இங்கே ஜாஸ்தியாயிருக்கிறது. ஆனால் அங்கு மக்களுக்கு கிடைக்கக்கூடிய சௌகரியங்களோ கூடுதல். ஆனால் இங்கு அது குறைவு. இது, ஆராய்ச்சிக்குரிய விஷயம். ஆகவே இவைபற்றி பரிசீலனை செய்யவேண்டும். நிலவரியைப் பொறுத்தவிலே சாதாரணமாக ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் உள்ள சாதாரண சிறு நிலச்சுவாந்தார்கள் எல்லாம் 20, 30, 100 ரூபாய் வரை வரியாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அங்கு அப்படியல்ல. நாகரீகம் மிக்க ராஜ்யங்களில், சாதாரண விவசாயிகள் பேஸிக் டாக்ஸ், அடிப்படைக் கரம் தான் கொடுப்பது. ஆனால் நிலத்திலிருந்து அமித லாபம் எடுக்கக்கூடியவர்கள் 3,000, 4,000, 5,000 என்று லிமிட் வைத்துக்கொண்டு அதற்கு மேல் லாபம் வரக்கூடியவர்களுக்கு "அக்ரிகல்ச்சர் இன்கம்டாக்ஸ்" போடுகிறார்கள். அப்படி போடுவதால் இப்பொழுது கிடைப்பதை விட அரசாங்கத்திற்கு அதிக வரி கிடைக்கிறது. அதே நேரத்தில் ஏழை, எளியவர்கள், பாமரர்கள் மீது வரிச் சுமை இல்லாமல் ஆகிறது, என்பதை நாம் பல வருஷங்களாக பார்த்து வருகிறோம். அதைத்தான் இப்பொழுதும் பார்த்து வருகிறோம். சென்னையிலிருந்து விலகிச் சென்ற மலபார் ஜில்லா மீது இதற்கு முன்னால் நாம் வரி விதித்து இருந்தோமே. அந்த முறையை மாற்றி விட்டு அடிப்படைக் கரத்தையும், அதற்கு மேல் விவசாய வருமான வரியையும் போட்டு விட்டார்கள் இப்பொழுது அங்கே. அதன் காரணமாக அவர்களுக்கு, அந்த அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படவில்லை. நேர்மாறாக, 98 லட்சம் ரூபாய் வருமானம் அதிகரித்திருக்கிறது. ஆனால் ஒன்று நிச்சயம். பெரிய ஜமீன்தார்களுக்கும், நிலச்சுவாந்தார்களுக்கும், தஞ்சையில் உள்ள நிலச்சுவாந்தார்களுக்கும், நமக்கு அபிமானமாக இருக்கக் கூடியவர்களுக்கு அது நன்றாக இராதுதான். அவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, I rise on a point of order. Is the hon. Member speaking on the budget of our State or is he comparing our Budget with the budget of the Kerala State which he should have done on the floor of the Kerala House? He may make a passing reference to the Kerala budget. But, the hon. Member is only expatiating on the budget of the Kerala State and he is not throwing any light over the Budget. Is he in order?

MR. SPEAKER : I suppose the hon. Member is only comparing the budget details of the two States. Let us wait for what he actually says about the other budget.

SRI K. VINAYAKAM : It is beyond our jurisdiction.

MR. SPEAKER : I think the hon. Member is perfectly in order and he may continue his speech.

[1st July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I am sure that it will take some time to get out of past attachments. So, we may as well show some indulgence to the hon. Member.

MR. SPEAKER: The hon. Member is perfectly in order and he may continue.

SRI T. S. RAMASWAMY PILLAI: Is the Hon. Minister in order to intervene?

MR. SPEAKER: Yes, he is perfectly in order. He was only trying to help you.

SRI T. S. RAMASWAMY PILLAI: நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள், இதற்கு முன்னாலுள்ள பாசம் லேசில் விட்டு விடாதென்று. பாசத்தைப் பொறுத்தளவிலே அப்பொழுதும், இப்பொழுதும் எப்பொழுதும் ஒன்று போலவே இருக்கவேண்டுமென்று கருதக் கூடியவன் நான். கேரள ராஜ்யம் என்பது வேறு எந்த நாடும் அல்ல. அது ஆப்ரிக்கா போன்ற அயல் நாடல்ல. அது, நமது இந்திய தேசத்தைச் சேர்ந்த ஒரு பகுதி என்பதை மனதில் வைத்துக்கொண்டு அந்த நாடு நல்ல கொள்கைகளை கடைப்பிடித்தால் ஏன் நாமும் அவைகளை கடைப்பிடிக்கக்கூடாது என்று நான் சொல்லும்போது நையாண்டி செய்தால் அது அவர்களுடைய இஷ்டம். ஆனால் அது அக்கரையுடன் கவனிக்கப்பட்ட வேண்டிய விஷயம் என்பதை நிதி மந்திரியவர்கள் கவனிக்கவேண்டுமென்று நான் பணிவன்புடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல் சேல்ஸ் டாக்ஸைப் பொறுத்தளவிலே நம்முடைய ராஜ்யத்தை நாம் இதர ராஜ்யங்களுடன் ஒத்து பார்க்க வேண்டுமென்று என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் விநாயகம் அவர்களிடம் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். விற்பனை வரியைப் பொறுத்தளவிலே நமது இந்திய தேசத்திலே எந்த ராஜ்யத்திலும், மைசூரைத் தவிர வேறு எங்கும் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி கிடையாது. இந்த பட்ஜெட்டில் நமது நிதி மந்திரியவர்கள் உணவுப் பொருள்களின் மீதுள்ள வரியை எடுப்பார்கள் என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் அவர் பட்ஜெட் பிரசங்கத்திலே எவ்வளவு தூரம் 100 குறி எண் விலைவாசியாலே அதிகரித்திருக்கிறது என்பதை குறிப்பிடுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அவ்வளவு தூரம் விலை வாசிகள் ஏறிக் கொண்டிருக்கும்போது கருணையோடு பேசக்கூடிய நிதி மந்திரியவர்கள் ஏன் விலையேற்றத்திற்கு உதவியாய் இருக்கும் இந்த விற்பனை வரியை குறைக்காமல் இருக்கிறார்கள் என்று இந்த சமயத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். கொஞ்சம் குறைத்திருக்கிறார்கள். அந்த அளவில் சந்தோஷம் தான். மைசூரையும், சென்னை ராஜ்யத்தையும் பொறுத்தளவில் நான் அடிக்கடி கூறுவது உண்டு. சாதாரணமாக சென்னை ராஜ்ய மக்கள் வாயில்லா பூச்சிகள் (dumb millions) என்று நான் கூறுவதுண்டு. இதற்கு முன்னால் உள்ள பாசத்தை வைத்துக் கூறுகிறேன். கேரளத்திலே அரிசி போன்ற இன்றியமையாத உணவுப் பொருள்கள் மீது வரி விதித்தால் நிச்சயமாக ஜனங்களுடைய கூக்குரல் எழும்பும். அரசாங்கம் வரையிலும் மந்திரிகள் வரையிலும் அந்த கூக்குரல் கேட்டும், ஜனங்களுடைய கூக்குரலுக்கு அரசாங்கம் பணிவது வழக்கம். இங்கு என்ன சொன்னாலும் சரி, ஜனங்கள் அத்யாவசியமாக உபயோகிக்கக்கூடிய அரிசி மீது வரி போட்டிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால் சில அங்கத்தினர்கள் அதை ஆட்சேபிக்க முயற்சிக்கிறார்கள். இந்தியாவிலேயே சென்னை, மைசூர் ராஜ்யங்களைத் தவிர வேறு எந்த ராஜ்யத்திலும் உணவு தான்யத்தின் மீது விற்பனை வரி கிடையாது.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆந்திராவிலே?

THE HON. SRI K. KAMARAJ: ஆந்திராவில் இருக்கிறதே தெரியுமா?

SRI T. S. RAMASWAMY PILLAI: அங்கு உண்டா? தெரியாதே. I am thankful for the information. ஆந்திரா, சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிந்ததுதான். அதனால் அங்கேயும் இருக்கிறது.



1st July 1957] [Sri T. S. Ramaswamy Pillai]

நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் பாமர ஜனங்களை மிகவும் பாதிக்கக்கூடியது விற்பனை வரி. அதை சர்க்கார் எவ்வளவு சீக்கிரம் எடுக்கிறார்களோ அவ்வளவுக்கு சர்க்கார் ஜனங்களுக்கும் தேசத்திற்கும் சேவை செய்தவர்களாவார்கள். அதுமட்டுமல்ல. அடிப்படை வரியை (basic tax) எடுத்துக்கொண்டு விவசாய வருமான வரி விதித்தால் அரசாங்கத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய் வரி மூலம் கிடைக்கும். அதிகப்படியான பணம் கிடைக்கும். நான் வரியைக் குறைக்க வேண்டுமென்ற காரணத்திற்காக சொல்லவில்லை. வரி பளு (Incidence of taxation) சாதாரண ஜனங்கள் மீது இல்லாமல் இருக்கவேண்டும். அதிகமான வருமானம் வருகிறவர்களிடமிருந்தும், சௌகரியமாக இருப்பவர்களிடமிருந்தும் வரி வசூலிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயமாக அரசாங்கத்திற்கு அதிக வருமானம் கிடைக்கும். அதே நேரத்தில் ஜனங்களுக்கும் தேசத்திற்கும் சேவை செய்தவர்களாவோம்.

அதேபோல் தான் வேலையில்லா திண்டாட்டத்தைப் பொறுத்தவரையிலும் அதுவும் ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேலையில்லா திண்டாட்டப் பிரச்னை சரியாக கவனிக்கப்பட வில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் இதை கவனித்திருக்கிறார்கள். அப்படி கவனிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, ஒரு வருஷத்திலே பார்க்கும் பொழுது நம்முடைய இலக்குகள் (target) எல்லாத் துறைகளிலும் குறைந்திருக்கிறது. இந்த நிலையிலே நாம் வேலையில்லா திண்டாட்டப் பிரச்னையை சரியான முறையிலே கண்ணும் கருத்துமாக இருந்து அணுகவில்லையென்றால், இந்தப் பிரச்னை வளர்ந்துகொண்டே போகும். கன்னியாகுமாரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்கு Employment Exchange Officer பாளையங்கோட்டையிலிருந்து இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வருகிறார். நான்கு மாத காலத்தில் 12,000 பேர்கள் வேலையில்லாமல் ரிஜிஸ்டர் செய்துகொண்டிருக்கிறார்கள். பத்து நாட்களுக்குத்தான் அங்கு வந்திருப்பார். அதற்குள் Intermediate, School Final, B.A. படித்தவர்கள் 12,000 பேர்கள் ரிஜிஸ்டர் செய்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் வேலையில்லா திண்டாட்டம் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை ஊகித்துக்கொள்ளலாம். கணக்குக்காக நான் ஒரு ஜில்லாவைப் பற்றி குறிப்பிட்டேன். பல ஜில்லாக்களிலும் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்கு நாம் அதிகமாக முயற்சி செய்யவேண்டும்.

THE HON. SRI K. KAMARAJ: கேரளாவிலே unemployment-ஐ solve பண்ணுவதற்கு என்ன திட்டம் வகுத்திருக்கிறார்கள்? அதைச் சொல்லுங்கள்.

SRI T. S. RAMASWAMY PILLAI: அவர்கள் இதற்காக பல திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை அவர்கள் ரொம்ப கவனிக்கிறார்கள். ஆகவே நாமும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை தீர்ப்பதற்கு பல திட்டங்களை தீட்டவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

கேரள மாணவர்களுக்கு இங்குள்ள டெக்னிகல் கல்லூரிகளிலே இடம் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் எழுதியிருந்தும், இங்குள்ள மாணவர்களுக்கு இடம் வேண்டும், கேரள மாணவர்களுக்கு இடம் கொடுக்க முடியாது என்று சர்க்கார் மறுத்ததாகவும் தெரிகிறது. பிறகு அவர்களுக்கு நிச்சயமாக இங்குள்ள கல்லூரிகளிலே இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று டெல்லியிலிருந்து உத்தரவு வந்திருப்பதாகவும் அறிகிறேன். மெடிகல் கல்லூரியிலும் இடம் கொடுக்க மறுத்ததாகவும் பத்திரிகை வாயிலாக அறிகிறேன். அதுபற்றி விளக்கும்படி கனம் மந்திரி அவர்களை வேண்டிக்கொள்கிறேன். அங்கு இருப்பவர்களுக்கு இங்கு இடம் கொடுக்கவேண்டும். சென்னை ராஜ்யத்தில் இருப்பவர்களுக்கும் அங்கு இடம் கொடுக்கவேண்டும். சென்னையில் சேர்ந்துள்ள பகுதிக்காக கேரளத்தில் என்ன ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதையும் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அது போலவேதான் Reorganization of States முடிந்து பல மாதங்கள் ஆகின்றன. கேரளாவில் integration of service

முடிந்துவிட்டது. இங்கு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள என். ஜி. ஓக்கள் மிகவும் அல்லல் படுகிறார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் கூற ஆசைப்படுகிறேன். அதுமாத்திரமல்ல. அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான சம்பள உயர்வும் கிடைக்கவில்லை. **Integration of service** விஷயத்தில் எல்லா ராஜ்யங்களும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரதேசம் நம்முடைய சேயகம். குழந்தைகள் வந்திருக்கிறார்கள். மருமகளுமல்ல, நாத்தனாரும் அல்ல. கேரளத்தில் இங்கிருந்துபோன கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளமும் பஞ்சப்படியும் உயர்த்தியிருக்கிறார்கள். இங்கிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அம்மாதிரி உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

**The Hon. Sri K. KAMARAJ** : அங்கு இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் வேறு; இங்கு இருக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் வேறு. இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : தெரிந்துதான் சொல்லுகிறேன். அங்கு **integration of service** முடிந்து விட்டது மாத்திரமல்ல. அதிகப்படியான பஞ்சப்படியும், சம்பள உயர்வும் அங்குள்ளவர்களுக்கு கிடைத்திருக்கின்றன. இங்கு கன்னியாகுமாரி ஜில்லாவிலுள்ளவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக கேள்விகள் அனுப்பினால் பதில் வருவதில்லை என்பதையும் சபைத் தலைவர்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா ராஜ்யங்களும் இது விஷயத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும்பொழுது அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த சென்னை ராஜ்யம் மட்டும் ஏன் முன்னேறாமல் இருக்கவேண்டும்? நமது சட்டசபையை பொறுத்த வரையில் கேள்வி நேரம் ஒரு முக்கியமான நேரம். அதை எவ்வளவு தூரம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமான விதிகள் ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தப்பட்டவை. குறிப்பிட்ட தேதியில் ஒரு கேள்வி கொடுத்தால் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் அதற்கு பதில் வருவதில்லை. அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் அது சம்பந்தமான விஷயங்களை விளக்க முடியவில்லை. இம்மாதிரி நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஒரு கேள்வியைக் கொடுத்தால் 10 தினங்களுக்குள் அதற்கு பதில் வரவேண்டும். அரசாங்கத்திலிருந்து அறியவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. லோகசபையில் இம்மாதிரி 10 தினங்களுக்குள் பதில் வேண்டுமென்று கேள்விகள் கேட்கிறார்கள்.

0-10 மு. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயம் கரிந்துவிட்டன. அங்கு ஏதாவது "ஸ்மால் ஸ்கேல் பெமின் வொர்க்ஸ்" ஆரம்பிக்கப்படுமென்று கவர்னர் பெருமான் உரையில் குறிப்பிட்டிருந்தார். அது சம்பந்தமாக கலெக்டர் அவர்கள் இங்கு போய்பார்க்கிறார்கள் அங்கு போய் பார்க்கிறார்கள். அதைப்பற்றி இங்கு கேள்விகள் கேட்டால் அதற்கு நேரத்தில் பதில்கள் வரமுடியாது. ஏனென்றால் இங்குள்ள விதிகள் அப்படி இருக்கிறது. ஆனால் எங்களுக்கோ அவைகளைப்பற்றி பதில்கள் தெரிந்தாகவேண்டியிருக்கிறது. கேரளாவிலுள்ள விதிகளைப் பார்க்கவேண்டாம். டில்லியில் உள்ள லோக சபை விதிகளைப் பாருங்கள். அங்கு ஒரு கேள்வி கொடுத்தால் சரியாக ஐந்து அல்லது ஏழு நாட்களில் பதில் கொடுக்கிறார்கள்.

**The Hon. Sri K. KAMARAJ** : அஸெம்பிளியில் ரிப்ளை பண்ணுவதற்கா?

**Sri T. S. RAMASWAMY PILLAI** : ஆம். நாம் எந்தத் தேதியில் வேண்டுமென்கிறோமோ அந்தத் தேதியில் பதில் கொடுக்கிறார்கள். இங்குள்ள விதிகள் ரொம்ப காலத்திற்குமுன் ஏற்படுத்தப்பட்டவை. ஆகவே, இந்த விதிகளைத் திருத்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். சட்ட சபைத் தலைவர் இந்த விதிகளைத் திருத்தவேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதுபோலவேதான், இப்போது "ரீஆர்கனைஸேஷனு"க்குப் பிறகு **N.G.Os.** "இண்டெக்ரேஷன் ஆப் ஸர்வீஸைப்" பற்றியும், இன்னும் இது விஷயத்தில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படாததால், வேகன்ஸி



வரும்போது அவர்களுக்கு புரொமோஷன் கொடுக்கப்படுவதில்லை; இன்கிரிமெண்ட், அதாவது வருஷா வருஷா சம்பள உயர்வு, கொடுக்கப்படாமல் இருக்கிறார்கள். பென்ஷன்—ஆறு மாதங்களாகிவிட்டன—யாருக்கும் இன்னும் கொடுக்கவில்லை. ரீஆர்கனைஸேஷனுக்குப் பிறகு பென்ஷனை உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. நான் எவ்வளவு தூரம் இங்கு நேர்மையாக இருக்குமென்று நினைத்தேன் தமிழகத்தோடு சேரும்போது. நம் ராஜ்யத்தை மிகையாக நினைத்தது உண்டு. மன்னித்துக்கொள்ளவேண்டும்.

**Mr. SPEAKER** : The hon. Member is requested to address the Chair and not anybody else opposite or behind.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : But, if somebody addresses **me, Sir** . . . அதுபோலவேதான் பல இலாக்காக்களிலும்—நான் மிக மன வருத்தத்துடன் கூறுகிறேன்—மன்னிக்கவேண்டும். இங்கு சேர்ந்த பின்னர் கொஞ்சம் லஞ்சம் அதிகப்பட்டிருக்கிறது. நான் முன்னமே கேரள ராஜ்யத்தில்தான் லஞ்சம் அதிகம் இருக்கிறது என்று நினைத்தேன். அங்கு எங்காவது ஒரு இடத்தில் லஞ்சம் என்று தெரிந்தால் விடமாட்டார்கள். உடனே சட்டசபையில் கேள்விகள் கேட்பார்கள். ஆகையால் லஞ்சம் அதிகமாக இருந்தது அங்கிருக்கும் போது. இந்நாட்டைச் சுட்டிக்காட்டி, "அதோ அவர்கள் நீதியிலும் நேர்மையிலும் உயர்ந்தவர்கள்" என்று சொல்லியதுண்டு. ஆனால் இங்கு வந்தபோதுதான் தெரிகிறது. நான் குற்றம் சொல்லவில்லை. பலர் நல்லவர்களாக இருக்கிறார்கள். ஆங்காங்கு சில ஊழியர்கள் இப்படி இருக்கிறார்கள். குறிப்பாக இதை முதலில் கவனிக்கவேண்டும். நாம் லோன்கள் கொடுக்கிறோம். கிராம மக்களுக்கு கொடுக்கிறோம். பாமர மக்களுக்குக் கொடுக்கிறோம். நல்லெண்ணத்தோடு கொடுக்கிறோம். ஆனால் அவர்களுக்கு எவ்வளவு போய்ச் சேருகிறது என்று பார்க்கவேண்டும். உதாரணமாகச் சொல்லுகிறேன். அகஸ்தீஸ்வரம் பிளாக்கில் கிணறு வெட்ட ஸப்ஸிடி (கடன்) கொடுக்கிறார்கள். கன்யாகுமரி தொகுதியில் **L. D. Scheme**-ல் கடன் கொடுக்கிறார்கள். அம்மாதிரி இடங்களில் 500 ரூபாய் லோன் ஆகவும் ஸப்ஸிடியாகவும் கொடுக்கப்படுகிறது. முதலில் 25-ஐக் கொடுங்கள் என்கிறார்கள். 500 ரூபாய் சும்மாதானே வருகிறது. 100-ஐக் கொடுங்கள் என்கிறார்கள். இதைப்பற்றி கலெக்டருக்கு கம்பிளெயிண்ட் கொடுக்கப்படுகிறது. பொறுப்பற்ற முறையில் நான் சொல்லவில்லை.

**The Hon. Sri K. KAMARAJ** : இங்குள்ளவர்களா, அங்குள்ளவர்களா?

**Sri T. S. RAMASWAMY PILLAI** : இங்குள்ளவர்கள், அங்குள்ளவர்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரையும்தான் சொல்லுகிறேன். இங்குள்ளவர்களைப்பற்றி சொல்லவேண்டுமென்றால் அதையும் நான் சொல்லுகிறேன்.

**Sri A. CHIDAMBARANATHA NADAR** : Sir, can the hon. Member point out specific instances of bribery?

**Mr. SPEAKER** : The hon. Member may please address the Chair. If he likes, he may answer them. The hon. Member is not making specific or individual remarks. He is now making only a general statement. If he mentions any specific case, I shall call him to order. He is entitled to do it and therefore he is in order. If the hon. Member were to answer interruptions, he will be the sufferer as I will ring the bell as soon as the allotted time is over.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார், குறிப்பிட்டு ஏதாவது சொல்ல முடியுமா என்று. அவைகளைச் சொல்லவேண்டிய அதிகாரிகளிடம் சொன்னதுண்டு. இங்கு வந்தபோதும்கூட, பல இடங்களுக்கும் போனபோதும்கூட இதைப்பற்றிச் சொன்னதுண்டு. இப்படியாகப் புகார் இருந்துவருகிறது. இதை நிவர்த்திக்கவேண்டுமென்று நிர்வாகத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

[Sri T. S. Ramaswamy Pillai] [1st July 1957

எத்தனையோ கோடிக் கணக்கில் ஜனங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கொடுக்கிறோம். இதையெல்லாம் சர்க்கார் அதிகாரிகளே விநியோகிக்கிறார்கள். இப்போது உள்ள சட்டத்தில் லஞ்சம் கொடுப்பவனும் லஞ்சம் கொடுக்கப்படுகிறவனும், இருவருமே குற்றவாளிகளாகக் கருதப்படுகிறார்கள். ஆகையால் இருவரும் பேசாமல் இரகசியமாக இருக்கிறார்கள். பாமர ஏழை மக்களை ஏமாற்றப்படும் காரணத்தை அறிந்து அதற்கு வேண்டிய பரிகாரம் தேடவேண்டும்.

இங்கு வந்த பிறகு இன்னும் ஒரு சமாசாரம். அங்கு பாமர மக்கள்கூட பெரிய அதிகாரியைப் பார்த்து பேசலாம். அங்கு அதிகாரிகளிடம் சகோதர மனப்பான்மை இருந்தது. என்னவேண்டுமென்றாலும் சொல்லலாம். அதிகாரிகளிடத்திலே இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள், பியூனாக இருந்தாலும், அல்லது சபார்டினேட் கிளார்க்காக இருந்தாலும் அந்த ஆபிஸின் ஹையஸ்ட் ஆபீஸரிலிருந்து அதாவது ஹெட் ஆப் தி டிபார்ட்மெண்ட்—எல்லார் இடத்திலும் அவர்கள் போவார்கள். குறைகளைச் சொல்லுவார்கள். நிவர்த்தி செய்துகொள்ளுவார்கள். ஆனால் இங்கு எ.எஸ்.பி. யானவர் டி.எஸ்.பி-யைப் பார்க்கமுடியாது. உட்கார்ந்து பேச முடியாது. இப்படிப் பட்ட பழக்க வழக்கங்கள் அன்னிய ஆட்சி காலத்தில் இருந்தது. உபாத்தியாயர் டிவிஷனில் இன்ஸ்பெக்டரிடம் குறைகளைச் சொல்ல முடியாது. அப்படி ஏதாவது பார்த்துப் பேசிவிட்டால் டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுப்பார்கள்—அதாவது இன்ஸபார்டினேஷன் என்று இச் சிப்பந்திகள் ஜனங்கள்கூடப் பழகிவரும் முறைகளும் இப்பேர்ப்பட்டது. அதனால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று இச் சந்தர்ப்பத்தில் கூற நான் ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member has got five minutes more.

SRI T. S. RAMASWAMY PILLAI : அத்தோடுகூட நம்முடைய கல்லூரிகளிலே, அதாவது "ப்ரொபெஷனல் காலேஜஸ்" அட்மிஷன் செய்யும் முறை பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கேரளாவிலே "பூல் புரூப்" அரேன்ஜ்மெண்ட் இருக்கிறது. கேரளாவிலே மொத்தம் உள்ள சப்ஜெக்ட்களிலே எவ்வளவு மார்க், இங்கிலீஷில் 35-க்கு மேல் எவ்வளவு, மற்ற ஒவ்வொரு சப்ஜெக்டிலும் எவ்வளவு, எவ்வளவு சத விகிதம் ஷெடியூல்ட் வகுப்பாருக்கு, எவ்வளவு பாக்வார்ட் வகுப்பாருக்கு, எவ்வளவு ஓபென் காம்பெடிஷன் என்றும் விதித்து விடுகிறார்கள். அதன் பிரகாரம் இருக்கக்கூடிய ஒருவர் எழுதினால் அவருக்கு நிச்சயம் கிடைக்கும். இங்கு அப்படி அல்ல. 3-வது வகுப்பில் பாஸ் பண்ணியவர்கள்—இருக்கக்கூடிய பகுதிகளை மூன்று கட்டத்தில் பாஸ் செய்தவர்கள்—சிபார்சு இருக்கின்றதாலும், தகப்பனார் காங்கிரஸில் இருக்கின்றதாலும் எப்படியாவது சொல்லி அட்மிஷன் வாங்கிவிடுகின்றார்கள். இது விஷயத்தில் அநீதி இருப்பது கூடாது. இதற்கு ஏதாவது பிரின்சிபல் வைத்து, ஜனங்கள் எல்லோருக்கும் பொதுவான இந்தக் கல்லூரிகளில் இடம் கிடைக்க, நீதி வழங்கப்படவேண்டும். பின் தங்கிய சமூகத்தினர்கள் இருக்கிறார்கள், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதி செய்யவேண்டுமென்று அரசியல் சட்டத்தைப் பொருத்த வரையில், நீதியாக, நேர்மையாக கொடுக்கப்படவேண்டுமென்று அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். ஒவ்வொருவரும் அட்மிஷனுக்காக வந்து வந்து நமது சபையில் உள்ள அங்கத்தினர் ஒவ்வொருவரிடமும் போய் இவர் சொன்னால் கிடைக்கும், அவர் சொன்னால் கிடைக்கும் என்று நம் ஒவ்வொருவரிடமும் வருகிறார்கள்.

THE HON. SRI K. KAMARAJ : எவர் சொன்னால் கிடைக்கும். எடுத்துச் சொல்லுங்களேன்.

10-20 a.m. SRI T. S. RAMASWAMY PILLAI : Open-ஆகச் சொன்னால் நல்லது தான். இருந்தாலும் தனியாகச் சொல்லுகிறேன்.

THE HON. SRI K. KAMARAJ : Open-ஆகத்தான் சொல்லட்டும் கனம் அங்கத்தினர் அவர்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Give it to us.



1st July 1957]

MR. SPEAKER : The hon. Member may pass on the information to the Hon. Minister concerned.

SRI T. S. RAMASWAMY PILLAI : இப்பொழுதே நான் அதைப் பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால், ரொம்பப் பெரிதாக இருக்கும். மேலும் யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டாமென்று . . .

THE HON. SRI K. KAMARAJ : புண்படுத்துவதினால் பரவாயில்லை. சொல்லுங்கள். இப்படியே பேசிக்கொண்டு போனால், சந்தேகங்கள்தான் ஜாஸ்தி உண்டாகும். அதனால், இப்பொழுதே சொல்லிவிடுங்கள்.

SRI T. S. RAMASWAMY PILLAI : ஆகையால், அவைகளைப்பற்றி சிந்தித்து, நீதி பூர்வமாக நடந்துகொள்ளவேண்டும். இதை நான் பொறுப் புணர்ச்சியுடன்தான் சொல்கிறேன்.

THE HON. SRI K. KAMARAJ : திருப்பித் திருப்பிச் சொல்லி என்ன பிரயோஜனம் ?

*SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, 1957–58-ம் வருஷத்திய நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சரவர்கள் மிகவும் நெருக்கடியான நிலையில் திறமையாகச் செய்து சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை நான் ஆதரிக்கிறேன். இது ஒரு பற்றாக்குறை வரவு செலவுத் திட்டமாக இருந்தாலுங்கூட, பற்றாக்குறைக்கான காரணங்கள் என்னவென்பதை இங்கு இருக்கும்படியான கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும். பற்றாக் குறை என்பது பட்ஜெட் தயாரிப்பதிலே எப்பொழுதும் இருக்கும்படியான மூலதனச் செலவுகள் குறையாமல், எப்பொழுதும் இருக்கும் மக்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு, எந்தவித திட்டங்களையும் குறைக்காமல் செல விடுவதற்கு ஏற்பட்ட திட்டமே தவிர, வருவாய்க் குறைவோ பட்ஜெட் தயாரிப்பதிலே கவனக் குறைவோ காரணம் அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 10-21 a.m.

நிதி அமைச்சரவர்கள் குறிப்பிட்டபோது, பருவ மழை சரியாக இருந்த காரணத்தால் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். வள்ளுவர் அவர்கள் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்:

" குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் "

குடியை உயர்த்தவேண்டுமென்று யார் உண்மையாகப் பாடுபடுகிறார்களோ, நாட்டு மக்களுடைய க்ஷேமத்தைக் கருத்திற்கொண்டு, கிராம மக்களெல்லாம் வாழ்க்கைத் தரத்தில் உயரவேண்டும், நல்வாழ்வு பெறவேண்டும் என்று யார் பாடுபடுகிறார்களோ, க்ஷேம நல அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கு யார் அருகதையாக நடந்துகொள்கிறார்களோ, அவர்களுக்கு தெய்வம் கூட ஆதரவு கொடுக்கும் என்று வான்மறை வகுத்த வள்ளுவர் கூறியிருக்கிறார்.

சர்க்கார் வகுத்திருக்கும் திட்டங்கள் காரணமாக, கிராம மக்களுக்கு, குறிப்பாக 80 சத விகிதம் மக்களாக வாழும்படியான கிராம மக்களுக்கு எவ்வளவு தூரம் பயன் அளித்திருக்கிறதென்றால், வெகுதூரம் பயன் அளித்திருக்கிறது. பத்து வருஷ காலத்திலே இருக்கும்படியான நிலைமையைவிட இந்த வருஷத்திலே நிதி அமைச்சர் அவர்கள் கிராம மக்களுடைய நல்வாழ்வுக்காக, விவசாயிகளுடைய நல்வாழ்வுக்காக, மக்களெல்லாம் பிணி இல்லாமல் வாழ்வதற்காக, இவ்வளவு நெருக்கடியான நிலையிலும் வரி விதிக்காமல் இருக்கிறார்கள் என்று நான் புள்ளி விவரத்தோடு குறிப்பிடமுடியும்.

அதோடு மட்டுமல்ல, தேசிய விஸ்தரிப்பு, சமுதாய நல, ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, கிராமங்களிலே ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது. திட்டங்களில் கிராம மக்கள் உற்சாகத்தோடு, பங்கெடுத்துக்கொண்டு, வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இந்த முறையில் கிராமப் பகுதிகளில் விவசாய அபிவிருத்தி வெகுவாகப் பரவியிருக்கிறது என்பதை நான் ஆசையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

[Sri P. G. Karuthiruman] [1st July 1957

அதோடுமட்டுமல்ல, சென்ற தேர்தலிலே எவ்வளவோ பிரசாரங்கள் நடந்துகொண்டிருந்தன. மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் பிரசங்கத்திலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் ஒன்று சொல்கிறேன், சென்ற தேர்தலிலே பலர் என்னென்ன விதமாக பிரசாரங்கள் செய்தார்களோ, அதற்கெல்லாம் ஒரு பெரிய பதிலாக கனம் நிதி அமைச்சர் அவர்களது உரை இருக்கிறதென்று சொன்னால், அது மிகையாகாது. நெய்வேலியில் நிலக்கரி வெட்டி எடுக்கவேண்டுமா? எங்களுக்கு வோட்டுப் போடுங்கள் ; சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமா? எங்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். அப்படி விஷமப் பிரசாரம் செய்தது எதைக் குறிக்கிறது என்றால், தாங்கள் ஜெயித்துவந்தால் தான் அந்தத் திட்டங்களையெல்லாம் நடத்த முடியும் என்பதைக் குறிக்கிறது. அப்படி படம் எடுத்த நாகங்களைப் பிய்த்து எறிந்த மாதிரி அமைந்தது நிதி அமைச்சரது பேச்சு.

**Sri M. P. SUBRAMANIAM** : தலைவர் அவர்களே. (**On a point of order, Sir.**) ஒழுங்குப் பிரச்சனை ஒன்றை எழுப்ப விரும்புகிறேன். "விஷமம்" என்று கனம் அங்கத்தினர் உபயோகித்த சொல் பொருத்தமானதல்ல என்று நான் கருதுகின்றேன். அது சபையில் அனுமதிக்கக் கூடிய வார்த்தை அல்ல என்று கனம் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**Mr. SPEAKER** : There is nothing wrong in it. It is equivalent to 'bad'. If hon. Members continue to interrupt the hon. Member's speech, they will only be taking his time. I am sure the Chair will have the right to decide which is correct and which is incorrect.

10-25 a.m. ***Sri P. G. KARUTHIRUMAN** : எவ்வளவோ பிரசாரங்கள் நடந்தன. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் என்ன என்னவோ பிரசாரங்கள் செய்தார்கள். மேடைமேல் ஏறி செய்த பிரசங்கங்கள். அவைகளில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தாக்கிப் பேசிய பேச்சுக்கள் கணக்கில் அடங்கா. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ பூமி வாங்கிவிட்டார்கள். எவ்வளவோ பணம் சம்பாதித்து விட்டார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். நான் இன்று சவால் விடுகிறேன் : முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது தங்களது சொந்த நலத்திற்காக காங்கிரஸ்காரர்கள் தங்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று நிரூபித்தால், இப்பொழுதே நான் என் பதவியை ராஜினமா செய்யத் தயாராயிருக்கிறேன். எது வேண்டுமானாலும் பேசலாம் என்ற முறையில் சொல்வது மிக அழகு அல்ல, நேர்மை அல்ல, அதோடு, நிதி அமைச்சரவர்கள் இந்தச் சமயத்தில் வரிகளை அதிகமாகப் போடாமல் விட்டிருக்கிறார்கள். ஆனால், பொய்யான, அதாவது உண்மைக்கு மாறான விஷயங்களை மேடையிலே ஏறிப் பேசுவதற்குத் தகுந்த அளவு வரி போடுவதாக இருந்தால் ஐம்பது கோடி அல்ல, நூறு கோடி ரூபாய் கூட நமக்கு வசூலாகும் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**Mr. SPEAKER** : "பொய்" என்னும் வார்த்தையை சபையில் உபயோகிக்கக்கூடாது. "உண்மைக்கு மாறானது" என்று வேண்டுமானால் சொல்லுங்கள், "பொய்" என்னும் வார்த்தையை சபையில் உபயோகிப்பது ஒழுங்கல்ல.

**Sri P. G. KARUTHIRUMAN** : "உண்மைக்கு மாறான விஷயங்கள்" என்றுதான் நானும் குறிப்பிட்டேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : The point for consideration is this. If the hon. Member alleges that a particular Member is uttering a lie, it is unparliamentary, no doubt. But the hon. Member is referring to the propaganda done outside the House by persons, not necessarily Members of this House. He is suggesting



1st July 1957] [Sri C. Subramaniam]

that if a tax is levied on such kind of propaganda, the Government will be able to collect hundreds of crores of rupees. But I am not prepared to vouch for the tax. . . .

**Mr. SPEAKER** : I think the Hon. Minister is justifying the use of the word 'lie' according to circumstances. But in Parliamentary practice, whatever be the circumstances, the use of the word 'lie' is unparliamentary. I have given my ruling. The hon. Member can use other words so as to indicate that it is not a fact but he should not use the word 'lie'.

***Sri P. G. KARUTHIRUMAN** : Sir, I am prepared to refer this matter to the Committee of Privileges.

**Some Hon. MEMBERS** : No, No. The Chair has already given the ruling.

**Mr. SPEAKER** : Will the Government Whip realize the position that the Chair is the final authority in this matter? Whether a word is parliamentary or unparliamentary has to be decided by the Chair and nobody else. Will the Government Whip please note it?

***Sri P. G. KARUTHIRUMAN** : I am sorry, Sir. Please excuse the trouble.

இன்றைக்கு நாடு பூராவிலும் மின்சார விஸ்தரிப்புக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை நமது அரசாங்கம் வாரி இறைத்திருக்கிறார்கள். நாட்டில் விவசாய உற்பத்தி பெருகுவதற்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து உணவு உற்பத்தி பெருகும்படியான நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

**Sri T. SAMPATH** : I am not able to hear the speech of the hon. Member.

**Mr. SPEAKER** : There is something wrong with the mike arrangement. I would request Mr. Karuthiruman to go to the neighbouring mike. Otherwise, I have no other alternative but to adjourn the House till the defect is rectified. Now I would request the hon. Member to speak a little louder.

***Sri P. G. KARUTHIRUMAN** : விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு வேண்டிய திட்டங்களெல்லாம் சர்க்கார் வகுத்திருக்கிறார்கள். நாட்டில் தொழில் அபிவிருத்தி ஏற்படுவதற்குவேண்டிய திட்டங்களையும் வகுத்து வருகிறார்கள். தொழில் அபிவிருத்தியும் விவசாய அபிவிருத்தியும் ஏற்பட்டால்தான் தேசத்தில் மக்களெல்லாம் சுபீட்சமாக வாழமுடியும் என்பதை உணர்ந்து நமது அரசாங்கத்தார் ஆவன செய்து வருவது பாராட்டத்தக்கது. விவசாயத்திற்கு வேண்டிய வசதி, கால்நடை பராமரிப்புக்கான திட்டங்கள், விவசாயத்திற்கு மின்சார வசதிகள், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கிணறுகளுக்கு எலெக்டிரிக் மோட்டார் வைத்துக்கொள்வதற்கான திட்டங்களை அரசாங்கம் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, இதுவரை கண்டிராத, கேட்டிராத அளவுக்கு 1,300 கிராமங்களுக்கு மின்சார வசதி ஒரு வருஷத்தில் கொடுப்பதற்குத் திட்டமிட்டு, அப்படியே கொடுத்தும் இருக்கிறார்கள். இந்தியா பூராவிலும் 9,000 கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சென்னை ராஜ்யத்தில் மாத்திரம் 4,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரிய விஷயம். இதே நிலையில் சென்றால் 5, 6 வருஷங்களிலே சென்னை ராஜ்யத்திலுள்ள கிராமங்களுக்குப் பூராவும் மின்சார வசதி கிடைத்துவிடும்.

சிறு கைத்தொழில்களும் பெருகியிருக்கின்றன. மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, வாங்கும் சக்தி அதிகரிப்பதற்கான திட்டங்களைப் போடுவதற்கு ஏதுவாக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது.

[Sri P. G. Karuthiruman] [1st July 1957

10-40 a.m. அதோடு கல்வி விஷயத்திலும் ஏழைக் குழந்தைகள் அனைவரும் பத்தாவது படிவம் வரையில் இலவசமாகப் படிப்பதற்குவேண்டிய வசதிகளை நம்முடைய சர்க்கார் செய்துகொண்டு வருகிறார்கள். நமது அரசியல் நிர்ணயச் சட்டப் பிரகாரம் எல்லாக் குழந்தைகளும் படிப்பதற்கு இப்போது வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக வேலை இல்லாத் திண்டாட்டம் நாட்டில் பெருகிக்கொண்டு வருவதாக பலர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். பொது மேடைகளில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நமது சர்க்கார் அநேகவிதமான அபிவிருத்தித் திட்டங்களைப் போட்டுக் கொண்டு வரும் இந்தக் காலத்தில் வேலை இல்லாத் திண்டாட்டமே இல்லை. வேலை செய்யாத் திண்டாட்டமே பெருகிக் கொண்டிருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

(ஸ்ரீ கே. சட்டநாத கரயாளர் எழுந்தார்.)

**MR. SPEAKER:** If the hon. Member wants to raise any point of information he can do so at the end. If he wants to raise any point of order he can raise it now. But let him not please raise any point of information as a point of order.

**SRI P. G. KARUTHIRUMAN:** ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்பவானி திட்டத்திற்குப் பத்து கோடி ரூபாய் செலவாயிற்று. எவ்வளவோ கூலி யாட்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு வேலை கிடைத்து இருக்கிறது. அதனால் பாசன வசதி கிடைத்து பெருகும்படியான நிலங்கள் விவசாயத் திற்குக்கொண்டுவரப்பட்டு, ஏராளமான விவசாயிகளின் வேலை அதிகமாகி இருக்கின்றன என்று நினைக்கிறேன். ஏதோ படித்துவிட்டு சர்க்கார் உத்தி யோகம் கிடைக்கவில்லை என அலைந்து கொண்டிருக்கிற ஒரு சிலரைப் பார்த்து நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டி ருப்பதாகச் சொல்லக்கூடாது. இதற்காகத்தான் கல்வி முறையே மாற வேண்டும் என்று சொல்கிறேன். புதுமுறையில் கல்வி கற்கின்றவர் களுக்கு படித்துவிட்டு வெளியே வந்தவுடன் அரசாங்க உத்தியோகம் ஒன்றுதான் அவர்களுக்குப் பிழைக்கும் வழி என்று இல்லாமல் நாட்டில் பலவிதமான தொழில்களில் ஈடுபட்டு வேலை செய்கின்ற வாய்ப்பில் ஈடு படுத்த கல்வி முறை மாற்றியமைக்கப்படவேண்டும் என்பதுதான் சர்க் காரின் கவனத்தில் இருக்கிறது என்று நம்புகிறேன். இதைப்பற்றி சட்ட சபையிலும் நான் பலமுறை கூறியிருக்கிறேன். இவற்றையெல்லாம் ஆராயும் காலத்தில் நமது நிதி அமைச்சர் தயாரித்து அளித்திருக்கிற பட்ஜெட் மக்களுக்கு மிகவும் ஏற்ற சரியான பட்ஜெட். இதைப் பற்றுக் குறை பட்ஜெட்டாக தயாரிக்காத வகையில் எந்த முறையில் எந்தெந்த வகையில் எல்லாம் சிக்கனம் செய்வது அவசியமோ, அவைகளை எல்லாம் செய்து தகுந்த முறையில் அமைத்துக் கொடுத்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். நல்லமுறையில் தேசிய அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு பலவித வேலைகள் நடந்து வருகின்றன. சர்க்கார் செல வழிக்கின்ற பணங்கள் எல்லாம் மக்களுடைய நன்மைக்காகப் போய்ச் சேரவேண்டுமென்றால், மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். அவர்கள் அவற்றை எந்த முறையில் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நமது முதல் அமைச்சர் அவர்கள் பாகல்மேட்டில் பிர்க்கா அடிப்படையில் கூட்டத்தைக் கூட்டி நேரிலேயே மக்களுடைய குறைகள் என்ன என்பதை விசாரித்தார்கள். இப்படிச்செய்வதால் அவ்வப்போது அந்த அந்த இடங்களில் உள்ள குறைகளைத் தீர்ப்பதற்கு முடியும். சிவப்பு நாடா முறையினால் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க முடியும் என்றே செய்தார்கள். இந்த வகையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் செய்திருக்கும்படியான பட்ஜெட் பிரசங்கமும், மக்கள் எல்லாம் சேர்ந்து நியாயமான முறையில், கண்ணி யமான முறையில் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து பலவிதமான அபி விருத்திகளை ஏற்படுத்த முடியும் என்பதற்கு அறிகுறியாக விளங்குகின்றது. அதனால் கொஞ்ச நஞ்சம் இருக்கக்கூடிய பற்றுக்குறையையும் நிவர்த்தி யாக்க முடியும் என்று நினைக்கிறேன்.



1st July 1957] [Sri P. G. Karuthiruman]

ஆகவே இப்போது இருக்கும்படியான நிலைமையில்,

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு "

என்பதற்கு இணங்க, பலவிதமான அபிவிருத்தித் திட்டங்களை நம்முடைய க்ஷேமநல சர்க்கார் போட்டு, உறு பசி சேராது இயலும் நாடாக, பிணி சேராது இயலும் நாடாக, செறுபகையும் சேராது இயலும் நாடாக நம்முடைய நாட்டை ஆக்கப் பாடுபட்டு வருகிறார்கள். அதற்கென்றே நம் முடைய க்ஷேம நல சர்க்காரால், மக்களுடைய சுபீட்சத்திலேயே அக்கறை யுடைய சர்க்காரால், தயாரிக்கப்பட்டு இருக்கும் உயர்ந்த வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் சபையில் சமர்ப்பித்திருப்பதற்காக மகிழ்ச்சியுற்று அதையும் நான் ஆதரிக்கிறேன்.

* **SRI G. VAGHEESAM PILLAI:** கனம் சபாநாயகர் அவர்களே நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நமது நிதி அமைச்சர் அவர்கள் 1956-ம் வருஷம் டிசம்பரில் பட்ஜெட் சமர்ப்பித்தபோது கிட்டத்தட்ட 5 கோடி துண்டு விழும் பட்ஜெட்டைச் சமர்ப்பித்தார். இப்போது மறுபடியும் பட்ஜெட் தயாரிக்கும்போது செல வினங்களைக் கட்டுப்படுத்தி பற்றுக்குறையை வெகுவாகத் தணித்துள்ள வரவு செலவுத் திட்டத்தைக்கொண்டு வந்திருப்பதற்காக நான் அவரை பாராட்டுகிறேன்.

விவசாயம் நம் நாட்டில் முக்கியம். உணவு பற்றுக் குறையைச் சமாளி 10-44 a.m. க்க வேண்டுமென்பதற்காக நமது சர்க்காரும் மத்திய சர்க்காரும் அதிக கவனம் செலுத்திக்கொண்டுவருகிறார்கள். அதற்காக நமது சர்க்கார் இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். இதனால் விவ சாயிகள் இன்னும் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

விவசாய உற்பத்திக்கு மிகவும் அவசியமான பொறுக்கு விதைப் பண்ணைகளை சர்க்கார் ஏற்படுத்தி வருகிறார்கள். சென்ற ஆண்டில் 38 பண்ணைகள் இருந்தன. இப்போது இன்னும் 136 பண்ணைகள் ஏற்படுத்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இவற்றின் மூலமாக நல்ல பொறுக்கு விதை கிடைப்பதற்கு இரண்டு மூன்று வருஷங்கள் ஆகும். தற்போது விவசாயிகளே பொறுக்கு விதை கொடுக்கிறார்கள். ஆனால் மூட்டைக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்தான் அவர்களுக்கு ப்ரீமியம் கொடுப்பதனால் அவர்கள் அதிக உற்சாகத்துடன் அதில் ஈடுபடவில்லை. கிட்டதட்ட ஐந்து ரூபாயாவது—நான் யோசனைதான் சொல்லுகிறேன். சர்க்கார் எவ்வளவு அதிகம் கொடுக்கலாமோ அதை—அவர்களுக்கு கொடுக்க முன்வந்தால் அவர்கள் நல்ல விதைகளைக் காயப்போட்டு பொறுக்கு விதை அளிப்பார்கள். இரண்டு மூன்று வருஷங்கள் வரை இப்படிச் செய்தால் போதும். அப்புறம் நமது பண்ணைகளில் இருந்தே நல்ல விதைகள் கிடைக்க ஆரம்பித்துவிடும். இப்பொழுதே நல்ல விதை என்றால் நமது விவசாயிகள் மூட்டை 25 ரூபாய்க்கூட கொடுத்து வாங்கிப் போகிறார்கள். ஆகவே நல்ல விதை கிடைக்கச் செய்ய இந்த ப்ரீமியத்தைக் கொஞ்சம் கூட்டினால் நன்றாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பூச்சி மருந்து கொடுக்கிறார்கள். அதற்காக ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த இடத்தில் பூச்சி அடித்திருக்கிறது என்று கலெக்டரோ, டெபுடி கலெக்டரோ அறிவிக்கின்றார்களோ அந்த இடங்களுக்குப் பாதி விலைக்கு பூச்சி மருந்து கொடுக்கிறார்கள். அதை எப்போதும் நிரந்தரமாக பாதி விலைக்கே கொடுக்கவேண்டுமென்று நிரந்தர உத்திரவு இருக்கலாமென்று சொல்ல விரும்புகிறேன். பத்து கிராமங்களுக்குப் பூச்சி அடித்துவிட்டது என்று பாதி விலைக்குக் கொடுப்பதைவிட பாதி விலைக்கே எல்லா இடங்களுக்கும் கொடுப்பதனால் எல்லா இடங்களிலும் உடனே விவசாயிகள் வாங்கி உபயோகித்து பூச்சி அடிக்காமல் தடுத்துக் கொள்ள முடியும்.

மேலும் விவசாயிகள் நல்ல முறையில் சாகுபடி செய்வது எப்படி என்பதைப் போதிக்கும் விவசாயப் பஞ்சாங்கம், மேழிச் செல்வம் போன்ற

பத்திரிகைகளுக்கு நல்ல அட்டைப்படம் போட்டு நல்ல விளம்பரங்களும் செய்தால் எல்லோரும் வாங்கிப் படித்து பயன் அடைய வசதி அதிகரிக்கும். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் நேரிலேயே சொல்லியிருக்கிறேன். இலாகாவில் கொடுத்து பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். அதையும் செய்ய வேண்டும்.

நமது விளம்பர இலாகா சினிமாப் படங்களை ஒவ்வொரு பயிருக்கும் தயாரித்து வெளியிட கவனம் செலுத்தவேண்டும். இந்தப் படங்களை பார்ப்பதனால் விவசாயிகளுக்கு நல்ல அநுகூலம் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற வருஷம் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் டன் அமோனியம் சல்பேட் கொடுத்து இருக்கிறார்கள். இந்த வருஷமும் ஒரு லட்சத்து நாற்பது ஆயிரம் டன் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதையும் கொடுக்க வேண்டும். மேலும் சூப்பர் பாஸ்பேட் போட்டால் தானிய சத்து கிடைக்கிறது. இதற்குப் பாதி தொகை இந்திய சர்க்கார் கொடுத்து வந்தார்கள். அதை இப்போது நிறுத்திவிட்டார்கள் என்று நினைக்கிறேன். சூப்பர் பாஸ்பேட் போடுவதனால் விளைச்சல் அதிகரிக்கிறது. ஆகையால் அதையும் கொடுப்பதற்குக் கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

விவசாயக் கல்லூரிக்கு ஐந்து லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தப் பிராந்திய வளர்ச்சிக்குத் தகுந்தாற்போல அண்ணாமலை யூனிவர்ஸிடியிலேயே இதையும் எற்படுத்தவேண்டுமென்பதாகச் சொல்ல விரும்புகிறேன். பசுந்தாள் உரத்திற்காக ஒரு லட்சம் ரூபாய் சொச்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். பசுந்தாள் உரம் டெல்டா பிரதேசங்களில் நல்ல பலனைக் கொடுத்துவருகிறது. அதை எப்போது விநியோகப்படுத்தப்போகிறார்கள் என்று தெறியவில்லை. அதை சப்ஸிடியாகக் கொடுத்து எல்லா விவசாயிகளும் பசுந்தாள் உரத்தை அதிகம் உபயோகித்து நல்ல பலன் அடையும்படியாகச் செய்யவேண்டும். முதலில் பணமாகக் கொடுக்காமல் பசுந்தாள் உரத்தை வாங்கிக் கொடுக்க முன்வரவேண்டும்.

நீர்பாசன வசதிக்காகவும் பலவிதமான திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். புதிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட இனி இடம் இல்லை. எல்லாம் செய்தாகிவிட்டது. பழைய டெல்டா பிரதேசங்களில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுகளை உடைய வாய்க்கால்களை சர்க்கார் செலவில் வெட்டவேண்டும். முன்பு குடிகள் ஒற்றுமையாக வெட்டி வந்தார்கள். இப்போது நின்றுவிட்டது. இதைச் சர்க்காரே தொடர்ந்து வெட்டிவர ஏற்பாடு செய்யவேண்டுமென்பதாகச் சொல்ல விரும்புகிறேன்.

நீர்ப்பாசன மகாநாடுகள் கூடுகின்றன. ஆறு மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. முன்பெல்லாம் இரண்டு மாதங்களுக்கு முன்பே எப்போது மகாநாடு கூடும் என்பது அறிவிக்கப்படும். அதனால் ஏராளமான ஜனங்கள் அதில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது பத்து நாள் நோட்டீஸ்தான் கொடுக்கிறார்கள். சர்க்கார் உத்திரவு திட்டமாக இருந்தும், அதைக் கவனிக்காமல் ஏதோ 'இன்பார்மல்" கூட்டம் போல மகாநாட்டைக் கூட்டி விடுகிறார்கள். ஆகவே இதில் கவனம் செலுத்தி இனி நல்ல முறையில் இந்த நீர்ப்பாசன மகாநாடுகள் நடைபெறும்படியாகச் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்போது தென்னாற்காடு ஜில்லாவில் ஆர்டிஷன் கிணறுகள் ஸ்கீம் இருந்து வருகிறது. நான் சப் ஆர்டிஷன் கிணறுகள் ஸ்கீமை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். அதாவது 50 அடி 60 அடியில் தண்ணீர் இருக்கக் கூடிய பிரதேசங்கள் இருக்கின்றன. ஆயிரம் ரூபாய் முதல் இரண்டாயிரம் வரையில் செலவு செய்தால் போதும். அங்கே ஊற்றுப் பம்புகளை ஏற்படுத்த முடியும். பணம் படைத்த விவசாயிகள் அது மாதிரியாக செய்து கொண்டிருக்கிறார்கள். பணம் இல்லாதவர்கள் தான் விவசாயத்திற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகளுக்கு வசதியாக சர்க்காரே முதல் போட்டு இந்த சப் ஆர்டிஷன் வெல் ஸ்கீம்களை ஏற்படுத்தினால் பின்னர் விவசாயிகளிடமிருந்து வரியாக



பணத்தை வசூல் செய்து கொண்டு விடலாம். இதற்கு விவசாயிகளும் சம்மதிக்கிறார்கள். இந்த யோசனையை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். தென் ஆற்காடு ஜில்லாவில், சிதம்பரம் தாலூகா ஏரிகளும் மற்ற எல்லாம் ஏரிகளும் தூர்ந்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கின்றன. அணைக்கட்டுகளெல்லாம் பழுது அடைந்திருக்கின்றன. அரசாங்கம் நியாய வார மசோதா கொண்டு வந்ததினால் ஹரிஜனங்களுக்கு பயிரிடுவதில் பண வசதி ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் வீடு கட்டிக்கொள்வதற்கு ஹரிஜனங்களுக்கு அரசாங்கம் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் 80, 90 வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதி இருக்கிறது. அவைகள் போக ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொஞ்சம் பணம் கொடுத்தால் அவர்கள் வீடு கட்டிக்கொள்வார்கள். ஆதலால் அரசாங்கம் அவர்களுக்கு கோவாப்ரேடிவ் மூலமாக வீடு கட்டிக்கொள்வதற்கு கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நஞ்சைப் பிரதேசங்களில் 40, 50 ஊர்களில் ரோட்டுகளே இல்லாமல் கிராம மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கே ரோட்டுகள் போட்டு, போக்குவரத்திற்கு வசதி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் நஞ்சைப் பிரதேசங்களில் ஹரிஜனங்கள் வாழும் சேரிகளில் வண்டிகள் போவதற்குக் கூட வசதியே இல்லாமல் இருக்கிறது. ஆகவே இந்தப் பிரதேசங்களில் ரோடுகள் போட்டு ஹரிஜனங்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது அரசாங்கம் இந்த நடை முறை ஆண்டில் 194 லட்சம் ரூபாய் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். சென்ற ஆண்டில் 1 கோடி 10 லட்சம் தான் ஒதுக்கி இருந்தார்கள். ஆனால் இந்த வருஷமோ 154 லட்சமாக உயர்த்தி இருக்கிறார்கள். எவ்வளவோ பணம் சேரிகளின் அபிவிருத்திக்கு தேவையாக இருப்பதால், அந்தப் பணத்தைக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வரவு செலவு திட்டத்தில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சலுகைகள் அளித்திருக்கிறார்கள். இதற்காக அரசாங்கத்தை பாராட்டுகிறோம். ஆனால் இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கும் உயர்வு குறைவு என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அரசாங்கம் அதையும் உடனடியாக கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது அரசாங்கம் தங்கள் செலவில் சிக்கனப்படுத்த வேண்டு என்று திட்டமிட்டிருக்கிறார்கள். ஆபீசர்களும் இந்த சிக்கன முறையை நல்ல முறையில் கையாண்டால் மிகவும் நன்றாக இருக்கும். இதை அரசாங்கம் நன்றாக கவனித்து எந்தெந்த முறையில் செலவை குறைக்க முடியுமோ அந்தந்த முறையை கையாண்டு செலவை குறைத்து சிக்கனப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி விஷயத்தை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு ஆதாரப் பள்ளிகளுக்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆதாரப் பள்ளிகளை நடத்துவதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்திருக்கிறார்கள். பள்ளிகளில் இருக்கக்கூடிய அதிகாரிகளும், ஆசிரியர்களும் ஆதார பள்ளிக்கூடங்களில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆகவே சர்க்கார் இதில் கவனம் செலுத்தி நம்பிக்கையுள்ள உத்தியோகஸ்தர்களையும், ஆசிரியர்களையும் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்

பள்ளிக்கூடங்களில் மத்தியான சாப்பாட்டுக்கு அரசாங்கம் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். நிலம் இல்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு ஒரு ஏக்கர் நிலத்தை கொடுப்பதற்கு கலெக்டர் உத்திரவு போட்டால் அவர்கள் பயிரிடுவதற்கு வசதியாக இருக்கும். இதனால் மத்தியான சாப்பாட்டுக்கு உணவுப் பொருள் கிடைக்கும். இந்த "டிரைவ்" ஐ சர்க்கார் செய்தால் நலமாக இருக்கும். கிராமங்களில் உள்ளவர்கள் இதற்கு வேண்டிய உதவி செய்வார்கள்.

9-46 a.m. **Sri A. GOVINDASWAMI** ; கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் வரவு செலவு திட்டம் நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையில் இல்லை என்ற செய்தியைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. தங்களுடைய பிரசங்கத்தில் நாட்டில் சீதோஷ்ண நிலை சரியாக இருப்பதாகவும் மழை தேவையான அளவுக்குமேல் பெய்திருப்பதாகவும், பிறகு உற்பத்தி பெருகி இருப்பதாகவும் கூறி விட்டார். ஆனால் விலை வாசிகளின் ஏற்றத்தைத் தடுக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருப்பதாக அதில் விளக்கவில்லை. இப்பொழுது உணவு நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால்தான் விலை வாசிகள் உயர்வதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது என்பதை அரசாங்கம் சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். ஆனால் நமது உணவு மந்திரி சொல்லுகிறார் நமது மக்கள் அதிகமாக சாப்பிட ஆரம்பித்திருக்கிறார்கள். என்று ஏற்கனவே 6 அவுன்ஸ் தான் கொடுத்திருந்தோம், இப்பொழுது 12 அவுன்ஸ் கொடுத்து வருகிறோம் என்று சொல்லுகிறார். மக்கள் செத்து விடுவார்கள் என்று இப்பொழுது 12 அவுன்ஸ் கொடுக்கப்படுகிறது.

இப்பொழுது நாட்டில் நிலவும் உணவு நிலைமையை சமாளிப்பதற்கு வெளி நாடுகளிலிருந்தாவது அரிசியை இறக்குமதி செய்து மக்களை காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரி அல்லாமல், நெல் அதிகமாக விளைந்திருக்கும்பொழுது வியாபாரிகள் அவைகளை பதுக்கி வைத்து சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். எதிர்கட்சி தலைவர் ஒரு தடவை பேசும்பொழுது இந்த நாட்டில் உணவுப்பொருள் உற்பத்தி அதிகமாக இருக்கிறது, இருந்தும் கூட அரசாங்கம் நெல் விலையை நிர்ணயிக்கும் சமயத்தில் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு பெரிய பெரிய வியாபாரிகளும், நிலச்சுவான்தார்களும் பதுக்கி வைத்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். இம்மாதிரி நெல்லைப் பதுக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது அரசாங்கத்தின் பொறுப்பு.

மேலும் உணவு நிலைமையை சமாளிப்பதற்கு ஆங்காங்கு நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருப்பதாக சொல்லுகிறார்கள். ஆனால் நாட்டில் உணவு உற்பத்தி குறைவாக இருக்கிறது. நியாய விலைக் கடைகள் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளில் திறக்காததற்கு தகவல் இல்லை. நியாய விலைக் கடைகளில் 10 அணுவாக இருந்த அரிசி இப்பொழுது 11, 12 அணுவாக உயர்ந்து விட்டது. ஏற்கெனவே விலை வாசிகளின் உயர்வால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கம் கோதுமையை கொண்டு வந்து திணிக்கப்பார்க்கிறது. இப்படி கோதுமையை அரிசியுடன் சேர்த்து வாங்கவேண்டுமென்று சொன்னால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே காங்கிரஸ் சர்க்காருக்கு "ஆறு அவுன்ஸ்", "ஏழு அவுன்ஸ்" என்ற பெயர் இருந்தது. அந்த நிலைமைக்கு மறுபடியும் கொண்டு போகாமல் பார்த்துக்கொள்ள
10-50 a.m. வேண்டியது அரசாங்கத்தாரின் கடமை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கேரளத்திற்கு அரிசி போகாமல் தடுக்க வேண்டுமென்று நம் ராஜ்யத்தில் நினைத்தாலும், நாம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தார் நம்மை வற்புறுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி நாம் மத்திய சர்க்காரிடம் முறையிடும் நேரத்தில் அவர்கள் தமிழ் நாட்டிற்கு அனுசரணையாக இருப்பதாக நாம் காண முடியவில்லை.

நம் ராஜ்யத்தின் உணவு நெருக்கடி தீர வேண்டுமானால், குறிப்பாக, கோதாவரித் தண்ணீரை இங்கே கொண்டு வரவேண்டும். கோதாவரித் தண்ணீரை கிருஷ்ணா நதிக்குக் கொண்டு வந்து கலப்பது எப்படி என்பதை விளக்கி நேற்றைய தினம் ஒரு ஆந்திர மந்திரி ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார். அந்தச் செய்தியைப் பார்க்கும்போது, உள்ளபடியே, அந்த நிலைமை ஏற்படுமானால் நம் ராஜ்யத்தின் உணவுப் பிரச்னையை ஓரளவு தீர்க்க முடியும் என்று தோன்றுகிறது. ஆந்திராவிற்கு நமது முதன் மந்திரி அவர்கள் போய்விட்டு வந்தார்கள் என்பதும், இது விஷயமாக அந்த ராஜ்ய மந்திரிகளுடன் அவர்கள் கலந்து பேசினார்கள் என்பதும் தெரிகிறதேயொழிய இந்த திட்டத்திற்கு அந்த அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டார்களா இல்லையா என்பது தெரியவில்லை. ஆந்திர சர்க்கார் ஒத்துக்கொள்ளா விட்டாலும் மத்திய சர்க்காரின் துணையைக் கொண்டாவது அந்தத் தண்ணீரை எப்படியாவது நம் ராஜ்யத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் இருக்கிற பழுப்பு நிலக்கரித் திட்டத்தை மத்திய சர்க்காரின் பொறுப்புக்கு விட்டதை நினைக்கும்போது நாம் வருந்தாமல் இருப்பதற்கில்லை. இந்த நிலக்கரித் திட்டத்தை நம் ராஜ்ய அரசாங்கத்தினரே ஏற்று நடத்தினால், அந்தத் திட்டத்தினால் ஏற்படும் முழு நன்மையும் நம் ராஜ்யத்திற்கே கிடைக்கும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் ரூ. 70 கோடியை பொது மக்களிடமிருந்தோ மத்திய சர்க்காரிடமிருந்தோ கடனாகப் பெற்று, திட்டத்தை நிறைவேற்றினால், இந்தத் திட்டம் நம் ராஜ்யத்திற்கு போதிய நன்மை பயக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லாமல் இருப்பதற்கில்லை. நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டும் சேலத்தில் கிடைக்கக்கூடிய இரும்புக் கனிப் பொருள்களைக் கொண்டும் சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்திவரும் நேரத்திலே, நிலக்கரியைக்கொண்டு மின்சாரம்தான் உற்பத்தி செய்ய முடியும் என்ற காரணத்தையே மறுப்பாக அரசாங்கத்தார் சொல்லி வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல், நெய்வேலி திட்டத்தை நிறைவேற்றும்போது கிடைக்கும் உபபொருள்களைக் கொண்டு பல உப தொழில்களையும் ஏற்படுத்தலாம் என்றும், அந்தப் பொறுப்பை தனியார்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கனம் நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை தனியாரின் கையில் விடாமல் அரசாங்கமே ஏற்று, தொழிலை நடத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் ராஜ்யத்தில், சிறு கைத்தொழில்களுக்காக 14 திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். இவைகளை விளம்பரம் செய்வதற்காக ரூ. 98,000 செலவு செய்யப்போவதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. இந்த மாதிரியான சிறு கைத்தொழில்களை தனியாருக்கு விட்டுவிட்டு தனியாரால் செய்ய முடியாத காரியங்களை அரசாங்கம் எடுத்துச் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன். சிறு கைத்தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் பற்றி விளம்பரம் செய்வதற்கு "இன்டஸ்ட்ரியல் மியூசியம்" இருக்கிறது. இந்த விளம்பரத்திற்காக ஒரு கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்திற்காக ஆண்டுதோறும் ரூ. 5,000-ம் கொடுக்கப்படுகிறது. ரூ. 5,000-க்குப் பதிலாக ரூ. 20,000 அல்லது ரூ. 30,000 கொடுத்தால் சர்க்காரே நல்ல முறையில் விளம்பரங்களைச் செய்யலாம்.

நமது நிதி மந்திரி அவர்கள் தமது பிரசங்கத்தில் மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், வாங்கும் சக்தி அதிகரித்திருப்பது உண்மையானால் கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பானேன். இன்றையதினம் கைத்தறித் துணிகள் அதிகமான அளவில் தேங்கியிருக்கின்றன. கைத்தறி நெசவாளர்களின் பிரச்னை தீர வேண்டுமானால், ஏற்கெனவே முதல் மந்திரியாக இருந்த ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் அவர்கள் கொடுத்த திட்டத்தை—மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளாத அந்தத் திட்டத்தை—மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

கடைசியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக ஆங்காங்கே ஓராசியர் பள்ளிகளை நிறுவுவதுடன், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு அந்தப் பள்ளிகளில் ஆசிரியர்களாக இருப்பதற்கான பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. ஸ்ரீ கருத்திருமன் அவர்கள், "வேலையில்லாத் திண்டாட்டம் ஏது ? எங்கும் வேலை செய்கிறவர்கள்தான் இல்லை" என்ற குற்றச் சாட்டைச் சொல்லலாம். ஆனால், வேலை செய்யத் தயாராய் இருக்கும் படித்தவர்கள் ரொம்ப இருந்தும், வேலை கிடைக்காத காரணத்தினால்தான் அவர்கள் ஓராசிரியர் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதைத்

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஓராசிரியர் பயிற்சிக் காலம் இப்போது ஒரு ஆண்டாக இருக்கிறது. இதை ஆறு மாத காலமாகக் குறைத்து இன்னும் நிறையப் பேர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். ஆகவே அவர்கள் ஓராண்டு காலம் பயிற்சி பெறுவது அவசியமில்லை என்றும் பயிற்சிக் காலத்தை ஆறு மாதங்களாக ஆக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

* SRI M. WILLIAM : Mr. Speaker, Sir, coming as I do from Vilavancode taluk of the old Kerala State, I am not in a position to express myself clearly in Tamil, and so, I request that I may be pardoned for speaking in English.

The Budget, as presented by the Hon. the Minister for Finance, contains very many bright features. It covers almost all the aspects of life and the development of which is necessary for ushering in a socialistic pattern of society. Though the Budget presented is a deficit one, I am sure, at the end of the year, we will find it a surplus one, because the Hon. the Minister for Finance himself has suggested very many measures to cover the deficit. So, there is no reason to be gloomy over the deficit nature of the Budget.

In this connexion, it is my duty to refer to a few facts regarding Kanyakumari district. Under the various Budget estimates, I do not find any important items relating to that district taken up for execution this year. Probably, the Hon. the Minister for Finance intends to execute some of those items from out of the lump-sum provision he has made for that district. Whatever it may be, it is my duty to point out some of the important items of work that may be taken up by the Government.

Sir, Vilavancode taluk is the southernmost taluk of the State, the population of which is 285,000. Most of the people in that taluk are very poor. There are no industries started in that area. Eighty per cent of the people are tappers and they are engaged in palm-gur industry. Most of the rivers in that area take their source in that taluk. Through the middle of the taluk runs the Kuzhuthurai or the Tambaraparani river. But the taluk itself is not benefited in any way. In this connexion I am reminded of the verse in the Ancient Mariner, ' Water here, water there, and water everywhere; but no water to drink '. That is the fate of Vilavancode taluk. Most of the rivers take their source in this taluk and yet the taluk is not in any way benefited. Agastheeswaram and Thovala taluks and portions of Kalkulam taluks are benefited from out of the two or three important rivers which take their source in this taluk. Fifty years ago, projects like Kothiar Project, Chittar Pattangal Project found a place in the Kothiar scheme drawn up by Mr. Horseley, the then Chief Engineer of Travancore State. We have been pleading for the inclusion of Chittar Pattangal Project in the schemes to be executed for the last fifty years. We have made many representations to the Travancore-Cochin State in that connexion. At last, this scheme was included in the draft Second Five-Year Plan submitted by the Travancore-Cochin Government to the Government of India for sanction and a certain amount of money was also allotted for that. But, due to some reasons, this project was not included in the final draft approved by the Centre.





But I am sure that the Madras Government will not adopt such a hostile attitude as was being taken by the Travancore-Cochin State. For the last ten years, we have been agitating for the merger of the Tamil areas of Travancore-Cochin State with the Madras State and for that reason we have been neglected by that State. But the Madras Government, I am sure, would not neglect us in that way. I therefore pray that the Chittar Pattangal scheme be immediately taken up for operation and work implemented this year itself.

Another important scheme is the extension of the Neyyar left bank channel. This is included in the Second Five-Year Plan. So far as the Kerala State is concerned, construction of work on this scheme is proceeding well. To the left of the channel in the Vilavangode taluk for 42 miles branch channels should be taken up immediately by our Government. Because we are to get water from the Neyyar Dam which is situated in the Kerala State, and unless branch channels work is taken up in the Vilavangode taluk, and this net work is taken up immediately, we will be put to hardship. This is also included in the Second Five-Year Plan.

Another small scheme is the extension of the Thipparappu channel to Mullayar and that is a small scheme costing about Rs. 5,000 or Rs. 10,000 and that relates to the extension for nearly half a mile. With regard to these irrigation schemes, I am sure the Government will come forward and execute them promptly. When the Hon. Chief Minister was in Nagercoil in connexion with the inauguration of the merger of Tamil areas with Madras on the 1st November 1956, he assured in the meeting that no drop of water would be allowed to run to waste. In this connexion, I would wish simply to remind the Hon. Chief Minister as also the Hon. Finance Minister about that and request them to see that the water that flows into the sea should not be allowed to run to waste but should be converted for irrigation purposes.

Sir, there are about 900 tanks dug up by the Government some 150 years ago. They are not being repaired and silt is not being removed periodically. As a result of this, most of the tanks are silted up. As these are rain-fed tanks, if they are properly deepened that will help us in solving the drought problem. So, attention should be diverted towards improving these tanks which is also not very expensive.

Another important fact, as I have already said, is that there are no industries in our area. Eighty per cent of the people are labourers and they do not get enough work; they are leading almost a half-starved lives and during times of epidemic like cholera, etc., thousands of people are taken away by these diseases. That is due to the semi-starved condition of the people. This should be averted. Locally, palm-gur is a cottage industry. This should be further developed. We are glad that the Government have come forward with generous contribution for the development of fish industry and the handloom industry.

TEMPORARY CHAIRMAN (SRI M. JAGANNATHAN): The hon. Member has only two more minutes.

[Sri M. William] [1st July 1957]

* SRI M. WILLIAM : I have five minutes more, Sir. These small industries should be developed. It seems that a sum of Rs. 2 lakhs have been allotted for these. Previously, all the co-operative societies had been receiving grants to the extent of Rs. 500 or Rs. 2,000 and this grant system should be introduced so that the societies may have enough funds for their working establishment and they should also be given subsidies for supplying palm gur implements to tappers to make refined jaggery. They should also be given small loans and thus the industry must be encouraged. In addition to these, there are possibilities for the establishment of match factories. We have a lot of wooden materials in the forest areas and the match industry could be developed there. There is also scope for paper industry, because as the House is aware, we have plenty of bamboos and pulp could easily be prepared and thus the paper industry could be successfully run in that area. This will also afford employment, as was mentioned by the hon. Member Sri T. S. Ramaswamy Pillai, to many people in that district where unemployment is very keen even among the educated classes.

One word more about service conditions and I am finished. With regard to service conditions, I am really sorry to say that officers there in the subordinate service are treated as those of a captured country. I do not know what the reason is. Most of the officers there are imported from outside, though there are sufficient persons within the district who are eligible to fill up such posts. So far as the subordinate services are concerned, of course, persons within the district should be given preference in their areas. But that is not being done. . . . . .

11-06 a.m. TEMPORARY CHAIRMAN (SRI M. JAGANNATHAN) : The hon. Member's time is up.

* SRIMATHI A. SUARES : Mr. Speaker, hon. Members of the House . . . (The Hon. Finance Minister: You should address only the Speaker.) Sorry, Mr. Speaker, Sir, I am here to represent the Anglo-Indian community which is one of the minority communities in India. We are a very small community indeed, for we number 111,637 in the whole of India and 27,253 in the Madras State. Though we are small in number, yet we form an integral part of the Indian Nation; for, in this land of India, our forefathers have lived for generations. We are not aliens in India but we are Indians by nationality. The community has rendered loyal and devoted service to the country in the past and continues to do so in the present. Our sons have joined the Indian Defence Services, the Army, Navy and the Air Force. Particularly, in the Air Force there is a high proportion of Anglo-Indians. Their ability, courage and loyalty to the country are well-known : In the list of Service Awards, it could be seen that several Anglo-Indians have displayed outstanding gallantry in very difficult situations. On the frontiers of India, there are Anglo-Indians entrusted by the Government with the guarding of India's gate-ways and I am proud to say that they would rather lay down their lives than betray



1st July 1957] [Srimathi A. Suares]

their country. There are many Anglo-Indians holding positions of high responsibility both in the Central and the State Services and they are a credit to the community as well as to their country.

The Anglo-Indian community was recognized as a minority community as far back as 1935 when the Government of India Act came into force and statutory safeguards for the community were incorporated in it. The safeguards given to the community in our present Constitution are nearly the same as those in the Government of India Act, namely, quotas in the services in the Railways, Customs, Post and Telegraphs, educational grants and political representation in the Legislatures. When the Constituent Assembly was formed, three seats were given to Anglo-Indians; thanks to the generous help and support of the late Sardar Patel, the community was able to secure safeguards under Articles 331, 333, 336 and 337. Under Article 337 of the Constitution, the education grants may be cut by 10 per cent every three years from 1953 onwards. The first 10 per cent cut was imposed in 1954-55 and the second cut in 1956-57. But the second cut was restored the same year, thanks to the kindness of the Chief Minister of Madras and to the Madras Government the community is ever deeply grateful to them for this concession.

The Budget estimate for Anglo-Indian education for 1957-58 is Rs. 9,58,100. This amount will be spent in maintaining 28 high schools, 11 middle schools, 6 primary schools and one training school. This makes a total of 46 schools which is a microscopic figure when compared with the total number of schools in the State for all communities, namely, 26,097 schools. Public examinations are held in the 9th and 11th Standards and at the end of the second year training course.

The Constitution demands that 40 per cent of the seats should be reserved for members of communities other than Anglo-Indians in these schools. But in practice 50 per cent seats are reserved for non-Anglo-Indians. Even this increased percentage is found insufficient for the every increasing demand for admission in Anglo-Indian schools. What is the reason for this increasing demand for admission in these schools? One reason is that the medium of instruction in Anglo-Indian schools is English which is the mother-tongue of the community. There is a group of children of public servants who move from one language area to another. The English medium is essential for these children whose parents move in the exigencies of public service. There are a few other groups who are unable to follow the regional language and they seek admission in Anglo-Indian schools. Another reason for this is that the quality and standard of education in Anglo-Indian schools is of a higher standard than that found in any other schools in the country. Recognising this fact the leading members of the other communities send their children to be educated in Anglo-Indian schools. But the main reason I should say is that the children may benefit by the high standard of discipline and character formation that is provided in Anglo-Indian schools. At present there are

17,552 children studying in Anglo-Indian schools and of these 8,278 are non-Anglo-Indians. These figures will show that Anglo-Indian schools serve a definite purpose in the life of the country.

Besides maintenance of schools and payment of teaching grants, the Budget provides for orphanage and boarding grants. There are 1,417 orphans and destitutes in the Anglo-Indian schools in the Madras State and 6?7 receive a uniform allowance and free mid-day metal. Had it not been for this indigent grant given to the under-privileged children, they would not have had the benefit of education. When these children are educated they will become useful citizens of India and contribute to the economy of the country.

Our schools have fallen in line with the progressive features of S.S.L.C. Schools. We have introduced bifurcated courses in four high schools following the same scheme of studies as in the S.S.L.C. class. We have established the NN.C.C. units in nine schools with great success. Our boys attended the annual gatherings of the Units at Delhi and have won awards. The second language is given a high place in the scheme of studies. The majority of pupils take Tamil and the rest take Hindi. Besides this the national language, Hindi, has been introduced as an additional language in Standards VI, VII and VIII.

In conclusion I request the House to consider the Budget for Anglo-Indian education in the light of the information I have put before the House, and to pass the Budget in full in accordance with the promise made by the Madras Government that there will be no cut for the rest of the triennium.

11·14 a.m. **Sri V. K. KOTHANDARAMAN** : தலைவர் அவர்களே, தமிழ் நாடு ராஜ்யம் தனியாகப் பிரிக்கப்பட்ட பிறகு முதன் முதலாக உள்ள பட்ஜெட் கூட்டத்திலே முதன் முதலாக நான் பேசுகின்றேன். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தளவிலே வழக்கமாக இதுவரை எப்படி பற்றுக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டு வந்ததோ அதே போன்றுநான் இப்பொழுதும் ஒரு பற்றுக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத்தான் பார்க்கிறோம். அதற்கு காரணம், நமது கனம் நிதி அமைச்சரவர்கள் எந்த கொள்கையை உடையவரோ, அவர் எந்தக் கட்சியை சார்ந்தவரோ அந்த கட்சியின் தன்மையைப் பிரதிபலிக்கக்கூடிய தன்மையில்தான் இதற்கு முன்னால் தொடர்ந்தாற்போல் பட்ஜெட்கள் எப்படி சமர்ப்பிக்கப்பட்டதோ அதே போல்தான் இப்பொழுதும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதை நான் சொல்வதாக மட்டும் நினைத்து விடக் கூடாது. இந்த பட்ஜெட்டின் முகவுரையின் 27-வது பாராவிலே நிதி இலாகா காரியதரிசி திருவாளர் வர்கீஸ் அவர்களே இதை எடுத்துக் கூறியிருக்கிறார் என்பதை அதில் பார்த்தால் தெரிய வரும். மேலும், கனம் நிதியமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டை ரொம்ப சாமர்த்தியமாகவும் ரொம்ப தந்திரமாகவும் வெகு சிரமப்பட்டு தயாரித்துள்ளார் என்பதை பார்க்க முடிகிறது. காரணம் நேற்று வந்த கேரளத்திலே கழிந்த பத்து வருடங்களில் இல்லாத முறையில் இன்று அவர்கள் ஒரு சர்ப்ளஸ் பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதே போன்ற பட்ஜெட்டை எப்படி நாம் இந்த நேரத்திலே தயாரிப்பது என்கிற ஒரு தயக்கத்தோடுதான் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக வேண்டித்தான் மிகவும் சிரமப்பட்டு சாமர்த்தியமாக, தந்திரமாக, தயார் செய்யப்பட்டது என்பதைத் தான் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மக்களின் நிலைமையை சரியாக, சரிவர கணக்கில் எடுத்துத் கொள்ளாத ஒரு நிலைமையில் தான் இந்த பட்ஜெட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. மக்களின் மீது





ஏற்கனவே போட்டிருக்கக் கூடிய வரிகளைக் குறைப்பதற்குப் பதிலாக அப்படி குறைக்கவில்லை என்று சொன்னாலும் மேலும் அதிகப் படுத்தாமல் இருந்தார்களா என்று சொன்னால் அதுவும் கிடையாது. அதற்குப் பதிலாக உணவுப் பொருள்கள் பேரில் நாங்கள் ஒரு சதவிகிதமாகக் குறைக்கிறோம் என்று சொல்லி மற்ற பொருள்களின் பேரிலே இரண்டு சத விகிதமாக்குகிறோம் என்று சொல்லி சத விகிதத்தில் சரி பண்ணுகிறோம் என்று கணக்கை காட்டியும் ரொம்பவும் சாமர்த்தியமாக அதிகப்படுத்தப் பட்டிருக்கிறதேயொழிய இன்றைக்கு அவற்றை குறைக்கக் கூடிய தன்மையிலே இப் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதைப் பார்க்கிறோம். மேலும் இன்றைக்கு உணவுப் பொருள்களின் உற்பத்தி அதிகம் என்று சொல்லிவிட்டு, உணவு உற்பத்தி அதிகமாயிருக்கிற இந்த நேரத்தில் உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்ந்து விட்டது. அதற்குக் காரணம் வாங்கக்கூடிய சக்தி அதிகமாகி விட்டது. இருந்த போதிலும் விலைவாசி உயர்வு நல்லதுதான் என்று ஒரு இடத்திலும் அப்படி ஏறுவது சரியில்லை என்று இன்னொரு இடத்திலும் குறிப்பிடப் பட்டு வருகிறது என்று சொன்னால், அது சமயத்திற்குத் தகுந்தாற்போல் எடுத்துக்கொள்வதற்குத்தான் வாங்கக் கூடிய சக்தி அதிகமாகி விட்டது என்று சொன்னால் இன்று மக்களிடம் பணம் அதிகமாகி விட்டது என்று தான் அர்த்தம். வாங்கக் கூடிய சக்தி மக்களிடம் அதிகமாகி விட்டது என்று சொன்னால், அது சரியானால் இன்று சர்க்கார் சிப்பந்திகளும், உபாத்தியாயர்களும், கிராம உத்தியோகஸ்தர்களும் ஏன் இன்று சம்பள உயர்வுக்கு வேண்டியும் பஞ்சப்படி உயர்வுக்கு வேண்டியும் போராடக் கூடிய நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். மந்திரிமார்களே இன்று அவர்களது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டால் எங்களால் வாழ்க்கை நடத்த முடியாது என்று சொல்லக் கூடிய அளவிற்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது எப்படி வாங்கக் கூடிய சக்தி அதிகமாகி விட்டது என்பதை நாம் நன்றாக சிந்தித்துப் பார்த்தாக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இந்த பட்ஜெட்டில் ஒரு அளவிற்கு வரவேற்கக் கூடிய அம்சங்கள் இருக்கின்றன என்பதை நாம் பார்க்கிறோம். இது இந்த ஆண்டு பட்ஜெட்டில் மட்டுமல்ல. வழக்கமாக எல்லாப் பிரச்னைகளிலும் சில நல்ல அம்சங்கள் சேர்ந்து வரக் கூடியது சிறிய விஷயமே. புஸ்தகங்களுக்கு நாங்கள் வரியை பரிபூர்ணமாக நீக்கி விட்டோம் என்று சொல்வதோ, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக வேண்டி "ஸீட் பார்ம்ஸ்", விதை உற்பத்தி செய்யக் கூடிய "பார்ம்கள்" ஆரம்பிக்கப் போகிறோம், மற்ற சௌகரியங்கள் எல்லாம் இருக்கிறது என்று சொன்னாலும் இன்றைக்கு அதன் காரணமாக உணவு நெருக்கடியைப் போக்கவோ அல்லது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவோ முடியாது என்பதை நாம் பார்க்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் இதில் இருக்கிற குறைபாடுகளை நல்ல முறையில் நாம் கண்டிப்பாக எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனால் நமது நண்பர் [illegible] அவர்கள் நல்ல அபிப்பிராயங்களை சொல்லக் கூடியதென்பதற்காக வேண்டி நன்றாக பயமுறுத்தியும் சவால் விட்டு அவர் பேசுகிறார் என்று சொன்னால், அப்படி நல்ல அபிப்பிராயங்களை சொல்வதற்குப் பதிலாக அதை அப்படியே முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்துத் தான் அப்படிச் சொல்கிறார் என்பதை இந்த மாதிரி [illegible] நாம் பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். [illegible] சவால் விடுவது என்றால் எத்தனையோ சவால்கள் விடலாம்; பதிலும் சொல்ல முடியும். ஆனால் நேரம் இல்லாத காரணத்தினால் இது போன்று சவால் விடுவதற்கு அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். இப்படி விலைவாசி உயர்ந்தது நல்லது என்கிற முறையிலே 1940-வது ஆண்டிலே கூட விவசாய உற்பத்திப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்த காலத்திலே அன்று இருந்த அரசாங்கம் இது போன்று உயர்வது நல்லது தான் என்று சொன்னார்கள். அதுபற்றி அன்று இருந்த பி. வி. நாராயணசுவாமி கார் பொருளாதார நிபுணர் அவருடைய ரிபோர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார். இது போன்று விலைவாசிகள் உயர்வதால் நிலப்பிரபுக்களுக்கு அனுகூலமே தவிர, சாதாரண மக்களுக்கு எந்தவிதமான அனுகூலமும் கிடையாது என்று திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இதை கவனிக்க

வேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். உணவுப்பொருள்களின் விலைவாசிகளை கட்டுப்படுத்துவதற்கு எந்த வித மான திட்டமும் கிடையாது. விலைவாசிகளை குறைக்க முயற்சி செய்ய வேண்டுமானால், உடனடியாக நிலச் சீர்திருத்த திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். புறம்போக்கு நிலங்களை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும். உணவுப்பொருள்களின் மீது இருக்கக் கூடிய வரிகளை ரத்து செய்யவேண்டும். உணவுப் பொருள்களை பாங்குகளில் அடகு வைத்து பணம் வாங்கக் கூடிய பெரிய வியாபாரிகளுக்கு அது போன்று பணம் கொடுக்கக்கூடாது. இம்மாதிரி முறைகளை கையாண்டால்தான் உணவுப் பொருள்களின் விலைவாசிகளை குறைக்க முடியுமே தவிர, இல்லையென்றால் கண்டிப்பாக குறைக்க முடியாது.

அது போன்று உணவு விநியோகத்தில் நமது சர்க்கார் எந்த அளவுக்கு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், கொஞ்சமும் சிரத்தை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்று கேட்டால், இன்றைக்கு மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழே இருக்கக் கூடிய ஹைதராபாத் உணவு **godown**-ல் **2,000** டன் அரிசி மக்கிப் போய்விட்டது. சென்னை ஹார்பரில் **2** லட்ச ரூபாய் பெறுமான அரிசி களவு போய்விட்டது. இது புதிதல்ல. இது போன்று பல முறைகள் நடந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். இப்படியெல்லாம் இருந்துகூட சர்க்கார் உணவு விநியோக விஷயமாக சரியான நடவடிக்கை எடுப்பது கிடையாது. உணவு விஷயத்திலே சரியான அக்கரை செலுத்துவது கிடையாது. இது போன்ற ஊழல்களையும் அதிகப்படியாக செலவு ஆகக்கூடிய முறைகளையும் நாம் தடுக்காத வரையில் கண்டிப்பாக பொருளாதார நெருக்கடி ஏற்படும். அதற்காக வேண்டி நாம் எவ்வளவு வரி போடுவது, யார் பேரில் வரிபோடுவது என்றெல்லாம் கேட்கலாம். ஆனால் வரி போடவேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. யார் பேரிலே வரி போட வேண்டும், யார் பேரிலே வரி போடக்கூடாது என்பதை நாம் பார்க்க வேண்டும். அப்படியில்லாமல் ஏழை மக்கள் மீதே மேலும் மேலும் வரிகளை உயர்த்திக்கொண்டே போவோமானால், கண்டிப்பாக இப்படி துண்டு விழக்கூடிய ஒரு வரவு செலவு திட்டத்தையேதான் நாம் பார்க்க முடியும். உதாரணமாக இன்றைக்கு கேரள சர்க்கார் அங்கு இருக்கக்கூடிய சிப்பந்திகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தும் கூட **7** லட்சத்து சொச்ச ரூபாய்க்கு உபரி பட்ஜெட் கொண்டு வந்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார், விநோபாஜி, நிதிகமிஷன் தலைவர் ஸ்ரீ கே. சந்தானம் முதலியோர்கள் அந்த பட்ஜெட்டை பாராட்டியிருக்கிறார்கள். அது போன்று பாராட்டுதலுக்குரிய ஒரு பட்ஜெட்டை நம் சர்க்கார் கொண்டுவரவில்லை என்பதைக் குறித்து நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன்.

கேரள சர்க்கார் சுமார் **7½** லட்சம் ஏக்கர் புறம்போக்கு நிலத்தை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டுமென்பதற்காக திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் நமது சர்க்காரிடம் அம்மாதிரியான திட்டம் கிடையாது. அதுமட்டுமல்லாமல் இங்கே நிலமில்லாத பிற்பட்ட ஏழை மக்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய நிலங்களிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. அதுவுமல்லாமல் அவர்கள் வாழ்வதற்காக புறம்போக்கு நிலங்களில் போடப்பட்டிருக்கக்கூடிய குடிசைகளெல்லாம் பிய்த்து எறியப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இதை உடனடியாக சர்க்கார் கவனிக்காவிட்டால் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியாது, வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கமுடியாது. வேலையில்லாத் திண்டாட்டமல்ல, வேலை செய்யாத திண்டாட்டம்தான் என்று மிக சுலபமாக சொல்லிவிட முடியும். ஆனால் இன்று சர்க்காருடைய புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டால் எத்தனை லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கலாம். இன்று தொழில் வளர்ச்சிக்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, தொழில் அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டே வருகிறது என்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. ஒரு பக்கத்திலே தொழில் அபிவிருத்தி என்று தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டால், மறுபக்கத்திலே தொழிற்சாலை மூடுவிழாக்கள் நடைபெறுகின்றன. பல ஆண்டுகளாக நடந்து





மூடப்பட்ட தொழிற்சாலைகளை திறந்து தொடர்ந்து நடத்தவேண்டுமென்று கேட்டால், அதை தாங்கள் திறந்து நடத்தமுடியாது என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். கேரள சர்க்கார் மூடிக் கிடந்த தொழிற்சாலைகளை திறந்து நடத்த வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நம் சர்க்கார் அம்மாதிரி நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் தயங்குவதற்குக் காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. இந்த நிலையிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுமே தவிர, குறையாது. வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை வேண்டுமானால் தருகிறோம். அவர்களுக்கு சர்க்கார் வேலை கொடுப்பதற்குத் தயாரா? அப்படியில்லாமல் வேலை செய்யாத திண்டாட்டம் என்றுமட்டும் சொல்லிவிட்டால் போதாது. அதே நேரத்திலே நமது ராஜ்யத்திலே விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலம் **2,393,548** ஏக்கர், விவசாயத்திற்கு பயன்படாது என்று ஒதுக்கப்பட்ட நிலம் **4,849,290** ஏக்கர். ஆகவே **72** லட்சம் ஏக்கர் நிலம் இன்றைக்கு இருக்கிறது என்று சொன்னால், அந்த நிலங்களை விவசாயம் செய்யக்கூடிய நிலம் இல்லாத விவசாய மக்களுக்கு கொடுப்பதன்மூலம் மேலும் மேலும் உணவு உற்பத்தியை நாம் அபிவிருத்தி செய்ய முடியும்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையை எடுத்துக் கொண்டால், சிறிய அளவு கூட்டுறவு சங்கங்களின் மூலம் அவர்களுக்கு உதவி செய்வதன் மூலமாகவோ அல்லது சில கைத்தறி கடைகளை ஆரம்பிப்பதனாலோ இவர்களுடைய பிரச்னை தீர்ந்து விடாது, தீர்ந்துவிடவுமில்லை. அதற்குப் பதிலாக உற்பத்தியாகக் கூடிய கைத்தறித் துணிகளையெல்லாம் சர்க்கார் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சி செய்யவேண்டும். குறைந்த விலையிலே அவர்களுக்கு நூல் விநியோகம் செய்யவேண்டும். அதே போன்று உடனடியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விவசாயம் செய்வதற்காகவும், வீடுகள் கட்டிக்கொள்வதற்காகவும் புறம்போக்கு நிலங்களை கொடுக்கவேண்டும். அவர்களுக்கு பல வசதிகளையும் நாம் செய்து கொடுக்க வேண்டும். இப்பொழுது கொடுக்கிறோம் என்று சொல்லலாம். சிறிது அளவுதான் கொடுக்கப்படுகிறது. மேலும் அதிகமாக சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

அதே போன்று பட்ஜெட்டை சரிக்கட்டுவதற்காக வேண்டி சிக்கனத்தை கடைப்பிடிப்பதற்காக பரிசீலனை நடத்த ஒரு விசேஷ அதிகாரியை நியமிக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் ஒரு பயமும் ஏற்பட்டிருக்கிறது. என்னவென்றால் ஆள் குறைப்புத் திட்டம் கொண்டு வரக்கூடிய நிலைமை ஏற்படுமோ என்பதுதான். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், சிக்கனம் என்று சொல்லக்கூடிய நேரத்திலே முதன் முதலாக முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள், கவர்னர் அவர்கள் ஆகியோர் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள முன் வரவேண்டும். அப்பொழுதுதான் மற்ற பெரிய அதிகாரிகளும் அவர்களுடைய சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள முன் வருவார்கள்.

* **Sri A. R. SUBBIAH MUDALIAR** : தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற பட்ஜெட்டை நான் மனப்பூர்வமாக ஆதரிப்பதுடன், அதை இவ்வளவு குறுகிய காலத்தில் அதிக வரி விதிக்காமல் பல திட்டங்கள் அமைத்திருப்பது குறித்து சந்தோஷப்படுகிறேன். ஆனால், என் சங்கரன் கோவில் தொகுதி சம்பந்தப்பட்ட மட்டும் அவர்கள் கொஞ்சம் இரக்க சித்தமில்லாதவராக இருக்கிறாரோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதாவது, அவர்களே இரண்டாவது பாராவில் "திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், நாங்குனேரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய பகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதிலும் மழை மிகவும் குறைவு" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு ஒரு விதமான பரிகாரமும் அவர்கள் செய்யவில்லை. பத்து வருஷங்களாக சங்கரன் கோவில் பகுதியில் மழை இல்லாமல் கஷ்டப்படுகிறது. நிதி அமைச்சர் அவர்களின் பிரசங்கத்தில் ஐந்தாம் பக்கத்தில் நீர்ப்பாசனத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "இன்னும் தொடக்கவேண்டியவைகள், தென்னாற்காடு, புதுச்சேரி இவைகளுக்கான நீர் தேக்கமும்,

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்பும் திட்டங்களுமே" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அநேக திட்டங்கள் முடிவான நிலையில் இருக்கின்றன. அவைபோக பாக்கித் திட்டங்கள் வீடூர் தேக்கமும், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கிளம்பும் ஆறுகளின் நீரைத் திருப்பும் திட்டமும்தான். இதற்காக கேரள சர்க்காரை அணுகவேண்டும் என்று கண்டிருக்கிறது. சங்கரன்கோவில் தொகுதி சம்பந்தப்பட்ட கிரியாறு திட்டம் ஒன்று. அது இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு முன் பரிசீலனை செய்யப்பட்டது. அதற்கு ரூபாய் 40,000 வரையில் செலவு செய்யப்பட்டது. மேற்கொண்டு ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ரூபாய் 40,000 செலவு செய்யப்பட்ட ஒரு திட்டத்திற்கு, அடுத்தபடி கேரள சர்க்காரோடு தொடர்பு கொள்வதற்கு ஏதாவது செய்திருக்கிறார்களா என்றால், இல்லை. இது ஒரு க்ரானிக் டிஸீஸ் ஆகிவிட்டது. பஞ்சம் பஞ்சம் என்று சொல்லுவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று ஒரு குறைபாடு இருக்கிறது. ஜில்லா பிளானிங் கமிட்டியில் இதைப் பற்றித் தெரியப்படுத்தியிருக்கிறோம். முக்கியமான திட்டங்களைச் சேர்க்கவேண்டுமென்று அவர்களும் இதை தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ரூபாய் 40,000 செலவழிக்கப்பட்டு இன்வெஸ்டிகேஷன் ஆன ஒரு திட்டம் முடியாத நிலையில் இருக்கிறது என்று தொகுதியில் சொல்லும்போது கஷ்டப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். அதற்கு ஒருவிதமான செலவினங்களும் சேர்க்கப்படவில்லை. டோகன் கிராண்ட் கூட இல்லை. வீடூர் தேக்கத்திற்கு 1956–57-ல் டோகன் கிராண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது ஷை திட்டமானது நடக்கக்கூடிய நிலையில் இல்லை. பஞ்ச நிவாரண வேலைகளுக்காக ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் சொல்லப்படுகிறது. வாஸ்தவந்தான். கஷ்டம் என்னவென்றால் ஒதுக்கப்பட்ட தொகை இன்று வரையில் செலவழிக்கப்படவில்லை. நிர்வாகத்தில் பலவிதமான இடையூறுகள். இதையெல்லாம் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். பஞ்ச நிவாரணப் பிரதேசத்தில் ஜமீன் நிலமும் இருக்கிறது. சர்க்கார் அவர்கள் **Loan-*cum*-Subsidiary-Scheme** மூலம் துகை கொடுக்கிறார்கள். அதாவது அங்குள்ள பழைய கிணறுகளைத் தோண்டுவதற்காக. இந்த ஜமீன் பிரதேசத்தில் இருக்கிற கிணறுகளுக்கு தொகை வாங்க கஷ்டமாயிருக்கிறது. சர்வே பிளான் வந்தால்தான் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். இப்போதுதான் ஜமீன் சர்வே செய்யப்படுகிறது. இன்னும் ஒரு வருஷம் அல்லது இரண்டு வருஷம் ஆகும். அது வரையில் இத்திட்டத்தை இங்கு அமுல் நடத்த கஷ்டப்படும் என்று உத்தியோகஸ்தர்கள் சொல்லுகிறார்கள். வேண்டிய விதிகள் செய்தால்தான் ஜமீன் பிரதேசத்தில் இருக்கிறவர்களுக்கு நன்மை ஏற்படும்.

விவசாய இலாகாவைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பட்ஜெட்டில் புரூட் ஸ்டேஷனுக்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தென்காசி தாலூக்காவில் தென்னை மரங்கள் அதிகம். தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து தர ஒரு திட்டம் அங்கு உருவாக்கவேண்டும். அத்துடன் விவசாயத்தில் வளர்ச்சிக்காக ஒவ்வொரு தாலூகாவிற்கும் ஒரு ரிஸர்ச் ஸ்டேஷன் அவசியம் என்று தெரிகிறது. அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நமது நாடு ஒரு விவசாய நாடு. அத்துடன் விவசாய இலாகா சம்பந்தமாக ஒரு குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. அந்த இலாகாவில் அக்ரிகல்சுரல் டிமான்ஸ்டிரேடர்கள் இருக்கிறார்களே, அவர்கள் ஆறு அல்லது ஏழு வருஷங்கள் வேலைபார்த்த பிறகு ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் சரியான நிலையில் இல்லாததே இதற்குக் காரணம். மூன்று வருஷங்கள் படித்தவர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட கம்பெனிகள் அவர்களுக்குக் கூடுதலான சம்பளம் கொடுத்துக் கூப்பிடும்போது அவர்கள் இந்த வேலையை ராஜிநாமா செய்துவிட்டு சென்றுவிடுகிறார்கள். ஆறு அல்லது ஏழு வருஷங்கள் ஸர்வீஸ் போட்டவர்கள் திடீரென்று சென்றுவிடுவதால் நாட்டு முன்னேற்ற திட்டங்களுக்குத் தடங்கல் ஏற்படுகிறது. அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த நமது சர்க்கார் கவனிக்கவேண்டும்.



பாரஸ்ட் சம்பந்தமான சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். திருவாடுதுறை ஆதீனத்திற்கு செங்கோட்டை பகுதியில் காடுகள் இருக்கின்றன. அவைகள் அழிக்கப்படுகின்றன. காடுகளை வளர்ப்பதற்கு திட்டம் இருக்க ஆதீனம் அவைகளை அழிக்கிறார்கள். இதற்கு உடனடியாக தடங்கல் உத்தரவு போட்டு இதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கால்நடைப் பராமரிப்பிற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற கீ வில்லேஜ் ஸ்கீம் என்பது ஒரு நல்ல ஸ்கீம் தான். ஆனால் கிராமத்தில் உள்ள கால் நடைகளுக்கு உணவு சரியாகக் கிடைக்காததால் இந்த ஸ்கீமை பாதிக்கிறது. இதற்கு அந்தந்தப் பகுதிகளில் மேய்ச்சல் காடுகள் தேவை. சர்க்கார் அங்கங்கு மேய்ச்சல் காடுகள் ஏற்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசீய நல திட்டத்தில் கிராமங்களில் சேவை செய்ய மாணவமாணவிகளை தேர்ந்து எடுத்து ட்ரெயினிங் கொடுத்து வருகிறார்கள். அதற்கு பதில் அல்லது அத்துடன் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஷை பயிற்சி கொடுத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

அடுத்தபடியாக மின்சாரம் விஷயமாக பேசும்போது அதன் விஸ்தரிப்பு வேலைகளைப்பற்றி ஒருவராலும் குறை சொல்வதற்கு இல்லை. விஸ்தரிப்பு வேலை நன்றாக வேலைசெய்துகொண்டு வருகிறது. ஆனால் இந்த மின்சாரம் வாங்கும் வகையில்தான் ரொம்பவும் கஷ்டம் ஏற்படுகிறது. ஸ்கீம் ஸாங்க்ஷன் ஆன பிறகு மின்சாரம் வேண்டும் என்று மனுக் கொடுத்தால் அது ஸாங்க்ஷன் ஆவதற்கு இரண்டு மாதங்களாகின்றன. ஆனால் கிராமவாசிகள் என்ன செய்கிறார்கள் என்றால் மின்சாரம் வேண்டுமென்று மனுக் கொடுத்தவுடனேயே மின்சாரம் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில் அவர்கள் தங்களிடமுள்ள மாடுகளை உடனே விற்று விடுகிறார்கள். அவர்கள் மின்சாரம் உடனே கிடைக்கும் என்று எதிர்பார்த்து கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அதனால் மனுக் கொடுத்தால் இவ்வளவு நாட்களுக்குள் மின்சாரம் கொடுத்துவிடவேண்டும் என்ற ஒரு உத்தரவை சர்க்கார் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த விஷயத்தில் ரெட் டேபிஸம் அதாவது சிகப்பு நாடா கொள்கை அதிகப்படியாக அனுஷ்டிக்கப்படுகிறது. அப்படி இல்லாமல் உடனடியாகக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக சிறு ரக தொழில்கள், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அல்லது காலனிகள் அமைக்கும் விஷயமாய் குறைபாடு இருக்கிறது. அவைகளையெல்லாம் ஜில்லா ஹெட்குவார்ட்டர்களில்தான் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். ஏன் என்று கேட்டால் அங்கு அமைத்தால்தான் எல்லா ஜனங்களும் வந்து பார்ப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்வது சரியல்ல. ஜில்லா ஹெட்குவார்ட்டர்களில் அவைகளை அமைப்பதால் தொழில்கள் எல்லாம் ஜில்லாவிலுள்ள டவுன்களுக்குத்தான் போகின்றன. அவைகளை கிராமங்களில் அமைப்பதற்கு முடியாமல் போய்விடுகிறது. ஆகவே அவைகளை அதிக ஆர்ட்டிசன்கள் இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளில் அமைத்தால் நலம் என்று தோன்றுகிறது. அப்பொழுது தான் அவைகள் எல்லோருக்கும் பயன்படக் கூடியதாக இருக்கும். சென்ட்ரலைஸ் பண்ணாமல் பரந்த முறையில் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிறகு ஹரிஜனங்கள் சம்பந்தமாக பேசும்போது அவர்களுக்கு என்று அமைக்கப்பட்ட ஹாஸ்டல்களில் நிர்வாகத்தில் ஊழல்கள் இருக்கின்றன என்று சர்க்காருக்கே தெரிந்து சிலவற்றை அவர்களே எடுத்து நடத்தி வருகிறார்கள். அப்படி ஊழல்கள் உள்ள எல்லா ஹாஸ்டல்களையும் சர்க்கார் எடுத்து நடத்த தயங்குகிறார்கள். எங்கே ஊழல்கள் இருக்கின்றனவோ அங்கு எல்லாம் நன்றாக கண்காணித்து அவைகளை எல்லாம் சர்க்காருடைய மேல் பார்வையில் அமைத்தால் அவைகள் நல்ல முறையில் நடக்கும் என்று தோன்றுகிறது. அதன் மூலம் அங்குள்ள ஊழல்கள் குறைவதற்கு ஏதுவாக இருக்கும்.

லோகல் அட்மினிஸ்ட்ரேஷனைப்பற்றி பட்ஜெட்டில் ஒன்றையும் காணோம். அக்டோபர் மாதம் முதல் தேதி முதற்கொண்டு டிஸ்ட்ரிக்ட் போர்டுகள்

காலாவதியாகிறது. அதன் பிறகு அது நீடித்து நடக்குமா நடக்காதா என்பது சூசகமாகவே இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் போர்ட் அங்கத்தினர்களுக்கு மாதந்தோறும் "பேட்டா" சுமார் ரூ. 800 வரையில் கொடுக்கிறார்கள். இப்பொழுதுள்ள ஜில்லா போர்ட்களின் நிதி நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. பல ஆயிரக் கணக்கான ரூபாய் ஜில்லா போர்ட் கடன்பட்டு இருக்கின்றன. அதனால் ஜில்லா போர்டை உடனடியாக அபாலிஷ் பண்ணுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. ஒரு ஷ்பெஷல் ஆபீசர் போட்டு புது திட்டம் வரும்வரை நடத்தினால் நலம் என்று நான் நினைக்கிறேன்.

(சபாநாயகர் அவர்களால் மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிவுற்றது.)

* SRI TIRUMALAIMUTHU VIRACHAKKAYYA THIRUVENGADASWAMI NAICKER : தலைவர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த வருஷ பட்ஜெட்டைப் பற்றி பேசும்போது சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு அளிப்பதற்காக 10 லட்ச ரூபாய் மான்யமாக ஒதுக்கியிருப்பது ஒரு சிறந்த அம்சம். கல்வி பயிலச் செல்லும் மாணவர்களில் பெரும்பாலும் ஏழை பெற்றோர்களுடைய பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு புஸ்தகங்கள் முதலியவைகள் கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கின்றார்கள். அவர்கள் புஸ்தகங்கள், கற்பலகை முதலியவைகள்கூட வாங்கிக் கொடுக்காமல் தங்களுடைய பிள்ளைகளுக்கு அனுப்புகிறார்கள். இதை நானே பார்த்திருக்கிறேன். நான் மதுரை ஜில்லா போர்ட் அங்கத்தினராக இருப்பதால் நான் பல பள்ளிகளுக்குச் சென்று பார்க்கும்போது இதைக் கண்டேன். அதனால் அங்குள்ள பிள்ளைகளுக்கு பகல் உணவு அளிப்பதோடுகூட இத்தகைய ஏழை குழந்தைகளுக்கு கற்பலகைகளும் புஸ்தகங்களும் வாங்கிக் கொடுக்கப்பதற்கு ஓர் தொகையை அடுத்த ஆண்டிலாவது ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒதுக்கி வைத்து அவர்களுக்கு இவைகளை வாங்கிக்கொடுத்து அவர்களுக்கு கல்வி கற்றுக் கொள்ள வசதிசெய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போது கிராம மக்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளுக்கு என்று அநேகம் ரோடுகள் போடப்பட்டு வருகின்றன. இன்னும் பல ரோடுகள் போடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலைமையில் எங்கள் மதுரை ஜில்லா, திண்டுக்கல் தாலுகாவில் முக்கியமான இரண்டு வியாபாரஸ்தலங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு கிராமங்களுக்கும் ரோடுகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவைகளில் திண்டுக்கல் தாலுகாவிலுள்ள வெள்ளோடு கிராமம் ஒன்று. இரண்டாவது எனது வட மதுரை தொகுதியிலுள்ள வேம்வார்கோட்டை. இந்த இரண்டு கிராமங்களுக்கும் போக வேண்டுமானால் ரயில் பாதையைக் கடந்து செல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்படி ரயில் பாதை கடந்து செல்வதாயிருந்தால் அங்கு "லெவல் க்ராஸிங்" அவசியமாக இருக்கிறது. அது வேண்டு என்று கேட்டால் மத்திய அசரசாங்கத்தைக் கேட்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களைக் கேட்டால் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அதற்கு 9 ஆயிரம் ரூபாய் செலவாகும், மற்றும் அங்கு நியமிக்க வேண்டியதாக இருக்கும் காவலாளிக்கும் மாதச் சம்பளம் கொடுக்க வேண்டியதாக இருக்கும், இந்தச் செலவுகளை ஜில்லா போர்ட் ஒத்துக்கொண்டால் அங்கு "லெவல் க்ராஸிங்" போட்டுக் கொடுப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கூட சொன்னார் ஜில்லா போர்ட் நிதி நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது என்று. அநேகமாக எல்லா ஜில்லா போர்டுகளின் நிதி நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. அதைப் போலவே மதுரை ஜில்லா போர்டும் இருக்கிறது. இரண்டு கேட்டுகள் அமைப்பதாக இருந்தால் 18 ஆயிர ரூபாய் செலவழிக்கவும் மற்றும் கேட் கீப்பர்களுக்கு மாதச் சம்பளமும் கொடுப்பது என்றால் அது ஜில்லா போர்டினால் முடியாத காரியம். அதனால் ஒன்று ராஜ்ய சர்க்கார் தன்னுடைய சொந்தச் செலவில் செய்து கொடுக்கவேண்டும் அல்லது மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்து அவர்களையாவது போட்டுக்கொடுக்கச் சொல்லவேண்டும். அதன் பிறகுதான் இந்த இரண்டு கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி ஏற்படும். இதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.



ஜில்லா போர்டுகளில் "ஸ்டைபண்டு" வாங்கிக் கொண்டு டாக்டர்களும் பி.டி. க்களும் படித்து பட்டம் வாங்கி வருகிறார்கள். அப்படி பட்டம் பெற்றுவிட்டு வந்த பிறகு அவர்கள் ஜில்லா போர்டுகளில் வேலை செய்யாமல் வேறு இடங்களுக்கு சென்று விடுகிறார்கள். காரணம் அவர்களுக்கு ஜில்லா போர்டினால் அதிகப்படியான சம்பளம் கொடுக்க முடியாமல் இருப்பதால் அதிகப்படியாக சம்பளம் கொடுக்கக்கூடிய இடங்களுக்கு அவர்கள் சென்று விடுகிறார்கள். அதனால் ஜில்லா நிர்வாகத்தின் கீழ் நடைபெறும் ஆஸ்பத்திரிகள், ஹைஸ்கூல்கள் முதலியவைகள் சரியானபடி நடைபெறாமல் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறையை நீக்குவதற்கு அவ்விதம் பட்டம் பெற்று வருகிறவர்கள் கட்டாயமாக இவ்வளவு வருஷங்களுக்கு ஜில்லா போர்டின் கீழ் வேலை செய்ய வேண்டும் என்ற ஒரு உத்தரவை உடனடியாக போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய விதிகளையும் துரிதமாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது மதுரை ஜில்லாவில் அபிவிருத்தி திட்ட வேலைகளுக்கு கடந்த ஆண்டுவரை 25 சத விகிதமாக இருந்து வந்தது. இப்பொழுதுள்ள சர்க்காரின் ஈவுத் தொகை 40 சத விகிதமாகவும் பொது ஜனங்களுடைய ஈவு தொகை 35 சத விகிதமாகவும் உயர்ந்து இருக்கிறது. இதற்கு முன்னால் சர்க்காருடைய ஈவு தொகை 50 சத விகிதமாக இருந்தது. இந்தப் புதிய உத்தரவினால் அபிவிருத்தி திட்ட வேலைகள் சரியான படி நடைபெறாமல் இருக்கிறன்றன. முன்பு இருந்தது போலவே சர்க்கார் 50 சத விகிதம் கொடுக்கும்படியான ஒரு உத்தரவாதம் அளித்தால் பொது ஜனங்கள் 25 சத விகிதம் அவர்களுடைய உழைப்பின் மூலமாக அளிக்க முன் வருவார்கள். அப்பொழுது இந்த அபிவிருத்தி திட்ட வேலைகள் துரிதமாக நடைபெறும் என்பதையும் சொல்லிக் கொண்டு இதற்கு வேண்டிய உத்தரவையும் சர்க்கார் பிறப்பிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது எனது வட மதுரைத் தொகுதியிலேயுள்ள மேலூர் தாலூகா, வட நத்தம் பிர்க்கா இந்த வருஷம் பிளாக் டெவலப்மெண்டில் சேர்க்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. அதேபோல், எஞ்சியுள்ள வட மதுரை, சாணார்பட்டி ஆகிய இரண்டு பிர்க்காக்களையும் டெவலப்மெண்டில் சேர்த்து அபிவிருத்தி வேலைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மிகவும் வறண்ட பிரதேசமான வட மதுரைத் தொகுதியிலே ஏதாவது ஒரு குடிசைத் தொழில் அல்லது சிறு கைத்தொழிற்சாலையாவது ஏற்படுத்தவேண்டுமாயும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வசதி அநேகமாக ஒரு சில மாதங்களிலே சாணார்பட்டி பிர்க்காவுக்குக் கிடைத்துவிடலாமென்று நான் எதிர்பார்க்கிறேன். இப்பொழுது மின்சார வசதி எங்கள் வடமதுரை பிர்க்காவுக்கும் சாணார்பட்டி பிர்க்காவுக்குமாக விஸ்தரிப்பு செய்து, விவசாயத்தை நல்ல முறையில் பெருக்குவதற்காக விவசாயிகளை உற்சாகமூட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

* SRI V. K. KRISHNAMURTHY : அவைத் தலைவர் அவர்களே, 11-50 a.m.
மொழிவழி தமிழகம் இயங்கத் தொடங்கிய பின் முதன் முதலாக நமது நிதி அமைச்சர் அவர்களின் வரவு செலவுத் திட்டம் நம் முன்பு இன்று இலங்குகிறது. "உலகமெல்லாம் வாழ்கோக்கி வாழும்" என்ற அறவுரைக்கிணங்க, பருவமழை மிக்கு பெய்தமையால் நலம் பல புரிய அரண் மிகச் செய்தமை பாராட்டற்குரியதே. உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்ய வேண்டும் என்ற அறத்தை அடிப்படையாகக் கொண்டு, சமுதாயமும், நாடும், மக்களினமும், விலங்கினமும் இன்னும் மேன்மையுறவேண்டி பல திட்டங்கள் இதில் சேர்க்கப்பட்டிருப்பதைக் குறித்தும், நடைமுறைக்கேற்ற நல்ல வழிகள் அமைக்கப்பட்டிருப்பதைக் குறித்தும் நம் அனைவரும் மகிழாமல் இருக்க முடியவில்லை.

[Sri V. K. Krishnamurthy] [1st July 1957

இந்நாட்டிற்கே உரிய விவசாயத் தொழிலானது வளர்ச்சியடைந்து, உழவுத் தொழில் மேலோங்குவதற்குவேண்டிய நல்லமுறையில் இவர்களுக்கு உதவுவதற்கு செலவினங்களை வாரி வழங்கியுள்ளார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானல், விவசாயம் செழிப்பதற்காக வேண்டி விதைப் பண்ணைகள் அமைத்து உதவவும், ரசாயன உரங்கள் உதவவும் அரசாங்கம் முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியது.

விவசாயத்திற்கு இன்றியமையாததும், உடன் இருந்து ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்குக் கால் நடைகள் மிகச் சிறந்தன என்பதை உணர்ந்து, கால் நடை வளர்ச்சியுறுவதற்கும், மேலோங்குவதற்கும், பெருகுவதற்கும் பல முறைகளிலும் திட்டம் அமைத்துக் கொடுத்திருப்பதற்கும் நம் பாராட்டு உரியது.

நீரின்றி அமையாது உலகம் என்பதற்கேற்ப விவசாயப் பெருக்கத்திற்கும் மின்சார உற்பத்திற்கும் நீர் மிக அவசியமாக இருக்கிறது. இதை அரசாங்கம் உணர்ந்து, மேலை நாட்டு உதவியைக் கொண்டு விவசாய அபிவிருத்தித் திட்டங்களையும் மின்சார உற்பத்தி நிலையங்களையும் அமைக்க முன் வந்திருக்கிருர்கள். நீர்ப்பாசன திட்டத்தையும், மின்சார திட்டத்தையும் இரு துறையாகப் பிரித்து நல்ல முறையிலே அரிய காரியங்களைச் செய்து முன்னேற்றம் காண்பித்ததற்காகவும் நாம் பாராட்ட வேண்டும்.

சிறப்பாகக் கூறுகிறபோது, கிராம கைத்தொழில் வளர்ச்சியில் அரசாங்கம் பெருந் தொழில்களும் சிறு தொழில்களும் தொடங்க முனைந்திருக்கிருர்கள். மற்ற கைத்தொழில்கள் சிறந்த முறையில் வேலை நடந்திருக்கின்றன. இத்துறையில் நாடு முன்னேற்றம் அடைந்தாலும், குடும்பக்கட்டுப்பாடு திட்டம் நிறை வேறினலொழிய இந்த நாடு முன்னேற முடியாது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டுவருவதற்கு மக்களிடையே நல்ல பிரசாரம் செய்வதற்கும் அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குறிப்பாகக் கூறுகிறபோது, 66 புதிய பிரசவ சேய் நல விடுதிகளும் 79 குடும்ப கட்டுப்பாடு நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது பாராட்டுக்குரியது. ஒவ்வொரு நாட்டிலும் எப்படி மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து, நம் நாட்டிலும் சிறந்த முறையில் இந்தத் திட்டத்தைக் கையாளவேண்டும். இத் திட்டம் வெற்றி பெறுவதற்கான காரியங்களை நம் அரசாங்கம் செய்யவேண்டும். கூடா ஒழுக்கம் வளராமல் இருக்க, அருள் நெறியும், அற நெறியும், ஒழுக்க நெறியும் ஓங்க ஆவன செய்யவேண்டும். அப்பொழுதுதான் இந்த நாட்டு மக்கள் நல்ல முறையில் வளர்வதற்கு முடியும்.

இன்னென்றுக்காகவும் நாம் பாராட்டவேண்டும். "பசிப்பிணி என்னும் பாவி பிடித்த கல்விப் பெரும்புனை விடுஉம்" என்பதை நன்குணர்ந்து இந்தப் பசிப்பிணியை ஒழிப்பதற்கு ஆரம்பப் பள்ளிகளிலிருக்கும் எழைப் பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு கொடுத்து உதவியமை பாராட்டுதலுக்குரியது. பசியும், பிணியும், பகையும் நீங்க மேலான ஆட்சி செலுத்துபவர்களைப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-55 a.m. ***Sri P. S. SANTHANAM**: தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த பட்ஜெட்டைப் பார்த்து ஒரு விதத்திலே சந்தோஷப்படக் கூடிய நிலைமையிலும் மற்ருெரு விதத்திலே ஆழ்ந்த வருத்தப்படக் கூடிய நிலைமையிலும் இருக்கிறேன். இந்தத் தமிழகத்திலே ஐந்து விதமான விவசாயங்கள் உள்ளன. இந்த ஐந்து விதமான விவசாயங்களிலும் பெரும்பாலும் எழை ஹரிஜனங்கள் தான் ஈடு பட்டிருக்கிருர்கள். எந்த முறையிலே விவசாயிகளுக்கு சர்க்காரின் மானியங்களும், கடன்களும் அளிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்கும் போது, எழை விவசாயிகளுக்கு அவைகள் அளிக்கப்படுவதாகத் தெரியவில்லை. அந்த உதவிகள் நிலம் படைத்தோருக்குத்தான் கிடைக்கிறது. இந்த விவசாயம் சோற்றுக்காகவும், படிக்காகவும், அடிமைக்காகவும், குத்தகைக்காகவும், வாரத்துக்காகவும் இப்படி ஐந்து விதமான விவசாயங்கள்



1st July 1957] [Sri P. S. Santhanam]

இந்த நாட்டிலே மலிந்து கிடக்கின்றன. இந்த ஐந்து விவசாயத்திலும் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் எழை ஆதித்திராவிட மக்கள் அல்லது ஹரிஜனங்கள். ஹரிஜனங்களுக்கு விவசாயத்தின் பேரால் கொடுக்கும் மானியங்கள் எழை விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்கும்படியான நிலைமையை இந்த பட்ஜெட்டிலே நிதி அமைச்சரவர்கள் ஏற்படுத்தியிருந்தால் நலமாக இருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், எழை மாணவ குழந்தைகளுக்கு பள்ளிகளில் பகல் உணவு கொடுக்கப்படுகிறது. அதற்கென நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு விதத்தில் சந்தோஷப்படக்கூடிய விஷயம். மற்ருெரு விதத்தில் வருத்தப்படக்கூடிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு உதாரணமாக, தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் படிப்பு வசதி இல்லாமல் பிற்போக்கு நிலையில் இருக்கிருர்கள், அவர்களை முற்போக்கு நிலை அடைய செய்யவேண்டும் என்பது சர்க்காருடைய நோக்கமாக இருந்தும், அதற்கு ஆவன செய்ய நிதி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருந்தும், சில பகுதிகளில் குறிப்பிட்ட சில கிராமங்களில் ஹரிஜன வெல்பேர் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு மட்டும் பகல் உணவு கிடைக்கிறதே தவிர, ஸ்தல ஸ்தாபனங்களாலோ, மானேஜ்மென்டாராலோ நடத்தப்படுகிற ஆரம்ப பள்ளிகளில் படிப்பவர்களுக்கு பகல் உணவு கிடைப்பது இல்லை. இதனுல் என்ன நிலைமை ஏற்படுகிறது! பால் சோறு சாப்பிடுகிற பையன் சாப்பிடாத பையனைப் பார்த்து நையாண்டித்தனம் பண்ணக்கூடிய நிலைமை தான் ஏற்படுகிறது. எழை ஹரிஜன மாணவர்களுக்கு பகல் சோறு கொடுக்கிறேம் என்பது உண்மையிலே ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கும் உணவு அல்ல. தனிப்பட்டவர்கள் நடத்தும் ஆரம்ப பள்ளிகளிலும் ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளிலும் படிக்கும் மாணவர்களுக்கும் இந்த மத்தியான உணவு கொடுத்தால் தான் தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்கள் கல்வித் துறையிலே முற்போக்கு அடைய வழி ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நிலம் இல்லாத எழை ஹரிஜனங்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சர்க்கார் "பஞ்சம தரிசு" என்று சட்ட ரீதியாகக் கொடுப்பது உண்டு. அந்தத் தரிசு நிலங்களைத் தங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று எழை, தாழ்த்தப்பட்ட மக்கள் அதற்காகவுள்ள தர்காசு விண்ணப்பங்கள் போட்டால், அவைகள் கவனிக்கப்படாத நிலைமையில் இருக்கின்றன. பட்டா செய்து கொடுக்கப்படாத காரணமாக அவர்கள் அந்த நிலங்களை விட்டுவிட வேண்டிய நிலைமையில் இருக்கிருர்கள். மலைகளாகவும், கல்லாகவும், மேடாகவும் இருக்கக்கூடிய நிலத்தைத்தான் ஹரிஜனங்களுக்கு "பஞ்சம தரிசு" என்னும் பேரில் நெம்பர் குறிப்பிட்டு சர்க்கார் ஒதுக்கித் தருகிருர்கள். உண்மையில் அந்த நிலத்தை எழை விவசாயிகள் பார்ப்பது இல்லை. சர்க்கார் அதிகாரிகள் எழுதிக் கொடுத்த நம்பரை வாங்கி கொண்டு கணக்குப் பிள்ளையிடம் கொண்டுபோய்க் காட்டினுல் அவர் இவர்களுக்கு தர்காஸ்து செய்யப்பட்ட நிலங்களைக் காட்டுகிருர். அவர் காட்டுகின்ற அந்த நிலத்தை நேரில் பார்க்கும்போதுதான் விவசாயிகள் மிகவும் மன வருத்தம் அடையவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இப்படித்தான் எழை பஞ்சம தரிசு கொடுக்கிற நிலைமை இருக்கிறது என வருந்த வேண்டி இருக்கிறது. நமது சர்க்கார் அவர்கள் இந்த எழை ஹரிஜனங்கள் முற்போக்கு நிலைமையை அடையவேண்டுமென்று சொல்லிக்கொண்டு அதற்கு உண்மையிலேயே ஆவன செய்யாமல் இருப்பது தான் மன வருத்தத்தை அதிகமாக்குகிறது.

உதாரணமாக திருவண்ணமலை தாலுக்காவில் ஆங்குளம் கிராமத்தில் சுமார் என்பது எக்கரா நிலங்கள் வெறும் ஈச்சங்காடாக இருக்கிறது. அதை ஹரிஜனங்கள் கோருகிற காலத்தில் அவை மேய்ச்சல் நிலமாக இருப்பதாகத் தகராறு ஏற்படுத்துவதாகக் காண்கிறேன். இப்படி பட்ட நிலங்களாக இருப்பதைக் கூட ஒதுக்காமல் தகராறு செய்வதனுல் ஹரிஜனங்கள் எப்படி முற்போக்கு அடைவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

[Sri P. S. Santhanam] [1st July 1957

நிற்கவும், சர்க்காரில் ஊழியம் செய்யக்கூடிய தலையாரி, தோட்டி முதலியவர்களுடைய நிலைமையை உற்று நோக்குங்காலத்திலும் ஒரு விதத்தில் வருத்தப்படவேண்டிய அவசியம் இருக்கிறது. உண்மையிலேயே "தோட்டியால் ஆகாதது, துரையால் ஆகாது" என்கிற முதுமொழிக்கிணங்க அவர்கள் செய்கின்ற வேலை நமக்கு எல்லாம் தெரியும். அவர்கள் இன்று கேவலமான நிலைமையில் இருப்பதைக் கண்டு வருந்த வேண்டியதாகத்தான் இருக்கிறது. சர்க்கார் ஊழியர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன் ஆனால் கீழ்தர சிப்பந்திகளுக்கு இதில் குறிப்பிட்டிருப்பதுபோல நான்கு ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தலையாரி, தோட்டி முதலியவர்களுக்கும் இந்த நான்கு ரூபாய் தான் கிடைக்கும் என்று நினைக்கிறேன். உண்மையில் அந்தத் தோட்டி, தலையாரியாக இருக்கக் கூடியவர்கள் தான் சர்க்கார் இடும் எவலை ஓடி ஓடிச் செய்கின்றவர்கள். அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்தினால்தான் அவர்கள் சந்தோஷமாக வேலை செய்ய முடியும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நிற்கவும் கிராம தோட்டி, தலையாரி என்பதை மக்கள் பார்த்தவுடனேயே மக்கள் அவர்களை இன்னார் என்று தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் சர்க்காரே அவர்களுக்கு ஆடையும், ஒரு அடையாளத்தையும் கொடுக்கவேண்டு மென்தாகக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அவர்களுக்கு ஆடையும் சின்னமும் கொடுத்தால் நலமாக இருக்கும். நன்றாக ஊழியமும் செய்வார்கள் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக ஹரிஜன மாணவர்கள் முன்னேற வேண்டும், ஆதித்திராவிட மாணவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகப் பல ஹாஸ்டல்களை நடத்த சர்க்கார் அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் அந்த ஹாஸ்டல்கள் "நண்டுக்கு அரசன் என்று குள்ள நரிக்குப் பட்டம் கட்டியதைப் போன்று" சிலர் இடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். உதாரணமாக திருவண்ணாமலையில் ஒரு ஹரிஜன ஹாஸ்டல் நடைபெறுகிறது. அதன் நிர்வாகிகள் நிலச்சுவாந்தார்களாகவும், பண முதலாளிகளாகவும்தான் இருக்கிறார்கள். அங்கே போய் சில தலைவர்களைக் கேட்கிற காலத்தில் அந்த ஹாஸ்டலினால் ஏழை ஆதித்திராவிடர்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை என்பதை அறிந்தேன். முற்போக்கு ஹரிஜனங்கள் முற்போக்காளருடன் அங்கே இருக்கிறார்கள். கீழ்த்தர நிலையில் இருக்கக் கூடிய ஹரிஜனங்கள் இன்னும் கீழ்த்தரமான நிலைமையில் தான் இருக்கிறார்கள். அந்த நிலச்சுவாந்தார்களால் ஏழைகளின் வருத்தத்தை உணர முடியவில்லை. "எருதின் வருத்தம் காக்காய்க்குத் தெரியுமா?" என்பது போல ஏழைகளுடைய நிலைமை அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே அங்குள்ள ஏழைகள், அங்கத்தினர்கள் முதலியவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தி இந்த மாதிரியான ஹாஸ்டல்களினால் ஏழை ஹரிஜனங்களுக்கு, ஆதித்திராவிட மக்களுக்கு நல்ல பயன் ஏற்படும்படியாகச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அவ்விதம் நடவடிக்கை எடுத்தால் ஹரிஜனங்கள் முற்போக்கு அடைய வாய்ப்பு கிடைக்கும் என்பது என்னுடைய கருத்து.

சாத்தனூர் திட்டத்தை நிறைவேற்றியது பற்றியும், அணை கட்டியது பற்றியும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். திருவண்ணாமலை ஒரு க்ஷேத்திரமாக இருக்கிறது. 50 ஆயிரம் மக்களுக்கு மேல் வாழக்கூடிய நகரமாக இருக்கிறது. தண்ணீர் வசதி இல்லாத மேட்டுப் பிரதேசமாகவும் இருக்கிறது. ஆகவே சாத்தனூர் தேக்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு ஒரு கால்வாய் கொண்டுவந்தால் அங்குள்ள மக்களும், வருகின்ற யாத்திரிகர்களும் சர்க்காரை வெகுவாகப் பாராட்டுவார்கள். சர்க்கார் செய்யும் பணியைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைவார்கள் என்பது என்னுடைய கருத்து.

ஹரிஜனங்கள் முன்னேற வேண்டும். ஆதிதிராவிடர்கள் கல்வித் துறையில் அதிக வளர்ச்சியுறவேண்டுமென்பதற்காக பல பள்ளிகளை ஏற்படுத்த



1st July 1957] [Sri P. S. Santhanam]

வேண்டும். வெல்பார் பாடசாலை என்று ஏற்படுத்திக் கொடுத்தால் ஹரிஜனங்கள் அத்தனை பேருக்கும் நன்மை செய்வதாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri K. B. S. MANI**: கனம் அவைத் தலைவர் அவர்களே, சக 12-07
அங்கத்தினர்களே, இந்த அவையிலே மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் p.m.
அவர்களால் கொண்டுவரப்பட்ட பட்ஜெட் பலதுறைகளிலும் வரவேற்கத்தக்கதாய் இருக்கிறது. இருந்தும் நம்மைவிட்டு மறைந்துபோன உலக ஜோதி காந்திஜியின் முதல் தர்மமாக விளங்கும் கிராம சேவை, ஹரிஜன முன்னேற்றம் என்கிற பகுதியில் என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட்டுப் பேச விரும்புகிறேன். என்னுடைய யோசனைகளையும் இப்போது கொண்டுவந்துள்ள திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி சபையை நான் பணிவாகக் கேட்டுக்கொள்வதோடு நிதி அமைச்சர் அவர்களையும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாயவாரச் சட்டம் பொதுவாக பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் அதிகச் சலுகையைத் தந்திருக்கிறது. அப்படி நல்ல முறையில் சட்டம் இயற்றப்பட்டும் இன்றைய நிலைமையில் அச்சட்டங்களால் எந்த மக்கள் பயன் அடைய வேண்டுமென்று கருதி செய்தோமோ, அந்த மக்கள் பயன் அடையவில்லை. இதற்குக் காரணம் அவர்களுடைய பற்றாக்குறைதான். சர்க்கார் சட்டத்தில் ஹரிஜனங்களுக்கு இலவசமாக வக்கீல் கோர்ட்டில் ஆஜராகி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று செய்திருக்கிறது. ஆனால் இதுவரைக்கும் எங்கும் அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி நடந்தாகத் தெரியவில்லை. அந்தக் குறைபாட்டை இனி நீக்கவேண்டும் என்பதாக அமைச்சர் குழுவைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற காலத்திலே அதிகாரிகளுடைய குறைபாடுகளும் கொஞ்சம் இருக்கிறது. குறிப்பாக ஒரு மிராசுதார் ஒரு ஏழைக் குடியானவன் பேரில் கேஸ் போட்டுவிட்டால் கோர்ட்டில் கேஸ் விசாரணைக்கு வரும்போது அந்த மிராசுதார் வாதியாகவும், விவசாயி பிரதிவாதியாகவும் இருக்கிறான். இரண்டு பேரும் கூண்டில் ஏறி விசாரிக்கப்படவேண்டியவர்கள்தாம். ஆனால் அந்த மிராசுதார் கோர்ட்டுக்கு வந்தவுடனே அதிகாரிகளால் சம அந்தஸ்து உடையவராக நினைக்கப்பட்டு நாற்காலி கொடுத்து உட்கார வைகக்கப்படுகிறார்கள். விவசாயியையோ வெளியில் நிற்கும்படியாகச் சொல்கிறார்கள். இது கோர்ட்டின் பாரபட்சமற்ற நிர்வாக ஒழுங்குக்கு எடுத்துக்காட்டாக விளங்கவில்லை. இந்த முறையை மாற்ற வேண்டும். கோர்ட்டில் சாதாரணமாக தனக்கு இல்லாத மரியாதை மிராசுதாருக்கு நடக்கிறது என்றால் தனக்கு 60 வாரம் சட்டப்படி கிடைக்கும்படியாக கோர்ட்டார் தீர்ப்பு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எப்படி விவசாயிகளுக்கு வரும். எங்கள் ஜில்லாவிலே ஏராளமான பண்ணை நிலங்கள் இருக்கின்றன. மனிதனுக்குத்தான் ஆசை அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் எங்கள் ஜில்லாவிலே ஆண்டவனுக்குத்தான் ஆசை அதிகமாக இருக்கிறது. எங்குபார்த்தலும் கோயில்கள் பெயரால் பண்ணைகள் இருக்கின்றன. எங்கள் ஜில்லாவில் தருமபுரம் மடத்திற்கு 12,000 வேலி நிலம் இருக்கிறது. திருவாடுதுரை மடத்திற்கு 10,000 வேலி நிலம் இருக்கிறது. அநேக தேவஸ்தானங்கள் பண்ணைகள் வைத்து நடத்துகிறார்கள். அடிமை ஒழியவேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர, பண்ணைகளை வைத்து நடத்துவதன் மூலம் அடிமை வளர்கிறதே அல்லாமல் ஒழிக்கப்படவில்லை. ஆகையால்தான், சர்க்கார் கோயில் நிலங்களை உடனடியாக கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளவதோடுதல்லாமல், நடுவிலே இருக்கிற தரகர்களை ஒழித்துக் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்து வேலி, 20 வேலி, 50 வேலி நிலமுள்ள நிலச்சுவான்தார்கள், தங்கள் நிலங்களை ஜாமீன் வைத்து கோயில்மடத்து நிலங்களை குத்துகைக்கு எடுத்கிறார்கள். "Deposit lessees" என்று அவர்களுக்குப் பெயர். அவர்கள் 2½ அல்லது 3 மேனிக்குக் குத்தகைக்கு எடுத்து கூட்டுறவு செய்து கொள்கிறார்கள். "அந்த கிராமத்தை நான் எடுத்துக் கொள்கிறேன் இந்த கிராமத்தை நீ எடுத்துக் கொள்" என்று அவர்களுக்குள்ளே ஒப்பந்தம் செய்துகொண்டு ஒரு

மாநிலத்திற்கு 4 அல்லது 5 மேனி விகிதாசாரத்திற்கு எடுத்துக்கொண்டு, ஏழைக் குடியானவனிடத்தில் 8 அல்லது 10 மேனி விகிதாசாரத்திற்கு கொடுக்கிறார்கள். இப்படி எந்தவிதமான உழைப்பும் இல்லாமல் அவர்கள் ஏழை விவசாயிகளிடத்திலிருந்து கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். இதை உடனடியாக சர்க்கார் தடுக்கவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் கோயில் நிலங்களை மொத்தக் குத்தகைக்கு விடாமல், ஏழை ரயத்துகளுக்கு நேரடியாக நிலத்தைக் குத்தைக்கு விடவேண்டும் என்று சர்க்கார் வழிவகை செய்வார்களேயானால், அது நல்ல பலனை அளிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்று நாங்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னோம். ஒவ்வொரு தாலூகாவிலும் கிட்டத்தட்ட 60,000 அல்லது 80,000 பேர்கள் இருக்கிறார்கள். அப்படிக் கணக்குப் பார்த்தால் கோடிக்கணக்கான மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டும். அது அரசாங்கத்தால் முடியாத காரியம். ஆகையால் குடியிருப்பு மனை மீது மிராசுதார்களுக்கு இருக்கும் பிடிப்பை விடுவிக்கவேண்டும். குடியிருப்பு மனையை மிராசுதார்கள் சொந்தத்தில் வைத்துக் கொண்டிருப்பது தஞ்சை ஜில்லாவில் ஒரு பிரசித்தமான வழக்கம். ஒரு இந்தியப் பெண் ஒரு ஆணுக்கு எவ்வளவு அடங்கி நடக்கவேண்டுமோ அதே மாதிரி தஞ்சை ஜில்லாவிலே ஒரு பண்ணையாள் ஒரு மிராசுதாருக்கு அடங்கி நடக்க வேண்டும். கோர்ட்டுகளிலே கூட இந்த வழக்கத்தைப் பற்றி வக்கீல்கள் வாதாடுகிறார்கள். குடியானவன் 60 வீதம் வாரத்தைக் கேட்டால் உடனடியாக வீட்டைவிட்டுக் காலி செய்யவேண்டுமென்று மிராசுதார்கள் சொல்லுகிறார்கள். இதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன. பல வழக்குகளும் கோர்ட்டுகளில் நடைபெறுகின்றன. சீர்காழி தாலூகாவிலே அநேக குடும்பங்களை அம்மாதிரி வெளியேற்றி இருக்கிறார்கள். வீடுகள் கட்டுவதற்காக செலவழிக்கப்படும் பணத்தை மற்ற துறைகளிலே செலவு செய்து எந்த விவசாயியையும் குடியிருப்புமனையை விட்டு வெளி ஏற்றக்கூடாது என்று சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. மாடுகள், விதை வாங்குவதற்கு கடன் கொடுக்கிறார்கள். ஆனால் அதற்கு ஜாமீன் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கடன் கொடுக்கும் தாசில்தாரை அணுகிக் கேட்டால், நிலத்தை ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார். வீட்டை ஜாமீன் ஆக வைக்கக் கூடாது, நிலத்தைத்தான் எழுதி வைக்கவேண்டுமென்று சொல்லுகிறார். ஆகையால் நிலச்சுவான்தார்கள் தான் அந்தக் கடன் வசதியைப் பெறமுடிகிறதே ஒழிய, ஏழை விவசாயிகள் அந்த வசதியைப் பெற முடியவில்லை. இப்பொழுது அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் முதலிய உரங்களை சர்க்கார் கூப்பன் மூலமாகக் கொடுக்கிறார்கள். அதுபோல் எல்லாவகை கடன்களையும் நபர் ஜாமீன் கடன் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். குடியிருப்பு நிலங்களை சர்க்கார் விவசாயிகளுக்கு சொந்தமாக்கிக் கொடுத்தால், வீடுகள் கட்டுவதற்காக வேண்டி சர்க்கார் பணம் செலவழிக்க வேண்டிய அவசியமிருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கஹீனர்கள் விஷயத்தில் சர்க்கார் என்ன என்ன சலுகைகள் அளித்திருக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. சாதாரணமாக, ஒரு ஏழை மாணவன் ஏதாவது வேலை கிடைக்குமென்று தான் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலாவது படிக்கிறான். அதற்குப் பிறகு ஒரு டிரெயினிங் ஸ்கூலில் படிக்கவேண்டுமானால், சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள். ஒரு லோயர் டிவிஷன் குமாஸ்தா [illegible]ர் அல்லது பியூன் ஆகவோ எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், கால் நொண்டி அல்லது கண் குருடு என்று சொல்லி சேர்த்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அங்கஹீனர்களுக்கு எந்தத் துறைகளில் எல்லாம் சலுகை கொடுக்கப்படுகிறது என்பதைத் தெளிவாக வரையறுக்கவேண்டும். கல்வி துறையைப் பொறுத்தவரையில்





டைரக்டர் மனது வைத்தால், யாரையாவது டிரெயினிங் ஸ்கூலில் சேர்த்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. தனிப்பட்ட ஒரு ஏழை, டைரக்டரை அணுகி சலுகை பெறுவது மிகக் கஷ்டம். ஆயிரத்தில் ஒருவர் தான் சலுகை பெற முடிகிறது. ஆகவே, ஜாதிகளின் பெயரால் சலுகை அளிக்கப்படுவது போல், அங்கஹீனர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம சேவக்களைப் பொறுத்தவரையில், ஹரிஜனங்களில் 100-க்கு ஒருவர்தான் நியமிக்கப்படுகிறார்கள். தஞ்சையைப் பொறுத்தவரையில் மொத்தம் 128 பேர் இருக்கிறார்கள். அதில் 2 அல்லது 3 பேர்கள்தான் ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். எந்தெந்தத் துறையில் வேலை வாய்ப்புக்கு வசதிகள் அதிகமாக இருக்கின்றன என்பதை வெளியிடாமல் தனிப்பட்ட ஒருசிலர் இருட்டடைப்புச் செய்வது தான் இதற்குக் காரணம் என்று நினைக்கிறேன்.

சிறிய கைத்தொழில்களுக்கு நமது வரவுசெலவுத் திட்டத்தில் அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட ஒரு பாக்டரியோ அல்லது இண்டஸ்ட்ரியோ ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஒவ்வொரு உயர்தரப் பள்ளிக்கும் எல்லா தொழில்களும் கொண்ட ஒரு பண்ணையை அமைத்து IV முதல் எஸ்.எஸ்.எல்.ஸி-வரை படிப்பவர்களுக்கு "டிப்ளமா" கொடுத்தால் கைத்தொழில்கள் நமது நாட்டிலே நல்ல முறையில் பரவ முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீண்டாமையைப் பொறுத்தவரையில் பிற மாகாணங்களை விட நமது மாகாணத்தில் அதிகமாக அக்கறை காட்டி வருவது மிகவும் போற்றத்தக்க விஷயம். குழந்தைப் பருவத்திலிருந்தே நமது மாணவர்களுக்கு "ஜாதீயம்" கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆகவே குழந்தை வளர்ப்புச் சங்கங்களை அமைத்து, மற்ற நாடுகளிலே நடக்கிறமாதிரி, ஒரு தொகுதியிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் படிக்கச் செய்து ஜாதீய அகம்பாவம் இல்லாதபடி அவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முனிஸிபாலிட்டிகள், பஞ்சாயத்துக்கள் முதலியவைகளில் வேலை பார்க்கும் கீழ்த்தரச் சிப்பந்திகள் கவனிக்கப்படுவதேயில்லை. முக்கியமாக தோட்டிகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்த ஹரிஜன மக்களை ஒரு குமாஸ்தாவாகவோ அல்லது "பில் கலெக்டர்" ஆகவோ நியமிப்பதில்லை. இதையெல்லாம் பற்றிக் கேட்டால் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள். தோட்டிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டியது மிகமிக அவசியம். ஸ்தல ஸ்தாபன போர்டுகள் சம்பந்தப்பட்டவரை இந்த மாதிரித் தோட்டிகள் போன்றவர்களுக்கு வீட்டு வசதி, தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்குச் சர்க்கார் இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஏற்பாடு செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, பொதுவாக இந்த வரவு செலவுத் திட்டமானது வழக்கம்போல் நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குடியிருப்பதற்காக விவசாயிகளுக்கு சொந்தத்தில் இட வசதி செய்து கொடுத்தால், அவர்கள் வேறு வகையில் உணவு பயிரிடுவதற்கு ஏதுவாக இருக்கும். அரசாங்கம் வீடு கட்டும் சங்கங்களுக்குக் கடன் கொடுக்கவும் சுமார் 37 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்னும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக இந்த பட்ஜட்டில் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri B. DORAISWAMI REDDIAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது பட்ஜெட்டின் மீது நடக்கும் விவாதத்தில் தங்கள் தங்கள் கருத்துக்களை அங்கத்தினர்கள் ரொம்பவும் விளக்கமாகத் தெரிவித்தார்கள். ஆனால் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வந்துள்ள அபிவிருத்தி திட்டங்களை சரிவர கவனிக்கவில்லை என்று குறைகூறுகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் அரசாங்கத்தில், ஒவ்வொரு காரியத்திலும் நன்றாக கவனம் செலுத்தி, அதில் இருக்கக்கூடிய காரியங்களை சரிவர செய்யவேண்டும் என்று திட்டம் போடுகிறார்கள். ஆனால் அவைகளைச் செய்கின்ற வேலைகளில் ஈடுபடுகின்ற அதிகாரிகள், அதை பெரும் அளவில் நஷ்டத்தை 12-21 p.m.

[Sri B. Doraiswami Reddiar] [1st July 1957

உண்டாக்கும்படியாகச் செய்தால் ஒவ்வொரு விஷயத்திலும் சர்க்கார் கவனிக்க முடியுமா என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இதில் ஹம்பக் தான் இருக்கிறது. ஆகவே நாட்டிலுள்ள மக்களுக்கு என்றைக்கு நல்ல மனப்பான்மை ஏற்படுகிறதோ, அன்றைக்குத்தான் நாடு முன்னேற முடியும்.

(Deputy Speaker in the Chair.)

தேசிய அபிவிருத்தி திட்டம், கிராம அபிவிருத்தி திட்டம் என்று பல திட்டங்களைப்பற்றி கூறுகிறார்கள். ஆனால் படிப்பு அபிவிருத்தியைப் பற்றி யாரும் கூறவில்லை. நம் நாட்டில் வேறு பாஷைகள் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்கள் வெளிநாடுகளுக்கு போய் அங்கே நல்ல முறைகளைக் கற்றுக்கொண்டு வரமுடியுமா? ஒருவனுக்கு பல பாஷைகள் தெரிந்திருந்தால் அவன் வெளிநாடுகளுக்குச் சென்றால், அந் நாட்டிலுள்ள விஷயங்களை ஆராய்ந்து புரிந்துகொண்டு, அவன் தன் நாட்டை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வழி தெரியும். ஆனால் நம் நாட்டிலோ ஆங்கிலம் வேண்டாம், ஹிந்தி வேண்டாம், வேறு மொழிகள் தேவையில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஒருவன் எவ்வளவு பாஷைகளைக் கற்றுக்கொண்டாலும் அதனால் ஒன்றும் நஷ்டம் ஏற்படப் போவதில்லை. அதனால் நாம் முன்னேற்றம் அடைவோம், நம் நாடு முன்னேற்றம் அடையும் என்பதுதான் என் கருத்து. "எனக்கு படிப்பு தெரியாதா என்ன, என்னை யாரும் ஜெயிக்க முடியாது, என்னை விட பேசுவதில் யார் இருக்கிறார்கள்" என்று சிலர் கேட்கிறார்கள், ஏதோ கொஞ்சம் படிப்பு படித்துவிட்ட காரணத்தினால். நமக்கு சுய ஆட்சி வந்துவிட்டது, ஏதாகிலும் கொஞ்சம் படித்தால் போதும், இ.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்துவிட்டால் அதுவே போதும் என்று நினைக்கிறார்கள். ஏனென்றால் இந்த இ.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்கள், 4, 5-வது பாரம் பாஸ் செய்தவர்களை விட அதிகமாக தங்களை நினைக்கிறார்கள். இவர்கள் கிராமப் பள்ளிகளில் உபாத்தியாயர்களாக நியமிக்கப் படுகிறார்கள். ஆனால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. அதேசமயத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தவர்களும், ஹையர் கிரேட் டீச்சர் டிரெய்னிங் பாஸ் செய்தவர்களும் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, இந்த இ.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தவர்களுக்கு வேலை கிடைக்கிறது. எங்கள் டிஸ்டிரிக்ட் போர்ட் ஆபீசுக்கு உபாத்தியாயர் வேலைக்காக 500 மனுக்கள் வந்திருக்கின்றன. அதில் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்தவர்கள், ஹையர் கிரேட் டிரெயினிங் பாஸ் செய்தவர்களுடைய மனுக்கள் எல்லாம் வந்திருக்கின்றன. எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணாத உபாத்தியாயர் இ.எஸ்.எல்.ஸி. பாஸ் பண்ணின உபாத்தியாயரைவிட நன்றாக பிள்ளைகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கிறார். ஆகவே இம்மாதிரி இ.எஸ்.எல்.ஸி. படித்தவர்களை ஆசிரியர்களாகப் போட்டால் பள்ளிக்கூடங்கள் உருப்படாது என்று சொல்ல விரும்புகிறேன். ஓராசிரியர் பள்ளிகளிலும் இந்தவிதமாக ஆசிரியர்களை அமர்த்துகிறார்கள். ஆகவே கிராம பள்ளிக்கூடங்களில் திறமையுள்ள ஆசிரியர்களை போட்டு பள்ளிக்கூடங்களை நல்லபடி நடத்தவேண்டும். இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது பனைமரத்துக்கு லைசென்ஸ் கொடுத்துவருகிறார்கள். உண்மையில் பார்க்கப்போனால் இதில் ரூபாய்க்கு காலணாகூட லாபம் கிடையாது. ஆனால் பழைய பிளான் செய்தால் லாபம் கிடைக்கும் என்று கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்முன் எவ்வளவு மரங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்து ஒரு குறிப்பிட்ட தொகை பனைமரத்திலிருந்து கிடைக்கக்கூடிய வெல்லத்தை கூட்டுறவு ஸ்தாபனம் போன்ற ஸ்தாபனத்திடம் கொடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கவேண்டும்.

DEPUTY SPEAKER: உங்களுடைய "டைம்" ஆகிவிட்டது.

SRI B. DORAISWAMI REDDIAR: நான் பேசியதே இரண்டு நிமிஷங்கள்தான். பலர் மணிக்கணக்கில் பேசினார்களே! (சிரிப்பு.)

DEPUTY SPEAKER: உங்களுடைய 10 நிமிஷங்கள் ஆகிவிட்டது.



1st July 1957]

SRI B. DORAISWAMI REDDIAR: கூடுமான வரையில் பனைமரத் தொழிலுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது, கண்ட்ரோல் வைத்து அதைக் கொடுப்பதுடன், அவர்கள் தொழிலில் உற்பத்தி செய்யும் பொருள்களின் அளவைப் பொறுத்துக் கொடுத்தால் போதும். தென்னைமரத் தொழிலுக்கும் லைசென்ஸ் கொடுப்பது சம்பந்தமாக ஒரு ஜில்லாவில் ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பதாக ஒரு மாதத்திற்கு முன்பு பத்திரிகையில் பார்த்தேன். தென்னை மரத்திலிருந்து என்ன உற்பத்தி செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை; ஏதோ மங்களூர், கொச்சி மாதிரி ஆகிவிடும் என்றுதான் நினைக்கிறேன். இப்போது அரசாங்கத்தார் கொஞ்சம் காந்தி சொல்வதைப் பின்பற்றுகிறார்கள். அதாவது குடிசைத் தொழிலை வளர்க்கிறார்கள். குடிசைத் தொழில் என்பது குடிசையில் காய்ச்சுவதில்தான் இருக்கிறது. குடிசையில் எதைக் காய்ச்சுகிறார்கள்? சாராயம் காய்ச்சுகிறார்கள். இந்த வியாபாரத்தில் ரொம்ப லாபம் இருக்கிறது. இதற்கு விற்பனை வரி, வருமான வரி எதுவும் கிடையாது. (சிரிப்பு.) எந்த ஆபீசரும் சோதனையிட வர மாட்டார். மலைப் பிரதேசங்களில் உச்சி மலையில் இருந்துகொண்டு இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் யாராவது வந்தால் அதைப்பற்றி தகவல் சொல்லுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு ஜனங்கள் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். கனம் மந்திரிகள் "அவர்கள் அப்படிச் சாராயம் காய்ச்சினால் அதற்கு எங்கள் பேரில் குறை சொன்னால் நாங்கள் என்ன செய்வது?" என்று சொல்லலாம். கனம் அமைச்சர்களும் ஒன்றும் செய்யமுடியாது. பொது ஜனங்கள் தீமைகளை உணர்ந்தாலொழிய ஒன்றும் செய்யமுடியாது. சட்டத்தினாலெல்லாம் ஒன்றும் செய்யமுடியாது. குற்றம் செய்பவர்களைக் கைதுசெய்தால், அவர்கள் ஒருவர் பின் ஒருவராக சிறைக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள். 4 பேர்களுள்ள ஒரு குடும்பத்தில் ஒருவனைக் கைதுசெய்து வழக்குப் போட்டு சிறைக்கு அனுப்பினால் அவனுக்குப் பிறகு இன்னொருவன் காய்ச்சிக் கொண்டேயிருப்பான். இப்படி இந்தத் தொழில் நடந்து கொண்டேயிருக்கிறது. அபராதம் போட்டால் ரூ. 15 தான் போடப்படுகிறது. 15 ரூபாய் அபராதம் அவர்களுக்கு ஒரு மாத வருமானம்தான். ஆகவே கடுமையான அபராதம் போடவேண்டும். சரக்குத் தயார் செய்பவர்களுக்கு ரூ. 250 அபராதமும், குடிப்பவர்களுக்கு ரூ. 15 அபராதமும் போடவேண்டுமென்று அரசாங்கத்தார் கட்டளை பிறப்பிக்க வேண்டும். அதிக அபராதம் போட்டால் ஏழை மக்கள் நசித்து விடுவார்கள் என்று எண்ணினால் இந்தப் பிரச்னையை மக்களின் இஷ்டப்படி அப்படியே விட்டுவிட வேண்டும். அவர்கள் குடித்தாலும் நசித்துவிடுவார்கள், அவர்கள் ஏழை மக்களாதலால் அதிக அபராதம் போட்டாலும் நசித்து விடுவார்கள் என்று கூறினால் இந்த விஷயத்தை அப்படியே அடியோடு விட்டுவிட வேண்டும் என்பதுதான் என் கருத்து. இன்னும் ஒரு விஷயம் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

SRI B. DORAISWAMI REDDIAR: கனம் உதவி சபாநாயகர் அவர்கள் சாப்பாட்டிற்கு நேரம் ஆகிவிட்டது என்று சொல்வதால் நான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். (பலத்த சிரிப்பு.)

DEPUTY SPEAKER: சாப்பாட்டிற்கு நேரம் ஆகிவிட்டது என்று நான் சொல்லவில்லை.

SRI K. P. PALANISWAMI: கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள பட்ஜெட்டைக் குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். கனம் அமைச்சர் அவர்கள் நாடு செழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நிதிநிலைமைக்குத் தகுந்தவாறு பட்ஜெட்டை நல்ல முறையில் சுருக்கமாக அமைத்திருக்கிறார்கள். ஆனால் இதில் ஒருசில குறைகளும் இருக்கலாம். குறைகள் இல்லாத பட்ஜெட் எங்கும் இருக்கமுடியாது. சில அங்கத்தினர்கள் கோளத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் பெருமையாகப் பேசும்போது நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்ற மாதம் நான் இருக்கும் கோயம்புத்தூருக்கு கோளத்திலிருந்து ஒருவர் வந்தார். அவரை நான் சந்தித்துப் பேசியபோது, "அவர்கள் வெளியே பெருமையாகப் பேசுகிறார்கள்,

ஆனால் உள்ளூரப் பார்க்கும்போது கேரள அரசாங்கத்தில் இப்பொழுது பல கஷ்டங்கள் இருப்பது தெரியும். நான் ஒரு காங்கிரஸ் அன்பன். எனக்கு அந்த அரசாட்சியில் பல கஷ்டங்கள் இருக்கின்றன" என்று கூறினர். அது எப்படியிருந்தாலும் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. நமது பட்ஜெட்டைப் பற்றி பேசுவோம்.

இந்த பட்ஜெட்டில் கல்வி விஷயமாக அரசாங்கம் நல்ல முறையில் சிரத்தை எடுத்துக்கொண்டு முக்கியமாக ஹரிஜனங்களுக்கு சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு சுமார் ரூ. 60 லட்சம் அதிகமாகக் கொடுத்திருக்கிறது. அதைப் பற்றி நாம் பெருமைப்படுகிறோம். மந்திரிகள் ஹரிஜனங்களின் குறைகளை நல்ல முறையில் தீர்க்க வேண்டுமென்றால் இன்னும் அதிகமாகப் பணம் தேவைப்படுகிறது. இருந்தாலும்கூட, "**cut your coat according to the cloth**" என்பதற்கிணங்க வரவிற்குத் தகுந்தமாதிரி செலவினங்களில் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம். குறுகிய காலத்தில் ஹரிஜனங்கள் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள். சென்ற இருநூறு ஆண்டுகாலத்தில் சுமார் 47 பட்டதாரிகள்தான் ஹரிஜனங்களில் இருந்தார்கள். இப்போது தாழ்த்தப்பட்ட மக்களில் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் இருக்கிறார்கள்.

கேரளாவில் போன்று கல்லூரிகளில் ஹரிஜனங்களுக்கு இங்கே ஸ்தானங்கள் ஒதுக்கப்படுவதில்லை என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். உண்மையாகப் பார்த்தால், இப்போது எஞ்சினீரிங் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 52 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஸ்தானங்களுக்கு 48 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அந்த 48 பேருக்கும் கல்லூரியில் இடம் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு இடம் தகுதியின் பேரில் கொடுக்கப்படுகிறது. சுமார் 100 ஸ்தானங்கள் இருக்கும்போது 2,000 விண்ணப்பங்கள் வந்தால் விண்ணப்பதார்களின் தகுதியை ஆராய்ந்து இடம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்படித்தான் இடம் கொடுப்பதாகவும் சொன்னார்கள். ஏதோ சிபாரிசு வேண்டியிருக்கிறது என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். சிபாரிசுகள் ஏதோ சில இருக்கலாம். இதுவிஷயமாக செலக்ஷன் கமிட்டியின் சொந்த அபிப்பிராயத்தைத்தான் நாம் கேட்க வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், முக்கியமாகக் கல்வி விஷயத்தில், நமது அரசாங்கம் நல்ல முறையில் பட்ஜெட் தயாரித்திருக்கிறது.

மேலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஹரிஜனங்களில் ஒவ்வொருவருக்கும் தீ விபத்துக்கள், வெள்ளச் சேதம் முதலியன நேர்ந்தால் நிவாரணமளிக்க உதவுவதற்காக சுமார் 30 ரூபாய் கொடுப்பதற்காக ஒதுக்கப்படும் "ஸப்ஸிடி"-க்கு இந்த பட்ஜெட்டில் அரசாங்கத்தார் சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு ஒதுக்கிவந்த அதே தொகையைத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது வாழ்க்கைத் தரக் குறியீட்டு எண் உயர்ந்திருக்கிறது. ஆகவே அந்த இனத்திற்கு அதிகமான தொகை ஒதுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், ஹரிஜனங்கள் உழுது பயிரிடுவதற்காக அவர்களுக்கு அரசாங்கத்தார் புறம்போக்கு நிலங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் நிலம் கொடுக்க சட்டம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு நிலங்கள் கொடுப்பதை பொதுஜனங்கள் ஆதரிப்பது கிடையாது. அதிக நிலம் வைத்துக் கொண்டிருக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள் தங்களுக்கு மேலும் அதிக பூமி வேண்டும் என்ற விருப்பத்தால், ஹரிஜனங்களுடைய நிலங்களை வேண்டுமென்று தாங்களே உழுகிறார்கள். உண்மையிலேயே தங்களைவிட படிப்பிலும் சமுதாயத்திலும் ஹரிஜனங்கள் தாழ்ந்தவர்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கு நிலங்களைக் கொடுத்துவிட வேண்டுமென்ற மனமாற்றம் அவர்களிடையே ஏற்பட வேண்டும். சட்டத்தால் ஒன்றும் நிறைவேறுவது கிடையாது. ஜனங்களின் மனப்பான்மைதான் மாற வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில், ஹரிஜனங்களுக்கான நிலங்களை அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. அவர்களுக்கு சில நஷ்ட ஈடுகள் அரசாங்கத்தார் கொடுக்கிறார்கள். விஞ்ஞான அபிவிருத்தியின் காரணமாக மின்சார சக்தியால் பம்பை இயக்கி நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் முறை வந்ததால், குறிப்பாக கோயம்புத்தூர் ஜில்லாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கமலை இறைக்கும் தொழில் முடக்கமாகிவிட்டதால் அந்த வேலை செய்துவந்தவர்கள் இப்போது வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் வேலை தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் ஜில்லா மிகவும் தொழில்கள் நிறைந்த பிராந்தியம். அங்கே நிறைய உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பது கிடையாது. "கம்பெனிக்காரர்கள் யார் தங்களுக்குச் சொந்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். எங்களைப்போன்ற சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை கொடுப்பதில்லை" என்று அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் சொல்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் உடனடியாக எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செய்யக் கூடியதாக இல்லாவிட்டாலும் நிதி நிலைமைக்குத் தகுந்தவாறு தயாரிக்கப்பட்டிருப்பது குறித்து எங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். கோயம்புத்தூரிலுள்ள செரவணை நீர்த் தேக்கத்திலுள்ள தண்ணீர் இப்போது தேவைக்குப் போதுமானதாக இல்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஜனத்தொகைக்கு அங்கிருந்த தண்ணீர் போதுமானதாக இருந்தது. இப்போது அங்கே ஜனத்தொகை சுமார் 3 லட்சம் அதிகமாகிவிட்டது. ஆகவே அந்த நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் வசதி செய்வதற்கு இரண்டாவது பட்ஜெட்டில் பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI N. MARUDACHALAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று 1957–58-ம் வருட பட்ஜெட்டில் சில முக்கிய நல்ல அம்சங்களும் இருக்கின்றன. ஆனாலும் இதிலுள்ள சில கெட்ட அம்சங்களை குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதில் ஜனநாயக அடிப்படையில் இந்த விலைவாசி உயர்வுக்கு தகுந்த மாதிரி அரிசி விலையை ஒரு பாயிண்டாக உயர்த்தி இருந்ததை மற்ற சிறு வியாபார சாதனங்கள்மேல் இரண்டு பாயிண்டாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதில் ஜனங்களின் மீது வரிப்பளுவை சுமத்தியிருக்கிறதே தவிர வரிப்பளுவை குறைத்ததாகத் தெரியவில்லை. ஆகையால் இந்த அரசாங்கம் ஜனங்களின் நன்மையை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. இரண்டாவதாக விவசாய சீர்திருத்தத்தைப்பற்றி பட்ஜெட்டில் கொஞ்சம்கூட காணப்படவில்லை. விவசாய சீர்திருத்தத்தை எடுத்துக் கொண்டால் கிராம பகுதிகளில் இன்றைக்கு விவசாயம் செய்யக்கூடிய நிலையில் பல எக்கர் புறம்போக்கு நிலங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவைகளை விவசாயம் செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதின் மூலம் உற்பத்தியை பெருக்க முடியும். கிராமபகுதிகளில் இருக்கும் வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதற்கும் உதவிகரமாக இருக்கும். ஆகையால் இந்த விவசாய சீர்திருத்தத்தை உடனடியாக கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மூன்றாவதாக, ஹரிஜனங்களை பொறுத்தமட்டில் ஹரிஜனங்களுக்கு பல சலுகைகள் செய்யப்படுவதாக கூறப்படுகிறது. என்ன சலுகைகள் செய்து கொடுத்தாலும் கூட, வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம், கல்வித்திட்டம் முதலியவை போட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் ஏட்டளவில்தான் இருக்கிறதே தவிர நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் பல இடங்களிலும் வீடு கட்டிக் கொடுப்பது, குடிக்கும் தண்ணீர் வசதி, நடைபாதை வசதி இவைகள்

கிடையாது. இதனால் அங்குள்ள மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு கோயம்புத்தூரிலிருந்து செம்மேடு வரைக்கும், எந்தவிதமான குடிதண்ணீர் வசதியோ மற்ற யாதொருவிதமான வசதியோ கிடையாது அங்குள்ள ஹரிஜனங்களுக்கு வீடுவசதியில்லை. அதுதவிர மத்தியில் கால் நடை ஆஸ்பத்திரியோ, பிரசவ ஆஸ்பத்திரியோ கிடையாது. இவ்வளவு தூரத்தில் இருக்கும் ஒரு கிராமத்தில் பிரசவ ஆஸ்பத்திரியோ, கால் நடை ஆஸ்பத்திரியோ இல்லாதது ரொம்பவும் வருந்தத் தக்கதாகும். இது தவிர வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஹரிஜனங்களுக்கு நடந்து வருகிறது. அதே சமயத்தில் புறம்போக்கு நிலங்களில் ஹரிஜனங்களில் பலர் குடியேறி இருக்கிறார்கள். இவ்விதம் குடியேறியிருக்கும் ஹரிஜனங்களின் வீட்டை 6-வது ரூல் பிரகாரம் நோட்டீஸ் கொடுத்து அவர்களது வீட்டை பிரிக்கும் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால் அவர்களது குடிசையை பிரிக்காமல் அதே இடத்தில் அவர்கள் நிரந்தரமாக இருப்பதற்கு இந்த வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் வகை செய்தால் ஹரிஜனங்களுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும். அடுத்ததாக, இன்றைக்கு கல்வித் திட்டத்தை எடுத்துக்கொண்டால் கல்வியில் ரொம்பவும் பின் தங்கியிருக்கிறார்கள் ஹரிஜனங்கள். இப்போது பேஸிக் கல்வி என்று ஆரம்பிக்கப்பட்டு கல்வித் திட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஆனால் இந்த கல்வி முறையின்படி நாலைந்து வருடங்கள் படித்தால்கூட தேற முடியாது. காலையில் போனால் மாலைவரை தக்ளி நூற்பதும் பஞ்சு அடிப்பதும் கடைவதும்தான் நடக்கிறது. இது பிள்ளைகளுக்கு ஒரு விளையாட்டு பள்ளிக்கூடமாக மாறிவிட்டது. ஆகவே ஹரிஜனங்களை கல்வியில் உயர்த்துவதற்கு இந்த பேஸிக் கல்வி சாத்தியமில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் நான் கைத்தொழில் முறையை எதிர்ப்பதாக நினைக்கக்கூடாது. பேஸிக் கல்வியினால் அவ்வளவு நல்ல பலன் காண முடியாது என்பது என் கருத்து. ஆகையால் இந்த பேஸிக் கல்வியை கொண்டு வருவது உசிதமல்ல என்பதுதான் என்னுடைய கருத்து என்று சொல்ல விரும்புகிறேன். அதோடு முனிசிபல் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், நான் 1947-ம் வருடம் முதல் முனிசிபல் கௌன்சிலில் இருந்து வந்திருக்கிறேன். அந்த அனுபவத்தில் பார்த்தால் முனிசிபல் நிர்வாகத்தில் இந்த அரசாங்கம் கொஞ்சம் அசிரத்தையாக இருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். அதாவது இன்றைக்கு முனிசிபல் தொழிலாளிகளுக்கு கிடைக்கவேண்டிய சர்வீஸ் பண்ட் முதலியவை கிடைப்பதில்லை. அவனை வேலையைவிட்டு நீக்கிய ஒரு மாதத்திற்குள் கிடைக்க வேண்டும். முன் எல்லாம் இந்த சர்வீஸ் பண்ட் ஒரு முனிசிபல் தொழிலாளி இறந்து போனாலும் அவர் குடும்பத்திற்கு அது கிடைப்பதுண்டு. இப்போது அவ்விதம் குடும்பத்திற்கு கொடுப்பதில்லை. அதோடு இன்றைக்கு முனிசிபல் தொழிலாளிகளில் 10 வருடம் 12 வருடம் வேலைபார்க்கிறவர்களை பெர்மனன்ட் தொழிலாளர்களாக ஆக்கப்படாமல் டெம்பறறி (Temporary) தொழிலாளர்களாகவே வைக்கப்பட்டு வருகிறார்கள். இதைப்பற்றி ஸ்தலஸ்தாபன மந்திரி அவர்களிடம் மகஜர்கள் சமர்ப்பித்து இருக்கிறோம். ஆகவே அதில் இந்த மாதிரி இல்லாமல் உடனடியாக அந்த முனிசிபல் தொழிலாளர்களை பெர்மனன்ட் தொழிலாளர்களாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்றைக்கு கோயம்புத்தூரை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு நகரம் விரிவடைந்துகொண்டு வருகிறது. இதனால் அதிகமான தண்ணீர் கஷ்டம் ஏற்படுகிறது. விவசாயத்திற்கும் போதுமான தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இதற்காக சிறுவாணி நதியிலிருந்து தேக்கம் செய்து ஜனங்களுக்கு தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும். இதற்காக அரசாங்கத்திலிருந்து உதவி வேண்டும் என்று இதைப்பற்றி முனிசிபல் சேர்மென் அவர்கள் அரசாங்கத்திற்கு எழுதியிருப்பதாக தெரிகிறது. இப்போது ஏதோ கடன் கொடுக்க சம்மதித்திருப்பதாக தெரிகிறது. இதிலுள்ள **overflow** தண்ணீரை விவசாயத்திற்காக பயன்படுத்தலாம். இதற்கு அரசாங்கம் வேண்டிய உதவிகள் செய்ய வேண்டும். இது தவிர ஸ்தல ஸ்தாபனங்களுக்கு குறைந்த பட்ச அதிகாரங்கள்தான் இருக்கிறது. அதை கூடுதலாக்க வேண்டும். ஆகவே உடனடியாக மேற்கொண்டு எல்லா காரியங்களுக்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





*SRIMATHI A. S. PONNAMMAL: மதிப்பு மிக்க தலைவர் அவர்களே, 12-4 p.m. நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட்டை, வரவு செலவு திட்டத்தை என் போன்றவர்கள் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள தயாராய் இருக்கிறோம். இந்த சபையில் ஒரு சில நண்பர்கள் ஹரிஜனங்களுக்கு எந்தவிதமான திட்டங்களும் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் மிகவும் துணிச்சலோடு சொல்லிவிட்டார்கள். இந்த அரசாங்கம் ஹரிஜனங்களுக்கு செய்திருக்கும் திட்டங்களை புள்ளி விவரங்களோடு தெரியப்படுத்தத்தான் முதலில் இதை சொல்ல விரும்புகிறேன். வெள்ளையரின் ஆட்சி காலத்தில் ஹரிஜனங்கள் இருந்த அவல நிலையைக்காட்டிலும் விடுதலை கிடைத்த பிறகு ஹரிஜனங்கள் எவ்வளவோ கல்வியில் முன்னேறியிருக்கிறார்கள், என்பதை யாரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. இது மாபெரும் உண்மையாகும். ஏனென்றால் முதலில் கல்லூரிகளில் அல்லது கலாசாலைகளில் படிக்கும் மாணவர்களைப்பார்த்தால் நூற்றுக்கும் குறைவாகத்தான் இருந்தார்கள். இப்போதுள்ள கணக்கை எடுத்துப்பார்த்தால் வருஷா வருஷம் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் கல்லூரிகளில் படித்து வெளியேறி அரசாங்க பதவிகளிலும் டாக்டர்களாகவும் கலக்டர்களாகவும் இன்ஜினியர்களாகவும் டி.எஸ்.பி.களாகவும் பி.ஏ.,பி.எல். பட்டதாரிகளாகவும் பணியாற்றி வருகிறார்கள் என்றால் இதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அடுத்தபடியாக பல ஹாஸ்டல்கள் ஏற்படுத்தி அங்குள்ள ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் வீதம் சர்க்கார் கொடுத்து வருகிறது. அது மட்டுமல்ல. சென்ற 5 ஆண்டில் 950 பள்ளிகள் நிறுவி, அதன் மூலம் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 85 ஆயிரமாக இருந்தது. இதற்காக 82 லட்சத்தி 18 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. அந்த பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு பகல் உணவு கொடுப்பதற்காக 89 லட்சத்து 76 ரூபாய் செலவு செய்யப்பட்டது. இது தவிர ஒரு சில கிராமங்களில் சில குறைகள் இருக்கத்தான் செய்யும். ஒரு சிறிய குடும்பத்திலே பலவிதமான சச்சரவுகள் இருக்கும். அதை தீர்த்து வைப்பதற்கே பல காலங்கள் ஆகும். ஒரு குடும்பத்திலே இவ்வளவு சிக்கல்கள் இருக்குமானால் எவ்வளவோ மாபெரும் காரியங்களை செய்து கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்திற்கு எவ்வளவோ இடைஞ்சல்கள் வரத்தான் செய்யும். இவையெல்லாம் இருந்தும் கூட ஹரிஜன மக்களுக்காக எவ்வளவோ பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். இப்போது இரண்டாவது ஐந்தாண்டு திட்ட பட்ஜெட்டிலும் கல்வித்துறையில் ஹரிஜன மக்களுக்காக பணம் ஒதுக்கப்பட்டிருப்பதை எடுத்துப்பார்த்தால் லட்சக்கணக்கான மக்கள் நமது அரசாங்கத்திற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். நமது அரசாங்கம் மக்களது முன்னேற்றத்திற்காகவும் பல திட்டங்களை ஆரம்பிக்கப் போகிறது. அதே மாதிரி பொருளாதார துறையிலும் இன்னும் பல துறைகளிலும் இன்னும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்று இந்த அரசாங்கத்தை கோடானுகோடி ஹரிஜனங்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு அரசாங்கத்துறையில் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படும் விகிதாசாரப்படியுள்ள சலுகை, தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழிற்சாலையிலும் தொழிற்கூடங்களிலும் ஹரிஜனங்களுக்கு இத்தனை சதவிகிதம் என்றுள்ள முறையில் சலுகையளிக்க வேண்டும். தனிப்பட்ட மில்கள், கம்பெனிகள் முதலியவற்றிலும் ஹரிஜனங்களுக்கு நூற்றுக்கு 25 வீதம் சலுகை அளிக்க வேண்டும் என்று அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்துவிட்டால் பொருளாதார துறையில் ஹரிஜனங்களுக்கு முன்னேறுவதற்கு ஒரு வழியாகும் என்று கருதுகிறேன். இதை உடனடியாக செய்யவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, பொருளாதாரத் துறையில் அவர்கள் மிகவும் பிற்போக்காக இருப்பதினால்தான் அவர்கள் அருவறுக்கப்பட்டு ஒதுக்கி தள்ளப்படுகிறார்கள். அடுத்தப்படியாக, விவசாயத் துறையில் ஆங்காங்கு இருக்கும் தரிசு நிலங்களை, கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பி நிலம் இல்லாத விவசாயிகளுக்கும், ஏழை ஹரிஜன மக்களுக்கும் பிரித்துக் கொடுக்க நமது அரசாங்கம் அதற்கென உடனடியாக ஒரு சட்டம் கொண்டு வந்து அதை உடனடியாக செய்வதற்கு உத்தரவு இடுமானால் அது ஹரிஜன மக்களுக்கு

ஒரு பேருதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கோவில் நிலங்களை கூட்டுறவு முறையில் செய்வதற்கு, ஏழை ஹரிஜனங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு உடனடியாக சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்பு. பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ஹரிஜன மக்கள், நாய், பூனை, கழுதை இவைகளைக் காட்டிலும் மிகக் கேவலமாக மதிக்கப்பட்டு, உலகம் உய்யப் பாடுபடும் இந்த ஹரிஜன மக்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்தார்கள். அதைக் கண்ட நமது மஹாத்மா காந்தியடிகள் ஒரு இயக்கத்தையே தோற்றுவித்தார்கள். அதன் காரணமாக நமது சமுதாய அமைப்பிலே சற்று மாறுதல் காணப்படுகிறது. ஆனால், நம் நாட்டில் என்று இத்தீண்டாமைப் பேய் ஒழிகிறதோ, இத்தீண்டாமை என்று நம் நாட்டில் அறவே ஒழிகிறதோ அன்றுதான் நாம் ஏனைய நாடுகளிடையே தலை நிமிர்ந்து நின்று நான் ஒரு இந்தியன் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். அது வரையில் நாம் இந்தியர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள அருகதையற்றவர்களாகத் தான் இருப்போம். கிராமங்களில் உள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால் அங்கு தீண்டாமைப் பேய் இன்றும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. நமது சென்னை மாநகரிலேயே இன்று ஒரு ஹரிஜன் படித்து விட்டு ஒரு கிளார்க் வேலையில் அமர்ந்து ஒரு வீடு வாடகைக்கு வேண்டுமென்று போனால், நீ என்ன ஜாதி என்று முதலில் கேட்கிறார்கள். நான் ஒரு ஹரிஜன் என்று சொன்னால் அவனுக்கு வீடு கிடைப்பதில்லை, அவனுக்கு இடமில்லை. சென்னை நகரத்திலேயே நிலைமை இப்படி இருந்தால் கிராமங்களில் உள்ள நிலைமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. எனவே சர்வ கட்சித் தலைவர்களும், சர்வ கட்சி அங்கத்தினர்களும் இந்தத் தீண்டாமைப் பிரச்னையை ஒரு தேசீயப் பிரச்னையாகக் கருதி அவரவர்களின் தொகுதியில் இருந்து இந்தத் தீண்டாமைப் பேயை விரட்டி அடிக்க வேண்டுமென்று நான் எல்லோரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் நமது அரசாங்கம் ஜில்லாவாரியாக ஒவ்வொரு தீண்டாமை ஒழிப்பு ஆர்கனைசர்களை நியமித்து இந்தத் தீண்டாமைப் பேயை ஒழிக்க ஆவன செய்தால் அது, கோடானுகோடி ஹரிஜன மக்களுக்கு பேருதவியாக இருக்குமென்று நான் இங்கு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தப்படியாக, தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் ரோடுகள் அமைத்தல், பள்ளிக்கூடங்கள் நிறுவுதல், வைத்தியசாலைகளை ஏற்படுத்துதல் இம்மாதிரியான வேலைகள் எல்லாம் துரிதமாக நடைபெற்று வருகிறது. எனது தொகுதியில் அநேக இடங்களில் இம்மாதிரியான வேலைகள் பூர்த்தியாகி விட்டன. ஒரு சில இடங்களில் மட்டும் என்ன காரணத்தாலோ இம்மாதிரியான வேலைகள் தடங்கல் பட்டுக்கொண்டு இருக்கின்றன. இம்மாதிரி வேலைகளை துரிதமாகச் செய்வதற்கு ஆங்காங்குள்ள லோக்கல் ஆபீசர்களுக்கும், கலெக்டர்களுக்கும் உத்தரவிட்டு அவைகளை வெகு சீக்கிரம் செய்ய அரசாங்கம் உத்தரவு இடுமானால் அவ்வேலைகள் சீக்கிரம் முடிவு அடைந்து விடும். நமது பண்டிட் நேருஜி அவர்களே சொல்லியிருக்கிறார்கள், முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது, ஒரு மாபெரும் கட்டிடத்தை, கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து கட்டப்படும் ஒரு கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போடுவது போலாகும், இந்த முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது அக்கட்டிடத்தைக் கட்டி முடிப்பது போல் அமையும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்த பிரம்மாண்டமான கட்டிடத்தைக் கட்டி முடிக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் என்ன என்ன வேலைகள் செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம் செய்வதற்கு நாம் தயாராயிருக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். கிராமங்களில் இருக்கும் ஜனங்கள், அவர்களுக்கு பெட்டிஷன்கள் எப்படி எழுதுவது என்று தெரியாது. எனக்கு ஒரு பெட்டிஷன் அனுப்பப்பட்டிருந்தது. அதாவது, பொன்னம்மாள் அவர்களுக்கு, உடனே எங்கள் ஊருக்கு ஒரு கிணறு வெட்டித் தர வேண்டும்: ஒரு ரோடு வெட்டித் தர வேண்டுமென்று. இப்படி தனித் தனியாக எழுதி அனுப்புகிறார்கள்.



இப்படியாக இருப்பதினால் உத்தியோகஸ்தர்களும் அதை கவனிக்காமல் போட்டு விடுகிறார்கள். ஆகவே, அங்கத்தினர்கள் அவர் அவரது தொகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து இப்படி, இப்படி பெட்டிஷன்கள் எழுத வேண்டும், கலெக்டர் போன்ற அதிகாரிகளுக்கு இப்படி இப்படி எழுத வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தால் அவர்களது குறைகள் தீர ஏதுவாயிருக்கும். அடுத்தப்படியாக, பெண்கள் கல்விக்காக நமது அரசாங்கம் நிறைய பணம் ஒதுக்கியிருக்கிறது என்பதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். அதோடு கூட, இப்பொழுது வாழ்க்கையில் தவறி விழுந்த பெண்கள் பிழைக்க வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வாழ வழியில்லாத காரணத்தினால் வாழ்க்கையில் தவறி விழுந்த பெண்களுக்கு உஷார் விடுதிகள் ஏற்படுத்தி அவர்களைப் பராமரிப்பதற்கு எல்லாவிதமான நன்மைகளும் செய்யப்பட்டு வருகின்றன. மதுரையில் உள்ள ஒரு " ரெஸ்கியூ ஹோமை " நான் பார்த்தேன். அது ஒரு வாடைகைக் கட்டிடத்தில் இருக்கிறது. இம்மாதிரி வாடகைக் கட்டிடத்தில் இருப்பதால் அவர்கள் எவ்விதமான தொழில்களும் கற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அவர்களில் 20 வயதிற்கு மேற்பட்டவர்களும் இருக்கிறார்கள். அதற்குக் குறைவாகவுள்ளவர்களும் இருக்கிறார்கள். இம்மாதிரி பெண்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வேண்டுமென்றால் அது மிகவும் சிரமம். தனிமையான இடத்தில் அவர்களை இருக்கச் செய்ய வசதி செய்ய வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை அவர்களே உற்பத்தி செய்ய வேண்டும். அங்கு கூடை முடைதல், பாய் பின்னதல் இம்மாதிரியான கைத்தொழில்களை அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்களை இரண்டு மூன்று வருடங்கள் அங்கு வைத்து விட்டு பின் கிராம வாரியாக பிரித்து கிராமங்களுக்கு அனுப்பினால் கிராமங்களுக்கு போய் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதோடு அவர்களும் வாழ்க்கையிலிருந்து திருந்தியவர்களாவார்கள். அதோடு அங்குள்ள பெண்களுக்கும் அவர்கள் ஒரு வழிகாட்டியாகவும் இருப்பார்கள். அடுத்ததாக நீர்ப்பாசனத் திட்டம். எனது தொகுதியாகிய நிலக்கோட்டைத் தொகுதியில் சோளவந்தான் பகுதியில் மட்டும் இரண்டு போகம் விளைகிறது. மற்ற பகுதிகள் எல்லாம் வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கிறது. வருடம் பூராவும் பாடுபட்டாலும் சாப்பிடக் கூட வழியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, சிறுமலையிலிருந்து வரும் தண்ணீரைத் தேக்கி வைத்து, என்ஜினியர்களை அனுப்பி கண்மாய் வெட்டி தண்ணீர் சப்ளை செய்தால் அங்குள்ள எல்லோருக்கும் அது மிகவும் உதவிகரமாயிருக்கும். நில சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று கவர்னரது உரையின் மீது நிகழ்த்திய பிரசங்கங்களில் ஒரு சிலர் சொன்னார்கள். அதைப் பார்த்து விட்டு எனது தொகுதியிலிருந்து ஒரு பையன் சொன்னான், இந்த பொன்னம்மாளுக்கு வோட்டு போட்டு விட்டு அவள் அங்கு போய் தண்டத்திற்கு உட்கார்ந்து விட்டு வருகிறாள், மற்ற கட்சிக்காரர்கள் இதை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று பேசியிருக்கிறார்களே என்று. நீ ஏன் தண்டத்திற்குப் போய் உட்கார்ந்து இருக்கிறாய் என்று கேட்டதும் உண்டு. அந்தத் திட்டத்தை உடனடியாக கொண்டு வர வேண்டுமென்று நானும் விரும்புகிறேன் மற்ற அனைவரும் விரும்புகின்றனர். ஆனால் ஒன்று நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது, சர்வாதிகார ஆட்சியல்ல. மே 19-ம் தேதி செய்தித் தாளை நீங்கள் படித்திருப்பீர்கள். அதில் காட்மண்டுவில், அங்கு நிலச்சுவான்தார்களை நிற்க வைத்து சுட்டுத் தள்ளினார்களாம். ஆனால் இங்கு நடப்பது ஜனநாயக ஆட்சி. சர்வாதிகார ஆட்சியல்ல. ஜனநாயக அடிப்படையில் எந்த முறையில் நிலச் சீர்திருத்த சட்டத்தைக் கொண்டுவர முடியுமோ அப்பொழுதுதான் அது நிலைக்க முடியும். ஒரு அண்ணனுக்கும் தம்பிக்கும் பாகம் ஏற்படும்போது கூட, பாகப்பிரிவினையின் போது கொலை கூட நடக்கிறது. இல்லாது திடீரெனச் செய்தால் ரத்த வெள்ளம் பெருகி கொலைகள்கூட நடக்கும். எனவே, ஜனநாயக ரீதியில், மக்களின் மனதை மாற்றி இச்சட்டத்தைக் கொண்டு வந்தால் அது நிலைத்திருக்கும்.

*SRI M. P. SARATHY : கனம் சபா நாயகர் அவர்களே, நிதி மந்திரி 1 p.m.
அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டை நான் ஆதரிப்பதா அல்லது

எதிர்ப்பதா என்ற முறையில் தான் இருக்கிறேன். குறிப்பாக, அவர்கள் போட்டிருக்கும் விற்பனை வரியை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதற்காக இந்த பட்ஜெட்டை நான் எதிர்க்கின்றேன். 205 குறி எண் விலை ஏற்றம் மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்த பட்ஜெட்டை சமர்ப்பிப்பதாக சொல்லிவிட்டு விற்பனை வரி மூலமாக 1¾ கோடி ரூபாய் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். 105 குறி எண் விலையேற்றம் மக்களிடையே நிலவும் போது 1¾ கோடி ரூபாய் வரியை அவர்கள் மீது திணிப்பதைப் பார்த்தால் இதன் பொருள் விளங்கவில்லை. மக்களுக்கும் இது புரியவில்லை. அது மட்டுமல்ல. அதே நேரத்தில் உணவு தான்யத்திற்கு ஒரு சதவிகிதம் வரியை குறைத்திருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள வியாபார சங்கங்கள் மூலமாக ஒரு முனை விற்பனை வரி வேண்டுமென்று பல மகாநாடுகள், பல மகஜர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். அப்படியிருந்தும் நமது பட்ஜெட்டில் ஒரு முனை விற்பனை வரியைப்பற்றி குறிப்பிடாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயம் தான். வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்காக விளங்கக்கூடிய விற்பனை வரியை இவ்வளவு கேவலமாக மதிக்கிறார்கள் நம் சர்க்கார் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. வியாபாரிகளை ஒரு நல்ல முறையில் மதிப்பதாகத் தெரியவில்லை. மூன்று கோடி சில்லரை ரூபாய் துண்டு விழுகிறது என்றால் அதை வியாபாரிகள் தலையிலா கை வைக்க வேண்டும்? 1¾ கோடி ரூபாய்க்கு வியாபாரிகள் தலையில் கையை வைப்பதாகத்தான் பொருள் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். சிறு வியாபாரிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 10,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரையில் வியாபாரம் செய்கிறவர்களுக்கு விற்பனை வரி போடக்கூடாது என்று பல சங்கங்கள் மூலம் மகஜர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றியும் நிதி அமைச்சர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடாமல் விற்பனை வரியை ஏற்றுவதற்குத் தயாராக வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயந் தான்.

சிக்கனத்தைப்பற்றி பரிசீலிப்பதற்காக ஒரு உயர்தர அதிகாரியை நியமிக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலமாக ஒரு டிபார்ட்மெண்டு ஏற்படுமே தவிர சிக்கனம் ஏற்படாது. தங்களை சேர்ந்த ஒரு பெரிய அதிகாரிக்கு உத்தியோகம் கொடுப்பதற்கு இது ஒரு வழியோ என்றுகூட கருதவேண்டியிருக்கிறது. இதனால் ஒன்றும் சிக்கனம் ஏற்பட்டுவிடாது. உண்மையிலேயே சிக்கனம் ஏற்படுத்தவேண்டுமானால் ஓய்வு பெற்ற ஒரு நீதிபதியை நியமிக்க வேண்டும். வேண்டுமென்றால் மேலும் 2, 3 நீதிபதிகளையும் கூட நியமித்து பரிசீலனை செய்யச் சொல்லலாம். அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்ட உத்தியோகஸ்தர்களை நியமித்தால் அவர்கள் அரசாங்கம் சொல்படிதான் ஆடவேண்டியிருக்கும். ஆகவே, உயர்தர நீதிபதிகளை நியமித்து ஒரு கமிஷன் ஏற்படுத்தி சிக்கன விஷயமாக பரிசீலனை செய்யலாம் என்பது என்னுடைய யோசனை.

உதாரணமாக, வேலூரில் ஸி.ஐ.டி. டிபார்ட்டுமெண்டு இருக்கிறது. தூத்துக்குடியில் அண்ணா அவர்கள் பேசுகின்றார்கள் என்றால் அங்கிருந்து வேலூருக்குத் தந்தி வரும். பிறகு தூத்துக்குடிக்கு ஸி.ஐ.டி. ரிப்போர்டர் அனுப்பப்படுவார். மதுரையில் ஒருவர் பேசுகிறார் என்றால் வேலூரிலிருந்து ஒரு ரிப்போர்டர் போகவேண்டும். ஏறக்குறைய வேலூரில் இம்மாதிரி 30 ரிப்போர்ட்டர்கள் இருக்கிறார்கள். இப்படி வேலூரில் ஆபீசை வைத்துக்கொண்டு எல்லா ரிப்போர்டர்களையும் அங்கு வைத்திருப்பதற்குப் பதிலாக ஜில்லா வாரியாக அவர்களில் ஒருவரை வைத்திருந்தால் எவ்வளவு சிக்கனம் ஏற்படும் என்பதை கவனிக்க வேண்டும். அவர்களை ஜில்லா வாரியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய யோசனை. அதே மாதிரிதான் Finger Print Bureau வேலூரில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரையில் திருட்டு நடந்தது என்றால் வேலூருக்கு தந்தி கொடுக்கவேண்டும். தந்தி கிடைத்து வேலூரிலிருந்து Expert மதுரைக்கு வருவதற்குள் திருட்டு நடந்த இடத்தில் பலபேர் கை, கால் பட்டு, Finger Print எடுக்க முடியாமலே போய் விடலாம். இவைகளையெல்லாம் யோசிக்காமல் சிக்கனத்தைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு உயர்தர அதிகாரியை நியமிப்பதில் என்ன பிரயோஜனம்? அதேமாதிரி



தான் போலீஸ் இலாகாவுக்காக 5 கோடி ரூபாய் செலவு செய்யப் போவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேரள, கன்னட ஆந்திர பகுதிகள் நம்முடன் சேர்ந்திருந்த போதே 5 கோடி ரூபாய்தான் செலவு செய்யப்பட்டது. அவைகள் பிரிந்துபோன பிறகும் ஏன் அதே 5 கோடி ரூபாய் செலவு செய்யப்படவேண்டும்? வெள்ளையர் காலத்தில் இருந்ததுபோல் தடியடி ஆட்சி நடத்துவதால் தான் போலீஸுக்காக இவ்வளவு செலவு செய்யவேண்டியிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மணியம், கர்ணம், தலையாரி போன்ற கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் செய்வதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு பிச்சை கொடுப்பது போல் மணியத்திற்கு 5 ரூபாய், கர்ணத்திற்கு 7 ரூபாய், தலையாரிக்கு 3, 4 ரூபாய் உயர்த்திக்கொடுத்திருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் இந்த சம்பள உயர்வைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியாது. அவர்கள் கூச்சல் போடுகிறார்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு ஏதோ கொடுக்கவேண்டுமென்று கொடுத்திருப்பதாகத்தான் தெரிகிறது. உண்மையாகவே மணியக்காரர் கிராமத்தில் பெரிய அதிகாரி. ஆனால் அலவென்ஸ் எல்லாம் சேர்ந்து அவருக்கு சம்பளம் ரூ. 25-தான். அவருக்குக் கீழ் வேலை பார்க்கும் கணக்கு பிள்ளைக்கு ரூ. 30 சம்பளம். தலையாரிக்கு சம்பளம் ரூ. 22. மணியக்காரர், கணக்கு பிள்ளை எல்லோருக்கும் ஏறக்குறைய ஒரே விதத்தில் சம்பளம் இருக்கவேண்டும். மணியக்காரர் கிராம முன்சீப்பாகவும் இருக்கிறார். அந்த குறிப்பிட்ட உத்தியோகஸ்தருக்கு மட்டும் கணக்குப் பிள்ளை போல் சம்பளம் உயர்த்தவில்லை. அவர்களுக்கும் தகுந்த ஊதியம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்ஜெட் உரையில் 15-வது பாராவில் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப் போவதாக குறிப்பிட்டிருக்கிறது. "பெருந்தொழில் வகையில், சேலத்தில் கிடைக்கும் அலுமினியக் கனிப் பொருளை பயன்படுத்தி வருடம் ஒன்றுக்கு 10,000 டன் அளவில் அலுமினியம் உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலையை மேட்டூரில் நிறுவுவது என்று நிச்சயமாகியுள்ளது. 'தேசியத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்' சேலத்திலுள்ள மூலக்கனிப் பொருள்களைக் கொண்டு, இரும்பு உருக்கும் தொழிற்சாலையை நிறுவும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகிறது."

SRIMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir, the hon. Member is reading the Budget Speech.

DEPUTY SPEAKER: He is referring to the speech made by the hon. Minister.

SRI M. P. SARATHY: இம்மாதிரி தொழிற்சாலைகளைப்பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம் கண்துடைப்பு வேலை என்றுதான் கருதவேண்டியிருக்கிறதே தவிர உண்மையிலே தொழிற்சாலை வளர்ச்சிக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று அரசாங்கத்திற்கு எண்ணமிருந்தால் இதற்காக ஏதாவது பணத்தை ஒதுக்கியிருப்பார்கள். சர்க்கரைத் தொழிலை கூட்டுறவு முறை மூலம் நடத்துவது சம்பந்தமாக 15 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களே தவிர ஏறக்குறைய கோடிக்கணக்கில் பணம் போட்டு ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலைகளில் அரசாங்கத்தின் பங்கு என்ன என்று பார்த்தால் ஒரு காலணா கூட இல்லையென்றுதான் நான் கருதுகிறேன். அந்த ரீதியில் தான் பட்ஜெட்டும் அமைந்திருக்கிறது.

பட்ஜெட்டில் ஏதோ ஆஸ்பத்திரிகள் கட்டுவதற்காகவும், வீடுகள் கட்டுவதற்காகவும் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். சர்க்கார் ஆஸ்பத்திரிகளை அரசாங்கத்தார் மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். வேலூரைப் பொறுத்த வரையில் பெரிய உத்தியோகஸ்தர்கள் நல்ல முறையில் நடந்துகொண்டாலும், கீழ்த்தர சிப்பந்திகள் பல மோசடிகள் செய்து பொருள்

களை நாசமாக்குகிறார்கள். இதுபற்றி எனக்கு பல ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றன. எனக்கும் நேரில் தெரியும். இந்த ஊழல்களை தடுப்பதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : உங்களுக்கு நேரம் ஆகிவிட்டது.

SRI M. P. SARATHY : வேலூரில் மின்சார வசதியுள்ள இடங்களிலும் கோர்ட்டுகளில் ஒரு பக்கத்தில் பங்கா இழுப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு பக்கத்தில் பங்கா இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். மறு பக்கத்தில் குமாஸ்தாக்கள் உட்கார்ந்து fan போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனால் எவ்வளவு பணம் விரயமாகிறது என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1-10 p.m. SRI T. KARIA GOUNDER : அவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பட்ஜெட்டை—வரவு செலவுத் திட்டத்தை ஒட்டி எனக்கு முன் பல நண்பர்கள் பேசினார்கள். ஆனால், இந்தத் வரவு செலவுத் திட்டத்தை—எதிர் கட்சி உப தலைவர் விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசியது குறித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் வரி போடாமல் இருந்து விட்டார்களே என்று நான் வருத்தப்படுகிறேன். என்னைப் பொருத்த அளவிலே நான் ஒரு விவசாயி என்று முதலிலேயே சொல்லிக்கொள்ளுகிறேன். உதவி எதிர் கட்சித் தலைவர் நண்பர் ராமசாமி அவர்கள் கேரள ராஜ்யத்தைப் பற்றிக் குறிப்பிட்டார், கேரளாவிலே விற்பனை வரி கிடையாது உணவுப் பொருள்களுக்கு என்று. சர்க்கார் உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி இல்லையென்று சொன்னால் இங்கே ஒரு முனை விற்பனை வரி வேண்டுமென்று சொல்லும் வியாபாரிகள் ஒழுங்காக சர்க்காருக்கு வரியைச் செலுத்துகிறார்களா. அவர்கள் எந்த முறையில் வரியை வசூலிருக்கிறார்கள், எந்த முறையில் சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் யோசிக்க வேண்டும். இந்த நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலே முதன் முதலாக நிதி அமைச்சராக இருந்த ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள், தென் இந்திய வர்த்தக சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது "இந் நாட்டின் நிதி ஒழுங்காக இருக்கிறது. வியாபாரிகள் இரண்டு கணக்கு வைக்காமல் இருந்தால் போதும்" என்று சொன்னது இன்று கேட்டது போல் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே உள்ள மக்களில் நூற்றுக்கு 87 பேர் விவசாயிகளாக இருக்கிறோம். இவர்களைப் பற்றி இங்கு இதற்கு முன் யாருமே பேசவில்லை. இன்னும், தூங்கினவன் துடையில் கயிறு திறிக்கிற மாதிரி படித்த நகரத்தில் வாழும் அறிவாளிகள் தான் இந்தப் பலனை அனுபவிக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் கேரள மாகாணத்தின் நிலைமை வேறு, தமிழ் நாட்டின் நிலைமை வேறு. கேரள ராஜ்யத்தில் அங்குள்ள கிராம சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு கொடுத்துவிட்டதாக அறிகிறோம். அங்கு அதிகமாக நிலமே கிடையாது. எல்லாம் ஒரே காடு. வரி வசூலிக்கிற கிராம அதிகாரிகளுக்கு 10 கிராமங்களைச் சேர்த்து ஒரு கிராமமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தமிழ்நாட்டில் இரண்டு அல்லது மூன்று கிராமங்களைச் சேர்த்து அதை ஒரு கிராமமாக ஆக்கியிருக்கிறார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் வரி போடாமல் விட்டுவிட்டார்களே என்பதைப் பற்றிச் சொல்லவைரவில்லை. நண்பர் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகையில் விவசாயிகளுக்கு வரி போடவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது இருக்கும் வரியையே சரியாக வசூலிப்பதில்லை. நாங்கள் மிகவும் கஷ்ட நிலையில் இருக்கிறோம். விவசாயிகளில் எவ்வளவு பேர் எழுதப்படிக்கத்தெரியாதவர்களாக இருக்கிறார்கள். உணவுப் பொருள் விலை உயர்வைத் தடுக்கவேண்டும் என்று எல்லாரும் பேசுகிறார்கள். முன்பு 2 அணா கூலி இருந்தபோது செய்த வேலையை இன்று ஒரு ரூபாய் கொடுத்தாலும் செய்வதில்லை. ஒவ்வொரு





வரும் நன்றாக வேலை செய்யவேண்டும். உணவுப் பொருள் விலை உயர்வைதடுக்க வேண்டியது அவசியம். ஒரு மடங்கு, ஆறு மடங்கு, 10 மடங்கு விலை அதிகமாகின்றது. தொழிலாளிகள் எல்லாரும் வேலை செய்யாமல் இருந்துவிடலாம். படித்தவர்கள் வேலை செய்யாமல் இருந்துவிடலாம். அதனால் பரவாயில்லை. ஆனால் நாங்கள் வேலை நிறுத்தினால் எல்லாருக்கும் கஷ்டம். நாடே கண்ணை மூடவேண்டிய ஒரு நிலை ஏற்படும். நான் படிக்கிற காலத்தில் ஆசிரியர்களுக்கு ரூபாய் 6 சம்பளம். 200 பேர்களுக்கு சொல்லிக்கொடுத்தார்கள். ஆனால் இப்போது கிராமத்திற்கொரு பள்ளிக்கூடம். இதில் 5 அல்லது 10 உபாத்தியாயர்கள். அந்தக் காலத்தில் நான் ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருந்தபோது அதற்கு பட்ஜெட் 11 லட்சம். ஆனால் இன்றைக்கு அதன் பட்ஜெட் 60 லட்சம். அத்தனைக்கும் சர்க்கார் பணம் கொடுத்துக்கொண்டு வருகிறது. நிதி அமைச்சர் அவர்கள் வரியைக்கூட்டுவார்களானால் தான் என்னென்ன தேவைகளோ அவைகளை அடைய முடியும். நாம் எல்லோரும் ரோடு போடுகிறோம், பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துகிறோம் சுகாதார வசதிகள் செய்து தருகிறோம், மருத்துவ விடுதிகள் அமைத்துத் தருகிறோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு இங்கு வந்திருக்கிறோம். இவைகளையெல்லாம் செய்வதென்றால் பணம் தேவை. ஆகையால் வரி போடாமல் என்ன செய்ய முடியும். மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவி வருவதிலிருந்து பற்றாக்குறையை சரிக்கட்டி விடலாம் என்று நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு மக்களுக்குச் செய்வது சாத்தியமில்லாமல் போகிறது. கேரளாவோடு ஒப்பிட்டு நண்பர் சொன்னார், தோட்ட தொழிலுக்கு வரி போட்டிருக்கிறார்கள் என்று. எங்களுக்கு வரி போட்டால் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். வட ஆற்காடு ஜில்லாவில் சென்ற ஆண்டு பிற்பாதி மழை போதாது. மழை பெய்கின்ற காலத்தில் அதிக மழை பெய்து மக்கள் கஷ்டப்படுவார்கள். விற்பனை வரி உயர்வைப்பற்றி வியாபாரிகள் எதிர்த்துப் பேசுகிறார்கள், இந்த வரியை கொடுப்பது ஜனங்களே தவிர அவர்கள் கையிலிருந்து கொடுக்கவில்லை. ஒருமுனை வரி வேண்டுமென்று சொல்கின்றார்கள். மகாநாடு கூட்டுகின்றார்கள். நாங்கள் கொடுக்கிற தானியங்களுக்கு பில் கொடுப்பதில்லை. விற்பனை வரியை ஒருவரும் பில் போட்டுக்கொடுப்பதில்லை. இருக்கின்ற காலணா வரியை விவசாயிகளிடத்தில் வசூலித்துக்கொண்டு அவர்கள் அடைகிறார்கள். சர்க்காருக்கு சேருவதில்லை என்று நினைப்பூட்ட விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் அதிக வரி போட்டே வருவாயைக்கண்டு பிடித்து நாட்டுக்குச் செய்யவேண்டியதைச் செய்வார்கள் என்று நினைத்தேன். விற்பனை வரியைப்பற்றி உறுப்பினர்களுடைய சந்தேகத்திற்கு ஆதாரமில்லை. ராஜாஜி அவர்கள் விற்பனை வரியை முட்டாள் தனமாகக் கொண்டுவரவில்லை. மாகாண சர்க்காருக்கு சரியான வரி அப்போது கிடைக்கவில்லை. விவசாயிகள் கொடுத்த வரியும், கலால், காட்டிலாகா போன்ற வருமான வரியில் இருந்துதான் இந்த ராஜ்யங்களுக்கு நிதி வந்தது. நாட்டிலே 13 அல்லது 14 சதவிகிதம் உள்ள அவர்கள் அத்தனை பேரும் வரி கொடுக்கவில்லை. இப்போது வியாபாரிகள் என்றால் வருமான வரி, அதிகலாப வரி, உத்யோகஸ்தர்களாக இருந்தால் உத்யோக வரி இவைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர எத்தனையோ வருஷங்களாக சர்க்கார் விவசாயிகள் கொடுக்கிற வரியில் தான் இருந்துவந்தார்கள் என்று நினைப்பூட்ட விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரி வந்த பிறகு எல்லோராலும் இந்த விற்பனை வரியைக் கொடுக்க சிரமம் இல்லாமல் இருந்துவருகிறது. எல்லோராலும் சுலபமாகக் கொடுக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். கிராமங்களில் உள்ளவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்தால் தான் வேலையில்லா திண்டாட்டம் நீங்கும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தினசரி எத்தனை பேர்கள் படித்தவர்கள் வேலைக்கு வருகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். எவ்வளவு பேர்களுக்குத்தான் சர்க்கார் வேலை கொடுக்க முடியும். படித்

தவர்கள் அவ்வளவு பேர்களுக்கும் சர்க்கார் வேலை கொடுக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. அப்படிக் கொடுக்கவே முடியாது. அப்படி எதிர் பார்த்துக்கொண்டு படிப்பது என்று இருந்தால் அதனால் மோசமான நிலைமை தான் ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன முன்னேற்றத்தைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஆந்திர ராஜ்ய பிரிவினை ஆவதற்கு முன் ஹரிஜனங்களுக்கு என்று சர்க்கார் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருந்தார்கள். இவ்வாண்டு கூட அவர்களுக்கென்று இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இத்துடன் ஹரிஜனங்களுக்குத் தேவையான பல காரியங்களையும் செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் எங்கள் தாலூகாவில் என்னுடைய தொகுதியில் ஒன்றும் செய்ய வில்லை என்று தான் நான் சொல்லவேண்டியதாக இருக்கிறது. காரணம் எங்கள் தொகுதிதான் ரொம்பவும் கடைசியாக இருக்கிறது. ரொம்பவும் பிற்போக்காக இருக்கிறது. நாங்கள் ரொம்பவும் ஏமாந்தவர்கள் என்றுகூட சொல்ல கஷ்டமாக இருக்கிறது. அதனால் எங்கள் தாலூகாவில் எந்த விதமான முன்னேற்றமும் கிடையாது. சமுதாய திட்டம் இல்லை. தேசீய விஸ்தரிப்புத் திட்டம் இல்லை. இதற்கெல்லாம் காரணம் இதற்கு முன் இருந்த அங்கத்தினர்கள் தான் என்று சொல்ல வேண்டும். அது அவர்களுடைய குற்றமேயொழிய சர்க்காருடைய குற்றம் என்று சொல்ல முடியாது. என்னைப் பொருத்த வரையில் நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால் எங்கள் தொகுதியில் பள்ளிக்கூடம் கிடையாது, ஆஸ்பத்திரி கிடையாது, ரேடியோ கிடையாது, டெலிபோன் கிடையாது, அதனால் எங்கள் தொகுதி மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. இதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் பாலாறு பாசன திட்டம் ரொம்ப நாட்களாகவே இருக்கிறது. இதற்கு என்று கனம் நிதி மந்திரி அவர்கள் நாலு கோடி ரூபாய் நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். "அழுத பிள்ளை தான் பால் குடிக்கும்" என்று சொல்வதுபோல் பல வருஷங்களாக அழுது அழுது இப்பொழுது அந்த திட்டத்திற்கு என்று அதிக பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். வோட்டுப் பெற்று சண்டைப் போட்டு வாங்கலாம் என்று நாங்கள் வந்திருக்கிறோம். இப்பொழுது இஞ்சினீயர்கள் அங்கும் இங்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஏதோ நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதைப்பற்றி பத்திரிக்கைகளில் செய்திகள் வருகின்றன. நேற்றைய தினம் கூட ஆந்திர பிரதம மந்திரி கனம் சஞ்சீவி ரெட்டியார் அவர்கள்கூட கோதாவரி ஜலத்தை தமிழ்நாட்டிற்கு விடலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதன் மூலம் தமிழ் நாட்டிற்கும் பாலாறுக்கும் விமோசனம் கிடைக்கும் என்று தோன்றுகிறது. அதனால் பல ஆயிர, லட்சக்கணக்கான ஏக்கர்கள் நிலம் நீர்ப்பாசன வசதி அடையும் என்று தோன்றுகிறது. இதன்படி கணக்கு எடுத்துப்பார்த்தால் சிலப்பதிகார காலத்தில் சமீபத்திலுள்ள மகாபலிபுரத்தில் உள்ள சுப்ரமணியர் கோவிலுக்கு பாலாற்று தண்ணீர் உபயோகப்பட்டதாகவும் சென்னை நகருக்கு 150 ஆண்டிற்கு முன் மேற்படி தண்ணீர் உதவியதாகவும் ஆதாரமுள்ளது.

DEPUTY SPEAKER : The hon. Member has already exceeded by four minutes. I am not going to allow any more time. He should resume his seat.

* SRI T. KARIA GOUNDER : நீர்ப்பாசன திட்டம் ஏதாகிலும் மக்களுக்கு சர்க்கார் கொண்டுவருவதாக இருந்தால் இதற்கு வரி கொடுக்க அங்குள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் வரி கொடுப்பார்களோ மாட்டார்களோ என்ற சந்தேகமே வேண்டாம். நிச்சயமாக அவர்கள் வரி கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அதனால் பாலாறு திட்டத்தை நிறைவேற்றிக்கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவைகளைப்பற்றி பேச வேண்டும் என்றிருந்தேன், தலைவர் அதற்கு வேண்டிய அவகாசம் கொடுக்கவில்லை. வெட்டுப் பிரேரணைகள் சம்பந்தமாக பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுப்பார்கள் என்று



நினைக்கிறேன். அப்போழுது மற்றவைகளைப்பற்றி பேசுகிறேன். குறிப்புகள் எழுதி வைத்திருக்கிறேன். அதைப்பற்றி அப்போழுது பேசிக்கொள்ளலாம் என்று இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். தலைவருக்கு நன்றி. வணக்கம்.

* SRI P. S. ELLAPPAN : கனம் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தாலூகாவில் தற்போது ஹரிஜனங்களுக்கு மாட்டு வாரம் இனமாகக் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஜில்லா ஹரிஜன முன்னேற்ற ஆபீசர் மகஜர்கள் வாங்கிக்கொண்டுவருகிறார். இது வரையிலும் யாருக்கும் மாட்டு வாரம் எந்த பிர்க்காவிலும் கொடுக்கப்பட்டதாக தெரியவில்லை. தாலூகா பூராவிலும் கொடுக்கப் போகிறார்கள் என்றும் அதற்காக பணத்தையும் ஒதுக்கி இருப்பதாகவும் சொன்னார்கள். அந்தப்படி பணம் எப்பொழுது கொடுப்பார்கள், இதை எங்கே கொடுக்கப் போகிறார்கள், என்ற விஷயத்தை நான் தெரிந்து கொள்ள வேண்டும். இதைப்பற்றி மக்கள் எல்லோரும் என்னைவந்து தொந்தரவு செய்கிறார்கள். இது வரைக்கும் 700 அல்லது 800 மனுக்கள் வரையில் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அப்படி கொடுத்திருந்தும் இன்னும் நான்கு பேர்களுக்குக்கூட கொடுத்ததாகத் தெரியவில்லை.

*SRI T. P. ELUMALAI : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 1-
இந்த வரவு செலவு திட்டத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தை p.
களைச் சொல்லப் பிரியப்படுகிறேன். பொதுவாகவே இந்த வரவு செலவு திட்டத்தினால் மக்களிடத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்று நினைப்பதில் யாரும் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாகவே நம்முடைய சர்க்கார் பின்னால் வரவேண்டிய நன்மைகளுக்கு மிக முக்கிய கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பது இந்த பட்ஜெட் திட்டத்தைப் படித்தாலே நன்றாக விளங்கும்.

காடுகளையெல்லாம் வளர்ப்பதற்கு நிறைய பணத்தை ஒதுக்கி இருப்பதிலிருந்தே இதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக காடுகள் வளர்ப்பு விஷயத்தில் செலவு செய்கிற தொகையானது உடனடியாக பலனை தராவிட்டாலும் பின் காலத்தில் நல்ல பலனைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. காடுகளின் அபிவிருத்தியினால் உடனடியாக நாம் பலனை எதிர்பார்க்க முடியாது. மற்றும் இந்த மாட்டு வாரம், வீடுகள் கட்டிக் கொள்வதற்கு மானியம் போன்றவைகள் உடனடியாக பலன் தரக்கூடியவைகள். ஆனால் இந்தக் காடு வளர்ப்பு போன்றவைகள் பின்னால் பலன் தரக்கூடியவைகள். இப்படிப்பட்ட பின்னால் பலன் தரக்கூடிய விஷயங்களில் இப்பொழுதுள்ள சர்க்கார் கவனம் செலுத்தி வருவது ரொம்பவும் வரவேற்கத்தக்கது. அது போலவே இந்த வரவு செலவு திட்டத்தைப் பார்த்தால் பின்னாடி பலன் தரக்கூடிய பல அம்சங்கள் அடங்கி இருக்கின்றன. இப்படிப்பட்ட விஷயங்களில் கனம் அங்கத்தினர்கள் ஒத்துழைக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறை சொல்லிக் கொண்டே இருப்பதில் பிரயோசனம் இல்லை. அதனால் உடனடியாக பலன் ஏற்பட்டுவிடாது. குறை சொல்லும் போது இப்பொழுது சர்க்கார் திட்டம் போட்டிருப்பவைகளினால் உடனடியாக பலன் தரக்கூடியது இல்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். சர்க்காருடைய கவனம் எல்லாம் பின்னால் பலன் தரக்கூடிய விஷயங்களில் செலுத்திக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் பால் பண்ணை ஒன்றை ஆரம்பிக்கப்போகிறார்கள். இந்தப் பால் பண்ணைக்கு அங்கே இருக்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலைகள் மிகவும் போற்றக்கூடியவைகளாக இருக்கின்றன. அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுதான் வேலை செய்கிறார்கள். இந்த இடத்தில் மட்டும் அல்ல, மற்ற எல்லா இடங்களிலும் பெரிய உத்தியோகஸ்தர்கள் கஷ்டப்பட்டுத்தான் வேலை செய்து வருகிறார்கள். இந்த நிலைமையில் சட்டசபையிலுள்ள அங்கத்தினர்கள் தங்களுடைய பூர்ண ஒத்துழைப்பை அவர்களுக்கும் இந்த திட்டங்களுக்கும் கொடுத்தால் அதன் அதனுடைய பலன் நல்ல முறையில் கிடைக்கும். நல்ல முறையிலும் அனுபவிக்க முடியும்.

1-30 p.m. தவிர, மீனவர்களுக்கும் நம்முடைய சர்க்கார் நல்ல வசதிகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த பட்ஜெட்டில் கூட அவர்களுக்கு என்று பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய தேவைகளை வாங்கிக் கொடுப்பதற்கும் மற்ற உதவிகளையும் செய்வதற்கும் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் வேலைகள் சரிவர நடைபெறாமல் இருக்கின்றது. இதற்கு அதிகாரிகள் வேகமாகவும் விருவிருப்பாகவும் பேசுகிறவர்கள் அங்கு சென்று வேலை செய்தால் எவ்வளவோ நலமாக இருக்கும். போடப்படும் திட்டங்களினால் என்ன பலன் ஏற்படும் என்பதை அங்கு போய் அவர்களிடத்தில் அதிகாரிகள் சொல்லவேண்டும் ஆனால் திட்டத்தைப் போட்டு விட்டு அங்கு போய் அதைப்பற்றி விளக்குவது இல்லை. அவைகளில் கவனம் செலுத்தாமல் இருந்து விடுகிறோம். இதனால் போடப்படும் திட்டங்கள் சரிவர நடைபெற்றால் சர்க்காரை குறை கூறமாட்டார்கள். போடப்படும் திட்டங்கள் சரியானபடி நிறைவேறாமல் போனால் அங்குள்ள அமைச்சர்களை மட்டும் குறை சொல்லக் கூடாது. உதாரணமாக இப்பொழுது எங்கள் தொகுதியில் ஒரு பால் பண்ணையை ஆரம்பிக்கப்போகிறார்கள் என்று சொன்னேன். அதாவது எருக்கஞ்சேரியில் ஒரு பால் பண்ணையை ஆரம்பித்து நடத்துவதாக இருக்கிறது. இதனால் சில மக்களுக்கு ரொம்ப வசதியாக இருந்தாலும் சில மக்களுக்கு நன்மை ஏற்படாமல் இருக்கிறது, அங்கே இருக்கக்கூடிய குடியானவர்களுக்கு மிகவும் தொந்தரவாக இருக்கிறது. எப்படி என்றால் அங்கு இருக்கிற உத்தியோகஸ்தர்கள் அவர்களிடத்திலே அணுகுகிற போது, அவர்களுடைய நிலங்களை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்கிற போது கொஞ்சம் கடுமையாகச் சொல்கிறார்கள். குடியிருக்கும் வீடுகளை "நாளைக்கு பிரித்து போட்டு விடுவோம்" என்று சொல்கிறார்கள். இப்படிக் கடுமையான வார்த்தையைச் சொல்கிறபோது "இந்தத் திட்டத்தினால் என்ன பிரயோசனம் ?" என்று கூட மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள். "இந்த திட்டத்தினால் இந்தத் தொகுதிக்கு வேண்டிய அளவு நன்மை ஏற்படும், பொதுவாக நம்முடைய சென்னை ராஜ்ஜியத்திற்கும், நம்முடைய இந்திய தேசத்திற்கும் நன்மை உண்டாகும்" என்று என்னதான் மக்களிடையே சொன்னாலும், அவர்கள் கேட்பதில்லை. காரணம் என்ன ? மாற்றுக் கட்சியின் துணையும் அங்கு அவர்களுக்கு இருக்கிறது. "இந்தத் திட்டத்தினால் நமக்குத்தான் நல்லது என்று நான் சொல்வதனால் நான் பைத்தியக்காரனாகப் போகிறேனே தவிர, மக்கள் இந்தத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய நன்மையை உணருவதாகத் தெரியவில்லை. காரணம் அந்த அளவுக்கு மாற்றுக் கட்சியினரின் பிரசாரம் அங்கு இருக்கிறது. மாற்றுக் கட்சியின் பிரசாரமும், அதிகாரிகள் பொதுமக்களை அணுகும் முறையும் தான், மக்கள் இந்தத் திட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதற்கு காரணமே தவிர வேறொன்றுமில்லை. நாம் என்னதான் பிரசாரம் செய்தாலும் மக்கள் அதை எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே, சர்க்கார் திட்டங்களை மேற் கொள்ளும் போது, அதிகாரிகளுக்குத் திட்டமான, குறிப்பான ஒரு தாக்கீதை அனுப்பி வைக்க வேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்களையும் மற்ற அமைச்சர்களையும் நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஹரிஜனங்கள் விஷயத்தில் நான் ஒன்று சொல்லப் பிரியப்படுகிறேன். குறிப்பாக, எவ்வளவோ வசதிகளை ஹரிஜனங்களுக்கு இந்தச் சர்க்கார் செய்திருக்கிறார்கள். அதற்காக ஹரிஜன மக்களின் சார்பாக நான் சர்க்காருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், குறிப்பான விஷயங்களில் ஒரு சில தவறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. குடிதண்ணீர் விஷயமாக ஹரிஜனங்களுடைய குறைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. குடி தண்ணீர் வசதிகள் சில சேரிகளில் இன்று வரையிலும் செய்யப்படாமலிருக்கின்றன. ஐந்தாண்டுகளாக நான் சென்ற சட்டசபையில் மெம்பராக இருந்து வந்தேன். இந்தத் தேர்தலிலும் ஜெயித்து நான் இப்பொழுது சட்டசபையில் மெம்பராக வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் 72 கிராமங்களுக்கு இன்று வரை குடி தண்ணீர் வசதி இல்லாமல் நாங்கள் கஷ்டப்படுக் கொண்டு





தான் இருக்கிறோம். இது சம்பந்தமாக தாலூகா ஆபீசிலும் விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். தாலூகா ஆபீசிலே என்ன சொல்கிறார்கள் என்றால் "திட்டம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது, கூடிய சீக்கிரம் கிணறுகள் எடுப்போம்" என்று சொல்கிறார்கள். ஆனால் இன்னும் கிணறுகள் எடுக்கப்படவில்லை. ஒரு சில இடங்களில் அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் வரும் போது அவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம். அப்பொழுது உடனடியாக காரியங்கள் கவனிக்கப்படுகின்றன. காரணம் அவர்கள் உடனே தாக்கீது அனுப்புகிறார்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு. நாங்கள் அப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் நாங்கள் அடிக்கடி மந்திரிகளைத் தொந்தரவு செய்கின்றோம், கூட்டங்களுக்கு வரவேண்டுமென்று. காரணம், அவர்கள் பலப்பல கிராமங்களுக்கு வரும் போது அந்தந்த இடங்களில் உள்ள குறைகளை மந்திரிகளிடம் மகஜர் மூலமாகத் தெரிவித்து கொள்ள முடியுமே என்ற ஒரு எண்ணம். அந்த மகஜர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் அனுப்பிவைத்து, ஆவன செய்யமாட்டாரா என்பது எங்கள் எண்ணம். இம்மாதிரி மந்திரிகளுக்கே முறையிட்டு ஒவ்வொரு திட்டத்தையும் நடத்திக் கொள்ள வேண்டுமென்ற நிலையில்லாமல், அதிகாரிகளே முடித்துக் கொடுக்கும் படியான ஒரு வரையறை ஏற்படுத்தி அதற்கான உத்திரவை போடவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கும் மற்ற ஏழைகளுக்கும் விவசாயத்திற்காக நிலங்கள் கொடுக்கும் விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல இடங்களில் ஏறக்குறைய பத்து, பதினைந்து ஆண்டுகளாகப் பயிர் செய்து கொண்டிருந்த புறம்போக்கு நிலங்கள் இதுவரை அந்த ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்கப்படவே இல்லை. ஜாரி விஷயமே முன்னுக்கு வருவதில்லை. திருவொற்றியூருக்குச் சமீபத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு தனிப்பட்ட முதலாளியினுடைய நிலத்தில் குடியேறினார்கள். அந்த நிலத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் தலையிட்டு அவர்களுக்கு வாங்கிக் கொடுத்தார்கள். அந்த நிலச் சொந்தக்காரரும் ஒப்புக் கொண்டார். ஆனால், அந்த நிலம் இது வரை கல் போட்டு, ஜாரி செய்யப்படவில்லை. நிலம் சொந்தம் என்பதற்கு பட்டா செய்து கொடுக்கப்படாத காரணத்தால், அந்த நிலத்தின் மீது அவர்கள் வீடு கட்டிக் கொள்ளவோ வேறு எதுவும் செய்து கொள்ளவோ முடியாமலிருக்கிறது. இதில் பல சங்கடமான விஷயங்கள் இருக்கின்றன. இதில் சர்க்கார் முனைந்து வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அந்த வேலையில், சட்டசபை மெம்பர் என்ற முறையில் என்னுடைய ஒரு பொதுவான சேவையைத் தருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நகரப் பகுதியிலே இருந்து கொண்டே ஏதோ கிராம மக்களுடைய குறைகளைப் பற்றி பலர் பேசி விடலாம். அவர்களுடைய குறைகளைத் தெரிந்து கொண்டதாகப் பேசிவிடலாம். இருந்தாலும் சாதாரண ஊழியன், எப்பொழுதும் கிராமத்திலே இருக்கின்றவன், என்ற முறையில் சொல்கின்றேன், கிராமத்தில் மக்களோடு நெருங்கிப் பழகுகிறவர்களுக்குத்தான் கிராம மக்களுடைய குறைகள் நன்றாகத் தெரியும்.

நான் ஒரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, சினிமாவுக்கு எவ்வளவு வரி வேண்டுமானாலும் போடலாம். சினிமாவில் ஈடுபட்டிருக்கும் நண்பர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் வரி போடலாம். அவர்களை வரி விதிப்பதிலிருந்து விட்டு வைக்கக் கூடாது. ஏனென்றால், அவர்களுக்கு நிறைய சம்பாத்தியம் கிடைக்கிறது. அவர்களுக்கு திடீரென்று நல்ல வாய்ப்பு கிடைத்து விடுகிறது. நிறைய பணம் சம்பாதித்திருக்கிறார்கள். பத்து ஆண்டுக்கு பிறகு பார்த்தால், அவர்கள் எக்கச்சக்கமாக இருக்கிறார்கள். ஆகையால், சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருந்து அவர்களுடைய லாபத்தில் ஒரு பாகத்தை அரசாங்கம் வரியாக வாங்கி விட்டாலும் போதும். ஒரு பாகம் சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், மூன்று பாகம் சர்க்காருக்கும் என்று வாங்கி விட்டால் கூட நல்லது. ஏனென்றால், எக்கச்சக்கமாக

அவர்கள் லாபம் சம்பாதிக்கிறார்கள். இப்படி வரி போட்டு, அவர்களுடைய வருமானத்தில் ஒரு பங்கைப் பெறுவதற்கு நிதி அமைச்சரவர்கள் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மறு பட்ஜெட்டிலாவது அவர்களை விடாமல் இருக்க வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, உணவு விஷயத்தில் வரி இல்லாமல் நமது நிதி அமைச்சர் ஓரளவு வகை செய்திருக்கிறார்கள். மேலும், வரிபோடாமல் சட்டசபை மெம்பர்களைத் தப்பித்துக் கொடுத்திருக்கிறார். வரி போடாமலிருக்கும் போதே சர்க்காரைக் குற்றம் சொல்லும் நண்பர்கள், வரி போட்டிருந்தால் கூக்குரல் போடுவதற்குக் கேட்கவே வேண்டாம். நிறைய கூச்சல் போட்டிருப்பார்கள். நல்ல வேளையாக நமது நிதியமைச்சரவர்கள் கூக்குரலுக்கு இடமில்லாமல் செய்துவிட்டார். கண்ணீர் விடுவதா? அழுவதா? என்று புரியவில்லை என்று ரொம்பப் பேர் வருத்தப்பட்டார்கள். கண்ணீரை நிதி அமைச்சரவர்கள் துடைத்திருக்கிறார்கள். கண்ணீரை நிதி மந்திரி அவர்கள் துடைத்து விட்டதனால்தான் மற்றவர்கள் வேறு விதமாக பேசுகின்றார்கள். ஆகையால், அந்த விஷயத்தில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் கூட்டாகவுள்ள மற்ற அமைச்சர்களெல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து வரி இல்லாமல் தப்பித்துக் கொடுத்திருக்கின்றார்கள். ரொம்ப சுலபமான முறையில், யாரையும் நோகச் செய்யாமல், யாருக்கும் எந்தவிதமான வருத்தமும் கொடுக்காமல், இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார் நமது நிதி அமைச்சரவர்கள். அத்துடன்கூட சினிமாத் தொழிலில் ஈடு பட்டிருப்பவர்களையும், சினிமாவில் சம்பந்தப் பட்டவர்களையும் வரி இல்லாத வகையில் இந்த ஆண்டு விட்டுவிட்டதினால் அவர்களும் நாட்டுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லி உழைப்பைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு சுலபமான முறையில் இந்த பட்ஜெட்டை மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் உபயோகிக்க எல்லோரும் பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்வதற்கு முன் ஒரு வார்த்தை. நாளைக்குப் பேசவேண்டுமென்று நான் நினைத்திருந்தேன். ஆனால், திடீரென்று இன்றைக்கே நான் பேசவேண்டுமென்று சொல்லப் பட்டது. நான் இப்பொழுது பேச இருக்கிறேன் என்பது எனக்கே தெரியாது. என்னுடைய பெயரைக் கூப்பிட நானும் பேச எழுந்து விட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபா நாயகருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், வருகின்ற பட்ஜெட்டில் நான் சொல்லிய விஷயங்களை கவனத்தில் வைத்து, வரி விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன்.

1-38 p.m. ***Sri T. IRUSAPPAN** : அவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த வரவு செலவுத் திட்டத்திலுள்ள சில கருத்துக்களை ஆதரித்தும், சில கருத்துக்களை எதிர்த்தும் நான் பேசக் கடமைப்பட்டுள்ளேன். நிலம் இல்லாத ஹரிஜனங்களுக்கு நிலம் வழங்குவதற்காக அரசாங்கம் சில திட்டங்களை வகுத்திருக்கிறது. ஏதோ தரிசுப் புறம்போக்கு நிலங்களை ஏழைகளுக்குப் பயிர் செய்வதற்காக விட்டிருக்கிறார்கள். பத்து இருபது வருஷமாக ஏழை குடியானவர்கள்—தாழ்த்தப் பட்டவர்கள், ஆதித்திராவிடர்கள்—பயிர் செய்துவந்து, அதற்கான ரசீதும் வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, வேறு குடியானவர் அந்த நிலத்திலே வந்து, இந்த நிலம் தனக்கு வேண்டுமென்று கர்ணத்திடம் அணுகி, ஏதோ சில ரகசிய முறையில் அவர்களுக்கு மாற்றிவிட ஏற்பாடு செய்துகொண்டு விடுகிறார்கள். அப்பொழுது அந்த ஏழைக் குடியானவன், தாழ்த்தப்பட்ட ஆதித்திராவிடன், ஹரிஜனன் பாதிக்கப்படுகிறான். பத்து இருபது வருஷமாக அந்த நிலத்தில் உழைத்து வந்தவனுக்கு அந்த நிலம் கிடைக்க வேண்டுமென்று சில மனுக்களை





அனுப்பியும் கவனிக்கப்படவில்லை. எந்த அதிகாரிக்கு மனுச் செய்தாலும் கணக்குப்பிள்ளை முடிவே உறுதியாகிறது. அப்படியில்லாமல், சர்க்கார் ஏழைகளுக்கு அந்த நிலத்தை வழங்கும்படி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு ஏழை குடியானவர்களுக்கு வரி போடவில்லையே என்று சிலர் சொல்கிறார்கள். வரி இல்லாமல் இருக்கலாம் என்று சிலர் சொல்லி வந்தார்கள். ஏழை குடியானவர்கள் சரியான மழை இல்லாத காரணத்தால் வரி கட்டுவதற்கு இல்லாமல் தயங்குகிறார்கள். சிலர் அந்த நிலங்களை விட்டுவிட்டே ஓடியிருக்கிறார்கள். ஏழை குடியானவர்கள் வரி போடுவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களுடைய விளைபொருள்களுக்கு ஒரு நியாய விலையை நிர்ணயித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த ஆண்டில் நெல் விலை அதிகமாக இருக்கிறது என்று எண்ணி அடுத்த ஆண்டுக்குக் கடன் வாங்கி நெல் விதைக்கிறார்கள். மழையின்மையினால் மகசூல் குறைந்து விடுகிறது. விலையும் குறைந்து விடுகிறது. பணக்காரர்களிடமிருந்து கடன் வாங்கிவிட்டு அந்தக் கடனைக் கொடுக்க முடியாமல் நிலத்தை அவர்களிடம் கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே விவசாயிகளுடைய நன்மைக்காக கரும்பு, நெல், மஞ்சள் போன்ற விவசாயப் பொருள்களுக்கு நிரந்தரமான விலையை உடனடியாக நிர்ணயித்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஏழை மக்களுக்குத் தரிசு நிலங்களைக் கொடுக்கும்போது மழை ஜலமாவது பாய வசதி செய்து கொடுத்து எருவும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மழை ஜலம் ஏரிகளில் போய் தேங்க வசதி செய்ய வேண்டும். தரிசு நிலங்களுக்கு ஏரிகளில் இருந்து தண்ணீர் சென்று பாயாவிட்டாலும் ஏரிகளில் தண்ணீர் தேங்கி நின்றால் கிணறுகளின் ஜலமட்டம் உயருவதற்கு வசதியாக இருக்கும். அதனால் விவசாயிகளுக்கு ஒரு பாகத்தை விட்டு, மீதியை ஏரிகளில் தேக்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதித்திராவிட மக்களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் பிளாக் திட்டத்தின் கீழ் சில சாதனங்கள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக கிணறுகளை வெட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அக் கிணறுகள் ஹரிஜனங்கள், ஜாதி இந்துக்கள் ஆகிய இரண்டு பேருக்கும் பொதுவான இடத்தில் வெட்டப்பட்டிருக்கின்றன. நடை முறையில் ஹரிஜனங்கள் அந்தக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கச் செல்லும்போது ஆங்காங்கே சில அடிதடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை கவனித்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடும் கூட சில கிராமங்களில் ஹோட்டல் கடைகள் இருக்கின்றன. அங்கே ஹரிஜனங்களுக்கு என்று அலுமினிய குவளை, உடைந்த கிளாஸ்கள் முதலியன வைத்துக் கொண்டிருககிறார்கள். தீண்டாமை ஒழிப்பை அடிப்படையாக வைத்தே மகாத்மா காந்தி அவர்கள் நாட்டுக்கு விடுதலை வாங்கிக்கொடுத்தார்கள். அப்பேற்பட்ட நாட்டில் இன்னும் ஜாதிகள் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. ஆதலால் எப்படி சர்க்கார் சாராய கேஸ்களை போலீஸ்காரர்களைக் கொண்டு சோதனை போட்டு பிடிக்கிறார்களோ, அப்படி ஹரிஜனங்களை அவமதிக்கின்ற ஹோட்டல்காரர்களையும் பிடித்து அவர்களுடைய லைசென்சை ரத்து செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு குறைந்த தண்டனையாவது விதிக்க வேண்டும்.

அதோடு ஏழை ஹரிஜனங்களுக்கு 285 ரூபாய் மானியம் கொடுப்பதாகவும் தகவல் இருக்கிறது. ஆனால் எங்களுக்கு எல்லாம் கொடுக்கவில்லையே என்று பலர் புகார் சொல்கிறார்கள். அதை உடனடியாக எல்லா இடங்களுக்கும் சர்க்கார் கொடுக்குமா, கொடுக்காதா என்கிற குறிப்பும் இல்லை. உடனடியாக இந்த 285 ரூபாய் மானியமும், கிணறு வெட்ட கடனும் கொடுத்து உதவி செய்ய வேண்டும். அதோடு பெரிய மிராசுதார்கள் தங்களுக்கு வேறுவிதமான புஞ்சை இருக்கவும், நூற்றுக் கணக்கான

ஏக்கர் தரிசு நிலங்களை மாடு மேய்ப்பதற்காக என்று சொல்லிக் கொண்டு வீணாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நஞ்சை நிலங்களை வைத்துக் கொள்ளட்டும். பாக்கி இருக்கக்கூடிய தரிசு நிலங்களையாகிலும் ஏழைகளுக்கு உடனடியாகப் பிரித்துக்கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

1-47 p.m. * **SRI K. S. ARDHANARISWARA GOUNDAR**: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்தச் சபையின் முன் நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய நிதிப் பிரேரணையை நான் மனப் பூர்வமாக ஆதரிக்கிறேன். எதிர்கட்சியில் இருக்கக்கூடிய உப தலைவர் எவ்வாறு அதைக் குறை கூறினார் என்றால் ஒருவன் தன் மனைவியிடம் காணப்படும் குறைகளை எடுத்துச் சொல்லி இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவளுக்குச் சொல்லத் தெரியாமல் வேறு ஒருவனுடைய மனைவியைச் சுட்டிக் காட்டுவது போல அவர்கள் கேரள ராஜ்ஜியத்தை பார் என்று சொன்னார்கள். நமது சர்க்கார் இப்படி நடக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டாத அவருடைய பேச்சைப் பார்க்கும் போது அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு எதுவும் இல்லையோ என்று தோன்றுகிறது.

குறிப்பாக நிதி அமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டிலே பத்தாவது படிவம் வரையில் ஏழை மாணவர்களுக்குச் சம்பள சலுகை அளிப் பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் வரி புதிதாகப் போடுவதற்குத் தயங்கிக் கொண்டு, ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு அந்தச் சலுகையை அளிக்காமல் விட்டிருக் கிறார்கள். இருந்தாலும் கூட அவர்கள் மத்திய சர்க்காரில் இருந்து அதிக தொகை பெற்றுவிடலாம் என்ற காரணத்தால் நமது மாகாணத்திற்கு அதிக வரியைப் போடவில்லை என்று நான் கருதுகிறேன். குறிப்பாக மேட்டூரைப் பொறுத்தவரையிலும் அலுமினிய பாக்டரியை ஆரம்பிக்கப் போவதாக இந்த பட்ஜெட்டில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும் போது நான் என் சார்பிலும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சென்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட புத்தகத் தில் அங்கு பேப்பர் மில் ஆரம்பிக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டிருந் தார்கள். ஆனால் இப்போது பேப்பர் மில் ஆரம்பிக்கலாம் என்று யோசனை செய்வதாகக் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போது கொஞ்சம் சந்தேகம் உண்டாகிறது. அந்த இடத்தில் நிச்சயமாக ஒரு பேப்பர் பாக்டரியை ஆரம்பிப்பதற்கு வேண்டிய மூங்கில் காடுகள் இருக்கின்றன. ஆகவே நான் சேலம் ஜில்லா வாசி என்கிற முறையில் அங்கு நிச்சயமாக ஒரு பேப்பர் மில்லை ஆரம்பிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சேலத்தை பொறுத்தவரையில் அது மிகவும் பிற்போக்கான பிரதேசம் என்பதை நான் பல முறையும் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். இந்த ஆண்டில் 36 உயர்தரப் பாடசாலையை அங்கு திறக்கவேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆனால் பத்து தினங்களுக்கு முன்பு அங்கு புதிதாகப் பள்ளிக்கூடம் திறப்பது இல்லை என்று உத்திரவு போட்டுவிட்டார்கள். ஆனால் நிதி அமைச்சரிடம் நேரில் எடுத்துச் சொல்லிய பின் நான்கு புதுப் பள்ளிக்கூடம் திறப்பதற்கு உத்தரவு இட்டிருப்பதாகத் தெரிகிறது. பாக்கி இருக்கக் கூடிய பிரதேசங்களில் உள்ள மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அங்கும் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் இருக்கிற இடங்களில் ஆரம்பப் பாடசாலையைத் திறப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

1-50 p.m. அடுத்தபடியாக, இந்த ஆண்டிலே, கோயமுத்தூர் ஜில்லாவில் பொள்ளாச்சியில் மேலும் ஒரு "Arts" கல்லூரி திறக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். சேலத்தைப் பொறுத்தவரையில் ஒரு கல்லூரிதான் இருக்கிறது. இதைப் பற்றி பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.





நீலகிரி ஜில்லாவில் எவ்வாறு முழுச் சலுகைகள் கொடுத்து சர்க்கார் ஒரு கல்லூரி ஏற்படுத்தியிருக்கிறார்களோ, அம்மாதிரி சேலத்திலும் ஒரு கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டில்கூட அங்கு கல்லூரி திறப்பதற்கு ஏற்பாடு செய்யவில்லை என்பதை அறிந்து நான் மிகவும் வருந்துகிறேன். எப்படியாவது அங்கும் ஒரு கல்லூரி ஏற்படுத்துவதற்கும், மற்றும் ஒரு தொழில் கல்லூரி ஏற்படுத்து வதற்கும் வழிவகை செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

காலேஜ்களில் படிப்பதற்கு இடம் கிடைப்பதில்லை, படித்தவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை என்று பார்க்கிறோம். நமது நிதி அமைச்சர் அவர் கள் எவ்வாறு ஒவ்வொரு ஐயிடத்திற்கும் வரவு சிலவு திட்டத்திலே புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்களோ, அதேபோல் படித்தவர்கள் எவ்வளவு பேர், அவர்களில் எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள், வேலையில்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர், இது போன்ற புள்ளி விவரங்களைக் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். உணவு தான்யங்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பது போல், படித்தவர் களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு, கஷ்டப்படக்கூடிய நிலவரம் ஏற்படுமென்று நன்றாகத் தெரிகிறது. அரசாங்கம் அவர்களால் இயன்றவரை வேலை கொடுத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால் போதிய அளவு பிரசாரம் செய்வதில்லை. நமது விளம்பர இலாகா இருக்கிறது. அவர்கள் வெளியிடும் பிலிம்களைப் பார்த்தால், வேறு மாகா ணங்களில் நடக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களைதான் அதிகமாக விளம்பரப்படுத்துகிறார்கள். நமது மாகாணத்தில் நடக்கும் அபிவிருத் தித்திட்டங்களையும் சர்க்கார் செய்தி இலாக்காவிற்கு அனுப்பி அதை விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று அறிகிறேன். உடனடியாக இதைச் செய்தார்களேயானால், எதிர்கட்சியி லுள்ளவர்கள் "வட நாட்டைப் பாருங்கள், நம் நாட்டில் ஒன்றும் அபிவிருத்தித் திட்டங்கள் இல்லை" என்று சொல்லமாட்டார்கள். பிரசாரம் நல்ல முறையில் இல்லாததால் அவர்கள் குறை சொல்லுவ தற்கான நிலவரம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் விரைவிலே நமது நாட்டிலே நடக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை படம் எடுத்துப் பிரசாரம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

விளைபொருள்களின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. நிரந்தர மாக ஒரு விலை நிர்ணயிக்கப்படவில்லை என்ற காரணத்தினால்தான் விலை ஏறிக்கொண்டேயிருக்கிறது. ஆகவே விலையை நிர்ணயம் செய்தால் நன்றாக இருக்கும். விளைபொருள்கள் சம்பந்தப்பட்டவரை வருஷா வருஷம் விலை வீழ்ச்சி ஏற்படுவதால், விவசாயம் செய்வதில் விவசாயிகளுக்கு ஊக்கம் மிகவும் குறைவாக இருக்கிறது. குறிப்பாக சென்ற ஆண்டிலே, மஞ்சளை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட சட்டை ஒன்று ரூ. 250 அல்லது 300-க்கு மேல் விற்கப்பட்டது. இப்பொழுது சட்டை ஒன்று ரூ. 40-க்கு வந்திருக்கிறது. இந்தமாதிரி வீழ்ச்சி ஏற்படுகிறது. ரேஷன் இருந்த காலத்தில் உணவு தான்யங்களை பயிரிட்டு வந்தார்கள். ஆகையால் உணவு தான்யங்களின் விலை இறங்க ஆரம்பித்தது. இப்பொழுது அதிகமாக "Cash Crops"-தான் பயிரிடுகிறார்கள். உணவு தான்யங்களுக்கு ஒரு "Fixed rate" அல்லது "Guaranteed price" நிர்ணயித்தால் நன்றாக இருக்கும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டை சர்க்கார் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரை, அம்மோனியம் சல்பேட், அதாவது சிந்திரி உப்பு, கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. வேறு மாகாணங்களிலேயே அந்த உரம் தீர்ந்து விடுவதால் இங்கு கிடைப்பது கஷ்டமாய் இருக்கிறது. அதிகமாக அம்மோனியம் சல்பேட் உரத்தை வரவழைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாஸ்பேட்டில் நிறைய தான்ய சத்து இருக் கிறது. எவ்வளவுக்கெவ்வளவு பாஸ்பேட் உரம் அதிகமாக கிடைக்கிறதோ

[Sri K. S. Ardhanariswara Goundar] [1st July 1957

அவ்வளவுக்கவ்வளவு தான்ய உற்பத்தி அதிகரிக்கும் என்பது விவசாயிகளுடைய அபிப்பிராயம். நமது அமைச்சர் உரையில் "பாஸ்பேட்"டைப் பற்றி அதிகம் சொல்லவில்லை. நமது நாட்டில் "பாஸ்பேட்" இல்லை என்றாலும், வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக் கொடுத்தால், அந்த அளவுக்கு உணவு உற்பத்தி அதிகமாகயிருக்கும் என்று நினைக்கிறேன்.

லோகல் டெவலப்மெண்ட் வேலைகள் மூலம் அநேக ரஸ்தாக்களைப் போட்டு முடித்திருக்கிறோம். ஆனால் அந்த ரஸ்தாக்களைப் பராமரிப்பது யாருடைய கடமை என்பது சரிவர முடிவாகாமல் இருக்கிறது. பராமரிப்பு இல்லாமல் அடுத்த மழையிலேயே அந்த ரஸ்தாக்கள் சீர்குலைந்து வருகின்றன. மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமாக கிராண்டுகளை வாங்கி இந்த ரஸ்தாக்களை நல்ல முறையில் பராமரிப்பு செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இனியாவது அந்த ரஸ்தாக்களைப் பராமரிப்பதற்கு வேண்டிய தொகையை ஒதுக்கி, ஜில்லா போர்டிடம் உடனடியாக ஒப்படைத்து, அவைகளை நல்ல முறையிலே நிர்வகிப்பதற்கு சர்க்கார் வேண்டிய ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது. கோயமுத்தூர் ஜில்லாவிலே பெருந்துறைக்குப் பக்கத்தில் ஹரிஜனங்களுக்காக காலனி கட்டப்பட்டு, கீழே விழுந்து நாசமாக்கப்பட்டிருப்பதை நான் பார்த்தேன். சேலத்திலேயும் ஒரு காலனி கட்டப்பட்டு விழுந்திருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் பொறுப்பு இல்லை. அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் அவைகளை நல்ல முறையில் அமைத்திருந்தால் நன்றாக இருக்கும். இந்தத் திட்டத்திற்காக இன்னும் கொஞ்சம் பணம் அதிகமாக ஒதுக்கியிருந்தால் நல்ல முறையில் வீடுகள் கட்ட முடியும். காலனிகள் கீழே விழாமல் இருப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மேட்டூர் நீர்த்தேக்கத்திலே நல்ல வண்டல் தேங்கிக் கிடக்கிறது. தண்ணீர் கீழே சென்ற பிறகு, அங்குள்ள விவசாயிகள் நிலத்தைப் பயிர் செய்து நல்ல மகசூலை அடைந்து கொண்டிருந்தார்கள். வண்டல் அதிகமாகத் தேங்கி தண்ணீர் நிற்பதற்கு தேக்கம் குறைவாக இருக்கும் என்ற காரணத்தினாலே, அங்குள்ள விவசாயிகளை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய வண்டலை எடுத்துச் செல்வதற்கு விவசாயிகளுக்கு அனுமதி கொடுத்தால் உற்பத்தி அதிகரிக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சுற்று வட்டாரத்திலுள்ள மற்ற நிலங்களையும் நல்ல முறையிலே சாகுபடி செய்வதற்கு நல்ல எரு இருக்கிறது. அந்த எருவை எடுத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

சென்ற இரண்டு ஆண்டுகளிலே மேட்டூர் கால்வாய்ப் பிரதேசத்தில் எல்லோரும் நஞ்சை சாகுபடி செய்யலாம் என்று அனுமதி கொடுத்திருந்தார்கள். இந்த ஆண்டிலே அணை நிரம்பி இருக்கிறது. இருந்தும்கூட, வேறு மாற்று தானியங்களைப் பயிரிடலாம் என்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலும் நஞ்சை சாகுபடி செய்வதற்கு மராமத்து இலாக்கா அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

2 p.m. **DEPUTY SPEAKER**: நேரம் ஆகிவிட்டது.

It is now 2 o'clock. The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.



1st July 1957]

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

99. *Notification issued with G.O. No. 4428, Revenue, dated 6th December 1956, amending certain rules and forms to the Madras General Sales Tax Rules, 1939. [Laid on the table of the House under section* 19 (6) *of the Madras General Sales Tax Act,* 1939.]

100. *Notifications issued with G.O. Ms. No.* 1611, *Food and Agriculture, dated 22nd May 1957, delegating powers under section* 18 *of the Madras Requisitioning and Acquisition of Immovable Property Act,* 1956, *to Collectors, authorizing Collectors to function as competent authority and issuing the Madras Requisitioning and Acquisition of Immovable Property Rules,* 1957. [*Laid on the table of the House under section* 23 (3) *of the Madras Requisitioning and Acquisition of Immovable Property Act,* 1956 (*Madras Act XLII of* 1956).]

101. *Notification issued with G.O. Ms. No.* 59, *Home, dated 7th January* 1957, *omitting Rules* 22 *and* 23 *to the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Rules,* 1953. [*Laid on the table of the House under section* 16 (5) *of the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act,* 1952 (*Act XVI of* 1952).]

102. *Notification issued with G.O. Ms. No* 1589, *P.W. (General), dated 11th April* 1957, *appointing the Superintendents, Agricultural Research Station, Bhavanisagar, as a member of the Bhavanisagar Township Committee, vice the Health Officer, Bhavanisagar.* [*Laid on the table of the House under section* 6 (2) *of the Bhavanisagar Township Committee Act,* 1954. (*Madras Act XXV of* 1954).]

103. *Notification issued with G.O. Ms. Nos.* 828 *and* 830, *Health, dated 11th March* 1957, *extending the time for acquiring Sanitary Inspector's qualification to unqualified Health Assistants and revision of pay of Ayahs and Cooks employed in Infectious Diseases Hospitals.*

104. *Seventh Annual Report and Statement of the Accounts of the Madras Industrial Investment Corporation, Limited, Madras, for the year ended 30th June* 1956. [*Laid on the table of the House under section* 639 (2) *of the Companies Act.*]

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 2nd July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Government servants in Kanyakumari district.*

* 43 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have framed any rules for the integration of services of the Government servants in Kanyakumari district; and

(*b*) if not, the reasons for the same?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) The views of the Government of India have been received recently and the question is under consideration.

SRI T. T. DANIEL: May I know why there is so much delay in framing the rules for the integration of services of these officers?

THE HON. SRI C. SUBRAMANIAM: The first reason is that we had to consult the Government of India and they have just given their opinion about the draft rules. Secondly, the integration depends upon the fact whether the Kanyakumari area should be kept as a separate district or should be merged with any other district, the decision in regard to which took some time. Hon. Members might have noticed that in the Budget speech also I have made specific mention that the Kanyakumari district has been formed into a separate district. Therefore now the integration of services is to be done only to a very limited extent, because the Gazetted Officers who are of the provincial cadre alone have to be integrated and in respect of the other services who belong entirely to that district, there is no question of integration, as each district is a separate unit.

SRI T. T. DANIEL: May I know whether the necessary Committee has been constituted by the Government under the provisions of the States Reorganization Act?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir. The Committee has been constituted. They have since considered the recommendations made by the Government of India also. A final decision will be taken soon.

SRI K. SATTANATHA KARAYALAR: இனியும் இது எத்தனை காலம் எடுக்குமென்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரொம்ப காலம் எடுக்காது. கூடிய சீக்கிரத்தில், இரண்டு மூன்று வாரங்களில் முடிந்துவிடுமென்று எதிர் பார்க்கிறேன்.

SRI T. T. DANIEL : May I know the names of the Members of the Committee?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it is purely an official Committee. I think, the Chief Secretary, the Secretary to the Finance Department and a Member of the Board of Revenue, Sri S. Venkateswaran are the Members.

SRI A. NESAMONY : செக்ரட்டேரியேட்டிற்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்- பெர்ஸனலின் ஸர்வீஸ் இன்னும் இன்டக்கிரேட் செய்யப்படாததற்குக் காரணமென்ன? டிஸ்டிரிக்ட்டாக கான்ஸ்டிடியூட் செய்வதினால் இந்தத் தாமதம் என்று சொன்னார்கள். ஆனால் செக்ரட்டேரியேட் பெர்ஸனலின் ஸர்வீஸை இன்டக்ரேட் செய்யாததற்குக் காரணமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒரு காரணம் டிஸ்ட்ரிக்டை பொறுத்தவரையில் அது தனியாக இருப்பதா இல்லையா என்பதைப்பற்றி இருந்தது. இரண்டாவது, கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவிற்கு ரூல்ஸ் அனுப்பி அவர்களின் சம்மதம் பெற்று அது அமல் நடத்த வேண்டியதால் அதை கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவிற்கு அனுப்பி அவர்களின் சம்மதமும் வந்துவிட்டது. அதன் அடிப்படையில் செய்யப்படுகிறது.

SRI T. T. DANIEL : May I know whether the Government are aware that all vacancies as on 19th October 1956 due to transfer of personnel of the Madras State were actually filled in by promotion or direct recruitment even before the 1st November 1956 and that this has been done contrary to the spirit of the States Reorganization Act?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the hon. Member need not be afraid of anything. The rights and privileges of the persons who have come over to us from the Kanyakumari district will be properly protected and safeguarded.

SRI S. B. ADITYAN : நான்குநேரி தாலூகாவை கன்யாகுமரியுடன் சேர்க்கும்போது அந்த தாலூகாவிலுள்ள கிராம, பிர்க்கா அதிகாரிகளுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாது என்று சர்க்கார் உறுதி கூறுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதனால் யாருக்கும் எந்த விதமான பாதகமும் ஏற்படாது.

SRI T. T. DANIEL : Are the Government aware that two posts of Additional District Judges were abolished and these Judges have been transferred as Sub-Judges to other Courts? If this integration had been completed before, such a thing would not have taken place, is it not?

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member is making references in respect of any particular individuals, he may make it to the Hon. Minister concerned and the matter will be looked into.



*Prohibition Act.*

* 44 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have reviewed the working of the Prohibition Act during 1957?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. The Government have so far reviewed the working of the Madras Prohibition Act, 1937, during the months of January, February and March 1957.

SRI N. K. PALANISAMI : ஸார், பத்து வருடங்களுக்கு மேலாக இந்த சட்டம் அமுலில் இருந்தபோதிலும், மேலும் மேலும் இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமுலாக்குவது இல்லை. எராளமாக கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டம் தோல்வியுற்றது என்றுதான் அர்த்தம். ஆகவே, இதைப்பற்றி எதாவது புனர் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பத்து வருடங்கள் அல்ல. இருபது வருடங்களாக இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறது. நூற்றாண்டுகளாக அமுலில் இருக்கும் சட்டங்களில்கூட குற்றங்கள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : Sir, if the information is available with the Hon. Minister, may I know the total amount of financial loss to the State on account of the introduction of prohibition?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the hon. Member must be aware that it is not possible to assess the total loss, because it was contingent on the income derived from the auction of toddy and arrack shops and they were auctioned year after year when prohibition was not in force.

SRI K. VINAYAKAM : On the other hand, is not the prohibition policy a grand success in the State, especially in the City of Madras where illicit distillation is a matter of past history and where even a drop of illicit liquor is not available?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is no denying the fact that prohibition has been a success, although it cannot be claimed to be a complete success. And I have been told that even where illicit arrack is available to those who want to have it illicitly, the cost has gone up very much.

SRI T. M. NALLASWAMI : இப்பொழுது மதுவிலக்கு சட்டத்தை வெகு 9–10 a.m.
தீவிரமாக அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் காரியங்கள் செய்து வருகின்றது. அதே சமயத்தில் விசேஷமாக சிலருக்குக் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய பெர்மிட்களை ரத்து செய்து இன்னும் வேகத்தை அதிகப்படுத்துவது பற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மதுவிலக்கு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் சில பெரிய மனிதர்களுக்கு விசேஷ பெர்மிட்கள் கொடுப்பதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை.

SRI A. VEDARATNAM PILLAI : மதுவிலக்கு குற்றத்தை கண்டு பிடிக்கின்ற அதிகாரிகளிலே சிலர் குடிப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கும் காரணத்தினாலே மதுவிலக்கு திட்டம் வெற்றி பெறுவதற்கு இடையூராக

இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அவர்களை அந்த இலாகாவிலிருந்து வேறு இலாகாவுக்கு மாற்றவோ அல்லது நீக்கவோ அரசாங்கம் முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தகவலும் அரசாங்கத்திற்கு கிடைத்துத்தான் இருக்கிறது. ஆகவே, குடிப்பழக்கத்தில் இருப்பவர்கள் குடிப்பழக்கத்தை விடுவதற்கோ அல்லது அந்த இலாகாவை விடுவதற்கோ அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

SRI M. JAGANNATHAN : In view of the fact that the working of the Madras Prohibition Act is proving a miserable failure, will the Government consider the desirability of modifying the Act in such a way that only drunkenness is punished and not mere drinking?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not admit that the working of the Madras Prohibition Act is a miserable failure. But still the Government have been considering certain amendments to the Prohibition Act in order to make its enforcement more effective.

SRI P. G. MANICKAM : மதுவிலக்கு குற்றங்களை தீவிரமாக கண்டுபிடிப்பதற்காக ஜில்லாவிலுள்ள அதிகாரிகளுக்கு வசதியாக இருப்பதற்காக ஜீப் வசதிகள் அதிகமாக செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இருக்கிற வசதிகளே அவர்களுக்குப் போதும் என்று அரசாங்கம் கருதுகிறது. அந்த வசதிகளை நன்கு பயன்படுத்திக்கொண்டு மதுவிலக்கு சட்டத்தை தீவிரமாக அமுல் செய்யவேண்டுமென்றுதான் அரசாங்கம் வற்புறுத்துகின்றது.

SRI T. T. DANIEL : Are the Government aware that a number of Prohibition cases end in acquittal because they are not conducted properly by the prosecuting inspectors and there is no co-operation from the public?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know whether there is any inefficiency on the part of the officers that conduct the prosecution. But I cannot admit that there is definitely no co-operation on the part of the public. Still, we do ask the public to offer better co-operation in the matter of detection of these offences.

SRI S. B. ADITYAN : இந்த ஆண்டிலே முதல் மூன்று மாதங்களில் மதுவிலக்கு சட்டம் எப்படி அமுலாகியிருக்கிறது என்பதை விசாரணை செய்ததாக மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். போன வருஷத்துடன் ஒத்துப்பார்த்தால் இந்த ஆண்டு மூன்று மாதங்களில் மதுவிலக்கு குற்றங்கள் குறைவாக இருக்கின்றனவா, அல்லது அதிகரித்திருக்கின்றதா என்பதை கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 1956-ஆவது ஆண்டில் இருந்ததைவிட 1957 ஜனவரியில் மதுவிலக்கு குற்றங்கள் குறைந்துதான் இருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஜனவரி | .. | 11, 497 |
| பிப்ரவரி | .. | 7,797 |
| மார்ச் | .. | 9,213 |



SRI V. K. KOTHANDARAMAN : மதுவிலக்கு சட்டம் ஆரம்பித்த முதல் ஆண்டுக்கு பிறகு இப்பொழுது மதுவிலக்கு குற்றங்கள் என்ற பெயரிலே கிராம மக்கள் அதிகப்படியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது கனம் அங்கத்தினருடைய சொந்த அபிப்பிராயமாக இருக்கலாம். ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

SRI G. GOMATHISANKARA DEEKSHITHAR : மதுவிலக்கு சட்டம் வெற்றிபெறுமல் இருப்பதற்கு மாறுபட்ட அபிப்பிராயம் உள்ள அரசியல் கட்சியினர் செய்யும் பிரசாரமும் ஒரு காரணம்தான். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் வேறு ஒரு இடத்திலே சொன்னேன். 1952-ம் வருஷத்திய பொது தேர்தலின்போது கள்ளுக்கடை சாராயக்கடைகளை மறுபடியும் கொண்டு வருகிறோம் என்று எதிர்க்கட்சியினர் சொன்னார்கள். அதைக் கேட்டு சில வோட்டர்களும் ஏமாந்தார்கள். ஆனால் 1957-ம் வருஷத்திய பொதுத் தேர்தலில் எனக்குத் தெரிந்த வரையில் எந்த எதிர்க் கட்சியினரும் கள்ளுக்கடை சாராயக்கடைகளை திரும்பவும் கொண்டு வருகிறோம் என்று சொல்லவில்லை. மேலும், தி.மு.க. தலைவர் அவர்கள் இந்த மதுவிலக்கை சரிவர அமுல் நடத்துவதற்கு மனப்பூர்வமாக பரிபூரண ஒத்துழைப்பைக் கொடுப்பதாக சொல்லியிருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்திருக்கலாம்.

SRI K. RAMACHANDRAN : முன்பு இருந்ததைவிட மதுவிலக்கு சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவதற்காக தீவிர நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக சமீபத்தில் ஒரு அறிக்கை வெளிவந்தது. சர்க்கார் என்ன விசேஷமான நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குற்றங்களை தீவிரமாக கண்டுபிடித்து கோர்ட்டுகளுக்குக் கொண்டுபோய் சார்ஜ் செய்து தண்டனை கொடுத்து மறுபடியும் குற்றம் செய்வதற்கு விடாமல் அவர்களுக்கு ஒரு பயம் இருக்கும்படியான நிலை ஏற்படுத்துவதுதான் தீவிர நடவடிக்கை.

SRI N. R. THIYAGARAJAN : கள்ளச்சாராயம் காய்ச்சுவதில் ஏற்பட்ட போட்டிதான் தூத்துக்குடி சம்பவங்களுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இது வாஸ்தவமா ? இதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயம் இப்பொழுது விசாரணையில் இருக்கிறது. ஆகவே அதுபற்றி நான் ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை.

SRI K. VINAYAKAM : While it is the policy of the Government to work the Prohibition Act successfully and to award only light punishments to the Prohibition offenders, there is a tendency on the part of the offenders to repeat the offences. In view of this, will the Government come forward to amend the Act so as to provide for deterrent punishments so that no one may repeat these offences?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that the Government have under consideration certain amendments to the Prohibition Act and these will be brought before this House very soon.

**SRI N. K. PALANISAMI :** சமீபத்தில் சர்க்கார் மதுவிலக்கு சட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில தீவிர நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. மொபைல் வான் வைத்து எங்கே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பதை கண்டுபிடிக்கிறார்கள். இந்த ஏற்பாடு செய்திருந்தபோதிலும். "எக்சிகியூடிவ்" ஆபீஸர்கள் தனியாக இருக்கிறார்கள். போலீஸார் தனியாக இருக்கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருக்கும் 3, 4 ஏஜெண்டுகள் சேர்ந்துகொண்டு 1,000 ரூபாய் வரை வசூல் செய்துகொண்டு கள்ளச்சாராயம் காய்ச்சினாலும் அதை கண்டுபிடிப்பதில்லை. யார் முக்கிய காரணஸ்தர்களாக இருக்கிறார்களோ அவர்களை தெரிந்திருந்தும் கண்டிபிடிப்பதில்லை. குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடிக்கிறார்களே தவிர அதன் "ஸோர்ஸ்" யார் என்பதைக் கண்டுபிடிப்பதில்லை. இப்பேர்பட்ட குறைபாட்டை நீக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** எல்லா வகைகளிலும் இப்பொழுது சர்க்காரும் போலீஸ் இலாகாவும் கவனம் செலுத்தித்தான் வருகின்றன.

**SRI M. JAGANNATHAN :** Is it a fact that even some of the Congress bigwigs have recommended the scrapping of the Madras Prohibition Act? If so, will the Government consider the recommendation?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** I do not have any information about it. If the hon. Member has any such information or if he has certain people in mind who are in favour of scrapping of prohibition, I may tell him that Government will not be able to consider their suggestion.

**SRI M. C. MUTHUKUMARASWAMI:** மதுவிலக்கு குற்றங்கள் எல்லா ஜில்லாக்களையும் விட தஞ்சை ஜில்லாவில் அதிகமாக இருப்பதாக நம்பப்படுகிறது. ஏனென்றால் வெளி ஜில்லாவிலிருந்து அந்த ஜில்லாவில் குடியேறியவர்கள் அதிகமாக லைசென்ஸ் எடுத்துக்கொண்டு பதனி இறக்குகின்ற காரணத்தினால்தான் குற்றங்கள் அங்கு அதிகமாக இருப்பதாக நம்பப்படுகிறது. வெளி ஜில்லாவிலிருந்து வந்து அங்கு குடியேறியிருப்பவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்காமல் இருப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** தஞ்சை ஜில்லாவில் மற்ற ஜில்லாக்களைவிட மதுவிலக்கு குற்றங்கள் அதிகமாக இருப்பது எனக்குத் தெரியாது. அந்த ஜில்லா பிரதிநிதி கனம் அங்கத்தினர் அவ்விதம் சொல்லுவதால் அப்படி இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். அதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். தஞ்சை ஜில்லாவின் நிலைமை எத்தனையோ வகையிலே மாறுபட்டதாக இருக்கலாம்.

**SRI S. M. ANNAMALAI :** சிந்திரி ரசாயன உரம் சாராயம் காய்ச்சுவதற்கு உபயோகப்படுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** நானும் அதைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்.

**SRI A. VEDARATNAM PILLAI :** முன்பு மருந்துக் கடையிலே எஸென்ஸ்கள் ஏராளமாக விற்றது போல இப்பொழுது டிங்சரும் கொக்கேய்னும் அதிகமாக விற்கப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இந்த அதிக விற்பனையை தடுக்க அரசாங்கம் முற்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இதுவும் அரசாங்கத்திற்குத் தெரியாமல் இல்லை. சட்டபூர்வமாக இவைகளையெல்லாம் தடுப்பதற்கோ, தவிர்ப்பதற்கோ ஓரளவுதான் முடியும். மக்களும் பரிபூரணமாக



நல்ல எண்ணத்துடன் ஒத்துழைத்தால் ஒழிய, வேண்டுமென்றே விஷம் சாப்பிடுகிறவர்களை இலாகாவும், அரசாங்கமும், சட்டமும் தடுக்க முடியாது.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** What is the opinion of the Hon. the Minister with regard to the working of the Prohibition Act after the Department's merger with the Police Department? Have the offences decreased or increased?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** I cannot say whether there is any definite change in the incidence of Prohibition offences after the merging of the Prohibition Department with the Police Department.

**SRI MATHA GODWER :** மது விலக்கு சம்பந்தமாக குற்றம் செய்தவர் 9-20 a.m.
களுக்கு குறைந்த அபராதம் விதிக்கும் காரணமாக, அந்தக் குற்றம் செய்தவர்கள் அபராதத்தைச் செலுத்திவிட்டு அதே குற்றத்தைத் திரும்பவும் செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே இந்தக் குற்றம் செய்தவர்களுக்கு அபராதம் விதிப்பதை நிறுத்தி ஜெயில் தண்டனை கொடுத்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். இதற்கு வேண்டிய சட்டத்தை அரசாங்கம் இயற்றுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** ஒரு குறிப்பிட்ட நிலையை வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய சட்டத்தை செய்வது சரியல்ல என்று அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லுகிறேன். இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதிக்கொண்டிருக்கிறது என்று நான் முன்னமேயே சொன்னேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR :** குடிப்பதற்காக எத்தனை பெரிய மனிதர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இதற்கு கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போடவேண்டும்.

**SRI K. RAMACHANDRAN :** மது விலக்கு அமுலுக்கு வருவதற்கு முன்பாக இந்த மது இறக்கும் தொழிலில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்கள், இப்போது அவர்களுக்கு வேலை இல்லாத ஒரு காரணத்தால்தான் இம்மாதிரி கள்ளச் சாராயம் காய்ச்சும் வேலையில் ஈடுபட்டிக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அப்படியானால் அந்தத் தொழிலாளர்களின் நிலைமையைச் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா ? இன்னும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள் ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** அதைப்பற்றியும் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனித்துக் கொண்டுதான் இருக்கிறது. இந்தத் தொழிலாளர்களுக்கு வெல்லம் காய்ச்சுவதற்கு லைஸென்ஸுகள் தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அது சரிவர துஷ்பிரயோகம் இல்லாமல் நடைபெற்று வருகின்றதா என்று நிச்சயமாகச்சொல்வதற்கில்லை.

**SRI T. KARIYA GOUNDAR :** இந்த மாதிரி பனை மரத்து வெல்லம் காய்ச்சும் லைஸென்ஸ் கொடுக்கும் பழக்கத்தினாலே பெரும்பாலோர் அந்த வழக்கத்தை அதிகமாக சாராயம் காய்ச்ச உபயோகப்படுத்துகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் பனை மரத்திலிருந்து வெல்லம் காய்ச்சும் வழக்கத்திற்கு லைஸென்ஸ் கொடுக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** இவ்வாறு பெரும்பாலோராலும் இது துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவருகிறது என்றுதான் சொல்லப்படுகிறது. ஒரு ஜில்லாவில் மட்டும் கணக்குப் போட்டுப் பார்த்தால், லைசென்ஸ்

கொடுக்கப்பட்ட அளவுக்கு நூற்றுக்கு ஒரு பங்கு அல்லது இரண்டு பங்கு அதிக வெல்லம் உற்பத்தியாவதாக தெரிகிறது. லைசென்ஸ் கொடுக்கப்படுவதானது அவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்கவேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக. நிர்தாட்சண்யமாக இந்த லைசென்ஸ் கொடுப்பதை ரத்து செய்து விட்டாலும் அவ்வளவு பேருக்கும் வேலை இல்லாமல் போகும். அடியோடு இதை ரத்து செய்யாமல் கண்டிப்பாக இதை நடத்த அரசாங்கம் கவனம் செலுத்தும்.

**SRI P. S. CHINNADURAI:** குடிப்பவர்கள் பெரிய மனிதர்களாக இருக்க முடியுமா ? குடிப்பதற்கு லைசென்ஸ் பெற்ற பிறகும் அவர்கள் பெரியமனிதர்களாக இருப்பவர்கள் என்ற அபிப்பிராயம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** சர்க்கார் பெரிய மனிதர்களுக்கு " டெபனிஷன் " ஒன்றும் வைத்துக்கொண்டிருக்கவில்லை. பொது மக்கள் எவ்வாறு கருதுகிறார்களோ அதைத்தான் குறிப்பிட்டேன்.

**SRI V. SUBBIAH:** பதனி இறக்கக்கூடியதானது கூட்டுறவு முறையிலே எல்லா ஜில்லாக்களிலும் நடைபெறுகிறது. பனையிலும், தென்னையிலும் தனிப்பட்ட பட்டாதார்கள் கண்டிப்பாக பதனி இறக்கி துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்ற முறையிலே அரசாங்கம் இதைத் தடுக்க உத்திரவிட்டிருக்கிறதா என்று தெரியப் படுத்துமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இவை பற்றியும் கண்டிப்பாக கவனம் செலுத்தி உத்திரவிட்டிருக்கிறது.

**SRI K. R. NALLASIVAM:** இங்கு கனம் அங்கத்தினர்கள் குறிப்பிடுவதைப் பார்த்தால், மது விலக்குத் திட்டத்தை நன்றாக அமுல் செய்யும் உற்சாகத்தில், எல்லாத் தொழிலாளர்களுக்கும் லைஸென்ஸ் கொடுக்கக்கூடாது என்றுக்கூடச் சொல்வார்கள் போலத் தோன்றுகிறது. நிலைமை என்னவென்றால், இப்போது இதற்கு கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. சர்க்கார் இவர்களுக்கு இன்னும் அதிகமாக கூட்டுறவு முறையிலே சிறப்பான முறையில் பதனி இறக்க வழி செய்தால், அவர்கள் நிச்சயமாக இந்த தொழிலில் இறங்கமாட்டார்கள் என்று தெரியுமா ? இன்னும் அதிகமாக கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** நான் முன்னமேயே சொன்னேன் ; அடியோடு லைசென்ஸ் கொடுக்கும் முறையை " கான்ஸல் " செய்யும் உத்தேசம் இல்லை. துஷ்பிரயோகம் இல்லாமல் இந்தத் தொழில் நடத்தப்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தாரின் எண்ணம். அதற்குத்தான் இது கூட்டுறவு முறையில் நடக்கவேண்டுமென்று கவனம் செலுத்தி வருகிறது.

**SRI M. JAGANNATHAN:** அண்மையில் இருக்கக்கூடிய பாண்டிச்சேரி ராஜ்யத்தில் மது விலக்கு இல்லாத காரணத்தால்தான் நம் ராஜ்யத்தில் இந்த மது விலக்கு திருப்திகரமாக நடைபெறவில்லை. அதற்காக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி உடனடியாக பாண்டிச்சேரி ராஜ்யத்தில் மது விலக்கு கொண்டுவருவதற்கு சிபார்சு செய்யுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** புதுச்சேரிக்கு அருகாமையிலில்லாத பல இடங்களில்கூட இது காய்ச்சப்படுகிறது. புதுச்சேரி பக்கத்தில் இருப்பதனால்தான் என்று நாம் கருதுவதற்கில்லை. மத்திய அரசாங்கத்தாருக்கு இது விஷயமாக எழுதும் யோசனை இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

**SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that in order to please superior officers, innocent persons have been arrested and prosecuted ?**



**THE HON. SRI M. BHAKTAVATSALAM: There might have been one or two cases, stray cases here and there as it happens everywhere. But I am not at all aware that there is a general tendency to catch innocent persons in this respect.**

**SRI K. ANBAZHAGAN:** தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் அதை ஒரு தொழிலாக நினைத்து நடத்தவேண்டிய நிலையில் இருக்கின்றதால் தவறுகள் மிகுதியாகின்ற நிலையிலே, கள்ளச் சாராயம் காய்ச்சி தண்டிக்கப்பட்டு வெளி வருகின்றவர்களை வேறு துறையில் இழுத்து, வேறு தொழிலில் ஈடு படுத்த அரசாங்கம் ஏதாவது திட்டமிடுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** தண்டனை முடிந்த பிறகு மட்டுமல்ல, மதுரை ஜில்லாவைச் சேர்ந்த ஜெயிலில் கள்ளச் சாராயம் காய்ச்சி தண்டனை அடைந்தவர்களுக்கு, வைகைத் திட்டத்திலே வேலை கொடுக்கப்பட்டு அவர்கள் வேலை செய்து வருகிறார்கள். சர்க்கார் அம்மாதிரியும் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறார்கள்.

**SRI A. VEDARATNAM PILLAI:** இப்போது பதனி எங்கும் தாராளமாக விற்கப்படுகிறது. அவர்கள் அரசாங்கத்தின் அனுமதிபெற்று விற்கிறார்களா ? அப்படி எந்தெந்த ஜில்லாக்களில் அவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் ? மற்ற இடங்களில் இது விற்பதை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** நீரா அல்லது பதனியை விற்கலாம். அதற்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை. ஆனால் அதைக் கள்ளாக மாற்றப்பட்டு விற்கப்பட்டால்தான் தவறு. இதை இப்போது எல்லா ஜில்லாக்களிலும் விற்கலாம். இது விஷயமாக அப்போதைக்கப்போது உத்திரவு போட்டுக்கொண்டிருக்கிறோம்.

**SRI M. P. SUBRAMANIAM:** இப்போது இருக்கும் சட்டத்தின் கீழ் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கும் குடிக்கிறவர்களுக்கும் கொடுக்கப்படும் தண்டனை போதவில்லை என்று மந்திரி அவர்களுக்கு பல இடங்களிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றதா ? இதை மாற்றி அமைக்க அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறதா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** இரண்டு, மூன்று முறை, இப்போதே கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சொன்னேன். இச் சட்டத்தை மாற்றியமைக்க சர்க்கார் யோசித்து வருகிறது.

**SRI K. VINAYAKAM:** Talking about ' Neera ', Sir, since it is a nutritive food and especially when the Members of the Assembly need it very badly during the Budget session will the Hon. Minister come forward to open a parlour and have it distributed to hon. Members as was done in the old Assembly Chambers?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** If there is a general desire on the part of the hon. Members of this House, Government will make arrangements for that.

**SRI P. G. MANICKAM:** புதிதாக ஜில்லா மதுவிலக்குக் கமிட்டி எல்லா ஜில்லாக்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா ? இக்கமிட்டிகள் மாதந்தோறும் கூடுவதற்கு சர்க்கார் உத்திரவு போடுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** I understand that Prohibition committees are now being reconstituted in all the districts but whether it should meet every month depends on the business it would have before it.

SRI A. V. THOMAS : எண்பது சதவீதம் ஆல்கஹால் சேர்ந்த டிஞ்சரும் வேறு சில மருந்து என்று சொல்லப்படுபவைகளும் பட்டணத்தில் அதிகமாக அஸெம்ப்ளி நடக்கும்போது செலவாவதாக சொல்லப்படுகிறது. அப்படியானால் இது என்ன காரணத்திற்காக என்று மினிஸ்டருக்குத் தெரியுமா? அப்படி ஏதாவது என்றால் இந்தப் பெரிய மனிதர்களை கவனிக்க முடியுமா?

SRI K. SATTANATHA KARAYALAR : On a point of order, Sir. This is an insinuation and an insult to the hon. Members of this House. Is it in order?

DEPUTY SPEAKER : Will the hon. Member please explain what he said?

SRI A. V. THOMAS : I only said that there is a rumour that such things are being done.

SRI K. SATTANATHA KARAYALAR : Even if it is put in the mouth of somebody else it does not cease to be an insinuation and an insult.

DEPUTY SPEAKER : It is no insinuation against hon. Members. There are so many rumours.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட விவரங்கள் பற்றி என்னிடம் ஒருவிதமான தகவலும் இல்லை.

*Grants to private tutorial institutions.*

9-30 a.m. * 45 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to give grants to tutorial institutions run by private agencies?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : ஸார், சர்க்கார் இம்மாதிரி ட்யூடோரியல் இன்ஸ்ட்டிடியூஷன்களை ஓரளவுக்காவது வைத்து அவைகள் பையன்களுக்கு பயன்படும்படிக்கு ஏற்பாடு செய்வதற்கு திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இது அவசியம் இல்லை.

SRI K. VINAYAKAM : Will the Government think of a proposal to ban all those tutorial institutions that get these failed students come under their roof for success in the examinations, and then award them irresponsible diplomas? Apart from the diplomas conferred by the University of Madras, these diploma-holders go about the country saying that they are very efficient in medicine or engineering. Such spurious diplomas should be banned. Will the Government consider the question of taking action in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : These are all tutorial institutions referred to in the question. These institutions are getting students for appearing for the examinations. I think there are rules and regulations governing the grant of diplomas and degrees, and I think it is an offence if degrees are awarded without proper authority. If there are any instances known to the hon. Member, they may be brought to my notice.



SRIMATHI T. N. ANANDANAYAKI : Some of the persons who had passed the Diploma course in Homoeopathic systems of medicine call themselves doctors. Are they allowed to use " Doctor " before their names?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put to my Colleage, the Minister for Health.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I may be permitted to answer questions Nos. 46 and 47 together.

DEPUTY SPEAKER : Questions Nos. 46 and 47 will be taken up together.

*Magnesite Mines in Salem district.*

* 46 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received a representation from the leading citizens of Salem in February 1957 requesting that the Magnesite Mines in Salem district should be taken over and controlled by the Government; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The general question of reserving certain minerals in this State for State exploitation including the magnesite deposits in Salem district is under the consideration of the Government.

* 47 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the area of the lands leased out to the Salem Magnesite Syndicate, Limited, for the purpose of getting magnesite

(b) the terms and conditions of the lease; and

(c) when the lease is to expire and what the Government propose to do after the expiry of this lease?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 1,573·34 acres.

(b) A copy of the lease deed containing the terms and conditions of the lease will be placed in the Library.

(c) The present lease is to expire on 10th January 1959. As already stated the general question of reserving the magnesite deposits in Salem district for State exploitation is under consideration. The question as to what is to be done in respect of the mines leased to the Magnesite Syndicate, Limited, on the expiry of the lease, will be considered in the light of the decision of the Government on the general question.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, may I know whether at least some of the important conditions will be placed on the Table here?

THE HON. SRI R. VENKATARAMAN : The terms and conditions of the lease deed and the very lease deed itself will be placed, as I said already, in the Library. But if any information is needed on any particular aspect of the lease deed, I can see if I can give it.

SRI M. P. SUBRAMANIAM : சேலம், மாக்னெசைட் சிண்டிகேட் இப்பொழுது 10–1–1957-ல் தங்களுடைய காலம் முடிந்த பிறகு அதை வட இந்தியாவிலுள்ள பர்ன் அண்ட் கம்பெனிக்கு விற்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருப்பதைப் பற்றி இந்த அரசாங்கத்திற்கு புகார் வந்தது உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 10–1–1957 க்கு பிறகு விற்பதற்கு இல்லை. அவர்களுக்கு இப்பொழுது இருக்கிற லீஸ் படிக்கே பர்ன் கம்பெனிக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி சென்னை சர்க்கார் பரிசீலனை செய்து அப்படி மாற்றிக் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

SRI M. P. SUBRAMANIAM : மத்திய அரசாங்கத்திலிருந்து பர்ன் கம்பெனிக்கு அவசியம் கொடுக்க வேண்டும் என்று சென்னை அரசாங்கத்திற்கு தாக்கீது வந்தது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மைனிங் கன்செஷன் ரூல்ஸ் பிரகாரம் சென்னை சர்க்காரின் முடிவின் பேரில் அப்பீல் இருக்கிறது. அப்படி மத்திய சர்க்காருக்கு சிண்டிகேட் அப்பீல் செய்திருக்கிறார்கள். அந்த அப்பீல் பரிசீலனையில் இருக்கிறது.

Sri M. JAGANNATHAN : What will be the estimated expenditure if the Government take over the Magnesite Mines in Salem district?

THE HON. SRI R. VENKATARAMAN : It is difficult to say. But I understand from the transfer deed executed by Burn & Co., that they are proposing to buy it for one hundred thousand pounds.

SRI N. K. PALANISAMI : இந்த கண்ட்ராக்ட் முடிந்தவுடன் நம் சர்க்காரே எடுத்து நடத்துவதற்கு மத்திய சர்க்காருக்கு எழுதி இருக்கிறார்களா ? அதை எடுத்து நடத்த இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழில் சம்பந்தமான ரிசொல்யூஷன் பிரகாரம் கனி பொருள்கள் இருந்தால் அதை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் முக்கியமாக இரண்டு பொருள்கள் இருக்கின்றன. பாக்ஸைட் ஒன்று, மாக்னெஸைட் இரண்டு. இந்த இரண்டையும் இந்த சர்க்கார் எடுத்து நடத்துவது பற்றி மத்திய சர்க்காரை யோசனை கேட்டிருக்கிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : தற்போது நடத்தி வரும் கம்பெனிக்கு அதை விற்பதற்கு ஏதாவது பாத்யதை உண்டா ? அப்படி இருந்தால் அதைப்பற்றி அப்பீல் செய்தால் ஏதாவது பிரயோசனம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Under the Transfers of Property Act, it is possible for a person to sell the unexpired portion of the lease subject to the conditions contained in the lease. Under the conditions of the lease, they cannot transfer it without the consent of the Government of Madras.



SRI M. P. SUBRAMANIAM : இது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கு அப்பீல் செய்திருப்பதாக கனம் அமைச்சர் கூறினார். பர்ன் கம்பெனிக்கு கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்துக்கு எழுதியது உண்மை அல்லவா என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கொடுக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை. இங்கே பெரிய தொழிற்சாலை ஒன்றை அவர்கள் ஆரம்பிக்க தயாராக இருக்கிறார்கள். அதைப்பற்றி சென்னை சர்க்கார் பரிசீலனை செய்யுமா என்று தான் கேட்டிருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : வட இந்தியாவிலுள்ள ஒரு கம்பெனி இந்த பர்ன் கம்பெனி, கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அவர்கள் எடுத்து நடத்துவதை இந்த சர்க்கார் அனுமதிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று நினைக்கும்போது தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுப்பதைப் பற்றி இப்பொழுது யோசனை இல்லை.

SRI M. P. SUBRAMANIAM : இந்த சிண்டிகேட் எத்தனை பர்செண்ட் ராயல்டி சென்னை அரசாங்கத்திற்குக் கொடுத்துவருகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : $2\frac{1}{2}$ பர்செண்ட் கொடுத்து வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR: தற்போதுள்ள குத்தகை ஒன்று இரண்டு ஆண்டில் முடிவு அடைகிறது என்பது வாஸ்தவம். அப்படியானால் மத்திய சர்க்கார் அதை மாற்றிக் கொடுக்க இன்னும் ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் தலையிடுமா என்பதைக் கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் 1959-ம் வருஷம் ஜனவரி மாதம் லீஸ் முடிந்து விடும் என்று. அதைப் பற்றி மத்திய சர்க்காருக்கு தெரியப்படுத்தி இருக்கிறது. பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்க ஒரு பெரிய கம்பெனி தயாராக இருக்கிறது. அதனால் சென்னை ராஜ்யத்திற்கு சாதகமாக இருக்குமா என்று யோசிக்கச் சொல்லி இருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இத்தகைய சிறந்த தொழில் நிலையங்களை மாகாண அரசாங்கம் எடுத்து நடத்த முன்வரும் போது வேறு தனிப்பட்ட தொழில் நிலையங்களுக்கு அளிப்பதை விட மாகாண அரசாங்கத்திற்கு அளிப்பது என்பதை முதல் கருத்தாகக் கருதப்பட வேண்டும் என்ற முறையில் சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாம் இத்தொழிலை நடத்தினால் மாக்னெஸைட் மாத்திரம் தான் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் வேறொருவர் இப்படிப்பட்ட பெரிய தொழில் இரண்டு கோடி ரூபாய் செலவில் ஆரம்பிக்க தயாராக இருக்கிறார். எது லாபகரமாக இருக்கும் என்பதை யோசித்துத் தான் அதைப் பற்றி சர்க்கார் முடிவு செய்யும்.

*Special Armed Police at Red Hills.*

* 48 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Special Armed Police stationed at Red Hills have been given security duties in Madras City; and

(b) if so, whether any special allowance is paid to them for such duties during their stay in Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir. They are engaged mostly on guard and bandobust duties.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே அவர்களை தங்களுடைய இடத்திலிருந்து நகரத்திற்கு அனுப்புகிறார்கள். அப்படி அனுப்பும் காலங்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் அலவன்ஸ் ஏற்கெனவே உள்ளபடியான 12 அணா தான். ஆகவே அவர்கள் வெளியே இருக்கக்கூடிய காலங்களில் அவர்களுக்கு அதிகப்படியான அலவன்ஸ் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி தனி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, whereas the duties devolving upon the Special Armed Police are mostly of a bandobust nature and whereas their services are indented upon only when special occasions arise, will the Government think of the possibility of utilizing their services during leisure times on the laying of roads, construction of bridges or culverts, or on such minor works, so that their services could be profitably used to the welfare of the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government may consider the suggestion. If the hon. Member would put a separate question, I can answer in detail.

SRI M. JAGANNATHAN : What is the strength of the Special Armed Police stationed at Red Hills and if special allowance has to be paid to them, what would be the amount required for that purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I want notice.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த ஸ்பெஷல் போலீசார் தங்களுடைய மிகுதியான குறைகளை கனம் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பித்து கூறப்பட்டது உண்மையல்லவா ? அவர்களுக்கு மிகுதியான குறைகள் இருக்கின்றன என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு ஸ்பெஷல் போலீசாரும் தங்களுடைய குறைகளை என்னிடம் வந்து தெரிவித்ததாக எனக்கு நினைவு இல்லை.

SRI M. C. MUTHUKUMARASWAMI : இந்த ஸ்பெஷல் ஆர்ம்டு போலீசில் அதிகமான மலையாளிகள் இருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அவர்களை நீக்குவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இருக்கக் கூடியவர்களில் யாரையாவது நீக்குவதற்கு இல்லை. அதில் எவ்வளவு பேர்கள் மலையாளிகள் என்பதைப் பற்றிய தகவல் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

SRI M. P. SUBRAMANIAM : ஸ்பெஷல் ஆர்ம்டு போலீசில் உள்ளவர்கள் அதில் பல ஆண்டுகள் வேலை செய்த போதிலும்கூட அவர்களுக்கு உத்தியோக உயர்வு என்பது இல்லை. அவர்களை மற்ற இலாக்காக்களுக்கு மாற்றுவது என்பது இல்லை. அவர்களில் சர்வீஸ் ஆனவர்களாக இருந்தால் அவர்களை ரெகுலர் சர்வீசுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டால் அப்படிச் செய்வதற்கு என்ன தடை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : அத்தகைய போலீசார் அரசாங்கத்தினுடைய இன்றியமையாத கடமையை நிறைவேற்றுபவர்களாக இருந்தும், அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகூட இல்லை என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்களுக்குக் குடியிருப்பு வசதி இல்லை என்று சொல்வது சரியல்ல. ஓரளவு இருக்கிறது. அதை இன்னும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டங்கள் வகுத்து நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

DEPUTY SPEAKER : Questions are over. Now the Hon. the Leader of the House will make a statement.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—STATEMENT *RE* ALLEGATIONS MADE BY A MEMBER OF THE HOUSE.

THE HON. SRI C. SUBRAMANIAM : உப தலைவர் அவர்களே, 9-40 a.m.
நேற்றையதினம் விவாதத்தை ஆரம்பித்து வைத்தபோது கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமசாமி பிள்ளை அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். அதாவது, இந்தத் தொழிற் கல்லூரிகளிலே மாணவர்கள் இடம் பெறுவதைப்பற்றி. அதைப் பற்றி பத்திரிகைகளிலே கூட "**Corruption and nepotism**" என்ற பெரிய தலைப்புகளின் கீழ் வெளியிடப்பட்டிருக்கிறது. நான் அதைப் பற்றி விசாரித்தபோது, இந்த வருஷம் இன்னும் "லிஸ்ட்" கூட பூர்த்தியாகவில்லை ; வெளியிடப்படவும் இல்லை. சென்ற வருஷம் இதைப்பற்றி யாரும் புகார் செய்யவில்லை. அப்படியிருக்கும் போது, எந்த அடிப்படையில் நேற்றைய தினம் கனம் அங்கத்தினர் புகார் செய்தார் என்பது எனக்கே புலனாகவில்லை. ஆகவே, இது ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிற காரணத்தால், கனம் அங்கத்தினர் அவர்கள் இதைத் தெளிவாக்க வேண்டியது மிகவும் அவசியம். இதன் காரணத்தால் தான் நேற்று முதல் அமைச்சர் அவர்கள், "வெறுமனே, பொதுவாகச் சொல்லிப் பிரயோஜனம் இல்லை ; எந்தெந்த விஷயங்களிலே இம்மாதிரி யாராவது தலையிட்டு ஒருதலைப்பட்சமான முடிவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள்" என்று திரும்பத் திரும்பக் கேட்டார்கள். ஆகையால், நான் கனம் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இதைப் பற்றி அவர்களுக்கு இருக்கக்கூடிய தகவல்களை விவரமாக எழுதிக் கொடுக்கவேண்டும் என்பது. இப்படி அவர்கள் எழுதிக் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். ஏனென்றால், இந்த விஷயத்தைப் பற்றி அவர்கள் ஏதாவது சொல்லியிருப்பார்களேயானால், அதற்கு எந்த விதமான ஆதாரமும் இருக்கமுடியாது. யார் யாரைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று இன்னும் முடிவே ஏற்படவில்லை.

இதற்கு முன்பு இருந்த சபையிலேகூட, அதில் இருந்த அங்கத்தினர்கள் இதுவரை இவ்விதமான குற்றம் நடந்ததாகச் சொல்லியது கிடையாது. கனம் அங்கத்தினர் அவர்கள் 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந்தேதியில் தான் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஆகையால், இந்த வருஷத்தைப் பற்றித் தான் அவர்கள் பேசியிருக்கவேண்டுமென்று நான் நம்புகிறேன். போன வருஷம் வரை இங்கு இருந்த அங்கத்தினர்கள் ஜாக்கிரதையாகத் தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாரும் குற்றம் சொல்லவில்லை. அப்படியிருக்கும்போது திடீரென்று இந்த அங்கத்தினர் எழுந்திருந்து இப்பொழுது புதிதாகக் குற்றம் சொல்வது விந்தையாக இருக்கிறது. ஆகையால், இம்மாதிரி குற்றச்சாட்டு சொல்லியிருப்பதனால், தவறு என்னென்ன காரியத்தில் நடந்திருக்கிறது என்பதை விவரமாக கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதிக்கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் எனக்கு பதில் சொல்வதற்கும் வசதியாக இருக்கும். ஆகையால், நான் பதில் சொல்வதற்குள்ளாக, அதாவது 5-ந்தேதிக்குள்ளாக, இந்த விவரங்களையெல்லாம் அவர் எழுதிக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று இந்தச் சபை முன் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

**Sri N. K. PALINISAMI** : Sir, I want a ruling from the chair. இந்தச் சபையில் இருக்கக்கூடிய மெம்பர்கள் பேசுவதற்கு உரிமை உண்டா ? இல்லையா ? நாங்களும் ruling party ஆக இருந்தால் ஒவ்வொன்றையும் குறிப்பாகவும் புள்ளி விவரங்களோடும் சொல்லமுடியும். ஆகவே, இந்த விஷயம் சட்ட சபையில் மட்டும் அல்ல, மாகாணம் பூராவிலுமே ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. இன்றைய தினம் மெடிகல் காலேஜில் மட்டுமல்ல, எந்தக் காலேஜாக இருந்தாலும் இடம் கிடைப்பதில்லை. இது பொதுவான பிரச்னை என்பதை கனம் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இது பொதுவான பிரச்னை என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால், இதிலே யாரோ தலையிட்டார்கள் என்றும், அப்படித் தலையிட்டது யார் என்றும் சொல்லாமல், எந்த விஷயத்திலே தலையிட்டார்கள் என்றும் சொல்லாமல், பொதுவாக ஏதோ தவறு நடந்திருப்பதாகப் பேசுவது இங்கிருக்கும் அங்கத்தினர்களுடைய மனதிலே கூட ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். பொது மக்களுடைய மனதிலே கூட ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். அதற்கு மேலாக, பொறுப்புள்ளவர்களைக் கொண்ட கமிட்டிகளை நியமித்திருக்கிறோம். அவர்கள் செய்த வேலையிலும் வீணாகக் குற்றம் கண்டு பிடிப்பதாக இருக்கும். நம்மைப் பொறுத்த வரையில், நல்ல பொறுப்புள்ளவர்கள் இந்தக் கமிட்டியில் இருந்து ஒரு காரியத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது நாம் அதிலே குற்றம் நடந்திருக்கிறதென்று சொல்வோமேயானால், அதை நிரூபிப்பதற்குத் தயாராயிருந்தாலொழிய, அந்தக் குற்றச் சாட்டை—சட்டசபையிலே கூட—சொல்வது தவறு. வெளியிலே இதைப் பற்றி யாரும் கேட்கவில்லை. அப்படி யிருக்கும்போது, இங்கே இதைப் பற்றி பேசியிருப்பதால், உள்ள சந்தேகங்கள் தீர்வதற்காக, இதற்கெல்லாம் எழுதிக் கொடுத்தால் நான் பதில் சொல்லுவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொண்டேன். பொதுவாகச் சொல்வதாக இருந்தால் எதை வேண்டுமானாலும் சொல்லி விடலாம். அதிலும் முக்கியமாக, தவறுகள் நடந்திருக்கிறதென்று சொல்லும்போது, எந்தெந்த விஷயங்களிலே, யார் யாரால் நடந்தன என்பதைப் பற்றி விவரமாகக் கொடுக்கவேண்டியது அவசியம். மிக மிக அவசியம். அப்படி அவர்கள் சொன்னால், அவசியமிருக்குமானால், அவர்கள் சொல்லக்கூடிய விஷயத்தைப்பற்றி, இந்த சட்ட சபையிலே இருக்கிற அங்கத்தினர்களைக் கொண்டே ஒரு கமிட்டி அமைத்து விசாரணைசெய்யவும் நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

DEPUTY SPEAKER : There is no discussion on this matter . . .

(Sri Sattanatha Karayalar rose.)

**Sri S. NAGARAJA MONIGAR** : நேற்றையதினம் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது பொதுவாகப் பேசவில்லை. "குறிப்பிட்டு, ஒரு கேஸ் இருக்கிறது, அதைச் சொல்வேன்" என்று சொல்ல முன் வந்தவர் அதைச் சொல்லவேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டபோது பின் வாங்கிக்கொண்டார்.

DEPUTY SPEAKER : There will be no discussion on this subject which has been closed. The Hon. Minister only wanted to have specific information from the hon. Member, Sri T. S. Ramaswamy Pillai with regard to certain points raised by him yesterday, so that he may give suitable reply on the 5th instant. The matter is closed now.

**Sri K. VINAYAKAM** : Sir, on a point of order. A code has been set by the Government of India regarding the etiquette of flying National Flag. We have a flag just flying over our heads,



which should not be torn. But it is now torn to the extent of Ashoka Chakra which is an insult to our national honour. That should be rectified immediately before we proceed further.

DEPUTY SPEAKER : It is not a point of order.

**Sri K. VINAYAKAM** : It is a matter concerning national interest . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM** : I am glad the hon. Member has taken notice of it and certainly it will be rectified.

DEPUTY SPEAKER : It will be rectified. The hon. Member ought to have brought it to the notice of the Hon. Minister, and should not have raised it as a point of order.

Now the discussion on the Budget will be continued.

### III—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957–58—*cont.*

* **Sri A. A. RASHEED** : Mr. Deputy Speaker, Sir, I congratuate the Hon. Minister for Finance on his presenting a good Budget for the year 1957–58, a Budget which is welcomed both by the rich and the poor. Happy is the country that has no history. If the Hon. Minister for Finance had imposed new and novel measures of taxation, that would have been exciting the people. I think the Hon. Minister for Finance preferred to be happy rather than make history. I sympathise with the Opposition that they do not have strong points to attack the Budget for 1957–58. But there is a small blot on the Budget as far as the sales-tax on foodgrains is concerned. I think if the Hon. Minister had removed sales-tax on foodgrains, people would have welcomed it as already the prices of foodgrains have been going up. He has also indicated in his Budget speech that he proposed to increase the rate of sales-tax from 1-9/16 per cent to 2 per cent in the case of commodities other than foodgrains. I feel that if he had imposed a single point levy, both the trade and the public would have welcomed it.

Mr. Deputy Speaker, I think the Hon. Finance Minister is aware that on hides and skins we are earning nearly Rs. 20 lakhs annually. I think if the Hon. Minister would come forward to exempt sales-tax on the skins and hides exported, he would be doing a great service to the trade; also it will give an incentive to the exporters and also will give a lead to earning of more foreign exchange. Sir, I think the Government would be doing a great service if they would ban the export of East India tanned skins and hides on consignment basis to the United Kingdom where they are sold in public auction to the detriment of Madras tanners and consignors. We are losing thereby nearly Rs. 50 lakhs on brokerage and other incidental charges. Besides we can also give employment to nearly 500 persons if we could ban the export of this. 9-50 a.m.

Sir, I think the amount earmarked for the plantation of wattle bark is not sufficient. The price of wattle bark a few months ago

[Sri A. A. Rasheed] [2nd July 1957

was Rs. 490 a ton and it has now increased to Rs. 600. I think the allotment should be increased and also steps should be taken to establish a factory for the manufacture of wattle extract as the tanners find it very difficult to import this stuff from Africa and other parts of the world. I also request the Hon. Minister to make provision for the grant of loans to the small tanners so that the loans could be recovered in five years in easy instalments.

The increase in the rate of income-tax on plantations is not very high and I think the planters would not grudge paying that small increase in the interests of making a prosperous State.

Sir, even to-day the needs of the villages remain the same, viz., the provision of good roads, schools and dispensary and good drinking water-supply. By the allotment made in the Budget in 1957-58, I am sure these amenities would be provided to most of the villages, if not all.

9-55 a.m. Sir, the North Arcot district is notorious for its Palar river. (Interruption.) I said " notorious " with the intention that it has become notorious because only sand flows and not water in that river. I think it is high time that the Government bestowed some attention on constructing a dam or anicut near Vaniyambadi. For, during monsoon floods, some portions are washed away and unless they do something soon one-fourth of Vaniyambadi would be washed out by 1960.

Recently, a deputation waited upon the Hon. Chief Minister and the Hon. Finance Minister requesting them to take up the hospital at Vaniyambadi. There is already a hospital and it was constructed by public donations; there is a pucca building and so the hospital could be taken up and run by the Government. So far the Government have not come forward to take it and therefore I request the Government to take it and run it as a first-class hospital, since there is no other hospital near or around Vaniyambadi.

Sir, red-tapism is still prevalent in most of the districts and the Collectors are still thinking that they are the uncrowned kings of the districts. I think they must be informed that they cannot consider themselves the rulers, but only the servants of the people. For, I know some instances where the Collectors do not even acknowledge the letters written by Legislators, much less reply to them. These things will not only delay execution of the Second Plan, but also will lead to so many other difficulties. I think both in the interest of the implementation of the Second Plan and also in the interest of the State these high officials must consider themselves the servants of the people and reply to communications of Legislators as and when they receive any.

I think on the whole the Budget is a good one which should be welcomed both by the rich and the poor. I am sorry to say once again that the Opposition has not been given any chance to attack the Budget, because there are no points to be attacked. Thank you, Sir.



2nd July 1957]

**SRI K. RAMACHANDRAN :** கனம் அவைத்தலைவர் அவர்களே, பொதுவாக இந்த பட்ஜெட்டானது ஒரு பற்றுக்குறை பட்ஜெட் ஆக வந்து விட்டதே என்று பல அங்கத்தினர்கள் கவலைப்பட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், நிதி மந்திரி அவர்களின் உரையை முழுதும் படித்தால், இந்த பட்ஜெட்டை ஒரு பற்றுக்குறை பட்ஜெட் ஆகக் கருதவேண்டியது இல்லை என்றுதான் நினைக்கிறேன். ஏனென்றால், திட்டங்களை அமுல் நடத்துவதில் ஒரு விசேஷக் கொள்கை இருந்து வருகிறது. எந்தத் திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவற்றை நிறைவேற்றுவது இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. உதாரணமாக, பரமக்குடியில் ஒரு தலைமை ஆஸ்பத்திரி கட்டுவது என்று ஐந்து வருஷங்களுக்கு முன்பே முடிவு செய்யப்பட்டது. எத்தனையோ மகஜர்கள் அனுப்பியும், தவிர மந்திரிகள் புயல் சமயத்திலேயோ அல்லது தேர்தல் சமயங்களிலேயோ வரும் காலத்தில்கூட பலமுறை அவர்களிடம் எடுத்துச் சொல்லியும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாத நிலையில் இருக்கிறது. மேலும், **Protected Water-supply Scheme**-க்காக அந்த ஊருக்கு ரூபாய் இரண்டு லட்சம் சாங்ஷன் ஆகி இருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி அநேக விண்ணப்பங்கள் அனுப்பியும், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அடுத்தபடியாக பள்ளிக்கூடத்திற்கு என்று ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு கட்டிடங்கள் கட்டவேண்டும். அதுவும் நிறைவேற்றப்படவில்லை. பல திட்டங்களை போட்டுக்கொண்டே போய் சில திட்டங்களை நிறைவேற்றாமல் விட்டுவிடுவதுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது. கடைசியில் பார்த்தால், இந்தப் பற்றுக் குறை பட்ஜெட்டானது ஒரு உபரி பட்ஜெட்டாக மாறி விடலாம் என்பதை நாம் பட்ஜெட் அறிக்கையிலேயே பார்க்கிறோம். ஆகவே, ஒருவரும் இதைப் பற்றிக் கவலைப்படவேண்டியது இல்லை. உபரி பட்ஜெட் ஆக வந்தால்கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அடுத்தபடியாக விவசாயப் பொருள்கள் அதிகமாக இருக்கின்றன என்று பட்ஜெட் அறிக்கையிலே கண்டிருக்கிறது. விளைச்சல் நிலம் அதிகமாக இருக்கிறது, விளை பொருள்களும் அதிகமாக இருக்கின்றன என்று அறிக்கை சொல்லுகிறது. அப்படி அதிகப்படியாக இருப்பது நான்கு அல்லது நாலரை சத விகிதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய ஒரு நாட்டில் இதை ஒரு பெரிய அதிகரிப்பு என்று சொல்லிவிட முடியாது. அதைப்பற்றிப் பெருமைப்படுவதற்கும் இல்லை. தரிசு நிலங்கள் லட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கும்பொழுது, ஹரிஜனங்களைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்லுகிற சமயத்திலே, அந்த நிலங்களை ஏழை மக்களுக்கும், நிலம் இல்லாதவர்களுக்கும் பிரித்துக் கொடுப்போமேயானால், உண்மையிலேயே விளைச்சல் அதிகமாக இருக்கும். 25 அல்லது 50 சத விகிதம் கூட விளைச்சலை அதிகமாக எதிர்பார்க்கலாம். அதற்காகத்தான் நிலச் சீர்திருத்தங்கள் வேண்டும் என்று சொல்லுகிறோம். கவர்னர் அவர்களின் பேருரையைப் படிக்கும்போது, நிலச் சீர்திருத்தங்கள் சீக்கிரமாக வந்துவிடும் என்ற அறிகுறி தென்பட்டது. ஆனால், பட்ஜெட் உரையிலே நாம் எதையும் காண்பதற்கு இல்லை. என் நிலச் சீர்திருத்தங்கள் அவசியம் என்பதைப்பற்றி நேற்றுக்கூட சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். பெரிய மிராசுதார்களிடத்தில்தான் அதிகமாக நிலங்கள் குவிந்து கிடக்கின்றன. தஞ்சை ஜில்லாவிலே குறிப்பிட்டவர்களிடத்தில் 10,000 வேலி, 20,000 வேலி நிலங்கள் இருப்பதாக நேற்று அங்கத்தினர்கள் சொன்னார்கள். நம் நாட்டின் ஆணி வேர் போன்ற விவசாயி முன்னேற வேண்டுமானால், நமது நாட்டில் அவசியம் நிலச்சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டும்.

அடுத்தபடியாக, நிலங்களுக்கு ஒரு உச்ச வரம்பு கட்டவேண்டியது மிகவும் அவசியம். மேலும், மேலை நாடுகளில் எல்லாம் கூட்டுறவு விவசாய முறை அமலில் இருந்து வருகிறது. அதில் நல்ல பலன் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லுகின்ற நமது சர்க்கார் மேலேசொன்ன இரண்டு திட்டங்களையும் பரீட்சார்த்தமாக ஒரு சில பகுதிகளில் அமுல் நடத்தி, அதற்குப் பிறகு பரவலாக பிற பகுதிகளுக்கும் அவற்றை விஸ்தரிக்கலாம்.

[Sri K. Ramachandran] [2nd July 1957

இதைப்பற்றி பட்ஜெட் உரையில் எந்தவிதமான அறிகுறியும் இல்லாதது கண்டு நாம் விசனிக்கவேண்டியதாய் இருக்கிறது. நிலத்திலே விளைச்சல் அதிகமாகிவிட்டது என்று சொல்லுகின்ற நேரத்திலே, விவசாயப் பொருள்களின் விலைவாசியும் அதிகமாகி இருக்கிறது என்பதை சர்க்கார் ஒப்புக்கொள்கிறார்கள். காரணம் என்ன ? தேவை அதிகமாகி விட்டது என்று சொல்லுகிறார்கள். இல்லை. நியாயமான நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வரும் பட்சத்தில், தேவையைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு, உணவு தான்யங்களின் உற்பத்தி அதிகரிக்கும். அப்பொழுதுதான் விலைவாசி அதிகமாக ஏறுவதற்கு இடமிருக்காது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே நிலச் சீர்திருத்தத்தைக் கண்டிப்பாக கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்தை பற்றியும், நிலச் சீர்திருத்தத்தைப் பற்றியும், விளை பொருள்களின் அதிகரிப்பைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கும்போது, ராமநாதபுரம் ஜமீன் பகுதியில் இப்போது 30,000 ஏக்கர் குளங்கரை நிலங்களிலிருந்து சுமார் 12,000 குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது விஷயமாக கனம் முதன் மந்திரி அவர்களிடத்தில் சென்ற வருஷம் டிசம்பர் மாதம் ஒரு தூதுகோஷ்டி சென்றது. இந்த குளங்கரை விவசாயம் ராமநாதபுரம் ஜில்லாவிற்கு ஜீவநாடியாக உள்ளது. இந்த விவசாயத்தால் யாருக்கும் பாதகம் இல்லை. இந்த விவசாயத்தில் கால்நடைகளும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த விவசாயம் பாதிக்கப்பட்டால் மக்களின் பொருளாதார நிலை சீர்கெட்டுவிடும் என்று விண்ணப்பங்களும், மகஜர்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த பகுதியில் இது ஒரு பொருளாதாரப் பிரச்னையாக இருக்கிறது. இந்தப் பிரச்னையை அரசாங்கத்தார் அவசியம் தீர்க்க வேண்டும். விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். என்றும், விளை நிலங்களை அதிகப்படுத்த வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டிருக்கும்போது, விவசாயிகளை நிலங்களை விட்டு அப்புறப்படுத்துவது என்பது மனதிலும் நினைக்க முடியாத விஷயம். இந்தப் பிரச்னையை உடனடியாகப் பரிசீலனை செய்து தீர்க்க வேண்டும். வேண்டுமானால் கமிட்டி ஒன்று நியமித்து எந்த விதத்தில் தீர்க்க முடியும் என்று ஆராய்ந்து, நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அநேக விவசாயிகள் கோர்ட்டுகளுக்கும் ட்ரிப்யூனல்களுக்கும் அலைந்து பணத்தைச் செலவழித்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கனம் மந்திரிகள் நன்றாகப் பரிசீலனை செய்து இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனத் திட்டங்கள் இங்குமங்கும் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ராமனாதபுரம் பகுதிக்குள் எந்தவிதமான முன்னேற்றத் திட்டமும் நுழையவில்லை என்றுதான் தெரிகிறது. ராமனாதபுரம் முன்பு எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலையிலேயே, ஒரு அங்குலம்கூட நகராமல் அதே நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதி மழையையே எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் பகுதி.
10 a.m. அந்தப் பகுதிக்கு நிரந்தரமான நீர்ப்பாசன வசதி செய்யப்படவேண்டும் என்று பல மந்திரிசபைகளிடத்தில் பல முறைகள் கேட்டும் ஒன்றும் செய்யப்படவில்லை. (**An hon. Member** : அந்தப் பகுதியில் எந்த ஆறு இருக்கிறது ? ஆற்றுக்கு " ஆர்டர் " கொடுப்பதா ?) ஆற்றுக்கு " ஆர்டர் ", கொடுக்க வேண்டியதில்லை. " ஆர்டர் ", கொடுத்து ஆற்றை வாங்க முடியாது என்பதை நான் அறிவேன். ஏன், வைகைத் திட்டம் இருக்கிறதே. வைகை ஆற்றின் தண்ணீரை ராமநாதபுரம் பகுதிக்குக் கொண்டுவந்து நீர்ப்பாசன வசதி செய்யலாம். வெகுநாட்களாக இந்தத் திட்டத்தை அரசாங்கம் கவனிக்காமலேயே இருந்துவருவதால் மக்களுக்கு " இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமோ, எடுத்துக்கொள்ளப்படாதோ " என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூடியவரை ராமனாதபுரம் பகுதிக்கு நல்ல நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்கவேண்டும் என்று எங்கள் பகுதி மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.



2nd July 1957] [Sri K. Ramachandran]

அடுத்தபடியாக தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன். ஏற்கெனவே தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் இல்லாத இடங்களில் புதிதாக தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுதான் பரமக்குடி தாலூகாவில் புதிதாக தேசிய விஸ்தரிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். பிளாக் அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் ஒரு மாதத்திற்கு சுமார் ரூ. 5,000, ரூ. 6,000 செலவில் அதிகாரிகள் இருக்கிறார்கள். பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகள் அங்கே என்ன செய்கிறார்கள் ? ராமனாதபுரத்தில் ஒரு பகுதியில் பிளாக் டெவலப்மெண்ட் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் இதுவரையிலும் அங்கே ஒன்றும் செய்யப்படவில்லை. " நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் ? " என்று அதிகாரிகளைக் கேட்டால், " நாங்கள் இன்டெக்ரேடட் பிளான் போட்டு அனுப்பியிருக்கிறோம். அதைக் கமிட்டி சிபாரிசு செய்யவேண்டும் " என்று சொல்லுகிறார்கள். இதுவரையிலும் அந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள் ? அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அங்கே என்ன என்ன தேவையாக இருக்கிறது என்று பார்க்கிறார்களாம். இந்தமாதிரி " இன்டெக்ரேடட் பிளான், தயாரிப்பதற்கு ஒரு எஞ்சினீர், ஒரு கூட்டுறவு இன்ஸ்பெக்டர், ஒரு பிளாக் டெவலப்மெண்ட் ஆபிஸர், பத்து, பதினைந்து கிராம சேவக்குகள், மேலும் பல ஸோஷல் எஜுகேஷன் ஆர்கனைஸர்ஸ் " முதலியவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்தக் காரியத்திற்கு, குறைந்த செலவில் இவர்களை விடச் சிறந்த முறையில் செயலாற்றக்கூடிய அதிகாரிகளாக இருப்பவர்களை நியமிக்கலாம். இரண்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களைப் போட்டால் போதும். அவர்கள் நல்ல முறையில் இன்டெக்ரேடட் பிளானைத் தயாரித்து விடுவார்கள். அவர்கள் இன்டெக்ரேடட் பிளானைத் தயார் செய்த பிறகு மற்ற அதிகாரிகளை உள்ளே நுழையவிடலாம். அப்படிச் செய்தால் ஆறு மாத காலச் செலவைக் குறைக்கலாம். மாதம் ரூ. 6,000, ரூ. 7,000 வீதம் ஆறு மாதங்களுக்குச் செய்யும் சிலவு மிச்சமாகும். இப்போது கிராம சேவக்குகள் வேறு வேலையில்லாமல் " கீதைப் பேருரைகள் " என்ற புத்தகத்தை கிராமங்களில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் புத்தகத்தை விற்கட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், நிலைமை அப்படி இருக்கிறது என்றுதான் நான் சொல்கிறேன். ஆகவே ஆறு மாதங்களுக்குப் பிறகு பிளாக் டெவலப்மெண்ட் திட்ட உத்தியோகஸ்தர்களை அங்கே நியமித்தால் பணமும் மிச்சமாகும், வேலையும் சிறந்த முறையில் நடக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கனிப்பொருள்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன். எல்லா இடங்களிலும் கனிப்பொருள்கள் இருக்கின்றன. ஆனால், ஒரு சில இடங்களில் மட்டும் ஆரம்பிக்கப்படுவதாக தெரிகிறது. மாநிலம் பூராவிலும் எங்கெங்கு எந்த எந்த கனிப்பொருள்கள் இருக்கின்றன என்றும், எவ்வளவு " இன்டஸ்டிரியல் ரிஸோர்ஸஸ் ", இருக்கிறது என்றும் ஆராய்ந்து எந்த எந்த இடங்களில் எந்த எந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்று யோசனைகள் சொல்லுவதற்கு ஒரு கமிட்டியை நியமிக்கலாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பட்ஜெட் உரையில் சில இடங்களில் சில கைத்தொழில்களை ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் நமது மாநில விவசாய மக்களின் தேவைக்குத் தகுந்தாற்போல் திட்டமிடப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். அந்த அந்தப் பகுதிகளில் பணம் திரட்டி, சிறு கைத்தொழில்களை கூட்டுறவு முறையிலும் பரவலாகவும், ஜில்லா யூனிட்டுகளிலுமாக ஆரம்பித்து நடத்தினால் விவசாய மக்கள் எல்லோரும் மிகவும் பயனடைவார்கள்.

அடுத்தபடியாக, கைத்தறியாளர்களின் கஷ்டத்தைத் தீர்க்க வேண்டும். இன்றைக்கு கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் ராமநாதபுரம் ஜில்லாவில் கைத்தறித் துணிகளின் தேக்கமே இல்லை என்று சொன்னார்கள். பிறகு புள்ளி விவரங்களைக் கொடுத்து உண்மையிலேயே அங்கே இரண்டு மாத காலமாகத் தேக்கம் இருக்கிறது

[Sri K. Ramachandran] [2nd July 1957

என்று சொன்னபோது, அதுபற்றி தாம் ரிப்போர்ட் கேட்கப்போவதாகச் சொன்னார்கள். இந்தமாதிரியான தவறான அரசாங்கப் புள்ளி விவரங்களினால் அமைச்சர்களுக்கு உண்மையான நிலைமை தெரிவதில்லை. சேலைகளையோ வேஷ்டிகளையோ கைத்தறித் தொழிலுக்கு ஒதுக்கிவிட்டால் கைத்தறி நெசவாளர்களின் கஷ்டத்தை நிரந்தரமாகத் தீர்க்கலாம். அப்படிச் செய்தால்தான் கைத்தறித் தொழிலுக்கு ஆபத்து இல்லாமல் இருக்கும். இதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் ரொம்ப முக்கியமான விஷயம். இதற்கு அதிகமாகப் பணம் செலவழிக்கப் போவதாக பட்ஜெட் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ஹரிஜனங்களுக்கு அமைக்கப்பட்டிருக்கும் காலனிகள் மிகவும் போலியான காலனிகளாகத்தான் இருக்கின்றன. பணம் அதிகமாகச் செலவு செய்தால் குறைந்தது 20 அல்லது 25 வருஷங்கள் வசிக்கக்கூடிய காலனிகளைக் கட்டலாம். எங்கள் பகுதியில் கண்டிராக்டர்கள்கூட பணம் போதவில்லை என்ற காரணத்தால் காலனிகளை அமைக்க மறுத்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. காலனிகளை நன்றாக அமைத்துக் கொடுத்து ஹரிஜனங்கள் உண்மையிலேயே முன்னேற்றம் அடையும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜன முன்னேற்றத் திட்டங்களில், சில இடங்களில் "பாத் ரூம்களையும் லெட்ரின்"களையும் அமைக்கும் திட்டம் இருக்கிறது. இதற்காக அதிகமான பணம் செலவிடுகிறார்கள். பாத் ரூம்களும் லெட்ரின்களும் உபயோகப்படுத்தும் அளவுக்கு ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் அவ்வளவு முன்னேற்றம் அடையவில்லை. அவைகளை ஹரிஜனங்கள் உபயோகப்படுத்துவதில்லை. ஆபீசர்கள் யாராவது போய்ப் பார்த்தால் அவைகள் வீணில் தூசி படிந்திருப்பதைத்தான் காண்பார்கள். ஆகவே பாத் ரூம்களுக்கும், லெட்ரின்களுக்கும் செலவிடும் பணத்தை மற்ற ஹரிஜன முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன்படுத்தி அவர்கள் உண்மையிலேயே முன்னேற்றம் அடையும்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையிலும், இப்போது சில வகுப்புகள் வரை அரசாங்கத்தார் ஏழை மக்களுக்கு இலவசக் கல்வியளிக்கிறார்கள். இன்றைக்கு மூன்றாவது பாரம் வரையிலும் இலவசக் கல்வி அளிக்கிறார்கள். இதை இன்னும் விஸ்தரித்துக்கொண்டே போக வேண்டும். அதாவது அடுத்த வருஷம் நான்காவது பாரத்திற்கு விஸ்தரித்து, அதற்கு அடுத்தாற்போல் நிதி நிலைமை சாதகமாக இருக்கும்போது ஐந்தாவது பாரத்திற்கும் விஸ்தரிக்கவேண்டும். கடைசியில் 6-வது பாரம் வரையிலும், அதாவது எஸ். எஸ். எல். சி. வரையிலுமாவது இலவசக் கல்வியளித்தால்தான் ஏழை மக்கள் முன்னேற முடியும். "ஒரு லட்சம் மாணவர்களை அதிகமாகச் சேர்த்திருக்கிறோம்" என்று பட்ஜெட் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் 35 லட்சம் பேர்கள் படிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே கட்டாயக் கல்வியைக் கொண்டுவரத்தான் வேண்டும். பத்தாவது வகுப்பு வரையிலும் எல்லோரும் கட்டாயம் படிக்க வேண்டும் என்று சட்டம் இயற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான் பல பிரச்னைகளையும் தீர்க்க முடியும்.

வரிகள் போடவில்லை என்று இந்த பட்ஜெட் உரையில் சந்தோஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. அது நமக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால் இனிமேல் புதிதாக வரிகள் போடுவதற்கில்லை என்பதைத் தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் மத்திய சர்க்காரும் மாநில சர்க்காருமாகச் சேர்ந்து நிறைய வரிகள் போட்டு விட்டார்கள். **Taxable capacity has been exhausted**. ஆகவே இருக்கும் வரிகளில் சிலவற்றை எடுப்பதுபற்றித்தான் இனிமேல் கவனிக்க வேண்டும். விற்பனை வரியைப் பொறுத்த வரையில் உணவு தானியங்களுக்கு 1 சத விகிதமாகக் குறைத்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால் கல்வியை மிகவும் அபிவிருத்தி செய்ய வேண்டிய காலத்தில் புத்தகங்கள் மீதுள்ள விற்பனை வரியை நீக்கிவிட்டதை ஒரு பெரிய காரியமாகக் கருதி நாம்



2nd July 1957] [Sri K. Ramachandran]

சந்தோஷப்படுவதற்கில்லை; அது அவசியம் செய்ய வேண்டிய காரியம் தான். அத்துடன், கூடியவரை ஒருமுனை விற்பனை வரி முறையைக் கொண்டுவந்திருக்கலாம்.

மேலும் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இதுதான். திட்டங்களை ஆரம்பித்து நிறைவேற்றுவதில் என்ன கஷ்டங்கள் இருந்தாலும் அவைகளைப் பொருட்படுத்தாமல், மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக திட்டங்களை உடனடியாக ஆரம்பித்து நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI P. M. MUNUSAMI GOUNDER : கனம் உதவி சபா நாயகர் அவர்களே. இன்றைய தினம் நம்முடையசபையின் முன் விவாதத்தில் இருந்து வரும் வரவு செலவு திட்டத்தைப்பற்றி குறிப்பிடும் பொழுது, நமது நிதி அமைச்சரவர்கள் வகுத்திருக்கும் திட்டத்தை குறித்து பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்கு காரணம் பல. கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டங்களை பார்க்குங்கால் ஏதாவது ஒரு வரி சேர்க்கப்பட்டிருந்து அதனால் பொது மக்கள் பலருக்கு அதிருப்தியும், சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையும் எல்லோரும் அறிந்த விஷயமே. தற்போது அந்த நிலைமை இல்லாமல், எல்லோராலும், முக்கியமாக பொது மக்கள், வியாபாரிகள் இவர்களாலும் வரவேற்கக்கூடிய முறையில் இவ்வாண்டு திட்டம் அமைந்து இருப்பதைக் குறித்து, நாம் நம்முடைய சர்க்காரை பாராட்டாமல் இருக்க முடியாது. சர்க்கார் வரி போடுகிற சமயத்தில் "இவ்வாறு வரி போடுகிறார்களே, இதே மாதிரி, மேல் மேலும் வரி போட்டுக் கொண்டிருந்தால் அச்சுமையை எவ்விதம் ஏற்பது" என்று சொல்லும் அதே சந்தர்ப்பத்தில், நம்முடைய சர்க்கார் மேற்கொண்டிருக்கும் திட்டங்களை வரிகளின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டுதான் நிறைவேற்றமுடியும் என்பதை அங்கத்தினர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கவனத்தில் கொண்டுவர வேண்டுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். பண வசதியின்றி, நாம் எக்காரியத்தையும், எத்திட்டத்தையும் நல்ல முறையிலேயே, செவ்வனே, செய்யமுடியாது. ஆதலால், நாம் நமது சர்க்கார் கொண்டுவரும்படியான ஒரு சிறு வரி மாறுதலைக்கூட ஏற்று, அதற்கு நமது ஒத்துழைப்பை கொடுக்காவிடில், நம்முடைய எல்லா வேலைத் திட்டங்களுக்கும் குந்தகம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு நாமெல்லோரும் ஒருமுகமாக இதை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10-10 a.m.

இந்தச் சந்தர்ப்பத்தில், சிறிய குறைகளை சர்க்காருக்கு எடுத்துக் காட்டி, அவற்றை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டியது நம்முடைய கடமை. நமது நாடு விவசாய நாடு. விவசாயிகளாகிய நமக்கு, இந்த பட்ஜெட்டிலே, பலவித சௌகரியங்களை செய்யப்போவதாக நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு தேவையானவை காலாகாலத்தில் அவர்கள் பண்ணைக்கு வேண்டிய விதைகள், கருவிகள், மின்சார வசதி, என்ஜின் பம்ப் செட்டுகள், ஆடு மாடுகள், காட்டிலாகாவிலிருந்து எரு உரங்கள். இத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வேண்டிய வழி வகைகள் இவ்வாண்டு திட்டத்தில் இடம் பெற்றிருப்பது வரவேற்கத் தக்க அம்சம். சில சந்தர்ப்பங்களில், விவசாய இலாக்கா, நமக்கு தேவையான உரங்களையும், விதைகளையும் குறிப்பிட்ட காலத்தில் சப்ளை செய்ய தவறிவிடுகிறது. அதற்கு விவசாய அமைச்சர் அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். உயர்தர விதைகளை வழங்க 360 விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவதாகவும், இவ்வாண்டிலேயே 136 பண்ணைகள் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கின்றோம் என்றும், இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறது. இவ்வாறு செய்வது விவசாய முன்னேற்றத்திற்கான நல்ல ஒரு அறிகுறி என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு உரம் அவசியமாக இருக்கிறது. ஆனால், காலா காலத்தில், அதை வாங்கி உபயோகிக்க பண வசதி இல்லை. இந்த நிலையை நிவர்த்திக்க, அவர்களுக்கு

[Sri P. M. Munusami Gounder] [2nd July 1957

வேண்டிய கடன் வசதிகள், இந்த பட்ஜெட்டில் ஏற்படுத்தியிருப்பது பாராட்டுவதற்கு உரிய விஷயம். தேசிய விஸ்தரிப்பு திட்டங்கள் இருக்கின்ற இடங்களில், அவர்களுக்கு உரம் இலவசமாக கொடுக்கப்பட்டு வந்தும், அதை பயன்படுத்த முடியாத நிலையில் சிலர் இருக்கிறார்கள். இந்நிலை மாற, அங்கத்தினர்களாகிய நாம் அவர்களுக்கு, சர்க்காரால் இலவசமாக கொடுக்கப்படும் சலுகைகளை தெரியப்படுத்தி, அவற்றை அவர்கள் உபயோகிக்கும்படியான நிலையை ஏற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு அச்யாவஸ்யமாகவும், இன்றியமையாததாகவும் இருப்பது நீர்ப்பாசன வசதிகள். கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்க பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றி வருகிறார்கள். இவ்வாறு செய்வதில், எல்லா இடங்களுக்கும் நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கும்படி செய்ய முடிவதில்லை. அதனால் பிற்போக்கான இடங்கள் பிற்போக்காகவே இருந்துவிடுகின்றன. இதை நிவர்த்தி செய்ய ஆங்காங்கு சிறிய நீர்ப்பாசன திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டில், நீர்ப்பாசனத்திற்காகவும், சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது ரூ. 55 லட்சம்—மிகவும் குறைவு என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதை இரட்டிப்பாக்கி யிருக்க வேண்டும், ஏனென்றால், சிறு பாசனத் திட்டங்கள் மூலம்தான், கிராமப் புறங்களில் உள்ள குடிமக்களும், ஏழைகளும் முன்னேற முடியும். என்னுடைய தொகுதியில்—ஹஸூர் தாலூகாவில், ஏற்கனவே முள்ளிக்காடு அணை இருக்கிறது. அந்த அணையை செப்பனிட ஒரு லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு முன் திடீர் என்று நின்று விட்டது. தற்போது அமுலில் இருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், இதைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊத்தங்கரை பிர்க்காவில் பாம்பாறு திட்டம் என்ற ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இது பற்றியும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஜில்லா Planning Board கூட்டத்தில் சேலம் ஜில்லா கலெக்டர் அவர்களை, இத்திட்டங்களைப்பற்றி கேட்டபோது, அவற்றை எடுத்துக்கொள்ளப் போவதாக உத்தேசமில்லை என்று பதில் அளித்தார். இத்தகவல் எங்களுக்கு மிகுந்த வருத்தமும் ஏமாற்றமும் அளித்தது. இதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறோம். அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் நலனில் அக்கறையில்லாமல் இருக்கும் நிலையையே இது குறிக்கிறது.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு அத்யாவச்யமானது மின்சார வசதி. இவ்வசதியைச் செய்து கொடுப்பதுபற்றி மின்சார இலாகா அமைச்சரவர்களிடம் சில விஷயங்களைக் குறிப்பிட்டு இருக்கிறேன். தற்போது 5 குதிரை வேகம் பம்பு செட்டுகள் வைத்து இருப்பவர்கள்—ஒரு குதிரை வேகத்திற்கு ரூ. 50 வீதம் ரூ. 250 டிபாஸிட் கட்ட வேண்டும். பம்பு செட்டை உபயோகித்தாலும் சரி, உபயோகிக்காவிட்டாலும் சரி, இந்த டிபாஸிட்டை கட்டவேண்டும். ஏரி, குளங்களில் தண்ணீர் இல்லாத காலத்தில்தான் பம்பு செட்டுகளை உபயோகிக்க வேண்டி இருக்கிறது. ஆகையினால், இந்த செட்டுகளை உபயோகிக்கும் காலத்தில் மட்டுமே இத்தொகையை வசூலிக்க வேண்டும். அல்லது இந்த டிபாஸிட் தொகையை ஒரு குதிரை வேகத்திற்கு ரூ. 50-க்கு பதிலாக, ரூ. 20, 25 வசூலிக்க வேண்டும். இவ்விதம் செய்தால், சர்க்கார் மீது ஜனங்களுக்கு நல்ல எண்ணம் ஏற்படும். இல்லாவிடில், இந்த சாதாரண விஷயம் பெரிய குற்றமாகத் தோன்றும். அதை எடுத்துச் சொல்லும்போது அங்கத்தினர்களாகிய நமக்கு தொந்திரவு விளைகிறது.

அடுத்தபடியாக காட்டிலாகாவைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முக்யமாக சேலம் ஜில்லா, ஹோசூர் தாலூகாவில் மிகவும் . . .

**DEPUTY SPEAKER:** The hon. Member's time is up. The hon. Member Sri M. P. Subramaniam will now speak.



2nd July 1957]

10-20 a.m.

**SRI M. P. SUBRAMANIAM:** அவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபையில் சமர்ப்பித்த வரவு செலவு திட்டம் பொது மக்களாலாவது அல்லது, இந்த சபையில் உள்ளவர்களாலாவது மகிழ்ச்சியுடனோ அல்லது உற்சாகத்துடனோ வரவேற்கத்தக்கதாய் அமையவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரவுசெலவு திட்டத்தில் நாட்டிலே சம்பள உயர்வு கோரினதற்கு நிவாரணமும், வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதற்கு உள்ள வழிகளையும் இந்த வரவு செலவு திட்டத்தில் அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று இப்போதும் எதிர்பார்த்தோம். கவர்னர் உரைமீது பேசிய போதும் எதிர்பார்த்தோம். அவ்விதமாக நிதி அமைச்சர் அவர்களுடைய சொற்பொழிவில் இதற்கு ஒரு விதமான பரிகாரமும் காணப்படவில்லை. இது வெறும் ஏமாற்றத்தைதான் தந்திருக்கிறது. இந்த வரவு செலவு திட்டத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரே ஒரு அம்சம் என்னவென்றால் கிராம உத்யோகஸ்தர்களுக்கு ஓரளவு சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். கிராம கர்ணத்திற்கு 7 ரூபாயும், கிராம முன்சீபுக்கு 5 ரூபாயும், கீழ்தர சிப்பந்திகளுக்கு 4 ரூபாயும், இவ்விதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையை நாட்டிலே எல்லா இடங்களிலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய குறைகளுக்கு நிவாரணம் கிடைக்காவிட்டால் ஸ்டைரக் செய்யப்போகின்றோம் என்று கூறியிருப்பதும் நாம் அனைவரும் அறிவோம். அவர்களுக்கு இன்றைக்கு அதிகமான வேலை பளு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக பல புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கும் இவை சம்பந்தமான வேலைகளுக்கும் அவர்கள் அதிகப்படியான வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் இரவு பகலாக செய்யக்கூடிய சேவை இன்று அரசாங்கத்திற்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. இந்த அரசாங்கத்தின் மீது அவர்கள் திருப்தி தெரிவிப்பதாக தெரியவில்லை. அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சம்பளம் அவர்களுக்கு போதாது. குறைந்தது இன்று அரசாங்கத்திலுள்ள கீழ்தர சிப்பந்திகளுக்கு கொடுக்கப்படும் பஞ்சப்படியாவது இவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். அவர்களுடைய குறைந்தபட்ச கோரிக்கையாவது இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த 7, 5, 4, ரூபாய் சம்பள உயர்வு அவர்களுக்கு திருப்தி அளிக்காது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதைத்தவிர மகிழ்ச்சி தரக்கூடியது ஒன்றும் இல்லை. வரி கூடுதலாக போடவில்லை என்ற ஒரு காரணத்தை மட்டும் நாம் பெரிதாக சொல்லுவதற்கில்லை. போடப்பட்டிருக்கிற இரண்டு வரிகளும் பொதுமக்களை பாதிக்காது என்பது உண்மைதான். ஆனால் வளர்ந்து வரும் பொதுமக்களுடைய அதிக தேவையை இந்த பட்ஜெட்டில் சரி செய்யவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்று கூறப்பட்டிருக்கும் பற்றாக்குறையான 333 லட்சம் ரூபாய் வருட கடைசியில் ஏற்படாது என்று நான் நம்புகிறேன். வேறு இனங்களிலுள்ள வரிகளையெல்லாம் கண்டிப்பாக வசூல் செய்வோமானால் அந்த தொகையை கொண்டும் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் தொகையைக்கொண்டும் இந்த பற்றாக்குறை தீர்ந்துவிடும். ஆனால் பல திட்டங்களை நிறைவேற்றிவைக்கக்கூடிய நிலையில் இந்த பட்ஜெட் தயாரிக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். இந்த வகையில் பொது ஜனங்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை. முதலாவதாக உணவு பிரச்னையை எடுத்துக்கொண்டால் முதல் ஐந்தாண்டு காலத்தில் உணவு பஞ்சம் தீர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அவை பின்னால் மறுக்கப்பட்டு வருகிறது. நாட்டில் உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை என்று உணவுப்பொருள்களின் விலை உயர்வால் கண்டு கொள்ள முடிகிறது. இந்த விலை உயர்வை தடுப்பதற்கு சென்னை அரசாங்கம் நல்ல திட்டங்களை எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். விவசாயிகளுக்கு தரிசாகக்கிடக்கும் நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்று இதற்காக ஒரு ஸ்பெஷல் தாசில்தார் நியமிக்கப்பட்டிருந்தும்கூட இதுவரை சரியான விதத்தில் விவசாயிகளுக்கு நிலங்கள்பகிர்ந்து கொடுக்கப்படவில்லை. மேலும் கொடுக்கப்படும் தரிசு நிலங்களை ஏழைகளுக்கு கொடுக்கப்படும் பொழுது அவர்கள் உடனேயே அதில் விவசாயம் செய்வதற்கு வழியில்லாமல் திண்டாடிக் கொண்டு

இருக்கிறார்கள். ஏனென்றால் இந்தவிதமான தரிசு நிலங்கள் எல்லாம் மழைபெய்து காய்ந்து அதிலுள்ள சத்துக்கள் எல்லாம் போய் இருக்கின்ற நிலங்களாகும். அதில் உடனேயே பயிர்செய்ய வேண்டுமென்றால் நல்ல உரம் போடவேண்டும். இந்த நிலங்களை இயந்திர கலப்பைகள் கொண்டு உழவேண்டும். இதற்கெல்லாம் ஏழைகளிடத்தில் வழியில்லை. ஆதலால் இதற்கு அரசாங்கம் வேண்டிய உதவிகள் செய்துகொடுக்க வேண்டும். இப்பொழுது **Central tractor organization** என்றிருப்பதை கலைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகையில் பார்த்தோம். யு.பி. (மத்திய பிரதேசம்) போன்ற இடங்களில் இவைகளை உபயோகப்படுத்தி பயன் பெற்று வருகிறார்கள். அதுமாதிரி அந்த இடங்களிலிருந்து நம் நாட்டுக்கு கொண்டு வந்து இரண்டாயிரம் ஏக்கர் நிலங்கள் என்றிருப்பதையெல்லாம் இந்த இயந்திர கருவிகளை கொண்டுவந்து பண்படுத்தவேண்டும். இதைப் பற்றி இந்த சபையில் பன்முறை சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். குறைவாகவுள்ள அதாவது 5 ஏக்கர் 10 ஏக்கர் என்றிருக்கிற நிலங்களை பண்படுத்துவதற்கு அந்தந்த இடங்களில் கிணறு வெட்டி கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தால் உணவு உற்பத்தி கூடுதலாகும். இதில் அரசாங்கம் உடனேயே கவனம் செலுத்தவேண்டும். இது தவிர இன்றைக்கு உணவுப் பெருள்களின் விலை அடிக்கடி ஏறியும் இறங்கியும் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 25 சதவிகிதம் விலை உயர்ந்துவிட்டதை நாம் காண்கிறோம். இன்றைக்கு உணவு தான்யங்களை பெருக்கும் விவசாயிக்கு அதிக வருவாய் இல்லை. ஆனால் சில சமயங்களில் விலை அதிகமாக கிடைக்கிறது. இதை ஒரு நிரந்தர வருவாய் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே உணவு தான்யங்களின் விலையை ஒரு நிரந்தரமான அடிப்படையில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதைப்பற்றி அரசாங்கத்தினிடம் கூறப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று அமைச்சர் அவர்களது பேச்சியிலிருந்து தெரியவில்லை. இப்படி உணவு தான்யங்களின் விலையை நிர்ணயிக்கின்ற நேரத்தில் மற்ற குடியானவர்கள் வாங்கும் பொருள்களான மற்ற சாமான்களின் விலையையும் கணக்கிட்டுப் பார்த்து உணவுப்பொருள்களின் விலையை நிர்ணயிக்கவேண்டும்.

அடுத்தபடியாக உணவு உற்பத்தி அதிகாமாகவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அரசாங்கம் இதுவரையில் உணவு உற்பத்திக்கு அவசியமாக வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவில்லை. பெரிய நீர்தேக்கங்களை கட்டிகொடுக்காவிட்டாலும் ஆங்காங்கு சிறிய ஏரிகள், குளங்கள் இவைகளை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். இதற்கு வேண்டி எவ்வளவோ விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள் ஆங்காங்குள்ள விவசாயிகள். ஒவ்வொரு ஜில்லாவிலும் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒரு மகாநாடு கூட்டி அதில் கலெக்டரின் முன்னிலையில் இம்மாதிரியான விண்ணப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. அவை சரியானபடி பரிசீலிக்கப்பட்டதாக தெரியவில்லை. ஏனென்றால் இதற்கெல்லாம் அதிக ரூபாய் செலவிடப்படவேண்டியிருக்கிறது என்று சொல்லி அதை எடுத்துக்கொள்ளுவதில்லை என்று தெரிகிறது. பெரிய திட்டங்களுக்கு 2,000, 3,000 ரூபாய் என்று செலவிடப்படுவதை நீக்கிவிட்டு இம்மாதிரி 200, 300 ரூபாய் செலவில் சிறிய அளவிலாவது நீர்தேக்கங்கள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று சொல்லுவதுதான் பொருந்தும். ஆகவே பெரிய நீர்தேக்கங்கள் உடனடியாக கட்டிக்கொடுக்கப்படாவிட்டாலும் சிறிய நீர்தேக்கங்களாவது ஆங்காங்கே ஏற்படுத்துவதற்கு அதிகமான பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது சென்ற ஆண்டைவிடவும் கூடுதலாக பணம் ஒதுக்கவேண்டும். அப்போது தான் உணவு உற்பத்தியை அதிகமாக்க முடியும் என்று அரசாங்கத்திற்கு சொல்லிக்கொள்கிறேன். அடுத்தபடியாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. அதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது. அதற்காக நாட்டிலுள்ள மக்கள் தியாகம் செய்வதற்கு தயாராக வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டில் செல்வம் இந்த திட்டங்களின் மூலம் அதிகமாகுமா என்று பார்த்தால் அதற்கான அறிகுறி ஒன்றும் கிடையாது. இன்னும் ஐந்து ஆண்டு



காலத்திற்குள் 10 லட்சம் பேர்களுக்கு சென்னை மாகாணத்தை பொறுத்த மட்டில் வேலை கொடுக்கமுடியும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியானால் ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும். இதுதவிர படித்தவர்களின் வேலையில்லா திண்டாட்டம் எவ்வளவோ இருக்கிறது. இவைகளையெல்லாம் தீர்ப்பதற்கு நம்முடைய மாகாணத்தில் ஏதாவது வழிகள் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக ஒன்றும் கிடையாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆங்காங்கே ஏதோ அரசாங்கம் ஒரு தீப்பெட்டி தொழிற்சாலை, ஒரு செருப்பு தைக்கும் தொழிற்சாலை என்று மாத்திரம் ஏற்படுத்திகொண்டிருந்தால் எப்படி இந்த 20 லட்சம் பேர்களுக்கும் வேலை கொடுக்கமுடியும் என்று அரசாங்கத்தை கேட்கிறேன். இன்னும் 2, 3, ஆண்டுகளுக்கு இங்குள்ள மக்கள் சரியானபடி வாழ வழி வகை செய்யும் திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்று துருவித் துருவி பார்த்தாலும்கூட நமது அரசாங்கத்தினிடத்தில் அதற்கென்று திட்டம் கிடையாது. ஆகவே ஒரு சில தொழிற்சாலைகளையாவது உடனடியாக நிறுவுவதற்கு, அல்லது தனிப்பட்ட நபர்களுக்கும் அரசாங்கமும் சேர்ந்தோ நிறுவுவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். சேலத்திலே கிடைக்கும் பாக்ஸைட், மாக்னேட் இவைகளை உபயோகித்து ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று எவ்வளவோ நாட்களாக கேட்கப்பட்டுவருகிறது. தென்னார்க்காடு ஜில்லாவில் நெய்வேலியில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்லி இப்போது 8 ஆண்டுகளுக்கு பிறகு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கூடுதலாக தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டியது மிக அவசியம். ஆனால் அந்த வகையில் இதில் எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**(The bell rang and the hon. Member concluded his speech.)**

SRI N. S. RAMALINGAM : கனம் உதவி தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது கனம் நிதி அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கும் வரவு 10-30 a.m.
செலவுத் திட்டத்திலே அடங்கியுள்ள பல நல்ல அம்சங்களுக்காக அதை நான் வரவேற்கிறேன். முதலாவதாக, பல முக்கியமான, அவசியமான செலவினங்கள் பல அதிகரித்திருந்தாலும் மற்ற இனங்களிலே அவற்றை ஈடுகட்டி இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த போதிருந்த பற்றாக்குறையை அதிகமாக்காமல் அதே அளவிற்கு சமர்பித்ததற்காக நான் அவர்களை பாராட்டுகின்றேன். இந்த வரவு செலவுத் திட்டத்திலே, நமது ராஜ்யத்தில் விவசாய அபிவிருத்திக்காகவும், தொழில்கள் வளரவும், நமது ராஜ்யம் முன்னேறுவதற்காக பல திட்டங்கள் இருப்பதற்காக நான் நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்திலே சேரிகளில் வாழும் மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் குறைந்த சம்பளம் வாங்குபவர்களுக்கும் பலவிதமான வசதிகள் செய்வதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருப்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் குறிப்பாக கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்திருப்பதில் நான் சந்தோஷம் அடைவதோடு நான் ஒரு யோசனையும் கூற விரும்புகிறேன். குறிப்பாக கீழ்தர பணியாட்கள் என்று செரல்லப்படும், வெட்டித் தலையாரிகளுக்கு 4 ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது, வரவேற்கத் தக்கது. இருந்தாலும் அவர்கள் செய்கின்ற வேலையில் அவர்களுக்கு வேறு வரும்படி கிடையாது. மற்றவர்களுக்கு பலவிதமான விதத்தில் வரும்படி வருகின்றன. ஆகவே நான் சொல்வது என்னவென்றால், நமது அரசாங்கத்திற்கு இருக்கும் செலவு நிலையை உத்தேசித்து அப்போதைக்கப்போது இன்னும் பிற்காலத்தில் கூடுதல் கொடுக்க முடியுமானால் அவர்களுக்கு கொடுக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள், மற்றவர்களைப் போல் "ஸ்டைரக்" செய்வோம் என்று பயமுறுத்தவோ மிரட்டவோ செய்வதில்லை. அவர்களின் நிலையை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு, அரசாங்கத்தின் பண நிலைமைக்குத் தக்கவாறு எப்பொழுது முடியுமோ அப்பொழுது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri N. S. Ramalingam] [2nd July 1957

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்காக சுமார் **134** லட்சத்திலிருந்து **194** லட்சமாக, அதாவது **50** சதவிகிதத்திற்கு கொஞ்சம் குறைவாக அதிகம் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. வழக்கமாக காட்டப்படும் சலுகைகளைவிட இப்பொழுது கூடுதல் சலுகைகள் காட்டப்பட்டுள்ளது. அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முக்கியமாக இந்த ஹரிஜன சேரிகளில் மின்சார விளக்குகள் போட திட்டமிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும், ஹரிஜன நண்பர்களைப் பொறுத்தவரையில் நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு இந்த அரசாங்கம் செய்யும் நன்மைகளை அவர்கள் உணரவில்லை. ஏனென்றால் அவர்களிடையே சிலர் ஊடுருவி விட்டார்கள். அப்படி ஊடுருவி ஜாதியின் கட்டுப்பாடால் அவர்கள் உண்மையை உணர முடியாமல் ஆக்கி எதிர்க்கட்சிக் கூட்டத்திற்குக் கூட வராமல் தடுத்துவிடுகிறார்கள். ஆகவே ஜாதியின் கட்டுப்பாட்டால் அவர்கள் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே, ஜாதியை ஒழிப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் காலத்தில் ஜாதி எவ்வளவு தூரம் எவ்வாறு வேலை செய்தது என்பது நமக்குத் தெரியும். ஜாதி வித்தியாசம், ஜாதி ஒழிய வேண்டுமென்று நமது இந்திய பிரதமரே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஜாதியை ஒழிப்பதற்கு நாம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு நமது மத்திய அரசாங்கம் வழிகாட்டியாக இருக்கிறது. "ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்" படி பத்திரம் பதிவு செய்யும்போது ஒருவரும் ஜாதி மதம் என்பதைக் குறிப்பிடக்கூடாது என்று சட்டம் செய்திருக்கிறது. அதைப் பின்பற்றி நமது அரசாங்கமும் நமது அரசாங்க தஸ்தாவேஜுகளிலும், அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலும் பொது இடங்களிலும் ஜாதியைக் குறிக்கும் எந்தவிதமான அடையாளங்களோ அல்லது சொற்களோ இருக்கக்கூடாதென்று சட்டம் செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அவர்கள் இப்பொழுதிருக்கிற சட்டங்களைத் திருத்தவோ அது முனிஸிபல் சட்டமாயிருந்தாலும் சரி, அல்லது பப்ளிக் ஹெல்த் சட்டமாயிருந்தாலும் சரி அவைகளை மாற்றவோ அல்லது வேறு புதிய சட்டங்களைக் கொண்டுவரவேண்டும். அடுத்தபடியாக, இந்த வருஷத்தில் **23** தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் கொண்டு வர திட்டமிடப்பட்டிருக்கிறது. அதில் குறிப்பாக எனது தொகுதியாகிய நாகபட்டினம் தொகுதியில் பெரும் பகுதிகள் பிற்போக்காயிருக்கிறது. அங்கு இந்த தேசீய விஸ்தரிப்பு திட்டத்தை அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தத் தொகுதி கடலோரத்தில் இருப்பதினால் அவர்கள் குடிதண்ணீர் வசதி கூட இல்லாமலும், போக்குவரத்து வசதி இல்லாமலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் இதுவரையில் அபிவிருத்தி அடையாததால் அபிவிருத்தி அடையாத அந்தப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டு அதை அபிவிருத்தி செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அதை விட்டுவிட்டு வேறு விதமான காரணங்களால் மற்ற பகுதிகளுக்குக் கொண்டு போகாமல் அபிவிருத்தி அடையாத பகுதிகளில் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் இன்னும் உற்பத்திக்கு வேண்டிய இடம் இருக்கிறது. சுமார், **3,000, 4,000,** ஏக்கர் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் சாகுபடி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. தண்ணீர் இல்லாமல் இல்லை. வீணாக கடலில் போகும் தண்ணீரை உபயோகப்படுத்தி அதற்கு வேண்டிய திட்டங்கள் (லிப்ட் இரிகேஷன்) செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். முதல் அமைச்சரவர்களையும் மராமத்து அமைச்சரவர்களையும் அங்கு வந்து நேரில் பார்த்து அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் **3,000, 4,000** ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யமுடியும். மகசூல் பெருகுவதோடுகூட அங்குள்ளவர்களுக்கு பிழைக்கவும் ஒரு வழி ஏற்படும். நமது உணவுப் பொருள்களையும் அதிகமாக்க முடியும். நமக்கு அந்நிய செலவாணி கிடைக்கச் செய்யும் முந்திரியை அங்கு போடலாம். ஆகவே, அங்கு முந்திரி செடி வளர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை முந்திரி மற்ற முந்திரிகளைவிட தசத்தில் உயர்ந்தது என்று நிபுணர்கள் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.



2nd July 1957] [Sri N. S. Ramalingam]

ஆகவே அங்கு முந்திரி வளர்ப்பதை அதிகரித்து அதோடு அதற்கு ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் தஞ்சை மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு வசதிகள் இருக்கின்றன. கேரளத்திற்கு அடுத்தாற்போல் அதிகமாக தென்னை அங்குதான் சாகுபடி செய்யப்படுகிறது. பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை போன்ற இடங்களில் இதன் சாகுபடி அதிகம். தென்னை சாகுபடியை நாம் அதிகப்படுத்தினால் நமக்கு வேண்டிய கயிறு உற்பத்தி செய்யலாம். அதற்கு ஒரு தொழிற்சாலையும் நிறுவ வேண்டும். நாகபட்டினம், வேதாரண்யம் போன்ற இடங்களில் உப்பளங்கள் இருக்கின்றன. அங்கு கிடைக்கும் உப்பிலிருந்து "டேபிள் சால்ட்" செய்ய ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாகபட்டினத்தில் "ஸ்டீல் ட்ரங்க்" என்ற பெயர் பெற்ற தொழில் இருந்தது. அது இன்று அழிந்து வருகிறது. அதற்கு ஊக்கம் கொடுத்து அதை மறுபடியும் புதுப்பிக்க வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக வேதாரண்யம் போன்ற இடங்களில் புகையிலை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. புகையிலையின் விலை குறைவாய் இருப்பதினால் அங்கு அவர்கள் அதை சாகுபடி செய்வதில்லை. குண்டூர் புகையிலை அமெரிக்காவிற்கு செல்லும்போது நம் நாட்டில் வேதாரண்யத்தில் கிடைக்கும் புகையிலையையும் வெளி நாடுகளுக்கு அனுப்பி நமது அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெருக்கலாமே. இதை அரசாங்கம் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் கல்லூரிகள் இல்லை என்று முதலில் சொன்னோம். இப்பொழுது அங்கு ஆர்ட்ஸ் காலேஜ் வந்துவிட்டது. அங்கு ஒரு தொழிற் கல்லூரியையும், மருத்துவக் கல்லூரியையும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தோம். டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் இருந்தபோது தஞ்சையிலோ, காரைக்குடியிலோ ஒரு மெடிக்கல் காலேஜ் வைப்பதாகச் சொன்னார்கள். பின்னர் திருச்சிராப்பள்ளியும் வந்து சேர்ந்தது. ஆனால் இப்பொழுது அம்மூன்று இடங்களும் போய் கோயம்புத்தூருக்குப் போவதாகக் கேள்விப்படுகிறோம். அதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதற்காக தஞ்சையைப் புறக்கணிக்க வேண்டாம். தஞ்சையிலும் ஒன்று வைத்துக் கொடுங்கள். அங்கு ஒரு பெரிய மருத்துவக் கல்லூரி வைக்காவிட்டாலும் (**Integrated Medicine College**) இன்டிகிரேட்டு காலேஜாவது வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு அதிக சிலவுமாகாது. நாகபட்டினத்திற்கு குடி தண்ணீர் பைப்புகள் மூலம் **13** மைலுக்கப்பாலிலிருந்து வருகின்றன. அந்த பைப்பகள் **20** வருடத்தில் மாற்றியிருக்க வேணடுமாயினும் அவைகள் போட்டு **40** வருடங்கள் ஆகியும் மாற்றப்படவில்லை. அவைகளை மாற்ற முனிசிபாலிட்டிக்கு பண உதவி செய்யவேணடுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER**: The hon. Member's time is up.

**SRI N. S. RAMALINGAM**; I have two more minutes, Sir.

தஞ்சை மாவட்டத்தில் துறைமுகங்கள் பல உள்ளன. அவைகளில் நாகபட்டினம் துறைமுகம் சிறந்திருக்கிறது. சென்னை துறைமுகம் மிகவும் "கன்ஜெஸ்டெட்" ஆக இருக்கிறது. ஆகவே நாகபட்டினம் போன்ற துறைமுகங்களை அபிவிருத்தி செய்து அவைகளுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும். கோடியக் கரையில் ஒரு துறைமுகம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அடுத்தபடியாக மாவட்டப் பிரிவினையை எடுத்துக்கொண்டால் புதுக்கோட்டையை தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டம் வேண்டுமென்று அங்குள்ள எனது நண்பர்கள் சொல்லுகிறார்கள். அது நியாயம்தான். அதோடு சிதம்பரம் தாலுக்கா தஞ்சை ஜில்லாவை அடுத்து இருப்பதால் அங்குள்ள மக்கள் விரும்பினால் அதை தஞ்சையோடு சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக தமிழ் நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டின் வட எல்லையாக வடவேங்கடம் சொல்லப்பட்டிருக்கிறது. அது நமக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டிய நடவடிக்கைகள் எடுக்க

வேண்டும். அடுத்தபடியாக, நேற்றைய செய்தித் தாளில் ஒரு செய்தி வந்தது. இன்றைய தினம் செய்தித் தாளிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அதன் பிரகாரம் நமது மருத்துவக் கல்லூரியிலே மலையாள நண்பர்களை சேர்த்துக் கொள்வதாகக் கேள்விப்படுகிறேன். சுமார் 26 மாணவர்கள் இந்த வருஷம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று தெரிகிறது. அந்த அளவுக்கு நமது தமிழ் நாட்டு மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆதலால் நமது சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு இதை எடுத்துக்கூறி இந்த 26 இடத்தை நமது தமிழ் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை சொல்லுகிறேன். வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி அதிகமாக பேசப்பட்டது. அரசாங்கக் கொரடா அவர்கள் வேலை செய்யாத திண்டாட்டம் தான் இருக்கிறது என்று சொன்னார்கள். எத்தனையோ ஆஸ்பத்திரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் கிராம கூட்டுறவு சங்கங்களிலும் மேற்பார்வைக்கு வேலைக்கு ஆள் இல்லாமல் இருக்கிறது. என்னுடைய அனுபவத்தில் கிராமத்திலுள்ள விவசாயத் தொழிலாளிகள் முன்பு செய்த வேலையில் நான்கில் ஒரு பங்குகூட செய்யவில்லை. ஹிந்துப் பத்திரிகையில் தலையங்கம் கூறியிருப்பதுபோல் 1938–39-ல் வசூல் செய்த நிலவரியில் 15 சத விகிதம் குறைத்து தான் இப்பொழுது வசூல் செய்யப்பட்டாலும், அதற்காக செலவழிக்கப்படும் பணம் நான்கில் ஒரு பங்கு அதிகமாக இருக்கிறது. அதிலிருந்து எல்லோரும் வேலை செய்யக்கூடிய அளவு வேலை செய்யவில்லை என்பது புலப்படுகிறது. இந்த பட்ஜெட் உரையை நான் வரவேற்கின்றேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சைமுடித்துக் கொள்கிறேன்.

**Sri C. MUTHIAH PILLAI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலிலே நான் சென்ற வருஷத்தில் அடைந்த ஏமாற்றத்தைப்பற்றி முதல் அமைச்சர் அவர்களை கண்டிக்க விரும்புகிறேன். மெடிகல் காலேஜில் ஒரு இடத்துக்காக என்னை பொது மக்கள் சென்னைக்கு வரவேண்டுமென்று விரும்பி காரில் வைத்து அழைத்து வந்தார்கள். நான் மாகாண காங்கிரஸ் கமிட்டி மெம்பர் என்ற முறையிலும், ஜில்லா காங்கிரஸ் காரிய தரிசி என்ற முறையிலும் எனக்கு அமைச்சர்களை பேட்டி காண செல்வாக்கு இருக்கும் என்றும் நினைத்து அழைத்து வந்தார்கள். நான் இது விஷயமாக முதல் அமைச்சரை பேட்டி கண்டேன். அவரும் எப்பொழுதும் போல் "பார்க்கலாம்" என்று சொன்னார்கள். என்கூட வந்தவர்களையும் முதல் அமைச்சர் அவர்களை பேட்டி காணுவதற்காக அவர் முன் கொண்டுவந்து நிறுத்தினேன். அப்பொழுதும் "பார்க்கலாம்" என்று சொன்னார்கள்.

**DEPUTY SPEAKER** : இதைப்பற்றி பொது விவாதத்தின்போது பேசாமல் தனிப்பட்ட முறையில் பேசுவது நல்லது.

10–40 a.m. **Sri C. MUTHIAH PILLAI** : பின்னாலேயே பொதுப்படையாக மருத்துவ கல்லூரியைப்பற்றி சொல்லுகிறேன். பிறகு நிதி அமைச்சர் வீட்டுக்குச் சென்றேன். அவர்கள் பையன் என்ன மார்க்கு வாங்கியிருக்கிறான் என்று கேட்டபொழுது 71 சதவிகிதம் வாங்கியிருப்பதாகச் சொன்னேன். அப்படியென்றால் தானாகவே இடம் கிடைத்துவிடும் என்று சாமர்த்தியமாக சொல்லி அனுப்பிவிட்டார். விவசாய அமைச்சர் அவர்களை பார்க்கப்போனபொழுது ஸ்விட்ஸர்லாந்து போயிருப்பதாகத் தெரிய வந்தது. பாக்கி அமைச்சர்களை பார்த்து ஒன்றும் நடக்காது என்று கருதி ஊருக்குப் போய்விட்டேன். பிற்பாடு பார்த்தால் மருத்துவக் கல்லூரியில் அந்த மாணவனுக்கு இடம் கிடைக்கவேயில்லை. பிறகு முதன் மந்திரி அவர்கள் வீட்டுக்கு வந்து பார்த்தால் 100 ஏமாற்றக் கடிதங்கள் வந்திருந்தன. அதேபோல் ஏமாந்ததில் நானும் ஒருவன் என்று நினைத்துக்கொண்டேன். இம்மாதிரியாக தொழில் கல்லூரிகளில் சேரமுடியும் என்று நினைத்து ஏமாறக்கூடிய நிலை நீடிக்கவிடக்கூடாது. போதிய அளவு கல்லூரிகள் இல்லாததால் இம்மாதிரி மோதல்கள் ஏற்படுகின்றன. ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற தொழில் அனுபவம் பெற்றவர்கள் அதிகமாக வேண்டியிருக்கிறது. ஆகையால் எல்லோருக்கும் இடம் கிடைக்கும்படி



அதிக தொழில் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கூறிக்கொண்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் உரையை முழுமனதுடன் பாராட்ட விரும்புகிறேன்.

முதலாவதாக கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையை நான் வரவேற்கிறேன். முன்னாள் கிராம உத்தியோகஸ்தன் என்ற முறையிலும், பல கிராம ஊழியர் சங்கங்களில் அங்கம் வகிப்பவன் என்ற முறையிலும் அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிக சம்பள உயர்வு கொடுத்ததற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். உதாரணமாக கர்ணம் 5 ரூபாய் உயர்வு கேட்டார். அவருடைய சம்பளம் ரூ. 25-லிருந்து ரூ. 32 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்துப் போடும் சம்பளமாவது வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுக்கு 25 ரூ. கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு சம்பளம் உயர்த்திக் கொடுத்ததோடு நில்லாமல் கிராமங்களை அவசியமாக சீரமைக்க வேண்டும். ஒரு கிராமத்தில் வரும் ரெவின்யூ வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு கிராம உத்தியோகஸ்தர்களுக்காக செலவழிக்கப்படுகிறது. ஒரு கிராமத்திலே 7 உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு ஏகரேஜ் இருக்கிறது, எவ்வளவு உத்தியோகஸ்தர்கள் தேவை என்று கூடிய சீக்கிரம் கணக்கெடுத்து சிக்கனத்தை கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த பட்ஜெட்டில் புதிய வரிகள் இல்லை. புது வரிகள் அவசியம் தேவை. ஆனால் அந்த வரிகள் எப்படி இருக்கவேண்டுமென்றால், பஞ்சாயத்துக்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் அதிகமாக வரி போடவேண்டும். ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களுக்கு அதிகமாக வரி போடுவதற்கு அதிகாரம் அளிக்கப் படவேண்டும். அரசாங்கம் இந்த முறையில் அதிக வரி போடவேண்டுமென்று பொறுப்புள்ள முறையில் சொல்லுகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு புது வரிகள் போட்டு வசூலிக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கத்தை அணுகி ருசியுடன் வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்கலாம். இம்மாதிரி வரி போடுவதால் மக்களுக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படாது.

அடுத்தபடியாக, தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நல திட்டம் இவைகள் ஆரம்பிக்கப்படும்பொழுது பல பிரச்னைகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பகுதியில் ஸ்தல ஸ்தாபன மந்திரி அதிக கவனம் செலுத்த வேண்டும். எல்லாப் பகுதிகளிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டனவா என்று கவனிக்க வேண்டும். பஞ்சாயத்துக்கள் அமைக்கப்படாவிட்டால் செய்த வேலைகள் அந்த இடத்திலே பராமரிக்கப்படுவதில்லை. உதாரணமாக, ஒரு பகுதியில் பம்பு போட்டாலோ அல்லது ரேடியோ வைத்தாலோ, அந்த கிராமத்திலே பஞ்சாயத்து இல்லாவிட்டால் அவைகள் யார் பராமரிப்பில் இருக்கவேண்டுமென்பது புரியவில்லை. இவைகளையெல்லாம் ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்கள் கவனிக்க வேண்டும். அக்டோபர் 2-ம் தேதி 23 புதிய பிளாக்குகள் ஏற்படுத்தும்பொழுது எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து தகுந்த இடங்களில் பிளாக்குகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பட்ஜெட் உரையிலே ஸ்தல ஸ்தாபனங்களைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. சென்ற வருஷங்களில் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இழுக்காடுகளைக் களைந்து நல்ல முறையிலே சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்தல ஸ்தாபனங்கள் நல்ல முறையில் அமைந்தால்தான் அரசாங்கத்திற்கு நல்ல பெயர் உண்டாகும். அரசாங்கமும் நல்ல முறையில் நடைபெற ஹேதுவாக இருக்கும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். சில சிறிய உத்தியோகங்களுக்கு ஆள் இல்லாமல் காலியாகவே இருக்கின்றன. காரணம் **Trained personnel** இல்லை. இந்த ஆண்டு திட்டத்திலே எத்தனை பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தப் போகிறார்கள், என்ன திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி பட்ஜெட் உரையில் ஒன்றும் சொல்லப்படாவிட்டாலும், இதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கிறேன்.

0-50 a.m. மேலும் இந்த தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தை அமுல் நடத்தும் பகுதிகளில், சில பிளாக்குகளில் 40 கிராமங்கள் உள்ளன. இன்னும் சிலவற்றில் 120 கிராமங்கள் இருக்கின்றன. 40 கிராமங்கள் உள்ள பிளாக்கின் ஜனத்தொகை 80,000. ஆனால், 120 கிராமங்கள் உள்ள பிளாக்கின் ஜனத்தொகை 2 லட்சம். 40 கிராமங்கள் உள்ள பிளாக்குக்கு ரூபாய் ஏழு லட்சம் செலவிடப்படுகிறது. அதே சமயத்தில் 120 கிராமங்கள் உள்ள பிளாக்குக்கும் அதே ஏழு லட்சம்தான். இதனால் எப்படிப் பயனடைய முடியும். சமுதாய நலத்திட்டத்தை துவக்கும்போது பெரிதாக இருக்கக்கூடிய பிளாக்குகளை பைபர்கேட் (bifurcate) செய்து பிரிக்கவேண்டும் என்று சொல்லுகிறேன். அப்போதுதான் 40 கிராமங்கள் உள்ள பிளாக்குக்கு கிடைக்கக்கூடிய சலுகைகள் 120 கிராமங்கள் உள்ள பிளாக்குக்கும் கிடைக்க வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையிலே இப்போது இருக்கும் எச். ஆர். ஈ. ஆக்டைத் திருத்த ஒரு பில் வரும் என்று சொல்லியிருந்தார்கள். மற்றும் சில சீர்திருத்தச் சட்டங்களும் வரும் என்று சொன்னார்கள். இந்த எச். ஆர். ஈ. ஆக்டைப்பற்றி ஏதோ கோர்ட்டிலே சொன்னதாகவும் அதனால்தான் இந்நத் திருத்தமென்றும் சொன்னார்கள். இந்தச் சட்டத்தில் அதிக சீர்திருத்தம் செய்யவேண்டி இருக்கிறது. தர்ம ஸ்தாபனங்கள் தஞ்சை ஜில்லாவில் அதிகம். அங்கு இருக்கக்கூடிய அட்டூழியங்களைப்பற்றி எல்லாருக்கும் தெரியும். இந்த சட்டத்தில் முக்கிய குறைபாடுகள் என்னவென்றால் அந்த மாதிரித் ஸ்தாபனத்திலுள்ள பணத்தை தர்மத்திற்குச் செலவழித்தது போக, பாக்கியுள்ள பணத்தை மக்களுக்கான பல நல்ல காரியங்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் செலவழிக்க வேண்டும். ஸ்ரீ என். எஸ். ராமலிங்கம் அவர்கள் ஊரிலே காலேஜ் ஏற்படுத்த ரூபாய் 80 லட்சம் தருவதாகச் சொன்னார்கள். தஞ்சையில் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், யார் கொடுப்பதாக இருக்கிறார்கள். கொடுத்தால் ஆரம்பிப்பார்கள் என்று சொல்லுகிறார்கள். தர்ம ஸ்தாபன சட்டத்தைத் திருத்தி, அந்த அதிகப் பணத்தைக்கொண்டு எத்தனையோ காலேஜுகள் கட்டலாம். சோஷலிஸ, அதாவது ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைக்க வேண்டுமானால், அந்த அதிகமான புணத்தை தர்மகாரியமாக நடந்தது போக பாக்கியை மக்களுக்குப் பயன்படும் நல்ல காரியங்களை நடத்த உபயோகிக்கப்பட்டால் சோஷலிஸ பாணியில் நடத்தியதாகும்.

**DEPUTY SPEAKER** : இன்னும் இரண்டு நிமிஷந்தான் பாக்கி இருக்கிறது.

**SRI C. MUTHIAH PILLAI** : சென்னை ராஜ்யத்தில் திருவாரூருக்கு அருகே தரங்கம்பாடி என்று ஒரு இடம் இருக்கிறது. ஊட்டி, கோடைகானல் போன்ற இடங்கள் போல இருக்கும். இதனுடைய பிரதான சிறப்பு, அதன் காற்று, டாக்டர்களெல்லாம் இந்த இடம் எல்லா வியாதிகளும் குணமாவதற்கு ஏற்ற இடம் என்கிறார்கள். நமது அமைச்சர்களும் வந்து தங்கினார்கள். இங்கு எல்லோரும் வந்து தங்குகிறார்கள். இதைச் சீரமைப்புப்படுத்தினால் எல்லோருக்கும் வசதியாக இருக்கும் என்று சொன்னோம். அதற்கு ஜியாலாஜிகல் டிபார்ட்மெண்டுக்கு எழுதுகிறோம், இது அவர்கள்தான் பராமரிக்க வேண்டிய இடம் என்று சொன்னார்கள், இப்போது வெளியிலிருந்து வருபவர்கள் கலைக்காகக் கூடும் இடமாகத்தான் இருக்கிறது. நமது மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி இந்த இடத்தை ஒழுங்கான முறையில் சீர்திருத்த ஏற்பாடு செய்யவேண்டும். நமது மந்திரிகள் ஊட்டிக்கும் கோடைக்கானலுக்கும் போவதுபோல் தரங்கம்பாடிக்கு வந்து தங்கினால் அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொண்டு அரசாங்கம் இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தயை முடித்துக்கொள்ளுகிறேன்.





**SRI V. SUBBIAH** : உப சபாநாயகர் அவர்களே, இந்த 1957–58-ம் வருஷ பட்ஜெட்டைப் படித்துப்பார்த்ததில், பெரும்பகுதி அரசாங்க வருமானத்தில் நிர்வாக இனங்களிலே செலவழிக்கப்படுகிறதென்று தெரிகிறது. ஓரளவு பரந்த நோக்கத்தோடு பார்த்தால், சில இனங்களில் ஜாஸ்தியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், இந்த முறையில் செயல்படுகின்ற நிலைமைப்பற்றி சிறிது யோசிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு ரூபாய் 225 லட்சம் கடனுக்காக ஒதுக்கப்படும் என்று இருக்கிறது. இன்றைக்கு அந்தப் பணத்தில் எவ்வளவு அவர்களிடம் போய்ச் சேரும் என்ற நிலையை நினைத்துப் பார்க்க முடியவில்லை. அந்த அளவிலே, கடன் கொடுக்கும் முறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று பிரத்யக்ஷமாகப் பார்த்திருக்கிறோம். கிராமங்களிலே இப்போது விவசாயிகள் இருக்கிறார்கள். அங்குள்ள நிலங்கள் ஜமீன், இனாம்தாரி இதைச் சேர்ந்தவை. சர்வே, செட்டில்மெண்டு செய்யப்படாமல் இருப்பதால் கடன் கொடுக்க பல கஷ்டங்கள் இருக்கின்றன. தாலூகா ஸர்வேயர், ஜில்லா ஸர்வேயர் இவர்களைப் பார்த்து வில்லங்கங்கள் இல்லை என்று தீர்ந்த பிறகு, அதற்குப் பின் கர்ணம், தாசில்தார் இவர்களை எதிர்பார்த்து வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. எத்தனை சத வீதம் இன்றைக்கு அவர்களுக்குப் போகின்றது என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த முறையில் கடன் கொடுக்காமல் “லாப்ஸ்” ஆகி பல கோடி ரூபாய்கள் அரசாங்கத்திற்கு வருகிறது என்பதையும் சிந்திக்க வேண்டும். அது மட்டுமல்ல. பட்ஜெட்டில் விவசாய அபிவிருத்தி வேலைகளுக்கான நல்ல திட்டங்கள் பல விடப்பட்டிருக்கின்றன என்பது என் சொந்த அபிப்பிராயம். இப்போது விவசாயிகளுக்கு விவசாய விளைபொருள்களைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம் இன்னும் செய்யப்படவில்லை. விளைபொருள்களுக்கு குறைந்த பட்ச விலையை நிர்ணயிக்க ஒரு போர்டு நியமிக்கப்படாமல் இருக்கிறது.

கால்நடைகள் சம்பந்தமான திட்டங்கள் சேர்க்கப்படவில்லை. சர்வே ஏற்படுத்துவது மிக மிக அவசியம். அது மட்டுமல்ல. விவசாயிகளுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருக்கின்றது. இன்றைக்கு நகரத்திலே தீயணைக்கும் படை இருக்கிறது. கிராமங்களில் கிடையாது. சில பிர்கா, தாலுக்காக்களில் கூட இல்லை. போலீஸ் ஸ்டேஷன் நகரத்திலேதான் அமைக்கப்படுகிறது. விவசாயத் தொழில் செய்யும் விவசாயிகளுக்குக் குறைந்த பக்ஷ விலை நிர்ணயம் செய்ய மத்திய சர்க்காரோ, அல்லது மாகாண சர்க்காரோ உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு பலவிதமான கடன்கள் அளிப்பதற்குக்கூட திட்டங்கள் இல்லை. அதனால் அவர்கள் உயர முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இந்தத் திட்டத்திலே ஒன்றுமில்லை. திருநெல்வேலி ஜில்லா, சங்கரன்கோவில், கோவில்பட்டி இவைகளுக்குப் பெரிய திட்டம் இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து பெரிய நதிகள் உற்பத்தியாகி கடலிலே விழுகிறது. இந்த மாநில அமைச்சராக இருந்த காலம் சென்ற சிவஞானம் பிள்ளை அவர்கள் காலத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம் இன்றளவு செயல்படாத முறையிலே, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகும் நதிகளின் நீரைக் கிழக்கே திருப்ப, மற்ற மாகாணங்களோடு உடன்பாடு ஏற்படவேண்டுமென்று கண்டிருக்கிறது. இது எப்போது செய்யப்படும் என்று திட்டவட்டமாக ஒன்றும் சொல்லாத நிலையிலே இருக்கிறது.

அது மட்டுமல்ல கிராமங்களில் மராமத்து இலாகா சரியாக வேலை செய்வது இல்லை. கிராமங்களிலுள்ள ரோடுகள் ரொம்பவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அங்குள்ள ரோடுகளில் மனிதன் கூட நடந்து போக முடியாமல் இருக்கிறது. ரோடுகளுக்கு மராமத்து இலாகா சரியானபடி ‘மெட்டல்’கள் போடுவது இல்லை. இது எதனால் ஏற்படுகிறது என்றால் ரோடுகளைப் போடுவதற்கு கண்ட்ராக்டுக்கு விடும் கண்ட்ராக்டர்களிடம் தான் குறைப்பாடு இருக்கிறது. அவர்கள் அதிகப்படியாக லஞ்சம் கொடுத்து வருவதால் அவர்கள் சரியாக ரோடுகளைப் போடாமல் விட்டு விடுகிறார்கள். அதனால் ரோடுகளைப் போடும் வேலையை கண்ட்ராக்டர்களுக்குக் கொடுக்காமல் 11 a.m.

அந்த முறையையே எடுத்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களால் தான் லஞ்சம் அதிகரிக்கிறது. எந்த டிபார்ட்மெண்டில் அதிகப்படியாக லஞ்சம் இருக்கிறது என்றால் இப்படிப்பட்ட கண்ட்ராக்டர்கள் இருக்கக்கூடிய மராமத்து, ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் தான் அப்படி இருக்கிறது. அவர்களால் தான் அரசாங்கத்ததின் கோடி கணக்கான ரூபாய் கிராமங்களுக்கு செலவு செய்யப்படாமல் விரயமாகிறது. இன்றைக்கு மலேயாவை எடுத்துக் கொண்டால் அங்கு இங்கு இருப்பது போன்ற கண்டராக்ட் வேலை கிடையாது. ரோடுகள் போடுவதை அங்கு கண்ட்ராக்டர்களுக்குக் கொடுக்காமல் அரசாங்கமே எடுத்து நடத்துகிறார்கள். அரசாங்கத்தினுடைய கண்காணிப்பில் அது அங்கே நடந்து வருவதால் அங்குள்ள ரோடுகள் எவ்வளவோ நன்றாக இருக்கின்றன. இப்படி நான் சொல்வதை அதாவது ஒரு வருஷமாவது ரோடுகள் போடும் வேலையை கண்ட்ராக்டர்களுக்கு விடாமல் அரசாங்கமே எடுத்து தங்களுடைய மேல் பார்வையில் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி பரிட்சை பார்த்து அதன் பிறகு எது நன்மையாக இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு அதன்படி செய்து கொள்ளலாம். இதன் மூலம் லஞ்சம் கொடுக்கும் முறையும் கொஞ்சம் குறையும் என்பது என்னுடைய அபிப்பிராயம். கனம் மந்திரி அவர்கள் இதைப்பற்றி யோசனைசெய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இன்னொரு பெரிய பிரச்னை நாட்டில் இருந்து வருகிறது. அதாவது அரசியல் தியாகிகளின் பிரச்னை. நாட்டின் விடுதலைக்காக அநேகம் பாடுபட்ட தியாகிகள் இப்பொழுது ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றி இப்பொழுதுள்ள அரசாங்கம் கொஞ்சம் கூட சிந்திக்காமல் இருக்கிறது. அவர்கள் நாட்டிற்காக பாடுபட்டு நசித்துப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று இந்த பட்ஜெட்டில் கொஞ்சம் கூட பணம் ஒதுக்க வில்லை. ஆனால் பின்னாடி பார்த்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் இருக்கலாம். அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லவில்லை. அவர்களைப்பற்றி சென்ற கூட்டத்தில் பேசியிருக்கிறேன். அரசாங்கத்திற்கு ஞாபகம் இருக்கிறதா இல்லையா என்பது கூட தெரியவில்லை. ஆனால் பட்ஜெட்டில் புதிய திட்டங்கள், நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் கிராமங்களுக்கு வேண்டிய திட்டங்கள் அநேகம் இல்லை. நெருப்பு இன்ஷூரன்ஸ், கால்நடை இன்ஷூரென்ஸ் போன்ற திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம் பெறவில்லை. அப்படிப்பட்ட திட்டங்களை கிராமவாசிகளுக்கு அமைத்துக் கொடுத்திருந்தால் கிராமத்தார்கள் எவ்வளவோ சுபிட்சமாக வாழ்வதற்கு வசதியாக இருக்கும். இல்லாவிட்டால் அவர்கள் சுபிட்சமாக வாழ்வார்கள் என்பதை எதிர்பார்க்கமுடியாது.

பட்ஜெட் அறிக்கையில் சில இடங்களை பஞ்சப் பிரதேசமாகக் கருதப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதிலும் சங்கரன் கோவில், நாங்குநேரி பகுதிகள் பஞ்சப் பிரதேசமாகக் கருதப்படும் என்று சொல்லி இருக்கி ர்கள். அங்கு மகசூல் கிடைக்கவில்லை. எக்கருக்கு இரண்டு அல்லது மூன்று பகுதி வரக்கூடிய இடங்களில் சரியாகவே மகசூல் கிடைக்கவில்லை. அதனால் கிராமங்களிலுள்ள பொருளாதார நிலைமை ரொம்பவும் மோசமாகிக் கொண்டு வருகிறது. அப்படி அவர்களுடைய நிலைமை இருக்கும்போது மின்சார இலாகா என்ன சொல்லுகிறார்கள் என்றால் தண்ணீர் இல்லை கிணறுகள் தோண்ட வேண்டும் என்று மின்சாரம் கேட்டால் அதற்கு குறைந்த பட்ச கட்டணம் அதாவது 200, 300 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கிராமத்தார்களுக்கு அப்படிக் கட்டுவதற்கு பணம் இல்லை. இந்த நிலைமையில் விவசாயிகளுக்கு என்று 2 கோடி 25 லட்சம் ரூபாய் கடனுக்கு என்று ஒதுக்கி வைத்து என்ன பிரயோசனம். ஒதுக்கி வைத்து விட்டால் மட்டும் அவர்களுக்கு திருப்தி அளித்து விடாது. அவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



கடைசியாக விலைவாசிகளைப் பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. தற்போது கிராமங்களில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாமல் இருப்பதால் விவசாயிகள் தங்களுக்கு எப்படிப்பட்ட மகசூல் கிடைக்கும் என்ற தைரியம் இல்லாமல் இருக்கிறார்கள். விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய தானியங்களின் விலையைக் கட்டுப்பாடு செய்தால்தான் அவனுக்கு தைர்யம் ஏற்பட்டு நல்லபடி விவசாயம் செய்ய முடியும். அதற்காக ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஒரு கமிட்டியை நியமிக்கும்போது விவசாயிகளுடைய பிரதிநிதி ஒருவரும் அரசாங்கத்தினுடைய பிரதிநிதி ஒருவரும் வியாபாரிகளுடைய பிரதிநிதி ஒருவரும் அடங்கிய ஒரு கமிட்டியை அமைத்து விளைபொருள்களின் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதுடன் பண பொருள், மிளகாய், வெங்காயம், சிலோன் ஏற்றுமதிப் பொருள்கள் இவை உற்பத்தி செய்யும்போது உள்ள மார்க்கெட் நிலவரம் விவசாயி விற்ற உடன் திடீரென்று கூடுதலாவதைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்படி நிர்ணயம் செய்தால்தான் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்படி நிர்ணயம் செய்தால் தான் கண்டிப்பாக இன்றைக்கு தனக்கு எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்ற தைரியம் அவனுக்கு ஏற்படும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கனம் அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

கடைசியாக இந்த பட்ஜெட்டில் சிக்கனத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பல அபிவிருத்தி திட்டங்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமுதாய நல திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்கள் இவைகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. இவைகள் நல்ல முறையில் செயல்பட்டு கிராமங்களுக்கு சௌகரியங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் இப்பொழுது சில பிளாக்குள் சரிவர வேலை செய்யவே இல்லை. ஆகவே அதையும் அரசாங்கம் கொஞ்சம் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு ஒரு யோசனையையும் நான் சொல்கிறேன். புது ஆபிசர்களை அங்கு நியமிக்காமல் பழைய உத்தியோகஸ்தர்களையே அங்கு நியமிக்கவேண்டும் 11-05
என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் a.m.
கொள்ளுகிறேன்.

**SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலில் இந்த வரவு செலவு திட்டத்தைக் கொண்டு வந்த கனம் நிதி அமைச்சருக்கு நான் ஒரு உபசாரம் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் இது பற்றுக்குறை பட்ஜெட்டாக முழுவதும் இல்லை. ஆனால் அதை முழுவதும் ஈடும் செய்யவில்லை, சரிக் கட்டவேண்டும் என்கிற முறையில் ஓரளவு முயற்சி செய்து கூடுமான வரையில் நமது சூழ்நிலைக்கு தக்கபடி ஒரு நல்ல பட்ஜெட்டை தயாரித்ததற்கு நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

நம்முடைய இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்தினுடைய குறிக்கோளில் கட்சிகளுக்கிடையே அபிப்பிராய பேதம் இல்லை என்றே நான் உறுதியாக நம்புகிறேன். அதனால் இந்த ஐந்தாண்டு திட்டத்தை அமுல் நடத்துவதில் அதன் குறிக்கோளில் எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் இந்த திட்டத்தை நிறைவேற்ற நாம் சோஷலிஸ முறையில் முன்னேற முன் வர வேண்டும். எந்த எந்த வரிகளை எந்த எந்த மாதிரி மாற்றி அமைக்கலாம், எந்த எந்த முறையில் புது வரிகளைப் போடலாம் என்பதை யோசிக்க வேண்டும். அப்படி புது வரிகளைப் போடுவதற்கு நாம் பயப்பட வேண்டாம். புது வரிகளைப் பற்றி கிராமங்களுக்குச் சென்று எடுத்துச் சொன்னால் அவர்கள் கொடுக்க தயாராக இருப்பார்கள். எந்த அளவில் அது கிடைக்குமோ அந்த அளவில் அதை நாம் கேட்கலாம். அந்த முறையில் கேட்டு நாம் இந்த ஐந்தாண்டு திட்டத்தை நல்ல முறையில் நிறை வேற்றலாம். இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இரண்டாவது வருஷத்திற்கு நாம் திட்டம் போட்டிருக்கிறோம். நமக்குக் கிடைக்கக் கூடிய பணத்திலிருந்தும் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கக் கூடிய பணத்தை

[Srimathi T. S. Soundaram Ramachandran] [2nd July 1957

வைத்துக் கொண்டும் புது வரிகள் போட்டு எவ்வளவு தூரம் அவைகளை வசூலித்து செலவிடலாம் என்பதையும் கணக்கிட்டு இதை நிறைவேற்றலாம். எவ்வளவு பணம் நாம் திரட்டலாமோ அதைத் திரட்டுவதற்கு நரம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி பணத்தை வசூலித்து எல்லா கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து திட்ட மிட்டதை நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவில் நம்முடைய வரவு செலவு திட்டம் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக எல்லா கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக இந்தத் தடவை நாம் பெரிய கடனை எழுப்பப் போவதில்லை. போன தடவை நாம் கடன் எழுப்பியபோது அதிகப்படியாக ரொக்கம் வசூலாகா விட்டாலும் பாங்குகள் மூலமாக அவர்களுடைய ஒத்துழைப்பினால் அதிகப் படியாக பணம் கிடைத்தது. சிறு சேமிப்பு மூலமாகவும் எல்லா அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பினாலும், நாம் இந்த திட்டத்தை நிறைவேற்றலாம். இதில் கட்சி பாகுபாடுகள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இது அவரவர்களுடைய பொறுப்பு என்று கருதவேண்டும். இப்பொழுதுள்ள இரண்டு கோடி பற்றாக்குறையை சமாளிப்பதோடு மூலதனத்திலும் நமக்கு பற்றாக்குறை இருக்கிறது. இன்னும் அதை அதிகமாக திரட்டுவதற்கு இன்னும் தக்கபடி பட்ஜெட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். அந்த முறையில் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரசாங்கத்தின் நிர்வாகத்தைப்பற்றி கொஞ்சம் சொல்லாமல் இருக்க முடியாது. அதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். அரசாங்க நிர்வாக வேலை ரொம்பவும் துரிதப்பட வேண்டியதாக இருக்கிறது. கிராம நிர்வாகம் முதற்கொண்டு ஜில்லா நிர்வாகம் வரையிலும் செக்ரிடெரியட் நிர்வாகம் வரையிலும் வேலைகள் ரொம்பவும் தாமதமாக நடந்துவருகிறது. அவைகளைத் துரிதப்படுத்த வேண்டும். அப்படி துரிதப்படுத்தினால் ஒழிய வேலை சரிவர நடைபெறாது. சிறு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றாலும் அது சாங்ஷன் ஆவதற்கு அநேகம் நாட்கள் ஆகிறது. சாங்ஷன் வாங்குவதற்குள் பல சங்கடங்கள் ஏற்படுவதோடு கால தாமதமும் ஏற்படுகிறது. அதனால் கிராமவாசிகளுக்கு இருக்கும் கஷ்டம் சொல்ல முடியாது. அவர்கள் மதராசுக்கு வந்து விட்டு போகக் கூடிய சிரமம் அதிகமாக இருக்கிறது. நாம் சிக்கனமாக இருக்க வேண்டும் என்று சொல்வதோடு துரிதமாகவும் இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும்.

அத்துடன் நிர்வாகத்தில் 100-க்கு 100 சத்யமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. லஞ்சம் கொடுக்கிறவர்களும் இருக்கிறார்கள், அதை வாங்குவதற்கும் இருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்களையும் நாம் கண்காணிக்க வேண்டும். அப்பொழுதுதான் நன்மைகள் ஏற்படும். நம்முடைய நாட்டின் அபிவிருத்திக்கு சாதகமாக இருக்கும். இது சம்பந்தமாக மந்திரிகளும், அதிகாரிகளும் நல்ல பொறுப்பு எடுத்துக்கொள்ளவேண்டும். மத்திய தர வகுப்பினர் (Middlemen) என்று ஒரு கூட்டம் வேலைசெய்கிறது. மதுரையிலிருந்து மக்களை அழைத்து மதராசுக்கு வந்து அந்த வேலையைச் செய்து கொடுக்கிறேன், அவர்களைப் பார்த்து வேலைகளை முடித்துக் கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு சிலர் வேலை செய்து வருகிறார்கள். இதற்கெல்லாம் இடம் கொடுக்கக் கூடாது. கலெக்டரைப் பார்த்துச்
11-10 a.m. சொல்லுகிறேன் என்று பிழைக்கும் ஜனங்களும் இருக்கிறார்கள். நடுவிலே இருக்கிறவர்களை (Middlemen) ஒழிக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அவர்களை இதிலேதான் ஒழிக்கவேண்டும். அது எபபடி முடியும என்றால், கலெக்டர் போன்ற நிர்வாக அதிகாரிகளும் மந்திரிகளும் அதிகமான பொதுஜனத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஜனங்களோடு நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் தான் நடுத்தரகர்களை ஒழித்தவர்களாவோம்.



2nd July 1957] [Srimathi T. S. Soundaram Ramachandran]

நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு ஜில்லாவை தங்களுடைய முழுப் பொறுப்பாக வைத்துக் கொண்டு, அதிலே விவசாய அபிவிருத்தி, கால்நடை அபிவிருத்தி, சமுதாய நலத் திட்டம், சிறு கைத்தொழில், பெரிய கைத்தொழில் ஆகிய எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும். கௌரவ Planning Commissioners-ஐப் போல ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு ஜில்லாவை நேரடிப் பொருப்பாக எடுத்துக்கொண்டு, இப்படிப் பரீட்சார்த்த முறையில் எவ்வளவு தூரம் வேலைகளை துரிதப்படுத்த முடியும் என்பதை நடத்திக் காட்டினால் ரொம்பவும் நன்றாக இருக்கும். அனுபவ ஞானம் ஏற்படுவதற்கான பள்ளிக்கூடமாகவும் அது அமையும். சட்டசபை அங்கத்தினர் ஒவ்வொருவரையும் தத்தம் பகுதியில் ஒரு கௌரவ அதிகாரியாகச் செய்யப்பட்டால் நாம் நல்ல முன்னேற்றம் காண முடியும். நேரடித் தொடர்பு ஒன்றின் மூலமாகத் தான் சில்லரை லஞ்சங்களை ஒழிக்க முடியும். செயலற்றத் தன்மை, அதாவது Nepotism, நாம் போய் குத்தித்தள்ளினால்தான் காரியம் நடக்கும் என்ற முறை இருக்கிறதே அதைப் போக்க வேண்டுமானால் சட்டசபை அங்கத்தினர்கள் மக்களோடு நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும். மந்திரிகளும், ஜில்லா நிர்வாகிகளும் கூட நேரடித் தொடர்பு கொள்ள வேண்டியது அவசியம். இதை ஒரு பரீட்சார்த்தமாக நடத்திப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஹரிஜனங்கள் இருக்கும் பகுதியிலே முழுச் செலவிலே அரசாங்கம் குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டிக் கொடுக்கலாம் என்று சொல்லி சர்க்கார் அனுமதி தந்திருக்கிறது. அப்படியிருந்தும் கூட, நம் வரவு செல்வுத் திட்டத்தைப் பார்த்தாலும் வேறு எதிலே பார்த்தாலும், குடி தண்ணீர்த் திட்டம், சுகாதார வசதிகள் ஆகிய இவ்விரண்டு துறையிலும் நாம் எவ்வளவு தூரம் முன்னேறவேண்டுமோ அவ்வளவு தூரம் முன்னேறிவிட்டோமா என்று பார்த்தால், கொஞ்சம் கூட முன்னேறவில்லை என்று தைரியமாகச் சொல்லலாம். குடி தண்ணீர்க் கிணறுகள் ஏராளமாக வெட்டியிருந்தும் வெட்ட வேண்டிய கிணறுகள் அதற்குமேல் ஏராளமாக இருக்கும் என்பதை மறுக்கமுடியாது. ஜனங்கள் சுறுசுறுப்பாக இருக்கும் இடங்களில் திறமைசாலிகளாக இருக்கும் இடங்களில் அநேக காரியங்கள் நடைபெறுகின்றன. குடி தண்ணீர்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. ஆனால் ஹரிஜனங்கள் வாழும் பகுதிகளில் குடி தண்ணீர்க் கிணறுகள் இன்னும் அநேக ஊர்களில் வெட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கென ஒரு தீவிர திட்டம் வகுத்து, ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளாகவே குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும்.

மற்ற சுகாதார இலாகா சம்பந்தமான விஷயங்களை சுகாதார இலாகா மான்யம் வரும்போது அப்பொழுது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால், முக்கியமாக நான் சில இடங்களில் போயிருந்தபோது கவனித்தேன். 60 : 40 ஈவு வந்ததைக் கண்டு ரொம்ப சந்தோஷப்படுகிறவர்களில் நானும் ஒருத்தி. அப்படி விவசாயம் ஆரம்பித்திருக்கும் இடங்களில் விசாரித்தபோது, குத்தகைக்காரர்களுடைய கையில் பணம் இல்லை என்று தெரிந்தது. இதற்கு முன்பு நிலச் சொந்தக்காரர்கள் தான் உரம், விதை போன்றவற்றிற்கு முன் பணம் கொடுத்து உதவி வந்தார்கள். வட்டி இல்லாமலேயே பண உதவி செய்வது உண்டு. அறுவடைக்குப் பிறகு அதைத் திரும்பப் பெறுவதும் உண்டு. இது ரொம்ப இடங்களில் காணப்படுவது வழக்கம். ஆனால், 60 : 40 என்ற விகிதாசாரம் வந்தவுடன், அநேக இடங்களில் நிலச் சுவாந்தார்கள் குத்தகைக்காரர்களைப் பார்த்து, "உனக்குத்தான் 60 பங்கு கிடைக்கிறதே, நீ நிலச்சொந்தக் காரனாகக் கூட ஆய்விடுவாய்; நீயே செலவு செய்து கொள்ளேன்" என்று சொல்லக்கூடிய மனப்பான்மை பல இடங்களில் காணப்படுகிறது. இப்படி நிலச்சுவாந்தர்கள் ஒத்துழைக்காமல் இருந்து, குத்தகைக்காரர்களுக்கு விவசாய காலங்களில் தேவையான அளவுக்குக் கடன் உதவி கிடைக்காவிட்டால், உணவு உற்பத்தி நாட்டில் வெகுவாகப் பாதிக்கப்படுமோ என்ற உண்மையான பயம் என்போல் இருக்கிறவர்களுக்கு இருக்கிறது.

அடுத்த மாதத்திலே மதுரை ஜில்லாவில் தண்ணீர் வர ஆரம்பித்துவிடும். திருநெல்வேலி ஜில்லாவிலும் அப்படித்தான். மற்ற ஜில்லாக்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. அங்கும் அப்படித்தான் இருக்குமென்று நினைக்கின்றேன்.

குத்தகைதாரர்களுக்கு போதுமான அளவு விதையும் கடன் வசதியும் கிடைக்காமற் போனால், நிலச்சுவாந்தர்கள் ஒத்துழைப்பு மனப்பான்மை இல்லாமல் சிறு மனஸ்தாபங்களை மனதில் வைத்திருப்பார்களானால், உணவு உற்பத்தியானது வெகுவாகப் பாதிக்கப்படும். ஆகவே, இப்பொழுது இவ்விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்று விவசாயத் தலைவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலச்சுவாந்தர்களுக்கும் இங்கு இருக்கும் பிரதிநிதிகள் மூலமாக ஒரு வேண்டுகோள் ; நாட்டினுடைய நன்மையை உத்தேசித்து, சொந்தத் திலே இருக்கிற சில மன வருத்தத்தைப் பார்க்காமல், எப்பொழுதும் போலவே தங்களுடைய நிலத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்க என்ன செய்யலாம் என்பதிலே கவனம் செலுத்தி, தங்களுக்குப் பங்கு குறைவு என்று நினைக்காத முறையில், ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயத்திற்கு ஒதுக்கியிருக்கும் பணத்தைப் பார்க்கும்போது, மண் அறிப்பு வேலைக்குப் பணம் போதாது. இது ஒரு புது முறை. அதற்குப் பணம் அதிகமாகத் தேவையாயிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் கடனாகக் கொடுத்து உதவலாம். அதுமாதிரி, கால்நடை முதல் உதவிச் சாலை (Livestock Institution) வைப்பதற்கு அந்த ரக உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது ரொம்பக் குறைவு. அவர்களுக்கு இரண்டு வருஷக் குறுகிய காலப் பயிற்சி கொடுத்து, இன்னும் அதிகமானவர்களை வைத்தால் தான் கால்நடை அபிவிருத்தி உண்மையில் ஏற்படமுடியும்.

அதேபோல், கோழிப் பண்ணை அபிவிருத்தியிலும் இந்த வருஷம் சர்க்கார் அதிகமாக கவனம் செலுத்துகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் இது போதாது. குறுகிய காலத்தில் ஏராளமான கோழி முட்டைகளை உண்டாக்கவேண்டும். நான் கோழி சாப்பிடாதவளாக இருக்கலாம். ஆனால், கோழி முட்டை தேசிய உணவுப் பெருக்கத்தில் முக்கியமான ஒரு பாகம் வகிக்கிறது என்பதை மறந்துவிடக்கூடிய அளவுக்கு நான் ஒரு fanatic அல்ல. கோழிப் பண்ணை வளர்ப்பதும், கோழி முட்டைகளை உற்பத்தி பண்ணுவதும் தேசிய உணவுப் பெருக்கத்திற்கு ஒரு முக்கியமான பாகம் என்பதை உணர்ந்து, நெற்பயிற் செய்பவர்களுக்குச் சலுகை காட்டுவதுபோல், கோழிப் பண்ணை வைப்பவர்களுக்கும் சலுகை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்பொழுதுதான் அவர்களும் அதிக கவனம் செலுத்தி, நல்ல முறையிலே கோழி உற்பத்தியைப் பெருக்கமுடியும். நல்ல சத்துள்ள உணவு கிடைப்பதற்கும் அது அனுகூலமாக இருக்கும்.

பசுந் தழை உரத்திற்காக சர்க்கார் பாதி மான்யம் கொடுத்து, பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களில் பசுந் தழை உரம் வளர்ந்திருக்கிறது. ஏதோ சில்லறை லஞ்சம் கொடுக்கிற மாதிரி பாதி விலைக்கு விதை கொடுக்கிறோமென்று கருதக்கூடாது. உணவு உற்பத்தியைச் சீக்கிரமாகப் பெருக்க வேண்டுமென்று வரும்போது இவ்விஷயத்தில் அவர்களுக்கு அதிக கவனம் ஏற்படுவதற்கான incentive-களைக் கொடுக்கவேண்டும். அதாவது, அவர்களை ஊக்கப் படுத்தும் வகையில் பசுந்தழை விதைகளை பாதி விலைக்குக் கொடுத்தால் நல்லது. பாதி விலைக்குக் கொடுத்தால், இனமாகவே கொடுத்ததாக அவர்கள் எண்ணிக்கொள்வார்கள்,-அதற்காக ஒதுக்கி யிருக்கும் பணத்தை அதிகமாக்கினால் உணவு உற்பத்தி போதுமான அளவு அதிகமாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறு பாசன திட்டங்களைப் பற்றி ஒரு வார்த்தை. நான்கு வருஷங்களுக்கு முந்தி ஆலங்குளம் அணைத் திட்டம், மதுரை வத்தலைக்குண்டு பக்கத்திலே நிறைவேற்ற இரண்டு லட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டது.





ஆனால், மெஷினரியில் ஏதோ ஒரு சாமான் சிக்கிக்கொண்டு இருப்பது போல வேலை சிக்கலாக இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால் வரைக்கும் அறைகுறையாக வேலை நடந்திருக்கிறதே தவிர வேலை இன்னும் முடியவில்லை. அந்தத் திட்டம் 400 எக்கருக்கு மேல் பயன் அளிக்கும். நானூறு எக்கர் என்று சொன்னால் பஞ்சப் பிரதேசத்தில், அதுவும் ex-criminal tribes வேலையில்லாமல் இருக்கும் பிரதேசத்தில், குறிப்பாக இரண்டு மூன்று கிராமங்களுக்கு இந்த திட்டம் நிறைவேற்ற முடியுமானால் அது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். சாத்தியார் ஓடை, லட்சுமணப்பட்டி அணைத்திட்டம் இருக்கிறது. வேடசெந்தூர் கால்வாய் மூலம் பாசனம் ஏற்படும். இன்னும் பயன் ஏற்படவில்லை. பஞ்சப் பிரதேசம் ஆனதால் கால்வாய் பாசனம் இல்லாது போனாலும் குளங்களை நிரப்பினால் போதும் என்று சொல்லுகிறார்கள். நான்கு, ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை மழை பெய்தால் கூட குளங்களில் நிறைய தண்ணீர் நிற்கும். கிணற்று ஊற்றும் நன்றாக இருக்கும் என்பது பரம்பரையான நம்பிக்கை. உண்மையில் அப்படித்தான் இருக்கிறது.

மேட்டூர் நீர்த் தேக்கம் ஒன்றுதான் பெரிய நீர்த் தேக்கம். நம் ராஜ்யத்தில் பெரிய நதிகள் கிடையாது. கோதாவரி, கிருஷ்ணா போன்ற நதிகள் நமக்குக்கிடையாது. கடவுள் கொடுக்கும் மழையை எங்கெங்கெல்லாம் தேக்கி வைக்க முடியுமோ அங்கெங்கெல்லாம் தேக்கி வைத்தால், ஊற்றுக்கண்கள் நன்றாக அமையும். இதில் ஒதுக்கப்பட்டிருக்கும் 55 லட்சம் ரூபாய் போதாது. குறைந்தது ஒன்றிரண்டு கோடியாவது ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

**SRI S. SADASIVAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த வரவு செலவு திட்டத்தில் இந்த ஆண்டில் பல வேலைகள் நல்ல முறையில் நடப்பதற்கும் காரியங்களைச் செய்வதற்குமான திட்டங்கள் அடங்கியிருக்கின்றன. சுயதேவைப் பூர்த்தி என்ற முறையிலே விவசாயத் துறையிலே நல்ல முன்னேற்றம் காண்பதற்கும் திட்டங்கள் பல இதில் அடங்கியிருக்கின்றன.

விவசாயத்தைப் பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். உணவுப் 11-19
பொருள்களின் விலை ஓரளவு ஏறிக்கொண்டே போகிறது. ஆனால், இன்று a.m.
கிராம மக்களுடைய நிலையை நமது நிதி அமைச்சர் அவர்கள் உணர்ந்ததாக இந்த உரையில்கூட தெரியவில்லை. கவர்னர் பெருமான் அவர்கள் உரையின் மீது நடத்திய சொற்பொழிவில் நகரத்திலுள்ள மக்கள் வாழ்க்கைதர புள்ளி விவரங்களைக் காட்டிலும் கிராமத்திலுள்ள சிறு விவசாயிகளின் வாழ்க்கைத்தர புள்ளி மிகவும் தாழ்ந்து இருப்பதற்குக் காரணம் போதிய வருமானம் இல்லை என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார். 1955-ம் வருடத்தில் நெல் விலை மணங்குக்கு ரூ. 13 ஆக இருந்தது. அப்பொழுது இருந்த விலைவாசியின் காரணமாக சிறு விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். "இந்த விலையை வைத்துக் கொண்டு நாங்கள் விவசாயம் நல்ல முறையிலே செய்ய முடியாது" என்று அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்கு வேண்டிய உரங்கள் முதலியவற்றை அவர்களால் வாங்க முடியவில்லை என்றும் சொன்னார்கள். அதன் காரணமாக அன்று அரசாங்கத்தார் சில நடவடிக்கைகளை எடுத்தார்கள். அதன் பிறகு விலை உயர ஆரம்பித்தது. இந்த நிலையில் அரசாங்கத்தார் விவசாயப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வார்களேயானால், அந்த விலையானது ஓரளவு உயர்ந்ததாகத் தான் இருக்கவேண்டும். கிராமப்புரங்களில் இது சம்பந்தமாகப் புள்ளி விவரங்களை எடுத்து அதற்குத் தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இப்பொழுது கிராமப் புரங்களில் கூலி ஆட்கள் கிடைக்கவில்லை என்பது கண்கூடு. நகரங்களில் அதிகமாகக் கூலி கிடைப்பதால் அங்குள்ள மக்கள் அங்கு குடியேறி விடுகிறார்கள். விவசாயிகள் நகரங்களில் புகுந்து அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர விரும்புவதால், கிராமப் புரங்களில் விவசாயம் சீரழிந்து வருகிறது. ஆகையால் இந்த நிலையிலே விவசாயப் பொருள்களின் விலை கொஞ்சம் உயர்வாக இருந்தால் தான் அவர்களுக்கு விவசாயத்தில் ஊக்கம் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாயத்தை நல்ல முறையிலே வளர்ப்பதற்கு பல நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத்தின் குறிக்கோள் என்னவென்றால் நல்ல முறையிலே பயிர்கள் செழித்து வளரவேண்டும். அதற்கு நல்ல வித்துக்கள் கிடைக்கவேண்டும். இதற்காக பல பொறுக்கு விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி, நல்ல விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கான திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் நல்ல விதைகள் மட்டும் கிடைத்தால் போதாது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நல்ல உரங்களும் கிடைக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். அதற்காக அமோனியம் சல்பேட் உரம் வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நில சத்தைப் பொறுத்துத் தான் விளைச்சலும் இருக்கும். சூப்பர் பாஸ்பேட் உரம் மக்களுக்கு அதிகமாக வழங்குவதற்கு சர்க்கார் திட்டங்கள் வகுப்பார்கள் என்று நினைக்கிறேன். நகரப் புரங்களில் தயாரிக்கப்படும் உரத்தைச் சேர்த்து வைப்பதற்காகப் பணம் ஒதுக்கி யிருப்பது மிகவும் வரவேற்கத் தக்க விஷயம்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப் பெருக்குவதற்காக சென்ற ஐந்தாண்டு காலமாக நமது அரசாங்கத்தார் பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். சில பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி அதன் மூலமாக உற்பத்தியை பெருக்கியிருக்கிறார்கள் என்பது மறக்க முடியாத உண்மை. சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறைந்த அளவு தொகை ஒதுக்கி யிருந்தாலும் அதை நல்ல முறையிலே செலவு செய்வார்கள் என்று நினைக்கிறேன். திருச்சி ஜில்லாவிலே, கரூர் தாலூகாவில் உள்ள அறவாங்குரிச்சி பிரதேசமானது மிகவும் வறண்ட பிரதேசம். மழை இல்லாததன் காரணமாக அந்தப் பிரதேசம் பாலைவனம் போல் காட்சி அளிக்கிறது. ஆனால் இப்பொழுது ஓரளவு மழை பெய்திருக்கிறது. மழை பெய்திருந்தும் கூட, அந்தப் பிரதேசத்தில் நல்ல பலனை அடைவதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை. ஆங்காங்கு நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி, அதன் மூலமாக பாசனத்திற்கு வசதி செய்து கொடுப்பதற்குப் இந்தச் சிறிய தொகையை பயன்படுத்துவார்கள் என்று எண்ணுகிறேன். அதே நேரத்தில் பெரிய திட்டங்களும் முடிவு அடைந்து கொண்டு வருகின்றன. பவானித் திட்டம் முடிவடைந்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் கடைசிப் பகுதி எங்கள் பிரதேசத்திற்காக ஏற்பட்டது. 1949–50-ல் இந்தத் திட்டத்திற்காக சர்வே எடுத்த காலத்தில் எங்கள் பகுதியில் மூன்று கிராமங்களிலே 5,000 எக்கர் நிலப்பரப்புக்கு தண்ணீர் பாய்வதற்குத் திட்டம் போடப்பட்டு, 1951–52-ல் அது திருத்தி அமைக்கப்பட்டு ஒரு பகுதி குறைக்கப்பட்டிருக்கிறது. எக்காரணத்தினாலோ முதலில் வரையறுக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் கடைசியாக 400 எக்கர் நிலப்பரப்புக்கு பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. மிகுந்து வரும் தண்ணீர் நொய்யல் ஆற்றிலே செல்லுகிறது. முதலில் தயாரிக்கப்பட்ட திட்டங்களின்படி இன்னும் இரண்டு மைலுக்கு கால்வாய் வெட்டி அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் 5,000 எக்ராவுக்குப் பாசன வசதி ஏற்படுவதுடன், இந்த வறண்ட பிரதேசம் செழிப்புறுவதற்கும் உபயோகமாக இருக்கும். இந்தச் சிறிய தொகையிலிருந்தே இந்தத் திட்டத்தை நிறைவேற்றமுடியுமென்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக அமராவதித் திட்டமும் முடிந்து வருகிறது. அந்தத் திட்டத்தில் கடைசிப் பகுதி எங்கள் பிரதேசத்திற்காக ஏற்பட்டது. அங்கேயும் ஒரு அணைக்கட்டு கட்டி (அதாவது உடைந்து போன சுனைக்கருப்பணசாமி) அந்தத் திட்டத்தையும் முடித்துக் கொடுத்தால் எங்கள் வறண்ட பிரதேசம் வளம்பெறமுடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொடகனூர் திட்டத்தை பற்றிப் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றி, ஏரிகளிலே நீரைத் தேக்கி அதன் மூலமாக விவசாயத்துக்கு உதவலாம். எங்கள் பிரதேசத்தில் கிணற்றுப் பாசனம் தான் அதிகம். ஆகையால் மேலே சொன்ன திட்டம் பூர்த்தியானால் கால்வாய் மூலம் வெள்ளியணை, உப்பிடமங்கலம் முதலிய குளங்களில் நீர் தேக்கத்தினால் பாசன வசதி ஏற்படுவதோடு பக்கங்களில் உள்ள கிணறுகளுக்கும் நிறைய ஊற்று கிடைக்கும். இத்திட்டம் சர்க்கார் பரிசீலனையில் பல வருஷமாய் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





நிலங்களின் மண் வளத்தைப் பாதுகாப்பது மிகவும் அவசியம். எவ்வளவுதான் நிலம் செழிப்புள்ளதாக இருந்தாலும், அதிலுள்ள சத்துப் பொருள் அழிந்து விடாமல் பாதுகாக்கப்படவேண்டும். சமவெளி பிரதேசங்களில் சிறு கரைகளைப் போட்டு மண் வளத்தைப் பாதுகாப்போமேயானால் அது மிகவும் நல்லது. இதற்காக இந்தத் திட்டத்தில் பணம் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தினால் எங்கள் பகுதியும் பயனடையும் என்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்தபடியாக காடுகள் வளர்ப்புத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், ஆங்காங்கு சிறு உத்தியோகஸ்தர்களை நியமித்து, நல்ல மரங்களை வைத்து வளர்ப்பதற்காக வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

இவற்றையெல்லாம் விட கால் நடை பராமரிப்புதான் மிகவும் முக்கியமானது. விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக்கொண்ட நமது நாட்டில் கால்நடைச் செல்வம் மிகவும் முக்கியமானது. நல்ல இனக் கால்நடைகளை வளர்ப்பதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிறைய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமுதாய நலத் திட்டங்களின் மூலமாக இம்மாதிரித் திட்டங்களை அமுல் நடத்தி, அதிலுள்ள கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கும் அரசாங்கம் முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது நாட்டிலுள்ள கிராமப்புரங்கள் வளம்பெற வேண்டுமானால் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் நல்ல முறையில் இயங்கவேண்டும். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று அரசாங்கம் முயலுகிறது. இந்த ஆண்டிலே 23 வட்டாரங்களில் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரப் போகிறார்கள். இந்த திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் நமது முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் அவர்கள் பகல்மேடு முதலிய இடங்களுக்குச் சென்று மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, மக்களின் குறைகளை நேரில் கேட்டு, அவைகளை நிவர்த்திப்பதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்தத் திட்டங்களை எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றினால், நமது கிராம மக்கள் முன்னேறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**Sri S. M. ANNAMALAI** : மன்றத் தலைவர் அவர்களே, சென்னை மாநில் வரவு செலவுக் கணக்கு சட்டமன்றம் முன்பு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வரவு செலவுக் கணக்கைப் பார்க்கும்போது எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. தெனாலி ராமனை அரசன் கூப்பிட்டு, ஒரு குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு வரச் சொன்னபோது, அவன் குதிரையை குளத்திற்குப் பிடித்துக்கொண்டுபோய், "அதோ அங்கே தண்ணீர் இருக்கிறது. அங்கே போ." என்று குதிரையிடம் சொல்லிவிட்டு, மறுபடியும் குதிரையைப் பிடித்துக்கொண்டுவந்து இருந்த இடத்திலேயே கட்டிவிட்டானும். அந்த மாதிரித்தான் இந்த வரவு செலவுத் திட்டம் இருக்கிறது. உண்மையிலேயே பாமர மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய முறையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. தேசீய அபிவிருத்தித் திட்டத்திற்கு என்றும், சமுதாய நலத் திட்டத்திற்கு என்றும் பல கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. இந்தத் திட்டங்களால் யார் யார் பயனடைகிறார்கள் என்று அலசிப் பார்த்தால், பயனடைபவர்கள் பணக்காரர்களேயொழிய, மத்தியதர வகுப்பினர்களும் பாமர மக்களும் பயனடைவதில்லை என்று தெரிகிறது. 11-30 a.m.

உதாரணமாக, ஐந்து எக்கர் நிலமுடைய ஒருவன் தனக்கு ஏதோ கடன் வேண்டுமென்று விண்ணப்பித்தால், உடனே அவனுக்கு கூட்டுப் பட்டா இருக்கிறதா என்றும், அல்லது வில்லங்கங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்றும் சர்டிபிகேட் வாங்கிவரவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். ஐந்து எக்கர் நிலம் உடையவன் ரூ. 1,000 கடன் கேட்டிருந்தால் கடைசியில்

அவன் போட்டுள்ள விண்ணப்பப்படி ஆயிரம் ரூபாய் கடன் பெற முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே பாமர மக்களும் ஏழை விவசாயிகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

சமுதாய நல திட்டங்களுக்கு என்றும், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு என்றும் கோடி கோடி ரூபாய்கள் செலவிடப்படும்போது அதனால் பயனடைபவர்கள் பணக்காரர்களே தவிர ஏழை விவசாயிகள் அல்ல. நாநூறு, முன்னூறு ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள்தான் விவசாயிகளாகக் கருதப்படுகிறார்களே யொழிய, உண்மையிலேயே இந்த நாட்டில் உழைத்துவிட்டு கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கஷ்டப்படும் பாமர மக்களைப் பற்றி சென்னை மாநில அரசியலார் சிந்திப்பதில்லை.

மலைப் பிரதேசங்களில் வாழும் மலை ஜாதி மக்கள் சமுதாய நலத் திட்டங்களாலும் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களாலும் பயனடையவில்லை. சென்ற 25—5—1957 அன்று ஓரிடத்தில் மலை ஜாதியினரின் மகாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தோம். அங்கே ஏராளமான மலை ஜாதி மக்கள் கூடியிருந்தார்கள். அவர்களிடம், "உங்கள் கிராமங்களிலே சமுதாய நலத் திட்டங்கள் என்ற திட்டங்கள் நடக்கின்றனவா? அந்தத் திட்டங்களைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டால் "அதைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று சொன்னார்கள். ஆகவே சமுதாய நலத் திட்டங்களால் மலை ஜாதி மக்கள் பயனடையவில்லை என்பது தெரியும். ஆகவே அவர்களும் திட்டங்களின் பயனை அடையும்படி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதோ 'ஸப்ஸிடி' கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அந்தச் சலுகையை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்காக, அவர்களிடமிருந்து விண்ணப்பங்களில் கையெழுத்து வாங்குவதற்காக கிராமம் கிராமமாகச் சென்று கையெழுத்து வாங்கி 2,000 விண்ணப்பங்களை ஹரிஜன் வெல்பேர் ஆபீசருக்கு அனுப்பினேன். இதுவரையிலும் அவைகளில் ஒரு விண்ணப்பம் கூட பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. சமுதாய நல திட்டங்களும் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களும் பணக்காரர்களாக இருப்பவர்களுக்குப் பயன்படுகின்றனவேயொழிய பாமர மக்களுக்குப் பயன்படுவதில்லை.

அடுத்தபடியாக, சிந்திரி ரசாயன உரத்தை எடுத்துக்கொண்டால், அந்த உரம் உண்மையிலேயே விவசாயத்திற்குப் பயன்படுவதில்லை. சிந்திரி ரசாயன உரத்தை இன்றைக்கு சாராயத்திற்குப் பக்குவப்படுத்துவதற்குப் போட்டால் நாளைக்கு அது சாராயமாக மாறிவிடும். மற்ற ரசாயன உரங்கள் ஒரு வார காலம் பிடிக்கின்றன. இன்றைக்கு உரத்தைப் பக்குவப்படுத்துவதை ஆரம்பித்தால் நாளைக்கு சிந்திரி ரசாயன உரத்தில் அருமையான சாராயம் உற்பத்தியாகிறது. ஆகையால் சிந்திரி ரசாயன உரம் மூட்டை ஒன்று ரூ. 70 வீதம் பிளாக் மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. அது விவசாயத்திற்குப் பயன்படுவதில்லை.

(Temporary Chairman Srimathi Savithiri Shanmugham in the Chair.)

அடுத்தபடியாக, 1,300 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது என்றும், 13,000 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டுவிட்டது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பம்பு செட்டுகள் விஷயத்தில் "மினிமம் எக்ரிமெண்ட்" தொல்லையாக இருக்கிறது. "ஒன்றரைப் பணத்துக் குதிரை இரண்டரைப் பணக் கொள்ளு தின்றது" போல இந்த மினிமம் எக்ரிமெண்ட் திட்டம் இருக்கிறது. இந்த முறையால் பாமர மக்களுக்கும் மத்தியதர வகுப்பினர்களுக்கும் உண்மையிலேயே பயன் கிடையாது. குறைந்த கால ஒப்பந்தம் என்று சொல்லி ஒரு கால வரையறையை விதித்து திடீரென்று விவசாயிகள் பம்பு செட்டுகளை உபயோகிக்க முடியாதபடி மின்சாரத்தை நிறுத்தி விடுகிறார்கள். இதனால் நல்ல வெயில் காலத்தில் பம்பு செட்டுகளை இயக்கவேண்டிய காலத்தில், அவைகளை இயக்க முடியவில்லை. ஐந்து ஏக்கர் நிலமுள்ள விவசாயி 2 ஏக்கருக்குத்தான் பம்பு செட்டின் மூலம் தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. அதிக காலத்திற்கு பம்பு செட்டுகளை உபயோகிப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி அரசியலாரை வெகு காலமாகக் கேட்டும் கூட இது வரை அரசியலார் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே 13,000 பம்பு செட்டுகளுக்கு மின்சாரத்தைக் கொடுத்துவிட்டோம் என்றும், 1,300 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பைச் செய்திருக்கிறோம் என்றும் பெருமைப்படுவதில் பிரயோஜனம் இல்லை. பாமர மக்கள் இந்தத் திட்டத்தால் பயன் அடையவில்லை. உதாரணமாக, நான் விவசாயத்திற்கு 5 எச்.பி. பம்பு செட்டை நிறுவினேன். அதற்கு ரூ. 96 செலவாயிற்று. சரியான அதன் பயனை அடைவதற்குள், மூன்று மாதங்களுக்குள்ளாகவே, அதற்கு விநியோகிக்கப்பட்டு வந்த மின்சாரத்தை அதிகாரிகள் நிறுத்திவிட்டார்கள். நானே இப்படிக் கஷ்டப்பட்டால் பாமர மக்கள் எப்படிக் கஷ்டப்படுவார்கள் என்று சொல்லத் தேவையில்லை. இந்த நிலைமையில் பம்பு செட்டை வைத்துக்கொள்பவர்களின் நிலைமை தூக்குப்போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொள்வதுபோல்தான் இருக்கிறது. ஆகவே குறைந்தபட்ச கால ஒப்பந்த முறையை கவனித்து பாமர மக்களுக்குப் பயன்படும்படியான முறையில் திட்டம் தீட்ட வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை உயர்த்தியிருப்பதை நான் சார்ந்திருக்கும் கட்சியின் சார்பில் மிகவும் வரவேற்கிறேன். தோட்டிகளும் தலையாரிகளும் மிக மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். தோட்டிகளுடைய ஆடைகளைப் பார்த்தால் நாம் மிக மிக வருந்த வேண்டியிருக்கிறது. தோட்டிகளுக்கும் தலையாரிகளுக்கும் ரூ. 4 சம்பள உயர்வு அளித்ததோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு உடனடியாக நல்ல உடைகள் கொடுத்து உதவவேண்டும் என்றும் அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசியலார் உணவு உற்பத்தி அதிகமாகிவிட்டது என்று புள்ளிவிவரம் கொடுத்துவிட்டு, அதே சமயத்தில் விலைவாசிகள் உயர்ந்து விட்டது என்றும் கூறுகிறார்கள். இதற்கு உண்மையான காரணம் என்ன என்று தெரியவில்லை. சாகுபடிப் பெருக்கம் சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் கிராமக் கணக்குப் பிள்ளை என்ன செய்கிறார்? அவர் தாம் இருக்கும் இடத்திலேயே உட்கார்ந்துகொண்டு சாகுபடிக் கணக்கைப் பார்த்துவிடுகிறார். அந்த அந்த கிராமங்களுக்கு கணக்குப் பிள்ளைகள் சென்று எந்த எந்த சர்வே நெம்பர் நிலத்தில் என்ன என்ன தானியங்கள் எவ்வளவு விளைந்திருக்கின்றன என்றோ, உண்மையிலேயே நிலங்களில் பயிர்செய்யப்பட்டு விளைந்திருக்கின்றனவா என்றோ பார்ப்பதில்லை. ஒரு சர்வே நெம்பரில் 20 செண்ட் என்று போடப்பட்டிருந்தால் 20 செண்டும் விளைந்துவிட்டதாகக் கணக்குப்பிள்ளைகள் எழுதிவிடுகிறார்களே தவிர, ஆங்காங்கே சென்று நேரில் பார்ப்பதில்லை. ஆகவே அவர்கள் கொடுக்கும் கணக்குகளைக் கொண்டு உண்மையான நிலைமையை நாம் அறிய முடியாது. "ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது" என்பதே போல் இப்படிப்பட்ட தவறான புள்ளிவிவரங்கள் உண்மையான நிலைமையை அறிவதற்கு உதவாது. ஆகவே கணக்குப்பிள்ளைகள் ஆங்காங்கே நேரில் சென்று பார்த்து சாகுபடிக் கணக்கைக் கொடுக்கும்படி செய்வதற்கு அரசியலார் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRIMATHI KAMALAMBUJAMMAL**: அவைத்தலைவர் அவர்களே, 11-40 a.m.
நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் வரவு செலவு திட்டத்தை ஆதரித்து, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை அவர் நன்றாக, தீர்க்க ஆலோசித்து எந்த முறையில் கொண்டு வந்தால் எல்லோராலும் ஆதரிக்கபடுமோ அந்த வகையில், கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த விஷயத்தில் அவரை பாராட்டாமல் இருக்கமுடியாது.

முதலில், மனிதனுக்கு உணவுதான் முக்கியம் என்ற வகையில், விவசாயத்தைப் பற்றி அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது உற்பத்தியாகும் உணவு போதவில்லை என்ற அடிப்படையில், நிலத்தை

நன்ருக வளப்படுத்தி, அதன் மூலமாக அதிக தான்யத்தை உற்பத்தி செய்யமுடியும் என்று எண்ணி, சில தொகைகள் ஒதுக்கி பரீட்சார்த்தமாக சில ஏற்பாறுகள் செய்திருப்பது மிகவும் வரவேற்க வேண்டிய விஷயம். அதற்காக இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் ஒதுக்கியிருந்தால், அதிக பலனடைய ஹேதுவாக இருக்கும்.

பூச்சிகளேயும், நோய்களேயும் தடுக்கும் முறைகளுக்காக, 4·6 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பூச்சி மருந்துகள், விவசாயிகளுக்கு மிகமிக அவசியம். பயிர்கள் நன்ருக வளர்ந்து, கதிர்விட்டு வரும் சமயத்தில் பூச்சிகள் அவைகளே அழித்துவிடுகின்றன. விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் இந்த பூச்சி மருந்துகளே நல்ல முறையில் வினியோகம் செய்ய வேண்டும். விவசாய இலாகா அதிகாரிகள் அவைகளே நேரில் சென்று கண்காணித்து, அதற்கு எவ்விதமான முறைகளே எந்த விதத்தில் கையாள வேண்டுமோ, அவ்விதம் செய்யவேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளே அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரம் வாங்குவதற்காக, விவசாயிகளுக்கு பணம் கொடுக்கிருர்கள். அந்தப் பணத்தை வேறு வகையில் செலவழித்து விட்டு, நிலத்திற்கு உரம் போடாமல் இருந்து விடுகிருர்கள். விவசாயிகளுக்கு உரம் வாங்குவதற்கு பணமாகக் கொடுப்பதை விட்டு, சர்க்காரே உரத்தை வாங்கி கொடுக்கும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஆனல் அப்படி கொடுக்கும் உரத்தை விற்றுவிடுவார்களோ என்று அஞ்சினல், அது விவசாயிகளேப் பொறுத்த விஷயமே தவிர, அரசாங்கத்தைப் பொறுத்தது அல்ல, விஷம் சாப்பிட கூடாது என்று சொல்லலாம். ஆனல் அதை சாப்பிட்டு உயிரை போக்கி கொள்வேன் என்று சொன்னல், யார் என்ன செய்வது ? பணமாக கொடுத்தால் அதை உரம் வாங்காமல் வேறு வகைகளில் செலவழித்து விடுவார்கள் என்று எண்ணி, உரமாக கொடுத்தும், அதையும் விற்ருர்களானல், அது அரசாங்கத்தினுடைய குற்றமல்ல. ஆகவே, விவசாயிகளுக்கு, உரமாக வினியோகிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார போர்டு ஒன்று நிறுவி, அது தனிப்பட்ட முறையிலே சேவை புரிவது மிகவும் வரவேற்கத்தக்கதே. எல்லா கிராமங்களுக்கும் தகுந்த அளவில் தேவைகளேப் பூர்த்தி செய்வதற்கு ஆவன செய்யவேண்டும். மேலும், 1,300 கிராமங்களுக்கு இந்த ஆண்டிலேயே மின்சார சப்ளே செய்வதாக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது போதாதுதான் என்பது என்னுடைய கருத்து. மேன்மேலும் அதிகப்படியான கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டும். என்னுடைய தாலூகாவிலே, கும்முடிபூண்டி, சத்தியவேடு முதலிய பிர்க்காக்களில், சுமார் மூன்று மைல் தூரத்தில் மின்சார line-கள் செல்லுகின்றன. அதை, கூடிய சீக்கிரம், மேற்சொன்ன இரண்டு பிர்க்காக்களுக்கும் கொண்டுவர வேண்டுமாய், இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களே கேட்டுக்கொள்கிறேன்.

கிராம கைத்தொழில்களே ஊக்குவிப்பது மிகமிக அவசியம். கிராமாந்திரங்களிலே இத்தகைய தொழில்களே மேற்கொள்ளும்போது, சமூகநல போர்டின் கீழ் சில கேந்திரங்களே ஏற்படுத்தியிருக்கிருர்கள். அந்த கேந்திரங்களில் மாதர்கள், பூவேலே, சரிகை வேலே இவைகளில் பயிற்சி பெற்று வருகிருர்கள். அந்த இடங்க்ளில் ஏற்கெனவே, சமூகநல போர்டார் கொடுக்கும் மான்யத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், கிராமக் கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்திலிருந்தும் இந்த கேந்திரங்களுக்கு பண உதவி செய்தால் அங்குள்ள ஜனங்கள் நல்ல பலனே அடைவார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

தாலூகா, ஜில்லா ஆஸ்பத்ரிகளேப் பெரிதாக்கி, அவைகளுக்கு வேண்டிய சலுகைகளே வழங்கியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு கிராமப் பகுதிகளிலே Mobile ஆஸ்பத்ரிகளே ஏற்படுத்தினல், கிராம மக்களுக்கு அது அதிக பயனுள்ளதாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.



கைத்தறி நெசவாளர்களுக்கும் உதவி செய்யும் வகையில் ரூ. 146 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக பட்ஜெட்டிலிருந்து தெரிகிறது. திருநெல்வேலியிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் இரு நூற்பு ஆலேகள் நிறுவ உத்தேசித்துள்ளதாக பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கைத்தறி நெசவாளர்கள் அதிக பயனடைய முடியும். ஒரு தறி வைத்திருக்கும் .நெசவாளருக்கும் நூல் கிடைக்கும்படியாக அமைச்சர் அவர்கள் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் சப்ளேக்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், சென்னே நகராண்மை கழகத்திற்கும், பணம் ஒதுக்கியிருந்தும் கூட, சென்னேயைப் பொறுத்தவரையில் குடி தண்ணீர் நிலேமை சரியாயில்லே என்றுதான் சொல்ல விரும்புகிறேன். தெருத்தெருவாக பெண்கள் கையில் பாத்திரங்களே வைத்துக்கொண்டு, "க்யூ" வரிசையில் நிற்பதைப் பார்த்தால், நம் குடி தண்ணீர் திட்டம் சரியாக அமுலில் இல்லே என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. தெருக்களில், கண்ட இடங்களில்—மிகவும் அசுத்தமான இடங்களில்—பாத்திரங்களே வைப்பதனல், சுகாதார வாழ்க்கைக்கு மிகக் கெடுதலாக இருக்கிறது. இந்த நிலே நீடிக்குமானல், உண்மையில் நகரத்தில் புதுப்புது வியாதிகள் பரவக்கூடும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சில இடங்களில், குழாய்களேயும், பம்பு செட்டுகளேயும் உடைத்துவிடுகிருர்கள். இந்தக் கஷ்டங்களேத் தவிர்க்க, இவ்விடங்களிலுள்ள "டாங்கு"களே பெரிதாக்கி, அதிகத் தண்ணீரைத் தேக்கி சப்ளே செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா போர்டுகளில், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சாலேகள் போடுகிருர்கள். செங்கல்பட்டு ஜில்லா போர்டை பொதுமக்கள் தாங்கள் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலேகட்கு 25 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். பணம் இல்லாததினலே ஜில்லா போர்டு, அரசாங்கமே அந்த 25 சதவிகிதத்தை ஜில்லா போர்டுக்கு grant ஆகக் கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். அரசாங்கம் ஒப்புக்கொண்டதன் பேரில் அவர்களும் மக்கட்கு வாக்குக் கொடுத்துவிட்டார்கள். அரசாங்கம் கொடுக்காததினல் ஜில்லா போர்டு அப்பணத்தைக் கொடுக்கமுடியாத நிலேயில் இருக்கிறது. இந்நிலேயில் ஜில்லா போர்டை கோர்ட் வரைக்கும் மக்கள் இழுத்து விடுவார்களோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இந்த நிலேயைத் தவிர்க்க ஜில்லா போர்டுக்கு தகுந்த பண உதவி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூட சம்பளத்தைப் பொறுத்தவரையில், வருஷத்திற்கு ரூ. 1,200க்கு குறைவாக ஊதியம் பெரும் பெற்ருேர்களின் குழந்தைகளுக்கு சம்பளம் கட்டவேண்டாம் என்று சொல்லப்படுகிறது. இது வரவேற்கத்தக்கதே. ஆனல், இந்தச் சலுகையை இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டும். மாதம் ரூ.100-க்கு மேல் வாங்கும் ஒரு தகப்பனுக்கு நான்கு பிள்ளேகள் இருந்தால் இந்நால்வருக்கும் சம்பளம் கொடுக்க வேண்டி வரும்போது மிகவும் கஷ்டப்படுகிருர். ஆகையால் இந்த சம்பள விகிதத்தை இன்னும் கொஞ்சம் அதிகமாக உயர்த்தினல் மிக நலமாக இருக்கும்.

மருத்திவக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், பட்டம் பெற்ற பிறகு கட்டாயம் மூன்று வருஷங்கள் கிராமங்களில் உத்யோகம் பார்க்க வேண்டும் அப்படி அல்லாது அவர்களுக்காகச் செலவழித்த பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறு இஷ்டப்பட்ட இடத்தில் வேலே செய்து கொள்கிறேன் என்ருல் அரசாங்கம் அதற்கு ஒப்புக்கொள்ளக் கூடாது. அப்படி ஒப்புக்கொண்டால் கிராமங்களில் வைத்திய வசதிகள் செய்து தர முடியாது என்று கூறிக்கொண்டு கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு சிலவுத் திட்டத்தை வரவேற்கிறேன்.

**Sri M. A. MUTHIAH CHETTIYAR :** அவைத் தலேவர் அவர் 11-5 a.m.
களே, நமது நிதி மந்திரி அவர்கள் இந்த சட்டசபையில் பல வருஷங்களாக நம் நாட்டின் நிதி வரவு செலவுகளே கவனித்து வந்த அனுபவத்தின் காரணமாகவும், ஊர் இருக்கிற நிலேமையைத் தெரிந்தும் அதிகமாக வரி போடாமல் இந்த பட்ஜெட்டை கொண்டு வந்ததற்கு நாம் எல்லோரும்

அவரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். மற்றபடி நிதி அமைச்சராக இருந்து இந்த வரவு திட்டங்களில் எல்லாம் பங்கு கொண்டு செவ்வனே நடத்தி வந்ததற்கு நான் அவரை பாராட்டுகிறேன். இந்தத் தடவை ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லவேண்டும். அதாவது ஊரினுடைய நிலைமையை அறிந்து அதற்கு தக்கவாறு வரி போட்டிருக்கிறார்கள். இப்போது போடப்பட்டிருக்கும் வரிகளைகூட போடக்கூடாது என்றும் பலர் கூறினார்கள். எப்படியிருநதாலும் இந்த அளவுக்கு ஒரு பட்ஜெட் கொண்டு வந்ததற்கு நிதி அமைச்சரை பாராட்டுவதுதான் நியாயம் என்று எனக்குத் தோன்றுகின்றன. ஏதோ மலையாள நாட்டைப் பார்த்து அதாவது திருவிதாங்கூரைப் பார்த்து இங்கேயும் கூடுதல் வரி போடவில்லை என்றும் கூறினார்கள். அப்படியொன்றும் சொல்லுவதற்கில்லை. இன்றைக்கு பம்பாய், கல்கத்தா போன்ற ராஜ்யங்களிலும் கூட கூடுதலான வரிகள் ஒன்றும் போடவில்லை. இப்போது இரண்டு விதத்தில் மாத்திரம், அதாவது **Sales tax, Agricultural-tax** என்ற இரண்டு இனத்தில் மாத்திரம் வரிகள் போடப்பட்டிருக்கின்றன. இப்போது நாலேமுக்கால் கோடி ரூபாய் பற்றாக்குறையாக போட்டு பட்ஜெட் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இதில் பிசகு ஒன்றும் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் எப்பொழுதும் **Deficit finance** வருவது நல்லதுதான் என்று கூறக்கூடியவன். இன்று நேற்று அல்ல. நான் முன்னாலேயே இப்படித் தான் கூறியிருக்கிறேன். இது கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு போடப்பட்டிருக்கும் திட்டங்கள் இன்னும் நாலைந்து வருடங்களுக்கு மாத்திரம் உபயோகப்படக் கூடிய திட்டங்கள் அல்ல. 20, 30, வருடங்கள் கழித்து நம்முடைய பின் சந்ததியார்கள் அனுபவிப்பதற்காக போடப்பட்டிருக்கும் திட்டங்களாகும். இது தவிர நம்முடைய ராஜதானியில் எழுப்பப்பட்ட கடன்கள் எல்லாம் நல்ல விதத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் நமது நாட்டில் இப்போது அதிகமாக கடன் எழுப்ப இல்லை என்று நினைக்கிறேன். இன்னும் கூடுதலாக கடன் எழுப்பலாம். அதனால் யாதொருவிதமான பிசகும் இல்லை. அதையும் இந்த அரசாங்கம் கவனிக்கவேண்டும். நமது நிதி இலாகாவின் வேலை அதிகமாகிகொண்டே வருகிறது. இன்றைக்கு சென்னை நிதி இலாகாவில் பணியாற்றி வரும் திரு. வர்க்கீஸ் அவர்களுக்கும் சமீபத்தில் ஓய்வெடுத்துக்கொள்ள இருக்கும் உதவிக்காரியதரிசி திரு. ஆர். ரெங்காச்சாரி அவர்களுக்கும் நம்முடைய நன்றியைச் செலுத்த கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் நம் நாட்டின் நிதி நிலைமையை நன்றாக கவனித்து வருகிறார்கள். அவர்களை நாம் பெருமைப்படுத்தி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். மற்றபடி பொருளாதார துறையில் நாம் முன்னேற்றம் அடையவில்லை என்று சொல்ல முடியாது. இப்போது இருக்கும் விலை ஏற்றத்தை வைத்துக்கொண்டு மாத்திரம் நாம் கணக்கு போட்டுவிட முடியாது. பொதுவாக விலைவாசி உயர்ந்துகொண்டு வருகின்றது. விலைவாசிகளை அதிகமாக குறைக்கப்பட வேண்டுமென்றாலும் ஓரளவுக்குத்தான் குறைக்க முடியும். பொதுவாக விலைவாசி உயர்வை தடுக்க வேண்டுமென்றால் கூடுதலான இடங்களில் **Fair price shops** அதிகமாக திறக்கப்பட வேண்டும். அதிகமாக விலைவாசிகள் குறைக்கப்பட்டால் விவசாயிகளுக்கு, உணவு உற்பத்திக்கு உற்சாகம் ஊட்டியதாக இருக்க முடியாது. நம் நாட்டில் 10 ஆயிர ஏக்கர் கணக்கில் நிலம் வைத்திருப்பவர்கள் அதிகம் கிடையாது. மிராசுதார்கள் அதிகமாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். 20 ஏக்கர்கள், 30 ஏக்கர்கள் என்று வைத்துக்கொண்டிருப்பவர்களை பெரிய மிராசுதார்கள் என்று சொல்ல முடியாது. இன்றைக்கு மத்திய அரசாங்கம் 3,000 ரூபாய் வருவாய் இருப்பவர்களுக்கு வருமான வரி போட்டு பின்னால் அதுவும் நீக்கப்பட்டிருக்கிறது. அது நீக்கப்படாமல் இருந்தால் 20 ஏக்கர் 30 ஏக்கர் என்று நிலம் வைத்திருப்பவர்கள்கூட இந்த வரியை கொடுக்கவேண்டியதுதான். ஆகவே லாண்ட் ரெவன்யூ ஸிஸ்டம் என்ற முறை இருப்பதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் ஐந்து ஏக்கர் ஆறு ஏக்கர் ஏழு ஏக்கர் என்று வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு எல்லாம் சிரமம் இல்லாமல் இருக்கும். ஆகவே இந்த விஷயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று நம்புகிறேன். அடுத்ததாக இந்த வருடம் சர்க்கார் கடன் எழுப்ப விரும்பவில்லை என்றும் சொன்னார்கள். சென்ற





தடவைகள் மாதிரி கேட்காவிட்டாலும் இப்போது கொஞ்சமாவது கடன் எழுப்பலாம். வேண்டுமானால் வட்டி கொஞ்சம் கூட்டிக்கொடுக்க வேண்டியிருக்கும். நான்கு அல்லது ஐந்து கோடி ரூபாய் சீக்கிரமாகவே கிடைத்துவிடும் என்பது சந்தேகமேயில்லை. அந்த காலத்தில் ஏழு கோடி, எட்டு கோடி என்று கேட்டதற்கு பதினைந்து கோடி ரூபாய் கிடைத்தது. இப்போதும் கூடுதலாக கிடைக்கும் என்று நாம் நம்பலாம். அவர்கள் ஏதோ ஸ்மால் ஸேவிங்ஸ் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னார்கள். இதற்கும் ஆதரவு இருக்கும் என்றே நம்புகிறேன். அடுத்ததாக கல்வியைப் பற்றி பலர் இங்கு கூறினார்கள். இப்போது டெக்னிகல் படிப்பு அதிகமாகி கொண்டு வருகிறது. இன்னும் டெக்னிகல் படிப்பு கூடுதலாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய காரியங்களை செய்யவேண்டும். பி.ஏ. போன்ற படிப்புக்கு அதிகமாக பிள்ளைகள் வருவதில்லை என்று தெரிகிறது. சென்னையைப்பற்றி சொல்லுவதற்கில்லை. சினிமா பார்ப்பதற்கு என்றே இங்கு பையன்கள் அதிகமாக வருகிறார்கள். காஞ்சீவரத்தில் கல்லூரியில் 20 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள் என்று அங்குள்ள பிரின்ஸிபால் என்னிடம் கூறினார். இதிலிருந்து டெக்னிகல் படிப்பில் ஏற்பட்டிருக்கும் ஆர்வத்தை நாம் அறிந்து கொள்ளலாம். அடுத்தபடியாக ஜில்லாக்கள் அமைப்பது பற்றி குறிப்பிட்டு பலர் சொன்னார்கள். கன்னியாகுமரி அமைப்பதைப்பற்றியும் பலர் சொன்னார்கள். அதே மாதிரிதான் புதுக்கோட்டை விஷயமும். அங்கு எவ்வளவோ நல்ல கட்டிடங்கள் இருக்கின்றன. பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது. இங்கு ஒரு தனி ஜில்லா ஏற்படுத்துவதற்கு எல்லா விதமான வசதிகளும் இருக்கின்றன. அரந்தாங்கியையோ அல்லது பட்டுக்கோட்டையையோ கூட சேர்த்து ஒரு ஜில்லாவாக புதுக்கோட்டையை அமைப்பதற்கு ரொம்பவும் வசதியாக இருக்கும். ஆகவே அதையும் அரசாங்கம் உடனே கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக ராமனாதபுரம் ஜில்லாவில் பல இடங்களிலும் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் இன்னும் சரியானபடி பரிகரிக்கப்படவில்லை. **Famine Relief** என்ற அடிப்படையில் பலவித காரியங்களும் செய்யப்பட்டன. அதோடு கூடுதலாக 23 என்.ஈ.எஸ். பிளாக்குகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிகிறேன். அதை யெல்லாம் உடனடியாக ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டிருக்கும் இடங்களில் 12 noon
இந்த என். ஈ. எஸ். பிளாக்குகளைத் திறக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாமல் வேறு இடங்களில் போட்டிருந்தால் அதை திருத்தி அமைக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். ராமனாதபுரம் தொகுதியில்—என் தொகுதி என்று சொல்லாமல் சொல்கிறேன். என் தொகுதி எது என்று உங்களுக்குத் தெரியும்—வெள்ளத்தாலும், புயலாலும் சேதம் அடைந்துள்ள இடங்களில் இந்த என்.ஈ.எஸ். பிளாக்குகளையும், கம்யூனிட்டி பிராஜெக்ட் ஸ்கீம்களையும் கொண்டு வரவேண்டுமென்றும், அதையும் வெகு சீக்கிரம் கொண்டுவர வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் மின்சார விளக்குகள் ஒரு அளவிற்கு வந்திருக்கிறது. அந்த அளவு சந்தோஷமே. மேலும் கூடுதலாக, அதிகம் விளக்குகள் போட்டு அந்த பிற்போக்கான பகுதிகளை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும். அடுத்தபடியாக, மதுரைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் நடுவில் மேலூர் பக்கத்தில் பெரியாற்றில் ஒரு அணை கட்டவேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. ராமனாதபுரம் ராஜா அவர்கள் மராமத்து மந்திரியாக இருந்தபோது அவர்களும் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டும் அங்கு பெரியாற்றில் ஒரு அணை கட்டுவதாக ஒத்துக் கொண்டார்கள். அப்பொழுது அங்கு நல்ல மழை இருந்ததால் "இன்வெஸ்டிகேட்" செய்ய, அதாவது கணக்கு எடுக்க முடியாது என்று சொன்னார்கள். நாலைந்து லட்சம் ரூபாய் செலவு செய்து அதை 'இன்வஸ்டிகேட்' செய்து ஒன்றரைக்கோடி ரூபாய் செலவு செய்து அங்கு ஒரு அணையைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் எத்தனையோ தடவைகள் இது பற்றி சொல்லியாகிவிட்டது. புதுக்கோட்டை சமஸ்தானம் வழியாக தொண்டி வரை போகிற கால்வாயை ஸர். சி. பி. ராமஸ்வாமி ஐயர்

அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தானம் அன்று ஒரு தனி சமஸ்தானமாக இருந்து அவர்கள் அதற்கு ஒத்துக் கொள்ளாமல் ஆட்சேபனை கிளப்பியதால் அது நிறுத்தப்பட்டது. அத்திட்டம் நிறைவேற்றப் படுமானுல் காவேரி தண்ணீரால் எத்தனையோ இடங்கள், எத்தனையோ ஏக்கர் நிலங்கள் அதனுல் பயன்படும். ஆகவே நான் கனம் ராமையா அவர்களைக் கேட்பது என்னவென்றுல் இந்த காவேரி நீர் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வர வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நினைக்கிறேன். செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறியைப்பற்றி சுருக்கமாகச் சொல்லியிருக்கிருர்கள். கைத்தறிக்கு விசேஷ ஆதரவு கொடுக்கவேண்டுமென்று சொல்ல நான் விரும்புகின்றேன். அதைப் பற்றி மந்திரியவர்கள் கொஞ்சம் கூடுதலாகச் சொல்லியிருந்தால் திருப்தியாய் இருந்திருக்கும். அடுத்தபடியாக, தாலூகாக்களில் உள்ள ஆஸ்பத்திரிகளைப் பற்றி சொல்லியிருக்கிருர்கள். தாலுகா ஆஸ்பத்திரிகளை ஆஸ்பத்திரிகள் என்றே சொல்வதற்கில்லை. சாதாரண ஒரு டிஸ்பென்ஸரியை விட மிகவும் மோசமாயிருக்கிறது. பெயர் மாத்திரம் பெரிய பெயராய் இருக்கிறது. அதில் குறைவு ஒன்றும் இல்லை. அவைகளுக்கு " டாலுக் ஹெட் க்வார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டல் " என்று பெயர் கொடுத்திருக்கிருர்கள். அந்த ஆஸ்பத்திரிகளை எல்லாம் நல்ல முறையில் மக்களுக்கு பயன்படும் முறையில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்.ஜீ.ஓ.க்களைப்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். என்.ஜீ.ஓ.க்கள் இப்பொழுது கிடைத்திருப்பதை வைத்துக் கொண்டு அவர்கள் திருப்தியடைய வேண்டும். அவர்கள் இதற்காக சர்க்காரைப் போற்றத்தான் வேண்டும். அதற்குப் பதில் அதிருப்தியுள்ளவர்களாக இருக்கக் கூடாது. கிடைத்ததை வைத்துக்கொண்டு திருப்தியடைந்து சர்க்காரை போற்றினுல் சிறிது காலம் கழித்தாவது இன்னும் கூடுதலாக ஏதாவது கிடைக்க வழியுண்டு. அதேபோல் வில்லேஜ் ஆபீஸர்களுக்கும் சம்பளக் கூடுதல் கொடுக்கப்பட்டுள்ளது. அதை அவர்களும் வரவேற்க வேண்டும். நான் சொல்வேன், நமது இப்போதைய பட்ஜெட் ஒரு டெபிஸிட் பட்ஜெட்டாக இருப்பதற்குக் காரணமே இதுதான். இவர்களால்தான் பட்ஜெட் ஒரு டெபிஸிட் பட்ஜெட்டானது. ஆகவே நான் சொல்வது என்னவென்றுல், சர்க்கார் சிப்பந்திகள் குறை கூருமல் உற்சாகமாய் இருக்க வேண்டும். அவர்களால்தான் சர்க்காருக்கு ஒரு டெபிஸிட் பட்ஜெட் கொண்டு வரவேண்டி வந்தது. சர்க்காருக்கு அவர்களால் தான் இந்த கடன் ஏற்பட்டு இருப்பதாக அவர்கள் எண்ண வேண்டும். ஆகவே இப்பொழுது கிடைக்கப்பட்டிருக்கும் சம்பள உயர்விற்கு அவர்கள் சர்க்காரை " தாங்ஸ் " செய்ய வேண்டும். என். ஜீ. ஒ.க்களுக்கு சம்பள உயர்வு கொடுத்ததற்கு நான் வருத்தப்படவில்லை.

அடுத்தபடி, ஸ்லம்ஸ் பற்றி ஒரே ஒரு வார்த்தை. இங்கு நாளுக்கு நாள் ஸ்லம்ஸ் அதிகரித்துக்கொண்டே வருகிறது. "ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட் " என்று ஒன்று இருக்கிறது. ஆனுல் ஸ்லம்ஸுக்கு குறைவேயில்லை. அம்மையார் அவர்கள் கோயம்பத்தூர் நகராண்மைக் கழக உபதலைவராக இருப்பதால் அவர்களுக்கு இதைப்பற்றி எல்லாம் நன்கு தெரியும். ஆகவே அவர்கள் தலைமை வகிக்கும்போது இதுபற்றி சொல்ல அனுமதி தருவார்கள் என்று நினைக்கிறேன். நம் நாட்டில் அதிகமான கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். அதற்கு வேண்டிய பணம் அரசாங்கத்திலிருந்து கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்வதோடு நமது ராஜ்யத்தின் நிதி நிலைமையை இதுவரை நன்கு பாதுகாத்து வந்ததற்காக நமது நிதி அமைச்சரவர்களை நான் பாராட்டிக் கொள்வதோடு வரும் காலத்திலும் அதை நன்கு பாதுகாக்க வேண்டும், பாதுகாப்பார் என்றும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

12-6 p.m. **SRI K. GOPALA GOUNDER** : அம்மையார் அவர்களே, சென்ற ஆண்டில் ஹைஸ்கூலில் அரைச் சம்பள சலுகை விஷயமாக வன்னியகுல க்ஷத்திரியர் அல்லது வன்னிய என்று போடலாம் என உத்தரவு பிறப்பித்து இருந்ததாகத் தெரியவருகிறது. ஆனுல் இந்த ஆண்டில் வன்னியகுல





க்ஷத்திரியர் என்று ஒன்றுதான் கூறப்பட்டு இருப்பதாகக் கூறி ஹெட் மாஸ்டர்கள் ஹைஸ்கூல்களில் வன்னிய என்று போடப்பட்டிருந்தால் அவர்களுக்கு அரை சம்பள சலுகை இல்லையென்று சொல்கிருர்கள். ஆகவே, வன்னியகுலக்ஷத்திரியர் என்பதும் வன்னிய என்பதும் ஒன்றுதான் என்று உடனடியாக உத்தரவு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள டிவிஷன் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டை இரண்டாக பிரிப்பதாக தெரிய வருகிறது. அப்படி என்ஜினியரிங் டிபார்ட்மெண்டை இரண்டாகப் பிரிப்பதில் ஒரு வித பயனும் இல்லை. கழிந்த இரண்டு மூன்று வருடங்களாக தென் ஆற்காடு ஜில்லாவில் எங்கள் ஜில்லா போர்டில் ஒவ்வொரு தாலுகாவிலும் சில ரோடுகள் போடப்பட்டிருக்கிறது. அதுவும் இதுவரையிலும் இரண்டு மூன்று ரோடுகள் கூட ஒரு இடத்திலும் முடிவு அடைந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றுல் ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு சூப்பர்வைஸர்தான் இருக்கிருர்கள். அவர் மெயின் ரோடை பார்வையிடுவதா அல்லது ஜில்லா போர்ட் ரோடை பார்வையிடுவதா ? அவர்களால் வேலை செய்ய முடியவில்லை. ஆகவே, நான் சொல்வது என்னவென்றுல் ஒவ்வொரு தாலுகாவிற்கும் இரண்டு இரண்டு சூப்பர்வைஸர்களைப் போட்டால்தான் அந்த ரோடுகள் சீக்கிரத்தில் முடிவு அடையக் கூடும். குறிப்பாக என் தாலுகாவில் கழிந்த இரண்டு மூன்று வருடங்களாக ஜில்லா போர்டாரால் செய்யப்படும் 36 ரோடுகளில் மூன்று நான்கு ரோடுகள்கூட இன்னும் சரிவர முடியவில்லை. ஏனென்றுல் அங்குள்ள சூப்பர்வைஸர்கள் மெயின் ரோடை பார்ப்பதா ? அல்லது ஜில்லா போர்டு ரோடை பார்ப்பதா ? இரண்டு வேலைகளையும் எங்களால் செய்யமுடியவில்லை என்று சொல்கிருர்கள். " லாண்ட் அக்கியுஸிஷன் தாசில்தார்கள் " இருக்கிருர்கள். இரண்டு தாலுக்காக்களுக்கு ஒரு தாசில்தாரைப் போட்டிருக்கிறது. இரண்டு தாலுக்காக்களிலும் அவர்களால் வேலை செய்ய முடியவில்லை. ஆகவே ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒவ்வொரு தாசில்தாரைப் போட்டால் நிலத்தகராறுகள் சரிவர கூடிய சீக்கிரம் தீரும். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மறுபடியும் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு தாலுகாவிற்கும் இரண்டு சூப்பர்வைஸர்களைப் போட்டால் ரோடுகள் எல்லாம் சீக்கிரம் போடப்பட்டு அதுமக்களுக்குப் பயன் படும் என்று சொல்லிக்கொண்டு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**(Deputy Speaker in the Chair.)**

**SRI M. S. SELVARAJAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவு திட்டத்தை வரவேற்கும் முகமாக சில வார்த்தைகள் பேசுவதற்கு ஆசைபடுகிறேன். பற்றுக்குறை பட்ஜெட்டாக இது தயாரிக்கப்பட்டிருக்கிறபோதிலும் இவ்வளவு வறிய நிலையிலும் கூட நல்ல காரியங்கள் விட்டுப் போகக் கூடாதென்று கவலையினுல் இது வெளியிடப்பட்டிருப்பதாக எனக்குத் தெரிகிறது. ஆகவே இந்த அரசாங்கம் நல்ல காரியங்கள் செய்வதில், ஏழை எளியவர்கள் நலனில் எவ்வளவு அக்கரை வைத்திருக்கிருர்கள் என்பதற்கும், அரசாங்கத்திற்கு மக்களின் மீது இருக்கக் கூடிய நம்பிக்கைக்கும் மக்களுக்கு இந்த அரசாங்கத்திடம் இருக்கக் கூடிய நம்பிக்கைக்கும் இது ஒரு அத்தாட்சி என்று நினைக்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவோடு நாங்குனேரி தாலுகாவை சேர்க்கப் போவதாக நிதியமைச்சரவர்கள் வெளியிட்டார்கள். நாங்குனேரி தாலுகா இயல்பாகவே வரட்சி மிகுந்த பிரதேசமாகும். ஆகவே கன்னியாகுமரி கரையிலே அது மலையாள ராஜ்யத்தில் இருந்தபொழுது தொடங்கப்படாத நல்ல நீர் நிலைத்திட்டங்கள் எல்லாம் தொடங்கும்போது அது நாங்குனேரி தாலுகாவையும் சேர்த்துத்தான் பயன்படுவதாக இருக்கும். ஆனுல் கன்னியாயிற்றே, எப்படி பராமரிக்கப் போகிருள் இந்த நாங்குனேரி என்ற குழந்தையை என்ற சந்தேகம் அங்குள்ளவர்களிடம் உள்ளது. அதை சிலர் வெளிப்படுத்தியும் இருக்கிருர்கள். இம்மாதிரி ஒரு பெரிய காரியம் நடக்கிறபோது சட்டசபை அங்கத்தினர்களையாவது ஓரளவிற்கு முறையாக கலந்து கொண்டு ஏற்பாடு செய்திருந்தால் அதிக நலமாய் இருந்திருக்கும் என்பது என்னுடைய பணிவான அபிப்பிராயம். முடிந்த பிறகு நல்ல விதமாக கன்யாகுமரி ஜில்லாவும் இதை ஏற்று நாங்குனேரி வாசிகளும்

[Sri M. S. Selvarajan] [2nd July 1957

12-10 p.m. இதை பொறுத்து நல்ல ஒரு இணைப்பு சந்தோஷமாக நடக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசையும் வேண்டுகோளும். மதிப்பிற்குறிய ஒரு அங்கத்தினர் வெளிப்படுத்தியதுபோல, 1857-ஆம் வருஷத்தில் தொடங்கிய சுதந்திரப் போராட்டம் முடிந்து 100 ஆண்டுகள் நிறைவேறுவதை இன்னும் 1, 2 மாதங்களில் கொண்டாடப் போகிறோம். அந்நாளில் தங்களுடைய உயிரையும் உடலையும் அர்ப்பணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடிய முறையில் ஒரு வார்த்தை கூட பட்ஜெட் உரையில் காணப்படாதது வருந்தத்தக்கதுதான். கிராம அதிகாரிகள், போலீஸ் உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்விச் சலுகை அளித்தது போல், தியாகிகளுடைய குழந்தைகளுக்கும் 10-வது வரை இலவசக் கல்வியும் கல்லூரியில் பாதிச் சம்பள சலுகையும் அளிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மற்ற வசதிகளை வேண்டுமென்றால் கொஞ்சம் ஆர அமர சிந்தித்துப் பார்த்து செய்யலாம். பக்கத்தில் இருக்கக் கூடிய ஆந்திரா முதலிய ராஜ்யங்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டு தீர யோசித்து ஆரமர சிந்தித்து மற்ற வசதிகளையும் தியாகிகளுக்கு செய்து கொடுத்தால் ஒரு நல்ல காரியம் நடந்ததாகுமென்று நான் நினைக்கிறேன்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட இந்த பட்ஜெட் உரையில் கூறப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நமது அரசாங்கம் அதற்காக ஒரு பிரத்யேக அதிகாரியை நியமித்து ஏறக்குறைய 14 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் வகுத்து மத்திய அரசாங்கத்தின் மான்ய உதவி பெற்று வழி வகைகள் செய்து கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் இது விஷயமாக நமது அரசாங்கம் இந்த பட்ஜெட் உரையில் மத்திய மான்யத்தை பெறுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லி ஒரு அடையாள கிராண்டை ஒதுக்கியிருக்கலாம். இல்லாவிட்டாலும், இந்த விஷயம் அரசாங்கத்தில் நல்ல கவனத்தில் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். சாதாரணமாக கதிர்கள் **(Spindles)** ஒதுக்குவதில் பாகிஸ்தான் அகதிகளுக்கு முன் பாத்யதை கொடுப்பதாக மத்திய அரசாங்க மந்திரி அவர்கள் சில நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டார்கள். இலங்கையிலிருந்து நாடு திரும்பியவர்களின் நிலையும் பாகிஸ்தான் அகதிகளைப் போன்றதே. 20, 30 ஆண்டுகள் உழைத்த பின்பும் நிர்கதியாக தாயகம் திரும்பிய இலங்கை இந்தியர் பலர் தங்கள் உயிரையும் திரணமாக மதித்து ஆழ்கடலைக் கடந்து மீண்டும் இலங்கை செல்ல நினைக்கும் அளவிற்கு இலங்கையிலிருந்து தாய் நாடு திரும்பியவர்கள் கஷ்டமனுபவிக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து அவர்கள் கஷ்டத்தைத் தீர்த்து வைப்பதில் அவசர கவனம் செலுத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுபோலவே, மாஜி மரமேறும் தொழிலாளிகளுக்கு அரசாங்கம் உருப்படியாக என்ன திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. மாஜி மரமேறும் தொழிலாளர்களின் பிரச்னை இந்த ராஜ்யத்தில் 2, 3 ஜில்லாக்களில் மிகவும் அதிகமாக இருக்கிறது. சில பகுதிகளில் தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக முன் நாள் பதவியிலிருந்த அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இன்றுவரையில் அது நடைமுறையில் அமுல் நடத்தப்படவில்லை. பெரம்பூரில் சர்க்கார் நடத்திக்கொண்டிருக்கும் தீப்பெட்டி தொழிற்சாலை நல்ல முறையில் இயங்குகிறது. பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு அது நன்மையாக இருக்கிறது. அது வெற்றிகரமாக நடப்பதால், அதே போன்று மற்ற பகுதிகளிலும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டத்தை வேகமாக நிறைவேற்றுவதற்கு தயங்கவேண்டியதில்லை. மத்திய அரசாங்கத்தின் மான்யத்தைப் பெற்று அந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கலாம் என்பது என்னுடைய ஆலோசனை. எங்கள் ஜில்லாவில் புதிதாக வந்திருக்கக் கூடிய அதிகாரிகள் ஓரளவுக்கு நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்த முயற்சிக்கிறார்கள். ஆனால் தாலுகா ஆபீஸ் அதிகாரிகள், கிராம அதிகாரிகள் ஜனங்களிடத்தில்



2nd July 1957] [Sri M. S. Selvarajan]

நடந்து கொள்ளக்கூடிய அளவு கோலைப் பொறுத்துத்தான், அங்கு நடக்கக்கூடிய நிர்வாகத்தைப் பொறுத்துதான், சுதந்திரத்தின் உண்மையான அனுகூலங்களை மக்கள் அனுபவிக்க முடியும். சிக்கனத்தை அமுல் நடத்த ஒரு அதிகாரி நியமிக்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம் தான். திருநெல்வேலி ஜில்லாவில் ஏழு முன்சீப் கோர்ட்டுகள் இருக்கின்றன. நாங்குனேரி, அம்பாசமுத்திரத்திற்கு ஒரு முன்சீப் கோர்ட்டு இருக்கிறது. தென்காசிக்குப் பக்கத்தில் செங்கோட்டையில் ஒரு முன்சீப் கோர்ட்டு இருக்கிறது. இங்கு ஏழு கோர்ட்டுகளுக்குப் பதிலாக ஐந்து கோர்ட்டுகள் இருந்தால் கூட போதுமானதாக இருக்கும். தாலுகா ஆபீஸ்களில் **Public Relations Officer** ஒருவரை நியமித்து அங்கு கிராமங்களி லிருந்து வரக்கூடிய ஏழை எளிய விவசாயிகளுக்கு என்ன காரியங்கள் ஆகவேண்டும் என்பதைக் கேட்டு அறிந்து அவர்களுக்கு அவ்வப்பொழுது அந்தக் காரியத்தை உடனடியாக முடித்துக்கொடுக்க வேண்டும். இம் மாதிரி ஒரு திட்டத்தை அமுல் நடத்துவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யலாம் என்பது என்னுடைய ஆலோசனை.

ஜில்லா காட்டிலாகா அதிகாரி . **Conservator of Forests** "கன்செர்வேடிவ்" போக்கிலேதான் நடந்துக் கொண்டிருக்கிறார்களே தவிர உண்மையாக மக்களுக்கு நன்மை பயக்கும் காரியங்களை விருவிருப்புடன் யோசனை செய்வதில்லை. திருச்செந்தூர் தாலுகாவில் குதிரை மொழி என்ற ஒரு மண் மேடு இருக்கிறது. அங்கு வெறும் மணல் குவியல் தான் இருக்கிறது. அதன் அருகில் ஜனங்களுக்கு குடியிருப்பதற்குக் கூட இடமில்லை என்று சொல்லி குதிரை மொழி தேரியில் நிலம் கோரி பன்முறை முயற்சித்தும் **Reserve Forests** எனற பெயரால் அந்த மண் மேட்டை கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அனுமதி மறுக்கப்படுகிறது. அதிகாரிகளும் அமைச்சர் அவர்களும் இதில் கவனம் செலுத்த முன்வரவேண்டும். ஜில்லாவில் இருக்கக்கூடிய தலைமை அதிகாரிகளின் ஆபீஸ்களில் டெலிபோன் கனெக்ஷன்கள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் **easy approach, each contact** அதாவது இருந்த இடத்திலேயே வேண்டிய காரியங்களை பார்த்துக்கொள்ள உபயோகமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கு திட்டம் நல்லவிதமாக அமுல் நடப்பதற்காக போலீஸ் இலாகாவையும் மதுவிலக்கு இலாகாவையும் இணைத்தார்கள். அதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இது ஒரு பக்கத்தில் வரவேற்க தகுந்ததாக இருந்தாலுங் கூட, இங்கே **Superintendant** பதவி வகித்தவர்கள் சிலர் அங்கே **Deputy Superintendant** டிப்டி சூப்பரின்டென்டெண்டு உத்தியோகம் பார்த்தவர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் போன்று பதவி வகிக்க நேரிடுகிறது. இது போன்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்பு எக்ஸைஸ் டிபார்ட்மெண்டில் இருந்த அதிகாரிகளை ரிஜிஸ்டரேஷன் டிபார்ட்மெண்டில் **absorb** செய்தார்கள். அதேமாதிரி போலீஸ் இலாகாவில் இருக்கக்கூடிய அதிகாரிகளை பரிசீலனை செய்து மற்ற இலாக்காக்களுக்கு மாற்ற வழி வகை செய்வதன் மூலம் அந்த டிபார்ட்மெண்டை இன்னும் விருவிருப்பாக்கலாம். ஆகையால் இதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். போலீஸார் தவறு செய்யாமல் பார்த்துக் கொண்டாலே போதும். மதுவிலக்கு தானாகவே வெற்றி பெறும்.

தொழில் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள், சேர்த்துக் கொள்ளப்படாதவர் விவரங்களை ஓரிரண்டு வாரங்களில் அறிவிப்பதற்கு வழி வகை செய்தால் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். தொழில் கல்லூரிகளில் சேருவதற்கு விண்ணப்பம் செய்து கொண்டவர்கள் என்றாலே மற்ற கல்லூரிகளில் அது ஒரு தடங்கலாக கருதுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். தொழில் கல்லூரிகளில் இடம் பெறாதவர்கள் மற்ற கல்லூரிகளில் இடம் பெறுவதற்கும் கஷ்டப்படும் நிலைமை ஏற்படாத வகையில் தொழில் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்படவேண்டும். இவைகளெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும்.

[Sri M. S. Selvarajan] [2nd July 1957

திருச்செந்தூர் என்று சொன்னாலே அது ஒரு முக்கியமான க்ஷேத்திரம் என்பது எல்லோருடைய கவனத்திற்கும் வரும். இங்கு இருக்கும் ஆஸ்பத்திரி சர்க்கார் கைக்கு மாறப்போகிறது என்ற செய்தியை பத்திரிகை வாயிலாக அறிந்தேன். ஆனால் இதுவரை ஒன்றும் நடைபெறவில்லை. சர்க்கார் இதை ஆலோசித்தார்களா, அல்லது ஆலோசித்து கைவிட்டு விட்டார்களா என்பது தெரியவில்லை. இதை அவசரமாக சர்க்கார் கைக்கு மாற்றவேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-23 p.m. * SRI T. T. DANIEL : Sir, for a proper appreciation and discussion of the Budget, we need not go merely by the fact whether the Budget is a deficit one or a surplus one. A Budget may be surplus. Nevertheless, it need not be acceptable on that account. In the same manner, a Budget may be deficit, but on the other hand it may be a good Budget. A good Budget is one in which the resources of the State are harnessed and distributed through the different channels for the benefit of the people, to the improvement of their conditions. It is from that high pedestal that we have to look at the Budget. Sir, the Budget that has been presented by the Hon. Finance Minister is, of course, a deficit Budget. But there has been a suggestion, to make up the deficit, that the Government might recover a sum of Rs. 25 lakhs by increasing the rate of agricultural income-tax and another Rs. 125 lakhs by increasing to 2 per cent the sales tax on all commodities other than foodgrains. There has been a suggestion in the Budget to reduce the sales tax on foodgrains to 1 per cent. It would have been a very happy thing if that had also been abolished.

The present Budget possesses some redeeming qualities as well as some disappointing features. A sum of Rs. 132 lakhs has been provided in the Budget to meet the cost of revision of the salary of primary school teachers employed in the primary and basic schools in the local bodies as well as in the panchayats. While welcoming this measure, I have to point out to the Government that these benefits ought to have been extended also to the unfortunate poor teachers in Kanyakumari district. The basic salary of a graduate trained teacher in Kanyakumari district is only Rs. 55, whereas their compatriots in other parts of the State are getting Rs. 85. Then again, in the primary schools, the S.S.L.C. trained teacher is getting only Rs. 35 whereas his comrade elsewhere in the State is getting Rs. 45. This difference in the scale of pay is a strange anomaly and it is there after the integration of this area. I believe that the Government will take swift measures to equalise the scales of pay of the teachers, so that there may be a uniform scale of pay in the whole State.

I should also like to point out that this Government should take into consideration the difficulties and the hardships of political sufferers in our State. The fee concession that has been given to poor children should also be extended to the children of political sufferers in the State. Sir, there is an allotment of Rs. 11·5 crores under Education; a sum of Rs. 10 lakhs is allotted for giving mid-day meals and another Rs. 10 lakhs is allotted for fee concession. A



2nd July 1957] [Sri T. T. Daniel]

sum of Rs. 120 lakhs has been provided for improving the small-scale industries in the State, to solve the unemployment problem and there is another provision of Rs. 26 lakhs for improving village industries like tanning, bee-keeping, poultry and such other industries. These are some of the bright features of the Budget.

Sir, we welcome the proposal to retain the Kanyakumari district as such and to include the adjacent taluk in it. We welcome the people of the Nanguneri taluk and we assure them that we will be their guardian angels and we will be like brothers in their midst. They need not have any misgivings about us.

Sir, from the Hon. Finance Minister's speech, it is found that a sum of Rs. 390 lakhs has been allotted for the Kanyakumari district in the Second Plan. But in the same Budget we do not find that any amount is carved out of the amount of the Plan for meeting any expenditure in the current year's Budget. We are at a loss to find why the Government has not set apart any definite amount out of the Second Plan amount for the use of the Kanyakumari district in this year's Budget. Is it because the District Collector failed to send proposals in time for the inclusion of schemes? Or is it because the Government found that there were no finished scheme for implementation? We are really anxious and we are really disappointed about this non-inclusion. There have been certain important schemes, like the Chittar Patangal Scheme, Kulitherai, Ereniel and Colachel Drinking Water Schemes. The erstwhile Travancore-Cochin Government had submitted these schemes to the Planning Commission, but the Planning Commission dropped these schemes probably because the Commission thought that these schemes should be immediately taken up by the successor Madras Government. Sir, the omission of these schemes is a disappointing feature. So far as the Patangal Chittar Scheme is concerned, I would like to say that it is a life-and-death problem so far as the people of the Kanyakumari district are concerned. The omission of this scheme in the Budget of this year is a reckless and negligent one.

Sir, coming to integration of the public services, I am at a loss to know why there should be inordinate delay in doing that. I am quarrelling with the Government, and opposing the Government, because, I like the Government as the Government is my sweetheart and love, the Congress Party is my newly-wedded wife and that is why I pick up this fond quarrel with the Government and the Hon. Finance Minister. This should have been completed long long ago. Though we have been dinning into the ears of the Government that this integration should be settled at an early date, in spite of our persistent request, there seems to be a go-slow policy. We only want the Government to goad the officers responsible into action and remove this slow-down policy and take swift firm decision in this matter of integration of services.

So far as this year's Budget is concerned, I must say that generally the people of Kanyakumari district are not satisfied.

There is only a small provision made in certain departments and no provision for certain other departments. Under irrigation, only Rs. 4 lakhs has been allotted and under Civil Works, only Rs. 11 lakhs has been allotted. These are very meagre amounts to satisfy the requirements of the people of Kanyakumari.

Sir, so far as the Budget as it now stands, I would say that it is only a blank cheque to the people of Kanyakumari. We fully believe that the Hon. Finance Minister will fill up the blank cheque by allotting proper amounts for the various demands of the district. We ask the Government food and water, but the Government should not give us stones. I am sure, Sir, that this cry on the floor of the House will not be a cry in the wilderness. For, I fully believe that the Government is a just one; it has ears and it has a heart; it has goodwill and there is good conscience and that is evidenced by the Hon. Finance Minister's statement that it has been decided by the Government to retain the Kanyakumari district as such. Therefore, I appeal and fervently hope that the legitimate demands of the people of Kanyakumari district would be fulfilled soon.

12-30 p.m. *SRI S. R. MUNUSAMI : கனம் சபாநாயகர் அவர்களே, நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள பட்டியலுக்கு தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தின் சார்பாக எங்களுடைய நன்றியைத் தெரிவிப்பதோடு, அதை வரவேற்பதோடு ஒரு பக்கத்தில் அதைப் பார்த்தால் வருத்தத்தை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். காரணம் எங்கள் சமூகம் தாழ்த்தப்பட்ட சமூகம், வஞ்சிக்கப்பட்ட சமூகம், வரண்டப்பட்ட சமூகம், சுரண்டப்பட்ட சமூகம், வெளியேற்றப்பட்ட சமூகம், இப்படிப்பட்ட ஒரு சமூகம் இருக்கிறது என்று சொன்னால் அது எங்களுடையதான தாழ்த்தப்பட்ட சமூகம் தான். எங்கள் இனத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் சுண்டைக்காய் அளவில் தான் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவர்களுடைய வாழ்க்கைத்தரம் எந்த அளவில் இருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்த அளவிற்கு அவர்கள் பிற்போக்காக இருக்கிறார்கள் என்பது கனம் அங்கத்தினர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் அப்படிப்பட்ட நிலையில் இருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி அவர்களுக்குப் போதாது என்று தான் நான் சொல்லுகிறேன். ஆனால் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள், இந்த வருஷம் அவர்களுக்கு என்று போன வருஷத்தைக் காட்டிலும் அதிகமாக நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள், அதற்காக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்துகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் நான் சொல்லுகிறேன் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு என்று ஒதுக்கப்படும் பணம் அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். உண்மையில் அவர்களுக்கு என்று ஒதுக்கப்படும் பணம் அவர்களுக்குப் போய் சேருவது இல்லை. அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பணம் அவர்களுக்கு போய் சேராமல் இருப்பதால் அவர்களால் அதை அனுபவிக்க முடியவில்லை. ஆனால் அது அதிகார வர்க்கத்திற்குத்தான் போய்ச் சேருகிறது. அரசாங்கம் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினருக்கு பல சலுகைகளை கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். தரிசு நிலங்கள் கொடுக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிக் கொடுக்கிறார்கள் என்று எங்கள் சம்மேளனத்திற்குத் தெரிந்தவுடன் மனுக்கள் போட்டோம். அப்படி மனுக்கள் போட்டாலும் அதிகார வர்க்கத்தினர் அதை கவனிப்பதே இல்லை. மனுக்கள் போட்டு பத்து வருஷங்களாகியும் கூட இன்னும் தரிசு நிலங்கள் கொடுத்த பாடில்லை. உத்தரவு போட்டபடி அரசாங்கம் நிறைவேற்றவில்லை. வட ஆற்காடு ஜில்லாவில் 1½ லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதைக் கொடுக்கவேண்டும் என்று அடிக்கடி மனுக்கள் போட்டோம்.



சம்மேளனத்தின் சார்பாக சுமார் இரண்டாயிரம் மனுக்கள் போட்டோம். ஆனால் என்ன முடிவு ? ஏதோ இரண்டு இடங்களில் தான் நிலங்களை ஒதுக்கி இருக்கிறார்கள். அங்குள்ள டி.சி. புரம்போக்கு நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் அதில் ஏதோ தகராறுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். 288-ம் நெம்பர் சுத்தநேரி கிராமத்தில் இருக்கும் புரம்போக்கு நிலங்களைக் கொடுக்க வேண்டும் என்று தாழ்த்தப்பட்டவர்கள் கேட்டால் அதைக் கொடுக்கவே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் காண்பிக்கவேண்டும் என்று ஒதுக்கப்படும் பணம் அவர்களுக்குப் போய் சேராமல் அதிகார வர்க்கத்தில் இருக்கக்கூடிய ரிவினியூ இன்ஸ்பெக்டர்களுடைய பிரயாணப்படி செலவிற்குத்தான் போய் சேருகிறது. அதைத் தவிர வேறு எந்த விதத்திலாவது யாருக்கு ஒதுக்கப்பட்டதோ அவர்களுக்குப் போய் சேருவதாக இல்லை. எங்களுக்கு உண்மையாகவே சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் நினைத்தால் எங்களுக்கு என்று ஒதுக்கப்படும் பணம் எங்களுக்கே செலவு செய்யப்படுகின்றனவா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு வருஷமும் எங்களுக்கு பணத்தை ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்கப்படும் பணம் ஒவ்வொரு வருஷமும் ஹரிஜனங்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் செலவு செய்யப்படுகிறதா என்பதை கவனிக்கவேண்டும்.

எங்களுக்கு என்று அளிக்கப்பட்ட சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று எவ்வளவோ மனுக்கள் கொடுக்கிறோம். அந்த மனுக்களைப்பற்றி கேட்டால் அவைகள் பத்து வருஷங்களாக மாகாண செக்கரடேரியட்டில் தங்கி விடுகிறது என்று சொல்லி தட்டிக் கழித்து எதாகிலும் சாக்குப் போக்கு சொல்லி விடுகிறார்கள். இதனால் தாழ்த்தப்பட்டவர்களால் தலை தூக்கி நிற்க முடியவில்லை. தலை தூக்கி நிற்பதற்கு அருகதை அற்றவர்களாக இருக்கிறோம். ஆனால் எங்களுக்கு என்று ஒரு கோடி 94 லட்சம் ரூபாய் இந்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதுவும் போதாது, இரண்டரை கோடி ரூபாய் ஒதுக்கினாலும் போதாது, தாழ்த்தப்பட்ட மக்கள் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று அரசாங்கம் கருதவில்லை. இதை உணருவதற்கு அங்கத்தினர்களுக்கு உள்ளம் இருக்கவேண்டும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று விவசாய அபிவிருத்தியைப் பற்றி பேசுகிறார்கள். அதற்கு என்று அதிகப்படியான பணத்தையும் ஒதுக்கி இருக்கிறார்கள். அப்படி அதிகப்படியாக பணம் ஒதுக்கி இருந்தும் 100-க்கு பத்துப் பேர்களுக்காவது பட்டா கொடுத்திருக்கிறார்களா என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு எதிர் கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் பொதுவாக இருப்பது தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றமடையச் செய்வது தான். எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியை எதிர்க்கலாம். ஆனால் சம்மேளனத்தை எதிர்க்க முடியாது. எங்களுடைய சம்மேளனத்திற்கு துரதிருஷ்டம் இருக்கிறது. எங்களுக்கும் துரதிருஷ்டம் இருக்கிறது. ஜாதிக் கோட்பாடு வந்து விடுகிறது. அதனால் நாங்கள் முன்னேற்றமடையாமல் இருக்கிறோம். எங்களுடைய சமூகம் முற்போக்கு அடையக் கூடிய எண்ணம் இருந்தால் எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் அந்தப் பணம் அவர்களுக்கு முழுவதும் போய் சேருகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும். இதை தாழ்த்தப்பட்ட சம்மேளனத்தின் சார்பாகச் சொல்லுகிறேன். அதனால்தான் நாங்கள் இந்த பட்ஜெட்டை வருத்தத்துடன் வரவேற்கிறேன் என்று முதலில் சொன்னேன்.

" புளித்த கூழுக்கு ஊறுகாய் கொடுக்கும் புண்ணியவதி " என்றும், " கர்ப்பவேதனைப்படும் மனைவிக்காக உச்சிக் கரண்டி எண்ணை அண்டை வீட்டில் மருத்துவத்திற்கு வாங்கினால் ஆயுள் கடைசிவரை பண்ணையில் கட்டுப்பட்டு விடுகிறான் தாழ்த்தப்பட்ட மகன் என்பதாகும் ". அந்த நிலைமையில் நாங்கள் இருக்கிறோம். அதனால் தான் வருத்தப்படக் கூடிய நிலையில் நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னேன். சலுகைகள் அநேகம் கொடுத்திருப்பதாக அரசாங்கம் சொல்லுகிறார்கள். அப்படி

[Sri S. R. Munusami] [2nd July 1957

கொடுக்கப்பட்ட சலுகைகள் எல்லாம் ஹரிஜனங்களுக்குப் போய் சேருகிறதா என்பதை அரசாங்கம் பார்க்கவேண்டும். மனுக்கள் கொடுத்தால் அவைகள் பத்து வருஷம் அல்லது ஐந்து வருஷங்கள் பைசல் ஆகாமல் இருக்கின்றன. டி.சி. புரம்போக்கு நிலங்கள் வேண்டும் என்று மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை பைசல் செய்வதில் அங்குள்ள கணக்குப் பிள்ளைகளும் மணியக்காரர்களும் செய்யும் அக்கிரமம் சொல்ல முடியாது. ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருப்பதாக சொல்லுவதால் தலைக்கு ஐந்து ஏக்கர் நிலமாவது கொடுக்கக் கூடாதா என்று கேட்கிறேன். அதற்கு சட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எங்கே அந்த சட்டம், கொடுப்பது யார் ? இதையெல்லாம் பார்த்தால்தான் மணியக்காரர்களும் கணக்குப் பிள்ளைகளும் அக்கிரமம் செய்வதாகத் தெரிகிறது. மற்றும் அங்குள்ள பஞ்சாயத்து ப்ரசிடெண்டும் அக்கிரமம் செய்கிறார். இவர்கள் செய்யும் அக்கிரமம் சொல்லி முடியாது. இதைப்பற்றி எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்கு தெரிந்திருக்கும். எந்தத் தொகுதியிலிருந்து வந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இவர்களைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்களைக் கேட்டால் " ஆமாம், உண்மை " என்றுதான் சொல்லுவார்கள். அதனால்தான் எங்கள் சமூகம் வஞ்சிக்கப்பட்ட சமூகம் என்று சொன்னேன். அதனால் எங்கள் சமூகத்தின் பேரில் அரசாங்கம் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு வேண்டியதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அத்துடன்கூட காட்டிலாகாவைப்பற்றி சொல்லும்போது அதற்கு என்று அபிவிருத்திக்காக பணம் ஒதுக்கியும் நிலங்களை ஒதுக்கியும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஐம்பது வருஷங்களுக்கு முன்னதாக காட்டிலாகாவால் காடுகளில் எங்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவைகள் இல்லை. அப்பொழுது நாங்கள் அவைகளில் விவசாயம் செய்து வந்தோம். இப்பொழுது அவைகள் நின்றுபோய்விட்டது. அதற்கு என்று அப்பொழுது கல்லுகள்கூட அமைத்திருந்தார்கள். இப்பொழுது அந்த நிலங்களைக் கொடுக்க காட்டிலாகா மறுத்துவிட்டார்கள். இப்படிச் செய்தால் உணவு உற்பத்தியை எப்படி அதிகரிக்க முடியும் ? இது சம்பந்தமாக பல மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிலங்கள் வேண்டும் என்று மனுக்கள் கொடுக்கப்பட்டன. பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லி வந்தார்கள். ஆனால் கடைசியில் என்ன பதில் வந்தது என்றால் நிலம் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். இப்படிச் சொல்லும் போது காடு பராமரிப்பதற்கு பணம் ஒதுக்கி என்ன பயன் இதற்கு என்று 4 கோடி 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை நல்ல முறையில் எங்களுக்கு பயன்படும் முறையில் செலவழிக்க வேண்டும். ஐம்பது வருஷங்களாக நாங்கள் அந்த நிலங்களை அனுபவித்துக்கொண்டு வந்தோம். பிறகு அங்கு காடுகளை வளர்க்க வேண்டும் என்று வேலை செய்தார்கள். பள்ளம் தோண்டி விதை விதைத்து மரம் நட்டார்கள், ஒன்றும் பிரயோசனம் இல்லாமல் போய்விட்டது. ஆனால் அந்த நிலங்களை எங்களிடம் கொடுத்தால் அங்கு நாங்கள் விவசாயம் செய்து நாட்டின் உணவு பற்றாக்குறையை நீக்குவோம். சல்லிவேர்கூட அங்கு இருக்காது. அங்கு செலவிடப்படும் பணத்தை நல்ல முறையில் செலவிட வேண்டும். அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தலைக்கு ஐந்து ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுடைய கோரிக்கைகளை கொஞ்சம் கவனித்து அதை கண்காணித்து அவைகளை கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. P. ELUMALAI** : கனம் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தை அறிய விரும்புகிறேன். ரூ. 1,94,17,100 ஒதுக்கப்பட்டிருப்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கா அல்லது ஹரிஜனங்களுக்கு மட்டுமா என்று கனம் அங்கத்தினர் விவரமாகச் சொல்லவேண்டும். அவர் பேசியபோது அவ்வளவு தொகையும் ஹரிஜனங்களுக்கே என்று சொன்னார்கள். அது சரியல்ல.



2nd July 1957] [Sri T. P. Elumalai]

அந்தத் தொகை தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேருக்கும் தான் என்று நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

* **Sri M. C. MUTHUKUMARASAMY** : கனம் உதவி சபாநாயகர் 12.41 p.m.
அவர்களே இன்று சபை முன் நமது நிதி மந்திரியவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தை நான் முழு மனதோடு ஆதரித்து இரண்டொரு விஷயங்களைச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

இந்த பட்ஜெட்டை அலசிப் பார்க்கும் நேரத்திலே ஒவ்வொரு துறையிலேயும் குறிப்பாக அடிப்படையிலே இருக்கும் மக்களுக்கும், மத்தியதர வகுப்பு மக்களுக்கும் எந்தெந்த முறையிலே சலுகை செய்யவேண்டுமென்று ஆராய்ந்து, பொதுவாக இன்னும் சொல்லவேண்டுமானால் கிராமப் பகுதிகளிலே இருக்கும் மக்களுக்கு அவ்வப்போது எத்தனை காரியங்கள் செய்ய முடியுமோ அத்தனை காரியங்களையும் செய்வதற்கு தகுந்த முறையிலே நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அதை யாரும் வரவேற்காமல் இருக்கமுடியாது.

இந்த பட்ஜெட்டிலுள்ள சில அம்சங்களைச் சொல்வதற்கு முன்னால் எனது ஜில்லாவில் செய்யப்பட்டுள்ள தீமைகளைப்பற்றி நான் சொல்ல ஆசைப்படுகிறேன். தஞ்சையைப்பற்றி சொல்லும்போது, " சோழ வளநாடு சோறுடைத்து " என்று பெருமையாக மற்றோர்கள் கொண்டாடுகிறார்கள். நாங்களும் பெருமை அடைகிறோம், சொல் அளவிலே. ஆனால், உண்மையில் அங்கு இருக்கும் மக்களுக்குச் சோறு கிடைக்கிறதா என்று பரிசீலனை செய்து பார்த்தால், அது தான் இல்லை என்று சொல்லி வருத்தப்பட வேண்டிய நிலைமையாக இருக்கிறது.

இன்றைக்கு தஞ்சை ஜில்லாவில், சர்க்கார் கொடுத்திருக்கும் புள்ளி விவரப்படி 33 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அதில் 85 சதவித விவசாய மக்கள் அதில் ஆதித்திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 8 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஆயிரத்துக்கு ஒன்றோ இரண்டோ இருக்கலாம். அதற்கு அதிகமாக இருக்க முடியாது. அவர்களுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது, அவர்கள் மண் தோன்றி, புல் தோன்றிய காலத்திலிருந்தே உழைத்து உழைத்து உருக்குலைந்து வருகிறார்கள். இப்படி உழைத்து உழைத்து உருக் குலைகிறார்களே, ஏதாவது நன்மை இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. குடியிருப்பதற்குக்கூட இட வசதி இல்லை என்று சொன்னால், அவர்கள் என்ன சிந்திப்பார்கள் என்பதை உங்களுடைய முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

தஞ்சை ஜில்லாவில் ஒரு பரம்பரை வழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, ஒரு தாழ்ந்த மகன் சொந்தமாக நிலம் வாங்கினால், பரம்பரை வழக்கப்படி, அது செல்லாது என்று சொல்கிறார்கள். இந்த வழக்கத்தை முதலில் உடைத்தெறியவேண்டும். ஹரிஜன மக்கள் சார்பிலே கவனம் செலுத்துகிற சர்க்கார் இருக்கிற இந்த நேரத்திலேகூட ஹரிஜனங்களுடைய வீடுகள் பிரிக்கப்படும் பரிதாப நிலை இருக்கிறதென்று சொன்னால், அதைப்பற்றி நான் என்ன சொல்வது ?

தஞ்சை ஜில்லாவிலே, ஏறக்குறைய ஒன்றரை மாதங்களுக்கு முன்னால் ஒரு தெருவை அழித்து வாழை நட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இதைவிட மோசமான நிலை எங்கு இருக்கும் என்று சிந்திக்கும்போது கொதிப்பு ஏற்படுகிறது. சர்க்கார் எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்கிறார்கள். அவைகளை நாங்கள் வரவேற்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், அங்கு ஹரிஜனங்களுடைய இன்றைய நிலையைப்பற்றி கண்டறிந்து தகவல் தெரிவிக்கும்படி அமைச்சரவர்கள் ஒரு உத்தரவு வெளியிடுவாரானால், உண்மை நிலைமை விளங்கும். அங்கு மோசமான நிலை இருக்கிறதென்பதைக் கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்

திட்டமாக இருந்தாலும் சரி; நிலம் ஜாரி செய்து கொடுக்கும் விஷயமாக இருந்தாலும் சரி, அந்தத் திட்டங்கள் நிறைவேறும் வரைக்கும் தஞ்சை ஜில்லாவிலிருக்கும் ஆதித்திராவிட மக்கள் வசிக்கும் மனைகளை யாரும் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ எழுதி வாங்கக்கூடாது; அப்படி வாங்கினால் அது செல்லாது என்று அறிக்கை விட்டாலொழிய, அங்கிருக்கும் நிலைமை சரியாக இருக்க முடியாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. 60 : 40 வாரம் என்று சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்திலே பலர் குறை சொன்னார்கள். அப்படிக் கொண்டுவந்தபோது, "நில பாத்தியதையே விவசாயிகளுக்கு மாறிவிடும்போல் தெரிகிறது. அவர்களால் நிலத்தைச் சீர் செய்ய முடியாது", என்று அப்பொழுது குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அதை மெய்ப்பிப்பதற்கு சர்க்கார் கூட உடந்தையாக இருக்கிறதோ என்று நான் அஞ்சுகிறேன். ஏனென்றால் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனுதவி, எரு போன்றவைகளுக்குக் கொடுப்பது யாவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைக்காவிட்டால், அவர்கள் எப்படி நன்றாகப் பயிர் செய்ய முடியும்? அவர்கள் சொன்ன வார்த்தை உண்மை ஆகிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

எரு, விதை, மாடு முதலியவைகளை வாங்குவதற்கு கடன் கொடுப்பது எந்த முறையில் இருக்கிறது? வசதியுள்ளவர்கள் நிலத்தையோ மற்றவைகளையோ ஜாமீன் காட்டி கடன் வாங்கிக் கொள்ளலாம். ஆனால், ஏழை விவசாயி என்ன செய்ய முடியும்? நிலத்தைச் சரி செய்து வைத்துக் கொண்டு உரம் வேண்டுமானால், அதை வாங்குவதற்கு அருகதை இல்லை. ஆகவே, நபர் ஜாமீன் பேரிலேயே கடன் கொடுக்கவேண்டுமென்று விதியைத் திருத்தினாலொழிய, விவசாயிகளுக்கு பிரயோஜனம் ஒன்றும் ஏற்படாது.

ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு முன்பாக தாலூகா ஆபீசுக்குப் போய் தாசில்தாரைச் சந்தித்துப் பேசினேன். இந்தத் தாலூகாவில் ஏறக்குறைய ஒரு லட்ச ரூபாய் கடனுதவிக்கு நிதி வந்திருக்கிறது என்று சொன்னார். நான் பெருமூச்செறிந்தேன், நம் தாலூகாவில்கூட இவ்வளவு தொகை கடன் கிடைக்கிறதே என்று. ஆனால், சட்டத்தைப் பார்க்கும்போது, அவர்களே சொல்கிறார்கள்; "ஏழைகளுக்குக் கடன் உதவி கிடைக்கிற அளவுக்கு நீங்கள் சட்ட சபையில் சட்டத்தைத் திருத்தினாலொழிய கிடைக்காது" என்று. நான் பெருமூச்செறிந்தேன். இந்தச் சட்டத்தில் எந்தெந்த இடங்களில் இடுக்கு இருக்கிறது என்பதைப் புகுந்து பார்த்து, விவசாயிகளை வெளியேற்றுவதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு மிராசுதார்கள் வேலை செய்கிறார்கள் என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு தஞ்சை ஜில்லாவில் எத்தனை விவசாயிகள் வெளியேற்றப்பட்டார்கள் என்று புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால், உண்மை தெரியும். விவசாயிகளுக்கு நேராக மிராசுதார்கள் கோர்ட்டுக்கு வரக்கூடாது என்ற நியதி இருப்பதால் அவர்கள் தங்களுக்குப் பதிலாக ஏஜெண்டுகளை அனுப்புகிறார்கள். மிராசுதார்கள் ஏன் தாங்களே நேரில் கோர்ட்டுக்கு வரக்கூடாது என்று நான் கேட்கிறேன். சமதர்மம் பேசுகின்றோம், ஏழைகளும் பணக்காரர்களும் எல்லோரும் சமம் என்று சொல்லுகின்றோம், அப்படியிருக்கும்போது, ஏன் அவர்கள் கோர்ட்டுக்கு வரக்கூடாது? மிராசுதார்களும் நேரிடையாக கோர்ட்டில் கட்டாயம் ஆஜராயிருக்கவேண்டுமென்ற ஒரு உத்தரவு இருந்தால் நிச்சயமாக அங்கு இருக்கும் விவசாயிகள் வெளியேற்றப்படமாட்டார்கள், என்பது உண்மையிலும் உண்மை. சட்டம் இருந்தாலும், எவ்வளவு வசதி உள்ளவர்களாக இருந்தாலும்கூட, கோர்ட்டில் கேஸ் போடும்போது நிச்சயமாக எவரும் ஆஜராக வேண்டுமென்ற முறை இருந்தால், மிராசுதார்களே வெட்கப்பட்டுக்கொண்டு விவசாயிகளுக்கு எந்தத் தொந்தரவும் தரமாட்டார்கள் என்று நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நேரடியாகக் கண்ட ஒரு உண்மையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு மிராசுதாரிடத்திலே ஒரு விவசாயி ஏறக்குறைய மூன்று வருஷங்களுக்கு குத்தகை பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார். 2½ வேலி நிலத்திற்கு குத்தகை எடுத்தவருக்கு 85 வயது. ஒரு மகன் சித்த பேதகம் உள்ளவன். நிலத்தை மற்ற மூன்று பிள்ளைகளும் சாகுபடி செய்தார்கள். 60 வாரம் வேண்டும் என்று கோர்ட்டுக்குப் போன நேரத்திலே அங்கிருந்த சமரச அதிகாரி விசாரித்தார்கள். விசாரித்து, மறு நாளைக்கு முடிவு சொல்வதாக இருந்தார்கள். ஆனால், அதற்குள்ளாக ஹைகோர்ட்டிலிருந்து உத்தரவு வருகிறது. அதன் பேரில் சமரச அதிகாரி தாம் தீர்ப்பளிக்க முடியாது என்று தெரிவித்தார். தகப்பன் செய்யவேண்டியதை நாங்கள் மூன்று பேரும் சாகுபடி செய்கிறோம் என்று சமரச அதிகாரியிடம் சொன்னாலும், அவர் என்ன சொல்லுகிறார் என்றால், "எழுத்து மூலமாக உங்களுக்கு ஏதும் ரிக்கார்டு கிடையாது; ஆகையால் தீர்ப்பளிக்க முடியாது" என்று சொல்லிவிட்டார்.



நெல் அதிகமாக விளையும் தஞ்சை ஜில்லாவிலே ஆயிரம் ஆயிரம் கலம் நெல்லை களத்திலே குவித்து வைத்திருப்பார்கள். சாணியைக் கரைத்து அந்தக் குவியல் பேரில் ஏதோ குறி போட்டிருப்பார்கள். ஒரு வயதான கிழவன் அதன் அருகே படுத்து இருப்பான். இவ்வளவு தான் காவல். யாரும் எடுத்துப் போகமாட்டான். காரணம், நம்பிக்கைதான். தலைமுறை தலைமுறையாக ஒரு நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிரிட்டு வருவார்கள். சீட்டு இல்லை, நாட்டு இல்லை. அப்படியிருக்கும்போது கோர்ட்டிலே கொண்டு வந்து அவர்களை நிறுத்தி, சீட்டைக் கொண்டா, நாட்டைக் கொண்டா என்றால் அவர்கள் என்ன செய்வது? அவர்கள் ஐயோ என்று ஏமாந்து போக வேண்டியிருக்கிறது. இம்மாதிரி தப்புக் காரணங்களைச் சொல்லி விவசாயிகளை வெளியேற்ற முற்படுகிறார்கள். ஆகவே, அவர்களை வெளியேற்றாமல் இருப்பதற்கும், சட்டத்தில் கண்டுள்ள நன்மையை விவசாயிகள் நல்ல முறையில் அனுபவிப்பதற்கும் அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். அங்கு நடக்கும் அக்கிரமமான காரியங்களைக் கண்டுபிடிப்பதற்கு விவசாயிகள் சார்பிலே ஒரு சின்ன கமிட்டியை அமைத்து, சர்க்காருக்கு அந்தக் கமிட்டியினர் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிக்கச் செய்யவேண்டுமென்று நான் மிகவும் பணிவாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**Sri V. GOVINDASWAMI NAIDU**: கனம் உதவி சபாநாயகர் அவர் 12-50 p.m.
களே, நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தைப் பற்றி அநேகமாக எல்லா அங்கத்தினர்களும் பேசியுள்ளார்கள். விவசாயப் பொருள்களின் விலை ஏறி வருவதாக ஒவ்வொருவரும் கருதுகிறார்கள். அதே சமயத்தில் நம் நாட்டில் உற்பத்தி அதிகமாகியிருப்பதாயும் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே உற்பத்தி அதிகமாய் இருந்தால் விலை குறைய வேண்டும் என்பது தான் எல்லோருடைய கருத்தும். உற்பத்தி செய்வதற்கு வேண்டிய கருவிகள், உரங்கள் முதலியவற்றின் விலை ஏற்றமாயிருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். யுத்தத்திற்கு முன்னால், இன்று சர்க்காரால் வழங்கப்படும் அமோனியம் சல்பேட் மூட்டை ஒன்று ரூ. 8 வீதம் விற்கப்பட்டு வந்தது. இன்று ரூ. 40-க்கு விற்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக விவசாயிகளுக்கு எல்லா விதத்திலேயும் கஷ்டங்கள் இருப்பதால், தஞ்சை ஜில்லா டெல்டாப் பிரதேசத்தைத் தவிர, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய இடங்களிலே உள்ள சாதாரண சிறிய விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், ஒரு புறத்தில் விலை வாசிகள் அதிகமாகிக் கொண்டு வருவதோடு, மறு புறத்தில் விவசாயம் செய்வதற்கு வேண்டிய வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. சாதாரணமாக, 5 அல்லது 10 ஏக்கரா நிலம் உள்ளவர்கள் கூட சர்க்கார் ஆபீசிலோ அல்லது கம்பெனியிலோ ரூ. 50 சம்பளம் கிடைத்தால் போதும் என்று கிராமத்தை விட்டு வந்துவிடுகிறார்கள். இதனால் என்ன தெரிகிறது என்றால், 5 ஏக்கரா நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு மாதம் ரூ. 50 கூட கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். மாட்டு விலையை எடுத்துக் கொண்டால் போன வருஷத்தை விட இந்த வருஷம் 50 சத விகிதம் விலை ஏறி

விட்டது. காரணம் மாடுகள் உற்பத்தி கம்மியாகி இருக்கிறது. வருஷம் தோறும் கால்நடைகள் பராமரிப்புக்காக பல திட்டங்கள் போட்டு நாம் ஏராளமாகப் பணம் செலவு செய்கிறோம். ஆனால் மாட்டுப் பண்ணைகளை அதிகமாக விருத்தி செய்வதற்கு முடியவில்லை. காரணம் என்னவென்றால் மேய்ச்சல் வசதி மிகவும் குறைந்துவிட்டது. மேய்ச்சல் வசதி இல்லாததால் கால்நடைகளை அபிவிருத்தி செய்ய முடியவில்லை. இந்த மாதிரி விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள், மாடுகள் முதலியவை விலை அதிகமாக இருப்பதனால் விவசாயத்தில் ஊக்கம் குறைந்து கொண்டு வருகிறது.

இன்று மின்சார உற்பத்தி அதிகமாகி அநேக கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் பம்பு செட்டுகள் வாங்கவேண்டுமென்றால் இன்று போதுமான அளவுக்கு பம்பு செட்டுகள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. சாதாரணமாக ரூ. 300-க்கு விற்கப்பட்டு வந்த மோட்டார் இன்று ரூ. 900 அல்லது ரூ. 1,000-க்கு விற்கப்பட்டு வருகிறது. மோட்டார் வைத்தால் அதற்கு ஸ்டார்ட்டர் வேண்டும். ரூ. 50 ஆக இருந்த ஸ்டார்ட்டரின் விலை இன்று ரூ. 250 ஆக இருக்கிறது. இந்த நிலையிலே விவசாயிகளின் கஷ்டம் அன்றாடம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. விலைகள் குறைய வேண்டியது அவசியம் தான். அதே சமயத்தில் விவசாயிகளுக்கு மேற்கூறிய வகைகளில் வசதிகள் செய்து கொடுத்தால், அவர்கள் சந்தோஷத்தோடு பயிர் செய்வார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஒரு துரதிருஷ்டம் இருக்கிறது. அது என்னவென்றால் மதராஸ் செங்கல்பட்டின் அருகே இருப்பது தான். அந்த ஜில்லாவில் சில நீர்ப்பாசன வசதிகள் இருக்கின்றன. அந்த நீர்ப்பாசனத் தேக்கங்களில் தண்ணீர் நிறைய இருக்கும் பொழுது, மதராஸுக்குத் தண்ணீர் வேண்டுமென்று சொல்லி, விவசாயத்திற்கு தண்ணீர் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக, இன்று ஒரு கோடி ரூபாய் செலவு செய்து ஆரணியார் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அங்கு "Catchment area"-ல் உள்ள நிலங்களுக்கு "காம்பென்ஸேஷன்" கொடுக்க முடியவில்லை. ஏனென்றால் அதை ஆந்திர சர்க்கார் கொடுக்க வேண்டும். இதனால் நீரைத் தேக்க முடியவில்லை. இப்பொழுது இன்னொரு துரதிருஷ்டமும் சேர்ந்திருக்கிறது. மூன்றில் ஒரு பாகம் தண்ணீர் மதராஸுக்கு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நீரைத் தேக்கி ஆயக்கட்டை ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னால் மதராஸுக்கும் ஒரு பாகம் தண்ணீர் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பட்டினத்திற்கு தண்ணீர் கொடுத்துவிட்டால் அங்கு நீர்ப்பாசனத்திற்கே தண்ணீர் இருக்காது என்று தான் சொல்லவேண்டும். இப்பொழுது புழலேரி, சோழவரம் ஏரி நீர்த் தேக்கங்களை எடுத்துக்கொண்டாலும், மதராஸ் கார்ப்பொரேஷன் குடி தண்ணீர் உபயோகத்திற்குப் போக கொடுக்கும் மீதித் தண்ணீரைத் தான் பாசன வசதிக்கு உபயோகிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் நமது ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு நீர்த்தேக்கத்திற்கும் இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது.

நான் ஏற்கெனவே சொன்னபடி, கால் நடைகள் வளர்ப்புக்காக நமது சர்க்கார் நிறையப் பணம் செலவழிக்கிறார்கள். எங்கள் ஊரில் நான் கூட பொலி காளைகளைப் பாதுகாத்து வருகிறேன். இப்போதுள்ள மாடுகள் சிறியவை. அந்த ஜாதியை மாற்றவேண்டுமென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் அவைகளை எப்படி மாற்றுவது என்பது தான் தெரியவில்லை. சிறிய மாடுகளை நீக்கி விட்டு நல்ல இனத்தைச் சேர்ந்த பெரிய மாடுகளாக மாற்றுவதற்கு ஒரு வழி தேடவேண்டுமென்று தான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்திலே மின்சார உற்பத்தி மிகவும் போற்றக்கூடிய அளவுக்கு விருத்தி அடைந்து வருகிறது. சென்ற ஆண்டில் கிராமாந்திர மின்சாரத் திட்டங்களின்கீழ் 1,300 கிராமங்களுக்கும்,





13,000 பம்பு செட்டுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது. இந்த ஆண்டிலும் அதே நிலையில் அபிவிருத்தி வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால், இதிலேயும் ஒரு கஷ்டம் இருக்கிறது. 1956-ம் வருடம் ஜனவரி மாதத்திற்கு முன்னர் **energize** பண்ணின மின்சாரத்திற்கு **horse power** 1-க்கு ரூ. 15 வீதம் **unconnected minimum charges** கட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் 1956-ம் வருடம் ஜனவரி மாதத்திற்குப் பின்னர் **energize** பண்ணின மின்சாரத்திற்கு **horse power** 1-க்கு ரூ. 55 **unconnected minimum charges** கட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்தக் காரணத்தினால் இந்த மாதிரி வருகிறது என்று தெரியவில்லை. இதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒருவேளை மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், மற்றும் இதர கருவிகள் எல்லாம் இப்பொழுது சுலபமாகக் கிடைக்கின்றன என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்திருக்கலாம். ஆனால் பழைய நாட்களில் என்ன கஷ்டம் இருந்ததோ, அந்தக் கஷ்டம் இன்னமும் நீடிக்கிறது. இன்று மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விச்சுகள் ஒன்றும் மார்க்கெட்டில் சரியாகக் கிடைப்பதில்லை. ஆகவே முன்பு அமுலில் இருந்த உத்திரவே இப்பொழுதும் இருக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் புது உத்திரவினால் ஏற்படும் கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். 5 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர் தன்னிடமுள்ள மாட்டையோ மெஷினையோ விற்று 5 **horse power** உள்ள ஒரு 1 p.m. மோட்டார் செட் வாங்கினால், ரூ. 275 கட்டினால்தான் உனக்கு **connection** கொடுப்போமென்று சொல்லுகிறார்கள். இவ்வாறு ரயத்துகளுக்கு கஷ்டம் ஏற்படுவதினால், விவசாயத்தில் ஊக்கமில்லாமல் போய்விட்டது. இதை நான் மிகவும் வலியுறுத்திக் கூறுகிறேன். இதை நீங்கள் நன்றாக யோசித்து, ஜனவரி 1956-க்கு முன்பு இருந்த பழைய திட்டத்தையே அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்கு தங்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : மன்றத் தலைவர் அவர்களே, 1957-58-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் மிக மிகத் திறமையாகத் தயாரித்து நம்மிடத்தில் அளித்துள்ளார்கள். அவர்களுடைய முழுத் திறமையையும் இதில் காட்டியிருக்கும் காரணத்தினால் தான், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்த எந்தக் குறைபாடுகள் மிக இயல்பாகப் பிறரால் உணரப்படுத்துவதற்குத் திட்டம் இடமளித்துவிடுமோ அந்தக் குறைபாடுகள் கூட பிறரால் உணர்ப்படுவதற்கு இடமில்லாலாதபடி செப்பனிடப்பட்டு, திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நான் இவ்வாறு கூறுவதற்குக் காரணம், நமது தேசத்தில் நமது மாநிலமானது பல காரணங்களால் கட்டுப் படுத்தப்பட்டிருக்கும் காரணத்தினால்,—ஒரு மாநிலத்திற்குரிய முழு உரிமையும் குறைந்திருக்கும் காரணத்தால், பல திட்டங்களில் "தேரை முன்னே செலுத்தும் முன்பு பின்னே இழுக்கும்" முறையில் மத்திய அரசாங்கத்தாரின் செயலும் போக்கும் இருக்கின்ற காரணத்தினால்—இந்தத் திட்டத்தில் பல குறைகள் இயல்பாக ஏற்பட்டிருந்தும், அவை வெளிப்படையாகக் காட்டப்படாமல், அரசாங்கமும் திட்டமும் பொதுவான ஒரு மத்திய அரசாங்கத்திற்குக் கட்டுப் பட்டது என்பது மட்டும் குறிப்பிடப்பட்டு விட்டு, மக்களால் விடுவிக்கப்பட்ட பல வேண்டுகோள்களும் தெரிவிக்கப்பட்ட பல விருப்பங்களும் நிறைவேறும் என்ற ஆசை காட்டப்பட்டு, இந்தத் திட்டம் இங்கே தரப்பட்டிருக்கிறது. உண்மையாகவே, ஒரு பெரிய முதல் இட்டுள்ள கம்பெனியானது நீண்ட தொலைவில் இருந்து, அதன் ஒரு கிளைக் கம்பெனியும் ஓரளவு தனியாக நிர்வாகத்தை நடத்துகின்றபோது, எப்படி மேலேயுள்ள கம்பெனியின் விருப்பங்களையெல்லாம், லட்சியங்களையெல்லாம், ஏற்று பெரிய அளவில் தானே ஒரு திட்டத்தை தயாரிக்குமோ, அந்த மாதிரித் தான் இந்த வரவு செலவுத் திட்டம் காணப்படுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் திட்டத்தில் பொதுமக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய ஒரு குறிப்பையும் அமைச்சர் அவர்கள் காட்ட முடியவில்லை. இந்த அரசாங்கம் ஜனநாயக முறையில் ஜனங்களால் தேர்ந்தெடுகப்பட்டவர்களால்

தான் அமைக்கப்பட்டது என்றாலும் "இந்த ஜனநாயகத்தின் மிக முக்கிய மான பகுதியை நிர்மாணிப்பவர்கள் ஜனங்கள் தான் என்பதும், அந்த ஜனங்களுடைய வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது என்பதும், உயர்ந் துள்ள உணவுப் பொருள்களின் விலை இறங்கினாலொழிய ஏழைகளின் மென்னியைப் பிடிக்கின்ற நிலைமை தான் நிலவும் என்பதும், உணவுப் பொருள்களின் விலையை இறங்கச் செய்ய வேண்டிய பொறுப்பு அர சாங்கத்திற்கு உண்டு என்பதும், அந்தப் பொறுப்பை நிறைவேற்றத் தவறும் அரசாங்கம் நல்ல ஜனநாயக அடிப்படையை உணர்ந்தது ஆகாது என்பதும்" இந்தத் திட்டத்தினால் உணர்த்தப்படவில்லை. இதை உணர்த்து வதற்கு முயற்சி செய்திருப்பதாகவும் குறிப்பிட்டுக் காட்டமுடியாது.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில், கடவுள் புண்ணியத்தால் மழை பெய்தும், ஆறுகளிலும் ஏரிகளிலும் தண்ணீர் நிறைந்தும், பொது மக்கள் விவசாயத்தைத் தட்டுத்தடை இல்லாமல் நடத்துவதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டும், அதற்கு ஏராளமாகப் பணம் ஒதுக்கப்பட்டும் இருக்கும்போது—இவ்வளவிற்கும் பிறகு—உணவு பொருள்களின் விலை இறங்கவில்லை என்றால், ஏதோ ஒரு பெரிய குறை அரசாங்கத்தின் திட்டத்திலோ, நிர்வாக இயந்திரத்திலோ, நிர்வாகத்தில் உள்ளவர்களின் மனப்பான்மையிலோ இருக்கிறது என்பதை ஜனநாயக அரசாங்கத்தை நடத்துபவர்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல. ஆட்சியை நடத்துபவர்கள் சமதர்மத்தைப் பற்றி பேசுகிறார்கள். அந்த சமதர்மம் எப்படி நிலைநாட்டப்படுகிறது என்று நான் பார்த்தேன். நேற்று இருந்த நிலைமைக்கும் நாளை இருக்கவேண்டிய நிலைமைக்கும் இடையே அதிகமான மாறுதல் இல்லாதபடி செய்யக் கூடிய—"ஸ்டேட்ஸ் கோ" என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அந்த மாதிரி அதிகமான மாறுதல் ஏற்படாமல் ஏற்கெனவே உள்ளதைப் பாது காக்ககூடிய—சென்ற காலத்திற்கும் வருங்காலத்திற்கும் இடையே அதிக மாறுதல் இல்லாத நிலை என்ற சமதர்மத்தைத் தான் இந்த வரவு செலவுத் திட்டத்தில் நான் காண்கிறேன். ஏற்கெனவே ஏற்பட்டுள்ள அநீதிகள் மறைக்கப்பட்டு, அக்கிரமங்கள் பல செய்யப்பட்டன என்பது மறுக்கப்பட்டு, அவைகளை இனிமேலும் நீடிக்கச் செய்யக்கூடிய சமதர் மத்தைத் தான் இந்த வரவு செலவுத் திட்டத்தில் நான் காண்கிறேன். அப்படிப்பட்ட சம தர்மத்தைக் காப்பாற்றக்கூடியதாகத் தான் இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும், ஏழைகளின் வாழ்க்கையில் ஏதேனும் உயர்வு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறதா என்று பார்த்தால் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்றுதான் தெரிகிறது.

ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. பெட்டித் தொழிற் சாலைகளாலும், செருப்புத் தொழிற்சாலைகளாலும் ஏழைகள் பயனடை வார்கள் என்று எதிர்பார்க்கிறோம் என்றும், நிலக்கரித் திட்டம் மக்களுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும், இரும்பை உருக்கு வதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும், காகித ஆலைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்கிறோம் என்றும்தான் இந்தத் திட்ட அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தில் எந்த அளவு உயர்வு ஏற்பட்டி ருக்கிறது என்று இந்தத் திட்டத்தின் மூலம் நமக்குத் தெரியவில்லை.

தமிழ் நாட்டிற்கு அவசியமான முன்னேற்ற திட்டங்களை ஆரம்பித்து நிறைவேற்றுவது பற்றி அரசாங்கத்தார் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால், அந்த நேரத்திலும் ஏமாற்றம் தான் அடைகிறோம்; திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வெளி நாட்டு மூலதனத்தில் நமக்கு மாற்றும் செலாவணி கிடைக்காததால் கடன் ஏற்படுகிற காரணத்தால் அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்று தான் சொல்கிறார்கள். குந் தாத் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். அந்தத் திட்டத்தை நிறைவேற் றினால் நமக்கு எவ்வளவோ நன்மை ஏற்படும் என்பதைச் சொல்லும்





அரசாங்கத்தார் அதை நிறைவேற்றுவதில் எவ்வளவோ சிக்கல்கள் இருக் கின்றன என்றும், இருந்தாலும் நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கிறோம் என்றும் சொல்லுகின்ற நிலையில்தான் இருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை மிக மிக வருந்தத் தக்கது ஆகும்.

இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் பொருளாதாரத் துறையில் உள்ள துன்பங்களைப் பற்றிக் கூறும் அரசாங்கத்தார், செலவில்லா மல் நிறைவேற்றக்கூடிய மக்களுடைய கோரிக்கைகளையாவது நிறைவேற்று கிறார்களா என்றால், அதுவும் இல்லை. இந்த மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயரிட வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள். தமிழ் நாட்டு மக்கள் சுதந்திரப் போரில் ஈடுபட்டு பல தியாகங்களைச் செய்தார்கள். அவர்கள், இந்த மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயரிட வேண்டு மென்று கோரினால் அந்தக் கோரிக்கை இந்த அரசாங்கத்தாரால் நிறை வேற்றப்படவில்லை; நிறைவேற்றுவோம் என்று அரசாங்கத்தார் கூறவும் இல்லை; அந்தப் பெயரை இட வேண்டும் என்ற கருத்தும் அவர்களுக்கு இல்லை.

ஆட்சியாளர்கள் எதிலாவது விரைவையும் சுறுசுறுப்பையும் காட்டி யிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. நான் ஒன்று சொல்வேன். இந்த அரசாட்சியில் "பார்க்கலாம்" தலைமை தாங்குகிறது; "தெரிய வில்லை" துணை நிற்கிறது; "அமைதி" நிர்வாகம் நடத்துகிறது; "முடிய வில்லை, முயற்சிக்கிறோம்" என்பது தான் முடிவாக இருக்கிறது. இப்படி இந்த அரசாங்கத்தின் போக்கில் "பார்க்கலாம்" உம், "தெரியவில்லை" உம், "அமைதி" உம், "முடியவில்லை, முயற்சிக்கிறோம்" உம் தான் கட்டங்களாக இருக்கின்றனவே யொழிய "[illegible]" "நிறை வேற்றுவோம்" என்பவை கட்டங்களாக இல்லை.

அது மாத்திரம் அல்ல. அரசாங்கத்தை நான் வீணில் குறைகூறு கிறேன் என்று நினைக்க வேண்டாம். அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தையும் நிதி நிலைமையையும் பற்றிக் குறிப்புகள் தருகின்ற அர சாங்க நிபுணர்களே மிகத் தெளிவாக இன்னின்ன துறைகளில் இவ்வளவு இவ்வளவு தொகை பணம் இத்தனை இத்தனை ஆண்டுகளாகப் பாழ் படுத்தப்பட்டிருக்கின்றன என்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அவை களைப் பார்த்தாலே நிர்வாகத்தில் குறைகள் இருப்பது நன்றாகத் தெரியும். அந்தக் குறைகளுக்கு அமைச்சர்கள் மட்டுமே பொறுப்பாளர்கள் என்று நான் சொல்லவில்லை. முன்பிருந்தச் சட்ட மன்றமும் அதற்குப் பொறுப் பாக இருக்கலாம்; இன்றுள்ள சட்ட மன்றமும் பொறுப்பாக இருக்கலாம்; நாமும் பொறுப்பில் பங்குகொண்டவர்களாக இருக்கலாம். ஆகவே வரவு செலவுத் திட்டத்திலுள்ள குறிப்புகளிலிருந்து தெரிகிறபடி, அந்த அள விற்கு நிர்வாகத்தில் குறைகள் இருந்தால் பொது மக்கள் எப்படிப் பயன் அடைவார்கள்? "வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது?" என்று ஒரு பழமொழி உண்டு. வேலியே பயிரை மேய்ந்தால், அதன் பிறகு வேலி வேலியாக இல்லாத நிலையில் ஆடு மாடுகள் பயிரை மேய்ந்த தற்கு யாரைக் கேட்பது? ஆடு மாடுகள் பயிரை மேய்ந்தால் பயிர்கள் அழிந்ததற்கு யாரைக் கேட்பது? காடுகள் வளர்ப்புத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், காடுகளை வளர்ப்பதற்கு பல லட்ச ரூபாய்கள் கொடுக்க அரசாங்கம் முன் வந்தாலும் கூட, சில பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு உதவுவதற்கு அரசாங்கம் முன் வந்தாலும் கூட, சில இடங்களில் விவசாயிகளுக்கு அந்த உதவி கிடைக்காதபடி தடை செய்வதில் சிலர் ஈடுபடுகிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு நன்மைகள் செய்வதற்காக அரசாங்கம் இருந்தும் கூட, அந்த நன்மைகளுக்குத் தடையாக சிலர் இருக்கிறார்கள். அந்தத் தடைகளை யெல்லாம் தகர்த் தெறிந்து விட்டு முன்னேற்றப் பணிகளில் இறங்க வேண்டும். அந்தத் தடைகள் இருக்கும்போது பணத்தைச் செலவு செய்தால் அந்தச் செலவின் பயனை மக்கள் அடையாத காரணத்தால் அவர்கள் முன்னேற்றம் அடை யாமல் இருக்கிறார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் நடக்கும் அக்கிரமங்களைப் பற்றி காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட மிகத்தெளிவாகத் தெரிவித்தார்கள். அந்த ஜில்லாவில் கடவுளுக்குக் கூட அதிக ஆசை இருக்கிறது. அங்கே தெய்வங்களுக்காக என்று கோயில்களின் பேரில் ஏராளமான நிலங்கள் உள்ளன. மடாலயங்கள் பேரிலும் நிறைய நிலங்கள் இருக்கின்றன. "அந்த நிலங்களில் யார் பயிர் செய்கிறார்கள்? அவைகளால் மக்களுக்குப் பயன் இருக்கிறதா?" என்று பார்த்தால், இவ்வளவு பெரிய அளவில் உள்ள அந்த நிலங்களின் சொந்தக்காரர்களிடமிருந்து அவைகளை அரசாங்கத்தார் ஊர்ஜிதம் செய்து ஏழைமக்களுக்குத் தந்தாலொழிய மக்கள் அவைகளால் பயனடைய முடியாது என்பது தெரிகிறது. ஆகவே, இந்த நிலையில், அந்த ஆயிரக் கணக்கான நிலங்களையெல்லாம் கூட்டுறவு சாகுபடி முறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று பல நண்பர்கள் சொன்னார்கள். அந்த யோசனையை அரசாங்கத்திற்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். மடாலயங்களின் சொத்தைப் பறிப்பதில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு அக்கரை என்று எண்ண வேண்டாம். ஆண்டவனுக்குச் சொத்து இருக்கக் கூடாது என்றும், ஆண்டவன் "இன்ஸால்வெண்ட்" ஆகிவிட வேண்டும் என்றும் நினைப்பவர்கள் நாங்கள் அல்ல. கடவுள் மக்களின் நன்மைக்காகத்தான் இருக்கிறார் என்ற நியதிப்படி, அந்த நிலங்களால் மக்கள் எல்லோரும் பயனடைய வேண்டுமென்ற காரணத்தால், ஏழைகளுக்கும் நிலமில்லாத விவசாயிகளுக்கும் கொடுப்பதற்காக அந்த நிலங்களைப் பெறுவதற்கு அரசாங்கம் உடனடியாகத் திட்டமிடவேண்டும் என்பதுதான் கழகத்தாரின் நோக்கம் என்பதை அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், மதுவிலக்குச் சட்டத்தை எடுத்துக்கொண்டால், அதை இரண்டு மாதங்களாகக் கடுமையாக அமல் நடத்தி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், மக்களிடையே மது விலகியிருக்கிறதா அல்லது மதி விலகியிருக்கிறதா என்று பார்த்தால், மதிதான் கொஞ்சம் விலகி யிருக்கிறதே தவிர மது விலகவில்லை என்று தெரிகிறது. இப்படி ஏன் சொல்லுகிறேன் என்றால், மக்களிடத்தில் அந்தக் கருத்தை நல்ல முறையிலே பரப்பவில்லை. மதுவிலக்கு வெற்றி பெறாததற்குக் காரணங்கள் மக்களிடத்திலே அந்தக் கருத்து நல்ல முறையிலே பரப்பப்படாதது ஒன்று. மற்றொன்று மது குடிப்பது தவறு என்ற எண்ணமும், அது ஒரு சமுதாயக் கேடு என்ற நினைப்பும், அது ஒரு சமூக அநீதி என்ற மதியும் ஏற்படாததுதான். அதுமட்டுமல்ல. மதுவிலக்குத் துறையிலே மாறுபட்டு நடக்கின்றவர்களெல்லாம் கஷ்டப்படுகின்ற நேரத்திலே தங்களுடைய வாழ்க்கைத்தரம் தேய்ந்து போயிருக்கும் காரணத்தினால் இந்த வியாபாரம் செய்கிறார்கள். இந்த தவறுகளைக் கண்டிபிடிக்கும்போது மேலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வேறு நல்ல தொழிலில் அவர்களுக்கு நல்ல நம்பிக்கை ஊட்டக்கூடிய விதத்தில், அவர்களில் எத்தனைபேர் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டாலும், அத்தனை பேர்களுக்கும் வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்படவேண்டும். அதுமட்டுமல்ல. மதுவிலக்கு குற்றங்கள் காரணமாக பொதுவாக பேசப்படுகிற கருத்து என்னவென்றால் யார் அந்த குற்றங்களை கண்டுபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குக்கூட இந்த குற்றங்கள் நடைபெறுவதில் ஓரளவு லாபம் இருக்கிறது என்று மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். அது ஓரளவு உண்மையாக இருக்கும் என்று நம்புகிறேன். சாதாரண அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் அந்தக் குற்றங்களுக்கு உடந்தையாக இருப்பதனால் நாம் இந்த நிலையை போக்க முடியாது. ஆகவே, அந்த அதிகாரிகளை முதலில் ஒழுங்குபடுத்தவேண்டும். அவர்கள் குற்றம் செய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அவர்கள் குற்றம் செய்கிறார்களா என்று கண்டுபிடிப்பதற்கு மிகத் தீவிரமான திட்டத்தை இந்த அரசாங்கம் தயாரிக்கவேண்டும்.

மதுவிலக்கைப்பற்றி இப்பொழுது நான் சொல்லுவது என்னவென்றால், வாழ்க்கைத்தரம் உயரக்கூடிய விதத்திலும், மனப்பான்மை உயர்ந்து பெறுகக்கூடிய விதத்திலும், மக்கள் வாழ்ந்துகொண்டு வரவேண்டிய



இந்நேரத்திலே நாம் லஞ்சத்திற்கும், சூது முதலிய கேடான செயல்களுக்கும் சர்க்காரே இடம் தரும் வகையில் இன்றையதினம் கிண்டி குதிரைப்பந்தயம் நடைபெற்றுக் கொண்டுவருவதைப் பார்க்கிறோம். குதிரைப்பந்தய சூதாட்ட மனப்பான்மையை இன்னும் அரசாங்கம் ஒழிக்காமல் இருப்பது தவறு. கிண்டியிலுள்ள குதிரைகளை வளர்ப்பதற்காக மக்களை பலியிடுவது மிகமிகப் பெரிய தவறு என்பதை அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிக்கனத்திற்காக ஒரு நிபுணரை அரசாங்கம் நியமித்திருப்பது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் கண்ணுக்குத் தெரிகிற தவறுகளை விட்டுவிட்டு சிக்கனத்தை எப்படிச் செய்யலாம் என்பதற்காக மிகமிக ஆழமாக யோசிக்கவேண்டுமென்று கருதி அதற்காக ஒரு அதிகாரியை நியமித்துள்ள சென்னை அரசாங்கத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மந்திரிகள் இருக்கிறபொழுது, அதிலும் மக்களுடைய நம்பிக்கைக்குறியவர்கள் என்று நாட்டு மக்களால் கருதப்படுகிறவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மந்திரிகள் இந்த நாட்டை ஆளுகிறபொழுது, மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளாத யாரோ ஒருவர் கவர்னராக இருந்துதான் தீரவேண்டும் என்றும், அவருக்கு 10 லட்ச ரூபாய் செலவாகுமென்று சொல்லுகிற நிலை ஏற்பட்டிருப்பது காங்கிரஸுக்கும் பெருமையல்ல, இந்த நாட்டிற்கும் தேவையல்ல, எதிர்கட்சியும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இந்த 10 லட்ச ரூபாயை நாட்டிலே உள்ள ஏழை மக்களுக்கும், தொழில்துறையில் தாழ்ந்திருப்பவர்களுக்கும் உதவியாக பயன்படுத்தலாம். சாதாரண அரசாங்க ஊழியர்களின் நிலையை உயர்த்தலாம். கிராம அதிகாரிகளுக்கு இப்பொழுது கொடுக்கும் 5 ரூபாயைவிட இன்னும் அதிகமாகத் தரலாம். என்.ஜி.ஓக்களுக்கு தற்பொழுது கொடுக்கப்படும் தொகை மிகவும் குறைவானதே. அவர்களுக்கு இன்னும் அதிகமாகக் கொடுக்கலாம். கண்ணுக்குத் தெரியும் துறைகள் பலவற்றில் வீண் செலவு ஏற்படாமல் தடுத்து நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வழிவகை வகுத்தால் தான் நல்லது. இதுதான் இந்த வரவு செலவு திட்டத்தைப் பற்றி திராவிட முன்னேற்ற கழகம் சொல்லிக்கொள்ள விரும்புகிற கருத்து என்று கூறி, என்னுடைய உரையை நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri P. P. M. T. PONNUSAMI**: மதிப்பிற்குரிய தலைவர் அவர் 1-16 p.m.
களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1957–58 வரவு செலவு திட்டத்தை நன்றி அறிதலுடன் ஒப்புக்கொள்ளும் வகையில், சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஏறக்குறைய ஆயிரக்கணக்கான பக்கங்களில் பல நுணுக்கமான பிரச்னைகள் இந்த பட்ஜட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக, தேசத்தின் நிலைமையை பார்க்கும்பொழுது, நமது தேசம் சீரும், சிறப்பும், செழிப்புமாக வளர்ந்துகொண்டு வருவதைத் தான் நாம் காண்கிறோம். என் போன்றவர்கள் அரசியலில் ஈடுபடாமல் இருந்தும்கூட, கனம் நிதி அமைச்சர் அவர்கள்—ஐந்து ஆறு வருஷங்களாக பொதுமக்களிடமிருந்து வசூலாகும் நிதியை நல்ல முறையில் பயன்படுத்தி வருவதை தெரிவித்துக் கொள்வதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். தலைவர் அவர்களே, நான் கிராமத்தில் பிறந்தவன் ஆனாலும் ஒரு நகரத்தை தாயகமாக கொண்டவன். ஆகவே கிராமத்திற்கும் நகரத்திற்கும் எந்த எந்த வகையில் நமது அரசாங்கம் நன்மைகள் புரிந்து கொண்டிருக்கின்றது என்பது ஓரளவு எனக்குத் தெரியும். உதாரணமாக, சென்ற மூன்று நான்கு வருஷங்களில் என்னுடைய சிறிய கிராமத்தில் ஒரு **Primary Health Centre** (ஆஸ்பத்திரி) வந்துள்ளது. 9-வது வகுப்புவரையுள்ள ஒரு பள்ளி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. **Basic Trianing School** திறந்திருக்கிறார்கள். இன்னும் விவசாயிகளுக்கு வேண்டிய அனேக நல்ல காரியங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதேபோல், தூத்துக்குடி தொகுதி சம்பந்தப்பட்டவரையில், **V.O.C. College, St. Mary's College,** பெரிய ஆஸ்பத்திரி, இவைகளை நிறுவினதோடு இன்னும் பல நல்ல காரியங்கள் செய்து வருகிறார்கள். இவைகள் எல்லாம் நல்ல முறையில் நடக்கும்படி நாம் கொடுக்கும் வரிப்பணத்தை கனம் நிதி அமைச்சர்

அவர்கள் செலவுசெய்துவருகிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். ஆகவே இந்த பட்ஜெட்டை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். ஒரு தேசமானது அல்லது ஒரு ராஜ்யமானது நல்ல முறையில் நடத்துகொண்டிருப்பதற்கு சான்றாக வள்ளுவர் பெருமான் என்ன சொல்கின்றார் என்றால்

பிணியின்மை செல்வம் விளை வின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து

இவ்வைந்து குறிக்கோளும் நிறைவேற்றப்படுமானால்தான், நாம் சுபீட்ச பாதையில் செல்கிறோம் என்பதற்கு அடையாளம். இன்றைய நிலையை பார்க்கும் பொழுது, நமது நாட்டில் சமீபத்தில் Influenza காய்ச்சலினால் அதிகம் பேர் பாதிக்கப்படவில்லை என்பதும், எவ்விதமான சேதாரமும் ஏற்படவில்லை என்பதும், இதற்கு காரணம் அரசாங்கம் அளித்த சுகாதார வசதிகள்தான் என்பது நன்கு விளங்கும். அதை பெருமையுடன் உங்கள் முன்பு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக கல்விச் செல்வத்தை எடுத்துக்கொள்வோம். நமது நாடு அந்நிய ஆட்சியின்கீழ் இருந்த பொழுது, படித்தவர்கள் மிக குறைவாக இருந்தார்கள். கடந்த ஐந்து ஆறு வருடங்களில், படித்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. இதற்கு காரணம் கல்வி-நிதி அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் சேவை செய்துவருவதுதான். அதேபோல, பொருளாதாரதுறையை எடுத்துக்கொள்வோம். பெரிய ஊர்களிலும், சிறிய கிராமங்களிலும் தொழில்களை மேற்கொண்டு செழிப்புறச் செய்திருக்கிறார்கள். பணக்காரர்களைவிட, தொழிலாளர்களின் வாங்கும் சக்திதான் அதிகரித்திருப்பது என்பது கண்கூடு. தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும்படி செய்ய சகல விதமான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். வேளாண்மை விஷயத்தை எடுத்துக்கொள்வோம். அந்நிய ஆட்சி நம்மை விட்டுப்போன சமயத்தில், நாம் உளுத்துப்போன சோளத்திற்கும் புழுத்துப் போன அரிசிக்கும் வீதி வீதியாக பெண்களுடன்கூட பெட்டிகளையும் கூடைகளையும் தூக்கிக்கொண்டு "க்யூ" வரிசையில் நின்றுகொண்டு இருந்த நிலையை நாம் யாரும் மறந்திருக்கமுடியாது. அந்தக்காலத்தில் கூட Burma-வில் இருந்து 20 லக்ஷம் டன் அரிசி இறக்குமதி செய்து வந்தோம். அந்த அவல நிலை மாறி இன்று ரூபாய் ஒன்றுக்கு ஒரு படி அரிசி, அல்லது ஒரு படி அரிசி ரூ. 0-11-6-க்கு வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக விலைவாசிகள் இறங்கவில்லை என்று சில நண்பர்கள் சொல்கிறார்கள். 10 வருஷங்களுக்கு முன்பு ஒரு ஏக்கர் நிலம் விவசாயம் செய்வதற்கு ரூ. 25 ஆகும், இப்பொழுது ரூ. 100 செலவாகிறது. நாம் கொடுக்கும் அதிகப்பணம், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு போகிறது. அதனால் அரிசி விலை கூடி விடுகிறது. இந்நிலையில் அரிசி விலை இறங்குவது என்பது சமீபத்தில் நடக்கக்கூடிய காரியம் அல்ல. நம் நாட்டில் ரூ. 10-க்கு வாங்கக்கூடிய 'பூட்ஸ்', ரஷ்யாவில் ரூ. 50-க்குத்தான் கிடைக்கும். இதற்குக் காரணம் என்னவென்றால் அங்குள்ள தொழிலாளருக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதேமாதிரி, அமெரிக்காவிலும் ஒன்றுக்கு நூறு மடங்காக விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன. அதேபோல் நம் நாட்டில் அரிசி விலை இன்னும் மலிந்துவிடும் என்பது நினைக்க முடியாத காரியம். அரிசி விலை குறையவேண்டுமானால், விவசாயத்தில் ஈடுபட்டவர்களுடைய ஊதியம் குறையவேண்டும். ஆகவே நாம் ஐந்தாறு வடருங்களுக்கு முன்னதாக இருந்த நிலையைக்காட்டிலும் இன்று எவ்வளவோ முன்னேறியிருக்

1-20 p.m. கிறோம். நம் நாட்டிற்கு அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருப்பதை இப்போது நிறுத்தி இப்போது இலங்கை போன்ற நாடுகளுக்கு நாம் நமது உணவுப்பொருளை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறோம் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை என் போன்ற வியாபாரிகள் நன்கு உணருவார்கள். நமது நாட்டிலுள்ள மக்கள் இப்போது ரொம்பவும் இன்பமாக இருக்கிறார்கள். நூற்றுக்கு நூறு மடங்க எல்லோரும் நன்றாக வாழவில்லை என்றாலும் பெரும்பாலும் நம்முடைய நாட்டு மக்கள் நல்ல நிலைமையில்தான் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம் என்னவென்றால் முன்னால் எல்லாம் இரண்டு ஷோ நடத்திக் கொண்டிருந்த இடத்தில் இப்போது 4 ஷோக்கள் நடத்திக்கொண்டிருக்





கிறார்கள். இதிலிருந்து நாட்டு மக்கள் இன்பமாக வாழ்கிறார்கள் என்று தெரிகிறது. இது தவிர நாட்டினுடைய பாதுகாப்பும் சரியான முறையில் இருந்து வருகிறது. உயிருக்கோ உடலுக்கோ யாதொரு விதமான துன்பமும் ஏற்படாமல் நல்லவிதத்தில் பாதுகாப்பு கிடைத்து வருகிறது. சிலர் நினைக்கலாம், தூத்துக்குடியில் கொலைகள் நடந்து கொண்டிருக்கிறதே என்று. அதில் நாம் அவ்வளவு அக்கறை செலுத்த வேண்டியதில்லை. ஏனென்றால் அங்குள்ள கொலைகளுக்குக் காரணம் என்னவென்று எல்லோருக்கும் தெரியும்.

(The bell rang and the hon. Member concluded his speech.)

**Sri R. SUBRAMANIAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1-22 p.m.
நான் நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்த இந்த பட்ஜெட்டை முழு மனதுடன் வரவேற்கிறேன். இந்த பட்ஜெட்டில், நீண்டநாளாக நிதி மந்திரியாக இருந்து அனுபவமும் திறமையும் இருக்கிறது. மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த திட்டங்களையெல்லாம் சரிவர நடத்தி வைப்பதற்கு எல்லாம் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றியமையாத காரியங்களுக்கு பணம் ஒதுக்கியும் மக்களுடைய தேவைகளை அறிந்து அதற்கெல்லாம் பணம் ஒதுக்கியும் இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். உதாரணமாக ஹரிஜன இலாகாவிற்கு சென்ற ஆண்டு இருந்ததை விட இந்த வருஷம் 60 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த மாதிரியாக எந்தெந்த இலாகாக்களுக்கு அதிகமாக ஒதுக்க வேண்டுமோ அந்த இலாக்காகளுக்கு எல்லாம் அதிக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் சரியான விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். அடுத்தபடியாக எல்லோரும் விலைவாசியின் ஏற்றத்தைப்பற்றி எல்லோரும் குறிப்பிட்டார்கள். சென்ற வருஷம் இருந்ததை விட இந்த வருஷத்தில் இவ்வளவு ஆயிரம் ஏக்கர்கள் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்றுள்ள விவரங்களையெல்லாம் நமது நிதி மந்திரி அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அத்துடன் இவ்வளவு லட்சம் டன் நெல் அதிகமாக கிடைத்திருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் விலை அதிகமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இதற்கு காரணம் என்ன? இந்த விலை உயர்வு சென்ற வருஷம் இருந்ததா என்று பார்ப்போமானால் நமக்கு ஒரு விஷயம் நன்றாக தெரியவரும். அதாவது வருஷா வருஷம் பெப்ரவரி மாதத்தில் அதாவது அறுவடை காலத்தில் இறங்கவும் பின் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் விலை அதிகமாக ஏறுவதும் சகஜமாக இருந்துகொண்டிருக்கிறது. $1\frac{1}{2}$ மணங்குக்கு இப்போது 20 ரூபாயாக இருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டில் இதே சமயத்தில் $1\frac{1}{2}$ மணங்குக்கு 25 ரூபாயாக இருந்தது. ஆகவே இந்த விலையை கீழே கொண்டுவருவதற்கு நாம் அரசாங்கத்திற்கு சொல்லிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் சென்ற வருஷத்தில் இதற்காக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. சென்ற வருஷத்தில் மூட்டை ஒன்றுக்கு 25 ரூபாய் என்றிருந்ததை 15 ரூபாய் விலையாக கொண்டு வரப்பட்டது. அதேமாதிரி இந்த வருஷமும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்குத்தான் தாமதம் ஏற்படுகிறது. இதில் தாமதம் ஏற்படக்கூடாது என்று நாம் சொல்லி அரசாங்கத்திற்கு தெரியவேண்டியதில்லை. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கனம் மந்திரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இந்த நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டும் என்பதுதான் என் கோரிக்கை. அடுத்தபடியாக விவசாயத்தை பொறுத்தவரையில் உணவு பொருள் உற்பத்திக்கு சர்க்கார் எவ்வளவோ சலுகை காட்டியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டுவருகிறது. ஆனால் இவ்விதம் கொடுக்கப்படுகிற பணம் விவசாயத்திற்கு தக்க சமயத்தில் கொடுத்து உதவ வேண்டும். அவர்களுக்கு விவசாயத்திற்கு விதை, மற்றபடி எரு முதலியவை வாங்குவதற்கு அந்த பணம் உபயோகப்பட வேண்டும். ஆகவே இந்தப் பணத்தை காலாகாலத்தில் அவர்களுக்கு கிடைக்கச் செய்யவேண்டும். விவசாயத்திற்கு எரு போடுகிறது என்றால் அந்தந்த காலத்தில் போட்டால்தான் நல்ல விளைச்சலை காணமுடியும்.

அதல்லாமல் எந்த காலத்திலும் போட்டால் நல்ல பலனை அளிக்காது. அதே மாதிரி அமோனியம் சல்பேட்டுக்கு 25 ரூபாயும், சூப்பர் பாஸ்பேட்டுக்கு 25 ரூபாயும் கழிந்த காலங்களில் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அமோனியம் சல்பேட்டுக்கு 25 ரூபாயும், சூப்பர் பாஸ்பேட்டுக்கு 15 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. சூப்பர் பாஸ்பேட்டை பொறுத்தமட்டில் சூப்பர் பாஸ்பேட் அதிகமாக போட்டால் தான் அதிகமாக விளைச்சல் உண்டாகும். ஆகவே விவசாயிகளுக்கு சூப்பர் பாஸ்பேட்தான் மிக அவசியமாக இருக்கிறது. ஆகலால் இப்போது வைத்திருக்கிற முறையை மாற்றி சூப்பர் பாஸ்பேட்டுக்கு 25 ரூபாயும், அமோனியம் சல்பேட்டுக்கு 15 ரூபாயும் கொடுத்தால் விவசாயிகளுக்கு உபயோககரமாக இருக்கும். இவ்விதம் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக சென்ற ஆண்டில் பொறுக்கு விதைகளை விவசாயிகளுக்கு கொடுப்பதற்காக 38 பண்ணைகள் இருந்தது. இப்போது 136 பண்ணைகள் ஏற்படபோவதாக தெரிகிறது. ஆனால் இந்த பண்ணைகளில் செய்யப்படும் ஆராய்ச்சிகள் எல்லாம் அந்தந்த பண்ணை ஆபீஸ் மட்டிலேயே நின்றுவிடுகிறது. இதை மாற்றி அந்த ஆராய்ச்சி பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் மக்களுக்கு அதை எடுத்துச் சொல்ல வேண்டும். அம்மாதிரி எடுத்துச் சொல்லாவிட்டால் எந்தவிதமான ஆராய்ச்சிகள் செய்தாலும்கூட அது பொதுமக்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் கூட உணவுப் பொருள்களின் விலை குறையவேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் உணவுப்பொருள் உற்பத்தி செய்வதற்கு அவசியமான சாமான்கள் என்னவெல்லாம் வேண்டுமோ அந்தந்த சாமான்களின் விலையும் இறங்கவேண்டும். உதாரணமாக ரசாயன எரு, புண்ணாக்கு போன்ற பொருள்களுக்கு இன்று அதிகமான விலை இருக்கிறது. நாம் உணவுப் பொருள் விலையை மாத்திரம் குறைத்துவிட்டு இம்மாதிரி உணவு உற்பத்திக்கு அவசியமான பொருள்களின் விலை குறையாமல் இருந்தால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதோடு நல்ல விளைச்சலுக்கும் தடை ஏற்படுகிறது. அத்துடன்கூட இப்போது விவசாயத்தில் நியாயவார சட்டம் வந்திருக்கிறதினால் மக்களுக்கு நல்லதொரு உற்சாகம் ஏற்பட்டு நல்ல விளைச்சலை ஏற்படுத்துவதற்காக நல்ல வேலை செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு உற்சாகம் ஏற்படுகிறதே தவிர அதேசமயத்தில் அந்த உற்சாகத்தை தடைசெய்யும் முறையில் அங்குள்ள மிராசுதார்கள் அதிகமான கஷ்டத்தை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மிராசுதார்கள் எந்த காரணத்தைக்கொண்டாவது அவர்களிடமிருந்து எந்த விதத்திலாவது நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அதற்காக என்னென்ன காரணங்களையாவது சொல்லி கோர்ட்டில் கேஸ் கொடுத்துவருகிறார்கள். இதைப்பற்றி கன்விலியேஷன் ஆபீஸர்களிடம் மனு செய்து கொண்டாலும்கூட அது உடனடியாக தீர்க்கப்படுவதில்லை. ஆகையினால் மனு செய்துகொண்ட பிறகு 3 அல்லது 4 மாத கால அளவில் இந்த கேஸ்கள் தீர்க்கப்படாமல் இருப்பதை விட்டுவிட்டு உடனுக்குடன் இந்த கேஸ்கள் தீர்க்கப்படவேண்டிய மார்க்கத்தை நாம் செய்ய வேண்டும். அம்மாதிரி செய்தால்தான் இவர்களுடைய குறைகளை உடனடியாக நிவர்த்திக்க முடியும். (மணியடிக்கப்பட்டது.)

1-30 p.m. **Sri M. SELVARAJ :** உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சரவர்கள் சமர்ப்பித்துள்ள பட்ஜெட் போற்றக் கூடியதா என்றால் இல்லை, வருத்தம் தெரிவிக்கக் கூடிய முறையிலேதான் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. உணவுப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் அதன் காரணங்களை அதில் குறிப்பிடவில்லை. வரிகளையும் சேர்த்து வியாபாரிகள் உணவுப் பொருள்களை விற்பதால்தான் உணவுப் பொருள்களின் விலை ஏறி அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. பலகட்ட விற்பனை வரிகள் மூலமாக விலை ஏறிக்கொண்டு போகிறது. பத்து வியாபாரிகளின் கைமாறி 11-வது வியாபாரியின் கையில் போகும்போது 11 வியாபாரிகளும் விற்பனை வரியை ஏற்றி விலையைக் கூடுதலாக்கிக் கொண்டு வருகிறார்கள்





மத்திய அரசாங்கம் சமீபத்தில் போட்ட "எக்ஸைஸ்" வரிகள் மூலம் உணவுப் பொருள்களின் விலையை ஏறிக்கொண்டே போகிறது. மேலும் மதுவிலக்கு சம்பந்தமாக சில குறைகள் இருக்கின்றது என்று இன்று காலையில் நடந்த கேள்வி நேரத்தில் நாம் கண்டோம். அதில் அம்மோனியம் ஸல்பேட் போன்ற ரசாயன உரங்களை கூட்டுறவு சொஸைட்டி மூலம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் வாங்கி அதைக் காய்ச்சி சாராயத்தை நல்ல முறையில் விற்று விலைக்கு அது ஒரு குடிசைத் தொழிலாக நடந்துவருகிறது. ஆகவே, தக்க நடவடிக்கைகள் எடுத்து இக்குற்றம் செய்பவர்களை நன்றாகத் தண்டிக்க வேண்டும். இம்மாதிரி குற்றம் செய்பவர்களுக்கு இரண்டு வருடங்கள் **rigorous imprisonment,** 500 ரூபாய் அபராதம் விதிக்கும்படி சட்டத்தைத் திருத்துவார்களேயானால் இப்படிப்பட்ட குற்றங்கள் குறைந்து மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக முடியும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அடுத்தபடியாக, பிளாக் டெவலெப்மெண்ட் என்ற முறையில் இன்று அரசாங்கத்தின் பணம் பாழாகிறது. பணம் எந்த திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அதில் நான்கில் மூன்று பாகம் வேலை செய்யக்கூடிய அதிகாரிகளுக்கும் சிப்பந்திகளுக்குமாக செலவு செய்யப்படுகிறதே ஒழிய அந்தத் திட்டம் நல்ல முறையில் மக்களுக்குப் பயன் படும் முறையில் அப்பணம் அதிகம் செலவு செய்யப்படுவதில்லை. இந்தத் திட்டங்கள் சம்பந்தமாக வேலை பார்த்து வரும் அதிகாரிகள் நல்ல முறையில் ஊக்கத்தோடு நாடு முன்னேற வேண்டும் என்ற ஊக்கத்தோடு அவர்கள் வேலை செய்வதில்லை. நல்ல முறையில் மக்களிடத்தில் அவர்கள் அணுகி திட்டத்தின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று காரியங்களைச் செய்யவேண்டிய முறையை அவர்கள் அனுஷ்டிக்கவில்லை. ஆகவே, இந்தத் திட்டங்களை அந்தந்த கிராமங்களில் உள்ள பஞ்சாயத்து போர்டுகளுக்கு, மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு இந்தத் திட்டத்திற்கான பணத்தை ஒதுக்கி அவைகளின் மூலம் திட்டங்களை நிறைவேற்றினால் அத்திட்டங்கள் நல்ல முறையில் உருவாகும் என்று கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ஆஸ்பத்திரியைப்பற்றி பேசும்போது முக்கியமான நகரங்களில் ஆஸ்பத்திரிகள் டிஸ்ட்ரிக்ட் போர்டின் மானேஜ்மெண்டின் கீழ் இருந்துவருகிறது. அந்த ஆஸ்பத்திரிகளில் நல்ல மருந்துகள் கிடையாது. நோயாளிகள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும்போது டாக்டர் இருப்பதில்லை. மருந்துகள் உண்டா என்றால் அதுவும் கிடையாது. மருந்துகளுக்கு "இண்டெண்ட்" செய்திருக்கிறோம், வரவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த ஆஸ்பத்திரிகளை கவர்ன்மெண்டாரே நேரடியாக ஏற்று நடத்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, கிராமங்களில் நல்ல ரோடு வசதிகள் இல்லை. ஜில்லா போர்ட், பஞ்சாயத்து போர்ட்டுகள் மேற்பார்வையில் இருக்கின்ற ரோடுகள், போதிய பண வசதியில்லாத காரணத்தால், ரோடுகள் அமைக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அப்பேர்ப்பட்ட சாலைகளை "ஹை வேஸ்" என்ற முறையில் அந்த ரோடுகளை சர்க்காரே எடுத்து அவைகளைச் செய்து கொடுத்தால் கிராமங்களில் ரோடு வசதிகள் ஏற்பட்டு மக்கள் பயனடைய முடியும். இறுதியாக ஒரு வார்த்தை, நமது நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட் உரை ஆங்கிலத்தில் ஒன்றும் தமிழில் ஒன்றும் கொடுக்கப்பட்டன. அதே முறையில் "பட்ஜெட் விளக்கங்களையும் அது சம்பந்த ரிக்கார்டுகளையும் தமிழில் மொழிப் பெயர்த்துக் கொடுத்திருந்தார்களேயானால், அது வரவேற்கத் தக்க விஷயமாயிருக்கும். அடுத்தபடி, வெள்ளையன் நம்மை விட்டுப் போய் வருடங்கள் பத்திற்கு மேல் ஆகியும் கூட வட ஆற்காடு ஜில்லா, தென் ஆற்காடு ஜில்லா என்றுதான் இன்றும் பெயர் இருக்கிறது. அவைகளை வேலூர் ஜில்லா என்றும், கடலூர் ஜில்லா என்றும் மாற்றியமைத்தால் அது, இங்கு இருப்பது ஒரு ஜனநாயக அரசாங்கம் என்பதற்கு ஒரு அறிகுறியாகும் என்று சொல்லிக்கொண்டு மற்ற ஜில்லாக்கள் எப்படி அவைகளின் தலைநகரின் பெயரைக்கொண்டு இருக்கிறதோ, அதேபோல் இவைகளின் பெயர்களையும் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் அது ஒரு வரவேற்கத்தக்க விஷயமாயிருக்குமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

[2nd July 1957

**SRI K. PONNIAN :** உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி மந்திரியவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டானது, எந்த கோணத்திலிருந்து அதைப் பார்த்தாலும் அது வரவேற்கத் தக்க நிலையில்தான் இருக்கிறது. விவசாயிகளுக்கு சகல சலுகைகளும் செய்து கொடுத்தாலும் விதை, மாடு முதலியவைகள் வாங்கப் பணம் கொடுத்தாலும் இன்னம் பல வழிகளில் அவர்களுக்கு உதவி செய்தாலும் சில சமயங்களில் பூச்சிகளின் தொந்திரவினால் அவர்கள் அல்லல் உறுகிறார்கள். எனது தொகுதியாகிய பொள்ளாச்சி, நிலக்கடலை அதிகமாக பயிரிடக்கூடிய பிரதேசமாகும். அங்கு பூச்சி தொந்திரவு இருக்கிறது. பூச்சி தொந்திரவு காரணமாக ஏராளமான ஏக்கர்கள் நாசமாகிவிட்டது என்று விவசாய டிபார்ட்மெண்டாரிடம் சொன்னால் அவர்கள் உடனடியாக இவ்வளவு ஏக்கர்களுக்கும் நிவாரணம் அளிக்க முடியவில்லை. ஆகவே, " ஹெலி காப்டர் " விமானம் மூலம் மருந்தை அந்த இடங்களில் தெளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கான செலவை, கிஸ்தி வசூலிக்கும்போது ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று வசூலிக்கலாம். லால்பாரையில் தேயிலை பயிர் செய்யப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் அந்தச் செடிகளை தேயிலைக் கொழுந்தை பூச்சி தின்றுவிடுகிறது. அதுதான் **blister disease** கொழுந்தில்தான் தேயிலை உற்பத்தியாகிறது. அதைப் பூச்சி தின்று நாசமாக்கிவிடுகிறது. அதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனது மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம் திட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட இந்த பட்ஜெட்டில் இல்லாதது பற்றி வருத்தப்படுகிறேன். எங்கு பார்த்தாலும் பரம்பிக்குளம், பரம்பிக்குளம் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, பல்லடம் இவைகள் வறண்ட பிரதேசமாகும். அந்தப் பிரதேசத்திற்கு இந்த பரம்பிக்குளம் திட்டம் ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். ஆகவே அத்திட்டத்தைப் பற்றி இந்த பட்ஜெட்டில் ஒரு வார்த்தை கூட கூறப்படாதது எனக்கு மிகவும் ஏமாற்றத்தை அளிக்கிறது. முழு திட்டத்தையும் ஆரம்பிக்காவிட்டாலும் ஆழியார் உயர் வாய்க்கால் திட்டத்தையாவது முதலாவதாக ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். வால்பாறையில் நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் புல் மேடுகளாக இருக்கின்றன. வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் அதை **Game field** ஆக வைத்துக் கொண்டிருந்தார்கள். கால்நடைகளை வளர்த்துவதற்கு அது சௌகரியமான இடமாகும். சிந்தி மாடுகள் அங்கு நல்ல முறையில் உற்பத்தியாகிறது. நல்ல பாலும் கிடைக்கிறது. சிந்தி மாடுகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் ஆனைமலையை உபயோகப்படுத்தலாம். அங்கு பால் பண்ணைகளும் ஏற்படுத்தலாம்.

-40 அடுத்தபடியாக, உதவி சபாநாயகர் அவர்களே, நாங்கள் வாழும் இட
m. மானது மலைப்பிரதேசம். எங்களுக்கு ரயில் போக்குவரத்து வசதி கிடையாது. காட்டு ரோடுதான் எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் வாழும் பிரதேசம் வருஷத்திற்கு 150° மழை பெய்யக் கூடிய இடம். ஒரு வருஷம் மழைமிகுதியாகப் பெய்துவிட்டால் காட்டு ரோடில் **breach** உண்டாகிவிடும். **Breach** ஏற்பட்டுவிட்டால், உணவு தானியங்கள் வருவதற்குக் கூட சில நாட்கள் ஆகலாம். ஆகவே இந்த காட்டு ரோடுகளை **turnings, parapetwalls, culverts** இவைகளையெல்லாம் உறுதியாகக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சர்க்காரை வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஆனைமலைப் பிரதேசத்தில் சுமார் 60,000 தொழிலாளர்கள் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எந்த நோய் வந்தாலும் எங்களுக்கு அடுத்த பெரிய ஆஸ்பத்திரி கோவை நகரத்திலுள்ளதுதான். வால்பாறையில் உள்ள **Government Cinchona Plantations**-ல் 6 லட்சம் ரூபாய் செலவில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரியில் நவீன சாதனங்களை அமைத்துக் கொடுத்து ஆனைமலைப் பிரதேசத்திலுள்ள 60,000 தொழிலாளிகளும் அதை உபயோகப் படுத்துவதற்கு சர்க்கார் வழிவகை செய்யவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.



2nd July 1957] [Sri K. Ponnian]

அந்த 60,000 தொழிலாளிகளில் 100-க்கு 90 பேர் ஹரிஜன மக்கள். அவர்கள் வாழும் **labour lines**-ஐ எடுத்துக் கொண்டால், ஒரே வீட்டில், 3, 4 குடும்பங்கள் வாழவேண்டியிருக்கிறது. கலியாணம் ஆனவர்களும், கலியாணம் ஆகாதவர்களும் ஒரே இடத்தில் படுக்க வேண்டி இருக்கிறது. சர்க்கார் இது விஷயமாக சீக்கிரத்தில் கவனம் செலுத்தி ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Government Cinchona Plantations**-ல் ஒரு ஆணுக்கு ரூ. 1-5-0 கூலி கொடுக்கிறார்கள். ஒரு பெண்ணுக்கு ரூ. 1-1-0 கூலி கொடுக்கிறார்கள். அடுத்து இருக்கும் **private estates**-ல் ஒரு ஆணுக்கு ரூ. 1-11-6, ஒரு பெண்ணுக்கு ரூ. 1-5-0 கூலி கொடுக்கிறார்கள். எல்லா தொழிலாளிகளுக்கும் ஒரே விதமான கூலி கிடைக்கும்படிச் செய்ய சர்க்கார் முன்வர வேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தியாகிகள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI N. V. CHOCKALINGAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1-4
இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவு திட்டத்தை நான் p.m
முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அத்துடன் சில குறிப்புக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திருப்பத்தூர் தாலூகாவில் ஒரு ஷெட்டுக்கு 1,050 ரூபாய் வீதம் எஸ்டிமேட்டு போட்டுக் கட்டியிருக்கிறார்கள். மற்ற இடங்களில் எப்படி இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. சுவர்களுக்கு மண் சாந்து பூசப்பட்டுவருவதால் மழை காலத்தில் இவைகள் விழுந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. ஒரு 50 ரூபாய் எஸ்டிமேட்டில் அதிமகமாக சாங்ஷன் செய்தால் கருஞ்சாந்து பூசலாம் என்று கண்ட்ராக்டர்களிடமும் மற்றவர்களிடமும் விசாரித்ததில் தெரிகிறது. ஆகையால் எஸ்டிமேட்டில் ரூபாய் 50 அதிகமாக சாங்ஷன் செய்தால் எல்லா வீடுகளுக்கும் கருஞ்சாந்து பூச முடியும். இதனால் மழை காலத்தில் வீடுகள் இடிந்து விழாமல் உறுதியாக இருக்கும். ஆகவே, ரூபாய் 50 அதிகப்படியாக எஸ்டிமேட்டில் சாங்ஷன் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளைப் பொருத்தமட்டில் தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் பம்பு செட்டுகள் வைத்து மின்சார உதவியைக்கொண்டுதான் சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. பிரான்மலை, சென்னியம்பட்டி, சென்னிமலை போன்ற இடங்களில் கிணறுகள் வெட்ட முயற்சி செய்கிறார்கள். அதற்காக மின்சார வசதி கொடுக்கப்படுகிறது. 5 **(horse-power)** எஞ்ஜின் இருந்தால்தான் விவசாயத்திற்கு தண்ணீர் இரைக்க முடியும். ஒரு **(horse-power)**-க்கு ரூபாய் 50 வீதம், ரூபாய் 250 ஸ்பெஷல் சார்ஜ் கேட்கிறார்கள். பம்பு செட்டுக்காக விவசாயிகள் கடன் வாங்குவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். கடன் கிடைத்து பம்பு செட்டு வாங்குவதற்கு மிகவும் தாமதமாகிறது. ஆனால் மின்சார இலாகாவினர் அவர்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுக்கிறார்கள். பம்பு செட்டு கிடைப்பதற்கு தாமதம் ஏற்பட்டாலும் தண்ணீர் இறைத்தாலும் இறைக்காவிட்டாலும் மின்சாரத்திற்காக கட்டணம் கட்டிவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள் மற்ற விஷயத்தைக் காட்டிலும் விவசாயிகள் விஷயத்தில் முதன்மையாகக் கவனம் செலுத்த வேண்டும். மற்ற விஷயங்களை கொஞ்சம் தாமதமாக கவனித்தாலும் விவசாயிகள் சம்பந்தப்பட்டவரை அவர்களுக்கு வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்துகொடுத்து, அவர்களுக்குத் தொந்திரவு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு தாமதமில்லாமல் பம்பு செட்டுகள் கிடைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

திருப்பத்தூர் தாலூகா மிகவும் பிற்போக்கான பகுதி. செட்டி நாட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது என்று நினைக்கலாம். கீழ்ப்பகுதிதான் செட்டி நாட்டில் இருக்கிறதே தவிர, மேல் பகுதியில் விவசாயிகள்தான் அதிக

[Sri N. V. Chockalingam] [2nd July 1957

மாக இருக்கிறார்கள். சில செட்டியார்கள் இருக்கலாம். அவர்கள்கூட விவசாயத் தொழிலில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். வர்த்தகத் தொழிலில் ஈடுபடவில்லை, ஏனென்றால், அயல் நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்யும் வசதி இப்பொழுது குறைந்துவிட்டது. ஆகையால் விவசாயிகள்தான் இப்பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். 1955-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, சில கண்மாய், கலங்கரைகளெல்லாம் உடைபட்டுப் போய்விட்டன. இவைகளைச் செப்பனிடுவதில் சர்க்கார் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். மணிமுத்தாறு, பாலாறு என்ற இரண்டு காட்டாறுகள் இருக்கின்றன. கலெக்டர் போன்ற அதிகாரிகளிடம் சொல்லிக்கூட இவைகள் அடைக்கப்படவில்லை. கிராமங்களில் சொந்தச் செலவிலோ அல்லது சர்க்கார் செலவிலோ செப்பனிடப்பட்ட நஞ்சை நிலங்கள் இந்த காட்டாறுகளில் வெள்ளம் வந்தால் பாதிக்கப்படுகின்றன. இவைகள் உடைப்பெடுத்துக்கொண்டால் கிராமத்திற்குள் தண்ணீர் வந்து ஏற்கனவே செப்பனிடப்பட்ட நஞ்சை நிலங்களை நாசம் செய்துவிடுகின்றன. இதனால் செப்பனிடப்பட்ட நிலங்களுக்கு மிகுந்த சேதம் ஏற்படுகிறது. இதை சர்க்கார் உடனடியாகக் கவனிக்க வேண்டும். கண்மாய், கலங்கரைகளைச் செப்பனிடுவதற்காக 'ஒரு ஸ்பெஷல் டிவிஷன்' ஏற்படுத்தப்பட்டது. இதைக் கலைக்கப்போவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த 'ஸ்பெஷல் டிவிஷனை' உடனடியாகக் கலைக்காமல் இன்னும் மூன்று மாதங்களுக்காவது நீடித்து புரட்டாசி மாதத்திற்குள் இந்த வேலைகளையெல்லாம் முடிக்கும்படி உத்தரவு போடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு 10-வது வரையிலே இலவசக் கல்வி அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். அஃதும் சர்க்கார் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

திருப்பத்தூர் தாலூகாவில் வாராபூர் பிர்காவில் 50,000 பேர்கள் இருக்கிறார்கள். ஜில்லா போர்டு அதிகாரிகள் ஒரு ஹைஸ்கூல் கட்டுவதற்கு 8,400 ரூபாய் கேட்கிறார்கள். அங்கு வசிப்பவர்கள் எல்லோரும் சாதாரண மக்கள். ஒருவர் கூட வருமான வரி செலுத்தவில்லையென்றால், அவர்கள் எப்படி ரூபாய் 8,400 கொடுக்க முடியும். சர்க்கார் இங்கே ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். திருக்கோஷ்டியூர் ஆஸ்பத்திரியையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு அதை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

காரைக்குடியிலிருந்து மதுரைக்கு ஒரு ரயில்வே லயன் போட மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்ய வேண்டும். காரைக்குடியிலிருந்து மதுரைக்கு மானாமதுரையைச் சுற்றி ரயிலில் போக 60 மைல் ஆகிறது. ஆகையினால் அந்தப் பகுதி ஜனங்கள் ரொம்பவும் சிரமப்படுகிறார்கள். காரைக்குடியிலிருந்து திருப்பத்தூர் வழியாக மதுரைக்கு ஒரு ரயில் பாதை போட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த பட்ஜெட்டைப் ஆதரித்து, என் சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

1 48 p.m. * SRI R. SRINIVASA IYER : Mr. Deputy Speaker, Sir , I rise to join in the chorus of welcome accorded to the Budget prepared by the Finance Minister. If repercussions in the Press are an indication of how this Budget has been received by the public, I desire to point out that generally the Press has received it well. In spite of the indications of the Centre that there should be a balanced Budget and that there should be more taxes, and in spite of the instructions issued that agriculture must be taxed more and alsc in spite of the recommendations of the Finance Commission that land has not been taxed sufficiently, our Finance Minister has been bold enough to prepare a Budget wherein he has not changed the land revenue system. Evidently he has taken note of the recommendations of the Land Revenue Reforms Committee of 1951,



2nd July 1957] [Sri R. Srinivasa Iyer]

which went into this problem of changing land revenue into agricultural income-tax in great detail, and came to the conclusion that this State will lose by a change over from land revenue to agricultural income-tax. Land has been sufficiently taxed. It cannot bear any more taxation. If it is to be taxed any more, I desire to point out that it will retard production of food crops and agriculture will cease to be an economic proposition. Land revenue has been considered by this Government and also by the British Government to be an equivalent to a share of the produce which the State is entitled to from the produce of the land. With the surcharge and other taxes which have been recently introduced and with the increase on land-cess at the rate of four annas in the rupee even on the surcharge, land has been sufficiently taxed. It is a welcome feature that there is no proposal for any additional taxation. Of course we want more projects and more developments, and for that we need money. I do not agree with some Members who have stated that they will be willing to pay more taxes if only they are properly levied and collected. I desire to point out to hon. Members who advocated additional taxation the volley of criticism that was levelled when the Centre imposed new taxes. If, on the wake of such criticism, our Finance Minister had brought forward any proposal for additional taxation, the Budget would not have been welcomed as it has been to-day. That even the Opposition does not find good points to criticise this Budget, and more or less the same arguments advanced during the discussion on the Governor's Address are being repeated, is an indication that there are no points to criticise either this Budget or the valuable document (the Finance Minister's speech) that has been presented to us in two languages.

In this connection, though there is a deficit of Rs. 483 lakhs, I should say, the Finance Minister expects some relief from the Centre. Apart from this I desire to point out that if the taxes already levied are collected properly, if this 'Kamadhenu' of General Sales Tax is groomed well and attended to well, more than half of this deficit will be made up. I am aware that lorry loads of commodities are being taken out from this State to outside areas for being sold and purchased by others without bringing the transactions into account. This evasion of tax is there everywhere. The Income-tax Act provides for remedies like urgent search and surprise visits by the Income-tax Officers and gives certain other powers to those who tax and collect the tax. If this evasion of tax is prevented, I dare say we will get much more than what is expected under Sales Tax revenue. I also desire to point out that a reduction in the rate of tax in the lower orders may be tried, that is, it may be on the slab system like the income-tax—the rate of tax increasing with the increase in income. We know that Sri P. S. Lokanathan has been appointed as Special Officer for this purpose, and he has issued a questionnaire. I believe the questionnaire will be distributed not only to Trades Associations and Chambers of Commerce but also to Members of this Legislature who desire to take part in answering this questionnaire and pointing out the ways and means of remedying this tax evasion. A consolidated Act,

clear in itself, both to the tax-payer and to the tax-collector, is more important than anything else. Every dealer whether he is exempt from this tax or not must have a licence. A nominal fee of Re. 1 will do. This will bring in several lakhs of rupees, because there are several lakhs of dealers in this country. Simply because some classes of dealers are exempt from taking out this licence as their turnover is less than Rs. 7,500, they do not maintain accounts. I believe that sufficient steps will be taken to introduce legislation on the lines of the Income-tax Act and the Partnership Act to prevent such evasion.

One important point that has of course been mentioned in paragraph 32 of the Budget Speech is the appointment of a Special Officer to go into the question of the economical administration of the State. That expenditure on administration is increasing by leaps and bounds is true. That a Special Officer is going to be appointed is welcome. But I suggest to the Hon. Minister that an official or a retired official, if solely appointed, will stick to his old volumes and bundles of papers and we will find only increase of correspondence in the administration. I request that some non-officials who are experienced in administration be also formed into a Committee along with the official, and this matter be enquired into very quickly so that at least in the second half of this year beginning from 1st October economy could be effected.

Another important thing in effecting economy and which will enable us to balance this Rs. 483 lakhs of deficit, is a voluntary cut in the salaries of all Government servants—I mean the Gazetted Government servants—drawing a salary of Rs. 250 and more. I know that there will be a volley of opposition to this. A Minister or two foregoing a percentage of their salaries will not do. One Minister of another State has said that if Government Officers do not come in for voluntary cuts in their salaries, the Government will have to impose cuts compulsorily. I appeal to the Gazetted Officers on Rs. 250 or at least above a particular figure to come forward with voluntary cuts in their salaries. They are also citizens of the State who are bound to help the balancing of the Budget and not put the Finance Minister in the predicament of having to borrow from elsewhere. In this connection I desire to state that one Member of our Council has given up his entire salary. It may be that he is able to do it but Members of this House and the Government servants must come forward with at least nominal cuts in their salaries which will add several lakhs to the finances of this
2 p.m. State. On the side of agriculture, everybody has welcomed the extraordinary steps taken for the advancement of agriculture. We have lost Bapatla Agricultural College and we have got only one Agricultural College in the State. Another agricultural college is an absolute necessity. We are short of experienced trained-graduates in agriculture. Even the graduates who have already been trained are going out of the State for the purpose of getting more emoluments and are seeking employment in other States. This is so because this State is not giving them enough emoluments. In this connection, I desire also to point out that the Agricultural Demonstrators who are given power to distribute or sell certain commodities have got to pay for the shortage that may have occurred while handling such commodities. It is because that these Agricultural Demonstrators have been given power to sell certain foods and the godowns where the commodities are stocked are not rat-proof they will have to pay much more than their salaries they receive by the time they leave their jobs. Therefore, these Agricultural Demonstrators who are experienced are going out of this State and seeking jobs in other States. (At this stage the Deputy Speaker sounded the gong.)





Sir, I request the Chair to allow some more minutes for me tomorrow.

DEPUTY SPEAKER : The hon. Member has already taken ten minutes. So it cannot be allowed.

SRI R. SRINIVASA IYER : I request that I may be given some more time tomorrow as I want to refer to some other matters.

DEPUTY SPEAKER : The hon. Member has already spoken for ten minutes, the time fixed by the Hon. Speaker. So I cannot allow more time for the hon. Member tomorow.

The House will now adjourn and meet again tomorrow at 9 a.m.

The House then adjourned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 3rd July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Advisory Committees for Government Departments*

* 49 Q.—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint an Advisory Committee consisting of Assembly Members and others for each Government Department; and

(*b*) if so, when it will come into being?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. R. SUBBIAH MUDALIAR : மத்திய சர்க்கார் இவ்விதமாக ஒரு அட்வைஸரி கமிட்டி ஏற்படுத்துவதாக தெரிகிறது. அந்த பாலிஸியை நமது சர்க்காரும் அமுல் செய்யுமா ?

THE. HON. SRI C. SUBRAMANIAM : மத்திய சர்க்கார் முன்னால் அவ்விதம் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் இப்போது அவர்களும் இதை கைவிட்டு விட்டார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that where advisory committees are appointed to advise the department, in most cases, the advice is not followed? For example, the Transport Advisory Committee is supposed to advise the Government on the working of the City transport? Most of the recommendations of the Committee are not implemented, though the recommendations do not involve any financial commitment.

THE HON. SRI C. SUBRAMANIAM : These committees are only advisory bodies and they cannot expect that every recommendation made by them should be implemented. In that case, they become statutory bodies whose decisions should be binding on the Government department, which is an impossibility.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இதை ஒரு எக்ஸ்பெரிமெண்டாக ஒரு வருஷம் அமுல் நடத்த சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி பின்னால் யோசிக்கலாம். இப்போது அவசியமில்லை என்று சர்க்கார் கருதுகிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இம்மாதிரி சட்டசபை அங்கத்தினர்களை உட்படுத்தி கமிட்டி ஏற்படுத்துவதினால் ஊழல்கள் குறையும் என்று சர்க்கார் கருதுகிறதா ?

[3rd July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அபிப்பிராயப்படலாம். இதன் மூலம் அதிக கஷ்டங்கள்தான் ஏற்படும்.

SRI M. JAGANNATHAN : அட்வைஸரி கமிட்டி என்ற முறை இல்லாமல் " Statutory bodies " என்ற முறையில் ஏற்படுத்துமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படியென்றால் நம்முடைய அரசியல் அமைப்பையே மாற்ற வேண்டியதுதான். அப்படி ஒரு ஏற்பாடு இருந்தால் இன்று சட்டசபைக்கு இருக்கிற பொறுப்புகள் மாறி அதற்கு பதிலாக இந்த மாதிரியுள்ள சிறு சிறு கமிட்டிகளிடம்தான் பொறுப்பு இருக்கும்.

SRI A. GOVINDASAMY : இந்த அட்வைஸரி கமிட்டி வேண்டிய ஆலோசனை கூறுவதற்கு இருந்தாலும் அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு அல்லவா இருக்கின்றன என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆலோசனை கூறும் கமிட்டி என்றாலே அப்படித்தான் அர்த்தம். அதனுடைய ஆலோசனைகளை ஏற்று நடத்தவேண்டியதுதான் அரசாங்கத்தின் பொறுப்பு.

SRI K. VINAYAKAM : Sir, do the Government feel that the Assembly Members, if constituted into advisory committees, will interfere too much with the working of the Government departments and impair their efficiency?

THE HON. SRI C. SUBRAMANIAM : I did not say so, Sir.

SRI M. C. MUTHUKUMARASWAMI : செல்வாக்கு படைத்தவர்களும் நல்ல வசதியுள்ளவர்களும் இந்த மாதிரியுள்ள கமிட்டிகளில் இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கூடியவரையில் இப்போது பலருக்கும் கமிட்டியில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருடம் கமிட்டியில் இடம் இல்லாதவர்களுக்கு அடுத்த வருடம் கமிட்டிகளில் இருப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

### *General Election in 1957*

* 50 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the cost borne by the State Government on account of the recent General Election ; and

(b) the proportion in which the total cost was met by the Union Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) In connection with the recent General Elections to the House of the People and the Madras Legislative Assembly the Government have incurred an expenditure of about Rs. 37,58,000 up to the end of April, 1957. Some more expenditure has to be incurred on certain items, such as final settlement of travelling allowance bills of polling personnel, etc.

(b) The Government of India meet 50 per cent of the total expenditure referred to under clause (a) above.

I think, Sir, I have already answered this question.



3rd July 1957]

SRI A. GOVINDASAMY : எலக்ஷன் நேரத்தில் புதிதாக தேர்தல் பெட்டிகள் ஏதாவது செய்யப்பட்டதுண்டா ? அவ்விதமுண்டென்றால் அதற்கு செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு தனிக் கேள்வி போட்டபடி கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : Sir, are the Government aware that some of the Corporation teachers who were entrusted with the election work have not been paid till to-day their travelling allowance and daily allowance? Will the Government look into the matter and do the needful as early as possible?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already stated in this House that instructions had been issued to expedite the payment of these allowances and that there should be no undue delay.

SRI S. B. ADITYAN : On a point of order, Sir. நமது விதிகளில் 31-வது விதியின்படி ' a question once fully answered in the Assembly must not be asked again ' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த கேள்வி மீண்டும் கேட்கப்படுவது சரியா ? அதற்கு மந்திரி அவர்கள் மீண்டும் பதில் சொன்னது சரியா ? இதற்கு உங்களது தீர்ப்பை கூற வேண்டுகிறேன்.

DEPUTY SPEAKER : இது அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. The question had been included in the order paper. So, I cannot disallow it.

SRI A. GOVINDASAMY : தேர்தல் வேலை பார்த்தவர்களுக்கு இது வரை பிரயாணப்படி கொடுக்கப்படவில்லை. இதில் கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஆசிரியர்கள். ஆகவே அவர்களுக்கு இந்த பிரயாணப்படி உடனே கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில இடங்களில் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இதில் என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்றால் இந்த பிரயாணப்படி பில் கொடுப்பதில் பலரும் சரியாக கொடுப்பதில்லை. இதனால் அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. ஆகவே இதை எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பட்டுவாடா செய்யவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### *Houses for industrial workers*

* 51 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any scheme for building houses for industrial workers in the City of Madras; and

(b) if so, the number of houses that have been constructed so far?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) 936 tenements.

SRI S. PAKKIRISAMI PILLAI : இத்தனை வீடுகளும் அந்த இடங்களில் கட்டி முடிந்தாய்விட்டது. இன்னும் அந்த வீடுகள் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

[3rd July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கு குடிதண்ணீர் வசதி கிடைக்க வில்லை. அதனால் தான்.

SRI A. GOVINDASAMY : எந்தெந்தப் பகுதிகளில் இந்த வீடு கட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : எருக்கஞ்சேரி, செம்பியம் என்ற இடங்களில் கட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMY : போன வருஷம் இதற்காக ஒதுக்கப் பட்ட தொகை முழுவதும் என் செலவிடப்படவில்லை ?

THE HON SRI R. VENKATARAMAN : போன வருஷம் அதிக மாகத்தான் செலவிடப்பட்டிருக்கிறது. எவ்வளவு செலவிடப்பட்டிருக்கிறது என்ற விபரம் வேண்டுமானால் அதற்குத் தனி கேள்வி போடும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : நமது நாடு விவசாயத் துறையில் இருந்து கைத்தொழில் துறையில் திரும்பிக் கொண்டிருக்கிறது. அதனால் தொழிலாளர்களும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இம் மாதிரி எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டு மென்றுள்ள "பாலிஸி" அரசாங்கத்திற்கு உகந்ததுதானா ?

THE HON SRI R. VENKATARAMAN: கூடுதலான அளவுக்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்றுதான் அர சாங்கம் கருதுகிறது.

9–10 a.m. SRI K. R. NALLASIVAM : இதே அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொண்டு போனால் இன்னும் எவ்வளவு ஆண்டுகளில் இங்குள்ள தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முடியும் என்பதைப் பற்றி ஏதாவது திட்டமான கணக்கிருக்கின்றதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நமது ஜனத்தொகை எந்த அளவிற்கு வளர்ந்து கொண்டிருக்கும் என்று அங்கத்தினர் சொல்வார்களே யானால் எளிதாக கணக்குப் போட்டு சொல்லிவிடலாம்.

SRI P. S. CHINNADURAI : இந்த வீடுகள், தொழிலாளர்களுக்கு வாடகைக்காக கொடுக்கப்படுகிற திட்டத்தின் கீழ் உள்ளவையா ? அல்லது இந்த வீடுகள் நாளாவட்டத்தில் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கப் படும் திட்டத்தின் கீழ் உள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த கேள்வியில் குறிப் பிடப்பட்டுள்ள வீடுகள் எல்லாம் வாடகைக்கு கொடுக்கப்படுபவையாகும்

SRI M. C. MUTHUKUMARASWAMI : நகரத்தில் உள்ள தொழி லாளர்களுக்கு மாத்திரம் வீடு கட்டிக் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறது. கிராமங்களில் அதே தொழிலைச் செய்யும் தொழிலாளர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது, " இன்டஸ்டிரியல் ஹௌஸிங் ஸ்கீமாகும்". எங்கெங்கு தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அங்கு கட்டுவதற்குள்ள திட்டமாகும்.

SRI A. VEDARATNAM PILLAI : இதே சலுகைகள் என் விவசாய தொழிலாளர்கள் விஷயத்தில் காட்டப்படுவதில்லை.

THE HON. SRI R. VENKATARAMAN: விவசாய தொழிலாளர்களுக்கு " லோ இன்கம் க்ரூப் ஹௌஸிங் ஸ்கீம்" இருக்கிறது. அதன் மூலம் வீடுகள் கட்ட முடியும்.



3rd July 1957]

SRI M. JAGANNATHAN : The Hon. Minister has stated that houses are being built for industrial workers at Erukancherry and Sembium. It is a fact that these houses were originally intended for housing Harijans living in that locality. May I know why they were diverted for the purposes for which they were not originally intended?

THE HON. SRI R. VENKATARAMAN : The assumption of the hon. Member is incorrect. It was never intended to house the Harijans there. It is intended for industrial workers.

SRI V. K. KOTHANDARAMAN : முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த வீடு கட்டும திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவு செய்யப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாம் இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் இருக்கின்றோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

SRI A. A. RASHEED : Has the construction of houses for industrial workers been entrusted to the City Improvement Trust?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir. This has been done by the Public Works Department.

SRI K. VINAYAKAM : As for the houses that have already been constructed for industrial workers, may I know to which category of workers they will be allotted? Sir, there is a proposal mooted to house the workers employed by the Government Transport department. What has become of it? Is it under the consideration of the Government of Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. There is a proposal to reserve 100 houses out of the 936 tenements built in Erukancherry and Sembium for the Transport workers.

SRI A. V. THOMAS : பிளாண்டேஷனில் வேலை செய்யும் தொழி லாளர்களுக்கு வீடுகள் ஏதாவது கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது கட்டிக் கொடுக்க ஆலோசனை இருக்கிறதா ? இல்லை, அப்படிக் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன ?

THE HON. SRI R. VENKATARAMAN : பிளான்டேஷன்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பிளாண்டர்ஸ் உடையது. அதற்கு சர்க்கார் உதவி செய்கிறதே ஒழிய சர்க்கார் கட்டிக் கொடுப்பதில்லை.

SRI A. GOVINDASAMY : இந்த வீட்டிற்கு 10 ரூபாய் வாடகையும் இரண்டு ரூபாய் எலெக்டிரிக் சார்ஜும் போட்டிருக்கிறார்கள். அது உண்மையா ? ஏழைத் தொழிலாளர்கள் அந்த அளவு கொடுக்க முடியாத காரணத்தினால் அதை ஆறு ரூபாயாக குறைக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பத்து ரூபாய் குடிக்கூலி யாகவும் இரண்டு ரூபாய் எலெக்ட்ரிக் சார்ஜ்-ஆகவும் போட்டிருந்தும் கூட பல்லாயிர கணக்கான அப்பிளிக்கேஷன்ஸ் வந்திருக்கிறது. எப்படிக் கொடுப்பது என்பது ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது.

[3rd July 1957

SRI A. V. THOMAS : தோட்டக்காரர்களுக்கு பல உதவி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படியானால் எவ்வளவு உதவி செய்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : பிளான்டேஷன் ஹௌசிங் ஸ்கீமைப்பற்றி தனி கேள்வி கேட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : இது மாதிரி தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு கடந்த ஆண்டு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மான்யமாகவும், கடனாகவும் எவ்வளவு கிடைத்தது. அதில் எவ்வளவு செலவு செய்யப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : கடந்த ஆண்டு இண்டஸ்ட்ரியல் ஹௌசிங்க்காக கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 24,92,840. ராஜ்ய சர்க்கார் செலவழித்தது, 27,60,840 ரூபாய். மத்திய சர்க்கார் கொடுத்ததை விட ரூ 5,79,500 அதிகமாகத்தான் செலவிடப்பட்டிருக்கிறது.

SRI M. JAGANNATHAN : May I know the type of designs according to which houses are built for industrial workers at Erukancherry and Sembium ?

THE HON. SRI R. VENKATARAMAN : I invite the hon. Member to visit this colony.

SRI N. K. PALANISAMY : தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டத்தில் உள்ள விதிகளை மாற்றி தொழிலாளர்களே வாங்குவதற்காக அனுமதிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுக்கு கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. "ஹயர் பர்சேஸ் ஸிஸ்டம்" மூலம் வாங்க வழியிருக்கிறது.

SRI K. RAMACHANDRAN : கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக தொழிலாளர்களுக்கு காலனிகள் ஏற்படுத்தியிருக்கிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப் பற்றி தனி கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

SRI P. S. ELLAPPAN : மதுராந்தகம் தாலுகாவில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏழை ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கென 725 ரூபாய் இனமாகக் கொடுக்கப்படுகிறது. அதற்கு ஏராளமான பேர்கள் மனு செய்திருக்கிறார்கள். மதுராந்தகத்தில் தோட்டனூர் என்ற ஊரில் 24 வீடுகள் கட்டியிருக்கிறார்கள். மேற்கொண்டு ஒன்றும் தெரியவில்லை. இந்த 25 வீட்டோடு நின்றுவிடுமா ? மேற்கொண்டு ஏதாவது வீடுகள் கட்ட திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தயவு செய்து இதைப்பற்றி சம்பந்தப்பட்ட இலாகா மந்திரியிடம் விண்ணப்பம் எழுதிக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். Sir, I want to correct a wrong impression. There is no hire purchase scheme in respect of this housing. As I said, there are other schemes where there will be hire purchase system.

*Abolition of District Boards*

* 52 Q.—SRI N. K. PALANISAMY AND SRI C. MUTHIAH PILLAI : Will the Hon tho Minister for Local Administration be pleased to state whether there is any proposal to abolish District Boards in the State ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : No, Sir.



3rd July 1957]

SRI K. VINAYAKAM : So far as the welfare of the country is concerned, the District Boards serve no useful purpose and many useful works are being undertaken in the villages under the community project and local development schemes. Under these circumstances, will the Government consider the question of abolishing the entire district boards and reviving the old taluk boards?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A Sub-committee is considering the usefulness or otherwise of the district boards. So the matter is under consideration.

SRI K. VINAYAKAM : Are the Government aware of the fact that the only work turned out by the district boards is just to transfer a teacher from one place to another place and no other useful work is done by them?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is not a question.

DEPUTY SPEAKER : It has nothing to do with the original question which relates to the abolition of district boards.

*Extension of life of District Boards*

* 53 Q.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri V. K. Ramaswamy Mudaliar) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to extend the life of the District Boards; and

(b) if so, the period of extension?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The matter is under the consideration of Government.

SRI A. R. SUBBIAH MUDALIAR : டிஸ்ட்ரிக்ட் போர்டை மாற்றியமைக்கும் வரையில் அவைகளை ஸ்பெஷல் ஆபீஸர்களிடம் விட முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I just said that it is under consideration.

SRI K. VINAYAKAM : The life of the present district boards expires by October of this year and the question whether elections have to be conducted or not has to be decided. So, will the Government come to a quick decision before any tangible results could be achieved?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : As I said the matter is under consideration.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ஜில்லா போர்டு கண்டிராக்டர்களுக்குப் பாத்தியமான லட்சக்கணக்கான ரூபாய் 'எர்னஸ்டு' பணம் திருப்பிக் கொடுக்கப்படாமல் இருப்பது சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

DEPUTY SPEAKER : That has nothing to do with the main question. I disallow it.

### *Retention of Second Language Test*

* 54 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR, SRI C. MUTHIAH PILLAI AND SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the decision taken by the Government in regard to the retention or otherwise of the Second Language Test for Government servants after 1st November 1956?

THE HON. SRI C. SUBRAMANIAM : No decision has yet been reached.

SRI A. R. SUBBIAH MUDALIAR : The Rules framed for the Madras Civil Service (Executive Branch) require that persons in the Revenue Subordinate Service should pass a second language test in one of the following languages, namely, Tamil, Telugu, Malayalam, Kannada, etc. Is it necessary to enforce these rules even after the reorganization of the States?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is the matter which is under the consideration of the Government now, Sir.

SRI A. R. SUBBIAH MUDALIAR : 47 வயதிற்குள் இந்த டெஸ்டில் தேருவிட்டால் அவர்களுடைய பிரமோஷன் பாதிக்கப்படுகிறது. 45 வயதிற்கு மேற்பட்ட சிப்பந்திகளுக்கு 'பீரியட் ஆப் சர்விஸ்'. குறைவாக இருப்பதால், அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த உபகேள்விக்கும் முதலில் கேட்ட மூல கேள்விக்கும் சம்பந்தமில்லை. இரண்டாவது மொழி டெஸ்டை வைத்துக்கொள்ளுவதா அல்லது எடுத்துவிடுவதா என்பது பற்றியது மூல கேள்வி. விதிவிலக்கு கொடுப்பது பற்றியது உப கேள்வி. இந்த இரண்டிற்கும் சம்பந்தமில்லை.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

### II.—ANNOUNCEMENT BY DEPUTY SPEAKER *RE* NOMINATION OF MEMBERS TO THE BOARD OF INDUSTRIES.

20 m. DEPUTY SPEAKER : I have to announce to the House that the following three Members have been duly nominated for election to the Board of Industries :—

1 Sri P. S. Chinnadurai.

2 .. C. Muthiah Pillai.

3 ,, N. S. Sundararajan.

As the number of candidates exceeds the number of vacancies to be filled, viz., two, a poll will be taken in the Lounge Room for Members to-day (3rd July 1957) between the hours of 11 a.m. and 1 p.m.

### III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957-58—*cont.*

11 a. DEPUTY SPEAKER : The general discussion on the Budget will continue now.

* SRI T. SAMPATH : Mr. Deputy Speaker, Sir, let me at the outset crave the indulgence of the House for speaking in English.



I support the Budget which has been presented to the House by the Hon. the Finance Minister. I should like to state that it is a balanced Budget of a Welfare State. Sir, it contains very good features. There are proposals calculated to improve the conditions of the common man. On the whole I should like to say that the Budget for 1957–58 is a good Budget. Sir, it is gratifying to note that especially when there is deficit of about Rs. 400 crores, there has been no proposal for fresh taxation, except for a slight increase in the percentage of sales tax and also a small percentage of increase in the agricultural income-tax on Plantations. Sir, some hon. Members of the Opposition criticised the Finance Minister for presenting a deficit Budget. As far as I could see, I wish to state that there is nothing wrong in deficit financing. Sir, I take up the Welfare Schemes. There is absolutely no doubt that as a result of the several welfare schemes, like the Community Project, the National Extension Service, etc., the villages have rapidly developed. It cannot be denied that our food production has increased; we have got good roads, good hospitals and more electricity and more irrigation facilities. With all that, there is one more question remaining, and it is whether the main objectives of these schemes have been achieved. As we all know, the objective behind this scheme is to improve the living conditions of the common man and also to give equality of opportunities for every man.

Sir, the society that is being envisaged is called the egalitarian society or the socialist pattern of society. Even though it may take some time for the creation of such an ideal society, yet a duty is cast upon the Government to create favourable conditions for establishing such a society. Sir, I would like to refer to the agricultural developments which have been referred to in the Budget speech of the Hon. the Finance Minister. Except for the rise in food production, I am of the view that the general economic condition and the financial outlook of our State is very much encouraging. In view of the deficit Budget, Sir, we have got to concentrate on stepping up food production. It is noteworthy that provision has been made for the opening of 360 seed farms, and the provision of Rs. 49 lakhs for starting 136 model Government Farms has to be welcomed. A sum of Rs. 55 lakhs has been set apart for irrigation facilities. In this connection, I wish to draw the attention of the Hon. the Finance Minister the state of the leading channels and other channels irrigating the fields in Tanjore district. Most of the channels are in a bad state of repair and are very highly silted. Due to lack of co-operation amongst the Mirasdars and the agriculturists, this state of affairs is continuing. Of course, there is the Kudimaramath Act, but that Act is almost defunct. Therefore, I should like to make the request to the Government that some scheme should be evolved to repair these leading channels and also other small channels for irrigating the fields by the P.W.D. itself. Arrangements can be made to recover the cost from the landholders at the time of the kist collection. If this is done, there will be more production of foodgrains.

[Sri T. Sampath] [3rd July 1957

Sir, I find that marketing societies in South Arcot and Coimbatore are functioning very well and efficiently. Sir, a doubt was felt as to whether these marketing societies will be successful in the case of paddy. Recently, the expert committee which was appointed by the Government came to Tanjore and recorded evidence. I may say that if these marketing societies are established for paddy also, they will work very successfully. I plead with the Government for the early establishment of marketing societies in Tanjore district.

In this connection, I wish to point out that under the National Extension Scheme and under the Five-Year Plan, Government must consider constructing small godowns for groups of villages for storing paddy and other foodgrains. It will facilitate the agriculturists to store their paddy and foodgrains and it will also enable them to get a good price for their produce without being affected by market fluctuations.

Next, I pass on to the question of food prices. It seems to me, if ceiling and floor prices are fixed for paddy and rice and also for other foodgrains, it will arrest the rise in prices of foodgrains. Furthermore, it will be an incentive for the producers to grow more food. I plead that the Government should come forward to fix these prices early.

I appreciate the allocation of seventy lakhs of rupees under 'chemical manures'. One hon. Member referred yesterday to loans which were advanced to agriculturists and said that they were not used at all. I entirely agree with him. Instead of advancing these loans in cash, if manures are issued to them in kind, it will be very helpful and the agriculturists will be in a position to use them.

A word about loans given for the purchase of bulls. I think Rs. 500 is advanced for the purchase of bulls. This is quite inadequate. In view of the prevailing high price of bulls, I suggest that this amount may be increased.

I need not point out, Sir, that for raising the economic level of the State, electrification schemes, particularly rural electrification schemes must go ahead. Otherwise, we cannot have more production.

Lastly, I would refer to medical aid. It is really gratifying that 18 lakhs of rupees have been set apart for rural medical aid. It is a welcome thing. It is stated also that eleven lakhs of rupees are set apart for improving taluk headquarters hospitals. While appreciating this allocation, I regret to point out that most of the taluk headquarters hospitals are not well equipped. In most of the hospitals, there are no facilities for oxygen treatment to patients in emergencies. Likewise, there is no provision for blood transfusion. There is no X-ray equipment. I request Government to consider all these and provide the necessary facilities.



3rd July 1957]

**Sri A. GOVINDASAMY** : உங்களுக்கு நேராக இருக்கும் கடிகாரத்திற்கும் பக்கங்களில் இருக்கும் கடிகாரத்திற்கும் ஐந்து நிமிஷங்கள் வித்தியாசம் இருக்கிறது. 9-30 a.m.

**DEPUTY SPEAKER** : நான் எனக்கு நேராக இருக்கும் கடிகாரத்தைத்தான் பார்க்கிறேன்.

**Sri K. S. SUBRAMANIA GOUNDER** : உதவி சபாநாயகர் அவர்களே, நான் நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வரவு செலவு திட்டத்தை வரவேற்கும் முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவு திட்டம் எல்லோராலும் போற்றப் படக்கூடிய ஒரு வரவு செலவு திட்டம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால் இந்த வரவு செலவுத் திட்டம் எல்லாம் நல்ல முறையிலே நடக்கக் கூடிய விதமாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட விரும்புகிறேன். வரியைப் பொறுத்தவரையில், இருக்கக்கூடிய பற்றுக்குறையைப் போக்க, சிறிதளவு போடப்பட்டிருக்கிறது. அதிகமான வரிகள் ஒன்றும் போடவில்லை. அதே சமயத்திலே பல சலுகைகள் காட்டப் பிட்டிருக்கின்றன. குறிப்பாக கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு செய்யப்பட்டிருக்கிறது. பல காலமாக கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று சர்க்கார் எண்ணியிருந்தும், அது இந்த ஆண்டிலே, அமுலுக்குக் கொண்டுவந்தது எல்லோராலும் வரவேற்கப்படக்கூடிய ஒரு விஷயம்.

அடுத்தபடியாக, விவசாயத்தைப் பொறுத்த வரையிலே, விதைப் பண்ணைகள் ஒவ்வொரு சிறிய ஊரிலும் வைக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதுவும் விவசாய முன்னேற்றத்திற்கான ஒரு அறிகுறி என்று சொன்னால் மிகையாகாது.

சர்க்கார் திட்டங்களிலே "லோகல் டெவலப்மெண்ட்" வேலையானது மிகவும் முக்கியமானதாக பொது மக்கள் எல்லா இடங்களிலும் வரவேற்கிறார்கள். இதுவும் அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இருந்த போதிலும் மத்திய சர்க்காரிலிருந்து பணம் அதிகமாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் அதிகப் பணம் ஒதுக்காதது பற்றி உண்மையிலேயே வருந்தவேண்டியிருக்கிறது. இப்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பொது மக்களிடையே ஒரு ஆர்வம் இருக்கிறது என்றால் அது லோகல் டெவலப்மெண்ட்தான் காரணம் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை திரும்ப நடத்தி அது கிராமாந்திரங்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டிலே இல்லாவிட்டாலும், வரக்கூடிய சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலோ அல்லது அடுத்த பட்ஜெட்டிலோ இது அவசியம் இடம்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வராவிட்டாலும் அந்தந்த காலத்திலே பணத்தை ஒதுக்கி லோகல் டெவலப்மெண்ட் வேலையை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சேலம் ஜில்லாவிலே எலெக்ட்ரிஸிடியைப் பொறுத்த வரையில் இன்னும் அது எஸ்.இ.டி. கம்பெனி நிர்வாகத்திலேதான் இருக்கிறது. அதன் பயனாக இன்று புதிதாக எலெக்ரிக்ட் கனெக்ஷன் கொடுப்பதில்லை. கொடுக்க வேண்டுமென்று கேட்டால், அதற்கு, அரசாங்கத்தாரைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் பணம் கொடுத்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே சொல்லி வருகிறார்கள். சீக்கிரமாக அரசாங்கமே இதை எடுத்துக்கொண்டு இந்த ஏரியாவிற்கு அதிகமாகப் பிரயாரிடி கொடுத்து விவசாயிகளுக்கு எலெக்ட்ரிக் கனெக்ஷன் கொடுக்க வேண்டிய வழி வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது சங்கரி டிஸ்டிரிக்ட் முன்ஸீப் கோர்ட் சேலத்திலேயே இருந்துவருகிறது. சாதாரணமாக மற்ற எந்த இடத்திலும், தாலூகாவுக்கான முன்ஸீப் கோர்ட் ஜில்லா தலைநகரத்திலே இருப்பது என்று இல்லை. ஆனால் சங்கரி முன்ஸீப் கோர்ட்டை சேலத்திலே வைத்திருப்பது இப்போது மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் சங்கரி

[Sri K. S. Subramania Gounder] [3rd July 1957

முன்ஸீப் கோர்ட்டை சங்கரியிலேயே வைக்கவேண்டும். இருக்கக் கூடிய கோர்ட்டை ஜில்லா கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று ஒரு திட்டம் இடப்பட்டு அதற்கான கட்டடமும் கட்டப்போவதாகத் தெரிகிறது. அங்கு கட்டுவதற்கு பதில் சங்கரியிலேயே கட்டிவிட்டால் அரசாங்கத்துக்கு செலவும் அதிகமாக இருக்காது. பொது மக்களுக்கும் ரொம்ப சௌகரியமாக இருக்கும். அதை சீக்கிரமாக அமுல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேட்டூர் ரிஸர்வாயரிலிருந்து ஒரு வாய்க்கால் வெட்டி, அதைத் திருமணிமுத்தாற்றிலே கொண்டு சேர்ப்பதற்கு ஒரு திட்டம் அரசாங்கத்தாரால் பரிசீலனை செய்யப்பட்டு, அது இப்பொழுது இன்ஜினீர்களிடம் இருக்கிறது. மேட்டூர்த் தேக்கத்தில் தண்ணீர் அதிகமாக இருக்கும் காலத்தில், அந்தத் தண்ணீர் வீணாக சமுத்திரத்திலே விழுகிறது. ஆகவே, அதைத் திருமணிமுத்தாற்றிலே திருப்பி விட்டால், பல ஏரிகள் நிரம்பி விடும். அதனாலே அரசாங்கத்துக்கு அதிகச் செலவும் இல்லை. இப்படிச் செய்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அபிவிருத்தி அடைவதற்குச் சௌகரியமாக இருக்கும், ஒரு வறண்ட பிரதேசத்தை நல்ல முறையில் செழிப்பாக ஆக்குவதற்கும் சௌகரியமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம் ஜில்லாவிலே, நாமக்கல் தாலூகாவிலே ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்கப்பட்டு, அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இன்னும் இருந்து வருகிறது. சேலம் ஜில்லாவிலே சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 40 டன்னுக்கு மேல் விளைச்சல் இருக்கிறது. மற்ற ஜில்லாக்களில் சுமார் 20 டன்தான் சராசரி விளைச்சல் இருக்கிறது. அதே சமயத்தில் sucrose content-ஐப் பார்த்தால், மற்ற இடங்களில் இருக்கிறதைப் போல் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. அந்த இடத்தில் மோகனூர், குமாரபாளையம் ராஜா வாய்க்காலில் 12 மாதமும் தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. சாதாரணமாக, கரும்பு நன்றாக விளையக்கூடிய, அதிகமாக பயிர் செய்யக்கூடிய இடம் ஏதாவது இருக்கிறதென்று சொன்னால், அந்த இடம் சேலம் ஜில்லாவிலுள்ள நாமக்கல் தாலூகாதான். அப்படியிருந்தும், சேலம் ஜில்லாவிலே சர்க்கரை ஆலை ஒன்றை கூட்டுறவு முறையில் அமைக்கவேண்டுமென்று கேட்டும், இன்னும் எந்த விதமான முடிவும் எடுக்கப்படாத நிலை இருந்து வருகிறது. சென்னை சர்க்கார் இது விஷயமாக மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதில் சென்னை சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுத்து, சீக்கிரமாக சேலம் ஜில்லாவில் ஒரு சர்க்கரை ஆலையை, கூட்டுறவு முறையில், அமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவில் 83 உயர்நிலைப் பள்ளிகளுக்குமேல் இருக்கின்றன. ஆனால், ஒரே கல்லூரி தான் இருக்கிறது. அதுவும் முனிசிபாலிடியார் நடத்தும் கல்லூரியாக இருக்கிறது. முனிசிபல் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து வரக்கூடிய பிள்ளைகளுக்கே அக்கல்லூரியில் இடம் போதாத நிலை இருக்கிறது. ஆகையால், சேலம் ஜில்லாவில் அரசாங்கமே ஒரு கல்லூரியை நிறுவுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது அரசாங்கமே புதிதாக கல்லூரி வைப்பதில்லை என்று திட்டம் இருந்தபோதிலும், சமீபத்தில் உதகமண்டலத்தில் அரசாங்கமே ஒரு கல்லூரியை வைத்திருக்கிறார்கள். அதே கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்து சேலத்திலும் ஒரு கல்லூரியைத் துவக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அவ்வாறு செய்யாவிட்டால், சேலத்திலுள்ள பிள்ளைகள் வெளி ஜில்லாக்களுக்குப் போகவேண்டிய நிலை நீடித்துக்கொண்டே இருக்கும். இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதைத்தவிர, 'அட்மிஷன்' விஷயத்திலும் அவர்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவாக அலைந்து, எந்த இடத்திலே காலி இருக்கிறதென்று தேடுவதற்கு மிகவும் கஷ்டமாக இருப்பதால், இது விஷயத்தில் அரசாங்கம் சீக்கிரம் ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.



3rd July 1957]

* **Sri M. JAGANNATHAN:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, 9-
இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் வரவேற்கத் தக்க திட்டமாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால், இந்தத் திட்டத்திலே நம்முடைய ராஜ்யத்தில் ஜீவாதாரமான பிரச்னைகளைப்பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. உதாரணமாக, நம்முடைய ராஜ்யத்திலே லட்சக் கணக்கான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னையைப்பற்றி இந்தத் திட்டத்திலே ஒன்றுமே காணப்படவில்லை.

அடுத்தபடியாக, நம்முடைய நாட்டில் நிலச் சீர்திருத்தம் மிகவும் முக்கியமாகக் கொண்டுவரப்பட வேண்டிய ஒரு அம்சம். அதைப்பற்றியும் இந்தத் திட்டத்திலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

அதோடு மாத்திரமல்லாமல், கிராம உத்தியோகஸ்தர்களுடைய கோரிக்கை பற்றியும், என்.ஜி.ஓ.க்களுடைய கோரிக்கைகளைப் பற்றியும் திருப்திகரமான அளவுக்கு இந்தத் திட்டத்திலே ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. ஆகவே இம்மாதிரியான, முக்கிய ஜீவாதாரமான பிரச்னைகளை இந்த வரவு செலவுத் திட்டம் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. அவைகளைத் திருப்திகரமான முறையில் தீர்த்து வைப்பதற்கு இந்தத் திட்டத்திலே ஒன்றுமே காணப்படவில்லை. ஆகவே தான், இந்தத் திட்டம் அவ்வளவு வரவேற்கத் தக்க திட்டமாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று நான் குறிப்பிட்டேன்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே 483 லட்ச ரூபாய் பற்றுக்குறையாக இருக்கிறதென்று நிதி அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்கு சர்க்கார் வேண்டுமானால் வரி விதித்திருக்கலாம். ஆனால் அப்படி வரி விதித்திருந்தால், நாட்டில் பெரும் கிளர்ச்சியும், பொதுமக்களிடத்திலே ஒரு பெரிய கொந்தளிப்பும் குழப்பமும் உண்டாகும் என்ற காரணத்தால் சர்வ ஜாக்கிரதையாக வரி விதிப்பிலிருந்து விலகிக் கொண்டார்கள். அதே சமயத்தில் அவர்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளையும் குறைத்துக் கொண்டார்கள், என்பதைக் கவனிக்கும்போது அது மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், ஒரு ராஜ்யத்தின் நிர்வாகத்தை நடத்தும்போது அந்த நிர்வாகத்தின் மூலமாக பொது மக்களுக்கு வேண்டிய நன்மைகளையும் சலுகைகளையும் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். அவர்கள் நல்ல பல திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதற்காக பணச் செலவு ஏற்படும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பணத்தைச் சரிக்கட்டுவதற்கு வரி விதிப்பு மூலமாகத் தான் முடியும் என்று நினைத்தால் அது தவறு. ஆனால், நம்முடைய மத்திய சர்க்காரானது சென்னை சர்க்காரைப் பொறுத்தவரையில் மாற்றாந்தாய் மனப்பான்மையைத்தான் கையாண்டு, நம்முடைய ராஜ்யத்திற்கு வேண்டிய அளவு அவர்கள் நிதி உதவி அளிப்பதில்லை, என்ற உண்மை நாம் எல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே, நம்முடைய முதல் அமைச்சரவர்களும், நிதி அமைச்சரவர்களும், தங்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கிற திறமையையும் செல்வாக்கையும் உபயோகப்படுத்தி, மத்திய அரசாங்கத்தினிடமிருந்து போதிய அளவுக்கு மான்யம் வாங்கி, இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஏற்பட்டிருக்கும் பற்றுக்குறையைப் பூர்த்தி செய்து மேலும் மக்களுக்கு நன்மை பயக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நம்முடைய ராஜ்யத்தில் இருக்கின்ற ஜீவாதாரமான பிரச்னைகளை ஒழுங்கான முறையில், திருப்திகரமான முறையில் தீர்த்து வைக்க அவர்கள் முன்வரவேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

உதாரணமாக, கனம் நிதி அமைச்சரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவிலே " மத்திய அரசாங்கம் இப்பொழுது வருமான வரி, உற்பத்தி வரி, இன்னும் ரயில்வே கட்டண விகிதத்தின் பேரில் விதிக்கப்பட்டிருக்கின்ற உபரி வரி, இவைகளின் மூலமாக பல கோடிக் கணக்கான ரூபாய்களை மத்திய அரசாங்கம் எதிர் பார்க்கிறார்கள். அந்த ரூபாயிலிருந்து சுமார் 15 கோடி ரூபாய் வரை ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்

படலாம். அப்படிக் கொடுக்கப்பட்டால், நம்முடைய ராஜ்யத்திற்கு ஏறக் குறைய 125 லட்சம் ரூபாய் பங்காக வரலாம் என்று எதிர்பார்க்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், கனம் நிதி அமைச்சரவர்களும் முதல் அமைச்சர் அவர்களும் மத்திய அரசாங்கத்தினிடத்திலே நல்ல முறை யில் வாதாடி, 125 லட்சம் ரூபாய் பங்காக எதிர்பார்ப்பதற்குப் பதிலாக 200 முதல் 300 லட்சம் ரூபாய் வரைக்கும் அவர்கள் வாங்கி, நம்முடைய ராஜ்யத்தின் திட்டங்களை நிறைவேற்ற முன்வரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, தேசீய நலப்பரப்புத் திட்டத்தை பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த தேசீய நலப்பரப்புத் திட்டம் எதிர்பார்த்த அளவுக்கு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் என்னவென்றால் இந்தத் திட்டத்தின் கீழ் வேலைகள் தொடங்குவதற்கு கிராம மக்கள் நான்கில் ஒருபாகம் பணம் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப்படுகிறார்கள். கிராமங்களில் வாழ்கின்ற பெரும் பாலான மக்கள் ஏழ்மை நிலையில் இருக்கின்ற காரணத்தால், கேட்கப் படும் நான்கில் ஒரு பங்கு தொகையை அவர்களால் கட்ட முடியவில்லை. இதன் காராணமாக கிராமங்களில் எந்தவிதமான வேலையும் எதிர் பார்க்கும் அளவிற்கு நடைபெறவில்லை. வறுமையின் காரணமாக மக்கள் அவர்கள் கொடுக்க வேண்டிய பாகத்தை கட்ட சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது ஒரு கிரேக்க நாட்டுக் கதை எனது ஞாபகத்திற்கு வருகிறது. **Tantalus** என்ற ஒருவனைச் சித்திரவதை செய்வதற்காக, 4, 5 நாட்கள் பட்டினி போட்டு, அதன் பிறகு அவன் கை கால்களைக் கட்டிவிட்டு, அவன் எதிரிலேயே நல்ல ருசிகரமான, விலை உயர்ந்த தின்பண்டங்கள், பட்சணங்கள் முதலியவைகளை வைத்தார்களாம். அவைகளை உண்ண சக்தியற்ற நிலையிலே **Tantalus** என்பவன் அவைகளைப் பார்த்துப் பார்த்து மனம்புழுங்கி சித்திரவதையில் சிக்கி இறந்தான் என்று கதை கூறுகிறது. அதைப் போலவேதான் தேசீய நலப்பரப்புத் திட்டம் இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். வறுமையால் பீடிக்கப் பட்ட கிராம மக்கள் நான்கில் ஒரு பாகம் பணம் கட்ட முடியாமல், டேண்டலஸ் என்பவன் எப்படி கை, கால்கள் கட்டப்பட்டிருந்தானோ, அதே மாதிரி வறுமை என்ற கயிற்றினால் கட்டப்பட்டிருக்கிறார்கள். ஒருபுறம் அவர் களிடம் கேட்கப்படும் பகுதியைக் கொடுக்க சக்தியற்றவர்களாக இருக்கி றார்கள். மற்றொருபுறம் அவர்கள் எதிரிலேயே இந்த தேசீய நலப் பரப்பு திட்டத்தின் கீழ் ஏற்படுகிற நன்மைகள் அவர்கள் கண் முன்பு காட்சி அளிக்கின் றன. உதாராணமாக, இந்தத் திட்டத்தின் கீழ் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம், ரோடுகள் போட்டுக் கொடுக்கிறோம், கிணறுகள் வெட்டிக் கொடுக்கிறோம், குளங்கள் வெட்டிக் கொடுக்கிறோம், தண்ணீர் டாங்குகள் **overhead tanks** கட்டிக் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இப்படியெல்லாம் கிராம மக்களுக்கு ஆசைவார்த்தைகள் சொல்லப் படுகின்றன. இந்த வசதிகளையும், நன்மைகளையும் கிராம மக்கள் பார்த்து வெட்கி, அந்த நன்மைகளையும் வசதிகளையும் அடையமுடியாமல் சக்தியற்ற நிலையிலிருக்கும்போது, உண்மையிலே எப்படி டேண்டலஸ் என்பவன் சித்திரவதை செய்யப்பட்டானோ அதே மாதிரித் தான் கிராம மக்களும் சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்று தான் சொல்லவேண்டி யிருக்கிறது.

(Deputy Speaker sounded the gong.)

**SRI M. JAGANNATHAN** : இன்னும் 5 நிமிடங்களாவது கொடுக்கும் படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER : The hon. Member has got five minutes more.**

**SRI M. JAGANNATHAN** : அடுத்தபடியாக, தேசீய நலப்பரப்பு, சமுதாய நலத்திட்டம் இவைகளின் கீழ் கிராம மக்களுக்குக் கடன் கொடுப்பதற்காக 1 கோடியே 38 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக



கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஆனால் இந்தக் கடன் உதவி 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஏழை விவசாயிக ளுக்குக் கிடைப்பதில்லை. பெரிய நிலப் பிரப்புக்களுக்கும் முதலாளி களுக்கும் தான் இந்தக் கடன் கொடுக்கப்பட்டுவருகிறது, சர்க்கார் உட னடியாக இதைக் கவனித்து, ஏழை விவசாயிகளுக்கும் கடன் கிடைப்ப தற்கு வழிவகைசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திண்டி வனம் தாலூக்காவில் என்.ஈ.எஸ். பிளாக்குகள் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டன. இதுவரை அந்தத் திட்டத்தின் கீழ் எந்தவிதமான நன்மைகளும் கிராமவாசிகளுக்குச் செய்யப்படவில்லை அங்கே இருக்கும் டெவலப்மெண்ட் ஆபீஸர் "3, 4, மாதங்கள் ஆகியும் கூட எங்களுக்குப் போதிய சிப்பந்திகள் கொடுக்கப்படவில்லை ; ஆபிசுக்கு வேண்டிய நாற்காலி, மேஜை முதலிய சாமான்கள், மற்றும் ஸ்டேஷனரி சாமான்கள் கொடுக்கப்படவில்லை, நாங்கள் எப்படி வேலையை ஆரம்பிப்பது" என்று கேட்கிறார்கள்.

**DEPUTY SPEAKER** : The hon. Member must finish his speech within the time allotted. There is no use of exceeding the time-limit. The hon. Member will resume his seat.

(The hon. Member resumed his seat.)

**SRI M. KANDASAMI PADAYACHI:** கனம் உதவி தலைவர் அவர்களே 9-56
நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவுத் கா.மு.
திட்டத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற சில வருஷங்களாக நல்ல மழை பெய்து, பல திட்டங்கள் வகுக்கப் பட்டு, அவைகளை நிறைவேற்றினதால், விலைவாசிகள் எல்லாம் கொஞ்சம் சௌகரியமாக இருந்தன. இப்பொழுது விலைவாசிகள் ஏறிக்கொண்டு போவதற்குக் காரணம் காலாகாலத்தில் சரியான மழை பெய்வதில்லை. கூலி ஆட்களின் தினசரிச் சம்பளம் கூட ஏறிக்கொண்டே போகிறது என் பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். 1956–57-ல் காலாகாலத்தில் மழை பெய்தால், விவசாயம் நல்ல நிலையில் இருந்தது. ஆனால் இப் பொழுது பெய்யும் மழையோ மிகவும் குறைவாக யிருக்கிறது. விவசாயத் தில் கிராம மக்களுக்கு ஊக்கம் ஏற்படும் வகையில் அரசாங்கத்தார் சில சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் குடி தண்ணீர் வசதியில்லாமல், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கிணறுகள், ஊற்றுகள், மேலும் **overhead** டாங்குகள் சரிவர இல்லை. உளுந்தூர்ப் பேட்டையைப் பொறுத்தவரையில் **overhead** டாங்கியில் தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். கிணறுகளிலும் தண்ணீர் கிடையாது. வறண்டு கிடக்கிறது. ஆகவே பல இடங்களில் ஆழமான கிணறுகளை வெட்டி, குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கத் திட்டங்கள் வகுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாய நலத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், நமது கிராமங்களில் நல்ல ரஸ்தாக்கள் போடவேண்டியது மிகவும் முக்கியம். இந்த ரஸ்தாக்களை ஹைவேஸ் இலாக்காவும், ஜில்லா போர்டும் சேர்ந்து போடவேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் பார்க்கும்பொழுது ஹைவேஸ் இலாக்கா வேலையை ஆரம்பித்தால், ஜில்லா போர்டு பணம் கொடுப்பதில்லை. ஹைவேஸ் இஞ்ஜினியர் அந்த வேலையைச் சரிவர நடத் தினாலும் கூட பணம் கொடுப்பதில்லை. அதனால் அந்த வேலைகள் எல்லாம் நிறுத்தப்பட்டு கிராம மக்கள் போக்கு வரத்து சாதனமின்றிக் கஷ்டப்படுகிறார்கள். சரியான ரஸ்தாக்கள் இருந்தால்தான் கிராமங்களுக்கு வரவேண்டிய பொருள்களும் நகரங்களுக்குப் போகவேண்டிய மற்ற தானிய வகைகளும் வந்து சேர முடியும். ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய கர்ப்ப ஸ்திரீகள் கூட ரோடு வசதியில்லாததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பிளானிங் போர்டில் கூட, பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் போய்ப் பார்த்து திட்டமிடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் தொகுதி மெம்பர்களைக் கலந்து ஆலோசிப்பதில்லை. கிராம மக்கள் கால்

[Sri M. Kandasami Padayachi] [3rd July 1957

வாசிப் பணம் கொடுத்து நடத்தப்படும் திட்டங்களில் கூட தொகுதி மெம்பர்களைக் கலந்து செய்தால் நல்லது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். கிராமங்களில் ரோடு போடுவதற்கு ஹைவேஸ் இலாக்காவுக்குப் பண உதவி செய்யவேண்டும். அல்லது 10 கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு பஞ்சாயத்து போர்டாக நியமித்து அதன் மூலம் பண உதவி செய்தால் திட்டங்கள் நல்ல முறையில் நடக்கும். மக்களுக்கும் அதனால் சௌகரியம் ஏற்படும். அதோடு கூட இந்த அரசாங்கத்தார் கிராமங்களில் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளிலுள்ள டாக்டர்களை மட்டும் அரசாங்கத்தில் அரசாங்கத்தார் எடுத்துக்கொள்கிறார்களே தவிர, அந்த ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துகள் அவ்வப்போது போய்ச் சேருவதில்லை. ஜில்லா போர்டில் கொஞ்சம் பணம் தான் கொடுக்கிறார்கள். ஜில்லா போர்டில் 3,000 ரூபாய்க்கு மருந்து ஸாங்ஷன் செய்து அனுப்பினால் 500 ரூபாய்க்குத் தான் மருந்து போய்ச்சேருகிறது. இதற்குக் காரணம் தெரியவில்லை. 500 ரூபாய் மருந்து தான் ஒரு வருஷத்திற்கு வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்தார் எப்போதும் முக்கியமான ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கொண்டுவந்தால் எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் அவ்வப்போது மருந்துகள் போய்ச்சேரும். ஒரு ஆஸ்பத்திரிக்கு வருஷத்திற்கு குறைந்தது ஆயிரம் ரூபாய்க்கு மருந்துகள் வேண்டும். எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு சேவை செய்யும் டாக்டர்கள்கூட நல்ல மருந்து இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இன்புளுயன்ஸா ஜுர காலத்தில்கூட மக்களுக்கு சரியான முறையில் சிகிச்சை செய்ய முடியவில்லை. ஜனங்கள் "தேர்தல் காலத்தில், நீர்ப்பாசன வசதி, ரோடு வசதி, ஆஸ்பத்திரி வசதி முதலிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்தீர்களே. இப்போது என்ன செய்கிறீர்கள். ஒரு வசதியும் செய்துகொடுக்கவில்லையே" என்று எங்களைக் கேட்கிறார்கள் என்பதை கனம் மந்திரிகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி விஷயமாகப் பேச விரும்புகிறேன். சுமார் 500 ஜனங்கள் கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் இருக்க வேண்டும். அந்தப் பள்ளிகூடங்கள் சரியாக நடத்தப்படுகின்றனவா என்று கண்காணிப்பவர்கள் இருக்கவேண்டும். ஜில்லா போர்டு பள்ளிகளைப்பற்றி பேசும்போது எதிர்கட்சிக்காரர்கள் 'ஜில்லா போர்டுப் பள்ளி உபாத்தியாயர்களை ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு ஜில்லா போர்டு தலைவர்கள் மாற்றுகிறார்கள். இதனால் உபாத்தியாயர்களுக்கு மிகுந்த கஷ்டங்கள் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அது உண்மைதான். 500 ஜனங்கள் கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ஆரம்பப் பள்ளி இருக்க வேண்டும் அதோடு கூட ஒவ்வொரு பிர்க்காவிற்கும் ஒரு உயர்நிலைப் பள்ளியாவது இருக்க வேண்டும். அப்போது தான் கிராமங்களில் படித்தவர்கள் பக்கத்திலுள்ள பிர்க்காவிலுள்ள உயர்நிலைப் பள்ளிகூடத்தில் படிக்க முடியும். அதோடுகூட ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கல்லூரியாவது இருக்கவேண்டும். அப்போதுதான் உயர்நிலைப் பள்ளிகளில் வாசித்தவர்கள் பக்கத்திலுள்ள கல்லூரிகளுக்குச்சென்று நன்றாகப் படித்தவர்களாக ஆக முடியும். மேலும் சென்னை போன்ற இடங்களிலேயே பெரிய பெரிய கல்லூரிகள் இருப்பதால் மந்திரிகளிடம் ஜனங்கள் வந்து மாணவர்களுக்குக் காலேஜில் அட்மிஷன் வாங்குவதற்கு அடிக்கடி தொந்திரவு செய்கிறார்கள். "பொதுத் தேர்தலில் உங்களைத் தேர்ந்தெடுத்த எங்களுக்கு காலேஜில் ஒரு இடம் வாங்கிக் கொடுக்கக்கூடாதா" என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு ஜில்லாவிலும் கல்லூரிகளை ஏற்படுத்தினால் எல்லோரும் படிக்கமுடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்ய வேண்டும். 1960-ம் வருஷத்திற்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்துக் கொடுப்பதற்குத் திட்டம் வகுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். எல்லா கிராமங்களிலும் மின்சார வசதி செய்தால் தண்ணீர் இறைப்பதற்கும், விளக்குகளுக்கும் தகுந்த வசதி ஏற்படும்; முக்கியமாக விவசாயத்தில் நீர்ப்பாசனத்திற்கு மிகவும் உபயோகப்படும். ஆகவே சீக்கிரம் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



3rd July 1957]

*SRI G. G. GURUMURTHI : கனம் தலைவர் அவர்களே, இந்த சபையில் கனம் நிதி அமைச்சர் அவகள் சமர்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். புதிய வரிகள் எதுவும் போடாமல் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மூலதனச் செலவுகளுக்கும் நிதி ஒதுக்கியிருப்பது திட்டத்தில் ஒரு சிறந்த அம்சமாகும். இருப்பினும், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கு இவ்வாண்டு ஒதுக்கியிருக்கும் தொகையானது மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தத் திட்டத்தால் ராஜ்யத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் கோவை ஜில்லாவிலுள்ளவர்கள் இந்தத் திட்டத்தால் நன்றாகப் பயனடைந்திருக்கிறார்கள். ஆகவே இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் குறைந்த தொகை ஒதுக்கியிருப்பதானது கோவை ஜில்லாவில் உள்ளவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கும். மந்திரி அவர்களுடைய அறிக்கையின் மூலம், மாநிலம் பூராவும் பல தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட விருப்பதால், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் தொகை குறைக்கப்படுவதாகத் தெரிகிறது. இருப்பினும், தேசிய அபிவிருத்தித் திட்டங்களை எல்லாப் பிரதேசங்களுக்கும் விஸ்தரிப்பதில் காலதாமதம் ஏற்படும். அவை நிறைவேற்றப்படும் வரையிலும் மக்களுக்கு நேரடியாக உள்ள கஷ்டங்கள் தீராமல் இருப்பதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய மற்ற திட்டங்களையோ பெரிய தொழிற்சாலைகளையோ கிராமங்களிலுள்ளவர்கள் அதிகமாக எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கு ரோடு வசதிகளும் பள்ளிக்கூட வசதிகளும், ஆஸ்பத்திரி வசதிகளும் தான் அத்தியாவசமாக இருக்கின்றன. இந்த வசதிகள் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களில் செய்யப்படுகின்றன. மக்களுக்கு அரசாங்கத்தார் செய்கின்ற உதவிகளும் நன்மைகளும் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் மக்களுக்கு உடனடியாகத் தெரிந்துவந்தன. மக்கள் உடனடியாகப் பயனடைந்து வந்தார்கள். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஸ்தல அபிவிருத்தி திட்டங்களை நீக்கியது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை தருகிறது. அந்தத் திட்டங்களை நடத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 10.04 a.m.

அரசாங்காத்தார் கொள்கைகளும் திட்டங்களும் வகுத்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைகளும், திட்டங்களும் மக்களுக்குப் பயன்அளிக்க முடியாத நிலைமையில் இருக்கின்றன. எந்த நோக்கத்துடன் திட்டங்களை வகுத்திருக்கிறார்களோ அந்த நோக்கம் ஈடேறுகிறதா என்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய வளர்ச்சிக்குப் பல திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பொறுக்கு விதைகள் அளிப்பது பற்றித் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேசமயத்தில் விவசாயிகளுக்கு உரத்திற்குக் கடன் கொடுப்பதைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். காலாகாலத்தில் அந்தக் கடன்கள் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. சென்ற ஆண்டில் கரும்பு, நெல் ஆகியவைகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய கடன்கள் பருவ காலத்தில் கொடுக்கப்படவில்லை. கரும்புக்கு டிசம்பர் அல்லது நவம்பர் மாதத்தில் கடன் கொடுத்தால் நல்லது. காலாகாலத்தில் கொடுக்கப்படாததால், கிராம மக்கள் உற்சாகமகாக் கடன் வாங்குவதில்லை; அப்படியே அவர்கள் கடன்கள் வாங்கினாலும், எந்த நோக்கத்துடன் கடன்கள் கொடுக்கப்படுகின்றனவோ அந்த நோக்கம் ஈடேறுவதில்லை.

மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்திலும், புதிதாகக் கால்வாய்கள் வெட்டும் மற்றப் பிரதேசங்களிலும் உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்குப் போடும் திட்டங்களின் நோக்கமும் ஈடேறுவதில்லை. உணவுப் பொருள் உற்பத்தி அதிகரிப்பிற்காக எந்த நோக்கத்துடன் ரெவின்யூ இலாக்காவில் விதிகள் வகுத்திருக்கிறார்களோ அந்த நோக்கம் நிறைவேறாமல் தடைப்படுகின்றன. மேட்டூர் வாய்க்காலில் $4\frac{1}{2}$ மாதங்களுக்குத்தான் தண்ணீர் விடப்படுகின்றது. அந்தப் பிரதேசத்தில் விவசாயிகள் உற்சாகத்துடன் வாய்க்காலில் தண்ணீர் விடப்படுவதற்கு முன்பே இறவைக் கிணறுகளின் மூலம் தண்ணீர் பாய்ச்சி முதலில் ஒரு போகம் சாகுபடி செய்துவிடுகிறார்கள்.

[Sri G. G. Gurumurthi] [3rd July 1957

வாய்க்காலில் தண்ணீர் விடப்பட்டவுடன் இரண்டாவது பயிர் செய்கிருர்கள். தண்ணீர் பத்து, பதினைந்து நாட்கள் பாய்கிறது. இரண்டாவது தடவை போட்ட பயிரை தண்ணீர் விடுவது நிறுத்தப்படும்போது அறுவடை செய்து விடுகிருர்கள். தண்ணீர் நிறுத்தப்படவிருக்கும்போது ஒரு குறுகிய காலப் பயிரைப் போடுகிருர்கள். தண்ணீர் பாய்ச்சப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டாலும் கொஞ்ச காலத்திற்குத் தண்ணீர் நிலங்களில் இருக்கும். அப்போது அந்தக் குறுகிய காலப் பயிர் விளைந்து மகசூல் அளிக்கிறது. இப்படி மூன்று தடவை அறுவடை செய்கிருர்கள். இதை மூன்று போகமாகச் கணக்கிட்டு அதிகாரிகள் தெண்டத் தீர்வை வசூலிக்கிருர்கள். உணவுப் பொருள் உற்பத்தி அதிகரிப்பதற்காக இப்படிப்பட்ட சாகுபடிகளுக்கு உற்சாகம் கொடுக்கவேண்டுமே தவிர, 4½ மாதங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிவிட்டு மூன்று போகம் பயிர் செய்திருக்கிருர்கள் என்று தெண்டத் தீர்வை வசூலிப்பது சரி அல்ல. இதனுல் உணவுபொருள் உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

இரண்டாவது, கரும்பு சாகுபடி விஷயத்தில் பயிர் கட்டுப்பாடு முறை மிகவும் பாதகமாக இருக்கிறது. மேட்டூர் வாய்க்கால் பிரதேசத்தில் கரும்பு சாகுபடி செய்யக்கூடாது என்று இதுவரையில் தடை இருக்கவில்லை இந்த ஆண்டு தடை வந்திருக்கிறது. இதைப்பற்றி ரெவின்யூ இலாகா அதிகாரிகளிடம் கேட்டால் இந்த ஆண்டில்தான் கட்டுப்பாடு வந்தது என்று அவர்கள் சொல்கிருர்கள். கரும்பு 3 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக விளைவிக்க வேண்டிய பயிர். போன ஆண்டு கரும்பு சாகுபடிக்கு தெண்டத் தீர்வை இல்லாமல் இருந்தது. ஆகவே போன ஆண்டில் கரும்பு பயிர் செய்தவர்கள் இந்த ஆண்டிலும் பயிர் செய்திருக்கிருர்கள். ஆனுல் இந்த ஆண்டில் தெண்டத் தீர்வை போட்டிருக்கிருர்கள். இந்த மாதிரி மூன்று ஆண்டு காலப் பயிர்களுக்கு தெண்டத் தீர்வை போடுவது மிகவும் அநீதியானது. ஆகவே உணவு பொருள் உற்பத்திப் பெருக்கத்திற்கு அனுகூலமான முறையில் ரெவின்யூ இலாகா விதிகளைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால் நாம் எந்த நோக்கத்தோடு விவசாயத் திட்டங்களை வகுக்கிருேமோ அந்த நோக்கம் நிறைவேருது. பயிர் கட்டுப்பாட்டை நீக்கினுலொழிய உணவுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை. இதுபோன்ற மற்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அநேகமாக நமது மாகாணத்தில் பூர்த்தியாகிவிட்டது. பாக்கியிருப்பது சிறு பாசன திட்டங்கள் தான். பழைய ஏரிகளை பழுது செய்வது, உடைப்புகள் ஏற்பட்டுள்ள கால்வாய்களை ரிபேர் செய்வது முதலிய திட்டங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். சென்ற இரண்டு ஆண்டுகளில் மழை அதிகமாக பெய்ததினுல், 7, 8 ஏரிகள் உடைபட்டன. அவற்றை உடனடியாக ரிபேர் செய்து அவற்றில் தண்ணீர் நிற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் நலமாக இருக்கும். இவ்வித வேலைகள் லாபகரமானவை அல்ல என்று நினைப்பதாக தெரிகிறது. ஆனுல் உண்மையிலேயே இவை லாபகரமாகயில்லாவிட்டாலும் உணவு உற்பத்தி பெருக்கிற்கு உபயோகமானவை. ஏரிகளில் நிறைய தண்ணீர் தேக்க வசதி செய்து கொடுத்தால் அதன் மூலம் சுற்றுப் புறங்களிலுள்ள கிணறுகளிலும் தண்ணீர் இருக்கும். ஏரிகளில் உள்ள மண் உரத்திற்கு பயன் உள்ளதாயிருக்கும். ஆகையால், சிறு மராமத்து வேலைகளை பழைய ஏரிகளை ரிபேர் செய்வது, புதிய ஏரிகளை வெட்டுவது—உடனடியாக மேற்கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புக்காக சர்க்கார் பல தொகைகள் ஒதுக்கியிருக்கிருர்கள். இப்பொழுது நிலங்களின் மண் வளம் மிகக் குறைவாகயிருக்கிறது. இதற்கு காரணம் அதிகமாக செயற்கை எருக்களை உபயோகப்படுத்துவதுதான். விவசாயிகளுக்கு தற்போது இயற்கை எரு கிடைப்பதில்லை. பொதி எருதுகளையும், ஆட்டுப்பண்ணைகளையும் வளர்த்தால் நலமாக இருக்கும். "சூபர் பாஸ்பேட்" முதலிய செயற்கை உரங்களை உபயோகிப்பதால் உடனடியாக நல்ல மகசூல் கிடைத்தபோதிலும் மண்ணின் தரம் வரவர குறைந்து போய்விடுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஆட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தி அவைகளுக்கு தகுந்த மேய்ச்சல் பிரதேசங்களையும் அமைத்துக்கொடுத்தால் மிகவும் பிரயோஜனமாகயிருக்கும்.



3rd July 1957] [Sri G. G. Gurumurthi]

அடுத்தபடியாக ஹரிஜனங்கள் நலம் பற்றி கவனிக்கும்போது, அவர்களுக்கு இந்த ஆண்டு பட்ஜெட் திட்டத்தில் மின்சார விளக்குகள், வீடுகள் முதலியன அமைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதே. ஆனுல் அவர்களுக்கு முதலில் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கவேண்டும். என்னுடைய தொகுதியில் பலருக்கு குடியிருக்க வசதி இல்லாமல் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, மின்சார விளக்குகள் அமைத்துக்கொடுப்பது பற்றி திட்டமிடுவது நலமாக இருக்காது. ஆகையினுல் உடனடியாக ஒரு " சர்வே " செய்து எந்த எந்த கிராமங்களில் ஹரிஜனங்கள் நல்ல குடியிருப்பு வசதி இல்லாமல் இருக்கின்றுர்கள் என்ற கணக்கெடுத்து அவர்களுக்கு தக்க குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது இருக்கும் " அக்விசிஷன் " (acquisition) முறையில் அவர்களுக்கு மனைக்கட்டுகள் கிடைக்க வேண்டுமானுல் இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகள் ஆகும். ஆகையால் இப்பொழுதுள்ள முறையை மாற்றி அவர்களுக்கு உடனடியாக மனைக்கட்டுகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

*SRI C. NATARAJA ODAYAR : கனம் உதவி சபாநாயகர்அவர் 10-1
களே, கனம் நிதி அமைச்சர்அவர்கள் கொண்டு வந்திருக்கும் வரவு செலவு a.m.
திட்டத்தைப்பற்றி பேசும்போது மக்கள் சார்பில் ஒரு சில குறைகளை எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிருேம். விவசாயம் சம்பந்தமாக அரசாங்கம் பல திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது. அதே நேரத்தில் பல பொருள்களுக்கும் வகை செய்திருப்பதை மறுக்க முடியாது. இப்பொருள்கள் சரியான வகையில் பயன்படுத்தப்படவேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது அரசாங்கம் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிறது. உரத்திற்காகவும், விதைகளுக்காவும் இக்கடன் கொடுக்கப்படுகிறது. இவைகளுக்காக விவசாயிகள் விண்ணப்பம் செய்து கொள்ளும்போது, விண்ணப்பத் தாள்கள் கொடுத்த ஒரு ஆண்டிற்கு பிறகே கடன் தொகை விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இம்மாதிரி பல குறைபாடுகள் விவசாய அலுவலகங்களில் இருந்து வருகிறது. இக்குறைகளையெல்லாம் சர்க்கார் நல்ல முறையிலே பரிசீலித்து கடன் தொகைகள் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்கும்படி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறனே.

அடுத்தபடியாக, விவசாயம் வளமுற நீர்ப்பாசன வசதி முக்கியமானது. பெரிய பெரிய திட்டங்கள் அதிகச் செலவில் மேற்கொள்ளும்பொழுது, அதனுல் ஜனங்களுக்கு பல ஆண்டுகளுக்குப் பிறகே பலன் ஏற்படுகிறது. இதை விட்டு பல சிறிய திட்டங்களை வகுத்து ஆங்காங்கே நிறைவேற்றிவைத்தால் மாபெரும் திட்டங்களினுல் பல ஆண்டுகளுக்கு பிறகு அடையும் நன்மையை விட உடனடியாக மக்களுக்கு அதிக பலன் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணம், சிறிய ஏரிகள் குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டால், விவசாயிகளுக்கு பயனுள்ளதாயிருக்கும். இப்படி செய்யாமல், பெரிய திட்டங்களையே பலகோடி ரூபாய் செலவில் மேற்கொண்டே போனுல் பல விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். எங்களுடைய கள்ளக்குறிச்சி தாலூக்காவில் பூலாங்குரிச்சி சமீபம் பல ஆண்டுகளுக்கு முன் வரையறுக்கப்பட்ட மாபெரும் திட்டத்தை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றி அதன் மூலம் விவசாயிகள் நன்மை அடைய செய்யவேண்டுமென மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் பல ஏக்ரா நிலங்களை விவசாயிகள் சாகுபடி செய்ய வசதி ஏற்படும். பல ஏரிகளையும் அதனைச் சேர்ந்த வாய்க்கால்களையும் ஏற்படுத்திக் கொடுத்தால் விவசாயிகளுக்கு வசதியாக இருக்கும்.

கள்ளக்குறிச்சி தாலுகாவில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாத இந்த நேரத்தில், அங்கு விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்து பயன் அடைவதற்கு, அங்கு சர்க்கரை தொழிற்சாலையை கூட்டுறவு முறையில் பாரி அண்டு கம்பெனி சார்பாக அமைக்க வேண்டுமென்று பல மனுக்கள் கொடுத்தும் இது வரை ஆவன செய்யவில்லை. அவ்விதம்

தொழிற்சாலை அமைத்துக்கொடுத்தால் அங்குள்ள விவசாயிகள் கரும்பை பயிர்செய்து நல்ல முறையில் அதை லாபகரமான தொழிலாக ஏற்படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக சின்ன சேலத்திலிருந்து செங்கல்பட்டு வரையில் ஒரு ரெயில் பாதை போடுவதற்கு சர்வே பல வருஷங்களாக நடந்துகொண்டு வருகிறது. ஐந்து ஆண்டுகள் ஆகியும் இது நல்ல முறையில் செய்யப்படவில்லை. ஆகையால் அரசாங்கம் இதை கவனித்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால் விவசாயிகளுக்கு மிகவும் உபகாரமாக இருக்கும். தொழில் அபிவிருத்திக்கும் இது மிக்க உதவியாயிருக்கும் சர்வே அதிகாரிகளை இதைப்பற்றி விசாரித்ததில் மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த வேலைக்கு பணம் எதிர் பார்ப்பதாகவும் அது கிடைக்கவில்லை என்றும் குறைகூறிக்கொண்டிருக்கிறார்கள். இதை உடனடியாகச் செய்து கொடுத்தால் மக்களின் முக்கியமான பிரச்னைகள் தீரும் என்று சொல்ல விரும்புகிறேன்.

கிராமாதிகாரிகளின் குறைகளைப்பற்றி எடுத்துக்கொள்வோம். அவர்கள் தான் இந்த பட்ஜெட்டை தயாரிப்பதற்கே முக்கியமானவர்கள் என்றுகூட சொல்லலாம். ஏன் என்றால் அவர்கள் மூலம் நாம் வசூலிக்கும் வரி பணத்தைக்கொண்டுதான் நமது சர்க்கார் காரியங்கள் நடைபெறுகின்றன. அப்படி இருக்கும்பொழுது அவ்வதிகாரிகள் வாழ்க்கை வசதியில்லாமல் அல்லல் படுகிறார்கள். அவர்களுக்கு கண்துடைப்பது போல ஏதோ கொஞ்சம் ரூபாய் அதிகமாக கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. நான் ஒரு கிராம அதிகாரியாக இருந்திருக்கிறேன். ஆகையால் அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் எனக்கு தெரியும். அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

10-20 a.m. கள்ளக்குறிச்சியில் உள்ள ஆஸ்பத்திரியில் போதுமான மருந்துகள் சப்ளை செய்யப்படாததால் மக்கள் பலவித இன்னல்களுக்கு உள்ளாயிருக்கிறார்கள். அதிகப்படியான மருந்துகள் கொடுத்து மக்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அவசியமானால் மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி பெற்றாவது இவ்வசதிகளை செய்து கொடுத்தால்தான் மக்களின் நோய்கள் தீர உதவியாய் இருக்கும். சில ஆஸ்பத்திரிகளில்—குறிப்பாக கள்ளக்குரிச்சி பிரஸவ ஆஸ்பத்திரியில் கூட—மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. இவ்வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். எங்கள் வட்டாரத்தில் தேசிய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் பல திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. அப்படியிருந்தும், ரோடு வசதி, மின்சார வசதி இல்லாமல் பல கிராமங்கள் இருக்கின்றன. இவ்வசதிகளை எல்லா கிராமங்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**SRI R. SWAMINATHA MERKONDAR:** ஆற்றல் படைத்த உதவி தலைவர் அவர்களே, இந்த சபையில் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த வரவு சிலவு திட்டத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இந்த திட்டம் மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் இருக்கிறது. ஏனென்றால் கீழ்தர சிப்பந்திகளுடைய குறையை ஏககாலத்தில் இதில் நீக்கி இந்த பட்ஜெட்டை தயாரித்திருப்பது அவர்களுடைய திறமையை நன்கு காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பிற்போக்கான பிரதேசங்களான இடங்களில் நல்ல திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. கட்டளை வாய்க்கால் போன்ற திட்டங்களுக்கு 156 லட்சம் ரூபாய் இதில் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். இத்திட்டம் எடுத்துக் கொண்ட காலத்தில் புதுக்கோட்டை சமஸ்தானம் சென்னை ராஜ்யத்தில் இணையாமல் இருந்தது. இப்பொழுது இத்திட்டம் தென் பகுதியில் வராமல் வடபகுதியில் மாத்திரம் சில இடங்களுக்கு பயன் பெறுவதாக இருக்கிறது. தென் பகுதியான தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டையிலுள்ள சில கிராமங்களுக்கு எல்லாம் இந்த பலன் கிடைக்காமல் இருக்கிறது. அதை இதுவரை மாற்றியிருப்பதாக தெரியவில்லை. ஆகவே இதை கவனித்து அரசாங்கம் ஆவன செய்யும் என்று நம்புகிறேன். ஏரிகள் சம்பந்தமாக நமது சர்க்கார் அநேக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களிலும் அதாவது பல காட்டாரம்ப





பிரதேசங்களிலும் இருக்கக்கூடிய ஏரிகளின் விஸ்தீர்ணம் மிக குறைவாகவும் இருக்கிறது. பாசன நஞ்சை நில விஸ்தீர்ணம் அதிகமாகவும் இருக்கிறது. ஏரிகளின் தொடர்வாயில் சர்க்கார் பொரம்போக்கு இருக்கிறபடியால், இவைகளை ஏரியுடன் சேர்த்து அவற்றின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தி, நீர்க்கொள்ளளவையும் கூடுதலாக செய்ய வகையிருக்கிறது. தற்காலத்தில் பலன் கிடைக்கிற சமயத்தில் அங்குள்ள நிலங்களுக்கு தண்ணீர் தட்டு ஏற்படுகிறது. இதனால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதையும் சர்க்கார் கவனிக்கும் என்று நம்புகிறேன். அடுத்தபடியாக மின்சார உற்பத்தி இன்று நாட்டில் பெருகிக்கொண்டிருக்கிறது. விவசாயத்திற்கு மின்சாரத்தை உபயோகிப்பதற்காக அநேக லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டுவருகிறது. இன்றுள்ள ஏற்பாட்டின்படி குதிரை வேக கணக்கில் விவசாயிகள் விவசாயத்திற்காக உபயோகிக்கும் மின்சாரத்திற்கு கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு குதிரை வேகத்திற்கு 65 ரூபாய் வீதத்தில் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மினிமம் 65 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. குறைந்தது விவசாயத்திற்கு 5 குதிரை வேகம் மின்சாரம் செலவுசெய்ய வேண்டியிருக்கிறது. இதனால் அதிகமான ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே குதிரை வேகம் என்றிருக்கிற கணக்கை மாற்றி யூனிட் ரேட்டில் விவசாயத்திற்கு பணம் கொடுப்பதற்காக வேண்டிய விதிகளை திருத்தினால் விவசாயிகளுக்கு அது நல்லதாக இருக்கும் விவசாயமும் விருத்தியடையும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக ஹரிஜன முன்னேற்றத்திற்காக அனேக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படுகிறது. சென்ற ஆண்டில் செலவு செய்யப்பட்ட முறையில் சில குறைகள் இருந்ததை சொல்ல விரும்புகிறேன். அதாவது சில பிற்போக்கான கிராமங்களில் கிராம அதிகாரிகளால் சரியான விதத்தில் பிரச்சாரம் செய்யப்படாததினால் அந்த கிராமத்திலுள்ள ஏழை உழவர்களுக்கு தக்க சமயத்தில் உழவு மாடு வாங்குவதற்கு பயன் படவில்லை. அதற்கென்று கொடுக்கப்பட்ட தொகை அந்த ஏழைகளிடம் சரியான சமயத்தில் உண்மையான ஏழையிடம் போய் சேரவில்லை. இதைப்பற்றி அதிகாரிகளிடம் சொன்னேன். நிதி கிடைக்க கொஞ்சம் காலதாமதம் ஆய்விட்டது என்று சொன்னார்கள். இனிமேலாவது அவ்விதம் நடக்காமல் சரியான சமயத்தில் இந்த பணம் ஏழை விவசாயிகளுக்கு கிடைக்கும்படி வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக அனேக லட்சக் கணக்கான ரூபாய்கள் ரோடு போடுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிற்போக்கு பகுதியிலுள்ள ரோடுகள் இப்போதும் பிற்போக்காகவே இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் செங்கிப்பட்டி, வல்லம் போன்ற பகுதிகளில் நல்ல ரோடு வசதியோ, குடிதண்ணீர் வசதியோ, பிரசவ ஆஸ்பத்திரியோ கிடையாது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே சர்வே செய்யப்பட்ட ரோடு இன்றுவரைக்கும் வெட்டப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்த காலதாமதத்தின் காரணம் அங்குள்ள ஜில்லா போர்டு தலைவர்களின் பாரபட்சமான போக்குதான் என்று தெரிகிறது. சர்க்கார் இதையும் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். அடுத்தப்படியாக தஞ்சை ஜில்லாவில் லட்சக் கணக்கான பனைமரங்கள் இருந்தும் நல்ல பலனை அடைய முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. அங்கு கோவாப்பரேட்டிவ் சொசைட்டி மூலமாக தொழிலாளர்கள் பலர் நன்மை பெற்று வருகிறார்கள். ஆனால் சிலர் பதனீர் காய்ச்சுவதாக சொல்லிக் கொண்டு, கள் உற்பத்தி செய்து விடுகிறார்கள். இதை மாற்ற வேண்டும். ஆதலால் மரச் சொந்தக்காரர்களையும் சொசைட்டியில் சேர்த்து தொழிலை நடத்தினால் மரச் சொந்தக்காரர்கள் தவறி நடக்காது பாதுகாப்பு அளிப்பதோடு பலனையும் மரச் சொந்தக்காரர்கள் அடைவார்கள்; தொழிலும் விருத்தியடையும். இந்த நிலைமை மாறினால் தான் குடிசை கைத்தொழில் நல்ல முறையில் வளர முடியும். அடுத்தப்படியாக நமது சர்க்கார் உணவு உற்பத்திக்காக அநேக லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்துவருகிறார்கள். ஆனால் உணவு உற்பத்திக்கு வேண்டிய அவசியமான உரங்கள் காலாகாலத்தில் கிடைக்கவேண்டிய வழிகளை செய்ய வேண்டும், அப்போதுதான் உணவு உற்பத்தி அதிகமாக்குவதற்கு வழி செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(The Deputy Speaker sounded the gong and the hon. Member resumed his seat.)

* **Sri S. B. ADITYAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களுடைய சொற்பொழிவு இந்த ஆண்டு, நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகான புத்தகமாக வழங்கப்பட்டிருக்கிறது. இது, கையால் செய்யப்படும் காகிதத்திலே அச்சிடப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கும்போது நான் உண்மையாகவே மகிழ்ச்சியடைகிறேன். இந்த காகிதம் யாரால் செய்யப்பட்டது என்பது பற்றி சொல்லப்படவில்லை. ஆனால் அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடக்கிற கைத்தொழிற்சாலையிலேயே இந்த காகிதம் உற்பத்தியாகி இருக்குமானால் அந்தக் கைத் தொழில் உண்மையாகவே திறம்பட நடக்கிறது என்பதற்கு இதை விட வேறு அத்தாட்சி தேவையில்லை. அதற்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதியமைச்சர் அவர்கள் அவர்களுடைய சொற்பொழிவை தமிழிலேயே நிகழ்த்தி இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. மிகவும் சிக்கலான கணக்குகளை, வரவு செலவு இனங்களை மிகவும் இலகுவான தமிழிலேயே விளக்கி இருக்கிறார்கள். அரசாங்கத்தின் மிகவும் முக்கியமான வேலை வரவு செலவு கணக்கைத் தயாரிப்பதாகும். அந்த வேலையையே தமிழிலேயே நிதி அமைச்சர் அவர்கள் செய்ய முடியுமானால் என் மற்ற ஆட்சி விவகாரங்களை எல்லாம் தமிழிலேயே உடனடியாக நடத்த முடியாது என்று கேட்கிறேன். நிதி அமைச்சரவர்கள் வரவு செலவு கணக்குகளை தமிழிலேயே எல்லோருக்கும் விளங்கும்படியாக இந்த உரையை ஆற்றியிருக்கும்போது அவர்களின் கீழ் வேலை செய்யும் அதிகாரிகளும் இலாக்காக்களும், என் இதேமாதிரி செயல் படக்கூடாதென்று கேட்கிறேன். ஆனால், இந்த உரையை வாசித்துப் பார்க்கும்போது சிற்சில இடங்களிலே தமிழிலே சில மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது, அதாவது அரசாங்க தமிழில். தமிழில் உபயோகப்படுத்தக் கூடிய வார்த்தைகள் மிகவும் லகுவாகவும் எல்லோருக்கும் புரியக்கூடியதுமாய் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் அரசாங்கம் தெளிவான கொள்கையை கையாள வேண்டும். உதாரணமாக 100 லட்சம் என்று சில இடத்திலும் கோடி என்று சில இடத்திலும் மாறி மாறி உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. 22-வது பக்கத்தில் ஒரே வாக்கியத்திலேயே, “அரசாங்க வர்த்தகத் திட்டங்களுக்காக 1 கோடியே 31 லட்ச ரூபாயும், மற்ற இடங்களில் 116 லட்ச ரூபாயும் செலவாகும்” என்று இருக்கிறது. இந்த சொற்பொழிவு முழுவதையும் பார்க்கும்போது ஒரு இடத்தில் கோடி என்றும் இன்னொரு இடத்தில் நூறு லட்சம் என்றும் மாறி மாறி வந்திருக்கிறது. ஒன்று நூறு லட்சம் என்று சொல்ல வேண்டும். இல்லையேல் கோடி என்று சொல்ல வேண்டும். கோடி என்று அதைச் சொல்லியிருக்கலாம். அடுத்த முறை வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும்போது இந்த மாதிரியான குழப்பங்கள் இல்லாமல் கோடி என்று ஒரே முகமாக எழுதும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்திலே நாம் பாராட்ட வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன என்பதில் சந்தேகம் கிடையாது. பால் பண்ணைக்காக சென்னையில் ஒன்றரை கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏழை மாணவர்களுக்கு பகல் உணவு கொடுப்பதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன முன்னேற்றத்திற்காக 1 கோடி 94 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராம ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் சிறந்த காரியங்கள் என்று நிச்சயம் சொல்லியாக வேண்டும். இது தவிர, புத்தகங்களுக்கு விற்பனை வரி பூராவும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதையும் நான் வரவேற்கிறேன். மந்திரியவர்கள் புத்தகத்தின் அத்தியாவசியத்தை நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து புலனாகிறது. கல்வி மந்திரியவர்கள் நிதி மந்திரியாகவும் இருப்பதினால் நமக்கு கைமேல் பலன் கிடைத்திருக்கிறது. அவர்களே உணவு





மந்திரியாகவும் இருந்திருந்தால் இந்த உணவு தான்யங்களுக்கு ஒரு நயாபைசா வீதம் வரி போட்டிருக்கிறார்களே அதைக் கூட ஒரு வேளை ரத்து செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இதைத் தவிர, இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு பற்றாக்குறைத் திட்டமென்பதை எல்லோரும் சுட்டிக் காட்டினார்கள். அதில் தவறு ஒன்றும் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்த பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து ஏதோ மான்யங்களை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக தெரிகிறது. 24-வது பக்கத்திலே மந்திரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள், “நாம் பெரும்பாலும் எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்ப வேண்டியிருக்கிறது” என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு பல இடங்களிலும் அதேபோல் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், மத்திய அரசாங்கத்தை இவ்வளவுதூரம் நம்பிக்கொண்டிருப்பதில் ஏமாற்றம் அடையக் கூடிய சூழ்நிலையே ஏற்படும் என்பதைச்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் புது வரிகளைப் போட்டிருக்கிறார்கள. சிமெண்ட்டின் மேல் வரி போட்டிருக்கிறார்கள். தீப்பெட்டி மேல் வரி போட்டிருக்கிறார்கள். இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரிகளின் மூலம் 90 கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும் நாம் நமது மாகாணத்திற்கு அதிகப்படியான பங்கீடு தொகை கிடைக்கும் என்று எண்ணினால் அது இலவு காத்த கிளியின் கதை போல்தான் ஆகும். காரணம் என்னவென்றால், மத்திய அரசாங்கத்திற்கு புதிதாக கிடைக்கும் வருமானத்திற்கு அவர்கள் ஏற்கனவே செலவிற்கு வழி செய்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் ராணுவத்திற்காக செலவு 202 கோடியாக இருந்ததை 252 கோடியாக ஆக்கியிருக்கிறார்கள். 50 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதே போல் “சிவில் அட்மினிஸ்ட்ரேஷனுக்காக” 133 கோடியாக இருந்ததை 191 கோடியாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆக, இதற்காக கூடுதல் 108 கோடி செலவிட வேண்டியிருக்கிறது. இப்படி இருக்கும்போது நமக்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து அதிகம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் நாம் ஏமாற்றமே அடைவோம்.

மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் மாகாண அரசாங்கங்களுக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் இருக்கிறது. சென்ற ஆண்டு திட்டமிட்டபொழுது மாகாண அரசாங்கங்களுக்கு 38 கோடி ரூபாய் கொடுப்பதாக திட்டம் இடப்பட்டிருந்தது. ஆனால் இந்த வருஷத்தில் 25 கோடி ரூபாய்தான் ராஜ்ய அரசாங்கங்களுக்கு கொடுக்க மத்திய அரசாங்கத்தின் திட்டமிருக்கிறது. ஆக நாம் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து கூடுதல் கிடைக்குமென்று நினைத்துக் கொண்டிருந்தால் நாம் ஏமாற்றமே அடைவோம்.

ஆகவே, நாம் இந்த பட்ஜெட்டை சரிக்கட்டுதவற்காக அதிகப்படியான சிக்கனத்தைத்தான் கையாண்டு ஆக வேண்டும். வரியையும் ஓரளவிற்கு போட்டிருக்க முடியும். இப்பொழுது உணவு தான்யங்களுக்கு உள்ள விகிதத்தைக் குறைத்து ஒரு சதவிகிதமாகவும் மற்றையப் பொருள்களுக்கு இரண்டு சதவிகிதமாகவும் ஆக்கியுள்ளார்கள் விற்பனை வரியை. நான் சொல்வது என்னவென்றால், எல்லா பொருள்களுக்கும் விற்பனை வரியை அதிகரித்து இருப்பதை விட மோட்டார் கார், ரேடியோ, போட்டோ சாமான்கள் போன்ற ஆடம்பர பொருள்களுக்கு மட்டும் ஒன்றிற்கு இரண்டாக விற்பனை வரியை அதிகரித்திருந்தால் அதில் அதிகக் குற்றம் இருந்திருக்காது. ஆனால் உப்பு, மிளகு, புளி போன்ற இனங்களின் மீது, ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடிய விதத்தில் இவ்வினங்களின் மீது விற்பனை வரியை அதிகரித்து விட்டு இதனால் பொது மக்கள், ஏழைமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொன்னால் அதை நம்ப முடியாது. ஆனால் உல்லாசப் பொருள்கள் மீது விற்பனை வரியை அதிகரித்திருந்தால் அதைப்பற்றி நாம் குற்றம் சொல்லியிருக்கமாட்டோம்.

[Sri S. B. Adityan] [3rd July 1957

இது ஒரு புறமிருக்க, சிக்கனத்தைக் கையாள வேண்டியதின் அவசியத்தை அரசாங்கம் தெரிந்துகொண்டிருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. ஏனென்றால், அரசாங்க நிர்வாக செலவில் சிக்கனம் செய்வதற்காக ஒரு அதிகாரியை சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். ஆனால் இதில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஏதோ ஒரு தனிப்பட்ட அதிகாரியை நியமித்து விட்டு அவர் ஏதோ சிக்கனம் செய்ய வழி சொல்வார்கள் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். அவருக்கு கொடுத்திருக்க கூடிய வேலை யென்னவென்றால், அதிகப்படியான அதிகாரிகள் அரசாங்க ஊழியர்களாக இருக்கிறார்களா, அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியுமா என்று பார்ப்பதாகும். அந்த் வேலையை ஒரு அதிகாரியே செய்ய வேண்டும் என்றால் அவர் செய்வாரா என்று யோசித்துப் பார்க்கவேண்டும். ஒரு அதிகாரியை நியமித்து, மற்ற அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் அவர் நல்ல பலன் கொடுக்கக்கூடிய யோசனையைச் சொல்வாரா ? ஆகையால் அரசாங்க நிர்வாகத்தில் சிக்கனம் செய்வதற்காக, அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, அவர்களது சம்பளத்தில் குறைவு ஏற்படுத்த முடியுமா என்று எல்லாம் பார்ப்பதற்காக உத்தியோகப்பற்று இல்லாத ஒரு கமிட்டியை நியமித்திருந்தால் அதிக பலன் கிடைத்திருக்கும் என்று நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உத்தியோகப்பற்று இல்லாதவர்களை அரசாங்கம் நியமிப்பதற்கு தயங்கவே வேண்டியதில்லை. மத்திய அரசாங்கம் சமீபத்தில் நியமித்த சில கமிட்டிகளை பார்த்தோமானால், அவைகளில் உத்தியோகப் பற்று அற்றவர்களை நியமித்திருக்கிறார்கள் என்பது நமது கவனத்தில் இருக்கவேண்டும். உதாரணமாக ரயில்வே நிர்வாகத்தில் லஞ்சம் இருக்கிறதா என்பதை கவனிப்பதற்காக கிருபாளனி அவர்களின் தலைமையில் மத்திய அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். விலைவாசி உயர்வை தடுக்க ஆலோசனை கூறுவதற்காக அசோக் மேதா தலைமையின் கீழ் ஒரு கமிட்டியையும் மத்திய சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். இம்மாதிரி கமிட்டிகளில் அதிகாரப் பற்று அற்றவர்களை நியமிப்பது வரவேற்கத்தக்கதாகும். காங்கிரஸ் மெம்பர்கள் எதிர்க்கட்சி மெம்பர்கள் எல்லோரையும் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து அரசாங்கம் சிக்கனத்திற்கு வழி கூறும்படிச் சொன்னால், மிகவும் திறம்பட கூறுவார்கள். மேலும், பொதுமக்களுக்கு அதனால் ஒரு நம்பிக்கை உண்டாகும். நீதி நடந்தால் மட்டும் போதாது. நீதி நடக்கிறது என்று மற்றவர்கள் நம்பக்கூடிய அளவுக்கு நீதி நடக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். நிதி மந்திரி அவர்களுக்கு இந்தப் பழமொழி நன்றாகத் தெரியும். சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் கொண்ட ஒரு கமிட்டி, சிக்கனத்திற்கு வழிமுறைகளை வகுத்தால், பொதுமக்கள் அரசாங்கத்திலே சிக்கனத்திற்காக புது பாதை திறக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்பக்கூடும்.

மேலும் இப்பொழுது நியமித்திருக்கக்கூடிய அதிகாரிக்கு கொடுத்திருக்கும் பணி, அதிகார வரம்பு, மிகவும் குறைவானது. எப்படி என்றால் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதா அதை குறைக்க முடியுமா என்று பரிசீலனை செய்யும் ஒரே வேலையை மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மட்டும் போதாதது. சிக்கனத்தை பலவிதமாகச் செய்ய முடியும். அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைப்பதின் மூலமாகச்செய்ய முடியும். செலவு இனங்களை சிக்கனம் செய்வதன் மூலமாகச் செய்ய முடியும். பெரிய அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைப்பதன் மூலமாகச் செய்ய முடியும். இப்படி பல விதத்தில் சிக்கனம் செய்ய முடியும். அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு மட்டும் என்று இப்போது ஒருவர் கொண்ட கமிட்டியை நியமிப்பதற்கு பதிலாக, இன்னும் அந்த கமிட்டிக்கு அதிகமான பேர்களை நியமிக்க வேண்டும் என்று நான் சொல்வதோடு, அவர்களுக்கு அதிகமான வேலையும் அதிகார வரம்பும் (wider terms of reference) கொடுக்கவேண்டுமென்று நான் ஆலோசனை சொல்லுகிறேன்.

**DEPUTY SPEAKER:** Hon. Member's time is up.



3rd July 1957]

**SRI S. B. ADITYAN:** ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். தொழிற்சாலைகளைப் பற்றி ஒரு வார்த்தை கூறி முடித்துக் கொள்ளுகிறேன். நமது சென்னை ராஜ்யத்துடன் மலபாரும் ஆந்திராவும் சேர்ந்து இருந்த பொழுது நமக்கு இரண்டு பெரிய தொழிற்சாலைகள் இருந்தன. கேரளா சோப்பு தொழிற்சாலையும் ஆந்திரா பேபர் மில்லும் இருந்தன. மலபார் பிரிந்துபோன பொழுது நாம் சோப்பு தொழிற்சாலையை இழந்தோம். ஆந்திரா பிரிந்துபோன பொழுது பேபர் தொழிற்சாலையை இழந்தோம். புதிய பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்க்கு சர்க்கார் முன் வர வேண்டும். நமது சர்க்கார் சோஷலிஸ சர்க்கார், என்றால் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நடுநிலைமை வகிப்பதாக சொன்னால் மட்டும் போதாது. பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முன் வர வேண்டும். கரும்புச் சக்கையிலிருந்து பேபர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். ஆந்திராவில் இது போன்று ஒரு தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறார்கள். கரும்பு ஆலை வைத்து நடத்துபவர்களிடம் கூடவே பேபர் தொழிற்சாலையும் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் தெரிவிக்கலாம். அல்லது பேபர் தொழிற்சாலைகளை அரசாங்கமே மேற்கொள்ளலாம்.

அதோடுகூட, நமது நாட்டிலே உப்பு ஏராளமாக உற்பத்தியாகிறது. சூரிய வெப்பத்தின் உதவியால் பணமில்லாமல் குறைந்த செலவில் தமிழ் நாட்டில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. உப்பை அடிப்படையாகக் கொண்டு காஸ்டிக் சோடா, வாஷிங் சோடா, பைகார்பனேட் முதலிய தொழிற்சாலைகளை ஆரப்பிப்பதின் மூலம் ஏராளமான பேர்களுக்கு வேலை கொடுக்கமுடியும். 1,000 பேர்களுக்கு நேரடியாகவும், 10,000 பேர்களுக்கு உப்புத் தொழிலின் மூலமும் வேலை கொடுக்க முடியும். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அரசாங்கமே முன் நின்று ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

***SRI T. R. RAMAMIRTHA THONDAMAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பு நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தை நான் பாராட்டுகிறேன். இந்த மாகாண உணவு உற்பத்தியைப் பற்றி அதில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாதான் உணவு உற்பத்தி அதிகமாக செய்யக் கூடிய ஜில்லாவாக இருக்கிறது. உணவு உற்பத்தி நிலைமையை பொறுத்துத்தான் சென்ற 1948, 1949 ஆண்டுகளில் எங்கு பார்த்தாலும் உணவு பற்றாக் குறை ஏற்பட்டு பல பட்டினிச் சாவுகளை சமாளிக்க வேண்டிய நிலைமை இருந்தது. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதின் காரணமாகத் தான் உணவு உற்பத்தி நிலைமையில் கணிசமாக முன்னேற்றம் ஏற்பட்டது. உணவு பற்றாக் குறை ஓரளவுக்கு நீங்கி இருக்கிறது. நிலத்தில் உழுபவனுக்கு உரிமை இருக்கிறது என்ற உணர்ச்சியின் காரணமாக உற்சாகம் ஏற்பட்டு அதிகப்படியான உணவு உற்பத்தி செய்ய வசதி ஏற்பட்டிருக்கிறது என்பது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது வந்திருக்கும் நியாய வார சட்டம் கூட பல பகுதிகளில் பயனளிக்க முடியாத நிலையில் இருக்கிறது. சென்ற கால சட்டத்திற்க்கும் இப்பொழுது இருக்கும் சட்டத்திற்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இந்த சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை சர்க்கார் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சாகுபடி செய்யும் நிலத்திற்கு எவ்வளவு 'ரெண்டு' கொடுக்க வேண்டுமென்பதைத்தான் அதிகாரிகள் நிர்ணயிப்பார்களே தவிர, நிலத்தை யார் உழுவது என்பதை விசாரிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என்று சொல்லி மனுக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன. இதன் காரணமாக குழப்பம் ஏற்படுகிறது. இந்த குழப்பத்தை நிவர்த்திக்கும் வகையில் ஒரு புதிய விதியையாவது இந்த சட்டத்தில் புகுத்தி சட்டத்தை திருத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 10-40 a.m.

உணவு உற்பத்தி விஷயமாக இப்பொழுது கொடுக்கப்படும் கடன் நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. இதன்

[Sri T. R. Ramamirtha Thondaman] [3rd July 1957

காரணமாக ரசாயன உரம் முதலியன வாங்குவதற்கு கொடுக்கப்படும் கடன்கள் எல்லாவற்றையும் நிலச்சுவான்தார்களே வாங்கிக் கொண்டு விடுவதால், சாகுபடியாளர்களுக்கு சரிவர கடன்கள் கிடைப்பதில்லை. அங்கு இருக்கும் நிலச்சுவான்தார்கள் அநேக பண்ணைகளை ஏற்படுத்தியிருப்பதின் காரணமாக சாகுபடியாளர்களுக்கு ஒருவித வசதியும் கிடைக்காமல் போய் விடுகிறது. அங்கு இருக்கும் வக்கீல்கள் நிலச்சுவான்தார்களாக இருப்பதால் அவர்கள் வாதங்கள் சாகுபடியாளர்களுக்குச் சாதகமாக இருப்பதில்லை. 1950–ல் இருந்த பண்ணைகளை விட இப்பொழுது ஏராளமான பண்ணைகள் ஏற்பட்டிருக்கின்றன. சாகுபடியாளர்களுக்கு இருந்த உரிமைகளெல்லாம் பறிக்கப்பட்டு அவர்கள் கூலி ஆட்களாக மாற்றப் பட்டிருக்கிறார்கள். இதை கவனித்து சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குடியிருப்பு மனைகள் எங்கு பார்த்தாலும் பிரிக்கப்படுகின்றன. விவசாயிகளின் வீடுகள் இன்று எத்தனையோ பிரிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சாகுபடியாளரின் உரிமையை வற்புறுத்தும்பொழுது அவர்களை வீட்டை விட்டு அப்புறப்படுத்தும் நிலைமை உண்டாகி இருக்கிறது. பூந்தோட்டம், சாத்தனூர் முதலிய இடங்களில் வீடுகளுக்கு முன்னால் வேலி அடைத்து அவர்களை வீடுகளை விட்டு வெளி வராமல் தடுத்திருக்கிறார்கள். போலீஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. முருக்கங்குடி கிராமத்தில் மதுரையிலிருந்து அடி ஆட்கள். கொண்டு வரப்பட்டு சாகுபடியாளர்களின் மாடு கன்றுகள் வெட்டப்பட்டு சிலர் 3 நாட்கள் ரிமாண்டிலிருந்து ஜாமீனில் வெளி வந்திருக்கிறார்கள். இது விஷயமாக தந்தியும் வந்திருக்கிறது. இந்த நிலைமைக்கு காரணம் என்ன? ஜில்லாவில் இருக்கக்கூடிய தேவஸ்தானங்கள், மடாதிபதிகள் இவர்கள் கையில் தான் ஆயிரக்கணக்கான ஏகர் நிலங்கள் இருக்கின்றன. அவர்களுக்காக இந்த நிலங்கள் உபயோகப்படுத்தப் படுகிறதே தவிர தருமத்திற்காக உபயோகப்படுவதில்லை. அவர்கள் தருமத்தில் ஈடுபடுவதில்லை. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை போன்ற ஆசைகளை ஒழித்து எதிலும் இச்சையில்லாமல் காஷாயம் தரித்து கலியாணம் செய்து கொள்ளாமல் பிரும்மசாரியாகவே நிர்வாகம் நடத்த வேண்டுமென்று அக்காலத்தில் மடங்களும், மடாதிபதிகளும், தேவஸ்தானங்களும் ஏற்பட்டன. ஆனால் அந்த மடங்கள், மடங்களின் ஏஜெண்டுகள், இடைக் குத்தகைக்காரர்கள் இவர்கள் செய்யும் அக்ரமம் கொஞ்சம் நஞ்சமல்ல. இதனால் சாகுபடியாளர்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, இந்த தேவஸ்தானங்கள், மடங்கள் இவைகளின் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய வருவாயை எடுத்து காலேஜ்கள், ஹை ஸ்கூல்கள் முதலியவைகள் ஏற்படுத்தும் நல்ல காரியங்களுக்கு பயன் படுத்திக் கொள்ளலாம். இதே நிலை நீடித்துக் கொண்டிருந்தால், அக்கிரமம் மேலும் மேலும் சகிக்க முடியாத நிலைமைக்கு அதிகரிக்கும். ஆகையால் இதை சர்க்கார் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

10–51 a.m. அடுத்தபடியாக இந்த வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பி. டபிள்யு. டி. அதாவது மராமத்து இலாகா படுகைகள் கொள்ளிடம் திருச்சியில் இருந்து ஆனிக்காரச் சத்திரம் வரை இருக்கும் கொள்ளிடக்கரைப் பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான ஏக்ரா தரிசுகள் இருக்கிறது. அதைக் கூட நிதி அமைச்சர் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கட்கும் நான் காண்பித்தேன். அந்த நிலங்களை 20 வருஷ குத்தகைக்கு நிலமற்ற விவசாயிகளுக்கு விட்டால் அதிக உணவு உற்பத்திக்கு வழி ஏற்படும். அதோடு கூட இப்போது இருக்கிற இந்த வேலையில்லா திண்டாட்டத்தையும் போக்க முடியும். ஆகவே இதை நமது அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அந்தக் கூலி ஆட்கள் கூலிகள் பிரச்சனை. அவர்கள் எங்கும் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குக் கூலி உயர்வும் கிடையாது. போதுமான வருவாயம் கிடை...



3rd July 1957] [Sri T. R. Ramamirtha Thondaman]

என்று நிர்ணயம் செய்து, இவ்வளவுதான் வேலை நேரம் என்று நிர்ணயித்து இந்த மாதிரி அந்த கூலிகளுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும். அதற்குள்ள மசோதா விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, சமுதாய நலத்திட்டங்கள், கிராம நலத் திட்டங்கள் எல்லாம் பஞ்சாயத்து போர்டு இருக்கும் இடங்களில் தான் நடக்கின்றன. பஞ்சாயத்து போர்டு இல்லாத இடங்களில் இந்த தேசீய விஸ்தரிப்பு திட்டம் வேலை செய்ய வில்லை காரணம் இத் திட்டங்களை ஏற்படுத்தினால் யார் பராமரிப்பது என்று புரியவில்லை. பஞ்சாயத்து போர்டு இல்லாத கிராமங்களுக்கு பஞ்சாயத்து போர்டுகளை உடனடியாக ஏற்படுத்தி சமுதாய நலத்திட்டங்கள் நடப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சர்க்காருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மது விலக்குத் திட்டம் பற்றி பல நணபர்கள் பேசினார்கள். மது விலக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதில் போலீசார் அக்கரையுள்ளவர்களாயில்லை என்று சொன்னார்கள். எல்லா போலீஸூம் அப்படி இல்லை. சில இடங்களில் நல்ல போலீஸூம் இருக்கிறது. மது விலக்குத் திட்டம் சம்பந்தமான போலீஸ் நிர்வாகம் பொது ஜனங்களோடு ஒத்துழைக்க வேண்டும். அதற்காக நிர்வாக அதிகாரிகள், ஜில்லா போர்டு மெம்பர்கள், சட்டசபை அங்கத்தினர்கள், பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட்கள், டெவலப்மெண்ட் தலைவர் கொண்ட ஒரு கமிட்டியை கட்சி வேறுபாடு இல்லாமல் பல அரசியல் கட்சி தலைவர்களையும் சேர்த்து, அமைத்து கிராமங்களில் என்னென்ன குறைகள் இருக்கின்றன, என்னென்ன தவறுகள் இருக்கின்றன, அவைகளையெல்லாம் எப்படி திருத்துவது என்பதை ஆலோசிக்க அந்தக் கமிட்டியை ஒவ்வொரு மாதத்திலும் கூட்டி ஆங்காங்கு நடந்த சம்பவங்களை பொது மக்களும் அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ளவும் அதில் இருந்து அதிகாரிகள் திருத்திக்கொள்ளவும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கக் கூடிய முறை இப்போது இருக்கிற நிலையில் நிலச்சுவான்தார்களுக்கு மட்டும் கிடைக்க கூடியதாக இருக்கிறது. விவாசாயிகளுக்கு கடன் கிடைக்க முடியாத நிலை காரணமாக, வசதி இல்லாத ஒரு விவசாயி 10 அல்லது 5 கண்டு முதல் செய்து கொண்டிருந்தது போக இப்போது 3 அல்லது 2 கண்டு முதல் செய்கிறான். கடன் கொடுப்பதற்குள்ள இன்றைய நிலையை மாற்றி கிராமக் கூட்டுறவு பாங்குகள் ஏற்படுத்தி சொந்த நிலமில்லாத எல்லா விவசாயிகளுக்கும் கடன் கொடுத்து அவர்களை கை தூக்கி இப்போது ஏற்பட்டிருக்கிற உணவுப் பஞ்சத்தை போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*SRI N. EKAMBARAJ MUDALIAR: தலைவர் அவர்களே, நிதி 1
அமைச்சர் அவர்கள் போட்டிருக்கிற பட்ஜெட்டை நான் வரவேற்கிறேன். அவர் சரியான முறையில் அதை நன்றாக ஒழுங்காக போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக, விவசாயத்தைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். நெல் விலை ஏறிவிட்டது என்று சொல்லுகிறோம். விவசாயம் செய்தவர்களுக்குத்தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும். இப்போது நெல் விலை அதிகமாக ஏறவில்லை. நெல் விலை கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஒரு கட்டுப்பாடு விதித்தால் உடனடியாக அதன் விலை ஏறிவிடும். இதை நன்றாக கவனிக்க வேண்டும். கட்டுப்பாடு விதித்தால் வெளியே நெல் கிடைக்காது. அது பிளாக் மார்க்கட்டிலே போய் விடும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக, ரேஷன் இருந்த காலத்திலே நெல் விலை கட்டுப்பாட்டில் தான் இருந்தது. அப்போது நெல்லை அதிக விலையிலேயே விற்று வந்தார்கள். கட்டுப்பாடு இருந்தால் தான்விலை அதிகமாக ஏறும். நெல் விலைக் கட்டுப்பாடு மட்டும் இருந்தால் போதாது. அதற்கு, விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள், சல்பேட் போன்றவைகளுக்கும் கட்டுப்பாடு விதிக்க வேண்டும். எவ்வளவோ கோவர

[Sri N. Ekambara Mudaliar] [3rd July 1957

பரேடிவ் சொஸைடிகள் வைத்து இருக்கிறார்கள். ஆனால் சரியான முறையில் கொடுப்பதில்லை. இதையெல்லாம் சர்க்கார் நன்றாக கவனிக்க வேண்டும். இப்போது நல்ல உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ய சல்பேட் கிடைப்பது கிடையாது. ஆகையால் அரசாங்கம் கவனித்து விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களை விவசாயிகளுக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

விவசாயத்திற்காக கிணறு வெட்ட 'லோன்' கொடுத்தார்கள். கிணறு ஒன்றுக்கு ரூபாய் 500 கொடுத்தார்கள். அந்தக் கிணறு அவர்கள் போட்ட தவணைப் பிரகாரம் வெட்ட வில்லை. இப்போது வெட்டி முடிந்து விட்டது. ஒரு வருஷத்திற்கு முன்பே வெட்டி முடிந்தது. இந்த பணம் ஸெண்ட்ரல் கவர்ன்மெண்ட் ரூபாய் என்று சொல்லுகிறார்கள். நம் சர்க்கார் ஸெண்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு சிபார்சு செய்து முழுகிவிட்ட துறவுகள் விஷயத்தில் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நம் கவர்ன்மெண்டில் எரு வாரகங்கள் கொடுத்திருக்கிறார்கள். அது நான்கு தவணையில் ஐந்து தவணை வசூல் செய்யவில்லை. இப்போது ஒரேயடியாக வசூல் செய்கிறார்கள். அப்படி செய்யாமல், கொஞ்சங் கொஞ்சமாக வசூல் செய்ய வேண்டும். இப்போது அதிகாரிகள் ஒரேயடியாக கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். எங்கள் ஜில்லா, செங்கல்பட்டு ஒரு ஏழை ஜில்லா. அங்கு இருப்பவர்களில் நூற்றுக்கு ஒருவர்தான் பணக்காரராயிருப்பார்கள். பாக்கிப் பேரெல்லாம் ஏழைகள். ஒரு போகம் பயிரிடப்படும்படியான நிலம் தான் செங்கல்பட்டில் இருக்கிறது. ஜீவ நதி ஒன்றும் அங்கே கிடையாது. நாங்கள் மேட்டுப் பூமியில் இருக்கிறோம். டிஸம்பர், ஜனவரி மாதத்திலே தான் அறுவடை. இந்த சமயத்திலே அதையெல்லாம் கொடுக்க வேண்டுமென்றால் ஏழைகள் ரொம்ப தொந்தரவுப்படுகிறார்கள். மகசூல் காலத்தில் வசூல் செய்து துரிதமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து உத்தரவிட வேண்டும். அங்குள்ள அதிகாரிகள் பணம் கொடுக்காவிட்டால் சாமான்களை எடுத்துப் போவோம் என்று அதிகாரம் பண்ணுகிறார்கள். ஆகவே, இதை மகசூல் காலத்தில் வசூலிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பூச்சி மருந்தை நமது கவர்ன்மெண்டார் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது, இரண்டு ஏக்கருக்கு உட்பட்டு நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அம் மருந்தை இலவசமாக கொடுத்தால் ரொம்ப நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இம் மருந்து விவசாயிகள் பயிர் செய்யும் காலத்தில் கிடைப்பதில்லை. மேலும் இது எப்பொழுதும் ஸ்டாக்கில் ரிஸர்வாக இருக்கும்படியாகப் பார்த்துக்கொண்டால்தான் விவசாயிகளுக்கு காலா காலத்தில் கிடைக்க ஏதுவாக இருக்கும்.

மின்சார சக்தி வழங்கும்போது ஒரு குதிரை வேகமுள்ள மோட்டார் வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கு ரூ. 50 கட்ட வேண்டும் என்று 'அக்ரிமெண்ட்' எழுதி வாங்கிக் கொள்ளுகிறார்கள். அப்படி வாங்கிக் கொண்டாலும் உடனடியாக மின்சாரம் சப்ளை செய்யப் படாமல் நான்கு மாதம் ஐந்து மாதம் கடந்து விடுகிறது. பயிரிடுவதற்கு தேவையான முக்கிய காலங்களில் மின்சார சப்ளையை நிறுத்தி விடுகிறார்கள். ஆனால் அப்போதே ரூபாய் கட்டி விட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதை உடனடியாக கவனித்து மின்சார வசதி காலா காலத்தில் செய்து கொடுத்தால் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். இன்னும் சில இடங்களில் கிடைக்காமல் இருக்கிறது. அங்கெல்லாம் உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தேசீய விஸ்தரிப்பு திட்டம் நல்ல முறையில் நடக்கிறது. அதிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. பிண்ணாக்குக்காக கடன், ஸல்பேட் உரத்திற்கு கடன் வேண்டும் என்று மனுப் போடுகிறார்கள். நான்கு, ஐந்து ஏக்கர் நிலச் சொந்தக்காரரும் மனு போடுகிறார்கள். அவர்கள் அப்படிப்பட்ட கடன் வேண்டுமென்று ஆசைப்பட்டு போடுகிறார்கள் ஆனால் காலத்தில் அக் கடன்கள் கிடைப்பதில்லை. அறுவடை சமயத்தில் கடன் கிடைப்பதால் நெல்லை அறுவடை செய்து விற்கும் போது பிண்ணாக்கையும் அதே



3rd July 1957] [Sri N. Ekambara Mudaliar]

சமயத்தில் விற்று விட்டு ரூபாயை எடுத்துக் கொண்டு போகிறார்கள். கடன் காலா காலத்தில் கொடுக்கப்பட்டிருந்தால் அதைக் கொண்டு பிண்ணாக்கு முதலியவைகள் வாங்கி பயிருக்கு உபயோகப் படுத்தியிருப்பார்கள். ஆனால் கடன் காலா காலத்தில் கொடுக்கப்படுவதில்லை. ஏன் இந்த நிலைமை இருக்க வேண்டும். பல, பல டிபார்ட்மெண்டுக்கு போக வேண்டியிருப்பதால் காலா காலத்தில் கொடுக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இவ்வேலை ஒரே டிபார்ட்மெண்டாரின் மேற் பார்வையில் இருந்து எந்தக் காலத்தில் கடன் வேண்டுமோ அந்தக் காலத்தில் கடன் கிடைக்கச் செய்தால் விவசாயம் முன்னேறும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாடு வாங்குவதற்கோ, வீடு கட்டிக் கொள்வதற்கோ கடன் தேவையென்றாலும் பல, பல டிபார்ட்மெண்டுக்குப் போய் கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் அதை உடனடியாக ஒரே டிபார்ட்மெண்ட் மூலம் நிர்வகிக்க கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

ரோடு போடுவது, பள்ளிக்கூடங்கள் அமைப்பது போன்றவைகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருந்தும் தேவையான ரூபாய் கிடைப்பதில்லை. காரணம் என்னவென்று கேட்டால், "நாங்கள் கொடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை; எ. ஈ. வந்தால்தான் முடியும்; அவர் இன்னும் வரவில்லை" என்று சொல்லப்படுகிறது. தேசிய வளர்ச்சித் திட்டத்தை சரிவர பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. பல டிபார்ட்மெண்டார்கள் வந்து காரியத்தைச் செய்ய வேண்டியிருப்பதால், சரிவர வேலை முடிவு பெறாமலிருக்கிறது. இப்பொழுது போட்டிருக்கிற ரோடுக்கும், கட்டியிருக்கிற பள்ளிக்கூடத்திற்கும் இன்னும் காலணா கூட கிடைக்க வில்லை. அதை உடனடியாக விசாரித்து, உடனே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI M. D. RAMASWAMI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே . . . . .

**SRI V. K. KOTHANDARAMAN**: On a point of information Sir,, 11 மணிக்குத் தேர்தல் என்று சொல்லப்பட்டது. ஆனால், இப்பொழுது மணி 11க்கு மேல் ஆகிறது. தேர்தல் விஷயம் என்னவென்று தெரியவில்லை. 11-03 a.m.

**DEPUTY SPEAKER**: தேர்தல் இங்கு கிடையாது. அது அங்கத்தினர்கள் களைப்பாரும் அறையில் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் அங்கு போய் ஒவ்வொருவராக வோட்டு அளித்து விட்டு வந்துகொண்டே இருக்கலாம். சபை நடந்து கொண்டே இருக்கும்.

**SRI M. D. RAMASWAMI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட்டைப் பற்றி மெம்பர்கள் சிரத்தையோடு பேசினார்கள். பொதுவாக, இந்த பட்ஜெட்டைப் பற்றி திருப்திகரமான நல்ல அபிப்பிராயம் சொல்ல இடம் இல்லாவிட்டாலும், குறைகள் சொல்ல பல இருக்கின்றன. இராமநாதபுரம் ஜில்லா பிரதிநிதி என்ற முறையில் ஒரு சிலவற்றை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அந்த ஜில்லா இதுவரையில் ஒரு ஜில்லாவாக நல்ல முறையில் திகழ்ந்தது கிடையாது. ஏனென்றால், அந்த ஜில்லாவின் தலைநகர் இராமனாதபுரம் ஜில்லாவில் இல்லை. இராமனாதபுரம் ஜில்லாவின் தலைநகர் மதுரையில் இருக்கிறது. இந்த ஜில்லாவினுடைய கலெக்டர் முதலிய ஜில்லா தலைமை அதிகாரிகள் மதுரையில் இருக்கிறார்கள். ஆகையால் இராமனாதபுரம் ஜில்லாவினுடைய உண்மைக் குடிகள், பெரும்பாலான மக்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய குறைகளையோ, அல்லது அவர்களுக்கு என்ன காரியங்கள் நடக்கவேண்டுமென்பதையோ நேரடியாக தகுந்த முறையில் தலைமை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். ஏனென்றால், இராமனாதபுரம் ஜில்லாவில் தலைநகர் அந்த ஜில்லாவுக்குள் இல்லை. அந்த

ஜில்லாவில் நிரந்தரமாகக் குடியிருக்கும் மக்களுக்குத் தேவையான வசதி செய்ய இதுவரை எந்த முறையிலும் முயற்சி எடுக்கப்படவில்லை. இதற்காக தலைநகரை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நாங்கள் அதற்காகச் செய்த முயற்சிகள் யாவும் பலனில்லாமல் போய் விட்டன. தலைநகர் அந்த ஜில்லாவிலேயே இல்லாத காரணத்தால், இராமனுதபுரம் ஜில்லா மக்களுக்குப் பெரும் குறையும் கஷ்டங்களும் இருந்து வருகின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே இராமனுதபுரம் ஜில்லாத் தலைநகர் அந்த ஜில்லாவுக்குள் பொருத்தமான நகரத்தில் மாற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இராமனுதபுரம் ஜில்லாவில் சில பெரிய ஜமீன்தார்கள் இருந்தார்கள். அவர்கள் மேல் அதிகாரம் செலுத்துவதற்காக அக்காலத்தில், வெள்ளை அதிகாரி ஒருவர் இருக்கவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே இருந்திருக்கிறதே தவிர, அந்த ஜில்லாவிலுள்ள குடிகளுடைய குறைகளைக் கவனிக்க கூடிய முறையில் தலைநகர் அமைக்கப்படாமலிருந்தது. ஆனால், இன்னும் தலைநகர் விஷயம் அப்படியே இருக்கிறது. அதனால், மக்களுடைய குறைகளை அதிகாரிகள் தெரிந்துகொள்வதற்கோ அல்லது மக்கள் அதிகாரிகளிடம் நேரில் தெரிவித்துக்கொள்வதற்கோ இயலாமலிருக்கிறது. ஆகவே இந்த விஷயம் உடனடியாக கவனிக்கப்படவேண்டும்.

இராமனுதபுரம் ஜில்லா பொதுவாக இந்த மாகாணத்திலேயே பிற்பட்ட ஜில்லா. அது மட்டுமல்ல. இராமனுதபுரம் ஜில்லாவில் இராமனுதபுரம், சிவகங்கை ஜமீன்தாரி பகுதிகள். மிகவும் பிற்பட்டவை என்பதற்காக நம் சர்க்கார் வந்த பிற்பாடு 1946ம் வருஷத்தில் ஒரு ஸ்பெஷல் அதிகாரி நியமிக்கப்பட்டு, அவரும் அங்குள்ள மக்களுடைய குறைகளைப்பற்றியும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் குறித்து ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்து பத்து வருஷங்கள் ஆகின்றன. ஆனால் அந்த ரிப்போர்டின் பேரிலே இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஜமீன் பிராந்தியமாக இருந்த காரணத்தால் அந்தப் பிராந்தியத்தில் எவ்விதமான நல்ல காரியமும் இதுவரை செய்யப்படவில்லை. ரோடு வசதிகள் இல்லை. பள்ளிக்கூடங்களோ, ஆஸ்பத்திரிகளோ இல்லை. அதைப்பற்றி கவலை கொண்டு எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. அதைக் குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமீபத்தில் ஜனங்களுடைய வசதிக்காகச் செய்யப்பட்ட பல காரியங்களிலே அந்த ஜில்லாவிற்கு உரிய நியாயமான பங்கு கிடைக்கவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உண்மையிலேயே இந்த மாகாணத்திலே சமூகநலத் திட்டங்களும், தேசீய வளர்ச்சித் திட்டங்களும் எங்கு முதன் முதலில் ஏற்பட வேண்டுமென்று சொன்னால், இராமனுதபுரம் ஜில்லா ஜமீன் பகுதிகளில் தான் என்று யாரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், இது வரை அங்கு இம்மாதிரியான திட்டங்கள் கொண்டு வரப்படவில்லை. ஏன் அந்தப்பகுதியிலே கொண்டுவரப்பட வில்லை என்றால், அந்தப் பகுதியிலே பெரும்பாலான மக்கள் காங்கிரஸ் சர்க்காரை ஆதரிக்கவில்லை. ஆகையால்தான் கொண்டு வரப்பட வில்லை என்று. சொல்லிக் கொள்ளுகிறார்கள். நடைமுறையும் அப்படித்தான் இருப்பதால், இந்த நிலை சர்க்காரில் நிலவுகிறது என்று ஜனங்கள் நம்புகிறார்கள். கடந்த ஆண்டு அதிர்ஷ்ட வசமாக வந்த புயல் காரணமாக அந்தப் பிரதேசத்தில் ஒரு சமூகநலத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான சமூகநலத் திட்டங்கள் ஏற்பட வேண்டுமானால், இன்னும் அதுமாதிரி புயல்கள் ஏற்பட வேண்டுமோ என்று நினைக்க வேண்டிய நிலைமையில் நாங்கள் இருக்கிறோம். அப்படிப்பட்ட புயல் அங்கு வந்திருக்காவிட்டால், இந்தத் திட்டம்கூட அந்த ஜில்லாவில் ஏற்பட்டிராது என்று நான் சொல்லுகிறேன். இதைக் குறிப்பாக சர்க்கார் கவனிக்க வேண்டும். அடுத்து வரப்போகும் சமூகநலத் திட்டங்களாவது அந்தப் பிராந்தியத்தில் முக்கியமாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.





பட்ஜெட்டிலிருந்து பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. இருந்தாலும் எல்லாவிதமான மக்களுக்கும் திருப்தி தரக் கூடிய முறையில் மேற்படி ரூபாய்கள் செலவு செய்யப்படவில்லை. கல்விச் சாலைகள் பல ஏற்பட்டிருக்கின்றன என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். அக் கல்விச்சாலைகள் நியாயமான முறையில் எந்த, எந்தப் பிராந்தியங்களிலே ஏற்பட வேண்டுமென்பதை ஆராய்ந்து, தேவையை முன்னிட்டு, நியாயமான முறையில், நேர்மையாக ஆரம்பிக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. சர்க்காருக்கு வேண்டியவர்கள், முக்கியமாக செல்வாக்கு உடையவர்கள் எங்கு இருக்கிறார்களோ, அந்தப் பிராந்தியங்களில் தான் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. இருபது அல்லது 30 வீடுகள் கொண்ட சிறிய கிராமமாக இருந்தாலும் கூட, ஆளும் சார்க்காருக்கு வேண்டியவர்கள் அந்தக் கிராமத்தில் இருந்தால், தேவையில்லாத முறையில், அங்கு ஒரு பெரிய உயர் நிலைப்பள்ளி, ஆஸ்பத்திரி, டிரெயினிங் ஸ்கூல் ஏற்படுத்தி வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். அதற்கு மாறாக பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருக்கக்கூடிய இடத்திலே, அந்தக் கிராமம் மெயின் ரோடுக்குப் பக்கத்திலிருந்தாலும் கூட, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது இல்லை. இருக்கிற பள்ளிக்கூடங்களையும் அகற்றிவிடுகிறார்கள். இந்த மாதிரி உதாரணங்கள் நூற்றுக்கணக்கில் சொல்லலாம். இப்பொழுது இருக்கும் சார்க்காரில் செல்வாக்குள்ளவர்கள் கிராமங்களுக்குத்தான் எல்லாவித வசதிகளும் செய்யப்படுகின்றன. பத்தாயிரம், 20,000 ஜனத் தொகை கொண்ட பெரிய கிராமங்களில் ஒரு உயர்நிலைப் பள்ளி கூட ஏற்படுத்தவில்லை. இவ்வாறு அரசாங்கத்தால் செய்யப்படும் பல சலுகைகள் நியாயமாகச் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்குப் போய்ச் சேராமல், ஆளும் கட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களின் பிராந்தியங்களுக்குப் போய்ச் சேருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்தில் போலீஸ் படை இருக்கிறது. பல நல்ல காரியங்களை அது செய்தாலும் கூட, சர்க்கார் கட்சிக்கு அனுகூலம் இல்லாத பிராந்தியங்களில், ஆளும் கட்சிக்கு ஓட்டுப் போடுவதற்காக, "நீங்கள் பயப்படவேண்டாம், எங்கள் போலீஸ் படை பாதுகாப்பு அளிப்பதற்கு இருக்கிறது" என்ற முறையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகிறது.

**The Hon. Sri P. KAKKAN**: நீங்கள் கொன்றுவிடுவேன், குத்திவிடுவேன் என்று சொல்லுவது மட்டும் நியாயமா?

**Sri M. D. RAMASWAMI**: பாதுகாப்பு அளிப்பதற்கு நமது நாட்டிலே கோர்ட்டுகள், போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அவைகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம். போலீஸ் படை துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேரம் குறைவாக இருப்பதனால், ஒரு முக்கியமான விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில் பட்ஜெட்டில் விசேஷமான குறிப்புகள் ஒன்றும் இல்லை. செஸ் நிதியிலிருந்து கைத்தறி நெசவுத் தொழிலுக்காக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர, வேறு எந்த விதமான குறிப்பும் இல்லை. கோவாப்ரேட்டிவ் சொசைட்டிகளைச் சேர்ந்த தறிகளுக்கு மட்டும்தான் இந்த நிதியிலிருந்து உதவி கொடுக்கப்படுகிறது. நூற்றுக்கு 25 பேர் தான் கூட்டுறவு சொசைட்டிகளில் சேர்ந்து இருக்கிறார்கள். மீதி 75 பேர் வெளியே கைத்தறித் தொழில் செய்கிறார்கள். அவர்களிடமிருந்து துணிகளை ஜவுளி வியாபாரிகள் வாங்கி விற்கிறார்கள். இவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை. ஏன் என்று கேட்டால் அவர்கள் தவறாக நடந்து கொள்ளுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். தவறுகள் எங்கும் தான் இருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களில் கூட அம்மாதிரித் தவறுகள் ஏற்படலாம். தவறை நிவர்த்தி செய்வதுதான் முறை. நூற்றுக்கு 75 சத விகிதம் வெளியே இருக்கக்கூடிய எல்லா நெசவாளர்களுக்கும் இந்த செஸ் நிதியிலிருந்து உதவி கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர் சொசைட்டிளிலும்கூட நிர்வாக முறையிலே பல சங்கடங்கள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஸென்ட்ரல் பாங்கியிலிருந்து பண உதவி கொடுக்கிறார்கள். ஆனால் 100-க்கு 4½ வட்டி கேட்கிறார்கள். அங்கே போய் பணத்தை வாங்குவதற்கு செலவு அதிகமாகிறது. அது சாமான்ய காரியம் அல்ல. 50 அல்லது 60 ரூபாய் செலவழித்துத்தான் பாங்கியிலிருந்து பணம் வாங்கக் கூடிய நிலையில் இருக்கிறோம். பரிசீலனை செய்யக்கூடிய அதிகாரிகளின் உபத்திரவங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அவர்களுக்குச் சீக்கிரம் சலுகை ஏற்படும்படியான முறையிலே, கணக்குகளைச் சுருக்கமாக வைத்து அவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை நீக்குவதற்கு உள்ளூரிலேயே கிளை பாங்குகள் ஏற்படுத்தியோ அல்லது சர்க்கார் அதிகாரிகள் மூலமாக கஜானாவில் பணம் வாங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

11-15 a.m. **SRI C. R. RAMASWAMI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் ஆறுவது தடவையாக இந்த சபையின் முன்னர் நமது மாகாண வரவுசெலவுக் கணக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் அப்பொழுது பெரிய மாகாணமாக யிருந்த சென்னை ராஜ்யத்தில் ஆந்திரம், கேரளம், தமிழ் நாடு ஆகிய பகுதிகளும் இருந்தன. அப்பொழுது வருமானம் ரூபாய் 58 கோடியாக இருந்தது. இப்பொழுது நமது ராஜ்யம் சுருங்கியிருந்த போதிலும் ஏறக்குறைய அதே வருவாய் கிடைக்கிறது. இதைப் பார்க்கும் பொழுது, அவர் மிகவும் திறமையாக இந்த இலாகாவை கடந்த ஆறு வருடகாலமாக நடத்தி வருகிறார்கள் என்பதைக் குறித்து நாம் பெருமைப் பட வேண்டும். நமது ராஜ்யத்தில் வருவாய் பெருகிக் கொண்டே வருகிறது. செலவும் ஓரளவுக்குப் பெருகி கொண்டேதானிருக்கிறது. நல்ல முறையில் பணம் செலவு செய்யப்பட்டு, மக்களுக்குப் பயன்தரக்கூடிய வகையில் எல்லா இலாகாக்களும் வேலை செய்து வருகின்றன. நாட்டின் பொருளாதார நிலையை அலசிப் பார்ப்போமேயானால், நமக்கே இது தெளிவாக விளங்கும். நமது நாட்டில் உற்பத்தி சக்திகள் நன்றாகப் பெருகியிருக்கின்றன. மக்களுக்குப் வசதிகள் செய்வதற்காக பல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி பெருகியிருந்த போதிலும், போதிய அளவு உணவுதான்யங்கள் இல்லாததால், விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகிறது என்பதைப் பார்க்கும்போது ஒரு விதத்தில் வியப்பு ஏற்படுகிறது. ஏன் இம்மாதிரியாக விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன, இதற்கு ஒரு விதமான கட்டுப்பாடும் இல்லையா என்பதைப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதைப் பரிசீலிக்க மத்திய அரசாங்கத்தார் ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். நமது மாகாணத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களை வாங்கிக் கேரள ராஜ்யத்திற்குக் கொண்டு போய்விடுவார்கள். அதன் காரணமாகத் தான் இங்கு விலைவாசிகள் ஏற்றமாய் இருக்கிறது என்பதை நமது அரசாங்கத்தார் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் விளையக் கூடிய தான்யங்கள் எல்லாம் கேரள ராஜ்யத்திற்குத்தான் போகிறது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கேரளத்தில் இருக்கக் கூடிய வியாபாரிகள் தஞ்சை ஜில்லாவில் முகாம் போட்டுக் கொண்டு அங்கே விளையும் உணவுத் தான்யத்தை வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். இதுதான் விலைவாசி உயர்வுக்கு முக்கிய காரணம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அநேக நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறவேற்றப் பட்டிருக்கின்றன. மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி பெருகியிருந்த போதிலும் பற்றாக்குறை ஏற்பட்டு விலை ஏற்றமாக இருப்பதைக் கண்டு நாம் எல்லோரும் வருந்த வேண்டியிருக்கிறது. கூடிய சீக்கிரம் மத்திய அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விலைவாசிகளைக் குறைத்தாலொழிய மக்களுக்கு நல்ல முறையில் நாம் பணி ஆற்றினோம் என்று சொல்ல முடியாது. ஒரு ரூபாய்க்கு இரண்டு படி அரிசி கிடைக்கும் நிலைமை ஏற்பட வேண்டும். இல்லாவிடில், என்னதான் சம்பளம் கொடுத்தாலும், மக்க

ளுக்கு திருப்தி ஏற்படாது. ஒரு ரூபாய்க்கு இரண்டு படி அரிசி கிடைக்கக் கூடிய நிலைமை சீக்கிரம் வரவேண்டும். அதற்கு நமது சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது. நாம் பல திட்டங்கள் தீட்டிக் கொண்டுதான் வருகிறோம். உற்பத்தி சக்திகளைப் பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். ஓரளவுக்கு வசதி இருக்கக்கூடியவர்கள் சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் கொஞ்சம் குறையும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி பேசுகிற சமயத்தில் **Employment exchange**களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரில் என்னிடம் தினம் ஏறக்குறைய 100 பேர்கள் ஏதாவது வேலை வேண்டும் என்று வருகிறார்கள். இதைப் பார்க்கும்பொழுது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. **Employment exchange**கள் ஒருவித ஒத்தாசையும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். வருகிறவர்களுக்கு என்ன வேலை வேண்டும், எந்தத் துறையில் அவர்கள் லாயக்காக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நல்ல முறையில் ரெஜிஸ்தர்களை வைத்துக் கொண்டால் நிச்சயமாக ஓரளவுக்கு வேலைப் பார்த்துக் கொடுக்க கூடிய ரீதியில் அவைகள் உபயோகமாய் இருக்கும். ராஜ்ய சர்க்கார் மேற்பார்வையில் அவைகள் இப்பொழுது இருக்கின்றன. மாதா மாதம் அவர்களிடம் இருக்கக்கூடிய எண்ணிக்கையைப் பார்த்து எவ்வளவு பேருக்கு வேலை கிடைத்தது எவ்வளவு பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதைப் பரிசீலிக்க வேண்டியது அவசியம். இதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து, **Employment exchange**கள் சரியாக வேலை செய்கின்றனவா, இல்லையா, ரெஜிஸ்தர்களை சரியான முறையில் வைத்திருக்கிறார்களா, வேண்டியவர்களுக்குத்தான் வேலை பார்த்து கொடுக்கிறார்களா அல்லது முறைப்படி கொடுக்கிறார்களா என்ற விஷயங்களை எல்லாம் அலசி பார்க்க வேண்டியது அவசியமாகும். அவைகள் நல்ல முறையில் வேலை செய்கின்றனவா என்பதை விசாரிக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் சென்னை நகரத்தின் ஒரு பிரதிநிதியாக இருப்பதால் சென்னை நகரக் கார்ப்பொரேஷனைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை கார்ப்பரேஷன் ரோடுகள் எல்லாம் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. நான் கார்ப்பொரேஷனிலும் ஒரு அங்கத்தினராக இருக்கிறேன். ஆகவேதான் கார்ப்பொரேஷனைப்பற்றி இங்கே பேசுகிறேன். கார்ப்பொரேஷன் ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அரசாங்கத்தார் நகரத்தில் மிகப் பெரிய பஸ்களை ஓட்டுகிறார்கள். நகர ரோடுகள் தாங்கக்கூடிய பஸ்களை அரசாங்கத்தார் ஓட்டுவதில்லை. இப்படிப்பட்ட நிலையில் ரோடுகளைப் பராமரிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நகர ரோடுகளை நன்றாகப் பராமரிக்க வேண்டியது பற்றிக் கூறினால், கார்ப்பரேஷன் கமிஷனர் அவர்கள் "நகரத்தில் கிடைக்கும் வருமானம் முழுவதையும் அரசாங்கத்தாரே எடுத்துக்கொள்கிறார்கள். கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கத்தார் போதிய பணஉதவி அளிப்பதில்லை. ஆகவே எப்படி ரோடுகளை நன்றாகப் பராமரிக்க முடியும்?" என்று கூறுகிறார்கள். மோட்டார்வாகன் வரியில் பாதி வருமானத்தையாவது கார்ப்பொரேஷனுக்குக் கொடுத்தால்தான் அவர்கள் ரோடுகளை நன்றாகப் பராமரிக்க முடியும். ரோடுகள் சரியாக இருந்தால்தான் பஸ்களும் நல்ல நிலையில் இருக்கும். ஆகவே ரோடுகளை நன்றாகப் பராமரிப்பதற்கு கார்ப்பொரேஷனுக்குப் போதிய பணஉதவி அளிக்க வேண்டும்.

அடுத்த வருஷம் கார்ப்பொரேஷன் தேர்தல் வரப்போகிறது. சிடி முனிசிபல் ஆக்ட் ஒரு பழைய சட்டம். அதனால் இப்போது பல கஷ்டங்கள் இருக்கின்றன. கூடிய சீக்கிரம் அந்தச் சட்டத்தில் அவசியமான திருத்தங்களைக்கொண்டு வந்தால், கார்ப்பொரேஷன் நல்ல முறையில் வேலை செய்வதற்கு மிகவும் சௌகரியமாக இருக்கும். இப்பொழுது ஏதோ ஒரு முறையில் கார்ப்பொரேஷன் நிர்வாகம் நடந்து வருகிறது; நல்ல

[Sri C. R. Ramasami] [3rd July 1957

முறையில் இல்லே. சிடி முனிசிபல் ஆக்டை சீர்திருத்திப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. அந்தச் சட்டத்தில் உடனடியாக அவசியமான திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கார்ப்பரேஷனில் தண்ணீர் விநியோகத்தை நன்ருகச் செய்யவேண்டியிருக்கிறது. அதற்கு அவசியமான கடன்களும் உதவிகளும் அரசாங்கத்தார் ஓரளவு கொடுத்து வருகிருர்கள்.

கார்ப்பொரேஷனுக்கு அதிகக் கடன்கள் கொடுத்தாலொழிய அவர்கள் நகரத்திற்கு வேண்டிய வசதிகளேச் செய்து கொடுக்கவேமுடியாது. கார்ப்பொரேஷனில் முக்கிய கஷ்டம் பணமில்லாக் கஷ்டம்தான்.

சேரிகள் அபிவிருத்தியை எடுத்துக் கொண்டாலும் கார்ப்பொரேஷனில் பணம் இல்லாத கஷ்டம்தான் இருக்கிறது. இந்த ஆண்டு ரூபாய் 25 லட்சம் சேரிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னே நகரத்தில் சேரிகள்தான் அதிகம் இருக்கின்றனவேயொழிய நல்ல வீடுகள் அதிகம் இல்லே. குறிப்பாக நான் இருக்கும் மைலாப்பூர் பகுதியில் 50 சத விகித மக்கள் குடிசைகளில் வாழ்கிருர்கள். அவர்களுடைய நிலே மிகவும் மோசமாக இருக்கிறது. சேரிகள் அபிவிருத்தியைப் பற்றிக் குறிப்பிட்டால், கார்ப்பொரேஷன்காரர்கள் தங்களிடம் பணம் இல்லே என்று சொல்லுகிருர்கள். நகர அபிவிருத்தி டிரஸ்டிக்காரர்களும் 'எங்களிடம் பணம் இல்லே. அரசாங்கத்தார் கடன் கொடுத்தால் சேரிகளே அபிவிருத்தி செய்கிரும்' என்கிருர்கள். இப்படிப்பட்ட நிலேமையில் சேரிகள் அபிவிருத்தி நின்று கொண்டே இருக்கிறது. சேரிகளே அபிவிருத்தி செய்வதற்கு யாரும் ஒன்றும் செய்யவில்லே. சேரிகளில் பாதை வசதிகளும், விளக்கு வசதிகளும்கூட இல்லே. இந்த வசதிகளேயாவது உடனடியாகச் செய்தால் நன்ருக இருக்கும். சேரிகளில் வசிக்கும் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசாங்கத்தார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேரிகளிலுள்ள மக்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கும் வசதிகளேச் செய்து கொடுக்க வேண்டியது நம் கடமை. இந்தப் பொறுப்பை கார்ப்பொரேஷனிடமோ நகர அபிவிருத்தி டிரஸ்டிடமோ விட்டு விட வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

"அக்காமொடேஷன் கன்ட்ரோல், ரெண்ட் கன்ட்ரோல்" ஆகிய முறைகளாலும் சென்னே நகரத்தில் தொந்தரவுகள் இருக்கின்றன. "அக்காமொடேஷன் கன்ட்ரோல், முறையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குத்தான் வீடுகள் கொடுக்கிருர்கள். மற்ற தனிப்பட்ட மனிதர்களுக்கு வீடுகள் கிடைப்பதில்லே. ஜாகைக் கட்டுப்பாடு இலாகா (அக்காமொடேஷன் கன்ட்ரோல்) எல்லா ஜனங்களுக்கும் வீடுகள் கொடுத்தால் நன்ருக இருக்கும். ஜாகைக் கட்டுப்பாடு ஆபீஸை எடுத்து விட்டு வாடகைக் கட்டுப்பாடு ஆபீஸை (ரெண்ட் கன்ட்ரோல் ஆபீஸ்) மட்டும் வைத்துக் கொள்ளலாம். தினமும் நிறைய ரெண்ட் கன்ட்ரோல் வழக்குகள் நடக்கின்றன. ஸ்மால் காஸஸ் கோர்டில் தினமும் ரெண்ட் கன்ட்ரோல் வழக்குகள்தான் நடக்கின்றன. நகரத்தில் எல்லோருக்கும் ஜாகை வசதி அளிக்கும் விஷயத்தை அரசாங்கத்தார் கூடிய சீக்கிரம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னே நகரத்தைப் பொறுத்த மட்டில் இன்னும் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். தமாஷா வரியிலிருந்து சங்கீத சபைகளுக்கு விலக்கு அளித்திருக்கிருர்கள். அந்த சபைகளுக்கு நிரந்தரமாக விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னே நகரத்தில் சுமார் 20 அல்லது 30 சங்கீத சபைகள் இருக்கின்றன. இந்த சபையினர் சங்கீதக் கலேயை வளர்ப்பதற்கு நன்ருகப் பாடுபடுகிருர்கள். இந்த சபைகளுக்கு நிதி உதவியும் வருஷா வருஷம் கிடைத்து வருகிறது. சங்கீதம் அவசியம் வளர்க்கப்பட வேண்டும். சங்கீத சபைகளுக்கு நிரந்தரமாக தமாஷா வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER : The hon. Member has got two minutes more.**



3rd July 1957]

**SRI C. R. RAMASWAMI :** மின்சார இலாகாவை மின்சார போர்டாக மாற்ற அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இது ஒரு நல்ல ஏற்பாடு என்று சொல்லுவேன். மின்சார இலாகா பெரிய இலாகா. மின்சாரத் துறையில் அரசாங்கத்தார் ஏராளமாகப் பணம் செலவு செய்கிருர்கள். அந்தப் பணம் நல்ல முறையில் செலவழிக்கப்பட வேண்டும். ஒரு அரசாங்கக் காரியதரிசியை வைத்துக் கொண்டு மின்சார இலாகாவை கவனிப்பது ரொம்பக் கஷ்டம். ஆகவே மின்சார போர்டு அமைக்கப்படுவது ரொம்ப நல்லது. அந்த போர்டில் தனிப்பட்டவர்களும் அங்கம் வகிக்க வேண்டும். முழு நேர உத்தியோகஸ்தர்கள் மட்டும் போர்டின் மெம்பர்களாக இருந்தால் போர்டில் ஏற்படும் குறைகள் நீக்கப்படாது. ஆகவே அது நாளடைவில் தனிப்பட்ட நபர்கள் கொண்ட போர்டாக மாறும் என்று நம்புகிறேன். இருந்தாலும், இப்போது நமது அரசாங்கத்தாரே பொறுப்பை ஏற்றுக்கொண்டு இப்போதுள்ள அதிகாரிகளே மெம்பர்களாக ஆக்கியிருக்கிருர்கள் இது கூடாது. தனிப்பட்ட மனிதர்களே போர்டில் மெம்பர்களாகப் போட்டால் அவர்கள் போர்டில் அவ்வப்போது உள்ள குறைகளே தைரியமாக எடுத்துக் காட்டி அவைகள் நீக்கப்படுவதற்கு முயற்சிப்பார்கள். ஆகவே மின்சார • போர்டில் தனிப்பட்ட மனிதர்களே மெம்பர்களாகவோ சேர்மனுகவோ போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI A. Y. S. PARISUTHA NADAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டம் எல்லோராலும் ஏற்கக் கூடியதாக இருப்பதால் கனம் நிதி அமைச்சர் அவர்களே நான் பாராட்டுகிறேன். ஹரிஜன முன்னேற்றத்திற்காக இந்த அரசாங்கத்தார் நிறையப் பணம் செலவு செய்து ஹரிஜனங்களுக்குக் கல்வி வசதியும், ஹாஸ்டல் வசதிகளும், வீடு கட்டிக் கொடுக்கும் வசதிகளும் செய்து கொடுத்து வருகிருர்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஹரிஜனங்களின் ஜனத்தொகைக்குத் தகுந்தாற்போல் ஹரிஜன முன்னேற்றத்திற்குப் பணம் ஒதுக்கப்பட வில்லே என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்கு இன்னும் குறைகள் நிறைய இருக்கின்றன. ஆகையால் அவர்கள் சீக்கிரம் முன்னேற்றம் அடைவ 11–20 a.m.
தற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களில் கிருஸ்தவ ஹரிஜனங்களும் இருக்கிருர்கள். கிருஸ்தவ ஹரிஜனங்கள் வித்தியாசமாக நடத்தப்படுகிருர்கள். ஒரே ஹரிஜனக் குடும்பத்தில் ஒருவர் ஹிந்துவாகவும் அவருடைய சகோதரர் கிருஸ்தவராகவும் இருந்தால், ஹிந்து சகோதரருக்கும் அவருடைய குழந்தைகளுக்கும் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் சலுகைகள் கிருஸ்தவ சகோதரருக்கும் அவருடைய குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுவதில்லே. இப்போது கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் கொஞ்சம் சலுகைகள் அரசாங்கத்தார் கொடுத்திருக்கிருர்கள். ஹிந்து ஹரிஜனங்களுக்கு எவ்வளவு சலுகைகள் கொடுத்திருக்கிருர்களோ அவ்வளவு சலுகைகளே கிருஸ்தவ ஹரிஜனங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தார் குடி தண்ணீர் வசதி இல்லாத எல்லா கிராமங்களிலும அந்த வசதியைச் செய்துகொடுத்திருக்கிருர்கள். முன்பே குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்ட சில இடங்களில் பழைய திட்டங்களுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி கிடைக்கவில்லே என்று தெரிய வருகிறது. ஆகையால் பழுதாக இருக்கும் பழைய தண்ணீர் திட்டங்களே புதுப்பிப்பதையும், அதிகப்படுத்துவதையும் கைவிடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக சரியான குடி தண்ணீர் வசதி இல்லாத கிராமங்களுக்குத் தான் புதிதாகக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்று தெரிந்து கொண்டேன். தஞ்சை நகரம் $1\frac{1}{4}$ லட்சம் ஜனத் தொகை கொண்டது. அந்த நகரத்தில் நான்கு ஆறுகள் போய்க் கொண்டிருக்கின்றன. அங்கே வருஷத்தில் ஒன்பது மாதங்கள் ஆறுகளில் தண்ணீர் ஓடுகிறது. அங்கே தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. நகரத்திலும் ஜனத்தொகை அதிகம். சுமார் 62 ஆண்டுகளுக்கு முன்பு நகரத்தில் தண்ணீர் வசதிக்காக பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டன.

அப்போது 40,000 ஜனங்கள்தான் இருந்தனர். இப்போது ஜனத் தொகை பெருகிவிட்டதால் நகரில் பாதி இடத்திற்கு தண்ணீர் விநி யோகம் செய்ய முடியவில்லை.

அவ்விதமாக 62 வருஷங்களுக்கு முன்னால் போட்ட குழாய்கள் இத்துப் போய் விட்டன. மூன்று நான்கு தடவை அவை உடைபட்டு தண்ணீர் சப்ளை இல்லாமல் ஜனங்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆகையால், புதிய கிராமங்களுக்கு மட்டும், குடி தண்ணீர் வசதி செய்வதோடல்லாமல் நகரங் களுக்கும், மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி பெற்று ஆவன செய்ய வேண்டும். அப்படி மத்திய சர்க்காரிடமிருந்து பணம் கிடைக்காவிட்டால், நமது சென்னை ராஜ்ய சர்க்கார் வேண்டிய பணத்தை கடனாகவோ, 'கிராண்ட் டாக"வோ கொடுத்து உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக தஞ்சை நகரத்தில் ஒரு 'மெடிகல் ஸ்கூல்" இருந்து வந்தது. அதை சில காரணங்களை முன்னிட்டு எடுத்து விட்டார்கள். அங்கு ஒரு மெடிகல் காலேஜ் வைப்பதற்கு வேண்டிய வசதிகள் கட்டிடங்கள், ஹாஸ்டல், ஆஸ்பத்திரி வசதிகள் இருக்கின்றன. மற்ற இடங்களில் மெடிகல் காலேஜுகள் திறப்பதை நிறுத்தி தஞ்சை யில திறக்கவேண்டும் என்று சொல்ல நான் முன்வரவில்லை. ஆனால் தஞ்சை யிலும் ஒரு மெடிகல் காலேஜ் நிறுவவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-30 a.m. அடுத்தபடியாக, உணவுப்பொருள்களின் விலையைக்குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தானியங்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்வதைவிட விவசாயத்திற்கு வேண்டிய உபகரணங்களின் விலையை குறைத்தால், தானியங்களின் விலை தானாகவே குறைந்துவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பதினைந்து, 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஜோடி உழவு மாடுகளை ரூ. 50க்கு வாங்கலாம். ஆனால் இதே ஜோடி மாடுகளுக்கு இப்போது ரூ. 350ல் இருந்து ரூ. 400 வரை ஆகிறது. கலப்பை போன்ற இரும்பு சாமான்களின் விலை 1க்கு 5 அல்லது 6 மடங்காக உயர்ந்திருக்கிறது. உரங்களின் விலையும் இவ்விதமே உயர்ந்தி ருக்கிறது. இவைகளின் விலையை குறைக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால் தானியங்களின் விலை தானாகவே குறைந்துவிடும். விவசாயிகளும், மிராசுதார்களும் விலைகளை தாங்களாகவே குறைத்துக் கொண்டு விடுவார்கள் என்று சொல்லி என் பேச்சை முடித்துக்கொள் கிறேன்.

**Dr. Srimathi SATHIYAVANIMUTHU**: பெருமதிப்பிற்குரிய துணைத்
11-33 a.m. தலைவர் அவர்களே, சமீபத்தில் நம் முன்னாள் கனம் நிதி அமைச்சர் கொண்டு வந்துள்ள வரவுசிலவு திட்டத்தைக்குறித்து இரண்டு தினங்களாக பல கக்ஷிகளின் சார்பாக பல உறுப்பினர்கள் தங்கள், தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்த நான் அவரது திட்டத்தை எதிர்க்கவும் இல்லை, அதே நேரத்திலே அதை ஆதரிக்கவும் முன்வரவில்லை. அவர் ஆரம்பத்திலேயே இளங்கோ அடி களைப் போல "மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்" என்கிறபடி பருவமழையைப் பாராட்டி அதன்மூலமாக பெய்த மழை, மக்களுக்கு பலன் அளிக்காமல் மந்திரியை பட்ஜெட் நெருக்கடியிலிருந்து காப்பாற்றி யிருக்கிறதே தவிர அதனால் மக்களுக்கு யாதொரு பலனும் இல்லை என் பதை அவரும் ஒப்புக்கொள்ளுகிறார். அவர் சமர்ப்பித்த பட்ஜட் பற்றுக் குறை பட்ஜெட்டாக இருக்கிறதைப்பற்றி நான் குறை கூறவிரும்பவில்லை. பட்ஜெட் பற்றுக்குறை பட்ஜெட்டாக இருக்கலாம் சில சமயங்களில். ஆனால் கடந்த பத்து ஆண்டு காலமாக காங்கிரசு இந்திய உபகண்ட ஆட்சி யிலே பற்றுக்குறை பட்ஜெட்டுகளையே காண்கிறோமே தவிர, என்றைக்காவது மிச்சபடுத்திய பட்ஜெட்டை சமர்ப்பிக்க முன்வந்தார்களா என்று பார்த்தால் இல்லை என்று தான சொல்லவேண்டும். தொடர்ந்து இப்பேர்ப்பட்ட பற்றுக் குறை பட்ஜெட்டுகளையே சமர்ப்பித்துக்கொண்டு வந்தால், நாடு சுடுகாடு ஆகி விடும் என்ற 'நல்ல' கருத்தை நான் சொல்வதை இந்த மன்றம் ஏற்கா விட்டாலும் தணிக்கையாளராக இருந்துவந்த, இந்திய உபகண்டத்தின்





சிறந்த நிபுணரான திரு. பி. கே. வாட்டால் அவர்கள் சொல்லியதொரு சிறந்த கருத்தை இந்த மன்றத்தின் முன்பு வாசித்துக்காட்ட விரும்புகிறேன். அவர் சொல்லுவதாவது—

**"One or two deficit budgets in succession do not matter, and may be condoned if due to exceptional circumstances, but a Government which habitually budgeted for more expenditure than the revenue at its disposal would sooner suffer in financial credit. Unbalanced budgets are bound, sooner or later, to lead to monetary inflation which if uncontrolled, will terminate in national disaster".**

என்று அவர் கூறிய கருத்தினை நான் எடுத்துச்சொல்லி, அப்பேர்ப்பட்ட முறையில் தொடர்ந்து பற்றுக்குறை பட்ஜெட்டாகவே இருந்துகொண்டு போனால், நாட்டிலே எதிர்கட்சியில் உள்ள நாங்கள் சொல்லுகின்ற கருத்தி னைப்போல மக்கள் அல்லல்பட நேரிடும் என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகின்றேன். வெள்ளையன் காலத்திலிருந்து வந்த போலீஸ் ஆட்சி மாறி, சேமநல ஆட்சியாக காங்கிரசு சர்க்கார் நடத்தி வருகின்றது; அந்த லட்சியபுரிக்கு நடை போடுகின்ற நமது சர்க்கார் செய்து வருகின்ற செலவினங்களைக் கணக்கிட்டுப்பார்த்தால் நமக்கு உள்ளபடியே வேதனையாகத் தான் இருக்கிறது. செலவினங்கள் இருக்கத்தான் வேண்டும். அதிலும் முற்போக்கு எண்ணத்தோடு இருக்கின்ற மக்கள் ஆட்சியிலே புதிய புதிய திட்டங்கள் தீட்டுவதற்கு புதிய செலவினங்களை ஏற்கத்தான் வேண்டும். அதையும் நாங்கள் தவறாக சொல்லவில்லை. ஒரு பெரிய பொருளாதார நிபுணர், **Wagner** அவர்கள், **"Laws of increasing expenditure"** என்பதில் குறிப்பிட்டது போல, புதிய திட்டங்களின் மூலம் செலவினங்கள் அதிகமாகத்தான் ஆகும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். மக்கள் மீது வரியைப்போட்டு, அதன்மூலமாக பெருவாரி யான பணத்தைத திரட்டி ஆட்சி நடத்துகிற சர்க்கார், செலவினங்களின்கீழ் பணத்தை பாழாக்கினால், மக்களுடைய கஷ்டங்கள் அதிகரிக்கும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். அதற்கு ஆதாரமாக, எங்களுக்குத்தந்துள்ள **Audit report**-லிருந்து ஒருசில கருத்துக்களை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். எதிர்கட்சியில் உள்ள நாங்கள் எடுத்துச்சொன்னால் ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் சீறி விழலாம் எதிர் கட்சியில் இருப்பவர்கள் எதையும் எதிர்ப்பதற்காக எதை எதையோ சொல்லுகிறார்கள் என்று சொல்லலாம். ஆனால், அரசாங்கத்தின் சார்பாக, எங்களுக்கு கொடுக்கப்பட்ட ரிபோர்ட்டி லிருந்து ஒருசில வார்த்தைகளை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன் நான் சொல்லவில்லை. **Fraud, missappropriation, embezzlement, forgery, irregularities** என்ற சொற்களை ஆடிட் ரிபோர்ட்டில் கணக்குகளை தணிக்கை செய்த உயர் திரு. கல்யாணராமன் அவர்கள் உபயோகப்படுத்தி சர்க்கார் மீது இப்பேர்ப்பட்ட குற்றங்களை பல ஆதாரங்களுடன் சுமத்தியிருக்கிறார்.

நான் இந்த ஆடிடர் ரிபோர்ட்டை அதிகமாகக்கூடப் படிக்கவில்லை. முப்பது நாற்பது பக்கங்கள் தான் படித்தேன். அதில் அக்ரிகல்சரல் டிபார்டுமெண்டில் எவ்வளவோ ஊழல்கள் நடந்திருப்பதாக கூறப்பட்டிருக் கிறது. அக்ரிகல்சுரல் ஒர்க்ஷாப்பில் செய்கின்ற பொருள்களை எல்லாம் சரியானபடி விநியோகிக்கவில்லை என்றும், தவறான வழியில் செலவினங் கள் இருப்பதாகவும் அதிகமான பணம் பாழ்படுத்தப்பட்டிருக்கிறதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட குறைகளை அங்கு திடீரென்று சென்று பரிசோதித்ததில் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் ஒரு கிளார்க் 800 ரூபாய் கொள்ளையடித்தார் என்ற காரணத்திற்காக வேலையில் இருந்து தள்ளப்பட்ட தாகவும் தெரிகிறது. இதையெல்லாம் துருவித் துருவிப் பார்த்ததின் காரணமாக இவை வெளிப்படவே அங்கிருந்த ஸ்டோர்கீப்பர் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள தற்கொலை செய்துகொண்டார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேடிக்கை, கேவலம், வெட்கம்!! இப்பேர்ப்பட்ட நிலைமையை நாட்டில் கொண்டு வர வர தண்டல்காரர்களைப் போல நமது அமைச்சர்கள் மேலும் வரி கொடுக்கவேண்டும் என்று கூறி வருகிறார்கள். இப்படியாக ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன என்று கல்யாணராமன்

[Dr. Srimathi Sathiyavanimuthu] [3rd July 1957

போன்றவர்கள் தனது ஆடிட் குறிப்புகளில் எடுத்துக்கூறினர். இப்பேர்ப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தால் நல்ல முறையில் பணம் செலவிடவில்லை என்று கண்ணீர் வடிக்கின்றனர். இப்பொழுது துண்டு விழுகின்ற 433 லட்சத்தை, பருவமழையின் காரணமாக செலவினங்களை ஒதுக்கிவைத்து மிச்சப்படுத்தி சரிக்கட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாக எனது தொகுதி ஆலைகள் நிறைந்த பகுதி. பாட்டாளி மக்கள், தொழிலாளி மக்கள் நிறைந்த பகுதி. கடந்த பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு காசுகூட அங்கு செலவு செய்யப்படவில்லை. இவ்விதமாக செலவு செய்யப்படாமல் மிச்சப்படும் பணத்தை ஒதுக்கி ஒரு நூறு லட்ச ரூபாய்களைக் கொண்டு துண்டு விழும் தொகை 483 லட்சத்தை 333 லட்சம் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. போடுகின்ற பற்றுக்குறையை எப்படித் தீர்த்துக் கட்டுவது என்ற முறைகளை ஆழ்ந்து சிந்தனை செய்து இருக்கலாம் நமது நிதி அமைச்சர் அவர்கள். மத்திய சர்க்காரிடம் பணம் கேட்டாலும் கிடைக்காது. முடிந்த வரையிலும் கேட்டு கிடைக்காத அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. மக்களிடம் கேட்கலாம் என்றால் மத்திய சர்க்கார் மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் கொடுத்திருக்கின்ற வரிப்பளுவினால் மக்களது உள்ளமே புண்ணாயிருக்கிறது. இந்தக் காயம் ஆறுவதற்கு முன்னாலேயே அவர்கள் மீது புது வரி போடத்துணியவில்லை. அந்தத் துணிவும் வரவில்லை. தேசீய சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலமும், வருமானத்தை வெற்றிகரமாக்க முடியும் என்று நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையில் கூறியிருக்கின்றார்கள். அதையும் அவர் செய்யப்போவதாக தெரியவில்லை. இது தவிர மத்திய சர்க்காரிடமும் கேட்கவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். மத்திய சர்க்காரிடம் என் கேட்கவேண்டுமென்று ஆளும் கட்சியில் உள்ளவர்களும் பேசினார்கள். தஞ்சை ஜில்லாவிலிருந்து கேரளத்திற்கு நெல் போய்க்கொண்டே இருக்கிறது என்றும் குறைப்பட்டார்கள். கேரளத்தையும், மற்ற மாகாணங்களையும் சேர்த்து ஒரே மண்டலமாக அமைத்து உணவுப் பற்றுக்குறையைப்போக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லுகிறார்கள். ஆனால் மாநில சர்க்கார் கேரளத்தை சேர்த்துக் கொள்ள விரும்புவதாகத் தெரியவில்லை. இதற்காக மத்திய சர்க்காரின் பதிலை எதிர்நோக்கியிருக்கிறார்கள். மாகாண சர்க்கார் இச்சீர்கேடான நிலையில் தங்களது அதிகாரத்தை விட்டுக் கொடுத்துவிட்டு மத்திய சர்க்காரிடம் மன்றாடி நிற்கின்றனர். இதையே தான் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூறுகின்றனர். விளைச்சல் அதிகமாக இருந்தும், அரிசியின் விலைவாசி குறையாமல் இருப்பதற்கு இங்கேயுள்ள அத்தனை அரிசியும் கேரளத்திற்கு சென்று கொண்டிருப்பது ஒரு காரணமாகும். இவ்விதம் சென்று கொண்டிருப்பதை தடுக்காமல், தடுக்க முடியாமல் இருக்கும் ஆட்சி நமக்குத் தேவையா என்று தான் இந்த நேரத்தில் மன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இவைகளை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது நமது நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையில் இப்பேர்ப்பட்ட சிக்கல்கள் இருப்பதை மறைமுகமாக ஒத்துக்கொள்கிறார்கள். அவரது உரையில் "தேசீய சிறு சேமிப்புத் திட்டத்தை நடத்த ஒரு நல்ல நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி தீவிரமாக வேலை செய்வதன் மூலம் ஓரளவு நிதி திரட்டலாம். ஆனால் போதிய அளவிற்கு இம்முறையில் நிதி கிடைக்குமா என்பது சந்தேகம்தான். ஆகவே நாம் பெரும்பாலும் எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உதவி போதிய அளவில் கிடைக்கும் என்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை. ஆகையால் கனம் அங்கத்தினர்கள் நம்முடைய மூலதனச்செலவிற்குவேண்டிய நிதி முழுவதும் கிடைக்கும் என்ற உறுதி இல்லாத நிலை இருப்பதை கவனிக்க வேண்டும். ஆயினும் சிக்கல்கள் எழும்போது அவைகளை எப்படியும் சமாளித்துக் கொள்வோம் என்ற உறுதியில் இப்போது நாம் முன் செல்வோமாக" என்று கூறியிருக்கிறார்கள். எனவே சிக்கல் வரப்போகின்றது என்பது உண்மைதான். அதை மூடி மறைத்து வைத்திருக்கிறார் என்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே இனி சிக்கல்கள் வரும்போது மக்களிடம்தான் கூடுதல் வரிகள் போடுவாரா அல்லது இனியும் வடநாட்டு சர்க்காரிடம் சென்று அவர்களை தட்டிக்கேட்பாரா என்பதும் புரியவில்லை.



3rd July 1957] [Dr. Srimathi Sathiyavanimuthu]

ஆகவே இன்றுள்ள முறையினால் சரியான விதத்தில் நாட்டினுடைய நலன் கவனிக்கப்படவில்லை என்று திராவிட முன்னேற்ற கழகத்தார் சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்ற கழகத்தார் எடுத்துச் சொல்வதெல்லாம் இப்பேர்ப்பட்ட இக்கட்டான நிலைமையை மாற்றி நமக்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தி வடநாட்டு சர்க்காரை எதிர்பாராமல் ஆட்சி நடத்தவேண்டும் அப்படி ஒரு நிர்வாகத்தை கொண்டு வந்தால்தான் இந்த நாடு சீக்கிரத்தில் சுபிட்சம் அடையும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் இவ்வளவு நல்ல முறையில் தயாரித்து சமர்ப்பித்ததற்கு எங்களைப்போன்றவர்கள் அதை வரவேற்பதோடு மட்டுமல்ல, அதை வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தையே குற்றம்சாட்டி, வேலையில்லா திண்டாட்டம் இருக்கிறது என்றும் மக்களுக்கு ஒன்றும் செய்து கொடுக்கப்படவில்லை என்று கூட்டம் போட்டு ஊர்வலம் வந்தவர்களுக்கெல்லாம் இன்று ஓய்வு ஏற்படும்படியான நிலைமையில் இன்றைய வரவு செலவு திட்டம் அமைந்திருக்கிறது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற எவ்வளவோ சிக்கல்களுக்கு மத்தியில் மக்களின் மீது புதிய வரிகள் ஒன்றும் போட இயலாது என்று தனது ஆழ்ந்த அனுபவத்தின் மூலமாக அறிந்து நிதி அமைச்சர் அவர்கள் வெறும் ஐந்து கோடி ரூபாய் மாத்திரம் துண்டு விழக்கூடிய ஒரு பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கின்றார் என்றால் உண்மையிலேயே நாம் அதை பாராட்டவேண்டியதுதான். பற்றுக்குறை பட்ஜெட்டை தயாரித்து பணம் பாழாக்கப்படுகிறது என்று குற்றம் சொல்லப்பட்டது. பொது 11-45 a.m. நிதியை பற்றி படித்தவர்களுக்கு ஒரு விஷயம் நன்றாகத் தெரியும். அதாவது ஒரு நாட்டுக்கு பற்றுக்குறை பட்ஜெட்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுவதுண்டு. அதாவது "Deficit budget at home is a vice, deficit budget for States is a virtue" என்று சொல்லப்படுவதுண்டு. அந்த முறையில் வீட்டுக்குத்தான் துண்டு விழக்கூடிய பட்ஜெட் தயாரிக்கக்கூடாது என்பது அல்லாமல் நாட்டுக்கு பற்றுக்குறை பட்ஜெட் தயாரிப்பதில் ஒரு குற்றமும் கிடையாது. ஒரு நாட்டில் பற்றுக்குறை பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த நாட்டில் அதிகமான வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தமாகும். அந்த நாட்டில் கட்டாயமாக பற்றுக்குறை பட்ஜெட்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்காக அதிகமாக பற்றுக்குறை விழவும் கூடாது. ஐம்பத்தாறு கோடி ரூபாய்வருவாய் உள்ள ஒரு பட்ஜெட்டில் வெறும் ஐந்து கோடி ரூபாய் பற்றுக்குறை விழுகிறது என்றால், அதைப்பார்த்து பணம் பாழாகிவிடுமே என்று அஞ்சுபவர்களை பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர்கள் பொது நிதியைப்பற்றி அவ்வளவாக தெரிந்து கொள்ளவில்லை என்று தான் நாங்கள் நினைக்கிறோம். அடுத்தபடியாக இந்த வரவு செலவு திட்டத்தில் கூறப்பட்டிருக்கிற விவசாயம் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி பல அங்கத்தினர்களும் பேசிவிட்டார்கள். இதைப்பற்றி கூடுதலாக ஒன்றும் நான் சொல்லவிரும்பவில்லை. விவசாயத்திற்கு வேண்டிய வசதிகளை மேலும் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று நிதி அமைச்சர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். அடுத்ததாக நீர்ப்பாசன திட்டங்களை பொறுத்தமட்டில், குறிப்பாக நம்முடைய நாட்டில் நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் மிகவும் விறுவிறுப்பாக நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கான பெருமை நமது மாகாணத்திலுள்ள இன்ஜினியர்களுக்கு உரியது. பிற மாகாணத்திலுள்ளவர்கள் நம்முடைய மாகாணத்திலுள்ள இன்ஜினீயர்கள் வந்து அவர்களுக்கு வேலை செய்தால் நல்லது என்று அவர்கள் நம்மை எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள். இனியும் நம்முடைய நீர்ப்பாசன வசதிகளை பொறுத்தமட்டில் இப்போது முடிந்து கொண்டிருக்கும் திட்டங்களை தவிர இன்னும் இரண்டே வழிகளில்தான் நீர்ப்பாசனத்தை பெருக்க முடியும் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்று மேற்கு நோக்கி பாயும் நதிகளிலுள்ள தண்ணீரை கொண்டு வந்து திருப்பி காவேரி முதலிய நதிகளோடு சேர்த்து நீர்பாசன வசதியை பெருக்கவேண்டும். இன்னொன்று புதுச்சேரியிலும் மற்ற ஒன்றிரண்டு

இடங்களிலும் நீர்பாசன திட்டங்கள் அமைக்கவேண்டும். மேற்கு நோக்கி பாயும் நதிகளிலுள்ள தண்ணீர் நமக்கு கிடைக்கவேண்டுமானால் கேரள சர்க்காரினுடைய உதவி நமக்கு வேண்டியிருக்கிறது. ஆகவே மேற்கு நோக்கி பாயும் தண்ணீரை திருப்பி விடுவதற்கு கேரள சர்க்காரின் உதவியை பெறுவதற்கு கேரள சர்க்காரின் பெருமைகளை எடுத்துக்கூறின கனம் அங்கத்தினர் டி. எஸ். இராமசாமி பிள்ளை போன்றவர்கள் உதவி செய்தால் மிக நன்றியுள்ளவர்களாக இருப்போம். இந்த நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதில் பெரிய திட்டங்களை ஏற்படுத்துவதோடு மாத்திரமல்லாமல் கண்மாய்களும் கால்வாய்களும் கூடுதலாக அமைத்து, மின்சார வசதியையும் பெருக்க வேண்டியது மிக அவசியம். இவைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கப்புறம் எடுத்துக்கொள்வோமென்றால் காடுகளின் வளர்ச்சியை பற்றி சொல்லலாம். காடுகளின் பராமரிப்புக்காக அதிகமாக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல அம்சமாகும். முந்திரி சாகுபடிக்காக 4·4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முந்திரி பயிர் என்பது ஒரு "டாலர் கிராப்" ஆகும். அந்நிய நாட்டில் நமது நாட்டிலுள்ள முந்திரிக்கு அதிக விலை இருக்கிறது. அமெரிக்கா போன்ற பிற நாடுகளில் நம் நாட்டிலுள்ள முந்திரி என்றால் அவர்கள் வாயை பிளக்கிறார்கள். தஞ்சாவூர் முந்திரிப்பருப்பு என்றால் அதற்கு தனி இடம் உண்டு. இவ்விதமான முந்திரி சாகுபடிக்கு நாலு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். இதில் இன்னும் கூடுதலாக கனம் விவசாய மந்திரி அவர்கள் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். இந்த முந்திரி சாகுபடி அதிமானால், அதன் மூலம் நாம் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அந்நிய நாட்டு செலாவணி மூலமாக பெறமுடியும். அடுத்தபடியாக மில்க் காலனியைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் நகராண்மை கழகத்தின் உதவியும் தேவையாக இருக்கிறது. சென்னை மாகாண மக்களுக்கு பல துறைகளிலும் இதன் மூலம் பலன் ஏற்படும். இந்த மில்க் காலனி ஆரம்பிப்பது சம்பந்தமாக நகராண்மை கழகமும் தனது ஒத்துழைப்பை கொடுக்கும் என்று, நகராண்மை கழகம், சட்டசபை இரண்டிலும் அங்கத்தினராக இருக்கும் பாக்கியம் பெற்ற எனக்கு சொல்ல முடியும். இதுபற்றிய "பைல்கள்" இரண்டு இடத்திற்கும் போய் வந்து கொண்டிருக்கின்றன. இவை வெகு சீக்கிரத்திலேயே, பம்பாயில் "ஆரே" மில்க் காலனி இருப்பது போன்று இங்கேயும் ஆரம்பிப்பதற்கு சென்னை நகராண்மை கழகமும் அரசாங்கமும் வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேசீய நலப்பரப்புத் திட்டம். விநோபாபாவே அவர்கள் தருகின்ற கிராமங்களை மாடல் வில்லேஜ்களாக்க, அவைகளை முற்போக்கு கிராமங்களாகச் சித்தரிக்கவேண்டும் என்பதற்காக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்தத் தொகையில் ஒரு காலணா கூட வீணாக்காமல் அப் பணத்தை அக்கிராமங்களில் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அக்கிராமங்களை சிங்காரத் தோட்டங்களாகத் அமைப்பதற்கு அரசாங்கம் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும். அடுத்ததாக, எலெக்ட்ரிஸிட்டிக்கு வரும்போது, நமது மாகாணம் இந்தியாவிலேயே மற்ற மாகாணங்களுக்கு தலைமை வகிக்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அப்படி தலைமை வகிக்கிற நமது மாகாணம் மேலும் மேலும் முற்போக்கு அடையவேண்டுமென்றால், அதற்காக நாம் செய்ய வேண்டியது என்ன என்று ஆலோசிக்கவேண்டும். இன்னும் சில ஜில்லாக்களில் மின்சாரம் வழங்குவது என்பது தனி நபர்களின் கையில் சிக்கியிருக்கிறது. அவர்கள் கிராமங்களைப்பற்றி கவலைப்படுவதேயில்லை. ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்த மின்சார போர்டு அமைக்கப்பட்டவுடன் இந்த தனி நபர்கள் வைத்திருப்பதை வாங்கி கிராமங்களுக்கு மின்சார வசதி துரிதமாகச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மின்சார போர்டு நிறுவப்பட்டவுடன் தனி நபர்கள் கையிலிருக்கும் லைசென்ஸ்களை வாங்கிவிடவேண்டும். அடுத்தபடியாக, ஹரிஜன நலனுக்கு இவ்வருடம் கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்காக;



அறுபது லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நூற்று முப்பத்து நாலு லட்சம் ரூபாயாக இருந்தது இப்பொழுது 194 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த 194 லட்சம் ரூபாய் ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் சேர்த்துதான் தந்திருக்கிறார்கள். ஆகவே அப்படித் தரப்பட்டிருக்கிற 194 லட்சம் ரூபாயையும் ஹரிஜனங்களுக்கே, அவர்களுக்கு மாத்திரம் மிகவும் அதிகமாக செலவு செய்து விடாமல் பிற்போக்கு வகுப்பினர்களின் படிப்பு வசதிக்காக சிறிது கூடுதல் தொகை ஒதுக்கப்படவேண்டும். அதை நிதி அமைச்சர் அவர்கள் கவனிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். காரணம், ஹரிஜனங்களுக்கு பலவிதமான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைவதற்கு லட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது. வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகை சம்பளச் சலுகை ஒன்றுதான். அந்தச் சலுகை ஹரிஜனங்களுக்குக் கிடைப்பதை விட குறைவுதான். ஆனால் எண்ணிக்கையில் பார்த்தால் பிற்பட்ட வகுப்பினர்கள் ஹரிஜனங்களை விட எண்ணிக்கையில் கூடுதலாக இருக்கிறார்கள். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால் இப்பொழுது பிற்பட்ட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் சம்பளச் சலுகையில் குறைந்தளவு ஒரு லட்சம் ரூபாயாவது அதிகப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, விளையாட்டு சாமான்கள், பீங்கான் சாமான்கள், ஜரிகைப் பூவேலை போன்ற கைத்திறன் வேலைகளுக்காக பத்து லட்சம் ரூபாய் மான்யம் வேண்டப்படுகிறது. ஜப்பான் போன்ற நாடுகளில் விளையாட்டு சாமான்கள் செய்யப்பட்டு அதன் மூலம் வெளி நாடுகளிலிருந்து அவர்களுக்கு பல கோடிக்கணக்காக ரூபாய் வருமானம் தருகிறது. அதே போன்று நம் நாட்டிலும் கைத்திறன் உள்ள கலைஞர்களை ஊக்குவித்து அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களுக்கு அத்தொழில்களில் முன்னேற்றம் அடையக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் இன்னும் ஏற்படுத்தவில்லை. கைத்திறன் வேலைகளுக்காக பத்து லட்சம் ரூபாய் மான்யம் கொடுத்தாலும் அத்தொகை கலைத்திறன் படைத்தவர்களுக்குக் கிடைப்பது இல்லை. கலைத்திறன் படைத்தவர்கள் அப்பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று கிராமங்கள் கிராமங்களாக தண்டோரா போட்டு அவர்கள் இதைப்பற்றி அறியும்படிச் செய்யவேண்டும். இப்பணம் கலைத்திறன் படைத்தவர்களுக்குக் கிடைக்கும்படி நாம் செய்யவேண்டும். இப்பணம் ஜரிகைப்பூ வேலை செய்பவர்களுக்கு கிடைப்பதில்லை ; ஆனால் மத்தியில் இருப்பவர்கள் அதை கொண்டு போய் விடுகிறார்கள். இந்த மாதிரிப்பட்ட நிலை இல்லாமல், கலைத்திறன் படைத்தவர்களை சந்தித்து அவர்களின் குறைகளை நீக்கக்கூடிய அளவிற்கு இந்த பத்து லட்ச ரூபாய் மான்யத் தொகை அவர்களுக்கு கிடைக்கும்படிச் செய்ய ஜில்லாவாரியாக, அந்தந்த இடத்திலுள்ள கலெக்டர்கள் போன்ற அதிகாரிகள் மூலம் அவர்கள் கைக்குப் போய் சேருவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இண்டஸ்ட்ரியல் ஹௌசிங். இது பற்றி இந்த முறை பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குறியதே. தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்ய அரசாங்கத்தார் உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் தனியார் துறைக்கு பன்னிரண்டரை லட்ச ரூபாயும், கூட்டுறவுச் சங்கங்களுக்காக மூன்று லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன, "ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்டுக்கும்", மற்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் 15 லட்சம் ரூபாய் கடனாக அளிக்கப்படுவதாக கூறப்பட்டிருக்கிறது "லோ இன்கம் க்ரூப் ஹௌஸிங்" காக. அடுத்தபடியாக, எனது தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு பீடித் தொழிலாளர்கள் படுகிற பாடு சொல்லமுடியாது. அவர்களின் வீடுகளை சென்று பார்த்தால் தெரியும். ஹரிஜனச் சேரிகள் எவ்வளவோ தேவலை. பீடித் தொழிலாளர்கள் நடத்தும் வாழ்க்கையைப் பார்க்கும்போது ஹரிஜனங்கள் நன்றாக வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று சொல்லலாம். இதில் மிகவும் அவர்களின் நிலையை மோசமாகக் காட்டுவது, அவர்கள் பீடி வெட்டிப் போடும் இலைகள் அங்கு குவிந்து கிடப்பதால் ஆகும். அதை அவர்கள் வெளியில் கொண்டு வேறு எங்கேயாவது போடுவதற்கு முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்த பீடித் தொழிலாளர்களை இண்டஸ்டிரியல்

லேபரின்கீழ் கொண்டு வர முடியாது. அதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை. அதில் ஹரிஜனங்களும் இருக்கிறார்கள் முஸ்லீம்களும் அநேகம் பேர் இருக்கிறார்கள். ஆகவே அதை ஹரிஜன சேரி என்று சொல்லி ஏதாவது செய்யலாமா என்றால் அதுவும் முடியாது. ஆக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் பீடித் தொழிலாளர்கள் வாழ்கிற இடம் மிகவும் மோசமாக இருக்கிறது என்றால் அது நமது மாகாணத்திற்கே அவமானமாகும். அந்த அவமானத்தைத் துடைத்தெறிவதற்கு நிதி அமைச்சரவர்களும், இன்டஸ்ட்ரீஸ் அமைச்சர் அவர்களும், இரண்டு பேர்களும் யோசித்து இதற்கு ஏதாவது ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டும். அரசாங்க சிப்பந்திகளுக்காக . . .

11-50 a.m. (The Deputy Speaker sounded the gong and the hon. Member resumed her seat).

(Temporary Chairman Sri K. Anbazhagan in the chair.)

*SRI A. S. DORAISAMI REDDIYAR : தலைவர் அவர்களே, இப்பொழுது நமது நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். மத்திய அரசாங்கம் அநேக வரிகளை விதித்து, அதைக்கண்டு ஜனங்கள் பயந்து கொண்டிருந்த சமயத்தில் நமது ராஜ்ய சர்க்காரும் என்ன என்ன வரிகளைப் போடுவார்களோ என்று பயந்துகொண்டிருந்த மக்களுக்கு தைரியத்தையும் சந்தோஷத்தையும் ஊட்டினார் நமது நிதி அமைச்சர் அவர்கள். நமது சட்டசபை அங்கத்தினர்கள் அந்த வரவு செலவுத் திட்டத்தைப் படித்து முடிந்ததும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் நமது மாற்றுக் கட்சிகாரர்களோ, நிதி அமைச்சர் அவர்கள் வேறு வரிகள் ஒன்றும் விதிக்கவில்லையே : நாம் அரசாங்கத்திற்கு எதிராக எப்படி பிரசாரம் செய்வது : எப்படி அரசாங்கத்தை குறை கூறுவதற்கு ஒன்றும் இல்லையே என்று மிகவும் வருத்தப்பட்டார்கள். வரி போடாததற்காக வருத்தப்பட்டார்கள். வரி போட்டால்தானே காங்கிரஸ் சர்க்காரை நிந்திக்க முடியும் என்பதற்காக வரி போடாதது குறித்து அவர்கள் வருத்தப்பட்டார்கள். அம்மாதிரி இல்லாமல் நமது நிதி மந்திரி அவர்கள் இருக்கிற பணத்தை வைத்துக் கொண்டு அதிகம் பற்றாக்குறை வராமல் புது வரிகளைப் போடாமலும் மிகவும் நேர்மையாக பட்ஜெட்டை தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நமது நன்றி. இன்று நமது நாட்டில் உணவுப் பிரச்னைதான் முக்கிய பிரச்னையாக இருந்து வருகிறது. இந்நிலை நமது ராஜ்யத்தில் மட்டுமல்ல, பாரத நாட்டின் எல்லா ராஜ்யங்களிலும் இந்நிலைதான். அதைத் தீர்ப்பதற்கு நாம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்திற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கவேண்டும் முதலாவதாக. பிறகு அதை நிவர்த்தி செய்யவேண்டும். உணவுப் பொருள்களின் விலை ஏறக் காரணம் வியாபாரிகள் என்று சொல்கிறார்கள். உணவு தான்யத்தை அவர்கள் பதுக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் அது மாத்திரமல்ல இந்த மாதிரியான விலை ஏற்றத்திற்குக் காரணம். அதற்கு ஐந்தாறு காரணங்கள் உள்ளன. ஒன்று, பெரிய மிராசுதார்கள் அவர்கள் விளைவிக்கும் தான்யத்தை, விலை குறைவு என்று விற்காமல் கூடுதல் விலை கிடைக்கும்போது விற்பதற்காக அதை சேகரித்து வைக்கிறார்கள். இரண்டாவதாக, மில் சொந்தக்காரர்கள் அவர்களுக்கு வேண்டிய தான்யத்தை சேகரித்து வைத்து விடுகிறார்கள். மூன்றாவதாக, வியாபாரிகள் பற்றாக்குறை மாகாணங்களுக்கு கள்ளத்தனமாக கடத்திக்கொண்டு போய் அங்கு விற்று நிறைய சம்பாதிக்கிறார்கள். நாலாவதாக, பணம் படைத்தவர்கள் அவர்களுக்கு ஒரு வருடத்திற்கு வேண்டிய தான்யத்தை வாங்கி சேகரிக்கிறார்கள். ஐந்தாவதாக, வியாபாரிகள் பிப்ரவரி மாதம் நெல் வாங்கி ஜூன், ஜூலை மாதம் விற்று லாபம் அடிக்கிறார்கள். நானும் ஒரு வியாபாரிதான். வியாபாரிகளுக்கு கையில் பணம் இல்லாவிட்டாலும் பாங்குகள் அவர்களுக்கு உதவி செய்கிறது. சென்ற வருடம் கூடுதல் லாபம் எடுத்தவர்கள் அந்த ருசி காரணமாக இந்த வருடத்திலும் தான்யத்தை வாங்கி சேகரித்து வைக்கிறார்கள். அடுத்தபடியாக கோவாப்பரேடிவ்





ஸ்டோர்ஸ் தான்யங்களை வாங்கி விற்கிறார்கள். கோவாப்பரேடிவ் இயக்கத்தின் கொள்கை அது அல்ல. தானியங்களை வாங்கி அங்கத்தினர்களுக்கு விநியோகம் செய்யவேண்டியதுதான் கூட்டுறவு சங்கங்களின் வேலை. கூட்டுறவு சங்கங்கள் லாபம் சம்பாதிப்பது என்றால் மேல் நாடுகளுக்கு உற்பத்திப் பொருள்களை அனுப்புவதின் மூலம் லாபம் சம்பாதிக்கலாம். மேல் நாட்டிற்குச் சரக்குகளை அனுப்புவதற்கு "கோடா" பெற்றுக் கொள்ளலாம். தானியங்களை வாங்கி சேகரித்து உள்நாட்டில் அதிக விலைக்கு விற்பதன் மூலம் லாபம் சம்பாதிக்கக்கூடாது. நான் மேலே சொன்னமாதிரி மிராசுதார்கள், மில்காரர்கள், சேகரித்து வைப்பது, பற்றாக்குறை மாகாணங்களுக்கு அனுப்புவது, பணம் படைத்தவர்கள் வருஷத்திற்கு வேண்டிய தானியங்களை சேகரித்து வைப்பது, கூட்டுறவு சங்கங்கள் சேகரித்து வைப்பது ஆகிய காரணங்களினால்தான் விலைவாசி அதிகமாகிறது. கூட்டுறவு சங்கங்களின் லாபம் அங்கத்தினர்களுக்குத்தான் விநியோகிக்கப்படுகிறது என்று சொல்லலாம். ஆனால் எவ்வளவு லாபம் வந்தாலும் பங்குதாரர்களுக்கு $6\frac{1}{4}$ சத விகிதம்தான் "டிவிடண்டு" கொடுக்கலாம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நான் தாலூகா "மார்கடிங் சொஸைடி" காரியதரிசியை அவர்கள் சொஸைடியில் என்ன வியாபாரம் என்று கேட்டேன். இந்த வருஷத்தில் 4,000 மூட்டைக்கு தானியம் பிடித்து விற்றதில் 20,000 ரூபாய் லாபம் வந்தது என்று சொன்னார்கள். அதேமாதிரி வேறு ஒரு ஜில்லா சொஸைடி காரியதரிசி சொன்னார். தலைவர் ஒரு வியாபாரியின் நிலைமை அறிந்து தானியம் இந்த வருஷம் பிடிக்கவேண்டியதில்லை என்று அவர் உத்தரவு போட்டுவிட்டதால், தானியம் பிடிப்பதை நிறுத்திவிட்டார்கள். கூட்டுறவு சங்கங்கள் சரக்குகளை வாங்கி மெம்பர்களுக்கு வழங்கவேண்டுமே தவிர வியாபாரத்தில் இறங்குவது அவ்வளவு உகந்தது அல்ல என்று அரசாங்கம் சுற்றறிக்கை விடவேண்டும்.

அடுத்தபடியாக, உணவு தானியங்கள் விஷயமாக தட்சிண மண்டலம் ஏற்படுத்துவது பற்றி ராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் பேச்சு வார்த்தை நடந்தது. தென் மண்டலத்தில் சென்னை, ஆந்திரம், மைசூர் மூன்று ராஜ்யங்களையும் சேர்த்து விடலாம். ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஏற்கெனவே ஆந்திராவில் ஆறு. லட்சம் டன் அரிசி உபரி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆந்திர ராஜ்யத்தை தென் மண்டலத்தில் சேர்த்துக்கொண்டால் சென்னை ராஜ்யத்தின் பற்றாக்குறையை தீர்த்துக் கொள்ளலாம். கேரள ராஜ்யத்தையும் இந்த மண்டலத்தில் சேர்த்தால் பற்றாக்குறையின் காரணமாக பொருள்கள் அங்கே போய்விடுமாதலால் விலைவாசிகள் இங்கே உயர்ந்துவிடும். கேரள ராஜ்யத்தை மத்திய சர்க்கார் பொறுப்பில் விட்டுவிட்டால், அவர்கள் அந்த ராஜ்யத்திற்கு வேண்டிய தான்யத்தை சப்ளை செய்வார்கள். இந்த மூன்று ராஜ்யங்கள் சேர்ந்த தென் மண்டலத்திற்குள் பண்டங்களைத் தாராளமாக வழங்கலாம். சரக்குகளை வாங்கி சேமித்துவிடுவதனால், அன்றாடம் வாங்கி உண்ணும் ஏழை மக்களுக்கும், மாதச் சம்பளம் வாங்கிச் சாப்பிடும் உத்தியோகஸ்தர்களுக்கும் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியிருப்பதால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தென் மண்டலத்தை ஏற்படுத்தும்படி நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தானியங்களை சேகரித்து வைத்துக்கொண்டு விலைவாசிகள் எவ்வளவு தூரம் ஏறும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் வியாபாரிகள். குறைந்த விலையையும் உயர்ந்த பட்ச விலையையும் சர்க்கார் நிர்ணயம் செய்துவிட்டால் உயர்ந்த பட்ச விலை எவ்வளவுதான் என்று தெரிந்துவிடும். அந்த விலைக்குச் சரக்கை விற்றுவிடுவார்கள். இல்லாவிட்டால் விலை எவ்வளவு தூரம் ஏறும் என்று வியாபாரிகள் எதிர்பார்த்துக்கொண்டு சரக்குகளை தேக்கிவைத்துக் கொள்ளுகிறார்கள். ஆகவே குறைந்தபட்ச விலையையும் உயர்ந்தபட்ச விலையையும் சர்க்கார் நிர்ணயம் செய்யவேண்டும்.

TEMPORARY CHAIRMAN (SRI K.ANBAZHAGAN) : இன்னும் ஒரு நிமிடம்தான் காலம் இருக்கிறது.

**SRI A. S. DORAISAMI REDDIYAR :** பட்ஜெட்டில் பற்றுக்குறை இருக்கிறது. அதைச் சரிக்கட்ட வழி என்ன என்பதுபற்றி அங்கத்தினர்கள் யோசனை கூறினால் பணம் அதிகமாக கிடைப்பதற்கு உதவியாக இருக்கும். லோகல் போர்டு, பஞ்சாயத்து போர்டு இவைகளெல்லாம் இன்னும் சரியாக ஏற்படுத்தப்படவில்லை. ஒரு திருஷ்டாந்தத்திற்காகச் சொல்லுகிறேன். பல்லாவரத்தில் ராதா நகர், காந்தி நகர், நேரு நகர், ராஜாஜி நகர் போன்ற நகர்கள் ஏற்பட்டு பெரிய பங்களாக்களும் வீடுகளும் ஏற்பட்டிருக்கின்றன. தாம்பரத்திலிருந்து மீனம்பாக்கம் வரை அநேக பங்களாக்களும் பெரிய தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆனால் அங்கு ஒரு முனிசிபாலிடியோ, பஞ்சாயத்தோ ஏற்படாது இருப்பதின் காரணமாக யாரும் வரி கொடுக்கவில்லை. ' இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்டுக்கு ' எழுத்து மூலம் விண்ணப்பித்தும்கூட, இந்த விஷயம் கவனிக்கப்படவில்லை. இது விஷயமாக சர்க்கார் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

12-05 p.m. **SRI S. RAMASAMI THEVAR :** உபதலைவர் அவர்களே, நிதி மந்திரி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சில நல்ல அம்சங்கள் இருந்தாலும்கூட, அதில் பல குறைகள் தோன்றுகின்றன. முக்கியமாக உணவுப் பொருள் விலை ஏற்றத்தை தடுப்பதற்கு எந்த வழிவகையும் அதில் சொல்லப்படவில்லை. இன்னும் விவசாயத்தைப் பெருக்க எவ்வளவு வழிகள் இருந்தும் அவற்றை குறிப்பிடத் தவறிவிட்டார்கள். தஞ்சை ஜில்லாவில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆண்டவன் பெயரால், கோவில் பெயரால் கிடக்கின்றன. அந்த நிலங்களை நிலமில்லாத ஏழை மக்களிடம் பகிர்ந்து கொடுத்தால், அதனால் உற்பத்தி அதிகமாகி உணவு பற்றுக்குறை நீங்கும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, தானியங்களின் மீதுள்ள விற்பனை வரி குறைக்கப்பட வேண்டிய அளவுக்கு குறைக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் கிராம அதிகாரிகளுக்கு ஓரளவு சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருந்த போதிலும், சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். கிராமத்தில் தலையாரி, வெட்டியான் இவர்கள்தான் அதிக வேலை செய்கிறார்கள். அவர்கள் கிராம முன்சீப், கர்ணம் இவர்களின் கீழ் ஊழியம் செய்யவேண்டியிருக்கிறது. சர்க்கார் வேலைகளைத் தொடர்ந்து இரவு பகலாக பார்க்கவேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கூலிகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை குறித்து நான் மிகவும் வருத்தப்படவேண்டியிருக்கிறது.

என் தொகுதியாகிய அரந்தாங்கித் தாலூகா மிகவும் கேவலமான நிலையில் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் இருந்தாலும்கூட அது மிகவும் பஞ்சப் பிரதேசம். மந்திரிகள்கூட சுற்றுப்பிரயாணத்தின்பொழுது தஞ்சையோடு நின்று விடுகிறார்கள். அரந்தாங்கிக்கு வருவதுகூட கிடையாது. இந்தப் பஞ்சப் பிரதேசத்திற்கு இது வரையில் ஒரு திட்டம்கூட வரவில்லை. சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் போன்ற ஒரு திட்டமும் அங்கு அமுலாக்கப்படவில்லை.

இந்தத் தாலூகாவில் ஒன்றரை லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அங்கு ஒரே ஒரு லோகல் பண்டு ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. அதுவும் ஜில்லா போர்டாரால் நடத்தப்படுகிறது. 40,000 பிள்ளைகள் பள்ளிக்குப் போகவேண்டிய நிலையிலே ஒரே ஒரு ஹைஸ்கூல்தான் இருக்கிறது. அந்த ஹைஸ்கூல்கூட எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடத்தில்தான் நடந்துவருகிறது. அதுவுமல்லாமல் அரந்தாங்கி தாலூகாவில் ரோடு வசதி அதிகமாக கிடையாது. எருக்களக்கோட்டைக்கு நான்கு மைல் ரோடும், நியத்தூருக்கு ஆறு மைல் ரோடும், ஆக பத்து மைல் ரோடுதான் இருக்கிறது. அங்கு மண் ரோடுகள்தான் இருக்கின்றன. அதுவும் அவைகளின் வழியாக மக்கள் நடந்துகூட போக முடியாது. ரோடுகள் பக்கத்தில் உள்ள நடைபாதையில்தான் போகமுடியும். ஆகவே, இவைகளெல்லாம் அரசாங்கம் கவனித்து வேண்டிய வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



குடி நீருக்காக எத்தனையோ கிணறுகள் தோண்டப்பட்டும் பயன்படவில்லை. ஊற்றும் இல்லாமல் இருக்கிறது. காண்ட்ராக்ட்காரர்களிடம் பணத்தைக் கொடுத்து இந்த வேலைகளைக் கொடுப்பதால் நமது மக்கள் கொடுக்கும் வரிப்பணம் வீணாகிறது. இந்தக் காண்ட்ராக்ட் முறையானது அடியோடு தொலைந்தால்தான் நம் நாட்டுக்கு சுபிட்சம் ஏற்படும். எங்கள் தொகுதியிலே கிணறுகள் தண்ணீரில்லாமல் இருக்கின்றன. தோண்டப்பட்ட பல கிணறுகளில் ஊறும் நீர் உவர்ப்பாக இருக்கிறது. இவைகள் மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருந்தால்தான் கட்டுவது என்றில்லை. உவர்ப்பு நீராக இருந்தாலும் கட்டி விடுகிறார்கள். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உடந்தையாக இருப்பதால் பரிசோதனைகள் நடக்காமல் கிணறுகள் தோண்டப்பட்டு இம்மாதிரித் தவறுகள் நடக்கிறது. தோண்டப்பட்ட சில கிணறுகளில் நீர் ஊற்று காணா விட்டாலும் பக்கத்தில் இருக்கும் ஆறு அல்லது குளம் இவைகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து நிறப்பி நீர் இருப்பதாகக் காட்டி பணத்தை ஏப்பம் விடுகிறார்கள். இந்த விஷயங்களை சர்க்கார் சரியாக கவனிக்கவேண்டும். சர்க்காரும் நிர்வாகத் துறையிலே கண்டிப்பான முறையில் இருந்தால் பல தொல்லைகள் போகும்; மக்களும் பயனடைவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

அரந்தாங்கியைப் பொருத்தவரையிலே, மின்சார விஸ்தரிப்பு கிடையாது. நகரத்திலே மட்டும் வெளிச்சத்திற்கு மின்சாரம் உபயோகமாகிறது. மற்றப்படி விவசாயத்திற்கு மின்சாரம் கிடையாது. மின்சாரத்தை தாலூகாவில் விஸ்தரிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரந்தாங்கி தாலூகா ஒரு வறண்ட பிரதேசம். நீர்ப்பாசனமற்ற ஒரு பிரதேசம். ஆகையால் இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். இங்கு தொழில் வளம் ஒன்றும் கிடையாது. வறண்ட பிரதேசத்தால் இங்குள்ள மக்கள் வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே சர்க்கார் ஆரம்பிக்கும் தொழில்களை இம்மாதிரி வறண்ட பிரதேசமான இடங்களில் அமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இலங்கைக்கு அந்தக்காலத்தில் கூலிகளை ஏற்றுமதி செய்தது அரந்தாங்கி. இதைச் சொல்லிக்கொள்ளவே மிகவும் வெட்கமாக இருக்கிறது. ஆனால், அவர்கள் இப்போது அங்கிருந்து வரமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இந்த பட்ஜெட்டில் எந்த விதமான திட்டமும் கூறப்படவில்லை என்பது வருத்தத்தைத் தருகிறது.

அடுத்தபடியாக, மேட்டூர் ப்ராஜெக்ட் ஆரம்பித்த காலத்தில், அதனால் தஞ்சை ஜில்லாவுக்குத்தான் நீர்ப்பாசனம் என்று சொன்னார்கள். காரணம் மற்ற ஜில்லாக்களில் வரித்தீர்வை கட்ட மறுத்தார்கள். ஆனால் தஞ்சை ஜில்லாவில் தீர்வையைக் கட்ட முன் வந்தோம். ஆனால், அந்த சமயத்திலே புதுக்கோட்டை குறுக்கே வந்த காரணத்தால் தண்ணீர் வேறு வழியாகப் போய்விட்டது.

1948-லிருந்து புதுக்கோட்டை நம் கைவசம் ஆனபோதுகூட சர்க்கார் இத்திட்டத்தைக் கொள்ள முன்வரவில்லை. எங்கள் ஊரில் நடந்த அரசியல் மகாநாட்டிற்கு நமது முதல் அமைச்சரும், தொழில் அமைச்சரும் வந்தார்கள். அப்போது மராமத்து இலாகா மந்திரியாயிருந்த ஸ்ரீ பக்தவத்ஸலம் தலைமையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோம். அப்படியிருந்தும் இன்றுவரை அதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. தண்ணீர் கேட்டால், மேட்டூரில் தண்ணீர் இல்லை என்று காரணம் காட்டுகிறார்கள். எங்கள் தாலூகாவிலே காண்மாய்கள் குளங்கள் நிறைந்து இருக்கிறது. ஒரு முறை நிரப்பித் தந்தால் போதும். இரண்டொரு காட்டாறுகள் ஓடுகிறது. மழை காலத்தில் தண்ணீர் கடலிலே போய்ச் சேருகிறது. அந்த ஆறுகளை அணை மூலமாகத் தடுத்தால் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயிர் செய்ய முடியும்.

**TEMPORARY CHAIRMAN (SRI K. ANBAZHAGAN) :** இன்னும் ஒரு நிமிட நேரம்தான் பேசுவதற்கு இருக்கிறது.

[3rd July 1957

**Sri S. RAMASAMI THEVAR :** சர்க்கார் இன்னும் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். பல பல தொகைகளை மக்களுக்கு உதவுவதற்காக ஒதுக்கியிருந்தும் கூட அந்த உதவிகள் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. நிர்வாகத்திலே ஊழல்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிப் பேசுவதற்கு நேரம் இல்லை. கடன் வசதிகள் காலாகாலத்தில் போய்ச் சேருவதில்லை. அந்தக் கடன் தொகையை வாங்குவதற்கு கஷ்டங்கள் பல. அதிகாரிகளையும் மற்றவர்களையும் தேட வேண்டியிருக்கிறது. காலா காலத்தில் வாங்க வழியில்லை. இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

Deputy Speaker in the Chair.

12-17 p.m. **Sri V. S. MANICKASUNDARAM:** அன்புமிக்க உபதலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் இந்தச் சபையின் முன் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இவ்வருஷம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் மிக போற்றத்தக்கதாக இருக்கிறது. மக்கள் மெச்சும் முறையில் இருப்பதற்குக் காரணம் புதிதாக ஒரு வரியும் போடப்படவில்லை என்பதுதான்.

உணவுப் பொருள்களின் விலைவாசிகள் கூடியிருப்பதற்கு யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் விலைவாசிகள் மிக அதிகமாக இருக்கிறது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. விவசாய உணவுப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்திருப்பதின் காரணத்தைக் குறித்து ஒரு தீர்மானத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரையிலே, விலைவாசிகள் உயர்ந்ததன் காரணம் உற்பத்தி செய்வதிலே ஏற்படும் உயர்ந்த செலவுதான். நானும் ஒரு விவசாயி. நானும் விவசாயம் செய்பவன்தான். முன்பு இருந்த உற்பத்திச் செலவை விட இப்போது பல மடங்கு அதிகமாக இருக்கிறது. ஏர் முதலிய விவசாயக் கருவிகள் விலை உயர்ந்து வருகின்றன. கண்ட்ரோல் இருந்த காலத்தில் எங்கள் பகுதியிலே உரம்போட புண்ணாக்கு மூட்டை 12 ரூபாய் முதல் 14 வரை இருந்தது, இப்போது சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் ரூபாய் 18½ முதல் 19½ வரையில் விற்கிறது. அந்த முறையிலே அது தவிர எல்லா சாமான்களும் விலை மிக ஏறிய நிலையிலே இருக்கின்றன.

12-20 p.m. எங்கள் பகுதிகளிலே விவசாயத்திற்கு இந்த அரசாங்கம் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறது. முக்கியமாக என் தொகுதியில் லோயர் பவானி தண்ணீர் பாசனத்திற்காக விடப்பட்டு, தொகுதி மக்கள் எல்லாப் பலனையும் அனுபவித்துவருகிறார்கள்.

ஆனால், அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டம் எல்லாம், நேற்றைய தினம் ஒரு மதிப்பிற்குரிய நண்பர் சொன்னதுபோல, வேலையில்லாத் திண்டாட்டம் எங்கள் தொகுதியில் கிடையாது, வேலைக்கு ஆள் இல்லாத திண்டாட்டம்தான் இருக்கிறது என்று நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பல பகுதிகளிலே வேலை இல்லாத மக்கள் இருப்பதாகவும், அவர்கள் வெளியேறுவதாகவும் சொல்லப்படுவதைக் கேட்டு நான் கொஞ்சம் ஆச்சரியப்பட வேண்டியதாகத்தான் இருக்கிறது. மக்கள் விவசாய வேலையில் ஈடுபடத் தயாராயிருப்பார்களானால், தயவு செய்து அவர்களை எங்கள் தொகுதிக்கு அனுப்பி வையுங்கள். அவர்களுக்கு நாங்கள் வேண்டிய அளவு வேலை கொடுக்கிறோம். முன்னால் வாங்கிக் கொண்டிருந்ததைவிட மூன்று பங்கு, நான்கு பங்கு கூட கூலி கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருகின்றோம். ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பொழுதும் கிடையாது. வேலைக்கு ஆள் இல்லாத் திண்டாட்டம்தான் நிலவிவருகிறது என்று நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆனால், மலபார் ஜில்லாவிலிருந்து சில ஆட்களைக் கூட்டி வந்து வைத்து மத்திய அரசாங்கம் சில இடங்களில் விவசாய அபிவிருத்தி செய்வதை நாம் பார்த்தோம். அந்த முறையிலே எங்கள் பகுதிக்கு



3rd July 1957] [Sri V. S. Manickasundaram]

வேறு எங்கிருந்தாவது விவசாயத் தொழிலாளர்களை இறக்குமதி செய்தால் அதற்காக நாங்கள் அரசாங்கத்திற்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்போம்.

விவசாய உற்பத்தி செய்யும்போது . . .

**Sri S. B. ADITYAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் பேசிக்கொண்டிருக்கிற கனம் அங்கத்தினரிடம் ஒரு கேள்வி கேட்கலாமா?

**DEPUTY SPEAKER :** சரி.

**Sri S. B. ADITYAN :** கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும் போது, அவர்களுடைய இடத்திலே வேலைக்கு ஆள் இல்லாத திண்டாட்டம் தான் இருக்கிறது என்று சொன்னார்கள். வேறு இடத்திலிருந்து வருகிற ஆட்களுக்கு என்ன கூலி கொடுக்கப்படும் என்பதை தயவு செய்து சொன்னால், வேறு ஜில்லாக்களிலிருந்து ஆட்களை அனுப்பத் தயார். என்ன கூலி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER :** The hon. Member should have raised this point after the Member had furnished his speech. He should not interrupt the hon. Member when he is speaking.

**Sri V. S. MANICKASUNDARAM :** இன்று எங்கள் பகுதியிலே, தினம் ஒன்றுக்கு இரண்டரை முதல் மூன்று ரூபாய் வரையில் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி கிடைக்கிறது. அந்தக் கூலி பிற பகுதிகளில் கொடுக்கப்படுவதாக நான் கருதவில்லை. ஆகையால், இந்தக் கூலி விகிதம் அவர்களுக்குப் போதும் என்ற எண்ணம் இருக்கும் பட்சத்தில், அந்தக் கூலி ஆட்களை எங்கள் ஊருக்கு அனுப்பி வைக்குமாறு எனது நண்பர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நான் சொல்லிக் கொண்டிருந்த விஷயம், விவசாய விளை பொருள்களை உற்பத்தி செய்யும்போது, அதற்கு ஆகக்கூடிய செலவை அரசாங்கம் கட்டுப்படுத்த முயற்சி செய்யவேண்டும் என்றும், அதனுடைய பலன் விவசாய மக்களுக்கு நேரடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**Sri M. JAGANNATHAN :** பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார். கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தத் தொகுதியிலிருந்து வருகின்றார் என்று சொன்னால் நலமாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன்.

**Sri V. S. MANICKASUNDARAM :** நான் ஈரோடு தொகுதியிலிருந்து வருகிறேன்.

**DEPUTY SPEAKER :** அவர் ஈரோடு தொகுதியிலிருந்து வருகிறார்.

**Sri V. S. MANICKASUNDARAM :** உயர்ந்தபட்ச விலை மட்டும் விளை பொருள்களுக்கு நிர்ணயிக்கவேண்டுமென்று பல அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டார்களே யொழிய, குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க வேண்டுமென்று யாரும் கேட்டுக்கொண்டதாக நான் இதுவரை கவனிக்கவில்லை. மத்திய அரசாங்கம் விவசாய விளைபொருள்களுக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயிப்பதற்கு ஒரு கமிட்டி நிறுவப்போவதாகவும், ஒரு அளவுக்குக் கீழே விவசாய விளைபொருள்களின் விலை இறங்காமல் இருக்கவேண்டும் என்பது பற்றி தீவிரமாக யோசித்துவருவதாகவும் சில நாட்களுக்குமுன் பத்திரிகையில் படித்தோம். அம்மாதிரி விவசாய விளைபொருள்களின் விலை ஒரு அளவுக்குக் கீழே போகாமல் பார்த்துக்கொண்டு, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், அவர்களுக்கு லாபகரமான விலை கிடைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான்

[Sri V. S. Manickasundaram] [3rd July 1957

என்னுடைய தொகுதியாகிய ஈரோடு மஞ்சள் வியாபாரத்திற்குப் பெயர் பெற்றது. ஈரோடு நகரம் எப்படி மஞ்சள் வியாபாரத்திற்குப் பெயர் பெற்றதோ, அதேபோல ஈரோடு தாலூகா, பவானி தாலூகா, கோபி தாலூகாவின் தென் புறம், கரூர் தாலுகா ஆகிய இடங்கள் மஞ்சள் உற்பத்திற்குப் பெயர் பெற்றன.

மஞ்சள் உற்பத்தி செய்வதற்கு செலவு ரொம்பவும் அதிகமாக ஏற்படுகிறது. சாதாரணமாக, நெல் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவைப் போல் 8 மடங்கு அல்லது 9 மடங்கு அதிகமாக ஆகிறது, மஞ்சள் உற்பத்தி செய்வதற்கு. வைகாசி-ஆனி மாதத்தில் விதை போடப்பட்டு பங்குனி மாதத்தில் அறுவடை ஆகிறது. 11 மாத காலம் பூமிக்கடியில் இருக்க வேண்டியிருக்கிறது. சில வருஷத்திற்கு முன்னால், மஞ்சள் உற்பத்தி செய்ததினால் நல்ல ஆதாயம் கிடைத்தது. பத்து மணங்குகொண்ட சாட்டை ஒன்று ரூ. 250 முதல் ரூ. 300 வரை விற்றுக்கொண்டு இருந்தது 1950-வது வருஷத்தில். ஆனால், 1956-ம் வருஷத்தில் விலை ரூ. 65, ரூ. 70 என்று இறங்கிவிட்டது. இப்படி மஞ்சள் விலையில் திடீரென்று சரிவு ஏற்பட்டது. 1955-ல் பூமியில் மஞ்சள் போட்டுவிட்டு 1956-ல் வெட்டி எடுத்துப் பார்த்தபோது விவசாயிகள் பெரும் ஏமாற்றத்தை அடைந்தார்கள். பெரும் நஷ்டத்தையும் அடைந்தார்கள். இதனால் பல விவசாயக் குடும்பங்களின் பொருளாதாரமே சீர்குலைந்து போயிற்று.

சென்ற வருஷம் ஈரோடு நகரத்தில் மஞ்சள் கோடௌன்களில் மஞ்சளைத் தேக்கி வைத்தார்கள். இது உணவுப் பொருள் என்றும், மார்க்கட்டுக்கு அனுப்பும்போது கூட்டுறவு முறையில் லிக்ங் ஆக்ஸைட் என்னும் விஷத்தைக் கலந்து விடுகிறார்கள் என்றும் அரசாங்கத்தார் பரிசோதித்து "சீல்" வைத்தார்கள். அதாவது, மஞ்சளையும் ஒரு உணவுப் பொருளெனக் கணக்கிட்டு, கண்காணித்து வந்தார்கள். மஞ்சளையும் உணவுப் பொருள் என அரசாங்கம் கண்டால், உணவுப் பொருள்களுடைய விலை ஒரு குறித்த அளவுக்குக் கீழே போகாமல் பார்த்துக்கொள்வது போல, மஞ்சள் சாகுபடிக்காரர்களுக்குத் தகுந்த ஆதாயம் கிடைக்கும் முறையில், ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

12-27 p.m. * SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களுடைய நீதியுடன் கூடிய நிதி நிலை அறிக்கையை வாயார வாழ்த்துகின்றேன். மனமாரப் புகழ்கின்றேன். போற்றுகின்றேன், வரவேற்கின்றேன். காலத்திற்கேற்ப, மக்களுடைய மனோநிலைக் கேற்ப, பஞ்ச நிலையையும் அனுசரித்து, மக்கள் முதுகிலே மேலும் மேலும் வரிப் பளுவைச் சுமத்தாமல், தனக்கே உரித்தான தனிப் பாணியில், நிதி அமைச்சரவர்கள் ஒரு நிதி நிலை அறிக்கையை இன்று நமக்குச் சமர்ப்பித்திருக்கின்றார்.

புதிய வரி அதிகம் இல்லாமலும், அதே சமயத்தில் எதிர் காலத்தில் மக்களுக்குத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். அப்பழுக்கில்லாமல் அந்தத் திட்டம் நிறைவேறுவதிலே கண்ணும் கருத்துமாக இருந்து, இக்கட்டான நிலைமைகளையெல்லாம் சமாளித்து வெற்றியுடன் நடத்திக் காட்டுவோம், கடன் பட்டாவது நிறைவேற்றிக் கொடுப்போம் என்ற தனிப் பாணியுடன், மிகப் பிடிவாதமான துணிச்சலுடன் நிதி அமைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார் என்றால் இதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவருடைய துணிச்சல் பாராட்டுதலுக்குரியது.

அரசு செலுத்துகின்றவர்கள் வரி விதிக்கின்றார்கள். வரி விதிக்காமலிருப்பது மந்திரிகளுக்கு அழகல்ல.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்று வள்ளுவனார் பாடினார். அந்தக் காலந்தொட்டு இந்தக் காலம் வரை வரி விதித்தே நாட்டை அரசு செய்தார்கள். ஆனால், தற்காலத்திய பஞ்ச நிலைமைக்கும், மக்களுடைய மனோ நிலைமைக்கும் ஏற்ப, காலத்தை



3rd July 1957] [Srimathi Rajathi Kunchithapatham]

யும் ஒட்டி, நமது நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் மதியூகத்துடன் ஒரு சில புது வரிகளைக் கொண்டு திட்டத்தை நிறைவேற்றுவேன் என்ற புதுமைத் துணிச்சலை மக்கள் முன்னாலே ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்ற முன்வந்திருக்கிறார். அதை நாம் பாராட்ட வேண்டும். அவரைப் பாராட்டுவதோடு அல்லாமல், அவருடைய திறமையையும் நேர்மையையும் அவருக்கென படைத்த தனி ஆற்றலையும் நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

அதோடுகூட, மத்திய சர்க்கார் புது வரிகளைப் போட்டார்கள். அப்பொழுது எங்கும் ஒரே கூக்குரல் எழும்பியது. அதே சமயத்தில் பெரிய பெரிய அறிஞர்கள், அறிவாளிகள், அரசியல் ஞானிகள் எல்லோரும் மேடையிலே பேசினார்கள். "வரப்போகின்றது, மாகாண சர்க்காருடைய அடுத்த வரி, அதற்கும் தயாராக இருந்து கொள்ளுங்கள், கூக்குரலை எழுப்புங்கள், கிளர்ச்சி செய்யுங்கள், எதிர்ப்புக்குத் தயார் செய்து கொள்ளுங்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். இப்படியெல்லாம் சொல்லி, சவால் 12-30 p.m.
விட்டுக்கொண்டு காத்துக்கொண்டிருந்தவர்களையெல்லாம் நிதி அமைச்சர் அவர்களுடைய பேனா முனையிலிருந்து வந்த நிதி நிலை அறிக்கை பெருத்த ஏமாற்றத்தின் எல்லையிலே கொண்டுபோய்விட்டது. அத்தகைய நிதி அமைச்சரின் மதியூகத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதை மிக்க சாணக்கிய சமர்த்தியத்துடனும், அரசியல் நீதியுடனும், தூரதிருஷ்ட கண்ணோட்டத்துடனும் செய்திருக்கிறார் என்பதை நினைக்க நினைக்க நாம் மிகவும் பெருமைப்படுகிறோம். பாராட்டுகிறோம். மேலும் அம்மையார் அவர்கள் "மந்திரிக்குத்தான் மழை பெய்தது பிரயோஜனமாய்ப் போய்விட்டது, மழை பெய்தது மந்திரிக்குத்தான் அபயம் அளித்தது" என்று சொன்னார்கள். இந்த நிதி நிலை அறிக்கையை இந்தச் சட்டசபையிலே சமர்ப்பித்த நிதி மந்திரி அவர்கள், எதிர்க் கட்சித் தோழர்களுக்கோ, மாற்றுக் கட்சித் தோழர்களுக்கோ ஒவ்வொரு பதிலையும் சாட்டை சாட்டையாகக் கொடுப்பதில் மட்டும் வல்லுநர் அல்ல, அதற்கு மேலும் வல்லுநர் என்பதைக் காட்டிவிட்டார்கள். வரிப் பிரேரணைகளை எதிர்ப்பதில் தங்களுக்கு வேலை அதிகமாக இருக்கும் என்று நினைத்து நினைத்து ஏங்கி இருந்தவர்களுக்கெல்லாம் ஒரே அடியாக ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டார்கள். மழை இன்மையைப் பற்றித்தான் அம்மையார் அவர்கள் பேசினார்கள் என்பது அல்ல. மழை பெய்ததைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். மழை பெய்ததால், அமைச்சர்களுக்கு அபயம் கிடைத்தது என்று குறிப்பிட்டார்கள். அதை நானும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த மழை பெய்தது அமைச்சர்களுக்கு மட்டும் அபயம் கொடுக்கவில்லை. அம்மையார் அவர்களுக்கும் இந்த நிதி நிலை அறிக்கையை எதிர்த்துப் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும், அபயத்தையும் கொடுத்தது என்பதை நான் கூறாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, ஆடிட் ரிப்போர்ட்டைப் பற்றியும் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். "ஆடிட் நாற்றம் அடிக்கிறது, ஊழல் இருக்கிறது" என்று சொன்னார்கள். ஆனால், காங்கிரஸ் ஆட்சியிலே, காங்கிரஸ்காரர்கள் நினைத்திருந்தால், ஊழலும் நாற்றமும் இல்லாமல், மணமிக்க மலர்த் தோட்டமாகவும், ஆக்கி இருக்க முடியும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்மையிலே இருக்கிற நாட்டைப்போல், ஒருவருடைய தனி சந்தர்ப்பத்திற்காகவும், சௌகரியத்திற்குச் சட்டத்தை மாற்றி அமைக்கக் கூடிய சர்க்கார் வழி வம்சத்திலே வந்தவர்கள் அல்ல காங்கிரஸ்காரர்கள் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று சொன்ன நக்கீரர் பரம்பரையிலே வந்த காங்கிரஸ்காரர்கள் நினைத்தால் இன்று மாற்றி அமைத்திருக்க முடியும். ஊழல் நாற்றத்தை வெளியே தெரியாமல் மண் மூடிப் புதைத்திருக்கவும் முடியும். ஆனால், காங்கிரஸ்காரர்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. ஆகவேதான் எங்களுடைய நீதியுடன் கூடிய, நேர்மையுடன் கூடிய, ஆற்றலும் திறமையும் வாய்க்கப் பெற்ற, திறமையின் பிரதிபலிப்பே உருவாகக்கொண்ட இந்த நிதி நிலை அறிக்கை நம் முன்னாலிருக்கிறது. அதைப்போற்றுகின்றோம், வாழ்த்துகின்றோம், வரவேற்கின்றோம்.

சட்ட சபைக்கு வரும்போது எல்லாம் வருத்தமாகத்தான் இருக்கிறது. பார்த்தாலும் வருத்தம், கேட்டாலும் வருத்தம், பேசுவது எல்லாம் வருத்தம், எதை எடுத்தாலும் வருத்தம், வருத்தம். "வருத்தம், வருத்தம் என்பதே அல்லாது வேறொன்றும் அறியேன் பராபரமே" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இப்படித் தொட்டதெற்கெல்லாம் "வருத்தம், வருத்தம்" என்று சொல்வதைக் கேட்க எங்களுக்கும் வருத்தமாகத்தானிருக்கிறது. ஆகாதவர்கள் கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்கிற மாதிரித்தான் இருக்கிறது. வரி போட்டாலும் குற்றம், வரி போடாவிட்டாலும் குற்றம். இப்படி வருத்தமாகவே இருந்தால், ஒரு நல்ல காரியம் செய்யக்கூடிய நிலையில், நம்மை நாமே ஆக்கிக்கொள்வோம் என்று சொல்வதற்கில்லை. இருண்டவன் கண்ணுக்கு தெரிந்ததெல்லாம் பேய் என்பார்கள். வரி போடவில்லை என்றால் நிதி நிலைமை சரியாக இல்லை என்று குற்றம் சாட்டுவது, வரி போட்டால் வரியைச் சுமத்தி விட்டார்கள், மக்கள் ரத்தத்தை உறிஞ்சுகிறார்கள் என்ற இந்த மனோநிலை மறைய வேண்டும். "துணி வெளுக்க மண் உண்டு, தோல் வெளுக்கச் சாம்பருண்டு, மணி வெளுக்கச் சாணையுண்டு, மனம் வெளுக்க வழியில்லையே" என்று பாடிய பாரதியாரின் நினைவு தான் எனக்கு இந்தச் சமயத்திலே வருகின்றது. ஆகவே மன நிலையை மாற்றிக்கொண்டு நாடு மறு மலர்ச்சி அடைய மக்கள் திட்டத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதி நிலை அறிக்கையில் சய நிலையை மிகவும் சாதுர்யமாகக் கையாண்டு இருக்கிறார்கள் நமது நிதி அமைச்சர். "அண்டை நாடுகளைப் பாருங்கள்" என்று நம்மை பார்த்துச் சொல்லக்கூடிய நிலைமையில் நம்மை வைத்து விடவில்லை நமது நிதி அமைச்சர். அண்டையில் இருக்கிற மற்ற நாட்டவர்கள் நம்மைக் கண்டு ஏங்க, நாம் பெருமைப்படத்தக்க வகையில் நமது நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார் அவர். "தொழிற்சாலை வடக்கே வாழ்கிறது, தெற்கே தேய்கிறது" என்று சொல்வதற்கு முடிவு கட்டி, முற்றுப்புள்ளி வைத்தாற்போல், மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலையையும், நெல்லை ஜில்லாவில் வெங்கார உப்பு உற்பத்திச் சாலையையும், ராமநாதபுரத்திலே சிமிட்டித் தொழிற்சாலையையும், இது போன்ற பல பெரிய தொழிற்சாலைகளையும் இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் மட்டும் வேலையில்லாத் திண்டாட்டம் போய்விட்டது என்று சொல்லமுடியாது. ஒரு பெரிய தொழிற்சாலையில் 100 அல்லது 200 பேருக்குத் தான் வேலை கிடைக்கும். ஆகவே, சிறிய தொழிற்சாலைகள் வேண்டும் என்கின்ற முறையிலே அதற்கும் வழிவகை செய்து ஹரிகேன் விளக்குகள், மின்சார சாமான்கள், மருத்துவக் கருவிகள், விவசாயக் கருவிகள் முதலியவைகளைச் செய்வதற்குப் பல சிறிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாபெரும் ஜனத்தொகை கொண்ட இந்த நாட்டிலே கிராமக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்காக, தேனீ வளர்த்தல், தோல் பதனிடுதல், தீப்பெட்டிகள் செய்தல் போன்ற கிராமத் தொழில்களையும் உற்சாகப்படுத்தியிருப்பது மிகவும் போற்றத்தக்கது

நீர்ப்பாசனத்தை எடுத்துக் கொண்டால், பெரிய பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நெல்லை ஜில்லாவிலே மணிமுத்தாறுத் திட்டம் முடிவு பெறும் தருவாயில் இருக்கிறது. கீழ் பவானித் திட்டம் முடிவடைந்து விட்டது. சிறு பாசனத் திட்டங்களுக்கும் வகை செய்திருக்கிறார்கள். ஆனால் அதற்காக ரூ. 55 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மானூர் பிர்க்காவை மறக்காமல் சொல்லித்தான் வேண்டியிருக்கிறது. இவை பஞ்சப் பிரதேசத்தைச் சேர்ந்தவை. போன மந்திரி சபையிலும் சரி, இந்த மந்திரி சபையிலும் சரி, இங்கு வந்து போன மந்திரிகளுக்குக் கணக்கே கிடையாது. எங்களுடைய தொகுதிக்கு இப்பொழுது இருக்கிற உயர்திரு நிதி அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வரவேற்பு அளித்தோம். எங்களுடைய கூக்குரலையும் எழுப்பியிருக்கிறோம்.. கனம் பக்தவத்சலம் அவர்களும் வந்திருக்கிறார்கள். சமீபத்தில் கனம் கக்கன் அவர்கள் வந்து நேரில் பார்வையிட்டார்கள். அவர்கள் எல்லோருக்கும் மானூர்க் குளத்தையும் வாய்க்காலையும் [illegible]



வேளாண்மை நிலம் வெற்று நிலமாக இருக்கிறது என்ற அழுகுரலைக் கிளப்பினோம். ஆனால் மந்திரிகள் வரும்பொழுது அழவில்லை. அழுத பிள்ளை தான் பால் குடிக்கும் என்ற முறையிலே நாங்கள் எங்கள் கூக்குரலை எழுப்பினோம். அங்குள்ள மக்கள் பஞ்ச நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், தங்களுடைய குழந்தை குட்டிகளுடன், பானை சட்டிகளுடன் வெளியேறி பிச்சைக்காரர்களின் நிலைக்கு வந்து விடக்கூடாது. அதற்கு முன்னதாகவே அவர்களுக்கு அபயம் அளிக்க வேண்டும். ஆகவே மானூர்க்குளத்திற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்பது என்னுடைய விண்ணப்பம்.

அடுத்தபடியாக, தேவஸ்தான நிலங்களையும், மடாலயங்களையும் பற்றி காங்கிரஸ் மெம்பர்கள் உள்பட திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த தோழர்களும் அழகாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். மடாலயங்கள், தேவஸ்தானங்கள் சொத்துக்களை நிர்வகிப்பதிலே உள்ள ஊழல்களை கண்கூடாகக் காண்கிறோம். எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்களே, அதற்காக அதை மண்மூடிப் புதைப்பதற்கு நான் ஆசைப்படவில்லை. எங்கள் ஜில்லாவிலே ஆதீனங்கள், மடாலயங்களுக்குச் சிறந்த நிலங்களும், பஜாரிலே நிறையக் கடைகளும் இன்னும் ஏராளமான சொத்துக்களும் இருக்கின்றன. அந்த நிலங்களை விவசாயிகள் நேரடியாகப் பயிர் செய்யமுடியாத நிலையில், அவர்களின் குடிசையை விட்டு அப்புறப்படுத்தக்கூடிய நிலையில் தேவஸ்தான பரிபாலனம் நடந்து வருகிறது. இதற்குக் கூடிய சீக்கிரம் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நியாயவாரச் சட்டத்தைப் பற்றி ஒரு வார்த்தைகள் சொல்லாமல் இருக்க முடியாது. 60, 40 விகிதச் சட்டம் கொண்டு வந்தார்கள். எதற்காக அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்களோ அதன் பயனை மக்கள் அநுபவிக்க முடியாமல் இருக்கின்றனர் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தினால் பெரியபெரிய நிலச்சுவான்தாரர்களுக்கு, எந்த விதத்திலும் பாதகம் ஏற்படவில்லை. எங்கள் ஜில்லாவிலே ½ ஏக்கர், 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்கள்தான் நிறைய இருக்கிறார்கள். அவர்களைத்தான் இந்தச் சட்டம் பாதிக்கிறதே ஒழிய, 3, 4 குளங்களை வைத்துக் கொண்டு மூன்று போகம் பயிர் செய்யும் பண்ணையார்களையும், மிராசுதார்களையும் ஒன்றும் பாதிக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் சொந்தப் பயிர் வைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே சிறிய நிலச்சுவான்தார்களுக்கு இந்த 60, 40 சட்டத்திலிருந்து விதி விலக்கு அளிக்கவேண்டும். அதோடு கூட அவர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கவேண்டும். அனாதைப் பெண்கள், அபலைப் பெண்கள், கைம்பெண்கள், தங்களிடம் உள்ள நகைநட்டுகளை விற்று, அந்தப் பணத்தை நிலத்திலே போட்டு, தங்கள் குழந்தை குட்டிகளைப் பராமரித்து வருகிறார்கள். அவர்கள் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்கள் கோர்ட்டுக்கோ, வக்கீல்கள் வீட்டுக்கோ போகமுடியாத அவல நிலையில் இருக்கிறார்கள். மூன்று ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கும் சிறிய நிலச்சுவான்தார்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு, அவர்களுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று ஒரு திருத்தம் கொண்டுவரவேண்டும்.

பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் பையன்கள் அத்தனை பேர்களையும் மெடிகல் காலேஜுக்கோ அல்லது எஞ்சினியரிங் காலேஜுக்கோ அனுப்பிக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் தங்கள் பையன்களை சொந்த விவசாயத்தில் ஈடுபடச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். ஆகவே அவர்கள் சொந்த விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கும் முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையின் முன்பு 1957–58-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 56 கோடியே 49 லட்ச ரூபாய் வரவும், 69 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவும் உள்ள இந்த வரவு செலவுத் திட்ட 12-40 p.m.

அறிக்கை நம் முன்பு உள்ளது. இந்தத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 483 லட்சம் ரூபாயாக இருக்கிறது. 183 லட்சம் ரூபாய் வரிகள் மூலம் அதிக வருமானம் கிடைக்கும் என்றும், அதன் காரணமாக இந்த 483 லட்சம் ரூபாய் பற்றுக்குறையானது 333 லட்ச ரூபாயாகக் குறையும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கம்மியான பட்ஜெட் என்பதற்காக இந்த பட்ஜெட்டைப் பற்றிக் கண்டனம் தெரிவிக்கவோ, அல்லது உபரி பட்ஜெட்டாக இருந்தால் போற்றுவதற்கோ நான் முன்வரவில்லை. ஆரம்பத்திலே கம்மியாக இருந்த பட்ஜெட் வருட இறுதியில் உபரியாக ஆகிறது என்பது வருடாவருடம் நாம் பார்க்கின்ற சாதாரண விஷயமாக இருக்கிறது. ஆரம்பத்தில் ரெவின்யூ (வருமான) இனத்தில் கம்மியாக இருக்கும் தொகை வருட இறுதியில் உபரியாக மாறுவது மிகவும் சாதாரண விஷயமாக இருந்து வருகிறது. சமீபத்தில் தேசத்தில் பல ராஜ்யகளில் காங்கிரஸ் சர்க்கார் கம்மியான பட்ஜெட்டுகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஒரிஸாவில் 3 கோடியே 15 லட்சம் ரூபாய் கம்மியாகவும், மைசூரில் 97 கோடியே 35 லட்சம் ரூபாய் கம்மியாகவும், வங்காளத்தில் 17 கோடியே 15 லட்ச ரூபாய் கம்மியாகவும் காங்கிரஸ் சர்க்கார் பட்ஜெட்டுகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். நான் அவைகளைப் பற்றி கவலைப்படவில்லை. ஆனால் **ways and means**-ல், அதாவது ரொக்க வசதித் தேவைகளில், பெருமளவில் துண்டு விழுகிறதே என்று தான் கவலைப்படுகிறேன். ஏனெனில் நமக்கு ரொக்கமாக 13 கோடி ரூபாய்க்கு மேல் வேண்டியிருக்கிறது என்று நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இந்த 13 கோடி ரூபாயை எந்த முறையில் சரிக்கட்டுவது என்பதுபற்றி கனம் மந்திரி அவர்கள் தமது உரையில் திட்டவட்டமாக ஒன்றும் குறிப்பிடவில்லை.

இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை வெறுமனே இந்த ஓராண்டின் வரவு செலவுத் திட்டமாக மாத்திரம் கருதுவது சரியல்ல என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டாவது ஆண்டின் வரவு செலவுத் திட்டமாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 4,800 கோடி இந்திய அரசாங்கத் திட்டத்தில் செலவழிக்கப்படவிருக்கிறது. இந்த ரூ. 4,800 கோடியில் நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை சுமார் 152 கோடி 25 லட்சம் ரூபாய் ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி சமீபத்தில் பத்திரிகையில் வந்துள்ள செய்தியைப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் பட்ஜெட்டில் வெளியிட்ட செய்தியில், ரூ. 4,800 கோடியுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 500 கோடி ரூபாய் இன்னும் அதிகமாகத் தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு முன் தினம் தான் இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் ஒரு சொற்பொழிவில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீடு இன்னும் 1,500 கோடி ரூபாய் அளவு உயர்ந்து மொத்த மதிப்பீடு 6,000 கோடி ரூபாய்க்கும் அப்பால் போய்விடக்கூடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டியிருக்கும்போது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது ராஜ்யத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சுமார் 200 கோடி ரூபாய் தேவைப்படலாம் என்று தோன்றுகிறது. கடந்த வருஷங்களில் செலவான தொகையைப் பார்த்தால் மேலும் சுமார் 150 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கலாம் என்று தோன்றுகிறது. அப்படியிருக்கும் போது, இந்த வரவு செலவுத் திட்டத்திலுள்ள பற்றுக் குறையை எப்படி சரிக்கட்டப் போகிறோம், எப்படிப் பணம் வரும், எப்படி திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம் என்று நான் ஐயமுறுகிறேன். இந்தப் பிரச்னைக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அதாவது, வெளிநாட்டிலிருந்து பண சகாயத்தை எதிர்பார்ப்பது தான். அது போதிய அளவு கிடைக்குமா என்பது பற்றியும் இந்தச் சபையில் பேசிய பல நண்பர்களும் ஐயமுற்றனர். இதே நேரத்தில், நமது நாட்டிலுள்ள ரொக்க வசதித் தேவைகளை (ரிஸோர்ஸஸ்) நல்ல முறையில் பயன்படுத்துகிறோமா என்பதுபற்றி நாம் சிந்திக்க வேண்டியது அத்தியாவசியமானது. இன்று வரையில் இந்த நாட்டில் பணத் தேவையை சமாளிப்பதற்குப் பெருமளவில் ரூபாய் நோட்டு அடிக்கும் முறையைத் தான் கையாண்டிருக்கிறார்கள்.



இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 1,200 கோடி ரூபாய் வரையில் நோட்டு அடிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். தற்போது அந்த அளவிற்கு நோட்டு அடிக்கலாமா என்பதுபற்றி ஐயமுறுகிறார்கள் பொருளாதார நிபுணர்கள். அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கும் விலைவாசியை நாம் கவனிக்க வேண்டும். விலைவாசிகள் உயர்ந்து வருகின்றன. நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பும் பொருள்களின் விலைகள் கம்மியாகிக் கொண்டும், வெளிநாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் பொருள்களின் விலைகள் உயர்ந்துகொண்டும் வருகின்றன. நமது நாட்டிலிருந்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்த நிலைமை எந்த அளவிற்கு நமது திட்டங்களை பாதிக்கும் என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இன்றுள்ள முதலாளித்துவ சமுதாயத்தில் "டெபிசிட் பட்ஜெட்" முறையைக் கடைப்பிடித்தால், முக்கியமாக "டெபிசிட் பைனான்சிங்" முறையைக் கையாண்டால் பொருளாதாரக் கஷ்டத்தை சமாளிக்கலாம் என்று பல நண்பர்கள் கூறினார்கள். அந்த முறை முதலாளித்துவ சமுதாயத்தில் சொத்து உடையவர்களுக்குத்தான் அனுகூலமாக இருக்கும். ஒரு நாட்டில் விலைவாசிகளின் உயர்வால் மேலும் மேலும் தான் இன்னல்கள் வரும். உணவுப் பொருள்களின் விலை உயர்வைப்பற்றி இந்தச் சபையில் பேசும்போது கனம் மந்திரி அவர்கள், தேவைக்கு அதிகமாகவே இந்த ராஜ்யத்தில் உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள ரிசர்வ் பாங்கியின் அறிக்கையில், சுமார் ரூ. 613 கோடியிலிருந்து ரூ. 933 கோடி வரையில் உணவு தானியங்களுக்கு, குறிப்பாக சர்க்கரை முதலிய பொருள்களுக்கு "ஓவர் டிராப்ட்" கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்வதால் யாருக்கு லாபம் ஏற்படும்? இப்படிச் செய்வது, நாட்டிலுள்ள "ஸ்பெகுலேட்டர்"-களுக்கு உணவைப் பதுக்கிவைத்து லாபம் அடிக்க விரும்புகிறவர்களுக்குத்தான் லாபமளிப்பதாக இருக்குமேயல்லாமல், வேறு யாருக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் நாம் வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டானது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலத்தில் ஒரு பகுதியான இரண்டாவது ஆண்டாக இருக்கிறது. இந்த இரண்டாவது ஆண்டில் இப்படிப்பட்ட நிலைமையில் நாம் எப்படித் திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம்? மூலதனச் செலவுகள் இனத்தில், சில மூலப் பொருள்களை வாங்குவதற்கு ஆகும் செலவு, சில முதலீடுகள், ஆகியவை இருக்கின்றன. இந்த இனத்தில் எந்த எந்த கேந்திரமான தொழில்களை நாம் ஆரம்பிக்கப்போகிறோம், எந்த எந்தத் தொழில் திட்டங்களை கைவிடப் போகிறோம், எந்தத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம், அதாவது எந்தத் திட்டத்தை முன்னே செய்யப்போகிறோம், எந்தத் திட்டத்தை பின்னே செய்யப்போகிறோம் என்பதெல்லாம் தெரிந்தால் நன்றாக இருக்கும். அந்த விஷயங்களை இந்தச் சபைக்குத் தெரிவித்தால் மிக நன்றாக இருக்கும். கடந்த ஆண்டில் கூட சுமார் 29 கோடியே சொச்சம் ரூபாய் தான் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதை விட மிக அதிகமாகச் செலவு செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் அந்த அளவிற்கு செலவு செய்ய முடியவில்லை என்று தமது பட்ஜெட் உரையில் கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் 32 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். முந்தைய ஆண்டு நிலைமையைப் பார்க்கும் போதும், வரவு செலவுத் திட்டத்தில் நமது நிதி நிலைமையைப் பார்க்கும் போதும், இந்தத் தொகை செலவு செய்யப்பட்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுமா என்று நான் மிகவும் ஐயுறுகிறேன். திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றுவதற்கான வழிவகை செய்வதற்கு வரவு செலவுத் திட்டத்தில் சில மாறுதல்கள் அவசியமாக இருக்கலாம். பணம் பெறுவதற்கு வரி விதிப்பதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் வரியை யார் தலையில் சுமத்த வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஏழை எளியவர்கள் தலையில் வரிப்பளுவைச் சுமத்துவதா? அல்லது செல்வம் வைத்திருப்பவர்களின் தலையில் சுமத்துவதா என்பது பற்றி சிந்திக்க வேண்டும். வரி இனத்தில் புதிய வரிகள் போடாமலேயே பழைய வரியில் திருத்தம் செய்து சுமார் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் அதிக வருமானம் பெறுவதற்குத் திட்டமிட்டிருக்கி

றார்கள். அதில் சுமார் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் நடப்பு ஆண்டில் எஞ்சிய மாதங்களில் கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கிறார்கள். எல்லாப் பெரும் தோட்ட உடைமையாளர்களின் மீதும் மொத்தம் சுமார் 25 லட்ச ரூபாய் தான் வரியாகச் சுமத்தியிருக்கிறோம். அதே நேரத்தில் பெரிய நிலச்சுவான்தார்களுக்கு வரிபோடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. பெரிய நிலச்சுவான்தார்கள் மீது பக்கத்திலுள்ள ராஜ்யங்களில் விவசாய வருமான வரி சுமத்தப்பட்டிருக்கிறது. சுமார் ரூ. 300, ரூ. 400 வருமானம் பெறும் உத்தியோகஸ்தர்கள் வரி கொடுக்கிறார்கள். சினிமாக் கொட்டகைகாரர்களும், வெற்றிலை பாக்கு கடைகாரர்களும் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் பெரிய நிலச்சுவான்தார்கள் மீது வரிப்பளு சுமத்தப்பட்டிருக்கிறதா? என் அவர்களுக்குப் போடக் கூடிய வரியைக்கூட போடக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

கோடிக்கணக்கான பணமுள்ள பெரிய நிலச்சுவான்களிடமிருந்து இன்னும் பணம் வசூலித்து, அதை நல்ல முறையில் ஏன் உபயோகிக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இப்படி, அவர்கள் மீது வரி சுமத்தாமல், சாதாரண மக்கள் மீது வரி சுமத்துகிறார்கள். இன்று வரிச் சுமையைத் தாங்கமுடியாத ஏழை மக்கள் மீது மேலும் மேலும் ஏற்றிக் கொண்டே போகிறார்கள். யார்மீது நியாயமாக சுமத்த வேண்டுமோ அவர்கள் மீது சுமத்துவது இல்லை. இன்று இருக்கிற சர்க்கார் இதை செய்யப் பின் வாங்குகிறது. இதற்கு, மிக மிக முக்கியமாகப் பல காரணங்கள் இருக்கின்றன. இவர்கள் (சர்க்கார் கட்சி) யாரைச் சேர்ந்தவர்கள், யாருக்காக பணியாற்றி வருபவர்கள் என்பதுதான் கேள்வி. இதற்குப் பதில், முதலாளித்வ பொருளாதார பத்திரிகையான **Eastern Economist**-ல் கூறப்பட்டிருக்கிறது. அதை மாத்திரம் படித்துக் காட்டி விட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM: The hon. Member should not read extract from the paper. He can refer to it.**

**SRI K. SATTANATHA KARAYALAR:** குறிப்பாக சர்க்கார் யாருடைய பிரதிநிதிகள் என்று பார்த்தால், அவர்கள் பெரும் நிலச்சுவான்களாக இருப்பதால் அவர்கள் அஞ்சி, அஞ்சி, தயங்கி தயங்கி, '**at snails pace**' ஆமை வேகத்தில் ஊர்ந்து, ஊர்ந்து நிலச்சுவான்தார்களை தொடப்பார்க்கிறார்கள். இந்த நிலைமைக்கு காரணம், ஆட்சியில் இருக்கிறவர்கள் யாருடைய பின் பலத்தால் இருக்கிறார்கள், யாருடைய கையில் அடங்கியிருக்கிறார்கள் என்பதை தான் சுட்டிக்காட்டுகிறது. **Eastern Economist** என்ற முதலாளித்வ பத்திரிகை ஜூன் மாதம் 14-ம் தேதி இதழில் குறிப்பிட்டிருக்கிறது. இந்த நற்சாட்சிப் பத்திரம் தங்களை பெருமைபடுத்தும் என்று நீங்கள் எண்ணுவீர்களானால் அதிலே நீங்கள் பெருமை அடைந்து கொள்ளலாம். வணக்கம்.

12-53 p.m. **SRI P. S. K. LAKSHMIPATHI RAJU:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே: கனம் நிதி அமைச்சர் சமர்பித்துள்ள பட்ஜெட்டை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏறக்குறைய 1½ நூற்றுண்டுகளாக சீர்திருத்தங்கள் என்னவென்பதே அறியாத பகுதியின் பிரதிநிதியாக நான் வந்திருக்கிறேன். இன்று இந்தச் சட்டச் சபையில் தீர்க்க தரிசனத்தோடு நல்ல முறையில், எதிர்க் கட்சியினர்கூட அதிக குறைகூற முடியாதபடி, நிதிமந்திரி அவர்கள் சமர்பித்துள்ள பட்ஜெட்டின் மேல், பேச விரும்புகிறேன். இன்று எதிர்க்கட்சியினர் பேசுகின்ற முறையைப் பார்க்கும்பொழுது, எனக்கு முன்பு ஒருசிலர் கூறியதை உபமானமாக சொல்ல வேண்டியிருக்கிறது. நிதிமந்திரி அவர்கள் பட்ஜெட்டில், புது வரிகள் போடுவார்கள். அவைகளை எதிர்த்து, பலமானதோர் பின் பலத்தைத் தேடி வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தவர்களுடைய எண்ணத்திலே, நமது நிதி மந்திரி மண்ணைத் தூவி விட்டார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இன்று மக்களுக்கு வேண்டிய பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு அவைகளை நிறைவேற்ற காரியத்திலே சர்க்கார் முனைந்து நிற்கும்போது, அவர்கள் மக்களுக்கு



இவ்விதம் சேவை செய்கின்ற இந்த நேரத்திலே அவர்களுடன் ஒத்துழைத்தும் அவர்கள் கையைப் பலப்படுத்தாமல், வெறும் வாதங்களைக் கிளப்பிக் கொண்டிருப்பது சரியல்ல.

எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட வரையில், பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ஜமீன்தாரிமுறை இருந்த காலத்திலிருந்து அதாவது ஒன்றரை நூற்றுண்டுகளில், மக்கள் வசதி பெறுக எவ்வித சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளவில்லை. ஷண்முக நதியின் மீது கட்டப்பட்ட ஒரு பாலத்தைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகும் பல ஜீவ நதிகளை நல்ல முறையிலே எங்கள் பிரதேசத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஏறக்குறைய 11,000 ஏக்கர் நிலத்தை சாகுபடி செய்ய உதவும். பரம்பார் திட்டத்தைக் கொண்டு வருவதாய் இருந்ததில் சில சட்ட நுணுக்கச் சிக்கல்களினாலும், வாய்க்கால்கள் எத்திசையில் எப்படி வெட்டவேண்டும், கிழக்கிலா, மேற்கிலா என்ற வாதங்களினால், இத்திட்டம் தடைப்பட்டுப் போய்விட்டது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதிலுள்ள இடைஞ்சல்களையெல்லாம் நீக்கி, உடனடியாக அதை மேற்கொள்ள வழிவகை செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே மிகப் பஞ்சப் பிரதேசமாகிய பழனிப் பகுதியிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுததால் மக்கள் வாழ முடியாத நிர்ப்பந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த கொங்கு நாட்டுப் பிரதேச மக்கள் ஆப்பிரிக்க நீக்ரோக்களைவிட மிகக் கேவலமான நிலையில் இருக்கிறார்கள். கிராமப்புறங்களுக்குச சென்று பார்த்தால் ஒரே பஞ்சக் காட்சியை நாம் காணலாம். மேலே குறிப்பிட்ட திட்டத்தை அங்கு வசிக்கும் மக்கள் காமதேனுவைப் போலிருக்கும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அதை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயம்புத்தூர்-மதுரை ஜில்லாக்களின் எல்லையில், பழனிப்பகுதி சமீபத்தில் உள்ள அமராவதி நதித் திட்டம் முடிவடையும் தருணத்தில் இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கால்வாய் மூலமாக 20 அல்லது 30 மைல்களுக்கு அப்பால் உள்ள தாராபுரத்தில் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. ஆனால் சமீபத்தில் உள்ள பஞ்சப் பிரதேசங்களில் உள்ள நிலங்களுக்கு இத் திட்டம் பயன்படுவதில்லை. இந்த அணையை சுமார் 10 அடி உயர்த்தினால் அமரவதி நதியின் கிழக்கே உள்ள விவசாய மக்களுக்கு மிக உபயோகமாக இருக்கும். பழனியில் பதினெட்டாயிரம் ஜனங்கள் வசிக்கும்போது அமூலாக்கப்பட்டது குடி தண்ணீர்த்திட்டம். இப்போது பழனி நகரத்தில் சுமார் 50,000 மக்கள் வாழ்கின்றார்கள். இதைத் தவிர அங்கு ஏராளமான யாத்ரீகர்கள் வந்து போகிறார்கள். ஆதலால் அங்கு குடி தண்ணீர் வசதியை விரிவுபடுத்த வேண்டும். நியாய வாரச் சட்டத்தைப்பற்றி பல நண்பர்கள் பேசினார்கள். இந்தச் சட்டம் வந்ததின் காரணமாக பல விவசாயிகள் தொந்திரவுக்குள்ளாகி இருக்கிறார்கள். கீழ்க் கோர்ட்டிலும், ஹைகோர்ட்டிலும் கூட, பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயிகளை இந்தச் சங்கடங்களிலிருந்து விடுவிக்க ஒரு அவசரச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

பழனியிலிருந்து கொடைக்கானல் 17 மைல் தூரத்தில் இருக்கிறது. பழனிமலையில் இருந்து பார்த்தால் கொடைக்கானல் தெரியும். ஆதலால், அங்கு வரும் யாத்ரீகர்களும், மற்றவர்களும் கொடைக்கானலுக்குப் போகப் பிரியப்படுகிறார்கள். ஆனால், அப்படிப் போக வேண்டுமானால் 100 மைல் பிரயாணம் செய்யவேண்டும். ஏனென்றால், அங்கு நேரே போவதற்கு மலைவழியே பாதை கிடையாது. ஆகையால் பழனியிலிருந்து மலைப் பாதை வழியாக கொடைக்கானல் போவதற்கு ஓர் ரஸ்தா போடவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். பழனியிலிருந்து திருப்பூருக்கு ஒரு ரயில்வே லையன் போடவேண்டுமென்று பழனி நகரசபை, தாராபுரம் நகரசபை, திருப்பூர் நகரசபை ஆகிய அத்தனையும் சேர்ந்து வேண்டுகோள் விடுத்திருந்தும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. மைசூர் சாம்ராட் நகரத்திலிருந்து பழனி வரையில் உடனடியாக ரயில்பாதை போடும் வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய அன்பர்கள் பல தேவஸ்தானங்களில் குவிந்துள்ள பணத்தை எடுத்துக் கலாசார ஸ்தாபனங்கள், கல்வி ஸ்தாபனங்கள் முதலியவைகளை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பழனி தேவஸ்தான போர்டின் தலைவர் என்ற முறையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தேவஸ்தானப் பணத்தை லட்சக்கணக்கில் செலவிட்டு நாங்கள் கல்லூரி ஏற்படுத்தத் தயாராய் இருக்கிறோம். சர்க்கார் அனுமதி கொடுத்தால் ஆறு லட்சம் ரூபாய் வரையில் செலவழித்துக் கல்லூரி கட்ட நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

அதோடு கிராமப் புறங்களில் ஹரிஜன விவசாயிகள் படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்கு இருக்கக் கூடியது வீட்டுப் பிரச்னை. ஒரு சின்னக் குடிசையில் வயது வந்த தாய் தந்தையர்கள், சிறுவர்கள், கலியாணம் ஆன தம்பதிகள் வாழவேண்டி இருக்கிறது. இது மிகவும் சங்கடமாகும். ஆகவே நிறையப் பணம் ஒதுக்கி அவ்வேழைகளுக்கு எல்லாம் வீடு கட்டித் தரவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER** : The hon. Member's time is up. The time allowed to hon. Members is reduced from 10 minutes to 5 minutes as there are a number of speakers. The hon. Member Sri Marimuthu will now speak.

**Sri A. GOVINDASAMY** : சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பத்து நிமிஷத்திற்குக் குறையாமல் பேசுவதற்கு நேரம் ஒதுக்குவதாக கனம் சபாநாயகர் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER** : லிஸ்டில் இருபது பேர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாங்கள் எல்லாம் இப்போது பேசாவிட்டாலும் இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசுகின்றோம். ஆனால் எங்களுக்குப் பேச பத்து நிமிஷத்திற்குக் குறைந்து கொடுக்காமல் இருக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, போன தடவையே பேசுவதற்கு ஐந்து நிமிஷம் கொடுத்து, அதையும் மூன்று நிமிஷமாகக் குறைத்துவிட்டார்கள். அதனால் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்ல முடியாமல் போய்விட்டது. ஸ்ரீ ராஜாஜி காலத்தில் இரவு நேரத்திலும் கூட சபை கூடிற்று. அதுபோல இரவு கூடினாலும் பரவாயில்லை. குறைந்தது பத்து நிமிஷமாவது எல்லோருக்கும் பேசுவதற்குத் தகுந்த சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER** : அவை முதல்வர் வரட்டும். அதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாம். இப்போது ஸ்ரீ மாரிமுத்து பேசுவார்.

1-07 p.m. **Sri A. R. MARIMUTHU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட், பெருவாரியான நன்மையை அளிப்பதாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்த்த மக்களுக்கு மிகுந்த ஏமாற்றமாகத் தான் இருக்கும். அதோடு கூட பட்ஜெட்டிலே வரியையும் அதிகப்படுத்தி இருக்கிறார்கள். புதிதாக வரி போடவில்லை என்றாலும் இருக்கும் வரியை அதிகப்படுத்துவதன் மூலம் கஷ்டப்படக்கூடிய மக்களுடைய தலையில் ஒன்றரை கோடி ரூபாய் சுமத்தியிருப்பது வருந்த வேண்டிய விஷயம். அதோடு சோஷலிஸ கண்ணோட்டத்தின் அடிப்படையில் இந்த பட்ஜெட் தயாரிக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேசத்தில் நிர்மாணத் திட்டங்கள் பலவற்றைப் போட்டாலும்கூட நாட்டிலுள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய நாட்டைப் போன்ற பிற்போக்கான நாடுகளில் முற்போக்கான திட்டங்களுக்கு அதிக மூலதனம் ஒதுக்க வேண்டியிருக்கிறது.





அதிகப்படியான மூலதனத்தைப் பெற அதிக வருமானமுடையவர்களுக்கு வரி போட வேண்டும். இன்னும் பெரிய பொருளாதார வல்லுநர்கள் எல்லாம் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போது பிற்போக்கான நாடுகளில் எவ்வளவுக்கெவ்வளவு வருமானத்தில் வித்தியாசம் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சேமிப்பும் வித்தியாசப்படும். வித்தியாசம் அதிகமாக இருந்தால் சேமிப்பு குறைவாக இருக்குமென்று அநுபவ பூர்வமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை ஞாபகத்தில் கொண்டு பார்த்தோமானால் பிற்போக்கான நாடுகளில் அதிகப்படியான பேர்களுக்குச் சேமிப்புக்குள்ள வாய்ப்பு இல்லை. சர்க்கார் சோஷலிஸ கண்ணோட்ட அடிப்படையில் இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்குமானால் இந்தப் பற்றுக்குறை பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டியதாக இருக்காது. "வரி போட்டால் வரி போடுகிறீர்களே என்று எதிர்க்கிறார்கள். வரிபோடவில்லை என்றாலும் அதையும் ஒரு குறையாகப் பேசுகின்றார்கள்" என சர்க்கார் கட்சிக்காரர்கள் பேசுகின்றார்கள். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் வரி போடுவதை எதிர்க்கவில்லை. ஆனால் வரி யாருக்குப் போடவேண்டுமென்பதுதான் பிரச்னை. நமது ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால் மக்கள் தாங்க முடியாத வரிச் சுமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலருக்கு வருமானம் மிக அதிகம் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்ற அளவு வரிபோடப்படவில்லை. இப்படிப்பட்ட வருமான ஏற்றத்தாழ்வை சமபடுத்த அதிக வரியைத் தாங்கக் கூடியவர்களுக்கு போட்டு மூலதனத்தை சேகரிக்கும் பட்ஜெட்டாக இது அமைந்திருந்தால் சோஷலிஸ கண்ணோட்டத்தில் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் என்று சொல்லக்கூடும். அப்படி அமையாதது மக்களுக்கு மிக்க ஏமாற்றத்தை அளிப்பதாக இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு சிறு சேமிப்பு இருக்கிறது. மக்கள் அதிகப்படி சேமிக்க வேண்டுமென நிதி மந்திரி அவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சர்க்கார் தங்களுடைய சுபீட்சத்தில், அபிவிருத்தியில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்கள் என்கிற நம்பிக்கை மக்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்காருடைய திட்டங்களிலே பூர்ணமாக ஒத்துழைக்கத் தயாராய் இருப்பார்கள். ஆனால் இன்று மக்கள் தங்களுடைய எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் நிர்வாக ஊழல்தான். சர்க்கார் நிர்வாக ஊழலை ஒழிக்க, லஞ்ச முறையை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டங்கள் இயற்றுவதால் பலன் ஏற்படாது. இயற்றப்பட்ட சட்டங்களை நன்றாக நிறைவேற்றி வைக்கப்பாடுபடவேண்டும்.

ஷாப் ஆக்ட் கொண்டு வந்திருக்கிறோம். எட்டு மணிக்கு மேல் தொழிலாளர்களிடையே வேலை வாங்கக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் பல நகரங்களில் இந்தச் சட்டம் கடைபிடிக்கப்படவில்லை. இதை சரியாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் நாட்டில் உணவு உற்பத்தி குறைவதால் விலை அதிகரித்துக் கொண்டு போகிறது. விலை உயர்வைக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியம். சிறுசிறு பாசன வசதிகளை விஸ்தரிக்க வேண்டியது அவசியம். ஏழை விவசாயிகளிடமிருந்து பல மனுக்கள் நீர்ப்பாசன வசதி கோரி வந்திருக்கின்றன. ஏழு, எட்டு வருஷங்களாக அவை கவனிக்கப்படாமலேயே இருக்கின்றன. இதைக் கவனிக்கவேண்டும். கவனித்தால் எல்லா பகுதிகளிலுமுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயரக் கூடும். அடுத்தபடியாக 'நிலம் இல்லாத விவசாயிகளுக்கும்' என்று மாஜி ராணுவத்தினருக்கும் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலங்களைச் சீர்திருத்தம் செய்வதற்கு சர்க்காரால் கடன் கொடுக்கப்பட்டது. எப்படி இருந்தாலும் அந்தப் பணத்தை அவர்களால் திருப்பிக் கொடுக்கமுடியாதபோது அந்தத் தொகைக்காக அந்த நிலங்களை மறு ஏலத்திற்குக் கொண்டுவருகிறார்கள். அந்த நிலை இல்லாமல் தடுப்பதற்காக மாஜி ராணுவத்தினருக்குக்

கொடுக்கப்படும் நிலங்கள் கடன் தொகைக்காக ஏலம் விடாமல் நிலமில்லாத விவசாயிகளுக்கு மறு அடமானம் செய்து அந்தத் தொகையை அவர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1-10 p.m. * **Sri S. NAGARAJA MONIGAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையின் முன்பு சமர்பிக்கப்பட்டு இருக்கும் வரவு செலவுத் திட்டத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் எல்லா புகழுக்கும் உரியவர் என்பதை சந்தோஷத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நம் முன்பு உள்ள வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறை திட்டமா அல்லது உபரி திட்டமா என்கிற பிரச்னை இப்போது நமக்கு அவசியமில்லை. ஏனென்றால் இதைப்பற்றிப் பேசுவதற்கு நமக்கு அருகதை இல்லையா, அல்லது இங்குள்ளவர்களுக்கு நிதி நிபுணத்துவம் இல்லையா என்று கேட்கப்படவேண்டியது இல்லை. நாம் எல்லோரும் நிதி நிபுணத்துவம் உள்ளவர்கள்தான். ஆனால் இந்த திட்டம் ஒரு கட்சி அரசாங்கத்தினுடைய திட்டம். இந்த நாட்டுக்கு சுதந்திரம் தேடித்தந்த தலைவர்கள் பலர் இந்த நாட்டின் பல மாகாணங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் இருந்து ஒரு வருடமல்ல, 10 வருடங்களாக வரவு செலவுத் திட்டங்களை அந்தந்த மாகாணங்களில் சமர்ப்பித்து வெளிநாட்டார்களுடைய மதிப்பையும் பெற்று வருகிறார்கள். ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கிற வெளிநாட்டு உள்நாட்டு சிக்கல்களுக்கிடையிலும் இயற்கையால் ஏற்படக்கூடிய கஷ்டங்களுக்குமிடையிலும் திறமையாக அரசாங்கத்தை நடத்தி புகழும் பெற்றிருக்கிறார்கள். இது மாதிரி எந்த நாட்டின் சரித்திரமும் இல்லை, என்றால் அதுவே இதற்கு போதிய சான்றாகும். மேலும் சென்னை அரசாங்கத்தின் நிதி விஷயங்களை கவனித்து கொண்டிருக்கிற அக்கௌண்டண்ட் ஜெனரல் அவர்கள் மத்திய அரசாங்கம் வரையிலும் பெயர் பெற்று இருக்கிறார்கள். இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் நமது மதிப்பிற்குரிய நிதி மந்திரியின் தலைமையின் கீழ் ஆறு ஆண்டு காலமாக நன்றாக பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதாகும். இதைப்பற்றி எந்த வகையிலும் யாரும் வருத்தப்பட வேண்டியதோ பற்றாக்குறை பிரச்சனையைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமோ கிடையாது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 26 பக்கங்களைக் கொண்ட அவரது பட்ஜெட் பிரசங்கமானது கவர்னர் உரையின்போது முணுமுணுத்தவர்களுக்கும் இந்த அரசாங்கம் இவ்வளவு காலமாக என்ன சாதித்து விட்டது என்று கேட்டவர்களுக்கும் ஒரு ஆணித்தரமான பதிலாகும். ஆனால் கண் இருந்தும் பார்க்க மாட்டேன், காது இருந்தும் கேட்க மாட்டேன், நாவு இருந்தும் நல்லது சொல்ல மாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. நாங்கள் துதிபாடி தோத்திரம் செய்ய வரவில்லை, புகழ்பாடி பூமாலை அணிந்து கொள்ள இங்கு வரவில்லை என்று இச்சபையில் சிலரால் சொல்லப்பட்டது. துதிபாடியவர்களுக்கு இச்சபையில் என்றும் பூமாலை போட்டது கிடையாது. இச்சபையின் சரித்திரத்தில் கிடையாது. அதுபோலவே கெட்டதையே சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கோ அல்லது குற்றங்களையே தீயதையே எடுத்துக் காட்டிக் கொண்டு காத் தழும்பேற வசைப்பாடிக்கொண்டிருப்பவர்களுக்கோ பூமாலை கிடைக்கப் போவதில்லை. வெளியில் மக்களிடமிருந்தும் பூமாலை விழும் என்று எதிர்பார்க்க வேண்டாமென்று தலைவர் அவர்களே, தயவு செய்து நீங்கள் அவர்களுக்கு அறிவுறுத்துங்கள். இதற்கு ஏற்காடு தேர்தல் முடிவு ஒரு சான்றாகும். இந்த அரசாங்கம் இதுவரை என்ன செய்திருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்களுடன் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். கல்வி, சுகாதாரம் நீர்ப்பாசனம் முதலிய தலைப்பின் கீழ் பல நல்ல திட்டங்களை எடுத்துக்காட்டி சொல்லியிருந்தும் அதில் ஒன்றைக்கூட நல்லது என்று பார்க்கமுடியவில்லையே என்று சொன்னால் அதற்கு நாம் என்ன செய்வது ? நான் குற்றங்களை எடுத்துச் சொல்லக் கூடாது என்று சொல்லவில்லை; ஒரு சிறிதாயினும் ஒரு சில நல்ல அம்சங்களை ஒப்புக்கொள்ள வேண்டாமா என்று கேட்கிறேன். மகாபாரதம்,



இராமாயணம் இவைகளைக் கொளுத்திவிட்டு குறள், குறள் என்று ஒலிக்க குறளை மாத்திரம் பெரிதாக எடுத்துக் கூறுகின்றவர்களுக்கு இந்த நேரத்தில் ஒன்று சொல்லுகிறேன் :

" நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று "
" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு "

என்ற அறிவுரையின்படி செய்திருக்கக் கூடிய நன்மைகளையாவது இந்த் வாயால் ஒரு முறை பாராட்டிச் சொல்லிவிட்டு அதன் பின் குற்றங்களை சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டுகளில் எத்தனையோ தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன, என்கிற விவரங்களையெல்லாம் நிதி அமைச்சர் அவர்கள் வெகு சிரமத்தோடு இதில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**Sri K. ANBAZHAGAN**: On a point of information, Sir,

**DEPUTY SPEAKER**: The hon. Member is not yielding unless he resumes his seats, I cannot allow the hon. Member (Mr. Anbazhagan) to speak. Except on a point of order.

**Sri S. NAGARAJA MONIGAR**: இங்குள்ள திட்டங்கள் எல்லாம் வெறும் காகிதத் திட்டங்கள்தான் என்று சிலர் குற்றப்படுத்தினார்கள். இதற்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் மக்கள். இங்கு மாத்திரமல்ல, இந்த நாடு பூராவிலுமே இந்த மாதிரி காகிதத் திட்டங்கள்தான் இருந்து வருகிறது. இதெல்லாம் வெறும் காகித திட்டங்கள் அல்ல. இதை மக்கள் ஏற்றுக் கொண்டு இந்தச் சபைக்கு 151 பேர்களை வெற்றியுடன் தேர்தலில் அனுப்பி இருக்கிறார்கள். அப்படி அனுப்பிய மக்கள் எல்லாம் ஏமாந்த சோணகிரிகள் அல்ல. வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்று பலர் கூறினார்கள். நான் சொல்லுகிறேன். ஐந்து, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததையும் தற்பொழுதுள்ள நிலையையும் பற்றி நாட்டுப் புறங்களில் இருப்பவர்களைக் கேட்டால் தெரியும். இப்பொழுது எவ்வளவு மாறியிருக்கிறதென்று. எத்தனையோ டீ ஸ்டால்கள், எத்தனையோ க்ஷவரக் கடைகள், காபி கடைகள், சைகிள்ஷாப்புகள், ஜவுளிக் கடைகள், சினிமாக்கள் கூடுதலாகப பெருகியிருக்கின்றன. இதிலிருந்து மக்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பது தெரியவில்லையா? இவைகளை யெல்லாம் பணக்காரர்கள் மாத்திரம் தான் உபயோகிக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ? ஏழைகள்தான் அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஆகவே குறைகள் நீக்கப்பட்டிருந்தாலும் இன்னும் இருக்கிற சில குறைகளை நிதி அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிக்க விரும்புகிறேன். நாங்களும் குறைகளைச் சொல்லத் தான் செய்கிறோம். இந்தப் பிச்சைக்காரர்களுடைய நிலைமையைப்பற்றி இந்தச் சபையிலே ஒருவர் பேசினார். அவர் எதிர்க் கட்சிக்கார நண்பர். நான் அதை சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் அந்த பாக்கியம் அவருக்கு கிடைத்தது. யார் பேசினால் என்ன ? பஸ் ஸ்டாண்டுகளிலும் ரயில் நிலையங்களிலும், புண்ணியக்ஷேத்திரங்களிலும் எங்கு திரும்பினாலும் பிச்சைக்கரார்கள். 10 ஆண்டுகளாக அரசாங்கம் நடத்தி வருகிறோம். அவர்களது பிரச்சினை கவனிக்கப்படவில்லை. உடல் வலிமை யுள்ளவர்களைபற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் வயது முதிர்ந்தவர்களையும் அங்கஹீனர்களையும், நோயாளிகளையும் பற்றித்தான் இவர்களையெல்லாம் நாம் எண்ணிப்பார்க்காமல் சுகமாக இந்தச் சபையில் பங்காவின் கீழ் பேசிக்கொண்டிருக்கிறோம். (சிரிப்பு) நான் அரசாங்கக் கட்சியை சார்ந்தவனாய் இருந்தாலும் எங்களுடைய மந்திரிகளிடம் அதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக அரசியல் தியாகிகள் சம்பந்தபட்டவரையில் ஒருவார்த்தை ஏதோ அவர்களுக்கு நனமைசெய்தால் சர்க்கார் தன் கக்ஷிக்காரர்களுக்குச் சலுகை காட்டி வருவதாக எதிர்கட்சி குறை கூறுகிறார்கள் என்ற காரணத்திற்காக அரசியல் தியாகிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய உதவிகளைக்கொடுக்காமல் நிறுத்தப்படுமானால் அது

[Sri S. Nagaraja Monigar] [3rd July 1957

மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். யாராய் இருந்தாலும் சரி இந்த நாட்டின் சுதந்திரத்திற்கும் இங்கே எதிர்க்கட்சிக்காரர்கள் அமர்ந்திருப்பதற்கும் காரணமாய் இருந்தவர்கள் பல தியாகிகள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே அவர்களுக்குச் செய்ய வேண்டியதை முதலில் செய்து கொடுக்க வேண்டும். விடுதலைவாங்கிக் கொடுத்தவர்கள் என் கட்சிக்காரர்கள் என்று பெருமை கொள்கிறேன் என்று தைரியமாக கூறவேண்டும். இதில் மந்திரிமார்கள் வெட்கப்படவேண்டியது ஒன்றுமில்லை. தியாகிகளில் அனேகம் பேர்கள் மாண்டு போனார்கள். இன்னும் சிலர் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் நான் செய்கிறேன் என்று தைரியமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக அதிகாரங்களை மாற்றிக்கொடுக்கும் முறையை (Decentralization of Power) எல்லா ஜில்லாக்களிலும் கொண்டுவரப்படவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் இதுவரை எவ்வளவு அதிகாரம் பரவலாக்கப் பட்டிருக்கிறது என்பதை ஒரு யாதாஸ்தில் குறிப்பிட்டு அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த முறை வராமல் நாம் நமது ஜில்லாக்களுக்கோ தாலுகாக்களுக்கோ எவ்வளவு பணம் செலவு செய்தாலும் நாம் கோருகின்ற முன்னேற்றத்தை அடைய முடியாது. ஏனெனில் ஒவ்வொன்றின் விஸ்தீர்ணம் அவ்வளவு பெரியது. என்னுடைய ஜில்லாவாகிய சேலம் ஜில்லா மிகப் பெரிய ஜில்லாவாக இருக்கிறது. ஜில்லாக்களைப் பிரித்து சரி செய்யும் பிரச்சினையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் சீக்கிரம் செய்து முடிக்கவேண்டும். இதற்கெல்லாம் எல்லைத் தகராறு வருகிறது என்று பயந்தால் பிறகு நாம் என்றுமே செய்யமுடியாது. இங்கு கோதாவரி தண்ணீரை கொண்டுவந்து காவேரி ஆற்றில் சேர்த்து நல்ல நீர்ப்பாசன வசதிகளை செய்து கொடுக்க முடியும். கங்கையிலுள்ள நீரை கூட இங்கு கொண்டுவர முடியும் என்று டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அங்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துவதற்குள்ள காரியங்களை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக பஸ் டிரான்ஸ்போர்ட் பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொள்கிறேன். எல்லா இடங்களிலும் இதை பெரிய முதலாளிகளும், ஏழைகளாயிருந்து இதில் ஈடுபட்டு முன்னேறி வந்தவர்களும்தான் இந்த தொழிலை நடத்தி வருகிறார்கள். அவர்கள் மேலும் பணக்காரர்களாகிக்கொண்டே வருகிறார்கள். ஆனால் இந்த தொழிலுக்கு மாத்திரம் சர்க்கார் பாதுகாப்பு அளித்து வருகிறார்கள். ஒரு ரூட்டில் பல பஸ்கள் ஓடுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. இது அவ்வளவு நல்லது அல்ல. ரயில்வே போட வேண்டுமென்று ரயில்வே போர்டினிடம் சொன்னால் போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் போடுவதில்லை. இன்னும் கொஞ்ச காலத்திற்கெல்லாம் ரெயில்வேயே நம் பக்கத்தில் காண முடியாது என்று தோன்றுகிறது. இந்த நிலைமையிலே பஸ்களை அதிகரிப்பதற்கு முதலாளிகளை கூட்டி வைத்து அவர்களை ஆட்சேபனை இருக்கின்றதா என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு இம்மாதிரி பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் என்ன என்று நான் கேட்கிறேன். அதே போல் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டிக்கொடுக்க இந்த சர்க்கார் இவ்வளவு பாதுகாப்பு அளிக்கிறதா என்று கேட்கிறேன். அடுத்தபடியாக பகல் சாப்பாட்டிற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராம அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நான் மகிழ்வுடன் வரவேற்கிறேன். என். ஜி. ஒக்களுக்கும் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கும் சம்பளம் உயர்த்தப்படவில்லை என்றோ அல்லது உயர்த்தியது போதாது என்றோ எதிர்க்கட்சிக்காரர்கள் கிளர்ச்சி செய்யப் பார்க்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டு இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்ததற்காக நிதி அமைச்சர் அவர்களை பாராட்டிக் கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1-30 p.m. **SRI K. KARUTHAPPA GOUNDER** : உதவி சபா நாயகர் அவர்களே இந்த வரவு செலவு திட்டத்தின் மேல் கடந்த மூன்று நாட்களாக இந்த சட்டசபையில் விவாதம் நடைபெறுகின்றது. இதைப் பல மெம்பர்கள்



3rd July 1957] [Sri K. Karuthappa Gounder]

ஆதரித்தும் சில மெம்பர்கள் எதிர்த்தும் பேசியிருக்கின்றனர். இருந்த போதிலும் நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்த 1957–58ம் வருடத்திய வரவு செலவுத் திட்டத்தை நல்ல முறையிலே மக்கள் அதை வரவேற்கும் அடிப்படையில் சமர்பித்திருக்கிறார். அதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அதோடு, இந்த வரவு செலவுத்திட்டத்தில், நிதியமைச்சர் அவர்கள் கால நிலையை அனுசரித்தும், மக்களுடைய கஷ்ட நஷ்டங்களை அனுசரித்தும் எந்த முறையில் வரிகள் போடவேண்டும் என்பனவற்றை சிந்தித்து இந்த வரவு செலவுக் கணக்கை சமர்ப்பித்துள்ளார்கள். அப்படி இருந்தபோதிலும் கூட சிலர் அதை குறை கூறினர். அதற்கு முக்கிய காரணம் உணவுப் பொருள் பிரச்னைதான். சில சிறிய வரிகள் போட்டிருப்பதை வைத்துக்கொண்டு எதிர்கட்சிக்காரர்கள் பல குறைகள் கூற முற்பட்டு இருக்கின்றனர். ஆனால் நாம் ஒன்று நன்றாக கவனிக்க வேண்டும். விவசாயிகளுக்கு, உற்பத்தி செய்கிறவர்களுக்கு வரி போடவில்லை. ஏழை மக்களின் மீது வரி போடவில்லை. உண்மையில் விவசாயம் செய்யாதவர்களைத்தான், சாப்பிட்டுக் கொண்டு சும்மா இருப்பவர்களைத்தான் இவ்வரிகள் பாதிக்கிறது. நமது நிதி அமைச்சர் அவர்கள் பல பெரிய பொறுப்புகளைச் செய்வதற்கு உகந்த வழியில் இந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து பொது மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்ற முன்வந்தமைக்கு நான் அவர்களைப் பாராட்டுவதோடு இந்த வரவு செலவுத் திட்டத்தையும் வரவேற்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் எங்கள் தொகுதியின் குறைகளை எடுத்துச் சொல்ல முடியாமல் இருக்கிறது. இருந்தாலும் எங்களது ஒரு சில குறைகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்பும் நிலையில் எங்கள் தாலுக்காவான பழனியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பழனி என்பது முருகன் பெருமை என்ற பெருமையை தவிர வேறு ஒன்றும் அங்கு இல்லை : அது ஒரு பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. அதன் எல்லையில் இருக்கிற தாராபுரம், உடுமலைப்பேட்டை போன்ற இடங்களை பஞ்சப் பிரதேசமாகச் சொல்கிறார்களே தவிர பழனி ஒரு பஞ்சப் பிரதேசமாயிருந்தும்கூட அதை ஒரு பஞ்சப் பிரதேசமாக சர்க்கார் கருதவில்லை. அங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயிகளாவார்கள். அவர்களின் நிலையைப்பற்றி சொல்ல வேண்டிய தேவையில்லை. அவர்களுடைய நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. அவர்களின் நிலைமையக் கண்டு வருந்தாமல் இருக்க முடியாது. அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். பழனித் தாலூகா ஒரு வறண்ட பிரதேசமாகும். வறண்ட பிரதேசங்களில் விவசாயம் செய்வது என்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை நான் சொல்லத் தேவை இல்லை. பழனி தாலுகாவிலுள்ள மக்கள் படும் கஷ்டங்களைப் பற்றி சொல்ல வேண்டுமானால் சொல்லிக் கொண்டே போகலாம். பழனி தாலுகாவில் இரண்டு அணைக்கட்டுத் திட்டங்களை ஏற்கனவே சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டும் இது வரையிலும் அது சரியான முறையில் அமல் நடத்தப்படாமல் இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். பாலார், பொருந்தலார், பறப்பலார் என்ற அணைக்கட்டுத் திட்டங்கள்தான் அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்யக் கூடிய நிலையில் இருக்கின்றன. அந்த இரு திட்டங்களையும் விரைவில் பூர்த்தி செய்து கொடுத்தால் அது அங்கு வசிக்கக் கூடிய விவசாய மக்களுக்கு மிகவும் பிரயோஜனப்படக்கூடியதாயிருக்கும். வறண்டு கிடக்கும் பூமிகளில் நஞ்சை பயிர் ஏற்றி உணவு தான்யங்களை கூடுதல் உற்பத்தி செய்ய முடியும். ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஆறு கண்மாய்கள் இரண்டு போகம் விளையக்கூடிய நிலையில் தண்ணீர் இருந்துவந்தது. அந்த கண்மாய் சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுதாரர்கள் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் இரண்டுபோக வரி செலுத்தி வந்திருக்கிறார்கள். அந்தக் கண்மாய்கள் வண்டல் நிறைந்து மண்மேடாகி விட்டன. இப்பொழுது அதற்குள்ள கால்வாய்கள் எல்லாம் சீர்கேடடைந்து விட்டன. சர்க்கார் ரிக்கார்டுகளின் படி இரண்டுபோகம் விளையக் கூடிய நிலங்களில் இன்று ஒருபோகம் கூட விளைவதில்லை. ஆகவே நான் மக்கள் சார்பாக சர்க்காரைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால் இந்தக் கண்மாய்களை புல்டோஸர்

ஆழப்படுத்தி இரண்டு போகம் விளையக்கூடிய விதத்தில் ஆவன செய்ய வேண்டும் என்பது தான். அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில் உள்ள விவசாயக் கூலி மக்கள், விவசாயம் பாழடைந்து போயிருக்கிறபடியால் மலைச்சுமை தூக்கி வேலை செய்து வருகிறார்கள். கொடைக்கானல் கீழ் பழனிமலை பகுதியில் உள்ள மலைகளில் இவர்கள் போய் சுமை தூக்கி வேலை செய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் விவசாயம் சீர்கேடடைந்து விட்டதன் காரணமாக இக்கடினவேலையை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. 35, 40 மைல் தூரம் போய் தோட்ட முதலாளிகளுக்கு கூலி வேலை செய்து பிழைக்க நேரிட்டு இருக்கிறது. அங்கு போய் மலையிலுள்ள நோய்களினால் பீடிக்கப்பட்டு அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நான் அரசாங்கத்தினிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால் ஒட்டன்சத்திரம் பகுதியில் சர்க்கார் கூட்டுறவு முறையில் ஒரு தீப்பட்டி தொழிற்சாலை ஏற்படுத்தினால் அதனால் மக்கள் நன்மை அடைவதோடு, ஆயிரக்கணக்கான மக்களின், வாழ்க்கை நலம் பெறும். இதை அடுத்த பழனிமலைத் தொடரில் தீப்பெட்டிக்கு ஏற்றமரங்கள் ஏராளமாக உள்ளன. அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் கள்ளிமந்தையம் என்ற கிராமத்தில் கேந்திர கிராம கால்நடை அபிவிருத்தி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஆறு மாதங்கள் ஆகியும் இன்று வரையிலும் ஒன்றும் செய்யாமல் அது அப்படியே இருக்கிறது. அது நல்ல முறையில் இயங்குவதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒட்டன்சத்திர விவசாய ஆபிசில் விவசாயிகளுக்கு வேண்டிய உரம், விதை, பூச்சி மருந்துகள், உழவு கருவிகள், மேடுபள்ளம் லெவல் செய்யும் 'புல்டோஸர்கள்' இவைகள் ஒன்றும் நிரந்தரமாகக் கிடையாது. அந்த ஆபிஸில் போதுமான அளவிற்கு விவசாயிகளுக்கு வேண்டிய விதைகள், கருவிகள் போன்றவைகள் எல்லாம் கொடுத்து அங்குள்ள விவசாய மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நிதியமைச்சர் அவர்களை நான் மறுபடியும் பாராட்டி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

## IV.—ANNOUNCEMENT BY DEPUTY SPEAKER *RE* ELECTION OF TWO MEMBERS TO THE BOARD OF INDUSTRIES.

**DEPUTY SPEAKER**: I have to announce to the House that the following Members have been declared duly elected to the Boord of Industries at the election held to-day :—

1 Sri C. Muthiah Pillai.

2 Sri N. S. Sundararajan.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957–58—*cont.*

1-30 p.m. **Sri M. KARUNANITHI**: சட்டமன்றத்துணைத் தலைவர் அவர்களே 1957–58ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் இம்மன்றத்தில் வெளியிட்டு ஆதரவு கோரியிருக்கிறார்கள். அதுபற்றிய என் கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிக்கையை ஆதரித்துப் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க் கட்சியினராகிய நாங்கள், 'எதை எடுத்தாலும் குற்றம் சொல்லுகிறோம்; கால் பட்டாலும் குற்றம், கை பட்டாலும் குற்றம் என்கிறோம்' எனக் குறிப்பிட்டார்கள். 'கால் பட்டால் குற்றமா இல்லையா' என்பது, படுகிற காலைப் பொறுத்திருக்கிறது. குழந்தையின் பாதம் படுவதைக் குற்றமென யாரும் கூறிடார். குஞ்சர பாதம் படுவதை (யானைக் கால்) அனுமதிக்க முடியுமா, என்ன? எதிர்க் கட்சியினர், குறை கூறுகிறார்கள் எனக் குற்றம்சாட்டி, 'அடாணா' ராகத்தில் பேச்சை ஆரம்பித்தவர்கள், அவர்களும் தங்கள் குறைகளை நிறையக் கூறி 'முகாரியில்' முடித்தார்களே தவிர, யாரும் 'மோகனா' ராகத்தில் முடிக்கவில்லை.



புதிய வரிகள் போடாததால் எதிர்க்கட்சியினர் ஏமாற்றமடைந்து சோர்ந்து விட்டார்கள் என்றும் பெருமை பேசப்பட்டது. இது எவ்வாறு இருக்கிறதெனில், 'நேற்றிரவு ஒரு வீட்டிற்குத் திருடப்போவதாகத் திட்டமிட்டேன்; வீட்டுக்காரப்பயல் இரவெல்லாம் விழித்து இருந்தான்; நான் திருடப்போகவில்லை; வீட்டுக்காரன் சரியானபடி ஏமாந்தான்! என்று திருடன் பெருமையடித்துக் கொள்வதுபோல இருந்தது!

நிதி மந்திரி அவர்கள் பற்றாக்குறைத் திட்டத்தை அறிவித்து, 'சென்ற ஆண்டு ஐந்தாண்டுத் திட்டத்துக்காகப் பெரும் அளவில் செலவு செய்ய நினைத்திருந்தோம்; வசதி வாய்ப்புகள், இன்ன பிற நிலைகள் சரியாக அமையாததால் ரூ. 29 கோடி குறைந்த செலவில் தான் குறைந்த திட்டங்களைக் காண முடிந்தது—அதுபோலவே, இந்த ஆண்டும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் நிலைமை மோசமாகவே இருக்கிறது; சில முக்கியமல்லாத திட்டங்களை ஒத்திப்போடவும் வேண்டியிருக்கும்; ஆனால் ஒன்று; புது வரிகள் இல்லை—பழைய வரியில்தான் மாறுதல், என அறிவிக்கிறது, அமைச்சரின் வரவு செலவுத் திட்டம்!

வெளியூர் சென்ற கணவன் என்ன நிலையில் வருவானோ என எதிர் பார்த்துக் கதவோரத்தில் நிற்கும் காரிகையிடம், 'உனக்கு மத்தாப்பு சேலை, மரகதமணி, மல்லிகைப் பூமாலை வாங்கிவரவில்லை; அதுமட்டுமல்ல—உன்னை இனிமேல் அடிப்பதற்கு புதிய கம்பு வாங்காமல், தற்காலிகமாக பழைய கம்பையே பழுது பார்த்து வந்திருக்கிறேன்,' எனச் சொன்னால் மகிழ்ச்சியா பிறக்கும் மனைவிக்கு? இந்தக் கதையைப் போலத்தான் அமைந்திருக்கிறது, நிதிநிலை அறிக்கையில் காணப்படும் திட்டமும், பழைய வரி மாறுதலும்!

கிராமக் கர்ணம், முன்சீப், பணியாளர்களுக்கு 'கிராக்கிப்படியை' சிறிது உயர்த்த முன்வந்திருப்பது பாராட்டக்கூடியது என்றாலும், அதுவும், அழுத குழந்தைக்கு அழுகல் வாழைப் பழத்தை அளித்தது போன்ற அதிருப்தியோடுதான் வரவேற்கப்படும்!

முந்திரி சாகுபடிக்கு ரூ. 4 லட்சம் திட்டத்தில் ஒதுக்கி விட்டதாலேயே, 'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது' என்ற குற்றச்சாட்டை சமாளித்து விட்டதாக நிதிமந்திரி கருதுவாரானால், அதற்காக மிகமிக வருந்துகிறேன். 'சிந்திரி—முந்திரி' என்று நாங்கள் தேர்தல் நேரத்தில் பேசியதை கனம் மந்திரி இங்கே சுட்டிக் காட்டினார். 'சிந்திரித்தொழில் சிறக்கிறது வடக்கே—முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே!' என ஒலித்தன, எங்கள் சுவரொட்டிகள். 'இந்தச் சுவரொட்டிகளால் என்ன ஆகும்? என அங்கலாய்த்தவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலே முந்திரித் தொழிலுக்கு ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; இது எங்களை திருப்தி செய்யக்கூடியது' என நிதி மந்திரி குறிப்பிட்டார். 'முந்திரித் தொழிலும் சிதைகிறது' என்பதில் உள்ள 'உம்'—பெரிய தொழில்கள் மட்டுமல்ல; சிறிய தொழில்களும் சீரழிகின்றன—என்பதையே சுட்டிக் காட்டும்!

திட்டங்கள், திட்டங்கள் என எதற்கெடுத்தாலும் பேசப்பட்டு, அதற்கென எல்லாத் துறைகளிலும் வரி வசூலிக்கப்பட்டு, மத்திய சர்க்காரின் பிடியிலே மக்கள் மென்னி நெரிக்கப்பட்டு வாடுகிற நேரத்தில், 'நாமும் வரிபோட்டால் முற்போக்குக் கட்சிகளின் எதிர்ப்பு பலமாகுமே' என மிரண்டுதானோ, என்னவோ, மாநில சர்க்கார், தற்காலிகமாக வரி போடுவதில்லையெனக் கூறியிருக்கிறது. ஆயினும் ஒன்றைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. வள்ளுவர் குறளில் பேசுகின்றார்.

"வேலொடு நின்றான் இடு என்றது போலும் கோலொடு நின்றான் இரவு"—

"மக்களிடம் நிர்ப்பந்தம் செய்து பொருளைப் பெறுகிற கோலுடை அரசன், வேலொடு நின்று பயணம் நடத்துகின்ற மக்களிடம் கொள்ளையடிக்கிற கொடியவனுக்கு ஒப்பாவான்," என்பது கருத்து!

[Sri M. Karunanithi] [3rd July 1957

இப்போது ஆங்கிலேயர் காலத்தில் திட்டமிடப்பட்டு, இரண்டாம் உலகப் போரினல் நிறுத்திவைக்கப்பட்டு, அண்மையில் திறக்கப்பட்ட கொள்ளிடம் பாலத்தில் வசூலிக்கப்படும் சுங்கவரி ' வேலொடு நின்ருன் இடு என்றது போலும், ' என்ற குறளைத்தான் நினைவு படுத்துகிறது என்பேன்.

பொதுவாக வரவு செலவுத் திட்டத்தில், ஆரத்தின் இடையே இழைந்தோடும் நூலைப்போல, அறிக்கை முழுதும் காணப்படும் உண்மையொன்றுண்டு ; அதுதான் ' மாநில சர்க்கார் எல்லாவற்றுக்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்க்கிறது, ' என்பதாகும். எதையும் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியாமல் தேங்கித் தேங்கி வரும் அமைச்சரின் வாசகங்களைக் காண்போம் :

' தேசீயத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன், சேலத்தில் உள்ள மூலக் கனிப் பொருள்களைக் கொண்டு இரும்பு உருக்கும் ஒரு தொழிற்சாலையை நிறுவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ! "

—" எதிர்பார்க்கப்படுகிறது" என்ற ஏக்கம் கலந்த வாசகம் வெளிப்படுவானேன் ? வடக்கு வாழ்கிறது ; தெற்கு தேய்கிறது ! அதனல்தான் !

" மேட்டூரில் காகித ஆலை அமைக்கும் விஷயம் ஆலோசனையில் இருந்து வருகிறது ! "

—அமைக்கப்படாமல் ஆலோசனையிலேயே இருப்பானேன் ? வடக்கு வாழ்கிறது ; தெற்கு தேய்கிறது ! அதனல்தான் !

" செயற்கை பட்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை பவானி சாகரில் நிறுவப்படலாம் ! "

—நிறுவப்படும் என்று " டும் " வருவதற்குப் பதில் படலாம் என்று " லாம் " வருவானேன் ? வடக்கு வாழ்கிறது ; தெற்கு தேய்கிறது !—அதனல்தான் !

" பிராட்கேஜ் பெட்டிகளுக்கென தொழிற்சாலையொன்றும் நிறுவப்படலாம் ! ".

" டி. ஐ. சைக்கிள் ஸ்தாபனம், சைக்கிள் உற்பத்தியைப் பெருக்க அதன் அளவை அதிகரிக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் யோசனை கூறியுள்ளது ; அது இப்போது பரிசீலனையில் இருக்கிறது ! "

" உயர்தரத் தொழிற் கல்வி நிலையம் நான்கில் ஒன்றை, சென்னை நகரில் கிண்டிப் பகுதியில் அமைப்பதால் ஏற்படக்கூடிய பல்வேறு அனுகூலங்களை நாம் அழுத்தமாய் எடுத்துக் கூறியுள்ளோம் ; சாதகமான முடிவு விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம் ! "

—முடிவுகளை உண்டாக்கக்கூடிய முடியுடை மூவேந்தர் பரம்பரை, வடக்கு நோக்கி வரம் கேட்டு எதிர்பார்த்து நிற்கிறது, இப்போது !

திரு. க. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிதிக் கமிஷனிடம் மாநில அரசு முறையிட்டு இருப்பதையும் அமைச்சர் அறிக்கை வேதனையோடு குறிப்பிடுகிறது.

" மத்திய வரி இனங்களில் நமக்கு அதிக விகிதம் கிடைக்க வேண்டிய நியாயத்தையும் விளக்கியுள்ளோம் !

" நாம் கூறியுள்ள யோசனைகளில் அடங்கியுள்ள முறைகளையேனும் நிதிக் கமிஷன் ஒத்துக்கொள்ளும் என நம்புவோமாக ! "

" நாம் பெரும்பாலும், எஞ்சியுள்ள தொகைக்கு மத்திய அரசாங்கத்தையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. ஆனல் இந்த உதவி போதிய அளவில் கிடைக்குமென்ற உறுதி இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் சிக்கல்கள் எழும்போது அவைகளை எப்படியும் சமாளித்துக் கொள்வோம் என்ற உறுதியில் முன் செல்வோமாக ! "

—" சமாளிப்போம்" என்று நிதி அமைச்சர் சங்கடத்துடன் கூறுகிருரே தவிர, " எதிர்த்துப் போராடி உரிமையைப் பெறுவோம் " என்ற உத்வேகம் காணப்படவில்லை.



3rd July 1957] [Sri M. Karunanithi]

அஸ்ஸாம் மாகாணத்து எழுச்சி சென்னை மாநிலத்திற்கு இல்லாமற் போவானேன் ? " எண்ணெய் தொழிற்சாலை " " ஏகபாரத்தில் எங்கிருந்தால் என்ன ? பீகாரில் தான் இருந்துவிட்டுப்போகட்டுமே " என்ற பெருமனது அஸ்ஸாமுக்கு வரவில்லை. வீறுபெற்று எழுந்து, மந்திரிகள், இராஜிஞமாக்களை வீசி யெறியத் தலைப்பட்டு விட்டனர். தேபர் தேறுதல் கூறியும் அஸ்ஸாம் கொந்தளிப்பு அடங்கியபாடில்லை. அஸ்ஸாம் அந்நிய நாடு மல்ல ; கேரளத்தைப் போல் கம்யூனிஸ்ட் மந்திரிகள் ஆளுகிற நாடுமல்ல ; காங்கிரஸ் மந்திரிகளேதான் மத்திய சர்க்காரைத் துணிவுடன் எதிர்க்கிருர்கள். அந்தத் துணிவுடமை இங்கே இல்லை !

" தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு, "

என்கிருர் வள்ளுவர். திருக்குறள் மலிவு பதிப்பு வெளியிடப்படும் இந்தச் சமயத்திலாவது குறள்வழி நடந்து நாடாள முனைய வேண்டும் நமது அரசினர் எனக்கூறி, வரவு செலவுத் திட்டத்தில் எனக்குள்ள அதிருப்தியைத் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்."

SRI M. MAYANDI NADAR : உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது நம் அரசாங்கத்தாரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதித் திட்டத்தைப்பற்றி பல p.m.
நண்பர்கள் பாராட்டினூர்கள், பல நண்பர்கள் கண்டித்தார்கள். இந்த நிலைமையிலே நாம் பார்க்கும்போது, இத் திட்டத்தில் காரசாரம் இல்லை என்பது ஒரு குறைபாடு. காரணம் என்ன. இத் திட்டத்தில் பல வரிகளைப் போடவில்லை என்பது பற்றி சிலர் சந்தேகிக்கலாம். ஆனல், வரி இல்லை என்று இருந்தாலும், புதுத் திட்டங்களுக்கு ஒன்றும் குறைவில்லை என்று எடுத்துக் காட்டுகிறது.

விவசாயத் துறையில் எடுத்துக் கொண்டால் சென்ற ஆண்டு நடந்ததைக் காட்டிலும் இந்த ஆண்டு முன்னேறியிருக்கிறது. சென்ற ஆண்டைப் போல் இருக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம். பொதுவாக விவசாயிகளுக்கு அநேக இடங்களிலும் விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு சௌகரியம் செய்யத் திட்டம் போட்டிருக்கிருர்கள். போன ஆண்டில் 38 விதைப் பண்ணைகள் இருந்ததை, இந்த ஆண்டில் 136 விதைப் பண்ணைகள் அதிகமாக எற்படுத்தப்போகிருர்கள். இதற்கு 49 லட்ச ரூபாய் செலவு செய்யப்போகிருர்கள். ஐந்தாண்டுத் திட்டத்திலே இருந்தாலும் அடுத்த ஆண்டிலேயே முடியும் என்று கூறியிருக்கிருர்கள். மேலும் பல நீர்ப் பாசனத் திட்டங்களில் அநேகத் திட்டங்கள் இந்த ஆண்டிலேயே முடியும் தருவாயில் இருக்கிறது. அந்த நிலைமையில் நமது திட்டங்கள் முன்னேற்றத்தோடு செல்கிறதே தவிர பின் வாங்கவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்.

மேலும் ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் போன ஆண்டு செலவழித்ததைக் காட்டிலும் 60 லட்ச ரூபாய் செலவழிக்கப் போகிருர்கள். இதனல் பிற்பட்ட மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று குறைபடக் காரணம் இல்லை.

மேலும் மீன் பிடிப்புத் தொழிலுக்கும் அநேக ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு விசைப்படகுகளும், நைலான் வலைகளும் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வகையிலும் அரசாங்கம் எந்தெந்த வகையிலே ஜனங்களுக்குத் தேவைப்படுகிறது என்று ஆராய்ந்து அதற்கு ஆவன செய்திருக்கிருர்கள்.

அநேகமாக ஒவ்வொரு இடத்திலும் பள்ளிக்கூடங்களைத் துவக்க நமது அரசாங்கம் மேன்மேலும் திட்டம் செய்திருக்கிருர்கள். ஆனல், இதில் என்னுடைய தொகுதியாகிய வண்ணரப்பேட்டையில் பெண்களுக்குப் பாடசாலை இல்லை. அதைத் தீர்க்க நாங்கள் முன்னல் வற்புறுத்தவில்லை. ஆகவே, பெண்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்திக் கொடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாகாணத்தில் இப்போது விவசாயிகளுக்கு மின்சார வசதியும் பல தன ரகத் தொழில்களுக்கு மின்சார வசதியும் தேவை. குந்தா திட்டமும், சென்னை மின்சார உற்பத்தி நிலையத் திட்டமும் இந்த வருஷத்தில் முடியும். சென்னை மின்சார உற்பத்தித் திட்டத்தினால் 30,000 கிலோவாட் கிடைக்கும் என்று அரசாங்கம் உறுதி கூறியிருக்கிறது. அப்படி இருக்கும்போது பெரும் தொழில்கள் நடத்த ஏதுவாக இருக்கும். நிதி மந்திரி அவர்கள் அறிக்கையில் அநேக திட்டங்களைப்பற்றிச் சொல்லுகிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் ஒரேநாளில் மந்திரத்தால் செய்யக் கூடிய திட்டங்கள் இல்லை என்று எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும்.

பொதுவாக, நமது மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட நெய்வேலி நிலக்கரித் திட்டம் இன்னும் மூன்று வருஷத்தில் நடக்கும். இதைப்பற்றி எல்லோரும் பலவாராகப் பேசுகிறார்கள். நமது மாகாணத்தில் நல்லவகையில் பல தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய வகையில் மற்றும் பல வகையில் நமது நாட்டுக்குப் பயன்படக் கூடிய பொருள்களை உற்பத்தி செய்ய இது ஒரு நல்ல வாய்ப்பு என்று எல்லோருக்கும் தெரியும். அதற்கு ஆவன செய்யவேண்டியது பற்றி அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று சொல்லுகிறேன்.

மேலும், பொதுவாக அரசாங்கம் செய்யாததை சுட்டிக் காண்பிப்பது எதிர்க்கட்சிகளின் கொள்கையாக இருக்கவேண்டுமேயொழிய, எதையெடுத்தாலும் குறைபாடு சொல்வதால் ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடியதற்குப் பலமாக இராது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் வட சென்னைப் பகுதியில் சில முக்கியமான ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. முதலாவதாக, கடல் அரிப்பு இருக்கிறது. இதை அநேக தடவைகளில் அரசாங்கம் கவனித்திருக்கும். அதைத் தடுத்து நிறுத்தாவிட்டால் அநேக இடங்களை இது காலி செய்து விடும் என்று தெரிகிறது.

திருவொற்றியூர் ஹைரோடில் ஒருபாலம் கட்டவேண்டுமென்று இதற்கு முன்னால் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. வட சென்னையில் தொழில் பகுதி மிகுந்ததால் போக்குவரத்து அதிகம். ரயில் செல்லும் போது ரோடை அடைத்துவிட்டால் இரு புறத்திலும் அநேக தொழிலாளர்களும் போக்குவரத்தும் நின்றுவிடுவதால் அநேக இடைஞ்சல்கள் ஏற்படுகிறது. இதை முக்கியமாகக் கொண்டு சீக்கிரமாக செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், வட சென்னையில் தொழிலாளர் அதிகமாக இருக்கிறதால் இட நெருக்கடி இருக்கிறது. இதனால் பலவகை தொத்து நோய்கள் ஏற்படுவது சகஜமாக இருக்கிறது. ஆகவே மற்ற இடங்களில் தொழிலாளர்கள் காலனி கட்டுவது போல வட சென்னையில் செய்தால் நன்றாக இருக்கும். பொதுவாக அரசாங்கத்தின் மூலமாக ரூபாய் 15 லட்சம் காலனி கட்டுவதற்கும், தனிப்பட்டவர்கள் செய்ய 15 லட்சமும், மேற்கொண்டு 20 லட்சமும் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. சென்னை நகரத்தில், வட சென்னையைப் பொறுத்தவரையில், தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதால் இங்கு காலனி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த வாய்ப்பு கொடுத்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. A. M. ANNAMALAI ODAYAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே 1957–58க்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருப்பது மக்கள் எல்லாம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை; நம்பிக்கை இழந்திருப்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் இருக்கிறதென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், இந்த வரவு செலவுத் திட்டத்திலே, குறிப்பாக விவசாய மக்களுக்கும், விவசாயத் துறையிலே உள்ள தொழிலாளி மக்களுக்கும் ஒரு விசேஷ முன்னேற்றம் இல்லை.





ஒவ்வொரு ஜில்லாவையும் இரண்டாகப் பிரித்து, நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்தினால் நலமாக இருக்கும். ஒரு ஜில்லாவின் கடைசிப் பகுதியில் வசிக்கக்கூடிய மக்கள் அந்தந்த ஜில்லாவின் தலைநகரங்களுக்குச் சென்று செல்லவேண்டுமானால், நெடுந்தூரம் செல்லவேண்டியதாக இருக்கிறது. அதனால் சிரமம் இருக்கிறது. ஆகவே, ஜில்லாவை இரண்டாகப் பிரித்து நிர்வாகம் செய்தால் நல்லமுறையில் காரியங்கள் நடக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு தாலூகாவையும் இரண்டாகப் பிரித்து இரண்டு டெமான்ஸ்ட்ரேடர்களை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட, விவசாயத் துறையிலே எந்தவிதமான முன்னேற்றமான விஷயங்களையாவது அவர்கள் கிராம மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்களா என்றால் ஒன்றுமே விளங்கவில்லை. இருந்தாலுங்கூட, ஒவ்வொரு தாலுகாவிலும், ஒவ்வொரு பகுதியிலேயுள்ள விவசாய டெமான்ஸ்ட்ரேடர்கள் சுமார் 25 ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு வாங்கியாவது அல்லது சர்க்கார் பொறுப்பிலேயே கிரயத்திற்கு வாங்கியாவது ஒரு மாதிரிப் பண்ணை வைத்து நடத்திக் காண்பித்தால் இதனால் மக்களுக்கு விவசாயத்தைப்பற்றி நல்ல முறையிலே தெரிந்துகொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்குமென்று சொல்லிக் கொள்ளுகின்றேன்.

விவசாயத் துறையிலே உள்ள அதிகாரிகளோ, தாலூகாவிலுள்ள டெமான்ஸ்ட்ரேடர்களோ விவசாயத் துறையிலே எந்த மக்களுக்கு எந்த விதமான கிராமத்திற்குச் சென்று என்ன செய்கிறார்கள் என்று ஒன்றுமே தெரியவில்லை. நிறையப் பணம் ஒதுக்கியிருந்தாலும் அது விரயம் ஆக்கப்படுகிறதே தவிர, குறிப்பான முறையிலே நல்ல அம்சங்களில் செலவழிக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. ஆனால், புள்ளி விவரங்களைப் பார்த்தால், விவசாயத் துறையில் பிரமாத முன்னேற்றம் கண்டுவிட்டதாக இங்குதான் குறிப்பிடப்படுகிறதே தவிர, கிராமங்களுக்குச் சென்று பார்த்தால், அங்கெல்லாம் எந்தவிதமான நல்ல நிலைமையையும் காணவில்லை என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு கால் நடை ஆஸ்பத்திரி வைத்து கால் நடைகளுக்கெல்லாம் ஒரு நல்ல பராமரிப்பு கொடுத்தால் நல்ல ஏற்பாடாக இருக்கும். விவசாய மக்கள் கால்நடைகளை நல்ல முறையில் வைத்துக் கொள்வதற்கும் நல்ல வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஒரு பக்கத்தில் சர்க்காரால் வன மகோற்சவம் கொண்டாடப்படுகிறது. ஆனால், மற்றொரு பக்கத்தில் காடுகளை அழிக்கிறார்கள். அவைகளையெல்லாம் கவனித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அப்பேர்ப்பட்ட காடுகளை அழிக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

வட ஆற்காடு ஜில்லாவில் சாத்தனூர் அணைத் திட்டம் நிறைவேறியிருக்கிறது. அது விரைவில் முடிந்து விடும் தருவாயில் இருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய திருக்கோயிலூர் தாலூகாவில் மணலூர்பேட்டை பிர்க்காவில் மட்டும் தான் சில ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்வதற்கு திட்டத்திலே இருக்கிறது. சாத்தனூர் தேக்கத்திலிருந்து மற்ற தாலூகாவிலுள்ள மற்ற பிர்க்காக்களுக்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்க வழி செய்யவேண்டும். தென்னாற்காடு ஜில்லாவில் பெண்ணையாற்றை அடுத்திருக்கும் மற்ற பகுதிகளுக்கும் அந்தத் தேக்கத்திலேயிருந்து நீர்ப்பாசன வசதியைச் செய்து தருமாறு நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பிளாக் டெவலப்மெண்டு பிரதேசங்களிலேயும் தேசிய வளர்ச்சித் திட்டப் பகுதிகளிலேயும் கோழிப்பண்ணை வைத்து நல்ல ரகக் கோழிகளையெல்லாம் வளர்க்கிறார்கள். இருந்தாலும் கோழிக்குஞ்சு வேண்டுமென்றால், அதுவும் விலைக்கு வேண்டுமென்றால் கிடைப்பதில்லை. ஆனால், பிரமாதமாக

[Sri S. A. M. Annamalai Odayar] [3rd July 1957

"கோழி உற்பத்தி செய்கின்றோம், கோழிப்பண்ணை நடத்துகின்றோம்" என்றெல்லாம் சொல்கிறார்கள். இருந்தாலுங்கூட, மக்களுக்கு நல்ல முறையில் பயன்படத்தக்க விதத்தில் அவைகளை நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் கூறுவது போல, மாகாண சர்க்கார் நில சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வருவது நல்ல முறையிலே இருக்கும். அதை ஒத்திவைத்துக்கொண்டே போவது அவ்வளவு நல்லது அல்ல. சமீபத்திலே கூட, பிரதம மந்திரி நேரு அவர்கள் "ராஜ்ய சர்க்கார்களுக்கு வேகம் போதாது, வேகக் குறைவாக நடக்கிறார் கள்" என்று சொல்லியிருப்பதை நான் இப்பொழுது சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

நிலத்திலே உழுபவர்களை அதிலிருந்து வெளியேற்றுவதற்கு சர்க்கார் போலீசுக்கு அதிகாரம் அளித்திருக்கிறது. நில உடைமைக்காரர்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து அளிக்கப்படுகிறதே தவிர, நிலத்திலிருந்து வெளி யேற்றப்படுபவர்களுக்கு போலீஸ் பந்தோபஸ்து அளிக்கப்படுவதில்லை. அவர் களுக்கும் போலீஸ் பந்தோபஸ்து வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

நெய்வேலி திட்டம் நல்ல முறையிலே முன்னேறிக்கொண்டு வருவதால் டெக்னிகல்—காலேஜ்—தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை இப்பொழுது இருந்தே எடுத்துக்கொண்டால் நல்லமுறையில் இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தென்னாற்காடு ஜில்லாவில் கரும்பு அதிகமாகப் பயிராவதால், அந்த ஜில்லாவில் இருக்கும் அதாவது நெல்லிக்குப்பத்தில் இருக்கும் ஒரு சர்க்கரை ஆலை போதவில்லை. அந்த ஜில்லாவில் குறைந்தது இரண்டு மூன்று சர்க்கரை ஆலையாவது இருந்தால்தான் வசதியாக இருக்கும். ஆகவே, அங்கு கூட்டுறவு மூலமாக இரண்டு மூன்று சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். தனியார் யாராவது சர்க்கரை ஆலை ஆரம்பிக்க லைசென்ஸ் வேண்டுமென்றாலும், அவர்களுக்கு வழங்கியோ அல்லது கூட்டுறவு முறையிலோ ஒரு பெரிய சர்க்கரைத் தொழிற்சாலையை ஏற்படுத்த சர்க்கார் முன்வருவார்கள் என்று நான் நம்புகின்றேன்.

தென்னாற்காடு ஜில்லாவில் முந்திரித் தொழில் பெருத்த அளவிலே நடந்துகொண்டு வருகிறது. ஆனால், பெருத்த அளவிலே தனியார் முயற்சி யிலே நடக்கிறதே தவிர, தொழிற்சாலை ஏதும் ஏற்படவில்லை. அதற்கும் சர்க்கார் ஆவன செய்து, தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு முந்திரித் தொழிற்சாலையை ஏற்படுத்தி நல்ல முறையிலே நடத்துவதற்கு முன் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

தென்னாற்காடு ஜில்லாவிலே இப்பொழுது மணிலாக்கொட்டை, என் போன்ற உணவுத் தான்யங்களை வாங்குவதற்கு மார்க்கெட்டிங் கமிட்டி இரு க்கிறது. நெல், கம்பு, கேழ்வரகு போன்ற உணவுப் பொருள்களையும் அந்தக் கமிட்டி மூலமாக விற்கும்படியான முறையில் சர்க்கார் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்தால் விற்கும்படியும், அப்படி நல்ல விலை கிடைக்க வில்லையென்றால் குதுவைப் பணம் கொடுத்து, பிற்பாடு விற்பனை செய்து, அந்தப் பணத்தை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உணவுப் பொருள்கள் மீது வியாபாரிகளுக்கு குதுவை வைத்துக்கொண்டு பாங்குகளில் பணம் கொடுத்துக்கொண்டு வருவதால், உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பதற்கும் தேக்கி வைப்பதற்கும் ஏதுவாகிறது. நாட்டில்



3rd July 1957] [Sri S. A. M. Annamalai Odayar]

உணவுப் பஞ்சம் இருப்பதால், எந்த வியாபாரிக்கும் பாங்குகளிலே உணவுப் பொருள்கள் மீது பணம் கொடுக்காமலிருக்க சர்க்கார் உடனடி யாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த பட்ஜெட் டிலே எந்தவிதமான முன்னேற்றத் திட்டங்களும் காணப்படவில்லை. என்ற வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

**DEPUTY SPEAKER:** The House will now adjourn and meet again tomorrow morning at 9 o' clock.

The House then adjourned.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, the 4th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

### SHORT NOTICE QUESTION.

*Lock-out in Madura Mills.*

1 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is a lock-out in Madura Mills from 26th June onwards;

(*b*) whether the management of the above mills intimated this Government before closing down the mills; and

(*c*) steps taken by the Government to re-open the mills?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) I would invite the attention of the hon. Member to the statement made by me on this subject on the floor of the Assembly on 28th June 1957. As mentioned therein there is a lock-out from 25th June 1957 onwards. The Government are watching further developments.

SRI N. K. PALANISAMI : அங்கே இருக்கக்கூடிய மானேஜ்மெண்ட் அந்தத் தொழிற்சாலை மூடுவதற்கு முன்பு கனம் மந்திரி அவர்களை ஏன் கலக்கவில்லை ? அதைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : என் மந்திரியைக் கலக்கவில்லையென்ற கேள்வியை மானேஜ்மெண்டாரிடம் கேட்கவேண்டும். மில்கள் திறப்பதைப் பற்றி இப்பொழுது தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோரும் பேசிக்கொண்டுவருகிறார்கள். அவர்கள் பேச்சுவார்த்தையின் முடிவு இன்னும் தெரியவில்லை.

SRI K. VINAYAKAM : From the statement made by the Hon. Minister the other day, I understood that the workers did not stick to the agreement arrived at between the Management and themselves. May I know what the conditions of that agreement were and how the workers infringed them?

THE HON. SRI R. VENKATARAMAN : The agreement arrived at before the Industries Minister was that except in two departments, the workers should start work according to the new workload. But when the mills resumed working on the 24th June 1957, some of the workers in the other departments did not conform to the new workload.

**SRI P. S. CHINNADURAI** : தொழிற்சங்கத் தலைவர்களையும், மதுரை மில் நிர்வாகிகளையும் கனம் மந்திரி அவர்கள் இங்கே அழைத்து, உடனடியாக ராஜ்யத்தின் நலனை உத்தேசித்து இது விஷயத்திலே ஒரு முடிவுக்கு வந்து ஆகவேண்டுமென்று தங்களுடைய செல்வாக்கை உபயோகித்து ஒரு முடிவுகான உதவிபுரிவார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் சொல்வதற்கு முன்பே, நான் நேரடியாகச் சென்று மேனேஜ்மெண்டாரையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் கூட்டிப்பேசினேன். அதன் விளைவாக இருவரும் ஒப்புகொண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி நடந்தால் உடனடியாக மில் திறந்து வேலை நடக்கும். தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களை அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படியாக இப்பொழுது சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

**SRI A. P. C. VEERABAHU** : மேனேஜ்மெண்டும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் நேரடியாகக் கலந்து பேசுவது இரண்டு மூன்று நாட்கள் ஆகத் தடைப்பட்டிருக்கிறது என்று கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படித் தடைப்பட்டிருந்தால் தடையை நீக்க சர்க்கார் உதவுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : தூத்துக்குடியில் தடைப்பட்டிருக்கிறது. ஆனால் மதுரையில் இல்லை. தூத்துக்குடியில் அந்த ஒப்பந்தத்தின்படி பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக லேபர் ஆபீசர் அவர்கள் இடத்தில் தொடர்ந்து நடத்தும்படிச் சொல்லியிருக்கிறோம்.

**SRI M. JAGANNATHAN** : மதுரையில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருப்பதன காரணமாக எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனபதை கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : 14,000.

**SRI K. VINAYAKAM** : Now that the workers have infringed the conditions of the agreement, if they realise their mistake, express regret, agree to get back to work and compensate the loss sustained by their inaction, will the Government prevail upon the management to open the mills and bring about a reapproachment between the employer and the workers?

**THE HON. SRI R. VENKATARAMAN** : I think this question is totally misconceived. We are anxious to smoothen the relationship between labour and capital and we try to bring about a re-adjustment in their relationship in the best manner possible. As it is, certain anomalies are bound to occur whenever new work-loads are sought to be introduced. The management should also have shown some patience and tried to keep the mill open for a day or two before precipitously closing it down. That is why, I said in my last statement that both parties have been at fault and that they should try to come together on the basis of the agreement.

**SRI K. ANBAZHAGAN** : தொழிலாளிகள் முதலாளிகள் ஆகிய இரு பகுதிகளிலேயும் தவறுகள் நடைபெறுவதால்தான் நாட்டிற்கும் பெரியதொரு இழுப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதால் அதனை நீடிக்க விடுவதை மாற்றுவதற்கு ஒரு முறையாக இத்தகைய ஆலைகளை தேசிய உடமை ஆக்கிவிடுவோமென்று அரசாங்கத்தார் அறிவிப்பார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : ஒரு தொழிற்சாலையை தேசிய உடமை ஆக்குவது அவ்வளவு சுலபம் அல்ல. தகராறு வருகின்றபோதெல்லாம் தேசிய உடமை ஆக்கிவிடுவோம் என்று சொல்வது சாத்தியமல்ல.





**SRI N. K. PALANISAMI** : ஒப்பந்தப் பிரகாரம் ஏதாவது சச்சரவு ஏற்பட்டால், ஸ்டாண்டிங் கமிட்டியைக் கூட்டி இரண்டு பேரும் சேர்ந்து பேசித்தான் வேலை செய்யவேண்டும் என்று மேனேஜ்மெண்டார் ஸ்டாண்டிங் கமிட்டியைக் கூட்டவில்லை. ஸ்டாண்டிங் கமிட்டியைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லி சர்க்கார் லேபர் ஆபீசருக்குச் சொல்லியிருக்கிறார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினருடைய தகவல் அவ்வளவு சரியாக இல்லை என்று நினைக்கிறேன். ஏனென்றால் ஸ்டாண்டிங் கமிட்டி கூடி அதில் நடந்த விவாதத்தில் முடிவு ஏற்படாத காரணத்தினால், தொழிற்சங்கத் தலைவர்களிடத்தில் உள்ள குறைபாடுகளின் காரணமாக எந்தவிதமான ஒப்பந்தமும் ஏற்படாத காரணத்தால், தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோரும் கூடி தனியாகத் தீர்மானிக்க வேண்டுமென்று ஸ்டாண்டிங் கமிட்டி ஒத்திவைக்கப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள் பேசிக்கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

**SRI A. GOVINDASAMY** : தொழிற்சங்கத்திலே அதிக அனுபவம் உள்ள கனம் மந்திரி அவர்கள் முதலாளிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் சந்தித்து ஒரு நல்ல உடன்பாட்டிற்கு வருவதற்கு முயற்சி எடுப்பார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : சமரஸம் ஏற்படுவதற்கு சர்க்கார் எப்பொழுதுமே முயற்சி செய்துகொண்டுதானிருக்கிறது. செய்யும்.

## STARRED QUESTIONS.

### *Oil deposits.*

* 55 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that oil reposits exist in certain parts of Tiruchirappalli district; and

(*b*) if so, whether any investigation has been undertaken by the Government and with what results?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Officers of the Geological Survey of India have undertaken a preliminary geo-physical examination of the area between Gadilam in the north and Coleroon river in the south. The investigation will be continued south of the Coleroon river in the Cauvery basin during the field season, 1957–58. Information regarding the possibility or otherwise of the occurrence of oil deposits in the area can be had only after the results of these investigations are known.

### *Houses for Harijans.*

* 56 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the action taken by the Government for building houses for Harijans under the Second Five-Year Plan;

(*b*) the extent of help offered by the Central Government in this direction;

(*c*) the amount to be spent in 1957–58 for the purpose; and

(*d*) the number of houses that are likely to be built during 1957–58?

THE HON. SRI P. KAKKAN: (a) Under the Second Five-Year Plan, the Government have approved schemes for constructing houses for the benefit of Scheduled Castes at Rs. 750 each to be made up of a free grant of Rs. 550, towards the cost of materials and contribution of free labour worth Rs. 200 by the beneficiaries. In the Nilgiris, each house will cost Rs. 1,000 and the free grant will be Rs. 700, the balance being met by the beneficiaries by way of free labour.

(b) The Government of India have offered to give half-grant towards the cost involved in the housing scheme under the State Sector and full grant for the scheme under the Central Sector of the Five-Year Plan.

(c) Rs. 18·475 lakhs.

(d) 3,325.

SRI K. VINAYAKAM: சென்னையில் இந்த ஆண்டில் ஹரிஜனங்களுக்காக எத்தனை வீடுகள் கட்டுவதாக அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: இப்பொழுது அவசியமான விவரங்கள் என்னிடம் இல்லாததால் கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. JAGANNATHAN: சேரிகளை ஒழிக்கவேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை என்று கூறப்படுகிறது. ஆனால் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகள் எல்லாம் சேரிகளில் கட்டப்படுகின்றன. ஹரிஜன முன்னேற்ற விஷயத்தில் சர்க்கார் தாங்கள் கூறுவதைப்போல் செய்வதில்லை என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது அல்லவா?

THE HON. SRI P. KAKKAN: கனம் சபாநாயகர் அவர்களே வீடில்லாத ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் அதிகப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறது. எங்கெல்லாம் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் வீடுகள் கட்டிவருகிறார்கள். இங்குமங்கும் உள்ள சேரிகளை ஒழிக்கவேண்டும் என்பதற்காக வீடுகள் கட்டவில்லை.

SRI P. G. MANICKAM: தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது?

THE HON SRI P. KAKKAN: ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு என்று இப்பொது சொல்லமுடியாது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்விகேட்டால் ஜில்லாவாரியாகப் பிரித்துச் சொல்லமுடியும்.

SRI A. A. RASHEED: On a point of order, Sir. Can the hon. Member use the word 'cheri' when it is taboo?

SRI K. VINAYAKAM: The direct translation of slum is "cheri", as far as our vocabulary is concerned. If the term denotes anything bad, let us remove it. But as long as it is there, to-day, it has got to be accepted.

MR. SPEAKER: Mr. Rasheed will show me authority for banning the use of the word 'cheri'. Then I shall give a ruling. Till then I shall hold over my ruling.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, சேரி என்பது சேர்ந்து வாழ்கிற இடம் என்ற பொருளைத் தான் தரும் என்பதை......



MR. SPEAKER: ஸ்ரீ ரஷீத் அவர்களை, சேரி என்ற வார்த்தையை உபயோகிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் (அதாரிட்டி) கொடுக்கச் சொன்னேன். அவர் ஆதாரம் கொடுத்த பிறகு என்னுடைய தீர்ப்பை (ரூலிங்கு) கொடுக்கிறேன். அதுவரை இந்தப் பிரச்னையை ஒத்திவைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN: கேள்வி கேட்கிறேன்.

MR. SPEAKER: சரி கேள்வி கேளுங்கள்.

SRI K. ANBAZHAGAN: சேரி என்பது சேர்ந்து வாழ்கிற இடம் என்ற பொருளைத் தருமாகையால் ஹரிஜனங்களுக்காகக் கட்டும் வீடுகளை தனியாக அமைத்துத் தராமல் அவர்கள் எல்லா மக்களுடனும் கலந்து வாழ்வதற்கு ஏற்றவாறு அரசாங்கத்தார் கட்டித் தருவார்களா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது போல் ஹரிஜன மக்கள் மற்ற மக்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு எங்கெல்லாம் தகுந்த நிலைமை இருக்கிறதோ அங்கெல்லாம் பின்தங்கிய வகுப்பினருடன் அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் வீடில்லாத ஹரிஜனங்களை சும்மா விட்டுவிடவில்லை. அவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATNAM PILLAI: பல இடங்களில் ஹரிஜனங்களுக்காக இந்த மாதிரி வீடுகளைக் கட்டி அந்த இடங்களுக்கு மற்றவர்களையும் கொண்டுபோய் குடியேற்றுவதற்குப் பதிலாக பல வகுப்பினர்கள் இருக்கின்ற இடங்களிலேயே ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, அங்கே அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN: பல வகுப்பினர்கள் இருக்கும் இடங்களிலோ அல்லது அவற்றிற்குப் பக்கத்திலோ ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க முடிந்தாலும், அந்த இடங்களுக்கு அருகில் புறம்போக்கு நிலங்களை லெகுவாக வாங்கி அவற்றில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க முடிந்தாலும், அவ்விதம் செய்யப்படும்.

SRI P. G. MANICKAM: வீடு கட்டுவதற்கு ஆகும் செலவில் ஹரிஜனங்களே ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டும் என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். சமுதாய நலத் திட்டத்தின் கீழும், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் சில வீடுகள் கட்டப்பட்டன. அப்பொது உழைப்பின் மூலம் தாங்கள் கொடுக்கவேண்டிய பகுதியை ஹரிஜனங்கள் கொடுக்க முடியாமல் போய்விட்டது. பிறகு, அங்குள்ள பெரியவர்கள் எஸ்டிமேட்டிலுள்ள தொகையை வாங்கி வீடுகளைக் கட்டினார்கள். அந்த வீடுகளும் சேதமடைந்துவிட்டன. அவை இப்பொழுது நல்ல நிலைமையில் இல்லை. உழைப்பைக் கொடுக்கவேண்டுமானால் ஹரிஜனங்கள் மூன்று மாதங்கள் கொடுக்கவேண்டும். ஹரிஜனங்கள் மூன்று மாதங்கள் வேறு வேலை பார்க்காமல் உழைப்பைக் கொடுக்கும் நிலையில் இல்லை. மூன்று மாத கால சம்பாத்தியத்தை இழக்க அவர்களால் முடியவில்லை. ஆகவே சர்க்காரே ஹரிஜனங்களின் பங்குப் பணத்தையும் ஏற்றுக்கொண்டு வீடுகளை அவர்களுக்கு இலவசமாகக் கட்டிக்கொடுக்க முயற்சிப்பார்களா?

THE HON. SRI P. KAKKAN: இப்பொது ஏழை ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ், யார் 200 ரூபாய் பகுதிக்கு உழைப்பைக் கொடுக்கமுடியுமோ, அதாவது யார் உழைக்க முன் வருகிறார்களோ அவர்களுக்கு வீடுகள் கட்டித்தருகிறோம். அப்படி உழைக்க முன்வராதவர்களுக்கு 200 ரூபாய் கடனாக கொடுத்து பிறகு அதைத் தவணைகளில் திருப்பி வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY: ஹரிஜனங்களுக்கு 200 ரூபாய்க்குக் கட்டித் தரப்படும் வீடுகள் வசதியுள்ளதாகவும் நீண்ட காலம் உபயோகப் படக் கூடியதாகவும் இருக்கின்றனவா? அப்படியில்லாவிட்டால் அந்தத் தொகையை உயர்த்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**THE HON. SRI P. KAKKAN** : 750 ரூபாய்க்குக் கட்டித் தரப்படும் வீடுகள் ரொம்ப நாட்களுக்கு உபயோகப்படுவதற்காகக் கட்டப்படுகின்றனவே தவிர வெகு சீக்கிரத்தில் பாழாகப் போகவேண்டும் என்பதற்காக அல்ல. லட்சக் கணக்கான ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுக்கொடுக்கவேண்டியிருக்கிறது என்று கனம் அங்கத்தினர்களே கூறினார்கள். ஆகவே தற்போது வீடு களில்லாத ஹரிஜனங்களுக்கு எல்லோருக்கும் இந்த வீடுகள் கட்டிக்கொடுத்து விட்டு, அதன் பிறகு வேண்டிய வசதியுள்ள வீடுகள் கட்டிக்கொடுக்கும் விஷயத்தை கவனிக்கலாம்.

**SRI V. SUBBIAH** : ஒரு ஹரிஜன கிராமமே மழை காலத்தில் தண்ணீர் தேங்குவதால் பாதிக்கப்பட்டு அழிந்துபோகக்கூடிய நிலையில் இருக்கிறது. அந்த கிராமம் ஒரு குளத்தின் அருகில் இருக்கிறது. மழை காலத்தில் வீடுகளைச் சுற்றி இரண்டு அடி உயரத்திற்குத் தண்ணீர் தேங்கு கிறது. ஆகவே, அவை மழை காலத்தில் வீழ்ந்து விடக்கூடியவையாக இருக்கின்றன. அந்த வீடுகளுக்குப் பக்கத்தில் 62 எக்கர் அளவு புறம் போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த கிராமம் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதால், அங்குள்ள மக்களுக்கு அந்தப் புறம்போக்கு நிலங் களில் வீடுகள் கட்டிக்கொடுத்தால் நல்லது. இந்த ஆபத்தான நிலை மையை முதலில் நீக்கவேண்டும் என்று கருதி, இந்த கிராம மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் காரியத்தை அரசாங்கத்தார் முதலில் செய்வார் களா என்று கேட்கிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : இது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டால் விவரமாக பதில் சொல்ல முடியும். இருந்த போதிலும், நான் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது அந்த கிராமத்தை வந்து பார்க்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**SRI C. MUTHIAH PILLAI** : மத்திய அரசாங்கத்தார் கொடுக்கும் பணத்திலிருந்து தேவையான வசதிகளுடன் ஹரிஜனங்களுக்கு நாம் வீடுகள் கட்டிக்கொடுக்க முடியாத காரணத்தால், வீடுகள் கட்டி கொடுப்பது குறித்து நாம் அடையும் சந்தோஷத்தின் அளவை விட மக்கள் அடையும் வருத்தத்தின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார் கொடுக்கும் பணத்தை, ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகளை வேறுவிதமாகச் சொந்தமாக்குவதற்கு நமது அரசாங்கத்தார் செலவழிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : ஹரிஜன மக்களுக்குகாகச் செலவழிக்கப் படும் தொகையிலிருந்து, அவர்களுக்கு மனைக்கட்டுகளைச் சொந்தமாக்கு வதற்கும் வழிவகைகள் செய்யப்படுகின்றன. அதே சமயத்தில் அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் யத்தனிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI A. V. P. ASAITHAMBI** : ஆதித் திராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் இந்தத் திட்டமானது நகரப் பகுதியில் மாத்திரம் செயல்படுகிறதா அல்லது கிராமப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுள்ளதா ?

**THE HON. SRI P. KAKKAN** : இது பரியந்தம் கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற ஹரிஜனமக்கள் ரொம்பக் கஷ்டப்பட்டு வந்துள்ளார்கள். அவர் களுக்கு எத்தனையோ தொல்லைகள் உள்ளன. ஆதலால் அவர்களுடைய குறைகளை முதலில் கவனிக்கவேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. ஆனால் இந்த வருஷம் இந்தத் திட்டத்தை முதல் தர பஞ்சாயத்துக்களுக்கு விஸ்தரிக்கலாமா என்பது பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக் கிறது.

**SRI M. JAGANNATHAN** : 1955-ம் ஆண்டுத் தீண்டாமைக் குற்றங்கள் சட்டத்தின் 4-வது பிரிவின் 8-வது ஷரத்தில், ஹரிஜனங்கள் கிராமங்களில் குறிப்பாக உயர்குலத்தோர் வாழுகிற பகுதிகளில் வசிப்பதற்கு அதிகாரம் அளிக்கிறது. அந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதில் ஜனங்களை விட சர்க்கார் அதிகப் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்ற காரணத்தால், எதிர் காலத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது அவர்களுக்கு உயர்குலத்தோர் வாழ்கின்ற பகுதிகளில் வீடுகள் கட்டிக் கொடுப்பதை அரசாங்கத்தார் கொள்கையாகக் கொள் வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.



**THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் இதுபற்றித் தனிக் கேள்வி கேட்டால் விவரமாக பதில் சொல்லலாம். இருந்தாலும் பதில் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த விஷயமாக கனம் அங்கத்தினருக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை. அவருக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். எங்கெல்லாம் ஹரிஜனங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு ஏற்ற முறையில் ஜாதி ஹிந்துக்கள் நல்ல மனப்பான்மையோடு இருக்கிறார்களோ அங்கெல் லாம் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யும். கூடியவரையில் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் இருக்கிறது. அதை அமுல் நடத்துவதில் கனம் அங்கத்தினர்களும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI K. VINAYAKAM** : சென்னை நகரத்தைப் பொருத்தவரையில் ஆதித்திராவிட மக்கள் மிகவும் நெருக்கடியான சேரிகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு இருக்கிற வீடு பெரும்பாலும் குடிசைகள்தான். அவற்றை நீக்கிவிட்டு அவர்களுக்கு வீடு கட்டித் தரவேண்டுமென்றால் இப்போது அவர்கள் எங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்களோ அங்கேயேதான் கட்டித் தர வேண்டும். காக்ஸ் சேரிகளைப் போல அங்கே அவர்களுக்குப் பெரிய மாளிகைகள் கட்டித் தருவதாகச் சொல்லி அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, பிறகு அவர்களை ஏமாற்றி அங்கிருந்தே விரட்டி அடிக்கக் கூடாது. இப்படிச் செய்யமாட்டார்கள் என்பதற்கு அரசாங்கத்திடமிருந்து ஆதித் திராவிட மக்களுக்கு அளிக்கப்படும் உத்தரவாதம் ஏதாவது உண்டா ?

**THE HON. SRI P. KAKKAN** : ஹரிஜனமக்களுக்குப் பெரிய மாட மாளிகை கட்டித்தராவிட்டாலும் கொஞ்சம் நல்ல வீட்டிலாவது அவர்கள் வசிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சர்க்கார் திட்டமிட்டு காக்ஸ் சேரி போன்றவைகளைக் கட்ட ஏற்பாடு செய்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஹரிஜனமக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இதை உணர்ந்தே நமது முதன் மந்திரி அவர்களும், மத்திய அரசாங்க பொக்கிஷ மந்திரி அவர்களும் இந்தத் திட்டத்திலே கவனம் செலுத்தி வருகிறார்கள். இப்பொழுது சேரிகள் இருக்கிற இடத்தி லுள்ள சில பேர்களுக்கு அதனால் உடனடியாக வசதி கிடைக்கும். எல் லோருக்கும் அந்தந்த இடத்திலேயே வசதி கிடைக்க வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. அப்படிக் கிடைக்காது என்றும் சொல்ல விரும்புகிறேன்.

**SRI A. GOVINDASAMY** : அரசாங்கம் வீடு கட்டுகிறது என்பது நிறை வேற்றுகிற நேரத்தில் நிலம் கிடைக்காமல் பல காலம் கடந்துவிடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள், மிராசுதார்கள் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். அந்த இடங்களை எல்லாம் கட்டாயம் ஆர்ஜிதம் செய்ய அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ?

**THE HON. SRI P. KAKKAN** : அரசாங்கம் எங்கெல்லாம் இம்மாதிரி நிலங்களை ஜாரி செய்வதற்குத் தடங்கல் இல்லையோ அங்கெல்லாம் வெகு வேகமாகச் செய்து வருகிறார்கள். ஒரு சில நிலச்சுவாந்தார்கள் இதை எதிர்த்துக் கோர்ட்டு வரையில் போவதில் முனைந்துகொண்டிருக்கிறார்கள். பலவிடங்களில் கட்டாயப்படுத்தியே ஜாரி செய்துவருகிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**SRIMATHI DR. SATHIYAVANIMUTHU** : கனம் தலைவர் அவர்களே, சேரிகள் ஒழிப்பின் மூலம் ஹரிஜனங்களுக்கு மாடமாளிகைகள் கட்டித் தர திட்டம் என்பதாகவும், சலுகை அளிப்பதாகவும் கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். காக்ஸ் சேரி விஷயம் நமக்குத் தெரியும், சேரி களை ஒழிக்கிறோம் என்று சொல்லி ஒரு சில வீடுகளைக் கட்டிச் சில பேருக் குக் கொடுத்துவிட்டு, 500, 600-க்கு மேற்பட்ட குடும்பங்களை நடுத் தெருவில்

திரியவிடக்கூடிய அளவில் சேரி அபிவிருத்தித் திட்டம் அமைந்திருக்கிறது. இப்படிச் சேரிகளை ஒழிப்பதற்குப் பதிலாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா ? அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை நல்ல முறையில் அமைத்துத் தருவதற்கு அரசாங்கம் திட்டங்கள் போட்டிருந்தால் அவை என்ன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் ஹரிஜனங்களுக்கு மாடமாளிகைகள் கட்டித் தருவதே எங்கள் நோக்கம் என நான் சொன்னது போலப் பேசுகிறார்கள். நான் சொன்னது கொஞ்சமாவது நல்ல வீட்டில் அவர்கள் வாழவேண்டும் என்பதுதான். அதற்காகவே சர்க்கார் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பது போலவே அவர்கள் நல்ல ஆரோக்கியமான இடங்களில் வசிக்க வழி வகைகளும் செய்து கொடுக்க வேண்டியது அவசியம். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம் பல முறைகளில் பணியாற்றி வருவது எல்லோருக்கும் தெரியும். கல்விச் சலுகை அளிக்கிறோம். மதுவிலக்குத் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏராளமான நஷ்டம் என்றாலும் ஹரிஜனங்களுடைய பொருளாதார நிலைமைதான் கணிசமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. குடிசைத்தொழில் வசதிகள் செய்து கொடுத்துவருகிறோம். இவை எல்லாமே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்கள்தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**SRI D. DASARATHAN** : சமீபத்தில் சர்க்காரால் விடுக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இரண்டு ஏக்கருக்குக் குறைவாக நிலம் இருந்தால் அவர்கள் சம்மதம் இல்லாமல் சேரி விஸ்தரிப்புக்காக அவற்றை எடுத்துக்கொள்ள கூடாது என உத்தரவு இருக்கிறது. இதனால் பல மனுக்கள் பைசல் செய்யப்படாமல் சேரி விஸ்தரிப்புத் திட்ட வேலையே மிகவும் தாமதப் படுகிறது. ஆகவே புதிதாகப் போட்ட சட்டத்தைப் பரிசீலனை செய்து அம்மாதிரி 1½ ஏக்கர், 2 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களிடம் உள்ள நிலத்தையும் சிக்கல் இல்லாமல் பெற்று சேரி விஸ்தரிப்புத் திட்டத்தைத் துரிதமாகச் செய்ய கனம் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : கனம் தலைவர் அவர்களே, நான் மந்திரியாக வந்த பிற்பாடு அந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. இருந்தாலும் கூட இரண்டு ஏக்கராவுக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். அந்த ஏழைகளுக்குக் கஷ்டம் வரக்கூடாது என்பதற்காகத்தான் அம்மாதிரியாகச் செய்யப்பட்டிருக்கும். பல இடங்களில், ஐந்து ஏக்கரா, பத்து ஏக்கரா நிலம் உடையவர்கள் இல்லையா ? எந்த இடத்தில் வசதியாக நிலத்தை வாங்க முடியுமோ, அங்கெல்லாம் துரிதமாக வாங்கி ஆவன செய்துவருகிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். எந்த இடத்தில் வீடு கட்டினால் நல்லது என்பதைப் பொறுத்தே அந்த ஏற்பாடு செய்ய முடியும்.

**SRI T. T. DANIEL** : Sir, several hundred poor Harijans are now living on poramboke lands by constructing small thatched huts. Will the Government be pleased to take steps to register these small huts put up by these Harijans in their own names as that will also provide housing for them permanently?

**THE HON. SRI P. KAKKAN** : The Government will take necessary steps to aVssign lands whever possible.

**SRI P. G. MANICKAM** : கனம் சபாநாயகர் அவர்களே, வீட்டு நிலங்கள் வாங்குவதற்கும் இந்தத் திட்டத்திலிருந்து தொகை செலவழிக்கப் படும் என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். அநேக சேரிகள்





தற்போது ஜாதி இந்துக்களிடத்தில் இருக்கிறது. அந்த நிலங்கள் ஜாதி இந்துக்களுக்குச் சொந்தமானது ஆகையால் அவர்கள் இந்த ஹரிஜனமக்களை அடிமைகளாக நடத்துகிறார்கள். சாணி அள்ளச் சொல்லுகிறார்கள். இந்த முறையில் தாழ்த்தப்பட்ட மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அந்த நிலங்களை ஹரிஜனங்களுக்கே ஜாரி செய்து கொடுக்க சர்க்கார் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினருடைய அபிப்பிராயம் பரிசீலிக்கப்படும்

**SRI P. S. SANTHANAM** : சேரி என்று இருக்கும் பெயரை விட்டு ஹரிஜன் காலனி என்று சொல்வதனால் ஆதித்திராவிட மக்களுடைய நிலைமை மாறிவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI P. KAKKAN** : ஹரிஜன முன்னேற்றத்தில் அக்கறையுடையவர் காலனி என்று மாற்றுவதற்குக்கூட சம்மதிக்காமலிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

### *Mail Bus Service.*

* 57 Q.—SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government have issued any instructions to the Regional Transport Authority, North Arcot district, to extend the "Tiruvannamalai-Chengam" Mail Bus Service to Singarapet, by cutting short the existing number of trips from Tiruvannamalai to Chengam;

(b) if so, the reasons therefor; and

(c) the opinion of the Central Road Traffic Authority in the matter?

**THE HON. SRI V. RAMAIAH** : (a) Yes, Sir. The Government agreed with the proposal of the Regional Transport Authority, North Arcot and directed it to vary the route Tiruvannamalai-Chengam as Tiruvannamalai to Singarapet via Chengam in respect of one bus;

(b) The Regional Transport Authority, North Arcot considered that the route required additional bus facilities on account of over-loads noticed on the route. The route itself was opened several years ago and since its opening a dam has been constructed at Sathanur. Government considered that the opening of this dam satisfied the criterion laid down for the grant of variations in G.O. Ms. No. 1298, Home, dated 28th April 1956. The diversion was sanctioned in the interest of the travelling public.

(c) The Central Road Traffic Authority does not exist now.

### *Fish-rearing in Kadamba tank.*

* 58 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Kadamba tank in Tiruchendur taluk is utilized by the Fisheries Department for the rearing of fresh water fish?

**THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON** : Yes, Sir.

**Sri M. S. SELVARAJAN :** கடம்பா குளத்திற்குக் கிழக்கே உள்ள பன்னிரண்டு குளங்களுக்கு அந்தக் குளத்திலிருந்து தண்ணீர் பாய வேண்டியிருப்பதால் கடம்பா குளத்தில் வளர்க்கும் மீன் மற்ற குளங்களுக்குப் பரவலமாகப் போய்விடுவதன் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கு அந்தத் திட்டம் அந்த இடத்தில் வெற்றிகரமாக நடக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON :** தற்போது மீன் வளர்ப்பு அங்கே நடைபெறுகிறது. அது வெற்றிகரமாக நடைபெறுகிறதா இல்லையா என்பதைப்பற்றித் தகவல் இல்லை. அதைப் பற்றிக் கவனிக்கப் படும்.

**Sri M. S. SELVARAJAN ;** ஏற்கெனவே சுயேச்சையாக வலை வைத்து மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் கடம்பா குளத்தைச் சுற்றிலும் தங்களுடைய ஜீவனத்திற்கு இப்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON :** இப்போது அவர்களிடமிருந்து ஏதாவது குறிப்பிட்ட குறைபாடு வந்திருக்கிறதா என்பது தெரியவில்லை.

*Labour dispute in Benkkal Estate, Coonoor.*

* 59 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to settle the dispute between the workers and the management of the Benkkal Estate, Kattari, Coonoor?

**The Hon. Sri R. VENKATARAMAN :** Conciliation was held by the Labour Officer, Coonoor, but his efforts to resolve the dispute amicably were not successful. After examining the conciliation reports of the Labour Officer, the Government have referred two out of the seven issues for adjudication to the Labour Court, Coimbatore, and have declined to refer the remaining five issues for adjudication.

*Industrial Estate in Tirunelveli district.*

9-30 * 60 *Q.*—Sri A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is a proposal to establish an Industrial Estate in Tirunelveli district during 1957–58;

(*b*) if so, whether any site has been selected for its location; and

(*c*) the criteria for the selection of the site?

**The Hon. Sri R. VENKATARAMAN :** (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir. A site measuring 21·43 acres at Narasinganallur village in Tirunelveli taluk has been acquired for the establishment of the Industrial Estate.





(*c*) The site was selected for the following reasons :—

(1) The site is located just opposite the Pettai Railway Station and well connected by road and affords good transport facilities.

(2) It is situated in the centre of Tirunelveli district and is equi-distant from all corners of the district. It is very close to the two municipal towns of Tirunelveli and Palayamkottai and the headquarters of the district where already there are some industries and there is scope for some more industries coming up.

(3) Water is available in plenty.

(4) Artisans like blacksmiths and carpenters are available in almost all the villages within a radius of three to five miles.

(5) A model carpentry and blacksmithy centre with mobile vans is being set up at Pettai. Servicing facilities and technical help will be available from this unit to the small industrialists who will take on rent the factory buildings in the estate.

(6) The Industrial School proposed to be set up in the adjacent site at Pettai will make available technicians to the private industrialists who will take up on rent the factory buildings in the Industrial Estates.

**Sri A. R. SUBBIAH MUDALIAR :** இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டிற்கும் இண்டஸ்ட்ரியல் காலனிக்கும் உள்ள வித்தியாசம் என்ன? திருநெல்வேலி பேட்டையில் தொடங்கப்படுவது ஒரு மல்டி பர்பஸ் workshop தானே?

**The Hon. Sri R. VENKATARAMAN :** சுருங்கச் சொன்னால் எஸ்டேட் பெரிது. காலனி சிறிது.

**Sri A. R. SUBBIAH MUDALIAR :** பேட்டையில் அம்பர் சர்க்கா உற்பத்தி நிலயம் வருகிறதா?

**The Hon. Sri R. VENKATARAMAN :** இப்பொழுது சொல்ல முடியாது. இப்பொழுதுதான் கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வருகிறதா இல்லையா என்று இப்பொழுது சொல்வதற்கில்லை.

**Sri S. B. ADITYAN :** இப்பொழுது திருநெல்வேலி ஜில்லாவில் ஏற்படுத்தியிருக்கும் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், விருதுநகரில் மத்திய சர்க்காரின் உதவியுடன் ஆரம்பிக்கப்படுகிற இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டைப் போன்றதா அல்லது வேறு விதமா என்று கேட்க விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN :** இரண்டும் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் கட்டப்படுவதுதான்.

**Sri K. ANBAZHAGAN :** புதிதான இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் தொடங்குகிறபொழுது அந்த மாவட்டத்தில் உள்ள அத்தகைய பல்வேறு தொழில்களில் ஈடுபட்டவர்கள் இப்பொழுது போதுமான வேலை இல்லாமல், போதுமான கூலி இல்லாமல், திண்டாடுகிறவர்கள் வரவழைக்கப்பட்டு அங்கு குடியேற்றப்படுவார்களா?

**The Hon. Sri R. VENKATARAMAN :** முதலில் இந்த ஸ்கீமைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். கட்டிடம், மின்சார வசதி, தண்ணீர் வசதி, (compressed air) போன்ற சாதனங்கள் கொடுக்கப்பட வேண்டும். இத்தொழில்கள் நடத்துகிறவர்கள் இவைகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதால் அவர்கள் அத்தொழில்களை இங்கு வைத்து நடத்துவார்கள்.

**SRI A. R. SUBBIAH MUDALIAR :** மத்திய சர்க்காரால் மேற் கொண்டு 26 நிலயங்கள் நம் ராஜ்யத்தில் ஸ்தாபிக்க உத்தரவு கொடுக்கப் பட்டிருக்கிறதா ? நம் மாகாணத்தில் அந்த 26 நிலயங்கள் எந்தெந்த இடங்களில் திறக்கப்படும் ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** இருபத்தி ஆறு இல்லை. இன்னும் அதிகம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளும், இண்டஸ்ட்ரியல் காலனிகளும் வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம். அவற்றைப் பற்றி ஒன்றும் முடிவு செய்யப்படவில்லை.

**SRI A. P. C. VEERABAHU :** இவைகளில் எப்பொழுது வேலை ஆரம்பிக்கும் ?

**THE HON. SRI R VENKATARAMAN :** கட்டிடங்கள் முடிந்து கொண்டிருக்கின்றன. எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை.

**SRI S. B. ADITYAN :** இந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் தொழில் ஆரம்பிக்கிறவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்கிறதா ? அதாவது, இயந்திரம் போன்றவைகள் வாங்கவும், வேறு முதலீடு செய்வதற்கும். அப்படியானால் அத்தொகை எவ்வளவு ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்" ஆரம்பிப்பதற்கு "ஹயர் பர்ச்சேஸ்" மூலம் வாங்க சிறு தொழில்களுக்கு வசதி இருக்கிறது.

**SRI M. S. SELVARAJAN :** இலங்கையிலிருந்து தாயகத்திற்குத் திரும்பி இருப்பவர்களின் வசதிக்காக திருச்செந்தூரில் சிறிய அளவில் ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆரம்பிப்பதற்கு ஸ்பெஷலாக அனுமதி தருவதாக சமீபத்தில் அங்கு விஜயம் செய்த மத்திய அரசாங்க மந்திரி ஸ்ரீ மானுபாய் ஷா அவர்கள் சொன்னது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**MR. SPEAKER :** அதைப்பற்றி தனி கேள்வி கேட்கலாம்.

**SRI A. R. SUBBIAH MUDALIAR :** இனிமேல் ஸ்தாபிக்கும் இண்டஸ்ட்ரியல் காலனிகளை ஒரேயிடத்தில் வைக்காமல், அதாவது **centralise** பண்ணாமல், அதிக ஆர்டிஸான்ஸ் இருக்கும் இடங்களிலும், பஞ்சப் பிரதேசங்களிலும் பரவலாக வைக்க சர்க்கார் கவனிக்குமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN:** நான் இக்கேள்விக்கு பதில் சொல்லும்போது இவைகளை வைக்க சில காரியங்களை சுட்டிக்காட்டினேன். அதை ஒட்டித்தான் வைக்க முடியும்.

**SRI R. KRISHNASAMI NAIDU :** இந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் தொழில் ஆரம்பிப்பவர்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய மூலதனத்தில் 75 சதவிகிதம் சர்க்கார் உதவி அளிப்பதாகச் சொல்வது சரியா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** அதைப் பற்றி தனி கேள்வி கேட்டால் சொல்லுகிறேன்.

**SRI M. JAGANNATHAN :** தென் ஆற்காடு ஜில்லா பல்வேறு துறையில் மிகவும் பிற்போக்காக இருப்பதினால் அங்கு இம்மாதிரி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் திறப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

**MR. SPEAKER :** இதற்கும் முதற் கேள்விக்கும் சம்பந்தமேயில்லை.

**SRI A. R. SUBBIAH MUDALIAR :** சங்கரன்கோவிலில் அம்பர் சர்க்கா உற்பத்தி நிலையம் ஸ்தாபிக்க இருந்ததா ? நிலம் கிடைக்காததால் அதை திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டதா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** இதைப் பற்றி தனி கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கிறேன்.

**MR. SPEAKER :** Questions are over.



[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—GENERAL DISCUSSION OF THE BUDGET FOR THE YEAR 1957-58—*cont.*

**MR. SPEAKER :** இன்றைய தினம் பேசுவதற்கு 25, 30 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கொடுத்தால் 2 மணிக்குள் முடியாது. உங்கள் அபிப்பிராயம் என்ன? மூன்று மணி வரை உட்காரலாமா ? எனக்கு அதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை. இரண்டு மணிக்குள் விவாதம் முடிய வேண்டுமென்றால் அங்கத்தினர்கள் சுருக்கமாக பேச வேண்டும். சபையின் விருப்பம் எப்படியோ அப்படியே நடக்கட்டும். 85, 90 அங்கத்தினர்கள் வரை பேசியாகி விட்டது. மேலும், அங்கத்தினர்களுக்கு கட்மோஷன்ஸ் வரும்போது பேச சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே எல்லோரும் பேச வேண்டுமென்று வற்புறுத்தாமல் சபா நாயகர் யார் யாரை கூப்பிடுகிறாரோ அவர்கள் பேசி முடிக்கலாம் என்பதுதான் என் விருப்பம்.

**SRI K. VINAYAKAM :** I rise on a point of information, Sir. Has the possibility of holding a night session been considered?

**SRI N. K. PALANISAMI :** Yes, Sir, that will be good for everybody.

**MR. SPEAKER :** I am in the hands of the House. Personally, I feel enough discussion has taken place and there will be chances for hon. Members to speak when Demands and Cut Motions are considered. We shall wait till 2 o'clock and then take a decision in the matter. If many Members had not spoken and if there is still discontent on their minds in this score, I have no objection to any other arrangement. But the general impression seems to be that a night session should be avoided. If necessary, we can sit till 3 o'clock and finish the discussion. Anyway, we may decide as we proceed. For the present, we shall proceed on the basis that we shall rise at 2 o'clock.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR :** Sir, instead of sitting continuously till 3 o'clock, will it not be better if we adjourn at 1 o'clock for lunch and then meet again at 3 p.m.?

**MR. SPEAKER :** The idea to sit till 3 o'clock is to enable six more hon. Members to speak. That being so, what is the point in adjourning at 1 o'clock and then meeting at 3 p.m.? That will have the same effect as meeting without a break. So, let us continue our discussion. As the discussion proceeds, we shall see whether we will have to sit till 3 o'clock.

**SRI D. S. ATHIMOOLAM :** இனியும் எல்லோருக்கும் பேச பத்து பத்து நிமிடங்கள் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** எல்லோருக்கும் பத்து பத்து நிமிடங்கள்தான்.

**SRI K. VASUDEVAN :** சபாநாயகர் அவர்களே, இப்போது நம் முன் 9-40 a.m.
விவாதத்தில் இருக்கும் பட்ஜெட்டைப் பார்த்தால் நமது நிதி அமைச்சர் அவர்களுடைய திறமையையும், அறிவையும் விளம்பரப்படுத்திக் கொள்ளும் முறையில் இந்த பட்ஜெட்டை தயார் செய்திருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இப்போது பட்ஜெட்டில் எல்லா வகையான மக்களின் முன்னேற்றத்திற்குள்ள வழிகளையும், அதற்கான அமைப்பு

களையும் இந்த பட்ஜெட்டில் பார்க்கிறோம். முதல் முதலாக இப்போது இந்த பட்ஜெட்டை பற்றாக்குறை பட்ஜெட் என்று கனம் அங்கத்தினர்களில், பலர் குறை கூறினார்கள். ஆனால் இந்த பட்ஜெட் தயாரிக்கும் முறை இரண்டு விதமாக இருக்கிறது. அதை நாம் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். முதல் முறை என்னவென்றால் நம்முடைய வருவாயை கணக்கெடுத்து அந்த வருவாய்க்கு தக்கபடி செலவுகளை கணக்கிடுவது ஒரு முறை என்று நம்புகிறேன். அடுத்த முறை என்னவென்றால் நம் முன் எல்லா செலவுகளையும் கணக்கெடுத்துப் பார்த்து அதன்படி வருவாயை பெருக்குவது இன்னொரு முறையாக இருக்கிறது. அப்படி பார்க்குங்கால் நம் நாட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிற இந்த பட்ஜெட்டானது முதல் வகுப்பை சேர்ந்த பட்ஜெட்டாகும். ஆனால் நம் நாட்டிலுள்ள பொருளாதார அபிவிருத்தி, அதாவது நம் நாட்டின் வருமானத்தை உத்தேசித்து மக்களின் தேவையை ஓரளவுக்கு கணக்கெடுத்து, மக்களின் தேவைக்குத் தக்கபடி எல்லா பொருள் உதவியையும் செய்து கொடுப்பதற்காக அதற்கு வேண்டிய வருவாயை பெருக்க வேண்டும் என்பதை நாம் இந்த பட்ஜெட்டில் காண்கிறோம். ஆகவே நம் நாடு சென்ற 200 வருஷ காலமாக அடிமை நாடாக இருந்த பிறகு இந்த சுதந்திரம் பெற்று இருக்கிறோம். நம்முடைய தேவைகள் இன்று அதிகமாக இருக்கிறது. இந்த தேவைகளை எல்லம் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் நம்முடைய வருவாயை பெருக்க வேண்டியிருக்கிறது. இதனால் நாம் இப்பொது பற்றாக்குறை பட்ஜெட்டை பார்க்கிறோம். இந்த பட்ஜெட்டில் ஒரு நல்ல அமைப்பு இருப்பதை நாம் யாரும் மறுக்க முடியாது என்று தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தால்தான் இதில் ஏற்படக்கூடிய செலவினங்களையும், ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை நன்றாக செலவு செய்யப்படுகிறதா என்று கவனிப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. நமது மந்திரி அவர்கள் நன்றாக ஆலோசனை செய்துதான், செலவினங்களை மட்டுப்படுத்திதான் இந்த பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் அங்கத்தினர்கள் யாவரும் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். முக்கியமாக இப்போது மக்களுக்கு குடியிருக்க வீடுகள் வேண்டும். நல்ல முறையில் வேலைகள் கொடுக்கப்பட வேண்டும். உணவுப் பொருள்களை அதிகமாக்க வேண்டுமானால் விவசாயிகளுக்கு நல்ல வசதிகள் கொடுக்க வேண்டும். ஆகையினால் இத்தனை வசதிகளும் இந்த பட்ஜெட்டில் காணப்படுவது ஒரு அறிகுறி என்றே நான் நினைக்கிறேன். முக்கியமாக இப்போது நாட்டில் கோவாபரேடிவ் சொஸைட்டி மூலம் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. ஆனால் இப்போது இந்த கோவாபரேடிவ் ஸொஸைட்டி பட்டணங்களில் அமைக்கப்பட்டு சில தனிப்பட்ட நபர்கள் அதில் புகுந்து கொண்டு தங்களுக்கு வேண்டிய சில காரியங்களை சாதித்து கொள்ளுகிறார்களே தவிர, அங்குள்ள ஏழை மக்களுக்கு இடம் கிடைக்காமல் இருப்பதை இந்த கவர்மெண்டார் முன்னிலையில் தெரிவித்து கொள்கிறேன். ஆகையினால் இப்போது இந்த கோவாபரேடிவ் ஸொஸைட்டி மூலம் எல்லா மக்களுக்கும் வசதி கிடைக்க செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு இந்த சர்க்கார் ஏற்பாடு செய்யும் என்று நம்புகிறேன். இவை உடனடியாக அவர்களுக்கு பயன்படக்கூடிய முறையில் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுமாதிரியாக கோவாபரேடிவ் ஸொஸைட்டி மூலமாக நியாயமான விலையில் எல்லா சாமான்களும் கிடைப்பதற்கும், கண்ட்ரோல் சாமான்களான சிமிண்ட், இரும்பு போன்றவைகளுக்கு பிளாக் மார்க்கட் இல்லாமல் நியாயமான முறையில் விற்பனை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். முக்கியமாக நமது நாட்டில் பண்டைக் காலத்தில் ஏற்பட்டிருந்த கோவில்களெல்லாம் அறிவையும் ஞானத்தையும் பெருக்கி கொண்டிருந்தன. ஆனால் இப்போது கலைகளையும் விஞ்ஞானத்தையும் பெருக்கக்கூடிய வகையில் கூடுதலாக யூனிவர்சிட்டி நமக்கு அவசியம். இம்மாதிரியுள்ள யூனிவர்சிட்டிகள் பனாரிஸ் போன்ற ஒன்றிரண்டு இடங்களில் தான் இருக்கிறது. இதை போல் தமிழ் நாட்டிலும், பல இடங்களிலும் ஏற்படுத்துவதற்கு இந்த சர்க்கார் வாய்ப்பு அளிக்க வேண்டும். இன்று முக்கியமாக நாம் பார்ப்பது என்ன வென்றால் பள்ளிகளில் மாணவர்



களுக்கு நல்ல வசதிகள் இல்லாமல் இருக்கிறது. இதை நாம் ஆராய வேண்டும். இதனால் கூடுதல் ஷிப்ட் ஸிஸ்டம் மூலமாக இன்னும் ஜாஸ்தி மாணவர்களுக்கு வசதி அளிக்கும் நோக்கத்துடன் இதை அபிவிருத்தி செய்ய வேண்டிய முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக பள்ளி உபாத்தியாயர்களுக்கு சரியான விதத்தில் சம்பளத்தை உயர்த்தி கொடுக்க நமது சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது முனிசிபாலிட்டியில் இருந்து சட்டபூர்வமாக எலிமெண்டரி ஸ்கூல்கள் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு முனிசிபல் அதிகாரிகளுடையது. முனிசிபல் அதிகாரிகள் இவ்விதம் உடனடியாக ஸ்கூல்கள் அமைப்பதாக தெரியவில்லை. ஆதலால் தனிப்பட்ட நபர்கள் எலிமெண்டரி ஸ்கூல்கள் ஏற்படுத்த முன் வருவார்கள். அப்படியிருந்தால் இலவசமாக கல்வி கற்பதற்கு வழியில்லாமல் போய் விடும். கூடுமான வரையில் முனிசிபல் நிர்வாகத்திலேயே எலிமெண்டரி ஸ்கூல்கள் அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது நம்முடைய **Hindu Religious Endowment Board**-ஆரால் சரியானபடி நிர்வாகம் நடத்தப்படாத தர்ம ஸ்தாபனங்களை யெல்லாம் கவர்ண்மெண்டின் கீழ் கொண்டு வருவதற்கு சட்டம் இருப்பது போல், தனிப்பட்ட நபர்களால் சரியானபடி நடத்தப்படாத காலேஜ்களை எடுத்து கவர்ண்மெண்டின் கீழ் கொண்டு வருவதற்கு ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தப்படியாக முனிசிபல் அமைப்பானது ரொம்ப காலத்தின் முன் உள்ள. அதாவது 1920-ம் ஆண்டிலுள்ள சட்டத்தின் கீழ் தான் இன்னும் செயல்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த சட்டத்தை மாற்ற வேண்டுமென்று முனிசிபல் சேர்மென் **Chamber**-ம் அபிப்பிராயப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆகவே இதை உடனடியாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக திருசிராப்பள்ளி ஜில்லாவில் இரண்டு கால்வாய்கள் வெட்டுவதற்கு இந்த பட்ஜெட்டில் திட்டமிட்டிருப்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த திட்டத்தின் கீழ் மைசூரிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு மைசூருக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு உடன்படிக்கையின்படி அங்குள்ள உபரி தண்ணீரை உடனடியாக கொண்டு வர வேண்டுமென்றும், இப்போது போடப்பட்டிருக்கும் திட்டத்திலிருந்து ஒரு சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**(The Hon. Speaker sounded the gong and the hon. Member resumed his seat,)**

**SRI A. V. P. ASAITHAMBI** : கனம் தலைவர் அவர்களே, சென்னை மாநில நிதி அமைச்சரும் சர்க்கார் கட்சித் தலைவருமான கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்களை முதலில் பாராட்ட விரும்புகிறேன். தமிழை ஆட்சி மொழி ஆக்குவதில் ஆரம்ப வேலையாக "ஸ்ரீ" என்ற வட மொழிப் பதத்திற்குப் பதிலாக "திரு" என்ற வார்த்தையை பயன்படுத்தும்படி நான் கேட்டபொழுது, அது அவசியம் இல்லை என்று மறுத்த கனம் மந்திரி அவர்கள் அவருடைய பட்ஜெட் பேச்சிலே "ஸ்ரீ" என்ற வார்த்தைக்கு பதிலாக "திரு" என்ற வார்த்தையைப் பயன்படுத்த முன் வந்ததமை கண்டு மகிழ்கின்றேன். அவரை மனதாரப் பாராட்டுகின்றேன். இந்த நிலை நீடிக்கவேண்டுகின்றேன். நீடிக்கும் என்று நம்புகிறேன். பொதுவாக ஒன்றை முதலிலே ஆட்சேபித்து, பின்னர் அதனை நன்று என்று உணர்ந்து ஏற்க முன்வந்திருக்கின்ற செயலானது நாங்கள் கொண்டுள்ள கொள்கையை இன்று இல்லாவிட்டாலும், நாளை கட்டாயம் கனம் மந்திரி அவர்களும் அவருடைய கட்சித் தோழர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற புதிய நம்பிக்கையை எங்களுக்கு உண்டாக்கி இருக்கிறது. 9-50 a.m.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : "திரு" என்ற பதம் இரண்டு வருஷங்களுக்கு முன்பாகவே நாங்கள் உபயோகப்படுத்திய பதம்தான். புதிதாக நீங்கள் சொல்லி உபயோகிக்கவில்லை.

[4th July 1957

**SRI A. V. P. ASAITHAMBI** : 1939-ம் வருஷத்தில் நீதிக் கட்சியை சேர்ந்த நாங்கள் இந்த கிளர்ச்சி ஆரம்பித்த காரணத்தினாலே, அதுவும் இருக்கலாம் என்று நினைக்கிறேன். எப்படியிருந்தபோதிலும் பொதுவாக எங்களுடைய விமர்சனம் எல்லாம் நியாய அடிப்படையிலே இருக்குமே தவிர, துவேஷ அடிப்படையிலே இருக்காது என்பதை கனம் மந்திரி அவர்கள் நிச்சயமாக பார்க்கலாம். ஆனால் நியாயம் என்றால் என்ன என்பதே புரியாமல் எங்களுடைய தூய உள்ளங்களைத் தெரிந்துகொள்ளவே முடியாது.

கனம் மந்திரி அவர்களின் பட்ஜெட்டை அந்த முறையிலே பரிசீலனை செய்து பார்த்தால், அது சரித்திரத்திலே மகாராஷ்டிரர் காலத்திலே, சிவாஜி ஆட்சி காலத்திற்குப் பின்னாலே ஆட்சி நடத்திய பீஷ்வாக்கள் காலத்திய பட்ஜெட் போல இருக்கிறது என்பதை நான் குறிப்பிட ஆசைப் படுகிறேன். மகாராஷ்டிரர் காலத்திலே இரண்டாவது மந்திரியாகவும் நிதி மந்திரியாகவும் இருந்தவர்களுக்கு பீஷ்வாக்கள் என்று மாறு பெயர்கள் கொடுக்கப்பட்டன. அதேமாதிரி கனம் சுப்பிரமணியம் அவர்கள் இரண்டாவது மந்திரியாக இருக்கிறார். அதுமாத்திரமல்ல. நிதி மந்திரியாகவும் இருக்கிறார். அதனாலேதான் அவருடைய பட்ஜெட் பீஷ்வாக்கள் காலத்திய பட்ஜெட் என்று சொல்லுகிறேன். பீஷ்வாக்கள் காலத்தில் விதிக்கப்பட்ட வரிக்கும், இன்று விதிக்கப்பட்ட வரிக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. பீஷ்வாக்கள் ஆட்சி நடத்திய காலத்தில் "சவுக்" என்ற வரி 4-ல் ஒரு பங்கு தரப்படவேண்டுமென்றும், சர்த்தேஷ்முக் என்ற வரி 10-ல் ஒரு பங்கு தரப்படவேண்டுமென்றும் சொன்னார்கள். வரி விதித்து மக்களை கொடுமை படுத்தினார்களே தவிர, வரி வசூலித்த பகுதியிலும் வரி கொடுத்த மக்களுக்கும் அந்தக் காலத்தில் பீஷ்வாக்கள் நன்மை எதுவும் செய்யவில்லை. அதே போல தான் இந்தக் காலத்திலே வரிகள் போட்டு வசூலிக்கப்படுகிறதே தவிர, சுயராஜ்யம் வந்து 10 ஆண்டுகள் ஆகியும்கூட மக்களுடைய வாழ்க்கைத்தரம் இதுவரைக்கும் உயர்ந்ததாகத் தெரியவில்லை. ஒரு பட்ஜெட்டினுடைய உபரித் தொகையை வைத்தோ அல்லது துண்டு விழுகின்ற தொகையை வைத்தோ அதன் தராதரத்தை நிர்ணயிப்பதாக நீங்கள் நினைப்பது தவறு. அந்த மாதிரி நிர்ணயிக்கவும் கூடாது. ஒரு நாட்டிற்கு என்னென்ன தேவை, தேவைக்கேற்ற திட்டங்கள் பட்ஜெட்டில் உள்ளனவா, அந்தத் திட்டங்களுக்குகேற்ப தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதைப் பொறுத்துத்தான் ஒரு பட்ஜெட்டின் தராதரத்தை வரையறுக்கவேண்டுமே தவிர, உபரித் தொகையை வைத்தும், துண்டு விழுகின்ற தொகையை வைத்தும் நாங்கள் எப்பொழுதுமே ஒரு முடிவுக்கு வருவது கிடையாது. அந்த முறையிலே பார்த்தால், நாட்டிற்கேற்ற திட்டங்கள் இதிலே இப்பொழுது இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. இது வருஷாந்திர பட்ஜெட் என்பதை பட்ஜெட் தயாரித்த மந்திரி அவர்கள் மறந்துவிட்டாரா என்றுகூட நான் கருதுகிறேன். ஐந்தாண்டு காலத்திலே என்னென்ன வருகிறது, 10 ஆண்டு காலத்திலே என்னென்ன வருகிறது என்பதுதான் இந்த பட்ஜெட் உரையிலே கண்டிருக்கிறதே தவிர, உடனடியாக இந்த வருஷத்திலே மக்களுக்கு கிடைக்ககூடியது என்னவென்று பார்க்கும்பொழுது, சர்க்காருடைய வரிதான் வருமே தவிர வேறு ஒன்றுமே வராது என்ற நிலையில்தான் இந்த பட்ஜெட் இருக்கின்றது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் தொழில் ஸ்தாபன திட்டங்களும் வருகின்றன என்று சொல்லுகிறார்களே தவிர உடனடியாக பலன் தரக் கூடிய சிறிய திட்டங்கள் எதுவுமில்லை. உதாரணமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரையில், பம்பாயிலிருந்து மங்களூர் வரையில் ரோடுகள் போடுவதற்கெல்லாம் சர்க்காரிடம் திட்டங்கள் இருக்கிறதே தவிர, சிறு கிராமங்களை இணைக்கின்ற எந்த மாதிரியான திட்டங்களும் இல்லை. பொதுவாக. பொருளாதாரம் நன்றாக உள்ள நாடுகளிலே ஒரு சதுர மைலுக்கு ஒரு மைல நீளம் உள்ள ரோடுகள் இருக்கவேண்டுமென்று கூறுவார்கள். அந்த முறையில் பார்த்தால், இந்தியாவில் 10 லட்சம் மைல்கள் நீளமுள்ள ரோடுகள் தேவை. ஆனால் ஒரு லட்சம் மைல்கள் நீளமுள்ள ரோடுகள் கூட இல்லாத நிலைமை



4th July 1957] [Sri A. V. P. Asaithambi]

இருக்கிறது. அதேமாதிரி பெரிய அணைக்கட்டு திட்டங்கள் வரப்போகின்றன, அவை வந்தால் நாடு செழிப்பு அடைந்துவிடும், உற்பத்தி பெருகிவிடும் என்றெல்லாம் சொல்லுகிறார்களே தவிர, சிறு நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றி மந்திரி அவர்கள் திட்டத்திலே சரிவர ஒன்றும் சொல்லப்படவில்லை. அதன் காரணமாகத்தான் நேரிலே பார்த்து சிலர் கலெக்டர் அவர்களை அணுகிப் போய்ச் சொல்லி அவைகளை அமைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் அமைக்கப் படவேண்டுமே தவிர, பெரிய அணைக்கட்டு திட்டங்களினால் உடனடியாக மக்களுக்கு நிச்சயம் பலன் கிடைக்கவே கிடைக்காது. பெரிய திட்டங்களைப் பற்றிய எங்களுடைய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம், வடக்கே ஒரு மாதிரியாக நடைபெறுகின்றது. தெற்கே ஒரு மாதிரியாக நடைபெறுகின்றது என்று சொன்னபோது, மாநில முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்கள் வடக்கே பெரிய ஜீவநதிகள் இருக்கின்றன, ஆனால் தெற்கே என்னுடைய விருதுநகர் தொகுதியிலே கௌசிக மகாநதி என்ற வரண்ட நதிதான் இருக்கிறது, என்ன கட்ட முடியும் என்று கேட்கிறார். வடக்கே போல இங்கே ஜீவநதிகள் இல்லை என்பதை தெரிந்துகொண்டும் இந்த சர்க்கார் செய்யவேண்டிய முதல் கடமை சிறிய நீர்ப்பாசன திட்டங்களை ஜில்லா வாரியாக தாலுகா வாரியாக அமுலாக்க வேண்டியதுதான். எங்கே ஏரிகள் செப்பனிடப்படவேண்டும், புதிய ஏரிகள் கட்டப்படவேண்டும், குளங்கள் வெட்டப்படவேண்டும் என்பதை சரிவர சர்வே செய்து அந்த வேலைகளை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் விட்டுவைத்திருப்பது எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதை சர்க்கார் யோசித்ததாகத் தெரியவில்லை.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று கேட்டால், அரியலூர் ரயில் விபத்து நடந்தது எல்லோருக்கும் தெரியும். அதில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தார்கள். அரியலூர் ரயில் விபத்திற்கு காரணம் இந்த சர்க்கார்தான் என்று நாங்கள் குற்றம் சாட்டிய பொழுது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் "எப்படி நாங்கள் குற்றவாளிகள் ஆக முடியும், எங்களுக்கு ஜோஸ்யமா தெரியும்" என்று கேட்டார்கள். நாங்கள் பொறுப்பற்ற முறையில் குற்றம் சாட்டுவதாக யாரும் கருதவேண்டாம். அரியலூர் பாலம் சேதம் அடைந்ததற்கு பெரிய மழை அல்ல காரணம். பெரிய மழையின் காரணமாக ஏரி உடைப்பெடுத்துக்கொண்டதால்தான், உடனடியாக பாலம் சேதமடைந்தது. அந்த ஏரி உடைந்ததற்குக் காரணம் யார் என்று பார்த்தால் இந்த சர்க்கார் ஏரிகளை சரிவர செப்பனிடாத காரணம்தான் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதேபோன்று ராமநாதபுரம் ஜில்லாவில் புயலும், மழையும் அடித்த பொழுது பெரிய ஏரிகள் உடைப்பு எடுத்துக்கொண்டதற்குக் காரணம் அவைகள் செப்பனிடப்படாததுதான். மங்கம்மாள் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளும் குளங்களும் அப்படியே இருக்கின்றன. இந்த சர்க்கார் அவைகளை கண்காணிப்பதே இல்லை. இவர்கள் பெரிய அணைக்கட்டு திட்டங்களில் தங்கள் கண்ணோட்டத்தை செலுத்துகிறார்களே தவிர, சிறிய நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றி கவலைப்படுவது கிடையாது. அந்தக்காலத்து சோழ மன்னர்களை சரித்திர ஆசிரியர்கள் **Back of the people** என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சியினரை எதிர்கால சரித்திர ஆசிரியர்கள் **exploiters of the people** மக்களைச் சுரண்டுகிறவர்கள் என்று குறிப்பிடும் நிலைமை இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வடக்கே இருக்கிற நிதி மந்திரி ஒரு வரி, தெற்கே இருக்கிற நிதி மந்திரி ஒரு வரி என்று வரிகள் போடப்படுகின்ற காரணத்தினாலே, இவைகளைச் சேர்த்து சரிவர திட்டங்கள் போடமுடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களிலே டெல்லியில் செய்யப்படுவதற்கு இங்கே வரியும், இங்கே செய்யப்படுவதற்கு டெல்லியில் வரியும் விதிக்கின்ற நிலைமை நீடிக்கக்கூடாது. ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்கு என்ன பலன் கிடைக்கிறது, ஒவ்வொரு ராஜ்யத்தில் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும், ஸ்தாபனங்கள் நிறுவப்படவேண்டும், அவைகளுக்கு என்ன செலவு ஆகும் என்றெல்லாம் பிரித்து எடுத்து கணக்குப் பார்த்து **Betterment tax** கடன் அளிப்பு என்ற முறைகளிலே வரி வசூல் செய்து திட்டங்களை நிறை

**SRI A. V. P. ASAITHAMBI** : 1939-ம் வருஷத்தில் நீதிக் கட்சியை சேர்ந்த நாங்கள் இந்த கிளர்ச்சி ஆரம்பித்த காரணத்தினாலே, அதுவும் இருக்கலாம் என்று நினைக்கிறேன். எப்படியிருந்தபோதிலும் பொதுவாக எங்களுடைய விமர்சனம் எல்லாம் நியாய அடிப்படையிலே இருக்குமே தவிர, துவேஷ அடிப்படையிலே இருக்காது என்பதை கனம் மந்திரி அவர்கள் நிச்சயமாக பார்க்கலாம். ஆனால் நியாயம் என்றால் என்ன என்பதே புரியாமல் எங்களுடைய தூய உள்ளங்களைத் தெரிந்துகொள்ளவே முடியாது.

கனம் மந்திரி அவர்களின் பட்ஜெட்டை அந்த முறையிலே பரிசீலனை செய்து பார்த்தால், அது சரித்திரத்திலே மகாராஷ்டிரர் காலத்திலே, சிவாஜி ஆட்சி காலத்திற்குப் பின்னாலே ஆட்சி நடத்திய பீஷ்வாக்கள் காலத்திய பட்ஜெட் போல இருக்கிறது என்பதை நான் குறிப்பிட ஆசைப் படுகிறேன். மகாராஷ்டிரர் காலத்திலே இரண்டாவது மந்திரியாகவும் நிதி மந்திரியாகவும் இருந்தவர்களுக்கு பீஷ்வாக்கள் என்று மாறு பெயர்கள் கொடுக்கப்பட்டன. அதேமாதிரி கனம் சுப்பிரமணியம் அவர்கள் இரண்டாவது மந்திரியாக இருக்கிறார். அதுமாத்திரமல்ல. நிதி மந்திரியாகவும் இருக்கிறார். அதனாலேதான் அவருடைய பட்ஜெட் பீஷ்வாக்கள் காலத்திய பட்ஜெட் என்று சொல்லுகிறேன். பீஷ்வாக்கள் காலத்தில் விதிக்கப்பட்ட வரிக்கும், இன்று விதிக்கப்பட்ட வரிக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. பீஷ்வாக்கள் ஆட்சி நடத்திய காலத்தில் "சவுக்" என்ற வரி 4-ல் ஒரு பங்கு தரப்படவேண்டுமென்றும், சர்த்தேஷ்முக் என்ற வரி 10-ல் ஒரு பங்கு தரப்படவேண்டுமென்றும் சொன்னார்கள். வரி விதித்து மக்களை கொடுமை படுத்தினார்களே தவிர, வரி வசூலித்த பகுதியிலும் வரி கொடுத்த மக்களுக்கும் அந்தக் காலத்தில் பீஷ்வாக்கள் நன்மை எதுவும் செய்யவில்லை. அதே போல தான் இந்தக் காலத்திலே வரிகள் போட்டு வசூலிக்கப்படுகிறதே தவிர, சுயராஜ்யம் வந்து 10 ஆண்டுகள் ஆகியும்கூட மக்களுடைய வாழ்க்கைத்தரம் இதுவரைக்கும் உயர்ந்ததாகத் தெரியவில்லை. ஒரு பட்ஜெட்டினுடைய உபரித் தொகையை வைத்தோ அல்லது துண்டு விழுகின்ற தொகையை வைத்தோ அதன் தராதரத்தை நிர்ணயிப்பதாக நீங்கள் நினைப்பது தவறு. அந்த மாதிரி நிர்ணயிக்கவும் கூடாது. ஒரு நாட்டிற்கு என்னென்ன தேவை, தேவைக்கேற்ற திட்டங்கள் பட்ஜெட்டில் உள்ளனவா, அந்தத் திட்டங்களுக்குகேற்ப தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதைப் பொறுத்துத்தான் ஒரு பட்ஜெட்டின் தராதரத்தை வரையறுக்கவேண்டுமே தவிர, உபரித் தொகையை வைத்தும், துண்டு விழுகின்ற தொகையை வைத்தும் நாங்கள் எப்பொழுதுமே ஒரு முடிவுக்கு வருவது கிடையாது. அந்த முறையிலே பார்த்தால், நாட்டிற்கேற்ற திட்டங்கள் இதிலே இப்பொழுது இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. இது வருஷாந்திர பட்ஜெட் என்பதை பட்ஜெட் தயாரித்த மந்திரி அவர்கள் மறந்துவிட்டாரா என்றுகூட நான் கருதுகிறேன். ஐந்தாண்டு காலத்திலே என்னென்ன வருகிறது, 10 ஆண்டு காலத்திலே என்னென்ன வருகிறது என்பதுதான் இந்த பட்ஜெட் உரையிலே கண்டிருக்கிறதே தவிர, உடனடியாக இந்த வருஷத்திலே மக்களுக்கு கிடைக்ககூடியது என்னவென்று பார்க்கும்பொழுது, சர்க்காருடைய வரிதான் வருமே தவிர வேறு ஒன்றுமே வராது என்ற நிலையில்தான் இந்த பட்ஜெட் இருக்கின்றது.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் தொழில் ஸ்தாபன திட்டங்களும் வருகின்றன என்று சொல்லுகிறார்களே தவிர உடனடியாக பலன் தரக் கூடிய சிறிய திட்டங்கள் எதுவுமில்லை. உதாரணமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரையில், பம்பாயிலிருந்து மங்களூர் வரையில் ரோடுகள் போடுவதற்கெல்லாம் சர்க்காரிடம் திட்டங்கள் இருக்கிறதே தவிர, சிறு கிராமங்களை இணைக்கின்ற எந்த மாதிரியான திட்டங்களும் இல்லை. பொதுவாக, பொருளாதாரம் நன்றாக உள்ள நாடுகளிலே ஒரு சதுர மைலுக்கு ஒரு மைல் நீளம் உள்ள ரோடுகள் இருக்கவேண்டுமென்று கூறுவார்கள். அந்த முறையில் பார்த்தால், இந்தியாவில் 10 லட்சம் மைல்கள் நீளமுள்ள ரோடுகள் தேவை. ஆனால் ஒரு லட்சம் மைல்கள் நீளமுள்ள ரோடுகள் கூட இல்லாத நிலைமை





இருக்கிறது. அதேமாதிரி பெரிய அணைக்கட்டு திட்டங்கள் வரப்போகின்றன, அவை வந்தால் நாடு செழிப்பு அடைந்துவிடும், உற்பத்தி பெருகிவிடும என்றெல்லாம் சொல்லுகிறார்களே தவிர, சிறு நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றி மந்திரி அவர்கள் திட்டத்திலே சரிவர ஒன்றும் சொல்லப்படவில்லை. அதன் காரணமாகத்தான் நேரிலே பார்த்து சிலர் கலெக்டர் அவர்களை அணுகிப் போய்ச் சொல்லி அவைகளை அமைத்துக்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் அமைக்கப் படவேண்டுமே தவிர, பெரிய அணைக்கட்டு திட்டங்களினால் உடனடியாக மக்களுக்கு நிச்சயம் பலன் கிடைக்கவே கிடைக்காது. பெரிய திட்டங்களைப் பற்றிய எங்களுடைய குற்றச்சாட்டுகளுக்கெல்லாம், வடக்கே ஒரு மாதிரியாக நடைபெறுகின்றது. தெற்கே ஒரு மாதிரியாக நடைபெறுகின்றது என்று சொன்னபோது, மாநில முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்கள் வடக்கே பெரிய ஜீவநதிகள் இருக்கின்றன, ஆனால் தெற்கே என்னுடைய விருதுநகர் தொகுதியிலே கௌசிக மகாநதி என்ற வரண்ட நதிதான் இருக்கிறது, என்ன கட்ட முடியும் என்று கேட்கிறார். வடக்கே போல இங்கே ஜீவநதிகள் இல்லை என்பதை தெரிந்துகொண்டும் இந்த சர்க்கார் செய்யவேண்டிய முதல் கடமை சிறிய நீர்ப்பாசன திட்டங்களை ஜில்லா வாரியாக தாலுகா வாரியாக அமுலாக்க வேண்டியதுதான். எங்கே ஏரிகள் செப்பனிடப்படவேண்டும், புதிய ஏரிகள் கட்டப்படவேண்டும், குளங்கள் வெட்டப்படவேண்டும் என்பதை சரிவர சர்வே செய்து அந்த வேலைகளை உடனடியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமல் விட்டுவைத்திருப்பது எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதை சர்க்கார் யோசித்ததாகத் தெரியவில்லை.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்று கேட்டால், அரியலூர் ரயில் விபத்து நடந்தது எல்லோருக்கும் தெரியும். அதில் நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தார்கள். அரியலூர் ரயில் விபத்திற்கு காரணம் இந்த சர்க்கார்தான் என்று நாங்கள் குற்றம் சாட்டிய பொழுது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் "எப்படி நாங்கள் குற்றவாளிகள் ஆக முடியும், எங்களுக்கு ஜோஸ்யமா தெரியும்" என்று கேட்டார்கள். நாங்கள் பொறுப்பற்ற முறையில் குற்றம் சாட்டுவதாக யாரும் கருதவேண்டாம். அரியலூர் பாலம் சேதம் அடைந்ததற்கு பெரிய மழை அல்ல காரணம். பெரிய மழையின் காரணமாக ஏரி உடைப்பெடுத்துக்கொண்டதால்தான், உடனடியாக பாலம் சேதமடைந்தது. அந்த ஏரி உடைந்ததற்குக் காரணம் யார் என்று பார்த்தால் இந்த சர்க்கார் ஏரிகளை சரிவர செப்பனிடாத காரணம்தான் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதேபோன்று ராமனாதபுரம் ஜில்லாவில் புயலும், மழையும் அடித்த பொழுது பெரிய ஏரிகள் உடைப்பு எடுத்துக்கொண்டதற்குக் காரணம் அவைகள் செப்பனிடப்படாததுதான். மங்கம்மாள் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளும் குளங்களும் அப்படியே இருக்கின்றன. இந்த சர்க்கார் அவைகளை கண்காணிப்பதே இல்லை. இவர்கள் பெரிய அணைக்கட்டு திட்டங்களில் தங்கள் கண்ணோட்டத்தை செலுத்துகிறார்களே தவிர, சிறிய நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றி கவலைப்படுவது கிடையாது. அந்தக்காலத்து சோழ மன்னர்களை சரித்திர ஆசிரியர்கள் **Back of the people** என்று குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சியினரை எதிர்கால சரித்திர ஆசிரியர்கள் **exploiters of the people** மக்களைச் சுரண்டுகிறவர்கள் என்று குறிப்பிடும் நிலைமை இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வடக்கே இருக்கிற நிதி மந்திரி ஒரு வரி, தெற்கே இருக்கிற நிதி மந்திரி ஒரு வரி என்று வரிகள் போடப்படுகின்ற காரணத்தினாலே, இவைகளைச் சேர்த்து சரிவர திட்டங்கள் போடமுடியவில்லை. ஐந்தாண்டுத் திட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களிலே டெல்லியில் செய்யப்படுவதற்கு இங்கே வரியும், இங்கே செய்யப்படுவதற்கு டெல்லியில் வரியும் விதிக்கின்ற நிலைமை நீடிக்கக்கூடாது. ஐந்தாண்டுத் திட்டத்தில் மக்களுக்கு என்ன பலன் கிடைக்கிறது, ஒவ்வொரு ராஜ்யத்தில் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும், ஸ்தாபனங்கள் நிறுவப்படவேண்டும், அவைகளுக்கு என்ன செலவு ஆகும் என்றெல்லாம் பிரித்து எடுத்து கணக்குப் பார்த்து **Betterment tax** கடன் அளிப்பு என்ற முறைகளிலே வரி வசூல் செய்து திட்டங்களை நிறை

வேற்றினால், மக்கள் இவ்வளவு வரிகள் கொடுக்கவேண்டியிருக்காது, நிர்வாகச் சிக்கல்களும் இருக்காது. எனவே இந்த நாட்டிற்கு நல்லது வரவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு இருக்கின்ற அரசியல் அமைப்பையே மாற்றி, இங்கு கிடைக்கின்ற ரெவின்யூ வடக்கே போகாமல் தடுத்து இங்கேயே வைத்து சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் மக்களின் உடனடியான தேவைகளை பூர்த்தி செய்யவேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்திக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. VEDAYYAN** : தலைவர் அவர்களே, நம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசலாமென்று நினைக்கிறேன். இந்த வரவு செலவுக் கணக்கைப்பற்றி நேற்று பேசிய ஒரு நண்பர், இது மிகவும் தந்திரமாக தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். ஆனால் சென்ற முறை தேர்தலுக்கு முன்பு அவர்கள் சமர்ப்பித்த இடைக்கால பட்ஜெட்டிலும், இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டிலும் எந்தவிதமான ஒரு புது வரியும் இல்லாமல் அதே ரீதியில், அதே கொள்கையைப் பின்பற்றி, எந்த வரியும் இல்லாமல் இந்த பட்ஜெட் தயாரித்திருப்பதைப் பார்த்தால், அவர்களுடைய திறமை மாத்திரமல்ல, அவர்களுடைய நேர்மையும் நன்றாக விளங்குகிறது. இங்கிருக்கக்கூடிய எதிர் கட்சிக்காரர்கள், எதிர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக ஏதோ சொல்லுகிறார்கள். ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் அன்றைய பிரசங்கத்திலே, எதிர் கட்சிக்காரர்கள் சர்க்கார் எப்படி நல்ல திட்டம் போட்டாலும் அதை எதிர்த்துப் பேசுவார்களே தவிர அவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் அதை ஆதரித்துப் பேசமாட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கும், ஆனால் ஆதரித்து சபையில் பேசுவதற்கு கூச்சப்படுவார்கள், அஞ்சுவார்கள். இப்போது பார்க்கும்போது அது உண்மை என்றுதான் தெரிகிறது. அவர்கள் தன்னுடைய 50 ஆண்டு அனுபவத்திலிருந்து சொன்னார்கள். அப்போது பைக்காரா திட்டத்தைக் கொண்டுவந்தபோது அது ஒரு பைத்தியக்காரத் திட்டம் என்று சொன்னார்கள். மேட்டூர் திட்டத்தைக் கொண்டுவந்தபோது அது மட்டமான திட்டம் என்று சொன்னார்கள். தஞ்சை ஜில்லாவில் தங்களுடைய 15 ஏக்கர் நிலத்தை சாகுபடி செய்வதற்கு கொண்டுவந்த ஒரு திட்டம் என்றும், அதற்கு அரசாங்கப் பணத்தை செலவழித்து வீணாகி வருகிறது என்றும் சொன்னார்களாம். ஆனால் அந்த திட்டங்களின் பயனை நாம் இப்போது அனுபவிக்கின்றோம். இதை அவர்கள் நினைத்துப் பார்த்தும் இருப்பார்கள். எதிர் கட்சிக்காரர்கள் இப்படி எதிர்த்துப் பேசுவதைப்பற்றி யாரும் கலக்கம் அடையவேண்டியதில்லை. நண்பர் கருணாநிதி அவர்கள் பேசியபோது

“ வேலொடு, நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு ”

என்ற திருக்குறளை தப்பான முறையில் அர்த்தம் செய்து தப்பான பொருள் கொண்டிருக்கிறார். “ இரவு ” என்பதற்கு “ வரி ” என்று கொண்டு பேசினார். “ இரவு ” என்பதற்கு “ யாசித்தல் ” என்றுதான் பொருள்.

**Sri K. ANBAZHAGAN** : திருக்குறளிலே அந்த இடத்திலே “ இரவு ” என்ற சொல்லுக்கு உள்ள பொருள் “ யாசித்தல் ” என்பதல்ல. கெஞ்சி வரி கேட்பது என்பதாகும்.

**Mr. SPEAKER** : நேற்று அவர்கள் பேசியபோது அந்த அர்த்தத்தில் பேசியதுபோல, இவர்கள் இந்த அர்த்தத்தில் பேசுகிறார்கள். இதில் தவறு ஒன்றுமில்லை.

**Sri V. VEDAYYAN** : “ இரவு ” என்ற வார்த்தைக்கு “ யாசித்தல் ” என்ற அர்த்தம்தானே தவிர வேறு அர்த்தம் கிடையாது, என்று நண்பர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சுங்கம் வசூலிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது என்பதை இம்மாதிரிப் பொருள் செய்யும் நண்பரைப் பார்க்கும்படி வேண்டுகிறேன். ஆகவே, அரசாங்கம் நடத்து



வதற்கு நாம் பொருள் வசூலிப்பதற்கும் அவர்கள் அந்தக் காலத்தில் வசூலித்ததற்கும் வித்தியாசமில்லை என்று சற்று முன்பு பேசிய ஆசைத்தம்பி அவர்கள் சொன்னார்கள். “ சௌக் ”, “ சர்தேச்முகி ” என்பவைகளெல்லாம் அந்தக் காலத்தில் வசூலிக்கப்பட்டதற்கும், இந்தக் காலத்தில் வசூலிக்கப்படும் வரிகளுக்கும் எவ்வளவோ வித்தியாசம். அந்தக் காலத்தில் அரசர்கள் வசூலித்ததெல்லாம் அவர்கள் நன்றாக வசதியாக இருக்க, உல்லாச வாழ்க்கை பெற, மற்ற அரசர்களோடு சண்டை போட வாங்கப்பட்ட பணம். இப்போது நாம் வசூலிக்கும் ஒவ்வொரு ரூபாயும் தம்பிடி வரையில் ஏழை மக்களின் முன்னேற்ற திட்டத்திற்காக உபயோகப் படுகிறது.

அடுத்தபடியாக மது விலக்கைப்பற்றி நண்பர் அன்பழகன் அவர்கள் பேசினார்கள். அவர்கள் சொல்லியபோது அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தில் சட்ட நிபுணர்கள் எங்கே சந்து பொந்துகள் இருக்கின்றன என்று பார்க்கிறார்கள். ஆகவே ஜாக்கிரதையாக இதற்குக் கொஞ்சம்கூட இடமில்லாமல் பார்க்கவேண்டும். அப்போதுதான் மது விலக்குத் திட்டமானது வெற்றிகரமாக இருக்கும். சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தண்டனை மிகக் குறைவு. அதைக் கொண்டு தப்பித்துக்கொள்கிறார்கள் குற்றவாளிகள். ஆகவே இதற்கான தண்டனையை அதிகரித்தால் குற்றங்கள் குறையும். இந்தச் சட்டத்தை இன்னும் நல்ல முறையில் திருத்தி அதை உபயோகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அவர் சொன்னதைப்போல் சமூக அநீதி என்று சொல்லிவிட்டால் போதாது. எந்தத் திருவள்ளுவரை காரணம் காட்டினாரோ அதே திருவள்ளுவர்

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ் நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று.

என்று சொல்லுகிறார்கள். அதாவது கள் குடிப்பவனை அது நல்லதல்ல என்று சொன்னால் அவன் மனத்துக்குக் காரணம் செல்லாது.

(அங்கத்தினர் சிறிது நேரம் பேசாமல் இருந்தார்.)

**Mr. SPEAKER** : என்ன சமாச்சாரம்.

**Sri K. VINAYAKAM** : Vocal constipation Sir.

**Mr. SPEAKER** : This is a new disease that you are saying.

(சிரிப்பு)

**Sri V. VEDAYYAN** : திருக்குறளைப் பற்றி பேசியபோது நண்பர் கருணாநிதி அவர்கள் “ மலிவுப் பதிப்புகள் கிடைக்கும் இந்த நாளிலே, திருக்குறளைப் பார்க்கவேண்டும் ” என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சரியான பொருளோடு கூடிய திருக்குறளை அச்சிட்டு, இலவசப் பிரதிகள் கொடுங்கள் என்று.

இப்போது நம் வரவு செலவுத் திட்டத்தில் கால நிலை நன்றாக இருந்ததாகவும் நெல் விளைச்சல் நன்றாக இருந்ததாகவும், ஆனால் விலைவாசிகள் உயர்வு அதிகமாகியுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் அதற்கு ஒரு காரணம் நாம் திட்டங்கள் போட்டு உணவுப் பொருள்கள் முதலியவற்றை உற்பத்தி செய்துகொண்டிருக்கும் இந்த நேரத்திலே அந்த ஜனத்தொகை அபிவிருத்தியை கட்டுப்படுத்தி விடவில்லை. அந்த ஜனத்தொகை ஒரு நிலையை அடைந்துவிட்டால் அப்போது அந்த ஜனத் தொகையைக் கட்டுப்படுத்துவது ஒன்றைத் தவிர வேறு ஒரு வேலையும் செய்ய முடியாது. இதற்கென ஒரு திட்டம் போட்டு, அதாவது குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக இந்த ஆண்டு 4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. நாம் இப்போது defence அதாவது பாதுகாப்பிற்காக எவ்வளவு செலவு செய்கிறோமோ அதில் பாதிப் பணத்தை ஒதுக்கி, ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நடமாடும்

பெர்த் கண்ட்ரோல் கிளினிக் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் நிலைமையை சமாளிக்க முடியும். இப்போது ஒவ்வொருவரும் ஊருக்கு ஒரு பள்ளி, ஜில்லாவுக்கொரு காலேஜ் என்று கேட்பது போக, இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பள்ளி வேண்டும் என்று கேட்கும் நிலை வந்துவிடும். இந்த நிலையை மாற்ற வேண்டுமானால் அதற்கு பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தை. தலைவாடியில் ஏரானமான நிலங்கள் இருக்கிறது. அங்கு ஒரு அணைக்கட்டுக் கட்டி நீர்ப்பாசனங்கள் ஏற்படுத்தி 500 அல்லது 600 எக்கர் வீணுக இருக்கும் நிலங்களைப் பாசனத்திற்கு கொண்டு வரலாம். அந்த நிலங்கள் இப்போது விலை மதிக்கும் நிலங்கள் என்று கொடுக்கப்படவில்லை. அந்த நிலங்களை ஏழை ஹரிஜனங்களுக்கு அடமானம் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேதாரண்யம் ரேஞ்சில் மனம்கொண்டனாறு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய் செலவாகும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முள்ளியாற்றிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு மராமத்து இலாகாவினர் மறுக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் இதைக் கவனித்து, முள்ளியாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10-11 a.m. **Sri S. P. M. PERIAKARUPPAN AMBALAM** : சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பட்ஜெட்டை நான் மிகவும் பாராட்டுகின்றேன். அதில் பல நல்ல அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. முக்கியமாக, விவசாய அபிவிருத்திக்கும், ஏழை மாணவர்கள் பள்ளியில் சேர்ந்து வாசிப்பதற்கு பகல் உணவு அளிப்பதற்கும் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கும் வேண்டிய வசதிகள் காணப்படுகின்றன. அவைகளைப் பார்க்கும்போது, நாம் சர்க்காரை மிகவும் பாராட்டக் கூடியவர்களாகத்தான் இருக்கின்றோம். மேலூர் தாலுகாவிலுள்ள சமுதாய நலப் பிரதேசங்களைப் பார்த்தால் சர்க்கார் செய்துள்ள பல நல்ல காரியங்கள் நன்கு விளங்கும். ஒவ்வொரு கிராமத்திலும் ரோடுகள், பள்ளிக்கூட வசதிகள் போன்ற நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள்.

அடுத்தபடியாக, நமது சர்க்கார் 8-வது வகுப்பு வரை ஏழை மாணவர்களுக்கு பள்ளிக்கூட சம்பளச் சலுகை அளித்திருக்கின்றார்கள். ஏழை மாணவர்களின் பெற்றோர்கள் இதற்கென ஏற்பட்ட அத்தாட்சிகளைப்பெற்றுத்தான் அந்தச் சலுகையைப் பெற முடிகிறது. அந்த அத்தாட்சிப் பத்திரங்களை வாங்குவதற்கு ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சுலபமாக அந்தச் சலுகையை அவர்கள் பெறுவதற்கு வசதி செய்து கொடுக்குமாறு கனம் கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மதுரை, மேலூர் தாலூகாக்கள் ரொம்பப் பிற்பட்ட சமூகத்தினர் வசிக்கும் தாலூக்காக்கள். அங்கு சுமார் 35 வருஷங்களுக்கு முன்பாகவே மதுரை—மேலூர் வழியாக காரைக்குடி செல்வதற்கு ஒரு ரயில் பாதை ஏற்படுத்துவதற்காக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக எந்த வேலையும் நடைபெறவில்லை. இவ்வருஷம் மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் அத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் என்று அப்பகுதி மக்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், பெரும் ஏமாற்றம் அடைந்தார்கள். அந்தப் பகுதியிலுள்ள ஏழை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மற்ற இடங்களுக்கு அனுப்புவதற்கும், இந்த ரயில்பாதை உதவியாக இருக்கும். மேலும், இப்பொழுதும் இப்பகுதியிலுள்ள பிள்ளைகள் 18 மைல்களுக்கு அப்பாலுள்ள மதுரைக்கோ அல்லது 32 மைல்களுக்கு அப்பாலுள்ள காரைக்குடிக்கோ சென்று படித்து வரவேண்டியிருப்பதால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். அந்த மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு ரயில்வே வசதி செய்து கொடுத்தால் மிகவும் நலமாக இருக்குமென்று நான் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



அடுத்தபடியாக, மேலூர் தாலூகா வெகுவாக பாதிக்கப்பட்ட தாலூகா என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தத் தாலூகாவிலே பல கண்மாய்கள் மராமத்து இன்றி, கரை இல்லாமல் இருப்பதால், அவைகளைத் தக்க முறையில் செப்பனிட்டு, கலிங்குகளும், கரைகளும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட மராமத்து அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

முக்கியமாக அந்தத் தாலூகாவை அடுத்து பெரிய அருவி ஒன்று இருக்கிறது. அந்த அருவியை அதிகமான பணச் செலவு இல்லாமலே கட்டிக் கொடுத்தால் சில ஆயிரக் கணக்கான நஞ்சை நிலங்கள் விவசாய உற்பத்திக்கு லாயக்காக இருக்கும். அடுத்த ஒரு பிர்க்காவிலே பாலூர் ஏரி இருக்கிறது. உப்பாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. அவைகளை அதிகம் செலவு இல்லாமல், சுருக்கமான செலவில், பாசனத்திற்கு உபயோகமான முறையில் பயன்படுத்த வகை செய்து கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக விவசாய மக்களுக்கு விவசாயம் செய்ய மிகவும் உதவியாகும்.

மேலூர் தாலூகாவில் பல நூற்றுக்கணக்கான எக்கர்கள் நல்ல விவசாயம் செய்வதற்கு லாயக்குள்ளவைகளாக இருக்கின்றன. ஒரு இடத்தில் ஆயிரம் எக்கர் வரை ஓரே சம தளமாக இருக்கிறது. அங்கு எந்த வேலையும் செய்யப்படவில்லை. அங்கு ஒரு நல்ல கிணறு வெட்டி ஏழை, ஹரிஜன விவசாய மக்களுக்கு கூட்டுறவு முறையில் பண்ணை ஏற்படுத்தி அங்கு விவசாயம் செய்ய உதவி புரிந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையால், இம்மாதிரி நல்ல காரியங்களைச் செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்கின்றார்கள், இன்னும் செய்வதற்த முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

**Sri P. VEDAMANICKAM** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது 10-16 a.m.
நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் அதை வரவேற்கின்றேன். சில நாட்களுக்கு முன்னால், மக்கள் மத்திய சர்க்காரின் வரிப் பளுவினால் மிகவும் மனக் கஷ்டத்தோடு இருந்தார்கள். அந்த சமயத்தில், மாகாண சர்க்கார் என்ன வரி விதிக்குமோ என்று அதிகமாக பயந்து கொண்டிருந்தார்கள். ஆனால், நமது நிதி அமைச்சர் அவர்கள் மாகாணத்தின் நிலைமையைப் பரிசீலனை செய்து, நடுத்தர மக்களுக்கும் ஏழை பாமர மக்களுக்கும் வரி விதிக்காமல் பட்ஜெட்டை சமர்ப்பித்துள்ளார். ஆகையால், நான் அதை மிகவும் வரவேற்கின்றேன், ஆதரிக்கின்றேன்.

நம் நாடு விவசாய நாடு. ஏறக்குறைய ஜனத்தொகையில் 60 சதவிகிதத்துக்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தினால் பிழைக்கிறார்கள். விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டுமென்றால், சிறிய நீர்ப்பாசனங்களை செவ்வையாகச் செய்திருக்கவேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே வெல்லிங்டன் ரிசர்வாயர் எனற நீர்ப்பாசனம் இருக்கிறது. ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்னால், லட்சக்கணக்கான ரூபாய் செலவிலே, அது கட்டப்பட்டது. ஆனால், அந்த நீர்ப்பாசனம் சரிவர கவனிக்கப்படாததால், தண்ணீர் அதிகமாகத் தேங்க முடிவது இல்லை. வருஷத்திலே விவசாயம் கெட்டு விடுகிறது. இருபது ஆயிரம் எக்கருக்கு மேல் அங்கு பாய்கிறது. இன்னும் அந்த ஏரியை ஆழப்படுத்தி, ஏரிக்கு வரும் வாய்க்காலை ஆழப்படுத்தினால், ஐந்தாயிரம் எக்கருக்கு தண்ணீர் பாய வசதியாக இருக்கும்.

[Sri P. Vedamanickam] [4th July 1957

அதோடு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். விவசாயத்தில் ஈடு படும் ஏழைகளுக்கு நல்ல வாரம் கொடுக்க வேண்டும். சிதம்பரம், தஞ்சா ஊர் பக்கத்தில் நல்ல கூலி நிர்ணயம் இருக்கிறது. அதுபோல், எல்லாப் பக்கங்களிலும் இந்த விவசாயச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஏழை மக்கள் பயிரிடும் தரிசு புறம்போக்கு நிலங்களுக்கு சர்க்கார் அதிகமான வரி விதிக்கிறது. உண்மையிலேயே இந்நிலங்களுக்கு இவ்வளவு வரி விதிக்கக்கூடாது. குறிப்பாக, எங்கள் தாலூகாவிலே 12 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களைச் சீக்கிரம் ஹரிஜனங்களுக்கு அடமானம் செய்ய சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்.

சமுதாய நலத்திட்டம் நாட்டிலே நல்ல முறையில் நடக்கிறது, என்று அமைச்சரவர்கள் திட்டத்திலே இருக்கிறது. ஏழு ஆண்டுகளாகியும் விருத் தாசலம் தாலூகாவானது இன்னும் சமுதாய நலத்திட்டத்திலோ, தேசிய வளர்ச்சித் திட்டத்திலோ இவைகளின் கீழ் கொண்டுவரப்படவில்லை. அதற்குக் காரணம் தெரியவில்லை. ஆனாலும், சர்க்கார் அக்டோபர் மாதத் திலாவது எங்கள் தாலூகாவில் சமூக நலத் திட்டம் கொண்டு வந்து அங்கிருக்கும் மக்களுடைய ஒத்துழைப்பைப்பெற வேண்டும்.

பெண்ணாடம், திட்டகுடி, நல்லூர் பக்கத்திலே மின்சாரம் இல்லை. ஆகையால், சர்க்கார் மின்சாரத்தை வழங்கவேண்டும். நகரில்தான் இருக்கிறது. மற்ற கிராமங்களில் அதாவது திட்டகுடி, பெண்ணாடம், நல்லூர் இப்பகுதியில் மின்சாரம் இல்லை. ஆகையால், சர்க்கார் அங்கு மக்களுக்கு மின்சாரத்தை, குறிப்பாக என் தொகுதிக்கு, விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய தொகுதியில், நான்கு டிஸ்பென்ஸரிகள் இருக் கின்றன. அவைகள் இப்பொழுது, ஜில்லா போர்டால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நோயாளிகள் போனால், அங்குள்ள டாக்டர்கள் மருந்துகள் இல்லை என்று அறிவிக்கிறார்கள். ஆகவே, அந்த ஆஸ்பத்திரிகளை, சர்க்காரே எடுத்து, சர்க்கார் ஆஸ்பத்திரிகளாக மாற்றி அமைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனைகள் கொடுப்பதற்காக ரூ. 1·96 லட்சம் ஒதுக்கி யிருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு மனை வாங்கிக்கொடுக்கும் விஷயம் தென்னாற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரை, ஆமை வேகத்தில்தான் இருக்கிறது. குறிப்பாக, விருத்தாசலம் தாலூகாவில் 10 கிராமங்களில் ஹரிஜனங்கள் கட்டவேண்டிய பகுதியை கட்டியுங்கூட, ஏறக்குறைய 6 அல்லது 7 ஆண்டுகளாக மனைகள் கொடுக்கப்படவில்லை. காரணம் என்ன வென்றால், நிலச்சொந்தக்காரர்கள் ஆட்சேபிப்பதுதான். சர்க்காருக்கு இடம் தேவைப்பட்டால், ரயில் பாதை போடவோ மற்ற காரியங் களுக்கோ எப்படி மனைச் சொந்தக்காரர்களுக்கு நேட்டீசு கொடுத்து காலி செய்கிறார்களோ, அப்படி ஹரிஜனங்களுக்கு மனைத்தேவை விஷயத் திலும் ஆட்சேபணைகளைத் தீர்த்து அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஹரிஜனங்கள் பல கால மாக மனையில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

ஹரிஜனங்கள் காலனி கட்டும் விஷயத்தில், சமுதாய நலத்திட்டம் அல்லது தேசிய அபிவிருத்தித் திட்டம் இல்லாத இடங்களில் ஜூனியர் எஞ்ஜினியர் இல்லை என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக, விருத்தாசலம் தாலூகாவில் கோமங்கலம் முதலிய கிராமங்களில் ஜனங்கள் தங்கள் பங் கையைக் கொடுத்த பிறகும் வீடு கட்டிக் கொடுக்க எஞ்ஜினியர் இல்லையென்றும், திட்டம் அந்த இடங்களுக்கு வந்த பிறகு பார்க்க லாம் என்றும் சொல்லுகிறார்கள். உடனடியாக திட்டம் இல்லாத இடங் களிலும் வீடு கட்டிக்கொடுக்க ஜூனியர் எஞ்ஜினியர் கிடைக்குமாறு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



4th July 1957]

* SRI K. VINAYAKAM : Mr. Speaker, Sir, in the past, I had opportunity of at least five times to offer my remarks on the Budget presented in this House by the Finance Minister. But never before was I so confident as I am to-day about the Budget, while offering my remarks thereon. Nobody need be ashamed of presenting a deficit Budget. If the Budget consists of good proposals for the benefit of the people, even the small deficit which we encounter can be made up by the grants or loans that we may get from the Central Government.

Sir, one redeeming feature in our Budget is that there is less of taxation because the Central Government have taken the lead in the matter. The State Government were kind enough not to think of fresh taxation except making a little adjustment as far as sales tax is concerned. We have been clamouring for a reduction in sales tax levied on foodgrains. To a certain extent, it has been reduced. But I would have been more gratified, if the Government had abolished the entire tax on foodgrains.

Regarding perishables like vegetables, I would like to bring to the notice of the Government that they have exempted almost all of them from sales tax except 'yam', i.e.. what we call கருணை கிழங்கு in Tamil. Why this pitiable vegetable should be subjected to the levy of sales tax, Government would do well to consider. I think a representation has been made in this behalf by the merchants.

This Budget contains very many good proposals like the starting of a milk colony in Madras on the lines of the Aarey Milk Colony in Bombay. The Corporation of Madras has paved the way by purchasing the requisite extent of lands on the outskirts of the Madras City. But the scheme has not yet been put into operation. Whenever I approach the Corporation authorities, they say that for want of grants from the State Government, nothing is done. Now that this is mentioned in the Budget, I hope, when the Corporation comes up to the Government for funds they will help the Corporation. The Corporation has some other proposals also. I hope that when these are sent up to the Government, they will show some consideration.

Sir, there is a popular scheme known as Dr. Talat's scheme for the disposal of sewage in Madras. If this scheme is put through, it will help to bring in a lot of revenue not only to the Government but also to the Corporation. The scheme is now half way through. If the Corporation approaches the Government for help for this scheme also, they should provide the necessary funds.

The greatest of the grievances of the Corporation is in the matter of maintenance of roads. A large share of the revenue under the Motor Vehicles Act and the Sale of Motor Spirit Act is taken away by the Government. The pertinent contention of the Corporation is that the roads in the entire City are maintained by

the Corporation itself but that the revenue derived under the Motor Vehicles Taxation Act is expropriated by the Government. I would request the Finance Minister to excuse me for using a strong term. We plead, if not on bended knees, that the entire proceeds from this source should be given back to the Corporation to enable it to maintain the roads properly.

Sir, there are schemes like the industrial estates schemes being floated at Guindy. If I could trust my memory, it was originally contemplated that the schemes should be started at Kodambakkam, where there are good facilities available for the purpose. There is open land. Water-supply is plenty. The Hon. the Minister for Industry also gave an assurance it would be started at Kodambakkam. What made the Government change over to Guindy? (The Hon. Sri C. S. Subramaniam : Another industry is developing there.) Apart from the film industry—Kodambakkam is often called the Hollywood of Madras—the unexploited areas should be exploited to the advantage of the people.

Regarding the housing scheme launched by the Government as well as by the Corporation and the City Improvement Trust, not much progress has been made as far as the Government schemes are concerned. The City Improvement Trust has made much headway in the matter of solving the problem of housing. But it is tampering with places like Tiruvalluvarpuram, Kodambakkam, which is not good. The Hon. the Minister for Revenue has visited this place and I have got his speech made during the Budget session last year in my possession. He gave an assurance that this land would be given free to the residents of the area. It is now one year past. The Government, however, have done the right thing in assigning the land in favour of a co-operative society. But the City Improvement Trust is trying to influence the Government meanwhile to revoke their orders. I would request the Government to take a sympathetic view of the residents of Tiruvalluvarpuram. There is a co-operative society willing to take over the work of house construction of the particular type that is required. It should be encouraged instead of allowing the City Improvement Trust and the Corporation to monopolise all this.

Under the Slum Improvement scheme, acquisition of land has been cold storaged and the concerned Bill has not seen the light of day. The Finance Minister has been pleased to allot 20 lakhs of rupees for the clearance of slums. I would appeal to the Government to do one thing. I am not for the perpetuation of the slums and that the slum people should be dehoused on the pretext that the slum would be improved and later on, when houses are constructed, they should be given away to well-to-do people. This is what is going on in Cox cheri and this kind of thing should not take place. Sir, there is a place called Lake Bund in Mambalam. The Hon. the Chief Minister was kind enough to pay a visit to this place. The entire place is a veritable hell on earth. People there are poverty-stricken. There are no roads laid. There are not even lanes. People are living the life of animals. I would request the Government to clear these slums. There is a small belt called the "green belt area" which is supposed to bring good breeze to the residents of the area, those living in bungalows. This anomaly existing in the City of Madras should go and the green belt area should be utilised for construction of houses by the slum-dwellers.



I have seen in the budget some good features like the provision of a good amount for the improvement of the Madras Medical College, the Stanley Medical College and the Madurai Medical College. But step-motherly treatment is shown to the College of Indian Medicine. The Hon. Minister was kind enough to lay the foundation stone for a surgical block in this college. But I do not know whether it will be there for one more year or the surgical block is going to be constructed.

THE HON. SRI C. SUBRAMANIAM : The surgical ward will be constructed this year.

SRI K. VINAYAKAM : I stand corrected. Although we passed legislation giving status to the graduates of this college similar to the M.B.B.S. degree, the Act had not been implemented and even the rules have not been framed. So, there is a kind of step-motherly treatment shown to this college. I would request the Government to give better consideration to this college. The college is manned by not efficient professors and more emphasis is laid on Ayurveda and Siddha. These should be relegated to the background. In view of the research in modern medicine, more stress must be laid on modern medicine.

I have a few more points requiring elucidation. For this, I will make use of the time allotted for the discussion on the Demands. But I want to make mention of one point here. I wonder why reservation should be made for students coming from Kerala in our institutions like the Medical College and the Engineering College. I understand that there is provision in the States Reorganisation Act, but we should not take orders lying down. The Madras Government should have protested in time to the Central Government and made them understand that we cannot close the doors of our colleges to our men. The Kerala people parted from us willingly. Why then should we reserve seats for them in our professional colleges? If suitable action had been taken in time, I think the Central Government would have taken away their arms from us.

SRI M. JAGANNATHAN : I want elucidation on this point, Sir. The hon. Member, in the course of his speech, was describing a particular place as veritable hell on earth. May I know whether the hon. Member had a chance to visit the hell itself?

MR. SPEAKER : The hon. Member will consult him privately.

[4th July 1957

10-30 a.m. **Sri P. VEERAPPA GOUNDER :** கனம் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமது பிரசங்கத்தில், சாகுபடி செய்பவர்களுக்கு உயர்தர விதைகள் வழங்குவதற்காக 360 விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் திட்டம் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போதிருக்கும் விதைப் பண்ணைகளில் விவசாயிகளுக்கு சரியானபடி விதைகள் கொடுப்பதில்லை. காரணம் விதைகள் இருந்தாலும் அவற்றின் விலைகள் தெரியாததால் அதிகாரிகள் விதைகளைப் பொதுமக்களுக்கு வினியோகம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். விவசாயப் பண்ணையிலிருந்து விவசாய டெப்போக்களுக்கு விதைகள் அனுப்பும்போதே விலைப் பட்டியலையும் அவர்கள் அனுப்புவதில்லை. விதைகள் அனுப்பட்ட பிறகு, மூன்று, நான்கு மாதங்கள் கழிந்த பிறகுதான் விலைப் பட்டியல் அதிகாரிகளுக்குக் கிடைக்கிறது. விலைப் பட்டியல் வரும்வரையில், விவசாயிகள் அவர்களிடம் விதை கேட்டால், " இன்னும் விலைப்பட்டியல் வரவில்லை " என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக, விவசாயிகள் பருவ காலத்தில் விதைகளைப் பெற்று, பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. ஆகையால் விதைகளை அனுப்பும்போதே சர்க்கார் விலைப் பட்டியலையும் கூடவே அனுப்பவேண்டும். அப்போதுதான் விவசாயிகள் குறித்த காலத்தில் விதைகளை வாங்கி பயிர் செய்து உற்பத்தியைப் பெருக்க முடியும். உற்பத்தியைப் பெருக்கினால்தான் நாட்டிலுள்ள உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கலாம்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன விஷயத்தில், தென்னாற்காடு, புதுச்சேரி இவைகளுக்காக வீடூர் தேக்கத்தை ஆரம்பிக்கப் போவதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்திற்கான செலவு சென்னை சர்க்காரை மட்டும் பொருத்ததா அல்லது மத்திய சர்க்காருடைய பங்கும் இந்தச் செலவில் உண்டா என்பதுபற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லவில்லை. அதை விளக்கமாகக் கனம் அமைச்சர் அவர்கள் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், எப்போது திட்டம் ஆரம்பிக்கப்படும், எப்போது அது முடியும் எனபது பற்றியும் அவர் விளக்கமாகக் கூறவில்லை. அதையும் விளக்கமாகக் கூற வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். வீடூர் திட்டம் முடிவடைந்தால், தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள திண்டிவனம் தாலூகா, மயிலை பிர்க்கா, மானூர் பிர்க்கா முதலிய இடங்களில் தண்ணீர் பாயும். அதனால் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி விளக்கமாகக் கூற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

10-37 a.m. **Sri P. JAYARAJ :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் 1957–58-ம் ஆண்டிற்கு சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றுள்ள சர்க்கார் ஹரிஜன மக்களுக்குப் போதுமான சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். ஹரிஜன மக்களின் நலன்களுக்காக இவ்வாண்டு சர்க்கார் அதிகத் தொகை ஒதுக்கியிருப்பதற்காகப் சர்க்காரைப் பாராட்டுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில ஹரிஜன மாணவர்களின் கல்விக்காக சர்க்கார் அதிக உபகாரச் சம்பளம் அளித்திருக்கிறார்கள். சர்க்கார் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் உபகாரச் சம்பளம் காலம் தாழ்த்திக் கொடுககப்படுவதால் பல மாணவர்கள் கல்லூரிகளை விட்டு நீங்கும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே ஆண்டுதோறும் ஜூலை மாத இறுதியிலோ ஆகஸ்டு மாத ஆரம்பத்திலோ ஹரிஜனங்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைப்பதற்கு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜனங்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் கொடுக்கும் விதி விலக்குச் சலுகையை ஒரு சில உத்தியோகங்களுக்குக் கொடுத்திருக்



4th July 1957] [Sri P. Jayaraj]

கிறார்களே தவிர பெரும்பான்மையான உத்தியோகங்களுக்குக் கொடுக்கவில்லை. மற்ற உத்தியோகங்களுக்கும் விதி விலக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், ஹரிஜன மக்கள் ஆங்காங்கே அவர்கள் குடியிருந்துவரும் மனைக்கட்டுகளிலிருந்து எவ்வித காரணமும் இன்றி நீக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வீடுகள் இடித்துத் தள்ளப்படுகின்றன. அத்தகைய நிலையை ஏற்படாமல் தடுப்பதற்காக, ஹரிஜன மக்கள் குடியிருக்கும் மனைக் கட்டுகளை அவர்களுக்குப் பட்டா செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கு, பொதுவாக கிராமங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு, ஓரளவு சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருக்கும் கிராம அதிகாரிகள் நல்லதொரு சேவை செய்து வருகிறார்கள். இருந்தாலும் அவர்களுக்கு சர்க்கார் கொடுக்கும் சம்பளம் பற்றாக்குறையாக இருப்பதால் கிராமங்களில் அவர்கள் தங்கள் கடமையை சரியாகச் செய்யாத நிலைமை இருந்து வருகிறது. நியாயவாரச் சட்டத்தின் விளைவாக பல இடங்களில் ஏழை சாகுபடியாளர்கள் நிலங்களை விட்டு அப்புறப்படுத்துவதற்கு அவர்களும் காரணஸ்தர்களாக இருக்கிறார்கள். சில கர்ணம்கர்களும் மற்ற சில கிராம அதிகாரிகளும் " சாகுபடியாளர் பட்டா அடங்கல் " என்ற புத்தகத்தில் சில சாகுபடியாளர்கள் கையெழுத்துப் போடவில்லை என்று கூறி அவர்கள் மீது கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, அவர்களை நிலங்களை விட்டு நீக்கியிருக்கிறார்கள். ஆகவே எப்படியாவது கிராம அதிகாரிகளுக்கு சர்க்கார் இன்னும் அதிக சம்பளம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(Temporary Chairman, Srimathi Savithiri Shanmugham, in the Chair.)

அத்துடன் அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்தால்தான் நல்லதொரு சேவையை அவர்களால் செய்ய முடியும் என்று நம்புகிறேன். நான் கிராம அதிகாரி உத்தியோகத்தில் இருந்து பழக்கம். நிலங்களை எல்லாம் சுற்றிப் பார்த்து முப்பது சென்ட் நிலத்தை எடுத்துக் கொண்டால் அதில் விளைவு என்ன, என்ன பயிர் போடுகிறார்கள் என்பதைப் பற்றி நேரில் அறிய வேண்டும். குறிப்பாக மூன்றுவித சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. முதலில் சம்பா போடுவார்கள். பிறகு ஒட்டைப்பயிர் விளைப்பார்கள். இந்த மூன்று போகத்திலும் தனித்தனியாக விளைவு என்ன என்பதைப் பாகம் பாகமாகப் பிரித்துப் போடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய காரணத்தால் அவர்களுக்கு வேலை அதிகம். அதைச் சரிவரச் செய்ய அவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்கப்படவேண்டும். பட்டதாரர்களுக்கு, பணம் படைத்தவர்களுக்கு அவர்கள் சலுகை செய்கிறார்கள் என்று பொதுவாக புகார் சொல்வதில் பயன் இல்லை. அவர்கள் தயவை இவர்கள் எதிர்பார்த்து நிற்கக் கூடிய நிலைமை இல்லாமல் நாம் முதலில் செய்ய வேண்டும். குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லா வைப்பொறுத்த வரையில் ஒரு வேலிக்கு ஒரு கலம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மானியம் கொடுக்கிற வழக்கம் இருக்கிறது. அதனால் அவர்கள் பட்டதாரர்களுடைய நலனில் அக்கறை உள்ளவர்களாக நடக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவற்றைப் போக்க வேண்டுமென்றால் கிராம அதிகாரிகளுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு சர்க்கார் பலவிதமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். பலகாலமாக நம் நாட்டில் தீண்டாமை நிலைமை இருந்து வருகிறது. நீதி நெறி வழுவா நெறிமுறைப்படி அரசாண்ட அரிச்சந்திரன் காலத்தில் இருந்தே ஹரிஜன மக்கள் ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இதை ஒழிக்க நமது அரசாங்கமும்

பாடுபட்டு வருகிறது. போற்றத்தக்க பணி புரிந்து வருகிறது. யார் யார் தீண்டப்படாதவர்கள் என்று சொல்லி விரட்டுகிறார்களோ, அவர்களைப் பற்றி தீண்டப்படாத மக்களுடைய தலைவரிடத்தில் சொல்லி, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவர்களுக்குத் தண்டனை விதிக்கும்படி செய்தால் சீக்கிரத்திலேயே தீண்டாமையை ஒழித்துவிடலாம். மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து பொருளாதாரத் துறையில் அவர்கள் வாழ்க்கை மேம்படச் செய்தால் இன்னும் சீக்கிரத்திலேயே இந்தத் திட்டம் வெற்றிபெறும் என்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

10-43 a.m. **SRI V. SANKARAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது 1957–58-ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தை நல்ல முறையில் சிறந்த அம்சங்களோடு தயாரித்து நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருப்பதாக நான் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நேற்று பேசியபோது கனம் கருணாநிதி அவர்கள் ஒரு வார்த்தை சொன்னார்கள். அதாவது நம்முடைய நிதி மந்திரி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு மிரண்டுகொண்டு அதனால் புது வரிகளை எதையும் போடவில்லை என்று சொன்னார்கள். ஏதோ கோபுரத்தின் மேல் இருக்கும் பொம்மை ஒன்று தன்னால் தான் கோபுரம் தாங்கப்படுகிறது. அது இல்லாவிட்டால் கோபுரம் விழுந்துவிடும் என்று சொல்லிக் கொண்டதாம். அது எவ்வளவு அபத்தமோ அப்படி இருந்தது ஸ்ரீ கருணாநிதி அவர்கள் கூறிய கூற்று. நமது நிதி மந்திரி அவர்கள் மக்களிடத்தில் நன்றாகப் பழகியவர். நம் மக்களுடைய மனோபாவத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு செயலாற்றுபவர். ஆகவே மக்களுடைய மனோபாவத்திற்கு ஒட்டி புது வரிகள் எதையும் போடாமலேயே பட்ஜட் போட்டிருக்கிறாரே தவிர தனி நபருக்கோ, ஒரு கோஷ்டிக்கோ மிரண்டுகொண்டு அவ்வாறு வரி போடாமல் இருந்துவிடவில்லை. இதை உணர்ந்துகொள்ளாமல் அவர்கள் அவ்வாறு பேசுவது தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதாகத் தான் அமையும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இரண்டு மூன்று தினங்களாகப் பேசியவர்களில் "இது டெபிஸிட் பட்ஜெட். ஆகவே ஆதரிக்கக் கூடாது" என்று சொன்னவர்களும் உண்டு. "இருக்கக்கூடிய வரிகளைக் குறைத்து இருக்கவேண்டும். அப்படிச் செய்யாமையினாலே ஆதரிக்க முடியாது" என்று சொன்னவர்களும் உண்டு. எதிர்க்கட்சி அம்மையார், அண்ணாமலை போன்றவர்கள் காரசாரமாகப் பேசினார்கள். அதைப் பார்க்கும்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது.

நல்ல நீர் உடைய குட்டை. குளிர்ந்த நீர், சுத்தமான தெளிந்த நீர், கண்ணாடி போல இருக்கிறது. இதிலே இறங்கி நீர் குடிக்கச் சென்ற எருது முதலிலே தன் கால்களை விட்டுக் கலக்கி குட்டையைக் குழப்பி பிறகு சேற்று நீரைக் குடிக்குமாம். அப்படி வரவு செலவு திட்டத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் பாராட்டும்படியான பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. பார்த்த உடனேயே அள்ளிக்கொள்ளும்படியாக பல நல்ல அம்சங்கள் வேலை திட்டங்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றைப் பார்த்துப் பாராட்டாமல் கலக்கி, தோண்டித் துருவி அங்குமிங்குமாகச் சில குறைபாடுகள் இருப்பதாகப் பேசுவது முன் சொன்ன நிலைபோல இருக்கிறது. இப்படிப் பேசுவது நேர்மையும் ஆகாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் குறைகூறவேண்டாமென்று சொல்லவில்லை. குற்றங்களை எடுத்துக் காட்டக்கூடாது என்றும் சொல்லவில்லை. உண்மையிலேயே குறைகள் இருந்தால் எடுத்துக் கூறத்தான்வேண்டும். ஆனால் குணங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும். குறைகூறுவதையே குணமாகக் கொள்ளவேண்டாமென்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி உப-தலைவர் கேரளாவைப் பாருங்கள் என்று சுட்டிக் காட்டினார். பிறரைப் பார்த்து காப்பி அடிக்கும் பழக்கம் எங்களுக்கு இல்லை. அதுவும் கேரளா இப்போதுதான் முதன் முதலாகப் பட்ஜெட்

4th July 1957] [Sri V. Sankaran]

தயாரித்து சமர்ப்பித்திருக்கிறது. முதல் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணும்போது எல்லாத் தகப்பனும் கொஞ்சம் தடபுடலாகத்தான் பண்ணுவார்கள். கல்யாணம் மிகவும் முறுக்காக, விறுவிறுப்பாகத்தான் இருக்கும். அப்புறம் இரண்டாவது பெண் கல்யாணம், மூன்றாவது பெண் கல்யாணம் என்று அடுத்தடுத்து வரும்பொழுது அவர்கள் நிதானத்துக்கு வந்துவிடுவார்கள். அந்த முறையில் கேரளா இப்போதுதான் முதல் பட்ஜெட் நிறைவேற்றப்போகிறது. அந்தத் திட்டல் கொஞ்சம் தடபுடலாகத்தான் இருக்கும். விருவிருப்பாகக்கூட இருக்கும். பல கல்யாணங்களைப் பண்ணி அனுபவப்பட்ட தகப்பனாரைப் போன்றவர் நமது நிதி மந்திரி. பல பட்ஜெட்டுகளைத் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறார். நல்ல நிதானமும், தெளிவும் உடையவர். அதனால் முழு நிதானத்துடன் செல்கிறார். இது ஒரு காரணம் என்றாலும் இன்னொரு காரணம் காப்பி அடிக்கிற பழக்கம் எங்களுக்கு இல்லை என்று சொன்னேன். அதைத் தங்களுடைய ஏகபோக உரிமையாக வேறு ஒரு சாரார் சென்ற தேர்தலிலேயே எடுத்துக் கொண்டுவிட்டார்கள். நாங்கள் செய்துவந்த, செய்துவருகின்ற காரியங்களை எல்லாம் அவர்கள் செய்யப்போவதாகச் சொல்லிக் கொண்டார்கள். எங்களின். மீது தவறு. நாங்கள் செய்வதைச் சொல்லவில்லை. அவர்கள் செய்யாததை சொன்னார்கள். அதனால் ஓரளவு எங்களுக்கு தீங்கும் விளைந்தது.

அடுத்தபடியாக உணவு உற்பத்தி அதிகரித்தும் ஏன் விலைவாசிகள் ஏறிக்கொண்டே வருகின்றன என்று அம்மையாரும் மற்றும் பலரும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் விளங்க வேண்டும் என்பதற்காகத்தான் நமது நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் தன் உரையில் அதன் காரணத்தை மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். பல சணிகளையும் தொழில்களையும் சர்க்காரும் தனியார்களும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே மக்களுடைய வாங்கும் சக்தியும் வாங்குவோர் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது என்பதைக் காட்டியிருக்கிறார். அதுமாத்திரம் அல்ல. மேல்நாடுகளைப்போல் அல்லாமல் நம் நாட்டில் உணவு உற்பத்தி அதிகப்படுவதோடு போட்டி போட்டுக்கொண்டு ஜனப் பெருக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பது உணவு பற்றாக்குறைக்கு ஒரு காரணம் என்பதை அம்மையாருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாட்டில் தற்பொழுதுள்ள சிக்கல்கள் இரண்டு. இதற்குக் காரணம் ஒன்று பற்றாக்குறை, மற்றொன்று அன்னியச் செலாவணி குறைவு என்பதை நிதி மந்திரி அவர்களே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். முதல் குறையைப் போக்குவதற்கு நாட்டின் மிகவும் முக்கியமான தொழிலாகிய விவசாய அபிவிருத்திக்குப் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். குறிப்பாக நீர்ப்பாசன வசதிக்காக இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மின்சாரத்திற்காகப் பதினாறு கோடியே அறுபத்திரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சமுதாய நலத்திட்டம், தேசீய அபிவிருத்தித் திட்டம் முதலியவற்றுக்காக மூன்று கோடியே எழுபது லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மற்றப்படி விதைப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்காகவும், உரங்கள் விநியோகிப்பதற்காகவும், பசுந்தாள் உரத்தைப் பெருக்குவதற்காகவும் காடுகளை வளர்ப்பதற்காகவும் கால் நடைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு அடுத்தபடியாக நம் நாட்டில் பெரும்பாலான மக்களுடைய ஜீவனோபாயத் தொழிலாக இருக்கும் கைத்தறித் தொழிலை வளர்க்கவும் பல சலுகைகளை நீடித்து அளிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இரண்டாவதாக சொன்ன அன்னிய செலாவணி குறைவைப் போக்கிக்கொள்ளத்தான் அலுமினியத் தொழிற்சாலை, இரும்பு தொழிற்சாலை, சிமிண்டு தொழிற்சாலை, காகிதச் தொழிற்சாலை போன்ற பெரு ரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இது தவிர வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பல சிறு ரகத் தொழிற்சாலைகளும் கிராமக் கைத்தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் உணர்ந்து பாராட்டாமல் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள தெளிவான பல நல்ல அம்சங்களை அறிந்து

கொள்ளாமல், குற்றங்குறைகளைக் கூறவேண்டுமென்பதற்காகவே தோண்டித் துருவிப் பார்த்து " அங்கே ஒரு வரியில் பார்க்கலாம் என்றுதானே சொல்லியிருக்கிறது. இங்கே ஒரு வரியில் யோசிக்கப்படும் என்று தானே சொல்லியிருக்கிறது. இதை எதிர்பார்க்கிறோம் என்றுதானே சொல்லுகிறார்கள் " என்றெல்லாம் சுட்டிக் காட்டிப் பேசுவது நேர்மையாகாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எல்லாத் துறைகளிலும் சரி சமனான முன்னேற்றத்திற்கு வழிவகை செய்வதாக அமைந்துள்ள இந்த பட்ஜெட்டைவிட வேறு சிறந்த பட்ஜெட் இருக்க முடியாது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய நகரத்தை எடுத்துக்கொண்டால் குடி தண்ணீர் கஷ்டம் இருக்கிறது. அதைப் போக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். குடிதண்ணீர் சம்பந்தமாக சமீபத்தில் நிறைவேற்றப்போகும் வைகை ரிசர்வாயரிலிருந்து ஒரு அளவு தண்ணீர் கொடுக்க அனுமதிக்கவேண்டும். பிச்சைக்கார விடுதி ஒன்றை எங்கள் நகர முனிசிபாலிடியார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இரண்டு லட்சத்தில் கட்டிய அந்த விடுதியை சர்க்காரே எடுத்துக்கொள்ள வேண்டும். மூன்றாவது மின்சார வினியோகத்தை சர்க்காரே எடுத்துக் கொண்டுவிட்டால் எங்கள் முனிசிபாலிட்டியின் வருமானம் வெகுவாக குறைந்துவிடும். முனிசிபாலிட்டியின் வருமானம் குறையாத அளவு அதையும் யோசிக்கவேண்டும். எங்கள் நகரத்தினருகே தர்மல் ஸ்டேஷன் இருக்கிறது. அதை விஸ்தரிக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன்.

10-50 a.m. SRI G. VENKATACHALA NATTAR: கனம் தலைவி அம்மையார் அவர்களே, இந்த பட்ஜெட்டில் உள்ள சில விசேஷ அம்சங்களைக் கூறாமல் இருக்க முடியவில்லை. விவசாயம் இந்த நாட்டின் முக்கிய தொழிலாக உள்ளதால் அதற்கு போதுமான அளவு நமது நிதி அமைச்சர் அவர்கள் தொகை ஒதுக்கியுள்ளார்கள். அந்தத் தொகை, விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய எருகளாகவும் இன்னும் பல்வேறு துறைகளிலும் கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படும் தொகையை குறிப்பாக ரசாயன உரங்களுக்கே அதிகமாகச் செலவு செய்யப்படுகிறது. அப்படி செலவிடப்படும் ரசாயன உரங்களை, கிராமங்களில் விவசாயிகள் மண்ணின் தரத்தை அறிந்து அதற்கேற்றவாறு நிலங்களில் இடுவதற்குள்ள ஏற்பாடுகளை செய்து கொடுக்கவேண்டும். அப்படி இல்லாமல், மறுபடியும் உரங்களை விவசாயிகள் மண்ணின் தரத்தை அறியாது உபயோகித்தால் நல்ல முடிவு ஏற்படுவதற்குப் பதிலாக தீமையே விளையும் என்று நான் இங்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக, நிலவள பாதுகாப்பு. நில வள பாதுகாப்பு இதர ஜில்லாக்களில் இப்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், இந்த நாட்டின் நெல் களஞ்சியம் என கருதப்படும் தஞ்சை ஜில்லாவில் அது இன்னும் அமலுக்கு வரவில்லை. ஒரு உபமானம் சொல்வார்கள். சுவற்றை வைத்துத்தான் சித்திரம் எழுதவேண்டுமென்று. அந்த ரீதியில் தஞ்சை இந்த நாட்டின் நெல் களஞ்சியமெனக் கருதப்படும்போது இன்னும் அந்த ஜில்லாவில் நிள வல பாதுகாப்பு ஏற்படுத்தாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். அதை இங்கு குறிப்பிடத்தான்வேண்டும். அடுத்தபடியாக, தேசீய விஸ்தரிப்புத் திட்டம். தேசீய விஸ்தரிப்புத் திட்டம் தஞ்சையில் பெரும்பகுதியிலும் இன்று நடைமுறையில் இருந்து வந்தாலும் இன்னும் சில பகுதிகளுக்கு வராமல் இருக்கிறது. அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த தேசீய அபிவிருத்தித் திட்டம் தஞ்சையில் அமல் நடக்கும் நிலையில் சில குறைகள் ஏற்படுகின்றன. அரசாங்கத்திலிருந்து ஹரிஜன விவசாயிகளுக்கு 250 ரூபாய் கொடுக்கிறார்கள், விவசாய கருவிகள் முதலியவை வாங்க. அப்படிக் கொடுக்கப்படும் தொகையானது நிலமுள்ள ஹரிஜன விவசாயிகளிடமே சேர்க்கப்படுகிறது. அப்படிச் சேர்க்கப்படுவதால் நிலமற்ற ஏராளமான ஹரிஜனங்களுக்கு அந்தத் தொகை எதுவும் கிடைக்க வழியில்லை. அப்படிக் கிடைக்காததால் அந்த ஹரிஜன விவசாய மக்கள் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் ஆர்வம் இழந்து





அதில் பங்கு கொள்ள முன் வர மறுக்கிறார்கள். ஆகவே அந்தத் தொகையை எல்லா ஹரிஜனங்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வழி செய்ய வேண்டும். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லாவிடில் அந்தத் தொகையை ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்திலாவது சேர்த்துக் கொடுக்கப் படவேண்டும். இல்லாது, இந்த முறையே செய்து வந்தால் ஜனங்களுடைய ஒத்துழைப்பிற்குப் பதிலாக துவேஷமே அதிகரிக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் விவசாயத்தையே குறிக்கோளாக வைத்துக்கொண்டு செயலாற்றி வரும் இந்த விவசாய தொழிலாளர்களுக்கு வருடத்தில் ஆறு மாதங்கள்கூட வேலை கிடைப்பது அரிதாகிவிட்டது. வருடத்தில் பாதி நாட்களுக்கு மேல் அவர்கள் எந்தத் தொழிலும் இல்லாமல் பிழைப்பதற்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். நமது பட்ஜெட்டில் இதர ஜில்லாக்களில் பெரிய தொழில்களும், சிறிய தொழில்களுமாக அமைக்கப்பட திட்டமிருக்கிறது. ஆனால் தஞ்சையில் ஒன்றும் விசேஷமாக காணவில்லை. இந்த விவசாயிகளுக்காக, அவர்களுக்கு வேலை இல்லாத நாட்களில் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய வகையில் தஞ்சை ஜில்லாவில் அநேக இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, இந்த ஜில்லாவில், இந்த நாட்டில் தமிழ் அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் உண்மை குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தக்க தண்டனை விதித்து வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று நம் நாட்டில் வெள்ளைக்கார ஆட்சியில் ஏற்பட்ட சட்ட திட்டங்களை தொடர்ந்து அமல் நடத்திவருவதால் உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை என்றுதான் நான் கூறுகிறேன். ஆகவே, உண்மையான குற்றவாளிகளை கண்டு பிடித்து தண்டனை விதிக்க நமது நீதி நிர்வாக ஊழியர்கள் முன்னுக்கு வரவேண்டும். கெஜெட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களும், போலீஸ் இலாகா அதிகாரிகளும் தங்களுக்கு சர்க்கார் போதுமான ஊதியம் கொடுக்கவில்லை என்ற ஒரு காரணத்தினால் அவர்கள் இதில் அவ்வளவு கவனம் எடுத்துக் கொள்வதில்லை. ஆகவே அவர்களது நிலையை நன்கு பரிசீலித்து அவர்களது நிலையை உயர்த்தி நீதி நிர்வாகம் சரிவர நடைபெறச் செய்வதற்கு சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியும் அவர்கள் சரியாக நடக்கவில்லை என்றால் அவர்களைக் கடுமையாக தண்டிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல முடிவுடன் இந்தப் பிரச்னையைக் கையாள்வார்கள் என்று நம்புகிறேன். இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI P U. SHANMUGAM: சட்டமன்ற தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்பு வைத்துள்ள இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைக் குறித்து இதுகாறும் பல நண்பர்கள் பேசியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள் பேசியிருக்கிற கருத்துக்களை எல்லாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்டுப் பேசும்போது தகாத வார்த்தைகளை நாங்கள் உபயோகிக்கிறோம் என்றும் தவறான போக்கில் நாங்கள் போகிறோம் என்றும் அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள். சிலர் விவேகமாக கண்டித்தார்கள். இன்னும் சிலர் ஆத்திரத்தோடு நாங்கள் இங்கு இருக்கத் தகாதவர்கள் என்று கூறினார்கள், எங்களை இங்கு வர முடியாமல் செய்யவேண்டுமென்று அவர்கள் நினைத்ததற்கு மாறாக அவர்களுடைய விருப்பம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதே என்ற பதட்டத்தோடு பேசிவிட்டார்கள். குறிப்பிடவேண்டுமென்றால் நேற்றைய தினம் ஒரு நண்பர் கூறினார், கண் இருந்தும் பார்க்க மாட்டேன் என்கிறார்களே, காது இருந்தும் கேட்கமாட்டேன் என்கிறார்களே, நாவிருந்தும் நல்ல காரியங்களைப்பற்றி பேசமாட்டேன் என்கிறார்களே என்று குறிப்பிட்டார்கள். இன்னொரு அம்மையார் அவர்கள், கண்டிக்க ஆரம்பித்து வேகமாகப் பேசி எங்களைக் கண்ணீர் துளிகள் என்று கூறி முடித்துவிட்டார்கள். நமது நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருப்பது நிதி நிலை அறிக்கையா அல்லது ஆண்டு அறிக்கையா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆண்டு அறிக்கைகளைப் படித்திருப்பவர்களுக்குத் தெரியும். சர்க்கார் ஆண்டு அறிக்கையைப் பார்க்காவிட்டாலும் நகரசபை

யில் உள்ளவர்களுக்குத் தெரியும். தலைமை வகிக்கும் அம்மையாருக்கும் தெரியும். நகரசபைகளில் உள்ள ஆண்டு அறிக்கையில் இதே போல் செய்யப்படும், இதேபோல் செய்ய உத்தேசித்திருக்கிறோம் என்றெல்லாம் வருமேயொழிய செய்யப்படுவதுபற்றி வரவு செலவு திட்டத்தில் வந்திருக்க வேண்டும. அப்படி ஒன்றும் இதில் காணவில்லை. அதைத்தான் கருணாநிதி அவர்கள் தமக்கே உரித்தான பாணியில் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அதைக்கூட கிண்டல் செய்யும் அளவிற்கு சிலர் முன் வந்து விட்டார்கள். பற்றுக்குறையைச் சுட்டிக்காட்டி நல்ல ஆட்சிக்கு அதனால் குறை ஏற்பட்டு விடாது என்று சொன்னார்கள். இன்னொரு அம்மையார் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள், இது அவ்வளவு தூரம் பற்றுக்குறை அல்ல, இது சர்வசாதாரணமானதுதான் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட்டைப் பார்த்தோம். இப்போது ஏற்பட்டிருக்கும் பற்றுக்குறை சாதாரண பற்றுக்குறை அல்ல. இந்த பற்றுக்குறை பட்ஜெட்டை மிக புத்திசாலித்தனமாக தயாரித்திருக்கிறார்கள், என்று சிலர் குறிப்பிட்டார்கள். இந்த பற்றுக்குறையினால் கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்றும் சிலர் குறிப்பிட்டனர். ஆனால் கட்சியைச் சேர்ந்த பல நண்பர்கள் புதிதாக வரிகள் ஒன்றும் கூடுதலாக போடவில்லை, ஆகவே இந்த திட்டத்தை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான் என்று பெருமூச்சுடன் சொல்லுகிறார்கள். அதே சமயத்தில் நான் கேட்கிறேன், இந்த நாட்டின் தொல்லைகள் தீர ஏதாவது வழிகள் இதில் இருக்கின்றனவா என்று தயவு செய்து பார்க்கவேண்டும் காங்கிரஸ் நண்பர்கள். இப்போது போடப்பட்டிருக்கிற 333 லட்சம் ரூபாய் பற்றுக்குறை சாதாரணப் பற்றுக்குறை என்று யாரும் கருதிவிடவேண்டாம். இப்பொழுது வரிகள் ஒன்றும் கூடுதலாக விதிக்கவில்லை என்றாலும் நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தை படிக்கும்போது குறிப்பிட்டார்கள், நிதி கூடுதல் தேவைப்பட்டால் மத்திய சர்க்காரிடமிருந்து கடன் வாங்கவேண்டுமென்று. இது தவிர சிறு சேமிப்பு திட்டங்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். இதற்கும் மக்களிடையே ஆதரவு கிடைக்கும் என்று தெரிகிறது. ஆகவே இதற்கு ஒரு வழி என்னவென்றால் சர்க்காரிடமிருந்து மான்யமாக கடன் வாங்கவேண்டியதுதான் என்று தெள்ள தெளிய குறிப்பிட்டிருக்கிறார்கள். போட்டிருக்கிற மூலதன செலவுகளை எல்லாம் சரியானபடி செலவு செய்தால் இப்பொழுது விழுந்திருக்கும் பற்றுக்குறை சரிகட்டி வராது. நான் சொல்வது வேடிக்கை என்று யாரும் எண்ண வேண்டாம். நிதி அமைச்சர் அவர்களது உரையில் 17-வது பக்கத்தை புரட்டிப்பார்த்தால் இவ்விஷயம் நன்றாகத் தெரியும். அதில் சென்ற ஆண்டிலுள்ள வரவு செலவு திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் மூலதன செலவிற்காக "24 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவாகும் என்று எதிர் பார்த்ததற்கு மாறாக, 20 கோடியே 52 லட்சம் ரூபாய் தான் செலவானதாக இப்போதைய கணக்கு" என்று இருக்கிறது. இதன் மூலம் 363 லட்சம் ரூபாய் மூலதன செலவிலிருந்து மிச்சப்படுத்தப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இங்குள்ள அங்கத்தினர்களை கேட்கிறேன். கழிந்த தடவை பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்போது இருந்த பல அங்கத்தினர்களும் இன்று இந்த சபையில் இருப்பார்கள் என்று நம்புகிறேன். அன்று சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டிலிருந்து மூலதன செலவிற்காக என்று ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்யாமல் இவ்விதம் மிச்சப்படுத்தி காட்டுவதற்காகத்தானா நீங்கள் அன்று இந்த மான்யங்களை எல்லாம் நிறைவேற்றி கொடுத்தீர்கள் என்று கேட்கிறேன். இன்று 363 லட்சம் ரூபாய் அதற்கென்று ஒதுக்கப்பட்டிருந்த வேலைகளை செய்யாமல் மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பொருள் என்ன? நிர்வாகத்தில் ஏதோ அசம்பாவிதம் இருக்கிறது என்று ஏன் நாங்கள் கருதக்கூடாது? ஏதோ "பாலன்ஸ்" செய்து சரிகட்டுவதற்காக வேலைகளை செய்யவேண்டாம் என்று அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டிருப்பார்கள் என்று ஏன் நாங்கள் கருதக்கூடாது? அதுமாத்திரமல்ல மூலதன செலவை பாருங்கள். சென்ற ஆண்டு 24 கோடி 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது 23 கோடி 49 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் குறிப்பிட்டிருக்கிறது, விவசாயத்திற்காக இந்த



ஆண்டு 182 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று. ஆனால் இந்த ஒதுக்கப்பட்ட நிதி சரியானபடி செலவு செய்யப்படுமா என்பது சந்தேகம்தான். இவ்விதமாக பிறர் மயங்கிவிடும்படியான வகையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்விதம் நாங்கள் புள்ளி விவரங்களை எடுத்துக் கூறுவதை யாராலும் மறுக்க முடியாது. ஆகவே இவ்விதமான . . .

**THE HON. SRI C. SUBRAMANIAM**: The hon. Member should address the Chair and not hon. Members.

**SRI K. VINAYAKAM**: He has been used to addressing public meetings only.

**SRI P. U. SHANMUGAM**: நண்பர் விநாயகம் அவர்கள் நாங்கள் பொதுமேடையில் பேசுகிறவர்கள் என்று குறிப்பிட்டார்கள். நண்பர் விநாயகம் அவர்களும் பொதுமேடைகளில் பேசி பின்னால் தான் இங்கு வந்திருக்கிறார் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். நான் கடந்த பல வருடங்களாக நகரசபையில் பதவி வகித்த அனுபவம் உண்டு . . .

**SRI K. VINAYAKAM**: I have been in the Corporation for the past ten years.

**SRI P. U. SHANMUGAM**: நான் கழிந்த ஐந்து வருடகாலமாக நகரசபைத் தலைவராகவே இருந்து வருகிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: நகரசபைத் தலைவராக இருந்தும் இம்மாதிரி முறைகளை கையாளுவதற்கு வருத்தப்படுகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சபாநாயகரைப் பார்த்து பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**SRI P. U. SHANMUGAM**: அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நாங்கள் இம்மாதிரி மூலதன செலவிற்கு ஒதுக்கப்பட்டிருந்தும் செலவிடப்படவில்லை என்றும் சரியான விதத்தில் மற்ற செலவுகள் செலவிடப்படவில்லை என்று புள்ளிவிவரங்களோடு எடுத்துரைக்கும்போது காது இருந்தும் கேட்க மறுக்கின்றனர். நாங்கள் அவைகளை எடுத்து காட்டும் போது கண் இருந்தும் பார்க்க மறுக்கின்றனர். நாவு இருந்தும் இவைகளை எடுத்துக் கூற மறுக்கின்றனர். அவர்களை பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். நாங்கள் இவைகளையெல்லாம் பார்த்துத்தான் இந்த பட்ஜெட்டில் நிலையான கொள்கையில்லை என்று கண்டிக்கிறோம். ஆனால் ஆளும்கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் பேச ஆரம்பிக்கிறார்கள், முதலில் எதிர்கட்சிக்காரர்களை. எதிர்கட்சிக்காரர்கள் இந்த பட்ஜெட்டைப்பற்றி வருத்தப்படுகிறார்கள், கண்டிக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு பின்னால் அவர்களும் தங்களுடைய வருத்தங்களையும் கண்டனங்களையும் தெரிவித்துக்கொள்கிறார்கள். ஆனால் எதிர்கட்சிக்காரர்கள் ஒரே கொள்கையில் நின்று வருத்தங்களை மாத்திரம் சொல்லுகிறார்கள். ஆனால் ஆளும் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் ஒரு பக்கம் வானளாவ புகழ்ந்து விட்டு உடனேயே தங்களுடைய வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கிறார்கள். இவ்விதம் இரண்டு நாவு படைத்தவர்கள் அல்ல எதிர்கட்சியிலுள்ளவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தவர் அல்ல என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஆளும் கட்சியிலுள்ளவர்கள் கூறும்போது எனக்கு ஒரு உதாரணம் ஞாபகத்திற்கு வருகிறது. கணவன் வெளியேயிருந்து வீட்டுக்கு வந்தான், அடுத்த மாதத்திற்கு எப்படி திட்டம் போடுவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறான், பக்கத்தில் மகள் வருகிறாள், அப்பா, எனக்கு பென்சில் வாங்கவேண்டும், பேனா வாங்கவேண்டும், பள்ளிக்கு சம்பளம் கட்ட வேண்டும் என்று கேட்கிறாள். இதைப்பார்த்த மனைவி அங்கே வருகிறாள், அங்கு வந்த மனைவி "சீ வாயை மூடிக்கொண்டு இரு" என்று தன் மகளை கண்டித்து அனுப்பிவிட்டு கணவன் அருகிலே போய் இருந்துவிட்டு எனக்கு பட்டு புடவை வாங்கவேண்டாமா? புதிதாக வளையல் போட வேண்டாமா என்று அன்போடு தன்னுடைய indent-ஐ

[Sri P. U. Shanmugam] [4th July 1957

சமர்ப்பித்தாளாம். அதுபோல ஆளும் கட்சியை சார்ந்தவர்கள் எடுத்த எடுப்பில் முதலாவது எங்களை குறைகூறி கண்டித்துவிட்டு பின்னால் தங்களுடைய குறைகளை பற்றி அமைச்சர்களிடம் முறையிடுகிறார்களே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. (சிரிப்பு) தங்களது தொகுதியில் இன்னின்னது செய்யப்படவில்லை என்று பலரும் கூறினார்கள். நானும் எனது தொகுதியைப் பற்றி கூறாமல் இருக்க முடியாது. எனது தொகுதியில் ஆனைப்பட்டி பிர்க்கா என்ற ஒரு பிர்க்கா இருக்கிறது. அதை நினைத்தாலே, ஆப்ரிக்கா ஜங்கிள் என்று சொல்லுவார்களே, அந்த மாதிரியுள்ள பயங்கரமான வகையில் இது வடஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. இவ்விதமான ஒரு சூழ்நிலையில் இருக்கிற அந்த இடத்திற்கு எந்த விதமான வசதிகளும் இல்லை. அங்கு போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்குள்ள ஏழைகளை மிரட்டி பணத்தை பறித்து கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள காட்டிலாகா உத்யோகஸ்தர்கள் கிராம மக்களிடம் அங்கு கழனிகளில் ஆடு மேய்ந்து கொண்டிருந்தாலும் கூட அவர்களை துன்பபடுத்தி ரூபாய் கேட்கிறார்கள். வைத்தியத்திற்கு என்று ஒரு " குரூப் " அங்கு இருக்கிறது. அவர்கள் மருந்துகளை எல்லாம் கள்ள மார்க்கட்டில் விற்றுவருகிறார்கள். இதுபோன்ற பிர்க்காக்கள் எவ்வளவோ இருக்கின்றது. அந்த பகுதிகளிலுள்ள குறைகள் எவ்வளவோ இருக்கின்றன. இவ்விதமான குறைகளை எல்லாம் நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(The temporary Chairman sounded the gong and the hon. Member resumed his seat.)

(Mr. Speaker in the Chair.)

11-10 a.m. **Sri S. C. SADAIYAPPA MUDALIAR**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையிலே 1957–58-ம் வருஷத்திய நிதி அறிக்கையை அளித்த நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த சபையிலே அந்த அறிக்கையைப்பற்றி பல அங்கத்தினர்கள் அதை ஆதரிக்கக்கூடிய மன நிலை இருந்தும், அதில் ஏதோ குறைகள் இருக்கின்றன, ஏழை மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை என்ற தோரணையிலே பேசினார்கள். உண்மையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த பட்ஜெட்டிலே கிராம மக்கள் முன்னேற்றம் அடையக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, அதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் தொகுதியிலிருக்கும் குறைகளை ஏதாவது எடுத்துச்சொன்னால் நாங்களும் குறைகள் சொல்லுகிறோம், அவர்களும் குறைகளைச் சொல்லுகிறார்கள் அதனால், குறைகள் நிறைந்த இந்த பட்ஜெட்டை எப்படி ஆதரிக்கிறது என்று எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய நாட்டிலுள்ள குறைகளை போக்கிக்கொள்ள நம்முடைய நிலையை அனுசரித்து பல ஆண்டுகளாக பல திட்டங்கள் அமைந்திருக்கின்றன. அம்மாதிரி முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகியிருக்கும் சமயத்தில் கிராமங்களில் முன்னேற்றம் அடையக்கூடிய பல பகுதிகள் கவனிக்கப்படாமல் இருக்கக்கூடிய குறைகளைத்தான் என்போன்ற நண்பர்கள் எடுத்துக்காட்டி வருகிறார்கள். அந்த முறையிலே என்னுடைய ஜில்லாவிலே தண்ணீர் இல்லாத பாலாறு ஒன்று இருக்கிறது. விவசாயிகளுக்கு முக்கியமாகத் தண்ணீர் தேவை. எங்கள் ஜில்லாவில் இருக்கக்கூடிய விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். தண்ணீர் வசதிக்காக கிணறுகள் வெட்டுவதற்காக சர்க்கார் இனமாக ரூ. 500 அளித்தார்கள். அதற்குப் பிறகு தண்ணீர் இறைப்பதற்கும், எடுப்பதற்கும் உடனடியாக எங்கள் ஜில்லாவிலே மின்சார வசதி செய்துகொடுத்தால், விவசாயம் முன்னேற்றம் அடைவதற்கு ஹேதுவாக இருக்கும். தண்ணீர் எடுத்துக்கொள்ளுவதற்கு வசதி செய்துகொடுத்த சர்க்கார் விவசாயம் செய்வதற்கு வேண்டிய கடன் வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டும். தனிப்பட்ட நபர்களிடத்திலே கடன் வாங்குவதால் விவசாயிகள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு முறையிலே கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



4th July 1957] [Sri S. C. Sadaiyappa Mudaliar]

அடுத்தபடியாக, என்னுடைய அரக்கோணம் தாலுகாவில் பல கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கக்கூடிய காவேரிப்பாக்கம் என்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. ஏதோ கடவுள் அருளால் மழை பெய்து தண்ணீர் வந்தாலும் கூட ஒரு போகத்திற்கு தண்ணீர் நிறையக்கூடிய நிலையில்தான் இருக்கிறது. இரு போகத்திற்கும் தண்ணீர் நிறையக்கூடிய அளவிலே அந்த ஏரியை மராமத்து செய்துகொடுக்கவேண்டுமாய் கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரக்கோணத்திலே யுத்த காலத்திலே " ஏரோடிரோமாக " இருந்த இடம் தற்சமயம் எதற்கும் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கிறது. சுமார் 1,000 ஏகர் விஸ்தீரணம் உள்ள இடம் அது. பல கோடி ரூபாய் செலவு செய்து பல நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் நிறைந்த அந்த இடத்திலே தண்ணீர் வசதி, மின்சார வசதி உள்ள இந்தப் பெரிய இடத்திலே ஒரு நல்ல கைத்தொழில் ஆரம்பித்தால் அது அங்குள்ள ஏராளமான ஏழை மக்களுக்கு வசதியாக இருக்கும். அங்கு ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு தனிப்பட்ட நபர்கள் எந்த முறையிலும் வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். ஏழை மக்களுக்கு வீடு இல்லாத அந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு அந்த இடத்தைக் கொடுத்தால், அது ஒரு பெரிய நகரமாக இருக்கும் என்பதை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அரக்கோணம் தொகுதி முன்னேற்றம் அடைவதற்கு வசதியாக எந்தவிதமான அபிவிருத்தித் திட்டமும் அமுல் செய்யப்படவில்லை. வருகிற அக்டோபர் மாதத்திலாவது சமுதாய நல திட்டம், தேசிய அபிவிருத்தித்திட்டம் முதலிய திட்டங்களை இங்கு ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாகாணத்தில் 4½ லட்சம் நெசவாளர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் ஒரு கோடி ரூபாய் செஸ் நிதி பெற்று கூட்டுறவு முறையில் சேர்ந்திருக்கும் 1½ லட்சம் நெசவாளர்களுக்கு மட்டும் வீடுகள் கட்டிக்கொடுத்தும், பழைய வீடுகளைப் பழுதுபார்த்துக்கொடுத்தும், அவர்களுக்கு இனமாக விழுதுகள், அச்சுகள் போன்ற சாமான்களை வழங்கியும் பலவித வசதிகள் செய்துகொடுக்கிறார்கள். 1½ லட்சம் தறியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்திருப்பதால் அவர்கள் மட்டும் பல நன்மை அடைகிறார்கள். மற்றபடி மூன்று லட்சம் தறியாளர்கள் ஒரு வசதியும் செய்துகொடுக்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் எல்லோருக்கும் பாரபட்சமில்லாமல் எல்லா சலுகைகளையும் உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாஸ்டர் வீவர்களிடம் இருக்கும் நெசவாளர்களை சட்டபூர்வமாக அவர்களிடமிருந்து விலகும்படி செய்து நான்கு லட்சம் நெசவாளர்களும் கூட்டுறவு சங்கத்தில் சேருவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நூல் விலை அதிகப்படியாக ஏறாமல் இருக்கும்பொருட்டு நூலை குறைந்த விலைக்கு விற்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். தங்கள் இஷ்டத்திற்கு சமயோசிதம் போல் நூல் விலையை சிறிது சிறிதாக ஏற்றுவதால் நெசவாளர்களுக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுவதற்கு ஹேதுவாக இருக்கிறது. ஜில்லா வாரியாக கூட்டுறவு முறையிலே நூல் மில்கள் ஏற்படுத்தினால் நெசவாளர்களுக்கு நன்மை ஏற்படும் என்று சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகையால் ஒன்றரை லட்சம் நெசவாளர்களுக்கு மாத்திரம் நன்மை செய்த திருப்தியோடு நின்றுவிடாமல், நான்கு லட்சம் நெசவாளர்களுக்கும் ஏகமாக வேண்டிய வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*Sri A. E. CHANDRASEKARA NAYAGAR: கனம் சபாநாயகர் அவர்களே, 1957-58-ம் வருஷத்து வரவு செலவு மதிப்பீட்டுத் திட்டத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டில் நம் ராஜ்யத்தில் அபிவிருத்தி திட்டத்திற்காக அதிகப்படியான பணம் ஒதுக்கப்பட்டிருப்பதை நாம் அனைவரும் வரவேற்கிறோம். மேலும் சர்க்கார் நெய்வேலி பரிசீலனை திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் செலவு செய்ததோடு 11-19 a.m.

சோர்வு அடையாமல் அந்தத் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டிற்கு ஒரு மறுமலர்ச்சி உண்டாக்கியிருப்பதை எல்லோரும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நெய்வேலித் திட்டத்தை எடுத்துக்கொண்டதைப் போல, கோதாவரித் தண்ணீரை சென்னை ராஜ்யத்திற்குக் கொண்டுவருவதற்காக முயற்சி எடுத்து அந்த நீரையும் தமிழ்நாட்டுக்குப் பயன்படும்படிச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், நம் ராஜ்யத்திலுள்ள பல்வேறு ஜில்லாக்களிடையே ஏற்றத் தாழ்வுகள் இப்பொழுது ஓரளவு உண்டாகி வருவதால், வடாற்காடு ஜில்லா போன்ற பிற்பட்ட ஜில்லாவுக்குத் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். வடாற்காடு ஜில்லாவிலே எந்த விதமான நீர்ப்பாசன வசதிகளும் கிடையாது. ஆனால், இச்சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தில் அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜில்லாதோறும் சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்து, மறைந்து கிடக்கும் நீர்ப்பாசன வசதியைக் கண்டு பிடித்து, விவசாயத்திற்குப் பயன்படுத்த தாலுகாவிற்கொரு தகுந்த நீர்ப்பாசன போர்ட் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேபோல், வடாற்காடு ஜில்லாவிலுள்ள பாலாறு வரண்டு கிடப்பதால், அதில் தண்ணீர் கொண்டுவருவதற்காகவும் ஒரு நல்ல முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மற்றும், வடாற்காடு ஜில்லாவில், எந்தவித பெரும் தொழில்களோ மற்ற வசதிகளோ இல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகியிருக்கிறது. அதற்காக, அங்குள்ள இயற்கை வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு, சந்தனத்தைலம், சோப் முதலிய உபப் பொருள்களைத் தயார் செய்ய தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்றும், காகித உற்பத்தித் தொழிற்சாலையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்பொழுதுதான் ஜில்லாக்களிலே ஏற்றத் தாழ்வு இல்லாமல் சோஷலிச சமுதாயத்தை அடைய முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும், வடாற்காடு ஜில்லாவில் தொழிற்கல்வி ஸ்தாபனம் இல்லை. அதை ஏற்படுத்துவதற்காக ஒன்றும் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால், அதிலும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும், சர்க்கார் மக்களுடைய அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் செய்யும் சட்ட திட்டங்களின் நன்மையை சாதாரண, பாமர கிராம மக்கள் உணர்ந்து, அனுகூலம் அடைய முடியவில்லை என்பதை எல்லோரும் உணருகிறார்கள். அதற்காக, சர்க்காரிடம் இருக்கும் செய்தி-விளம்பர இலாகாவை நல்ல முறையில் பயன்படுத்தி, கிராமந்தோறும் உள்ள ஆரம்பப் பாடசாலைகளிலும், மற்றும் பொது இடங்களிலும் விளம்பரப் பலகைகளை வைத்து, மக்களுக்காக செய்யப்பட்டிருக்கும் சட்டங்களுக்கு நல்ல விளம்பரம் கொடுத்தால், சர்க்காருக்கும் மக்களுக்கும் நல்ல முறையில் தொடர்பு ஏற்படுவதற்கு உதவும். அந்த வகையில் சர்க்கார் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேலும், இந்த பட்ஜெட்டில் விலைவாசி ஏற்றத்தைப்பற்றி சொல்லப்படுகிறது. விலைவாசி ஏற்றத்தினால் ஓரளவு உணவு உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். விவசாயிகள் விளை பொருள்களை உற்பத்தி செய்தவற்கு ஏற்படும் செலவைக் கணக்குப் போட்டுப் பார்த்தால், இப்பொழுதுள்ள விலை அவர்களுக்கு அவ்வளவு சாதகமான நிலைமையில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையால்,





களைத் தட்டுப்பாடு ஏற்பட்டால்தான் நாம் அதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமே தவிர, சாதாரணமாக விலைவாசி ஏற்றத்தைப்பற்றி அதிகமாக நாம் கவனிக்கவேண்டியதில்லை.

சர்க்கார் இப்பொழுது 470 மைல் நீளமுள்ள ஸ்தல ஸ்தாபன ரோடுகளை பராமரிப்பதற்காக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் நம் ராஜ்யத்தில் பஸ் ஓடும் எல்லா ரோட்டுகளையும் எடுத்து நல்ல முறையில் சீர் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதுவும் இல்லாமல், வருஷா வருஷம் மின்சாரத்தில் தட்டுப்பாடு இருந்ததைப் போக்கி இப்பொழுது நடைமுறை பட்ஜட்டில் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகையால், அதை நான் வரவேற்கின்றேன்.

அடுத்தபடியாக, சர்க்காரின் ரொக்க வசதியில் 13 கோடி ரூபாய் துண்டு விழுவதில் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டியது கடமையாய் இருக்கிறது. ஆகையால், 13 கோடி ரூபாயை ஈடுகட்டுவதற்காக ஆயுள் இன்ஷ்யூரன்ஸைத் தவிர, மற்ற இன்ஷ்யூரன்சுகளை நம் சர்க்கார் மேற்கொள்ள வேண்டும். மேலும், ஜில்லா கூட்டுறவு பாங்குகளையும், மத்திய கூட்டுறவு பாங்குகளையும் சர்க்கார் எடுத்துக்கொண்டால், இந்த ரொக்க வசதியை அபிவிருத்தி செய்து, சர்க்காருடைய காரியங்களைத் துரிதமாக செய்ய வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சர்க்காருடைய பட்ஜட்டில் செலவினங்களுக்காக ஒதுக்கப்படும் தொகையைச் செலவிடும் கொள்கையை நிர்ணயம் செய்ய வேண்டும். அதை எந்த முறையில் செலவிட வேண்டுமென்று கொள்கையை நிர்ணயம் செய்தால் வேலையில் கால தாமதமும், பண விரயமும் ஏற்படாமல் இருக்கும். ஆகையால், இப்பொழுது சர்க்கார் பட்ஜட்டில் கொடுத்திருக்கும் விவரங்களைப் பழைய கால முறைப்படி கொடுத்திருப்பதைவிட மேலும் விவரமாக, நன்ருகப் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் வருவாய்த் தலைப்புகளைக் காட்டவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இதுவும் இல்லாமல் என்னுடைய தொகுதியாகிய ராணிப்பேட்டையில் பாரி அண்டு கம்பனி இருக்கிறது. அங்கிருக்கும் திராவகக் கழிவு நீரால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு, பல ஏக்கர் நிலங்கள் வீணுகிறது. அப்படி வீணுகியும் வரி கட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று பல வருஷங்களாக அங்குள்ளவர்கள் மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இதுவும் இல்லாமல், தோல் ஷாப்புக் கழிவு நீரும் சென்னசமுத்திரம், குடிமல்லூர் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் பாதகமான முறையில் இருக்கிறது. அதிலும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ராணிப்பேட்டைக்கு அருகில் பொன்னையாற்றில் வருஷா வருஷம் தவருமல் வெள்ளம் வருகிறது. 50 சத தண்ணீர் வீணுகப் போவதாக புள்ளி விவரத்தில் இருப்பதாகத் தெரிகிறது. 50 சத விகிதம் தண்ணீரையும் உபயோகப்படுத்தும் முறையில் ஒரு கால்வாய் வெட்டிக் காவேரிப்பாக்கம் ஏரிக்கு திருப்பினுல், விவசாய உற்பத்திக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகையால், சிறு பாசனத் திட்டங்களில் நல்ல முறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இது தவிர, கோவில் சொத்துக்களையும், தரும பரிபாலன சொத்துக்களையும் வேறு வழியில் செலவிடவேண்டுமென்று சொல்லப்படுவதைக் கேட்க நான் வருத்தம் அடைகின்றேன். அந்தச் சொத்துக்கள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப் பட்டதோ, அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் நாம் பரிபாலிக்க வேண்டுமே தவிர, வேறு வகையில்

திருப்புவது சரியல்ல. இருப்பதைச் சீர்திருத்தமான முறையில் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.இப்பொழுது நாட்டு மக்களிடையே பக்தியை வளர்த்து, அவர்களுடைய ஒழுக்கம் குன்றிவருவதைத் தடுத்து, ஒழுக்கத்தை வளர்ப்பதற்கு அம்மாதிரி பணங்களைச் செலவழித்து, தருமங்களை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கங்களை ஈடேற்றவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொது சுகாதார தலைப்பின்கீழ் ஓரளவு பணம் ஒதுக்கிருந்தாலும் சுகாதார வசதிக்குத் தேவையான பணம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, பொது சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ், கிராம சுகாதாரம் என்ற தலைப்பை ஏற்படுத்தி, அதற்காகப் பெரும் அளவு பணத்தைச் சர்க்கார் செலவு செய்தால், ராஜ்யத்திலுள்ள கிராமங்களில் நல்வாழ்வும், முன்னேற்றமும் ஏற்படும். (இத்தருணத்தில் மிஸ்டர் ஸ்பீக்கர் தம் ஆசனத்தில் திரும்ப வந்து அமர்ந்தார்.) ஆகையால்,ராஜ்ய சர்க்கார் கிராம சுகாதார விஷயத்தில் ஒரு தனி அக்கறை காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேலும் சிறு கைத் தொழில், கிராம கைத்தொழில் இப்பொழுது நடந்து வரும் முறையில் அவ்வளவாக வெற்றிகரமான முறையில் மக்கள் அதைப் புரிந்து கொள்ளாத அளவில் இருப்பதால் அதைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவிலே, அந்தத் தொழிலினால் மக்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கக் கூடிய வகையில் மாற்றியமைக்க வேண்டும். இவ்வித தொழில் வெற்றிகரமாக நடக்க முடியவில்லையென்றால், அதை வேறு அளவிலாவது செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

11-30 a.m. **Sri A. MARIAPPAN:** கனம் சபா நாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்களின் பட்ஜெட்டை ஆதரித்துப் பேச முன் வந்துள்ளேன். நிதி மந்திரி அவர்களுடைய பட்ஜெட்டானது நாட்டு மக்களுடைய சீர்திருத்தத்திற்கும், மற்றும் நல்ல முறையிலே பயன் படக்கூடிய அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பாராட்டுகிறேன். ஒரு நாட்டிற்கு எத்தன்மை வாய்ந்த ஒரு அமைச்சர் வேண்டியது என்பதை வள்ளுவர் பெருமான் கூறியுள்ளார்

" கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டதமைச்சு " இத்தன்மை வாய்ந்த குறிக்கோளுடன் இந்த பட்ஜெட்டை தயாரித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதோடு ஒரு அழகான நாடாக இருக்கவேண்டுமானால்—

" பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து " என்றார் வள்ளுவர்.

ஒரு நாட்டை அழகுள்ள நாடாக ஆக்கவேண்டுமென்று, அத்தன்மை நாடாக இருக்கவேண்டுமென்று, பெரியவர்களின் கருத்து. அந்த முறையிலே பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில் சில ஏற்றத் தாழ்வுகள் இருப்பதாக எதிர் கட்சித் தோழர்கள் சொல்லினும் அதில் வரவேற்கத்தக்க அம்சங்களும் இருக்கின்றன. ஆளும் கட்சியினர்களாகிய எங்களைப் போன்றவர்கள் அதை வரவேற்கிறோம். எதிர் கட்சியினர் அதனுடைய குறைபாட்டை எடுத்துச்சொல்லவேண்டியது அவர்கள் கடமை என்று சொல்லுகிறேன். இருப்பினும் அதை நல்ல முறையில் சொல்லவேண்டியது தான் கடமை. அதோடு நாட்டின் நிலவளத்திற்காகவும் மற்ற எல்லா வளத்திற்காகவும் பெரும் பகுதியான தொகையை ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறோம். அதோடு எல்லா ஜில்லாக்களிலும் நீர்ப்பாசனத் திட்டங்களும் அணைக்கட்டுகளும் ஏற்படுத்தியிருக்கிறது மிகவும் பாராட்டக்கூடியதே. எங்களுடைய சேலம் ஜில்லாவில் சேர்வராயன் மலையின் வட பகுதியில் உற்பத்தியாகும் வாணியார் ஒரு ஜீவ நதி. அந்த நதியை அணை கட்டி நீர்ப்பாசனத்திற்கு கொண்டு வந்தால் அரூர் தாலூகாவில் மிக வரண்ட பாலைவனமான பிரதேசத்தையும் செழிப்பானதாக்க முடியும். அந்த நதியில் அணை கட்ட வெள்ளைக்காரர்கள் ஆண்டகாலத்தில் 90 வருஷத்திற்கு முன்





ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் அது கைவிடப்பட்டது. ஏனென்றால் அந்தப் பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு அங்கு தொத்து நோய் ஏற்பட்டதால் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நமது தேசீய சர்க்கார் ஏற்பட்டபோது ஒரு லட்ச ரூபாய் செலவு செய்து சர்வே செய்து விடப்பட்டிருக்கிறது இந்தத் திட்டம். கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலை பூர்த்தியாகவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. மாநாடு கூட்டியும், அமைச்சர் குழுவுக்கு தூது மூலமாகவும் கேட்டபோது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக சொல்லப்பட்டது. அதைப் பற்றி எந்த விதமான தகவலும் இல்லை. இந்தத் தாலூகா மக்களுக்கும் இது மிகவும் அவல நிலை ஆகும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரூர் தாலூகா ஒரு மலைப் பிரதேசம், அங்கு மூங்கில் வளம் அதிகம். அங்குள்ள தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் கூலி வேலை செய்பவர்கள். அங்கு அவர்களுக்கு நல்ல நிலைமையை உண்டாக்க வேண்டுமானால், அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை வைத்தால், இன்றைக்கு பத்தாயிரக்கணக்கான மக்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு அவர்களது வாழ்க்கைத்தரம் உயர ஏதுவாகும் என்று சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதோடு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் பட்ஜெட்டில் அதிகமான தொகையை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். என் அபிப்பிராயம் என்னவென்றால் இன்னும் கொஞ்சம் வரியை உயர்த்தி வரும் கணிசமான தொகையை விவசாயத்திற்கு ஒரு பகுதி, ஒதுக்கி விட்டு தாழ்த்தப்பட்ட சமுதாய முன்னேற்றத்திற்கு மேலும் அதிகமான தொகையை ஒதுக்கவேண்டும். நாட்டில் மக்களுடைய ஜீவன், அதாவது உயிர், விவசாயிகள் தான். ஊண் இல்லையென்றால் மக்கள் உயிர் வாழ முடியாது. ஆகவே விவசாயத்திற்கு இன்னும் அதிகப்படியாக செலவு செய்ய வேண்டும் என்பது என் கருத்து. அதே போன்று பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக நசுக்கப்பட்டு சாக்கடைக்குழியில் தள்ளப்பட்ட சமுதாயத்தை இந்தக் குறைந்த அளவில் சீர்படுத்த முடியாது என்பது என் கருத்து. இன்னும் பத்து ஆண்டு காலத்திற்காவது சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு நமது மாகாண சர்க்கார் சிபார்சு செய்ய வேண்டுமென்பதையும் பணிதலோடு வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று இந்த நாட்டிலே இருக்கக்கூடாது.

அதோடு தீண்டாமை என்ற தொத்து நோய் இருக்கக்கூடாது. இதையெல்லாம் சீர்படுத்த சட்டங்கள் போடுகிறார்கள். சட்டத்தினால் மட்டும் போதாது. மக்கள் மனது மாற வேண்டும். அதற்காக நம்முடைய ராஜ்யத்திலுள்ள மக்களின் பிரதிநிதிகள் எல்லாரும் தத்தம் தொகுதிகளில் தீண்டாமை ஒழிப்புக்காக பெரிதும் முயற்சி எடுத்தால் தான் அந்தத் தீண்டாமை நோய் அகலும். சட்டம் என்பது அறிவாளிகளுக்கல்ல. பாமர மக்களுக்காக ஒரு பெரிய காட்டு மிருகத்தை சர்க்கஸ்காரன் கொண்டு வந்து அடக்கவேண்டுமானால் ஆயுதத்தைக்காட்டி அடக்கி வசப்படுத்துகிறானே அதே மாதிரி பாமர மக்களுக்கு சட்டத்தைக் காட்டினால்தான் வசப்படுத்தமுடியும். மக்களுக்கு வெறுப்பு ஏற்படுமோ என்று நினைத்து சட்டத்தை நிர்ணயம் செய்யாமல் விட்டால் மக்கள் மன்றத்திற்கு நீதி ஆகாது. அந்த முறையிலே சட்டத்தை பரிபாலனம் செய்து மக்கள் நலனை கருதினால்தான் நம் நாட்டின் புகழ் ஓங்கும். தாழ்த்தப்பட்ட மக்கள் அறியாமையாலும் சாதி இந்துக்கள் அட்டூழியத்தாலும் பயந்து செத்துப் போன பசுக்களை எடுத்து சாப்பிட்டு வருகிறார்கள். அத்தகு கெட்ட நடத்தையை நீக்க சுகாதார விதியில் செவ்வனே நடத்தவேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்று வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். ஏன், இன்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயம் இருக்கவேண்டும் என்ற நோக்கமா ? அல்லது மனிதர்களோடு மனிதர்களாக சம நிலை அடையக்கூடாது என்ற நோக்கமா ? சுகாதார விதிப்படி கிராம அதிகாரிகளும்

போலீஸும் நடவடிக்கை எடுத்து இத்தனை கேஸ் பிடித்திருக்கிறோம் என்று யாராகிலும் கணக்கு கொடுக்க முடியுமா? ஆகவே இம்மாதிரியெல்லாம் இல்லாமல் இந்த சட்டத்தை பிரயோகிக்க வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்.

அடுத்தபடியாக கிராமத்திலுள்ள மக்களான பாமரமக்கள் இந்த கவர்மெண்டினுடைய சட்டம் என்னது என்று அறியாமல் இருக்கிறார்கள். அதை அதிகாரிகள் மக்களுக்கு நல்ல முறையில் எடுத்துச் சொல்லி, பயன்படக் கூடிய அளவில் சட்டத்தைக் திருத்த வேண்டுமென்பது என் நோக்கம். அதோடு ஜாதி ஒழியவேண்டுமாயின் சட்ட கல்லூரிகளிலும் மற்றகல்லூரிகளிலும் நான், நீ என்று போட்டி போட்டுப் படிக்கும் மாணவ மாணவிகள் கலப்பு மணம் செய்து கொண்டால்தான் சர்க்கார் உத்தியோகம் கிடைக்கும் இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லக் கூடிய முறையில் சட்டம் கொண்டு வந்தால் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க அது வசதியாய் இருக்கும், என்று நான் நினைக்கிறேன்.

11-41 a.m. **Sri K. PERIYANNAN** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது மாகாண நிதி அமைச்சர் அவர்கள் 1957–58-ஆவது ஆண்டு நிதி நிலை அறிக்கையை நமது சபை முன் சமர்ப்பித்ததற்கும், அன்னார் அவர்கள் மிக நேர்மையாகவும் நியாயமாகவும் பட்ஜெட்டை தயார் செய்திருப்பதற்காகவும், நான் அதை மனப்பூர்வமாக ஆதரிப்பதோடுகூட எனது தாழ்மையான சில வேண்டுகோள்களை தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

தலைவர் அவர்களே, எங்கள் தொகுதி ஆகிய பெரம்பலூர் வட்டம் மிகவும் பிற்பட்ட ஏழை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும்படியான தொகுதி. ஆங்கு நீர் வசதியோ அல்லது கரண்டு வசதியோ இல்லாமல் பெரும்பாலான இரைப்பு நிலத்தில் விவசாயம் செய்யக்கூடிய ஏழை விவசாயிகள் அல்லல் படுகிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

எங்கள் தொகுதியில் வாழும் ஏழை, தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்களுக்கு குடிசைத் தொழில் என்னும் கைத்தொழிலில் தோல் பதனிடும், அதாவது பாதரக்ஷை, விவசாயத்திற்கு இறைப்பு உபகரணமாக உள்ள தும்பி என்று சொல்லக்கூடியவைகளை தயார் செய்யும் ஹரிஜன, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போதிய கடன் வசதி கொடுத்து அந்த கைத்தொழிலுக்கு நல்ல உதவி ஊட்டுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றேன்.

விதைகளினின்றும் எண்ணெய் எடுப்பதையும், மண்பாண்டங்கள் செய்வதையும் குடிசைத் தொழிலாக ஏற்று அவைகளுக்கு அரசாங்கம் நல்ல ஊக்கம் அளிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

ஹரிஜனங்களுக்கு இன்றைய சர்க்கார் செய்துவரும் பலதரப்பட்ட நன்மைகளை மறுக்கவோ, அல்லது மறைக்கவோ முடியாது என்பதை இச்சபை முன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதோடு மேற்படி சலுகைகளை அதாவது கடன் கொடுக்கும், ஸ்காலர்ஷிப் கொடுக்கும் இடை உத்தியோகஸ்தர்கள் கால தாமதம் செய்வதால், இவைகள் காலா காலத்தில் கிடைக்காமல் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அல்லல் படுகிறார்கள். இம்மாதிரி அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளை அவ்வப்போது உரிய காலத்தில் கொடுத்து ஆதரிக்க வேண்டும் என்றும் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

எங்கள் வட்டத்திலே, மிக தாழ்த்தப்பட்ட, மிக பிற்பட்ட, பெரும்பாலான ஏழை விவசாயிகள் வாழும் இடங்களில் வருஷத்திற்கு நான்கு, ஐந்து தடவை தீ விபத்துக்கள் ஏற்பட்டு, கிராமங்களில் மிக பெரும் நஷ்டமும் உயிர் சேதமும் ஆகிறபடியால் எங்கள் வட்டாரத்திலேயே ஒரு தீ அணைக்கும் படையை நிருவவேண்டுமென்று யோசனை கூறுகிறேன். ஏன் என்றால் இப்போது எங்கள் வட்டத்திலிருந்து 50, 60 மைல் தூரத்திலிருக்கும் திருச்சியில் தலைமை தீ அணைக்கும் படை ஆபீஸ்

இருப்பதால், காலாகாலத்தில் தீ விபத்து ஏற்படும்போது எங்கள் வட்டாரத்திற்கு வந்து உதவி செய்யமுடியவில்லை. பொருள் சேதமும் உயிர் சேதமும் ஏற்பட்ட பிறகே அவர்கள் வருவதால் ஒரு பிரயோஜனமும் இல்லாமல் போய்விடுகிறது.

பெரம்பலூர் வட்டாரத்தில் இருந்து இயங்கிவந்த ஒரு தொழிற்சாலை இப்போது நடைபெறுமல் இருந்து வருகிறது. மேற்படி வட்டாரத்தில் சிமெண்ட் உற்பத்திக்கு வேண்டிய கரும் களிமண்ணும் இதர கல் வகையராக்களும் வெளி இடங்களுக்கு சென்று சிமெண்ட் உற்பத்தி செய்வதை தடுத்து மேற்படி பொருள்கள் கிடைக்கக்கூடிய எங்கள் வட்டாரத்திலேயே சிமெண்ட் உற்பத்திச்சாலையை நிறுவினுல் அங்குள்ள ஏழை மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அந்த வட்டாரத்தில் உள்ள குழுமாத்தூர் கிராமத்தில் சுமார் 7, 8 ஆண்டுகளாக நல்ல மழை பெய்தும் அங்குள்ள வாய்க்கால்களை மராமத்து செய்யாததால், ஏரிக்கு தண்ணீர் இல்லாமல் அங்குள்ள ஏழை விவசாயிகள் பெரும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவ்வாண்டு அவர்கள் காலாகாலத்தில் கிஸ்தி கொடுக்க மருத்ததன் காரணமாக இந்த கிராமத்திலுள்ள விவசாயிகளின் பம்பு செட்டுகளை அவ்வட்டார அதிகாரிகள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இவ்வட்டாரங்களில் உள்ள ஆயக்கட்டுகளையும் ஏரிகளையும், வாய்க்கால்களையும் நல்ல விதத்தில் செப்பனிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னும் ஒன்றை சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன். அதாவது, சென்னையிலிருந்து தெற்குமுகமாகப் போகும் நெடும் சாலையில் பல லாரி விபத்துக்கள் ஏற்பட்டு அந்த வட்டாரத்தில் உள்ள விவசாய மக்களுக்கும், வியாபாரத்தை முன்னிட்டு சந்தைக்கு இரட்டை மாட்டு வண்டியில் செல்லும் வியாபாரிகளுக்கும் மாதத்தில் இரண்டு மூன்று விபத்துக்கள் ஏற்பட்டு பெரும் பொருள்சேதமும் உயிர் சேதமும் ஏற்படுவது பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே போக்கு வரத்து இலாகா மந்திரி அவர்கள் இதை கவனித்து சென்னையிலிருந்து தெற்கு செல்லும் லாரிகள் குறிப்பிட்ட நேரத்திற்கு, அதாவது இரவு பத்து மணிக்குப் பிறகு, காலை நான்கு மணிக்குள் செல்லாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் இம்மாதிரியான விபத்துக்களை தடுக்கமுடியும்.

**Mr. SPEAKER** : இன்னும் 8, 9 அங்கத்தினர்கள் பேச இருப்பதால், இனி பேச இருக்கும் அங்கத்தினர்களை 5 நிமிஷம் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**Sri T. VELUCHAMI** : கனம் சபா நாயகர் அவர்களே, மக்களால் 11-48 a.m.
புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நான் கடந்த இரண்டு தினங்களாக பட்ஜெட்மீது விவாதம் நடந்ததை கவனித்தேன். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பட்ஜெட்டிலே உண்டான சில குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். ஆளும் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் அந்த பேச்சுக்களை மிகவும் வீர தீரத்தோடு முறியடிப்பதில் திறமையையும் சாமர்த்தியத்தையும் காண்பித்தார்கள். தேசத்தின் நலனுக்காக நல்ல திட்டங்களைத் தீட்டுவதற்கு சட்டசபைக்கு இவர்களை அனுப்பிய பெருமக்களைக் கொஞ்சம் மறந்துவிட்டு, இவர்களுடைய பேச்சுக்களை நாம் பார்ப்போமானுல், அவர்களுடைய திறமைக்கும் சாமர்த்தியத்திற்கும் ஒரு நல்ல "செர்டிபிகேட்" கொடுக்காமல் இருக்கமுடியாது. அடுக்கு மொழிகளை மிகத் திறமையாக கையாண்டு பேசுகின்ற திராவிட முன்னேற்றக்கழக நண்பர்களுக்கும் சவால் கொடுக்கும் முறையிலே, ஆளும் கட்சி நண்பர்கள் "அந்த அடுக்கு மொழிகளை உபயோகிப்பதிலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல." என்ற முறையில் பேசித் தீர்த்துக் கட்டி விட்டார்கள்.

நமது கடமைகளைப்பற்றி நினைக்கும்போது, "தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்" என்ற வீர கவி

பாரதியாரின் பாடல்களையெல்லாம் பாடி, நமது மக்களின் மனத்திலே வீரக்கனலை எழுப்பி, சுதந்திரம் பெற்று 10 வருஷங்கள் ஆகிவிட்டபோதிலும், "இன்றைக்கு பாரதியார் குறிப்பிட்ட அந்த பட்டினியைத் தீர்த்திருக்கிறோமா? அல்லது, அந்தப்பட்டினியை நீக்குவதற்கு ஏதாவது திட்டங்களாவது தீட்டியிருக்கிறோமா?" என்றால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். வீரப் பாடல்களைப் பாடிய பாரதியார் நமக்குக் கடமைகளையும் உணர்த்தித் தான் சென்றிருக்கிறார். "கமலவாணி தன்னைக் காத்தல், பிறர் துயர் தீர்த்தல், பிறர்நலன் பேணுதல்" ஆகிய கடமைகளை பாரதியார் உணர்த்தியிருக்கிறார். இந்தப் பத்து ஆண்டுகளுக்குள் பிறர் துயராகிய பட்டினியையாவது நாம் தீர்த்திருக்கிறோமா? இல்லை. இப்போது இந்த ராஜ்ஜியத்தில் நீர்வளமும், தொழில் வளமும் மிகுந்த பிராந்தியங்களைத் தவிர மற்ற பிராந்தியங்களில் மக்கள் பட்டினியால் மிகவும் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பிராந்தியங்களை வளப்படுத்துவதற்குத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். சங்கரன்கோயில், ஊத்துமலை ஆகிய பகுதிகளில் கீரியாற்றுத் திட்டம், பம்பையாற்றுத் திட்டம், கல்லாற்றுத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றலாம். ஆனால் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசாங்கம் மிக மந்தமாக இருக்கிறது. அரசாங்கத்தார், விறுவிறுப்போடும், மக்கள் பட்டினியால் வாடுவதைக் காண பொறுக்காத உணர்ச்சியோடும், ஊக்கத்தோடும் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சித்திருந்தால் இவற்றை நிறைவேற்றியிருக்கலாம். அந்தத் திட்டங்களை நிறைவேற்றாவிட்டாலும் மற்றப் பிராந்தியங்களிலாவது வேறு பல திட்டங்களை நிறைய நிறைவேற்றியிருக்கலாம். தொழிற்சாலைகளை அமைக்கக்கூடிய இடங்களில் நிறையத் தொழிற்சாலைகளை அமைத்திருக்கலாம். ஈரோட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் இல்லை என்றும், அங்கே ஒரு மனிதனுக்கு தினமும் இரண்டு, மூன்று ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்றும் பல நண்பர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட பிராந்தியங்களிலாவது நிறைய தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருந்தால் மற்றப் பிராந்திய மக்களும் பயனடைவார்கள். சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் ஆகிய பிறகும். நமது அண்ணன் தம்பிமார்களைப் பட்டினி அடையும்படி விட்டுவிட்டு, நாம் மட்டும் சாப்பிட்டுவிட்டு சாப்பாட்டிற்கு மேல் எப்பமும் போட்டுவிட்டு, சுகம் வேண்டுமென்று சுகவாச ஸ்தலமாகிய திருக்குற்றாலத்திற்குப் போகும்போது வழியில் திருநெல்வேலி ஜில்லாவில் பட்டினியால் அவதிப்படும் நமது அண்ணன் தம்பிமார்களைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களை தாண்டிச் செல்வோமானால் அது மிகவும் பாவமான காரியம் மாத்திரம் அல்ல; அப்படிச் செய்தால், ரோமாபுரி தீப்பற்றி எரியும்போது அலட்சியமாக வீணை வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனுடன்தான் மக்கள் நம்மை ஒப்பிடுவார்கள்.

விவசாயிகளுக்கு நன்மை செய்யும் விஷயத்தில், அவர்களுக்கு பல இலாகாக்களின் மூலம் கடன்கள் கொடுப்பதைத் தான் முதன்மையான லட்சியமாக நமது அரசாங்கம் கருதி நடவடிக்கை எடுத்துவருகிறது. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து தரும் விவசாயிகள் பலர் திக்கற்றவர்களாக இருக்கிறார்கள். பல விவசாயிகள் சொந்த நிலமில்லாததால் அன்றாடம் அடுத்தவர் கையை எதிர்பார்த்துப் பிழைக்கும் நிலைமையில் தான் இருக்கிறார்கள். அவர்கள் பிரச்னையை முதலில் கவனிக்க வேண்டும். இந்தக் கடன் திட்டத்தின் கீழ் ஜாமீன் கொடுக்கக்கூடிய, நிலமுள்ள விவசாயிக்குத்தான் கடன் கொடுக்கப்படுகிறது. நிலமில்லாத விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு ஒரு யோசனை சொல்கிறேன். நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களின் ஜாபிதா ஒன்றைத் சர்க்கார் தயாரித்து, புறம்போக்கு நிலங்களைத் தரிசாகக்கிடக்கும் நிலங்களையும் பெரும் பணக்காரர்களின் நிலங்களையும் ஆர்ஜிதம் செய்து, அந்த நிலங்களில் சுமார் இரண்டு ஏக்கருக்கு ஒரு கிணறு வீதம் கிணறுகள் வெட்டி, அந்த இரண்டு ஏக்கர் நிலத்தையும் கிணற்றையும் சேர்த்து நிலமில்லாத விவசாயிகளுக்கு அனுபவ பாத்தியதையாகக் கொடுத்து, ஒரு வாழ்க்கை அவர்களுக்கு அளிக்கலாம் என்ற யோசனை எனக்குத் தோன்றுகிறது. இதை சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதோடு பஞ்ச நிவாரண வேலைகள் திருநெல்வேலி ஜில்லாவில் திருப்திகரமாக நடக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் நிவாரணம் அளிக்கப்படவில்லை; சில பகுதிகள் நிவாரண வேலைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. தரகூர், ஆலங்குடி முதலிய இடங்கள் நிவாரணமளிக்கப்படவேண்டிய பிரதேசங்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தார் மெம்பர்களை ஒதுக்கலாம்; நாங்கள் ஒதுங்கிப் பிழைத்துக் கொள்கிறோம். ஆனால் மக்களை ஒதுக்குவது சரியல்ல என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொண்டு, எங்களுக்கும் எங்கள் பகுதி மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. G. PALANISWAMY GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சரவர்கள் இந்த ஆண்டு சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த பட்ஜெட்டில் ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களுக்கும் பல வேலைகளுக்கும் பல கோடி ரூபாய்கள் ஒதுக்கி, மக்கள் நிலை அறிந்த நமது நிதி அமைச்சர் அவர்கள், நல்ல முறையில் பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். இதை நாம் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறோம். 11–57 a.m.

நமது சர்க்காருக்கு எங்கள் தாலூக்காவைப்பற்றி நன்றாகத் தெரியும். எங்கள் தாலூகாவாகிய தாராபுரம் எப்பொழுதுமே பஞ்சப் பிரதேசமாக உள்ள தாலூகாவாகும். சென்ற பத்து ஆண்டுகளாக எங்கள் தாலூகாவில் மழை மிகவும் குறைவாகப் பெய்ததால் அங்கே இப்போது குடிதண்ணீருக்குக்கூடப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அங்கே விவசாயிகள் மிக்வும் கஷ்டப்படுகிறார்கள். கடன்கள் கொடுக்கவேண்டும் என்றும் தக்காவி லோன்களை நிறுத்தி வைக்கவும், நமது அரசாங்கத்தாருக்கு நான் விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறேன். வருஷத்திற்கு வருஷம் மழை குறைந்து வந்ததால், அந்தத் தாலூகா இப்போது பாலைவனம் ஆகக் கூடிய நிலைமையில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அதனால் எங்கள் தாலூகா மக்கள் இப்போது இங்குமங்குமாக வெளி ஜில்லாக்களுக்கும் சென்று பலர் பலவிதமாக மடிந்துவருகிறார்கள். இப்போது எங்கள் தாலூக்காவில் ஜனத்தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அந்த நிலையில் மழை பெய்தாலும்கூட, விவசாயத்திற்கு வேண்டிய ஆட்களும், பொருள்களும் இல்லாததால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், எங்கள் பகுதிக்குப் பயன்படும்படியான பரம்பிக்குளம் திட்டம் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது. அதை அங்கீகரித்து நிறை வேற்ற வேண்டும். தீவிரமாக முயற்சி செய்து அதை இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளாதது குறித்து நாங்கள் எல்லோரும் மிகவும் வருத்தப் படுகிறோம். "நமது பிரதேசத்திற்குப் பரம்பிக்குளத் திட்டம் வந்து சேரும். நாம் வாழலாம்" என்று மக்கள் கொஞ்சம் மன நிம்மதியோடு இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு சர்க்கார் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றி எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில் இருக்கக் கூடிய மக்களுக்கு உடனடியாகக் பரம்பிக்குள திட்டத்தை கொண்டு வரவேண்டும். இல்லையேல் எங்கள் பகுதியில் இன்னும் கொஞ்சம் இருக்கக் கூடிய ஜனத்தொகையும் குறைந்து போய் விடும் என்பதைச் சர்க்காருக்கு தெரியப்படுத்த விரும்புகிறேன்.

கீழ் பவானித் திட்டம் எங்கள் தாலூக்காவின் ஒரு பகுதியில் வந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் எங்கள் தாலூக்கா கடைசி வாய்க்கால் ஆகலால் சிறிது காலம் தண்ணீர் சௌகரியமாகக் கிடைப்பது இல்லை. இந்த நிலையில் இருப்பதனால் அவர்களுடைய பாசன வசதியுள்ள பூமிக்குக் கிணறுகள் வெட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிணறு வட்டிக் கொள்ள அனுமதியும் கொடுக்க வேண்டும். அங்கு பலவிதமான வரிகள் வசூல் செய்யப்படுகிறது. பலதரப்பட்ட வரி விகிதம் இருப்பதனால்

ஒவ்வொரு மகசூலுக்கும் பயிருக்கு ஏற்றபடி வரி விதிப்பதில் பல கஷ்டங்கள் உண்டாகின்றன. பெரிய விவசாயிகளுக்குச் சௌகரியம் இருக்கிறதேயொழிய சாதாரணமாக இருக்கக்கூடிய விவசாயிகள் கிராம அதிகாரிகளுடைய மதிப்பைப் பெற வேண்டும். இல்லையேல் செய்யாத விவசாயம் கூட சாகுபடி கணக்கில் வந்து அல்லல்பட நேரிடும். அந்தப் பாசனத்திட்டம் சிறு விவசாயிகளுக்கு ஒருவிதமான பிரயோசனமும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதை சர்க்காருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வரி வசூல் செய்வதைப் பயிர் கட்டுப்பாடு இல்லாத வகையில் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தாலூக்காவுக்கு மரம் ஏறிகளுக்கு மரம் ஏற அனுமதி கொடுக்கப் படவில்லை. எங்கள் ஜில்லாவில் இதர தாலூக்காக்களுக்கு எல்லாம் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. தாராபுரம் தாலூக்காமாத்திரம் அதிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சரிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறோம். ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளத் திட்டத்தைப் பற்றி நமது நிதி மந்திரி அவர்களுக்கு மாத்திரமல்ல, எல்லாமந்திரிகளுக்கும் நன்றாகத் தெரியும். பெரிய நீர்ப் பாசனத் திட்டம் எதுவும் இல்லையென்று பல அங்கத்தினர்கள் பேசினார்கள். இந்தத் திட்டத்தைப்பற்றி கனம் நிதி மந்திரி அவர்கள் எல்லோருக்கும் விளக்க வேண்டும். அந்தத் திட்டத்தை எடுத்து நடத்தவும் தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

12–02 p.m. **Sri M. ALAGIRISAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, நீதியும், உறுதியும் கொண்ட உள்ளம் படைத்த எங்கள் மதிப்பிற்குரிய நிதி அமைச்சர்அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1957–58-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

இரண்டு மூன்று நாட்களாக நடந்து வரும் விவாதத்திலே, குறிப்பாக எதிர்கட்சியில் இருந்து பேசிய அன்பர்கள் பற்றாக்குறை பட்ஜெட்டை நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள், என்று காரணம் காட்டிக் குறைகூறினார்கள். ஆனால் தொழில் வளர்ச்சியிலே அபிவிருத்தி அடைய வேண்டுமென்று விரும்புகிற ஒரு பின் தங்கிய நாட்டிலே சமர்ப்பிக்கப் படும் பட்ஜெட்டானது கட்டாயம் பற்றாக் குறை பட்ஜெட்டாகத்தான் இருக்கும். டெபிஸிட் பினான்ஸ் என்பது தவிர்க்க முடியாத அவசியம் ஆகிவிடுகிறது. ஆகவே இந்தக்கண்ணோட்டத்துடன் இந்தப் பட்ஜெட்டை பரிசீலனை செய்து பார்க்கக் கூடிய அன்பர்கள் இந்த பட்ஜெட்டிலே பலவித நல்ல அம்சங்கள் இருப்பதைக் காண்பார்கள். இந்த நாட்டினுடைய தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமானால் இந்த நாட்டில் இருக்கக் கூடிய உணவு நிலையானது சரியான நிலையில் இருக்க வேண்டுமென்ற பேருண்மையை மனத்தில் கொண்டுதான் நமது நிதி மந்திரி அவர்கள் இந்த நாட்டின் உணவு நிலையைச் சரியாக வைத்துக் கொள்வதற்காக பலவித நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள பட்ஜெட்டிலே வகை செய்து இருக்கிறார்கள். உணவு நிலைமையைச் சரியாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த நாட்டின் நீர்ப்பாசன வசதி அதிகரிக்க வேண்டும். கடந்த ஐந்தாண்டு காலத்தில் பல நீர்ப்பாசனத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். பவானி போன்ற பெரிய அணைத் தேக்கங்களைக் குறுகிய காலத்தில் நமது சர்க்கார் நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள் என்பதை எதிர்கட்சிக்காரர்கள் மறைக்கக் கூடாது மறைக்கவும் முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதைத் தவிர இன்னும் பல வாய்க்கால்களைச் சரிப்படுத்த வரவு செலவுக் கணக்கில் வகை செய்யப் பட்டிருக்கிறது. இருப்பினும் இன்னும் சில காரியங்களைச் செய்யலாம் என்று நான் சொல்ல விரும்புகிறேன். எதிர்கட்சிக்காரர்களைப் போல உண்மையை மறந்து விட்டு, சர்க்கார் செய்திருக்கக் கூடிய பலநல்ல காரியங்களைப் பாராட்டிப் பேசாமல் இதைச் செய்யவில்லை, அதைச் செய்ய வில்லை என்கிற முறையில் நான் குறிப்பிட வில்லை. செய்திருப்பதைப்





பாராட்டி, இன்னும் மக்கள் என்ன என்ன செய்ய வேண்டுமென்பது சொல்கிறார்கள் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல பிரதிநிதிகளாகிய நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் கடமையை நிறைவேற்ற சில விஷயங்களை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர நான் ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக பெரியகுளம் நகரத்திற்குப் பக்கத்தில் உள்ள சோற்றுப் பாறை, குப்பான் பாறை ஆகிய இடங்களில் அணைகட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரியகுளத்திற்கு அருகிலுள்ள தேவதானப்பட்டிக்குச் சமீபத்தில் மஞ்சள் ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் கட்ட வாய்ப்பு இருக்கிறது. இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் இருக்கக்கூடிய பகுதியில்தான் இன்று பிளாண்டேஷன் இன்கம்டாக்ஸினால் பாதிக்கப்படுகிற நபர்கள் சிலர் இருக்கிறார்கள். வரி உயர்வு செய்ததே தப்பு என்று சொல்வதற்காக நான் வரவில்லை. அறுபது ஏக்கராவுக்கு மேல் சொந்தமாக உடைய தோட்டக்காரர்களுக்கு வரி விதிப்பதில் எவ்வித மாறுதலும் இல்லை. ஏராளமான வருவாய் வரக்கூடிய தோட்டக்காரர்களுக்கு தான் இந்த வரியினால் பாதகம் ஏற்பட்டுள்ளது. சிறு நிலத் தோட்டக்காரர்களுடைய நிலைமையைக் கவனிக்கவேண்டுமென்று மாத்திரம் சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. R. NALLASIVAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இவ்வாண்டு 12-07 p.m
சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட்டுக்கு அமோகமான வரவேற்பும், பாராட்டும், புகழும் குவிந்துகொண்டே இருக்கின்றன. சென்ற ஐந்து வருஷ காலத்தில் இவ்வளவு பாராட்டுதல் வந்தது கிடையாது. ஏதோ நாட்டிலே பெரிய மாறுதலும், சுபிட்சமும் ஏற்பட்டுவிட்டது போன்ற உணர்ச்சியை இந்தப் பாராட்டு உரையும், புகழுரையும் தோன்ற வைக்கிறது. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் அதிகமான எண்ணிக்கையில் வந்துவிட்டதன் காரணமாக நாட்டிலே பெரிய மாறுதல், சுபிட்சம் ஏற்பட்டு விட்டதாக எண்ணி அவர்கள் பாராட்டி இருந்தால், புகழ்ந்திருந்தால் அது சரியாக ஆகாது. பாராட்டுதலுக்கும் ஓர் அளவு உண்டு. அதிகமாகப் புகழ்ந்தால் அதன் விளைவு வேறுவிதமாகப் போய்விடும். குறிப்பாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே இருக்கக் கூடிய காங்கிரஸ் அங்கத்தினர்களும், அமைச்சர்களும் நமது ராஜ்யத்தில் இருக்கக் கூடிய நிர்வாக ஊழல், லஞ்ச ஊழல் எல்லாமே ஒழிந்துவிட்டதைப் போன்று பெருத்த ஆரவாரத்துடன் பேசினார்கள். எங்கே லஞ்சம் இல்லாமல் இருக்கிறது! ஏதாவது ஒரு இலாகாவைக் குறிப்பிட்டு இங்கே லஞ்சம் இல்லை என்று சொல்லட்டும். சர்க்கார் காரியாலயம் ஒவ்வொன்றிலும் நாளுக்கு நாள் லஞ்சம் பெருகிக் கொண்டு வருவதைத்தான் பார்க்கிறோம். குறைந்து கொண்டுவரும் காட்சியை எங்குமே பார்க்கவில்லை. ஜனங்களுடைய நிலை, அவர்களுடைய வாழ்க்கைத்தரம், அவர்களுடைய பொருளாதாரம் இவற்றைக்கொண்டு பட்ஜெட்டைப் பார்க்கவேண்டுமேதவிர நாங்கள் ஏதோ அதிகமாக ஜயித்து வந்துவிட்டோம் என்று ஒரேயடியாகப் புகழ்வதில் பயன் இல்லை. அது இன்றைக்கு நாம் இருக்கக் கூடிய உண்மையான நிலை என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு முட்டுக் கட்டையாகத்தான் இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி ஒருபுறம் பேசுகின்றார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தையே ஒழித்துவிட்டதாக மறுபுறம் பேசுகின்றார்கள். சோஷலிச அடிப்படையில் நிர்வாகத்தை நடத்துகிறோம் என்று சொல்கிறார்களே தவிர உண்மையிலேயே சோஷலிஸ அடிப்படையில் நிர்வாகத்தை அமைத்துக் கொண்டிருந்தால் கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் வேலை -இல்லாத் திண்டாட்டமே இல்லாதவாறு அமைத்திருக்க முடியும். அதுமாத்திரம் அல்ல. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பாக

இருந்தே நான் ஒரு லஞ்சக் குற்றச்சாட்டை சுமத்தி வருகிறேன். கீழ் பவானி திட்டத்தில் ஒன்பது கோடி ரூபாய் செலவு செய்தார்கள். அதில் கோடிக்கணக்கான ரூபாய் லஞ்ச ஊழல் நடந்திருக்கிறது. அதைப்பற்றி நான் குறிப்பிடும்போது ஏதோ ஒன்றிரண்டு லட்சம் லஞ்சக் கணக்கில் போயிருக்கும் என்று மாத்திரம் ஒப்புக்கொண்டார்கள். நேற்று ஏதோ ஒரு சின்ன விஷயத்தைப் பெரிது படுத்தி "அதை நிரூபிக்க வேண்டும். அதற்குப் போதுமான சான்றுகள் காட்டவேண்டும். அவசியமானால் நான் ஒரு கமிட்டியைப் போட்டு அதை விசாரணை செய்கிறேன்", என்பதாக நிதி மந்திரி அவர்கள் பேசினார்கள். ஆனால் ஒன்பது கோடி ரூபாய் அளவில் செய்யப்பட்ட பெரிய ஊழலைப்பற்றி நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். நான் சொல்கின்ற குற்றச்சாட்டை விசாரிக்க ஒரு கமிட்டியைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இன்று வரையில் அதற்கு ஒரு கமிட்டியைப் போட்டு நேர்மையான விசாரணை நடைபெறுவதற்கான வசதியைச் சர்க்கார் செய்யவில்லை. இப்போது வேண்டுமானாலும் ஒரு கமிட்டியைப் போடட்டும். கோடிக்கணககான ரூபாய் லஞ்சமாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அவர்கள் பேசுவதைப் பார்த்தால், இந்த மாகாணத்தில் லஞ்சம் கிடையாது, ஊழல் கிடையாது ; காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு சில ஸ்தாபனங்கள் அதிகம் கிடைத்தவுடன் சமதர்ம ராஜ்யம் வந்து விட்டது மாதிரி பேசுகிறார்கள். இப்பொழுது சோஷியலிஸத்தைப் பற்றி பேசும் இந்த அரசாங்கம் வருமான அடிப்படையில் இருக்கிற ஏற்றத்தாழ்வை எந்த அளவிற்கு ஒழித்துக் கட்டியிருக்கிறது என்று கேட்கிறேன். சம்பளச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு சிறிய அளவில். அந்த உயர்வும், இந்த விலைவாசி ஏற்றம் காரணமாக பஞ்சாய் பறந்து விடுகிறது. உணவுப் பொருள் விலை உயர்விற்குக் காரணமாய் சொல்லப்படுகிறது, வியாபாரிகள் பதுக்கி வைத்திருக்கிறார்கள், வயலில் தேங்கி விட்டது என்றெல்லாம் மத்திய சர்க்கார் அதிகம் நோட்டு அச்சு அடிக்கிற காரணத்தினால்தான் விலைவாசிகள் ஏறிக்கொண்டு போகிறது. ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் நம் நாட்டில் லஞ்சம், ஊழல் கிடையாது ; நாட்டில் சமதர்மம் வந்து விட்டது என்றெல்லாம் கூறுவது தவறு. ஆகவே இதைக் கொண்டு வருவதற்கு இந்த சர்க்கார் தயாரில்லை என்றால் அதற்கு மக்களைத் தயார் செய்வது ஒன்றுதான் வழி என்று சொல்லிக் கொண்டு எனது பேச்சைக் முடித்துக் கொள்கிறேன்.

* **Sri V. ARUNACHALA THEVAR** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது சென்னை ராஜ்ய நிதியமைச்சர் அவர்கள் 1957-58-ம் வருட வரவு செலவு கணக்குகளை சமர்பித்து வேறு புதிய வரிகளை விதிக்காமல் உணவுப் பொருள்களின் மீதுள்ள விற்பனை வரி குறைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். நிர்வாகத்துறையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை அலசிப்பார்த்து குறைப்பதில் நல்ல ஒரு கணிசமான தொகை மிச்சப்படும் என்று எதிர்பார்க்கலாம். சில மாதங்களுக்கு முனனால் புதுக்கோட்டையில் கிராம உத்தியோகஸ்தர்களின் மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. ரெவன்யூ மந்திரியவர்கள் வந்திருந்தபோது அவர்களுக்கு எந்தவிதத்திலும் சலுகைகள் அளிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த மாதிரி கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அதாவது வெட்டுமை உட்பட சலுகைகள் கொடுத்திருப்பதற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். அதோடு புதுக்கோட்டை ராஜ்யம் 1947-ல் நம் சென்னை மாகாணத்தோடு இணைக்கப்பட்டது. அதை சென்னையுடன் இணைத்த காலந்தொட்டு பெரிய மகாநாடுகள் நடத்தி புதுக்கோட்டையை ஜில்லாவாக்க வேண்டுமென்றும் காவேரித் தண்ணீரைக் கொடுத்து உதவ வேண்டுமென்றும் பன்முறை கேட்டு இருக்கிறோம். அப்பொழுது அங்கு விஜயம் செய்த முதல் அமைச்சர் அவர்களும், கனம் பக்தவத்சலம் அவர்களும் காவேரியிலிருந்து தண்ணிர் வருவதற்கு லெவல் இல்லை என்று சொன்னார்கள். அச்சமயம் நாங்கள் எடுத்துச் சொன்னதாவது 1920–22ல் புதுக்கோட்டையை காலஞ்சென்ற மார்த்தண்ட வைரவ தொண்டமான் அவர்கள் ஆட்சிபுரிந்தகாலத்தில் மேற்படியார் சகோதரர் காலஞ்சென்ற விஜய ரெகுநாத





துரைராஜா அவர்கள் ரீஜண்டாக ஆட்சிபுரிந்து வந்தார்கள். அப்போது இந்தியாவை ஆட்சிபுரிந்த பிரிட்டிஷார புதுக்கோட்டை மார்க்கமாக காவேரி தண்ணீரை பட்டுக்கோட்டைத் தாலுக்காவுக்கு கொண்டுபோக ரீஜண்டு அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் ரீஜண்டு அவர்கள் நிர்வாகப் பொருப்பும் ஷை தண்ணீருக்கு வரி வசூலிக்கும் பொருப்பும் புதுக்கோட்டை சமஸ்தானச் சர்க்காரிடம் ஒப்படைத்தால்தான் புதுக்கோட்டை வழியாகத் தண்ணீர் கொண்டுபோக சம்மதிக்க முடியும் என்று சொன்னதின் பேரில் பிரிடிஷார் தஞ்சை டவுனிலிருந்து பட்டுக்கோட்டைத் தாலூக்காவுக்கு ஒரு கால்வாயைப் மாற்றி வெட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்கள் என்றும் அந்த சமயம் இன்ஜினீருக இருந்த புதுக்கோட்டை ரிட்டயர்ட் இஞ்சினீயர் கனம் ரெங்கசாமி அய்யருக்கு எல்லா விபரங்களும் தெரியும் என்றும் ஷை யாரைக் கொண்டு எந்த மார்க்கமாக தண்ணீர் வரவழித்திருக்கிறதென்பதை கனம் மந்திரி பக்தவச்சலம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி கேட்டதின் பேரில் அவர்கள் சொன்னதாவது, திருச்சி ஜில்லா தென்புரம் வெள்ளானகுழந்தூர் மார்க்கமாக மாயனூர் கட்டளைக்கால்வாய் பாய்வதற்கு லெவல் எடுக்கப்பட்டதென்றாலும் வெள்ளான் குளத்தூரிலிருந்து விராலிமலை வடக்கில் வந்து பில்லோரேடை மார்க்கமாக அவையாபாடி, நீர்ப்பழனி, நல்லூர், கீரனூர் வரை வந்து குளத்தூர் வழியாக நார்தாமலை கரிகழிகளில் வந்து திருவேங்கை வாசல் வழியாக புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கே பெரிய கண்மாயாக உள்ள கவிநாட்டுக் குழத்தில் தண்ணீர் நிரம்பியபின் அதிலிருந்து அறந்தாங்கி வரையில் போவதற்கு லெவல் இருக்கிறதா வென்று எடுத்துச் சொன்னார்கள். அத்தோடு கூட காலஞ்சென்ற அட்மின்ஸ்டிரேடர் சர் அலக்ஸாணடர் டாட்டன்ஹாம் அவர்கள் இந்த ஆற்றுப் பிரச்சனை சம்மந்தமாக மத்திய சர்க்காரையும், மாகாண சர்க்காரையும், மைசூர் சர்க்காரையும் அணுகி பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். ஆனதால் புதுக்கோட்டைக்குத் தண்ணீர் வருவதற்கு லெவல்பற்றிய யோசனை வேண்டியதில்லை என்று சொன்னதின் பேரில் ஆற்றில் தண்ணிர் வருவது பாயக்கூடிய இடங்களுக்கு போதாமலிருக்கிறதென்று கனம் மந்திரியவர்கள் சொன்னார்கள்.

இப்பொழுது நான் கேட்கக் கூடியது என்னவென்றால் புதுக்கோட்டை பஞ்சப் பிரதேசங்களான மூன்று தாலூகாக்களைச் சேர்ந்ததாகும்.. ஆனி மாதம் விதை போடக் கூடிய தருவாயில் மாத்திரம் எங்களுக்கு தண்ணீர் கிடைத்தால் போதும். புரட்டாசி ஐப்பசி மாதங்களில் பெய்யும் மழையை நாங்கள் அப்பொழுது பயன்படுத்திக் கொள்கிறோம். ஆனி மாதம் விதை போடுகிற காலத்தில் மழை இல்லாத காரணத்தால் நாற்றுக்கள் கொண்டு வர திருச்சியையும், தஞ்சையும்தான் நாடவேண்டியிருக்கிறது. நமது கனம் காமராஜர் அவர்கள் முதல் அமைச்சர் பதவியேற்ற புதுக்கோட்டையில் விஜயம் செய்தபோது ஒரு மாபெரும் கூட்டத்தில் புதுக்கோட்டைக்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தை இன்ஜினீயர்களைக் கொண்டு பரிசீலிக்கப்படுமென்றும் சொன்னார்கள். நேரமில்லாததால் நான் முடித்து விடுகிறேன். புதுக்கோட்டைக்கு காவேரித் தண்ணீர் வர வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தப்படியாக, புதுக்கோட்டையை ஒரு ஜில்லாவாக வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். 1947-ல் புதுக்கோட்டை சென்னையில் இணைந்தது முதல்கொண்டு நாங்கள் ஜில்லாவாக்கவேண்டுமென்று கேட்டுவருகிறோம். கன்னியாகுமரி இப்பொழுது நமது ராஜ்யத்தோடு சேர்ந்துவிட்டது. அது திருவாங்கூர்–கொச்சி ராஜ்யத்திலிருந்து, அதை ஒருஜில்லாவாக ஏற்படுத்தி இருப்பதை நான் வரவேற்கிறேன். 1948-ல் இணைந்த புதுக்கோட்டையையும், பக்கத்திலுள்ள சில தாலுக்காக்களைச் சேர்த்து அதை ஒரு ஜில்லாவாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய ஜில்லாக்களாக ஏற்படுத்தப் போகும் திட்டத்திலாவது அதை அவசியம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தப்படியாக இலங்கையில் இருக்கும் ஹை கமிஷனர் ஆபீஸைப் பற்றி ஒரு வார்த்தை கூற ஆசைப்படுகிறேன். இருக்கும் ஹைகமிஷனர் உள்பட அங்கு எல்லோரும் வட இந்தியர்களாகவே இருக்கிறார்கள். அங்கு இருக்கும்

[Sri V. Arunachala Thevar] [4th July 1957

தமிழர்கள் யாரேனும் தமிழ் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பாஸ்போர்ட், விஸா முதலியவைகள் வாங்கப்போகும் பதுளே, பண்டாரவளே ஜில்லாக்களில் உள்ள ஜனங்கள் இரண்டு மூன்று நாள் தங்கியும் ஷெயார்கள் சொல்லும் பாஷைகள் விளங்காமலும் செலவுக்குப் பணம் இல்லாமலும் கஷ்டப்படுகிறார்கள்.

**Sri M. A. B. ARUMUGASWAMY**: இன்று 1957–58ம் வருடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதி அமைச்சர் அவர்களுடைய வரவு செலவு திட்டத்தை ஆதரிக்கும் முறையில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக மலே விவசாயிகளுக்கு ஏற்கனவே சென்னே அரசாங்கத்தால் வரி வருமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்த வருடத்திய பட்ஜெட்டில் அதிக வரிவிதிக்கப்பட்டிருப்பினும் அது 60 எக்கர்களுக்கு மேல் உள்ள விவசாயிகளுக்குத்தான். 15 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கும் மலே விவசாயிகள் குறிப்பிட்ட அளவு ஏக்கருக்கு இவ்வளவு என்று வரி செலுத்தி வருகிறார்கள். இந்த வரி வசூலிக்கும் அதிகாரிகள் அவர்களுக்கு மிகவும் தொந்தரவு கொடுத்துவருவதை நாங்கள் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். 15 ஏக்கருக்கு மேல் 60 ஏக்கருக்கு கீழ் உள்ள விவசாயிகள் குறிப்பிட்ட காலத்தில் அந்தக் குறிப்பை அனுப்பத் தவறினால் அவர்களே கண்டிப்பாக கணக்கு கொடுக்கும்படி அதிகாரிகள் வற்புறுத்துவதை மாற்றி அவர்களுக்கு ஓர் அளவு ஆறுதல் அளிக்கும்படி கேட்டுக் கொள்ககிறேன. மறுபடியும் நோட்டீஸ் கொடுத்து திரும்பவும் குறிப்பை அனுப்புவதற்கு சாவகாசம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் காம்பவுண்ட் கட்டும் தொகையைக் கட்டத் தவறினால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அதையும் மாற்றி அதற்குள்ள வட்டியை மாத்திரம் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக மலேயில் வாழும் விவசாயிகளுக்கு அங்கிருந்து வரிகளே கொண்டு வந்து கட்டுவதற்கு எந்தவிதமான வசதிகளும் இன்று அவர்களுக்கு இல்லே. அதற்காக ஆடலூர் என்ற இடத்திலிருந்து பாச்சலூர் வரைக்கும் போக்குவரத்துக்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று மராமத்து மந்திரி அவர்களே கேட்டுக்கொள்கிறேன். மலேயிலுள்ள விளே பொருள்களே நாட்டுப்புறங்களுக்கு கொண்டுவந்து விற்பனே செய்வதற்கு இன்று அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. அய்யம்பாளேயம் முதல் தாண்டிகுடி வரையிலும் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று போக்குவரத்து மந்திரி அவர்களே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) அதிலும் குறிப்பாக என்னுடைய பகுதியில் புதிதாக சேர்க்கப்பட்ட ஐந்து கிராமங்களான அழகுபட்டி, சுள்ளெறும்பு, குருநாயக்கனூர், புதுக்கோட்டை, சில்வார்பேட்டை என்ற இவ்விடங்கள் வெறும் வரண்ட பிரதேசங்களாக இருக்கிறது. இவ்விடங்களில் தீப்பெட்டி தொழிற்சாலே ஒன்று அமைத்து தந்தால் அங்குள்ள ஏழை மக்களுக்கு வசதியாக இருக்கும். மேலும் அங்குள்ள விவசாயிகளுக்கு தொழில் நடத்துவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்குள்ள கிராமங்களுக்கு ரோடு வசதியில்லாமலே இருக்கிறது. இந்தமாதிரியுள்ள இடங்களுக்கு ரோடு இல்லே என்று மந்திரி அவர்களிடமும் மற்ற அதிகாரிகளிடமும் எடுத்துக் கூறப்பட்டது. வேண்டியது செய்யலாம் என்று சொன்னார்கள். ஆகவே இந்தமாதிரி ரோடு இல்லாத இடங்களுக்கு உடனேயே ரோடு போட்டு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக மின்சார விஷயமாக இன்று விவசாயிகள் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு குதிரை வேகம் கணக்கில் மினிமம் சார்ஜ் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த முறையினால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார்கள். ஆகவே மினிமம் சார்ஜ் என்றிருப்பதை நீக்கிவிட்டு உபயோகப்படுத்துகிற அளவுக்கு மாத்திரம் கட்டணம் கொடுக்கவேண்டும் என்ற முறை கொண்டுவரவேண்டும், இதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



4th July 1957]

**(Mr. Speaker sounded the gong and the hon. Member resumed his seat).**

**Sri M. ANANDAN** : சபாநாயகர் அவர்களே, மக்களே பக்குவமாக கவனிக்கும் நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் பட்ஜெட்டை பார்க்கும்போது ஒரு பக்கம் சந்தோஷமும் மற்றொரு பக்க வேதனேயும் இருக்கிறது. அதாவது ஹரிஜனங்களுக்கு 194 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஹரிஜனங்களுக்கு கொடுக்கப்படும் பணம் சரியாக அவர்களுக்கு கிடைப்பதில்லே. இந்த பணமும் உண்மையாகவே அவர்களுக்கு கிடைக்காதோ என்றுதான் நினேக்கவேண்டியிருக்கிறது. இரண்டு பூனேகள் ஆப்பக்கடையில் ஆப்பம் வாங்கிவிட்டு அதை பங்கிடுவதற்காக ஒரு குரங்கினிடம் கொடுத்ததாம். அந்த குரங்கு ஒரு தராசில் ஒரு தட்டில் ஒரு பெரிய துண்டையும் இன்னொரு தட்டில் சிறிய துண்டையும் வைத்து பார்த்துவிட்டு ஒரு பக்கம் கூடுதலாக இருக்கிறதே என்று ஒரு துண்டை எடுத்து கடித்ததாம். பின்னாலும் எடை சரியாக இல்லாததினால் அடுத்தபக்கத்திலுள்ள பலகாரத்தை எடுத்து கடித்ததாம். இப்படியாக கடைசி வரை இந்த பூனேகளுக்கு ஒன்றும் கொடுக்காமல் இடையில் வந்த குரங்கு அவ்வளவையும் தின்றுவிட்டதாம். இதுபோல ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த 194 லட்சம் ரூபாயும் ஹரிஜனங்களுக்கு கிடைக்குமா என்பது சந்தேகம்தான். சாதாரணமாக அங்குள்ள ஹரிஜன மக்களே நன்றாக கவனிக்கவில்லே. கழிந்த 30–7–1956ல் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் சேர்ந்து "தாழ்த்தப்பட்டோர் லீக் கமிட்டி" என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தி அதன் மூலம் மந்திரிகளே அங்கு வரவழைத்து பலவிதமான குறைகளுக்கு மகஜர்களே கொடுத்தோம். அங்குள்ள குறைபாடுகளே எல்லாம் சொல்லி அவர்களிடம் விண்ணப்பித்துக்கொண்டோம். அதற்கு அது முதற்கொண்டு இன்றுவரையிலும் ஹரிஜனங்கள் கொடுத்த அந்த மகஜர்களுக்கு யாதொருவிதமான பதிலும் கொடுக்கப்படவில்லே. அதற்கான நடவடிக்கை ஒன்றும் எடுத்ததாக தெரியவில்லே : இதைதவிர இந்த தொகுதியிலுள்ள பணக்காரர்களும், மிராசுதார்களும் அங்குள்ள ஏழைகளே அடிமைகளே போல் நடத்தி வருகிறார்கள். அவர்களின் கீழ் அவல நிலேமையில் இந்த ஏழைகள் வேலே செய்து வருகிறார்கள். வேடன் விரித்த வலேயில் அகப்பட்டிருக்கும் கிளிகளேபோல் இன்று அந்த ஏழைகள் தவித்து கொண்டிருக்கிறார்கள். அவர்களே வலேயில் அகப்பட்டிருக்கும் கிளிகளே விடுவிப்பதுபோல் இந்த ஏழைகளே காப்பாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

***Dr. E. P. MATHURAM** : சபை தலேவர் அவர்களே, நிதிநிலே அறிக்கையைப்பற்றி பேச வாய்ப்பு அளித்ததற்கு முதலாவது நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முதல் முதலாக இதை நல்ல தமிழில் கைவேலேயால் செய்யப்பட்ட காகிதத்தில் அச்சடித்து கொடுத்திருப்பது மிகவும் மகிழத்தக்கதாகும். அதுவும் நம்முடைய தமிழ் நாட்டில் தமிழிலேயே எல்லாம் இருக்க வேண்டும் என்ற அடிக்கோளேக் கொண்டு இவ்விதமாக ஆரம்பித்திருப்பதற்கு நிதி அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சமர்ப்பித்திருக்கும், பட்ஜெட்டைக் குறிக்கும்போது அது நன்றாகத்தான் இருக்கிறது. அதில் ஒவ்வொரு இடங்களிலும் நிதியை திரட்டலாம், எதிர்பார்க்கலாம், எதிர்பார்க்கிறோம் என்று பலவிதமான வார்த்தைகளே வருகிறது. எதிர்பார்க்கப்படுகிறது, எதிர்பார்க்கலாம் என்கிற காரியங்கள் எவ்வளவு காலத்திற்குபின் வரும் என்று யாராலும் நிர்ணயிக்க முடியாது. இதில் அமைச்சர் அவர்கள் சொல்லுவது எல்லாம் உண்மை. இவையெல்லாம் ஏற்படும் என்று எச்சரிக்கையும் செய்து இருக்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் பார்த்து இவ்வளவுதான் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கமுடியாது. நமது நகரசபைகள் இந்த சர்க்காரிடத்தில் எப்படி பிச்சை கேட்கிறதோ அதே மாதிரி இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடம் கேட்கவேண்டும். மத்திய சர்க்கார் அந்நிய நாட்டிடம் கேட்கவேண்டும். இந்தமாதிரி நிலேமையில்தான் காரியம்

மேற்கொண்டு மேற்கொண்டு போய்கொண்டிக்கிறதே ஒழிய வேறு ஒன்றும் காணப்படவில்லை. இவ்வளவுதான் கிடைக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. இதில் எல்லோருக்கும் ஒரே ஐயப்பாடு. ஏனென்றால் இதன்மூலம் இன்னின்ன காரியங்கள் இவ்வளவு தூரம் செய்வோம் என்று அல்லது செய்ய மாட்டோம் என்பதை இப்போது நம்மால் சொல்ல முடியாது. இதை கால நடைமுறையில்தான் சொல்லமுடியும். அனேக காரியங்கள் கொண்டு வந்திருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு நாம் கடமைப்பட்டவர்களாக இருப்போம் : அதோடு நம்மீது மத்திய சர்க்காரால் போடப்பட்டிருக்கும் வரிகளினால் ஏற்பட்டிருக்கும் வருத்தத்தை ஓரளவுக்கு சமாதானப்படுத்துவதற்காக இங்கு ஒன்றிரண்டு வரிகளை மட்டும் குறிப்பிட்டு நிறுத்திவிட்டார்கள். இந்த வரிகளினால் மக்கள் அவ்வளவாக பாதிக்கப்படவில்லை. குறிப்பாக உணவுப்பொருள்களில் ஓரளவுக்கு வரியை குறைத்திருப்பது நல்லது. இந்தக் கருணைக்கிழங்குக்கு (yam) மாத்திரம் விற்பனை வரி விதித்திருக்கிறார்கள். தயவுசெய்து அந்த வரியை எடுத்துவிடும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதுமட்டும் என்ன பாபம் செய்ததோ தெரியவில்லை. கருணைக்கிழங்குக்கு கருணை காட்டும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவாசாய விஷயமாக சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்ற ஆண்டு 38 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன. இந்த ஆண்டில் 136 புதிய விதைப் பண்ணைகள் தொடங்குவதற்காக 49 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 55 லட்சம் ஏகராவில் 31 லட்சம் டன் அரிசி கிடைத்தும்கூட, பர்மாவிலிருந்து 5 லட்சம் டன், அமெரிக்காவிலிருந்து 2 லட்சம் டன் தருவிக்கப்பட்டும்கூட, உணவு நெருக்கடி இன்னும் இருந்துகொண்டு தான் இருக்கிறது. அது ஏன் ? காரணம் என்ன ? உற்பத்தி அதிகமாக இருக்கவேண்டுமானால் அதற்கு வழி என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்குக் காரணம் கணக்குகள் சரியான முறையில் எடுக்கப்படாததா, அல்லது அயல் நாட்டிற்கு இந்த நாட்டைவிட்டு பொருள்கள் செல்கின்றனவா ? குறிப்பாக ஒரு சந்தர்ப்பத்தில் கேள்விப்பட்டதைச் சொல்லுகிறேன். ஆனால் நிச்சயமாக அல்ல. பாகிஸ்தானுக்கு நம்முடைய தென் பகுதி அரிசி போவதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையானால் அதை சரிவர கவனித்து தடுக்கும்படி சர்க்காரை அன்பாகக்கேட்டுக்கொள்கிறேன். ஒரு " ஸோனல் சிஸ்டம் " உண்டாக்கப்போவதாக அறிகிறோம். அது வரவேற்கத் தக்கது தான். நம்முடைய ராஜ்யத்தில் விநியோகிக்கப்பட்டது போக மிச்சம் மீதி உள்ள பொருள் மட்டும் வெளியே போகுமாறு வழிவகைகள் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உணவுப்பொருள்கள் விஷயத்தில் எந்தக் காலத்திலும் கண்ட்ரோல் கொண்டுவராமல் இருக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல ஆசைப்படுகிறேன். அரிசி சம்பந்தப்பட்டவரையில் மில்காரர்கள் கொஞ்சம் நல்ல மனது உடையவர்களாக இல்லை என்று நான் சொல்லவேண்டியிருக்கிறது. நெல்லை அப்படியே மூட்டையோடு கொண்டு வந்து சாக்கின்மேலே கட்டப்பட்டிருக்கிற கயிரை அவிழ்த்துவிட்டு அப்படியே தூசி தும்பட்டையுடன் "ஸ்டீமில் " போட்டு வேகவைக்கிறார்கள். பழையபடி தண்ணீரில் போட்டு மறுபடியும் இரண்டாம் முறையும் 'ஸ்டீமில்' வைக்கிறார்கள். இம்மாதிரி செய்து பெறுக (ஸ்வெல்) வைக்கிறார்கள். பல இடங்களில் இம்மாதிரி நடக்கிறது. இதை அரசாங்கம் தயவு செய்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 100 மூட்டை வேக வைத்தால் கடைசியில் கணக்குப்பார்க்கும்பொழுது 108 மூட்டை கிடைக்கிறது. இந்த விதமாக வேக வைப்பதால் சர்க்கார் பாகம் போக மீதியை உபரியாக இருக்கும் 8 மூட்டையை மில்காரர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு மூட்டை நெல் வேக வைத்தால் சரிபாதி அரிசி கிடைக்கும். 100 மூட்டை நெல்லுக்கு 50 மூட்டை அரிசி கிடைப்பதற்குப் பதிலாக 58 மூட்டை அரிசி கிடைக்கிறது. எட்டு மூட்டையை ஒதுக்கி வைத்து தனிப்பட்ட முறையில் மூட்டை ஒன்று 35 ரூபாய் வீதம் விற்றுவிடுகிறார்கள். இதை சரியாக சீர்தூக்கிப் பார்த்து தகுந்த ஆட்களை வைத்து இவ்விதம்



தவறு செய்கின்றவர்களை கண்டிக்கவேண்டும். இம்மாதிரி அரிசி மஞ்சள் நிறமாகப் போய் விடுவதால் மக்கள் வாயில் போடுவதற்குப் பிரியப்படாமல் இருப்பதால், உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறது. இம்மாதிரி அரிசி உள்நாட்டிலிருந்து வெளி நாட்டுக்குப் போகவேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. தயவு செய்து இதை கவனிக்கும்படியாக அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பிர்காவில் கட்டளை வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால் என்ற இரண்டு வாய்க்கால் திட்டங்கள் இருக்கின்றன. பல வருஷங்களாக அவைகள் நின்று போயிருக்கின்றன. அவைகளை சீக்கிரம் அமுல் செய்தால் பல ஆயிரம் ஏகராக்களுக்கு பிரயோசனப்படும். உணவு பற்றுக்குறையும் ஒரு அளவுக்குத் தீரும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நமது தென் பகுதி பசுக்களுக்கு 3, 4 பவுண்டு பால் கொடுக்கும் சக்தி தான் இருக்கிறது. பஞ்சாப் மாடுகளுக்கு 10 பவுண்டு பால் கொடுக்கக்கூடிய சக்தி இருக்கிறது. அம்மாதிரி தரமுள்ள மாடுகளை விருத்தி செய்யவேண்டியது அவசியம். திருச்சி, கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் பால் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டும். மக்கள் அதிக பால் உண்ணுவதால் தேக ஆரோக்கியம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து 30,000 கோழிக் குஞ்சுகள் தருவிக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். சென்னை ராஜ்யத்திற்கு 1,000 கோழிக் குஞ்சுகள் கிடைத்தன. அவைகளின் நிலைமை என்ன ஆயிற்று, அவைகள் பிரயோசனப்பட்டு விருத்தியாகுமா என்பதைப் பற்றி பட்ஜெட் உரையில் ஒன்றும் விளக்கப்படவில்லை. இதை நன்ருக கவனித்து கோழி வர்க்கத்தையும் அதிகமாக உற்பத்தி செய்யும்படியாக சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாண்டு 12,000 அம்பர் சர்க்காக்களை இயக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், 125 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள கதர் உற்பத்தியாகலாம் என்றும் பட்ஜெட் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு அம்பர் சர்க்கா 20 அல்லது 15 நெசவாளர்களுடைய வேலையைச் செய்துவிடுமென்று தெரியவருகிறது. அப்படி கைத்தறியாளர்கள் இதனால் பாதிக்கப்படுவார்களானால், அம்பர் சர்க்கா திட்டத்தை கொஞ்ச காலத்திற்கு நிறுத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கையால் சுழற்றுகின்ற ராட்டைகளை பெருவாரியாக மக்கள் உபயோகப்படுத்த வசதிகள் செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரத்னசபாபதி முதலியார் அவர்கள் கமிட்டி சமர்ப்பித்த ஸ்தல ஸ்தாபனங்களைப் பற்றிய சிபார்சுகளை சர்க்கார் சரியான முறையில் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரியவருகிறது. அதனால் ஸ்தல ஸ்தாபனங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு சில இடையூறுகள் இருக்கின்றன. அதை விரிவாக எடுத்துச் சொல்லுவதற்கு இப்பொழுது நேரமும் சந்தர்ப்பமும் இல்லை. ரத்னசபாபதி முதலியார் கமிட்டியின் சிபார்சுகளை கவனித்து அதன்படி சலுகைகள் கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்று நான் அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஸ்தல ஸ்தாபனங்களோடு ஜில்லா தலைமை ஆபீஸர்கள் ஒத்துழைப்பதில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அவர்கள் சில சமயங்களில் குறுக்கிடவேண்டிய நிலைமை வந்துவிடுகிறது. " என்கிரோச்மெண்டு " விஷயத்தில் கலெக்டர் " ஸ்டே ஆர்டர் " கொடுத்தால் மாதக்கணக்கில் அது அப்படியே இருக்கிறது. " ஸ்டே ஆர்டர் " எவ்வளவு தூரம் நிற்கும், எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பதை நிர்ணயிக்க வழியில்லை. அதனால் ரொம்ப காலதாமதம் ஆகிறது. ஆகையால் " ஸ்டே ஆர்டர் " எவ்வளவு காலம் செல்லும் என்பதை சர்க்கார் தீர்மானித்து கலெக்டருக்கு ஒரு அறிக்கையும் அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருச்சி பெரியா ஆஸ்பத்திரியில் மலஜலங்களை ஒரு ஸெப்டிக் டாங்கில் தேக்கி தண்ணீரைப் பிரித்து வையங்கொண்டான் வாய்க்காலில் போகும்படி செய்தார்கள். டாங்கு வேலை செய்யவில்லை. அதனால் அந்த மலஜலங்களை

[Dr. E. P. Mathuram] [4th July 1957

டாங்கில் போட்டு சுழற்றி அந்தத் தண்ணீரைத் திருச்சி நகரத்திலே உள்ள வீடுகளுக்குச் செல்லும் தண்ணீரோடு கலந்து விடுகிறார்கள். இதை பல முறை எடுத்துச்சொல்லியும் அதிகாரிகள் கவனிக்கவில்லை. பொது மராமத்து இலாகாவினரும் இதை கவனிக்கவில்லை. இதனால் மக்களின் சுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதை நிவர்த்திக்க வழிவகைகள் செய்ய வேண்டும். இதற்கு வழியும் சொல்லுகிறேன். இரண்டு, மூன்று, மைல்களுக்கு அப்பால் ஒரு " ஸெப்டிக் டாங்க் " வைத்து பம்பு மூலமாக இந்தத் தண்ணீரை அதில் தேக்கி அந்த இடத்தில் ஒரு **farm** ஏற்படுத்தி புல் வளர்ப்பதற்கு அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்தலாம். புல்லினால் அதிக லாபம் உண்டாகும். அதுதான் திருச்சி மக்களுடைய ஆசை. அம்மாதிரி நடக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தோல் " காம்பன்ஸேஷன் " 1932-ம் வருஷம் என்ன நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அதே நிர்ணயித்தின் பேரில்தான் இன்னும் கொடுக்கப்பட்டு வருகிறது. முன்பு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அதே தோல் இந்தக் காலத்தில் இருந்தால் எவ்வளவு வருமானம் வரும் ? குறைந்த பட்சம் 70 லட்சம் ரூபாயாவது வரும். இருந்தும், பழைய தொகையைத் தான் திரும்பவும் ஒதுக்கியிருக்கின்றார்கள். நகர சபைக்குப் பண வசதி ஏது ? மக்களிடமிருந்து வரி போட்டுக் கொண்டிருக்க முடியுமா ? சர்காரே வரி போட முடியாத நிலைமையில் அஞ்சுகிற காலத்தில் நகர சபை போட முடியாது. அதைச் சற்று ஆராய்ந்து, தோல் " காம்பன்ஸேஷனை " சற்று " ரிவைஸ் " செய்து அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கிராமப் பகுதிகளில் ஆஸ்புத்திரி வசதியை எடுத்துக் கொண்டால், அங்கு போதுமான அளவு பிரயோஜனப்படவில்லை. டாக்டர்கள் கிராமங்களுக்குப் போவது இல்லை என்றால், அதற்குக் காரணம் என்ன ? அவர்களுக்குச் சம்பள விகிதம் கம்மி. அதை வைத்துக் கொண்டு டாக்டர்கள் கிராமத்தில் ஒரு குடும்பமும், நகரத்தில் பிள்ளைகள் படிக்கக் கூடிய இடத்தில் ஒரு குடும்பமும் நடத்துவதில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இரண்டு " எஸ்டாபிளிஷ்மெண்ட் "கள் வைக்கவேண்டியிருப்பதால், அவர்கள் அதிகப்படி " அலவன்ஸ் " கேட்கிறார்கள். முன்பு " ஸிடி அலவன்ஸ் " என்று கொடுக்கப்பட்டதைப் போல " வில்லேஜ் அலவன்ஸ் " என்று பெயர் வைத்து அவர்களுக்கு அதிகமான மான்யம் கொடுத்து, கிராமங்களுக்குப் போகச் சொன்னால், அவர்கள் உற்சாகமாகப் போவார்கள்.

அப்படி, சர்க்காருக்குப் பண வசதி செய்து கொடுக்க முடியாவிட்டால், இன்னொரு முறையைக் கையாளலாம். வைத்தியக் கல்லூரிகளில் படித்து தேர்ச்சி அடைந்து செல்லும் புதிய வைத்தியர்கள், ஆஸ்பத்திரிகளில் **Honorary House Surgency** ஒரு வருஷம் முடிந்த பின்பு, இரண்டு வருஷங்கள் கிராமங்களில் கட்டாயமாக வேலை செய்யவேண்டும், அப்படிச் செய்தால் தான் வேலை கொடுக்கப்படும் என்ற ஒரு முறையை ஏற்படுத்தினால், படித்த வைத்திய மாணவர்கள் கிராமங்களுக்குச்சென்று கிராமப் புறங்களில் மக்கள் சுகாதாரமாக வசிக்க உதவுவதற்கு முடியும். என்னுடைய இந்த யோசனையைக் கண்டு என் தொழில் சகோதரர்கள் என்னிடம் சண்டைக்கு வந்துவிடுவார்கள். இருந்தாலும், நம்முடைய நாட்டின் நன்மையை உத்தேசித்துத் தான் அந்த வார்த்தையை நான் இங்கு சொல்கிறேன்.

நான் இன்னொரு யோசனையும் தெரிவிக்க விரும்புகிறேன். தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளை இன்னும் நல்ல முறையில் விரிவு படுத்தி, அவைகளில் **Blood transfusion** முதலிய வசதிகளை ஏற்படுத்தி, **Bed strength**-ஐயும் அதிகப்படுத்தி, அவைகளையொட்டி ஒரு **Medical van** ஐயும் ஏற்படுத்தி, அந்தத் தாலுகா பூராவும் சுற்றிவரச் செய்யவேண்டும். அந்த வைத்திய மோட்டார் வண்டியில் ஒரு டாக்டர், ஒரு நர்ஸ், ஒரு ஹெல்த் விஸிட்டர், ஒரு சானிடரி இன்ஸ்பெக்டர் ஆகியவர்களைச் சேர்த்து கிராமம் கிராமமாகச் சென்றுவரச் செய்தால், அவர்கள் கிராமப்புறங்களில் மக்கள் சுகாதாரமாக வாழ வைத்திய வசதி செய்து கொடுக்க முடியும். புதிதாக வைத்தியக் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் மாணவர்களை, இம்மாதிரி பல வசதிகளும் நிரம்பப் பெற்றுள்ள, படுக்கை வசதிகள் அதிகரித்துள்ள தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளில் இரண்டு வருஷ **training** பெறவேண்டுமென்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி விட்டால், அப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களின் மேற்பார்வையில் அவர்கள் **training** பெறுவதற்கு முடிவதோடு கூட, அந்தத் தாலுகாவிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் நன்மை கிடைக்கவும் ஏதுவாக இருக்கும். இந்த முறையில் சர்க்கார் ஏற்பாடு செய்தால் கிராம சுகாதாரம் மேன்மை அடையும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.



4th July 1957] [Dr. E. P. Mathuram]

(Deputy Speaker in the Chair.)

**Sri V. S. ARUNACHALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு தகவல் அறிய விரும்புகிறேன். ஒரு அங்கத்தினருக்கு எத்தனை நிமிஷம் பேசலாம் என்பதைப்பற்றி தயவு செய்து தெரிவிக்க முடியுமா ?

**DEPUTY SPEAKER** : ஒவ்வொரு அங்கத்தினரும் எத்தனை நிமிஷங்கள் பேசவேண்டும் என்பதைப்பற்றி கட்சித் தலைவர்களோடு **Business Advisory Committee**-யில் கலந்து பேசியதில், ஒவ்வொரு கட்சித் தலைவரும் 20 நிமிஷங்கள் வரை பேசலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. **The time limit has been revised by the Speaker. He has allotted twenty minutes.**

***Dr. E. P. MATHURAM** : பப்ளிக் ஹெல்த் சர்விஸ் விஷயமாகச் சொல்லும்போது, பப்ளிக் ஹெல்த் சர்வீசும், மெடிகல் சர்வீசும் தனித்தனியாக இயங்கி வருகின்றன. அப்படியிருப்பது பல காரியங்களுக்கு இடைஞ்சல் என்று நான் கருதுகிறேன். இரண்டு சர்விஸையும் ஒன்றுபடுத்தி ஒரே சர்வீசாக ஏற்படுத்தினால், அதன் மூலமாகப் பல காரியங்களுக்கு சௌகரியமாக இருக்கும். இதிலுள்ள பல டாக்டர்களை பல இடங்களுக்கு அனுப்ப வசதி ஏற்படும். ஆனால், இப்பொழுது இருக்கும் நிலைமையில், பப்ளிக் ஹெல்த் சர்வீசில் ஆட்கள் இல்லாததால் " ரிடையர் " ஆன ஹெல்த் ஆபீசர்களைக் கூப்பிட்டு அவர்களைக் கொஞ்ச காலம் வேலை செய்யச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதனால், இரண்டு சர்வீசையும் ஒன்றுபடுத்தி விட்டால் வசதியாக இருக்கும்.

முனிசிபல் டிஸ்பன்சரிகளையும் சர்க்காரே ஏற்று நடத்தினால் ரொம்ப நல்லது. முனிசிபல் டாக்டர்களுக்குச் சம்பளச் சலுகை ரொம்பக் குறைவு. மற்றவர்களைப் போல் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. பெரிய ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்களின் வேலையைப் போல்தான் இவர்களுடைய வேலையும் இருக்கிறது. ஆனால், சம்பளத்திலே மிக மிக வித்தியாசம் இருக்கிறது. அதனால் முனிசிபல் நிர்வாகத்திலுள்ள டிஸ்பன்சிரிகளில் வேலை செய்ய டாக்டர்கள் வருவதற்கு சங்கோஜப்படுகிறார்கள். நகரங்களிலேயே இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது கிராமாந்திரங்களைப் பற்றி நீங்களே யோசித்துப் பார்க்கவேண்டும். இதைச் சர்க்கார் தீர ஆலோசனை செய்து ஏழை மக்களுக்குப் பயன்படும்படியான உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கனம் நிதி அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**Sri N. K. PALANISAMI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 12 P
கடந்த நான்கு ஆண்டுகளாக இங்கே விவாதம் நடந்த போதிலும் சில பேர்கள் தான் காங்கிரசினுடைய நடைமுறைக் கொள்கையை ஆதரித்திருக்கிறார்களே யொழிய, பாக்கி எல்லோரும், முதலில் ஆரம்பிக்கும் போது ஒருவிதமாக இருந்தாலும் கடைசியில் " சர்க்கார் இதைச் செய்ய வில்லை, அதைச் செய்யவில்லை " என்ற முறையிலே குறை கூறியிருக்கிறார்கள்.

அடிப்படையாக இந்த பட்ஜட்டைப் பார்த்தால் **we are plan-minded**—நாட்டில் இருக்கும் அத்தனைபேரும், சில பேர்களைத் தவிர, திட்டமிட்டுச் செய்யும் மனப்பான்மையில் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இருக்கக்கூடிய நாம் நமக்கு எந்த அளவு இது உதவி செய்கிறது என்று பார்க்கவேண்டும். 1955-ம் வருஷம் ஆவடி காங்கிரசிலே, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லக் கூடிய நேரத்தில், "பணத்தைப் பற்றி அக்கறை இல்லை ; **we want only physical plan**" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி ஒன்றரை வருஷம் கூட ஆகவில்லை. திட்டத்திற்கே நெருக்கடியான கட்டம் வந்திருக்கிறது. அன்னியச் செலாவணியும் தீர்ந்துவிட்டது. இனி அதற்கு வேண்டிய **resources** கிடையாது. பொருள்களின் விலை வாசியும் ஏறியிருக்கிறது. பத்து கோடி பற்றுக்குறையை ஈடு செய்ய வரி போடப்படுகிறது. விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் இறங்கும் சமாசாரம்தான். ஏற்கெனவே, எல்லா ராஜ்யங்களிலும் பற்றுக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது. இங்கும் பற்றுக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது. இந்த பற்றுக்குறையே நீடிக்குமானால் என்ன செய்வது ? மத்திய சர்க்கார் வெளிநாடுகளிடத்திலிருந்து பணத்திற்காகப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பட்ஜெட்டைப் பார்க்கும்போது **uncertainty** அதாவது என்ன நடக்குமோ தெரியாது என்ற நிலையில் திட்டம் நின்றாலும் நின்றுவிடக் கூடிய நிலை ஏற்படுமோ என்ற பயம் நிலவுகிறது. ஐந்து வருஷத்தைப் பத்து வருஷமாக நீடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். அப்படிப்பட்ட நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம். முன்பு பணம் இருந்தது, செலவு செய்ய. ஆனால், போதுமான நிர்வாக ஸ்தாபனம் இல்லை. இந்த வருஷம் நிர்வாக ஸ்தாபனம் இருக்கிறது ; ஆனால், பணம் இல்லை. ஒன்று இருந்தால் இன்னொன்று இல்லை என்ற நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்று இருக்கிறது. அதாவது, சர்க்கார் இன்றைய தினம் நிலப் பிரபுக்கள் மீது நடவடிக்கை எடுக்காததுதான் முக்கியமான தவறு. இன்றைய தினம், உதாரணத்திற்காக எடுத்துக்கொண்டால், கேரள ராஜ்யமானது மிகச் சிறிய ராஜ்யமாக ஒன்றரை கோடி மக்களே உள்ள ராஜ்யமாக இருந்தாலும், "ஸர்ப்ளஸ்" பட்ஜெட்டைப் போட்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் என்ன ? அங்கு இருக்கும் நிலப் பிரபுக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலைமையை அங்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் படுமோசம் ஆனதற்குக் காரணம், இங்கு இருக்கும் சர்க்கார் விவசாய வருமான வரி போடாததுவும் ஒன்று. வருமான வரி போட்டிருக்க முடியும், நிலச்சுவாந்தார்கள் மீது வரி போட்டிருக்க முடியும். அப்படியெல்லாம் செய்யத் தவறி இருக்கிறது நம்முடைய சர்க்கார். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், இன்றைய தினம் சர்க்கார் இப்படித் திட்டம் போடுவது மோசம். இன்று அல்ல, இந்தத் திட்டம் கொண்டு வந்த காலத்திலேயே நாங்கள் இந்தச் சர்க்காருக்குச் சொல்லியிருக்கின்றோம்.

திட்டம் என்றால் இரண்டு அடிப்படையைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஒன்று, அன்னியச் செலாவணி ஐந்து வருஷ காலத்திற்கு ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். இரண்டாவது, விலைவாசி "கண்ட ரோலில்" இருக்கவேண்டும். ஆனால், புள்ளி விவரம் கொடுக்கும்போது ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் சொல்லக் கூடிய நேரத்தில், 1956-வது வருஷத்தில் வாழ்க்கைப் புள்ளி 393·5 ஆக இருந்து, 1957-ம் வருஷத்தில் 411·5 ஆக உயர்ந்திருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். அதாவது ஒரு வருஷத்தில் 18 புள்ளி ஏறியிருக்கிறது. கிட்டத்தட்ட இருபது சத விகிதம் ஏறியிருக்கிறது. இருபது சத விகிதம் விலைவாசி ஏறியிருக்கிறதென்றால், அப்படி ஏறினதற்கு சர்க்கார் என்ன காரணம் சொல்லுகிறார்கள் ? சர்க்கார் போட்டிருக்கும் திட்டங்கள் காரணமாக ஜனங்கள் கையில் ஏராளமான பணம் வந்...





பணத்தைக்கொண்டு எல்லோரும் செலவு செய்வதால் நாட்டில் விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்லப்படுகிறது. நேற்று கூட, ஸ்ரீ அஜித் பிரசாத் ஜெயின் என்ன சொல்கிறார் என்றால், "இந்த நாட்டில் உணவுப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும் ஏன் விலைவாசி ஏறியிருக்கிறது என்றால், இந்த நாட்டில் உள்ள பதுக்கல்காரர்கள் பூராவும் பதுக்கல் செய்ய ஆரம்பித்து விட்டார்கள் ; அதுதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய சர்க்கார் என்ன சொல்கிறது ? "ஜனங்களிடம் ஏராளமாகப் பணம் வந்துவிட்டது. அதைக் கொண்டு எல்லோரும் பொருள்களை அதிகமாக வாங்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் விலைவாசி ஏறிவிட்டது" என்று. எதை நம்புவது என்று தெரியவில்லை.

ஆகவே ஒரு பக்கம் விலைவாசிகள் ஏறும் காரணமாக 470 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று சொன்னதிற்கு 6,000 கோடி ரூபாய் செலவாகும் என்று நேரு அவர்கள் சொல்லுகிறார்கள். விலைவாசிகள் ஏறினால் சாதாரண ஜனங்களுக்கு நன்மை ஏற்படுகிறது என்று சர்க்கார் சொல்லுகிறார்கள். விலைவாசி ஏறியது காரணமாக ரூ. 10-க்கு விற்றது இப்போது ரூ. 15-க்கு விற்கிறது. சர்க்கரை ரூ. 1–3–0-க்கு விற்றது இப்போது ரூ. 1–7–0-க்கு விற்கிறது. நல்ல எண்ணெய் வீசை ரூ. 1–3–0-க்கு விற்றது இப்போது ரூ. 3 ஆக விற்கிறது. அதாவது முன்பு ரூ. 100 சம்பளம் வாங்கிய ஒருவர் அதே அளவு சாமானை வாங்கவேண்டும் என்றால் ரூ. 130 வந்தால்தான் வாங்க முடியும். அம்மாதிரி விலைவாசி ஏறினால் நல்லது என்று கனம் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னார்கள். இதனால் பெரிய முதலாளிகள் மூட்டைகளைப் பதுக்கி வைக்க அதிக வருமானம் ஏற்படுகிறது. உதாரணமாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அது ஒரு ஏராளமான நெல் விளையும் பிரதேசம். அங்கேயும் நிவாரண கடைகள் வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. எலெக்ஷன் வந்ததும் 2,000 கணக்கான கடைகள் திறக்கப்பட்டன. எலெக்ஷன் முடிந்ததும் எல்லாம் மூடியாய் விட்டது. ஏன் இம்மாதிரி கடைகள் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று பார்த்தால் அங்கு இருக்கும் நிலப் பிரபுக்கள் கேரளாவுக்கு கொடுத்து விலையை ஏற்றிவிடுகிறார்கள். நியாயமான முறையில் ஏன் நடவடிக்கை எடுத்து பதுக்கல்காரர்களை கண்டு பிடிக்கப்படாது. திட்டம் போட்டார்கள் ; இப்போது உணவு மண்டலம் வைக்கப்போகிறார்கள். உணவு மண்டலம் வைத்தால் பதுக்கல் நடக்கும். பிரசிடெண்ட் பேச்சை எடுத்துக் கொண்டாலும் பார்லிமெண்ட் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாலும், எதை எடுத்துக் கொண்டாலும் பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற காலத்தில் இங்கே ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. இந்த சர்க்கார் நிலப்பிரபுக்கள் கையில் இருக்கிறது. சர்க்கார் இந்த விஷயத்தை கலந்து பதுக்கல் செய்யும் நிலப்பிரபுக்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைய தினம் உணவுப் பிரச்னை (**interruption**) ஆகவே இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. இன்றைய தினம் நமது நிதி அமைச்சர் அவர்களும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்குச் சென்று இருந்தார்கள். அங்கு உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவது என்று திட்டம் இடப்பட்டு இருக்கிறது. அதோடு நிலச்சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு உணவு உற்பத்தி பெருகி வெளி நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதை நிறுத்தலாம். இதனால் **foreign exchange**-ல் மிச்சம் ஏற்படும். உதாரணமாக கடலை எண்ணெய் போன்ற பொருள்களை வெளி நாட்டுக்கு அனுப்பலாம். ஆகவே இந்தமாதிரி விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதற்கு இன்னும் ஏராளமான ஏக்கர் புறம்போக்கு இருக்கிறது. உண்மையாக சர்க்கார் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க உடனடியாக அந்த நிலங்களை ஏழை விவசாயி

களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டும். இதற்குத்தான் திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். திட்டத்தை வளர்த்தவும் கூடாது. திட்டத்தை நடத்தவேண்டும். விலைவாசி உயர்வு காரணமாக எவ்வளவோ கஷ்டப்பட்டோம். இவ்வளவு கஷ்டப்பட்டு இப்படி ஒரு நிலைமை ஏற்படும் என்றால் வருத்தப்படாமல் இருக்க முடியாது. நிலப்பிரபுக்கள்மீது நிலச் சீர்திருத்தத்தை அவசியம் செய்யவேண்டும். இத் திட்டத்தை நடத்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக Industrial truce என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு மில்களும் லட்சக்கணக்கான ரூபாய் லாபம் எடுத்துக்கொண்டிருக்கிறது. உதாரணமாக ஒரு மில்லின் மூலதனம் 1¼ கோடி ரூபாய். அதற்கு ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் லாபம் வந்தது. இந்த வருஷம் 95 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது. இவ்வளவு கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். தொழிலாளிகள் மீது வேலை பளுவை சுமத்திக் கொன்று வருகிறார்கள். இப்பேர்பட்ட நிலைமையைப் பார்க்கிறோம். முதலாளி கொள்ளை லாபம், தொழிலாளி பிணம். Truce எப்படி வரும். தொழிலாளர்கள் பணம் கூட கேட்டு Industrial truce செய்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது எல்லோராலும் பேசப்படுவது லஞ்சம். எல்லாரும் பொதுவாக லஞ்சத்தை ஒழிக்கவேண்டும் என்று பேசுகிறார்கள். இப்போது பல திட்டங்கள் நிர்மாணம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் waste-யை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்னொன்று இப்போது ஒரு Officer-யை நியமித்து சர்க்காரில் economy கொண்டுவர முயற்சி நடக்கிறது. இதற்குப் பதில் மந்திரி அவர்களே அதிகாரிகள் அத்தனை பேர்களையும் கூப்பிட்டு அங்கு இருக்கக்கூடிய பல்வேறு இனங்களில் செலவு செய்யக்கூடிய பணத்தை எந்த அளவு மிச்சம் பிடிக்கலாம் என்று பார்க்கவேண்டும். அப்படி எந்த எந்த முறையில் economy கொண்டுவர முடியும் என்று அவர்களை கேட்கவேண்டும். ஆகவே இந்த அடிப்படையில் சர்க்கார் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும். இவையெல்லாம் இல்லாமல் நடப்பது என்றால் சோஷலிச பாணி உண்டாகாது. கடைசியாக நிலப்பிரபுக்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

12–58 p.m. SRI S. PAKKIRISAMI PILLAI: கனம் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் கொண்டுவந்த பட்ஜெட் தமிழ்ப் பிரசங்கம் வெகு இனிமையாக இருந்தது. அழகான தமிழில், தெள்ளத் தெளிவான தமிழில், இனிமையான வார்த்தைகள் கொண்டதாக இருந்தது. இது இத்தனை வருஷங்கள் இருந்ததுபோல் அல்லாமல் படிக்க விறுவிறுப்பாக, உற்சாகத்தை ஊட்டக்கூடியதாக இருந்தது என்பதைப்பற்றி எல்லாரும் சொன்னார்கள். அது உண்மைதான். ஆனால் இந்த மாதிரியான மாற்றம் வந்ததற்குக் காரணம் நம் நாட்டில் வெவ்வேறு துறைகளிலே ஈடுபட்டிருக்கும் பொதுச் சேவையாளர்கள் நாட்டின் நலத்தை உத்தேசித்து மக்களின் நலனை உத்தேசித்து மக்களின் நலனைக் கருதி பல பிரசங்கங்கள் தமிழிலே, தெள்ளத் தெளிவான தமிழிலே பேசுவதன் காரணமாகத்தான். (இந்த சந்தர்ப்பத்தில் சபாநாயகர் வந்து ஆசனத்தில் அமர்ந்தார்.) நமது நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தார், தமிழகக் கழகத்தார், அதில் சேர்ந்து நல்ல படிப்பு, உயர்தரப் படிப்பு படித்து, பட்டம் பெற்ற வாலிபர்கள் சேர்ந்து ஆற்றிய சொற்பொழிவு, மேடைப் பிரசங்கத்தின் ஒரு பலன்தான் இந்த மாதிரியான நிலைமையை நம்மிடத்திலே ஏற்படுத்தியிருக்கிறது. அதோடுகூட சில காலத்திற்கு முன்னாலே நம் நாட்டில், வீடுகளிலும் எங்கு பார்த்தாலும் ஆங்கில மொழி உபயோகித்து வந்த நம் குடும்பங்களில் உள்ள மக்கள் தெள்ளத் தெளிவான தமிழிலே பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் நம் சுதந்திரப் போராட்ட காலத்திலே நம் தலைவர்கள் தமிழ் நாட்டின் பெருமையைச் சொல்லி, தமிழிலேயே அறிவை உண்டாக்கி, தமிழ் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றி வந்தது. தமிழ்



நாட்டிலே இருக்கிறவர்கள் வீரர்களாகத் திகழவேண்டும், சுதந்திரப் போராட்டத்திற்கு பெரும் துணை இருக்கவேண்டும் என்ற நிலையை உண்டாக்கினார்கள்.

இந்த மாதிரியான வெவ்வேறு நிகழ்ச்சிகளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு பக்குவம் இருந்தும் இப்போது நம் ராஜ்யத்தை தமிழ்நாடு என்று சொல்வதற்கு நம் தலைவர்கள் அஞ்சி இருப்பதைக்கண்டு மிகவும் மனக்கஷ்டம் அடையும் நிலையில் இருக்கிறேன். எதற்காக அவர்கள் பயப்படுகிறார்கள் ஏன் தமிழ்நாடு என்ற பெயரை வைக்கக் கூடாது? இதற்காக ஒரு சங்கரலிங்க நாடார் உயிர் தியாகம் செய்தார். இன்னும் ஒருவர் தியாகம் செய்ய முற்பட்டார். ஆனால் நாம் எல்லாம் பரிபக்குவமான நிலையில் இருக்கும்போது, மக்கள் அதை வேண்டும்போது, ஏன் தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இந்த மாதிரியான பட்ஜெட் பிரசங்கத்தை வருஷா வருஷம் கேட்டு வந்து இருக்கிறோம். சென்ற வருஷ பட்ஜெட்டைவிட இந்த வருஷ பட்ஜெட்டில் மாற்றம் கிடையாது. ஏழைகள் வாழும் பிரதேசங்களுக்கு திட்டங்களை வகுத்து, அதற்குக் கொஞ்சம் அதிகமாகச் செலவிடும் நிலையில் இருக்கலாம். ஆனால் நாம் வகுத்துக்கொண்டிருக்கும் சோஷலிஸ லக்ஷியத்தை அடையக் கூடிய வழியிலே எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என்று பார்த்தால், ஒரு அடி கூட நாம் முன்னேறி போனதாக இல்லை. முன் இருந்த நிலையிலேயே இருக்கிறோம்.

வரி போடவில்லை என்று பல அங்கத்தினர்கள் இந்த பட்ஜெட்டை வரவேற்றுப் பேசினார்கள். நான் சொல்கிறேன் "வரி போடாதது தவறு" வரி போட்டு இருக்கவேண்டும். பெரிய பெரிய பணக்காரர்கள், பெரிய பெரிய மிராசுதார்கள் இதற்கு முன்னால் எவ்வளவு வருமானம் பெற்று வந்தார்களோ அதையே பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அவர்களிடம் இருந்து, உபரி லாப வரியையோ, விவசாய வருமான வரியையோ போட்டு, பணம் வசூலித்திருந்தால் அதை எல்லோரும் வரவேற்கும் நிலையில் இருந்து இருப்போம். அப்படி வருமானத்தைப் பெருக்கி, ஏழைகள், சின்னஞ் சிறு நிலப்பரப்பைக் கொண்ட ஏழை விவசாயிகளுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்கு கொடுத்தால் நாங்கள் அதை வரவேற்போம். நமக்குத் தெரியும், சாதாரணமாக ஒன்று, இரண்டு ஏக்கரா நிலம் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயி வரி கட்ட எவ்வளவு கஷ்டப்படுகிறான் என்று. இதைப்பற்றி ஒரு கமிட்டி விசாரணை செய்து ஒரு கணக்கு எடுத்து இருக்கிறார்கள். சராசரி 6¼ ஏக்கரா. உள்ள ஒரு விவசாயிக்கு அதற்கும் குறைந்த விஸ்தீரணமுள்ள நிலத்தைக்கொண்ட விவசாயி வரி கட்டுவதற்கு சாத்தியப்படாது. வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும், அப்படி கொடுத்தால்தான் அவன் வாழ முடியும் என்ற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பரிசீலனை செய்த பிறகு வெளியிட்ட முடிவு இது. அம்மாதிரியான ஒரு அடிப்படையில், அதாவது மேல் அதிக வருமானத்தின் மீது வரி விதித்து, இந்த சிறு நில சொந்தக்காரர்களுக்கு வரி விலக்கு அளித்து இருந்தால் நாம் இந்த பட்ஜெட்டை வரவேற்றிருப்போம். அந்த மாதிரியான நிலைமையைத் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு மனது இல்லை. ஏன் என்றால் இந்த அரசாங்கம் முதலாளித்துவ மனப்பான்மை கொண்டவர்களால் சூழப்பட்டு இருக்கிறது. அதனால்தான் இந்த நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது.

அதே சமயத்தில் தனிப் பதவிக்கு பெருத்த பணத்தை, லக்ஷக்கணக்கான பணத்தை செலவிடுகிறார்கள். இதைப்பற்றி இங்கும் வெளியிடங்களிலும் கூட பேசியிருக்கிறார்கள். கவர்னர் பதவியை அங்கேயே இருத்திக் கொண்டு அதற்கு ஒரு தனி மனிதரை நியமித்து, அவருக்கும் அவரைச் சூழ்ந்த பணி ஆட்களுக்கும் லட்சக்கணக்கான பணத்தை அனாவசியமாகச் செலவிடுவது நியாயம் இல்லை. சமீபத்தில் கவர்னராக இருந்து ரிடையரான நமது நண்பர் ஸ்ரீ பட்டாபி சீதாராமையா இதை ஒத்துக் கொள்ளுகிறார்கள். 'இவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டியது அவசியம் இல்லை. கவர்னர் பதவி வேண்டுமென்றால் கௌரவ கவர்னராக இருந்தால்

நன்ருக இருக்கும்' என்று சொல்லி இருக்கிருர். இந்த கவர்னர் பதவி
அவசியமா ? அதே மாதிரிதான் கலெக்டர்கள் பதவியினுல்கூட ஜில்லா
கலெக்டார்களுக்கு வேலே கிடையாது. முன்னுல் ஜமாபந்தி இருந்தது.
குற்றங் குறைகளேக் கேட்டு விசாரணே செய்து வெவ்வேறு வழிகளில்
உதவினுர்கள். இப்போது அவர்களுக்கு வேலே கிடையாது. அவர்களுக்கு
கீழ் இருக்கும் சிப்பந்திகள்தான் அம்மாதிரி வேலே செய்கிருர்கள். ஆனுல்
இப்போது கலெக்டர் ஜமாபந்தி வைப்பதற்கு பதிலாக நமது முதல்
அமைச்சர் பாகல்மேட்டில் ஒரு 'ஜமாபந்தி' செய்தார். அந்த மாநாட்
டிலே பல ஏழைகள், விவசாயிகள் தங்களுடைய குறைகளேச் சொன்னுர்கள்.
அந்தக் குறைகள் கதி என்ன ஆயிற்று ? அதிகார வர்க்கத்தினர் குறை
களேப் போக்கினுர்களா ? அதிகாரக் கூட்டம், ஆபீசர்கள் அதைச் செய்ய
மாட்டார்கள். இன்னும் சிவப்பு நாடாக்கள் தொங்கிக்கொண்டுதான் இருக்
கின்றன. குறைகளே உடனுக்குடன் தீர்க்க வழி செய்யப்பட்டதா ? இந்த
முதலாளித்துவ சமுதாய அடிப்படையிலே அமைந்து இருக்கும் இந்த
அதிகார ஆட்கள் சீக்கிரத்திலே வழிவிடமாட்டார்கள் ஏழைகளுக்கு நன்மை
செய்ய. அவர்கள் வழியில்தான் நம் மந்திரிமார்களும் இன்னும் சென்று
கொண்டு இருக்கிருர்கள். ஊழல், லஞ்சம் என்று சொன்னுல் போதாது.
அதைப்பற்றி எல்லா இடங்களிலும் பேசப்படுவதை நாம் கேட்டு இருக்கி
ருேம். அதற்கெல்லாம் நாம் அத்தனே பேர்களும் பொறுப்பாளிகள்.
சமுதாயத்தின் நலத்தை உத்தேசித்து நாம் அனேவரும் பங்குகொண்டு
வேலே செய்தால் இம்மாதிரியான வெவ்வேறு குறைகளே நீக்க முடியும்.
ஆகவே கலெக்டர் பதவி போகவேண்டும். கவர்னர் பதவி போகவேண்டும்.

அதோடு சிக்கனம் என்று சொல்லுகிருர்கள். சிக்கனம் என்பது
மந்திரிமார்களுடைய கார் கொடியை மாத்திரம் எடுத்துவிட்டால் சிக்கனம்
ஆகாது. வெவ்வேறு வழியில் சிக்கனம் கையாள வேண்டுமானுல் அனுவசி
யமான வழியில் பொருள்கள் செலவழிக்கப்பட்டால் அவைகளேச் சிக்கனம்
செய்யவேண்டும். ஏழைகளுக்காக செய்யப்படும் திட்டங்களில் சிக்கனம்
செய்து கஞ்சத்தனம் காண்பிப்பது சிக்கனம் ஆகாது. அம்மாதிரிதான்
சென்ற வருஷம் செய்து இருக்கிருர்கள். ஏழைகளுக்கு எவ்வளவு பணம்
அதிகமாகச் செலவழிக்கமுடியுமோ அவ்வளவும் செலவு செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம் நாட்டில் சோஷலிஸ சமுதாயத்தை உண்டாக்கவேண்டுமானுல் கிரா
மத்தில் இருக்கும் விவசாயியும் நகரத்தில் இருக்கும் தொழிலாளியும்
ஒரே விதமான சம்பாத்யத்தை அடையச் செய்யவேண்டும். அது எப்படி ?
நகரங்களில் இருக்கும் தொழிற்சாலேகளில் வேலே செய்யும் தொழிலாளி
களுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூ. 100 அல்லது ரூ. 110 இருந்தால்தான்
குடும்பத்தைக் காப்பாற்ற முடியும். அதற்கு வழிகோலவேண்டுமென்ற
கோரிக்கையின் மேல் அதை வாங்கிக் கொடுக்கப் பாடுபடுகிருேம். அதேமாதிரி
எட்டு மணி நேரம் வேலே செய்யும் சாதாரண விவசாயிகள் வருமானத்தைப்
பெருக்க என்ன திட்டம் இருக்கிறது. ஒன்றும் இல்லே. அந்த ஜமீன்தார்
களிடம் அல்லது நிலச்சுவான்தார்களிடம் இவர்கள் கதியை விட்டுவிட்
டோமே தவிர அவர்கள் நலத்தை உத்தேசித்து ஒன்றும் அரசாங்க சட்டம்
செய்யவில்லே. விவசாயிகள் வருமானம் பெருகினுல்தான், அவர்கள் குடும்
பத்துடன் வாழ ஏற்பாடு செய்தால்தான் நகரத்திலுள்ள வேலேயில்லாத்
திண்டாட்டமும் கிராமங்களிலுள்ள ஆள் இல்லாத் திண்டாட்டமும் போகும்.
அந்த நிலேமையை நீக்குவதற்கு நமது அரசாங்கம் இதுவரையில் எந்த
விதமான முன்னேற்றக் கொள்கையையும் கடைப்பிடிக்கவில்லே என்பது
என் கருத்து.

இப்போது மது விலக்கு எல்லா நகரங்களிலும் எப்படி அமல் நடத்தப்
படுகிறது என்று நாம் பார்க்கிருேம். மது விலக்குச் சட்டத்தின் காரணமாக
இப்போது போலீஸ்காரர்கள் மது அருந்தும் ஆயிரக்கணக்கான ஏழை
மக்களேப் பிடித்து அவர்களே ஜெயில்களில் தள்ளி ஜெயில்களே நிரப்பி
வருகின்றனர். ஆகவே நிறைய ஏழைகள் இப்போது ஜெயில்களில் வாடும்
படியான நிலேமையில் இருக்கிருர்கள். அரசாங்கத்தார் இந்த மாதிரி



எவ்வளவு காலம் வரையில் கள் குடிக்கும் மக்கள் என்று ஜெயிலில்
தள்ளிக்கொண்டிருப்பார்கள் ? இதனுல் என்ன லாபம் ? ஏன் கள்
குடிக்கும் மக்களே இவ்வளவு கடுமையாக போலீசாரைக் கொண்டு அடக்கி
வைத்துக்கொண்டிருக்கவேண்டும்? தென்னேமரமும் பனேமரமும் இருக்கும்
வரையில் ஜனங்கள் கள்ளே இறக்கித் தான் தீருவார்கள் ; கள் இறங்கித்தான்
தீரும்; மக்கள் எப்படியாவது குடிப்பார்கள், மறைமுகமாகக் குடித்து விடுவார்
கள், ஜெயிலுக்குப் போவதற்கும் தயாராய் இருப்பார்கள். கள் குடிக்கும்
ஏழைமக்கள் என்ன நினேக்கிருர்கள் என்று பார்க்கவேண்டும். 'கள் குடிக்க
வேண்டும்' என்று அபிப்பிராயம் எல்லோருக்கும் இருக்கிறது. (சிரிப்பு.)
ஏழை மக்களிடையே இந்த அபிப்பிராயம் இருந்து வருகிறது. 'கள் குடிக்
காததால்தான் நாங்கள் க்ஷயரோகத்திற்கு ஆளாகிருேம். க்ஷயரோகத்தி
லிருந்து எங்களேக் காப்பாற்றிக் கொள்வதற்கு கள் குடித்தால் நல்லது.
இந்தக் கஷ்ட காலத்தில் சர்க்கார் எங்களுடைய முன்னேற்றத்தை ஒரு
வகையிலும் கவனிக்காத நிலேயில் கள் குடித்தால் எங்களுக்கு சௌகரிய
மாக இருக்கும்.' என்று ஏழை மக்கள் சொல்கிருர்கள். 'ஸ்பிரிட்
விற்பதற்கு இப்போது எல்லாக் கடைகளுக்கும் லேசென்ஸ் கொடுக்கப்பட்
டிருக்கிறது. அதே மாதிரி கள் விற்பதற்கும் நாம் ஏன் லேசென்ஸ்
கொடுக்கக் கூடாது' என்று கேட்கிறேன். இது என்னுடைய சொந்த அபிப்
பிராயம், என்னுடைய கட்சியின் அபிப்பிராயம் அல்ல. (சிரிப்பு.) எல்லாக்
கட்சிக்காரர்களும் மது விலக்கின் அவசியத்தை உணர்ந்திருந்தாலும் கூட,
ஏழை மக்கள் அதை உணராததால் மது விலக்குச் சட்டத்தால் அவர்கள்
மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். இதன் காரணமாக நம்மை அறியாம
லேயே மக்களுக்கு நாம் எவ்வளவு ஊறு விளேவித்து வருகிருேம் என்று
பார்க்கவேண்டும்.

இன்னெரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்
ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் 'மக்களுக்குப் பேச்சு சுதந்திரம் கொடுத்திருக்
கிருேம். வோட்டுரிமை கொடுத்திருக்கிருேம்,' என்று வீராப்புடன் பேசி
னுர்கள். நகரத்தில் பேச்சு சுதந்திரம் எங்கே இருக்கிறது என்று நான்
கேட்க விரும்புகிறேன். நகரத்தில், பேசுவதற்கு இடம் இருக்கிறதா ?
அரசாங்கத்தாருக்குச் சொந்தமான இடங்களிலும், கார்ப்பொரேஷனுக்கு
சொந்தமான நிலங்களிலும் எதிர்க் கட்சிக்காரர்கள் பொதுக்கூட்டம் நடத்
திப் பேச முடியாது. நகரத்தில் பேச வேண்டுமென்ருல், சென்னே கலெக்
டரின் அனுமதியும், கார்ப்பொரேஷனின் அனுமதியும் வேண்டும்.
வேறு யாருக்கும் சொந்தமான வெட்ட வெளி மைதானங்கள் இல்லே.
தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களில் அப்படிப்பட்ட மைதானங்கள்
கிடைப்பது அரிதாக இருக்கிறது. கலெக்டர் அனுமதி வாங்க மூன்று
ரூபாய் லேசென்சிற்காகக் கட்டவேண்டியிருக்கிறது. இந்த மாதிரியான
கஷ்டமான நிலேமையில், ஏதாவதொரு அரசியல் கட்சி பொதுக் கூட்டம்
நடத்த வேண்டுமென்று விரும்பினுல் அந்தக் கட்சியினருக்கு எந்த எந்த
வழிகளில் அனுமதி கொடுக்காமல் செய்ய முடியுமோ அந்த வழிகளில்
தடை செய்வதற்கு இப்போதுள்ள போலீஸ் அதிகாரிகள் முயற்சி செய்கி
ருர்கள். போலீஸ் அதிகாரிகளின் உதவியைக்கொண்டு கீழே எதிர்க் கட்சியை
வளரவொட்டாமல் செய்வதற்கான சூழ்ச்சியை இப்போதுள்ள ஆட்சியாளர்
கள் செய்து வருகிருர்கள். இது தான் நான் கூறும் கடைசி குறை
ஆகும்.

இப்போதுள்ள நிலேமைக்கு ஏற்றவாறு இந்த பட்ஜெட் நன்ருகத்
தயாரிக்கப்படவில்லே என்று சொல்லிக் கொள்கிறேன். (சிரிப்பு.)

**Sri P. S. CHINNADURAI** : மதிப்பிற்கு உரிய சபா நாயகர் அவர்களே 1.16
ஒரு சர்க்காரின் வரவு செலவுத் திட்டமானது அந்த சர்க்காரை நடத்தி p.m.
வருபவர்களின் பொருளாதாரக் கொள்கையை தெளிவாகப் பிரதிபலிக்கக்
கூடிய நிலேக்கண்ணுடி ஆகும். அந்த நோக்கத்தோடு இந்த வரவு செலவு
திட்டத்தைப் பார்த்தால், இது மக்களுக்குப் பெருத்த ஒரு அதிர்ச்சியைக்
கொடுக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது என்று நான் நினேக்கிறேன்.
அதற்கு நான் காரணங்கள் கூறுகின்றேன். இந்த ராஜ்யத்தில் அரசாங்க

[Sri P. S. Chinnadurai] [4th July 1957

நிர்வாகத்தை ஏற்று நடத்தும் ஆட்சியாளர்கள் சோஷலிஸக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள். அந்தக் கொள்கையைத் தாங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்வதோடு இவர்கள் நிற்கவில்லை. இவர்கள், இந்தியா பூராவிலும் உள்ள கட்சிகளில் மிகப் பெரிய கட்சியாகிய காங்கிரஸ் கட்சியின் மகா சபையை இந்த ராஜ்யத்தில் கூடும்படி செய்து, அவர்களும் சோஷலிஸக் கொள்கையை ஏற்றுக்கொள்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு உதவி புரிந்தவர்கள் ஆவார்கள். பெருமைக்குரிய நண்பர்கள் அமைச்சர் அவையிலே இருந்து இந்த ராஜ்ய நிர்வாகத்தை நடத்தி வருகின்றார்கள். சோஷலிஸக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்களாகவும் நீண்ட கால தேச பக்தர்களாகவும் இருக்கும் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஸோஷலிஸப் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிய அம்சம் எதுவுமே பிரதிபலிக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். புதிதாக அரசாங்கக் கட்சியிலே சேர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள், இந்த பட்ஜெட்டைப் பார்த்து, இதுதான் ஸோஷலிஸம் என்று நினைத்துக் கொள்ளக் கூடிய அபாயம் கூட இதனால் ஏற்பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். 1957–58-ம் வருஷத்திற்கான இந்த வரவு செலவுத் திட்டமானது வழக்கமாகச் சமர்ப்பிக்கப்படும் முறையில் அமைந்திருக்கிறதே தவிர, சோஷலிஸ லட்சியத்தைக் கொண்டுள்ள ஒரு சர்க்கார்—சோஷலிஸ லட்சியத்தை நோக்கி தேசத்தை அழைத்துச் செல்லும் ஒரு சர்க்கார்—சமர்ப்பிக்கும் பட்ஜெட்டாக இல்லை என்பது பரிதாபத்திற்குரிய விஷயமாகும். இத்தகைய பரிதாபத்திற்குரிய நிகழ்ச்சியில் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களே என்பதைப் பார்க்கும்போது என்னுடைய அனுதாபத்தை அவர்களுக்குத் தெரிவிப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் உள்ள செலவு இனங்களில் மாத்திரம் சபை அங்கத்தினர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வரவு இனங்களில் அவ்வளவு அக்கறை செலுத்த வேண்டாம் என்றும் சொல்வது போல அரசாங்கத்திலுள்ள நிர்வாகஸ்தர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிர்வாகஸ்தர்கள் என்று சொல்லும்போது அமைச்சர்களை நான் குறிப்பிடவில்லை; அரசாங்கத்தை நடத்தும் பெரிய அதிகாரிகளைத் தான் குறிப்பிடுகிறேன். இந்த பட்ஜெட்டைத் தயாரித்தவர்கள் இந்த அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் தானா என்ற சந்தேகம் இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது ஏற்படுகிறது. பல ஆண்டுகளாக இந்த அரசாங்கத்தில் வேலை பார்த்துவரும் அதிகாரிகள் தான் இப்போது இந்த பட்ஜெட்டைத் தயாரிப்பதற்கு அமைச்சரவைக்கு உதவி புரிந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. காரணம், அமைச்சர்களுடைய நிச்சயமான லட்சியங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெறவில்லை என்பதை நாம் பார்க்கிறோம். அவைகள் இடம் பெறாததற்கான காரணங்களை நாம் கண்டுபிடிக்க முடிகிறது. அமைச்சர் அவர்கள் நேரிடையாக சோஷலிஸக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தயாரிக்கவில்லை என்பது என்னுடைய கருத்தாகும். சோஷலிஸ நோக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற அரசாங்கத்திற்குத் தெளிவான வரிக் கொள்கை இருக்க வேண்டும். அவ்வாறு ஒரு வரிக் கொள்கையை அமைத்துக் கொள்ளாமல் சோஷலிஸக் கொள்கையில் வெற்றி கண்டோம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியாது. அப்படிப் பார்க்கும்போது இந்தச் சர்க்காரின் வரிக்கொள்கையே சோஷலிஸ அடிப்படைக் கொள்கைக்கு வேறுவிதமாக இருக்கிறது. முதலாளிகள் பக்கம் பரிவு கொள்ளுதல், மறைமுகமாக வரி போடுவது என்பதுதான் கொள்கையாக இருக்கிறது. நேர்முகமான வரிவிதிப்புக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதற்கு உதாரணமாகப் பார்க்கப்போனால் விற்பனை வரியைக் குறிப்பிடலாம். விற்பனை வரி மறைமுகமான வரியைச் சேர்ந்ததாகும். அதை வியாபாரிகள் மீது சுமத்துகின்ற வரி என்று யாரும் சொல்ல முடியாது. மக்கள் மீது சுமத்துகின்ற இந்த மறைமுகமான வரியை நீண்ட நெடுங்காலமாகப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்த விற்பனை வரியிலிருந்து உணவுப் பண்டங்களுக்காவது விலக்கு அளித்திருந்தால் மக்களின் நலனில் அக்கறை உடையவர்களின் செயல் இது என்று



4th July 1957] [Sri P. S. Chinnadurai]

பாராட்டி இருக்க முடியும். அவ்வாறு பாராட்டுவதற்கு இயலாத முறையில் உணவுப் பண்டங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. உணவுப் பண்டங்களுக்கு விதிக்கப்படும் வரியின் அளவு குறைவு என்று சொல்லிக் கொள்ளலாமே தவிர பூரணமாக உணவு தான்யங்களுக்கு விதிவிலக்கு அளிக்காதது மிகப் பெரிய குறை என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

புதிதான வருமான அம்சங்கள் எதுவும் பிரதானமாக இந்த பட்ஜெட்டில் சேர்க்கப் படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். புதிய வரிகளை விதிக்காததற்குப் பல அங்கத்தினர்கள் பாராட்டிப் பேசினார்கள். புதிதாக வரி போடுவதா, இருக்கக் கூடிய வரியை மாற்றி அமைப்பதா என்பது சிக்கலான விஷயம். அதை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டாலும் சோஷலிஸ லட்சியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற அரசாங்கம் வருமானத்தை பெருக்கிக் கொள்ள அதன் அடிப்படையில் எப்படி வரிவிதிப்பது என்பதையும், பணம் தரும் ஊற்றுக்களைப் புதிதாகத் தோண்டிக் கொள்வதற்கும் வழிவகைகள் என்ன என்பதைச் சிந்தித்து இருக்க வேண்டும். அவ்வாறு பார்க்கும்போது மிக எளிதாக நான் ஒன்றைக் குறிப்பிட முடியும்.

இந்த ராஜ்யத்திலுள்ள பஸ் போக்குவரத்து முழுவதையும் அரசாங்கம் என் பொதுச் சொத்தாக்கக் கூடாது என்று கேட்கிறேன். அரசாங்கம் அவற்றைப் பொதுச் சொத்தாக்க வேண்டுமென்று நான் சொல்லும்போது அரசாங்கமே எல்லா பஸ்களையும் ஏற்றுக் கொண்டு ஓட்ட வேண்டும், அவற்றுக்கு வேண்டிய ஆட்களை நியமிக்க வேண்டும் என்ற கருத்தில் சொல்லவில்லை. அதில் வருகின்ற வருமானம் பொது மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இந்த ராஜ்யத்தில் சுமார் நாலாயிரம் பஸ்களுக்கு மேலே இருப்பதாக நான் அனுமானிக்கிறேன். அதன்மூலமாகப் பல கோடிக்கணக்கான ரூபாய்களைப் பெறுவதற்கு இயலுமே! அதற்குரிய வழிமுறைகளை என் ஏற்று நடத்தக்கூடாது? அதை மறுக்கக் கூடிய தனிப்பட்டவர்கள் இந்த ராஜ்யத்தில் யார் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எந்தக் கட்சியார் அதை எதிர்க்கின்றார்கள்? எந்தப் பக்கத்தில் இருந்தும் எதிர்ப்பு வராத அந்தத் திட்டத்தை சர்க்கார் ஏற்று நடத்தியிருக்கலாம் என்று சொல்ல விரும்புகிறேன். எவ்வாறு அந்த பஸ்களை எல்லாம் சர்க்கார் பொதுச் சொத்தாக்க முடியும் என்று பார்க்கலாம். அங்கங்கே ஜில்லாக்களில் கார்ப்பரேஷன்களை அமைக்கலாம். அதில் அரசாங்கப் பிரதிநிதி, தொழிலாளர்களுடைய பிரதிநிதி, பஸ்களை உபயோகிக்கின்றனவர்களுடைய பிரதிநிதி ஆகியோரையும் அங்கம் வகிக்கச் செய்யலாம். அவர்களைக் கொண்டு அந்த நிர்வாகம் நடைபெறும்படியாகச் செய்து அதில் கிடைக்கும்படியான பணம் பொதுமக்களுக்குக் கிடைக்கும்படியாகச் செய்திருக்கலாமே!

அவ்வாறு செய்வதானால் பஸ் முதலாளிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமே என்று சொல்லக்கூடும். நஷ்ட ஈடு கொடுப்பதானால் பணம் இல்லை என்றும் காரணம் காட்டக்கூடும். அதற்குத் தான் நம்மிடத்தில் மருந்து இருக்கிறதே! ஒரு ஆண்டில் நஷ்ட ஈட்டுத் தொகை பூராவையும் கொடுக்க வேண்டாம். தாராளமாக இருபது ஆண்டுகளில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். சேவிங்ஸ் சர்டிபிகேட் வழங்கலாம். பாண்டுகளை வழங்கலாம். அப்படிச் செய்து விட்டு அதைப் பொதுச் சொத்தாக ஏன் செய்ய முடியாது என்று கேட்கிறேன்.

சோஷலிஸப் பொருளாதாரத்தில் ஏற்கெனவேயுள்ள உற்பத்தியைப் பெருக்குவதும், புதிதாக உற்பத்தியைப் பெருக்கும் இனங்களைக் கண்டுபிடிப்பதும், அதன் மூலம் தேசீய செல்வத்தைப் பெருக்குவதும், அவ்வாறு பெருக்கப்படுகிற தேசீய செல்வத்தை மக்களிடையே சமமாக வினியோகிப்பதும் தான் மிகவும் பிரதான அம்சமாகும். அந்த அம்சங்களை நினைவில் கொண்டு இந்த பட்ஜெட்டை ஆராய்ந்து பார்ப்போமேயானால் இதில் அவை எதற்கும் இடம் அளிக்கப்படவில்லை என்பதை நிச்சயமாகச்

சொல்ல முடியும். உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய அம்சத்திலும் இந்தச் சர்க்கார் கவனம் செலுத்தவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லமுடியும். குறிப்பாக உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவது இந்த சர்க்காரின் நோக்கமானால் சர்க்கார் நிலச் சீர்திருத்தத்தை உடனடியாகக் கொண்டுவந்திருக்கவேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய சொல்பெருக்கிலே நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட இல்லாதது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். நிலச் சீர்திருத்தம் செய்வதைப் பற்றியோ, அவை எவ்வாறு செய்வது என்பதைப் பற்றியோ, எப்போது செய்வது என்பதைப் பற்றியோ அவர்களுக்கு நினைப்பாவது இருக்கும் பட்சத்தில் அவர்கள் ஒரு வார்த்தையும் சொல்லாமல் விட்டிருக்கமாட்டார்கள். நிலச் சீர்திருத்தம் எப்படிச் செய்யவேண்டுமென்கிற சர்ச்சையை நான் கிளப்ப விரும்ப வில்லை. ஆனால் நிலச் சீர்திருத்தம் செய்வதற்கு ஒரு மார்க்கம் தேடப்படவில்லை என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். நிலச்சீர்திருத்த விஷயத்தில் விநோபாஜி அவர்கள் பேரிலேயே பாரத்தைப்போட்டு விட்டு நாம் சும்மா இருந்தால் ஒரு பொழுதும் நிலச் சீர்திருத்தம் வராது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். விநோபாஜி அவர்கள் தம்முடைய கால்நடைச் சுற்றுப்பிரயாணத்தில் நாட்டில் நல்லதொரு சூழ்நிலையை சிருஷ்டித்திருக்கிறார்கள். “ நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்கள், “ அதில் நேரிடையாக நாம் உழைத்துப் பாடுபடாவிட்டால் அது நமக்குச் சொந்தம் இல்லை” என்கிற நினைவுக்கு உள்ளூர வந்துகொண்டிருக்கிறார்கள். நிலம் இல்லாத ஏழைகள் தாம் நிலத்தை உழுது பயிரிட்டுக்கொண்டிருக்கும் காலம் வரையிலும் நிலம் நமக்குத் தான் சொந்தம் என்கிற நினைவோடு வேலை செய்கிறார்கள்.” இப்படிப்பட்ட கருத்துகள் உருவாகிக் கொண்டு வரும் சமயத்தில், தக்க சூழ்நிலையில் நாம் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை ஏன் கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டு வருவதற்கு முயலவேண்டும் என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அதோடு கூட சோஷலிஸ்டுப் பொருளாதார அமைப்பில் இன்னொரு முக்கிய அம்சம் உண்டு. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பது தான் அது. நம்முடைய ராஜ்யத்தில் முப்பது ஆண்டுகளாக கூட்டுறவு இயக்கம் வளர்ந்து வந்திருக்கிறது. முப்பது ஆண்டுகளாக நம்முடைய ராஜ்யத்தில் வேரூன்றிவிட்ட ஒரு இயக்கம் இன்று சீரழிவான நிலைமையில் இருந்து வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியிலே நம்முடைய சர்க்கார் அதிக அக்கறை காட்டவில்லை என்பது என்னுடைய வருத்தம். அண்மையில் தான் சீனாவில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளாக பத்து லட்சத்திற்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கங்களை அங்கே ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்திய சர்க்காரின் சார்பில் அங்கு சென்று வந்த தூது கோஷ்டி அதிகார பூர்வமாக அரசாங்கத்திற்குக் கொடுத்த அறிக்கையில் அங்கு வளர்ந்து வரும் கூட்டுறவு இயக்கத்தின் பெருமைகளைப் பற்றி மிகவும் பாராட்டி இருக்கிறார்கள். ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளாக அங்கே கூட்டுறவு இயக்கம் அவ்வளவு வளர்ச்சி பெறுமானால் முப்பது ஆண்டு காலத்தில் நம்முடைய சர்க்கார் அத் துறையில் அதிக கவனம் செலுத்தி இருப்பார்களேயானால் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கவேண்டும்? இவர்களும் ஏன் அக்கறை செலுத்தக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கியமான இடம் அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உற்பத்தியாளர்—உபயோகிப்போர் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டும் என்பது என்னுடைய விருப்பம் ஆகும்.

அதோடு கூட்டுறவு சம்பந்தப்பட்ட வரையில் அதன் வேலைகளைக் கவனிப்பதற்காக தனி அமைச்சர் ஒருவரை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். இவ்வாறு அமைச்சர் தொகை பெருகுமானால் அதிகமான செலவு ஏற்படுமே என்ற அபிப்பிராயத்தைப் பொறுத்த வரையில் இதற்காக ஏற்படுகின்ற செலவைக் காட்டிலும் இதனால் ஏற்படுகின்ற நன்மை இருக்கிறதே அது மிகவும் பாராட்டு



வதற்குரியதாக இருக்கமுடியும் என்பதனால்தான் வற்புறுத்துகிறேன். கூட்டுறவுத் துறையில் மிக்க நம்பிக்கை கொண்ட ஒருவரை இந்தத் துறை அமைச்சராகப் போட்டு அவரும் தம்முடைய முழு நேரத்தையும் இவ்விஷயத்தில் செலவழிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விலைவாசிகள் ஏறிக்கொண்டுதான் இருக்கின்றன. இதைப்பற்றி விசாரணை செய்து முடிவு செய்வதற்காக அகில இந்திய ரீதியில் இந்திய அரசாங்கம் ஒரு கமிட்டியை அசோக் மேத்தா தலைமையில் நிறுவியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் அறிக்கை இந்த ராஜ்ய சர்க்காரின் பிற்கால நிர்வாக அமைப்புக்குக் கூட வழி வகுப்பதாக இருக்க முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்களின் அறிக்கையில் பருத்தி மணங்கு ரூபாய் 100-க்கு விற்பதாகப் போட்டிருக்கிறது. அது, அச்சுப் பிழையால் ஏற்பட்டதோ அல்லது நிர்வாகக் குழுவின் தவறான தகவலால் வந்ததோ என்று தெரியவில்லை. இம்பீரியல் மாண்டுக்குக் கூட பருத்தி 100 ரூபாய்க்கு ஒரு போதும் விற்பதில்லை என்று மறுபடியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, சமீப காலத்தில் புகையிலையின் மீதுள்ள வரி உயர்த்தப்பட்டிருப்பதன் காரணமாக புகையிலையின் விலை இறங்கிவிட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது விவசாயிகளின் தலையில்தான் விழுகிறது. 80 ராத்தல் மூட்டையை 4 ரூபாய்க்குக் கொடுப்பது என்றால் அது எவ்வளவு கஷ்டமான காரியம். நமது நிதி அமைச்சர் அவர்கள் கோவையில் இருந்து வருவதால் அவர்களுக்கு அங்குள்ள நிலைமை நன்கு தெரியும். கோவையில்தான் பெரும்பாலான புகையிலை விளைச்சல் இருக்கிறது. அங்குள்ள நிலைமையை அங்கு சுற்றுப்பிரயாணம் செய்து பார்த்தால் தெரியும். 80 ராத்தல் மூட்டையை ரூபாய் 4-க்குக் கொடுக்க விவசாயிகளுக்கு பணம் இல்லாததால் அவர்கள் அதை வெட்டிக் குப்பைக்காக போடுகிறார்கள். இந்த நிலை தவிர்க்கப்படவேண்டும். அதற்குரிய மார்க்கங்கள் தேடப்படவேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது ஒன்று உண்டு, கிராம மக்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லவேண்டியிருக்கிறது. 100-ல் 82 மக்கள் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். அப்படி கிராமங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் விவசாயிகளேயாவார்கள். அவர்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. கவர்னரது உரையின் மேல் நான் பேசியபோதே குறிப்பிட்டேன். 16 கதிர் சர்க்காக்களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று. அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு அது பட்ஜெட்டில் இடம் பெறும் என்று நம்பியிருந்தேன். ஆனால் அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்து வருந்துகிறேன். புதிதாக ஆலைகள் திறப்பதற்கு லைசென்ஸ்கள் கொடுப்பதற்குப் பதிலாக 16 கதிர் சர்க்காக்களை பரவலாக ராஜ்யம் பூராவும் அமைத்துக்கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்தால் பரவலான முறையில் அத்தொழில் வளருவதோடு ஏராளமான மக்களுக்கும் வேலை கிடைக்க அது ஒரு வாய்ப்பளிக்கும் என்று நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லிக்கொண்டு இப்போதைக்கு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு இலாக்காக்களில் இன்று நடக்கும் ஊழலைப் பற்றிச் சொல்லப்போனால் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் நேரம் இல்லாத காரணத்தால் அதிகம் விவரித்துச் சொல்ல விரும்பவில்லை. ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ஊழல் என்றும் லஞ்சம் என்றும் நான் குறிப்பிடும்போது அமைச்சர்களோ அல்லது அவர்களைச் சார்ந்திருக்கிற அவர்களின் கட்சி அங்கத்தினர்களோ ஒரு போதிலும் மனக்குறைப்பட்டுக்கொள்ள வேண்டியதில்லை. இந்த லஞ்ச ஊழலும் இவர்கள் உண்டு பண்ணியதல்ல. அவர்களுக்கு முன்னாலேயே எப்பொழுதோ ஏற்பட்டு விட்டது. பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்டு விட்டது. ஆகவே அதைப் போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய

வேண்டுமென்று வற்புறுத்துகிறேனே தவிர அதைப் புகுத்தியது நீங்கள் என்றோ அல்லது அதற்காக நான் யாரையும் குற்றம் சொல்வதாகவோ எவரும் எண்ண வேண்டாம். நான் சொல்வது அதைப் போக்க வேண்டுமென்றுதான். இந்த ராஜ்யத்திலே ஒரு நல்ல அரசாங்கத்தை நடத்த வேண்டியதின் பொறுப்பு ஒரு கட்சியுனுடையதே என்று யாரும் எண்ணக் கூடாது. எல்லாக் கட்சியினருக்கும் அந்தப் பொறுப்பு உண்டு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அந்த நல்ல எண்ணத்தோடுதான் நாம் இன்று இங்கு கூடி செயல்படுகிறோம். ஆகவே இந்த ஊழல், லஞ்சம் இவைகளை ஒழிப்பதற்கு அரசாங்கம் போதிய அக்கறை காட்டவேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். ஆடிட் ரிப்போர்ட்டின்படி சென்ற வருஷம் 99 லட்சம் ரூபாய் விரயம் செய்யப்பட்டிருப்பதாக காண்கிறோம். அதற்கு முந்தைய வருடம் 78 லட்சம் ரூபாய் விரயமாக்கப்பட்டிருக்கிறது. கதர் திட்டத்தை தீவிரப்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் தொகைகள் ஒதுக்கப்பட்டால் அதுவும் சரிவர செலவு செய்யப்படாது அங்கும் ஊழல் மலிந்திருக்கிறது. சுமார் இரண்டு கோடியே எழுபத்தி ஒன்பது லட்சம் ரூபாய்களுக்கு 1952-ம் வருஷம் முதல் கணக்குக் கொடுக்கவில்லையென்று ஆடிட் ரிப்போர்ட்டில் காணப்படுகிறது. அகில பாரத சர்க்கா சங்கம் இந்தியா முழுவதும் பெருமைப்படத்தக்க முறையில் கதர் அபிவிருத்திக்கு வழிகாட்டி ஏற்பாடு செய்தது. அத் திட்டத்தை இன்னும் தீவிரப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு கதர் இலாகாவை ஆரம்பித்தோம். இந்த இலாகாவின் ஊழல் பற்றிய ஆடிட்டரின் குறிப்பினைக் கண்டு கதரில் நம்பிக்கை கொண்ட என் போன்றவர்கள் மனங்குன்றி, வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. அடுத்தபடியாக நமது நிர்வாகத்தை சீரமைக்க எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சம பொறுப்புண்டு. ஆகவே, நீங்கள் எல்லாக் கட்சிக்காரர்களையும் உங்கள் நம்பிக்கையில் எடுத்துக்கொள்ளவேண்டும். நமது நாட்டின் முன்னேற்றப் பாதையைச் செப்பனிட எல்லோருக்கும் சம பங்குண்டு. நமக்கு மாத்திரமன்றி நம்முடைய சந்ததியாருக்கும் நாம் நல்ல பாதையை செப்பனிட விரும்புகிறோம். அதில் எல்லோருக்கும் சம பங்குண்டு. ஆகவே எங்களை உங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக எடுத்துக்கொண்டு அரசாங்க நிர்வாகத்தை சீரமைக்க ஏன் முயற்சிக்கக் கூடாது என்று கேட்கிறேன். தேசபக்தர்கள், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும் சரி, அவர்களும் இந்த நாட்டின் நலனில் அக்கறையுள்ளவர்கள் என்று நம்பிச் செயல்படுமானால் தான் இந்த அரசாங்கம் ஜனநாயகப் பாதையில் செல்ல முடியும். அதுதான் சோஷலிஸ லட்சியத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்ல முடியும் என்று சொல்லிக் கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

1.37 p.m. * **SRI C. N. ANNADURAI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே நமது மாகாண நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னிலையில் விவாதத்திற்காக வைத்திருக்கிற வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலனை செய்து பார்க்கிற பொறுப்பு எல்லாக் கட்சிகளுக்கும் இருப்பதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருப்பதினாலேயும், அதிலே கலந்து கொள்கிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதில் உண்மையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆராய்வதற்கு முன்னால் இந்த வரவு செலவுத் திட்டம் எந்த நேரத்திலே நம்மிடத்தில் தரப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வது அதனுடைய தன்மைகளை உண்மையில் புரிந்து கொள்வதற்கு மெத்த உதவியாயிருக்கும் என்று கருதுகிறேன். அப்படி ஆராய்வதில் நமக்குச் சாதகமான சூழ்நிலைகள் மொத்தம் எவ்வளவு இருக்கின்றன ? இயற்கை நமக்கு இவ்வாண்டு உதவி புரிந்திருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்திருக்கின்றார்கள். இந்த நாட்டு மக்களிடையே எத்தனையோ மாதிரியான மனக் குமுறல்கள் இருந்தாலும் இந்த நிமிடம் வரை சட்டங்களுக்கு அடங்கி நடக்கிற பொறுப்புள்ள குடிமக்களாக இருந்துகொண்டு, கேட்கின்ற வரிகளை எல்லாம் அவர்கள் தருகிறார்கள். தீட்டப்படுகிற சட்டங்களுக்கு மதிப்பளிக்கிறார்கள். இது நல்ல சூழ்நிலைதான். அதேபோன்று நம் நாட்டில்



இருக்கிற பத்திரிகைகளில் பெரும்பாலானவை நிர்வாகத்திலே, திட்டங்களிலே, கொள்கைகளிலே எந்தமாதிரி குறைபாடுகள் இருந்தாலும், வலிவோ, பொலிவோ குறைந்திருந்தாலும், அந்தப் பொலிவினை அவர்கள் இழந்துவிடுகிற நேரத்திலே, நல்ல வர்ணப் பூச்சிகளாக அவைகளைக் காட்சி அளிக்கும்படி செய்து இன்றைய தினம் ஆதரவு அளித்து வருகின்றன. இது மட்டுமல்ல. நிர்வாகத் திறமையும், நல்ல நம்பிக்கை பெற்றவர்களையும், திறமை படைத்த அமைச்சர்களையும் பொதுவாழ்விற்கென்று தன்னை ஒப்படைத்துவிட்டு அதைத் தன் கட்சி தவிர வேறு எந்தக் கட்சியாலும் சாதிக்க முடியாதென்று நம்பிக் கொண்டிருக்கிற, தங்கள் கட்சியை எதிர்க்கிறவர்கள் சிலரை அணைத்து அழித்தும் சிலரை ஒழித்தும் கட்டத் திட்டமிடும் திரு காமராஜின் தலைமையில் இன்றைய மந்திரிசபை இருக்கிறது. அது மாத்திரமல்ல. இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பார்த்துப் பாடம் பெறக்கூடிய வகையில் நல்ல திறமை வாய்ந்த அதிகார இயந்திரம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் "ஆனால்" என்ற அருவருப்பான சொல்லை நானாகத் தேடிக்கொள்ளவில்லை ; அது தானாகவே துரத்திக்கொண்டு வருகிறது. ஆனால் இவ்வளவு நல்ல சூழ்நிலைக்குப் பிறகும் விலைவாசிகள் ஏறியிருக்கிறது, வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்து ஆடுகிறது நம் நாட்டில். நாட்டில் பற்றாக்குறை எல்லாத் திக்கிலும் துரத்திக்கொண்டு இருக்கிறது, சர்க்கார் அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள், சர்க்கார் துணை அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள் அத்தனை பேர்களும் இன்றைய தினம் மனக்குறையோடுதான் இருக்கிறார்கள். அதைப் போக்க நல்ல சூழ்நிலை நம்மிடம் உருவாக்கப்படுவதில்லை. இந்த நிலையில் அலுவலகத் துறையிலுள்ளவர்கள் சர்க்காருடைய உதவியைப் பெற்றிருக்கிறார்கள் என்று வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே, அப்படி அலுவலகத் துறையிலுள்ளவர்கள் யாரும் மனத் திருப்தியோடு இல்லை என்பதை அமைச்சரவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நான் இதை நினைவூட்டுவது, அவர்கள் பேரில் வைத்திருக்கும் அன்பையும், அபிமானத்தையும் அதிகப்படுத்துவதற்கே தவிர குறை கூறுவதற்கல்ல. குறை கூறுவதற்கு இருக்கின்ற பல காரியங்களைப்பற்றி இம்மன்றத்தில் விளக்கமாகப் பேசப்பட்டது என்று மரியாதையாகச் சொல்லுகிறேன். இம் மன்றம் ஒவ்வொருவரும் தங்களுடைய பேச்சுத்திறமையை காட்டிக்கொள்வதற்காக கூட்டப்படவில்லை—ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியங்களையும் பற்றிக் கூறுவார்கள். அதற்கு திருப்பி பதில் அளிப்பது இதுதான் இங்கே நடந்தது—ஆனால் அவ்விதம் இருத்தல் கூடாது என்று மன்ற உறுப்பினர்களுக்கும், எனக்கும் நானே கவனமூட்டிக்கொள்கிறேன். ஆனால் எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் அத்தனை காரணங்களையும் காட்டி முறைப்படி குற்றம் சாட்டுகிறார்கள். காரணம் ஒரு கொள்கையை கடைப் பிடித்து அதன்படி நின்று தக்க ஆதாரங்களுடன், கட்டுப்பாட்டுடன், கண்ணியத்துடன், எடுத்துரைப்பதற்குள்ள, தகுதி எதிர்க் கட்சிக்காரர்களிடம் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் இருக்கிறது. இந்திய துணை கண்டமதன் மற்ற சட்டசபைகளில் எல்லாம் என்ன நடந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்திற்கு கவனமூட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் பார்த்தோம். தேர்தலில் தோற்றுப்போன ஒருவர் கவர்னராக பதவி பெற்று சட்ட சபையில் வந்து ஆற்றிய உரையை எதிர்த்து பெரிய அமளி நடை பெற்றிருக்கின்றது. நம்முடைய மாகாணத்தில் பெருமையாகவும் திறமையாகவும் தம்முடைய பதவியை நிர்வகித்து கொண்டிருந்த கவர்னர் பிரகாசா அவர்கள் பம்பாய் சட்ட மன்றத்தில் தன்னுடைய உரையை நிகழ்த்துவதற்காகச் சென்ற நேரத்தில் இருமொழி இராஜ்யம் வேண்டாம் என்ற ஒரு காரணத்தைக் காட்டி சட்ட சபையில் ஒரு பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது. எல்லாவற்றையும் விட மேலாக, சபா நாயகர் அவர்களே, ராஜஸ்தான் சட்ட சபையிலே திரிலோகசிங் என்பவர் சபா நாயகர் வெளியே போயிருக்கிற சமயம் பார்த்து சபா நாயகருடைய இருப்பிடத்திலே ஏறி இருந்துகொண்டு அகல மாட்டேன் என்றார். இத்தனை சம்பவங்கள் எல்லாம் மற்ற சட்டசபைகளில் நடக்கின்ற இந்தச் சமயத்தில், இங்கு கட்டுப்பாட்டோடு, கண்ணியத்தோடு, பாசத்தோடு

நடந்துகொள்ளுகிற எங்களுடைய தன்மையை நீங்கள் உணர்ந்துகொள்ள மறுக்கின்றீர்கள், அதோடு எங்களைப்பற்றி கண்டித்து குறையும் கூறி வருகிறீர்கள் என்றால், நீங்கள் எங்களை நான் முன்னால் குறிப்பிட்ட அந்த பாதைக்குத் திருப்பி விடுகின்றீர்கள் என்றுதான் அர்த்தம். நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தின் அடிப்படையிலே நின்றுதான் பணியாற்றுகிறோம். நீங்கள் ஆணவமாக வேண்டுமானால் கருதிக் கொள்ளலாம். நாங்கள் இந்த ச[illegible]க்கு வந்தது என்றைக்கும் எதிர் அங்கத்தினர்களாகவே இருப்பதற்காக ந[illegible]யவில்லை—இன்றைக்கில்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப்[illegible] பொறுப்பை ஏற்கத்தான் போகிறோம். (ஆரவாரம்.) ஆகவே நாங்கள் பொறுப்பை உணர்ந்திருக்கின்றோம். பொறுப்பற்ற முறையில் நாங்கள் நடந்து கொள்ளமாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக இங்கு பல அங்கத்தினர்களும் தங்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன குறைபாடுகளை யெல்லாம் நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் ஒரு குறிப்பு எடுத்து வைத்திருக்கின்றேன். யார் யார் எதை எந்தச் சொன்னார்கள் என்றல்ல—என்னென்ன குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள் என்பதை குறித்து வைத்திருக்கின்றேன். ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியின் நிலைமைகளைப் பன்முறை எடுத்துச் சொல்லியும், அவைகள் கவனிக்கப்படவில்லை. எங்களுடைய தொகுதி கவனிக்கப்படுமா என்று தெரிய வேண்டும் என்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களில் பலரும் கேட்டார்கள். நான் பிற உறுப்பினர்களைப்பற்றி கவலைப்படவில்லை. காங்கிரஸ்காரர்களே இந்தத் திண்டாட்டம் அடைகின்றபொழுது மற்றவர்களுடைய நிலைமையைப் பற்றி கூறவே வேண்டாம். கனம் அங்கத்தினர் அம்மையார் ஒருவர் கூறினார் "எந்தெந்த மந்திரிகளையெல்லாமோ அழைத்து வந்து எங்களது குறைகளை எடுத்துச் சொன்னோம். கடைசியில் கனம் மந்திரி கக்கன் அவர்களை கூட அழைத்து வந்து எங்கள் குறைகளை சொன்னோம். அவைகளுக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. எங்களது துன்பக் கண்ணீர் துடைக்கப்படவில்லை" யென்றும் அம்மையார் அவர்கள் கசிந்துருகிக் கண்ணீர் விட்டார்கள். ஏழைகளாகிய நாங்கள், எதிர்க் கட்சியிலுள்ளவர்களாகிய நாங்கள், 'இதுவும் ஒரு கட்சியா? இவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?' என்று நீங்கள் நினைக்கின்ற நேரத்தில், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நல்ல சீர்திருத்தங்கள் எல்லாம் கொண்டு வந்த பிறகும், நல்ல நல்ல திட்டங்கள் எல்லாம் கொண்டு வந்த பிறகும், இவைகள் இத்தனை மோசமாக இருப்பதற்குக் காரணம் என்னவென்று என் பேதை நெஞ்சம் எண்ணத் துணிகின்றது. மற்றொரு அம்சம், விவசாயிகளுக்கு அறுபது நாற்பது சட்டம் வந்த பிறகு அதனால் நிலச்சுவான்தார்களால் விவசாயிகள் பாதிக்கப்படுவதின் நிலைமைகளைப் பற்றி பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். சட்டங்களை நிறைவேற்றினால் மாத்திரம் போதாது. இதை நடத்துகின்ற நிர்வாக இயந்திரம் பழுது ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பல இடங்களில் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். மட ஆலயங்களில் உள்ள ஏராளமான நிலங்கள் உழவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று அரசாங்கத்தை கவனப்படுத்துகின்ற வகையில் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும்போது, 'ஐயோ! இவர்கள் எல்லாம் நம் பக்கத்தில் இருக்கவேண்டியவர்கள், தேர்தலில் பிரிந்து போய் விட்டார்களே' என்று எண்ணக்கூடிய நிலையில் இருக்கிறது. (சிரிப்பு.) இவை தவிர ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை, கிராமங்களுக்குச் சரியான பாதை போக்குவரத்து செய்து கொடுக்கப்படவில்லை, மின்சார கெடுபடி அதிகமாக இருக்கிறது, இலங்கையிலிருந்து ஏற்படுகின்ற கஷ்டங்கள், இவைகளுக்கு எல்லாம் நிவாரண வழி வேண்டும் என்று இன்று காலையிலிருந்து பல அங்கத்தினர் கூறுகின்றனர். இவைகளையெல்லாம் நாங்கள் உங்களைப்பார்த்து கேட்கும்போது நீங்கள் கோபப்படுவானேன்? வருத்தப்படுவானேன்? நாங்கள் இவ்விடத்திற்கு உங்களுக்கு லாலி பாடுவதற்காக வரவில்லை. குற்றங் குறைகளை எடுத்துக் கூறவே வந்திருக்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. நாங்கள் இங்கிதம் தெரி



யாமல் நடந்து கொள்ளவில்லை. வேலையில்லா திண்டாட்டம் போகவில்லை. நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை, குடி தண்ணீர் வசதி கிடைககவில்லை என்பதனையெல்லாம் பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினார்கள். இவ்வளவுக்கும் காரணம் என்ன? காங்கிரஸ் அங்கத்தினர்களே, உங்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் ஒன்று கூறுகிறேன். எதிர் கட்சியிலுள்ளவர்களுக்காவது குறைகள் இருக்கும். அவை நிறைவேற்றி தருவதற்காக அவர்கள் குறைகளை கூறவேண்டியதுதான். ஆனால் [illegible]ளும் கட்சிக்காரர்களாகிய உங்களுக்கு பல கமிட்டிகள் இருக்கிறது. அ[illegible] மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்து உங்களது குறைகளை தீர்த்துக் கொண்டிருக்கலாம். அவ்விதமிருந்தும் நீங்கள் இங்கு எடுத்துச் சொல்லுவதற்கு காரணம் என்ன? நீங்கள் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டீர்களா அல்லது அவர்களது செவிகளில் நீங்கள் கூறுவது ஏறவில்லையா அல்லது எங்கள் எதிரில் சொன்னாலாவது அமைச்சர்கள் வெட்கப்பட்டுக்கொண்டாவது குறைகளைத் தீர்ப்பார்கள் என்பதற்காகப் பேசுகிறீர்களா? என்றெல்லாம் எண்ணத் தோன்றுகிறது. ஆகவே இம்மாதிரியான குறைகளைப் பற்றி விரிவாக பேசவில்லையென்றால் எதிர்கட்சிக்காரர்களாகிய எங்களுக்கு பட்ஜெட்டின் அடிப்படை கொள்கைகளைப்பற்றி இன்னும் அதிகம் பேசுவதற்கு இடம் கிடைத்திருக்கும். இங்கு கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் எல்லாம் நிர்வாக இயந்திரம் சரியாக வேலை செய்யவில்லை என்பதுதான். ஜனநாயகம் வளருவதற்கு, நிர்வாக கொள்கை அடிப்படையில் கவனிக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் தங்களின் அனுமதியின் பேரில் இந்த மன்றத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில் ஒரு பகுதியை எடுத்துக்காட்ட விரும்புகிறேன் :—

"The Finance Minister in his Budget speech will deal with the policies of the new Ministry."

என்று வாக்களித்திருப்பதனால் நிதி அமைச்சர் அவர்களது உரையில் கொள்கை அளவில் அறிவிக்கப்பட்டிருக்கும் என்று எண்ணி இதைத் துருவித் துருவிப் பார்த்தேன். காணவில்லை. இதில் கொள்கை விளக்கம் இல்லாததற்கு இரண்டு காரணம் காட்டப்படலாம். ஒன்று எங்களது கொள்கை உங்களுக்குத் தெரியாதா என்று கேட்பது, இன்னொன்று பொருளாதாரத்தையும் அரசியல் சாஸ்திரத்தையும் சேர்த்து புள்ளி விவரங்களோடு தருகின்றேன், பார்—என்று சொல்லுவது. நான் பள்ளியில் இரண்டு பாடங்களையும் சேர்த்து ஒன்றாய்த்தான் படித்தேன். இருந்தும் இதில் கொள்கை விளக்கம் என்று ஒன்றுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் உண்மையிலேயே இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் ஆராய்ந்தவரையிலும் இந்த வரவு செலவு திட்டத்தில் தரப்படுகின்ற விபரங்கள் எல்லாம் ஒரு குழுவின் கீழ் தயாராக்கப்படுகிறது. இந்த குழுவினால் பரிசீலிக்கப்பட்ட மூன்று அம்சங்களைப் பார்த்தால்தான் இந்த வரவு செலவு திட்டத்தின் தாரதம்மியம் நன்றாக தெரியும்.

உதாரணமாக இன்றையதினம் கனடாவில் இம்மாதிரி வரவு செலவு திட்டத்தை ஆளும் கட்சியினர் கொண்டுவந்தால் உண்மையிலேயே அச்சத்தோடு கொண்டுவந்தார்கள் என்று கருதலாம். ஏனென்றால், அங்கே ஆளும் கட்சியினருக்கும் எதிர்கட்சியினருக்கும் இடையிலே உள்ள எண்ணிக்கையின் வித்தியாசம் 10, 12 தான். இன்றைய தினம் என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியினர் நாங்கள் 15 பேர்கள் தான் இருக்கிறோம் என்று கூறுவார்கள். அதுமாத்திரமல்ல. எதிர்க் கட்சியிலுள்ள எல்லோரையும் கூட்டிச் சேர்த்துப் பார்த்தாலுங்கூட, கூட்டுவதும் சேர்ப்பதும் கடினம். அத்தனை பேர்களையும் காட்டிலும் 3 மடங்குக்கு மேல் அதிகமான பலமுள்ளவர்கள் ஆளும் கட்சியினர். அதனால் அவர்களுக்கு நிச்சயம் தெரியும். என்ன குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டாலும் என்ன ஒழுங்கீனங்கள் எடுத்து விளக்கப்பட்டாலும், எந்தக் கொள்கை விமர்சனம் செய்யப்பட்டாலும், இன்றுதானே பேசப் போகிறார்கள், பேசி என்ன காரியம் நடக்கப் போகிறது, என்ன ஆகிவிடப்போகிறது என்ற எண்ணம் தோன்றியிருக்கக்கூடும். இந்த நம்பிக்கையின் பேரிலேயே

[Sri C. N. Annadurai] [4th July 1957

இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எங்கள் எண்ணிக்கையை மட்டும் கருதாமல், எண்ணத்தை கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்களைப் பலர் பாராட்டினார்கள். பாராட்டுதலினால் அவருக்கு அஜீரணம் ஏற்பட்டுவிடுமோ என்ற முறையில் பல அங்கத்தினர்கள் பாராட்டினார்கள். ஆனால் என்னுடைய பாராட்டுதல் இனிப்போடு கொஞ்சம் காரம் கலந்ததாக இருக்குமாதலால் அவருக்கு ஏற்பட்ட அஜீரணம் மாறி ஜீரணம் ஆகிவிடும். தான் யார் என்று நாங்கள் அவரை அறிந்து கொள்ள முடியாமல் நடந்து கொண்டதற்கு நிதி அமைச்சரை வெகுவாகப் பாராட்டுகிறேன். தான் யார் என்று காட்டாமல் இருப்பதற்குக் காரணம் கண்டுபிடிப்பதற்கு முன்னால் தான் யார் என்று காட்டிக்கொள்ளுவது நல்லது அல்ல என்று கருதினார்களோ, அல்லது தான் யார் என்று கண்டு பிடிக்கக்கூடாது என்று கருதினார்களோ, தான் யார் என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை. நான் சொல்லுவது பொருளாதாரப் பாஷையிலே சொல்லுகிறேன். அதிக வரி போட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்குவதை ஆதரிக்கின்றாரா, கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு நாட்டு நிர்வாகத்தை ஓட்டிச் செல்லுகின்ற பரம்பரை பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா, துண்டு விழும் பட்ஜெட்டினால் நாட்டிற்கு நன்மை உண்டு என்று கருதுகின்ற பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா, உபரி பட்ஜெட் நாட்டிற்கு நல்லது என்று கருதுகின்ற பொருளாதார நிபுணராக இருக்கின்றாரா என்பதை அவர் வார்த்தைகளில் காணமுடியவில்லை. துண்டுவிழும் பட்ஜெட்டைப் பற்றி பேசுகின்றபொழுது "Deficit Budget is not bad. It is a virtue also" என்று சில அங்கத்தினர்கள் பாராட்டினார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ முத்தையா செட்டியார் அவர்கள் "இதுதான் ஒரு நல்ல பொருளாதாரம். பன்நெடுங்காலமாக நான் கூறிக்கொண்டு வந்த யோசனையை இப்பொழுதுதான் ஏற்றுக்கொண்டார்கள்" என்று மிக மிக அவசரமாக கூறிச் சென்றார்கள். பற்றாக்குறை பட்ஜெட்டின் மூலம் நாட்டு நலனைச் சரிக்கட்ட விரும்பினாரா, அல்லது நிதி அமைச்சருக்கு கட்டுக்கடங்காத நிலைமையில் இந்த பட்ஜெட்டை கொண்டுவந்திருக்கிறாரா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இரண்டிற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஜெர்மன் தேசத்தை ஆண்ட ஹிட்லர் துண்டு விழும் பட்ஜெட்டை சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான ஆயுதம் என்று கருதி, கட்டுக்கடங்காத அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, ஏராளமாக ஜெர்மன் மார்க்கு நோட்டுகளை அடித்து துப்பாக்கியின் துணை கொண்டு விநியோகித்து, தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. பற்றாக்குறை பட்ஜெட்டின் மதிப்பையும் நிதி அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. ஒரு சமயம் நிதி அமைச்சர் அவர்கள் துண்டு விழும் பட்ஜெட் இருப்பதுதான் சரி என்று கருதுகிறாரா என்பதற்காக சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது அவர் நிகழ்த்திய பேருரையை நான் மிக்க கவனத்தோடு பார்த்தேன். விசித்திரம் என்னவென்றால் இன்று அவர் துண்டு விழும் பட்ஜெட் சமர்ப்பித்ததற்காக எப்படி பாராட்டப்பட்டிருக்கிறாரோ, அதேமாதிரிதான் அன்று இதே மன்றத்தில் அவர் அதிக வரி போட்டதற்காகப் பாராட்டப்பட்டிருக்கிறார். (சிரிப்பு.) நிதி அமைச்சர் தனது நிலைமைக்கேற்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறார் என்று கருதுகிறேன். பாராட்டுதல் ஜனநாயகத்தில் சகஜம் தான். ஆனால் கொஞ்சம் அது அதிகமாய் போய்விட்டது என்பது உள்ளபடியே என்னுடைய வருத்தம்.

துண்டுவிழும் பட்ஜெட் போடுகின்ற நேரத்திலே புதிய வரிகளை அவர் போடவில்லை என்பதைப்பற்றியும் சில உறுப்பினர்கள் வரவேற்றுப் பேசினார்கள். என்னைபொறுத்த வரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் வரி அதிகமா, குறைவா என்பதைப் பொறுத்து ஒரு நாட்டின் கஷ்ட நஷ்டமில்லை என்ற கருத்துக் கொண்டவர்கள்



4th July 1957] [Sri C. N. Annadurai]

நாங்கள். தாங்குபவர்கள் மீது வரி போடுவதும் தாங்கமுடியாதவர்கள் மீது இருக்கும் வரியைக் குறைப்பதும்தான் நான் படித்த பொருளாதார அரிச்சுவடியில் போதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமயம் நிதி அமைச்சர் அதற்கு மேல் படித்த பொருளாதாரத்தில் வேறு விதமாக போதிக்கப்பட்டிருக்கலாம். அல்லது அவருக்கு நிர்வாகத்தில் ஏதாவது புதிய அநுபவம் ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ! (சிரிப்பு.) பொருளாதார தத்துவத்தை விளக்கினவர்கள் 'prcgressive taxation', 'regressive taxation' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையே வேறு விதமாக 'direct taxaticn', 'indirect taxation' என்றும் விளக்கம் அளித்துள்ளார்கள்.

இந்த நிமிடம் வரையிலே நமது வரவு செலவுத் திட்டத்தில் பார்த்தால் ஏழை மக்கள் தருகின்ற விற்பனை வரியிலிருந்துதான் நமக்கு கணிசமான அளவுக்கு பணம் வருகிறது. எத்தனையோ துறைகள் இந்த நேரத்திலே கவனிக்காமல் விட்டு வைக்கப்பட்டிருக்கின்றன என்று எத்தனை பெரிய கூக்குரல் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது ? உண்மையிலேயே விற்பனை வரி மக்களை வாட்டி வதைக்கின்றது என்பதை பல்வேறு கட்டத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறோம். இந்த நேரத்திலே நாம் எல்லாம் எதிர் பார்த்தது என்னவென்றால் உணவுப் பொருள்களுக்காவது நமது நிதி அமைச்சர் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பார்கள் என்பதுதான். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகளும் வியாபார சங்கங்களும் பல காலமாக பல்வேறு மகாநாடுகள் கூட்டி, அவைகளுக்கு அமைச்சர் சிலரைக்கூட வரவழைத்தும், அவர்களிடம் மகஜர்கள் சமர்ப்பித்தும் தங்களுடைய குறைபாடுகளை எடுத்துச்சொல்லி "பல்வேறு கட்டங்களில் போடுகின்ற விற்பனை வரியை ஒரே கட்டத்தில் போட்டால் நாங்கள் திருப்தி அடைவோம்" என்று எடுத்துச் சொன்னார்கள். முதலமைச்சர் வியாபாரக் கூட்டம் நிறைந்த விருதுநகரைச் சேர்ந்தவர் என்பதால் அவ்வாறு செய்வார் என்று நினைத்தோம். வியாபாரிகளுக்கு சலுகை காட்டுகிறார் என்று நாங்கள் சொல்லுவோம் என்று அஞ்சி ஒரு வேளை அக் காரணத்தினால்தான் விற்பனை வரி விஷயத்தில் கொஞ்சம் கண்டிப்பாக இருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். அப்படி நாங்கள் சொல்லமாட்டோம். மற்ற விஷயங்களைக் கருதி அப்படிச் செய்திருந்தால் போகட்டும். ஆனால் எங்களுக்காக அப்படிச் செய்திருந்தால் தயவு செய்து அதை மாற்றிக்கொள்ளுங்கள். ஒருமுனை விற்பனை வரி போடவேண்டுமென்றும், உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் கருதுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் **foodgrains** என்பதை **foodstuffs** என்று மாற்றினால் ஓரளவுக்கு நாட்டிலே நல்ல திருப்தி ஏற்படும். வார்த்தைகள் மாற்றம், ஊர்களின் பெயர்கள் மாற்றம்தான் "எங்கள் கட்சியின் திட்டம்" என்று சொல்லுவதாக அவர் புன்னகை எடுத்துக் காட்டுகிறது. (சிரிப்பு). நாங்கள் சொல்லுகின்ற திட்டங்களெல்லாம் செலவு இல்லாத திட்டங்கள்தான். பெரிய செலவுத் திட்டங்கள் கொடுத்தால் அவர்கள்தான் எங்கு போவார்கள் ? வடக்கே போகிறார்கள். ஆனால் அங்கு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள். (சிரிப்பு).

உணவு தானியங்கள் என்பதை உணவுப் பொருள்கள் என்று மாற்றி அவைகள் மீது விற்பனை வரியை நீக்கினால், அதனால் சில லட்ச ரூபாய் தான் வருமானம் குறையும். ஆனால் மக்கள் சாப்பிடுகின்றபொழுது சர்க்காரை மனமார வாழ்த்துவார்கள். உணவு சாப்பிடுகின்ற நேரத்திலே "நல்ல சர்க்கார் நாட்டிலே நிலவுகிறது, நல்ல மந்திரி சபை நாட்டிலே ஆளுகிறது, உணவுப் பொருள்கள் மீது வரியை எடுத்து விட்டார்கள்" என்று மனமார வாழ்த்துவார்கள். சட்ட சபையிலே பலபேர்கள் வந்து போகிறார்கள். ஜனநாயகத்தின் பரிசாக இதை மதிப்பார்கள். முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்துவார்கள். இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: மூன்றாவது கவளத்தில் இதை எடுக்கச் சொன்னவரை வாழ்த்துவார்கள். (சிரிப்பு.)

[4th July 1957

* **Sri C. N. ANNADURAI** : சாப்பிடுகின்ற நேரத்திலே சாப்பாட்டுப் பொருள்கள் மீது வரியில்லை என்று பொது மக்கள் ஒருமுகமாக வாழ்த்துவார்கள். சாப்பிடும்பொழுது வாழ்த்துவது நல்லது என்று வைதீகர்கள் கூறுவார்கள். மற்ற விஷயத்தில் வைதீகத்தில் வேறுபட்ட கருத்தைக் கொண்ட நான் இது விஷயத்தில் வேண்டுமானால் ஒத்துக்கொள்ளுகிறேன்.

வரவு செலவுத் திட்டத்தில் புது வரி போடாதது பற்றி இங்கே பேசிய பல காங்கிரஸ் உறுப்பினர்கள் எடுத்துக்காட்டினார்கள். நிதி அமைச்சர் வரி போடாததற்குக் காரணம் பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் ஏற்கனவே பட்ட அடியால் ஏற்பட்ட தழும்பு மாறாமல் இருக்கும்பொழுது தானும் அதன் மேல் அடிக்கவேண்டாமென்று வரி போடாமல் விட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். (சிரிப்பு.) எப்பொழுதும் நிதி அமைச்சர்கள் மன அரிப்புக் கொண்டவர்கள். ஒரு தடவை நிதி அமைச்சர் பீடத்தில் உட்கார வைத்துவிட்டால் எப்பொழுதும் கனவிலும் நினைவிலும் அவருக்கு வரி என்ற நினைவுதான். ஒரு ஹாஸ்ய பத்திரிகையில் படித்தேன். மனைவி கட்டிக்கொண்டிருக்கும் சாதாரண சேலையைப் பார்த்து நிதி அமைச்சர் "இதில் வரி இல்லையா" என்று கேட்டாராம். அங்குகூட நிதி அமைச்சருக்கு வரியின் கவனம் போகவில்லை. கற்பனை நிதி அமைச்சரைப்பற்றி நான் குறிப்பிட்டேன்; இந்த நிதி அமைச்சரைப் பற்றி அல்ல. (சிரிப்பு.)

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வரி போடாமல் விட்டிருக்கின்றார். எங்களுக்குப் பயந்து அவர் வரி போடாமல் விட்டிருக்கின்றார் என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அவர்களுடைய கட்சியிலே இருப்பவர்களில் ஒரு சிலர் அப்படிச் சொன்ன காரணத்தால், என்னுடைய கழகத்தைச் சேர்ந்தவர்களும், "ஆமாம், எங்களுக்குப் பயந்து தான்" என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்கள் வரி போடாமல் இருப்பார் என்பதிலே எனக்கு உண்மையிலேயே நம்பிக்கை இல்லை. ஏனென்றால், அவர்களுடைய வாக்கியத்தை நல்ல தமிழிலே எழுதியிருக்கிறார் என்று அங்கத்தினர்கள் எல்லோரும் பாராட்டினார்கள். தமிழ் எப்பொழுதும் பொய்க்காது. தமிழிலே இருக்கும் வாக்கியத்தைப் பார்த்தால், "இந்த எண்ணத்தில், இப்பொழுது எஞ்சிய பற்றுக்குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்" என்று இரண்டு மூன்று ஆபத்தான பதங்களை மிக அழகாக உபயோகப்படுத்தி இருக்கிறார்கள்.

இதற்கு நேர்மாறாக, பம்பாய் மாநில நிதி அமைச்சர் ஜீவராஜ் மேத்தா அவர்களும் இதைப்போல் துண்டுவிழுந்த பட்ஜெட்டை சமர்ப்பிக்கும்போது, "என்னுடைய மாநில மக்கள் ஏகமாக வரிவிதிக்கப்பட்டிருக்கின்றார்கள். புதிதாக மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியிலே பெரும் பாகம், அதாவது 40 சத விகிதம் வரை, என்னுடைய மாநிலத்திலிருந்து வசூலிக்கப்படும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால், வரவு செலவுத் திட்டத்திலே துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்கு நான் புது வரித் திட்டங்கள் எதனையும் போடவில்லை" என்று காரணம் காட்டுகிறார்.

ஆனால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் காரணம் காட்டவில்லை—காரணம் காட்டாதது மாத்திரம் அல்ல—காரணம் காட்டியிருக்கிறார்களா என்று ஆவலோடு அலசிப் பார்த்தேன். காரணம் காட்டாததிலே ஒரு பயம் பிறந்தது. கடைசியில் பார்க்கும்போது, "எந்தத் எண்ணத்திலோ இப்பொழுது எஞ்சிய பற்றுக்குறையை ஈடு செய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். அதில், "தற்காலிகமாக" என்று இருப்பதாலே "இந்த ஆண்டு தான் அங்கிருந்து விழுந்திருக்கிறது அடி, அந்த அடித் தழும்பே இன்னும் மறையவில்லை, அடுத்த ஆண்டு நான் தருகிறேன், அது வரையில் பொறுங்கள்" என்று அடுத்த ஆண்டுக்கு காக்க வைக்கிறார் என்று தோன்றுகிறது.



4th July 1957] [Sri C. N. Annadurai]

வரி என்று குறிப்பிடுகிற நேரத்தில், வரிகளுடைய முறைகளைப் பார்த்துத் தான் ஆளும் கட்சி அல்லது சர்க்காருடைய போக்குகளை நாம் தீர்மானித்துக் கொள்ள முடியும். அதனாலே தான் பல்வேறு கட்சிகள், முற்போக்குக் கட்சிகள்—இந்த நாட்டை இன்று யார் ஆளுகிறார்களோ, அவர்களுடைய திட்டங்கள் சமதர்மம் பொருந்தியவை என்று எடுத்துச் சொல்லியும், அதற்கேற்றபடி நடக்கவில்லையே என்று வருத்தப்பட்டார்கள். அப்போப்பட்ட வருத்தத்திற்குக் காரணம் புரிகிறது. நம்முடைய ஆட்சியாளர்கள், "சம தர்மம், சமதர்மம்" என்று எடுத்துச் சொல்கிறார்களே தவிர, அவர்கள் இன்றைய தினம் கையாளுவதெல்லாம் சமய தர்மமே தவிர, சமதர்மம் அல்ல. அதாவது, சமயத்திற்கேற்றபடி சில தர்மங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஐயோ, போதும், வரி போடுவதற்கு இது சமயம் அல்ல. ஆகவே, இப்பொழுது வரி போட வேண்டாம்" என்ற அந்த முறையிலே தான் இருக்கிறது. ஆகவே, தான் இவர்களுடையது சம தர்மமாக இல்லை, சமய தர்மமாகத்தான் இருக்கிறது.

இனி, வரவு செலவுத் திட்டத்தின் காலத்தைப் பற்றி யோசிக்கும்போது முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் இருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நம் நாட்டை ஓரளவு சீர்படுத்தி இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேலும் சீர்படுத்தும். ஆகையால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியிலே புதிய வரியைப் போட்டாலும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்ற வாதத்தை என்னால் புரிந்துகொள்ள முடியாது. எப்பொழுது புரிந்து கொள்ள முடியும் என்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டம் உண்மையிலேயே சகல ஏழை எளிய மக்களுக்கும் நன்மை பயக்கிறது என்று புள்ளி விவரங்களோடு காட்டி, நாட்டு மக்கள் அதனை ஏற்றுக் கொண்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே அவர்களுக்குக் கிடைத்த வலுவு காரணமாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வாங்கிக் கொள்ள கூடிய வலுவு ஏற்படுமானால் அப்பொழுது அவர்களுடைய வாதத்தை உண்மையில் பாராட்டக்கூடும்.

நல்ல வேளையாக, சபா நாயகராக அமர்ந்திருக்கும் தாங்கள், மருத்துவத் துறையில், மெலிந்திருப்பவர்களுக்குக் கொஞ்சம் கடினமான டானிக்கு தந்திருக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்னால், அடிப்படைத் தேவையான உணவு, உடை, குடியிருப்பு இடம் ஆகிய இந்த மூன்று அடிப்படைத் தேவைகளைப் போதுமான அளவு நாம் பெற்றிருக்கிறோமா என்று பார்த்தால், Mr. Sriman Narayan, The General Secretary of the Congress Party has written in the Economic Review like this :

"The people feel that while the poorer sections cannot escape taxation of an indirect nature in the form of sales-tax and excise duties on various necessaries of life, the richer classes have become experts in managing evasion and avoidance of taxes." ஐந்தாண்டுத் திட்டத்திற்காகப் போடப்பட்ட வரிகளைப் பற்றி அகில இந்திய காங்கிரஸின் செயலாளர் ஸ்ரீமன் நாராயண், காங்கிரசுக் கட்சியால் நடத்தப்படுகிற, ஏறக்குறைய Offical Journal என்று சொல்லக்கூடிய Economic Reviewவில் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், பணக்காரர்கள் தங்களுக்குப் போடக் கூடிய வரியிலிருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்கிறார்கள்; ஆனால், ஏழை மக்களால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை" என்கிறார்.

தாம் மட்டும் சொன்னால் போதாது என்ற காரணத்தால், பொருளாதாரப் பேராசிரியர் கால்டர் என்பவருடைய கருத்தையும் தெரிவிக்கிறார்.

"According to Prof. Koldor's estimates, evasion of direct taxes in India is of the order of Rs. 200 to 300 crores per year." இப்படி கால்டர் என்ற பொருளாதாரப் பேராசிரியரின் மதிப்பீட்டின்படி, இந்தியத் துணைக்கண்டத்தில் ஆண்டொன்றுக்கு இப்படி ஏமாற்றும் வரி 200 அல்லது 300 கோடி ரூபாய் வரையில் இருக்கும் என்ற

புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார். 200 அல்லது 300 கோடி ரூபாய் என்பது அதிகமானது ; 30 அல்லது 40 கோடி ரூபாய் தான இருக்கலாம் ; எவ்வளவு தாராளமாகப் பார்த்தாலும் 60 கோடிக்கு மேல் இருக்காது என்று இந்திய சர்க்கார் சொன்னதையும் அறிந்திருக்கிறேன். எனினும், இப்படிப் பெருத்த அளவுக்கு வரி போய்க் கொண்டிருக்கிறதென்பதை ஸ்ரீமன் நாராயண் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அது மட்டுமல்ல. குறிப்பாக, ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, "The common man has not been able to feel the glow of freedom during the last few years in accordance with his expectation" என்று சொல்லியிருக்கிறார்.

இந்தச் சர்க்காரிடத்திலே இதைச் செய்யவில்லை அதைச்செய்யவில்லை என்று பல பேர்கள் கேட்கும் போது, சர்க்கார் கட்சியில் இருப்பவர்கள் இது என்ன, எப்பொழுது பார்த்தாலும் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே !" என்று சொல்லலாம். சர்க்காரிடத்திலே அபாரமான நம்பிக்கை காரண மாகத்தான் மக்கள் இன்றைய தினம் கேட்கிறார்கள். அதைக் குறித்து சர்க்கார் கட்சியிலே இருப்பவர்கள் பெருமைப்படவேண்டும். வெள்ளைக் காரர்களாக இருந்தால், அவர்களைக் கேட்டிருக்க மாட்டார்கள். வெள்ளை காரர்கள் காலத்தில் அரிகேன் விளக்குத் தானே இருந்தது ? இப் பொழுது நம் காலத்தில் பெரிய "ட்யூப்" விளக்கு போடப்பட்டிருக் கிறதே" என்று பெருமை பாராட்டிக் கொள்ளாதீர்கள். அப்படிப் பெருமை பாராட்டிக் கொள்வீர்களானால், வெள்ளைக்காரனும் அப்படித்தான் சொன் னான் "ரயிலையே பார்க்காத உங்களுக்கு ரயிலை நான் தானே காட்டி னேன் ; அப்படியிருக்க, அதிலேயே ஏறி என்னைப் போகச் சொல்கிறாயே" என்று. ஆகையால் வெள்ளை ஏகாதிபத்தியத்திலிருந்து பழுப்பு ஏகாதி பத்தியமாக காங்கிரஸ் ஜனநாயகம் மாறக் கூடாது என்று கவலை கொண்டு ஸ்ரீமன் நாராயண சொல்கிறார்,

The fact remains that our plans and projects have not yet been able to touch visibly the poorest sections of the population" என்று.

மற்றும் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கிற "கம்யூனிடி பிராஜெக்ட்" டைப்பற்றியும் ஸ்ரீமன் நாராயண் குறிப்பிடும்போது, அவை திருப்திகரமான நிலையில் இல்லை என்று சொல்லியிருக்கிறார். அதாவது : "Even in the Community Projects and National Extension Services, it is now being admitted that the lowest sections of the rural population have not been benefited to any considerable extent".

இவைகள் மட்டும் அல்லாமல், "In fact, all the available statistics tend to show that difference between the living standards of the richer and poorer sections instead of being narrowed down has increased further during the last 9 or 10 years." என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது நான் இந்த மன்றத்தின் முன்னாலே, கனம் சபா நாயகர் அவர்களுடைய அனுமதியின் பேரில் கேட்டுக் கொள்வது என்ன வென்றால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அளவு மக்களை ஏமாற வைத்திருக்கிறபோது அதே ஏழை மக்களை வரி கொடுக்கச் சொல்லிக் கேட்பதில் என்ன பயன் ? ஆகையினால், வரி யாருக்குப் போடுகிறார்கள் என்பதைப் பொருத்தும், எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைப் பொருத்தும் இந்த பட்ஜெட்டைப்பற்றி தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஐந்தாவது பாராவில், நிதி அமைச்சர் அவர்கள், "விலைவாசிகள் ஏறுமுகம், அன்னியச் செலாவணிக் குறைவு இவை இரண்டுமே, நாட்டின் பொருளாதார நிலைமையை இன்று பாதிக்கும் பெரும் சிக்கல்கள்"



என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இதை மறுப்பவர்கள் உண்மையை மறைப்பவர்கள் ஆவர். இன்றைய தினம், உண்மையில் இரண்டு பெரிய குறைகள் இருக்கின்றன. ஒன்று, விலைவாசி ஏறுமுகம் ; மற் றொன்று அன்னியச் செலவாணிக் குறைவு. ஆனால், நான் வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த இரண்டுக்கும் நல்ல பரிகாரங்கள் தேடுகிற திறமை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக உண்டு. ஆனால், இந்த இரண்டுக்கும் அவருடைய நேரடியான மேற்பார்வையிலே, நேரடியான நிர்வாகத்திலே அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை. அகில இந்தியாவில் இருக்கும் நிலைமைகளைப் பொறுத்துத் தான் விலைவாசி ஏறுமுகம், அன்னியச் செலவணிக் குறைவு ஆகிய இரண்டு சிக்கல்களையும் தீர்க்க முடியும். இதனை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தால், நாம் இவைகளை இங்கும் தீர்க்கப் போகிறோம் என்று எடுத்துச் சொல்லி, தங்களால் செய்யக்கூடிய சில பல காரியங்களைச் சொல்லியிருக்கிறார். அதற்காக, அவர்களைப் பாராட்ட வேண்டும் என்று கனம் அங்கத்தினர் களெல்லாம் விரும்பினார்கள். ஒரு அங்கத்தினர் அவர்கள் உருக்கமாகக் கேட்டார்கள். ஒன்று கூட நல்லது சொல்ல மாட்டீர்களா ?" என்று. நாங்கள் நஷ்டம் அடையாமல் நீங்கள் லாபம் அடைந்தால், நாங்கள் ஏன் குறுக்க நிற்கப் போகிறோம் ? வியாபாரத்தில் அதெல்லாம் சாதாரண மாக ஏற்படக்கூடியது தான். ஆனாலும், இப்படி யாரோ ஒன்றிரண்டு பேர் புகழ்ந்து பேசிவிட்டார் என்பதற்காக இலகுவாகத் திருப்தி அடைந்து விடக்கூடிய சபல மனம் படைத்தவர் அல்ல, நம் நிதி அமைச்சர் அவர்கள் என்பதை அறிந்த காரணத்தால் நான் அவர்களைப் பாராட்டாமல் இருக்கிறேன். அவர்களுக்கு இருக்கும் அன்பு காரணமாக சிலர் பாராட்டிப் பேசினார்கள். அப்படிப் பேசுவதும் நல்லது தான். அது இருக்கட்டும். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், தம்முடைய வசதிக் கேற்ற அளவில், பிரித்து வைத்திருப்பதில் அவர்கள் செய்திருக்கிற நல்ல ஏற்பாடுகள், உண்மையிலேயே வரவேற்க வேண்டியதாய் இருக்கின்றது. ஆனால், அந்த ஏற்பாடுகளை வரவேற்கின்ற நேரத்திலே, அவைகளை மூன்றாக வகுத்துப் பார்த்துத் தான் நம்முடைய தீர்ப்பை அளிக்க வேண்டி இருக்கின்றது. அதா வது—ஒன்று, போடுகின்ற திட்டம் ; இரண்டாவது, திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணம் ; மூன்றாவது, அந்தப் பணத்தை செலவு செய் கின்ற நிர்வாக முறை. இந்த மூன்றும் சரிவர இருந்தால்தான் உண்மை யிலேயே நம்முடைய திட்டங்கள் நல்ல பலனை அளிக்கும். உதாரணமாக, நமது நிதி அமைச்சர் அவர்கள், போன ஆண்டு 38 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன, இவ்வாண்டிலே 136 பண்ணைகள் திறப்பதாகத் தீர்மானித் திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது நியாயமான, தேவையான, மக்களால் வரவேற்கத் தக்க ஒரு திட்டமாகும். இத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், இந்தப் பண்ணைகள் எந்த முறையில் வளர்க்கப் படுகின்றன, இந்தப் பண்ணைகளுக்காக தேர்ந்தெடுக்கப்படுகிற நிலங்கள் யாரிடத்திலே வாங்கப்படப் போகின்றது, அப்படி வாங்கப்படுகின்ற நிலங் களுக்கு விலை எப்படி நிர்ணயிக்கப்படும் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். அந்த நிலங்களுக்குப் பதிலாக, நிலச்சுவான்தார்களைக் கூப்பிட்டு —அந்த நிலச்சுவான்தார்களிடத்திலே இருக்கிற ஏராளமான நிலத்தில் ஒரு பகுதியில் கட்டாயமாக விதைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று சட்டபூர்வமாக சொல்லிவிடலாம்—ஆனால், ஆளும் கட்சியில் அன்பு பாராட்டும் பல நிலச்சுவாந்தார்கள் இருப்பதால்—அவர்களுக்கு கனிவாக எடுத்துச் சொல்லி, உங்களிடத்திலே இருக்கும் நிலத்திலே ஒரு பகுதியை விதைப் பண்ணைக்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்று சொன்னால் அவர்கள் கொடுத்துவிடுவார்கள். இப்படிச் செய்தால் நாம் அந்தப் பண்ணை களுக்கு முதலீடு செய்யவேண்டியதில்லை. இப்படி அந்தத் திட்டத்தை சுலபத்தில் நிறைவேற்றலாம் என்று நான் கருதுகிறேன். விதைகள் கொடுப்பதனைப்பற்றி, இந்த விதைகள் ஏழை உழவனுக்குக் கிடைக்கவில்லை என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். எந்த நேரத்தில் "விதைக்க விதை வேண்டுமே" என்று பரிதாபத்துடன் காத்துக் கொண்டிருக்கிறார்களோ, அந்த நேரத்தில் விதைகள் வராமல், அறுவடை காலத்தில் வருவதால்

அதையும் சேர்த்து மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள் என்று கனம் அங்கத்தினர் ஒருவர் அனுபவம் காரணமாக கிராமப் புறத்தில் இருக்கும் நிலைமையை தெளிவாகச் சொன்னார்கள். எட்டிலே திட்டங்களைக் காட்டுவதால் மட்டும் பாராட்டுதலுக்குரியவர்களாகமாட்டார்கள் நாட்டை ஆளுகின்ற சர்க்கார். ஏட்டிலே போடுகின்ற திட்டம் எந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் இதற்கு முன்னாலே இருந்ததைவிட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிகமாகியிருக்கின்றது, தலைக்கு ஒரு உச்சிக்கரண்டி எண்ணெ அதிகமாகியிருக்கின்றது, வாழ்வுக்கு ஒரு வேளை நிம்மதி அதிகமாகி இருக்கின்றது என்பதைப் பார்க்கவேண்டும். நிம்மதி கலந்த புன்னகை தான் ஒரு நிதி அமைச்சர் எதிர்பார்க்கும் பரிசும் புகழுமாகும். தங்கள் கட்சிக்காரர்களும், எதிர்க் கட்சிக்காரர்களில் இரண்டொரு பேரும், புகழை வீசி விட்டார்கள் என்றால் அது எந்த அளவும் பலனளிக்காது. அதை நான் நிச்சயமாக உணர்ந்திருக்கிறேன்.

போன ஆண்டு 36 விதைப் பண்ணைகள் திறக்கப்பட்டன, இந்த ஆண்டு 136 பண்ணைகள் திறக்கப் போகிறோம், என்று நிதி அமைச்சர் அவர்கள் ஆவலோடு சொல்லுகின்ற காரணத்தால் நாம் அதனை நம்பவேண்டி இருக்கிறதே தவிர, இதுவரை நடந்து வந்திருக்கிற முறையைப் பார்த்தால், அந்த 136 பண்ணைகளும் இந்த ஆண்டிலேயே திறக்கப்பட்டுவிடுமா என்கிற ஐயப்பாடு இருக்கின்றது. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே, "இந்த ஆண்டு 50 விதைப் பண்ணைகள் திறக்கப் போகிறோம்" என்று வாக்குறுதி அளித்தும்; அதில் 38 தான் திறந்தார்கள். அதாவது 50 சொல்லி 38 என்றால், இப்போது 136 சொல்லி 36-ஓடு நின்று விட்டால் என்ன செய்வது—"ஆண்டவனே, அவருக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தைத் தராமல், எல்லா பண்ணைகளையும் திறக்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்தைத் தரவேண்டும்" என்று நான் ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

மற்றொன்று, நீர்ப் பாசனத்திற்காக, சிறு பாசனத் திட்டங்கள் 55 லட்ச ரூபாய் செலவில் இந்த ஆண்டு தொடர்ந்து நடக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பார்த்தால் 1 கோடியே 23 லட்சம் ஒதுக்கப்பட்டதாக புள்ளி விவரங்கள் காட்டுகிறது. நமது நிதி அமைச்சர் அவர்கள் நீண்ட காலமாக நிதி அமைச்சராக இருக்கிறதாலோ, அல்லது நான் முதன் முறையாகப் பார்க்கின்றேன் என்ற காரணத்தாலோ சில குறைபாடுகள் இருக்கலாம்—உண்மையில் அதன் பொருளாதாரத் தத்துவத்தை—சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக இருக்கும் அரசியல் காரணத்தை—விளக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

நீர்ப்பாசனத் திட்டங்களைப்பற்றி இங்கு நடந்த விவாதத்திலே இரண்டு பெரிய பிரச்னைகள் பேசப்பட்டன, ஒன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு வருவது "பெரிய ஆறுகள் இல்லை, அதனால் அணைக்கட்டுகள் கட்டுவதற்கில்லை"—உண்மையிலேயே பெரிய ஆறுகள் இல்லை—பெரிய ஆறுகள் கிடையாது அணைக்கட்டுகள் கட்ட என்று நாகரீகமான முறையில் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் கட்சியைச் சேர்ந்த சில பேர்கள் "ஆறுகள் இல்லை அணை கட்ட, அண்ணாதுரை வாய்க்குத் தான் அணைகட்டியாக வேண்டும்" என்று. முடிந்த வரையில் கட்டுங்கள்—வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் இன்று சிறு நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி பேசுகிற காலத்தில், உண்மையிலேயே நம் நாட்டில் இன்னமும் வீணாகிக்கொண்டிருக்கிற மலை அருவிகளைக் கட்டுப்படுத்தி, சிறு நீர்ப்பாசன திட்டங்கள் செய்யக்கூடியது நிறைய இருக்கிறது. அவைகள் தள்ளப்படுவதற்குக் காரணம், அப்படி செலவழிக்கப்படுவதின் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவானதாக இருக்கிற ஒரு காரணத்தால் ஒதுக்கி வைக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சிறு நீர்ப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றுவதால் கிடைக்கும் நேர்முகமான லாபத்





தைப் பார்க்கிறார்களே தவிர, அந்த மக்கள் மனதிலே ஏற்படக்கூடிய சந்தோஷம், அந்த மக்களுக்கு ஏற்படக்கூடிய திருப்தி, இவைகளை ரூபாயாக மாற்றிப் பார்த்தால், உண்மையிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே, என் தொகுதியைப் பற்றிப் பேசாவிட்டால், அண்ணாதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிப் பேசினாரே தவிர, தன் தொகுதியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று நாங்கள் கருதமாட்டோம், என் தொகுதியில் உள்ளவர்கள் கருதமாட்டார்கள். ஆனால் இங்கு எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சொல்லுவார்கள் என் தொகுதியில் இருக்கும் வறண்ட ஒரு ஆற்றைப் பற்றி, முதலமைச்சர் அவர்களின் ஈரமான நெஞ்சத்திற்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு சிறுவனாக பள்ளியில் படித்த காலத்திலே, படித்துக்கொண்டிருக்கும்போது அங்கே இருந்த ஒரு ஆசிரியர், மணியை அடித்து, "பிள்ளைகள் வீட்டிற்குப் போகலாம், பாலாற்றிலே தண்ணீர் வந்தது" என்றார். எங்கள் பகுதியிலே பாலாற்றிலே தண்ணீர் வந்தது என்றால் பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டுக் கொண்டாடவேண்டிய ஒரு காட்சியாகும். ஆனால் அது ஒரு நல்ல ஆறு—பெரிய ஆறு—ஆண்டுக்கொரு தடவைச்—சபாநாயகருக்கு எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்—நாலு நாள் மூன்று நாள் பெய்கிற மழையில் தண்ணீர் வெள்ளமாக வருகிறது. அந்தத் தண்ணீரை ஆங்காங்கு சிறுசிறு தேக்கங்களாக நிரப்பி, அங்குள்ள பெரிய பெரிய ஏரிகளையும் குளங்களையும் நிறப்பி, செங்கல்பட்டில் நீர்ப்பாசனம் நடந்து வருகிறது. இரண்டு குறைபாடுகளை நான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆற்று வெள்ளம் ஏரியில் தேக்கப்படுவதால், அந்த வெள்ளத்தில் அடித்துவரும் "சில்ட்" அதாவது வண்டல் மண், அந்த ஏரியில் படிந்து, ஆழம் குறைந்து, அது நாளா வட்டத்தில் வடிகால்களை உடைத்துக்கொண்டு வெள்ளம் வந்தாலும் தண்ணீர் தங்காமல் கக்கிக்கொண்டு வெளியில் போகிறது. எப்படிச் சில விஷயங்களைப் படித்தாலும், உண்மைப்பொருளைத் தெரிந்துகொள்ள முடியாமல், தவறாக வெளியே கக்கி விடுகிறோமோ, அதுபோலப் பொங்கிவரும் நீரை வெளியே கக்கிவிடுகிறது. பல தடவைகளில் சென்னை சர்க்காரும் மைசூர் சர்க்காரும் நடத்திய பல்வேறு மாதிரியான பேச்சு வார்த்தைகள் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று அறிய விரும்பினால், அது முடிந்துவிட்டதென்று சொல்லுகிறார்கள். நம்முடைய நிர்வாகப் பிரச்னை எதனையும் முடிந்து விட்டது என்று கருதாமல், நமது மாநில முதலமைச்சர் அவர்கள் பாலாரைப் பற்றி மைசூர் ராஜ்ய முதலமைச்சரோடு மறுபடியும் கலந்து பேசி—முன்னாலே நிபுணர்களெல்லாம் கலந்து பேசினார்கள்—நமது முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நிபுணர் அல்ல—நிபுணர் அல்லாத ஒரு காரணத்தால் நாட்டு மக்கள் அவர்களிடத்தில் இன்றைய தினம் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்—நிபுணர்கள் புள்ளி விவரங்களை நம்புவார்கள்—நிபுணரல்லாத இவர் நாட்டு மக்களுடைய பசித்த வயிற்றினையும், காய்ந்த தலையினையும், கவலை படிந்த முகத்தினையும் பார்த்துத்தான் நாட்டு நிலையைத் தெரிந்து கொள்கிறார்—ஆகையால் பாலாற்றுக்குத் தண்ணீர் வருவதற்கு மைசூர் சர்க்காரிடம் உடனடியாக மறுபடியும் பேச்சு வார்த்தைகளைத் துவக்கி வைக்க வேண்டும். அதுவுமில்லையென்றால், இன்றைக்கு ரஷியா நாட்டிலே இது போன்ற நிலைமையில், ஆற்றுக்கு மேலே தண்ணீர் இல்லாமல் போனாலும், "ஸப்ஸாயில் வாட்டர்" அதாவது பூமிக்கடியிலே இருக்கும் தண்ணீரை மின்சாரத் திட்டம் மூலமாக ஆங்காங்கு வெளியே கொண்டுவந்து, அதன் மூலமாக நீர்ப்பாசனம் நடத்துகிறார்கள். இதை நமது என்ஜினீயரிங் டிபார்டுமெண்ட் எடுத்துச் சொல்லக்கூடும். அந்த முறையிலே, பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அப்படிப் பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டுவந்துவிட்டு, எங்கள் கழகத்தைப் பற்றிச் செங்கல்பட்டு மாவட்டத்திலே எந்த மூலை முடுக்கில் போய் திட்டினாலும்—மாலை போடுவார்கள்—"எவ்வளவு வேண்டுமானாலும் திட்டட்டும், மன்னர், தண்ணீர் கொண்டுவந்தாரே" என்று பாராட்டுவார்கள். அதிலே, இரண்டு லாபம் இருக்கிறது—ஒன்று மக்களுடைய ஆதரவு கிடைக்கிறது,

[Sri C. N. Annadurai] [4th July 1957

இரண்டு, எங்களை அடக்குவதற்கு ஒரு வழி கிடைக்கிறது. இன்றைக்கு பாலாற்றுக்குத் தண்ணீர் வந்தால் போதும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

**Mr. SPEAKER : I suppose, the hon. Member will finish his speech soon.**

**Sri A. A. RASHEED : How much more time, the hon. Member will take.**

**Mr. SPEAKER : I hope the hon. Member will finish reasonably quickly.**

Sri C. N. ANNADURAI : சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சபையில் கொண்டுவந்து பேசியபோது, நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர் விடுத்த வேண்டுகோளை இந்த இடத்தில் படிக்க விரும்புகிறேன் :—

"ஆனால் நமக்கு உண்மையில் ஆழ்ந்த கவலை ஊட்டக்கூடிய அம்சம் ஒன்று உள்ளது. நம் இந்திய தேசீயத் திட்டத்தில் மொத்தச் செலவின் பெரும் பகுதி, இரும்பு, எஃகு போன்ற அடிப்படைத் தொழில்கள் அபிவிருத்திக்காகவும், அந்த வளர்ச்சிக்கு ஏற்றாற்போல அதை ஒட்டிப் போக்குவரத்து சாதனங்களில் முன்னேற்றம் காணவும் பயன்படும். பொதுத் துறையில், இந்த இனங்களுக்காகச் சுமார் 2,000 கோடி செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இப் பெருந் தொகையில் குறிப்பிடத்தக்க பகுதி எதுவும் தென்னிந்தியாவில் செலவு செய்யப்படுவதாகத் தோன்றவில்லை. நம்மிடம் நிலக்கரி இல்லையென்பது உண்மைதான். ஆனால், தெற்குப் பிராந்தியத் தொழில் வளர்ச்சிக்காகத் தேசத்தின் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முயற்சி எதுவுமில்லை என்ற உண்மை மாறிவிடாது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்துக்காக சுமார் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 50 கோடி ரூபாயையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கூட, தெற்கு ராஜ்யங்களுக்காகச் செலவாகும் தொகை விகிதம் அவ்வளவாக உயராது. மேலும் நெய்வேலித் திட்டம் பரீட்சார்த்த நிலையில் இன்னும் உள்ளது. முக்கிய இயந்திரத் தொழில்களை நிறுவுவதற்கு ஏற்ற இடங்கள் தென்பிராந்தியத்தில் நிறைய இருக்கின்றன. அத் தொழில்களுக்காக இடத்தைத் தேர்ந்தெடுக்கும் போதாகிலும், இந்தப் பிரதேசத்துக்குச் சற்று சலுகை காட்டுவது மிகவும் அவசியமாகும். நிலத்தை நம்பி வாழும் மக்கள் தொகையையும், சாகுபடியாகும் ஏக்கரா அளவையும் எடுத்துப் பார்த்தால், இந்த பிரதேசத்தில் இருக்கும் ஜன நெருக்கடிபோல், நாட்டில் வேறெங்கும் கிடையாது. கன மின்சார இயந்திரத் தொழிற்சாலை நிறுவ உத்தேசம் உள்ளது. அதற்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் நாம் செய்து தர முடியும். சேலத்தில் "பாக்ஸைட்" கனிகளிலிருந்து அலுமினியம் உற்பத்தி செய்ய, நம் மின்சார இணைப்பில், போதிய மின்சாரம் உள்ளது. புதிதாக உற்பத்தியாக விருக்கும் எஃகிலிருந்து கன இயந்திரங்கள் செய்ய ஒரு தொழிற்சாலை இங்கு நிறுவுவதற்கும் இடமிருக்கின்றது. இப்பிரச்னைகள் குறித்து, நம் கருத்தை நாம் வற்புறுத்தியுள்ளோம். இச் சபையும் என்னுடன் சேர்ந்து இக் கருத்தை மேலும் வன்மையாக ஆதரிப்பதன் மூலம் நம் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ள இந்த அம்சங்களைத் திட்டக் கமிஷனும் இந்திய அரசாங்கமும் உரிய முறையில் கவனிக்கும்படி செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு."

கடைசியில் ஒரு வேண்டுகோளையும் விடுத்திருக்கிறார்கள். "இவைகளை எல்லாம் செய்ய என்னுடைய கரத்தை வலுவடைய செய்யவேண்டும்." என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த நாட்டை தொழில் துறையிலே வளர்ச்சியுற செய்வதற்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் ஒத்துழைப்பை உண்மையிலேயே விரும்பினால் இன்றைய தினம், திராவிட முன்னேற்றக்



4th July 1957] [Sri C. N. Annadurai]

கழகம் அதற்குத் தயாராக இருக்கிறது. ஆனால் தொழில் முன்னேற்றம், தொழிலாளர்களைப் பாதிக்காமல் வாழ வைக்கக்கூடியதாகவும், நாட்டின் செல்வத்தை பெருக்கக்கூடியதாகவும், அதே நேரத்தில் முதலாளித்துவ வர்க்கத்தை மாற்றி அமைக்க கூடியதாகவும் இருக்க வேண்டுமானால் அதற்கு எதிர்க் கட்சியின் ஒத்துழைப்பு எப்போதும் கிடைக்கும். ஆனால் இந்த ஒத்துழைப்பை ஆட்சியாளர்கள் எந்த நேரத்தில், எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தீர்மானிக்கப்படவேண்டும். எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்கிறார்களே தவிர எந்த நேரத்தில் எந்தக் கட்டத்தில் கேட்கிறார்கள் என்பது தெளிவுபடவில்லை. நான் கருதுகிறேன் திட்டங்களைத் தீட்டும் நேரத்தில் ஒத்துழைப்பைக் கேட்டால் நாங்கள் தயார். இராமாயணத்தில் இருந்து சொன்னால் இங்கு உள்ளவர்கள் திருப்தி அடைவார்கள் என்ற எண்ணத்தில் சொல்கிறேன். அணில் கூட அல்லவா இராமனுக்கு உதவி புரிந்தது. அந்த முறையில் அண்ணாதுரையும் பயன்படக்கூடும் (சிரிப்பு). முன்னால் திட்டம் தீட்டும் நேரத்தில் கேட்டால் எங்கள் ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லி, வரவு செலவுத் திட்டத்தில் தாற்காலிகமாக வரி விதிக்காத நிதி அமைச்சரைத் தாற்காலிகமாகப் பாராட்டுகிறேன்.

**Mr. SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. on Friday, the 5th July 1957.**

The House then adjourned.

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

105. *Notification issued with G.O. Ms. No. 1905, Revenue, dated 6th May 1957, exempting from sales tax all sales of food stuffs made by the Annapoorna Cafeteria at Madurai, run by the All-India Women's Food Council, Madurai District Branch. [Laid on the table of the House under section 19 (6) of the Madras General Sales Tax Act, 1939.]*

106. *Notification issued with G.O. No. 1513, Revenue, dated 5th April 1957, amending Rule 13 and Forms 3 and 6 of the Madras Tobacco (Taxation of Sales Registration) Rules, 1953, consequent on the introduction of decimal system of coinage. [Laid on the table of the House under section 16 (3) of the Madras Tobacco Taxation of Sales and Registration) Act, 1953 (Madras Act IV of 1953).]*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 5th July 1957.**

The House met in the Assembly Chamber, Fort St. George at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Recruitment of Government servants*

* 61 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Chief Minister be pleased to state the number of Government servants recruited in the Kanyakumari district through the Employment Exchange from 1st November 1956?

THE HON. SRI C. SUBRAMANIAM: The number of persons recruited through the Employment Exchange from 1st November 1956 to 30th April 1957 is 47.

SRI T. T. DANIEL: The erstwhile Travancore-Cochin Government have passed an order that the age-limit for backward communities for Government employment is 28. But according to the Madras Government Order, the age-limit is 25. As the rule regarding the age-limit of 28 is not followed now, a number of people belonging to the backward communities have been affected. Therefore will the Government be pleased to enquire into the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have information about that aspect of the matter now. A separate question may be put.

SRI T. T. DANIEL: The erstwhile Travancore-Cochin Government have prepared a list of backward communities but after 1st November 1956 some of the communities included in that list are not now included in the list prepared by the Madras Government and that has affected some communities in the Kanyakumari district. Will the Government be pleased to enquire into this matter also?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir, I shall look into it.

SRI M. JAGANNATHAN: If the information is available with the Hon. Minister, may I know out of 47 persons recruited through the Employment Exchange, how many of them could be brought under the category of persons belonging to the technical cadre?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not have that break-up figure.

**Sri K. SATTANATHA KARAYALAR** : பழைய திருவாங்கூர்-கொச்சி எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் இந்தப் பகுதிக்குப் பதிவாகியிருந்த பேர்களுக்கும் இந்த எம்ப்ளாய்மெண்டில் 'செலக்ஷன்' கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கன்னியாகுமரி ஜில்லாவில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவாகியிருக்கும் நபர்களிலிருந்து 148 பேர்கள் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

Sri K. VINAYAKAM: Sir, when once a particular area is merged with another State, is it not the constitutional right that the people in that area should be governed by the rules and regulations of the State concerned, that is, the Kanyakumari district having merged with this State, the people in that area should be governed by the rules and regulations of our State. So, is it right on the part of hon. Members to be always harping on the point that they were enjoying certain facilities in the Travancore-Cochin State and that we should adopt the rules and regulations of that State?

The Hon. Sri C. SUBRAMANIAM: We are always inclined to say that we were enjoying certain facilities forgetting the sufferings undergone there. But apart from that, as far as the rules and regulations are concerned, the rules and regulations obtaining in the Travancore-Cochin State would be applicable there till we adopt or extend the Madras Acts to the Kanyakumari district or make any change.

Sri T. T. DANIEL: The erstwhile Travancore-Cochin Public Service Commission prepared a Waiting List for filling up vacancies as and when they arose. But now certain appointments have been made in the Kanyakumari district from the list furnished by the Employment Exchange by the officers on their own choice. So, will the Government be pleased to enquire into the matter and see that those persons who have been appointed from the list of the Employment Exchange are now replaced by persons whose names have been included in the list prepared by the erstwhile Travancore-Cochin Public Service Commission?

The Hon. Sri C. SUBRAMANIAM: Appointments through the Employment Exchange are made on a temporary basis. As a matter of fact, even out of the 47 persons, ten of them have been replaced by the candidates selected by the former Travancore-Cochin Public Service Commission.

*Cheap Grain Shops*

* 62 Q.—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether any licences have been issued to open cheap grain shops in Kangayam, Coimbatore district during 1957?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: It is presumed that the hon. Member wants information regarding the number of fair price shops that were permitted to be opened in Kangayam



sub-taluk in Coimbatore district. Up to the end of January 1957 two Fair Price Shops were functioning one in Kangayam town and another in Vellakoil. The fair price shops were closed at the beginning of February 1957 as there was low offtake from the Fair Price Shops on account of the good harvest and consequent large arrival of rice and paddy in the open market. On the Collector's advice a new Fair Price Shop was ordered to be opened in Kangayam town last month.

**Sri N. K. PALANISAMI** : யாருக்கு லைசென்ஸ் கொடுக்கப் டிருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

**Sri N. K. PALANISAMI** : 1953-ம் வருஷம் இப்போது லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கும் அதே நபருக்கு கள்ளமார்க்கெட் செய்த காரணத்திற்காக அவருடைய 5,000 ரூபாய் மதிப்புள்ள டெபாஸிட்டை அங்குள்ள கலெக்டர் பறிமுதல் செய்தார். இப்போது அதே நபருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை. ஆகவே தனிக் கேள்வி கேட்டால் பிறகு பதில் சொல்லலாம்.

(Sri N. K. Palanisami rose.)

Mr. SPEAKER: To the first question of the hon. Member the Hon. Minister has stated that he has no information. As regards his second question, he wants notice. He is entitled to say so.

Sri K. VINAYAKAM: May I know whether these fair price shops are opened by taking into consideration the population of each area? For instance, in the Madras City, there is one shop opened for every 8,000 people. But is the Hon. Minister not convinced of the fact that the population has been rising from year to year in the Madras City?

Mr. SPEAKER: This supplementary question has nothing to do with the original question. But if the Hon. Minister is willing to answer it, I have no objection.

Sri K. VINAYAKAM: That is why I have modified the question.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that it is not practicable to open fair price shops according to the population of the area. Only a few fair price shops are opened now and then. So far there are about 970 fair price shops opened in the State. These shops are opened mainly with a view to enable the poor people to get rice at a cheaper price.

**Sri A. GOVINDASAMY** : நியாய விலைக் கடைகளுக்கு லைசென்ஸ் வழங்குகிற நேரத்தில் சிவில் ஸப்ளைஸ் இலாகாவிற்குப் பேப்பர் வருகிறது. ஆகவே நேரடியாகக் கலெக்டர்களே லைசென்ஸ் வழங்குவதற்கு அவர்களுக்கு அரசாங்கம் அதிகாரம் அளிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : லைசென்ஸ் வழங்குவது கலெக்டர்கள்தான். எவ்வளவு நியாய விலைக் கடைகள் திறப்பது என்று சிவில் ஸப்ளைஸ் இலாகா முடிவு செய்யும். அதற்குப் பிறகு யாருக்கு லைசென்ஸ் கொடுப்பது என்பதுபற்றி கலெக்டர்கள் முடிவு செய்து லைசென்ஸ் கொடுப்பார்கள்.

*Memorial in honour of Kattabomman*

* 63 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received recently any representation from the people of Ramanathapuram district for the erection of a memorial in honour of Kattabomman at the place of his martyrdom; and

(b) if so, the steps taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) No, Sir. But a representation was received in 1955 in this regard. As it is the policy of the Government not to undertake such works directly, no action was taken in the matter. If any private agency comes forward to undertake the work, the Government will consider rendering such assistance as is possible.

SRI M. JAGANNATHAN : Sir, will the Government consider the desirability of appointing a Committee of officials and non-officials from the Ramanathapuram district to raise public subscriptions for the erection of a memorial in honour of the late Kattabomman?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think that such a Committee is necessary.

SRI N. K. PALANISAMI : சுதந்திர தின விழாவையொட்டி ஸ்ரீ வ. வே. சு. ஐயர் போன்றவர்களின் ஞாபகார்த்தத்திற்கு சர்க்காரே ஏற்பாடு செய்வது போல், பெரிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய கட்டபொம்மனின் ஞாபகார்த்தத்திற்கு சர்க்காரே ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சுதந்திர தினத்தைக் கொண்டாடும் முறையில், 1857-லிருந்து 1957-வரையில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கட்டபொம்மனின் சரித்திரம் அதற்கு முற்பட்டது. ஆகவே கட்டபொம்மனின் ஞாபகார்த்தமாகக் கொண்டாட்டம் நடத்துவது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

SRI A. GOVINDASAMY : இந்த சர்க்கார் அரசியல் தியாகிகளுக்குப் பலவிதமான சௌகரியங்கள் செய்துகொடுக்கிறது. அப்படி இருக்கும்போது, ஏன் வெள்ளையனை வெளியேற்றுவதற்கு அடிகோலிய கட்டபொம்மனுக்கு ஒரு சாதாரண ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதற்குத் தயங்கவேண்டும்? யாராவது இந்தக் காரியத்தை எதிர்ப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கட்டபொம்மனுக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதால் கட்டபொம்மனுக்கோ, அவருடைய வம்சத்தினருக்கோ எந்தவிதமான நலனும் ஏற்படப்போவதில்லை. இப்போது 1857-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரையில் சுதந்திரப் போராட்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டாடுவதற்காகச் சின்னங்கள் ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்கள் கட்டபொம்மனுக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்திக் கொண்டாட்டம் நடத்துவதற்கு முன்வந்தால் அரசாங்கம் அனுமதி அளிக்கும்.





SRI K. VINAYAKAM : Sir, it is popularly believed in South India, especially in Tamilnad, that Jagaveera Pandya Kattabomman was one of the earliest chieftains of the land who opposed the British rule in those days when it imposed taxes on the poor. Of course, as pointed out by the Hon. Minister, it was in the period earlier to the one under review. Will the Government consider the possiblity of honouring such early chieftains who showed us the way how to revolt against the foreigners? I understand even the records in *Fort St. George* make mention of the revolt carried on by Jagaveera Pandya Kattabomman in those days. By way of honouring such a national leader who showed us the way in those days, will the Government, in their own humble way, consider the possibility of commemorating his memory by erecting a small memorial at the place where he was hanged?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, whether he was a national leader or not is not under dispute at all now. The question is whether a memorial should be erected at that place. My own view is this. More than a memorial, what we should do is, we should spread his history and his heroic deeds. It is more important than merely erecting a small, humble memorial at a far off place. I attach great importance to that than to merely erecting a small memorial.

*Grant of Travelling Allowance to Village Officers*

* 64 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have passed orders regarding the grant of travelling allowance to village officers as indicated in the Budget speech made on 17th December 1956 in the Assembly; and

(b) if so, whether a copy of the concerned Government Order will be placed on the table of the House?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) Yes, Sir. A copy of G.O.* Ms. No. 4732, Revenue, dated 31st December 1956 is placed on the table of the House.

*Service conditions of village officers*

* 65 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Cabinet Sub-Committee constituted by the Government to go into the conditions of village officers in this State has submitted its recommendations; and

(b) whether it will be placed on the table of the House?

---

* Printed as Appendix on page 516 infra.

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Yes, Sir.

(b) The Government consider it not desirable to place copies of the report on the table of the House. A gist of the recommendations of the Cabinet Sub-committee will, however, be found incorporated in G.O. Ms. No. 4732, Revenue, dated 31st December 1956, copies of which have been placed on the table of the House in connection with Legislative Assembly Question No. 64.

MR. SPEAKER: Both Question Nos. 64 and 65 have been answered together. Hon. Members can put supplementaries on both of them.

SRI N. K. PALANISAMI: கன்னியாகுமாரி ஜில்லாவில் இருக்கக் கூடிய வில்லேஜ் ஆபீசர்களுக்கு மட்டும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI. M. A. MANICKAVELU: அங்குள்ள விஷயங்கள் எல்லாம் வேறுமாதிரி. அவர்கள் இப்பொழுதுதான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். இதை எல்லாம் பரிசீலனை செய்து ஒரு ஒழுங்குக்கு கொண்டுவரப்படும்

SRI P. G. MANICKAM: கோயம்புத்தூர் ஜில்லா கிராம சிப்பந்திகள் சங்க ஆதரவின் கீழ் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கிராம சிப்பந்திகள் சர்க்கார் அலுவலாகச் சென்றால் அவர்களுக்கு பிரயாணப்படி கொடுக்க வேண்டுமென்றும், தலையாரிகளுக்கு உடுப்புகள் தரவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மந்திரி சபையின் உபகமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. சங்கப் பிரதிநிதிகளும் நேரில் மந்திரிகளைக் கண்டு விஷயத்தை தெரிவித்து இருக்கிறார்கள். இதுவிஷயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: அதை எல்லாம் கவனித்துத்தான் இப்பொழுது ஆர்டர் போட்டிருக்கிறார்கள். அதைப் பார்த்தால் எந்தெந்த வகையிலே இந்த பிரயாணப்படி கொடுக்கப்படுகிறது என்பது தெரியவரும்.

SRI S. B. ADITYAN: அச்சடித்து வைத்திருக்கக்கூடிய பதிலில்

"that a consolidated annual travelling allowance be given to all village officers"

என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலே வெட்டியான், தலையாரி முதலியவர்களுக்கு இந்த பிரயாணப்படிக் கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: வில்லேஜ் ஆபீஸர்களுக்கென்று ஒரு பிரயாணப்படி விதியிருக்கிறது. கூடுதல் விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAKAM: In order to vindicate their stand and in order to gain certain privileges from the Government of Madras, these village officers have struck work recently. Now that the Government have conceded their request, will the Government consider the possibility of waiving the disciplinary action which they have taken.

MR. SPEAKER: I would like the hon. Member to confine his supplementary to the subject of the main question.

SRI K. VINAYAKAM: Will the Government waive the disciplinary action that they have taken against some of these people?





SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, is it in order for an hon. Member to put the question even after the Chair has refused its admission?

MR. SPEAKER: I had not given any ruling then. I wanted to be convinced whether the supplementary that hon. Member Sri Vinayakam was putting had any relation to the original question or not. I now rule that it has no relation to the original question.

SRI R. SRINIVASA IYER: அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த தாளில்,

"that the village headmen of estate villages taken over by the Government may be granted travelling allowance for each journey, including the journey for jamabandi on the basis of actual bus-fare . . ."

என்று இருக்கிறது. சில பேர்கள் 8, 10 மைல்கள் நடந்துவரவேண்டியிருக்கிறது. அப்படி நடந்துவருவதற்கு மைலுக்கு கால் அணா, அரை அணா கூடக் கொடுப்பதில்லை. சாப்பாடு சாப்பிட்டால் ஒரு ரூபாய் தினப்படியாய் கொடுக்கப்படுமென்று போட்டிருக்கிறது. ஆகவே, பஸ், ரயில்வே இல்லாத இடங்களுக்கு இப்படி நடந்து வருகிறவர்களுக்கு மைல் ஒன்றுக்கு இவ்வளவு என்று ஏதாவது கொடுக்க சர்க்கார் உத்தரவு போடுவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதற்கு முன்னே இதுமாதிரி பிரயாண சலுகை இல்லை. இந்த உத்தரவு போட்டு ஒரு வருஷம்கூட ஆகவில்லை. அதற்குள்ளே மேலும் மேலும் எப்படிப் போடுவது. சில தினங்களுக்கு முன்னால்தான் அவர்களுடைய சம்பள விகிதாசாரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் மேலும் மேலும் இன்னும் கொடுக்கவேண்டுமென்றால் அது யோசனை பண்ண வேண்டியதுதான்.

SRI N. K. PALANISAMI: இன்னும் இங்க், பேனா, காகிதம் இவைகளுக்காக ஏதாவது வழி செய்யப்பட்டிருக்கிறதா? இதற்காக ஏதாவது அலவன்ஸ் கொடுக்கப்படுமா?

MR. SPEAKER: How is it relevant to the original question. I rule it out of order.

SRI V. K. KOTHANDARAMAN: தங்களுடைய நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காகவேண்டி போராடிய காரணத்தைக் காட்டி பிடித்திருக்கக்கூடிய சம்பளத்தை திருப்பிக் கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

MR. SPEAKER: முதல் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை. மெம்பர்கள் தயவு செய்து முதல் கேள்விக்கு சம்பந்தமாய் உள்ள சப்ளிமெண்டரிக் கேள்விகளைத்தான் கேட்கவேண்டும். சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டு என்ன பிரயோஜனம்.

SRI A. GOVINDASAMY: அதிகாரிகள் கிராமங்களுக்கு வரும்போது சாப்பாடு வசதி, வண்டி வசதி செய்யவேண்டியது மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளை இவர்களின் கடமையாய் இருக்கிறது. அதற்கு ஏதாவது அலவன்ஸ் ஒதுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்தமாதிரி சாப்பாடு வசதி செய்யவேண்டுமென்று நிர்பந்தமில்லை. மணியக்காரர் கிராமத்தில் பெரிய ஆளாக இருப்பதினால் சாப்பாடு போடுகிறார்கள்.

[5th July 1957

MR. SPEAKER: As the hon. Member who gave notice of the question, namely, Sri M. S. Selvarajan is not in his seat, the answer together with the question will be printed in the Official Proceedings.

*Lime-stones deposits in Pannamparai village, Tiruchendur taluk*

* 66 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Archæological Department has brought to the notice of the Government the existence in large scale of lime-stones which could be used for the production of cement in and around Pannamparai village in Tiruchendur taluk?

THE HON. SRI R. VENKATARAMAN: The area around Pannamparai village in Tiruchendur taluk, Tirunelveli district was surveyed by the Department of Geological Survey of India during the field season 1946–47 but no occurrence of lime-stone has been reported from that village.

MR. SPEAKER: Questions are over.

SRI S. M. ANNAMALAI: On a point of order Sir, ஜாதி பெயரைச் சொல்லாதிருக்கும்போது ஜாதி பதத்தைப் போட்டு சில பத்திரிகைகளில் பிரசுரித்திருப்பது இந்த சட்ட மன்றத்தின் உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பதாகாதா ?

MR. SPEAKER: அங்கத்தினர் அவர்கள் என்னிடம் அதைப்பற்றிச் சொன்னார்கள். பத்திரிகை ஆசிரியரிடம் பேசி வேண்டியது செய்கிறேன் என்று சொன்னேன். தெரியாமல் செய்திருந்தால் அது பாதிக்காது. எதற்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் எனது ரூமில் வந்து பேசுவது நல்லதென்று கருதுகிறேன்.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—STATEMENT OF A MEMBER *RE* ALLEGATIONS AGAINST GOVERNMENT ON ADMISSIONS TO PROFESSIONAL COLLEGES.

MR. SPEAKER: Every hon. Member has a right to speak in this House provided there is time and opportunity. Every Member has freedom of speech. He can talk what he wants in this House and the Chair is there to give him protection. The other day, hon. Member Sri T. S. Ramasamy Pillai made some statement to which exception was taken by the Hon. the Chief Minister. (Sri K. Vinayakam was seen speaking to another Member.) As I am giving a ruling on an important matter, will the hon. Member please allow the proceedings to go on. Exception was taken by the Chief Minister and the Hon. the Finance Minister to a statement made by Sri T. S. Ramasami Pillai. According to the rules of debate, Sri T. S. Ramaswami Pillai need not answer the points raised by the Hon. the Chief Minister and the Hon. the Minister for Finance. But if he does not, Hon. Ministers may not reply to the charges. I gave him that opinion and he stated that he would like to make a statement. Under the Rules of this House (Rule 80) every Member can make a personal explanation with regard to some statement he made earlier even though that is not before the House on that day



5th July 1957] [Mr. Speaker]

The hon. Member shall confine his statement to the point of explanation with regard to the particular matter. It should be short and there can be no debate on that matter afterwards. I shall now request Mr. Ramaswamy Pillai to make a personal explanation in as short a time as possible.

SRI T. S. RAMASWAMY PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய தினம் அதாவது பட்ஜெட் விவாதத்தை ஆரம்பித்து வைத்த அடுத்த நாள் எனது மதிப்பிற்குரிய நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் திரும்பவும் அந்த பிரச்சினையை எழுப்பினார்கள். நான் அன்று பேசியபோது . . .

MR. SPEAKER: The hon. Member is going beyond the point of explanation. Let him confine to the answer he wants to give. The hon. Member is trying to explain the circumstances which led him to make such a statement. That is not necessary.

SRI T. S. RAMASWAMY PILLAI: அன்று என்னுடைய பேச்சில் இங்குள்ள தொழிற் கல்லூரிகளில் மாணவர்களை சேர்ப்பதில் **loophole** இருக்கிறது, **foolproof** ஆக இருக்க வேண்டும் என்று சொன்னேன். தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைப்பதற்காக, சிபாரிசுகள் செய்வதற்காக ஒவ்வொரு தினமும் மாணவர்களும், அவர்களுடைய ஆட்களும், எம்.எல்.ஏ.க்களிடம் வந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். என்னை பொறுத்த வரையில் சட்டசபை நடவடிக்கைகளின்போது நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டுப் பேசுவதில்லை, பேசக்கூடாது என்ற பழக்கத்தில் வந்திருக்கிறேன். அப்படி ஒரு தனிப்பட்ட நபரைக் குறிப்பிட்டுப் பேசி விவாதம் நடத்தினால் சபையினுடைய விவாதத்தின் தரம் "ஸ்டாண்டர்ட்" மிகவும் மோசமாகிவிடும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இருந்தபோதிலும்கூட, பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தில் இருக்கக்கூடிய மந்திரி அவர்கள் இந்த விபரங்களை குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அதன் பின்னும் நான் சொல்ல வேண்டாம் என்றுதான் நினைத்தேன். இருந்தாலும் பொது மக்களுடைய நன்மையை கருதி இதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். தலைவர் அவர்களும் சொல்லும்படி கட்டளையிட்டார்கள்.

MR. SPEAKER: நான் சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. சொல்லாமலும் இருக்கலாம் என்றுதான் சொன்னேன்.

SRI T. S. RAMASWAMY PILLAI: மதிப்பிற்குரிய நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் இராமசாமி இந்த சபைக்குப் புதிது, அவர் நவம்பர் ஒன்றும் தேதிக்குப் பின்னால்தான் வந்திருக்கிறார்கள், அதற்கு முன்னுள்ள சங்கதி அவருக்கு ஒன்றும் தெரியாது என்றும் தொழிற் கல்லூரிகளுக்கு இந்த வருடமுள்ள 'ரிக்ரூட் மெண்ட்' முடிவாகவில்லை என்றும் சொன்னார்கள். நான் கூறுவது இதற்கு முன்னும்கூட தொழிற் கல்லூரிகளில் நடந்த ரிக்ரூட்மெண்டுகளில் சென்னை ராஜதானியிலுள்ள கல்லூரிகளில், என்னை பொறுத்தவரை எங்கள் தொகுதியிலிருந்து பலருக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். நான்காம் தரத்திலுள்ள மாணவர்கள், இரண்டு தடவை, மூன்று தடவை தோற்று பின்னால் தேறின மாணவர்கள் எத்தனையோ பேர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும். என்னுடைய தொகுதியை பொறுத்த அளவில், ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு இரண்டு வாக்குறுதிகள் தரவேண்டும், ஒன்று அந்த மாணவர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்கூடாது. இன்னொன்று கடந்த வருடத்தில் யார் யாரெல்லாம் மனு செய்திருந்தார்கள், அப்படி மனு செய்திருந்தவர்களில் இடம்

[Sri T. S. Ramaswamy Pillai] [5th July 1957

கிடைத்த மாணவர்களுடையவும் கிடைக்காத மாணவர்களுடையவும் மார்க்குகளை எல்லாம் இந்த சபையில் முன்னால் (டேபிளில்) வைக்க முடியுமா என்று கேட்கிறேன். சென்ற ஆண்டிலும் அதற்கு முன்னாலும் 4-வது rank-இல்லா மாணவர்கள் இங்குள்ள கல்லூரிகளில். . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : I want to know whether it happened in any Government college?

SRI T. S. RAMASWAMY PILLAI : I was referring to professional colleges generally irrespective of the fact whether they are Government Colleges or private colleges.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member need not make any distinction between Government colleges and private colleges. I wish to know whether the instances referred to by the hon. Member happened in both Government and private colleges or only in private colleges?

SRI T. S. RAMASWAMY PILLAI : நான் குறிப்பிடுகிற தொழிற் கல்லூரிகளில் அரசாங்கத்தின்கீழ் உள்ளவைகளும் உண்டு, தனிப்பட்ட கல்லூரிகளும் உண்டு. . . .

MR. SPEAKER : In order to avoid such frequent disturbances, I should like the hon. Member to finish his statement. If it affects Government Colleges, the Hon. Minister may reply to the points; otherwise he may not make any answer.

SRI T. S. RAMASWAMY PILLAI : நான் எனது நண்பர் சுப்பிரமணியம் அவர்களுக்கு சொல்லுகிறேன். . . .

MR. SPEAKER : Will the hon. Member please address the Chair? Otherwise I will have to stop the discussion? The hon. Member will please ignore the disturbances and address the Chair and finish his reply.

SRI T. S RAMASWAMY PILLAI : ஸார், கவர்ன்மெண்ட் கல்லூரியிலும் ஒருவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது; இதில் ஆர்டர் இருந்தது என்றால் சரி, இல்லையென்றால் இல்லை. உதாரணமாக காரைக்குடி இன்ஜினியரிங் கல்லூரியில். . . .

MR. SPEAKER : The hon. Member is trying to make a second speech. That is not allowed.

SRI T. T. DANIEL : On a point of order, Sir. May I know whether this Assembly has got jurisdiction to go into the selections made by non-Governmental professional colleges in our State?

MR. SPEAKER : Mr. Ramaswamy Pillai made a general allegation about admissions to the professional colleges in the State and he did not make a distinction between Government and non-Government colleges. I wish to know, in what way, does hon. Member Mr. Daniel think that it is objectionable, because private Colleges also receive grants from Government. I think it is in order but nobody can take action as a result of such disclosures.



5th July 1957]

SRI A. CHIDAMBARANATHA NADAR : Sir, I rise on a point of information . . .

MR. SPEAKER : If it is a point of information, the hon. Member must wait. But if he wants to raise a point of order, he can do so.

SRI K. VINAYAKAM : On a point of order, Sir. Did the Chair allow the hon. Member to make a personal explanation or a statement? A statement is absolutely different from personal explanation. There can be no debate over personal explanation—not even a passing remark by Hon. Members of the Cabinet. So, the hon. Members can make a personal explanation and be done with. There can be no discussion or expatiation over these matters.

MR. SPEAKER : I am permitting him to make a personal explanation.

SRI T. S. RAMASWAMY PILLAI : நம்முடைய பட்ஜெட்டில்கூட தனியார் தொழில் கல்லூரிகளுக்கு சுமார் 12 லட்ச ரூபாய் கொடுக்கிறோம். அந்தக் கல்லூரிகளுக்கு 'அட்மிஷன்' பொறுத்தவரை சரியான விதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தொழில் கல்லூரிகளைப்பற்றி பொதுவாக குறிப்பிடுவதற்குக் காரணம் கன்னியாகுமாரி ஜில்லாவிலுள்ள காங்கிரஸ் அட்ஹாக் கமிட்டியின் கன்வீனரின் மகன், மருமகன், மைத்துனன் இவர்கள் எல்லோருக்கும் இடம் கிடைத்திருக்கிறது. போன வருஷம், அதற்கு முந்திய வருஷம் அவருடைய தூர பந்துக்களுக்கும் இடம் கிடைத்திருக்கிறது.

MR. SPEAKER : How is the Government responsible for this action?

SRI T. S. RAMASWAMY PILLAI : They give grants and have allotted Rs. 12 lakhs. We must see that admission is done on principles only.

MR. SPEAKER : I am afraid that the personal explanation is again descending to the level of charges and counter-charges. I am afraid I cannot allow any discussion on that point. I rule that further discussion on these things cannot take place, if it is going to be allegations against individuals or against groups of individuals. So, if Mr. Ramaswamy Pillai is prepared to confine himself to a personal explanation . . .

SRI T. S. RAMASWAMY PILLAI : I have finished.

MR. SPEAKER : So, the hon. Member has finished. We shall now proceed to the next item.

SRI K. K. MUTHIAH : On a point of order, Sir, காங்கிரஸ் ஆட்களுடைய பிள்ளைகளெல்லாம் முட்டாள்களாக இருக்கவேண்டும் என்று அங்கத்தினர் கருதுகிறார்களா?

MR. SPEAKER : It is not an allegation. He stated certain facts. You can make a statement when you get a chance.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957–58—*cont.*

MR. SPEAKER: The hon. the Leader of the Opposition is going to make his speech to-day. The practice is for, the Hon. the Finance Minister only to reply. But I have received notice that two Ministers want to make a statement, besides the Finance Minister and they are entitled to do it. After the hon. Leader of the Opposition makes his speech, I shall call upon the two Ministers concerned to make their statements. Then, I shall call upon the Hon. Finance Minister to make his speech.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் சபாநாயகர் அவர்
35 p. களே, நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் இந்த ஆண்டில் ஒரு பற்றுக்குறை பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அநேகமாக ஒவ்வொரு வருஷத்திலும் நமக்கு பற்றுக்குறை பட்ஜெட்டே வந்துகொண்டிருக்கிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்கது. வரவுக்கு மேல் செலவு ஒவ்வொரு வருஷமும் அதிகரித்துக்கொண்டே போகிறது. வரவையும் செலவையும் சரிக்கட்டி புது வரிகள் இல்லாமல் இருப்பதற்கு ஒரு மார்க்கத்தையும் காணோம். சமீப காலத்திலே மத்திய சர்க்கார் அநேக புதிய வரிகளை போட்டிருக்கிறார்கள். முக்கியமாக செலவின் மீது வரி, வருமான வரி இவைகளெல்லாம் போடப்பட்டிருக்கிறது. ஜனங்களை இது எவ்வளவு தூரம் பாதிக்கும், ஜனங்கள் எவ்வளவு தூரம் உத்தியோகஸ்தர்களால் துன்பப் படுத்தப்படுவார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. எங்கு பார்த்தாலும் வரி, மத்திய சர்க்காரிலும் வரி, ராஜ்ய சர்க்காரிலும் வரி. இம்மாதிரியான நிலையில்தான் நாம் இருந்து கொண்டு வருகிறோம். முக்கியமாக துண்டு விழுகின்ற இந்த நமது ராஜ்ய பட்ஜெட்டுக்கு புது வரி மாறுதல்கள் அவசியமா என்பதுதான் பெரிய பிரச்னை. ஆந்திரா, மைசூர் போன்ற பக்கத்து ராஜ்யங்களை எடுத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால் இம்மாதிரி துண்டுவிழும் பட்ஜெட்டைத் தான் ஒரு வித வரியையும் புதிதாகப் போடாமல் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அது ரொம்பவும் பாராட்டத்தக்கது. அப்படியில்லாமல் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் புது வரி போடவில்லை என்றும், ஆனால் இருக்கும் சில வரிகளில் மாற்றம் ஏற்படுத்தி சமாளிக்க வேண்டியிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். மைசூரில் இப்பொழுது இருக்கின்ற வரி இனங்களை உயர்த்தி 3 கோடி ரூபாய் இந்த வருஷமே வசூலிக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். அதற்கான மசோதாக்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பேப்பரிலும் பார்த் திருக்கலாம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: இருந்தபோதிலும், மற்ற ராஜ்யங்களில் துண்டு விழுந்தபோதிலும் அவர்கள் புது வரி போடவில்லை என்பதைப்பற்றியே அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பார்க்கப்போனால் உலகத்திலேயே இந்தியாவில்தான் வரி அதிகமாக இருக்கிறது. பெரிய பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்துப் பார்த்ததில் மற்ற தேசங்களைவிட இந்தியாவில்தான் வரி அதிகம் என்று சொல்லியிருக்கிறார்கள். வரி போடும் விஷயத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களெல்லாம் இந்தியாவுக்குப் பிறகுதான் வருகின்றன. முன்னதாகவே இந்தியாவில் அதிக வரி போடப்பட்டிருக்கிறது என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள். முக்கியமாக இந்த வரவு செலவு திட்டத்தில் சுமார் ரூ. 4,83,00,000 தான் துண்டு விழுகிறது. இந்த வரி மாற்றம் அவ்வளவு அவசியமா என்பதை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. இந்த பட்ஜெட்டை சரிக்கட்டுவதென்றால் ஒருவிதமாக சரிக் கட்டியிருக்கலாம்.





அரசாங்கத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு ஒரு பெரிய உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள். அந்த உத்தியோகஸ்தர் சில காலம் லீவில் இருந்ததால் இன்னும் தீவிரமாக வேலையை ஆரம்பிக்கவில்லை என்று நான் கேள்விப் படுகிறேன். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டால், ஒரு உத்தியோகஸ்தர் மட்டும் இந்த விஷயத்தை விரைவாக பரிசீலனை செய்ய முடியாது. அதற்குப் பதிலாக அவரையும் வைத்துக்கொண்டு வேறு சில முக்கியமான "செக்ரடேரியட்" உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகப் பற்று அற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். நான் இதற்கு முன்பே சட்டசபையில் பேசும்போது இம்மாதிரி ஒரு பொறுப்புள்ள கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேன். வரவு செலவு திட்டங்களை சரியாக பரிசீலனை செய்து செலவு இனங்களை எவ்வளவு தூரம் குறைக்கமுடியுமோ அவ்வளவு தூரம் குறைக்கவேண்டும் என்று அநேக தடவை நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இம்மாதிரியான சில அங்கத்தினர்களும் சேர்ந்த ஒரு பொறுப்புள்ள கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆந்திரா, தென்கன்னடம், மலபார் முதலிய பகுதிகள் நம் ராஜ்ஜியத்திலிருந்து பிரிந்து போன பிறகும் அதிகமான ஆபீஸர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்வளவு ஆபீஸர்களும் தேவையா என்பதைப்பற்றி சிந்தித்துப்பார்க்கவேண்டும். உதாரணமாக நம் ராஜ்யத்திற்கு அவ்வளவு போர்டு மெம்பர்கள் அவசியமா? அம்மாதிரி அவ்வளவு செக்ரடரிகளும் இலாகாக்களும் அவசியமா? நம் ராஜ்ஜியத்திலிருந்து கணிசமான பகுதிகள் பிரிந்துபோன பிறகும் இலாகாக்கள் பெருகிக்கொண்டே இருக்கிறதே தவிர குறையவில்லை. அது ரொம்பவும் வருந்தத்தக்கது. உதாரணமாக, பொது மராமத்து இலாகாவை எடுத்துக்கொண்டால் மூன்று பிரதம என்ஜினியர்கள் இருக்கிறார்கள். நமது அணைக்கட்டுத் திட்டங்களெல்லாம் கூடிய சீக்கிரம் பூர்த்தியாகும் தருணத்தில் இருக்கின்றன. மூன்று, நான்கு பிரதம என்ஜினியர்கள் ஒரு இலாகாவுக்கு தேவையா என்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். நீர்ப்பாசன வசதி, ரோடு, கட்டிடம் முதலிய இலாக்காக்களுக்கு சேர்த்து ஒன்று, இரண்டு பிரதம என்ஜினியர்களை போட்டால் போதாதா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். சிக்கனக் கமிட்டி எல்லா முக்கியமான இலாகாக்களிலும் இது போன்று பரிசீலனை நடத்தி, முன்பு சமர்ப்பித்த விஷயங்களையெல்லாம் நன்றாக யோசனை செய்யவேண்டும். சில காலத்திற்கு முன்பு அதாவது இருபது வருஷத்திற்கு முன்பு இருக்குமென்று நினைக்கிறேன். ராஜ்யப் பிரிவினைகளுக்கு முன்பு 17 கோடி ரூபாய்தான் வருமானம் வந்து கொண்டிருந்தது என்று ஞாபகம். இப்போது சுமார் 60 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது. நிறைய வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் பற்றுக்குறை இருப்பதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதாய் இருக்கிறது. எவ்வாறு செலவினங்களைக் குறைக்கலாம் என்பதைப்பற்றி ஒவ்வொரு இலாகாவிலும் பரிசீலனை செய்யவேண்டியதாய் இருக்கிறது. ஜீப்புகளைப் பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. ஜீப்புகள் ஒவ்வொரு இலாகாவிலும் கையாளப்படவில்லை. சில இலாகாக்களில்தான் இருக்கின்றன. என்றாலும் அவைகள் எல்லாம் துர்விநியோகம் செய்யப்பட்டு அதனால் எவ்வளவு செலவாகிறது என்பதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்லவேண்டியது இல்லை. அதைப்பற்றியும் உயர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவரைப் போட்டு சர்க்கார் விசாரணை நடத்தியதாக நான் கேள்விப் பட்டேன். அவருடைய ரிப்போர்ட்டையும் சட்டசபை முன்பாக வைக்கும் படியாக நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேமாதிரியாக ஒவ்வொரு இலாகாவிலும், முக்கியமாக அமைச்சர் முதலியவர்களுக்காக என்று உயர்ந்த ரகக் கார்கள் எல்லாம் வாங்கப் பட்டிருக்கின்றன. இரண்டு, மூன்று, நான்கு வருஷங்களுக்குள்ளாக அதிக விலையுள்ள கார்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை சரியாக உபயோகிக்கப்படவில்லை. இவ்வினத்தில் ஏராளமான ரூபாய்கள் விரயம் ஆகியிருக்கின்றன. முக்கியமாக அமைச்சர்கள் எல்லோருக்கும்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [5th July 1957

நான் சொல்வது என்னவென்றால் செலவினங்களைக் குறைக்கவேண்டும். செலவினங்களைக் குறைக்கவேண்டுமென்று அவர்களே சொல்லுகிறார்கள். 'அவர்களுடைய சம்பளத்திலும் வெட்டு செய்ய வேண்டும். அதாவது பத்து சத விகித சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும்' என்று வெளியில் பலர் சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டாம். இன்னும் கொஞ்சம் அதிக ஊதியம் வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்ளட்டும். ஆனால், கார்கள் வாங்குவது, டூர்கள் போவது முதலியவற்றால் ஆகும் வீணான பண செலவைக் குறைக்க முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் ஒருவர் ஒரு இடத்திற்கு போகிறார் என்றால் அங்கே பல ஆபீசர்கள் போக வேண்டியதாக இருக்கிறது. மற்ற வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு இந்த உத்தியோகஸ்தர்கள் அங்கே போய்விடுகிறார்கள். அதனால் வேலை தாமதப்படுகிறது. பணமும் விரயமாகிறது. அமைச்சர் அவர்கள் இவ்விஷயங்களில் எல்லாம் கவனம் செலுத்தி வீணாகப் பணம் விரயமாவதைத் தடுத்து சிக்கனம் செய்தாலே போதும்.

அதேமாதிரியாக தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம் முதலிய பிராந்தியங்களில் செய்கின்ற செலவுக்கேற்றபடி அங்குள்ள மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை என்பது என்னுடைய குறை. இவற்றினாலும் பணம் விரயம்தான் ஆகிறது. இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஒவ்வொரு இலாகாவுக்குமிடையே "கோஆர்டினேஷன்" இல்லை, என்று சொல்வது உண்மை. இவை எல்லாம் ஒரு ஜில்லா அதிகாரியின் கீழ் வேலை செய்யும்படியாகச் செய்யவேண்டும். அதில் குற்றங்குறைகள் இருந்தால் அந்த ஜில்லா அதிகாரி அதைப் பார்த்து தக்கபடி சீர்திருத்த வேண்டும். இவற்றில் உண்டாகின்ற வீணான பணவிரயத்தையும் கட்டுப்படுத்திச் சிக்கனம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது கிராம சேவக் என்று சில அதிகாரிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வேலை என்ன என்பதை அங்கத்தினர்களுக்கு அமைச்சர்கள் சொல்லவேண்டும். இம்மாதிரியாக இவர்கள் இருப்பது அவசியமா ? அவர்கள் இருப்பதனால் எந்த விஷயத்தில் நன்மை ஏற்படுகின்றது என்பதை அமைச்சர்கள் சொல்லவேண்டும்.

அதுமாதிரி சட்டசபைகளைப்பற்றி ஒரு வார்த்தை. சட்டமன்றக் காரியாலயம் மவுண்டுரோடில் இருந்து இங்கே வந்ததனால் அதிகமான செலவு ஏற்பட்டு இருக்கின்றன. அங்கத்தினர்களுக்கும் கஷ்டம். அவ்விடத்திலேயே சட்டமன்றம் இருந்திருக்கலாம். இதைப்பற்றி பின்னிட்டு வெட்டுப் பிரேரணை வரும்போது விஸ்தாரமாகப் பேச விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் நமக்கு சரிவர உதவி கொடுப்பதில்லை. அதனால் அநேக இடங்களில் முக்கியமாக தமிழ்நாட்டில் பலருக்கு வருத்தம் உண்டாகியிருக்கிறது. மற்ற மாகாணங்களோடு நம் ராஜ்யத்திற்கு மத்திய சர்க்கார் செய்து வருகின்ற உதவியை ஒப்பிட்டுப் பார்த்தால் நம் ராஜ்யத்திற்குக் கொடுக்கப்படும் சலுகை ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். கைத்தொழில்கள் எல்லாம் நம் ராஜ்யத்தில் அதிகம் நிருவப்படவில்லை. அமைச்சர்கள் நம் ராஜ்யத்தில் அதிகம் ஏற்படுத்த வேண்டுமென்று சண்டை போட்டுக்கொண்டு வருகிறோம் என்று சொன்ன போதிலும் நமக்கு மத்திய சர்க்கார் நம்முடைய வேண்டுகோளைக் கவனித்தே சலுகை அளிக்கவில்லை. முக்கியமாக மின்சார இலாகாவை எடுத்துக் கொண்டால் இறக்குமதி லைசென்ஸ் கொடுப்பதில்லை. பம்பு செட்டுகள் மோட்டார் முதலியவைகளை இறக்குமதி செய்ய அனுமதிக்க வில்லை. அநேகம் பேர் கருப்பு மார்க்கெட்டில் புதுச்சேரி முதலிய இடங்களுக்குப் போய் அங்கே வாங்கிக் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்கிறார்கள். சிறு கைத்தொழில்களுக்கு வேண்டிய கருவி கரணங்களை மத்திய சர்க்கார் கொடுப்பது இல்லை. அதன் காரணமாக ரொம்பவும் கஷ்டப் படுகிறார்கள் ஜனங்கள்.



5th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

இப்பொழுது நம்முடைய பட்ஜெட்டிலே, நல்ல விதைகளைத் தயார் செய்வதற்காக விதைப் பண்ணைகள் (Seed Farms) வைப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அது ரொம்பவும் வரவேற்க வேண்டிய விஷயம். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றி அவர்கள் பார்க்க வேண்டும். பெரிய பண்ணை வைத்திருப்பவர்களைக் கொண்டே இம்மாதிரி விதைகளை உற்பத்தி செய்வதற்கு வழி செய்யலாம். விதைப் பண்ணைகளுக்காக என்று பெரிய ஆபீசர்களைக் காயமாக வைக்காமல், அவ்வப்போது வந்து பெரிய பண்ணை வைத்திருப்பவர்கள் தயாரிக்கக் கூடிய விதைகளை மேற்பார்வை செய்தால் நலமாக இருக்கும். பெரிய பண்ணை வைத்திருப்பவர்களையே விதைப் பண்ணைகள் வைக்கும்படி செய்து, சர்க்கார் சொல்கிறபடி யார் யாருக்கு எந்த விலையில் அவ்விதைகளை விநியோகிக்க வேண்டுமோ, அம்மாதிரி விற்கக் கூடிய முறையில், பெரிய பண்ணைகள் வைத்திருப்பவர்கள் மூலமாகச் செய்தால், நம்முடைய சர்க்காருக்கு செலவு குறையும். ஆனால் இம்மாதிரி பெரிய பண்ணை வைத்திருப்பவர்கள் இல்லாத இடங்களில் சர்க்காருடைய நேரடிப் பார்வையில் விதைப் பண்ணைகளை வைக்கலாம் என்பதும் என்னுடைய அபிப்பிராயம்.

பஞ்சாப் மாகாணத்தையும் நம்முடைய மாகாணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. அங்கே அவர்கள் நம்மை விட நாலரை மடங்கு அதிகமாக உணவு உற்பத்தி செய்கின்றார்கள். நம்முடைய மாகாணத்தில் முக்கியமாக வருஷத்தில் மூன்று லட்சம் டன் தானிய உற்பத்தியில் குறைவாக இருக்கிறது. ஆனால், தானிய உற்பத்தி முன்னைவிட அதிகமாக இருந்தாலும் விலைவாசி குறையவில்லை. தானிய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக, நம் ராஜ்யத்தில், பருவ மழை சரியாக இல்லாதது ஒரு பக்கம். சர்க்காருடைய விவசாய டிபார்ட்மெண்டார் அமோனியம் சல்பேட் முதலிய உரங்களை நல்ல முறையில் விவசாயிகளுக்கு விநியோகிக்காதது இன்னொரு காரணம். தவிர, பூச்சியினால் எங்கு பார்த்தாலும் நஷ்டம். பூச்சித் தொல்லையைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் கொஞ்சம் உதவி செய்திருந்தபோதிலும், பூச்சித் தொல்லை ஏற்படும் பிராந்தியங்களில் வருஷம் பூராவும் தாராளமாக மருந்துகள் விநியோகிக்கப்பட்டு, தடுப்பு முறைகளைத் தீவிரமாகக் கையாளவேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒவ்வொரு பிராந்தியத்திலும் எந்த முறையில் செய்யலாம் என்பதற்காக அந்தந்த பிராந்தியத்தில் கமிட்டிகளைப் போட்டு, அங்கே ஆபீசர்களைப்போட்டு காரியங்களைச் செய்யலாம். எப்படிப் பற்றாக்குறையைப் போக்கலாம் என்பதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலனை செய்து நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நீர்ப்பாசன வசதி சம்பந்தமாகப் பேசும்போது, நம்முடைய பிராந்தியத்தில், அதாவது தமிழ் நாட்டில் இருக்கும் திட்டங்களெல்லாம் அநேகமாகப் பூர்த்தியாகிவருகின்றன. நேற்று நமது திருவாளர் அண்ணாத்துரை அவர்கள் பாலாற்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது விஷயத்தைச் சர்க்கார் மறுபடியும் பரிசீலனை செய்யவேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிறு நீர்ப்பாசன விஷயமாக (Minor Irrigation Works) அநேக ஏரிகள் பழுது பார்க்கப்படாமலிருக்கின்றன. பழுது பார்க்கப்பட்டபோதிலும் அவைகளுடைய Full Tank Level (F.T.L.) வரையில் கரைகள் நன்றாகப் பழுது பார்க்கப்படவில்லை. பழைய நாள் திட்டப்படி ஒரு ஏரியானது மராமத்து செய்யப்பட்டு, ஐந்து வருஷம் ஆவதற்குள் மறுபடியும் மராமத்துக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்பது. அந்த முறையில் கலெக்டர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த மனப்பான்மை மாற வேண்டும். மராமத்து செய்யப்பட்டு, இரண்டு மூன்று வருஷங்கள் ஆன

வுடனே அநேக ஏரிகள் மறுபடியும் கேவலமான ஸ்திதியில் இருக்கின்றன. மண் கறை ஆனபடியால், தண்ணீர் சரியாக தேக்கப்படவில்லை. **Full Tank Level**-ஐத் தூக்கி, கறையைப் பழுது பார்த்து, வரவு கால் களேயும் நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஏரியிலும் குறைந்தது ஒரு போகம் சாகுபடிக்காவது தண்ணீர் கிடைக்கும்படியான ஏற்பாட்டை சர்க்கார் கவனிக்க வேண்டும். அதற்காக ஸ்பெஷல் டிபார்ட் மெண்ட் ஒன்றை ஏற்படுத்தி, ஒவ்வொரு ஏரியினுடைய வரவு காலேயும் பழுது பார்க்க என்ன செய்யவேண்டுமென்பதில் அவர்கள் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இம் மாதிரி அநேக "மைனர் இரிகேஷன்" ஏரிகள் பழுது பார்க்கப்படுவதன் மூலமாக விவசாயம் நல்ல முறையில் பெருகும். பெரிய பிராஜெக்டுகளின் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறதோ, அதற்குச் சமமாக இவை மூலம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. இதைச் சர்க்கார் சற்று சீக்கிர மாக கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தவிர, அநேக இடங்களில் மனுக்கள் போட்டும் சில ஏரிகள் சரிவர பரிசீலனே செய்யப்படாமல் இருக்கின்றன. ஒரு சில கிராமத்தில் இருக்கும் கட்சிகளுடைய கொள்கையினாலும், மற்ற விதக் கொள்கையி னாலும் தாமதம் ஏற்படுவதை சர்க்கார் எப்படியாவது தீர்த்து, எந்தக் கட்சி எப்படி இருந்தபோதிலும், நீர்ப்பாசன வசதிக்காக சர்க்கார் ஒரு தனி சட்டமாவது ஏற்படுத்தி, இதைக் கையில் எடுத்துக்கொண்டு, சிறு நீர்ப் பாசன வசதிகளுக்கான ஏரி முதலியவைகளைக் கூடிய சீக்கிரம் மராமத்து செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காட்டு இலாக்காவைப் பற்றி இரண்டொரு வார்த்தை. முக்கியமாக, நமக்கு இருந்த பெரிய காடுகள் மலபார் ஜில்லாவிற்கும், மற்ற பிராந்தியத் திற்கும் போய்விட்டன. அதாவது மைசூருக்கும் மலபாருக்கும் போய்விட்டன. நமக்கு எஞ்சியிருக்கும் காடுகள் மிகக் குறைவு. அவைகளே நல்ல முறை யில் விருத்தி செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்குச் சில இடங்களில் சவுக்கு பயிரிடுகிருர்கள். அப்படிச் சவுக்கு வைப்பதன் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது, வரவுக்கும் செலவுக்கும் எவ்வளவு இருக்கின் றது என்பதைப் பற்றி விளக்கும் ஒரு "ஸ்டேட்மெண்ட்" தயார் செய்து ஜில்லாவாரியாக புள்ளி விவரங்களைக் கொடுத்து, நம்முடைய சட்டசபை முன்பு அமைச்சரவர்கள் சமர்ப்பித்தால் நன்ருக இருக்குமென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது முந்திரி சாகுபடி செய்துவருகின்ருர்கள். இதனுல் நமக்கு அன்னியச் செலவாணி கிடைக்கும். இருந்தபோதிலும் இது எவ்வளவு லாபகரமாக இருக்கிறது என்பதைப் பற்றி நன்ருக யோசித்துச் செய்ய வேண்டும். அதிலும் முக்கியமாக, நம்முடைய பிராந்தியங்களி லிருந்த பழப் பண்ணைகள் எல்லாம் ஆந்திர தேசத்திற்குப் போய்விட்டன. சேலத்தில் சில இடங்களில் ஏற்பாடு செய்ய ஆரம்பித்திருக்கிருர்கள். இன் னும் இரண்டொரு ஜில்லாக்களில் பழப் பண்ணே வைப்பதைப் பற்றி பரிசீலனே செய்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தவிர காட்டு இலாகா சில மரங்களே அவ்வப்போது ஏலத்திற்கு விடு கிறது. ஆயிரக்கணக்கான எக்கரிலுள்ளவைகளே சர்க்கார் ஏலத்திற்கு விடுகிருர்கள். அப்படி விடுவதினுல் (**middle class**) எளியவர்கள் ஏலம் கேட்க முடியாமல் சர்க்காருக்குக் கிடைக்கக் கூடிய வருமானங்கள் எல்லாம் குறைந்து விடுகின்றன். பெரிய ஆசாமிகளெல்லாம் மொத்த மாகப் போட்டு எடுத்துக்கொள்வதினுல் சர்க்காருக்கு நஷ்டம். சிறு சிறு ஆசாமிகள் போய்க் கேட்க சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, சிறு சிறு துண்டாகப் பிரித்து ஏலம் போட்டால் அதிலிருந்து நல்ல வருமா னம் சர்க்காருக்குக் கிடைக்கும். இதை சர்க்கார் யோசனே செய்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொ[illegible]



சுகாதார இலாகாவைப் பற்றிச் சில வார்த்தை. இப்பொழுது நம் ராஜ்யத்தில் இன்புளுயன்ஸா ஜுரம் வந்திருக்கிறது. நிறையப் பரவியிருக் கிறது. கிராமங்களில் பரவியிருப்பதைத் தடுக்க சர்க்கார் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். **Mobile van**-ஐ அனுப்பி நிறைய டாக்டர்களே அனுப்ப வேண்டும். ஒரு வாரத்திற்கு முன்பு சில கிராமங்களுக்குப் போயிருந்தேன். சில ஜில்லாக்களில் இன்னும் அநேக ஊர்களில் மக்கள் இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிருர்கள். சரியான டாக்டர்கள் அவ்விதம் இல்லாத கார ணத்தால், அவர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டு வருகிருர்கள். அதற்காக சர்க்கார் **Mobile van** ஏற்படுத்தி, டாக்டர்களேயும், நர்சுகளேயும், தேவையான மருந்துகளேயும் வைத்து, கிராமங்களுக்கும், சேரிகளுக்கும் முக்கியமாக போக்கு வரத்து சாதனங்கள் குறைவாக இருக்கும் கிராமங் களுக்கும் அனுப்பி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர, இந்த டிபார்ட்மெண்ட்களில் **Post graduate study**, அதாவது **Special Department**-ல் அளிக்கப்படும் பயிற்சி, பெருக்கினுல் நல்லது. பிரசவ ஆஸ்பத்திரி, ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குத் தகுந்த டாக்டர் களேப் போடவேண்டும். **M.D.** அல்லது **M.S.**, போன்று பாஸ் செய்த வர்களேயெல்லாம் அந்த ஆஸ்பத்திரிக்குப் போடவேண்டும். இவர்களே மேல்நாட்டுக்கு அனுப்பி ஒவ்வொரு ஜில்லாக்களிலும் பெரிய, படித்த டாக்டர்களேப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக காலேஜ் அட்மிஷன். இப்போது சென்னேயில் நடந்து வரும் மெடிகல் காலேஜ், எஞ்ஜினீரிங் காலேஜ் பற்றி இரண்டொரு வார்த் தைகள் சொல்ல விரும்புகிறேன். நம் மாகாணப் பிரிவினேக்கு முன்பு திருவிதாங்கூர் ஸ்டேட்டில் ஒரே ஒரு மெடிகல் காலேஜ் இருந்தது. அப் போது அந்த டயத்தில் மதராஸ் ஸ்டேட்டிலிருந்து மலபாருக்கு 32 ஸ்தா னங்கள் கொடுக்கப்பட்டு வந்தது. மாகாணம் பிரிந்த பிறகு, திருவிதாங்கூர் மெடிகல் காலேஜ் அப்படியே இருக்கிறது. மலபாரில் கோழிக்கோடில், இப்போது கோழிக்கோடு ஜில்லா என்று நினேக்கிறேன், ஒரு மெடிகல் காலேஜ் ஆரம்பித்திருக்கிருர்கள். (THE HON. SRI C. SUBRAMANIAM : ஆரம்பிக்க வில்லை) யாரோ ஆரம்பித்ததாகச் சொன்னுர்கள். அப்படி இருக்கும்போது, 27 ஸ்தானங்கள் நம்முடைய மெடிகல் காலேஜிலிருந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று ஒரு கட்டளே பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. அதே மாதிரி மைசூர் பிராந்தியத்தில் 3 மெடிகல் காலேஜுகள் இருக்கின்றன. அதாவது பங்களூர், மைசூர், மணிபால்; சுமாராக 200 ஸீட்டுகள் இருக்கின்றன. நம் மாகாணத்திலிருந்து 11 ஸீட்டுகள் கொடுக்க வேண்டுமென்று உத்திரவு போட்டிருப்பதாகத் தெரி கிறது. ஆந்திராவிற்கு ஒரு ஸீட்டும் இல்லை. வேண்டாம் என்று சொன் னுர்களோ, நாம் கொடுக்கவில்லேயோ தெரியாது. அது அவசியமில்லை. அது தவிர, மலேயாளிகளும், தென் கன்னடத்தவரும் நம் தமிழ் நாட்டில் இருக்கிருர்கள். அவர்கள் எல்லோரும் நம் தமிழ் நாட்டிலே சேர்ந்த வர்கள். அவர்களும் இடத்துக்குப் போட்டி போடுகிருர்கள். இம்மாதிரி இருக்கும்போது கேரள ராஜ்யத்திற்கும் மைசூர் ராஜ்யத்திற்கும், ஏன், நாம் ஸீட் கொடுக்க வேண்டுமென்று தெரியவில்லை. கொடுக்கவேண்டு மென்ருலும் **Population basis**-ல் தான் கொடுக்க வேண்டுமேயொழிய அப்படிக் கொடுக்கக் கூடாது. மத்திய சர்க்காருக்கு நாம் சரியான ஆட்சே பணேகள் செய்து எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யவேண் டும். தமிழ்நாட்டினருக்கு போதுமான ஸீட் இல்லாமல் நாம் கஷ்டப் படும்போது மற்றவர்களுக்குக் கொடுப்பது வருந்தத்தக்கது. நம் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்து மற்ற மாகாணத்தாருக்கு ஒருவிதமான ஸீட்டும் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். மத்திய சர்க்கார் **direction** கொடுக்க நியாயம் கிடையாது. **Home Minister** சென்னேக்கு வருவ தாகத் தெரிகிறது. நம் அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சரோடு சண்டைபோட்டு அதோடு ஒருவிதமான ஸீட்டுகளும் மற்ற மாகாண தாருக்குக் கொடுக்காத ஏற்பாடுகளே செய்யவேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது நடப்பது ரொம்ப வருந்தத்தக்க விஷயம்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [5th July 1957

கைத்தறி நெசவாளர் பிரச்னை இப்போது ஒருவாராகத் தீர்க்கப்பட்டு வந்த போதிலும் குறைகள் நிறைய இருக்கின்றன. அது, கூட்டுறவு சங்கத்தில் இருப்பவர்களுக்கு சலுகை காட்டப்படுகிறது. தனியாக இருப்ப வர்களுக்கு ஒருவித சலுகையும் காட்டப்படவில்லை. இதை சர்க்கார் தீவிர மாக யோசிக்கவேண்டும். அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கால்நடை இலாகா. இப்போது நம்முடைய சென்னைக்கு அருகே இந்தக் கால்நடைப் பண்ணை வைத்து, இவ்விடத்தில் இருக்கும் பசுக்களை கொண்டு வைத்து பால் உற்பத்தி செய்வது ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் சொல்லுகிறார். ரொம்ப சந்தோஷப்படவேண்டிய விஷயம். ஆனால், கால்நடை ரகத்தை விருத்தி செய்வது பற்றி அவர்கள் கவனிக்க வேண்டும். கால்நடைகள் க்ஷீணதசையில் இருக்கிறது. **Milk problem,** ஒரு பக்கம் இருக்க, உயர்ந்த ரகக் கால்நடைகளை விருத்தி செய்வதைப் பற்றியும் தீர்க்க யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை முக்கியமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பண்ணை வீதம் வைக்க வேண்டும். முக்கியமாகச் சென்னையைச் சுற்றிலும், செங்கல்பட்டுக்கு அரு காமையிலே ஒரு பண்ணையை நிறுவவேண்டும். அதற்குக் காட்டிலாகாவி லிருந்து நிலத்தை ஒதுக்கச் செய்து ஒரு பால் பண்ணையை வைக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பால் ரொம்ப முக்கியம்.

இப்போது மின்சார வசதி. அதில் தீவிரமாக வேலைகள் நடந்து வருகிறது. ஒன்றும் சொல்வதற்கில்லை. இப்போது மின்சார போர்ட் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதில் பெரிய உத்தியோகஸ்தர்களையே போட் டிருக்கிறது. அதில் **non-officials**-ஐ போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று தான் என் எண்ணம். சர்க்கார் இதை யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது மத்திய சர்க்காருடைய உத்திரவைப் பொறுத்து நடந்ததாகத் தெரிகிறது. இருந்தாலும் **non-officials** இருக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோர்ட்டுகள் சம்பந்தப்பட்டவரையில் கேஸ்கள் துரிதமாக தீர்ப்பளிக்கப் படுவதில்லை. அநேக பழைய கேஸ்கள் **pending** ஆக இருக்கிறது. இன் னும் தீர்ப்பாகவில்லை என்று புகார்கள் வந்துகொண்டிருக்கிறது. அவை களையும் சர்க்கார் பார்த்து கவனிக்க வேண்டும். நீதிபதிகளுக்கு உத்தரவு அனுப்பி பழைய கேஸ்களை தீர்ப்பு செய்ய வேண்டுமென்று ஒரு **direction** கொடுக்க வேண்டும்.

**Prohibition,** அதாவது மதுவிலக்கைப் பற்றி இப்போது தீவிரமாக வேலைகள் நடந்துவருகிறது. ஆனால் எங்கு பார்த்தாலும் குற்றங்கள். குடியினால் குற்றங்கள் ஒரு பக்கம் இருக்கிறது. தவிர திருடர்கள் பயமும் வேறு விதக் குற்றங்களும் அதிகரித்திருப்பதாக வதந்தி இருக்கிறது. போலீஸ் இவைகளில் கவனம் செலுத்துவதில்லை என்றும் **prohi-bition**-ல்தான் கவனம் செலுத்துகிறார்கள் என்றும் வதந்தி. அப்படி இல்லாமல் மற்ற குற்றங்களையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று சொல்லுகிறேன்.

இப்போது பஞ்சாயத்து போர்டுகள் சரியான முறையில் நடக்கவில்லை. எலெக்ஷன் ஆகி அநேக வருஷங்கள் ஆகிறது. எலெக்ஷன் இல்லாமல் பஞ்சாயத்து எலக்ஷனைத் தள்ளிவைபபது நல்லதல்ல. நல்ல முறையில் பஞ்சாயத்து போர்டுகள் இருக்கவில்லை. சரியான கண்காணிப்பு இல்லை. பஞ்சாயத்து போர்டு எலெக்ஷனைக் கூடியசீக்கிரம் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்குமேல் தள்ளி வைக்கக் கூடாது. ஜில்லா போர்டு எலெக்ஷனையும் தள்ளி வைக்கக் கூடாது. ஒன்று ஜில்லா போர்டு வைத்திருப்பதா, அல்லது தாலுக்கா போர்டு கொண்டுவருவதா என்று ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஜில்லா போர்டுகளை வைத்திருக்க வேண்டுமானால், நல்ல முறையில் அவைகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். பணம் கொடுக்க வேண்டும். தாலுக்கா போர்டு வேண்டுமானால், அதற்கு என்ன செய்யவேண்டுமென்று யோசித்து ஒரு முடிவுக்கு சீக்கிரம் வரவேண்டும்.



5th July 1957] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

எந்த காரணத்தாலும் ஜில்லா போர்டு எலக்ஷன்களைத் தள்ளி வைக்கக் கூடாது. முக்கியமாக நிதிக் குறைவு காரணமாக ரோடுகளை அவர்கள் சரிவரக் கவனிப்பது இல்லை. மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோட் என்று சொல்லப்படு பவைகளை எல்லாம் சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த பட்ஜெட்டில் 470 மைல் ரோடுகளை மட்டும் எடுத்துக்கொள்ளப்போவ தாக சொல்லப்பட்டிருக்கிறது. அது போதாது. பிரயோஜனம் இல்லை. முக்கியமாக பஸ் போக்கு வரத்து உள்ள இடங்களில், ஜில்லா போர்டு இந்த ரோடுகளைச் சரிவர பழுதுபார்ப்பது இல்லை. ஆகையால் மேஜர் டிஸ்டிரிக் ரோடுகளை எல்லாம் சர்க்காரே உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

**District Administration**-ஐப் பற்றி கன்னியாகுமரி ஜில்லாவிலே நாங்குனேரியை உடனடியாகச் சேர்க்கப்போவதாகச் சொன்னார்கள். இப்போது போர்டு மெம்பர் சமர்ப்பித்த ரிப்போர்டை உடனடியாகப் பரிசீலனை செய்து டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றி கவனம் செலுத்தி, ஜில்லாக்களை எவ்வளவு சீக்கிரம் பிரிக்க வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கலெக்டர்களுக்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிக வேலை இருக்கிறது. உதாரணமாக செங்கல்பட்டு கலெக்டருக்கு அடிக்கடி மீனம்பாக்கம் போய் அங்கு வருகிறவர்கள் போகிறவர்களைக் கவனிப்பதைத் தவிர மற்ற வேலை செய்ய அவகாசம் இல்லை. இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலும் வேலை அதிகரித்து விட்டது. இவைகளையெல்லாம் யோசித்து கூடிய சீக்கிரம் போர்டு மெம்பர் ரிப்போர்ட்டின் அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் ரிஆர்கனேசேஷனை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

லஞ்சங்கள் அதிகமாக இருக்கின்றன. எங்கு பார்த்தாலும், முக்கிய மாக கிராமங்களில், ரெவின்யூ டிபார்ட்மெண்ட், போலிஸ் டிபார்ட்மெண்ட் இவைகளில் அதிகமாக இருக்கின்றன என்று பேசப்படுகிறது. பஸ்காரர் களிடம் லஞ்சம் கேட்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்கு நல்ல ஆபீசர்களைப்போட்டு பரிசீலனை செய்து லஞ்சத்தை ஒழிக்க வழி செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புதிதாகப் போடப்பட்ட வரிகளில், ஸ்லாப் சிஸ்டம் என்று சொல்லப்படும் அடிப்படையில் தோட்ட வருமானத்தின் பேரில், வரி போட்டு இருக்கிறார் கள். ரப்பர், டீ, போன்றவைகள் நமக்கு அன்னிய செலவாணியைச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. இப்போது போட்டிருக்கும் அதிக வரியைக் குறைக்க வழி செய்ய வேண்டும். இப்போதே அவர்கள் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். இதைப் பற்றியும் சர்க்கார் நன் றாக யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உணவுப் பொருள்கள் மீது வரியைப் பூராவாக எடுத்திருக்க வேண்டும். முக்கியமாகப் பால் போன்ற சீக்கிரம் கெட்டுப்போகும் வஸ்துக்கள் மீது வரியைப் போடக் கூடாது. உணவு தானியத்தின் மீது வரியைக் குறைத் தது போதாது. வரி பூராவையும் எடுத்திருக்க வேண்டும் என்று சொல் லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றி சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும்.

பட்ஜெட்டில் கண்டிருக்கும் பல விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்தால் புது வரியைப் போட்டிருக்க வேண்டியதில்லை. இரண்டாவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு அவ்வளவு வரி வேண்டியதில்லை. பிளானை தள்ளி வைக்கவோ அல்லது மாற்றி அமைக் கவோ மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்து இப்போது போடப்பட்டிருக்கும் வரிகளை எல்லாம் எடுக்க முயற்சிக்க வேண் டும். மேலும் மேலும் வரி விதிக்க எவ்வித முயற்சியும் எடுக்கக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். முக்கியமாக இந்த பட்ஜெட்டை பற்றாக்குறையில்லாமல் சமர்ப்பித்து இருக்கலாம். இந்த வரிகள் போடு வது அவசியம் இல்லை. போடுவதால் மக்கள் கஷ்டப்படுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [5th July 1957

இவைகளை எல்லாம் யோசித்து, நிதி அமைச்சர் அவர்கள் மறுபடியும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்ன—அநேக முக்கியமான சொற் பொழிவுகள் ஆற்றியிருப்பது—எல்லாவற்றையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளு கிறேன்.

11-16 a.m. **THE HON. SRI M. BHAKTAVATSALAM:** கனம் சபா நாயகர் அவர்களே, மதிப்பிற்குறிய என் சகா கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த விவாதங் களுக்கெல்லாம் பதில் கூறுவார்கள். என் இலாகா சம்பந்தப்பட்ட வரை சில விஷயங்களைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இவைகளைப்பற்றியும் விரிவாக விளக்கம் கூறுவதற்கு டிமாண்டுகளை விவா திக்கும் போது எனக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென்று நம்புகிறேன். இருந் தாலும் இப்போது குறிப்பிட்ட இரண்டொரு விஷயங்களைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கு மும்முரமாக அமல் நடத்திவைப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்கு குற்றங் கள், திருட்டுச் சாராயம் காய்ச்சும் குற்றங்கள் குறைந்தால் மற்ற குற்றங் கள் அதிகரிக்குமோ என்று அச்சம் தெரிவித்தார்கள். நான் அவர் களுக்கு உறுதி கூறுகிறேன்; அவர்களும் உணரக்கூடியது, மதுவிலக்கு குற்றங்கள் குறைந்தால் அதன் விளைவாக மற்ற குற்றங்கள் தானுகக் குறையும். மற்ற குற்றங்கள் அதிகரிப்பதற்கு ஒரு முக்கிய காரணம் மதுவிலக்கு குற்றங்கள் போதிய அளவு கவனிக்கப்படாமல் இருப்பதுதான் என்று அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு குற்றங்களைப் பற்றி போலீசார் கவனம் செலுத்தும்போது மற்ற குற்றங்களையும் தவிர்க்க தங்கள் கவனத்தைக் குறைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உறுதி கூறுவேன்.

மதுவிலக்கைப்பற்றி எதிர்க்கட்சி கனம் அங்கத்தினர் ஒருவர் பேச்சைக் கேட்டு திடுக்கிட்டேன். சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இந்த சபை அங் கத்தினர், தொழிலாளர் தலைவர், அவர்கள் " ஓரளவு மதுபானம், முக்கிய மாக தொழிலாளர்களுக்கு நலம் தருவது " என்று சொன்னது எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. வைத்திய முறையில் கூட அவர் ஒரு அபிப் ராயத்தைத் தெரிவித்தார்கள் ; வேறு அபிப்பிராயங்களும் கேள்விப்படு கிறோம். க்ஷயரோகத்திற்கு கள் நல்லது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் நான் சமீபத்தில் ஐரோப்பா நாட்டிலுள்ள பல டாக்டர்கள், நிபுணர்கள், இவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள நேர்ந் தது. அவர்கள் உறுதியாக குறிப்பிட்டது " மது எந்த அளவிலோ, எந்த வகையிலோ இருந்தாலும், அது விஷம் விஷம்தான். உடல் நிலையை பாதிக் கத்தான் செய்யும் ". இந்த உறுதியான அபிப்பிராயத்தை, இந்நாட்டி லுள்ள டாக்டர்கள் அல்ல, ஐரோப்பாவிலுள்ள டாக்டர்கள், பல நிபுணர் கள் சொல்வதைத் தெரிந்து கொள்ள நேர்ந்தது. இதுபற்றி விரிவாக பேசுவதற்கு எக்ஸைஸ் டிமாண்டு விவாதிக்கும்போது சந்தர்ப்பம் நேரும் என்று நம்புகிறேன்.

காட்டிலாகாவைப்பற்றிக் குறிப்பிட்டு, காடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். சவுக்கு மரமோ, முந்திரியோ, ஆவேரியோ எதாக இருந்தாலும், எது எது எந்த எந்த பிராந்தியத்தில் அதிகப் பலனை அளிக்கக்கூடும் என்பதை கவனித்துத்தான் காடுகள் அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டும் நிறைவேற்றப்பட்டும் வருகின்றன. முக்கியமாக முந்திரிச் செடிகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. சில இடங்களில்தான் முந்திரிச் செடி வளர்ந்து சிறந்த பலனைக் கொடுக்கும். எந்த இடங்களில் அவை சிறந்த பலனை அளிக்கின்றன என்பது ஆராய்ந்தறியப்பட்ட பிறகுதான் அவைகளை அங்கே வளர்க்கும் பொறுப்பு எற்றுக்கொள்ளப்படுகிறது. இப்போது முந் திரிச் செடிகளை வளர்ப்பதுபற்றி எதிர் கட்சி அங்கத்தினர்கள் ஒன்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன்.



5th July 1957] [Sri M. Bhaktavatsalam]

கொள்ளப் முந்திரி பயிர் செய்யும் திட்டம் தேர்தலுக்குப் பிறகு எற்றுக் தொடங்கு பட்டது அல்ல. எதிர் கட்சியினர் தேர்தல் பிரசாரத்தைத் சென்ற அக்டோபர் வதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே, அதாவது முந்திரி பயிரிடப்பட்டது. அந்த மாதத்திலேயே, 8,700 எக்கர் வரையில் வளருகிறது ; 90 அல்லது மாதத்தில் முந்திரி நடப்பட்டது. அது நன்றாக 95 சத விகிதம் பலனளிக்கக்கூடியதாக இருக்கிறது.

விவசாய உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகாரிகளையும் மற்றவர்களையும் சேர்த்துக் கூட்டங்கள் போட்டு, இப்போது கிடைக்கக்கூடிய விளைவை இன் னும் கணிசமான முறையில் அதிகப்படுத்துவதில்—முக்கியமாக தேசீய வளர்ச்சித் திட்டங்களும் சமுதாய நலத் திட்டங்களும் நிறைவேற்றப்படும் பிராந்தியங்களில் விசேஷ கவனம் செலுத்தி விளைவை அதிகப்படுத்துவதில் —கவனம் செலுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதுபற்றி விவாதிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. அதிகாரிகளும் மற்றவர்களும் கூடும் அம்மாதிரியான கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. அந்தக் கூட்டங் களில் ஆங்காங்கே விவசாயத்தில் உள்ள குறைகளும், அவற்றை நீக்கு வதற்கான வழிவகைகளும், உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிகளும் விவாதிக்கப்பட்டு, அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்படுகிறது. அவசியமான நடவடிக்கைகளுக்கு சர்க்கார் எற் பாடு செய்து வருகிறார்கள்.

முக்கியமாக உணவுப் பிரச்னையைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் இந்த சமயத்தில் உங்களுடைய காலத்தில் சிறிதளவு எடுத்துக்கொள்ள விரும்பினேன். கனம் அங்கத்தினர்கள் " விலைவாசிகள் அதிகரித்து வரு கின்றன என்று ஒரு புறமும், உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று மற்றொரு புறமும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள் " என்று குறிப்பிட்டார்கள். உணவு உற்பத்தி பெருகிக்கொண்டுதான் வரு கிறது. கனம் அங்கத்தினர்களுக்கு ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்கே உணவுக் கட்டுப்பாடு இருந்த காலத்தில், மற்ற இடங்களிலிருந் தெல்லாம்—நமது நாட்டில் மாத்திரமல்லாமல் அன்னிய நாடுகளிலிருந் தெல்லாம்—அரிசியை வாங்கினோம். அப்போது அவ்வளவு அரிசிப் பற்றாக் குறை இருந்தது. அப்படி அன்னிய நாடுகளிலிருந்து அரிசியை வாங்கியும் மக்களுக்கு நாம் போதிய அளவு அரிசி கொடுக்க முடியவில்லை, ரேஷன் செய்துதான் கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது எங்கும் ரேஷனும் 'ப்ரொக்யூர்மெண்டும்' இருந்தது. அந்த நிலை இன்று எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது என்பதை உணர்ந்தால், இன்று உணவு உற்பத்தியும் ஓரளவு பெருகியிருக்கிறது என்பது சுலபமாகப் புரியும். ஆனால் இவ்வளவு பெருக்கம் போதாது. நமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய் வதற்கு மட்டுமின்றி நமது பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் விவசாயம் நமது நாட்டில் ஜீவதாரமானதாக இருக்கிறது. மேலும், கைத்தொழில் துறையில் வளர்ச்சியடையும் நாடு களும் விவசாயத் துறையில் விசேஷ கவனம் செலுத்தி வரும்போது, நமது நாட்டில் விவசாயம் எவ்வளவு முக்கியமானது என்பதை நன்கு உணர்ந்துதான் நாங்கள் வேண்டிய கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இன்று உற்பத்தி ஓரளவு பெருகியிருக்கிறது ; இன் னும் எவ்வளவோ அதிகம் பெருக வேண்டும் ; பெருக்குவதற்கு வழி தெரிகிறது ; பெருக்க முடியும் என்ற நம்பிக்கையும் எற்பட்டிருக்கிறது. ஆனால் இன்று விலைவாசிகளும் ஓரளவு அதிகமாகித்தான் இருக்கின்றன.

நாம் ஒரு விஷயத்தை உணர வேண்டும். இப்போது இங்கே உணவுக் கண்ட்ரோல் அடியோடு இல்லை. எந்த அங்கத்தினரும் கண்ட்ரோலை விரும்பமாட்டார்கள். இப்போது கண்ட்ரோல் இல்லாமல் நாம் சமாளித்துக் கொண்டு வருகிறோம். நமது நாடு பூராவிலும் அரிசி சாப்பிடுபவர்களுக்கு அரிசி வேண்டியிருக்கிறது. மேலும், முன்பு பற்றாக்குறை இருந்த காலத் தில் வேறு வழியில்லாமல் ஓரளவு கோதுமை சாப்பிடும் பழக்கம் இருந் தது. அது கூட இன்று மாறி வருகிறது என்பதுதான் நான் கவனித்த

[Sri M. Bhaktavatsalam] [5th July 1957

வரையிலும் நான் உணர்வது ஆகும். அரிசி கிடைக்கிறது என்பதால்,
முன்பு கோதுமையைச் சாப்பிட்டு வந்தவர்கள் கூட இப்போது அரிசியே
சாப்பிட முற்பட்டிருக்கிருர்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆனல்
இன்றைய நிலையில் அரிசிப் பற்ருக்குறை இல்லை, அரிசி கிடைக்கவில்லை
என்ற புகார் இல்லை. அரிசி விலை அதிகமாக இருக்கிறது என்ற புகார்
தான் இருக்கிறது. ஒரு இடத்தில் போதிய அளவு உற்பத்தியானலும்,
அது எங்கும் தாராளமாகக் கொண்டுபோகப்படலாம் என்ற நிலை இருக்கும்
வரையில்—கண்ட்ரோல் வேண்டாம் என்ருல்—அப்படித்தான் இருக்கும்.

விவசாய அபிவிருத்திக்காக, உற்பத்தி செய்பவர்கள் விளைபொருள்களை
தாராளமாக எங்கு வேண்டுமானலும் விற்பதை அனுமதிக்க வேண்டும்.
இன்று விவசாய அபிவிருத்தி ஏற்படாவிட்டாலும் நாளடைவில் விவசாய
அபிவிருத்தி ஏற்படும் நிமித்தமாக, உற்பத்தி செய்பவர்கள் தங்கள்
மனம்போல் தங்களுக்குச் சாதகமான இடங்களில் விளைபொருள்களை
விற்பதை அனுமதிக்க வேண்டும். இன்றைய நிலையில்—கண்ட்ரோல் இல்
லாத நிலையில்—தஞ்சாவூரில் உபரியாகத்தான் உற்பத்தியாகிறது. ஆகவே
அந்த உபரியான விளைபொருள் வெளியே சென்றுதான் ஆக வேண்டும்.
அப்படி அது வெளியே செல்லும்போது, வேறு ராஜ்யங்களுக்கும் செல்
கிறது. நமது ராஜ்யத்தில் பற்ருக்குறை ஓரளவு இருந்தாலும் சில ரக
அரிசிகள் வேறு ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதியாகின்றன. கனம் அங்கத்
தினர்களுக்கு ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். சென்ற 1955-ம்
ஆண்டில் அரிசியின் விலை குறைந்துகொண்டே போயிற்று. எதிர் கட்சி
அங்கத்தினர்கள் எல்லோரும் அதுபற்றிக் கவலை தெரிவித்தார்கள். விலை
குறைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினர்கள். நடவடிக்கை எடுத்
துக்கொள்கிறேம் என்று நாங்களும் அப்போது கூறினேம். "அரிசியை
வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு அரிசியின் விலை குறைந்தால் நல்லது
தான். இருந்தாலும், விவசாயிக்குக் கட்டுப்படியாகாத அளவிற்கு அரிசி
யின் விலை குறைந்தால் அரசாங்கம் விலைக்குறைவைத் தவிர்ப்பதற்கு
வேண்டிய கவனம் செலுத்தும்" என்று சொன்னேம். அப்போது
அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. அப்போது விலை குறைந்து
கொண்டே வந்தது. "அரிசியை அயல் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய
வேண்டும்; சென்னையிலிருந்தும் ஏற்றுமதி செய்ய வேண்டும்" என்று
கனம் அங்கத்தினர்கள் அப்போது வற்புறுத்தினர்கள். நாங்களும் அவ்
வாறே ஏற்றுமதிக்கு ஏற்பாடு செய்தோம். இன்றுள்ள நிலை வேறு.
வருஷா வருஷம் நிலை மாறுகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள்
உணர வேண்டும். அந்தந்த வருஷத் தேவைக்கு மட்டும் அரிசி
உற்பத்தியானல் போதாது. ஒரு **buffer stock** நம்மிடம் இருக்க
வேண்டும். "ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதற்கு முன்பு எப்படி சமாளித்
தார்கள்?" என்ருல் அப்போது **buffer stock** இருந்தது. **Buffer stock**
ஐயும் எடுத்துச் சாப்பிட்ட பிறகு ஒரு பெரும் பரிதாபகரமான
பற்ருக்குறை ஜனநாயக ஆட்சி ஏற்பட்டதற்கு முன்பே ஏற்பட்டது, கனம்
அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்பது ஒரு புறம் இருக்க, இன்
றுள்ள நிலையை எவ்வாறு சமாளிப்பது என்பதில்தான் நாம் கவனம்
செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறேம். விலை அதிகரிப்பைத்
தடுக்க வேண்டுமானல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதுதான்
உருப்படியான திட்டம். அது ஒரு நாளில் ஏற்படக்கூடியது அல்ல.

நியாய விலைக் கடைகள் ஆங்காங்கு திறக்கப்பட்டிருப்பது பற்றி இன்று
காலையில் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டேன். "நியாய விலைக் கடைகளை
ஜனத்தொகை விகிதாசாரப்படி அமைப்பது சாத்தியமல்ல. எங்கே ஏழை
மக்கள் அதிக விலை கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்களோ, அங்கே
அவர்களுக்கு நிவாரணமாக ஓரளவு நியாய விலைக் கடைகள் திறக்கப்படு
கின்றன" என்று நான் சொன்னேன். இதன் காரணமாக, அந்த
இடங்களிலுள்ள ஏழை மக்கள் மலிவான விலைக்கு அரிசி வாங்க முடி
கிறது. மற்றக் கடைகளில் 15½ அணுவுக்கு ஒரு படி அரிசி விற்கப்பட்டால்



5th July 1957] [Sri M. Bhaktavatsalam]

நியாய விலைக் கடைகளில் 14 அணுவுக்கு ஒரு படி அரிசி விற்கப்படுகிறது.
இதன் விளைவாக பல குடும்பங்களில நாளை ஒன்றுக்கு சுமார் 5 அணு
லாபமாகிறது. எவ்வளவு ஸ்டாக் இருக்கிறதோ அதைப் பொறுத்து நியாய
விலைக் கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இன்னென்று சொல்ல விரும்புகின்றேன். அரிசி ஒரு இடத்திலிருந்து
எங்கும் போகலாம் என்ருல், வெகு தூரத்திற்குக் கூடப் போகிறது.
வங்காளத்திற்குக் கூட தமிழ் நாட்டிலிருந்து அரிசி அனுப்பப்பட்டிருக்
கிறது; சொற்ப அளவில் வங்காளத்திற்கு அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது.
ஆந்திர ராஜ்யத்திலிருந்து அரிசி அதிகமாக வெளி ராஜ்யங்களுக்கு அனுப்
பப்படுகிறது. எங்கு வேண்டுமானலும் அரிசி போகலாம் என்ருல் வியா
பாரிகளும் அதைப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிருர்கள். எங்கிருந்து
அனுப்பப்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் வியாபாரிகளுக்குக் கவலை
இல்லை. அத்தகைய ஒரு வியாபாரத்தில் ஈடுபடுகிருர்கள். வேறு இன்னும்
கூடச் சில புகார் சொல்லப்படுகிறது. வங்காளத்திற்குச் சென்ருல் அங்
கிருந்து பாகிஸ்தானுக்கு மறைமுகமாக, திருட்டுத்தனமாகப் போகிறது
என்று வேறு புகார் சொல்லப்படுகிறது.

நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இப்போது மதிப்
பிடப்படுவது, மழை குறைவு இல்லாமல் பாதிக்கப்படாமல் பயிர் நன்ருக
விளைந்தால் 1½ லட்சம் டன் முதல் 2 லட்சம் டன் வரையில்தான்
பற்ருக்குறை இருக்கும். இந்தப் பற்ருக் குறையை ஈடு செய்ய அரிசி
ஆந்திர நாட்டில் இருந்து வருகிறது. வேறு இடங்களில் இருந்தும்
வருகிறது. இதை வைத்துச் சமாளிக்க வேண்டும். ஆனல் நம் நாட்டில்
உற்பத்தியாகின்ற அரிசியையே வியாபாரிகள் வாங்கி வேறு ராஜ்யத்திற்கு
அனுப்பி விட்டால் பற்ருக்குறை அதிகமாகத்தான் இருக்கும். சென்ற
ஆண்டில் ரயில்வே கணக்கின மூலம் பார்த்ததில் சுமார் 2½ லட்சம் டன்
வரையில் நம்முடைய நாட்டில் இருந்து கேரள நாட்டுக்கு அரிசி அனுப்பப்
பட்டிருக்கிறது. அது இல்லாமல் லாரிகளிலும் போகிறது. அப்படிப் போய்
விட்டால் இங்கு அரிசி விலை அதிகமாவதற்கு ஒரு காரணமாகவே அது
அமையும். விலை ஏற்றத்திற்கு இது முக்கியமான காரணம். தஞ்சாவூர்
ஜில்லாவில் அறுவடை காலத்தில் விலை குறைவதுபோல் இருக்கிறது.
உடனே ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு எல்லாம் விலை மறுபடியும்
ஏறிவிடுவதற்கும் இதுதான் காரணம். இப்போது அங்குள்ள விலை சென்ற
ஆண்டில் இதே காலத்தில் இருந்ததைவிட ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்
கூடவேதான் இருக்கிறது.

ஆகவே விலையைக் குறைப்பதற்கு கண்டிரோலைக் கொண்டுவராமல்
வேறு என்ன செய்வது என்பதைப் பற்றித்தான் இந்த அரசாங்மும்,
மத்திய அரசாங்கமும், இதர அரசாங்கங்களும் சேர்ந்து யோசித்தன. பல
யோசனைகள் கூறப்பட்டன. அவ்வாறு பல யோசனைகளைக் கூறும்போது
அதைப்பற்றி தப்பான அபிப்பிராயம்கூட வெளிவந்து விட்டது என்பதைப்
பத்திரிகையில் கண்டேன். கனம் அங்கத்தினர்களும் அதைக் கண்டிருப்
பார்கள்.

முக்கியமாக ஒரு யோசனை. கேரள நாட்டில்தான் அதிகமான பற்ருக்
குறை இருக்கிறது. அவர்களுடைய தேவை 14 லட்சம் டன் அரிசி.
ஆனல் உற்பத்தி செய்வது ஏழு லட்சம் டன் தான். பாக்கியுள்ள ஏழு
லட்சம் டன் அரிசி வெளியில் இருந்துதான் வரவேண்டும். தமிழ் நாட்
டைப் பொறுத்தவரையில் ஒன்றரை லட்சம் டன் அல்லது இரண்டு லட்சம்
டன் அரிசிதான் பற்ருக்குறை இருக்கலாம் என்று சொன்னேன். எப்
படியும் கேரளநாட்டு மக்களுக்கு அரிசி வேண்டும். அவர்களுக்கு அரிசி
அனுப்ப வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. ஆனல் அதை வியா
பாரிகள் கையில் விட்டு விட்டால் சரியாகாது. காரணம் அரிசி தேவைப்
படுகிற இடங்களுக்கு உபரியாக இருக்கிற இடங்களில் இருந்து கொண்டு
போகவேண்டுமென்ற அக்கறை வியாபாரிகளுக்கு இல்லை. அவர்களுடைய
நோக்கம் எல்லாம் "எதுடா நல்ல சமயம்? எப்படி லாபம் சம்பாதிப்
பது?" என்கிற ஒன்றுதான். ஆகவே, எங்கே அரிசி விலை குறைவாக

இருக்கிறதோ அங்கே அரிசியைப் பிடித்து, அதிக லாபம் வரக்கூடிய இடத்திற்கே கொண்டுபோய்விடுவார்கள். அந்த இடத்திற்கு வேறு இடங்களில் இருந்தும் அரிசி வரலாம். இந்தப் பிராந்தியத்தில் அரிசி கிடைக்காமல் கஷ்டப்படக்கூடிய பிராந்தியங்களும் இருக்கலாம். இங்கே ஒரு ரூபாய் குறைவு, அங்கே அதிகம் என்றால் வியாபாரிகள் அரிசி இல்லையே என்பதற்காக இங்கே சப்ளை செய்ய மாட்டார்கள். ஒரு ரூபாய் லாபத்திற்காக அங்கேதான் கொண்டுபோவார்கள். இதற்காகத்தான் ஸோணல் யோசனை சொல்லப்பட்டது. கேரள நாட்டில் அதிகமான பற்றாக்குறை இருக்கிறது. அதைத் தனியாகப் பிரித்துவிட்டால் அரிசி உபரியாக உள்ள மாகாணங்களில் இருந்து அந்தப் பிராந்தியத்திற்கு அரிசி அனுப்ப வசதியாக இருக்கும் என்று சொன்னேனே தவிர கேரளா எக்கேடு கெட்டாவது போகட்டும் என்கிற மனோபாவத்தோடு அல்ல. அப்படிப்பட்ட தப்பு அபிப்பிராயம் வந்துவிட்டது. இப்போது ஆந்திர நாட்டில் ஆறு லட்சம் டன், ஏழு லட்சம் டன் அரிசி உபரியாக கிடைக்கிறது. அதோடு ஒப்பிட்டால் மைசூரில் அதிகம் இல்லை. இதைப் பற்றியெல்லாம்தான் யோசனை செய்தோம். சமீபத்தில் இரண்டு நாட்களுக்கு முன்பாக ஹைதராபாத்தில் இதைப்பற்றி யூனியன் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் கூடிப் பேசினோம். மற்ற ராஜ்ய அமைச்சர்களும் வந்திருந்தார்கள். அங்கே நடந்த விவாதம் மிகவும் திருப்திகரமாக, இருக்கக்கூடிய நிலைமையை வைத்துக்கொண்டு பார்க்கிறபோது அமைந்தது. சென்னை, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய இந்த நான்கு ராஜ்யங்களையும் சேர்த்து ஒரு ஜோன் ஆக வைத்திருப்பது. இங்கிருந்து வேறு ராஜ்யங்களுக்கு அரிசி போக முடியாது என்பதாக எல்லாம் யோசித்தார்கள். தஞ்சாவூரில் இருந்து கேரளாவுக்கு அரிசி போகலாம். ஆனால் கேரளாவுக்கு அரிசி போவதனால் தஞ்சை போன்ற இடங்களில் அரிசி விலை மிகவும் உச்சமாக ஏறிற்று என்றால் அதைக் கட்டுப்படுத்தவும் நமக்கு அதிகாரம் உண்டு. வியாபாரிகள் லாபம் அடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எதுவும் செய்யாத வகையில் கட்டுப்படுத்த இது வசதியாக இருக்கும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த ராஜ்யங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி பரிசீலனை செய்து அவ்வப்போது அவரவர்களுடைய தேவையைக் குறிப்பிட்டு எந்த இடத்திலிருந்து தருவித்துக் கொள்வது என்பதும் முடிவு செய்யப்படும். இன்னும் சென்னையில் இருந்து கேரளநாட்டுக்குப் போவதால் இங்கு பாதிக்கப்படும் என்றால் அதைத் தடை செய்யவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த வகையில் ஒரு ஜோன் சீக்கிரத்தில் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இதிலே மற்றொன்று. விலைவாசி இப்போது கொஞ்ச காலமாக அதிகம் ஏறவில்லை. கொஞ்சம் ஏறுவது இறங்குவது ஆக இருக்கிறது. போன வருஷத்தைவிட அதிகம்தான். விலைவாசியைக் குறைப்பதற்கு வேறு தாற்காலிக ஏற்பாடுகளையும் அரசாங்கம் யோசித்துக் கொண்டுதான் வருகிறது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக சமீபத்தில் பார்லிமெண்டு சபையில் "எஸென்ஷியல் காமாடிடி" சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தச் சட்டத்தின் பிரகாரம் உணவு தானியங்களை யாராவது அதிக விலைக்கு விற்கவேண்டுமென்பதற்காகவே ஸ்டாக் பண்ணியிருப்பதாகத் தெரிந்தால் அதை அரசாங்கமே உடனே விலைக்கு வாங்கிக் கொள்ள அந்தச் சட்டத்தினால் அதிகாரம் உண்டு. அதாவது சென்ற ஜூன் மாதம் 6-ந்தேதிக்கு முன்பில் இருந்து ஒரு மூன்றுமாத காலம் வரையில் உணவு தானியத்தின் சராசரி விலை என்ன என்று பார்த்து அந்த விலைக்கே அவ்வளவு தானியத்தையும் சர்க்காரே வாங்கிக் கொண்டுவிட முடியும். இம்மாதிரி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்போது அவசியம் ஏற்படுகிறதோ அப்பொழுது எல்லாம் இந்த அரசாங்கம் அந்தச் சட்டத்தை உபயோகிப்பது என்று முடிவு செய்திருக்கிறது. ஜூன் மாதம் 6-ந் தேதிக்கு முன்பு மூன்று மாதங்களின் சராசரி விலைக்கு ஒரு ரூபாய்க்கு மேல் போகாதவாறு பார்த்துக் கொண்டிருப்போம். அதிகமாயிற்று என்றால் உடனே அரசாங்கம் தலையிட்டு யார்



யார் ஸ்டாக் பண்ணியிருக்கிறார்களோ அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ள முடிவு செய்திருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகள் தயாராகிவிட்டன. அரிசி வியாபாரம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை. விலையைக் குறைப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அவசியம் ஏற்பட்டால் இந்தச் சட்டத்தை உபயோகித்துக் கொள்ள தயங்கக் கூடாது என்பதே இந்த அரசாங்கத்தின் எண்ணம். இதைச் செய்வதில் மத்திய அரசாங்கம் நிதிப் பொறுப்பை பரிபூர்ணமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நமக்கும் இந்த அதிகாரம் கொடுத்து இருக்கிறார்கள். எவ்வப்போது தேவையோ அவ்வப்போது நாம் கையாண்டு கொள்ளலாம். விலைவாசி அதிகப்படாமல் இருப்பதற்காகவே அரசாங்கம் எல்லா வகையிலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உணவு தானியங்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. விலையை நிர்ணயிக்கவும் அரசாங்கம் தயாராய் இருக்கிறது. ஆனால் இப்போது விலை நிர்ணயிப்பது சரியானதாக காரணம் விலைவாசிகள் இப்போது மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. விலைவாசிகள் ஒரேயடியாக அதிகப்பட்டு இருக்கும் இந்தச் சமயத்தில் விலையை நிர்ணயிப்பது அவ்வளவு உசிதமாகாது என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. இதைத்தான் நான் இந்தச் சமயத்தில் உணவுப் பிரச்சனையைப் பற்றி அவ்வளவாகச் சொல்ல விரும்பியது. மற்றப்படி விவசாய அபிவிருத்தி பற்றிப் பல குறைகள் சொல்லப்பட்டன. நல்ல பொறுக்கு விதைகள் போதிய அளவுக்கு கிடைப்பது இல்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. அதற்கு பதில் விவசாய மானியம் விவாதத்திற்கு வரும்போது விவரமாகப் பதில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அப்போது பல விவரங்கள் கொடுக்க முடியும் என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

* THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதிமந்திரி அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏழை ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்காக எவ்வாறு எந்த வகையில் அவர்களின் சமுதாயத்தை முன்னேற்றுவதற்காக, அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு, கல்வித் துறையில் முன்னேறுவதற்கு என்னென்ன வழிவகைகள் எல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி விவரமாக சொல்வதற்கு முன்பாக பொதுவாக, தேசப் பிதா மகாத்மா காந்திஜி ஹரிஜன மக்களுக்காக பாடுபட்ட பாட்டினை எப்பொழுது எல்லாம் ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றி பேசுகிறோமோ அப்பொழுதெல்லாம் அவர்களை குறிப்பாக ஹரிஜன மக்கள் மறக்க முடியாது. மகாத்மா காந்திஜி இந்த நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டது மட்டும் அல்ல. பல்லாண்டுகளாக தாழ்த்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு சமுதாயத்தில் அமுக்கப்பட்டுக் கிடந்த ஹரிஜன மக்களுக்கு ஒரு தைரியத்தையும் புத்துணர்ச்சியும் ஏற்படுத்தி மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாக நிற்கச் செய்தவர் மஹாத்மா காந்திஜி என்பதை யாராலும் மறுக்க முடியாது. அவர் செய்த தியாகத்தின் பயனாகத்தான் நமக்கு சுதந்திரம் கிடைத்தது. அதன் வாயிலாகத்தான் ஆளும் கட்சியினருக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குக்கூட சுதந்திரம் கிடைத்தது. மானம் கிடைத்தது. மரியாதை கிடைத்தது. அவர் செய்த சேவையின் பயனாகத்தான் ஹரிஜன மக்களுக்கு மரியாதை கிடைத்தது, மதிப்பு கிடைத்தது.

ஏழை மக்களின் வாழ்வுக்காக, அவர்களின் உயர்விற்காக வாழ்ந்த தேசப் பிதா மஹாத்மா காந்திஜி செய்துள்ள சாதனைகளை நாம் ஞாபகம் ஊட்டக் கடமைப் பட்டுள்ளோம். நமது தேசப் பிதா, ஹரிஜன மக்கள் போகாத எந்தக் கோவில்கள் உண்டோ அந்தக் கோவில்கள் பாம்பும், பிசாசும் இருக்கிற இடம் என்று காந்திஜியைத் தவிர வேறு யாரும் சொல்லவில்லை. ஆனால் இன்று ஹரிஜன மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று சிலர் சொல்லலாம். அடுத்தாற்போல், இந்த நாட்டை ஆள ஒரு ஹரிஜன பெண்தான் ஜனாதிபதியாக வரவேண்டுமென்று சொல்லிய பெருமை அவருக்குத்தான். ஹரிஜன மக்களின் பொருளாதார முன்னே

னேற்றத்திற்காக எந்தெந்த வகைகளில் உதவி செய்ய வேண்டுமோ அவைகளை எல்லாம் தேசப் பிதா ஏற்கெனவே திட்டம் வகுத்து மக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். தொழில் துறையில் எவ்வாறு அவர்களுக்கு வழி வகை செய்ய வேண்டும், கல்வித் துறையில் அவர்களுக்கு என்னென்ன செய்யவேண்டும், சமுதாயத்தில் அவர்கள் என்னென்ன வசதி வாய்புகள் பெறவேண்டுமென்றும் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவர் சொல்லாததை யாரும் சொல்ல முடியாது. சமுதாயத் துறையில் சென்னை அரசாங்கம் அவர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்திருக்கிறது என்று பார்க்கலாம். இந்த மாகாணத்தை எடுத்துக் கொண்டால் மனிதன் மனிதனுக மதிப்போடு வாழ வேண்டும். அதற்காக சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்கள் என்று இருக்கக்கூடா தென்ற அந்தக் கருத்தை மனதில் வைத்துக் கொண்டு எந்தெந்த கோவில்களில் ஹரிஜனங்கள் போக முடியாமல் இருக்கின்றதோ அங்கெல்லாம் போவதற்கு, சட்ட மூலம் போகும்படிச் ஏற்பாடு செய்த பெருமை இந்த மாகாணத்திற்குத்தான் உண்டு. குறிப்பாக இந்தியாவிலேயே இந்த மாகாணம்தான் அந்தப் பெருமைக்குரியது. (கரகோஷம்). ஆலயப்பிரவேசன சட்டத்தால் ஹரிஜன மக்கள் ஆலயங்களில் மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாக ஆண்டவனைத் தொழுவதற்கு உள்ள நிலைமையை உண்டு பண்ணியது இந்த சென்னை அரசாங்கமே.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: Sir, on a point of order. When it is a well known fact that in the whole of India it was in the Travancore State that the Temple Entry Proclamation was first issued and it had been praised by no less a person than Mahatma Gandhi himself, is it in order for the Hon. Minister to refer to an erroneous fact?

**DEPUTY SPEAKER**: It is not an erroneous fact. Perhaps he might not have known it. It is not a point of order. The Hon. Minister may continue his speech.

**The Hon. Sri P. KAKKAN**: திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலே மக்கள் ஆட்சி இல்லாதபோது அங்குள்ள ராஜாவே அதுவும் மஹாத்மா காந்தியுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி செய்தாரே யொழிய அவராக ஒன்றும் செய்யவில்லை. மக்களே சட்டம் இயற்றி செய்தது முதலாக சென்னை அரசாங்கம்தான் என்பதை அங்கத்தினர்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக பொருளாதாரத் துறையில் ஹரிஜன மக்களுக்கு சென்னை அரசாங்கம் செய்த சாதனைகளை நாம் அறிவோம். கள்ளுக்கடை இருந்த காலத்தில் இந்த மாகாணத்தில் வாழ்கிற மக்கள் பட்ட படிப்பினையை மறக்க முடியாது. ஹரிஜன மக்கள் வாழ்கிற காலனிகளில் அமைதியை அன்று நாம் பார்க்க இல்லை. இன்று நம்முடைய சகோதரிகள், தங்கமே காணாத நம் சகோதரிகள் இன்று தங்கத்தைக் காண்கிறார்கள். வெள்ளிப் பாத்திரத்தைக் காணாதவர்கள் இன்று வெள்ளிப் பாத்திரத்தை காண்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. அடுத்தபடி, கள் அரக்கனை ஒழித்து ஹரிஜன மக்களை பொருளாதாரத் துறையில் இன்று இந்த அரசாங்கம் உயர்ந்த நிலையில் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. உள்ளதை உள்ளவாறு சொல்கிறேன். ஒளிக்காமல் சொல்கிறேன். காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்குத் திட்டத்தை கொண்டு வராவிட்டால் ஹரிஜன மக்களின் நிலை இன்றைக்கு எவ்வாறு இருக்கும் என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஜகன்னாதன் அவர்கள் ஒரு நாள் கேள்வி போட்டபோது, மதுவிலக்குச் சட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று கேள்வி போட்டார். அதற்காக நான் வருந்துகிறேன். நேற்றையதினம் வரை வெற்றி பெற்றது என்று சொன்னவர் இன்று வெற்றி பெறவில்லை என்று சொல்கிறார். (கரகோஷம்). பாட்டாளி மக்களும், ஹரிஜனங்களும் இந்த மதுவிலக்குச் சட்டத்தால் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். அதை செய்ய





வேண்டிய பொறுப்பும் கடமையும் ஆளும்கட்சி அங்கத்தினர்களுக்கு மட்டும் அல்ல. எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கும் உண்டு. இந்த மதுவிலக்குச் சட்டத்தால் பொதுவாக நன்மை அடைந்தவர்கள் ஹரிஜனங்களே என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அடுத்தபடியாக, தீவிர கட்சியைச் சேர்ந்த ஒரு சோஷியலிஸ்ட் மெம்பர் சொன்னார், கள்ளு குடிக்க லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று. பக்கிரிஸ்வாமி பிள்ளை அவர்கள்தான் அதைச் சொன்னார்கள். தீவிரக் கட்சி என்று சொல்கிறார்களே, கள், குடிக்க லைசென்ஸ் கொடுக்க வேண்டுமாம். இதற்காகத்தானா அவர்கள் மக்களிடம் வோட் வாங்கி இங்கு வந்திருக்கிறார்கள். ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஹரிஜன மக்களுக்கு எவ்விதம் உதவி செய்யவேண்டும் என்பதைப் பற்றி சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். வட சென்னையில் வாழ்கிற மக்களின் குறைகளை அவர்கள் அறிவார்கள். அவர்களின் குறைகளைத் தீர்க்க, அவைகளை நிவர்த்திக்க நல்ல காரியங்களைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அம்மையார் அவர்கள் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை.

**Sri K. ANBAZHAGAN**: இதற்கு முன்னால் இந்த அவையில் பேசப்பட்ட கருத்துக்கள் பட்ஜெட்டைப் பற்றிய பொது கருத்துக்களே தவிர ஒவ்வொரு துறையைப்பற்றிய முடிவான கருத்துக்கள் அல்ல. அவைகளைப் பற்றி நாங்கள் பேசுவதற்கு முன்னால் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அதைப்பற்றி பேசவில்லை என்று கூறுவது சரியல்ல என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER**: The Hon. Minister is replying to the speech of the hon. Member, Srimathi Sathiyavanimuthu.

**Dr. (Srimathi) SATHIYAVANIMUTHU**: On a point of order, Sir. உதவின் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் நான் ஏதோ குறிப்பட்ட பொருளைப்பற்றி பேசவில்லை என்று வருத்தப்படுவதாக கூறினார்கள். நான் இந்த சபைக்கு புதிய உறுப்பினர் என்றிருந்த போதிலும் கூட எனக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பில் முதல் தேதியிலிருந்து 5-ம் தேதி வரைக்கும் பட்ஜெட்டின் மீது பொது விவாதம் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி நான் பொதுவாக பேசினேனே தவிர தனிப்பட்ட இனங்களைப் பற்றி பேசவில்லை. அதற்கென்று ஒதுக்கப்படும் நேரத்தில் இந்த இனத்தைப் பற்றி அப்போது வரும் மான்யத்தின் மீது ஹரிஜன முன்னேற்றத்தைப் பற்றி விரிவாக எங்கள் கட்சியின் சார்பில் நானே விளக்கங்களை வழங்கவிருக்கின்றேன், என்பதை ஆளும்கட்சியில் இருப்பவர்களுக்கு சொல்லிக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER**: It is not a point of order. It is only a point of information. The hon. Member has stated that she did not refer to it. So the Hon. Minister need not raise that point.

**The Hon. Sri P. KAKKAN**: ஏனென்றால் வரவு செலவு திட்டத்தின் பொது விவாதத்தின் மீது பேசும்போது தான் கனம் அங்கத்தினர்கள் அதிகமாக பேச முடியும். அதில் ஹரிஜனங்களின் குறைகளை பலர் எடுத்துச்சொல்லியிருக்கலாம். அதில் ஹரிஜனமக்களுக்கு வீடு கட்டி கொடுக்கப்பட வில்லை என்றும் பொருளாதாரத் துறையில் சரியான வழியில் அவர்களுக்கு திட்டம் வகுக்கப்படவில்லை என்று சிலர் கூறினார்கள். நான் சொல்லுகின்றேன். முதலாவது வீட்டை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு தான் மற்ற காரியங்களைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு கூடுதலான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலான வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை இன்னும் அதிகமாக உயர்த்த வேண்டுமென்றுதான் அரசாங்கம் பல திட்டங்களை வகுத்து அதன்படி செயலாற்றி வருகிறது என்று கனம் அங்கத்தினர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். (Mr. Speaker in the Chair.) மேலும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் பல திட்டங்களை செய்துகொண்டிருப்பதோடு மட்டு

மல்லாமல், விவசாயத் துறையிலும் அவர்களுக்கு பல உதவிகள் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது எல்லா இடங்களிலும் கூடுதல் உற்பத்தியை பெருக்குவதற்காக அதாவது 10 கலம் விளைந்து கொண்டிருக்கின்ற இடத்தில் 15 கலம் விளைவிப்பதற்காக பல முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையில் அவர்களுக்கு மேலும் ஊக்கமளிப்பதற்காக பல திட்டங்களையும் அரசாங்கம் வகுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய அண்ணாத்துரை அவர்கள், நாங்கள் மட்டும் குறைகளை சொல்ல வில்லை, காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும் குறைகளை சொல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டார். ஆம், அது தான் காங்கிரஸ் கட்சியின் லட்சியம் என்பதை சொல்லிக்கொள்கிறேன். உள்ளதை உள்ளபடி சொல்லுவது தான் காங்கிரஸ் கட்சியின் லட்சியம். இதல்லாமல் தேர்தல் காலத்தில் வெளியில் மக்களிடத்தில் காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்கு போனால் கட்சிக்கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வெறும் வாய்பேசா பொம்மைகளாகத்தான் இருப்பார்கள், நாங்கள் போனால் வானத்தை வில்லாக வளைப்போம் என்று சொல்லி பிரசாரம் செய்து இங்கு வந்தவர்களுக்கு இவைகளை பார்த்தால் காங்கிரஸ்காரர்களும் சும்மா இருக்க மாட்டார்கள் என்பதை இனிமேலாவது அறிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (ஆரவாரம்) இந்த வரவு செலவு திட்டத்தில் அதிகமாக பங்கு கொண்டவர்கள் ஹரிஜன அங்கத்தினர்கள். அவர்கள் சொன்ன குறைகளை நன்கு கவனித்து அந்த குறைகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக புறம்போக்கு மனைகளில் ஹரிஜனங்கள் இருந்தால் அவர்களை அங்குள்ள நிலச்சுவான்தார்கள் அப்புறப்படுத்தக்கூடாது என்று ஹரிஜன மக்களுக்கு பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லா போன்ற இடங்களில் அரசாங்கம் இதற்காக பல திட்டங்கள் வகுத்திருக்கிறது. சமுதாயத்துறையில் ஹரிஜனங்களுக்கு பல இக்கட்டான நிலைகள் உண்டு, பல தொல்லைகள் உண்டு என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. மிகவும் மோசமான, இழிவான சமூக நிலை இருக்கிறது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படையாக நாட்டிலே யுள்ள ஜாதி கட்டுபாடு ஒழிய வேண்டும். சமூக கட்டுப்பாடுகள் ஒழிய வேண்டும். இந்த கொடுமைகளை ஒழிப்பதற்காக அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஜாதி கட்டுப்பாட்டை ஒழிப்பதின் மூலந்தான் ஹரிஜன மக்கள், மற்ற மக்களோடு சரிநிகர் சமமாக வாழ முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதை நிறைவேற்றுவதற்குத் தான் அரசாங்கம் இருக்கிறதே. தவிர வெறுமனே இங்கு வந்து இருப்பதற்கு அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக நகரசுத்தி தொழிலாளர்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். ஏதோ அவர்களுடைய நிலைமைப்பற்றி இந்த அரசாங்கம் ஒன்றும் கவனிக்கவில்லை என்று சொல்லுபவர்களைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. கனம் அங்கத்தினர் கே. பி. எஸ். மணி அவர்கள் முனிசிபல் தொழிலாளர்களைப் பற்றி சொன்னார்கள். ஆனால் இப்போது முனிசிபல் தொழிலாளர்களுக்கு முனிசிபாலிட்டியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. கார்ப்பரேஷன் தொழிலாளர்களை பெர்மனன்டாக்க வேண்டுமென்று பலர் கூறினார்கள். அவ்விதம் பலரை பெர்மனன்டாக்கப்பட்டிருக்கிறது. பெர்மனன்டாக்குவது நகரசபைகளைப் பொறுத்தது. ஹரிஜனங்களை முன்னேற்றுவதற்கு நான்கு திட்டங்கள் மூலம் அரசாங்கம் வேலை செய்து இருக்கிறது. அதாவது ஒன்றுசட்டத்தின் மூலம், அதாவது சட்டத்தைக் கொண்டு அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவது, இச்சட்டங்களுக்குப் புறம்பாக யாராவது நடந்தால் அரசாங்கம் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கின்றது. அடுத்தபடியாக சமூக கல்வியைப் பரப்பி தீண்டாமையைப் போக்குவது. அதாவது இது தீண்டாமை என்பதே ஹிந்து மதத்திலுள்ள மாசு தான், அருகில் வரக்கூடாது என்ற தன்மையெல்லாம் இன்னும் சிறிது காலத்தில் போய்விடும். ஆகவே அரசாங்கம் சமூக கல்வியை பரப்புவதின் மூலம் சமுதாயத்திலே ஹரிஜனங்களின் நிலைமையை உயர்த்துவதற்கு அதிகம் பாடுபட்டு வருகிறது. மூன்றாவது ஜனநாயக வழியை கடைப் பிடித்து இந்த தீண்டாமையை போக்குவதற்கு பாடுபட்டு வருகிறது. உதாரணமாக



சொல்லப்போனால் ஜனநாயகம் பேசுகின்ற நண்பர்கள் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக தீண்டாமை ஒழிப்பு விஷயத்திற்காக அதிகமாக அக்கரைப்படுவதாகத் தெரியவில்லை. ஜாதியின் பெயரால் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பின் தங்கிய மக்களுக்கும் என்னவெல்லாமோ சொல்லி தாங்கள் அரசியல் வளர்ப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் ஜனநாயக வழியை பின்பற்றி மக்கள் தங்களது உரிமைகளை பெறுவதற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாதென்று இன்று அரசாங்கம் வேலை செய்துவருகின்றது. நான்காவது திட்டம் ஹரிஜன மக்களுக்கு கல்வி வசதி அளிப்பதாகும். அதுமட்டுமல்ல அவர்களை உயர்ந்த நிலைமைக்கு கொண்டு வர வேண்டுமென்ற முறையிலே அவர்களுக்கு இதர தொழில் வசதிகளும் செய்துகொடுக்கப்படுகிறது. இம்மாதிரி அரசாங்கம் பின்தங்கிய வகுப்பு மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஸ்ரீ அண்ணாதுரை அவர்கள் நேற்று சொன்னார்கள், முன்பு சாதித்ததைச் சொல்லிவிட்டு இப்பொழுது சாதிக்கப்போவதைச் சொல்லவேண்டும் என்று. முன்பு சாதித்ததையும் இப்பொழுது சாதிக்கப்போவதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை அரசாங்கம் மத்திய சர்க்கார் உதவியில்லாமல் பின்தங்கிய உறிஜன மக்களுக்கு கல்விவகையிலே 1956-57-ல் ரூ. 58,68,416 செலவழித்தார்கள். 1957-58-ல் ரூ. 69,89,100 செலவிடப்போகிறார்கள். சுகாதாரத்திற்காக 1956-57-ல் ரூ. 8,48,306 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 7,49,300 செலவிடப்போகிறார்கள். கள்ளர் "ரெக்லெமேஷனுக்காக" 1956-57-ல் ரூ. 7,37,542 செலவிட்டார்கள். 1957-58-ல் ரூ. 8,58,200 செலவிடப்போறார்கள்.

மத்திய சர்க்கார் பாதியும் ராஜ்ய சர்க்கார் பாதியும் செலவழிக்கின்ற திட்டத்தின் கீழே தீண்டாமை ஒழிப்பு வேலைக்காக மட்டும் 1956-57-ல் ரூ. 17,54,895 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 47,18,800 செலவிட்டிருக்கிறார்கள். மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் என்பதை அண்ணாதுரை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக பின்தங்கிய குற்றபரம்பரையினர் முன்னேற்றத்திற்காக 1956-57-ல் ரூ. 7,38,487 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 6,70,900 செலவிடப்போகிறார்கள். இதர பின்தங்கிய வகுப்பினர்களுக்காக 1957-58-ல் ரூ. 1,29,162 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 11,91,600 செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள். ஆதிவாசிகளுக்காக 1956-57-ல் ரூ. 2,01,688 செலவிட்டிருக்கிறார்கள். 1957-58-ல் ரூ. 2,57,100 செலவிடப்போகிறார்கள். மத்திய சர்க்காரே பூராவும் செலவிட இருக்கும் திட்டத்தின் பிரகாரம் தீண்டாமை ஒழிப்புக்காக மட்டும் 1956-57-ல் ரூ. 3,82,689 செலவிட்டிருக்கிறார்கள் மத்திய அரசாங்கம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லிய நண்பர்களுக்கு இதை எடுத்துக்கூற விரும்புகிறேன். 1957-58-ல் ரூ. 29,400 செலவிடப்போகிறார்கள். குற்ற பரம்பரை சமுதாயத்தினருக்காக 1956-57-ல் ரூ. 3,03,257 செலவிட்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்த விவரங்களை பொதுவாகக் சொன்னேன். மேலும் பின்தங்கிய வகுப்பினர்களுக்காக கல்வி, கைத்தொழில் முதலிய பல்வேறு இனங்களுக்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்ற விவரங்களையெல்லாம் வெட்டுப் பிரேரணை விவாதத்தின்போது விரிவாக எடுத்துச் சொல்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பின்தங்கிய மக்கள் முன்னேற்றத்திற்காகவும், உறிஜன மக்கள் முன்னேற்றத்திற்காகவும் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் அரசாங்கம் 5 கோடி ரூபாய் அள்ளிக் கொடுத்திருக்கிறது. ரூ. 5 கோடி செலவழிக்க திட்டமிட்டுள்ள அரசாங்கம் சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்தை கண்ணும் கருத்துமாக கவனித்துவருகிறது என்பதை அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். சோஷலிஸ் பாணியிலுள்ள சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்று திட்டமிட்டுள்ள மக்கள் சர்க்கார் இனிமேல் சும்மா இருக்க முடியாது. மேல்தட்டில் இருப்பவர்கள் சிறிது கீழே இறக்கவேண்டும்.

கீழ்த்தட்டில் இருக்கும் பாட்டாளி மக்களை மேலே உயர்த்தி அவர்களுக்கு பாதுகாப்பும் வசதிகளும் அளிக்கக்கூடிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்திற்கு அதிகமாக இருக்கிறது. அதோடு மற்ற மக்களுக்கும் நியாயமாக வேண்டிய வசதிகளையும் செய்துகொடுப்போம் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri M. JAGANNATHAN** : A point of personal explanation, Sir. கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது கேள்வி நேரத்திலே நான் மதுவிலக்கு திட்டம் திருப்திகரமாக நடைபெறவில்லை என்று குறிப்பிட்டதாகவும், சமீபகாலம் வரையில் வெற்றிகரமாக நடந்துகொண்டிருந்த திட்டம் இப்பொழுது நன்றாக நடக்கவில்லை என்று நான் சொன்னதாக இங்கு சொல்லி அவர்களுடைய கட்சி அங்கத்தினர்களின் . . .

**Mr. SPEAKER** : Point of explanation தன்னைப்பற்றி இருந்தால் சொல்லவேண்டியது. பாக்கி பேர்களைப்பற்றி சொல்லக்கூடாது.

**Sri M. JAGANNATHAN** : . . . கைதட்டலை பெற்றார்கள். நான் மாத்திரம் மதுவிலக்கு திட்டம் திருப்திகரமாக நடைபெறவில்லை என்று சொல்லவில்லை. மத்திய அரசாங்கத்தில் நீண்ட காலமாக அமைச்சராக இருந்த அமிர்த கௌர் அம்மையார் அவர்கள் மதுவிலக்குத் திட்டம் அவ்வளவு திருப்திகரமாக நடைபெறவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். (கரகோஷம்).

அடுத்தபடியாக, கனம் அமைச்சர் அவர்கள் நான் கூறுவது உண்மை அல்ல என்பதை எடுத்துக்காட்டி அந்த மட்டிலே வெற்றிபெற்றதாக எண்ணம் கொண்டு அதோடு நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்களையும் அவர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க தாங்கள் சர்க்கார் கட்சியில் இருக்கின்ற காரணத்தினாலே தகுந்த நடவடிக்கை எடுத்து ஏழ்மையிலே வாழ்கின்ற லட்சக்கணக்கான ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு சேவை செய்து அந்த மக்களுடைய கைதட்டுதலையும் வாழ்த்துதலையும் மந்திரி அவர்கள் பெற்றால், நான் அதை வரவேற்று அவரை மனமாரப் பாராட்டுவேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் 101 அங்கத்தினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். 101 அங்கத்தினர்கள் பேசும்பொழுது முன்பு எல்லாம் சில பேர்களுக்கு 5 நிமிஷம்தான் காலவரை இருக்கும். ஆனால் பொதுவாக ஒவ்வொருவரும் 10 நிமிட நேரம் பேசினார்கள். அதற்கு பிற்பாடு என்னுடைய சகாக்கள் இருவர் இதிலே பங்கெடுத்துக்கொண்டு, என்னுடைய பாரத்தை ஓரளவுக்குக் குறைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை 101 கனம் அங்கத்தினர்கள் இவ்விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள். என் பக்கத்தில் இருந்தவர்களில் பலரும், எதிரில் இருக்கின்றவர்களில் சிலரும் கூட, இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பாராட்டியும், அதற்காக என்னைப்பற்றி ஒரு சிறிது அளவு பாராட்டியும் பேசினார்கள். இந்தப் பதிலிலே அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்துவதைத் தவிர, அதற்குமேல் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. இங்கு நான் எழுந்து நிற்பது வரவு செலவு திட்டத்தை எதிர்த்தவர்களுக்கு அதிலே குற்றங்குறை கூறினவர்களுக்கு பதில் சொல்வதற்காகத்தான்.

அதிலும் முக்கியமாக எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இந்த பட்ஜட்டிலே இருக்கக் கூடிய குறைகளை வெகுவாக எடுத்துச் சொன்னார்கள். அதனாலே நாங்கள் ஏதோ மனத்தாங்கல் அடையலாம் என்ற சந்தேகம் பல அங்கத்தினர்களுடைய மனதிலே இருப்பதாகத் தெரிகிறது. (எதிர் வரிசையில் சில அங்கத்தினர்கள் : கிடையாது).

குறைகளை எடுத்துச் சொல்வது மிகவும் அவசியம் என்று நாங்கள் போடுகின்ற திட்டமாக இருந்தாலும் சரி,



நாங்கள் செய்கின்ற வேலையாக இருந்தாலும் சரி, அவைகள் குற்றங்குறைகள் அற்றவை என்று நாங்கள் எந்த நாளும் கருதியது இல்லை. அதில் இருக்கும் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்வது மிகவும் அவசியம். அப்பொழுது தான் நாம் எல்லோரும் விரும்பும் மக்களின் நலத்திற்காக நாம் நல்ல முறையிலே பாடுபட முடியும். ஆகையால், பாராட்டுதலை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளும்போது, குற்றங்குறைகளை இன்னும் அதிக நன்றியுடன் வரவேற்கின்றேன்.

ஆனால், குற்றங்குறைகள் கூறும்போது, அப்படிச் சொல்லும் வாக்குக்கு நாங்கள் மதிப்பு கொடுக்க வேண்டுமானால், அதற்குத் தகுந்த முறையிலே வாதங்கள் இருக்க வேண்டும். நான் பொதுவாக சில விஷயங்கள் சொல்வேன் என்றால், அதற்காக கனம் அங்கத்தினர்கள் என்னைத் தப்பு அர்த்தம் செய்து கொள்ள மாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். இதிலே மாறுபட்ட கருத்துக்கள் அவசியம் இருக்கத்தான் வேண்டும். மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லுகின்றவர்களை நாங்கள் அக்கறையுடன் கேட்கவேண்டுமென்று விரும்பினால், விஷயங்களை நன்றாக ஆராய்ந்து, தெரிந்து, அந்த விஷயங்களைப் புரிந்து கொண்டதற்குப் பிற்பாடு, அந்த விஷயங்களையொட்டி அபிப்பிராயங்கள் வேறு விதமாகச் சொல்வதாக இருந்தால், உண்மையிலேயே அந்த அபிப்பிராயங்களை நல்ல முறையிலே கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதிலும் முக்கியமாக, கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், பட்ஜெட்விவாதத்திலே பேசும்போது, மேடையிலே பேசுகின்றோம் என்ற மனப்பான்மையுடன் பேசுவோமேயானால், அதற்கு எந்தவிதமான மதிப்பும் இங்கு ஏற்படாது ; அதனால் பயனும் ஏற்படாது. பட்ஜட் திட்டங்கள், நல்ல முறையிலே எல்லோரும் அதனுடைய நுணுக்கங்களையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், பெரிய புத்தகமாக அச்சிட்டு ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதை நல்ல முறையில் அங்கத்தினர்கள் படிப்பார்களானால், பல குற்றங்குறைகள் அதிலே எடுத்துச் சொல்ல முடியும் என்றுதான் நானும் நினைக்கின்றேன். அவைகள் ஒன்றையும் பாராமல், இங்கு வந்து வெறுமனே, பொதுவாகப் பேசுவார்களேயானால், அதிலே பலன் ஒன்றும் ஏற்படாது. ஆகையால், முதன் முதலில் நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது இது தான். என்னுடைய சிறிய அனுபவத்தை, நான் சிறியவனாக இருந்தாலும், சொல்கிறேன். பெரிய அறிஞர்கள் எல்லோரும் மன்னிக்க வேண்டும், அவர்களுக்கு ஏதோ உபதேசம் செய்கின்ற முறையிலே எடுத்துக் கொள்வார்களானால், ஆகையால், நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது, பட்ஜெட் நுணுக்கங்களையும், அதனுடைய அடிப்படைகளையும் நல்ல முறையிலே தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான்.

உதாரணமாக **Revenue expenditure** அதாவது அன்றாடம் ஏற்படக் கூடிய செலவுகள், **Capital expenditure** அதாவது மூலதனச் செலவுகள், ஆகியவைகளிலே அடிப்படையாக இருக்கக் கூடிய வித்தியாசங்கள் என்ன ? **Deficit budget** அதாவது பற்றுக்குறையாக பட்ஜட் போடுவது என்பது ஒன்று ; **Deficit financing**, என்பது மற்றொன்று. இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன ? இதைப் போல இருக்கும் நுணுக்கங்களை யெல்லாம் நாம் தெரிந்துகொண்டால் நம் விவாதத்திலே ஏற்படக்கூடிய குற்றங்கள் பல குறைந்து விடும் என்று நான் நம்புகிறேன். இப்பொழுதுதான் புதிய சபை ஆரம்பித்திருக்கிறது, போகப்போக சரியாகி விடும் என்று நினைக்கிறேன்.

நாங்கள் விரும்புவது—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—இந்த சபையில் இருக்கும் அங்கத்தினர்கள் எல்லோரும் விஷயங்களைத் தெரிந்திருக்கிறார்கள் எல்லோரும் திறமைசாலிகளாக விவாதத்திலே கலந்து கொள்ள முடியும் என்ற ஒரு நல்ல புகழ் ஏற்படவேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஆகையால், இந்த பக்கத்தில் இருக்கும் அங்கத்தினர்கள் மட்டுமல்ல, எதிரில் இருக்கின்றவர்கள் மட்டுமல்ல, எல்லோரும்

நம்முடைய தரத்தை உயர்த்திக்கொள்ளக் கூடிய முறையிலே விஷயங்களைத் தெரிந்துகொள்ளமுற்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படி விஷயங்களைத் தெரிந்து கொண்டு பேச முற்படுவார்களானால், எந்த மந்திரியாக இருந்தாலும், காது கொடுத்துக் கேட்டுத்தான் ஆக வேண்டும். இது பீஷ்வா பட்ஜட், இது பீஷ்வா காலத்து முறை, இது சாண்டல் பட்ஜட் என்று வாயளவிலே பேசுவார்களானால், "அது அவர்கள் பாணி போல் இருக்கிறது" என்று நினைத்து, மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்பதற்குக் கூட மனத்தூண்டுதல் இருக்காது. அந்த ரகத்தில் பேச்சு இருந்தால், "மற்றதும் இப்படித்தானே இருக்கும்" என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

இன்னும் சில அங்கத்தினர்கள் குறளை மேற்கோள் காட்டி குற்றங் காண முன்வந்தார்கள். "கொடுங்கோன்மை" என்னும் அதிகாரத்திலிருந்து ஒரு குறளை எடுத்துச்சொல்லி, இந்த வரி வருவாயைப்பற்றிச் சொன்னார்கள். அப்பொழுது அர்த்தம் என்ன ஆகிறது? இங்கு அப்படிப்பட்ட கொடுங்கோன்மை நடக்கிறது என்றுதானே ஆகிறது? திரு. அண்ணாதுரை அவர்கள்கூட ஒப்புக்கொள்வதாக இல்லை என்று எனக்குத் தெரியும். இருந்தாலும், எதையும் யோசிக்காமல், எந்தச் சமயத்தில் எந்தக் குறளை எதற்காக உபயோகப்படுத்துவது என்று தெரியாமல் (ஆரவாரம்) இடையினத்தில் வந்திருக்கிற "ர" வுக்கும் வல்லினத்தில் வரக்கூடிய "ற" வுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஏதோ ஒரு குறளை எடுத்துச் சொல்லி, அப்படிச் சொன்னவுடனே தாம் ஏதோ அலசித் தள்ளி விட்டோம், குறளைச் சொல்லி குற்றங் குறை சொல்லி விட்டோம் என்ற மனப்பான்மை வந்து விட்டால் பலன் ஒன்றும் ஏற்படாது.

அதேமாதிரி, ஏதோ "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று திருப்பித் திருப்பிச் சொல்வதாலும் எந்த விதமான பலனும் ஏற்பட்டு விடாது. இருக்கக் கூடிய புள்ளிகளை வைத்துக்கொண்டு, எந்த எந்த துறையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதை எந்த எந்த முறையிலே மாற்றியமைக்க முடியும், இன்னும் திறமையாகச் செய்ய முடியும் என்று யாராவது யோசனை சொல்வார்களானால், அவர்கள் தான் உண்மையிலேயே நாட்டுக்குச் சேவை செய்கின்றவர்கள், மக்களுடைய நலத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள். அந்த முறையிலும் சில அங்கத்தினர்கள் முயற்சி செய்தார்கள் என்று நான் உணருவேன். எதிர்த்தாற்போல் இருக்கும் திரு. ப. உ. ஷண்முகம் அவர்கள் சில புள்ளி விவரங்களைக் காட்டி, இருக்கக்கூடிய குறைகள் என்ன, என்று எடுத்துச் சொல்லியபோது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி ஏற்பட்டது. இதில் இருக்கும் குறைகள் என்ன என்பதைத் தெரிந்திருக்கிறார், சமாதானம் கேட்கிறார் என்பதைப் பார்க்க, அவர் விஷயத்தைத் தெரிந்திருக்கிறார் என்று எனக்கு இன்னும் உற்சாகம் ஏற்படுகிறது. இவர்களுக்குச் சமாதானம் சொல்லவேண்டும் என்ற எண்ணமும் தோன்றுகிறது. அதே போல, திரு. சட்டநாத கரையாளர் அவர்கள் பேசும்போது, "நமக்கு இந்த **Revenue deficit** இருப்பதால் அவ்வளவு கவலை இல்லை; மூலதனச் செலவுக்காக குறைவு இருக்கிறது. **Ways and Means**-க்கு என்ன செய்யப்போகின்றோம் என்பது தான் நாம் இன்றைக்கு ஆழ்ந்து யோசிக்க வேண்டியது" என்று சொன்னபோது, உண்மையிலேயே இருக்கக் கூடிய பிரச்னைகளை அவர்கள் உணர்ந்திருக்கின்றார் என்று கண்ட போது எனக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆகையால், நான் விரும்புவது சக அங்கத்தினராக இருக்கும் ஒவ்வொருவரும் விஷயங்களைத் தெரிந்து, ஆழ்ந்த ஞானத்துடனே புள்ளி விவரங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு, இங்கு விவாதத்திலே கலந்து கொள்வாரானால் உண்மையான பலன் ஏற்படும். அப்படியில்லாமல், நாம் சமீபத்தில் தானே தேர்தலிலிருந்து வந்திருக்கிறோம் என்ற முறையிலே அதே பாணியில் பேசுவதினாலும் பலன் இல்லை. இது முதல் பட்ஜட். பரவாயில்லை. இனிமேல் வரும் பட்ஜட்டின் போது விஷயங்களை இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ளக் கூடும். ஐந்து வருஷங்கள் கழித்துத்தான் தேர்தல் வரப் போகிறது என்பதை மனதில் கொண்டு, [illegible]





வசதிகளை எப்படி நன்றாகப் பயன்படுத்தமுடியும், அதற்கு நாம் எப்படி யோசனை சொல்ல வேண்டும் என்ற அக்கறையுடன் ஒவ்வொருவரும் பேச முன் வரவேண்டும், அக்கறையுடன் படித்து விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆகையால், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள், தாங்கள் பேசுகின்ற பேச்சுக்கு மதிப்பு ஏற்பட வேண்டுமென்று விரும்பினால், உண்மையிலேயே விஷயம் தெரிந்து, நன்றாகக் குறைகளை எடுத்துச்சொல்லி, மாற்று யோசனைகளையும் எடுத்துச் சொல்ல முன்வருவார்களானால், அவற்றிற்கு என்றைக்கும் மதிப்புக் கொடுக்க சர்க்கார் தயாராக இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், அந்தப் பேச்சுக்கு அதிகம் மதிப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நியாயமான குறையெல்லாம் கேட்டார்கள். எடுத்துச் சொல்வது அவசியம். அது இல்லாமல் ஒரு கட்சி வாதம் என்ற முறையிலே நம்முடைய பட்ஜெட் விவாதத்தை நடத்திக்கொண்டு போவோமானால் நாம் நல்ல முடிவுகளைப் பெற முடியாது. கட்சி உணர்ச்சி தான் மற்றவர்களிடத்திலும் வந்து விடும். நாம் கட்சி சார்பாகப் பேசி விட்டு, மற்றவர்கள் கட்சியைப் பற்றி நினைக்கக்கூடாது என்பது தவறான எண்ணம். நாம் எந்த உணர்ச்சியோடு பேசுகிறோமோ அந்த உணர்ச்சிதான் பிரதிபலிக்கிறது மற்றவர் மனதிலும். குறிப்பாக பட்ஜெட் விவாதத்திலே இந்த விஷயங்களில் நன்றாக யோசித்துப் பார்த்து நியாயமான முறையில் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்ல முன் வரவேண்டும். ஆகையால் இந்த சபையில் விவாதங்கள் நல்ல முறையில் நடக்க சர்க்கார் மட்டுமல்ல, எதிர் கட்சியிலே இருக்கிறவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு திறமையாகவும் நியாயமாகவும் சபை விவாதத்திலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு இந்த சபையின் தரம் உயரும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் குறிப்பிட்டார் "நாங்கள் நல்ல முறையிலே, நல்ல எதிர் கட்சியாக, ஒரு காலத்தில் ஆளும் கட்சியாகும் எண்ணத்துடன் தான் இங்கு வந்துள்ளோம்" என்று சொன்னார்கள். ஆகையால் "நாங்கள் பொறுப்புடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறோம்; அதிலே மாறுதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது இந்தப் பக்கத்தில் இருக்கிறவர்களுடைய கடமை" என்று சொன்னார். அதில் உறுதியாக இருக்க வேண்டும். உண்மையாக, வேறு வித்தியாசங்கள் இருந்தாலும் கூட, நியாயமாக ஏற்றுக்கொள்ளுகிற கொள்கையையும் உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும். சமயத்திற்காக மாற்றிக்கொள்வது என்பது கூடாது. அதே மாதிரி எப்போதும் இந்த உறுதியுடன் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, காங்கிரஸ் அங்கத்தினர்கள் தங்கள் தொகுதியிலே இருக்கிற குறைகளை தெரிவித்தது பற்றி குறிப்பிட்டபோது ஆச்சரியப்பட்டதாக கனம் அண்ணாதுரை அவர்கள் பேச்சிலிருந்து தொனித்தது. "முதல் ஐந்தாண்டுத் திட்டம் மூலமாக குறைகள் நீங்கியது; குறைகள் நீங்கின பிறகு உயர்வைக் கொடுக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம்" என்று நாங்கள் நினைப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம். குறைகளையெல்லாம் ஐந்து வருஷத்தில் தீர்த்து விடலாம் என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கலாம். "சுயராஜ்யம் வரட்டும் ஒரு வருஷத்தில் பாலும் ஓட வைத்துவிடுவோம்" என்று எண்ணிக்கொண்டிருந்தேனும் தோம். அந்தக் காலத்தில் அதே மாதிரியான நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீ அண்ணாதுரை இப்பொழுது இருக்கிறார். அனுபவம் ஏற்பட்டால்தான் இதில் இருக்கும் சிக்கல்கள் எவ்வளவு என்று தெரியும். இன்றைக்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிவைத்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். இதில் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது! அவர்கள் நினைக்கலாம்; ஆனால் நான் நினைக்கவில்லை. ஆரம்பத்தின் ஆரம்பமாக அமைந்திருக்கிறது இந்த ஐந்தாண்டுத் திட்டம். பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறும்போது தான் பல குறைகள், அத்தியாவசிய குறைகள் நீங்கும், என்று நம்புகிறேன். 20 ஐந்தாண்டுத் திட்டங்கள் நடக்கட்டும் அப்போதும் குறைகள் இருந்துகொண்டுதான் இருக்கும். ஒரு ஐந்தாண்டுத்

திட்டம் ஆனவுடன் குறைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்று நினைத்தால் அவர்கள் உண்மையை உணராதவர்கள். நியூ யார்க் ஸ்டேட் நிதி நிலைமையைப்பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்டேட்டின் ஜனத்தொகை நம்மில் 3-ல் ஒரு பங்கு என்று நினைக்கிறேன்; கொஞ்சம் குறைவாகக்கூட இருக்கலாம். அந்த ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு வருவாய் 550 கோடி ரூபாய். அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறது, நிதி நிலைமை போதாமல் இருப்பதால் சில அத்தியாவசியமான குறைகளை தீர்க்க முடியவில்லை என்று மனிதனுடைய தேவைகள் வளர்ந்துகொண்டே போகும். ஆகையால் இன்னும் குறைகளை சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோமே என்று நினைப்பார்களானால் அவர்கள் உண்மையான நிலையை உணராதவர்கள்தான். காங்கிரஸ் அங்கத்தினர்கள் தொகுதியில் குறைகள் இருக்குமானால் அவைகளை எடுத்துச் சொல்லவேண்டியது அந்த அங்கத்தினர்களுடைய கடமை. அப்படி அவர்கள் செய்யாவிட்டால் கடமை தவறியவர்கள் ஆவார்கள். குறைகள் இல்லை என்று மறுக்க முற்பட்டால் அவர்கள் கடமையை செய்தவர்களாக மாட்டார்கள். ஆகவே, கடமையுணர்ச்சியை நல்ல முறையிலே உணர்ந்து பணியாற்றி இருக்கிறார்கள். குறை சொல்லுவதைப்பற்றி கேலியாகப் பேசுவது, தெரியாதவர்கள் பேசுவரே தவிர தெரிந்தவர்கள் அல்ல. இன்றைக்கு குறைகளை எல்லோரும் சொல்லுகிறார்கள். இரண்டு பேரும் சொல்லுகிறார்கள். குறைகளைத் தீர்க்கவேண்டும் என்று நம் மனதிலே எண்ணம் இருக்கிறது. ஆனால் முடியாமல் இருப்பதற்கு வசதிக்குறைவுதான் காரணம். இப்போது இருக்கும் வசதிகளை வைத்துக்கொண்டு எல்லாக் குறைகளையும் தீர்த்து விடமுடியாது. குறைவாக இருந்தாலும் சில குறைகளை தீர்த்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டியது அவசியமாகத் தான் இருக்கிறது. ஆகையால், இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் குறைகள் சொன்னால் அது ஒன்றும் இயற்கை விரோதமாக இல்லாததுமட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் விரோதம் இல்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இன்றைக்கு நம் மாகாணத்தில் இருக்கும் பிரச்னை எப்படி நம்முடைய நாட்டில் இருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பது. காங்கிரஸாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, சீர்திருத்தம் செய்கிறவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களாக இருந்தாலும் சரி, சோஷலிஸ்டாக இருந்தாலும் சரி, எல்லாருடைய ஒரே நோக்கமும் நம் மக்களுடைய வாழ்க்கையை எப்படி உயர்த்துவது என்பது தான். அப்படி உயர்த்தும் பணியில் ஈடுபட்டிருக்கும்போது நம் நிலைமையையும் உணர்ந்து கொண்டால் தான் நமக்கு ஆற்றலும் சக்தியும் ஏற்படும். ஏதோ கனவு உலகத்தில் இருந்து கொண்டு ஏதோ வட நாட்டிலே பிடிப்பு இருக்கிறது. அதை விட்டுவிட்டால் பாலும் தேனும் ஓட வைத்து விடலாம் என்கிற பாணியில் நினைத்துக் கொண்டிருப்பதனால் நடக்கக்கூடிய காரியமல்ல. இப்போது நமக்கு இருக்கும் சில குறைபாடுகளை இந்த சபையின் முன் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு உணவு இலாகாவைப் பராமரிக்கும் மந்திரி அவர்கள் பேசும் போது சொன்னார்கள், நம்மிடம் உள்ள அரிசியில் 2½ லட்சம் டன் கேரளாவுக்கு போகிறது என்று. ஆந்திராவிலிருந்து வருஷா வருஷம் வருவது வரவில்லை காரணம் நம்மிடம் வாங்கும் சக்தி இல்லை. நம்மிடத்தில் உள்ள அரிசியையும் கூட கேரளா போட்டி போட்டு வாங்கக் கூடிய நிலையில் இன்று நாம் இருக்கிறோம். பலர் நினைக்கிறார்கள் லாப நோக்கோடு கேரளாவுக்கு விற்று விடுகிறார்கள் என்று. லாப நோக்கமல்ல. வாங்கும் சக்தி இருந்தால் தான் லாபநோக்கம் ஏற்பட முடியும். இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலே வாங்கும் சக்தி மிகவும் குறைவாக இருக்கிறது. கேரளாவை எடுத்துக் கொள்வோமானால், கனம் ராமசுவாமி பிள்ளை அவர்கள் சொன்னார்கள், அங்கே இருக்கும் பெரிய பிரச்னைகளை சமாளிக்கிறார்கள் என்று. நம்மிடையே இருக்கும் கருத்து, கேரளப் பிரதேசம் நம் பிரதேசத்தை விட வறுமை மிகுந்தது என்று. ஆனால் அது உண்மையல்ல. தலை ஒன்றுக்கு எவ்வளவு வரும்படி என்று கணக்குப் போட்டுப் பாத்தால், அவர்களுடைய வரும்படி தலைக்கு 311 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நம் தமிழ் நாட்டிலே, சென்னை ராஜ்யத்திலே வரு



மானம் தலை ஒன்றுக்கு 257 ரூபாய். நாம் யார் வருமையாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறோமோ அவர்களுடைய வரும்படி 311 ரூபாய், இதில் இருக்கக்கூடிய நிலைமையை சொல்கிறேன். நீர்வளம் அங்கு நல்ல முறையிலே பயன்படுத்தக்கூடிய வகையிலே இருக்கிறது. அங்கு வருஷத்திற்கு 100, 125 அங்குலம் வரை மழை பெய்கிறது. ஆறுகள் பல அங்கே இருக்கின்றன. அவைகள் மூலமாக ஏற்படக்கூடிய வளம் அங்கு இருக்கிறது. அங்கே தான் நல்ல விற்பனைப் பொருள்கள் (Commercial products) நிறைய உற்பத்தியாகின்றன. ரப்பர், மிளகு, தேங்காய், தேயிலை, காபி இவைகளைப்போன்ற பல விளை பொருள்கள் அங்கே உற்பத்தி ஆகின்றன. அதன் காரணத்தால் அங்கே வருவாய் உயர்வாய் இருக்கிறது. (குறுக்கீடு) கம்யூனிஸ்ட் கட்சி இப்போது தான் அங்கு பதவிக்கு வந்தது. முன்பே இருந்த நிலையைப்பற்றி நான் சொல்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி வந்ததால் இன்னும் எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை; என்ன மாறுதல் ஏற்படுமோ தெரியாது. அதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். நான் சொல்வது முன்பே இருந்தது. நமக்கு நிலவளம் அவர்களைக்காட்டிலும் அதிகமாக இருந்தபோதிலும், மற்ற ராஜ்யங்களை விடக்குறைவு. அதற்கு வேண்டிய நீர்வளம் நமக்கு இல்லை. இயற்கைப் பொருள் விஷயத்திலும் இப்போது தான் நெய்வேலியைக் கண்டுபிடித்து இருக்கிறோம். மற்ற வளங்களும் இங்கு குறைவு தான். நெய்வேலியில் இப்போது தான் ஆரம்பவேலைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இவைகளையெல்லாம் உணர்ந்து நாம் எல்லோரும் ஆலோசனை செய்து எந்த முறையில் பாடுபட்டால் நல்லது என்று ஒரு முடிவுக்கு வந்து அடுத்த பத்து வருஷ காலங்களுக்கு நன்றாக வேலை செய்தால் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் பாடுபட்டவர்கள் ஆவோம். திராவிட முன்னேற்ற கழகம் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபடுவதாய் சொல்வதால், இந்த என் கருத்துக்களை அவர்கள் முன்பும் வைக்க ஆசைப்படுகிறேன்.

இப்போது வளம் குறைந்த நாட்டை அதிக வளப்படுத்த வேண்டியதாய் இருக்கிறது. அதை எப்படிச் செய்வது ? இரண்டு துறைகள் இருக்கின்றன. ஒன்று விவசாயத்துறை. இரண்டாவது தொழில் துறை. இந்த இரண்டு துறைகளிலும் நல்ல முன்னேற்றம், கணிசமான முன்னேற்றம் கண்டால்தான் நாம் ஓரளவு முன்னேற்றம் அடைந்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். விவசாயத்துறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளைப்பற்றி என்னுடைய பட்ஜெட் உரையில் சொல்லியிருக்கிறேன். இதற்கு மேலாக விவசாயத் துறையைப்பற்றி டிமாண்டை விவாதிக்கும்போது, அந்த இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சர் அதை எடுத்துச் சொல்லுவார். இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய நீர்வளத்தை நல்ல முறையிலே பயன் படுத்திக்கொண்டு வருகிறோம் என்பதில் சந்தேகமில்லை. ரொம்பவும் குறைந்த அளவு தண்ணீர் தான் சமுத்திரத்தில் போய் விழுகிறது. உலகத்திலேயே எடுத்துக்கொண்டால் நாம் வீணாக்காமல் தடுத்து உபயோகிப்பதைப்போல் வேறு எந்த நாட்டிலும் செய்யவில்லை என்று உறுதியாகக்கூறலாம். அந்த அளவுக்கு நம் முன்னோர்களே ஏற்பாடு செய்து இருந்தார்கள். நாம் இப்போது இன்னும் அதிகமாக உபயோகித்து வருகிறோம். இதில் இன்னும் ஒன்றை யோசிக்க வேண்டும். வேறு பாகங்களிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவதைவிட்டு நம்மிடத்தில் உள்ள தண்ணீரை நல்ல முறையிலே உபயோகிக்கிறோமா என்று பரிசீலனை செய்து பார்க்கவேண்டிய அவசியம். ஆற்றுத்தண்ணீரை வைத்து நெல் உற்பத்தி செய்கிறோம். இதில் தண்ணீரை, பரம்பரையாக, பழங்காலத்தில் இருந்து எப்படி உபயோகித்தோமோ அப்படியே இன்றும் செய்து வருகிறோம். இதில் ஏதாவது மாறுதல் செய்வது என்றால், மூட பழக்க வழக்கங்களை அகற்றுவதில் எப்படி எதிர்ப்பு ஏற்படுகிறதோ அதே மாதிரி இதிலும் எதிர்ப்பு ஏற்படுகிறது. நெல் வேளாண்மைக்கு அவ்வளவு தண்ணீர் அவசியம் இல்லை. குறைந்த தண்ணீர் வைத்து வேளாண்மை செய்யலாம் என்று ஆராய்ச்சி செய்து சொல்கிறார்கள். தஞ்சாவூரிலே லக்ஷக்கணக்கான ஏக்கருக்கு தண்ணீர் பாய்கிறது. இப்போது பாயும் தண்ணீரில் 20 அல்லது 15 சத விகிதம் குறைவுபடுத்தி, பலனும் குறையாமல், தண்ணீரை மிச்சப் படுத்தி இன்னும் 2 அல்லது 3 லட்சம் ஏகராக்களுக்குத் தண்ணீர்

[Sri C. Subramaniam] [5th July 1957

பாய்ச்ச முடியும். இந்த விஷயத்தில் ஆராய்ச்சி செய்து, நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் முன் வந்து இருக்கிறார்கள். என்பதை உங்கள் முன்னால் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

அங்கத்தினர்கள் சிறிய நீர்பாசனத் திட்டங்கள் வகுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதை ஸ்ரீ அண்ணாத்துரையும் எடுத்துச் சொன்னார்கள். இதை இன்றைக்கு அல்ல, ஆறு வருஷகாலமாக இதற்கு முக்கிய இடம் கொடுத்து பல காரியங்கள் செய்து வருகிறோம். இதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. ஒரு இடத்திலே அணைக்கட்டு கட்டி தண்ணீரைத் தடுத்து உபயோகப்படுத்துவது நல்லதா அல்லது பரவலாக பல இடங்களில் சிறிய அணைக்கட்டுகள் கட்டுவது நல்லதா என்பதை யோசிக்கவேண்டும். ஒரு ஆற்றின் தண்ணீர் மற்றொரு ஆற்றில் விழுந்து, அந்த தண்ணீர் உபயோகப்படுத்தப்பட்டால் மேல் ஆற்றில் அணைகட்டுவதால் என்ன பிரயோஜனம். தண்ணீர் நல்ல முறையிலே உபயோகிக்கப்படுகிறதா இல்லையா என்பதை, ஆறு சமுத்திரத்தில் விழும் இடத்தில் எவ்வளவு தண்ணீர் வீணாகிறது என்று பார்த்தால்தான் தெரியும். ஆகையால் பார்த்த இடங்களில் எல்லாம் அணைகள் கட்டவேண்டுமானால் அதற்கு அதிகம் செலவாகும். ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2,000வீதம் செலவழித்தால் அணைகள் மூலம் சில ஏக்கர்களுக்கு பயன் ஏற்படும். இம்மாதிரி செலவழிப்பது நல்லதா ? அல்லது அதிகம் செலவில்லாமல் கிணறுகள் வெட்டி 2, 3 ஏக்கர்களுக்கு தண்ணீர் கிடைக்கும்படி செய்வது நல்லதா ? இதைப் பரவலாகச் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தால், அணைகள் அவசியம் இல்லை. இதுதான் நாம் இப்போது யோசிக்கவேண்டிய விஷயம்.

பல அங்கத்தினர்கள் சொன்னார்கள் "இங்கு ஆறு ஓடுகிறது, அங்கு ஓடை ஓடுகிறது. அவைகளில் ஏன் அணை போடக்கூடாது, தண்ணீரைத் தேக்கக்கூடாது" என்று. இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறோம். பெரிய அளவில் செலவு செய்து, அணைகள் கட்டி தண்ணீரைத் திருப்புவதில் பிரயோஜனம் இல்லை. பரவலாக, குறைந்த செலவில் திட்டங்கள் போடுவதுதான் உபயோகப்படும். அந்த முறையிலே நீர்பாசன திட்டங்கள் சிறிய அளவில் எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறோம். சென்ற ஆண்டிலே இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ஒரு கோடி ரூபாய். அது இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது, என்று சொன்னார்கள். காரணம் என்ன ? எஞ்சினியர்கள் சென்ற வருஷம் போதிய திட்டங்கள் இல்லை என்று சொன்னார்கள். ஒதுக்கிய அவ்வளவு பணத்தையும் அதனால் செலவு செய்ய முடியாது, செலவு செய்வது ரொம்பவும் கஷ்டம் என்றும் சொன்னார்கள். நீங்கள் செலவு செய்ய முயற்சி செய்யுங்கள் என்றும் சொன்னோம். எவ்வளவு முயற்சி செய்தும் ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயில் 35, 40 லக்ஷம் தான் செலவு செய்ய முடிந்தது. இந்த வருஷத்தில், அதுவும் பற்றுக்குறை இருக்கும் காலத்தில் செலவை அதிகப்படியாக காட்டுவதில் பிரயோஜனம் இல்லை. சென்ற வருஷ அளவுக்கு இந்த வருஷம் இந்த இனத்திற்கு பணம் ஒதுக்காவிட்டாலும் ஒதுக்கப்பட்டதைவிட அதிகம் செலவழித்தால், எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணமும் ஒதுக்கத் தயார். ஆகையால் இஞ்சினியர்களுக்கு மேலும் மேலும் முயற்சி நடந்துகொண்டே போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சென்னை ராஜ்யத்திற்கு மட்டும் சென்ற 3 வருஷத்தில் 3½ கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறோம். இந்த சிறிய அளவு திட்டங்களுக்காக. அத்துடன் கிணறு வெட்டும் வேலையும், மற்ற வேலைகளும் நடந்து வருகின்றன. இத்துடன் நல்ல விதைகளை வைத்துக்கொண்டு விவசாயத்துறையிலே முன்னேற்றம் காணவேண்டியது அவசியம்.

(The hon. Member, Sri N. Palanisami rose)

**MR. SPEAKER**: The Hon. Minister is not yielding. How can I disturb him.



5th July 1957]

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இப்போது 136 விதைப் பண்ணைகள் ஏற்படுத்தபடும். அதற்கு கூடியவரை சல்லிசாக கிடைக்கும் இடங்களில் நிலங்களை விலைக்கு வாங்குவது என்றும், மற்ற இடங்களில் குத்தகைக்கு எடுத்துக் கொள்வது என்றும் உத்தேசம். அதுவும் ஒரு கட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கு வேண்டிய சட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதில் நியாயவாரச் சட்ட அடிப்படையில் அதிகாரம் எடுத்துக் கொண்டுள்ளோம்.

அதற்கடுத்தப்படியாக முக்கியமாக இருப்பது தொழில் துறை. நாம் இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிப் பேசுகிறோம். இன்று மக்கள் பெரிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகையால் வேலையில்லாதவர்களுக்கு விவசாயத் துறையில் வேலை கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆகவே தொழில் துறையை விரிவுபடுத்துவதன் மூலம் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியும். விவசாயத் துறையில் முன்னேற்றம் காணுவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க முடியுமே தவிர வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியாது. ஆகையால் தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாக இருக்கிறது. தொழில் துறையில் பல பகுதிகள் இருக்கின்றன. **Basic Industries** என்று சொல்லப்படும் பெரும் தொழில்கள் இருக்கின்றன. எவ்வளவுக் கெவ்வளவு பெரும் தொழில்கள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு மக்களுக்கும் பரவலாகப் பல வசதிகளை அளிக்கமுடியும். அப்பேற்பட்ட பெரும் தொழில்கள் எதை அடிப்படையாகக்கொண்டு ஏற்பாடு செய்யப்படுகின்றன என்பது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரியும். இரும்பு போன்ற உலோகங்களை அடிப்படையாகக்கொண்டுதான் கனரகத் தொழில்களை ஏற்படுத்த முடியும். ஆகவே இன்றைக்கு நமது ராஜ்யத்திலுள்ள முக்கியமான பிரச்னை இரும்பு உற்பத்தி செய்ய வேண்டியது ஆகும். நிறைய இரும்பு உற்பத்தி செய்தால் தான் பெரும் தொழில்களை ஆரம்பிக்க முடியும். சேலத்தில் இரும்புக் கனி இருப்பது நமக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அதைக் கொண்டு பெரிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னபோது, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காலத்தில் இங்கே நிலக்கரிக் கனி இல்லாததால் அதை ஆரம்பிக்க முடியாது என்றும், வடக்கேயிருந்து நிலக்கரியைக் கொண்டு வருவது சாத்தியமல்ல என்றும் ஆட்சேபனை கூறப்பட்டு வந்தது. ஆனால், இப்போது இங்கே நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது என்பதையும், சென்ற நவம்பர் மாதம் நமது தேசப் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அந்த பழுப்பு நிலக்கரித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள் என்பதையும் அங்கத்தினர்கள் எல்லோரும் அறிந்திருப்பார்கள். நேருஜீ அவர்கள் அந்தத் திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது, "இந்தப் பகுதிக்கு இருக்கும் பெரும் குறை இந்தத் திட்டத்தின் மூலம் தீரும்" என்று கூறினார்கள். ஆகவே இங்கே உள்ள குறை அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அந்தத் குறையைத் தீர்ப்பதற்கு வழி வகுத்துவருகிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் தொழில்களை ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வளவுதான்.

ஆதலால், இங்கே பெரிய தொழில்கள் ஆரம்பிக்கப்படாததற்குக் காரணம் 'வடக்குத் தான் வாழ வேண்டும், தெற்குத் தேய வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தார் நினைக்கிறார்கள்' என்பது அல்ல; 'அங்குள்ளவர்களுக்குத் தென்னாட்டைப்பற்றி அக்கறை இல்லை' என்பது அல்ல; 'அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளா விட்டாலும், நாங்களும் அக்கறை எடுத்துக்கொள்ளும் சக்தி உடையவர்களாக இல்லை' என்பதும் அல்ல; இப்போதுள்ள சூழ்நிலையில் காலதாமதம் ஆகிறது என்பதைத் தவிர வேறு காரணம் கிடையாது.

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 70 கோடி ரூபாய் செலவாகும் என்பது நமக்குத் தெரிகிறது. இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அன்னிய நாட்டு இயந்திரங்களும் அன்னிய நாட்டு நிபுணர்களுடைய உதவியும் தேவையாக இருக்கின்றன. அந்த

இயந்திரங்களை நாமே உற்பத்தி செய்துகொள்ள முடியாது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் உருக்குத் தொழிற்சாலையையும் இரும்புத் தொழிற்சாலையையும் நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கும் அன்னிய நாட்டு மூலதனம் வேண்டும். ஆகவே இப்போதுள்ள தொழில் வளர்ச்சி இன்னும் அதிகமாகப் பெருகுவதற்கும் அன்னிய நாட்டு மூலதனத்தை ஓரளவு பெறத்தான் வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். நாம் நோய்வாய்ப்பட்டு விட்டதாக வைத்துக்கொள்வோம். அப்போது நம்மிடம் உள்ள இரத்தம் மிகவும் குறைந்துபோய் விடுகிறது என்றும் வைத்துக்கொள்வோம். இரத்தம் குறைந்துபோய் விட்டால் வேறொரு மனிதனின் இரத்தத்தை எடுத்து நோயாளிக்குக் கொடுக்கிறார்கள். அதன் மூலமாகப் புதிதாகக் கொஞ்சம் பலம் நோயாளிக்கு ஏற்பட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சக்தி நோயாளிக்கு உண்டாகிறது. அதற்குப் பிறகு நமது இரத்தத்தின் மூலமாகவே, வேலை செய்வதற்கு வேண்டிய சக்தி கிடைக்கிறது. 'பிளட் ட்ரான்ஸ்மிஷன்' போலவே அன்னிய நாட்டு மூலதனம் நமக்கு இப்போது தேவையாக இருக்கிறது; அது வர வேண்டியிருக்கிறது. அது வரவில்லை என்றால், இன்னும் இளைத்துப் போய், நோயைத் தீர்ப்பது ரொம்பவும் கஷ்டமாகி விடுகிறது.

அன்னிய நாட்டு நிபுணர்களையும், அன்னிய நாட்டு இயந்திரங்களையும் எந்த அடிப்படையில் நாம் பெற முடியும் என்பதைப்பற்றி எதிர்கட்சியிலுள்ள சில அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பிரச்னையில்தான் அவர்களுடைய பிரிக்கும் கொள்கையும் நம்முடைய ஒன்றாகக் கூடியிருக்கும் கொள்கையும் வருகின்றன. இன்று அன்னிய நாட்டு மூலதனம் வெறுமனே கிடைப்பதில்லை. உலகத்தில் நமக்கு மதிப்பும் பலமும் இருக்கும் வரையில்தான் அன்னிய நாட்டு மூலதனம் கிடைக்கும். "முக்கியமாகப் பெரிய கன ரகத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும், அதற்கு அன்னிய மூலதனம் வேண்டுமென்றும் நாம் நினைத்தால், இன்றுள்ள சூழ்நிலையில் இந்தியாவுடன் நாம் ஒன்றாக இருந்தால் அன்னிய மூலதனம் நமக்கு சுலபமாகக்கிடைக்குமா, அல்லது நாம் மட்டும் தனி தேசமாக இருந்தால் கிடைக்குமா?" என்று கேட்க விரும்புகிறேன். இதை எதிர் கட்சி அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். (இந்த சமயத்தில் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி குறுக்கிட்டார்) சிலோனில் தொழிற்சாலைகள் நடப்பது எனக்குத் தெரியும். அங்கே இருப்பதை நேரில் சென்று பார்த்துவிட்டு வர வேண்டும் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். சிலோனைப் பற்றிப் பேசும் அங்கத்தினர்கள், அங்கே போடப்பட்டுள்ள திட்டங்களை நாம் போட்டிருக்கும் திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே எவ்வளவு பெரிய கனரகத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அவைகளை அறிந்த பிறகு புள்ளிவிவரங்களுடன் சிலோனைப்பற்றிப் பேசினால் நானும் பேசுவதற்குத் தயாராயிருக்கிறேன். சிறு உதவிகளுக்கும் அன்னிய நாட்டார் எவ்வளவு நிபந்தனைகள் போடுகிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே நாம் நமது ராஜ்யம் தொழில் துறையில் முன்னேற வேண்டுமென்று நினைத்தால்....(இந்த சமயத்தில் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி குறுக்கிட்டார்) கனம் அங்கத்தினரிடமிருந்து பதிலை நான் உடனே கேட்கவில்லை. அவர் நன்றாக யோசித்துவிட்டு பதில் சொல்லட்டும். அவசரமாக பதில் சொன்னால் அது யோசனை செய்து சொல்லப்பட்ட கருத்தாக இருக்காது. ஆகவே, நன்றாக யோசித்த பிறகு பதில் சொல்ல வேண்டும் என்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவுடன் நாம் ஒன்றாக இருந்தால்தான், இந்தப் பெரிய தேசத்திற்குக் கிடைக்கக்கூடிய சௌகரியங்களை நாமும் பெறமுடியும். அந்த சௌகரியங்களை வைத்துக் கொண்டுதான் நாம் முன்னேற்றம் அடையமுடியும்.

இன்னொரு விஷயத்தையும் எதிர் கட்சி அங்கத்தினர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றுள்ள நிலைமையில் நமக்குத் தேவையாக இருக்கும் அன்னிய நாட்டு உதவியை முழுவதும் இலவசமாகப் பெற்றுவிட முடியாது. நாம் கடனாகவும் உதவி பெறலாம்;



அந்தக் கடன்களுக்கு பதிலாக நம்முடைய சாமான்களைக் கொடுக்கலாம். அதற்கு நம்மிடம் சாமான்கள் ஏராளமாக இருக்க வேண்டும். இன்று நம்மிடம் பல சாமான்களில் மிகவும் பற்றாக்குறை இருக்கிறது. இன்று தமிழ் நாட்டிலுள்ள சாமான்களை மட்டும் வெளி நாடுகளுக்கு அனுப்பி, தேவையான அன்னிய மூலதனங்களையும் அன்னிய நிபுணர்களின் உதவியையும் பெறுவது என்பது, நான் கணக்குப் போட்டுப் பார்த்த வரையில், முடியாது என்று தோன்றுகிறது. மற்ற அறிஞர்கள் கணக்குப்போட்டுப் பார்த்தால் முடியுமோ என்னமோ தெரியாது.

இப்போதுள்ள நிலைமையில் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று பேச வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்று நாம் எல்லோரும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்று நினைப்பதால், தேசத்துடன் நாம் ஒன்றாக இருந்து எவ்வளவு அன்னிய மூலதனம் பெறமுடியுமோ அவ்வளவையும் பெற்று நாட்டை முன்னேற்றமடையச் செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஆகையால், இன்று நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று பேசுவதில் பிரயோஜனம் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்னும், எவ்வளவுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுக்கு மக்களுடைய பலம் இருக்கிறதென்றும், மக்கள் தங்களிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் சொன்னாலும், சமீபத்தில் நாட்டின் பிரிவினை ஏற்படப் போவதில்லை. இன்று நாம் எல்லோரும் நமது ராஜ்யம் முன்னேற வேண்டும் என்று பேசுகிறோம். நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். அப்படி நாம் பாடுபடும் போது "முன்னேற்றத் திட்டங்களில் மத்திய அரசாங்கத்தார் நமக்குப் பாகுபாடு செய்துவிட்டார்கள். அவர்கள் நம்மை வேறுவிதமாகக் கருதுகிறார்கள். நம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கவேண்டிய அளவு முன்னேற்றம் இதனால் தான் ஏற்படவில்லை." என்று உணர்வோமானால், அப்போது நாம் எல்லோரும் சேர்ந்து நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற இயக்கத்தைக் கிளப்பலாம். அந்த இயக்கத்தை அனாவசியமாக இன்றைக்குக் கிளப்பி ராஜ்யத்தில் குழப்பத்தை உண்டுபண்ணும் காரணத்தினால், ராஜ்யத்திலுள்ள சக்தி வீணாக்கப்படுகிறது. ஆகவே, இன்றுள்ள சூழ்நிலையில் நமது வசதிகளைப் பெருக்கிக்கொண்டு முன்னேற்றமடைவதற்காக நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டும் என்று மிகவும் பணிவுடனும் வணக்கத்துடனும் என்னுடைய சகோதரர்கள் அனைவரையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அது தான் நாம் இன்று செய்யவேண்டிய முக்கிய பணி ஆகும். அதன் மூலம்தான் தமிழ்நாடு முன்னேற்றமடைய வேண்டும். ஆகவே நாம் எல்லோரும் ஒன்றுபட்ட சக்தியாக இருக்க வேண்டும். இதற்கு, நம்மிடையே உள்ள கொள்கை முறண்பாடுகள் நீங்கி truce ஏற்படவேண்டும். தற்காலிகமாகவாவது நம்மிடையேயுள்ள கொள்கை முறண்பாடுகளை ஒத்திவைக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய சக்தியையெல்லாம் திரட்டி நமது தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒன்று சேர்ந்து பாடுபடமுடியும். "தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு நாங்கள்தான் அக்கறை எடுத்துக் கொள்கிறோம்" என்று சொல்பவர்கள் இந்த விஷயத்தை நன்றாக கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். (சிரிப்பு). இந்தப் பிரச்னையைப்பற்றி அவர்கள் நன்றாக யோசிக்கவேண்டும். (குறுக்கீடு) அவசரப்பட்டு பதில் சொல்ல வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, நமது ராஜ்யத்தில் தொழில் வளம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். தொழில் வளத்தை ஏற்படுத்துவதற்காக நாம் நெய்வேலித் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதற்கடுத்தபடியாக இரும்புத் தொழிற்சாலை வரும். (குறுக்கீடு) இரும்புத் தொழிற்சாலை வந்துதான் தீரும். இரும்புத் தொழிற்சாலை இங்கே வராது என்று சிலர் எவ்வளவுதான் நினைத்துக் கொண்டிருந்தாலும் அது வரத்தான் போகிறது. என்னுடைய பட்ஜெட் உரையில் 'வரலாம்', 'எதிர்பார்க்கலாம்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர 'வரும்' என்று

குறிப்பிடவில்லை என்று சில அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தும் விஷயத்தில், "வடக்கு தடையாக இருப்பதால் நாங்கள் வடக்குக்கு 'ஆமாம்' போடுகிறோம்", என்பதில்லை. சேலத்தில் கிடைக்கும் இரும்பு எப்படிப்பட்டது, அதைக் கொண்டு இங்கேயுள்ள வசதிகளுடன் எப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்கலாம் என்பதுபற்றி ஜாம்ஷெட்பூரில் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்த ஆராய்ச்சிகள் நமக்குச் சாதகமாக வெற்றியடைய வேண்டும். ஆராய்ச்சிகள் வெற்றியானால்தான் இங்கே இரும்புத் தொழிற்சாலையை அமைக்கலாம். ஆகையால்தான் "லாம்" போட வேண்டியிருக்கிறது. அந்த ஆராய்ச்சியிலே நமக்குப் பாதகமாக முடிவு ஏற்பட்டுவிடுமானால் வேறு என்ன செய்வது என்பதும் பின்னர் யோசிக்கவேண்டியுமிருக்கிறது. செயல்படுகிற தொழில்களை வந்துவிட்டது என்று சொல்லிவிட்டேன். புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற தொழில்களைப் பற்றி ஆராய்ச்சி இன்னமும் நடந்து கொண்டிருப்பதனால் "வரலாம்" எனச் சொல்லியிருக்கிறேன். இந்த தேசத்தின் அபிவிருத்திக்காகப் பல பரிசோதனைகள் ஆராய்ச்சிக் கூடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. வடநாட்டில் ஆரம்பிக்கப்படவேண்டிய தொழில்களுக்கு தென்னாட்டிலுள்ள காரைக்குடி எலெக்ட்ரானிக் ஆராய்ச்சி கூடத்தில் பல பரிசோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். எல்லாப் பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் நடத்துவது என்பது முடியாத காரியம். ஆகையால் பரவலாக இந்த ஆராய்ச்சிக்கூடங்கள் அமைந்திருக்கின்றன. இப்போது சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றிய பரிசோதனை ஜாம்ஷெட்பூரில் நடக்கிறது. ஜாம்ஷெட்பூரில் அந்த ஆராய்ச்சிக்கூடம் இல்லை என்றால், வடநாட்டைவிட்டு வெளிநாட்டின் உதவியை நாடி நிற்கவேண்டி இருந்திருக்கும். அதனால் காலதாமதம் அதிகமாகத்தான் இருந்திருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நாடு பலவகையிலும் முன்னேறவேண்டுமென்று விரும்புகிறவர்கள் கொஞ்சம் ஆழ்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும். "நம்மிடமுள்ள மூலப்பொருள்கள் என்ன? அவை எந்த ரகத்தைச் சேர்ந்தவை? அவைகளிலிருந்து எப்படிப்பட்ட புதுப்பொருள்களை உண்டாக்கலாம்? அதற்கு வேண்டிய வசதிகள் நம்மிடம் என்ன இருக்கின்றன?" என்பதை எல்லாம் யோசித்துப் பார்க்காமல் எல்லா தொழிற்சாலைகளும் வரும் வரும் என்று சொல்ல வேண்டுமானால் அது வெறும் குருட்டுத்தனமாகச் சொல்லலாமே தவிர அப்படிச் சொல்வதில் அர்த்தம் இருக்காது.

"வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது" என்றெல்லாம் எடுப்பாகப் பேசுவது பொது மேடையில் எடுபடலாமே தவிர சட்டசபையில் எடுக்காது என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி: இங்கும் எடுக்கும்) (கைதட்டல்) வெறும் கைதட்டலினால் அந்தப் பக்கத்தில் இருந்தே எடுபடலாம். உங்கள் பேச்சுக்கள் எங்களுக்கு எடுக்கும்படியாக இருக்க வேண்டும். நீங்கள் சொல்வது எங்களுக்கு எடுத்தால்தான் நாட்டுக்குப் பயன்படுமே தவிர உங்களுக்குள்ளேயே எடுபட்டால் எவ்விதப் பயனும் ஏற்படாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் வெறும் கைதட்டலுக்காகப் பேசுவதில் பயன் இல்லை. ஆளும் கட்சியினருக்கு உதவியாகப் பேசினால்தான் பல காரியங்களைச் செய்வதற்கு அவர்கள் பேச்சுப் பயன்படும். இல்லாவிட்டால் பைசாக்-கூடப் பிரயோஜனப்படாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைத் தெரிந்துகொண்டு எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு பெரிய தொழில்கள் ஏற்படவேண்டுமென்று நாம் சொல்லும்போது அந்தப் பெரிய தொழில்களினால் மட்டும் மக்கள் எல்லோருக்கும் வேலை கிடைத்து விடாது. அதுவும் முக்கியமாகப் பெரிய இயந்திரங்கள் மூலம் நடைபெறும் தொழிற்சாலையில் உற்பத்தி அதிகம் இருக்கும். ஆனால் அங்கே வேலை செய்கின்ற ஆட்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். ஆகையால் தான் பெரிய தொழில்களுக்கு அடுத்தபடியாக நாட்டில் சிறு தொழில்கள் அதிகம் வளரவேண்டும். அதற்காகவே



ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரி, காட்டேஜ் இண்டஸ்டிரி, மீடியம் இண்டஸ்டிரி என்பதாகப் பலவகையில் அவை வளர்ச்சி அடைவதற்குத் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறோம். அதிலேயுள்ள திட்டங்கள் என்ன என்பதைப் பற்றி உங்கள் முன்னிலையில் வைத்திருக்கிறோம். அந்தத் தொழிற்சாலைகளுக்கான கட்டிடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர்களை எல்லாம் அங்கே கொண்டுபோய் காட்டும்படியாக கனம் தொழில் மந்திரி அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமன்: அங்கத்தினர்களுக்கு முன்பே இன்விடேஷன் அனுப்பியாகிவிட்டது.) அங்கத்தினர்கள் எல்லோரும் உண்மையிலேயே அங்கே போய்ப் பார்ப்பார்களேயானால் அவர்கள் மனதிலுள்ள அவநம்பிக்கை போகும். தைரியம் வளரும். (ஸ்ரீ கே. அன்பழகன்: அகில இந்தியாவிலும் இருப்பதைக் காட்டுங்கள்.) அகில இந்தியாவிலும் இருப்பதைப் பாருங்கள். இதர ராஜ்யங்களுக்கு நம்முடைய ராஜ்யத்தில் இருப்பது குறைவு இல்லை. இப்போது நாம் எதைப்பார்த்தாலும் அவநம்பிக்கை கொண்டிருக்கிறோம். வடநாடு வாழ்கிறது, நாம் சக்தியற்றவர்கள், நாம் தேய்ந்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் நினைந்து மனம் சோர்வு அடைந்து கொண்டிருக்கிறோம். அந்தத் தொழில்களை எல்லாம் பார்த்தால் அங்கத்தினர்களுடைய மனதிலுள்ள அவநம்பிக்கை, சோர்வு முதலியன எல்லாம் போய்விடும். புதிய நம்பிக்கையாகிய சக்தி வளரும் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது. இந்தச் சிறு தொழில்களின் மூலமாக நாம் அதிகமாக முன்னேற்றம் அடையவேண்டும். இவைகளை எல்லாம் நிறைவேற்றும் பணி அரசாங்கத்தின் முன்னிலையில் இருக்கிறது. அதற்குப் பணம் வேண்டும். வரி போடவேண்டும். வரிப்பணத்தைக் கொண்டு அவற்றை எல்லாம் நிறைவேற்றியாக வேண்டும். ஆனால் எவ்வளவு திறமையாகச் செய்ய முடியும் என்பது அவ்வப்போது இருக்கக் கூடிய அரசாங்கத்தைப் பொறுத்தது. இன்றைக்கு மக்கள் எங்கள் பேரில் நம்பிக்கை வைத்து இந்த அரசாங்கத்தை அமைத்திருக்கிறார்கள். ஆகையால் எங்களுக்கு இருக்கக் கூடிய எல்லாச் சக்தியையும் பயன்படுத்தி எல்லாவகையிலும் முன்னேற்றம் ஏற்படும்படியாகச் செய்வோம். எங்கள் சக்தி வீணாகப் போகாதவாறு எவ்வளவுக்கு எவ்வளவு எதிர்க்கட்சிக்காரர்கள் எங்களுடன் ஒத்துழைக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அவ்வேலைகள் நன்றாக நடைபெறும். ஸ்ரீ சின்னதுரை அவர்கள் பேசும்போது மிகவும் வேகமாக, அழுத்தமாகப் பேசினார்கள். "பழைய அதிகாரிகள் தானே இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுடைய மனோபாவத்தில் என்ன மாறுதல் இருக்கப் போகிறது? நம்முடைய திட்டங்களை எல்லாம் அவர்கள் எவ்வாறு பயன் உள்ள வகையில் நிறைவேற்றப்போகிறார்கள்" என்று சொன்னார். நிர்வாக அநுபவம் இல்லாத காரணத்தினால் அவர்கள் அப்படிப் பேசினார்கள் என்று நினைக்கிறேன். சுதந்திரம் வருவதற்கு முன்பாக பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் பணியாற்றிய அதிகாரிகளேதான் இப்போதும் இருக்கிறார்கள். சுதந்திரம் வந்துவிட்டது. சுதந்திரம் வந்தபிறகு அவர்களுடைய மனோபாவமும் மாறி சுதந்திர சர்க்கார் செய்கின்ற பணிகளுக்கு எல்லாம் அவர்கள் எத்தனை துணைபுரிந்திருக்கிறார்கள் என்பது நிர்வாக ரகசியம் தெரிந்தவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். மனோபாவம் இன்னமும் மாறாத அதிகாரிகள் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம். எல்லா இடங்களிலும்தான் அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியில் இல்லையா? சோஷலிஸ்டுக் கட்சியில் இல்லையா? இன்னும் பழைய பல்லவியிலேயே பாடிக்கொண்டிருக்கிறவர்கள் இந்தச் சட்டசபையில்தான் இல்லையா? பொதுவாக எங்கும் அப்படிப்பட்ட மனோபாவம் உடைய மக்கள் இருப்பது இயற்கை. அரசாங்க நிர்வாகத்திலும் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கலாம். ஆனால் சட்டசபை முன்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். தங்களுடைய முழுத் திறமையையும் உபயோகித்து, ஆற்றலை உபயோகித்து, நீண்டகால அநுபவத்தை உபயோகித்து, அறிவை உபயோகித்து சுதந்திர சர்க்காரின் வேலைகளில் எல்லாம் மனப்பூர்வமாக ஒத்துழைக்கின்ற அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள் என்று கூறவிரும்புகிறேன். பலவித திட்டங்களைப் போடுவது அரசாங்கம், அந்தத் திட்டங்களுக்கு ஏற்ப அவர்கள் முழுமூச்சுடன் சேவை செய்து வருகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இன்று சோஷலிஸ சமுதாயத்தை

அமைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கிறது என்ருல், அதை மற்ற கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்ருல் அந்த லட்சியத்தை நிறைவேற்ற அதிகாரிகள் முழுமூச்சுடன் வேலே செய்கிருர்கள். இதை விரும்பாதவர்கள் எல்லாக் கட்சிகளிலும் ஒருசிலர் இருக்கலாம். அதிகாரிகளும் அப்படியே இருக்கலாம். இதைக் குறையாகப் பேசக்கூடாது.

அதற்கு அடுத்தபடியாக ஆடிடர்-ஜெனரல், அக்கவுண்டெண்ட்-ஜெனரல் முதலியவர்கள் அரசாங்க நிர்வாகத்தில் எங்களுக்கும் தெரியாது, எங்களேயும் மீறி நடந்துவிடுகின்ற தவறுகளே மாத்திரம்தான் சுட்டிக் காட்டுகிருர்கள். கோடிக்கணக்கான திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் நடந்துவிட்ட தவறுதல்களே அவர்கள் சுட்டிக்காட்டுவதை வைத்துக்கொண்டு " எங்கே பார்த்தாலும் லஞ்சம்; லஞ்சம் இல்லாத இடம் எங்கே " என்று பேசுவது சரியாகாது. இங்கும் லஞ்சம்தான் என்று சொல்லாது விட்டுவிட்டார்கள். அப்படிச் சொல்வதஞலே என்ன பிரயோஜனம் ஏற்படப்போகிறது என்று கேட்க விரும்புகிறேன். இதுவரையிலும் லஞ்சம் வாங்காமல் உழைகின்றவர்களுக்கும் கூட " எங்கே பார்த்தாலும் லஞ்சம்தான். நாமும் என் வாங்கக் கூடாது ? " என்று நினைக்கத்தான் தோன்றும். எந்த இடத்தில் லஞ்சம் வாங்கப்பட்டது என்று குறிப்பாகச் சொன்ஞல் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள உதவியாக இருக்கும். அப்படியில்லாமல் பொதுவாக எங்கும் லஞ்சம்தான் என்று பேசுவது லஞ்சம் வாங்காதவர்களேயும் வாங்க வைக்கத் தூண்டும். கொஞ்சநஞ்சம் பயந்து கொண்டு வாங்குகிறவர்களுக்கும் " எங்கும் லஞ்சம்தான், இதில் என்னடா இருக்கிறது ? " என்று தைரியமாக மேலும் வாங்கத்தான் தூண்டும். இந்தவகையில் தான் ஸ்ரீ சின்னதுரை அவர்களுடைய பிரசங்கம் அமைந்திருந்தது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகையால் லஞ்சத்தை ஒழிப்பது என்பது சமுதாயத்தைப் பொறுத்து இருக்கிறது. சமுதாயத்தில் இருக்கிறவர்கள் தம்முடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பணம் எதற்காகக் கொடுப்பது என்று எண்ண ஆரம்பித்துவிட்டார்கள் என்ருல் உத்தியோகஸ்தர்களுக்கும் பணம் கேட்கக் கூடாது என்கிற பயம் வந்துவிடும். அவரவர்கள் அவரவர்களுடைய கடமையைச் செய்வார்கள். இதைவிட்டுவிட்டு லஞ்சம் வாங்குவதை ஒழிக்க லஞ்சம் வாங்கிஞர்கள் என்று சொன்ஞல் போதும், அவர்களே வேலேயில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்று சொன்ஞல் இது நடக்கக் கூடிய காரியமா ? இப்போது லஞ்சம் வாங்கப்பட்டதாகப் புகார் வந்தால் உடனே அதைப்பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்கிருேம். விசாரணேயின் முடிவில் லஞ்சம் வாங்கியதாகவே நிரூபிக்கப்பட்டு அவர்களே வேலேயில் இருந்து நீக்கிஞலும் விசாரணே ஒழுங்காக நடந்ததா நடக்கவில்லேயா என்பதற்கு அவர்களுக்குக் கோர்ட்டுக்குப் போகவும் அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு செய்யாமல் ஒரு பத்து பேர்கள் லஞ்சம் வாங்கியதாகப் புகார் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே அவர்களே வேலேயை விட்டு நீக்குவது என்ருல் எந்த அதிகாரியாலும் வேலே செய்ய முடியாது. அந்த அதிகாரியைப் பிடிக்காதவர்கள் உடனே லஞ்சம் வாங்கியதாகப் புகார் செய்வார்கள். இந்தமாதிரியான பயத்திற்கு உள்ளாகி அதிகாரிகள் சரிவரப் பணி செய்ய முடியாத நிலேமை உண்டாகக் கூடாது என்பதற்காகத்தான் இத்தனே உரிமைகளே அவர்களுக்குக் கொடுத்திருக்கிருேம். இதைவிடத் தீவிரமாக லஞ்சத்தை ஒழிக்க வேறு என்ன வழி இருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் யோசனே சொன்ஞல் அதையும் பரிசீலிக்க நாங்கள் தயாராய் இருக்கிருேம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகையிஞல் இன்றைக்கு அதிகார வர்க்கம் ஏதோ தடையாக இருக்கிறது என்று நினேப்பார்களேயாஞல் அது தவறு. அது நமது திறமைக்குறைவிஞல் இருக்கலாம். அதற்கு அதிகார வர்க்கத்தை குறை கூறுவது சரியல்ல. நான் இதைச் சொல்லும்போது நான் ஆபீஸர்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுகிறேன் என்று யாரும் நினேக்கக்கூடாது. யார் தவறு செய்தாலும் அதை தைரியமாக எடுத்துச் சொல்லும் தைரியம் எனக்கு



இருக்கிறது. அதற்குள்ள சக்தி என்னிடம் இருக்கிறது. அந்த மனப்பான்மையும் என்னிடம் இருக்கிறது. ஆகவே யாருக்காக வேண்டியும், அவரது மனது நொந்து போகக்கூடாது என்று அவருக்கு ஆறுதல் சொல்லக்கூடிய முறையில் பேசுகிறவன் நான் அல்ல என்று சின்னதுரை அவர்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன். அனுபவபூர்வமான, நடக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்ன எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். லஞ்சத்தை ஒழித்துக் கட்டத்தான் மக்கள் இந்த சோஷலிஸ்டுகளேத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிருர்கள் போலும், இரண்டு பேர்களே. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு இரண்டே இரண்டு பேர்கள் இங்கு வந்துவிட்டு எங்களேக் குறை கூறுகிருர்கள். அவர்கள்தான் ஏதோ நியாயமாய் நடக்கிருர்கள் என்றும் மற்றவர்கள் அப்படி நடப்பதில்லே என்றும் எண்ணுவது சரியல்ல. அதைக் கண்டு, அவர்கள் இப்படிப்பேசுவதைக் கண்டு யாரும் ஏமாந்துவிடமாட்டார்கள். தான் தான் ஏதோ நியாயமாக நடப்பதாகவும் தன்னேயே உயர்ந்தவஞகவும் நினேப்பது தவறு. சில பேர்கள் நினேக்கிருர்கள், தாங்கள் இன்னெருவரைப்பற்றி ஒரு பெரிய குற்றம் சொன்ஞல் தாங்கள் பதிவிருதைகள் ஆகி விடுவார்கள் என்று. அந்த மனப்பான்மை மாற வேண்டும். தாங்கள்தான் நியாயமாய் நடப்பவர்கள் என்றும் மற்றவர்கள் அப்படி நடப்பதில்லே என்றும் நினேப்பது தவறு. லஞ்சத்தை ஒழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் சிக்கல்கள் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்கிறேன். இதை விட நல்ல முறையில் வேறு நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று மாற்று யோசனேகள் கூறிஞல் அவைகளேக் கவனிக்கலாம் என்று உங்கள் முன்னிலேயில் சொல்லிக்கொள்கிறேன். அதிகாரவர்க்கத்தை நாம் உபயோகப்படுத்தித்தான் தீரவேண்டும். மற்ற நாடுகளேப்போல் ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தி எல்லாவற்றையும் அழித்துவிட்டு புதிய ஏற்பாடுகளே செய்திருந்தால் ஒருவேளே புதிய உத்தியோகஸ்தர்கள் வந்திருப்பார்கள். அதஞல் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் மற்ற நாடுகளில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிருேம். இப்பொழுதுள்ள அதிகாரிகளே எப்படி நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று யோசனே செய்து பேசவேண்டும். அந்த அடிப்படையில் இங்கு ஏதாவது மாற்று யோசனேகள் இருந்தால் கட்டாயம் அவைகள் கவனிக்கப்படும். அடுத்தபடியாக, வரி வசூலிப்பதிலும் ஒரு கொள்கை இருக்க வேண்டுமென்று சொன்ஞர்கள். பூர்ணமாக அதை ஒத்துக்கொள்கிறேன். ராமசுவாமி பிள்ளே அவர்கள் பேசும்போது சொன்ஞர்கள், கேரளத்தைப் பாருங்கள் என்று. எவ்வளவு நல்ல முறையில் அங்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது, அதைப்பார்த்தாவது நாம் என் திருந்திக்கொண்டிருக்கக்கூடாது என்று சொன்ஞர்கள். அவருக்கு சில புள்ளி விவரங்கள் சொல்ல விரும்புகிறேன். அங்குள்ள வரி விகிதம் இங்குள்ள வரி விகிதத்தைவிடக் குறைவு என்று சொன்ஞர்கள். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது, நம் கணக்குத்தான் தப்பாய் போய் விட்டதோ என்று. ஆகவே கணக்கு தெரிந்தவர்களேக்கொண்டு கூட்டிப்பார்க்கச் சொன்னேன். அங்கே எவ்வளவு, இங்கே எவ்வளவு என்று பார்க்கலாம். கேரளத்திலே 1957–58 வருட பட்ஜெட் அடிப்படையில் முக்கியமான பகுதிகளேத்தான் எடுத்துக்கொண்டு சில பகுதிகளேத்தான் கணக்கில் எடுத்திக்கொள்ள வேண்டும்.

Sri T. S. RAMASWAMY PILLAI : பட்ஜெட் சர்வேயா? ராண்டம் சர்வேயா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ராண்டம் சர்வே அல்ல. பட்ஜெட் சர்வே தான். கேரளத்தில் தலே ஒன்றுக்கு 15·2 ரூ. நமது ஊரில் 12·6 ரூ. வசூல் செய்கிருேம். எங்கே ஜாஸ்தி என்று பாருங்கள். எங்கே ஜாஸ்தி. கேரள சர்க்காரோடு நான் போட்டி போட வரவில்லே. அங்கு நல்லது நடக்கட்டும். அங்கு நல்லது ஏற்பட்டால் அது, கொஞ்சமாவது இங்கும் பிரதிபலிக்காதா ? அவர்களுடன் நான் போட்டி போட தயாரில்லே. நிலேமையை அங்கத்தினர்கள் நன்கு உணரவேண்டும். விகிதாசாரப்படி பார்த்தால் கேரளத்தில் 4·9 வருகிறது. நமக்கு 4·8 வருகிறது. ஆகவே இங்கு அதிகம் என்று சொல்வது தவறு.

(ஸ்ரீ ஜெகந்நாதன் எழுந்தார்.)

வருகிறேன், ஜகன்னாதன், வருகிறேன். கேரளத்தில் ஏழைகளுக்கு வரி கிடையாது என்றும் பணக்காரர்களிடமிருந்தே வரி வசூல் செய்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. முதலில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது கள், சாராயம் குடிப்பவர்கள் ஏழைகளிலும் ஏழைகள். பெரிய ரகத்தை விட்டு விடுகிறேன். முதலில் நான் சொல்ல விரும்புவது, ஹரிஜனங்களும் கூலியாட்களும், தொழிலாளிகளும் சாப்பிடக்கூடிய கள்ளையும், சாராயத்தையும் பற்றிச் சொல்கிறேன். கேரளத்தில் இந்த கள்ளால் வரி மூலம் இரண்டு கோடி ரூபாய் கிடைக்கிறது. இத்தொகை குடித்துக் குட்டிச்சுவராகிற ஏழைகளிடம் இருந்துதான் கிடைக்கிறது. ஆனால் சென்னை ராஜ்யத்தில் ஏழைகள் இடமிருந்து இத்தகைய கொடுமைப்பணம் வசூலிக்கப்படவில்லை. பின்னர் கேரளத்தில் நபர் வருமானம் 313 ரூபாய். ஆனால் சென்னையில் 256 ரூபாய்தான். கேரளத்தில் தேயிலை, ரப்பர், காப்பி தோட்டங்கள் இருக்கின்றன. அடுத்தபடி, விற்பனை வரியை எடுத்துக்கொள்வோம். நாம் உணவுப் பொருள்களின் மேல் ஒரு சதவிகிதம் விதித்திருக்கிறோம். ஆனால் கேரளத்தில் உணவுப்பொருள்கள் மீது வரி வசூலிக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி பின்னால் பேசுகிறேன். எங்கு பார்த்தாலும் உணவுப்பொருள்களைப் பற்றி அதன் மேல் உள்ள வரியைப் பற்றிப் பேசுகிறேன்.

SRI N. K. PALANISAMI: கேரளத்தில் . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: கொஞ்சம் பொறுங்கள். பழனிசுவாமி அவர்களுக்கு கேரளத்தில் இருந்தால்தான் திருப்தி ஏற்படும். இங்கு இருக்கிற வரையில் அவருக்கு திருப்தி ஏற்படாது. அவருக்கு பதில் சொல்லி திருப்திப்படுத்தமுடியாது. அடுத்தபடியாக, இன்றைக்கு உணவுப் பொருள்கள்மீது விற்பனைவரி போடுவதைப் பற்றிச் சொல்கிறார்கள். உணவுப்பொருள்களின் மேல் உள்ள விற்பனை வரியை யார் கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நம் நாட்டில் வாழ்கிற மக்களில் 100க்கு 80 பேரும் விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள்தான். 100க்கு 80 பேர்கள் இன்று உணவுப்பொருள்கள் பேரில் இருக்கக்கூடிய விற்பனை வரி கொடுப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் கிராமங்களிலே தான்யத்தை கூலியாகப் பெறுகிறவர்கள். அல்லது அங்கேயே விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள். அங்கு விற்கிற தானியத்திற்கு ஒரு பை கூட விற்பனை வரி போடுவதில்லை. விவசாயத்துறையில் வேலை செய்கிறவர்கள் இந்த விற்பனை வரி கொடுப்பது கிடையாது. அங்கிருந்து தான்யம் 26 அல்லது 27 சதவிகிதமே வெளியே வருகிறது விற்பனைக்காக. சிறு சிறு கிராமங்களில் கடை வைத்திருக்கக்கூடிய அந்த கடைகளுக்கு விற்பனை வரி கிடையாது. 10,000 ரூபாய்க்கு மேல் இருந்தால்தான் விற்பனைவரி. சந்தைகளிலோ அல்லது கிராமங்களிலோ விற்கும் கடைகளுக்கு விற்பனை வரி கிடையாது. ஆகவே யார் இந்த வரி கொடுக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். அப்படிப்பார்க்குபோது, பெரிய நகரங்களில் பெரிய முனிசிபாலிடிகளில் இருக்கக்கூடியவர்களிடமிருந்துதான் இந்த விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. இதற்கு முன் கலால் வரி இருந்தது. கலால் வரி இருந்தபொழுது கள் சாராயம் குடிப்பவர்களிடம் இருந்துதான், அதாவது ஏழைகளிடமிருந்துதான், கள், சாராயம் இவைகளிலிருந்துதான், பெரிய வருவாய் சர்க்காருக்கு வந்தது. இன்றைக்கு சர்க்கார் அதை எடுத்தாய்விட்டது. இன்றைக்கு உணவுப்பொருள்களின் மீது கொடுக்கக்கூடிய வரி நகரப்புறங்களில் இருக்கும் தொழிலாளிகளிடமிருந்து என்று வைத்துக்கொள்கிறேன். நகரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கும் கிராமங்களில் இருக்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் உள்ள அவர்களது தரத்தை சீர்தூக்கிப்பாருங்கள். அப்படி சீர்த்தூக்கிப்பார்க்குமிடத்து கிராமங்களில் இருக்கிற தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய வருமானத்தைவிட மூன்று அல்லது நான்கு பங்கு கூடுதல் கிடைக்கிறது. நகரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு இன்றைக்கு எல்லாம் சேர்ந்து இரண்டு கோடிக்கு மேல் வருவதில்லை. சிறிய அளவில்தான் வசூல் செய்யப்படுகிறது.



இந்த சோஷியலிஸ அடிப்படையில் அதிகமாகக் கல்வி கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர வரி அதிகமாகப் போட்டு விட்டோம் என்று பலர் சொன்னார்கள். கிராமப் புறங்களைவிட நகரபுறங்களிலுள்ள மக்களை எடுத்துக் கொள்ளுவோமானால் அவர்கள் இந்த விற்பனை வரியால் அதிகமாக பாதிக்கப்படமாட்டார்கள். இந்த வரி மாத்திரம் தான் அவர்கள் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதுவும் அதிகப்படுத்தாமல் 2 நயாபைஸா என்றுதான் போட்டிருக்கிறது. இந்த விற்பனை வரி இரத்தத்தை உறிஞ்சுகிறது என்றும் ஏழைகளுடைய வாழ்க்கைத் தரத்தைக் கெடுக்கிறது என்றும் பலர் சொல்லுகிறார்கள். இந்த விற்பனைவரி விஷயமாக தேசீய கவுன்சில் கூட்டத்தில் பெரிய விவாதம் நடந்தது. கடைசியில் உணவுப்பொருள்களின் மீது விற்பனை வரி விதிக்கலாம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். நியாயவிலைக் கடைகளில் விற்கும் உணவுப் பொருள்களுக்கு அதிகமாக விற்பனை வரி விதிக்கக்கூடாது என்றும் "ஸ்பஸிடி"யாக இருக்க வேண்டுமென்றும் பிரதம மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இப்போது விதித்து இருக்கும் விற்பனை வரி அவ்வளவாக கூடுதல் என்று சொல்லமுடியாது. இது ஜாஸ்தியான வரி அல்ல. நமக்கு இப்போது இதன் மூலம் ஏழரை லட்சம் ரூபாய் கிடைக்கிறது. இதை இன்னும் குறைத்தால் நம்முடைய வருமானம் கம்மியாகும். அதே மாதிரி தான் உரத்தின் மீதும் விற்பனை வரி போடாவிட்டால் இப்போது இருக்கிற நிலைமையில் நஷ்டம்தான் ஏற்படும். உரம் விஷயத்தில் நமக்கு இப்போது ஐந்தரை லட்சம் ரூபாய் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது. ஆகையினால் இதிலிருந்து கிடைக்கும் வருவாய் இந்த இனத்திற்கே போய்விடுகிறது. நஷ்டப்பட்டால் இவ்வரியை வேண்டாம் என்று நீக்கிவிடலாம். இது அந்தந்த அரசாங்கத்தின் மனோநிலையை பொறுத்திருக்கிறது. ஆகையால் இவ்விஷயத்தில் எந்தவிதமான அநியாயமும் கிடையாது என்றுதான் நான் நினைக்கிறேன். அவ்விதமே உங்களுக்குத் தெரிவிக்கவும் ஆசைப்படுகிறேன். இருக்கக்கூடிய நிலைமையில் இப்போது இவ்விதமாக முடிவு செய்திருக்கிறோம். இதல்லாமல் கனம் அண்ணாதுரை அவர்கள் கூறினதுமாதிரி உணவுப் பொருள்கள் மீதுள்ள எல்லா வரிகளையும் குறைத்துவிட்டால் பொதுஜனங்கள் அவர்கள் சாப்பிடும் ஒவ்வொரு கவளத்திற்கும் வாழ்த்து கிடைக்கும் என்று சொன்னார்கள். நாங்கள் வெற்று வாழ்த்து பெறுவதற்காக மாத்திரம் இங்கு வரவில்லை. தற்காலிகமாகக் கிடைக்கும் வாழ்த்துகளுக்காக இவ்விதம் செய்தால் பொதுஜனங்களுடைய பிற்காலத்திய வாழ்வுக்காக செய்யவேண்டியதை செய்யாமல் விட்டுவிட்டவர்களாவோம் என்பதை தெரிவித்துகொள்கிறேன். அடுத்தபடியாக கல்வித்துறை, சுகாதாரத்துறை விவசாயத் துறை, வைத்தியத் துறை, இவைகளில் பல்வேறு காரியங்களை இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. இதற்காக எல்லாம்தான் வரிபோட வேண்டியிருக்கிறது. எப்போதும் தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய வரும்படியை அதிகப்படுத்தி செலவைக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் சர்க்காருடைய கொள்கை அதுவல்ல. வருவாய் எவ்வளவு இருக்கிறதோ அதைவிட கூடுதலாக செலவு செய்யவேண்டும். இதுதான் சர்க்காரின் பொதுநிதிக் கொள்கை. இதன்மீதுதான் மற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இதல்லாமல் வேறு ஏதாவது வழிகள் இருந்தால் அதன்படி செய்வதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம். வேறு வழிகள் ஏதாவது இருக்கின்றனவா என்று நானும் யோசித்துப் பார்க்கிறேன். தற்காலிகமாக ஒரு வழியும் என் யோசனைக்கு எட்டவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஒன்றும் மறைக்க விரும்பவில்லை. அதனால் தான் தெளிவாக சொல்லுகிறேன். அடுத்த பட்ஜெட்டிலாவது ஏதாவது மாற்றவேண்டும் என்று நினைக்கிறேன். என்ன இருந்தாலும் அந்தந்த சமயங்களில் இருக்கின்ற நிதி நிலைமையையும் மற்ற காரியங்களையும் பார்த்துத்தான் ஒரு காரியத்திற்கு முடிவு செய்ய முடியும். இந்த சமயத்தில் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறது. அடுத்த பட்ஜெட்டில் நிதி நிலைமையைப் பார்த்து ஏதாவது வரிகளை நீக்குவதற்கு முயற்சிக்கின்றேன் என்று மாத்திரம் சொல்லிக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் தான் இப்போது இந்த அரசாங்கம் செயலாற்றி வருகிறது. அடுத்ததாக சில நண்பர்கள் விவசாய வருமானத்திற்கு வரி போடக்கூடாது என்று கேட்டார்கள். இந்த விஷயத்தில் இதை குறிப்பிட்ட தலைவர் அவர்களுக்கும்

[Sri C. Subramaniam] [5th July 1957

உப தலைவருக்கும் ஒற்றுமை இருக்கிறதா என்பதே சந்தேகம். இரண்டு
பேருடைய கருத்தும் ஒன்றுக இருப்பதாக தெரியவில்லை. வேறு சிலர்
நிலச்சீர்த்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.
இந்த நிலச்சீர்த்திருத்தம் விஷயமாக நன்ருக ஆலோசித்து அகில இந்திய
ரீதியாக கொண்டுவரவேண்டுமென்று ஆலோசித்துகொண்டிருக்கிருர்கள்.
இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் இதன் முடிவு தெரிந்துவிடும்
என்று நினைக்கிறேன். அதன்மீதுதான் நிலச்சீர்த்திருத்தம் விஷயமாக
மேல் நடவடிக்கைகள் எடுக்க முடியும். இதற்கிடையில் இந்த வருமான
வரியும் விதிக்க முடியாத நிலைமை இருக்கிறது. நிலச்சீர்த்திருத்தம்
கொண்டுவருவதறகு முன்ஞல் நில வருமான வரி போட்டால் நிலச்சீர்த்
திருத்தம் வரும் என்று தெரிந்துதான் இந்த மாதிரியுள்ள வரியை
போட்டு இருக்கிருர்கள் என்று கனம் அங்கத்தினர் பழனிசாமி போன்றவர்கள்
கூறுவார்கள், அப்போதும் கனம் ராமசாமி பிள்ளை போலுள்ளவர்கள்
இவ்விதம் அரசாங்கம் செய்துவிட்டது என்று கூறுவார்கள். இன்றைக்கு
நிலப் பிரபுக்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் விஷயத்தில் மாறுதலை
உண்டுபண்ண வேண்டும் என்ற அபிப்பிராயத்தைத்தான் அரசாங்கமும்
கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பல நில பிரபுக்
களும் இதை இன்று ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஏதோ மிராசுதாரர்கள்
எல்லாம் எங்களுக்கு ஆதரவாக இருக்கிருர்கள், விருதுநகரிலுள்ள வர்த்த
கர்கள் எல்லாம் காமராஜுக்கு ஆதரவாக இருக்கிருர்கள், அதனுல் அவர்
களுக்கு வேண்டி சலுகை செய்கிறது என்றெல்லாம் கனம் அண்ணுதுரை
அவர்கள் அவர்களுக்குரிய பாணியில் குறிப்பிட்டார்கள். நான் இது
குறித்து வருத்தப்படுகிறேன். இன்றைய அரசாங்கம் அவர்கள் யாருடைய
தயவையும் எதிர்ப்பார்த்து நிற்கவில்லை. இன்று அவர்கள் நிபந்தனை
யற்ற முறையில் உதவிகள் செய்துகொண்டிருக்கலாம். அவர்கள் முறை
கேடாக ஏதாவது சலுகை கோரினுல் அவர்களை எங்கள் பக்கத்தில்கூட
வரவிடமாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களிடையில்
பெரிய நிலப்பிரபுக்கள் மிராசுதார்கள் எங்கள் முன்பக்கத்தில் இருக்கிரு
ர்கள், பின்பக்கத்தில் இருக்கிருர்கள். இவர்களெல்லாம் இன்று நிலச்சீர்த்
திருத்தம் வரும்போது அதை ஒப்புக்கொள்ளுகிருர்கள் என்பதோடு மாத்திர
மல்ல, அவர்கள் இதை வரவேற்கிருர்கள், மேலும் வரவேற்பார்கள்,
என்பதில் எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. அதுபோல்
யாரும் சந்தேகப்படவேண்டியதும் அவசியம் இல்லை என்பதையும்
சொல்லிக்கொள்கிறேன்.

நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளெல்லாம் நம்
கொள்கை அடிப்படையிலேதான் இருக்கவேண்டும். கொள்கைகளை மன
தில் வைத்துக்கொண்டு நாம் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது.
கொள்கை என்ன ? சோஷலிஸ சமுதாயம் ஏற்படுத்துவதுதான். உடனடி
யாக பங்கு போட்டுக் கொடுத்துவிட்டால் சோஷலிஸ சமுதாயம் அமைந்து
விடும் என்று சொல்கிருர்கள் சிலர். அமையாது. உற்பத்தியைப் போதிய
அளவு பெருக்கி அதன் மூலமே சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க
முடியும். சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டுமென்ருல் முதலில்
உற்பத்தி பெருகவேண்டும். அதற்காகத்தான் திட்டம் போட்டிருக்கிறேம்.
சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க, மக்கள் எல்லோருக்கும் அத்யா
வசியமான தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்குவதுதான் நல்ல வழி
என்ற அடிப்படையில் திட்டம் போட்டிருக்கிறேம்.

இன்றைக்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது
என்று சிலர் சொல்லுகிருர்கள். ஆம் ; எதற்காக ? அதன் மூலம்
உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்பதற்காக. சோஷலிஸ சமுதாயத்தை
அமைக்கவேண்டுமென்று சொல்லிய உடனே சில நண்பர்கள் ரஷ்யாவைப்
பாருங்கள், சைனுவைப் பாருங்கள் என்று சொல்லுகிருர்கள். சோஷலிஸ
த்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் அமெரிக்காவை பார்க்கச் சொல்லுகிரு
ர்கள். இரண்டு தேசங்களிலும் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பார்த்து அவை
களில் இருக்கக்கூடிய குறைகளை நீக்கி நல்ல வழியைப் பின்பற்றி நாம் பய
னடையவேண்டும். நாம் போகக்கூடிய வழியிலே ஜனங்களுக்கு அதிக



5th July 1957] [Sri C. Subramaniam]

கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நம்முடைய கடமை. அமெரிக்கா
வில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது என்ருல், அங்கே பரவலான நிலம்,
ஜனத்தொகை கொஞ்சம். பெரிய அளவிலே உற்பத்தி பெருகிக்கொண்
டிருக்கும் மத்தியிலே எங்கு பார்த்தாலும் வறுமை தாண்டவமாடிக்
கொண்டிருக்கிறது. இருபது வருஷங்களுக்கு முன்னுலேயே உற்பத்தி பெருகிக்
கொண்டிருந்த காலத்தில் வறுமை ஒரு பக்கத்திலே பெருகிக்கொண்டிருந்
தது. உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லுகிறபோது, இன்னெரு
பக்கத்தில் வறுமை அதிகப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதன்
மூலமாக ஒரு பகுதியினர் வருவாயை அதிகமாகப் பெற்று பணக்காரர்கள்
ஆகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ரஷ்யாவில் 10, 12 வருஷங்களு
க்கு முன் நடந்த நிகழ்ச்சிகளையும் சமீபத்தில் பத்திரிகையில் வந்த நிகழ்
ச்சியையும் கவனிக்கவேண்டும். எதைத் தவிர்க்கவேண்டுமென்பது நமக்கு
நன்ருகப் புலப்படும். எதேச்சாதிகார அடிப்படையிலே போகாமல் ஜன
நாயக அடிப்படையிலே செல்லவேண்டும். தொழில் வளர்ச்சிபெருகவேண்
டியது தான். ஆனுல் அதன் மூலம் மனிதன் அழிந்து விடலாம். அதி
லும் தப்பிப் பிழைக்கவேண்டும். தப்பிப் பிழைத்து அதன் மூலம் முன்
னேறவேண்டும். அதனுல்தான் இன்றைக்கு தனிப்பட்ட நபர்கள் தொழில்
வைத்து நடத்திய போதிலும் அவர்களிடம் செல்வம் குவியக்கூடாது என்ற
முறையில் வரி விகிதத்தை விதித்திருக்கிறேம். மாறுபட்ட வரிக்கொள்
கையையும் மீறி அதிலே தப்பித்து பணம் சம்பாதிப்பவர்கள் அதை வேறு
சொத்துகளில் போட்டு செலவிடவேண்டும். அதற்கும் வரி போடவேண்டு
மென்ற முறையிலே அமைப்பு ஏற்படுத்தியிருப்பதால் உற்பத்தியில் ஈடுபடு
கின்ற தொழில் அதிபர்களுடைய பணப்பெருக்கம் அதிகமாக ஆகாமல்
இருக்கும். அதே சமயத்தில் தொழிலாளர்களுக்கு வேண்டிய உரிமைகளைக்
கொடுத்து அவர்களுக்கு வசதிகள் உண்டாக்க பலவித நடவடிக்கைகள்
எடுத்திருக்கிறேம். இரண்டு விதத்திலும் சரிசெய்வதற்காக திட்டம்
போட்டிருக்கிறேம். அந்த அடிப்படையிலே தொழில் அபிவிருத்தி
ஏற்படவேண்டும். இதிலே நம்பிக்கை கொண்டிருக்கிறேம். இதிலே
முன்னேற்றம் கண்டு வருகிறேம். அமெரிக்கா, ரஷ்யா, சைனுவிலுள்ள
நிபுணர்களையும் நாங்கள் போகின்ற வழியில் முன்னேற்றம் காணமுடியுமா
என்று ஆலோசனை கேட்டுக்கொள்ளுகிறேம். அவர்களும் முன்னேற்றம்
காணமுடியும் என்று சொல்லியிருக்கிருர்கள். ஆகையால் இதே பாதையில்
செல்லுகிறேம். தவறுகள் இருந்தால் திருத்திக்கொள்ளத் தயாராக
இருக்கிறேம். தவறு ஏற்படலாம். ஒரே பாதையிலேயே போகவேண்டு
மென்பது அல்ல. இப்பொழுது இருக்கிற முறையிலே வெற்றி கண்டிருக்
கிறேம், வெற்றி காணமுடியும்.

தனிப்பட்டவர்களிடத்தில் தொழில் ஸ்தாபனங்கள் இருப்பது பற்றி
கவலைப்பட வேண்டியதில்லை. அதற்கு வேண்டிய கட்டுப்பாடுகள் செய்திரு
க்கிறேம். அவசியம் ஏற்படும்பொழுது கட்டுப்பாடுகளை சட்டபூர்வமாக
இறுக்கவும் தயாராக இருக்கிறேம். கவலைப்படவேண்டியதில்லை. தொழில்
அபிவிருத்தி ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியும். இன்றைக்கு
பிற்பட்டிருக்கிற தமிழ் நாடு முன்னேறவேண்டுமானுல் இப்பொழுது இருக்கக்
கூடிய தொழில்கள் 100-க்கு 100 பங்கு உற்பத்தியைப்பெருக்கவேண்டும்.
இதன் மூலம்தான் குறைகளைத் தீர்க்கமுடியும். எவ்வளவுக் கெவ்
வளவு உற்பத்தி பாதிக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டின்
பொருளாதார நிலைமை பாதிக்கப்படக்கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்
ளுகிறேன். அதனுல்தான் என் உரையில் சொன்னேன். தொழில் அதி
பர்களும் தொழிலாளிகளும் 5 வருஷம், 10 வருஷங்களுக்கு ஒரு ஒப்பந்
தத்திற்கு வரவேண்டும். தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்ப
தற்கு சட்டங்கள் இருக்கின்றன. அதற்காக தொழில் கோர்ட்டுகள் அமைந்
திருக்கின்றன. அதே போல தொழில் அதிபர்கள் கையில் பணம் அதிக
மாகக் குவிந்து விடாமல் இருக்க வரித் திட்டங்கள் இருக்கின்றன. வேண்டு
மென்ருல் வரித்திட்டங்களை இன்னும் மாற்றி அமைக்கலாம். யாரும்
தொழிலாளர்களைச் சுரண்டி அதிகப் பணம் சம்பாதிக்க முடியாது. உற்
பத்தி அதிகமானுல்தான் பொருளாதாரம் அபிவிருத்தியடைய முடியும்.
உதாரணமாக, மதுரையில் ஆலைகள் மூடப்பட்டால், அது தொழில் அதிபர்

களுக்கு மட்டும் நஷ்டமல்ல, தொழிலாளர்களுக்கு மட்டும் நஷ்டமல்ல.
அது ஒரு தேசீய நஷ்டம், தமிழ் நாட்டிற்கே நஷ்டம். உற்பத்தி குறைந்
தால், நம்முடைய மூலதனம் குறையப்போகிறது, வசதி குறையப்போகிறது.
அவ்வளவுக்கவ்வளவு இன்னும் அதிகக் காரியங்கள் செய்வதற்குத்
தடை ஏற்படும். இன்றைக்கு தனிப்பட்டவர்கள் செய்யக்கூடிய தொழில்
அபிவிருத்தி அவர்களுக்கு மட்டும் உதவுவது அல்ல. நாடு முழு
வதிற்கும் பயன்படும். அதற்காக எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள
வேண்டும். நமது நாட்டிற்கு அவசியமான அளவுக்கு மட்டுமல்ல, வெளி
தேசங்களுக்கு அனுப்பக்கூடிய அளவுக்கு உற்பத்தி பெருகவேண்டும்.
ஆகவே இதை மனதில் கொண்டு தொழில்களைப் பெருக்குவதற்கு நாம்
உதவ வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் சிறு கைத்
தொழில்கள் வளர வேண்டியது மிகவும் அவசியம். நாம் இன்னும் பிற்
போக்கான நிலையிலேயே இருக்கிறோம். போட்டி போட்டுக்கொண்டு கேரள
த்தில் பொருள்களை அதிக விலைக்கு விற்க முடிகிறது. நம்மை விட அங்கு
வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. ஆந்திரா, பம்பாய், வங்காளம்
போன்ற இடங்களிலும் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. அங்கே
தான் பொருள்கள் அதிக விலைக்கு விற்கும் என்று நினைக்கிறார்கள். நம்
முடைய ஏழை நாட்டில் குறைந்த விலைதான் கிடைக்கும். அந்தக் குறை
யைத் தீர்க்கவேண்டுமானால் உற்பத்தி பெருகவேண்டும். அதற்கு மத்தி
யிலே நம்மிடத்தில் கீழ்ப்பகுதியில் இருக்கக்கூடிய வறுமை நிலையைப்
பார்க்கவேண்டும். புயல் அடித்தபொழுது கனம் முதல் அமைச்சர் அவர்கள்
நிலைமையை நேரில் கண்டறிந்தார்கள். அதற்குப் பிறகு நாங்களும் சென்று
பார்த்தோம். அங்கே மக்களுடைய வாழ்க்கை மிகவும் பரிதாபகரமான
நிலைமையில் இருந்தது. ஒரு சிறிய நஷ்டம் ஏற்பட்டாலும் அவர்கள்
வாழ்க்கை நடத்துவதற்குத் தவிப்பது நன்றாகப் புலனாயிற்று.

இங்கு கதர் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறதென்றால், இங்கு
வேலை கிடைக்கவில்லை. குறைந்த கூலிக்கு வேலை செய்வதற்கு மக்கள்
தயாராக இருக்கிறார்கள், ஏழ்மையின் காரணமாக. இவைகளையெல்லாம்
பார்க்கும்பொழுது, இவ்வளவு ஏழ்மை நிலைமையில் இருந்தும்கூட நாம்
நல்ல வாழ்க்கைநடத்துகிறோம் என்று சிலர் நினைக்கிறார்கள். நம் பகுதி
யைச் சேர்ந்த சிலர் வெளியில் உயர்ந்த உத்தியோகம் வகிப்பதால்
சென்னை ராஜ்யம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று நினைக்கிறார்
கள். தொழில் துறையில் நாம் இன்னும் முன்னேற்றம் அடையவில்லை.
விலை வாசிகள் இங்கு அதிகமாக இருக்கிறது. நாம் எவ்வளவு பின்
தங்கியவர்களாக இருக்கிறோம் என்பதை இவைகளெல்லாம் வலியுறுத்து
கின்றன. இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது நம்முடைய முயற்சி
இன்னும் 2, 3, 4 மடங்காக அதிகரிக்க வேண்டும். ஒன்றுபட்ட சக்தியை
இன்னும் மேலும் மேலும் உருவாக்கவேண்டும். ஒன்றுக்கொன்று
மோதிக்கொண்டு வீணாகப் போகக்கூடிய சக்தியை பயன்படுத்திக்கொள்வது
எவ்வளவு அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

கதர் துணியை ஏன் ஆஸ்பத்திரிகளுக்கு விநியோகிக்கவேண்டும், ஏன்
கைத்தறித் துணியை விநியோகிக்கக்கூடாது என்று சிலர் கேட்கிறார்கள்
கைத்தறியில் அக்கறை உள்ளவர்களுக்கு நூல் நூற்பவரிடம் கொஞ்ச
மாவது இரக்கம் வேண்டாமா ? நூல் நூற்று தினம் 4 அணா சம்பாதித்துக்
கஞ்சி காய்ச்சிக் குடிப்பவர்கள் மீது கருணை வேண்டாமா ? மாதம் ரூ 60
சம்பாதிக்கும் நெசவுத் தொழிலாளர் பேரில் இரக்கம் காட்டுபவர்கள் நாள்
ஒன்றுக்கு 4 அணா கூலி சம்பாதிக்கும் ஏழைகளிடத்தில் இரக்கம் காட்டக்
கூடாதா ? கதர் துணியை விநியோகிப்பதன் மூலம் கைத்தறியாளர்கள்
பாதிக்கப்படுவார்கள் என்று குற்றம் சாட்டுவதற்கு உண்மையை அறிந்த
வர்களுக்கு மனம் வருமா ? வராது. கதர் உற்பத்தி செய்வதன் மூலம்
ஏழை மக்களுக்கு வேலை கொடுக்க முடிகிறது. அப்படியிருக்கும்பொழுது
ஏன் கதர் துணியை ஆஸ்பத்திரிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கப்
படுகிறது. ஆஸ்பத்திரிகள் மட்டும் அல்ல. ரயில்வே நிலையங்களும் கதர்



துணியை வாங்கி உபயோகப்படுத்துகின்றன. நாம் முதலில் கதரை உப
யோகப்படுத்தாவிட்டால், கதர் துணியை வாங்கவேண்டுமென்ற வாதத்தை
மற்றவர்கள் எவ்வளவு தூரம் ஒப்புக்கொள்வார்கள் என்பதை யோசிக்க
வேண்டும். கதர் நூலும் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் கொடுக்கப்
படுகிறது. அவைகள் மில்களுக்குக் கொடுக்கப்படவில்லை. வேறு அரசியல்
நோக்கத்திற்காக அல்லாமல், உண்மையிலேயே கைத்தறி நெசவாளாகளை
ஆதரிப்பவர்கள் நிச்சயமாக கதரை இன்னும் இரண்டு மடங்காக ஆதரிப்
பாாகள் என்பதில் சந்தேகமே கிடையாது. (கரகோஷம்.)

அடுத்தபடியாக, இன்னொன்று குறிப்பிட்டார்கள். அதை நான்
வரவேற்கிறேன். திரு. அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள் ;
திரு. ஷண்முகம் அவர்களும் குறிப்பிட்டார்கள். சென்ற தடவை மூலதன
செலவுக்காக 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்து, அதிலே மூன்று கோடி
ரூபாய் குறைவு ஏற்பட்டது என்று சுட்டிக் காட்டினார்கள். வாஸ்தவம்.
குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முந்திய வருஷத்திலே ஓரளவு சரி
யாக நடந்திருக்கிறது. அது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி வருஷ
மாக இருந்தது. பல காரியங்களை முடிக்கவேண்டுமென்ற காரணத்தால்
முடிந்தது. ஒவ்வொரு வருஷமும் ஏற்படக்கூடிய நிகழ்ச்சி—எனக்கு ஏற்
பட்ட அனுபவத்தைச் சொல்கிறேன். அதற்கு என்ன மாற்று செய்து
கொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்காக நான் சொல்கிறேன்.

இப்பொழுது நாம் பட்ஜெட்டைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கி
றோம். வருஷா வருஷம் பிப்ரவரி மாதம் உட்கார்ந்து, மார்ச் மாதத்திலே
முடித்து விடுகிறோம். ஒவ்வொரு இலாகாவும் இன்ன இன்ன திட்டங்களை
நிறைவேற்ற வேண்டுமென்று அப்பொழுது முடிவு செய்கின்றோம். இது
செக்ரடேரியட்டுக்குப் போகிறது. அங்கிருந்து அந்தந்த துறைத் தலைவர்களுக்கு
போகவேண்டும். **Departmental Heads** ஒவ்வொரு மாதமும் கணக்குப்
போட்டு அனுப்பவேண்டும். செக்ரெடேரியட்டிலிருந்து துறைத் தலைவருக்குப்
போனவுடனே, அவர்கள் அதை ஒவ்வொரு பிரதேசவாரியாகப் பிரித்து, அவர்
களுக்குக் கீழ் இருக்கும் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். செப்டெம்பர்,
அக்டோபர் மாதத்திலே கீழே போய்ச் சேரும். அதற்குப் பிற்பாடு வேலைகளைச்
செய்வதற்கு—கண்டிராக்ட் மூலமாக என்றால் டெண்டர் வரவழைத்தோ
அல்லது நேரிடையாகவோ—முற்படுவார்கள். அதற்குள் பிப்ரவரி மாதம்
வந்துவிடும். அதற்குள்ளே வருஷம் முடியப் போகிறதாக இருக்கும். மார்ச்சு
மாதத்திலே அவசரம் அவசரமாக, வேலை நடத்துவார்கள். வேலை நடக்கா
விட்டால், பணம் போய்விடுமே என்ற அபிப்பிராயத்தில் மார்ச்சு மாதத்
தில் அவசர அவசரமாக வேலையைச் செய்வார்கள். இந்த முறையில்
தான் பல வருஷங்களாக நடந்து வந்திருக்கிறது. இந்த முறையினால்,
வேலை செய்வதற்குத் தடை ஏற்படுவதோடு கூட, வீண் செலவும் ஏற்படு
கிறது என்பதில் சந்தேகமில்லை.

சென்ற நவம்பரிலிருந்து ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம்.
ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று பிப்ரவரி மாதத்திலே மந்
திரிசபை முடிவு செய்கிறது. அதற்குப் பின் சபைமுன் பட்ஜெட் ரூபத்தில்
வருகிறது. மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு
வந்து நிறைவேற்றினால்தான் திட்டம் கவிழ்ந்து போகும். அது சாதா
ரணமாக ஏற்படுவது இல்லை. அப்படி ஏற்பட்டாலும் வேலைத் திட்டத்தை
யாரும் மாற்றமாட்டார்கள். விரித் திட்டத்தை மாற்றலாம். புதிய வேலைத்
திட்டங்கள் மாறலாம். ஆனால், எடுத்திருக்கும் வேலைத் திட்டங்கள் அப்
படியே தான் நடக்கும். ஆகையால், அப்பொழுதிருந்தே துறைத் தலை
வர்களுக்கும், அங்கேயிருந்து மற்றவர்களுக்கும் ஏப்ரல் கடைசியிலே போய்ச்
சேர்ந்து விடும். அது மட்டும் அல்ல. ஒரு வேலையைச் செய்வது என்றால்,
முதல மூன்று மாதத்தில் இவ்வளவு, அடுத்த மூன்று மாதத்தில் இவ்வ
ளவு, அதற்கும் அடுத்த மூன்று மாதத்தில் இவ்வளவு, கடைசி மூன்று
மாதத்தில் இவ்வளவு என்று வேலை பூர்த்தியாகவேண்டிய
வேலைக்கான திட்டத்தைத் தயார் செய்து கொண்டு, அந்த முறையில் வரு
ஷம் பூராவும் வேலை நடக்கவேண்டும். சில மாணவர்கள் மற்றக்

காலங்களில் சரியாகப் படிக்காமல் இருந்து, பரீட்சைக் காலங்களில் மட்டும் அவசரம் அவசரமாகப் படித்து, பரீட்சைக்குச் சென்று பாதி சரியாகவும் பாதி தவருகவும் விடை எழுதுவது போல், நாம் வருஷக் கடைசியில் காரியங்களைச் செய்தால் அது நல்லது அல்ல என்பதை உணர்ந்து, அப்படிப் போல் இல்லாமல், நல்ல மாணுக்கன் எப்படி வருஷம் முழுவதும் கவனமாகப் படித்து வருவானே, அந்த முறையில் இப்பொழுது புதிய முறையிலே திட்டம் போட்டுக்கொண்டு வேலை செய்ய வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தியிருக்கிரேம்.

அப்படி அவர்கள் செய்கிருர்களா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை **Departmental Head**-ஐக் கூப்பிட்டு, திட்டம் போட்டபடி முதல் மூன்று மாதங்களுக்கு என்ன வேலை நடந்திருக்கிறது/ என்பதையும், குறைவாக நடந்திருந்தால், அதற்குக் காரணம் என்ன என்பதையும், அதை நிறைவேற்ற முடியாமல் என்ன தடை ஏற்பட்டதென்பதைத் தெரிந்து, வேறு இலாகாவில் தடை இருக்கிறதா என்பதையெல்லாம் கண்டுபிடித்து, அந்தத் தடைகளையெல்லாம் நீக்குவதற்கான முயற்சி எடுத்து வர ஏற்பாடு செய்திருக்கிரேம். தடைகளையெல்லாம் நீக்கிக்கொடுத்து, அடுத்த மூன்று மாதங்களுக்குள் சரி செய்து விட வேண்டுமென்று சொல்லி அனுப்புவதாகவும் திட்டமிட்டிருக்கிரேம். இந்த முறையிலே நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிரேம். நல்லதொரு வழியைக் கண்டு பிடித்திருக்கிரேம் என்பதை நான் சபையின் முன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வருஷக் கடைசியில் அவசரப்பட்டு வேலை செய்வதால், வேலையும் செம்மையாக நடக்காமல், பண விரயமும் ஆவதைத் தவிர்க்கும்பொருட்டு இப்பொழுதிருந்தே திட்டம் போட்டு வேலை செய்திருக்கிரேம்.

இம்மாதிரி செய்வதற்கு பருவ மழை முதலியன சரியாக இருக்க வேண்டும். இயற்கை விபரீதங்கள் போன்ற எதிர்பாராத சூழ்நிலை ஏற்படுமாலுல், அப்பொழுது ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றுவதிலே போட்ட திட்டத்தின் படி நடக்க முடியாமற் போகும். அதனுல், பணச் செலவும் திட்டப்படி நிற்காமல் சற்று அதிகமாகும். ஆகவே, பருவ காலங்கள் எல்லாம் சரியாக இருக்கிற வரை, ஒவ்வொரு மூன்று மாதத்திலும் எவ்வளவு வேலை நடக்கவேண்டுமென்ற இலக்குகளை வைத்துக்கொண்டு, அதன்படி நிறைவேற்ற ஏற்பாடு செய்திருக்கிரேம். இதன் காரணமாக, ஒவ்வொரு தலைமை அதிகாரியும் சர்வ ஜாக்கிரதையாக இருந்து, கவனித்துக் கொள்வார்கள். அவர்கள் கீழ் உள்ள அதிகாரிகளும் கவனித்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்த வருஷத்திற்குள் திட்டமிட்டபடி விதைப் பண்ணைகள் ஏற்பட்டுவிடுமா என்று சந்தேகமாக கனம் அங்கத்தினர் சொன்னுர்கள். இது விஷயத்தில் மூன்றுமாதத்திற்கு ஒரு தடவை நாங்களும் கண்காணிப்பாக இருந்து, விவசாய டைரக்டர் அவர்களும் கண்காணிப்புடன் நடந்துகொள்வார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களை மீறிய சூழ்நிலை காரணமாக, வேறு ஏதாவது தவிர்க்க முடியாத காரணமாக இத்திட்டம் எதிர்பார்த்தபடி முடியாமலிருக்கலாமே யொழிய, மனிதப் பிரயத்தனத்தால் செய்யக்கூடியதனைத்தையும் செய்து, இதனை திட்டமிட்டபடியே முடித்துத்தான் தீருவோம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேற்படி புதிய திட்டத்தை இதற்கு முன்னாலும் செய்திருக்கலாம். ஆனல், அப்பொழுது இந்த அனுபவம் ஏற்படவில்லை. போகப்போகத்தான் அனுபவம் ஏற்படுகிறது. அந்த அனுபவத்தைப் பயன்படுத்தித்தான் இப்பொழுது புதிய முறையொன்றைக் கண்டு பிடித்திருக்கிரேம். "பழைய முறைகளையே வைத்துக்கொண்டு இருக்கிரேம்" என்று கனம் அங்கத்தினர் திரு. சின்னதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியல்ல. எங்களுடைய அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டு, முறைகளை மாற்றிக்கொண்டு, எங்களுடைய சக்திக்கேற்றபடி செய்துகொண்டிருக்கிரேம் என்று நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



ஆகையால், இந்த முறையில் பட்ஜெட் திட்டத்தைத் தயாரித்திருக்கிரேம் என்ருல், நான் நன்ருக உணருகிறேன். பட்ஜெட் திட்டம் தயாரிப்பது வேலையினுடைய ஆரம்பமே யொழிய வேலையின் முடிவு அல்ல என்பதை நான் நன்ருக உணருகிறேன். இன்ன இன்ன திட்டம் செய்யலாம் என்று இப்பொழுது நாம் முடிவு செய்திருக்கிரேம். இது நன்ருக நடந்திருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி வருஷ முடிவில்தான் தெரிந்து கொள்ள முடியும். திட்டத்தைப் பற்றி பாராட்டுபவர்கள் அந்தப் பாராட்டு உரையை நிறுத்தி வைத்துக்கொண்டு, வருஷக் கடைசியில் இதை முடித்திருக்கிரேமா என்று பார்த்து அப்பொழுது எங்கள் பேரில் பாராட்டுதலும் குற்றச்சாட்டுகளும் சொல்லுங்கள். ஆகவே, வருஷக் கடைசியில் இந்த பட்ஜெட்டைப் பற்றி முடிவு சொல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அத்துடன், ஒரு விஷயத்தை நான் மறந்துவிடக்கூடாதென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் எனக்கு ஞாபகமூட்டுகிருர்கள்; அதாவது, பாலாற்றைப் பற்றி. பாலாற்றில் தண்ணீர் கொண்டுவரும் பிரச்னையைப்பற்றி எங்களுக்கு ஓரளவு தெரியும். அதிலே இருக்கக்கூடிய பழைய ஒப்பந்தங்களை நான் படித்துப் பார்த்தேன். எந்த அளவுக்கு, நாம் அப்பொழுது செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு உட்பட்டு இன்னும் அதிகமாகத் தண்ணீர் கொண்டு வர முடியும் என்பதைப் பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. ஏதோ மைசூரிலே அதிகமாகத் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளுகிருர்கள், அதனுல் தான் நமக்குத் தண்ணீர் வரவில்லை என்ற ஒரு மனப்பான்மை மக்களிடத்திலே பரவியிருந்தது. நான் அந்த ஒப்பந்தங்களையும், அது சம்பந்தப்பட்ட கட்டு (file) முழுவதையும் புரட்டிப் பார்த்திருக்கிறேன். மைசூரை நிர்ப்பந்தப்படுத்தி அந்தத் தண்ணீரை கீழே கொண்டுவரக் கூடிய ஒரு ஷரத்து கூட அதில் இல்லை. அதனுல் தான் அதை விட்டு விட்டோமே தவிர, வறண்ட பிரதேசமாக இருக்கும் அப்பகுதிக்கு இரண்டு சொட்டுத் தண்ணீர் வருவதாக இருந்தாலும் நாம் விட்டிருக்க மாட்டோம். இருந்தாலும், இன்னும் பரிசீலனை செய்து, அடி ஊற்றுக்களை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதைப்பற்றி பிரதம இன்ஜினீரும் பரிசீலனை செய்கிருர்கள். அவர்கள் முதலிலே பரிசீலனை செய்து, பரீட்சார்த்தமாக நடத்திய முயற்சியில் எதிர்பார்த்த பலன் இல்லை. வேறு விதமாகச் செய்யமுடியுமா என்பதைப் பற்றியும் பரிசீலனை நடந்து வருகிறது.

இந்த விவாதத்தில் பல யோசனைகள் சொல்லப்பட்டன. அந்த யோசனைகளையெல்லாம் ஆராயாமல், இன்றைக்கே உடனடியாக பதில் சொல்வது இயலாது—நான் எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தேனே அந்தக் கால வரையறையை நான் இப்பொழுதே மீறியிருக்கிறேன்—ஒவ்வொரு யோசனையைப் பற்றியும் இங்கு நான் எடுத்துக்கொண்டு, என்ன செய்யப்போகின்றேம் என்று இங்கு இப்பொழுது சொல்லமுடியவில்லையென்ருல், நான் அந்த யோசனையைக் குறைவாக மதிப்பிடுகிறேன் என்ற காரணத்தால் அல்ல. இந்த பட்ஜெட் விவாதத்திலே சொல்லும் ஒவ்வொரு யோசனையையும், இதிலிருந்து எடுத்து, அந்தந்த தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பி, அவர்கள் அவைகளைப் பரிசீலனை செய்து, அதில் என்ன செய்யப்போகின்றேம் என்பதைப்பற்றி சர்க்காருக்கு அவர்கள் சொல்ல வேண்டும். அந்த முறையில் அவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்து, அதில் என்ன முடிவு செய்யப்பட்டது என்பதை, அவர்களுக்குத் தெரிவிக்க முடியும். ஆகையால், ஒவ்வொரு யோசனையையும் பரிசீலனை செய்து, அதற்காக என்ன பரிகாரங்கள் தேட முடியுமோ அந்தப் பரிகாரங்களைத் தேடுவோம் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கடைசியாக நாம் எவ்வளவு தூரம் நம்முடைய நடவடிக்கைகளைத் தமிழிலே நடத்திக்கொள்ள முடியும் என்பதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இரண்டு மூன்று வருஷங்களாக—இது மூன்ருவது உரை—நாம் மூன்று உரைகளைத் தமிழில் எழுதியுள்ளோம். இரண்டாவது

தடவையாக தமிழிலேயே சபை முன் படித்திருக்கிறோம். இதிலே இருக்கக்கூடிய சிரமம் அதை எழுத முற்படும்போது தான் தெரிகின்றது. அதை நல்ல தமிழிலே, எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எழுதுவதற்கு எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்பது அதை எழுத முற்படும்போது தான் தெரிகிறது. இதிலே கையாளப்பட்ட பல பதங்களைப் பற்றி கனம் அங்கத்தினர் திரு. ஆதித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். "100 லட்சம்" என்று சில கட்டங்களிலும், "கோடி" என்று சில இடங்களிலும் வேண்டுமென்றே நான் உபயோகித்திருக்கிறேன். பல சமயங்களில் லட்சக் கணக்கில் கணக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. சில சமயங்களில் கோடிக் கணக்கிலும் கணக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. எப்படிச் சொன்னாலும், கணக்கு நமக்குத் தெரிந்து கொள்ளக்கூடிய முறையில் இருக்கவேண்டுமானால், பழக்கப்படவேண்டும். "100 லட்சம்" என்பதை "கோடி கோடி" என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல என்றாலும், கணக்குகளைக் குறிப்பிடும்போது லட்சக் கணக்கில் சொல்வது வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. ஆகவே, இரண்டு பதங்களையும் பழக்கத்தில் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான் நான் வேண்டுமென்றே அந்த இரண்டு பதங்களையும் உபயோகப்படுத்தியிருக்கிறேன். ஒரு கருத்தைத் தெரிவிக்க இரண்டு மூன்று பதங்களை ஏன் உபயோகப் படுத்தவேண்டும்? ஒரு கருத்தைத் தெரிவிக்க ஒரு பதத்தைத் தனியாக உபயோகிப்பது தானே பொருத்தம் என்று அங்கத்தினர் நினைக்கலாம். இவ்விரண்டு பதங்களையும், இன்னும் இது போன்று ஒரே கருத்துள்ள இரண்டு மூன்று பதங்களையும் இந்த பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருப்பதற்குக் காரணம், இரண்டு பதங்களும் சபையில் உபயோகப்படும்போது நல்ல ஆழ்ந்துள்ள, கருத்துள்ளதாக எந்தப் பதம் இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது தான். இவ்விதமாக உபயோகப் படுத்தி, நல்ல முறையிலே இந்தப் பதங்களை வகுத்துத் தொகுத்து, அதன் மூலமாக இந்த பட்ஜெட் பிரசங்கமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு பிரசங்கங்களாக இருந்தாலும் சரி, அவைகளில் பொருத்தமாகக் கையாள வேண்டிய நல்ல பதங்களை (technical words) உபயோகப்படுத்துவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டுமானால், இங்கு இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் எல்லோரும்—அதிலும் முக்கியமாக தமிழிலே ஆர்வமுள்ள அங்கத்தினர்கள், அனுபவம் உள்ள அங்கத்தினர்கள்—இதிலே பெரும் உதவி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பல அங்கத்தினர்கள் எந்தக் காலத்தில் தமிழ் நமது ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் வரப்போகிறது என்று கவலை தெரிவித்துப் பேசினார்கள். அது தான் எங்களுக்கும் கவலையாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கவலை என்று சொல்லும்போது அதிலுள்ள சிரமங்களைத் தான் குறிப்பிடுகிறேன். அந்த சிரமங்களைத் தவிர்க்க, தடைகளை நீக்க சர்க்கார் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்தக் காரியத்தை எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதைச் செய்யவேண்டுமென்பது தான் சர்க்கார் கொள்கை. கனம் அங்கத்தினர்களெல்லாம் பூர்ண ஒத்துழைப்பைக் கொடுத்தால் அதை சீக்கிரத்திலே செய்ய முடியும் என்று கருதுகிறேன். இந்த முறையிலே கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்வது; இன்று நாம் எல்லோரும் பொதுக் கருத்து உடையவர்களாக இருக்கிறோம்; அதாவது நம் மக்களுடைய வாழ்க்கை உயரவேண்டும், தமிழ் மொழி உயரவேண்டும், என்ற பொதுக் கருத்துக்களை நிறைவேற்றுவதிலே இந்தச் சபை பெரிதும் உதவவேண்டும். இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER:** இந்தச் சபையை நாளை காலை 9 மணி வரை ஒத்தி வைக்கிறேன். **The House will now adjourn and meet again at 9 a.m. on Saturday, the 6th July 1957.**

**The House then adjourned.**



## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

107. *Notification issued with G.O. Ms. No. 282, Home, dated 2nd February 1957, amending sub-rule (a) of rule 374 of the Madras Motor Vehicles Rules, 1950. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act (Central Act IV of 1939).]*

108. *Notification issued with G.O. Ms. No. 1724, Food and Agriculture, dated 3rd June 1957, amending rule 28 of the Madras Commercial Crops Markets Rules, 1948. [Laid on the table of the House under section 18 (4) (c) of the Madras Commercial Crops Markets Act, 1933.]*

109. *Notification issued with G.O. Ms. No. 683, Home, dated 18th March 1957, amending rule 278 of the Madras Motor Vehicles Rules, 1950. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act (Central Act IV of 1939).]*

## APPENDIX.

[Vide answer to Starred question No. 64 asked by Sri K. Sattanatha Karayalar (on behalf of Sri M. Kalyanasundaram) at the meeting of the Legislative Assembly held on 5th July 1957, page 467 supra.]

[SUBJECT.—*Village officers—Grant of travelling allowance, educational and medical concessions—Recommendations of the Cabinet Sub-Committee—Orders passed.*]

*G.O. Ms. No. 4732, Revenue, dated 31st December 1956.*

The Cabinet Sub-Committee constituted by the Government in G.O. No. 2884, Revenue, dated 19th September 1955, to investigate into the grievances of village officers in general, with special reference to their conditions of service with a view to better their status, emoluments, leave facilities, etc., has submitted its recommendations to the Government. The Government have examined its recommendations and pass the following orders :—

(i) *Increase in dearness allowance.*—The Committee considers that the finances of the State cannot bear the heavy additional recurring expenditure involved on account of the increase in dearness allowance of village officers and servants and has, therefore, not recommended any increase in the dearness allowance of village officers and servants. The Government accept the recommendation of the Committee.

(ii) *Grant of educational concessions.*—The Committee has recommended that the children of village officers and servants should be given the same educational concessions as are given to the children of Non-Gazetted Officers as laid down in G.O. No. 1250, Education, dated 31st May 1952, as modified from time to time, i.e, remission of full fees up to Form III and remission of half-fees from Forms IV to Form VI and that the village servants may be given also the further concession given to peons, remission of full fees from Form IV to Form VI. The Government accept the recommendation of the Committee.

(iii) *Grant of medical concession.*—The Committee has recommended that the village officers and servants be given the same medical concessions as are given to the Non-Gazetted Officers in G.Os. No. 2628, Health, dated 1st April 1952, No. 246, Health, dated 21st January 1953, and No. 2589, Health, dated 17th September 1954. The Government accept the recommendation of the Committee.

The above concessions will apply to village officers and servants of all areas, i.e., settled ryotwari estates taken over by the Government and estates not taken over by the Government. They shall take effect from 1st January 1957.



(iv) *Grant of travelling allowance to village officers for their journeys to the taluk office.*—The Committee has recommended—

that a consolidated annual travelling allowance be given to all village officers of settled ryotwari villages and to the Karnams (including Triune Officers) of estate villages taken over by the Government at the following rates :—

| Distance from taluk headquarters. | Consolidated travelling allowance per annum. |
|---|---|
| | RS. |
| 5 to 12 miles ... ... ... | 15 |
| 12 to 20 miles ... ... ... | 20 |
| Over 20 miles ... ... ... | 25 |

that the village headmen of estate villages taken over by the Government may be granted travelling allowance for each journey, including the journey for jamabandi on the basis of actual bus-fare or III class railway-fare, plus a daily allowance of Re. 1 for the days on which they have necessarily to take one meal outside their village;

that no separate jamabandi allowance need be given to those village officers who are given this consolidated or ordinary travelling allowance;

that it is unnecessary to grant travelling allowance to the village officers in estate villages not taken over by the Government.

The Government accept the recommendations of the Committee and direct that these concessions be given effect to from the commencement of the current fasli (i.e. 1366).

2. The orders in paragraph 1 (ii) to (iv) will not apply to the village officers and servants of Madras City and Kanyakumari district.

T. K. S[illegible]ARAVADI[illegible]U,
*Secretary to Government.*

V211.31'N57
N58.232
61196